தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி ஆறு

ஆங்கில மூலம்
எட்கர் தர்ஸ்டன்
தமிழாக்கம்
முனைவர் க.ரத்னம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி ஆறு

(பள்ளி (அல்லது) வன்னியன் முதல் சிரியன் கிறித்தவர் வரை)

Castes and Tribes of South India

Vol. VI

(Palli (or) Vannian to Syriyan Christian)

ஆங்கில மூலம்

அறிஞர் எட்கர் தர்ஸ்டன்

தமிழாக்கம்

முனைவர் க. ரத்னம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-323-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 263

திருவள்ளுவராண்டு 2034 மார்கழி - திசம்பர் 2003

நூல்	:	தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி 6
ஆசிரியர்	:	எட்கர் தர்ஸ்டன்
மொழிபெயர்ப்பு	:	க. ரத்னம்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மானிடவியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2003
பக்கம்	:	viii + 516 = 524
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ. 240-00
படிகள்	:	1000
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

மறு அச்சு டிசம்பர் 2010

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

அணிந்துரை

'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' என்னும் இந்நூல் மானிடவியல் அறிஞர் எட்கர் தர்ஸ்டன் அவர்கள் எழுதியதின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். தமிழ்ப் பல்கலைக்கழகம் எட்கர் தர்ஸ்டனுடைய இவ்வரிய தொகுதிகளைத் தமிழாக்கம் செய்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளமை பெரிதும் வரவேற்கத்தக்கது. இவ்வரிசையில் இந்நூல் ஆறாவது தொகுதியாகும்.

1885-இல் சென்னை அருங்காட்சியகததின் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட எட்கர் தர்ஸ்டன் இந்தியாவில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியவர். மானிடவியல், சமூகவியல் முதலிய துறைகளில் பெரிதும் ஈடுபாடுடையவர். சென்னைப் பல்கலைக்கழக நூலகக் குழுவின் தலைவராகவும் விளங்கியவர். சென்னை மெரினா கடற்கரையில் இடம்பெற்றுள்ள நீர் உயிரின அருங்காட்சியகத்தை அமைப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்.

மானிடவியல் ஆய்வாளர்களால், 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' என்னும் ஏழு தொகுதிகளும் ஆய்விற்குரிய அடிப்படை நூலாக இன்றும் கருதப்பெறுகிறது. மானுட வாழ்வின் பிறப்பு, இறப்பு, கல்வி, வழிபாட்டுச்சடங்குகள், திருமணம், அரசு ஆட்சியியல் நிலை முதலியவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து அரிய செய்திகளைத் தொகுத்து விளக்கியுள்ளார்.

இத்தகு பெருமைபெற்ற இந்நூலினைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளவர் மூத்த பேராசிரியர் அறிஞர் க. ரத்னம் அவர்கள். பல ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். பறவையின ஆய்வாளராகவும், இலக்கியப் படைப்பாளராகவும், ஆய்வாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கும் பேராசிரியர் க. ரத்னம் அவர்கள் தமிழ் ஆய்வுலகில் பல்வேறு துறைகளில் அரிய முத்திரைகளைப் படைத்தவர்.

பல ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழில் மொழிபெயர்க்கப் பெற்ற இத்தொகுதிகள் விரைவில் நூலாயாகக் கிடைக்கப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை ஆவன செய்துவருகின்றது.

முதல் மூன்று தொகுதிகள் 1986, 1987களில் வெளிவந்தன. நான்காம் தொகுதி 1993ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஐந்து, ஆறாம் தொகுதிகள் இப்பொழுது வெளிவருகின்றன. ஏழாம் தொகுதி விரைவில் வெளிவர உள்ளது. இவ்வரிய நூல்தொகுதிகளை மொழிபெயர்த்துத்தந்த பேராசிரியர் க. ரத்னம் அவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் நன்றி என்றும் உரியது. இவரது அரிய பணியைப் பாராட்டிப் போற்றுவோம்.

மானிடவியல் ஆய்வில் சிறந்துவிளங்கும் இத்தொகுதிகள் தமிழில் வெளிவருவது அடுத்துவரும் தலைமுறையினருக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலினை நல்லமுறையில் வெளியிட்டு உதவும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர் — இ. சுந்தரமூர்த்தி
1.12.2003

மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டபோது தமிழில் புதிய துறைகளிலான ஆய்வுகள் நிகழ ஆய்வு உதவித் திட்டம் ஒன்றினைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. அப்போது மன்னர் சரபோசிக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வந்தேன். நான் என்னுடைய படைப்பிலக்கியப் பணியிலிருந்து விலகியவனாகப் பறவையியலில் தீவிர ஆர்வம் காட்டி வந்த காலகட்டம் அது. தமிழ்நாட்டுப் பறவைகள் அவற்றின் வாழ்விடங்கள், ஆகியன பற்றி வெளிநாட்டிலிருந்தும் வெளிமாநிலங்களிலிருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் பறவைகளைப் பார்ப்பதற்காகவே பலநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வோருக்கும் உதவும் வகையில் தமிழ்நாட்டுப் பறவைகள் பற்றிய கையேடு ஒன்றினைத் தயாரிக்கலாம் எனப் பல்கலைக்கழக ஆய்வுத்திட்டத்தின்கீழ் உதவிகேட்டு விண்ணப்பித்தேன். என்னுடைய அந்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதன் காரணத்தை அறிந்து கொள்ளத் துணைவேந்தர் அவர்களை நேரில் சந்தித்தேன். அப்போது அவர் உங்களுடைய திட்டம் சிறப்பானது எனினும் பொறுத்திருந்து செய்யலாம். இப்போதுத் தமிழ் உலகினுக்கு முழுவதுமாகப் பயன்படக்கூடியதாக அதனை விடவும் மிகுந்த பயன்தரக் கூடிய பணி ஒன்று உள்ளது, அதனை மேற்கொள்ளுங்கள் எனக் கூறினார். முடிந்தால் செய்யத் தடையில்லை எனக்கூறிய என்னிடம் தர்ஸ்டனின் தென்னிந்தியச்

குலங்களும் குடிகளும் என்ற ஆங்கில நூலின் 7 தொகுதிகளும் நல்ல ஆங்கில அறிவுபடைத்தவர்களுக்கு மட்டுமே உதவக்கூடியதாக உள்ளன. அனைவருக்கும் பயன்படும் வகையில் அதனைத் தமிழில் மொழியாக்கம் செய்து கொடுப்பீர்களாயின் தமிழ்ப் பல்கலைக்கழகம் அதனை வெளியிடும் என்றார். கோவை மாவட்ட மைய நூலகத்திலும் சரபோசி கல்லூரி நூலகத்திலும் இடம்பெற்றிருந்த அத்தொகுதிகளின் ஒருசில பகுதிகளை ஆர்வம் காரணமாக முன்பே படித்திருந்த நான் அதில் தமிழர் தவிரக் கன்னடியர், மலையாளிகள் ஆகியோர் பற்றிய விவரங்களும் விரிவாக இடம் பெற்றிருப்பதால் அம்மொழி அறிந்த வல்லுநர் குழு ஒன்றினை அமைத்து இப்பணியினை ஒப்படைக்கலாம் என்றேன். குழுக்கள் கூடிப் பணியாற்றுவதில் காலம் மிகச் செல்லும். இது அவசரமாகச் செய்து முடிக்கப்படவேண்டிய பணி. இதற்காக மத்திய அரசின் பழங்குடிகளின் மேம்பாட்டுக்கான துறை நிதிஉதவியும் செய்துள்ளது. உங்கள் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. ஒரு வாரத்தில் இருபது பக்க அளவில் மாதிரி மொழிபெயர்ப்புச் செய்து கொண்டு வந்துவிடுங்கள் என்றார். அவ்வாறே செய்து கொண்டு கொடுத்தபோது இதனைப் பார்த்து, நாளைக்கு என் முடிவைத் தெரிவிக்கின்றேன் என்றார். மறுநாள் சென்றபோது பணியினைத் தொடரலாம் எனக்கூறி முதல் தொகுதி ஆறுமாதத்திற்குள் முடிக்கப்படவேண்டும், உங்கள் மொழிபெயர்ப்பினை இரண்டு படிகள் தட்டச்சுச் செய்து தரவேண்டும் எனவும் கூறி ஒப்புதல் தந்தார்.

முதல் தொகுதி மொழியாக்கப்பணி முடிந்ததும் அதனை விரைந்து அச்சேற்றிவிடவேண்டும் எனப் பதிப்புத்துறைக்கு அனுப்பினார். பதிப்புத்துறை இயக்குநர் வல்லுநர் ஒருவரின் ஒப்புதல் பெற்றே அச்சேற்றுகின்றோம். யாருக்கு இதனை அனுப்பலாம்? எனக் கேட்டபோது வல்லுநரிடம் சென்றால் காலம் நீட்டிக்கும் நானே பார்த்துவிட்டேன். செம்மையாக உள்ளது. அச்சிடலாம் என எழுதி முதல் தொகுதி அச்சில் வர அனுமதி வழங்கினார். அடுத்து இரண்டாம் தொகுதியும் வெளிவந்தது.

மூன்றாம் தொகுதி அச்சாகி முடியும்போது முதல் துணைவேந்தர் பதவி விலகிவிட்டார்.

பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் அடுத்த துணைவேந்தராகப் பொறுப்பில் அமர்ந்தார். அவரிடம் மூன்றாம் தொகுதியின் அச்சுப் பிரதியை மொழிபெயர்ப்பாளர் என்ற முறையில் நேரில்கொண்டு வந்து தந்தேன். ஏழு தொகுதிகளையும் நீங்கள் ஒருவராகவா மொழிபெயர்க்கின்றீர்கள்? எனத் தன் வியப்பை வெளியிட்டார். அப்போது ஏழாம் தொகுதி மொழிபெயர்ப்புப்பணி முடிந்திருந்ததால், ஆம், துணைவேந்தர் விரைவில் முடிக்கும்படி கேட்டுக்கொண்டதால் நானே செய்து முடித்துவிட்டேன் என்றேன்.

அடுத்தடுத்து மூன்று தொகுதிகள் வெளியான பின் எஞ்சிய தொகுதிகள் வெளிவரவில்லை. இதுபற்றி அடுத்தடுத்து வந்த மூன்று துணைவேந்தர்களுக்கு ஒரு நூலின் தொகுதிகள் முழுமையாக ஒருசேர வெளிவந்தால்தான் பயனுடையதாக அமையும் எனக் கடிதம் எழுதி வற்புறுத்தியும் தொகுதிகள் வெளியாகவில்லை.

நீங்கள் கேட்டுக்கொண்டதால் மேற்கொண்ட என் பணி இடையில் முட்டுப்பட்டுவிட்டது என வ.அய்.சு. அவர்களுக்கு என் வருத்தத்தைத் தெரிவித்து எழுதினேன். பதவியிலிருந்து விலகிவிட்ட நான் இனி அதுபற்றி ஏதும் செய்வதற்கில்லை என உடனே பதிலும் எழுதினார்.

இத்தொகுதிகள் தொடர்ந்து வெளிவராத காரணத்தால் ஆய்வாளர்கள் பலர் ஏமாற்றம் உற்றனர். பாண்டிச்சேரியிலிருந்தும், சென்னையிலிருந்தும் நேரில் என்னோடு தொடர்பு கொண்டு என்னிடமிருந்த கையழுத்துப் பிரதியைப் பெற்றுச் சென்று ஆய்வுக்குப் பயன்படுத்தினர். தனியார் பதிப்பக உரிமையாளர் ஒருவர் எஞ்சிய தொகுதிகளை வெளியிட விரும்பி என் கையெழுத்துப் பிரதியைக் கேட்டார். உரிமை தமிழ்ப்

பல்கலைக்கழகத்திற்கு ஆக்கப்பட்டு விட்டதால் அது இயலாது எனக் கூறிவிட்டேன்.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு முந்தைய தொகுதிகளில் இடம்பெற்ற உரிய படங்களும் பின்னிணைப்பும் இன்றி நான்காம் தொகுதி வெளிவந்தது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. அது பற்றிய விவரமோ தகவலோ வெளியீட்டிற்கு முன் தெரிவிக்கப்படவில்லை.

இப்போது 5ஆம், 6ஆம் தொகுதிகளை மொழிபெயர்ப்பாளரின் மேற்பார்வையில் வெளியிடவேண்டும் என்று பல்கலைக்கழகம் என்னிடம் இறுதி மெய்ப்புப் பார்க்கும் பொறுப்பினை இப்போதைய துணைவேந்தர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் வழிகாட்டு நெறிப்படி என்னிடம் ஒப்படைத்தது. எஞ்சிய ஏழாம் தொகுதியின் மெய்ப்புப் பார்க்கும் பணியும் தொடர்கிறது.

முட்டுப்பட்டு நின்றுபோன எனது பணியை முற்றுப்பெறச் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ள துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி அவர்களுக்கு நன்றிக் கடப்பாடுடையேன்.

இப்பணியினை மேற்கொண்டபோது வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து நூல் சிறப்பான முறையில் உருவாக உதவும் பதிப்புத்துறையினருக்கும் என் நன்றி உரியது.

19-B, திருச்சி சாலை
சூலூர் 641 402

முனைவர் க. ரத்னம்

24.07.2003

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி : ஆறு

பள்ளி அல்லது வன்னியன் (Palli or Vannian)

"தென்னிந்தியாவைச் சேர்ந்த பள்ளியர் (அல்லது வன்னியர்) அக்னி குலத்தைச் சேர்ந்த சத்திரியர் என்பதனையும் தமிழ்நாட்டுப் பள்ளிச் சாதியார் ஒரு காலத்தில் எகிப்தில் ஆட்டிடையர்களாக இருந்தவர் என்பதனையும் விளக்கி அண்மையில் இந்திய நாட்டவர் ஒருவரால் ஒரு நூல் எழுதப்பட்டுளளது" என இச் சாதி பற்றி 1871 கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் பதிந்துள்ளார். 1871 கணக்கெடுப்பின்போது இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் தங்களைச் சத்திரியர் என்ற பிரிவில் அட்டவணைப் படுத்தும் படியாக விண்ணப்பம் ஒன்றினைத் தந்தனர். அதன்பின் இருபது ஆண்டுகள் கழித்து 1891 – இல் திரு. அய்யாக்கண்ணு நாயக்கர் என்பவரால் எழுதப்பட்ட 'வன்னியகுல விளக்கம்' என்ற இச் சாதியினைப் பற்றிய நூல் வெளியானது. வன்னியர், சத்திரியர் குலத்தவர் என்பதனை அந்நூலுள் அதன் ஆசிரியர் விளக்கியுள்ளதன் பொருத்தத்தை வாசகர்களை அந்த நூலிலேயே கண்டு தெளியும்படி கூறுகின்றேன். 1907 – இல் வருண தர்ப்பணம் (சாதிகள் பற்றிய கண்ணாடி – விளக்கம்) என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இச்சாதியினரைப் பல்லவர்களோடு தொடர்புபடுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவாங்கூரின் பண்டைய மன்னர்களுள் ஒருவரும் ஆழ்வார்களுள் ஒருவராகத் தென்னிந்தியாவைச் சேர்ந்த வைணவர்களால் சிறப்பிக்கப்பெறுபவருமான குலசேகரரைப் பள்ளியர் தங்கள் சாதியைச்

சேர்ந்த அரசர் எனக் கூறுகின்றனர். சென்னை நகரத்தில் திருவல்லிக்கேணியில் உள்ள பல்லவர் காலத்தது எனக் கல்வெட்டுக்கள் கூறும் பார்த்தசாரதி கோயிலில் குலசேகரரின் ஆண்டுவிழாவினைச் சிறப்பாக இவர்கள் கொண்டாடுகின்றனர். சென்னையில் கோமளீசுவரன்பேட்டையில் உள்ள பள்ளியர் குலசேகரப் பெருமாள் சபை என்ற அமைப்பினை உடையவர்களாக அதன் சார்பில் குலசேகரரின் ஆண்டுவிழாவினைக் கொண்டாடுகின்றனர். அங்குள்ள கோயில் அண்மையில் மிகுந்த பொருட்செலவில் அந்த ஆழ்வாருக்குரிய கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. சென்னையில் சிந்தாதரிப்பேட்டையில் உள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயிலிலும் இத்தகைய விழாக் கொண்டாடப்படுகின்றது. மைலாப்பூரில் உள்ள சிவன் கோயிலில் முக்கியமான பூசையின்போது கற்பூர ஆரத்தி சேவை இன்றும் பள்ளியரின் உரிமையாக இருந்து வருகின்றது. இக் கோயில் முதலில் தங்களுக்கு உரிமை உடையதாக இருந்ததென்றும் படிப்படியாக அந்த உரிமை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு இன்று இந்தக் கற்பூர சேவை செய்யும் உரிமை மட்டுமே தங்களிடம் இருப்பதாகவும் பள்ளியர் கூறுகின்றனர். இந்த உரிமை தொடர்பாகச் சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை உயர்நீதி மன்றத்தின் முன் வழக்குத் தொடரப்பட்டு நீதி மன்றம் இந்த உரிமையினைப் பள்ளியருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியுள்ளது. பல்லவர்களின் தலைநகரான பெரிய காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரநாதர் கோவிலின் பெரிய மதில் கோபுரங்களுள் ஒன்று இன்றும் பள்ளி கோபுரம் என வழங்கப்படுகின்றது. அந்த நகரத்தைச் சேர்ந்த பள்ளியர் அதனைத் தங்கள் உரிமையாகக் கொண்டாடுவதோடு கூட அவ்வப்போது அதனைப் பழுதுபார்த்துச் செப்பனிட்டும் வருகின்றனர். இதே போன்று சிதம்பரத்தில உள்ள கோயிலினைக் கட்டியவனான சுவேதவர்மன் (இவன் கி.பி. ஆறாம் நூற்றாண்டினனான பல்லவன் இரணியவர்மனே எனப் பின்னர் அறியப்பட்டுள்ளது) தங்கள் சாதியினைச் சேர்ந்தவன் எனவும் இவர்கள் உரிமை கொண்டாடி வருகின்றனர். சிதம்பரத்திற்குக் கிழக்கே நான்காவது மைலில் உள்ள பிச்சாவரம் என்ற ஊரில் வாழ்ந்து வரும் பள்ளியர் குடும்பத்தினர் தங்களை இரணியவர்மன் சந்ததியினர் எனக்கூறிக் கொள்கின்றனர். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மகன் திருமணம் முடித்துக் கொண்டவுடன் அந்தப் பகுதியினைச் சேர்ந்த வேளாளருடன் அந்தப் புனித தலத்திற்குத் தன் மனைவியுடன் வந்து சாதியினைச் சேர்ந்தவர்களோடு கூடப் புனித நெருப்பு வளர்த்து வேள்வி இயற்றி வழிபாடு

செய்வது வழக்கம். அதன்பின் அந்த மணமக்களை ஒன்பது வகைப் புனித நீரால் குளிப்பாட்டி அவர்கள் தலையில் வேளாளன் ஒருவன் முடியினைக் கவிப்பான். இந்தச் சடங்கினைக் கோவில் புரோகிதர்களின் உதவியுடன் நடத்திவைக்கும் வேளாளன் இரணியவர்மனின் முன்னாள் அமைச்சர் பரம்பரையில் வந்தவன் எனக் கூறப்படுகிறது. இந்தச் சடங்குக்குச் செலவு மிகுதியும் ஆவதாலும் செலவை முழுவதுமாக இதனைச் செய்து கொள்பவனே ஏற்றுக் கொள்ள வேண்டியிருப்பதாலும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மகன் நடுவயதைத் தாண்டும்வரை கூட மணம் செய்து கொள்ளாதவனாகவே இருந்துவர வேண்டியதாகின்றது என்றும் கூறப்படுகிறது. சென்னை நகரில் சாந்தோமில் வாழும் பள்ளியர் புனிதர் தாமஸ் வருகை தந்த காலத்தில் மைலாப்பூரினை ஆண்ட அரசர் கந்தப்ப ராசாவோடு தாங்களும் கிறித்தவ சமயத்தைத் தழுவியதாகக் கூறுவர். பள்ளியர் சாதியினைச் சேர்ந்த ஒரே உயர்நீதிமன்ற வழக்குரைஞரான திரு.டி. வரதப்ப நாயக்கர் 1907–இல் இச் சாதியினர் பழமையான பல்லவ மன்னர்களோடு கொண்டிருந்த தொடர்பினை விளக்கி ஒரு நூல் வெளியிட்டுள்ளார்.

மக்கள்தொகை கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் வெளியிட்ட தொடர்ச்சியான பல கேள்விகளுக்குத் தரப்பட்ட பதில்களில் கண்டுள்ள விவரங்கள் வருமாறு:– "அக்னிகுலத்தார், வன்னியர் என்ற பெயர்கள் இச் சாதியாருக்கு உரியன. இப் பெயர்கள் இரண்டுமே நெருப்பு நெருப்பு எனப் பொருள்படும் வடமொழிச் சொற்களான அக்னி, வஹ்னி என்ற சொற்களிலிருந்து பிறந்தவை. முனைவர் ஒப்பெர்ட் அவர்களின் 'பாரத வர்ஷத்துப் பழங்குடிகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் பகுதி இச் சாதியின் பெயருக்கான காரணத்தை அச் சொற்பொருளொடு பொருத்தமுற உணர்த்துவதாகும். 'வன்னியன் என்ற சொல் நெருப்பு எனப் பொருள்படும் வஹ்னி என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்ததாகவே பொதுவாகக் கொள்வர். நெருப்புக்குத் தேவதையான அக்னி ஆட்சி உரிமையோடு தொடர்புடையவன். அரசர்கள் தங்கள் கரங்களில் அக்னி சக்கரங்களைத் தாங்கியவர்கள். இதனாலேயே வன்னியர்கள் தங்கள் சாதி அரச குலத்தோடு தொடர்புடையது என உரிமை கொண்டாடுகின்றனர். வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் அக்னியோடு தொடர்புடைய இனங்கள் இருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆரிய இனத்தவர்களல்லாத வீரமரபினர் வழிவந்தவர்களுக்கு ராஜபுத்திரர் என்ற

தகுதியினை யாரும் மறுத்தல் இயலாது. இதனை ஏற்றுக் கொள்வதின் மூலம் நாம் ஆரியர். ஆரியரல்லாதார் ஆகிய இருபாலாரிடையேயும் ராஜபுத்திரர் அல்லது ராஜ்புத் என்ற குலத்தவர்கள் உள்ளனர் என்பதனை உடன்பட்டவர்களாகின்றோம். தென்னிந்தியாவினைச் சேர்ந்த வன்னியர்கள் ஆரியரல்லாதாரின் ராஜபுத்ரக் கூறுகளைக் கொண்டோரின் பிரதிநிதிகள் எனலாம்."

வன்னியர் என்ற பெயர் பற்றி திரு. எச்.ஏ. ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் கூறியுள்ளதாவது:- "வன்னியன் என்ற சொல் வஹ்னி என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது என்பதனுக்கு ஆதாரமாகக் கூறப்படுவது பின்வரும் வழக்கு வழிப்பட்ட கதையாகும். பழங்காலத்தில் வாதாபி, மாகி என்ற இரண்டு அசுரர்கள் இருந்தனர். பிரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்த அவர்கள் நெருப்பைத் தவிர மற்ற பூதங்களால் தங்களுக்குச் சாவு நிகழக் கூடாது என வரம் பெற்றனர். வரம்பெறும்போது அவர்கள் நெருப்பை தங்கள் பட்டியலில் சேர்க்க மறந்து விட்டனர். வாதாபி, வாயு தேவனை விழுங்கும் அளவுக்குச் சென்றுவிட்டான். மாகி, சூரியனை விழுங்கிவிட்டான். உலகம் இருள் கவிழ்ந்து அசைவற்றதாக ஆகிவிடவே பீதியுற்ற தேவர்கள் பிரமனிடம் சென்று முறையிட்டனர். அந்த அசுரர்கள் அக்னியினையும் சேர்த்து வரம் பெறாததை நினைவு கூர்ந்த பிரமன் அவர்களை ஜாம்பவ மகாமுனிவரிடம் சென்று புனித நெருப்பினை மூட்டி வேள்வி இயற்றும்படி வேண்டுமாறு அனுப்பி வைத்தான். அதன்படி வேள்வி நிகழ்த்த அந்த வேள்வித் தீயினிடையே இருந்து படைக்கலம் ஏந்திய குதிரை வீரர்கள் வெளிப்பட்டு பன்னிரண்டு முறை வாதாபி, மாகி ஆகிய அசுரர்கள் மீது போர் தொடுத்து முதலில் அவர்களைக் கொன்று, பின் அவர்கள் உடலிலிருந்து வாயுவினையும் சூரியனையும் வெளிப்படுத்தினர். அந்த வீரர்களின் தலைவன் ருத்ர வன்னிய மகாராச என்ற பெயரால் உலகை ஆளத் தொடங்கினான். அவனுக்குப் பிறந்த ஐந்து பிள்ளைகளே வன்னியரின் மூதாதையர். இச் செய்திகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் பதிந்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. "

இங்கே குறிக்கப்பட்ட வைத்தீஸ்வரன்கோயில் சீர்காழிக்கு அருகில் உள்ளதாகும். "இந்த வழக்கு வரலாறு பள்ளியர் அல்லது பல்லவ அரசனான நரசிம்மவர்மன் வாதாபி நகரத்தை அழித்த வரலாற்றைக் குறியீடாக

உணர்த்துவதாகும்" என திரு. ஸ்டுவர்ட் தொடர்ந்து கூறியுள்ளார். வாபி எனப்படும் வாஅபி பம்பாய் மாநிலத்தில் உள்ள பாதாமி என வழங்கும் வாதாபிக்குரிய பழைய பெயராகும். அது ஏழாம் நூற்றாண்டில் தென்னகத்தை ஆண்ட பல்லவர்களோடு மாறுகொண்டிருந்தவர்களான சாளுக்கியரின்தலைநகரமாகும்."முதலாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மனாவான். அவன் சோழர், கேரளர், களப்பிரர். பாண்டியர் ஆகியோரைப் பலமுறை புறங்கண்டு பல்லவர் குலத்தின் பெருமையினை நிலைநிறுத்தினான். பல போர்களில் அவன் பாதாமியினை ஆண்ட இரண்டாம் புலிகேசியின் முதுகில் வெற்றி என்ற வாசகத்தைப் பலரும் காணும்படியாகப் பொறித்தான். (அதாவது புலிகேசி புறமுதுகு காட்டி ஓடும்படி வென்றான்.) நரசிம்மவர்மன் சாளுக்கியர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவர்களுடைய தலைநகரான வாதாபியினைக் கைப்பற்றினான். அவனுடைய இந்த வெற்றியினை வாதாபியில் காணப்படும் அவனுடைய ஒரு கல்வெட்டுப் புலனாக்கும். அந்தக் கல்வெட்டில் நரசிம்மவர்மன் மகாமல்லன் என்ற பட்டத்திற்கும் உரியவனாக இருந்தான் எனத் தெரிகின்றது. பிற்காலத்தில் இப் பல்லவ மன்னன் வாதாபி கொண்ட நரசிங்கப்போத்தரையன் என அழைக்கப்பட்டான். முனைவர் பிளீட் சாளுக்கியர் தலைநகரான வாதாபியினைப் பல்லவர் வெற்றி கொண்டது கி.பி: 642–இல் என வரையறை செய்துள்ளார். நரசிம்மவர்மன் புலிகேசியோடு போரிட்ட செய்திகள் சிங்களமொழி வரலாற்றுக் குறிப்பான மகாவம்சத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. இப்போர் பற்றிய குறிப்புத் தமிழ் நூலான பெரியபுராணத்திலும் இடம் பெற்றுள்ளது. சிவனடியாராகத் தன் இல்லத்திற்கு எழுந்தருளிய சிவபெருமானுக்குத் தன் ஒரே மகனை அறுத்துக் கறியமுது செய்த நாயனாரான சிறுத்தொண்டரே தனது மன்னர் சார்பில் படையெடுத்துச் சென்று வாதாபியினை அழித்து வெற்றி கொண்டவர். இவர் இவ்வாறு படையெடுத்துச் சென்றது பல்லவ மன்னன் நரசிம்மவர்மனைத் தவிர வேறு எவருக்காகவும் இருக்க முடியாது" என ராவ்பகதூர் வி. வெங்கைய்யா எழுதியுள்ளார்.

பள்ளிகளைப் பற்றியதாகத் திரு. எப்.ஆர். ஹெமிங்வேயின் ஒரு குறிப்பிலிருந்து நான் தெரிந்துகொண்ட செய்தி வருமாறு:– "வன்னியர் தாங்கள் வீர வன்னியன் என்பவனுடைய சந்ததியினர் என்பதனை விளக்க நீண்டதொரு கதையினைக் கூறுவர். அதன்படி வீர வன்னியன் நம்புவ முனிவரால் அவர் வாதாபி, எனதாபி என்ற அசுரர்களை அழிக்க

முற்பட்டபோது படைக்கப்பட்டவன். இந்த வீர வன்னியன் இந்திரனுடைய மகளை மணந்து கொண்டான். அவனுக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். ருத்ரன், பிரம்மன், கிருட்டிணன், சம்புகன், கய் என்பன அவர்களுடைய பெயர்களாம். இந்த ஐவரின் சந்ததியில் தோன்றியவர்களே இன்று பாலாற்றுக்கும் பெண்ணையாற்றுக்கும் இடைப்பட்ட காவேரி சமவெளியில் வாழ்ந்து வருகின்றனர். இந்த வழக்கு வரலாற்றின் அடிப்படையில் அவர்கள் ஒருபுராணமும் ஒரு நாடகமும் எழுதியுள்ளனர். தங்களைப் பிராமணர்களைவிட உயர்ந்தவர்கள் என இவர்கள் கூறிக் கொள்கின்றனர். இதற்கு இவர்கள் பிராமணர்கள் பிறந்த பின் புனிதப் பூணூல் அணிந்து பூசுரர் ஆகின்றனர் எனவும், தாங்கள் பிறக்கும்போதே பூணூலோடு பிறப்பதும்தான் காரணம் ஆகும் எனவும் கூறுவர்.

"இன்று வன்னியர்கள் சிறிய எண்ணிக்கையினராகப் பயிரிடுவோராக தாழ்ந்தவர்களாக வாழ்கின்றனர் எனினும் இவர்கள் முன்பு தென்னிந்தியாவில் வாழ்ந்த தொல்குடியினரிடையே உயர்ந்ததொரு நிலையில் இருந்தவர்களுடைய சந்ததியினர் என்று கொள்வதற்கான காரணங்கள் உள்ளன. மெக்கென்சி கையெழுத்துச் சுவடிகளுக்கான அட்டவணைகளுள் பக்கம் 90–இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ள விவரம், வன்னியர் அக்னி குலத்தவர் எனவும் சம்பு முனிவரின் வழிவந்தவர்கள் எனவும் தங்கள் விற்றொழில் திறமை காரணமாக வெற்றி பெற்றவர்கள் எனவும் தெரிவிக்கின்றது. ஒரு சுவடியின் சுருக்கமாகப் பக்கம் 427–இல் தரப்பட்டுள்ள விவரப்படி இவர்கள் சாதியினைச் சேர்ந்த இரண்டு குறுநிலத் தலைவர்கள் ராயருக்குக் கப்பம் கட்ட மறுத்தனர் எனவும் அவரால் நீண்டகாலம் இவர்களை வெற்றி கொள்ள முடியவில்லை எனவும் தெரிவிக்கின்றது. இலங்கை வரலாற்றுக் குறிப்புகளில் வன்னியர் படை பற்றிய குறிப்புகள் அடிக்கடி இடம்பெற்றுள்ளன. ராயல் ஏசியாட்டிக் கழக இதழின் தொகுதி 24–இல் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த இந்துக்களின் வரலாற்றில் கலியுக ஆண்டு 3300–இல் பாண்டிய இளவரசி ஒருத்தி இலங்கைக்குச் சென்று அந்த நாட்டு அரசனை மணம்புரிந்து கொண்டாள் எனவும் பதினாறு படைப்பிரிவு வன்னியர் அப்போது அவளுடன் சென்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது" என நெல்சன் மதுரை மாவட்டக் கையேட்டில் கூறியுள்ளார்.

வன்னி, வன்னியன் என்ற சொற்கள் தமிழ்ப்பாடல்களுள் அரசன் என்ற பொருளில் வழங்குகின்றன. தெய்வத் திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவருடைய காலத்தைச் சேர்ந்தது எனக் கூறப்படும் பண்டை இலக்கியமான கல்லாடத்தில் வன்னி என்ற சொல் அரசன் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார். முனைவர். ஈ. கியுட்ல்ச் பதிப்பித்துள்ள *கி.பி. 1189 – ஆம் ஆண்டிற்கான கல்வெட்டு ஒன்றில் திருச்சூரம் செங்கல்பட்டுக்குத் தென்கிழக்கில் நான்காவது மைலில் உள்ள திருவிடேச்சுரம் என்பதாகும். அங்கு ஒரு கோட்டையின் இடிபாடுகளும் 9–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட பாடல்பெற்ற சிவன் கோயில் ஒன்றும் உள்ளன. அங்கு வழங்கும் வழக்கு வரலாற்றினை மெக்கென்சி கையெழுத்துச் சுவடிகளில் ஒன்றும் ** உறுதிப்படுத்துகின்றது. அதன்படி விசயநகர அரசரான கிருட்டிணதேவராயர் காலத்தில் கி.பி. (1509–30) காந்தவராயன், சேந்தவராயன் எனற் இரண்டு குறுநில மன்னர்கள் இப்பகுதியினை ஆண்டு வந்ததோடு அவர்கள் தங்கள் பேரரசனான கிருட்டிண தேவராயனுக்குப் பட்டம் கட்டவும் மறுத்தனர். கிருட்டிண தேவராயர் அனுப்பிய படையினரால் இந்தச் சகோதரர்களைத் தேடிக் கண்டுபிடிக்க இயலவில்லை. இவர்களுடைய அரண்மனையினைச் சேர்ந்த நாட்டியக்காரி ஒருத்தி நம்பிக்கைத் துரோகம் இழைத்தவளாகக் காந்தவராயனுக்கு நஞ்சிட்டுக் கொன்றாள். அவனுடைய சகோதரனான சேந்தவராயன் அவளையும் அவள் குழந்தைகளையும் ஊர்க் குளத்தில் அமிழ்த்திக் கொன்றான். அந்தக் குளமும் அதன் அருகே உள்ள குன்றும் இன்றும் குப்பி என்ற அந்த நாட்டியக்காரியின் பெயரால் குப்பிச்சிக் குளம் எனவும் குப்பிச்சிக் குன்று எனவும் வழங்கி வருகின்றன. விசய நகர மன்னனான இரண்டாம் தேவராயனின் (கி.பி.1419–44) கல்வெட்டு ஒன்று ***

**தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் III 31 பக்கம் 82. (South Indian Inscrptions, III/31, Page 82)*

*** *கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை (In the Oriental Manuscript Library, Madras.)*

**** *ஜெ. பர்கெஸ் தொல்பொருள் துறை மதிப்பீடு. தமிழ் மற்றம் வடமொழிக் கல்வெட்டுக்கள், எண் 11 பக்கம் 150. J. Burgess. Archaeological Survey. Tamil and Sanskrit Inscriptions, No.11, 150)*

அவனைப் பதினெட்டு வன்னியர் தலைகளை வெட்டியவன் என்ற பட்டத்துக்கு உரியவனாகக் கூறுகின்றது. இந்தக் கல்வெட்டு வன்னிராய கோத்திரத்தைச் சேர்ந்த மூக்கா நாயக்கன் என்பவன் மகனான முத்தைய்ய நாயக்கன் என்பவன் வ்ழங்கிய ஒரு கொடையினைப் பற்றியதாகும். கி.பி. 1456–ஆம் ஆண்டினதான மற்றொரு கல்வெட்டு* காஞ்சிபுரத்திலிருந்து ராசவல்லபன் என்ற அரசன் ஆண்டகாலத்தில வன்னிய சின்னப் பிள்ளை என்ற படைத்தலைவன் சென்னைக்கு அருகே உள்ள சாத்தான்காடு என்ற இடத்தில் ஒர சிறு நிலப்பகுதியினைப் பெற்றுள்ளான் எனக் கூறுகின்றது. 1757–இல் முகமது யூசுப் திருநெல்வேலியினை வென்று அடிமைபடுத்தியபோது அவனுக்கு உதவிபுரிந்த செவகெரி வன்னியன் ஒருவனை ஒர்மெ ** குறிப்பிட்டுள்ளார். இங்குச் சுட்டப்பட்ட வன்னியன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிவகிரி சமுனை ஆண்ட வன்னிய சாதியினைச் சேர்ந்த சமீன்தார் ஆவார். இலங்கையின் வரலாற்றுக் குறிப்புக்களிலும் வன்னியர் சுட்டப்பட்டுள்ளனர். வன்னி என்பது இலங்கையில் உள்ள மாவட்டம் ஒன்றின் பெயரும் ஆகும். "அம் மாவட்டம் திரிகோணமலைக்கு வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. கண்டி அரசர்களுக்கும் அவர்களோடு பகைகொண்டு போரிட்ட ஐரோப்பியருக்கும் இடையேயான போர்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பல சமயங்களில் அங்கு இருந்து அ¯சாண்ட வன்னிய இளவரசர்கள் தங்கள் தன்னாட்சி உரிமையினை நிலைநாட்டிக் கொண்டுள்ளனர். இறுதியில் பலருடைய தாக்குதல்களுக்கும் உள்ளாகிச் சீரழிந்த இவர்கள் டச்சுக்காரர்களுக்கு அடிபணிந்தனர்" எனத் திரு. டபிள்யூ. ஹாமில்டன் எழுதியுள்ளார். ***இன்று வன்னெய் மாவட்டம் தன்னை வன்னிய இளவரசன் எனக் கூறிக் கொள்ளும் ஒரு உள்ளூர் அரசனால் ஆளப்படுகிறது. அவ்வப்போது வன்னிச்சி என்ற பட்டம் தரித்த பெண்களின் ஆளுகைக்கும் இது உட்பட்டுள்ளது" என சர்.ஜெ.இ. டென்னன்ட்டும் வன்னி மாவட்டம் பற்றிக் கூறியுள்ளார்.

---

* *முந்துநூல். எண்.12, பக்.152. (Ibid.No.12,.152)*

** *பிரிட்டன் இந்துஸ்தானில் மேற்கொண்ட படையெடுப்புகளுக்கான உடன்படிக்கைகளின் வரலாறு 1861. (History of the Military Transactions of the British nation in Industan. 1861.)*

*** *இந்துஸ்தானத்தையும் அதனை அடுத்த பகுதிகளைப்பற்றியும், நிலவியல், புள்ளியியல் வரலாற்றியல் தொடர்பான விளக்கங்கள், 1820. (Geographical, statistical and historical description of Hindustan and the Adavent Countries 1820.*

சம்பு, சம்புவராயன் என்ற பெயர்கள் வன்னியரோடு தொடர்புடையன. அக்னியே அரசர்கள் அனைவரின் மூதாதையாவான் என்பது பழைய கதை வழக்கு. அக்னியின் மகன் சம்பு. அவன் சந்ததியினர் தங்களைச் சம்புல குலத்தவர் எனவும் சம்புவன் குடும்பத்தவர் எனவும் கூறிக் கொள்கின்றனர். மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராச இராசன் ஆகிய சோழ மன்னர்களின் சில கல்வெட்டுக்கள்* சம்புகுலப் பெருமான், சம்புவரையன் மற்றும் அழகிய பல்லவன் எதிரிலி சோழ சம்புவரையன் என்பன போன்ற பட்டங்கள் புனைந்த குறுநில மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. காஞ்சிவரத்தில உள்ள எகாம்பரநாதசுவாமியினைப் புகழ்ந்து பாடும், அனைவரும் அறிந்த இரட்டைப் புலவர்களின் ஒரு பாடல் பல்லவன் சம்பு குலத்தவன் எனக் கூட்டுகின்றது. பல்லவர்களின் பிற்காலச் சந்ததியினர் சம்புவரையர் என்பதனை அதனோடு உறவுடைய வடிவங்களையும் தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளியர்கள் இன்றும் தங்களுடைய பட்டப்பெயராகத் தரிப்பதிலிருந்து தெரிகின்றது. காஞ்சிவரத்தில் வீரம்புவின் குடும்பத்தினர் எனத் தங்களைக் கூறிக் கொள்ளும் மகாநாட்டார் குடும்பத்தினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

"பள்ளியர் தங்கள் குலப் பெருமையினை உயர்ந்ததாகக் கூறிக் கொள்ள மேற்கொண்ட விருப்பத்தை நிறைவேற்றி வைக்கப் பிராமணர்கள், வன்னியர் என்ற பெயரை அவர்களுக்குத் தந்திருக்க வேண்டும். படைவீரன் எனப்பொருள்படுவதான படையாச்சி என்ற வழக்கும் காலத்தால் பிற்பட்டதேயாகும். பள்ளியர் ஒரு காலத்தில் செல்வாக்கும் உரிமையும் பெற்ற வகுப்பாராக இருந்துள்ளனர் என்பதனை ஏற்றுக் கொள்ளலாம். இன்ற தங்களைச் சத்திரியர் என வகைப்படுத்த வேண்டும் என்ற இவர்கள் விருப்பத்தைச் சத்திரியர் என்ற சொல்லுக்குப் புதியதொரு பொருள்விளக்கம் தந்து ஏற்றுக்கொள்ள வழியுண்டானாலன்றி அபத்தமான விருப்பம் எனத் தள்ளிவிடுவதைத் தவிர வேறுவழியில்லை. பல்லவ அரச மரபின் வீழ்ச்சிக்குப் பின் வன்னியர் வேளாளரின் கீழ்ப் பயிர்த்தொழில் புரியும் பணியாளர்களாக ஆகிவிட்டனர். பிரிட்டீசாரின் ஆட்சி ஏற்பட்ட பிறகே இவர்கள் தங்களை உயர்ந்த சாதியராகக் கூறிக்கொள்ள முற்பட்டுள்ளனர்" என **1891** கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. எச். எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளார். "இச் சாதியார் இந்து சமூகத்தவர்கள் இவர்களுக்குத் தர முன்வரும்

---

* *தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் 1,86–7, 105, 136 மற்றும் III, I, 121, 123 (South Indian Inscripions, 186-7, 105, 136 and III 1 121, 123.)*

இடத்தைவிட உயர்ந்ததொரு இடத்தை வேண்டுகின்றனர். இவர்கள் முன்னோர்கள் சமூகப் படிநிலையில் இவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாகவே இருந்துள்ளனர். இதனைக் கூறிக் கொள்வதோடு திருப்தியுறாதவர்களாக இவர்கள் சிலபகுதிகளில் இரு பிறப்பாளருக்குரிய பூணூலை அணிந்தவர்களாகத் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக் கொள்கின்றனர். சத்திரியர் குலத்தவர் என்பதனை மெய்ப்பிக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளியிடுகின்றனர். குறிப்பிட்டுக் கூறவேண்டுமாயின் கோதாவரி மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கானவர்கள் தங்களை அக்னி குல சத்திரியர் என்றோ வன்னிய குல சத்திரியர் என்றோ அக்னியின் வழியில் வந்த சத்திரியர் எனப் பொருள் படப் பதிந்து கொண்டுள்ளனர் " என 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. டபிள்யு பிரான்சிஸ் மேலும் இதுபற்றிக் கூறியுள்ளார். "வன்னிய குல சத்திரியர் அக்னியிலிருந்து தோன்றியவர்கள் என்பதற்குச் சான்றாகத் திரௌபதி மற்றும் பிற தேவியர் திருவிழாக்களில் தீச்சட்டியினை ஒரு வன்னியன் தலையில் வைத்து ஊர்வலமாகக் கொண்டுவருவதைக் காட்டுவர். மேலும் நாடகங்களில் ராச வேடம் தாங்குபவன் சத்திரிய குலத்தவனாக இருக்க வேண்டும் என்ற மரபுப்படி ஒரு வன்னியனே அந்த வேடத்தை ஏற்பது வழக்கமாக மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு சாதிக்கு உரிய தனி உரிமைகளை மற்றச் சாதியார் தங்கள் சாதிக்கு உரியனவாக மேற்கொள்ளும் வழக்கம் இன்று எங்கும் பரவலாகக் காணப்படுகின்றது. திருப்போரூரைச் சேர்ந்த கோயிலில் மழுவினை (பழுக்கக் காய்ச்சிய இரும்பிலிருந்து) அடிக்கும் உரிமை வன்னியருக்குப் பணிபுரியும் நாட்டிய மகளிருக்கு உரியதாக உள்ளது. தீக் குண்டத்தில் முதலில் நடக்கும் உரிமையும் வன்னியருக்கு உரியதாக இருந்து வருகின்றது" என வன்னிய குல விளக்கம் என்ற நூலுள் கூறப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பில் திரு. பிரான்சிஸ் பதிந்துள்ளமை வருமாறு:– "இம் மாவட்டத்தில் திரௌபதி கோயில்கள் பலவாக உள்ளன. அவற்றில் பெரும்பாலும் பள்ளியரே பூசாரிகளாக இருப்பதோடு ஆண்டுவிழா ஏற்பாடுகளை நடத்துவதிலும் இவர்கள் முன்னிற்கின்றனர். இதற்கான காரணம் என்ன என்பது விளங்கவில்லை. பாண்டவர்களைப் போலத் தாங்களும் அக்னியிலிருந்து பிறந்தவர்களாக அவர்களோடு உறவுடையவராவதே இதற்குக் காரணம் எனப் பள்ளியர் கூறுகின்றனர். திரௌபதி திருவிழாவில் இரண்டு சடங்குகள் முக்கியமானவை. மகாபாரதக் கதையினைக் கூறி நடித்தலும் தீக் குண்டம் மிதித்தலுமே அந்த நிகழ்ச்சிகள்.

பாரதக் கதையினைப் பள்ளியர் நன்கு அறிந்தவர்களாக இருப்பதோடு அதனைக் கதையாகக் கூறி நடிப்பதிலும் இவர்களுள் பலரும் திறமை வாய்க்கப்பெற்றவர்களாக உள்ளனர். (சென்னை நகரில் பள்ளியருக்கு உரிமையுடையனவாகப் பல திரௌபதி கோயில்கள் உள்ளன. இந்தச் சாதியினைச் சேர்ந்த ஒருவன் உதவியின்றி அந்தக் கோயில்களில் தீமிதி விழாக் கொண்டாடுதல் இயலாது.)

கூவாக்கம், அரவான் எனப்படும் கூத்தாண்டர் திருவிழாவிற்குப் பெயர்போனது. அரவானை இறவான் எனக் கூறுதலே சரியானதாகும். இம் மாவட்டத்தில் இது சூத்திரர்களடைய புகழ்பெற்ற திருவிழாவாக உள்ளது. அரவான் பாண்டவர் ஐவருள் ஒருவனான அருச்சுனனுடைய மகன். மகாபாரதப் போர் தொடங்கிய சமயத்தில் பாண்டவர்களின் எதிரிகளான கௌரவர்கள் தங்களுக்குப் போரில் வெற்றிகிட்ட வேண்டி ஒரு வெள்ளை யானையைப் பலியிட்டனர் என்றும் அத்தகைய அரிய விலங்கு கிடைக்கப் பெறாது பாண்டவர்கள் திகைத்தபோது அருச்சுனன் தன் மகனான அரவானைப் பலிக்குரியவனாக ஆக்க உதவினான் எனவும் வழக்கு வரலாறு கூறுகின்றது. அரவான் இந்தப் பலிக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்தான். போரில் இறுதியாகப் பாண்டவர்கள் வெற்றி பெற்றவுடன் அந்த வெற்றிக்குக் காரணமான தியாகத்தைப் பாராட்டும் வகையில் அவன் தெய்வமாக்கப்பட்டான். இளமையிலேயே மணம் முடிக்கப்படாதவனாக இவன் உயிர் துறந்த காரணத்தால், வளர்ந்து மணம் செய்து கொண்ட ஆடவர்களாயினும் இவனை மணந்து கொள்ள முன்வருவார்களாயின், அதனால் இவன் மனம் மகிழ்வான் என நம்புகின்றனர். தீராத நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இவனைத் திருவிழாவில் மணந்து கொள்வதாக நேர்ந்து கொண்டால் தங்கள் நோய் தீரும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு நேர்ந்து கொள்கின்றனர். இந்த அரவான் விழா மே மாதத்தில் வருகின்றது. அப்போது பள்ளி ஒருவனால் மகாபாரதக் கதை கூறப்படுகின்றது. அதனைப் படிப்பதைக் கேட்பதற்குப் பெருமளவில் பள்ளி சாதியினரும் பிறரும் வந்து கூடுகின்றனர். பதினெட்டாம் நாள் இரவில் மரத்தாலான கூத்தனார் உருவத்தை ஊர்ப்புறத்தே உள்ள தோப்புக்கு எடுத்துச் சென்று அமர்த்துவர். அவ்வாறு அமர்த்தப்படுவது அடுத்துப் பல கோழிகளைப் பலி தருவதற்கான தொடக்க நிகழ்ச்சியாகும். இந்த விழாவிற்கு வருவோர் அனைவரும் ஓரிரு கோழிகளைப் பலி தர தங்களோடு கொண்டுவருவர். அவ்வாறு பலியிடப்படும் கோழிகளின் எண்ணிக்கை பல ஆயிரங்களாகக் கூட

இருக்கும். தென் ஆர்க்காட்டில் இத்தகைய பலிகள் அரிதாகவே இருக்க, மாநிலத்தில் பிற பகுதிகளில் – குறிப்பாக ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களில் – இவை மிகுதியாக நிகழ்வதற்கான காரணங்கள் ஆய்வுக்கு உரியன. இவ்வாறு பலிகள் கொடுக்கும் நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும்போதே அரவானை மணப்பதாக நேர்ந்து கொண்டவர்கள் பெண்வேடம் தரித்தவர்களாக அவன் உருவத்தின் முன் வந்து கும்பிட்டவர்களாகப் பூசாரிக்குச் (பள்ளியார் சாதியினைச் சேர்ந்தவன்) சில அணாக்களைக் காணிக்கையாகச் செலுத்தித் தாங்கள் கையோடு கொண்டு வந்திருக்கும் தாலியினை அவனிடம் தந்து கூத்தாண்டானின் பிரதிநிதியாக அவனைக் கருதி அத்தாலியினைத் தங்கள் கழுத்தில் கட்டும்படி செய்வர். அன்றிரவு, கூத்தாண்டையின் உருவம் மீண்டும் கோயிலுக்குக் கொண்டு வரப்படும். அங்குக் கோயிலின் வாயிலின் முன் அவனை மறைத்து ஒரு துணியினைத் திரையாகப் பிடிப்பர். இது அரவான் பலியாகிவிட்டதற்கான குறியீட்டு அடையாளம் ஆகும். அப்போது சற்றுமுன் அவனை மணந்து கொண்டவர்கள் தங்கள் கணவன் இறந்தமைக்காக உரத்த குரலில் ஓலமிட்டு அழுவர். பரங்கிப்பேட்டைக்கு வடமேற்கே இரண்டாவது மைலில் உள்ள கொட்டத்தட்டை கோயிலிலும் சிதம்பரத்திற்கு ஐந்து மைல் வடமேற்கே உள்ள ஆதிவராக நத்தம் கோயிலிலும் அண்மைக் காலமாகச் சிதம்பரத்திற்குக் கிழக்கே ஒரு மைலில் உள்ள திருவக்குளத்திலும் மேலும் சில இடங்களிலும் கூத்தாண்டாருக்கு மேலே விளக்கியதுபோல நேர்ந்துகொண்ட சடங்குகள் நிகழ்த்துகின்றனர் எனத் தெரிகிறது."

"1833 – ஆம் ஆண்டின்போதே பள்ளியார் பாண்டிச்சேரியில் தாங்கள் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்தவர்கள் அல்லர் என ஆணை பெற முயன்றனர். அண்மையில் இந்த மாவட்டத்திலும் (தென் ஆர்க்காடு) இந்த வட்டாரத்தில் பெரும்புள்ளியாக உள்ள ஒருவரின் முயற்சியினால் ஒரே அமைப்பின் கீழ் இவர்கள் இணைந்துள்ளனர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் (சான்றாகத் தஞ்சாவூரைவிட) சமூகப்படி நிலையில் உயர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களிடையே உள்ள குழு உணர்வு இப்பொழுது மிக வியப்பூட்டும் வகையில் உறுதியுடையதாக உள்ளது. மெல்ல மெல்ல இவர்கள் பிராமணர்களுடைய நடைமுறைகளை மேற்கொண்டவர்களாக வயது வந்தபின் மணம் புரிதல், இறைச்சி உண்ணுதல், கைம்பெண்கள் மறுமணம் ஆகியவற்றைக் கைவிட்டவர்களாக உள்ளனர். சமூகத்திற்குக் கெட்ட பெயரை உண்டாக்கும் கூடா ஒழுக்கம்,

முதலிய சமூகக் குற்றங்களை வெளிப்படையாகவே கண்டிக்கின்றனர். 1904–இல் வழக்கு மன்றம் ஒன்றில் கொண்டு காட்டப்பட்ட ஆவணம் ஒன்றில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த முப்பத்தி நான்கு கிராமங்களின் பிரதிநிதிகள் அதற்குமுன் இவர்களிடையே வழக்கியல் இருந்தான இரண்டு மனைவியரை மணம் செய்து கொள்ளல் (எல்லாத் தரப்பினரும் உடன்பட்டால் இதற்கு விதிவிலுக்கு உண்டு), கணவன் உயிரோடிருக்கும்போது ஒருத்தி வேறொருவனை மணத்தல் போன்றவற்றை மேற்கொள்பவர்கள் சாதி விலக்கத் தண்டனைக்கு உள்ளாகச் சம்மதித்துக் கையொப்பம் இட்டுள்ளனர். இச் சாதியில் சிலர் தங்களை வன்னிய குலச் சத்திரியர் எனவும் அக்னி குலச் சத்திரியர் எனவும் அழைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். மற்றும் சிலர் தங்களைப் பிராமணர்கள் எனவும்கூடக் கூறிக் கொள்கின்றனர். இவ்வாறு தங்களைப் பிராமணர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் பூணூல் அணிவதோடுகூடப் பிராமணர்கள் பாணியில் வேட்டியினையும் அணிந்து வருகின்றனர். எனினும் அவர்கள் வீட்டுப் பெண்கள் பிராமணர் வீட்டுப் பெண்களைப் போலச் சேலையணிவதை மேற்கொள்ளவில்லை. இவர்கள் கைம்பெண்கள் மறுமணத்தைத் தடை செய்து கொண்டுள்ளதோடு கூட ஊன் உண்டலையும் கைவிட்டுவிட்டனர்" எனத் திரு. பிரான்சிஸ் தென் ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் கூறியுள்ளார்.

பள்ளி சாதிப் பாளையக்காரர்களுள் சிலர் அக்னிக் குதிரை ஏறிய ராய ராவுத்தமிண்ட நயினார் என்பது போன்ற பகட்டான பட்டங்களைத் தரித்துக் கொண்டுள்ளனர். ராய ராவுத்தரை வெற்றிகொண்ட நயினார் என்பது இதன் பொருளாகும். ஒரு பள்ளிக்கும் ராவுத்தனக்கும் இடையே நடைபெற்றதான ஒரு போட்டியில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் குதிரை மீது ஏறி அமர்ந்து ராவுத்தரை வெற்றி கொண்ட பள்ளியினைச் சிறப்பிக்கத் தரப்பட்ட பட்டமாகும் இது. சாமிதுரை சூரப்ப சோழகனார், அஞ்சாத சிங்கம் போன்ற பட்டங்களும் இவர்களுக்கு உரியன. பள்ளியர் சிலர் குப்தா என்ற பட்டப் பெயரைத் தங்களுக்குரியதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பள்ளிசாதிக் குடும்பத்தினர் சிலர் சீனிவாசப் பெருமாளுக்குரியதான தங்கள் குடும்ப உரிமையான கோயில்களைப் பெற்றுள்ளனர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள குமலம் என்ற ஊரில் உள்ள கோயிலைச் சுற்றித் தங்கள் வாழ்க்கையைநடத்த அக்கோயிலை நம்பியவர்களாக

வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் பெரும்பாலோர் கோயில் பட்டர்களைப் போலவே உடை உடுத்துகின்றனர். இவர்களைப் புதிதாகக் காண நேர்பவர்கள் பட்டர்சாதிப் பிராமணர்கள் என நினைப்பது உறுதி. இவர்களுள் சிலர் கோயில் சடங்குகளை நடத்துவதில் நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருப்பதோடு தங்கள் பிள்ளைகளுக்குப் பிராமணப் புரோகிதர்களைக் கொண்டு சந்தியாவந்தனம், வேதம் முதலியனவற்றையும் கற்றுத் தந்துள்ளனர். பள்ளி சாதியில் பொதுவாக இவர்கள் பெண் கொண்டாலும் தங்கள் பெண்களைச் சாதாரணப் பள்ளிகள் மணக்க இவர்கள் அனுமதிப்பதில்லை. இதன் காரணமாகப் பெண்களை உயர்ந்த குடியினருக்கே மணம் செய்து கொடுக்கும் பழக்கம் – குமலத்தைச் சேர்ந்த ஆண்கள் சிலபோது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். இல்லையேல் இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கணவர்களைப் பெறுதல் இயலாததாகிவிடும். குமலத்தைச் சேர்ந்த இவர்கள் தங்களைப் பள்ளி சாதியாரின் புரோகிதர்களாகக் கருதுவதோடு தங்களைக் கோவிலார் என்றும் சிறப்பித்துக் கொள்கின்றனர். மற்ற சாதியார் இவர்களைக் குமலம் பிராமணர் எனக் கொள்கின்றனர். மற்ற சாதியார் இவர்களைக் குமலம் பிராமணர் எனச் செல்லப் பெயர் தந்து அழைப்பர். தங்களைச் சத்திரியர் எனக் கூறிக் கொள்ளும் இவர்கள் ராயர் என்ற பட்டப்பெயரைத் தரிக்கின்றனர்.

தங்கள் தலைமை, வீரம், சிறப்பு ஆகியன புலனாகும்படியாக இவர்கள் நாயகர், வர்மா, படையாச்சி, கண்டர், சேரன், சோழன், பாண்டியன், நாயனார், உடையார், சம்புராயர் முதலிய பட்டங்களைத் தரிக்கின்றனர்.* பிள்ளை, ரெட்டி,கவுண்டன், முதலிய பட்டங்களும் இவர்களுக்கு உரியன. சிலர் தங்களைச் சோழ குலத்தவர் எனவும் எனவே தங்களைச் செம்பியர் என்றே அழைக்க வேண்டும் எனவும் கூறுவர். ** தொடக்க காலப் பல்லவ மன்னன் பெயரான இரணியவர்மன் என்பதனைச் சில செல்வ வளம் மிக்க பள்ளி குடும்பத்தினர் தங்கள் சாதிப் பெயராகப் பதிந்துள்ளனர். 1901 கணக்கெடுப்பில் சிலர் தங்களைச் சோழ அரசர் பரம்பரையினர் எனக் கூறிக் கொண்டவர்களாக சோழனார் என்ற பட்டப்பெயரைத் தங்களுக்கு உரியதாகப் பதிந்துள்ளனர்.

---

* *வன்னியர்குல விளக்கம்.*

** *தஞ்சை மாவட்ட விவரக் குறிப்பு (Gazetteer of Tanjore District.)*

1891–இல் கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் இவர்கள் உட்பிரிவுகளின் பெயர்கள் பற்றிக் கேட்ட ஒரு கேள்விக்கு, "வன்னியர், சூரிய, சந்திர, அக்னி குலத்தவர்களாகவோ ருத்ர வன்னியர், கிருஷ்ணவன்னியர், சம்புவன்னியர், பிரம்ம வன்னியர், இந்திர வன்னியர் என்ற குலத்தினராகவோ இருப்பர்" எனவும் கூறப்பட்டுள்ளது. அகமுடையான், அக்னி, அரசு, சத்திரிய, நாகவடம் (பாம்புப்படத்தின் அமைப்பிலான காதணி) நத்தமான், ஓலை (பனையோலை), பந்தமுட்டு, பெருமாள் கோத்திரம் ஆகியன கணக்கெடுப்பின்போது பதியப்பட்டுள்ள இவர்களுக்கான முக்கியமான உட்பிரிவுகளாகும். பந்தமுட்டு என்பது தீப்பந்தங்களை ஒரு யானையின் உருவம் போல அமைத்தல் என வின்சுலோ விளக்கம் தந்துள்ளார். பள்ளியர் பந்தலைத் தொடும் அளவு உயரமாக அடுக்கப்படும் திருமணப்பானைகளை இது குறிக்கும் எனப் பள்ளிகள் விளக்கம் தருவர். இந்த அடுக்கில் அடியில் இருக்கும் பானைகள் யானை, குதிரை உருவங்களால் அலங்கரிக்கப்பட்டனவாக இருக்கும். பந்தமுட்டுப் பள்ளியர் திருமணத்தில் இவர்கள் தங்களைச் சத்திரிய குலத்தவர் என்பதனைக் குறிக்கும் வகையில் மணமக்களை மணப் பந்தலில் சிம்மாசனம் எனப்படும் உயர்ந்த மேடை இருக்கையில் அமர்த்துவர். மணமகள் தாலி கோக்கப்பட்ட கண்ணாடிப் பாசிமணி மாலையினை அணிவாள். தெலுங்குப் பிராமணனே இவர்கள் மணச் சடங்கை நடத்தி வைப்பான். 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் செங்கல்பட்டில் ரெட்டி என்ற பட்டப்பெயர் தரிக்கும் கள்ளங்கி என்ற உட்பிரிவினரும் மதுரை மாவட்டத்தில் கள்ளவேலி என்ற உட்பிரிவினரும் உள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. கோயமுத்தூரைச் சேர்ந்த பள்ளியர் சிலர் கொத்தன் என்ற தொழில் தொடர்பான பெயரைத் தங்கள் பட்டப்பெயராகப் பதிந்துள்ளனர். சேலம் மாவட்டத்தில் சில பள்ளியர் அஞ்சு நாள், பன்னிரண்டு நாள் என்ற உட்பிரிவினராக உள்ளனர். இது மற்வர்களைப் போலச் சாதி தொடர்பான இறுதிச் சடங்குகளைப் பதினாறாம் நாளன்று நடத்தாமல் ஐந்தாம் நாளிலும் பன்னிரண்டாம் நாளிலும் இவர்கள் நடத்துவதால் பெற்ற பெயராகும்.* சேலம் மாவட்டத்தில் காதில் அணியும் காதணியின் அடிப்படையில் சில பள்ளியர் தனிப் பிரிவினராக ஓலைப் பள்ளியர், நாகவடம் பள்ளியர் எனப் பெயர் பெற்றுள்ளனர். ஓலைப்பள்ளியர் ஓலையினை வட்டமாகச் சுருட்டி காதில் அணிகின்றனர். நாகவடம் பள்ளியர் நாகபாம்பின் படத்தினை ஒத்த காதணியினை அணிபவர்கள்.

---

* *சேலம் மாவட்டக் கையேடு (Manual of the Salem district.)*

பள்ளியர் இடங்கைப் பிரிவினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். 1871 கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் பதிந்துள்ள விவரம் வருமாறு:– "பயிர்த்தொழில் பணியாளரான பள்ளியரின் மனைவிமார் இடங்கைப் பிரிவினரோடு சேர்ந்தவர்களாக இருக்க, அவர்களுடைய கணவன்மார் போரில் வலங்கைப் பிரிவினரோடு சேர்ந்து போரிடுகின்றனர். செருப்புத் தைக்கும் சக்கிலியரின் மனைவியரும் அவர்களுடைய கணவன்மார் சேர்ந்திருக்கும் பிரிவுக்கு எதிரான பிரிவினுக்கு ஆதரவு தரும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர். இடங்கை, வலங்கைப் பிரிவினரிடையே மோதல்கள் நிகழும்போது அவர்களுடைய மனைவிமார் தங்களுக்கு எதிரணியரான கணவன்மார்களுக்கு உடலுறவு, உட்பட அனைத்து உரிமைகளையும் மறுப்பர்." இச்சாதியாருடைய பழக்கங்கள், பற்றி அண்மையில் கேட்டறிந்த தகவல்கள் மேற்கூறிய கருத்தை உறதிப்படுத்துவனவாக இல்லை.

சைவம், வைணவம் ஆகிய இருபிரிவினையும் சேர்ந்த பள்ளியர் முத்தியாலம்மா, மாரியம்மா, அய்யனார், முனீசுவரர், அங்காளம்மன் முதலிய சிறு தேவதைகளையும் பிற தெய்வங்களையும் கூட வழிபடுகின்றனர். மைசூரில் கோலாரில் குடியமர்ந்துள்ள வனப்பள்ளியர் பற்றி ஒரு நூற்றாண்டுக்கு முன் புச்சனன் எழுதியுள்ளது* வருமாறு: "இவர்கள் சக்தி வழிபாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். தீங்கிழைக்கும் பண்பினவான அத்தெய்வங்களின் கோபங்களைத் தணிக்க உயிர்ப் பலி தருகின்றனர். இப்பலியினைக் கோயிலின் வாசல் முன் அந்த விலங்குகளின் தலையினை வெட்டிப் பலி தந்து அத் தெய்வங்களை அப்பலியினை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுவர். பலிக்கெனத் தனியே பீடம் இல்லை. பலி விலங்கின் குருதியினைத் தெய்வத்தின் மீது தெளிக்கும் பழக்கமும் இல்லை. பலி விலங்கின் உடல்களைப் பலியிடுவோர் சமைத்து விருந்துண்பர். இத்தகைய சக்தி தெய்வங்களுள் ஒன்றான முத்தியாலம்மாவிற்கான பள்ளியர் கோயில் ஒன்று உள்ளது. அங்குப் பள்ளியர் சாதியினரே பூசாரிகளாக உள்ளனர். மாரியம்மாவிற்கும் இவர்கள் பலி தருகின்றனர். மாரியம்மாவின் கோவிலில் குறுபருகள் பூசாரிகளாக உள்ளனர்."

மைசூர், கன்னடம், மலபார் வழியாகப் பயணம் (Journey through Mysore, Canara and Malabar.)

செங்கல், காரை ஆகியன கொண்டு உருவாக்கப்பட்டு வண்ணங்கள் பூசப்பட்ட மன்னார்சாமியின் மிகப் பெரிய மனித உருவங்கள் சென்னையில் மௌண்ட் ரோடில் லாரன்ஸ் காப்பக அச்சகத்தின் அருகேயும் கொத்தவால் பசாரிலும் உட்கார்ந்த நிலையில் இருக்கக் காணலாம். ஆவடிக்கு அருகே உள்ள திருமலவாயில் என்ற ஊரில் பனைமரம் அளவு உயரம் உடையதான அத்தகைய உருவத்தைக் காணலாம். அதன் அருகே பச்சையம்மனுக்கான ஒரு கோயிலும் உள்ளது. மன்னார்சாமியினைப் பள்ளியரும் பேரி செட்டிகளுமே சிறப்பாக வழிபடுகின்றனர். மன்னார்சாமியினையும், பச்சையம்மனையும் சிறப்பிக்க ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும் திருவிழாவில் பேரி செட்டிகள் சிறப்பான பங்கு வகிக்கின்றனர்.

ஊர்த் தேவதைகளின் திருவிழாவின்போது தெய்வங்களைக் கரகம் எனப்படும் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட ஏழு பானைகளில் ஏற்றி வழிபடுவர். கரகம் மாலைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கோயிலில் தெய்வத்தின் உருவம் இருப்பினும் கோயிலினுள் ஒரு மூலையில் கரகத்தினை அமைத்து அதனை நாளும் காலையிலும் மாலையிலும் ஒரு பூசாரி அல்லது வேறு எவரேனும் ஒருவன் தலையில் அதனை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். திருவிழாவின் இறுதி நாளன்று கிளிகள், பொம்மைகள், மலர்கள் ஆகியன கொண்டு கரகத்தைச் சிறப்பாக அலங்கரிப்பர். இந்த உருவங்கள் நெட்டியால் *(Aeschynomene asprea)* செய்யப்பட்டன. இவ்வாறு அலங்கரிக்கப்படும் கரகங்கள் பூக்கரகம் எனப்படும்.

பள்ளித் தெரு, குடித்தெரு என அழைக்கப்படும் தனித்த தெருவில் பள்ளியர் வீடுகள் இருக்கும். இவர்களுள் பெரும்பாலோர் கூலி வேலை செய்பவர்களே. எனினும் இன்று பலர் சொந்த நிலத்தில் பயிர் செய்கின்றனர். சிலர் வணிகத்திலும் அரசுப் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். செங்கல்பட்டிலும் சென்னையிலும் நான் நேரில் கேட்டறிந்த விவரப்படி இவர்கள் மேற்கொண்டிருந்த தொழில்கள் வருமாறு:–

வணிகர்
பயிரிடுவோர்
மாட்டு வண்டி ஓட்டுபவர்
அச்சகம் வைத்திருப்போர்
கூடார உதவியாளர்
இனிப்புகள் விற்போர்
பூக்காரர்
பொருத்துவோர்
மரம் அறுப்போர்
எண்ணெய் ஆட்டுவோர்
தோட்டம் போடுவோர்
பூச்சு வேலைக்காரர்
செங்கல் சூளை வைப்போர்
மேஸ்திரி

செங்கல்பட்டினைச் சேர்ந்த பள்ளியர் சிலர் இருளரைப் போல நெற்றியில் புள்ளியையும் செங்குத்துக் கோட்டையும் பச்சை குத்திக் கொண்டிருந்தனர். இருளர் சிலர் தங்களைத் தேன் வன்னியர் எனவும் வனப் பள்ளியர் எனவும் கூறிக் கொள்கின்றனர் என்பதனை இங்கே போகிற போக்கில் குறிப்பிடுகின்றேன்.

பிற சாதியார் பலருக்கும் இருப்பதுபோலவே பள்ளியருக்கும் நோக்கன் எனப்படும் சாதியோடு இணைந்த இரவலர் உள்ளனர். இவர்கள் பள்ளியர் திருமணங்களின்போதும் பிற முக்கியமான நிகழ்ச்சிகளின்போதும் அன்பளிப்புக்களைப் பெறுவர். தொன்மையான ஊர்ப் பஞ்சாயத்து அமைப்பினை இவர்கள் இன்னமும் பேணி வருகின்றனர். சாதித்தலைவன், பெரிய தனக்காரன், நாட்டாண்மைக்காரன் எனப்படுவான். சாதி தொடர்பாக அனைத்து வழக்குகளையும் இவனே தீர்த்து வைப்பான். சடங்குகளில் வெற்றிலை பாக்கு வழங்கும்போது இவன் அவசியம் வந்திருக்க வேண்டும்.

கோவிலார் பிரிவினரும், சமூகப்படிநிலையில் உயர் தகுதியினை அவாவி நிறபோரும் குழந்தை மணத்தை மேற்கொண்டவர்களாக இருப்பினும் வயது வந்தபின் மணம் செய்வித்தலே இவர்களிடையே உள்ள வழக்கம். நிச்சயதார்த்தச் சடங்கின்போது மணமகனாக உள்ளவன் தன் வருங்கால மாமனார் வீட்டிற்குச் செல்வான். அங்கு மணமகள் வீட்டைச் சேர்ந்த சாதித் தலைவனும் வந்திருப்பான். மணமகன் ஊரைச் சேர்ந்த சாதித் தலைவன் அல்லது மணமகனின் தந்தை ஒரு தட்டில் மலர்கள், வெற்றிலை, பரிசப்பணம் அல்லது அதற்கு ஈடான நகை, முலைப்பால் கூலி, தேங்காய் ஆகியனவற்றை வைப்பான். முலைப்பால் கூலி, பெண்ணின் தாயார் அவள் குழந்தையாக இருக்கும்போது பால்கொடுத்து வளர்த்ததற்கான அன்பளிப்பாகும். இவற்றையெல்லாம், மணமகன் ஊரைச் சேர்ந்த சாதித் தலைவனிடமோ "பணம் உங்களுடையது பெண் எங்களுடையவள்" எனக்கூறித் தருவான். அவன், "பணம் எங்களுடையது; பெண் உங்களுடையவள்" எனக் கூறி அதனைப் பெற்றுக்கொள்வான். இவ்வாறு மும்முறை அந்தத் தட்டை அவர்கள் மாற்றிக் கொண்டபின் கூடியுள்ளவர்களுக்கு வெற்றிலை பாக்கு வழங்குவர். முதல் வெற்றிலை பாக்கினைப் பெறும் உரிமை பெண்ணின் தாய்மாமனுக்கு உரியது. இந்தச் சடங்கே மண உறவைக் கட்டுப்படுத்துவதாகையால் இதனை அடுத்து மணச் சடங்கு சில நாள்களில் நடக்கும். இதற்கிடையே பெண்ணுக்கு உறுதி

செய்யப்பட்ட மணமகன் இறப்பானாகில் அவள் வேறு ஒருவனை மணக்கலாம். ஒரு சிறுமிக்கு அவளுடைய தாய்மாமன் அனுமதி பெறாமல் மணம் செய்வித்தல் இயலாது. அவன் மண உறவினுக்குத் தன் உடன்பாட்டினைத் தெரிவிக்காவிடின் அந்த மணச்சடங்கு நடந்துகொண்டிருக்கும்போதே மணமகளைத் தூக்கிச் சென்று தான் விரும்பும் வேறொருவனுக்கு மணம் செய்த தரும் உரிமையுடையவன் ஆவான். பள்ளியர் திருமண உறவின்போது நிச்சயதார்த்தத்தின் பின் மணமகளை மணமகனுடைய வில்லையும் வாளையும் தொடும்படி கூறும் வழக்கம் உள்ளதாக வன்னிய குல விளக்கம் தெரிவிக்கின்றது. மணமகன் தன்னை அலங்கரித்தவனாகக் குதிரையில் ஏறி ஊர்வலமாக மணம் நடைபெற உள்ள மணமகள் இல்லத்திற்குச் செல்வான் என்றும் அதே நூலுள் கூறப்பட்டுள்ளது.

மணச் சடங்குகள் பொதுவாக ஒரே நாளில் முடிவுறுதலே வழக்கம். தற்பொழுது அதனைப் புராண மரபு வழிபட்டதாக ஆக்கி மூன்று நாள் அளவு நீட்டிக்கும் வழக்கம் பெருகி வருகின்றது. மணநாளுக்கு முதல்நாள் மணமகன் மணமகள் இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவான். மணச் சடங்கிற்கான பானைகளைக் குயவர் சாதியினைச் சேர்ந்த ஒருத்தி கொண்டு வருவாள். மணநாளன்று காலையில் மணமேடையினைத் தயாரித்து அதில் பால்கம்பம், பானைகள், விளக்குகள் ஆகியனவற்றை வைப்பர். மணமகனுக்கும் மணமகளுக்கும் தனித்தனியே நலங்கு நிகழும். மணமக்களை மணைப்பலகையில் அமர்த்தி ஐந்து பெண்கள் அருகம்புல்லினைக் கொண்டு எண்ணெயினைத் தொட்டும் பச்சைபயறு மாவினைத் தொட்டும் நலங்கிடுவர். சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்த தண்ணீரைக் கொண்டு கண்ணேறுபடுவதைத் தடுக்க அவர்களுக்கு ஆரத்தி எடுப்பர். அதன்பின் அவர்களைக் குறிக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வர். அவர்கள் குளிக்கும்போது ஐந்து சிறு பணியாரங்களை அவர்களுடைய முழங்கால், தோள், தலை முதலிய இடங்களில் வைப்பர். மணமகன் அங்கிருந்து வெளியேறும்போது சல்லடையில் சோற்றினை இட்டு ஆரத்தி சுற்றி அதனைத் தூர எறிவர். அதன்பின் மணமக்கள் மும்முறை மணமேடையினைச் சுற்றி வருவர். பின் அவர்கள் வீட்டில் உள்ள குல தெய்வத்திற்கும் ஊர்த் தெய்வத்திற்கும் மூதாதையருக்கும் ஐந்து பானைகளில் பொங்கலிடுவர். அவற்றில் உள்ள சோற்றினைத் தீட்டு ஏதும் படாமல் தலைச்சன் பிள்ளை பெற்ற ஒருத்தி முன்னின்று சமைப்பாள். பின்

அவர்கள் மணவிழாவிற்கான புத்தாடைகளைப் புனைந்து தாலிகட்டத் தயாராவர். இதற்கிடையே ஒதியன் *(Odina Wodier)* முள் முருக்கம் *(Erythrina indica)* ஆகிய மரங்களின் கிளைகளைக் கொண்டோ மேழியினைக் கொண்டோ பால்கம்பம் நட்டு அதன் அருகே அம்மி, பெரிய பானை, குட விளக்கு எனப்படும் இரு விளக்குகள், அலங்கார விளக்குகள் ஆகியனவற்றை வைப்பர். முன்னது மண்ணாலான விளக்கில் திரியிட்டுப் பானையின் மீது ஏற்றி வைக்கப்படுவது. பின்னது பல பிரிவினவான கிளைகளைக் கொண்ட மரக்கம்பத்தில் பல விளக்குகளை அலங்காரமாக ஏற்றி வைப்பது. மணச் சடங்கு முடியும் முன் பானை விளக்கு அணைந்துவிடுமானால் அதனை அபசகுனமாகக் கருதுவர். "வட ஆர்க்காடு மாவட்டத்தில் வன்னியரான பள்ளியரின் திருமணப் பந்தலுக்கான முதல் கம்பம் வன்னி *(Prosopis spicigera)* மரத்திலிருந்து வெட்டப்பட வேண்டும். இந்த மரத்திடம் இவர்கள் மிகுந்த மதிப்பு வைத்துள்ளனர். தங்களைப் போலவே சத்திரியரான பாண்டவர்கள் தங்கள் வனவாசத்தின் முடிவில் ஓராண்டு காலம் தலைமறைவாக வாழத் தொடங்குமுன் தங்கள் படைக்கலங்களை இந்த மரத்திலேயே இட்டு வைத்தனர் எனவும், அவர்கள் திரும்பும்வரை அந்த படைக்கலங்கள் பாம்புகளாக மாறி எவராலும் தொடப்படாது அந்த மரத்திலேயே இருந்தன என்பதுவுமே இவர்கள் அந்த மரத்திடம் மதிப்புடையவர்களாக நடந்து கொள்ளக் காரணமாகும்" எனத் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் எழுதுகின்றார்.* பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறவும் பகைவர்களை வெற்றி கொள்ளவும் மனதில் விரும்பிய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் வன்னி மரம் வழிபடப்படுகின்றது.

மணமக்கள் புதியனவான தங்கள் திருமண உடையில் மணப்பந்தலுக்கு வந்தவுடன் பிராமணப் புரோகிதன் அவர்களிடம் மணிக்கட்டில் அணிவதற்கான கங்கணங்களைத் தருவான். கூடியுள்ளவர்கள் வாழ்த்தும்படியாகத் தாலியினைச் சுற்றிலும் அனுப்பியபின் அதனை மணமகனிடம் தர, அவன் அதனை மணமகள் கழுத்தில் அணிவிப்பான். அவன் அவ்வாறு தாலி கட்டும்போது அவன் உடன்பிறந்தவள் காமாட்சி விளக்கு எனப்படும் விளக்கினை ஏந்தி நிற்பாள். காமாட்சி காஞ்சிவரத்தில் உள்ள தேவியாவாள். இது சிவனின்

---

*வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு (Manual of North Arcot District)

மனைவியான பார்வதிக்கான மற்றுமொரு பெயர். அப்போது காதில் விழக்கூடிய அபசகுனமான வார்த்தைகளைக் கேளாது தவிர்க்கும் பொருட்டு குழலிசையோடு கூடச் சங்கும் முழங்கப்படும். தாலி முனைகளைச் சேர்ந்து முடிச்சுடுவர். அவர்கள் தலை மீதும் முன்னும் அரிசி தூவப்படும். பின் நெருங்கிய உறவினர்கள் தங்கம் அல்லது வெள்ளியாலான தகட்டினைத் தலையில் அணிவித்த பின்னர் மணமக்கள் மணப்பந்தலையும் பால்கம்பத்தையும் சுற்றிவருவர். இரண்டாவது சுற்றின் இறுதியில் மணமகன் மணமகளின் இடது பாதத்தைத் தூக்கி அம்மியின் மீது வைப்பான். மூன்றாவது சுற்றின் இறுதியில் மணமகனின் மைத்துனன் மணமகன் மணமகளின் இடது பாதத்தைத் தூக்கி அம்மியின் மீது வைப்பான். மூன்றாவது சுற்றின் இறுதியில் மணமகனின் மைத்துனன் மணமகன் இடது பாதத்தை அதே போன்று அம்மியின் மீது தூக்கி வைத்து அவன் கால் விரலில் ஒரு மெட்டியினை அணிவிப்பான். இதனைச் செய்வதற்காக அவனுக்கு ஒரு ரூபாயினை வெற்றிலை பாக்கோடு வைத்து வழங்குவர். அதன்பின் மணமக்கள் அருந்ததி பார்ப்பர். பின் பாலும் பழமும் உண்பர். அன்று மாலை அவர்கள் கங்கணம் அவிழ்க்கப்பப்படும். அதன்பின் உழுவதான போலிச்சடங்கினை நிகழ்த்த அவர்கள் ஒரு குளத்திற்குச் செல்வர். மணமகன் ஒரு கலப்பையையும் மணமகள் கஞ்சிக் கலயத்தையும் அப்போது சுமந்து செல்வர். ஒரு சிறு பகுதியில் வயல்போலக் கரைகட்டி நீர் தேக்குவர். அதில் மணமகன் சில விதைகளைத் தூவுவான். பசுஞ்சாணத்தால் ஒரு பிள்ளயாரைப் பிடித்து வைத்து அதற்கு வெற்றிலையைப் படைப்பர். இச் சடங்கின்போது மணமகன் களைப்பு மேலிட்டவனாகப் பாவனை புரிந்தபடி உட்கார்ந்துவிட மணமகள் அவனுக்கு ஒரு பிடி சோறு தருவாள். அவனுடைய மைத்துனன் அவன் அதனைப் பெற்றுக் கொள்ள இயலாதபடி தடுப்பான். மணமக்கள் ஒருவார காலம் மணமகள் வீட்டில் தங்கியிருந்த பின் மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவர். அப்போது மணமகனுடைய மைத்துனன் அவர்களோடு நூறு அல்லது நூற்றுப்பத்துப் பணியாரங்களை உடன் எடுத்துச் செல்ல வேண்டும். அவர்கள் மணமகன் வீட்டில் நுழையும்முன் மஞ்சள் நீரால் ஆரத்தி சுற்றுவதோடு, தேங்காய் ஒன்றினையும் அவர்கள் முன் சுற்றுவர். மணமகள் புகுந்த வீட்டில் காலடி வைத்தவுடன் அரிசியும் உப்பும் உள்ள பானையினை வலது கையால் தொட வேண்டும். கும்பகோணத்தைச் சேர்ந்த பள்ளியரிடையே மணமகளின் தாயார் மணநிகழ்ச்சியில் கலந்து கொள்ளுதல் கூடாது என்ற விசித்திரமான வழக்கம் உள்ளது. சில

இடங்களில் மணமகளின் தாயாரின் உறவினருக்கும் இத்தடை விதிப்படுகின்றது. இவர்கள் மணச்சடங்கு நிகழும் நாட்களில் மணமகளைக் கோஷாவாக முகத்திரையிட்டு வைத்திருப்பர். *

"திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த பந்தமுட்டுப் பிரிவுப் பள்ளியர், பெண்கள் குழந்தையாக இருக்கும்போதே நிச்சயதார்த்தச் சடங்கினை நிகழ்த்துகின்றனர். அப்போது குழந்தையின் வாயினுள் பசுஞ்சாண நீரினை ஊற்றுகின்றனர். தங்களைவிட வயதில் சிறிய சிறுவர்களைச் சிறுமியர் மணக்க இவர்கள் அனுமதிக்கின்றனர். இந்த மண உறவின் பொருத்தமின்மையினைச் சரிக்கட்ட அச் சிறுவனை இரண்டணாக் காசினை விழுங்கும்படி செய்வர். மணச் சடங்குகள் சிறுவன் விட்டிலேயே பெரும்பாலும் நடைபெறும். அதில் மணமகளின் தாயார் கலந்து கொள்வதில்லை. மணமகளை முகத்திரையிட்டு மறைத்திருப்பர்" எனத் திரு ஹெமிங்வே குறித்துள்ளார்.

மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ள நளன் தமயந்தி கதையில் நிகழ்ந்தது போலச் சில ஆண்டுகளுக்கு முன்பு கடலூருக்கு அருகேயுள்ள பண்ருட்டியில் சுயம்வரமாக ஒரு திருமணம் நடைபெற்றது எனக் கூறப்படுகிறது. இம்முறைப்படி மணமகளின் கரம்பற்ற விரும்பிக் கூடியுள்ள பலருள் ஒருவனை மணமகள் தனக்குரிய மணாளனாகத் தேர்ந்தெடுப்பாள்.

கைம்பெண்கள் மறுமணத்தை இவர்கள் அனுமதிக்கின்றனர். விதவையின் மறுமணத்தில் மணமகன் அவள் அருகே நிற்க மணமான சுமங்கலி ஒருத்தியே மணமகளுக்குத் தாலி அணிவிப்பாள். இச்சடங்கு பெரும்பாலும் வீட்டின் உட்கட்டில் நிகழும். இதனால் கைம்பெண்கள் மறுமணத்தை நடுவீட்டுத் தாலி என்கின்றனர்.

ஒரு சிறுமி முதன்முறையாகப் பூப்படையும்போது அவள் தீட்டினைப் போக்க அவள் குளித்தபின் பிராமணன் ஒருவன் அவள் தலையில் புனித நீரைத் தெளிப்பான். அவளை மணைப் பலகையில் அமர்த்திப் புட்டு, குழவி, மஞ்சள் நீர் ஆரத்தி ஆகியனவற்றை அவள்முன் சுற்றுவார். பின்னர், கூடியுள்ளவர்களுக்கு சர்க்கரையும் வெற்றிலை பாக்கும் வழங்குவர்.

தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பு (Gazeteer of Tanjore District)

பள்ளியர் இறந்தவர்களைப் புதைக்கவும் எரிக்கவும் செய்கின்றனர். ஒருவன் உயிர் பிரிந்தவுடன் அவனுடைய மகன் கையில் இரும்பாலான மரக்கால் ஒன்றினைத் தூக்கியவனாகப் பிணத்தை மும்முறை சுற்றி வருவான். அதனுள் நெல்லின் மீது ஒரு விளக்கு எரிந்தபடி இருக்கும். பிணத்தைக் குளிப்பாட்டுவதோடு இறந்தவனுடைய மனைவியும் தான் குளிக்கும் தண்ணீர் பிணத்தின் மீது விழும்படியாகக் குளிப்பாள். இந்தச் சடங்கை ஒருத்தி முறையாக நிகழ்த்த வில்லையானால் அதனை இழிவிற்கு உரியதாகக் கருதுவர். "அவள் குளிக்கும் தண்ணீர் கூட அவன் பிணத்தின் மீது விழாது போகட்டும்" என்ற வசவு மொழியும் இது தொடர்பாக வழக்கில் உள்ளது. இறந்தவனும் அவன் மனைவியும் மும்முறை வெற்றிலை பாக்கினை மென்று தாம்பூலத்தினை மாற்றிக் கொள்வர். மூங்கில் பாடையில் பிணத்தைச் சுடுகாட்டிற்கோ புதைகுழிக்கோ தூக்கிச் செல்வர். வழியில் அரிச்சந்திரனைக் குறிப்பதான கல் நடப்பட்டுள்ள இடத்தில் பிணம் இறக்கி வைக்கப்படும். ஒரு பறையனுக்கு அடிமைபட்டுச் சுடுகாட்டினைக் காவல் காக்கும் பணியில் ஈடுபட்ட அரசன் அரிச்சந்திரன். பள்ளியர் சிலர் அங்குப் பிணத்தின் நெற்றியில் இரண்டணாவினையும் மார்பில் ஒரு சட்டியில் அரிசியினையும் வைப்பர். காசினை நாவிதனும் அரிசியினைப் பறையனும் எடுத்துக் கொள்வர்.* மணம் முடியும்முன் இறப்பவர்களுக்கு ஒரு போலி மணச் சடங்கு நடத்தி வைக்கப்படும். அத்தகைய பிணத்தின் கழுத்தில் எருக்கம் *(Calotropis gigantea)* பூ மாலை அணிவிப்பர். சாக்கடைச் சேற்றினைப் பணியாரம் போல் உருட்டி மணச் சடங்கில் மணமகன் உடம்பின் பல பகுதிகளில் வைப்பதைப் போல வைப்பர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த அரசுப் பிரிவுப் பள்ளியரிடையே விசித்திரமானதொரு சாவுச்சடங்கு நிகழ்த்தப்படுவதாகத் திரு. ஹெமிங்வே கூறுகின்றார். சாவுச் சடங்குக்கு மறுநாள் பிணத்தை எரித்த இடத்தில் இரண்டு பானைகளில் தண்ணீர் வைக்கின்றனர். அந்தத் தண்ணீரை ஒரு பசு வந்து குடிக்குமானால் அதனை இறந்தவன் ஆவி தன் தாகத்தைத் தணித்துக் கொள்ள வந்ததாகக் கருதுவர்.

சில இடங்களில் பள்ளியர் சாதிப் பெண்கள் முகத்திரை இட்டவர்களாகத் தனித்து இருக்கின்றனர். அரியலூர், உடையார்பாளையம்,

---

தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பு (Gazeteer of Tanjore District)

பிச்சாவரம், சிவகிரி ஆகிய பாளையக்காரர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்தப் வழக்கத்தை மேற்கொள்கின்றனர்.

1888 இல் தொடங்கப்பட்ட சென்னை வன்னியகுல சத்திரிய மகா சங்கம் என்ற நல்ல அமைப்பினை இச் சாதியார் கொண்டுள்ளனர். சென்னை மாநிலத்தின் பல பகுதிகளிலும் சாதியினைச் சேர்ந்தவர்களிடையே சாதியுணர்வை இச் சங்கம் வளர்த்திருப்பதோடு பல பள்ளிகளைத் திறக்கவும் உதவியுள்ளது. சென்னையில் மூன்றும் காஞ்சிவரம், மதுராந்தகம், திருக்கழுக்குன்றம், குமலம் ஆகிய ஊர்களில் ஒவ்வொன்றுமாக இச்சங்கம் பள்ளிகளை அமைத்துள்ளது. புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஐந்து இடங்களில் சத்திரங்களையும் அமைத்துள்ளனர். 1865–இல் பச்சையப்பன் கல்லூரியோடு இணைக்கப்பட்டதான செங்கல்வராய நாயக்கர் தொழில் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளி ஒன்றும் நடத்த இச்சாதியினைச் சேர்ந்தவர் தனது உடமைகளை எழுதி வைத்துள்ளார். அவர் பெயரால் சென்னையில் பள்ளி சாதி அனாதைச் சிறுவர்களுக்கான இல்லம் ஒன்றும் இயங்குகின்றது. பச்சையப்பன் கல்லூரியோடு இணைந்ததான தொடக்கப்பள்ளி வகுப்புகளைக் கொண்ட கோவிந்தப்ப நாய்க்கன் பள்ளியும் பள்ளி சாதியாரின் வள்ளன்மையால் தோன்றி நடந்து வரும் மற்றொரு பள்ளியாகும். 1908 இல் தொடங்கப்பட்டுள்ள 'அக்னி குலாதித்தன்' என்ற இதழ் வெளியீடு பள்ளியரின் அண்மைக்கால முயற்சியாகும்.

தெலுங்கு நாட்டில் மீனவர்களாகவும், தச்சர்களாகவும் பயிர்த் தொழிலாளராகவும் சென்று தங்கியுள்ள பள்ளி, பள்ளிலு, பள்ளெக்கள் பற்றி வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு. எச்.எ. ஸ்டுவர்ட், புச்சனன் "மீன பள்ளியர், வனப் பள்ளியர் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை வைத்துப் பார்க்கும்போது இவர்கள் வன்னிய குலத்தவரான பள்ளி சாதியாரின் ஒரு கிளையினராதல் கூடும் எனக் கருதலாம்" எனக் கூறியுள்ளார். இந்தப் பள்ளியரின் உட்பிரிவினராக 1901 கணக்கெடுப்பில் வட (படகு வலிப்போர்), மரக்காடு, எடகுல என்பன பதியப்பட்டுள்ளது. வடஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் பள்ளி என்பது தெலுங்கு காபுகளின் ஓர் உட்பிரிவாகத் தரப்பட்டுள்ளது. சில இடங்களில் பள்ளிகள் தங்களைக் காபு பள்ளியரு என அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் தங்களைப் பள்ளியருடைய கோத்திரமான ஜம்பு மகரிஷியின் கோத்திரத்தினர் எனக் கூறிக்

கொள்கின்றனர். பள்ளி காபும் காபுகளும் தங்களுக்குள் மணஉறவு கொள்வதில்லையாயினும் ஒருவர் வீட்டில் மற்றவர் உணவு உண்பர்.

பள்ளியர் சாதியோடு இணைக்கப்பட்ட இரவலர்களைப் பற்றி நான் சென்னை மெயில் நாளிதழில் (1906) படித்தறிந்த விவரங்கள் வருமாறு:- "சென்னையை அடுத்த ஒரு பகுதியில் ஒரு தெருவில் ஆரவாரத்தோடு கூட ஓர் ஊர்வலம் நுழையக் கண்டேன். அதன் முன்னணியில் ஈட்டி, வாள், கொடிகள் ஆகியன ஏந்தியவர்கள் சென்று கொண்டிருந்தனர். கொடியேந்திச் சென்றவர்களுடைய கொடிகளில் சிங்கம், புலி, குரங்கு, கருடன், பூதம், குள்ளன் ஆகியவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஊர்வலத்தில ஆறேழு ஆண் பெண்கள் முகத்தில் சாயம் பூசியவர்களாக வாளும் வேலும் ஏந்தியபடி வண்ணத் துணிகளை அணிந்து சென்றது அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. தப்பட்டை, முரசு, கைத்தாளம், கொம்பு ஆகியன காதினைத் துளைக்கும்படியாக இசையெழுப்ப, அந்த இசைமுழக்கத்திற்கு இயைய கைகளிலும், கால்களிலும் கட்டப்பட்டுள்ள சலங்கைகள் குலுங்க ஆண்களும் பெண்களும் அடியிட்டு நடந்தனர். பிச்சைக்காரர்களையும் சிறுவர்களையும் மற்றவர்களையும் கொண்ட கதம்பக் கும்பல் ஒன்று ஊர்வலத்தின் பின்னணியாக வந்து கொண்டிருந்தது. ஊர்வலம் ஒவ்வொரு நாற்சந்தியிலும் நின்றது. ஒவ்வொரு முறை ஊர்வலம் நிற்கும்போதும் இசைக்கருவிகள் அதிர்ந்து முழங்க ஊர்வலத்தில் முக்கியமான உறுப்பினர்களுள் பெருத்த வயிற்றோடு கூடிய தோற்றம் உடைய ஒருவன் வெளிவந்து உரத்த குரலில் முன்னாளில் அவர்கள் நிகழ்த்திய வீர தீரச் செயல்களைப் பற்றி எடுத்து உரைப்பதோடு அதனை யாரேனும் மறுக்க முன்வருவார்களாயின் தோல்வியினை ஒப்புக் கொள்வதாக அறிவிப்பான். இந்த ஊர்வலத்தின் முக்கிய உறுப்பினன் தன் சுற்றுப் பயணத்தில் ஆண்டுக்கு ஒருமுறை எல்லாப் பகுதிகளுக்கும் வருகை தரும் சாதிப் பிள்ளையாவான். இவன் பள்ளி, படையாச்சி சாதியாரிடமிருந்து கட்டணம் வசூலிப்பதற்காகவே இவ்வாறு ஆண்டுக்கு ஒருமுறை பயணம் மேற்கொள்கின்றான். இவனுடைய வருகை இத்தகைய ஊர்வலத்தின் மூலம் சாதியினைச் சேர்ந்தவர்களுக்குத் தெரிவிக்கப்படும். இவன் தலைக் கட்டுவரி என்ற வரியினை வசூலிக்கின்றான். சாதியினைச் சேர்ந்த தலையில் தலைப்பாகை கட்டும் வயதுவந்த ஆண்களே இவ்வரி செலுத்துவதற்குரியவர். குழந்தைகளும் பெண்களும் இவ்வரி விதிப்பிற்கு உள்ளாக மாட்டார்கள். தலைக்கு ஓரணா விதம் வசூலிக்கப்படும் இவ்வரி

பெருஞ்சுமையன்று. ஆகையால் அனைவராலும் செலுத்தப்பட்டு விடுகின்றது. தங்களுக்கு மந்திரம் , மாந்திரிகம் ஆகியன தெரியும் எனக் கூறிக் கொள்ளும் சாதிப் பிள்ளைகள் பேய் ஒட்டுதல், பில்லிசூன்யம், மாந்தீரிகம் ஆகியவற்றில் தங்களுக்குத் திறமை உண்டு எனக் கூறுவர். இவர்களின் இந்தத் திறமை மோடி எடுக்கிறது அல்லது கட்டினை அகற்றுதல் எனக் கூறப்படும். சில சமயங்களில் வேறு சாதியினைச் சேர்ந்த மோடி வித்தைக்காரன் இவர்களோடு போட்டியிடுவதும் உண்டு. பந்தயம் கட்டிக்கொண்டு இவர்கள் மோடி எடுப்பர். திறமையுடையவர் வெற்றி பெறுவர். இந்த வகுப்பைச் சேர்ந்த முக்கிய புள்ளி ஒருவரோடு நெருக்கமாகப் பழகிப் பேசியதில் நான் இந்தச் சாதியின் தோற்றம் பற்றிய வரலாற்றையும் அதற்குப் பள்ளியர் செலுத்தும் மரியாதையையும் பற்றித் தெரிந்து கொண்டேன். பன்னெடுங் காலத்திற்கு முன்பு சாலிவாகனன் காஞ்சிவரத்தைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டினை ஆண்டு வந்த சமயத்தில் எல்லாச் சாதியாருடைய தலைமையிடங்களும் அரசிற்குரிய தலைநகரில் இடம்பெற்றிருந்தன. அந்தச் சாதியினர் அனைவரும் காஞ்சிவரத்தில உள்ள காமாட்சி அம்மன், ஏகாம்பரேசுவரர், ஸ்ரீவரதராசர் ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் தங்கள் சாதி வழக்கப்படி வழிபாடு ஆற்றி வந்தனர். ஒவ்வொரு சாதியினரும் இத் தெய்வங்களுக்கு ஆண்டுதோறும் தேர்த் திருவிழாக் கொண்டாடினர். ஒரு சமயம் காஞ்சிவரத்தில் குறிப்பிடத் தக்க வகையில் பெரும் எண்ணிக்கையினராயிருந்த நெசவாளர்களான சேணியருக்கும் வன்னியரான பள்ளிகளுக்கும் மனக்கசப்பு உண்டாயிற்ற. மாந்திரீகத்தில் தேர்ந்த சில சேணியர் இதனால் தீங்கு இயற்றும் நோக்கத்தோடு மந்திரத்தால் ஏவல் நிகழ்த்தியவர்களாகப் பள்ளியர் தேர்களைக் கட்டுண்டு கிடக்குமாறு செய்துவிட்டனர். இதனால் அத்தேர்கள் வேகம் குன்றி ஒய்ந்து நிலை பெயராது நகரின் போக்குவரத்து மிகுந்த தெருக்களில் அப்படியே நின்றுவிட்டன. பள்ளியர் தேர்களை இழுக்க மேலும் புதிய ஆட்களை அமர்த்தினர். யானை, குதிரைகளும் தேரினை இழுக்கப் பயன்படுத்தப்பட்டும் எத்தகைய பயனும் விளையவில்லை. இவ்வாறு பள்ளியருக்குத் தீங்கிழைத்ததோடு திருப்தியடையாத பழிபாவங்களுக்கு அஞ்சாத சேணியர் மன்னரான சாலிவாகனனிடம் சென்று மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாகப் பொதுவான சாலையில் பள்ளியர் தங்கள் தேரினை நிறுத்தியுள்ளனர் எனக் கோள் மூட்டினர். அரசன் பள்ளியரை அழைத்து அவர்ளுடைய அந்தச் செயலுக்கு விளக்கம் கேட்டான். பள்ளியர் இதற்குக் காரணம் தங்கள் பொறுப்பின்மை அன்று

எனவும், அத் தேர்களை இழுத்துச் செல்ல அதிக ஆட்களை அமர்த்தியது உட்பட யானை, குதிரை, ஒட்டகம் முதலியனவும் பயன்படுத்தப்பட்டும் பயனேதும் விளையவில்லை எனவும் முறையிட்டுக் கொண்டனர். அவர்கள் மேலும் சேணியர் தங்களுக்குத் தீங்கிழைக்க முற்பட்டவர்களாக மாந்திரீகம் முதலிய ஏவல் செய்தவர்களாகத் தேர்களை பெயர இயலாதபடி கட்டிவிட்டனர் எனவும் முறையிட்டுக் கொண்டனர். மன்னன் இவர்களுடைய இந்த முறையீட்டினைக் காதில் போட்டுக் கொள்ளாதவனாகப் பகைவர்களின் அந்த ஏவலால் எற்பட்ட கட்டினை விலக்கித் தேரினை அப்புறப்படுத்த வேண்டியது பள்ளியர் பொறுப்பு என ஆணையிட்டதோடு அதற்கான ஒரு காலக் கெடுவினையும் கூறியதோடு இந்த ஆணையின் படி பள்ளியர் செயல்படத் தவறுவார்களானால் அவர்கள் தன் நாட்டு எல்லையைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் கட்டளை பிறப்பித்தான். பள்ளியர் காமாட்சியம்மனைச் சரண்புகுந்து தங்களைக் காக்க வேண்டி முறையிட்டுக் கொள்ள, அவர்கள் மீது இரக்கம் கொண்டவளாக, அவள் அவர்கள் உதவிக்கு வந்தாள். அவர்கள் சாதியினைச் சேர்ந்த தன்னிடம் மிகுந்த ஈடுபாடுடைய பக்தன் ஒருவன் உள்ளான் எனவும் அவனாலேயே சேணியர் ஏவலால் கட்டுண்ட தேர்களின் கட்டுக்களை அகற்ற முடியும் எனவும், அவன் குடகுராசாவின் முதன்மந்திரியாக இருந்து வரும் ராமசாமி நாயக்கன் எனவும் தெரிவித்தாள். நம்பிக்கையற்றவர்களாக நெருக்கடியில் அகப்பட்டுத் தவிக்கும் பள்ளியர் பெரிய மனிதர்கள் குழு ஒன்றினை குடகு அரசரிடம் அனுப்பினர். தங்களைப் பெரும் ஆபத்திலிருந்தும் காக்க ராமசாமி நாயக்கன் பணி உதவியினைத் தாங்கள் பெற அனுமதிக்கும்படி அவர்கள் குடகு அரசனை வேண்டினர். அந்த அரசனும் கருணையுடன் அவர்கள் வேண்டுகோளினை ஏற்றக்கொண்டான். காஞ்சிவரம் வந்து சேர்ந்த நாயக்கன் வெளிப்படப் புலனாகாதனவற்றைக் கண்டுணரும் தன் திறமையால் நிலைமையினை வெகு எளிதில் புரிந்து கொண்டவரானார். அவர் எண்ணற்ற குறளைகளும் மாயாவிகளும் தேரின் ஒவ்வொரு சக்கரத்தையும் பற்றிப் பிணைத்தனவாக இருக்கக் கண்டார். அவை அச்சக்கரங்களை இறுகப் பற்றியனவாகத் தேரை முன்னோக்கி இழுக்க முயற்சி மேற்கொள்ளும் போதெல்லாம் தங்கள் திரண்டுருண்ட கைகால்களால் அவற்றைப் பின்னோக்கித் தள்ளிவந்தன. நிலைமையின் தீவிரத்தை ராமசாமி நாயக்கன் நன்கு புரிந்துகொண்டார். அவற்றின் அந்தக் கட்டுக்களை அகற்றுவது ஒருபுறமிருக்க அவற்றின் தீங்கிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள அவர் தான் கற்ற வித்தைகள் அனைத்தையும்

காட்ட வேண்டியதாயிற்று. நிலைமையைச் சமாளிக்கச் சாதாரண நிலைக்கு மேற்பட்டதான சக்தியினைப் பெற வேண்டும் என உணர்ந்த அவர் எதிரியினை வெற்றிகொள்ளத் தனக்கு ஒரு வழிகாட்டும்படி காமாட்சியம்மனை வேண்டி வழிப்பட்டார். தொடர்ந்து விரதமிருந்து வழிபாடு இயற்றியபின் தூங்கும்போது தனக்கு இறைவி உண்மையினை வெளிப்படுத்துவாள் என்ற நம்பிக்கையில் அவர் ஓர் இரவு காமாட்சி அம்மன் கோவிலிலேயே படுத்து உறங்கலானார். அவர் தூங்கும்போது காமாட்சி அம்மன் அவர் முன் தோன்றி, பள்ளியர் தங்கள் பகைவரை வெல்ல ஒரே வழி அனைவரும் நினைக்கவே நடுங்குவதான தலைச்சன் பிள்ளையினைக் கருவுற்று இருக்கும் ஒருத்தியினைப் பலியிடுவதாகும் எனக் கூறினாள். தேவியின் அரிதான இந்த வேண்டுகோளினை நிறைவேற்ற இயலாத தன்மையினை எண்ணிய பள்ளியர் அவன் நாட்டை விட்டே தாங்கள் வெளியேறி விடத் தயாராக இருப்பதாகக் கூறினர். ராமசாமி நாயக்கன் அவர்களுக்கு உற்ற பொழுதில் உதவ முன்வந்தவனாகக் கருவுற்றிருக்கும் சிறுமியான தன் மனைவியினையே அவள் தலைச்சன் குழந்தையோடு பலிகொடுக்க முன்வந்தார். தேவிக்கு இத்தகைய துணிவோடு கூடிய அரிய பலியினைத் தந்து அவளுடைய சினத்தைத் தணிப்பதில் வெற்றி பெற்றவுடன் சேணியரின் ஏவலால் ஏற்பட்டிருந்த கட்டுகள் தகர்ந்தன. பள்ளியரின் தேர் நகர இயலாதபடி கட்டிப்பிடித்திருந்த குறளைகளும் பேய்களும் இருந்த இடம் தெரியாது ஓடி ஒளிந்தன. அந்தத் தேர்கள் அனைத்தையும் தன் மூக்கில் உள்ள ஒரு துளை வழியே செலுத்தப்பட்ட கயிற்றில் கட்டி இழுத்துச் சென்று உரிய இடத்தில் அவர் சேர்ப்பித்தார். அவரைப் பலவாறு புகழ்ந்து பாராட்டி அவர் காலில் விழுந்து வணங்கி அவருக்குத் தாங்கள் தரவேண்டிய பரிசு என்ன என்பதனைக் கூறுமாறு இரந்து வேண்டினர். ராமசாமி நாயக்கன், பள்ளி சாதியனருக்காகத் தான் செய்த தொண்டு என்றும் நிலைத்து நினைவில் நிற்கும் படியாகத் தனக்கும் தன் சந்ததியினருக்கும் சாதிப்பிள்ளை என்ற தகுதியினை அளித்துப் பள்ளி சாதியாரிடமிருந்து இரந்து வாழும் உரிமையினையும் தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதோடு அப்போதிருந்து சேணியரை வெற்றிக் கொண்டதன் அடையாளமாகச் சாதியாருடைய ஊர்வலத்தில் கொடிகள், கடைகள், எக்காளங்கள் முதலிய சாதிச் சின்னங்களை எடுத்துச் செல்லும் உரிமையும் தனக்கும் தன் சந்ததியினருக்குமே உரியதாயிருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்."

பள்ளி தாசரி – Palli Dāsari

தெலுங்கு பேசும் தாசரிகளிலிருந்து தமிழ் பேசும் தாசரிகளை வேறுபடுத்திக் காட்டும் தமிழ் பேசும் தாசரிகளுக்கான பெயர்.

பள்ளி ஈதிகர் – Palli Idiga

தெலுங்கு பேசுவோர் தமிழ்நாட்டு சாணான்களுக்குத் தந்துள்ள பெயர். இவர்களும் ஈதிகரைப் போல கள் இறக்கும் தொழிலை மேற்கொண்டவர்கள்.

பல்லிச்சர் – Pallicchan

நாயகர்களின் ஓர் உட்பிரிவினர். பல்லக்குச் சுமப்பதே இவர்களின் பரம்பரைத் தொழில். கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பல்ள்ளிச்சர் பிராமணர்களின் பல்லக்குச் சுமப்போராகப் பதியப்பட்டுள்ளனர்.

பள்ளிக்கில்லம் – Pallikkillam

தமிழ்ப் பணிக்கன்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய இல்லம்.

பாலுவ – Pālua

பயோதி சாதியின் ஓர் உட்பிரிவு.

பம்பைக்காரன் – Pambaikkāran

பறையன்களின் தொழில் தொடர்பான பெயர். பம்பை என்னும் முரசினை முழக்குவது இவர்கள் தொழில்.

பம்பலர் – Pambalar

பம்பலர் அல்லது பம்பை அடிப்போர் எனப்படும் இவர்கள் திருமணங்களிலும் மாலர் சாதிக்குரிய தெய்வங்களின் திருவிழாக்களிலும் இசைக்கலைஞர்களாகத் தொழில் புரிவோர். அங்கம்மாவின் கதையினைச் சொல்லும் பணியினையும் இவர்கள் மேற்கொள்கின்றனர். கமல்லர் சாதியாரின் பெத்த தினச் சாவுச் சடங்கில் முக்கு (தரையில் வரையப்படும் உருவங்கள்) வரையும் பொறுப்பினையும் மேற்கொள்கின்றனர்.

பம்மி – Pammi (a common lamp)

தேவாங்கர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றின் பெயர். அகல் விளக்கு எனப்பொருள்படுவது.

பாமுலர் – Pāmula (snake people)

பாம்பாட்டிகளான குறவர்களுக்கும் ஜோசிகளுக்குமான பெயர். இவர்கள் நாடோடிகளாகத் திரியும் பாம்பாட்டிகளாக மக்களுக்குப் பாம்பினை ஆட்டி வேடிக்கை காட்டுவர். இப்பெயர் மாலர்,ஏனாதியர் ஆகிய சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பெயராகவும் உள்ளது.

பனம் – Panam (PALMYRAPALM): *Borassus flabellifer)*

சாணார்களின் ஓர் உட்பிரிவு, கொண்டையம்கோட்டை மறவர்களின் ஒரு கொதுவாகவும் இது உள்ளது.

பாணான் – Pānān

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் தமிழ்ப் பாணான்கள் மேஸ்திரி எனவும் பதியப்பட்டுள்ளனர். "மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் இவர்கள் தையல் தொழிலை மேற்கொண்டுள்ளனர். பிராமணர்களையும் வேளாளர்களையும் தங்கள் புரோகிதர்களாக அமர்த்திக் கொள்கின்றனர். இவர்கள் சமைக்கும் சோற்றினை நாவிதர்களும் வண்ணார்களும் உண்பதில்லை எனினும் இவர்கள் இந்துக்களின் கோயில்களுள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்" என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதே அறிக்கை மலையாளம் பாணான்களைப் பற்றி, "இவர்கள் பேய் ஓட்டுபவர்களும் பூத ஆட்டக்காரர்களும் ஆவர். ஆண்கள் குடைகட்டும் தொழிலை மேற்கொள்கின்றனர். சில பகுதிகளில் இவர்கள் மலையன்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மலைப் பகுதிகளிலிருந்து சமவெளியில் வந்து குடியமர்ந்தவர்களின் சந்ததியினர் ஆதல் கூடும்" எனக் கூறப்பட்டுள்ளது. தென் கன்னட மாவட்டக் கையேட்டில், "நல்கெயர், பொம்படருக்குச் சமமான மலையாள சாதியினர் மலபாரில் பெரும் எண்ணிக்கையினரான இவர்கள் மலையன்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சில பேய்களின் வேடம் ஏற்கின்றனர். அப் பேய்கள் குடையேந்தியவர்களாக வீடு வீடாகப் பிச்சை கேட்டுச் செல்வர். அந்தச் சமயங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் மட்டுமே பூதங்களின் வேடந்தாங்கி ஆடுவர்" எனக் கூறப்பட்டுள்ளது. "கிராமத்து மந்திரவாதிகளும் செப்பிடு வித்தைக்காரர்களும் ஆன இவர்கள் பாணான் மலையன் முதலிய பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். பேய் பிடித்துள்ளவர்களின் உடலிலிருந்து (பெரும்பாலும் குழந்தைகளின் உடலிலிருந்து) பேயினை ஓட்டுவதும், தாயத்துக்கள் தயாரித்துத் தருவதும்

கண்ணேறு பட்டதால் வரும் தீங்கினைத் திருஷ்டி நீக்குவதும் முதலியன இவர்கள் மேற்கொள்ளும் தொழில்" எனத் திரு. கோபால பணிக்கர் கூறியுள்ளார். *

சில சடங்கு நிகழ்ச்சிகளின் போது பாணான்கள் துடியடிக்கும் தொழிலையும் மேற்கொள்கின்றனர்.

திய்யன்களுடைய சாவுச் சடங்குகள் பற்றி மலபார் மாவட்டக் கையேட்டில் திரு. லோகன் எழுதியுள்ளது வருமாறு:– "சாவு, நிகழ்ந்த மூன்றாம் நாள் அதிகாலையில் குருப்பு அல்லது சாதிக்குரிய நாவிதன் இறந்தவன் உயிர் பிரிந்த அறையிலிருந்தும் அவனது ஆவியினை வெளியேற்றச் சில தந்திரங்களைக் கையாள்வான். இறந்தவனுக்கு நெருங்கிய உறவினன் ஒருவன் அந்த அறைக்குள் சாவுச் சடங்குக்குரிய கொதிக்கின்ற சோற்றுப் பானையினைத் தூக்கி வருவதின் வழி நிகழ்த்தப்படுகின்றது. உடனே அந்தப் பானையை மீண்டும் அங்கிருந்து வெளியே கொண்டு செல்வர். இதனால் இறந்த பின் மூன்று நாள்களாகப் பட்டினியால் வாடும் ஆவி வெறிகொண்டதாக அந்தச் சோற்றுப் பானையினைத் தொடர்ந்து செல்லும் எனவும் குருப்பு உடனே அந்த அறையின் கதவுகளை மூடி அதனை மீண்டும் உட்புகாதபடி காப்பான் எனவும் நம்புகின்றனர். இச்சடங்கை நிகழ்த்தும் குருப்பு பாணான் சாதியினைச் சேர்ந்தவன். செறுமான் சாதிக்கு மேல்நிலையில் உள்ளவர்களான தீட்டு ஏற்படுத்தும் சாதியாருக்கு இவனே அம்பட்டனாக இருப்பதோடு குடை கட்டுவதையும் பரம்பரைத் தொழிலாகக் கொண்டுள்ளான். குடைகட்டுவது இவன் தொழிலாயினும் அதனை முழுமையாகச் செய்து முடிக்கும் உரிமை இவனுக்கு இல்லாதது குறிப்பிடத்தக்க ஒரு வழக்கமாகும். குடையின் வடிவமைப்புச் சட்டங்களை மட்டும் இவன் செய்வான். அவ்வாறு குடையினைப் போர்த்தும் பணியினைச் செய்து முடிக்கத்தக்க பெண் உறவினர்கள் இல்லாதவர்கள் அண்டை அயலராக வாழும் குடும்பத்துப் பெண்களின் உதவியினை நாடி அதனை முடித்துக் கொள்ள வேண்டும்.கூடைமுடைவோர் கவரர் எனப்படுகின்றனர். இவர்களை எக்காரணம் கொண்டும் குடையினைப் பிடித்துச் செல்லுமாறு செய்ய முடியாது. பாணான் காலைப் பிடிக்கக் கூடாது என்பதனை (குடைக்கம்பை) இவர்கள் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

**மலபாரும் அங்கு வாழ்வோரும், 1900 (Malabar and its folk, 1900)*

மலபாரில் கோயிலண்டையில் உள்ள பிச்சாரி அம்மன் கோயில் திருவிழாச் சடங்கு தொடர்பாகத் திரு. பாவ்செட் தந்துள்ள * விவரங்கள் வருமாறு:- "திருவிழாவின் ஏழாம் நாளன்றும் இறுதி நாளன்றும் காலை நேர ஊர்வலம் நடந்து முடிந்தவுடன் பாணான் சாதியினைச் சேர்ந்த ஒருவன் தானே செய்து முடித்த பனையோலைக் குடை ஒன்றினை ஏந்தியவனாகக் கோயிலுக்கு வருவான். அதன் ஓரம் முழுதும் தென்னங்குருத்து ஓலைகள் சொருகப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். நீண்ட கைப்பிடியினை உடைய் அந்தக் குடையினை ஏந்தியவனாக அவன் கோயிலின் முன் நாட்டியம் ஒன்றினை ஆடுவான். அதற்காக அவனுக்கு 10 பவுண்டு பச்சரிசி வழங்கப்படும்." ஒரு தியன் பிணத்தை எரிக்கும்போது சுடுகாட்டில் பாணான் ஒருவன் ஐந்து நாள்கள் காவல் இருப்பான். அப்போது இரவில் அங்கு நடமாடும் தீய ஆவிகளை விரட்ட அவன் ஒரு முரசினை முழக்குவான் எனத் திரு. பாவ்செட் மேலும் இவர்களைப் பற்றிக் கூறியுள்ளார்.

மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் பாணான்கள் பற்றித் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- "இசை எனப் பொருள்படும் பாண் என்பதனோடு இப்பெயர் தொடர்புடையதாகலாம். மக்கள் தாய் தந்தையின் உடமை உரிமைகள் மகனுக்கு உரியனவாதல்) உரிமையினைப் பேணும் இவர்கள் உடன்பிறந்த சகோதரர்கள் பலரும் ஒருத்தியை மனைவியாகக் கொள்ளும் வழக்கத்தையும் மேற்கொண்டவர்களாக உள்ளனர். தென் மலபாரில் திரெங்கன், குடைகட்டி, மீன்பிடி, புள்ளுவன் என்ற நான்கு உட்பிரிவுகள் இவர்களிடையே உள்ளதாகத் தெரிகின்றது. புள்ளுவன் பிரிவினர் மற்ற பிரிவினரைவிடத் தகுதியில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களிடையே புறமணக்கட்டுப்பாடுடைய பல இல்லங்கள் (குலங்கள்) உள்ளன. காளியினை வழிபடும் இவர்கள் மறிக்குட்டி, கரிங்குட்டி, குளிகன், குட்டிச் சாத்தான் போன்ற சில தேவதைகளையும் வழிபடுகின்றனர். இவர்கள் பேயோட்டும் முறைகள் பல திறத்தன. ஒருவன் பேயால் பிடிக்கப்பட்டுள்ளான் என ஐயுறின் ஒரு சோதிடனைக் கலந்து ஆலோசித்து அவனுக்குத் தொல்லை தரும் மூர்த்தி எதுவென முடிவு செய்வர். அதன்பின் பாணானை அழைப்பர். அவன் முகமூடி அணிந்து தன்னை அலங்கரித்தவனாகத் தப்பட்டை, குழல், முதலியனவற்றை முழக்கிப் பாடியவனாகத் தியாட்டம் என்ற ஆட்டத்தை ஆடுவான். பேயினை ஓட்ட

*சென்னை அருங்காட்சியக மடல், 111/3, 1901.
(Madras Mus. Bull., III, 3, 1901)

இவர்கள் ஆடும் மற்றொரு ஆட்டம் உச்சவேலி என்பதாகும். இதனை மனிதரைப் பலிகொடுக்கும் முன்னைய வழக்கின் இன்று எஞ்சியுள்ள எச்சமாகவோ பரிவு, இரக்கம் காட்டும் மாயவித்தையாகவே கொள்ளலாம். இதில் பங்கு கொள்பவன் தன்னைப் போலியாக உயிரோடு புதைக்கும் சடங்குக்கு உட்படுத்திக் கொள்வான். அவனை ஒரு குழியில் கிடத்தி, மேலே பலகைகளை இட்டு மூடி அதன்மேல் பலா மரக்கிளைகளைக் கொண்டு யாகத் தீ மூட்டுவர். மற்றொரு வகையாக நடத்தப்படும் இந்தச் சடங்கில் பாணான் தன் இடது முன் கையினை அறுத்துக் கொண்டு அதிலிருந்து வழியும் குருதியினைத் தன் முகத்தில் பூசிக் கொள்வான். பத்ரகாளி கோயிலிலும் பிற கோயில்களிலும் நடைபெறும் பல சடங்குகளிலும் பாணான்கள் மண்ணான்களோடு கூடிப் பங்கு கொள்கின்றனர். அச் சடங்குகளில் இவர்கள் பல சிறு தேவதைகளையும் பூதங்களையும் குறிக்கும் பொருத்தமான வேடங்களைத் தரித்து ஆடுவர். அப்போது கோழிகள் பலியிடப்படுவதோடு வெளிச்சப்பாடு ஒருவன் ஆவேசம் மேலிட்டவனாக ஆடியபடி அடுத்து நிகழவுள்ளதையும் உரைப்பான்." "இவர்கள் மணமுறிவினை முறைப்படி நிகழ்த்தக் கணவன் தன் வேட்டியிலிருந்து ஒரு நூலினை எடுத்துத் தன் மனைவியின் உடன்பிறந்தவனிடம், "உன் பரிச்சா தீர்ந்தது" எனக் கூறிக் கொடுப்பான். ஈழவன் (தண்டான்) சாதியினைச் சேர்ந்த சிறுமி ஒருத்தி பூப்படைவாளானால் அச் செய்தியினை அவளுடைய கணவனுக்கோ தாயாருக்கோ சென்று தெரிவிக்க ஒரு தூதுவனை அளித்து உதவ வேண்டியதும் இச் சாதியாரின் வழக்கமான கடமைகளில் ஒன்றாகும்" என மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் ஐந்நூற்றான், முந்நூற்றான் என்பன மலையான், பாணான் ஆகிய சாதியாருக்கான உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளது.

திருவாங்கூரைச் சேர்ந்த பாணான்கள் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. என். சுப்ரமணிய அய்யர் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இச் சாதியினைக் குறிக்கும் சொல் தையல்காரன் எனப் பொருள்படும் தமிழ்ச் சொல்லாகும். மலபாரில் கைத் தொழிலை மேற்கொண்டுள்ள பல சாதியாரும் தரிக்கும் பணிக்கன் என்ற பட்டப் பெயரினையே இவர்களும் தரிக்கின்றனர். இவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த பாணான்களை ஒத்தவர்களாகக் கருதப்பபட்டாலும் சமூகப் படிநிலையில் அவர்களைக் காட்டிலும் மிகவும் தாழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர்.

முப்பத்தாறு அடிக்குள்ளாக நெருங்கியவர்களைத் தீட்டுக்கு உள்ளாக்குபவர்களாகக் கருதப்படும் இவர்கள் மண்ணான்களையும் வேடன்களையும் எட்டடிக்கு அப்பாலும், புலையர், பறையர் ஆகியோரை முப்பத்திரண்டு அடிக்கு அப்பாலும் தங்களுக்குத் தீட்டு உண்டாக்குபவர்களாகக் கருதி நிறுத்துகின்றனர். இவர்களே இவர்கள் சாதிக்குரிய வண்ணான்களாகவும் அம்பட்டவர்களாகவும் உள்ளனர். கம்மாளர் சமைக்கும் உணவினை இவர்கள் உண்பர். கம்மாளரிடையே தாங்கள் கீழான பிரிவினர் என்ற வழக்கு நிலவுகின்றது. மலபாரைச் சேர்ந்த புகழ்பெற்ற துறவியான திருவரங்கன் பறையர் சாதிப் பெண் ஒருத்திக்குப் பிறந்த பாணான் என்கின்றனர். இதனால் பாணான்கள் இவருக்கு தனித்த மரியாதை காட்டுகின்றனர். பாணான்களின் பரம்பரைத் தொழில் பேயோட்டுதல் எனக் கேரளோற்பத்தி கூறுகின்றது. பிரிட்டீசாரின் ஆளுகைக்கு உட்பட்டுள்ள மலபார் பகுதியில் இவர்கள் இன்றும் இத்தொழிலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. குடை கட்டுதலை இவர்கள் துணைத் தொழிலாக மேற்கொண்டுள்ளனர். எனினும் திருவாங்கூரில் பாணான்கள் தையல் தொழில் ஒன்றினையே மேற்கொண்டுள்ளனர் என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். சிறுமி ஒருத்தி பூப்படையும் முன்பே தாலிகட்டுக் கலியாணத்தை நடத்துகின்றனர். இதுவே அச்சிறுமிக்கான உண்மையான திருமணமாக இருக்குமானால் அச் சிறுமியினைப் பூப்படைந்தபின் நான்காம் நாள் கணவன் வீட்டுக்கு அழைத்துச் செல்வர். அங்கு அவள் அப்போதிருந்து தாலி கட்டியவனுடன் குடும்பம் நடத்துவாள். தாலிகட்டு இவ்வாறு நடத்தப்பட வில்லையாயின் தாலிகட்டியவனோ வேறு யாரேனும் ஒருவனோ அவளோடு சம்பந்தம் சடங்கினைச் செய்து கொண்டு உடலுறவு கொள்ளலாம். மக்கள் தாய உரிமையினையே பெரும்பான்மையாக மேற்கொள்ளும் இவர்கள் இறந்தவர்களைப் புதைப்பதோடு பதினாறு நாட்கள் சாவுத் தீட்டினையும் மேற்கொள்கின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை ஆடி மாதத்தில் அமாவாசையின் போது இறந்த மூதாதையர்களின் ஆவிகளைத் திருப்திப்படுத்த சோற்றினைப் படைக்கின்றனர். ஏதேனும் விபத்தில் உயிர் துறக்க நேரும் மூதாதையர்களுக்கு ஆவணி மாதத்தில் இறைச்சியும் சாராயமும் படைத்து வழிபடுவர். இச் சடங்கு வெள்ளம்குடி என வழங்கப்படும். மூதாதையரின் நினைவாகச் சிலபோது மண்ணால் குருசாலை அல்லது குரியால எனப்படும் மடங்களையும் இவர்கள் அமைக்கின்றனர் .

கொச்சியினைச் சேர்ந்த பாணான்கள் பற்றிய பின்வரும் குறிப்புகள் திரு. எல்.கே. அனந்தகிருட்டிண அய்யர் கட்டுரை ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். *

ஈழவர்களின் தோற்றம் பற்றியதாக மெக்கென்சி கையெழுத்துச் சுவடிகளில் கூறப்பட்டுள்ள வழக்கு வரலாற்றின் உருமாற்றம் பெற்றதொரு வரலாற்றியையே பாணான்களும் தங்கள் தோற்றம் பற்றிய வரலாறாகக் கூறுகின்றனர். பாணான்கள் கூறும் அந்த வழக்கு வரலாறு வருமாறு:— ஒருநாள் சேரமான் பெருமானின் வண்ணான் அவருடைய உடைகளை மிகத் தூயனவாக வெளுத்துக் கொண்டு செல்ல நேர்ந்தது. அதற்கான காரணத்தைப் பெருமாள் கேட்கவே தான் துவைத்துக் கொண்டிருக்கும்போது அங்கு வந்த தச்சர் சாதிப்பெண் ஒருத்தி கூறிய வழிமுறைப்படி துவைத்ததே அதற்குக் காரணம் என அவன் கூறினான். அந்தச் சிறுமியின் இச் செயலால் மகிழ்ந்த பெருமாள் அவளைத் தன்னுடைய வண்ணானுக்கு மணம் முடித்து வைக்க விரும்பினார். அந்தச் சிறுமியின் பெற்றோரை அணுகிப் பெருமாள் இதற்கு உடன்படுமாறு கேட்டபோது அரசனது விருப்பமான இதற்கு அவர்களால் மறுப்பு ஏதும் கூற இயலவில்லை. எனினும் அவர்கள் சாதியினைச் சேர்ந்த மற்றவர்கள் இந்த மணம் நடைபெறுமானால் அவன் குடும்பத்தினர் சாதி விலக்கிற்கு உள்ளாவதோடு சாதியாருக்கும் அது இழிவினை ஏற்படுத்தும் என்பதால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். முன்பே முடிவு செய்யப்பட்ட மண உறவு, நிகழாமல் தடுக்க அவர்கள் ஒரு வழியினைக் கண்டுபிடித்தனர். ஒரு பந்தலை அமைத்து அதனைக் கண்ணைக் கவரும் வண்ணம் அலங்கரித்தனர். மணமகனும் மணமகளும் மணப்பந்தலில் பாயில் உட்கார வேண்டிய முகூர்த்த நேரத்தில் தச்சர்கள் மணமகளை உருவில் ஒத்த ஒரு பாவையினைக் கொண்டு வந்து மணமகன் பக்கத்தில் உட்கார வைத்ததோடு தங்கள் நுட்பமான தொழில் திறமையால் அந்தக் கட்டிடத்தை அவர்கள் இடிந்து விழுமாறு செய்து அதனுள் இருந்த அனைவரும் உயிர் இழக்குமாறு செய்தனர். உடனே அவர்கள் பெருமாளின் நாட்டைவிட்டுப் புறப்பட்டு இலங்கைக்குச் சென்று சேர்ந்தனர். வண்ணானுக்கு ஏற்பட்ட இந்த கேட்டினாலும் கட்டிடங்களைக் கட்ட தச்சர்கள் இல்லாது நாட்டைவிட்டு வெளியேறி விட்டதாலும் பெருமாள் மிகுந்த இக்கட்டுக்கு

***** *கொச்சி இன இயல் கணக்கீடு பற்றியான கட்டுரை*
(Monograph, Eth. Survey of Cochin.).

உள்ளானவராக ஆனார். சில பாணான்களை அனுப்பி வைத்துத் தச்சர்களை மீண்டும் அழைத்து வரும்படி செய்தான். இவ்வாறு தச்சரைத் திரும்பி அழைத்து வந்த பாணான்கள் தின்னப் பனம்பழங்கள் சிலவற்றைத் தந்தனர். அவற்றின் முற்றிய காய்களைத் தங்கள் நிலத்தில் ஊன்ற அவை பனைமரங்களாக வளர்ந்து காய்களைத் தந்தன.பாணான்கள் இந்த மரங்களுக்கான உரிமைகளை முதலில் தாங்கள் வைத்துக் கொண்டவர்களாக இருந்து பின் அவற்றை ஈழவர்களுக்கு உரியதாக்கினர். இதன் நினைவாக ஈழவர்கள் இன்றும் தங்கள் வீட்டில் ஏதேனும் சடங்குகள் நடந்தால் அப்போது இரண்டு பாணான்களுக்கு இலையில் சோறிடும் வழக்கத்தை மேற்கொண்டவர்களாக உள்ளனர். முதன்முதல் அந்த மரங்களைப் பாணான்கள் நட்ட காரணத்தால் அவர்கள் ஈழவ நெட்டரிகள் என அழைக்கப்படுகின்றனர்.

"பாணான்களுக்கெனப் பட்டம் ஏதும் இல்லை. என்னிடம் விவரம் சேகரிக்கத் திருச்சூருக்கு அழைத்து வரப்பட்ட ஒருவன் தன் முன்னோர்களுள் ஒருவன் பணிக்கன் என்ற பட்டத்திற்கு உரியனராயிருந்தான் எனவும் காதில் தங்கக் கடுக்கன் அணிந்து கையில் வெள்ளிப் பூணிட்ட தடியும் எழுத்தாணியோடு கூடிய கத்தியும் உடன் எடுத்துச் செல்லும் உரிமையும் அவனுக்கு உரியதாயிருந்தது எனவும் கூறினான். பாலக்காடு வட்டத்தில் இச்சாதிக்கு உரிய தலைவன் கப்ரதன் என அழைக்கப்படுகின்றான். கப்ரதன் ஒருவன் இறந்தால் அத்தகவல் அரசருக்குத் தெரிவிக்கப்படுகிறது. துக்கம் மேற்கொள்ளும் இறந்தவனுடைய மகனுக்கு அவர் வாள், கேடயம், ஈட்டி, மருந்தோடு வடிய சிறிய துப்பாக்கிகள் சில, ஒரு வெள்ளி வளையல், சில கழுத்தணிகள் ஆகியவற்றை அனுப்பி வைப்பார். இறந்தவருடைய உடலைப் புதைப்பதற்குத் தூக்கிச் செல்லும் சமயம் அவருடைய மகன் மேற்கண்ட அணிகளை அணிந்தவனாகப் பிணத்தின் பின் செல்வான். பிணத்தின் முன்னே, மேலே கூறிய படைக்கலங்களை ஏந்தியவர்களாகச் சிலர் செல்வர். வீட்டிலிருந்து பிணத்தைத் தூக்கும்போது ஒன்றும் சுடுகாட்டில் பிணத்தை இறக்கி வைக்கும்போது ஒன்றும் சிதைக்குத் தீயிடும்பேரது ஒன்றுமாக மும்முறை துப்பாக்கியினை வெடிப்பர். மறுநாள் இறந்தவருக்காகத் துக்கம் மேற்கொண்டவன் தன் கைப்படக் கட்டிய குடையினை அரசரிடம் தந்து அவருக்குத் தன் மரியாதையினைத் தெரிவித்துக் கொள்வான். அரசர் அவனுக்குக் கப்ரதன் என்ற பட்டத்தை அப்போது அளிப்பார்.

பாணான்களிடையே மந்திரவாதிகளும் பேயோட்டுபவர்களும் உள்ளனர். இவர்கள் உயர்ந்த சாதியாருக்காகக் கூடச் சில சமயங்களில் இந்த மந்திர வித்தைகளை மேற்கொள்கின்றனர். சில பாணான்கள் பறையரைப் போலவே அருவருப்பூட்டும் மந்திரச் சடங்குகளையும் மேற்கொள்கின்றனர். சக்தி வாய்ந்த விருப்பத்தை நிறைவேற்றும் மாய மருந்துகளைப் பெற வேண்டி இவர்கள் இத்தகைய சடங்குகளை மேற்கொள்கின்றனர். தீய தேவதைகளிடையேயும் உயர்வு, தாழ்வு உள்ளது என்பது இவர்கள் நம்பிக்கை. சங்கிலிக் கறுப்பன், பேச்சி, ஒதரக் கறுப்பன், காளி, சொட்ல கறுப்பன், சொட்ல பத்ரகாளி, யக்ஷி, காந்தர்வன், அனுமான் ஆகிய தேவதைகளை இவர்கள் தங்கள் மந்திரத்தாலும் பலிகளாலும் வசப்படுத்துவதாகக் கூறுகின்றனர். இந்தத் துர்தேவதைகளுள் ஒன்றிரண்டினை மனிதர்கள் உடலில் ஏறுமாறு செய்யவும் இவை ஏறியுள்ள மனிதர்களிடமிருந்து இவற்றை ஓட்டவும் தங்களுக்குத் தெரியும் என இவர்கள் கூறுகின்றனர். குழந்தைகளுக்கு வரும் அனைத்து நோய் நொடிகளையும் தங்கள் மந்திரத்தாலும் மருந்தாலும் தீர்க்க முடியும் எனக் கூறும் இவர்கள் தங்கள் சாதியினைச் சேர்ந்த மாந்திரீகர்களைக் கொண்டு ஒருவனைச் சாகடிக்கக்கூட முடியும் என்கின்றனர். அத்தகைய சமயங்களில் முதலில் ஒரு சோதிடனிடம் சென்ற அவன் கணிப்புக்கு ஏற்ப மந்திரவாதிகளை நாடிச் செல்வர். ஒருவன் மீது தீய ஆவி ஏறி அதனால் துன்புறுபவனுடைய துன்பத்தைக் களையப் பாதாள யாகம் எனப்படும் சடங்கு பின்வரும் முறையில் நிகழ்த்தப்படுகின்றது. ஆறடி நீளம், மூன்றடி ஆழம், ஒன்றிரண்டடி அகலம் உள்ள ஒரு குழி வெட்டப்படும். புதிய வேட்டியினை உடுத்தியவனாக ஒரு பாணனை அதில் படுக்கச் செய்வர். அவன் மூச்சுவிட ஏற்றபடி துளையிட்டு அக் குழியினை மண்ணால் மூடுவர். அம் மேடையின் மீது பலா மரக்கிளைகளைக் கொண்டு புனித நெருப்பு மூட்டப் பெறும். அதன் அருகே அறுபத்தி நான்கு பகுதிகளைக் கொண்ட ஒரு பெரிய சதுரம் வரையப்படும். அதன் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு சிறு இலையினையிட்டு அதில் நெல், அரிசி, மாவு, ஏற்றப்பட்ட ஆகியனவற்றை இடுவர். எள், கடுகு, சாமை, கொள்ளு, எட்டுவகை வாசனைப் பொருள்கள், பாம்புத் தோல், லத்தி, பால மரப்பால், ஆலமரத் தளிர்க் கொத்து, கருப்பை, நில நரகம், *(Nanegamia alata)* எண்ணெய், நெய் ஆகியவற்றை அந்தப் புனித நெருப்பு நன்கு எரியும்படி அதில் இடுவர். தீய ஆவி ஏறப்பெற்று நோயுற்றவனை அந்த நெருப்பின் முன் கொண்டு வந்து நிறுத்தி, பேயோட்டுபவன் அதட்டலான குரலில் அவனை – அல்லது அவன் மீது ஏறி இருக்கும் தீய ஆவியினை –

இந்தப் பலிப் பொருள்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளும்படி கூறி மந்திரங்களைக் கூறியவனாக அவற்றை வீரபத்ரர் அல்லது கண்டகருணரின் அருளை வேண்டி நெருப்பிலிட்டவனாக இருப்பான். ஓ! கண்ட கருணா, தேவர்களின் அரசனே, எனக்கு உடல் இல்லை. அதாவது எனது உடல் நாளுக்கு நாள் ஆற்றல் இழந்து வருகின்றது. என்னைச் சில பேய்கள் பிடித்துள்ளதாக நினைக்கிறேன். அவை என்னைச் சாகடித்தபடி உள்ளன. அருள்கூர்ந்து உதவுவாயாக. என் ஆற்றலை எனக்கு அளிப்பாயாக என்பதுபோல அந்த வேண்டுதல் இருக்கும். இதன் பின் மற்றொரு சடங்கினைத் தொடங்குவர். ஒரு கோழியினைப் புதைத்து அதன் மீது சிறு மண்மேடை அமைத்து அம் மேடைக்கு அருகே ஒரு மனிதனின் உருவத்தினை வரைவர். அடுத்துத் தலைப்பகுதியில் ஒன்று வயிற்றிடத்தில் ஒன்ற கால் பகுதியில் ஒன்று என மூன்றிடங்களில் யாகத் தீ மூட்டப்படும். அச் சதுரங்கள் ஒவ்வொன்றிலும் நெல், அரிசி, மலர்கள் முதலியன வைக்கப்பட்ட ஒவ்வோரிலையின்ன வைப்பர். மேலே கூறிய தீய தேவதைகளைப் புகழும் மற்றொரு மந்திரம் கூறப்படும். ஒரு பாடலைய்யும் அப்போது பாடுவர். இதனை முடித்த பின்னர், சிறிய கோயில் போன்ற ஓர் அமைப்பினை உண்டாக்குவர். அதனருகே ஒரு வாழைக்கன்றினை நடுவர். பின் பத்ம உருவத்தினை வரைந்து பேய்களின் அரசியான பரதேவதைக்குப் பூசை செய்வர். கள், அவல், வாழைப்பழம், தேங்காய் முதலியனவற்றைப் படைத்த பிறகு பேயோட்டுபவன் தெய்வம் ஏறப் பெற்றவனைப் போலத் தேவி என்ன விரும்புகின்றாள் என்பதனையும், உடலிலிருந்து பேய்கள் வெளியேறுவது பற்றியும் நல்வாக்கு உரைப்பான். இதன்பின் நோயுற்றவன் பேய்களின் பிடிப்பிலிருந்து முழுவதுமாக விடுபட்டவனாகிவிட்டான் எனக் கருதப்படுகிறது. சடங்கின் இறுதியில் புதைக்கப்பட்டவனைத் தோண்டி வெளிப்படுத்தி வீட்டுக்கு அனுப்பி வைப்பர்.

"பாலக்காடு மாவட்டத்தில் பின்வரும் முறையில் பேயோட்டுதல் நிகழ்த்தப்படுகிறது. இம்முறை பேய் பிடித்தவர்களுக்கும் நோயுற்றவர்களுக்கும் விடுதலை தருவதாக அமைகின்றது. உயர் சாதியினைச் சேர்ந்த ஒருவருடைய வீட்டில் பேய்களால் சில தீங்குகள் நிகழ்ந்து வருவதாகக் கருதுவார்களானால் ஒரு பாணானுக்குச் சொல்லி அனுப்புவர். அவன் தன் குழுவினருடன் மாலை நேரத்தில் அந்த வீட்டுக்கு வந்து சேர்வான். மேலே கூறிய மரத்தின் கிளைகளைக் கொண்டு யாகத் தீ மூட்டுவர். அதனுள் ஆறுவகைத் தானியங்களும் நெய்யும் எண்ணெயும்

இடப்படும். இந்தச் சடங்குகள் நிகழ்ந்து கொண்டிருக்கையிலேயே பேய்களின் முதன்மைத் தெய்வமான கல்லடிக் கொடெ நீலியினைப் பாடிப் போற்றி வழிபாடு நிகழ்த்துவர். அடுத்து ஒரு பாடையினைக் கொண்டுவந்து அதில் ஒரு பாணானைக் கிடத்தி அவன் தலைமாட்டில் ஒரு புதிய துணிகொண்டு மூடுவர். அவன் தொடைகளுக்கிடையே ஒரு கோழியினையும் பலியிடுவர். அதன்பின் அவன் மெல்ல உணர்வு பெறுவதைப் போல உடம்பை அசைத்து நடிப்பான். அந்த நிலையில் அவனை அப்படியே வீட்டு எல்லைக்கு அப்பால் எடுத்துச் செல்வர். பாடையில் படுத்திருக்கும் பாணான் தன்னை ஒரு பேய் அடித்துச் சாகடித்தது போலப் பாவித்துப் படுத்துக் கிடப்பான். அங்கு நிகழ்த்தப்பட்ட பாட்டும் படையலும் அந்தப் பேய்களைத் திருப்திபடுத்த நிகழ்த்தப்பட்டவை. இது பரிவு இரக்கம் தோன்றும்படியாக நிகழ்த்தப்படும் மந்திரச் சடங்கிற்கு ஒரு சான்றாகும்."

"பறையரைப் போலவே பாணான்கள் சிலரும் ஒடி (அல்லது ஓதி) நெறியினை மேற்கொண்டவர்களாக உள்ளனர். பின்வரும் முறையில் தயாரிக்கப்படும் மருந்தும் மந்திரமும் கருவுற்ற பெண்களை அவர்களுடைய வீட்டிலிருந்து மயக்கி அழைத்துச் செல்ல உதவுகின்றது. அந்த மருந்தைத் தயாரிக்கும் முறை வருமாறு:– மாந்திரீகக் கலையில் ஊறியவனான ஒரு பாணான் அதிகாலையில் குளித்துத் துவைத்த ஆடைகளைத் தரித்துத் தன் வழிபடு தெய்வத்திற்குப் பூசை செய்தபின் கொடுவெளி *(Manihot utilissima)* செடியினைத் தேடிச் செல்வான். தான் எதிர்பார்த்தது போன்ற அந்தச் செடி ஒன்றினைக் கண்டவுடன் அதனை நாளும் மும்முறை சுற்றி வந்தவனாகத் தொண்ணூறு நாள்கள் கீழே விழுந்து வணங்கி வருவான். அமாவாசையாக இருக்கம்படியாக அமையும் கடைசி நாளன்று நள்ளிரவில் அச் செடிக்கக் கர்ப்பூர ஆரத்தி முதலியன காட்டிப் பூசை செய்து மும்முறை வலம் வந்து கீழே விழுந்த வணங்குவான். பின் அதன் மீது மூன்று சிறு கொள்ளிக் கட்டைகளை வைத்து அதன் முன் இருபது தப்படிகள் நடப்பான். வாயினை இறுக மூடியபடி அச்சம் ஏதும் அற்றவனாக அவன் அந்தச் செடியினை வேரோடு பிடுங்கிச் சுடுகாட்டுக்குக் கொண்டு போய்ச் சுடுகாட்டுச் சாம்பலில் புதைத்து அதன் மீது ஏழு இளநீர்களின் தண்ணீரை விடுவான். பின் சில மந்திரங்களைச் சொல்லியவனாக அதனை இருபத்தொரு முறை சுற்றி வருவான். பின் அந்தத் தண்ணீரில் விழுந்து குளித்து அந்தச் செடி தன் வாயினை வந்து அதுவே தொடும்வரை அசையாது நேரே நிற்பான். பின் ஒரு வாய் தண்ணீரைக் கொப்பளித்து

அவ்விடத்தில் உமிழ்ந்தவனாக அச் செடியினை வேரோடு எடுத்துச் செல்வான். அவன் அதனைப் பல தனிப்பட்ட சக்திகள் வாய்க்கப்பெற்றதாகக் கருதுவான். மூடியிருக்கும் ஒரு வீட்டின் கதவருகே அதனை எடுத்துச் சென்றால் அது அந்த வீட்டில் உள்ள கருவுற்ற பெண் ஒருத்தியினை அவள் கருவினை வெளிப்படுத்துவதனை அவளே அறியாதபடி அவளை மயக்கும் ஆற்றல் வாய்ந்தது (பார்க்க: பறையர் பற்றிய கட்டுரை). இவையனைத்தும் இருண்டதொரு இரவில் இரகசியமாக நிக்ழ்த்தப்பட வேண்டியவை. அந்தக் கருவின் தலை, கைகள், கால்கள் ஆகியனவற்றை வெட்டி அப்புறப்படுத்தியபின் முண்டத்தை ஒரு கருங்கல் பாறைக்கு எடுத்துச் சென்று அங்கே வைத்து அதனை ஒன்பத துண்டங்களாக்கி அவற்றைக் கருநிறமாகும்வரை வணக்குவான். அப்பொழுது அந்தத் துண்டுகளில் ஒன்ற கொதிக்கத் தொடங்கியவுடன் அதனை ஒரு புதிய மண் சட்டியில் இட்டு ஒன்பது இளநீர்களின் தண்ணீரை விட்டு அதனைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வான். அங்குத் தரையில் முப்பது அடி இடைவெளி விட்டு இரண்டு கழிகளை நட்டு வைப்பான். அந்தக் கழிகள் இரண்டினையும் உறுதியான கம்பியினால் இணைப்பான். அந்தக் கம்பியிலிருந்து அந்தப் பானையினைத் தொங்கவிட்டு அதனை நெருப்பிலிட்டுக் கொதிக்க வைப்பான். அந்தக் கம்பியின் கீழ் ஏழிடங்களில் நெருப்பு மூட்டப்படும். மூங்கில், கடலத்தி *(Archyranthes Emblica)* கொங்க (*Bauhinea variegata*) தென்னை, பலா, பாவட்ட *(Pavatta indica)* ஆகியவற்றின் விறகுகளே நெருப்பு நன்கு எரியப் பயன்படுத்தப்பட வேண்டும். பானையில் உள்ள கலவை விரைவில் கொதிக்கத் தொடங்கி எண்ணெய் பசை கோத்ததாக ஆகும். அச் சமயத்தில் அதனை மெல்லிய துணியிலிட்டுக் கசக்கிப் பிழிவான். அப்போது வெளிப்படும் எண்ணெயினைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அதில் நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டால் அவர்கள் நினைத்த காரியம் கைகூடும். இதனைச் செய்யும் மாந்தீரிகன் இருபத்தொரு நாள்களுக்கு விரதம் மேற்கொண்டவனாகச் சாமைக் கஞ்சி மட்டுமே குடித்துவர வேண்டும்.

" பாணான்கள் நிகழ்த்தும் மற்றுமொரு சடங்கு துகில் உணர்த்துக. (ஒரு வகை முரசை துயில் எழுப்பல்) ஆடி மாதத்தில் பாணானும் அவன் மனைவியும் முரசையும் கைத்தாளத்தையும் முழக்கியவர்களாக நள்ளிரவில் பிராமணர்கள், நாயர்கள் ஆகியோர் இல்லங்களுக்குச் சென்று பக்திப் பாடல்களைப் பாடுவர். அந்த மாதத்தில் அவர்கள் திருச்சூர் கோயிலின் மேற்கு வாயிலின் அருகே உள்ள ஆலமரத்தடியிலும் நின்று பாடுவர்.

இதற்காக இவர்கள் கோயில் அதிகாரிகளிடமிருந்து ஐந்துபடி நெல், அரைப்படி அரிசி, கொஞ்சம் வெண்ணெய், ஒரு தேங்காய் ஆகியனவற்றைப் பெறுவர். மற்ற வீடுகளின் முன் நின்று இவர்கள் பாடும் பணிக்காகவும் இத்தகைய அன்பளிப்புக்களைப் பெறுவர். இல்லங்களில் தீய ஆவிகள் உறையுமானால் அவற்றை ஓட்டவே இச்சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. இவர்கள் நடத்தும் மற்றொரு சடங்கு பாணான் களி. இது பற்றிய நடைமுறையாகக் கூறப்படும் விவரங்கள் வருமாறு:- ஒரு முறை ஒரு பாணானும் அவன் மனைவியும் குடைகள் கட்ட மூங்கில் கொண்டுவரக் காட்டுக்குச் சென்றனர். வழி தவறிவிட்ட காரணத்தாலும் இரவு வந்து விட்டதாலும் அவர்களால் திரும்ப வர முடியவில்லை. காட்டில் கேட்ட பலவகையான ஒலிகளால் அவர்கள் அஞ்சத் தொடங்கினர். உலர்ந்த மூங்கில்களையும் இலைகளையும் திரட்டி நெருப்பு மூட்டினர். அந்த வெளிச்சத்தில் பாணான் மனைவி மரத்திலிருந்து தொங்கிய ஒரு கொடியினைப் பிடித்தவளாக அவள் கணவன் பாட்டுக்கேற்ப பகவதியினைச் சிறப்பிக்க ஆடினாள். பொழுது புலர்ந்த பின் அவர்கள் எத்தகைய தீங்கும் இன்றி இல்லம் வந்து சேர்ந்தனர். இதன் நினைவாகப் பாணான்கள் ஒரு ஆட்டம் நிகழ்த்துகின்றனர். இதில் பத்து ஆண்களும் இரண்டு பெண்களும் பங்கு பெறுவர். ஆட்டம் விடிய விடிய நடைபெறும்.

"பாணான்களின் சமயம் தீய ஆவிகள் அனைத்தையும் வழிபடுவதை உள்ளடக்கியதாகும். மூக்கன், சாத்தன், சுப்பிரி, மலங்கொரத்தி, காளி ஆகியன இவர்களுடைய முக்கிய தேவதைகள். சித்திரை, ஆடி மாதங்களின் முதல் நாளன்றும் தசராவின் போதும், தை மாதத்தில் செவ்வாய்க் கிழமைகளிலும் இவர்கள் அவற்றுக்குப் பூசை செய்வர். இத் தெய்வங்களின் உருவங்களாக மரங்களின் அடியில் கற்களை வைத்திருப்பர். மேற்குறிப்பிட்ட நாள்களின்போது அவற்றைக் குளிப்பாட்டி, மறி, கோழி ஆகியவற்றைப் பலியிடுவதோடு மலர், வாழைப்பழம், தேங்காய், பொங்கல் ஆகியனவற்றையும் படைப்பர். தேவதைகள் எப்பொழுதும் தீங்கிழைக்கும் இயல்பின என நம்பும் இவர்கள் படையல்கள் இட்டே அவற்றின் சினத்தைத் தவிர்க்க வேண்டும் என்பர். மூதாதையர்களின் ஆவிகளையும் பாணான்கள் வழிபடுகின்றனர். அவர்களை இல்லங்களின் தெய்வமாக வைத்து வழிபடுவதுடன் ஆபத்துக்களின்போது அவர்களின் உதவியினையும் நாடுவர். அமாவாசை, ஏகாதசி ஆகிய திதிகளின்போது இரவில் விரதம் மேற்கொள்வர்.

" பாணான்கள், செறுமான்களைவிட உயர்ந்தவர்களான, தீட்டுப்படுத்தும் சாதியாருக்கு அம்பட்டர்களாகப் பணியாற்றுகின்றனர். தடை கட்டுவதே இவர்களுடைய பரம்பரைத் தொழில். பயிர்த்தொழில் கூலிகளாகவும் இவர்கள் பணியாற்றுகின்றனர். கிராமங்களில் மண்ணால் சுவர்கள் வைப்பர். இவர்கள் சாதிப் பெண்கள் பேறு பார்க்கும் மருத்துவச்சிகளாகப் பணிபுரிகின்றனர்.

"பிராமணர், நாயர், கம்மாளர், ஈழவர் ஆகிய சாதியாரிடம் உணவு பெற்று உண்கின்ற சமூகப் படிநிலையில் இவர்கள் உள்ளனர். பிராமணர்களை நெருங்காது முப்பத்திரண்டு அடிக்கு அப்பால் இவர்கள் நிற்றல் வேண்டும். பாணானும் கணியன்களும் ஒருவரை ஒருவர் தீட்டிற்கு உள்ளாக்குகின்றனர். ஒருவரை ஒருவர் தொட நேர்ந்தால் இருவருமே குளித்துத் தீட்டுப் போக்குவர். இவர்களே, இவர்கள் சாதிக்குரிய வண்ணாராகவும் அம்பட்டர்களாகவும் தொழில் புரிகின்றனர். ஈழவர்கள் வாழும் பகுதிகளில் வாழ அனுமதிக்கப்படும் இவர்களை, நாயர்கள் தங்கள் தரையுள் (குடியிருப்புப் பகுதி) அனுமதிப்பதில்லை. கம்மாளர்களின் கிணற்றிலிருந்தும் இவர்கள் தண்ணீர் எடுக்க முடியாது. பிராமணர்களின் கோயில்களில் வெளிச்சுற்றில் நுழைய இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பாலக்காட்டில் பிராமணர்கள் தெருக்களில் புகவும் இவர்களை அனுமதிப்பதில்லை. "

1891 கணக்கெடுப்பு அறிக்கையில் பாணான் என்பது பறையரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. தோலில் பணிபுரியும் இந்தப் பாணான்கள் முரசுகளுக்கான தோல்களைத் தயாரிக்கின்றனர்.*

பனசர்: Panasa

கம்சாலரிடமிருந்து மட்டும் இரக்கும் தெலுங்குநாட்டைச் சேர்ந்த இரவலர் பனசர். பனசம் என்பது திரும்பத் திரும்ப ஒன்றையே கூறுதல் எனப் பொருள்படும் சொல். பட்ராசர்களைப் போலவே இவர்களும் தங்கள் புரவலர்களின் புகழ்பாடிகளாகவும் கட்டியங் கூறுபவர்களாகவும் இருந்திருக்க வேண்டும் என்பதனை இச்சொல் புலனாக்குகின்றது. கர்நூல்

*எ. சாட்டெர்டன். தோல் பதனிடல் தோல் தொழில் தொடர்பான தனிக்கட்டுரை. (A Chatterton. Monograph on Tanning and Working in Leather, 1904.)

மாவட்டக் கையேட்டில் (1886) இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:– "பனசர் பேரி கோமட்டிகளிடமிருந்தும் கம்சாலர் (பொற்கொல்லர்) களிடமிருந்தும் மட்டுமே இரத்தலை மேற்கொள்கின்றனர். கோல்கொண்டாவில் பச்செரு வாரு என்ற கோமட்டிப் பிரிவினர் வரி செலுத்தாமைக்காகச் சிறையில் அடைக்கப்பட்டனர். தெருவழியே கொல்லர் வகுப்பார் சிலர் வெற்றிலைத் தாம்பூலத்தை மென்று உமிழ்ந்தபடி செல்ல இவர்கள் அதனை எடுத்துத் தங்கள் வாயில் இட்டவர்களாகத் தங்களைச் சிறையிலிருந்தும் விடுவிக்க உதவும்படி வேண்டினர். இவர்கள்மீது இரக்கங்கொண்ட அக் கைத்தொழில் வினைஞர்கள் வரி பாக்கியினைச் செலுத்தி இவர்களை விடுவித்தனர். அச் சமயத்திலேயே கம்சாலர், பனசர் பிழைப்புக்காக என வீடு ஒன்று, ஆண்டுக்கு இவ்வளவு தருவது என்ற வார்த்தையினை ஏற்படுத்தினர். அப்போது பனசர் வேறு சாதியாரிடம் சென்று இரத்தல் கூடாது எனவும் ஏற்பாடு செய்யப்பட்டது. தங்களுக்குரிய தொகையினைப் பெற்றுச் செல்லப் பனசர் ஆண்டுதோறும் கர்நூல் மாவட்டத்திற்கு வருகின்றனர்.

பாஞ்ச - Pāncha

ஐந்து எனப் பொருள்படும் இது பாஞ்சலிங்க பலிசரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. பாஞ்ச சாரர் அல்லது பாஞ்சசாலேயர் லிங்காயதர்களின் ஓர் உட்பிரிவினராவர். . இவற்றுள் எல்லாம் பாஞ்சு என்பது லிங்காயதர் மேற்கொள்ள வேண்டிய ஐந்து ஆசாரச் சடங்குகளைக் குறிப்பதாகவே பொருள்படும். இந்த ஆசாரங்கள் இடத்திற்கு இடம் வேறுபடுவன. லிங்கம் அணிதல், உண்ணும் முன் அதனை வழிபடுதல், ஜங்கமங்களுக்கு மரியாதை செலுத்துதல் என்பன அவற்றுள் அடங்குவன.

பாஞ்சாலர் - Pānchāla

கன்னடம் பேசும் கம்மாளருக்கான மற்றுமொரு பெயர். இவர்கள் பொன், வெள்ளி, பித்தளை, செம்பு, இரும்பு, கல் ஆகியனவற்றில் தொழில் செய்யும் ஐந்து பிரிவினராக உள்ளனர்.

பாஞ்சலிங்க: - Panchalinga (five lingams)

போயர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய ஒரு குலம். லிங்கம் சிவனைக் குறிக்கும் அடையாளமாகும்.

பஞ்சமர் - Panchama

1871 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பஞ்சமர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:– "தங்களை ஐந்தாம் சாதியார் என்று கூறிக் கொள்பவர்களுக்கான பெரிய சாதிப்பிரிவு. புச்சனும் பிற கட்டுரையாளர்களும் இவர்களைப் பஞ்சம் பண்டம் எனக் குறிப்பிட்டுள்ளனர்." புச்சனன் கூற்றுப்படி, ",* "பறையர், பள்ளன், சக்கிலியர், தோட்டி ஆகிய நான்கு பிரிவினரும் பஞ்சம் பண்டும்" ஆவர். பஞ்சம் பணசிகரு, பஞ்சம கும்பகாரு (குயவர்) பற்றியும் புச்சனன் குறிப்பிட்டுள்ளார். 1893 வரை பொதுக் கல்வி இயக்குநரகத்தால் பஞ்சமர், பறையரும் அவர்களைச் சேர்ந்தோரும் எனக் குறிக்கப்பட்டு வந்தனர். இந்தப் பிரிவு வசதி கருதிப் பஞ்ச என அதன்பின் மாற்றுப் பெயர் பெற்றது. சச்சாடியர், கொதாரிகள், புலையர், ஹொலையர், மாதிகர், மாலர், பள்ளர், பறையர், தோட்டி, வள்ளுவன் ஆகியோர் பஞ்சமர் என்ற பிரிவில் அடங்குவர். "பல சாதியினரையும் சுருக்கம் கருதி ஒரு எளிய பெயரால் அழைக்கலாம் என்பதனை அரசு கருதிப் பார்க்க வேண்டும். பறையர் என்ற தீண்டத் தகாதவரான தாழ்ந்த சாதியாருக்குரிய சொல் இழிவுடையதாகவும் பொருந்துவதாகவும் உள்ளது. பஞ்சம பாண்டோ என்பதோ அதனை விடவும் சுருக்கமானது பஞ்சம என்பதோ இவர்களைக் குறிக்கப் பொருத்தமான பெயராக இருக்கும் எனக் கருதுகின்றேன்" என 1902 – இல் பொதுக்கல்வி இயக்குநர் அரசுக்கு எழுதி அனுமதி வேண்ட அரசு, 'பறையரும் அவர்களைச் சேர்ந்தோரும்' என்பதற்குப் பதிலாகப் பஞ்சம பந்தம் அல்லது பஞ்சம் என்ற வழக்கினை மேற்கொள்ள அனுமதி வழங்கியது. இவர்களை ஐந்தாம் வருணத்தார் என அழைப்பதே தக்கதாக இருக்கும் எனவும் அப்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

பஞ்சமர் என்ற பிரிவினுள் அடக்கப்பட்டுள்ள பல சாதியினருக்கும் பின்வரும் கல்விச் சலுகைகள் வழங்கப்பட்டன என்பதனையும் இங்குக் குறிப்பிடலாம்:–

1. வழக்கமான கல்விக் கட்டணத்தில் பாதித்தொகை பெற்றுக்கொண்டு இவர்களைப் பள்ளியில் சேர்க்கலாம்.

---

*மைசூர் முதலியவற்றின் வழியான பயணம், 1807.
(Journey through Mysore ect. 1807.)

2. அண்மையில் கைவிடப்பட்டதான முடிவுகளின் அடிப்படையிலான உதவித்தொகை வழங்குதல் பஞ்சமருக்கு மற்றவர்களைவிட 50 விழுக்காடும் பிற்பட்ட பகுதிகளில் மேலும் 15 விழுக்காடும் கூடுதலாக வழங்குதல்.

3. வருகைப்பதிவின் அடிப்படையில் உதவித் தொகை பெறுதலலிருந்தும் பஞ்சமர் பள்ளிகளுக்கு விதிவிலக்குத் தருதல். வருகை எவ்வளவு குறைவாயினும் அவை உதவித் தொகைக்குரியன. மற்றப் பள்ளிகள் உதவித் தொகை பெறப் பத்துப் பேராவது வருகை தந்திருத்தல் வேண்டும்.

4. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெறும் பஞ்சமர்கள் மற்ற இந்துக்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு உதவித்தொகை பெறுவதற்குரியர்.

ஒலவக் கோட்டினைச் சேர்ந்த பஞ்சமருக்கான கட்டணம் ஏதும் செலுத்தப்பட வேண்டாத பள்ளியில் எவ்வாறு கல்வி தரப்படுகின்றது என்பது பற்றிய சுவையான விவரங்கள்* திருமதி கோர்ட் ரைட் அம்மையாரால் தரப்பட்டுள்ளது.

1891 மற்றும் 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் பஞ்சம என்பது பலிசர், பணசிகர் சாதிகளுக்கான உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது.

பந்தமுட்டு:- Pandamuttu

பள்ளியரின் ஓர் உட்பிரிவு. தீப்பந்தங்களை யானை உருவில் அமைத்தல் என இது பொருள்தரும் என வின்சுலோ கூறியுள்ளார். எனினும் பள்ளியர் இது திருமணப்பந்தலைச் சென்று தொடும் அளவிற்கு உயரும்படியாக (பந்தலை முட்டும்படியாக) மணப்பானைகளை அடுக்கும் பிரிவினரைக் குறிக்கும் என்பர். இப் பானைகளுள் அடியில் இருப்பவை யானை, குதிரை ஆகியவற்றின் உருவங்களால் அலங்கரிக்கப்பட்டனவாக அமைக்கப்பட்டு இருக்கும்.

பண்டாரம்:- Pandāram

"பண்டாரம் என்பது ஒரு தொழிலை மேற்கொண்டவர்களுக்கான பெயராகுமேயன்றி ஒரு சாதிக்கு உரிய பெயராகாது. பிராமணரல்லாத

*பறையருக்கு எப்படி நாங்கள் கற்றுக் தருகிறோம். 3ஆம் பதி.சென்னை, 1906 (How we teach the Paraias. 3rd ed., Madras 1906.

பூசாரிகளைக் குறிக்க இது பயன்படுத்தப்படுகின்றது. சைவர்களாக உள்ள சூத்திர சாதிகளிலிருந்து பலரும் பண்டாரம் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவர்கள் பக்தி நெறிப்பட்டவர்களாக இரந்துண்டு திரிவர். ஒழுக்கக்கட்டுப்பாடு என்பதனையும் மேற்கொள்ளாது உயர்சாதிச் சூத்திரர்கள் தரும் மதுவினை அருந்துதல், ஊனினை உண்ணுதல் போன்ற பழக்கத்திற்கு இவர்கள் அடிமைப்பட்டவர்கள், என்பதுதான் உண்மை. சிவன் கோவில்களில் லிங்கத்தை அலங்கரிக்கும் மாலையினைக் கட்டித் தரும் பணியும் பூசை வேளையிலும் உர்வலங்களின்போதும் பித்தளைக் கொம்புகளை ஊதும் பணியும் இவர்களுக்கு உரியனவாக உள்ளன. திருத்தணி இவர்கள் கூடும் இடங்களுள் முக்கியமானதாகும்" எனப் பண்டாரங்களைப் பற்றி திரு.எச்.எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட விவரக் குறிப்பில் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- இரத்னகிரியில் உள்ள தெய்வத்தைத் திருமஞ்சன மாட்ட நாள்தோறும் காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் பணியினைத் திருமஞ்சனப் பண்டாரம் என்ற பிரிவினர் ஏற்றுள்ளனர். இவர்கள் தாங்கள் ஆர்ய அரச மரபில் வந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். இந்தத் தெய்வத்திடமிருந்து இரத்னங்களைப் பெற வந்த ஆரிய அரசனின் பக்தியினைச் சோதிப்பதற்காக ஒர பிராமணன் உருவில் வந்த இக் கோயில் தெய்வம் ஒரு பாத்திரத்தைக் காவேரியிலிருந்து கொண்டு வரும் தண்ணீரால் நிரப்பும்படி கூறியது. மாயப் பாத்திரமான அது எவ்வளவு தண்ணீர் ஊற்றியும் நிரம்பாததால் கோபம் கொண்ட அவன் அந்தப் பிராமணன் தலையினை வெட்டினான். உயிர் பிரிந்த அவன் உடல் உடனே ஒரு லிங்கமாக உருக் கொண்டது. இதனால் அந்த ஆர்யன் எப்போதும் கோயிலுக்குத் தண்ணீர் சுமக்கும்படியாயிற்று."

பண்டாரம் என்பது ஒரு சாதிக்குரிய பெயராகவும் பல சாதிகளிலிருந்தும் (வேளாளர் பள்ளியர் போன்றவற்றிலிருந்து) தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பாருக்குரிய பெயராகவும் வழங்கி வருகின்றது. பண்டாரம் என்ற சாதி, நிலவுடமையாளர்களான மதிப்பு வாய்ந்த பிரிவினரையும் சில மடங்களைச் சேர்ந்த சந்நியாசிகளையும் பூசாரிகளையும் தஞ்சாவூர் திருவாவடுதுறையிலும் தென் ஆர்க்காட்டில் மைலத்திலும் உள்ள செல்வச் செழிப்புள்ள ஆதினங்களில் மேலாளர்களையும் குறிக்கும்

பெயராகவும் உள்ளது. பண்டார சாதியினைச் சேர்ந்தவர்கள் சைவ நெறியில் உறுதியான பற்றுடையவர்களும் இறைச்சியினை விலக்கியவர்களுமாவர். மணம் புரிந்து கொள்ளாது துறவிகளாக உள்ளவர்கள் லிங்கம் அணிகின்றனர். பண்டாரங்கள் முதலில் சோழிய வேளாளராக இருந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. இன்றும் அச் சாதியாரோடு பண்டாரங்கள் மண உறவு மேற்கொள்கின்றனர். பண்டாரங்கள் தீக்கை அளிக்கப்பட்டுச் சைவ நெறியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சமயம் நிர்வாணம், விசேஷம், கலா சோதனை, ஆச்சாரிய அபிஷேகம் எனத் தீக்கை ஐந்து வகைப்படும். இவர்களுள் சிலர் கோயில் பணியாளர்கள். கோயில் வழிபாட்டிற்கு மலர் மாலைகள் தருவதும், கோயிலில் வழிபாடு நடக்கும்போது தேவாரம் ஓதுவதும் இவர்கள் பணியாகும். இப் பணிகள் காரணமாக இவர்கள் மெய்க்காவூர் எனவும், ஓதுவார் எனவும் அழைக்கப்படுகின்றனர். சாதிப்பண்டாரங்களுள் அபிடேகத்தார், தேசிகர் எனவும் இரு பிரிவினர் உள்ளனர். தேசிகர் என்பது அடிக்கடி பட்டப் பெயராகவும் கந்தசாமி தேசிகர் என்பது போலப் பயன்படுத்தப்படுகிறது. சைவ ஆகமங்களின்படி சடங்குகளைச் செய்து கொண்டவர்கள் அபிடேகப் பண்டாரங்கள்.

பிச்சை எடுக்கும் பண்டாரங்களின் சாதியில், பிற சாதிகளிலிருந்து பலரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். லிங்கம் அணியும் இவர்கள் ஊன் உண்டலைத் தவிர்ப்பதில்லை. பெரும்பாலான கிராமங்களில் கிராம தேவதைகளின் கோயில்களில் பண்டாரங்கள் பூசாரிகளாக உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் லிங்கம் கட்டிக் கொண்டு, அதன்பின் பண்டாரமான பள்ளி சாதியினராகவே இருப்பர். இரவலர் பண்டாரச் சாதியினைச் சேர்ந்த பெண்களுள் சிலர் பரத்தையராகத் தொழில் நடத்திப் பிழைப்பதாகத் தெரிகின்றது.

லிங்காயதப் பண்டாரங்களுக்கு லிங்காயத சமயப் பிரிவினருக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. பின்னவர் தங்கள் ஜங்கமங்களுக்கு மரியாதை செலுத்துவதோடு அவர்கள் பாதங்களை அலம்பிய நீரால் தாங்கள் அணிந்துள்ள லிங்கங்களைக் குளிப்பாட்டுவர். தமிழ்நாட்டு லிங்காயதரான பண்டாரங்கள் இதனை மிகப் பெரும் பாவச் செயலாகக் கருதுவர். கன்னடம், தெலுங்கு பகுதிகளுக்குரிய லிங்காயதர் தாங்கள் அணிந்துள்ள கல்லாலான லிங்கத்தைவிட ஒரு ஜங்கம் உயர்ந்தவர் என்ற கோட்பாட்டின் வழிப்பட்டவர்கள். தமிழ்நாட்டு லிங்காயதர் தீட்டுப் போக்கும் சடங்குகளில்

மிகவும் ஆர்வம் காட்டுவர். மரபு வழிப்பட்ட லிங்காயதர்கள் தீட்டு எதனையும் மேற்கொள்வதில்லை. கன்னட லிங்காயதர்களிடையே இருப்பது போலத் தமிழ் லிங்காயதப் பிரிவினர் லிங்கம் அணிவிக்கும் சடங்கினைச் சிறு வயதிலேயே நடத்திவிடுவதில்லை.

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.சி. ஹயவதனரா்விற்குக் கடப்பாடுடையேன். "முனைவர். எச்.வில்சன், பண்டாரம் என்ற சொல் விபூதிகளை உடலில் பூசிக் கொண்டு வெளுத்த தோற்றம் உடையவர்களாகக் காட்சிதரும் பண்டாரங்க என்ற சொல்லோடு தொடர்புடையதாக வேண்டும். ஹேமச் சந்திரர் எழுதியுள்ள மகாவீரர் சரிதத்தில் சைவப் பிராமணர்களைப் பற்றிக் கூறும்போது இச் சொல் இப் பொருள்படக் கூறப்பட்டுள்ளது. அரசுக் கருவூலத்தைக் குறிக்கும் பண்டாரம் என்ற சொல்லிலிருந்து இச் சொல் வந்ததாகக் கொள்வதே பெரும்பாலானவர்கள் கருத்தாகும். வசதிபடைத்த பண்டாரங்கள் பலர் தென்னிந்தியாவில் சிவன் கோயில்களின் கருவூலக் காப்பாளர்களாக உள்ளனர். இச் சாதியினர் பண்டாரம் என்றழைக்கப்படும் பொடியினை ஒரு சிறு பெட்டியில் வைத்துள்ளவர்களாகத் தங்களுக்கு இடப்படும் பிச்சைக்குப் பதிலாகப் பிச்சையிடுபவர்களுக்கு வழங்கி வருவதால் இப் பெயர் பெற்றவர்களாதலும் கூடும்."

பண்டாரங்கள் லிங்காயதர்களா இல்லையா என்பது பற்றியான கருத்து வேறுபாடுகள் உள்ளன. திருவள்ளுவரின் திருக்குறளை மொழிபெயர்த்தவரும் சிறந்த தமிழறிஞருமான எப்.டபிள்யூ.எல்லீஸ் அவர்களின் கருத்தைக் கர்னல் வில்க்ஸ் பின்வருமாறு தொகுத்துக் கூறுகின்றார்:- "ஜங்கம்கள் தெலுங்கு, கருநாடகப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள், பண்டாரங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். (முன்னவர்கள் வடக்கத்தியார். பின்னவர்கள் தெற்கத்தியார்) எனினும் இருசாராரும் பெயரால் வேறுபட்டிருப்பினும் கடைப்பிடிக்கும் கோட்பாட்டால் ஒன்றானவர்களே என்பதனை அந்த இரு சாராருமே உறுதியோடு மறுப்பர் எனத் திரு.எல்லீசு கருதுகின்றார்." மெக்கென்சி தொகுதியில் அடங்கியுள்ள கையெழுத்துப் பிரதியொன்றில் பண்டாரங்களின் தோற்றம் பாண்டிய நாட்டில் மதுரையில் சைவ சமண சமயங்களிடையேயான பூசலின் போதும் அதனை அடுத்துச் சமணர்களுக்கு எதிராகப் போரிட்ட பிராமணர்களுக்கு, ஒரு சாரார் தந்த ஆதரவின் அடிப்படையில் தோன்றிய, அவர்களை

மேம்படுத்தப் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட பிரிவாகும் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும் இது மேலும் உறுதிப்படுத்தப்படுவதற்கு உரியது. தென், வட ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள வரவு செலவு முழுவதும் மேலாண்மை நடத்தும் பண்டாரங்களுக்கு உரியதாக இருக்கக் கோயில் சடங்குகளைப் பிராமணர்கள் தங்கள் விருப்பம்போலப் பண்டாரங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக நடத்தி வருகின்றனர். பெரும்பாலும் குறை காணமுடியாத வகையில் வாழ்ந்துவரும் இவர்கள் கோயிலைச் சேர்ந்த பிராமணர்களால் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்படுகின்றனர். தங்களிடம் கொண்டு வரப்படும் சிறு வழக்குகளைக் கேட்டுத் தீர்த்து வைப்பதில் இவர்கள் கருத்துடையவர்களாக உள்ளனர். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது முன்பு எப்போதோ நிகழ்ந்த கிளர்ச்சியொன்றில் ஜங்கம அமைப்பு, பிராமணர்களின் அமைப்பினை வெற்றிகொண்டு அவர்களுடைய அதிகாரங்களில் பெரும்பங்கைத் தங்களுடையதாக்கிக் கொண்டிருக்க வேண்டும் எனக் கருத இடந் தருகின்றது. சூத்திரர்கள், பிராமணர்களின் ஆன்மீகத் துறை சார்ந்த நிலையங்களுக்குத் தலைவர்களாகவுள்ள புதுமையானதொரு இந்த அமைப்புமுறை மேலும் வரலாற்றியல் நோக்கோடு ஆய்வதற்குரியது."

முனைவர். வில்சனும் பண்டாரங்கள் லிங்காயதர் என்றே கருதுகின்றனர். திரு.எச்.எ.ஸ்டுவர்ட் 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பண்டாரங்கள் பிராமணரல்லாதாரின் ஆன்மீக வழிகாட்டிகள் எனக் கூறுகின்றார். இவர்கள் தங்களுள் 115 உட்பிரிவுகள் உள்ளதாகப் பதிந்திருப்பினும் இரண்டு பிரிவுகளே குறிப்பிடத்தக்க வகையில் எண்ணிக்கையில் மிகுதியானவர்களைக் கொண்டவை. மலபாரையும் திருநெல்வேலியையும் சேர்ந்த ஆண்டி, செங்கல்பட்டு, திருநெல்வேலி பகுதிகளைச் சேர்ந்த லிங்கதாரிகளே அவ்விரு பிரிவினர். எல்லா சாதிகளிலிருந்தும் சேர்த்துக் கொள்ளப்படும் இரத்தலை ஒரு பகுதி சாதித் தொழிலாக மேற்கொண்டவர்கள் ஆண்டிகள். லிங்கதாரி பண்டாரங்கள் ஜங்கமங்களை ஒத்தவர்கள். பண்டாரம் என்பது உண்மையில் ஒரு வகுப்பாருக்கு உரிய பெயரேயன்றிச் சாதியாருக்குரிய பெயரன்று. அதில் பூசாரிகளும் பிச்சைக்காரர்களும் ஒரு சேர இடம் பெற்றுள்ளனர். திரு.பி.சி பிரௌன் பண்டாரங்கள் லிங்காயதர்களிலும் வேறுபட்டவர்கள் எனக் கருதுகின்றார். தமிழ்ப்பேசுவோரான சிவனை வழிபடுவோர் பண்டாரங்கள் எனப்படுகின்றனர். இவர்கள் வீரசைவர்கள் அல்லர். லிங்கம்

அணிவதனையோ பசவரைப் போற்றுவதனையோ இவர்கள் மேற்கொள்வதில்லை. இங்கு இவர்களைப் பற்றி நான் கூறுவதற்குக் காரணம் இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் இவர்களைத் தவறாக வீர சைவர்கள் எனக் குறிப்பிடும் வழக்கிருப்பதாலேயாகும். உண்மையில் இவர்கள் ஸ்மார்த்தர்களைப் போலப் பூர்வ சைவ நெறியினைப் பின்பற்றியவர்களாகத் தங்கள் இல்லங்களிலேயே சிவனை வைத்து வழிபடுகின்றனர். திரு. பிரௌன் பண்டாரங்களைப் பற்றிக் குழப்பமான கருத்துடையவராக இருப்பதாகத் தெரிகின்றது. பண்டாரங்கள் எதாவது ஒரு வகையில் தங்கள் உடம்பில் லிங்கம் தரித்தவர்களாக, லிங்காயத நெறியினை மேற்கொண்டுள்ள மற்றவர்களுக்குப் புரோகிதர்களாக இருப்பதோடு, சாவுச் சடங்குகள் முதலான சடங்குகளின் போது மற்றவர்களால் உண்பிக்கப்படுபவர்கள். இவர்கள் – குறிப்பாக இரந்துண்ணுதலை மேற்கொண்டுள்ள பிரிவினர் – தங்கள் உணவுப் பழக்கங்களில் கட்டுப்பாடு ஏதுமற்றவர்களாக உள்ளனர் என்பதனையும் இத்தோடு வைத்து எண்ணிப் பார்க்கவேண்டும். இதுவே சமய நெறியில் உறதியான பற்றுடைய லிங்காயதர்களிலிருந்து இவர்களை வேறுபடுத்துவதாகும். இத்துடன் லிங்காயதர்கள் தங்கள் பிரிவைச் சேர்ந்த கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிக்கின்றனர் என்பதனையும் பண்டாரங்கள் அவ்வாறு அனுமதிப்பதில்லை என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

"பண்டாரங்கள் தமிழைப் பேசுகின்றனர். மணம் செய்து கொள்வோர், மணம் புரியாதவர்களாகத் துறவு மேற்கொள்வோர் என இவர்களிடையே இருபிரிவினர் உள்ளனர். முன்னவர்களே எண்ணிக்கையில் மிகுதியானவர்கள். இந்துக்கள் வழக்கப்படி முன்னவர்கள் உடை உடுத்துவதோடு தலைமுடியினைக் குடுமியாக முடிந்து கொள்வர். துறவறத்தை மேற்கொண்டவர்கள் காவியுடை புனைவதோடு உடல் முழுதும் விபூதியினைப் பூசியவர்களாகத் தலைமுடியினைச் சடையாகும்படி விட்டுவிடுவர். காலில் இரும்புக் கம்பிகள் பதிக்கப்பட்ட மரக்கட்டைப் பாதகுறடு அணிந்து, கையில் திரிசூலமும் தண்டமும் (சிவனுக்குரிய அடையாளச் சின்னங்கள்) தாங்கித் திரிவர். தங்கள் பிச்சைப் பாத்திரத்தில் ஒரு பக்கத்தில் துளையிட்டுப பொருத்தப்பட்டுள்ள சங்கிலியினைக் கொண்டு அதனை அடித்து ஒலி எழுப்புவர். மணம் செய்து கொண்ட பண்டாரங்களும் இரத்தலை மேற்கொள்வர் எனினும் வெண்கலச்

சேகண்டியினை மரத்தாலான கோல் கொண்டு தட்டிச் செல்வதே இல்லறதாரரான பண்டாரங்களின் பழக்கம். இந்த பண்டாரங்கள் சென்னை மாநிலத்தில் உள்ள திருத்தணி, பழனி, திருவண்ணாமலை, திருப்பரங்குன்றம் போன்ற புகழ்பெற்ற புண்ணியச் சிவத் தலங்களுக்குப் புனிதப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து கோயில்களில் வேண்டியவற்றை முடித்துக் கொடுப்பர். இருபிரிவினருமே லிங்காயதர்களைப் போல இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில் வைத்துப் புதைக்கின்றனர். புதைகுழியின் மேல் ஒரு சமாதியினைக் கட்டி அதில் சிவலிங்கம், நந்தி ஆகியனவற்றை வைத்து இயன்ற போதெல்லாம் அவற்றை வழிபடுவர்."

கோயில்கள், சமயத் தலைமை மடங்கள் ஆகியவற்றின் மேலாண்மையாளராக உள்ளவர்கள் பண்டார சன்னதிகள் எனப்படும் துறவற வாழ்க்கையினை மேற்கொண்டவர்களாவர். இவர்கள் பெரும்பாலும் ஆகமங்கள், புராணங்கள் ஆகியவற்றில் நல்ல பயிற்சியுடையவர்களாக இருப்பர். இவர்களுள் பலர் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களாக இருப்பதோடு சைவசிந்தாந்தத்திலும் நல்ல பயிற்சியுடையவர்களாக உள்ளனர். இவர்கள் தங்களைத் தம்பிரான் என அழைத்துக் கொள்வர். கல்வியறிவில்லாத பிச்சைக்காரர்களும் இந்தப் பட்டத்தைத் தங்களுக்கு உரியதாகத் தரித்துக் கொள்வதுண்டு."

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் வைராளி என்பது பண்டாரம் சாதியின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. இப்பிரிவினரைத் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமே காணலாம். அங்கு இவர்கள் தானியங்களை அளக்கும் பணியாளராகவும் கிராமத்துக் கோயில்களில் பூசாரிகளாகவும் இருந்து வருகின்றனர். மேளக்காரன் சாதியினைச் சேர்ந்தவர்களும் வைராளி என்பதனைத் தங்கள் சாதிக்காரர்களுக்குரிய பெயராகக் கூறுகின்றனர். இவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டிகளுக்குரிய கோயில்களில் பணியாளர்களாக உள்ளனர்.

பறையர்களின் பூசாரிகளான வள்ளுவனுக்கும் பனிசன்களுக்கும் பண்டாரம் என்பது பட்டப்பெயராகும்.

மலைப்பண்டாரங்கள் என்ற வகுப்பாரைப் பற்றி மறைத்திரு. எஸ்.மட்டீர் தந்துள்ள விவரங்கள் வருமாறு:- "ஆடைகள், கருவிகள், குடியிருப்புக்கள் ஆகிய எதுவுமற்றவர்களாகக் குகைகளிலும் பாறைகளிடையேயும் மரங்களிலும் வாழும் எளியர் இவர்கள். மெழுகு, யானைத் தந்தம் முதலிய காடுபடு பொருள்களை இவர்கள் அரையன்களிடம் தந்து உப்பினைப் பெற்றுச் செல்வர். கிழங்குகளைத் தோண்டியெடுத்தும் மலையாடு, காட்டுக்கோழி ஆகியவற்றைச் சுருக்கு வைத்துப் பிடித்தும் உண்பதோடு பாம்பு, எலி, மலைகளில் உள்ள குட்டைகளில் காணப்படும் முதலை ஆகியவற்றையும் தின்பர். ஆடையேதுமின்றி அழுக்கு மேனியராகத் திரியும் இவர்கள் மிகுந்த கூச்ச சுபாவம் உடையவர்கள். தனித்ததொரு முறையில் மலையாள மொழியினை உச்சரித்தவர்களாகப் பேசுவர். இரண்டாண்டு காலத்திற்குள்ளாக இவர்கள் குழுவைச் சேர்ந்த இருபத்திரண்டு பேர்களைப் புலிகள் அடித்துத் தின்றதாகக் கூறுகின்றனர்." மலையினத்தவர்களான இந்தப் பண்டாரங்களைப் பற்றி திரு.என்.சுப்ரமணிய அய்யர் பின்வருமாறு எழுதுகின்றார்:- மலையருவிகளின் கரைகளிலும் பாறையிடுக்குகளிலும் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் இவர்கள் வாழ்கின்றனர். சமவெளியில் வாழ்பவர்கள் இவர்களைக் காட்டு மனுஷர் என்று அழைப்பர். மரப்பட்டைகளை உடுத்துத் திரியும் இவர்கள் மழையும் குளிருமான பருவங்களில் தங்கள் உடலை வாழையிலைகளைக் கொண்டு பாதுகாத்துக் கொள்வர். கொச்சையாகத் தமிழைப் பேசும் இவர்கள் மற்றவர்களைக் கண்டவுடன் அஞ்சி ஒதுங்கிப் பதுங்கும் இயல்பினர். ஏல மலைகளில் குற்றவியல் நடுவராய் இருந்த ஐரோப்பியர் ஒருவர் ஒரு சமயம் இவர்களுள் சிலரைத் தன் இல்லத்திற்கு அழைத்து வந்து வைத்திருந்தார். அங்குத் தங்கியிருந்த மூன்று நாள்களும் இவர்கள் எதனையும் உண்ண மறுத்துவிட்டதோடு பேசவும் மறுத்துவிட்டனர். நான்கு மலைகளைச் சேர்ந்த இந்த இனத்தவர்களுக்கு ஒரு தலைவன் உள்ளான் எனினும் அவன் பெயரளவிற்கே அதிகாரம் பெற்றவனாக உள்ளான். பெண்களைத் திருமணம் செய்து தரும்போது பூமியினையும் மலைகளையும் அதற்குச் சான்றாக இருக்கும்படி கேட்டுக் கொள்வர். ராமன், கிட்டான் (கிருஷ்ணன்), கோவிந்தன் போன்று இந்துப் பெயர்களையே இவர்கள் தரிக்கின்றனர்.

---

* *திருவாங்கூர் வாழ் மக்கள்*

(Native Life in Travancore)

சில ஆண்டுகளுக்கு முன்பு திருவனந்தபுரத்தில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் திரு. ஓ. எச். பென்சுலே மலைப் பண்டாரங்களைப் பற்றிக் கூறியிருப்பதாவது:- மீன் பிடிப்பதில் திறமைசாலிகளான இவர்கள் பாறையின் மீது படர்ந்துள்ள வேர்களின் மீது மீன்களை இட்டு நெருப்பிலிட்டு அவற்றைச் சுடுவர். நாய்களை வளர்க்கும் இவர்கள் அவற்றின் உதவியோடு எலி, கீரி, காட்டுப்பல்லி போன்ற சுவையான ஊன் உணவுகளையும் பெறுகின்றனர். தலைமை அரையன் என்பவனைத் தங்கள் தலைவனாகக் கருதும் இவர்கள் தாங்கள் தேடிய காடுபடுபொருள்களை அவனிடம் தந்து தங்களுக்குத் தேவையான அரைகுறை ஆடைகளை அவனிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர் என எனக்குத் தெரிவித்தனர். இவர்கள் பண்டமாற்றுக்காக வந்திருந்தபோது இவர்களுடைய பொருள்களை ஆராயும் ஒரு வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. பிற மலைவாசிகள் பயன்படுத்துவது போன்ற அரிவாள். சமைப்பதற்கான மட்பாண்டங்கள். ஒரு மரத்தின் பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட மாவு (அதன் பெயரை ஆகூலம் என்பது போல உச்சரித்தனர்) ஆகியன இவர்கள் உடமைகளாக இருக்கக் கண்டோம். ஒரு பெண்ணைத் தவிர மற்றவர்கள் உருவத்தில் குள்ளமானவர்களாகவே இருந்தனர். தோற்றத்திலும் அறிவாற்றலிலும் இவர்கள் ஊராளிகளை ஒத்தவர்கள் எனலாம்.

பண்டாரியர் – Pandāiyar

பண்டாரியார் அல்லது பண்டாரத்தார். பண்டாரத்தின் (கருவூலத்தின்) காப்பாளர் எனப் பொருள்படும். நந்தமான், மலையமான், சுதர்மன் ஆகியோரும் இதனைத் தங்கள் பட்டமாகப் பதிந்துள்ளனர்.

பாண்டவகுலம் – Pāndava - kulam

இது பாண்டவர்களை வழிபடும் சாடபுகள், கொண்டதொரையர் ஆகியோர் தங்களைப் பாண்டவ மன்னர்களின் சாதியினைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்துப்படத் தரித்துக் கொள்ளும் பட்டம். பாண்டவர்கள் கௌரவர்களோடு பெரும்போர் நிகழ்த்திய மகாபாரதத்திற்குரிய வீரர்கள். இவர்கள் சந்திர குலத்தைச் சேர்ந்த சத்திரியர்கள். பாண்டவர்களுக்குத் திரௌபதி ஒருத்தியே மனைவியாக இருந்தாள். பள்ளியரான வன்னியர் இவளைச் சிறப்பித்து வழிபாடு நிகழ்த்தி விழாக் கொண்டாடி ஆண்டுதோறும் தீ மிதியும் நடத்துகின்றனர். பள்ளிகள் தங்களையும் அக்னி குலத்தைச் சேர்ந்த

சத்திரியர் எனக் கூறிக் கொள்வதோடு அக்னி கல சத்திரியர். வன்னிய குல சத்திரியர் எனத் தங்களைச் சிறப்பித்துக் கூறிக் கொள்கின்றனர்.

பன்றி – Pandi(pig)

அசிலி, போயர், கமல்லர் ஆகிய சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய குலமாகப் பதியப்பட்டுள்ளது. பன்றிபட்டு (பன்றியைப் பிடிப்போர்) பன்றி கொட்டு (பன்றியைக் கொல்வோர்) என்பன ஒட்டேகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலங்களாகப் பதியப்பட்டுள்ளன.

பண்டிதர்: Pandito

பண்டிட், புண்டிட், பண்டிதர் என்பன கற்றவர் என்ற பொருளைத் தருவனவேனும் "இது வடமொழி கற்றவர்களைக் குறிப்பதற்கே சிறப்பாக உரிய சொல்லாகும். உச்ச உயர்நீதிமன்றத்தின் பண்டிட் இந்து சட்டங்களை விளக்கும் அலுவலர் ஆவார். ஆங்கிலேய நடுவர்களுக்குத் தேவையானபோது இந்து சட்டங்கள் தொடர்பான ஐயங்களைத் தீர்த்து வைப்பது இவர்கள் கடமையாகும். 1862 – இல் உயர்நீதி மன்றங்கள் நிறுவப்பட்டபின் இந்தப் பதவியின் காலம் முடிவடைந்தது. மகாராட்டிரத்திலும் தெலுங்கு நாட்டிலும் பண்டிட் என்பதனைப் பண்ட் என்றே உச்சரிப்பது வழக்கமாக உள்ளது. (ஆங்கிலத்தில் பேச்சு வழக்கில் புண்ட் என்பர்.) மேலே குறிப்பிட்ட மாநிலங்களில் பண்ட் என்பது பிராமணர்களின் பட்டப்பெயராகவும் வழங்குகின்றது. அவர்களைப் பந்துருவாரு என்றும் அழைப்பர். வடமொழிப் பண்டிட். தெலுங்குப் பண்டிட் போன்ற பட்டங்கள் சென்னை மாநிலத்தில் உள்ள பல கல்லூரிகள் முறையாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பண்டிட் என்பதனைப் பெயருக்கு முன் சிறப்புப் பெயராகப் பண்டிட் எஸ்.எம். நடேச சாஸ்திரி என்பது போலவும் இணைத்து வழங்குகின்றனர். தமிழ் நாட்டில் அம்பட்டர்கள் பண்டிதன் எனப்படுகின்றனர். தமிழ்நாட்டில் சில பகுதிகளில் மாத்வ பிராமணர்கள் பண்டிதர் என அழைக்கப்படுகின்றனர். முன்பு வழக்கு மன்றங்களில் பண்டிதர்களாக இவர்கள் அலுவல் பார்த்து வந்ததே இதற்குக் காரணமாகும்.

"சோதிடமும் மருத்துவமும் பார்க்கும் ஒரிய சாதியாருக்கு உரிய பெயராகவும் பண்டிட்டோ என்பது வழங்குகின்றது. பூணூல் அணியும்

---

*யேலும் பர்னலும். ஹாப்சன் ஜாப்சன்.
(Yale and Burnell. Hobson - Jobson.))

இவர்கள் பிராமணர்களிடமிருந்தும் கௌடோக்களிடமிருந்து மட்டுமே தண்ணீர்ப் பெற்றுக் குடிப்பர். குழந்தை மணம் நடத்திவைக்கும் இவர்கள் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிப்பதில்லை" என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. தங்கள் சடங்குகளை நடத்தி வைக்கப் பிராமணர்களை அமர்த்தும் இவர்கள் மதுவகைகளைப் பருகுவதில்லையெனினும் மீனையும் ஆட்டிறைச்சியினையும் உண்கின்றனர் எனவும் கோழியினையும் மாட்டிறைச்சியினையும் தின்பதில்லையெனவும் எனக்குத் தகவல் தெரிவித்தனர். இவர்கள் சாதிப் பெண்கள் கண்ணாடி வளையல்களை அணிகின்றனர். இவர்கள் கொதிகாரொ என அழைக்கப்படுகின்றனர். கொதி ஒருவகைக் கல்லாகும். சோதிடம் தொடர்பான கணக்குகளை அக்கல்லைக் கொண்டு இவர்கள் தரையில் இடுவர். இக் கல் மாக்கல்லினை ஒத்த ஒருவகைக் கல்லாகும்.

பண்டித என்பது புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலமாகவும் உள்ளது.

பாண்டியர் - Pāndya

பாண்ட்ய. பாண்டிய. பாண்டியன். பாண்டி என்பன அண்மைக்காலக் கணக்கெடுப்புகளில் அம்பட்டன். கம்மாளர். ஒச்சன். பள்ளன். வண்ணான். வேளாளன் முதலிய சாதிகளுக்குரிய உட்பிரிவாகப் பதிவப்பட்டுள்ளது. சாணாருள் சிலருக்கும் பாண்டிய என்பது பட்டப் பெயராக உள்ளது. திருவாங்கூரில் ஈழவர் சிலர் தங்களைப் பாண்டி எனப் பதிந்து கொண்டுள்ளனர். பாண்டியன்கள் என்ற வடிவம் தமிழ் வல்லம்பர்களுக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயராகவும் பாண்டு என்ற வடிவம் காபு மற்றும் ரெட்டிகளுக்குரிய தமிழ்ப் பெயராகவும் வழங்குகின்றது.

பணிக்கர் - Panikkār

பணிக்கர் என்பது ஆசிரியர் அல்லது பணி செய்பவன் எனப் பொருள்படும். மலையாளம், பகுதிகளில் இது அம்பட்டன், கம்மாளன், மாரான், நாயர், பாணான், பறையர் ஆகிய சாதியாருக்குரிய பட்டப் பெயராகப் பதியப்பட்டுள்ளது. முன்னாளில் இது மலபாரில் வாள் வீச்சுக் கற்றுத்தரும் ஆசிரியர்களுக்குரிய பெயராக வழங்கி வந்தது என்பதனைப் பின்வரும் மேற்கோள்களால் தெளியலாம்.

1518 – " இந்தக் கலையினைக் (வாள்வீச்சு) கற்றுத் தரும் திறமை மிக்க ஆண்கள் உள்ளனர். இவர்களைப் பணிக்கர் என அழைப்பர்" – பார்போசா

1553 – "நாயர் ஒருவனுக்கு வயது ஏழானவுடன். அவன் வாள் பயிற்சி கற்றுத் தரும் பள்ளிக்குச் செல்லக் கடமைப்பட்டவன். அந்தப் பள்ளியின் ஆசிரியரை (அவரை இவர்கள் பணிகள் என அழைப்பர்) அவர்கள் தரும் பயிற்சியின் சிறப்பினைக் கருதித் தந்தை போலப் பாவிக்கின்றனர்." – பர்ரொஸ்

1583 – "படைக்கலங்களினைக் கையாளுவதில் இவர்கள் தேர்ச்சி பெறும்படியாகப் பயிற்சி தரும் ஆசிரியர்களைத் தங்கள் மொழியில் இவர்கள் பணிசய்கள் என அழைக்கின்றனர். – காஸ்டனெட்.

பணிக்கன் என்ற வகுப்பார் மதுரை. திருநெல்வேலி மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் சிலர் சாணாருக்கு அம்பட்டர்களாக உள்ளனர். மற்றவர்கள் நெசவினைத் தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் அம்பட்டர்களாகப் பணிபுரிவோரோடு மணஉறவு. செய்து கொள்வதில்லை. "பணிக்கன்கள் நெசவாளர்களாகவும் பயிர்த்தொழிலாளராகவும் சிறு வணிகர்களாகவும் உள்ளனர். இவர்கள் பிராமணர்களைத் தங்கள் புரோகிதர்களாக அமர்த்துகின்றனர். இந்தப் பிராமணர்களை மற்றப் பிராமணர்கள் தங்களோடு சமமானவர்களாகக் கருதுவதில்லை. பணிக்கன்கள் அண்மைக் காலமாகத் தங்களை இல்லம் வேளாளர் என அழைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். பத்திரங்களிலும் அலுவலகக் குறிப்புகளிலும் தங்கள் பட்டத்தைப் பணிக்கன் என்பதற்குப் பதிலாக பிள்ளை என்றே இவர்கள் குறித்து வருகின்றனர். பூணூல் போடுவதை மேற்கொண்டவர்களாக இறைச்சி உண்ணும் பழக்கத்தையும் கைவிட்டு வருகின்றனர். மிடால், பட்டணம், மலையாளம் என்ற மூன்று அகமணக்கட்டுப்பாடுடைய வகுப்புகளாக (வகைகள்) இச்சாதி பிரிவுப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் மேலும் ஐந்து புறமணக்கட்டுப்பாடுடைய இல்லங்களாகப் பிரிவுப்பட்டுள்ளன. அவை மூட்டில்லம். தொரநாட்டில்லம். பள்ளிக்கில்லம். மஞ்சநாட்டில்லம். சோழியவில்லம் என்பன அத்தகைய இல்லப் பிரிவுகளுக்குரிய பெயராகும். மிடால். பட்டணம் பிரிவினர் தங்களுக்குள் மண உறவு கொள்வதும் உடன்

உண்பதும் ஆகிய இரண்டையுமே மேற்கொள்வதில்லை. இவர்களிடையே விரிவான சாதி அமைப்பு ஆட்சி முறை உள்ளது. அதன்படி பதினொரு கிராமங்கள் இணைந்து கடிஸ்தலம் சாதிச் சபைக்கு உறுப்பினர்களை அனுப்பி வைக்கும். அச் சபை கடிஸ்தலங்களின் அதிகார வரம்புக்கு அப்பால்பட்ட சாதிச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும்" என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். மலையாளம் என்ற பெயர் ஓர் உட்பிரிவுக்குப் பெயராக அமைந்திருப்பதும் புறமணக்கட்டுப்பாடுடைய குலங்கள் இல்லம் என்ற மலையாளப் பெயரால் வழங்கப்படுவதும் பணிக்கன்கள் மேற்கேயிருந்து தமிழ்நாட்டுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் என்பதனை உணர்த்தும் குறிப்புகளாம்.

பணிமகன் - Panimagan

முக்குவன் சாதியாருக்கு அம்பட்டர்களாகப் பணிபுரியும் முக்குவன்களுக்கான பெயர்.

பணிசவன் - Panisavan

"பணிசவன் என்பது பணி செய்கின்றவன் (பணிசெய்வோன்) என்பதன் சிதைந்த வடிவமாகும். பணிபுரிவோன் என்பது இதன் நேர்பொருள். இது சாவுச் செய்திகளை இறந்தவர்களின் உறவினர்களுக்குச் சென்று அறிவிப்பதோடு தாரை என்ற நீண்ட கொம்பினையும் ஊதும் வகுப்பாருக்கு உரிய பெயர்" எனச் சேலம் மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது. பணிசவன் தெலுங்குப் பகுதிக்குரிய தாரிகள் மற்றும் தாடர்களுக்கு நேரான தமிழ்ச் சாதியார் எனத் திரு.எச்.ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டிலும் 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையிலும் கூறியுள்ளார். இரந்து வாழ்க்கை நடத்தும் சாதியாரான இவர்கள் சிவனை வழிபடுகின்றனர். தாடர்களைப் போலன்றி இவர்கள் அடிக்கடி பயிர்த்தொழிலிலும் ஈடுபடுகின்றனர். பொதுவில் இவர்களை நற்பண்புகள் வாய்க்கப் பெற்ற மரியாதைக்குரிய சாதியார் எனலாம். பிராமணர்களைப் புரோகிதர்களாக அமர்த்தும் இவர்கள் இறைச்சி, மதுவகைகள் ஆகியனவற்றைத் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர். இறந்தவர்களை எரிப்பதே பெருவழக்கு.

பணிசவன்களுள் இரண்டு வகுப்பார் உள்ளனர். ஒரு வகுப்பார் வலங்கைப் பிரிவினருக்கும் மற்றொரு பிரிவினர் இடங்கைப் பிரிவினருக்கும்

தொழில் செய்கின்றனர். இது தொழில் தொடர்பான பாகுபாடேயன்றி சாதி தொடர்பான பாகுபாடன்று. ஆகையால் இவர்கள் தங்களுக்குள் மண உறவு கொள்ளத் தடையேதும் இல்லை. பணிசவன்களுடைய அடையாளச் சின்னம் சங்கும் தாரையுமாகும். அவற்றை ஊதும்போது இவர்கள் தாரையில் ஊன்றப்பட்ட ஒரு மூங்கில் கழியின் மீது பொருத்தி வைத்து ஊதுவர். திருமண ஊர்வலங்களில் அவ்வப்போது தரையினை ஊதியபடி முன்னர் செல்ல வேண்டியது இவர்களுடைய கடமையாகும். அது போன்ற சமயங்களிலும் கிராம தேவதைகளின் திருவிழாக்களின்போதும் தாரையினைச் சிறிய முக்கோண வடிவிலான துணிகளாலான மாலையினைக் கொண்டு அலங்கரிப்பர். அதில் கவரிமான் மயிர்க் குஞ்சங்கள் சிலவும் இடம் பெற்றிருக்கும். வலங்கைப் பிரிவினருக்கான நிகழ்ச்சிகளில் அது ஐந்து வேறு வேறு வண்ணங்களாலானவையாக இருக்கும். இப்பொழுதெல்லாம் பணிசவன் பணியினைத் திருமணங்களைவிடச் சாவுச் சடங்குகளுக்கே மிகுதியும் பயன்படுத்திக் கொள்கின்றனர். சென்னை நகரத்தில் பாடைகட்டுவதற்குத் தேவைய்ான அனைத்துப் பொருள்களையும் பணிசவன்கள் விற்கின்றனர். பிணத்தைத் தூக்குவதற்கான பல்லக்கையும் இவர்கள் வாடகைக்கு விடுகின்றனர். பிண ஊர்வலத்தில் பணிசவன் சங்கினை ஊதியபடி பிணத்தின் பின்னே செல்ல வேண்டும். இறந்தவர் பெரும் புள்ளியா மட்டுமே தாரை ஊதப்படும். இறந்தவருடைய மகன் பானையில் தண்ணீரைச் சுமந்தபடி பிணத்தைச் சுற்றி வரும்போது பணிசவன் சங்கினை ஊதியபடி அவனோடு செல்வான். கருமாந்திரச் சடங்கின்போது பணிசவன் வந்திருந்து சங்கினை முழக்க வேண்டும். கணவனை இழந்தவள் கழுத்திலிருந்து தாலியினை அகற்றும்போது சங்கு முழக்குவது இன்றியமையாதது. சில இடங்களில் சாவுச் செய்தியினைச் சென்று அனைவருக்கும் தெரிவிக்கும் பணியினைப் பணிசவன் செய்யச் சிலவிடங்களில் அதனை அம்பட்டன் மேற்கொள்கின்றாள். செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் பணிசவன்கள் தனிச் சாதியராக நோக்கன்களோடு எத்தகைய தொடர்பும் இல்லாதவர்களாக உள்ளனர். நோக்கன்கள் வன்னியர்களோடு இணைக்கப்பட்ட இரவலர்கள். தென் ஆர்க்காட்டிலும் தஞ்சாவூரிலும் நோக்கன் என்ற பெயரே பணிசவன் பணியினை மேற்கொண்டுள்ள சாதியாரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. பணிசவன் என்பதற்கு மற்றொரு பெயராக நோக்கன் என்பதனை இம் மாவட்டங்களில் பயன்படுத்துகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த

பணிசவன்கள் சாவுச் சடங்ககுகளில் உதவும் பணியாளர்களான செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களின் பணிசன்களிலும் வேறுபட்டவர்களாக உள்ளனர். திருநெல்வேலியில் பணிசன்கள் கோயில்களில் நாகசுரம் வாசிப்பதோடு தேவதாசிகளுக்கு நாட்டியம் ஆடவும் கற்றுத் தருகின்றனர். இத்துடன் அச்சு வேலையினையும் திருநெல்வேலிப் பணிசன்கள் மேற்கொள்கின்றனர். அச்சுவேலை என்பது பாவுநூலினைக் கட்டுவதற்கான சீப்பினைக் கட்டும் அச்சாகும். சமூகப் படிநிலையில் பணிசவன்கள் தாழ்ந்ததொரு நிலையில் இருந்தாலும் இவர்கள் புலவர் என்ற பட்டத்தைத் தரிக்கின்றனர். பண்டாரம், பிள்ளை, முதலி என்பன இவர்களுக்குரிய பிற பட்டப் பெயர்களாகும்.

பணியன் - Paniyan

கறுத்த தோலும் குள்ள உருவமும் அகன்ற மூக்கும் சுருண்ட மயிரும் கொண்ட பழங்குடியினர் பணியன்கள். மேற்கு மலைத்தொடரின் அடிவாரத்தைச் சார்ந்த மலபாரில் உள்ள எறநாடு, கள்ளிக்கோட்டை, குறும்பறநாடு, கோட்டயம் வட்டங்களின் பகுதிகளிலும் வடநாட்டிலும் நீலகிரியினைச் சேர்ந்த முகநாடு, செரங்கோடு, நம்பலக் கோடு அம்சங்களிலும் இவர்கள் காணப்படுகின்றனர்.

மலைத்தோட்ட முதலாளிகளான ஐரோப்பியர்கள் பலரும் இவர்களுடைய தோற்றத்தைக் கொண்டு இவர்களை ஆப்பிரிக்காவினைச் சேர்ந்தவர்களெனவும் இவர்களுடைய முன்னோர் கடலில் கலம் ஒடிந்து மலபார் கடற்கரையில் வந்து கரையேறியவர்களாதல் வேண்டும் என்றும் நம்புகின்றனர். நன்கு ஆராயும்போது இக் கோட்பாடு தவறானதென ஆகும் எனினும் இவர்களுடைய தோற்றம் பற்றி உறுதிப்படுத்தும்படியான சான்றுகள் எவையும் இல்லை. எதிர்பாராத வகையில் ஆபத்தினையோ வேறு தொல்லைகளையோ எதிர்ப்படும் போது ஆபத்தினையோ வேறு தொல்லைகளையோ எதிர்ப்படும் போது இவர்கள் 'இப்பி ! இப்பி !' எனக் கூக்குரலிட்டபடி அவ்விடத்தை விட்டு ஒடுவதாக நாயர் ஜன்மிகள் (இவர்களுடைய பண்ணை முதலாளிகள்) கூறுகின்றனர். நாயர் ஜன்மிகள் 'இப்பி' யே , இவர்களுக்குரிய நாடாதல் வேண்டும் எனக் கருதுகின்றனர். எனினும் இப்பிமல என இவர்கள் கூறும் மலை எங்குள்ளது என்பது இவர்களுக்கே தெரியாது. கப்பிரி (ஆப்பிரிக்கா அல்லது கேப்?) என்பதே இவர்கள் முதலில் வாழ்ந்து வந்த நாடாதல் வேண்டும் எனக் கூறப்படுகிறது.

ஐரோப்பியர்கள் கருத்தான மேற்கூறிய கருத்தினைக் கேட்டறிந்தவர்கள் மட்டுமே இதுபோன்ற கருத்துடையவர்களாகின்றனர். அவ்வப்போது ஏதேனும் ஓரிடத்தைத் தங்கள் மூதாதையர்களுக்குரிய நாடாகப் பணியன்கள் கூறிவந்தாலும் மலபாருக்கு வந்து சேர்ந்ததனைப் பற்றியதான வழக்கு வரலாறு ஏதும் இவர்களிடையே வழக்கில் இல்லை. ஒரு அரசர் தங்கள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துத் தங்களைக் கைப்பற்றினார் எனவும், அஞ்சி ஓடி ஒளிந்த இவர்களை அவன் வேட்டைக்குப் பயன்படுத்தும் வலைகளை வீசியே பிடித்தான் எனவும், அவனால் இங்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்ட சமயத்தில் கணவனும் மனைவியும் பொதுவில் ஒரே ஆடையினைத் தரித்து மானத்தைக் காக்க வேண்டிய தொல்லையும் துன்பமும் அடைந்தவர்களாகத் தாங்கள் இருந்ததாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

1891 கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட்டுள்ள பணியன்களின் எண்ணிக்கை 33,282 ஆகும். இவர்களிடையே ஒன்பது உட்பிரிவுகள் இருப்பதாகப் பதியப்பட்டுள்ளது. "இந்த உட்பிரிவுகளுள் பெரும்பாலானவை உண்மையானவையல்ல. இவற்றுக்கு உரியனவாகப்பதிந்து கொண்டுள்ளவர்களும் மிகமிகச் சிலரே" எனத் திரு.எச்.எ. ஸ்டுவர்ட் குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு பணியனும் யாரேனும் ஒரு பண்ணையாரின் ஆள்காரனாகக் கிட்டத்தட்ட அடிமை என்ற நிலையிலேயே உள்ளான். தன் பண்ணை முதலாளியினைவிட்டு வேறொருவனிடம் பணி செய்ய இவன் உரிமை பெற்றவனெனினும் இவன் போய்ச் சேர்ந்த இடத்தினை உடனே கண்டுபிடித்து அவன் அங்கு வேலையில் தொடர இயலாதபடி ஏற்பாடு செய்துவிடுவதால் இவர்கள் ஒரு பண்ணையாரிடமே தொடர்ந்து இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர்.

சென்ற நூற்றாண்டின் (19 ஆம் நூற்றாண்டின்) இடைப்பகுதியில் வயநாட்டில் தோட்ட முதலாளிகள் வந்து தங்கத் தொடங்கிய காலத்தில் நிலப் பண்ணையாரிடமிருந்து நிலத்தோடு பிணைக்கப்பட்ட பணியன்களோடேயே நிலத்தை விலைக்குப் பெற்றனர். முன்பு பணியன்கள், பணக்காரர்களான திருட்டுப் பொருள்களைப் பெறுவோர்களுக்குக், காப்பித் தோட்டங்களிலிருந்த காப்பிக்கொட்டை திருடுவோராக அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் காபித் தோட்டங்களில் நுழைந்து இரவோடு இரவாகக் காபிக் கொட்டையினை உருவிச் சென்று

பொழுது புலருமுன் திருட்டுப் பொருள்களைப் பெறுவோருக்குக் கொடுப்பர். இருட்டிய பின் வெளியே செல்ல அஞ்சும் நீலகிரியினைச் சேர்ந்த காப்பிக்கொட்டைத் திருடர்களான படகரைப் போலன்றி பணியன்கள் பேய்களுக்கு அஞ்சாதவர்களாக இரவில் திருட்டுத் தொழிலை மேற்கொண்டவர்களாக வெளியே புறப்பட்டுச் செல்வர். பணியன்களைப் பற்றிய என் ஆய்வினை நான் மேற்கொண்ட மலைத் தோட்ட உரிமையாளரான நண்பர் திரு.ஜி. ரொம்மில்லெ சமூகத்தில் பழகிய பணியன்களுக்கு நல்ல கூலி தந்தால் அவர்களை அமர்த்தலாம் எனவும் தன் அனுபவத்தில் கண்டுள்ளதாகக் கூறினார்.

தங்கள் நிலத்தின் பெரும்பகுதியினை ஜன்மிகள் விற்றுவிட்ட சில இடங்களில் பணியன்களுக்கு வேறு நிலையான வேலை கிடைக்கப் பெறாமையால் காபித் தோட்டங்களில் தோட்டத் தொழிலாளராக அமர்ந்துள்ளனர். இவ்வாறு வேலையில் சேர்ந்துள்ளவர்கள் ஒரு சிலரே. பணியன் என்ற சொல் கூலியாள் எனப் பொருள்படும். தொடக்கத்தில் இன்று உள்ளது போலவே பெரும்பாலானவர்கள் பயிர்த்தொழிலாளராக இருந்ததாகவே இவர்கள் நம்புகின்றனர். பண்ணையில் வேலை பார்ப்போர் தங்களுக்காக மட்டும் நெல்லும் ராகியும் பயிரிடுகின்றனர். பெண்களும் குழந்தைகளும் காடுகளில் கிழங்குகளையும் கீரைகளையும் உணவுக்காகத் தேடிக் கொண்டிருக்கக் காணலாம். நரி, பாம்பு, கழுகு, பல்லி, எலி, பயிரை மேயும் புழுபூச்சிகள் ஆகியவற்றின் இறைச்சியினை இவர்கள் உண்பதில்லை. தலை வழுக்கையையும் நரையினையும் தடுக்கும் என்பதற்காக விலையுயர்ந்த எண்ணெய்களுக்குப் பதிலாக இவர்கள் தரை நண்டுகளை உண்கின்றனர். இவர்கள் மதுவகைகளில் தனி மோகம் கொண்டவர்கள். உடல் அளவுகளைக் கணித்தறிய என்னிடம் நேரில் வந்தவர்கள் இரண்டணா, ஒரு சுருட்டு, அவர்கள் விரும்பிய அளவு மேப்படி பசாரில் வாங்கப்பட்ட கலப்படமில்லாத பிராந்தி ஆகியனவற்றைப் பெற்றுச் செல்வதில் மிகுந்த திருப்தியுற்றவர்களாகச் சென்றனர். இயல்பாகவே மருளும் இயல்புடைய பணியர் சாதிப் பெண்கள் ஐரோப்பியர்களைக் கண்ட அளவில் ஓடி ஒளிவர். முதலில் என்னை வந்து காண அஞ்சிய பெண்கள் ஓரளவு மெல்ல அச்சம் நீங்கி நம்பிக்கை கொண்டவர்களாக என்னைக் காண வந்ததோடு சிலர் என்னிடம் அளவு எடுத்துக் கொள்ளும் தொல்லைக்கும் தங்களை உட்படுத்திக் கொண்டனர். அவ்வாறு அளவு எடுத்துக் கொண்டவர்களைப் பார்த்து மற்றவர்கள் சிரித்து ஏளனமாகவும் பேசினர்.

வயநாட்டில் பெரிய நாயர் பண்ணையார்களுக்கு உரியதான எடொம்களிலும் கோயில்களுக்கு உரியதான தேவோம்சம்களிலும் நெல் பயிரிடுவதோடு தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் அந்த நிலங்களோடு இணைக்கப்பட்ட பணியன்களே செய்கின்றனர். ஜன்மிகளிடமிருந்து ஆண்டொன்றுக்கு நான்கு முதல் எட்டு ரூபாய் கொடுத்துச் செட்டிகளும் மாப்பிள்ளாக்களும் சில பணியன்களை அவ்வப்போது விலைக்கோ வாடகைக்கோ எடுக்கின்றனர். நெல் நாற்று நடும்போதும் கால்நடைகளை மேய்க்கும்போதும் பணியன்கள் தங்களை மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கொண்டை என்ற கூடையமைப்பைத் தலையில் அணிந்தவர்களாகவே காட்சி தருவர். குடைக்குப் பதிலாக மழையிலிருந்து காத்துக் கொள்ளப்பயன்படுத்தப்படும் விசித்திரமான இந்தக் கொண்டை அமைப்பு பிளந்த நாணல் தட்டைகளிடையே கூவைக் கிழங்குச் செடியின் இலைகளை வைத்துப் பின்னி அமைக்கப்படுவதாகும். பார்ப்பதற்கு இது பெரிய நிலக்கரி வாரியினைத் தலைகீழாகத் தொங்கவிட்டது போலக் காட்சி தரும். அதனை அணிந்திருப்பவன் தோற்றம் இராட்சசக் காளான் போன்றதாக இருக்கும். வழக்கமான பணியில் ஈடுபட்டிருக்கும் தீரமிக்கவனாக இவன், ஒரு புலியினை வலையில் அகப்படுத்துவது போன்ற பரபரப்பான சமயங்களில், ஆபத்தைக் கூடப் பொருட்படுத்தாதவனாகச் செயல்படுவான். புலி போன்ற வேட்டை விலங்குகள் பதுங்கியிருக்கும் புதரை வெட்டி, வெட்டவெளிப்படுத்தும் ஆபத்தான பணியில் வேட்டையில் ஈடுபட்டுள்ள ஊரைச் சேர்ந்த இளைஞர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டவர்களாகப் பதுங்கி இருக்கும் விலங்கிற்குச் சிலாகெச தூரம் வரை கூட அச்சமின்றிப் பணியில் ஈடுபடுவர். அப்போது அடிக்கடி திரும்பிப் பார்த்தவர்களாகப் பதுங்கியிருக்கும் விலங்கைப் பொருட்படுத்தாவர்களைப் போல வலைக்கு வெளியே இருக்கும் தங்கள் நண்பர்களோடு கூடப் பேச்சில் ஈடுபடுவர்.

சில ஆண்டுகளுக்கு முன்வரை மிகக் கொடிய கொலைச் செயல்கள் பெருங்கொள்ளைகள் ஆகியவற்றில் தங்களுக்கு உதவுவதற்காக வயநாட்டுப் பணியன்களை அழைத்துச் செல்ல நெடுந்தொலைவிலிருந்து கூட மக்கள் வருகின்ற பழக்கம் இருந்தது. இது போன்ற கொலைச் செயல்களில் இவர்களை ஈடுபடுத்தும்போது இவர்கள் செயல்படும் விதம் இரண்டு நிகர்ச்சிகளில் இவர்கள் மேற்கொண்ட கொடூரச் செயல்களின் வாயிலாகப் புலனாகின்றது. இரண்டு நிகழ்ச்சிகளிலும் கூரை வேயப்பட்ட

வீடுகளை நள்ளிரவில் சூழ்ந்துகொண்டவர்களாகப் பெரிய வைக்கோல் கத்தைகளை அந்த வீடுகளைச் சற்றி நாற்புறமும் பரப்பி ஒரே சமயத்தில் அதில் நெருப்பு மூட்டியுள்ளனர். அதில் அகப்பட்ட அப்பாவிகள் தப்பி வெளியே ஓட முற்படும்போது கழிகளால் அவர்கள் தலையில் தாக்கி எரியும் நெருப்பில் எடுத்து எறிந்துள்ளனர்.

பண்ணையில் வரிசையாகவோ தனித்தோ அமைந்த மூங்கில்களால் அமைக்கப்பட்ட ஒற்றை அல்லது இரட்டை மாடி அமைப்புடைய கூரைவேயப்பட் குடியிருப்புகளில் பணியர்கள் கவலையற்றவர்களாகத் தங்கி வாழ்கின்றனர். மழைப் பருவத்திற்கு முன்னதாகக் கடுங்கோடையின் போது காட்டருவிகளின் கூரைகளிலும் குளிர்ச்சியான சோலைகளிலும் சென்று தங்கிக் கோடையைக் கழித்தபின் பருவமழை தொடங்கியவுடன் தங்கள் குடியிருப்புகளுக்குத் திரும்புவர்.

பெரிதான அமைப்புடைய மூங்கில் பாயினைக் கொண்டோ அல்லது நீர் நிலைகளில் மூலிகைகள், பட்டை, பழங்கள் ஆகியவற்றின் நஞ்சினைக் கலக்கும் முறையற்ற வழியினை மேற்கொண்டோ இவர்கள் மீன்களைப் பிடிக்கின்றனர். பிந்திய முறையில் மீன்கள் மயக்க முற்றனவாக நீரில் மிதப்பதால் எளிதில் இவர்களுக்கு இரையாகக் கிடைக்கின்றன.

பணியன்கள் மோயாறு ஆற்றின் ஒரு பகுதியில் மீன்பிடிப்பது பற்றித் திரு.எச்.சி. வில்சன் பதிந்துள்ள* விவரம் வருமாறு:- "பைகாரா நீர்வீழ்ச்சியில் அடிப்பக்கம் தொடங்கித் தெப்பக்காட்டுக்குக் கீழே உள்ள பள்ளத்தாக்கில் மசூர் வரை ஆற்றில் ஆற்றை ஒட்டிய பள்ளங்களில் சிறு பொறிகள் வைக்கப்பட்டிருக்கக் கண்டேன். அச் சமயம் அப்பள்ளங்களில் தண்ணீர் இல்லை. இவை சென்ற பெருக்கின்போது பயன்படுத்தப்பட்டுப் பின் அப்படியே இருக்க விட்டுவிடப்பட்டவையாதல் வேண்டும். கூரிய பற்களைக் கொண்ட பெரிய அளவிலான வைக்கோல் வாரியின் அமைப்புடையனவாக மரத்தால் செய்யப்பட்ட அவை பள்ளங்களின் குறுக்கே பற்களின் முனைகீழ் நோக்கியபடியிருக்க நீரின் போக்கோடு சற்றே சாய்ந்த கோணத்தில் உறுதியாகப் பொருத்தப்பட்டிருந்தன. வெள்ளப் பெருக்கின்

*நீலகிரி மாவட்ட ஆறுகளில் மீன்களைப் பிடிக்கும் முறைகளும் அவற்றை வளர்க்கும் முறைகளும் பற்றியதான அறிக்கை - 1907
(Report on the Methods of capture and supply of Fish in the Rivers of the Nilgiri District.1907.)

போது பாதுகாப்பினைத் தேடி நீரோடைகளின் பக்கங்களில் அமைந்த இப்பள்ளத்தாக்குகளுக்கு வரும் சிறுமீன்களைப் பிடிக்கவே இவை அமைக்கப்பட்டனவாதல் வேண்டும். பெரும்போக்காகத் தொடக்க காலத்திய பொறியினை ஒத்ததான அமைப்புடைய இவை மீன்களைப் பிடிப்பதற்கு ஏற்றனவாக அமையாததோடு ஓரளவு சேதத்தையும் விளைவிக்கின்றன. இந்த இடத்திற்கு அருகே உள்ள சிற்றூர் தொரப்பள்ளி. அங்கே மீன்பிடிப்பவர்களான பணியன்கள் சிலர் தங்கி வாழ்கின்றனர். இவர்கள் தான் அந்தப் பொறிகளை அமைத்தவர்கள் என்பதில் ஐயமில்லை. இவர்கள் மேலும் நல்ல பொறிகளையும் சிறு மீன் குஞ்சுகளையும் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்."

1897 – ஆம் ஆண்டைய இந்திய மீன்துறை நான்காம் பிரிவுச் சட்டத்தின் கீழ் 1907 – ஆம் ஆண்டு பாவனி, மோயாறு ஆறுகளில் மீன்களைப் பாதுகாக்க விதிகள் வெளியிடப்பட்டன. இந்தச் சட்டங்களின்படி குறிப்பிட்ட நிலையான பொறிகளை அமைக்கவும் பயன்படுத்தவும், வாரணைகளைக் கட்டவும், மீன்களைப் பிடிக்கவோ அழிக்கவோ, ஒன்றரை அங்குல சதுரத்திற்கு குறைவான அளவுடைய கண்ணிகளைக் கொண்ட வலைகளைப் பயன்படுத்தவும், ஆண்டுதோறும் மார்ச் 15 – ஆம் தேதி முதல் செப்டம்பர் 15–ஆம் தேதி வரை மீன்பிடித்தலை தடுக்கவும் வழிவகைகள் காணப்பட்டன. இந்த விதிகள் பொருந்துகின்ற ஆற்றின் இருமருங்கும் உள்ள ஊர்களில் தமுக்கு அடித்து இந்த விதிகள் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டன.

பணியன்கள் கொச்சை மலையாளத்தை விசித்திரமான வகையில் பாட்டொலியினை ஒப்ப மூக்கால் பேசுகின்றனர். அதனைப் போல மற்றவர்கள் பேசுதல் இயலாது. மலைக்குக் கிழக்குப் பக்கத்தில் வேலையில் அமர்ந்துள்ள பணியன்களில் பெரும்பாலோர் கன்னடத்திலும் உரையாடும் திறன் பெற்றவர்கள்.

கல்வியறிவு சிறிதும் அற்றவர்களாகவும் வேறு இனத்தவர்களோடு எத்தகைய உறவும் அற்றவர்களாகவும் உள்ள பணியன்களின் சமய நம்பிக்கைகள் தொடக்க காலத்தனவாகவே உள்ளன. எல்லா வகையினவும் உருவினவுமான பேய்களை நம்பும் இவர்கள் தங்களை இந்து சமயத்தை மேற்கொண்டவர்கள் எனக் கூறிக் கொள்ளினும் காடுகளுக்குரிய காட்டுப்

பகவதி என்னும் தெய்வத்தையே வழிபடுகின்றனர். அஞ்சத் தக்கதும் தீங்ககள் விளைவிப்பதுமான பெண்பால் தெய்வமான கூலியினையும் தாங்கள் வழிபடுவதாக இவர்கள் கூறுகின்றனர். இத் தெய்வத்திற்கான கோயில் மரத்தில் வைக்கப்பட்ட ஒற்றைக் கல்லாகவோ சிலசமயம் கற்களைக் கொண்டமைக்கப்பட்ட கல் மாடங்களாகவோ இருக்கும். இத்தகைய திருத்தமற்ற கோயில்களில் இவர்கள் சாமிக்கு உமியோடு வேக வைக்கப்பட்ட அரிசியினை வறுத்துக் குற்றி அரைமூடி தேங்காயோடும் சிறுகாணிக்கையோடும் படைப்பர். ஆலமரமும் அத்தி மர வகையினைச் சேர்ந்த பெரியதொரு மரமும் தீய ஆவிகள் தங்குமிடம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் போற்றி வழிபடுகின்றனர். இவ்வாறு தீய ஆவிகள் குடியிருக்கும் மரங்களைத் தொடுவது கூடாது என்பதோடு அவற்றைப் பணியன்கள் வெட்ட முற்பட்டால் அவர்கள் நோயில் விழுவர் எனவும் நம்புகின்றனர்.

பணியன்கள் சிலர் தங்களை விலங்குகளாக மாற்றிக் கொள்ளக் கூடிய ஆற்றல் வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர். சமவெளியில் வாழும் பணியன்களிடையே இத்தகைய ஆற்றல் வாய்க்கப் பெற்றவன் ஒருவன் ஒரு பெண்ணின் மீது இச்சை கொண்டவனாக அவளை அடைய விரும்பினால் ஒரு துளையுடைய மூங்கிலோடு இரவில் அவள் வீட்டை அடைந்து அதனை மும்முறை சுற்றி வருவான். அதன்பின் அவனால் விரும்பப்பட்டவள் வீட்டைவிட்டு வெளியே வருவாள். அவன் ஒரு காளையாகவோ நாயாகவோ மாறித் தன் தீய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வான். இத்தகைய தீங்கிற்கு உள்ளானவள் இரண்டு மூன்று நாள்களில் இறப்பாள் என நம்பப்படுகிறது.

1904 – இல் மாப்பிள்ளா ஒருவன் தன் கள்ளக் காதலியினைக் கொலை செய்யச் சில பணியன்களை அமர்த்தினான். கருவுற்றிருந்த அவள் தான் அவ்வாறு கருவுற்றமைக்குக் காரணமானவன் இந்த மாப்பிள்ளாதான் என்பதனை மற்றவர்களுக்குத் தெரிவிக்கப் போவதாக அவனை அச்சுறுத்தி வந்தாள். இதனால் ஏற்படப் போகும் விளைவுகளை எண்ணிப் பார்த்த அவன் ஒருநாள் ஒரு பணியனைச் சந்தித்து அவளை அவன் கொன்றுவிட்டால் பத்து ரூபாய் பணம் தருவதாகக் கூற அப்பணியனும் அதற்கு உடன்பட்டவனாகத் தன் உடன் பிறந்தவர்களோடு அந்த மாப்பிள்ளாவும் அவன் கள்ளக்காதலியும் மலைமேல் இரகசியமாகச் சந்தித்துக் கொள்ளும்

இடத்திற்குச் சென்று சேர்ந்தனர். அந்த மாப்பிள்ளாவும் அவன் காதலியும் அங்கு வந்து சேர்ந்தவுடன் பணியன்களில் ஒருவன் அவளைத் தன் கைக்கோடரியால் தலையில் அடித்துப் போட்டான். பின் அவள் வாயில் துணியினைத் திணித்துச் சற்றுத் தொலைவிற்குத் தூக்கிச் சென்று அவளைக் கொலை செய்தனர். இரண்டு பணியன்களும் மாப்பிள்ளாவும் இந்தக் குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டனர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பதே இவர்களிடையே வழக்கமாயினும் பல மனைவியரை வைத்துக் காப்பாற்றக் கூடியவன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கத் தடையேதுமில்லை.

இளைஞர்களுக்கான மனைவியரை அவர்களுடைய பெற்றோரே தேர்ந்தெடுப்பதாகத் தெரிகின்றது. தனக்கென முடிவு செய்யப்பட்ட ஒருத்திக்குச் செல்வனான ஐரோப்பியன் ஒருவன் நாள்தோறும் மலர்ச் செண்டை அன்பளிப்பாக அனுப்பி வருவதைப் போல ஏழையான பணியனும் தனக்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெண்ணின் வீட்டிற்கு ஆறு மாதங்கள் வரை நாள்தோறும் ஒரு கட்டு விறகினைக் கொண்டு சேர்க்க வேண்டும். இவர்கள் மணச்சடங்கு மிக எளியதொரு நிகழ்ச்சியே. (அப்போது கட்டப்படும் தாலிக் கயிற்றின் முடிச்சு ஒருத்தியினை முழுதும் கணவனுக்கு கட்டுப்படுத்துவதாகத் தெரியவில்லை.) பணியன் இனத்தவரான செம்மி (ஜன்மி என்பதின் சிதைந்த வடிவம்) ஒருவனே மணச் சடங்கினை நடத்தி வைக்கின்றான். பதினாறு பணமும் சில புதிய உடைகளையும் மணமகன் செம்மியிடம் தர அவன் அதனை மணமகள் பெற்றோரிடம் வழங்குவான். இது தொடர்பாக ஏற்பாடு செய்யப்படும் விருந்தில் பணிச்சிகள் (பணியர் இனப் பெண்கள்) முழவுக்கும் குழலுக்கும் இயைய நடனம் ஆடுவர். மணமகனுடைய பெண் உறவினர்களே மணமகள் கழுத்தில் தாலியினைக் கட்டுவர். அவள் தங்கள் வசதிக்கேற்ப சில நயமற்ற அணிகளையும் மணமகளுக்கு அணிவிப்பர். செம்மி மணமக்கள் தலை மீதும் பாதங்களிலும் தண்ணீரைத் தெளித்து மணச் சடங்கை முடித்து வைப்பான். தங்கள் மனைவியின் பெற்றோருக்குக் கணவன்மார்கள் அன்பளிப்புக்களை ஆண்டுதோறும் வழங்கிவர வேண்டும், அவ்வாறு வழங்கத் தவறினால் அவர்கள் தங்கள் பெண்களைத் திரும்ப அழைத்துக் கொள்ள உரிமை உடையவர்கள். தங்கள் பெண்கள் இருவரையும் ஒருவனே மணத்தலையோ இறந்துபோன தன் மனைவியின் உடன்பிறந்தவளை மணத்தலையோ

இவர்கள் அனுமதிப்பதில்லை என எனக்குத் தகவல் தந்தனர். கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுகிறது. தவறான நடத்தையில் ஈடுபடும் ஆண் பெண்களையும் பிற குற்றங்களையும் பஞ்சாயத்துச் சபையார் கூடி விசாரித்து வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அபராதம் விதிக்கவோ தண்டனை கொடுக்கவோ செய்வதோடு வழக்குகளையும் தீர்த்து வைப்பர். பணியன்கள் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிலும் கூட்டன் என்ற சாதித் தலைவன் உள்ளான். நாயர் சாதியினைச் சேர்ந்த ஜன்மியே தன்னுடைய காரியங்களை மேற்பார்க்கக் கூட்டனைப் பதவியில் அமர்த்துகின்றான். ஊராருக்கான எல்லாப் பொறுப்புக்களையும் கூட்டனே ஏற்று ஜன்மிக்குப் பதில் அளிக்க வேண்டும். கூட்டனைப் பதவியில் அமர்த்தும் நாளன்று விருந்தும் நடனமும் நடைபெறும். அப்பொழுது கூட்டனுக்கு அவன் அதிகாரத்திற்குரிய சின்னயாக ஒரு கடகம் அணிவிக்கப்படும். கூட்டனுக்கு அடுத்த நிலையில் உள்ளவன் முதலி எனப்படும் குடும்பத்தலைவனே. முதலிகளின் கூட்டமே பஞ்சாயத்தாகச் செயல்படுகிறது. கூட்டனையும் முதலியையும் மூப்பன்மார் என வழங்குவர். சாதியினைச் சேர்ந்த அனைவரையுமே எத்தகைய வரையறையுமின்றி மூப்பன் என அழைப்பதும் உண்டு. மாற்றான் மனைவியோடு கள்ளக்காதலில் ஈடுபடுபவர்களுக்குப் பதினாறு பணம் (மணச் சடங்கிற்காக செலுத்தப்பட்ட தொகை) அபராதமும் மணமகள் பெற்றோருக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட தொகையோடு கூடக் கலியாணச் செலவுக்கான தொகை முழுவதையும் தர வேண்டும் எனவும் தண்டனை விதிக்கப்படுகிறது.

செம்மி அல்லது ஷெம்மி எனப்படுபவன் ஒரு பூசாரியினை ஒத்தவன். முன்னாளில் அவனைப் பணியன்கள் எந்தப் பண்ணையாரின் கீழ் பணிபுரிகின்றார்களோ அந்தப் பண்ணையாரே பதவியில் அமர்த்துவார். ஒவ்வொரு செம்மியும் சில கிராமங்களின் மேல் அதிகாரம் படைத்தவன். இப் பதவி பரம்பரை உரிமையுடையது. ஒருவன் குடும்பத்தில சந்ததியினர் இல்லாது போனால் அந்தப் பதவிக்கு உரியவன் தேர்ந்தெடுக்கப்படுவான்.

மகப்பேறு தொடர்பாக எந்தச் சடங்கினையும் இவர்கள் மேற்கொள்வதில்லை. ஊரைச் சேர்ந்த முதியவள் ஒருத்தியே மருத்துவச்சியாகப் பணியாற்றுவாள். அவள் பணிக்காக அவளுக்குச் சிறியதொரு அன்பளிப்பு வழங்கப் பெறும். ஒரு குழந்தை வேலை செய்யும் அளவுக்குப் பெரியவனாக வளர்ந்தவுடன். அவன் தன் பெற்றோருடன்

வேட்டைக்கும் மீன்பிடிக்கவும் உடன் செல்வான். அவர்கள் அவனுக்குக் குடும்பத்திற்கானவற்றைத் தேடிக் கொண்டுவருவது எப்படி என்பதனைக் கற்றுத் தருவர்.

இறந்தவர்களை இவர்கள் புதைக்கும் முறை வருமாறு:– நான்கைந்து அடி ஆழமுள்ள உடலைக் கிடத்தக் கூடிய அளவு குழியினை ஊரருகே உள்ள மலையில் தென் வடலாகத் தோண்டுவர். இக் குழியில் அடியில் மேற்குப் பக்கத்தில் அடி பாகத்தை ஒட்டி பிணத்தைக் கொள்ளும் அளவுக்கு மண்ணைக் குடைந்தெடுப்பர். அந்தக் குடைவினுள் ஒரு பாயில் பிணத்தைக் கிடத்தி, இடப்பக்கமாக ஒருக்களித்தபடி தலை தெற்குப் பக்கமாகவும் கால் வடக்குப் பக்கமாகவும் இருக்குமாறு வைப்பர்.கொஞ்சம் சோற்றினைப் புதைகுழியினுள் இறந்துபோனவன் ஆவிக்காக வைத்தபின் பிணம் வைக்கப்பட்டுள்ள பாய் மூடப்படும். இவ்வாறு புதைப்பதால் பிணம், நரி மற்றும் நாய்களிடமிருந்து காக்கப்படுகின்றது என்பதனை இவர்கள் அனுபவத்தால் அறிந்தவர்களாதல் வேண்டும். சாவுக்குப் பின் ஏழாம் நாள் புதைகுழியிலிருந்து ஐம்பது அல்லது நூறடி தூரத்தில் செம்மி அரிசிக் கஞ்சியினை வைப்பான். அவ்வாறு வைத்தபின் அவன் கைகளைத் தட்டி அந்த வட்டாரத்தில் உள்ள தீய ஆவிகளை அழைப்பான். சில காகங்களின் உருவில் அவை அதனை வந்து உண்ணும் என்று நம்புவதால் இதனைக் காக்காக் கஞ்சி என்று அழைக்கின்றனர்.

நோம்பு எனப்படும் துக்கம் கொண்டாடுதல் தொடர்பான சடங்குகள் சாவு நிகழ்ந்த ஏழாம் நாள் நிகழ்த்தப்படும். இது தீ பொலி எனப்படும். காக்காப் பொலி எனப்படும் குரவெல்லி தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தை மாதத்தில் நிகழ்த்தப்படும். தம்பொலி மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உயிர் நீத்த முக்கியமானவர்கள் நினைவாக நிகழ்த்தப்படும். இச் சமயங்களில் தலைமை ஏற்கும் செம்மி, சடங்குகளை நடத்தி வைக்கும் பூசாரி போலச் செயல்படுவான். இச் சடங்குகளின் தரத்தில் மட்டுமே வேறுபாடுகள் உள்ளதால் காக்கா பொலி பற்றிய விவரங்கள் மட்டும் தரப்படுகிறது.

தை மாதத்தில் நோம்புக்காரன்கள் எனப்படும் துக்கம் கொண்டாடுபவர்கள் ஊருக்குப் புறத்தே தங்கள் அன்றாடப் பணிகளை வழக்கம் போல பார்த்து வருவர். குளித்தபின் ஒரு நாளைக்கு இருவேளை

மட்டுமே உண்ணும் இவர்கள் இறைச்சியினையும் மீனையும் விலக்குவர். மாதத்தின் இறுதி நாளன்று செம்மியின் மேற்பார்வையில் துக்கங் கொண்டாடுதலை முடிவுக்குக் கொண்டுவரும் சடங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்வர். அதிகாலை முதல் விரதம் இருக்கும் துக்கம் கொண்டாடுபவர்கள் பந்தலில் உரிய இடங்களில் அமர்ந்த பின் செம்மி குறுக்காக நீட்டப்பட்ட தன் இரு கைகளிலும் இரண்டு சலிக்கும் முறங்களில் ஓரிரு சேர் அரிசியினை ஏந்தியவனாகப் பந்தலை மும்முறை சுற்றி வந்தபின், அந்த முறங்களைப் பந்தலின் நடுவில் இடுவான். இறந்த போனவனின் உறவினர்களுள் ஒருவன் ஆவேசம் ஏறப் பெறுபவனாகவோ அவ்வாறு ஆவேசம் ஏற்பட்டவன் போல நடிக்கக் கூடியவனாகவோ இருந்தால் அவனையே சடங்கில் பங்குபெறப் பயன்படுத்திக் கொள்வர். அவர்களுள் அனைவரும் அத்தகைய மனநிலையினை மேற்கொள்ள இயலாதவர்களாகத் திண்மை உடைய உள்ளத்தவர்களாக இருக்கக் கூடும் என்ற எண்ணத்தால் தெய்வம் ஏறப்பெற்று நல்வாக்குச் சொல்வதனையே தொழிலாகக் கொண்ட கொமரென் அல்லது வெளிச்சபாடினையும் சமயத்தில் உதவ வேண்டி வரவழைத்து வைத்துக் கொள்வர். இவ்வாறு ஆவேசம் வந்து ஆடுபவன் படலைக்காரன் எனப்படுவான். தலையில் புதிய வேட்டி ஒன்றைக் கட்டியவனாக உடம்பெல்லாம் அரிசிமாவும் நெய்யும் இட்டுப் பிசைந்த கலவையைப் பூசியவனாகக் கால்களில் கட்டப்பட்டுள்ள சலங்கைகளின் ஓசை அங்குள்ள தீய ஆவிகளை விரட்டும் என நம்பப்படுகிறது. மெல்லக் காலடி எடுத்து வைத்தவனாக கண்களை உருட்டியபடி அவன் அப்படியும் இப்படியுமாகக் கைகளில் பிடித்துள்ள குச்சிகளை அசைத்தவனாக நடப்பான். இப்படி மெல்ல ஆடியவனாக அவன் ஆவேசங் கொண்டவனாவான். அப்பொழுது துக்கங் கொண்டாடுபவர்கள், இறந்தவன் ஏன் தங்களிடமிருந்து அழைத்துக் கொள்ளப்பட்டான் என அவனைக் கேட்பர். அப்போது திடீரென உடல் நடுக்கமுற்றவனாக அசைந்து ஆடியபடி அவன் தரையில் நெடுங்கிடையாக விழுவான் அல்லது பந்தலில் உள்ள கம்பங்களில் ஒன்றினைத் தனக்கு ஆதரவாகப் பிடித்துக்கொள்ளப் பார்ப்பான். அப்பொழுது அவன் ஒன்றுக்கு ஒன்று தொடர்பற்றனவாகக் கூறும் வார்த்தைகள் தெய்வ வாக்காகக் கருதப்படும். அப்பொழுது துக்கங் கொண்டாடுபவர்கள் அங்குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவிப்பர். அவர்கள் நெற்றியில் அரிசியும் நெய்யும் கலந்த கலவை பூசப்படும். அதன்பின் சாதித் தலைவனுக்கும் செம்மிக்கும் ஒரு பாய் விரிக்கப்படும். படலைக்காரன் காலில் உள்ள சலங்கைகள் அவிழ்க்கப்படும். அவற்றினுள்

சல்லடையில் உள்ள அரிசி இடப்படும். அவற்றைத் தன் கையில் எடுத்து ஆட்டியபடி அவன் பேசத் தொடங்குவான். பின் அவன் ஒப்புவிக்கும் சாவிப் பாட்டு பொழுது விடியும் வரை நீளும். இதற்கிடையே துக்கங்கொண்டாடுபவர்கள் தவிர கூடியுள்ள மற்றவர்களுக்காக உணவு தயாரிக்கப்படும். அதனை உண்டபின் அவர்கள் பந்தலின் நடுவே குழுவாக விடியும்வரை ஆடுவர். பின் பந்தல் பிரிக்கப்படுவதோடு காக்கா பொலிச் சடங்கு முடிவுறும். அங்கு உணவு உண்பதிலிருந்து விலக்கப்பட்ட துக்கம் கொண்டாடுபவர்கள் மற்றவர்கள் உண்ணும்போது நீண்ட காலமாக வளர்த்திருந்த முக மயிரினைக் களைவர். சாதாரணமானவர்களான பணியன்கள் தாங்கள் இச் சடங்கின் போது ஒப்புவிக்கும் சாவுப்பாட்டுக்கான பொருள் தங்களுக்குத் தெரியாதெனக் கூறுகின்றனர். இந்தத் துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு இதன் பொருள் தெரியும் என நம்புகின்றனர். இச் சடங்கில் பெண்கள் பங்கு பெறுகின்றனர் எனினும் அவர்கள் நடனத்தில் கலந்து கொள்வதில்லை. நடனம் போன்ற ஒன்றை இந்தப் பெண்கள் எப்போதேனும் மேற்கொள்கின்றார்கள் எனக் கூறவேண்டுமாயின் அது நெல் நாற்று நடுவதைப் போல மௌனமாக முரசுகளின் இசைக்கு ஏற்ப அவர்கள் அசைந்து ஆடுவது தான் எனக் கூறலாம். அப்போது ஆடுபவர்கள் இசைக்கு ஏற்ப முன்னோக்கிக் குதிப்பர். அப்பொழுது அவர்கள் சரங்கள் நெல் நாற்று நடுவதுபோல அப்படியும் இப்படியுமாகப் பாவனைச் செய்யும். பெரிய வரிசையில் நிற்கும் பணியன் சாதிப் பெண்கள் கணுக்கால் அளவு சேற்றில் அப்படியும் இப்படியும் இசைக்கேற்பத் தாவியவர்களாக 'ஹொயு ஹொயு' எனப் பசி கொண்ட நாய்களைப் போல ஒரு சேரத் தங்கள் வாயால் கூக்குரலிட்டபடி பச்சை நாற்றுகளை அப்படியும் இப்படியும் மாறி மாறி நடுவது காண மிகுந்த மகிழ்வினைத் தரும் காட்சியாகும்.

பணியன்கள் சாவுச் சடங்குகள் தொடர்பானதான மேற்கூறிய செய்திகளைத் தந்துதவிய திரு. காலின் மெக்கன்சி அவர்களுக்குப் பணியன்கள் தொடர்பான இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள பல செய்திகளைத் தந்துதவிய திரு. எப். பாவ்செட், திரு.ஜி.ரொமில்ல, திரு.மார்டெல்லி ஆகியோருக்கும் நான் கடப்பாடுடையேன். பணியன்களின் மற்றொரு சடங்கு தொடர்பான பின்வரும் செய்தி திரு. பாவ்செட் அவர்களிடமிருந்து பெறப்பட்டதாகும்.

காபித் தோட்டத்தில் உள்ள பணியன்களின் கிராமத்தில் செங்குத்தாக நிற்கும் ஒரு கம்பத்தைச் சுற்றித் தங்கள் இடுப்பின் இடப்புறம் தொங்கும் சிறிய முழவினை முழக்கியபடி ஆண்களும் சிறுவர்களும் நடனம் ஆடுவர். இவர்களுள் சிலர் கணுக்காலுக்குக் கீழ் சலங்கை கட்டியிருப்பர். கம்பத்தின் அருகே ஒருவன் குழல் இசைத்தவனாக அமர்ந்திருப்பான். அது பைக்குழல் *(Bag Pipe)* போன்ற ஒலியினை வெளிப்படுத்தியபடி இருக்கும். நடனத்தின்போது ஆட்டக்காரர்கள் சூரியனுக்கு எதிராகச் சென்றபடி ஆடுவர். இதற்குச் சற்றுத் தள்ளிப் பெண்கள் தனிக் குழுவினராக ஆடியபடி இருப்பர். பெண்களின் ஆட்டத்தில் முன்னே எகிறிக் குதித்தலும் கைகளை மேலம் கீழும் அசைத்தலும் குறிப்பிடத்தக்க செயலாகும். வியர்த்துக் கொட்டினாலும் நடனமாடுபவர்கள் தொடர்ந்து நெடுநேரம் அவ்வப்போது மாறி ஒலிக்கும் இசைக்கு ஏற்ப ஆடியபடி இருப்பர். நடனமாடுபவர்களுள் மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுள் ஒருவன் தேவியினையும் மற்ற இருவரும் பூசாரிகளையும் குறிப்பர். மார்பு, வயிறு, கால்கள், சுரங்கள் ஆகியவற்றில் பட்டை தீட்டியவர்களாகக் கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு கைகளில் இரண்டடி நீளமுள்ள குறுந்தடியினைத் தாங்கியவர்களாக இருப்பர். ஆடும் அவர்கள் ஆவேசம் உற்றவர்களாக நடுங்கும்போது அந்தக் குச்சிகளைத் தலைக்கு மேல் உயர்த்திக் கொள்வர். இடையிடையே அவற்றை வீசி ஆட்டவோ ஒன்றுடன் ஒன்றை மோதவோ செய்வர். தேவி முதன்முதல் தங்கள் முன் தோன்றியபோது அவள் கையில் இரண்டு குச்சிகளைத் தாங்கியிருந்தாள் எனப் பணியன்கள் நம்புகின்றனர். தேவி வேடமிட்டவனும் அவனுக்கு அணுக்கர்களான இருவரும் தலைக்கு மேல் குச்சியினைத் தாங்கியவர்களாக ஆவேசமுற்றவர்களாக ஆடியபடி, கூடியுள்ளவர்களுள் வயதில் மூத்த பெரியவர்களிடம் நெருங்கி, அவர்களுடைய வாழ்த்தினைப் பெறுவர். அந்தப் பெரியவர்கள் அவர்களை வணங்குவது போலத் தங்கள் கையினை அவர்கள் முகத்தின் மீது வைத்துப் பின் அந்தக் கையினைத் தங்கள் முகத்தில் ஒற்றிக் கொள்வர். அதிகாலையில் ஊரார் எளிய முறையில் உணவுகொண்டபின் இந்தச் சடங்கு முடியும்வரை உண்ணும் வழக்கம் இல்லை. தேவியாக நடிப்பவன் நிற்கும் அந்தக் கம்பத்தின் மீது ஏறி அமர்ந்து கூட்டத்தினரைப் பார்த்துத் தேவியாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு அவர்களுடைய நடத்தியினையும் ஒழுக்கத்தையும் பற்றி விமர்சிப்பதோடு இந்தச் சடங்கு முடிவுறும்.

"பணியன்கள் ஆவிகளையே தெய்வங்களாக வைத்து வழிபடுகின்றனர். அத்தெய்வங்களுக்கு இவர்கள் உயர்ந்த மேடைகளில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்கின்றனரேயன்றிக் குருதிப்பரி தருவதில்லை" என மலபார் மாவட்ட விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது. காட்டுப் பகவதி என்ற தேவதையினையும் இவர்கள் வழிபடுகின்றனர். "இத்தேவதைக்கான கோயில்கள் பணியன்கள் வாழும் குடியிருப்புகளுள் பெரும்பாலானவற்றில் இடம்பெற்றிருக்கக் காணலாம். அக் கோயில்களில் உருவங்கள் இடம் பெற்றிரா. தேவதைக்கு எனப் புக்தர்கள் காணிக்கையாகச் செலுத்திய உடைகளும் நகைகளுமே ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும். இத்தேவதையினைச் சிறப்பிக்க ஆண்டுதோறும் ஒரு வாரம் அளவுக்கு நீட்டிக்கும் திருவிழாக் கொண்டாடுகின்றனர். அதில் கொமாரனும் நுளம்புக்காரன் எனப்படும் பூசாரியும் முக்கியமானவர்களாகப் பங்கு வகிப்பர். இவர்களுள் முன்னவன் தேவியின் உடைகளை அணிந்து கொண்டவுடன் அவன் தெய்வம் ஏறபட்டவனாக, வர உள்ள நலந் தீங்குகளைப் பற்றி வாக்குக் கொடுப்பான்."

விளையாட்டுக்கள்:– மரக்கிளை ஒன்றிலிருந்து நீண்ட பிரம்பு ஒன்று தொங்கவிடப்படும். அதன் கீழ் முனையில் குறுக்குச் சட்டம் ஒன்றினைப் பொருத்தி சிறுவன் ஒருவன் அதில் அமர்ந்தவனாக எல்லாத் திசைகளிலும் அதனை அசைத்து ஊஞ்சலாடுவான். மற்றொரு விளையாட்டில் பன்னிரண்டு அல்லது பதினான்கு அடி நீளமுள்ள கட்டையினைத் தரையிலிருந்து நான்கரை அடி உயரமுள்ள ஒரு கம்பத்தில் பொருத்தி அதன் ஒரு முனையில் அமர்ந்து காலால் தரையினில் உந்திச் சுழன்று சிறுவர்கள் ஆடுவர்.

பணியன்களில் சிலர் மணிக்கட்டு, முழங்கை, கழுத்து ஆகியவற்றில் காய்ச்சல் முதலிய நோய் நொடிகளிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தாயத்து அணிகின்றனர். சிலர் வேண்டுதல் செய்து கொண்டவர்களாகத் தங்கள் தலைமுடியினைச் சடையாக விட்டுள்ளனர். ஆண்கள் பித்தளை, எஃகு செம்பு ஆகியவற்றாலான மோதிரங்களைக் கைவிரல்களில் அணிவதோடு காதுகளில் பித்தளைக் கடுக்கன்களையும் அணிகின்றனர்.

அதேபோன்று பெண்களும் மோதிரங்கள் அணிவதோடு கைகளில் வளையல்கள் அணிகின்றனர். காது மடல்களைத் தொங்கும்படியாகச் செய்து துளையிட்டுப் பனையோலையாலான சுருள்களை அவற்றில் அணிவர். சிலர் மூக்குக் குத்திக்கொண்டு அதில் மரக் குச்சிகளை அணிந்திருப்பர்.

மலையடிவாரங்களில் உள்ள குடியிருப்புக்களில் தங்கியுள்ள பணியன்கள் மலைமுறை எனப்படும் அறுவை முறையில் நெருப்பு உண்டாக்குகின்றனர். சுமார் ஒரு அடி நீளமுள்ள இரண்டு கணுக்களைக் கொண்டுள்ள மூங்கில் துண்டினைக் குறுக்கே இரு சமபாகங்களாகப் பிளப்பர். அதில் ஒன்றினைக் கத்தியால் கூரிய விளிம்பு உள்ளதாகச் சீவுவர். மற்றொன்றில் மூன்றில் இரண்டு பங்கு நீளத்திற்கு ஒரு குழிவினை உண்டாக்கி அதில் ஒரு பருத்தித் துணியினைத் திணிப்பர். பின், புறத்தே குவிந்த பக்கம் மேல்நோக்கி இருக்கும்படியாக அதனைத் தலையோடு இறுகச் சேர்த்துப் பிடித்தபடி இருவர் கூராக்கப்பட்ட முனையினை அதன் குறுக்கே அதன் இடைவெளியில் உள்ள மரத்தூள்கள் நெருப்புப் பொறிகளில் பற்றிக் கொள்ளும்படியாக ஒரே சீராக வேகமாக இழுப்பர். அந்தத் தீப்பொறிகளைப் பின்னர் வாயால் ஊதித் துணியில் தீப்பிடித்துக் கொள்ளுமாறு செய்து அதனைக் கொண்டு அடுப்பு அல்லது சுருட்டு ஆகியனவற்றைப் பற்ற வைத்துக்கொள்வர்.

புதுப்பாடி என்ற இடத்தில் யானைப்பாகன் ஒருவன் காடிகள் வெட்டப்பட்ட மூங்கில் குச்சி ஒன்றினைப் பத்திரமாகப் பாதுகாத்து வருகின்றான். அதில் உள்ள காடி ஒவ்வொன்றும் அவனுக்கு ஒரு நாள் கூலி பாக்கி என்பதனைத் தெரிவிக்க ஆறு காடிகள் காணப்பட்டன.

பணியன்களின் சராசரி உயரம் 157.4 செ.மீ. மூக்கின் நீள அகலத் தகவின் சராசரி விகித எண் 95, மேலளவு 108.6 கைகளின் நடுவிரலிலிருந்து முழங்கால் முட்டியின் உச்சி வரையான தூரம் 4.6 செ.மீ. இந்த அளவீடு உயரம் நூறு எனக் கொள்ளப்படும் விகிதத்திற்கு ஆனதாகும். இந்த அளவு நீண்ட கைகளை உடைய ஆப்பிரிக்க நீக்ரோக்களின் கை அளவுகளோடு கிட்டத்தட்ட ஒப்புமையுடையதாகும்.

பஞ்சை: - Panjai

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பாண்டிய வேளாளர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. பஞ்சை என்ற பெயர் வறுமையால் வாடுபவனைக் குறிப்பதாகும். இரத்தலை மேற்கொண்டுள்ள பண்டாரங்களை இப் பெயரால் அழைப்பது வழக்கம்.

பஞ்சாரம் - Panjāram

பஞ்சாரம் அல்லது பஞ்சாரம்கட்டி என்பது இடையன்களின் ஓர் உட்பிரிவுக்கான பெயர். இது இவர்கள் சாதிப் பெண்கள் அணியும் தங்க நகை ஒன்றின் பெயரடிப்படையில் அமைந்த பெயராகும். இப்பிரிவினுள் கைம்பெண்கள் மறுமணம் தாராளமாக அனுமதிக்கப்படுகின்றது. கிருஷ்ணன் தான் விரும்பிய இடைச்சாதியினைச் சேர்ந்த கைம்பெண்களின் கழுத்தில் இந்த அணியினை அணிவித்து அவர்களோடு உறவுகொண்டு வந்ததன் விளைவாகத் தோன்றியவர்களே இச்சாதியார்.

பஞ்சுக்காரன் - Panjukkāra (Cotton - man)

வேளாளரின் உட்பிரிவு ஒன்றின் தொழில் தொடர்பான பிரிவு. இவர்கள் இன்று இப்பெயர் குறிப்பதைப் போலப் பஞ்சுத் தொழிலோடு தொடர்புடையவர்களாக இல்லை. இவர்கள் தங்களைப் பஞ்சுக்காரச் செட்டிகள் என அழைத்துக் கொள்கின்றனர். முகமதியர்களான பஞ்சு துப்புரவு செய்யும் தூதே குலத்தவர்களுக்கு நேரான தமிழ்ச் சொல் பஞ்சுக்கொட்டி அல்லது பஞ்சாரி என்பதாகும்.

பன்னாடை – Pannādai (sheath of the cocoanut leaf)

வேட்டுவன்களின் ஓர் உட்பிரிவு.

பண்ணையான் – Pannaiyān

அளவன்களின் பட்டப்பெயர்.

பன்னர – Pannara

மாலியரின் உட்பிரிவு ஒன்றின் பெயர்.

பன்னிரண்டு நாள் - Pannendu Nāl (twelve days)

பிராமணர்களைப் போல இறுதிச் சாவுச் சடங்குகளைப் பன்னிரண்டாம் நாளன்றே நடத்தும் பள்ளிகளுக்கான பெயர்.

பன்னிரண்டாம் செட்டி - Pannirendām Chetti

செட்டிகளின் ஒரு பிரிவு

பாணொ - Pāno

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பாணொாக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- "பாணொாக்கள் கஞ்சம் மாவட்டங்களில் காணப்படும் நெசவில் ஈடுபட்டுள்ள சாதியார் ஆவர். சோட்டா நாக்பூரிலும் ஒரிசாவிலும் காணப்படும் நெசவிலும் கூடை முடைதலிலும் ஈடுபட்டுள்ள தாழ்ந்த சாதியரோடு ஒத்தவர்களே இவர்கள் என்பதில் ஐயமில்லை. விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மலைவாசிகளிடையே வாழும் தோம்புகளின் தகுதியினைப் பெற்றவர்களாகப் பாணொாக்கள் கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த கோண்ட்களிடையே வாழ்ந்து வருகின்றனர். பாணொா, தோம்பொ என்ற பெயர்கள் பொதுவாக ஒரே பொருளனவாகக் கருதப்படுகின்றன. (பார்க்க: தோம்பர்) சித்ரா என்ற உட்பிரிவினைச் சேர்ந்த பாணொாக்கள் உலோகத்தில தொழில் செய்பவர்கள்."

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பாணொாக்களைப் பற்றி மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:- "கஞ்சம் முகவர் பகுதியில் பெருமளவில் காணப்படும் சாதியினரான நெசவாளர்கள் பாணொாக்கள். கொண்ட் மொழியில் இச்சாதியாருக்குரிய பெயர் தொம்பொலொகொ. இது இவர்களுக்கும் விசாகப்பட்டினத்தில் வாழும் தொம்பர்களுக்கும் இடையே உள்ள உறவைப் புலப்படுத்துவதாகும்". இவர்கள் கோண்ட், ஒரிய மொழிகளைப் பேசகின்றனர். "வணிகம், நெசவு, திருட்டு ஆகியனவே இவர்கள் தொழில். கோண்ட்களின் அறியாமையினையும் மூட நம்பிக்கையினையும் பயன்படுத்திக் கொண்டவர்களாகத் தரகர்களாகவும், சிறுவணிகர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் அண்டிப்பிழைப்பவர்களாகவும் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். ஒரியர்கள் இல்லாத பகுதிகளில் இவர்கள் மிகுந்த செல்வாக்குடையவர்களாகக் கோண்ட்களின் நில எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் நடுவர்களாகக் கூட விளங்குகின்றனர்." என நான் ஒரு குறிப்பில் படித்தேன். பாணொாக்களைப் பற்றிய சுருக்கமானதொரு குறிப்பில்

திரு.சி.எப்.மக்கார்டியெ எழுதுவதாவது:-- "சில பகுதிகளில் பாணொக்கள். தோம்புகள், சித்ரா என்ற பட்டங்களைத் தரிக்கின்றனர். சமவெளியிலிருந்தும் மலைப்பகுதிகளுக்கு வந்து குடியேறிய பறையர் (தெலுங்கு மாலர்) களாக இவர்களைக் கருதுகின்றனர். நெசவும், பித்தளையில் பொருள்கள் செய்தலுமே இவர்கள் தொழில், இடையிடையே மாற்றத்திற்காக வேண்டிக் கொம்பு, தோல், கால்நடை ஆகியவற்றின் வணிகத்தில் ஈடுபடும் இவர்கள் சிலபோது கோண்ட்களின் வீடுகளில் புகுந்து திருடுவதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். மலைப் பகுதிகளில் பயிரிடுகைக்காகச் செல்லும் சமயங்களில் கோண்ட்கள் தங்கள் வீடுகளுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எதனையும் செய்யாமல் விட்டுச் செல்வதே இவர்கள் இவ்வாறு அவர்கள் வீடுகளில் புகுந்து திருடக் காரணமாகும். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சித்ராக்கள் கோண்ட் ஆண்களுக்கும் ஹட்டி சாதிப் பெண்களுக்கும் பிறந்த கோண்ட்கள் அணிவதற்கான பித்தளை மோதிரங்களும் வளையல்களும் செய்பவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. பாணொக்கள் ஒழுக்கநெறி பேணாத கெட்ட பழக்க வழக்கங்களுக்கு ஆட்பட்ட குடிகாரர்கள், கோண்ட்கள் இவர்களோடு உண்ண மறுப்பர். எனினும் இவர்களோடு ஒன்றாக இருந்து மதுப் பருக கோண்ட்கள் மறுப்பதில்லை என நான் நினைக்கிறேன். மற்றவர்கள் கண்டு வியக்கும்படி குடித்துக் களிப்பதில் இருபிரிவினருமே சாதனைகள் புரிவர். பாணொக்கள் தங்கள் வட்டாரத்தில் வாத்திய இசைக் குழுவினராகவும் தொழில் புரிகின்றனர். திருமணம், சாவு, பலிச்சடங்குகள் ஆகியனவற்றுக்காக இவர்கள் இசைக் குழுவினராகப் பணியாற்றும் போது அதற்கு ஊதியமாக உணவும் சாராயமும் வேட்டி முதலியனவும் பெறுவர். பெரிய சால் *(Shorea robusta)* மரக்கட்டைகளைக் கோடலியால் செதுக்கிச் சேர்த்துக் கட்டி அமைக்கப்பட்டனவே கோண்ட் மற்றும் பாணொக்கள் இல்லங்கள். அவற்றின் மேலே கரையான் அரிக்காத காட்டுப்புல் வகைகளை வேய்ந்திருப்பர். மூங்கில் காடுகள் உள்ள பகுதிகளில் சால் மரத்திற்குப் பதிலாக மூங்கிலால் வீடுகளை அமைத்துக் கொள்கின்றனர். பாணொக்கள் தொம்பா சாய் எனப்படும் தனித்த குடியிருப்புகளிலேயே பெரிதும் வாழ்கின்றனர். கோண்ட்கள், பாணொக்கள், உரியர்கள் ஆகியோரிடையே மண உறவுகள் அனுமதிக்கப்படுவதில்லை. பாணொக்கள் கோண்ட் சாதிப் பெண்களை அழைத்துக் கொண்டு ஓடிப்போய்க் குடும்பம் நடத்தக் காணலாம். அவ்வாறு கணவன் மனைவியாக வாழ்ந்து வருபவர்கள் திருமணம் புரிந்து கொள்வதில்லை. சில ஆண்டுகளுக்கு முன் கோண்ட்

சாதி இளைஞன் ஒருவன் மகளை மணம் முடிக்க நிச்சயதார்த்தம் நிகழ்த்தப்பட்டது. சில ஆண்டுகளுக்கப் பின் அந்த இளைஞன் உரிய பரிசுப் பொருட்களைப் பெண்ணின் தந்தையிடம் செலுத்தித் திருமணத்திற்கான நாளினைக் குறிக்கும்படி கேட்டுக்கொண்டான். எனினும் திருமணம் நடக்கும் முன் பாணொ ஒருவன் அந்த மணமகளின் தந்தையிடம் சென்று மணமகள் தன்னுடைய மகள், அவள் அவளுடைய பெற்றோர் திருமணம் செய்து கொள்ளும் முன் பிறந்தவள் – என்றும் மணமகன் தந்த பரிசுப் பொருள்கள் தனக்குச் சேர வேண்டும் என்றும் முறையிட்டுக் கொண்டான். இந்த வழக்குப் பஞ்சாயத்தைச் சபையாரிடம் சென்றது. அவர்கள் பரிசுப் பொருட்கள் பாணொவிற்குச் சேர வேண்டியதே முறையானது எனத் தீர்ப்பு வழங்கினர். மணமான கோண்ட் பெண் ஒருத்தியுடன் பாணொ ஒருவன் தகாத முறையில் உறவு மேற்கொள்வானாயின் அவன் அவளுடைய கணவனுக்கு ஒரு பாரொன்ஜொ அல்லது ஒரு எருமையோடு கூட ஒரு ஆடு, ஒரு பன்றி, ஒரு கூடை அரிசி, ஒரு ரூபாய், மண்பாண்டங்கள் ஆகியனவற்றைத் தர வேண்டும். இத்தகைய தண்டம் பெறும் கணவன் அதன் பின் தன் மனைவியோடு தொடர்ந்து குடம்பம் நடத்தி வருவான். பாணொக்களுக்கும் கோண்ட்களுக்கும் நெருங்கிய உறவு இருப்பதாகத் தெரிகின்றது. கோண்ட்கள் தங்களுக்குத் தொல்லைகள் ஏற்படும் போதெல்லாம் பாணொக்களைக் கலந்து அதனைத் தீர்க்க வழிவகைகளைக் கேட்டறிவர். உரியர்கள், பாணொக்கள், கோண்ட்கள் ஆகிய இருவரிடமிருந்துமே தனித்து வாழ்ந்து வருவதோடு கலந்து பழகுவதிலும் கட்டுப்பாடுகளை மேற்கொள்கின்றனர். பாணொக்களுக்கும் கோண்ட்களுக்கும் என எருமைகளைப் பலியிடும் போதும் உரியவர்களுக்காக ஆடு அல்லது மறிகளைப் பலியிடும்போதும் மட்டுமே உரியர்கள் இவர்களோடு கலந்து பழகுகின்றனர். கஞ்சம் மாவட்டக் கையேட்டில் கோண்ட்கள் சாவுச் சடங்குகள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது வருமாறு:- "ஒருவன் புலியால் கொல்லப்படுவானாயின் ஒரு பன்றியினைப் பலியிட்டு அவனுக்கான சாவுத் தீட்டுப் போக்கும் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. அந்தப் பன்றியின் தலையினைப் பாணொ ஒருவன் கோடரியினால் வெட்டி அந்த ஊரைச் சேர்ந்தவர்களை வரிசையாகக் கால்களை அகலமாகப் பரப்பிக் கொண்டு நிற்கும்படி செய்து வெட்டப்பட்ட பன்றித் தலையினை அவர்கள் கால்களுக்கிடையே நுழைப்பான். யாருடைய கால்களிலேனும் அந்தப் பன்றியின் தலைபட நேர்ந்தால் அது அவனுக்கு கெட்ட சகுனமாகக் கருதப்படும். சாதிக்காய் *(Terminalia)* பட்டுக்கூடு,

தம்மரம் ஆகியனவற்றைக் காடுகளில் திரட்டும் இவர்கள் இவற்றைச் சிறு வணிகர்களான பாணொக்களிடம் உப்புக்காகப் பண்டமாற்றுச் செய்கின்றனர்." கஞ்சம் மலையகங்களில் பாணொர்க்கள் காடுகளில் பட்டுக் கூடுகளைத் தேடிச் சுற்றியலைவர் எனக் கூறப்படுகிறது. கஞ்சம் எல்லைக்கு அப்பால் பாணொக்கள் பட்டுக்கூடுகளைச் சேகரிப்பதை வழக்கமான தொழிலாகக் கொண்டுள்ளனர். காடுகளில் சிறு வட்டாரங்கள் பாதுகாக்கப்பட்டனவாக அறிவிக்கப்பட்டு அவ்வட்டாரங்கள் சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு பாணொக்களிடையே குத்தகைக்கு விடப்படுகின்றன. அதில் அவர்கள் பட்டுப்பூச்சியினை வளர்த்து பட்டுக் கூடுகளைப் பட்டு உற்பத்திக்காகச் சம்பல்பூருக்கும் பெர்காம்பூருக்கும் அனுப்பிவைக்கின்றனர்.

கோண்ட்களிடையே வாழும் கொண்ட பாணொக்கள் சமவெளிகளில் வாழும் தேசபாணொக்கள் எனப் பாணொக்கள் இரண்டு தெளிவான பிரிவினராக உள்ளனர். இவர்களுள் முன்னவர்கள் கோண்ட்களின் பழக்கவழக்கங்கள் சிலவற்றை மேற்கொண்டவர்களாக இருக்கப் பின்னவர்கள் சமவெளியில் வாழும் உரியர் பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களாக உள்ளனர். கோண்ட்களின் சாதித் தலைவர்களே (ஐமொளிகோக்கள்) கோண்ட் பாணொக்களின் மேல் மேலாண்மை செலுத்துகின்றனர். சாதி விதிகளை மீறியதற்காக விதிக்கப்படும் தண்டனைகள் சில சமயங்களில் கடுமையானவையாக இருக்கும். பலிகுடாவினைச் சுற்றியுள்ள வட்டாரங்களில் பிறன் மனைவியோடு கள்ளக்காதலில் ஈடுபடும் ஒருவன், வழக்கினைக் கேட்கும் பஞ்சாயத்தாருக்கு இரண்டு ரூபாய் தண்டத் தொகையும் இரண்டு எருமைகளையும் தரக் கடமைப்பட்டவன். அப் பகுதிக்குத் தெற்கே உள்ள வட்டாரங்களில் இதே குற்றத்திற்குப் பன்னிரண்டு எருமைகளைத் தருவதோடு தான் கள்ள உறவு கொண்டவளுடைய கணவனுக்கு அவன் செலுத்திய மணமகளுக்கான விலையினை விட இரண்டு மடங்கு தொகையினையும் தருதல் வேண்டும். தேசபாணொக்களிடையே உரியரிடையே உள்ள அமைப்பினை ஒத்ததான சாதிச் சபை அமைப்பு உள்ளது. இவர்களுடைய சாதித் தலைவன் பேர எனப்படுவான். நாயகொ என்ற உதிவியாளனும் பொல்லொபய அல்லது கொஞ்சாரி என்ற பணியாளனும் சாதித் தலைவனுக்கு உள்ளனர்.

தேச பாணொக்களின் மணச் சடங்குகள் தண்டாசியர் மற்றும் ஹட்டியர் மணச் சடங்குகளைப் பெரிதும் ஒத்தவை. கொண்ட பாணொக்களின் திருமணச் சடங்குகள் கோண்ட்களின் சடங்குகளை ஒத்தவை. கோண்ட் சிறுமியரைப் போலவே மணம் முடிக்கப் பெறாத பாணொ சிறுமியரும் தங்கடி எனப்படும் அவர்களுக்கென்றே அமைக்கப்பட்ட தனிக் கொட்டகைகளில் படுத்து உறங்குவர். இவர்கள் கோண்ட்களைப் போல மணத்திற்குரிய கொண்டிகள் எனப்படும் அன்பளிப்புக்களை வழங்குவர். கஞ்சம் மாவட்டக் கையேட்டில் கோண்ட்கள் மணம் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளதாவது:– "மணமகளை ஒருவணிகப் பொருளாகவே இவர்கள் பேரம்பேசி விற்பர். அவளுக்கு விலையாகக் கொண்டிகள் பெறப்படுகின்றன. ஒரு கொண்டி, ஓர் எருமை, ஒரு பன்றி, ஒரு பித்தளைப் பானை என எதுவாக வேண்டுமாயினும் இருக்கலாம். நூறு கொண்டிகள் என்பது பத்து எருதுகள், பத்து எருமைகள், பத்துச் சாக்கு தானியங்கள், பத்து அடுக்குப் பித்தளைப் பானைகள், இருபது மறிகள், பத்து பன்றிகள், முப்பது கோழிகள் என மொத்தம் நூறு உருப்படிகளைக் கொண்டதாக இருக்கும்." கோண்ட பாணொக்கள் மணத்தில் மணமக்களின் விரல்கள் இணைத்து வைக்கப்படுகின்றன. திருமணம் நடைபெறும் வீட்டின் வாசலில் திருமணத்திற்கு வரும் விருந்தினர்கள் கைகால் அலம்பிக் கொள்ளப் பெரியதொரு பித்தளைப் பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி வைப்பதை இவர்கள் மணச் சடங்குகளுள் முக்கியமானதும் பெருமையினை மேம்படுத்துவதுமான சடங்காகவும் கருதுகின்றனர்.

மூதாதையர்களை வழிபடும் பாணொக்கள் குடும்பத்தில் ஒரு சாவு நிகழும்போது மூதாதையருக்குச் சோறு படைப்பர். சில பாணொ கிராமங்களில் ஒரு குழந்தை பிறந்தவுடன் பூசாரியிடம் சென்ற பாட்டனோ பாட்டியோ மீண்டும் வந்து அதே குடும்பத்தில் குழந்தையாகப் பிறந்துள்ளார்களா எனக் கேட்டறியும் வழக்கம் உள்ளது. பூசாரி அவ்வாறு பிறந்துள்ளனர் எனப் பதிலிறுப்பானாகில் மூதாதையாருக்காக ஒரு பன்றியினைப் பலியிடுவர். பாணொக்கள் சிலர் கிராம தேவதைகளான தாகராணிகள் வழிபாட்டினை மேற்கொண்டுள்ளனர். அத் தேவதைகளின் முன் அவர்கள் அரிசியினையும் மஞ்சளையும் எட்டு என்ற எண்ணின் உருவத்தில் அமைத்து வைத்து வழிபடுவர். ஒரு கோழியினை அப்போது பலியிட்டு அதன் குருதியினை எட்டு என்ற எண்ணின் உருவத்தில் உள்ள ஒரு வட்டத்தில் மட்டும் விடுவர்.சில பகுதிகளில் தர்ம தேவதாவினையும்

கண்ணாசினியினையும் வழிபடுகின்றனர். தர்மதேவதாவிற்கு விரட்டியடிக்கப்பட்ட ஆட்டுக்கடாவினைப் பலியிடுவர். கண்ணாசினிக்குக் கோழிகளையும் ஆட்டுக்கடாவினையும் பலியிடுகின்றனர்.

கோண்ட்களிடையே வாழும் பாணொக்கள் பிரிவுப் பெண்கள் கோண்ட்களின் பெண்டிரைப் போல தங்கள் முகத்தில் பச்சை குத்திக் கொள்கின்றனர். மற்ற பழக்க வழக்கங்களிலும் இவர்கள் கோண்ட் சாதிப் பெண்களையே பின்பற்றுகின்றனர்.

ஐரோப்பியர்களின் புதைகுழியில் புதையல்களும் உடன் வைக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையில் பாணொக்கள் ஐரோப்பியரின் புதைகுழிகளைத் தோண்டியதான சில நிகழ்ச்சிகள் எனக்குத் தெரியும்.

பண்ட – Panta (a crop)

ஏனாதியர், காபுகள், ஆகியோரின் உட்பிரிவு. தென் ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் பண்டரெட்டி தெலுங்கு பேசும் உழவர் (காபு) சாதியினராகப் பதியப்பட்டுள்ளனர்.

பண்டல – Pantala

திருவாங்கூரில் இது சாமந்தனின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. அரசு கருவூலம் எனப் பொருள்படும் பண்டாரத்தில் என்பதிலிருந்து இச்சாதிப் பெயர் வந்துள்ளதாக கூறுவர்.

பண்டார் – Pantāri

திருவாங்கூர் கணக்கெடுப்பு அறிக்கையில் இடச்சேரி உட்பிரிவினரான நாயர்களுக்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது. பன்னிரண்டு வீடன் என்பதும் அதில் நாயர்களின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

பப்படம் – Pappadam

தங்களைப் பப்படம் செட்டி என அழைத்துக் கொளபவர்களுள் பெரும்பாலோர் மலபாரிலேயே காணப்படுகின்றனர். இவர்கள் பப்படம் தயாரித்து விற்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள். நம்பூதிரிப் பிராமணர் உட்பட அனைத்துச் சாதியாரும் இவர்களிடமிருந்து பப்படம் பெறுகின்றனர்.

பாப்பினி – Pappini

அம்பலவாசி வகுப்பைச் சேர்ந்த பிராமணப் பெண்களுக்குரிய ஒரு பெயர்.

பப்பு – Pappu (split pulse)

பலிசர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.பருப்பு எனப் பொருள்படுவது.

பரதேசி – Paradēsi

1901 சென்னை மாநிலக் கணக் கெடுப்பு அறிக்கையில் மலையாள இரவலர்களுள் ஓர் பிரிவினர் எனப் பதியப்பட்டுள்ளது. வேற்று நாட்டவர் எனப் பொருள்படுவதான இது கொச்சியினைச் சேர்ந்த வெள்ளை யூதர்களைக் குறிப்பதற்குரியதான தொடர்புடைய சொல்லாக சர்க்கார் கணக்குகளிலும் அரசுப் பட்டயங்களிலும் இடம்பெற்றுள்ளது.

பறைய தாத – Paraiya Tāda

வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் தூய்மையற்ற வள்ளுவன்களுக்கான ஒரு பெயராகப் பதியப்பட்டுள்ளது. இதன் நேர்பொருள் பறையதாடன் அல்லது தாசரி என்பதாகும்.

பறையர் – Parayan

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களான பறையர் எனப் பொதுப்பட வழங்கப்படும் சாதியார் அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இருபது லட்சம் பேராவர். தங்களை இந்தியக் கிறித்தவர்கள் எனப் பதிந்துள்ள பெரிய எண்ணிக்கையிலானவர்களுள்ளும் பலர் இச்சாதியினைச் சேர்ந்தவர்களாவர். பறையர் பற்றிய பின்வரும் விவரங்களுக்கு மறைத்திரு. சி. எ. கிளெய்டன்* அவர்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவனாவேன்.

கொட்டு எனப்பொருள்படும் பறை என்ற சொல்லிலிருந்து பறையர் என்ற சொல் பிறந்ததாக மேற்றிராணியரசர் கால்டுவெல் கருதுகின்றனர். பறையருள் சிலர் திருமணம், சாவு, திருவிழா ஆகியவற்றின்போது பறை கொட்டுவதோடு அரசின் அறிவிப்புக்களைப் பறைகொட்டி

---

*சென்னை அருங்காட்சியக மடல் V.2, 1906 (Madras Mus. Bull., V2 1906.)

அறிவிக்கின்றனர். எனினும் இக் கருத்தை உடன்படாதவராக 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. எச். ஸ்டுவர்ட் கூறியுள்ளவை வருமாறு: – "பறையர்களுள் ஒரு பிரிவினரே பறைகொட்டுகின்றனர். இத் தொழில் பறையருக்கு மட்டும் உரியதாக இல்லை. இன்று எண்ணிக்கையில் மிகுந்தவர்களாகவும் ஒரு காலத்தில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருந்த சாதியாரின் பெயர் அவ்வப்பொழுது அவர்கள் இன்று பலசாதியாரோடு மேற்கொள்ளும் தொழிலின் அடிப்படையில் அமைந்தது என்பது ஒரு சிறிதும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த நிகண்டான திவாகரத்தில் பறையர் என்ற சொல் காணப்படவில்லை. இன்றும் மலையாளத்தில் வழக்கில் உள்ளதான புலையன் என்ற சொல்லே அன்று இச்சாதியாரைக் குறிக்குப் பயன்படுத்தப்பட்டது. சைவ சமய நாயன்மார்களுள் ஒருவரான நந்தன் சோழநாட்டைச் சேர்ந்தவனாயினும் பெரியபுராணக் கதைப்படி அவன் தன்னைப் புலையன் என்றே அழைத்துக் கொள்கின்றான். "கிறித்தவ சகாப்தத்தில் முதல் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பழைய தமிழ் இலக்கியங்களுள் பறையன் என்ற சொல்வழக்கு இல்லை எனினும் எயினர் என்ற இச்சாதியாரைப் பற்றிய குறிப்புகள் பலவிடங்களில் இடம்பெற்றுள்ளன. இவர்கள் அன்றைய சமூகத்தைச் சேர்ந்த மக்களுள் தனித்த இயல்பு வாய்ந்தவர்களாகக் காணப்படுவதோடு ஊர்களுள் மக்களிடையே வாழாமல் தங்களுக்கே உரித்தான தனித்த கோட்டைகளில் வாழ்ந்து வந்துள்ளனர். ஆம்பூர், வேலூர், ஆகியனவற்றை இவர்களுக்கு உரிய இத்தகைய கோட்டைகள் இருந்த இடங்களாகக் கூறுவர். எயினர்களான இவர்கள் பறையரின் மூதாதையராகலாம்" என 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. டபிள்யு. பிரான்சிஸ் குறிப்பிடுகின்றார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் சானரெட் பறையர் பற்றிய ஒரு குறிப்பில் கூறியுள்ளதாவது:– "இவர்கள் மற்ற சாதியாருக்குரிய கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. தங்கள் குடியிருப்புக்களுக்கு அருகிலேயே தங்களுக்கான கிணறுகளைப் பெற்றுள்ளனர். இக் கிணறுகளைச் சுற்றிலும் விலங்குகளின் எலும்புகளைப் போட்டு வைத்துள்ளனர். இதனைப் பற்றி அறிந்துள்ள இவர்கள் இவ்வாறு நிகழ்வதைத் தடுக்கலாம். பறையன் ஒருவனை வேறு

சாதியார் தங்களோடு பேச அனுமதித்தால் இவனுடைய மூச்சுக்காற்றுப்பட்டு அவர்கள் தீட்டுக்கு உள்ளாகாது இருக்க தன் கைகளால் வாயினைப் பொத்தியபடி பேசவேண்டும். சாலையில் மற்ற சாதியார் எதிரே வரும்போது இவன் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று அவர்களுக்கு வழிவிட வேண்டும். இந்தியர்கள் யாராயினும் சௌத்ரி உட்பட இவனை எதிர்பாராது தொட்டுவிட நேருமாயின் அவர்கள் குளித்துத் தங்கள் தீட்டினைப் போக்கிக் கொள்ள வேண்டும், பறையர்கள் தங்கள் எதிரே வருவதைப் பிராமணர்கள் உடன்படுவதில்லை. பிராமணனைக் கண்ட அளவில் இவன் ஓடி ஒளிய வேண்டும். பறையன் தொட்டதை உண்ணாதவர்களாகத் தங்களைக் காத்துக் கொள்ளவும், அவன் பயன்படுத்திய குவளையில் நீர் பருகாது தவிர்க்கவும் அனைவரும் மிகுந்த கருத்துடையவர்களாக உள்ளனர். மற்ற சாதியாருடைய இல்லங்களில் நுழைய இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இல்லங்களில் பணியில் அமர்த்தப்பட நேர்ந்தால் இவர்கள் சென்று வரத் தனியே ஒரு கதவினை அமைப்பர். பணியில் ஈடுபட்டுள்ள இவர்கள் தரையினைப் பார்த்தபடியே தங்கள் பணியினைச் செய்தல் வேண்டும். சமையல் அறையினுள் இவர்கள் பார்வை பட்டதாகக் கருதுபவர்கள் தங்கள் பாத்திர பண்டங்களை உடைத்துப் போடுவர். பறையர்கள் மேலுள்ள வெறுப்பினை ஐரோப்பியர்பாலும் காட்டுகின்றனர். பசுக்களின் இறைச்சியினை உண்பதும் வீடுகளுக்குள்ளாகவும் கோயில்களுக்குள்ளாகவும் இவர்கள் எச்சிலைத் துப்புவதும் பருகும் கலங்களை எச்சில் படும்படியாக வாயில் வைத்துப் பருகுவதுமான காரணங்களுக்காகவே இந்தியர்கள் ஐரோப்பியரை இழிந்தவர்களாக எண்ணுகின்றனர்."

தமிழ்நாட்டில் வடஆர்க்காடு தொடங்கி திருநெல்வேலி வரை அனைத்து மாவட்டங்களிலும் திருவாங்கூர் மாநிலத்தின் தென்கோடிப் பகுதிகளிலும் பறையர்கள் காணப்படுகின்றனர். தெலுங்கு நாட்டில் மாலர், மாதிகர் ஆகியோரும் கன்னட நாட்டில் ஹொலையர்களும் இவர்களுக்கு ஒப்பான சாதியாராவர்.

பறையருள் ஆண்களுக்கு வழங்கும் பெருவழக்கிலான பெயர்களுள் சில வருமாறு:-

கன்னி (கன்னியப்பன்)	சுப்பன்
ராமன் (ராமசாமி)	நொண்டி
ராசு	தம்பிரான்
வேலு	பெருமாள்
முத்தான்	வீரன்
மாரி	செல்லன்
கனகன்	அமாவாசை

தாய், பார்ப்பதி, அம்மை, முத்தம்மாள், ராசம்மாள், அம்மணி, செல்வி, கங்கம்மாள் ஆகியன பெண்களுக்குரிய பெருவழக்கினவான பெயர்களாம். ஒரு கிராமத்தில் வைணவநெறி சார்ந்த பறைத் தொழிலை மேற்கொணட பறையர்கள் அனைவரும் மகாபாரதத்தில் வரும் வீரர்களின் பெயர்களை உடையவர்களாக இருந்தனர் எனவும் அழுக்கோடு அம்மணமாகத் திரிந்த குழந்தைகளின் பெயர்களைக் கேட்டபோது இசுவாகன், கர்ணன், பீமன், திரெளபதி எனக் கூறின எனவும் திரு. கிளெய்டன் குறித்துள்ளார். ஒரு பறையனிலிருந்து இன்னொரு பறையனை வேறுபடுத்தி அறிய கண்ணன் மகன் தம்புரான் என்பது போலத் தந்தையின் பெயரையும் உடன் கூறுதல் வழக்கம். ஆவணங்களில் பற என்பதனைப் பறக் கன்னி என்பதுபோல இவர்கள் சாதியினைக் குறிக்க பெயரின் முன்னர் சுருக்கமாகப் பத்திரங்கள் எழுதுவார் குறித்தல் வழக்கம். பறையர்கள் செல்லப்பெயரிட்டு ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்வதிலே மிகவும் ஆர்வம் உடையவர்கள். சில சமயங்களில் அவர்களுக்குரிய பெயரே மறந்துபோகும் அளவுக்குச் செல்லப் பெயர்கள் செல்வாக்கு உடையனவாகிவிடுகின்றன. பின்வரும் செல்லப் பெயர்கள் இவர்களிடையே பெருவழக்கின:-

நொண்டி	கண்ணன்
கள்ளன்	முதலை
குள்ளன்	குடியன்
வெள்ளை	

நல்ல பண்புகளையோ சிறப்புகளையோ குறிப்பதான பெயர்களை வைத்துக்கொண்டால் அது தீங்கு செய்யும் தேவதைகளின் சினத்தை

மூளச் செய்யும் என்பதால் இவர்கள் அத்தகைய பெயர்களை வைத்துக் கொள்வதில்லை.

1891 கணக்கெடுப்பில் இவர்களிடையே 348 உட்பிரிவுகள் உள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. அவற்றுள் பின்வருவன பெரும் அளவிலான எண்ணிக்கையினைக் கொண்டவை.

உட்பிரிவின் பெயர்	வழக்கில் உள்ள மாவட்டங்கள்
அம்மா	தஞ்சாவூர், மதுரை
கட்டி	சேலம், திருச்சி
கிழக்கத்தி	சேலம்
கோளியன்	செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருச்சி
கொங்கன்	சேலம்
குறவன்	கோயமுத்தூர்
கோட்டை	தென் ஆர்க்காடு
முரசு	சேலம்
மொட்டை	மதுரை
பச்சை	கோயமுத்தூர்
சாம்பன்	தென் ஆர்க்காடு
சங்கிடுவன்	கோயமுத்தூர்
சோழியன்	தஞ்சாவூர், மதுரை
தங்கலான்	தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு, சேலம், திருச்சி.
வலங்கமட்டு	தென் ஆர்க்காடு

வேறுவேறு உட்பிரிவினைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் மண உறவு கொள்வதில்லை.

மேற்கண்ட பட்டியலில் இடம்பெற்றுள்ள முரசு பறையர் கன்னட நாட்டிலிருந்து தமிழ்நாட்டில் வந்து குடியேறிய ஹொலையர்கள் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. தென் மாவட்டங்களில் இப்பிரிவினைச் சேர்ந்த பெண்கள் கள்ளர் சாதிப் பெண்களைப் போல குதிரை மயிராலான கயிற்றினைக் கழுத்தில் அணிகின்றனர். இச்சாதிக்குரிய மேலும் சில உட்பிரிவுகள் வருமாறு:-

அறுத்துக்கட்டாதார்:	ஒரு முறை தாலி அறுத்தபின் மீண்டும் கட்டிக் கொள்ளாதவர்கள். இப்பிரிவினர் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிப்பதில்லை.
வலை:	வேட்டையில் ஈடுபடும் பறையர்
சங்கு:	சாவுச் சடங்கில் சங்கு ஊதுவோர்
தாதான்:	வைணவ நெறியினை மேற்கொண்டவர்களான இரவலர்களுக்கு உரிய பெயர். இப்பிரிவில்சிலர் வைணவர்களாகவும் சிலர் இரவலர்களாகவும் உள்ளனர்.

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. பிரான்சிஸ், பறையன் என்ற சொல்லைப்பற்றிக் கூறியிருப்பதாவது:- "இச்சொல் இப்பொழுது ஒரு இனத்திற்குரிய பெயராக ஆகிவிட்டது. இச் சாதி பழக்க வழக்கங்களில் வேறுபட்டதான பல உட்பிரிவுகளாகப் பிரிவுபட்டுவிட்டது. நெசவாளர் பிரிவினரான கோளியரும் வைத்தியத் தொழிலை மேற்கொண்டுள்ள பிரிவினரான வள்ளுவன்களும் பூணூல் அணிவதோடு மற்ற பிரிவினரோடு மண உறவு கொள்வதையும் உடன் உண்பதனையும் மேற்கொள்ளாத தனிச் சாதியாராக ஆகிவிட்டனர்." "உறுமிக்காரன், பம்பைக்காரன் என்பன உறுமி, பம்பை ஆகியன இசைப்பதனைத் தொழிலாகக் கொண்டவர்கள் சூடிக் கொள்ளும் பட்டப்பெயர் எனவும் பொதரயன், பொதர வண்ணான் என்பன வெளுக்கும் தொழிலை மேற்கொண்டவர்களுக்கான பட்டப்பெயரெனவும் திரு. பிரான்சிஸ் கூறுகின்றார். வலங்கமாட்டான் என்ற பட்டப் பெயர் வலங்கைப் பிரிவினருக்கு உரியது. இதனைப் பறையர் சிலர் பட்டப்பெயராகத் தரிக்கின்றனர்.

பறையன்களிடையே அவர்கள் எந்த நாட்டிலிருந்து இங்கு வந்து சேர்ந்தவர்கள் என்பதனைப் பற்றியதான நம்பிக்கைகளின் அடிப்படையிலான வழக்கு வரலாறுகள் எவையும் இல்லையெனத் திரு.கிளெய்டன் கூறுகின்றார். இந்த இனம் மிகத் தொன்மையுடையதாகத் தென்னாட்டில் முக்கியமான தகுதியினைப்

பெற்றிருந்தது என்பதற்கான சான்றுகள் உள்ளன எனவும் அவர் கூறுகின்றார். பிராமணர்கள் வருகைக்கு முன் அதற்குப் பின் சிறிது காலம் கூடப் பல்லவ அரசர்களுக்கு வள்ளுவன்களே குலகுருவாக இருந்துள்ளனர் எனத் திரு. ஸ்டுவர்ட் கூறுகின்றார் "ஸ்ரீ வள்ளுவன் புலவனான உவச்சன் (கோயிலதிகாரி) நாளும் அறுவரைப் பணிக்கு அமர்த்திக் கோயில் காரியங்களை நடத்தி வருவான்." என்ற குறிப்பினை உடைய இதுவரை வெளியிடப்படாத வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றினை அவர் இதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றார். இது வள்ளுவன் பூசாரி வகுப்பைச் சேர்ந்த செல்வாக்குடைய ஒருவனாவான் என்பதனைக் குறிப்பால் உணர்த்துவதாகும். அவனுக்கு ஸ்ரீ என்ற சிறப்பு அடை தரப்பட்டிருப்பதும்கருதத்தக்கது. இந்தக் கல்வெட்டால் மட்டும் பெரிதான உண்மை ஏதும் வெளிப்படவில்லையாயினும் இதனைத் தெய்வப்புலவனான திருவள்ளுவரைப் பற்றி வழங்கி வரும் கதையோடு ஒருங்கே வைத்து எண்ணிப்பார்க்கும்போது இதனால் பெறப்பட்ட உண்மைகள் உறுதிப்படுத்தப் படலாம். திருவள்ளுவருடைய காலத்தை உறுதியாக அறுதியிட இயலாதெனினும் அவர் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்தவர் என்பதில் ஐயம் இல்லை. அவர் வாழ்ந்த காலத்தில் வள்ளுவர் உட்பிரிவினுக்கு உரிய சாதியான பறையர்களும் சமூகத்தில் மதிப்புக்குரிய வட்டாரங்களோடு தொடர்பு அற்றவர்களாக இருந்திருப்பார்களாயின் அவர் இத்தகைய உயரிய புகழுக்கும் பெருமைக்கும் உரியவராக மதிக்கப்பட்டிருக்கமாட்டார் என்று துணிவதில் தவறேதும் இல்லை என்றே நினைக்கிறேன். இந்தக் கருதுகோளினை அவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்த ஒருத்தியை மனைவியாகப் பெற்றிருந்தார் என்ற வழக்கு வரலாறும் உறதிப்படுத்துகின்றது. அதே கருதுகோளின் அடிப்படையே அவருடைய உடன்பிறந்தவளாக வழங்கி வரும் அறநூல்களை யாத்த பெண்பாற் புலவரான அவ்வையாரின் சிறப்பையும் கல்வியறிவினையும் உறுதிப்படுத்துவதாகும்.

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டுக்கு உரியதான சோழப் பேரரசன் இராசராசனுடைய கல்வெட்டு ஒன்றில் பறையர் சாதி இப் பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளதாகத் திரு. பிரான்சிஸ் கூறுகின்றார். இச் சாதியில் அன்று நெசவு, உழவு என்ற இரண்டு உட்பிரிவுகள் இருந்ததாகத்

தெரிகின்றது. அன்றும் இச்சாதியார் தங்களுக்குரியதான சேரிகள். கிணறுகள். சுடுகாடுகள் ஆகியனவற்றைத் தனியே பெற்றிருந்தனர் எனத் தெரிகின்றது.

பறையர் சில தனி உரிமைகளை பெற்றவர்களாக உள்ளனர். அவற்றை இவர்கள் இந்து சமய நெறிகளில் அழுந்தியவர்களான இந்துக்கள் தரப் பெற்றிருத்தல் என்பது இயலாது. அவை பறையர் உயர்ந்ததொரு சமூகப்படியினை வாய்க்கப் பெற்றிருந்த காலத்தில் இவர்களுக்கு உரியனவாக இருந்துவந்தனவற்றின் எச்சம் ஆதல் வேண்டும். திரு. எம். ஜெ வால்ஹவுஸ் இவை தொடர்பாகக் கூறியுள்ளன வருமாறு:– " தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர் சிவன் கோயிலில் நடைபெறும் பெரிய திருவிழாவின்போது பறையரின் சாதித் தலைவனே தெய்வ உருவத்தோடு கூட யானை மீது ஒருங்கு அமர்ந்தவனாக வெண்சாமரம் வீசுகின்றனான். சென்னையில் கறுப்பர் நதரில்* (இன்றைய ஜார்ஜ் டவுன்) உள்ள எகட்டா தேவியின் திருவிழாவின்போது ஒரு பறையனே மணமகனாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றான். இராமானுசரைப் பின்பற்றுபவர்களின் தலைமையிடமான மைசூரில் உள்ள மேல்கோட்டையிலும் பேளூரில் உள்ள பிராமணர் கோயிலிலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மூன்ற நாள்களில் கோயிலினுள் நுழையும் உரிமையினைப் பறையர் பெற்றுள்ளனர்". மேல் கோட்டையில் ஹொலையரும் மாதிகரும் மூலவர் கருவறைவரை பிராமணர்களோடு கூடச் செல்லும் உரிமையினை இராமானுசர் இவர்களுக்கு மூன்று நாள்களுக்கு உரியதாக வழங்கியிருந்தார். எனினும் கி.பி. 1799– இல் அந்த உரிமையினைக் கருடக்கம்பம் வரை செல்வதற்காக என்று வரையறைப்படுத்தினர். பேளூரிலும் மேல்கோட்டையிலும் திருவிழா முடிவுற்றதும் கோயிலைப் புனிதப்படுத்தும் சடங்கை நிகழ்த்துகின்றனர். செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ பெரும்புதூரில் திருவாரூரில் பறையர் அனுபவிப்பது போன்ற அதே உரிமையினை அனுபவிக்கின்றனர். அங்கு வழிபாட்டிற்குரியதாக விட்டுணுவின் ஓர் அவதார மூர்த்தமாக இருர்

*(மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசர் 1906 சென்னை நகருக்கு வருகைத் தந்த சமயம் சென்னையின் கறுப்பர் நகர் என்ற பகுதியின் பெயர் ஜார்ஜ் டவுன் என அவர் வருகையின் நினைவாக மாற்றப்பட்டது. V.2. 1906 (Madras Mus Bull.. V2 1906.)

ஒரு சிலையினை முகமதியர் படையெடுப்பின்போது இவர்கள் காப்பாற்றித் தந்தமைக்காகவே இவர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநிலத்தைச் சேர்ந்த கிராமங்களில் வெட்டியான், தலையாரி, தண்டாசி, தோட்டி போன்ற தாழ்ந்த பொறுப்புக்களைப் பறையர் சாதியினைச் சேர்ந்தவர்களே ஏற்று நடத்தி வருவதாகத் திரு. ஸ்டுவர்ட் குறித்துள்ளார். காஞ்சிவரம், கும்பகோணம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய ஊர்களில் நடைபெறும் பெரிய தேர்த் திருவிழாக்களில் தேரினை வடம் பிடித்து இழுப்பதில் பறையர் பங்கு பெறகின்றனர். இவர்கள் தொடுவதால் வடம் தீட்டுக்கு உள்ளாவதாகக் கருதப்படுவதில்லை. மற்ற இந்துக்களும் இவர்களோடு உடன் சேர்ந்து வடம் பிடிக்கின்றனர். இத்துடன் தெலுங்கர்களான மாலர்கள் தங்கள் பொறுப்பில் சைவர்களான காபுகள், பலிசர்கள் ஆகியோருக்கு உரிய கௌரி, நந்தி, கணேசர் ஆகியவற்றினை வைத்திருப்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். தங்களை வைசியர் என அழைத்துக் கொள்ளும் கோமட்டிகள் மாதிகர்களைத் தங்கள் வீட்டில் நடைபெறும் திருமணத்திற்கு அழைத்தாக வேண்டும். எனினும் கோமட்டிகள் அந்த அழைப்பு மாதிகர் காதில் விழாதபடி தந்திரமாக அழைப்பு விடுப்பதில் கருத்தாக இருப்பர். பிராமணப் பெண்கள் மகப்பேறு வாய்க்கப் பெற வேண்டிப் பறையர் கோயில்களில் வழிபாடு செய்ததனைப் பற்றியதான நம்பகமான தகவல்களைத் தான் கேட்டதாகத் திரு. கிளெய்டன் பதிந்துள்ளார். பேயோட்டுபவனான ஒரு பறையன் பிராமணன் ஒருவனை மந்திரங்கள் கூறியும் அரிவாள் ஒன்றினை அப்பிராமணனின் பின்பக்கம் மேலும் கீழுமாக ஆட்டியும் நோய் நீக்கியவனாக ஆக்கியதைத் தான் நேரில் கண்டதாகக் கிளெய்டன் குறித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த பறையர் பற்றித் திரு. எப்.ஆர். ஹெமிங்வே குறித்துள்ளது வருமாறு:- "இவர்கள் தங்கள் தோற்றம் பற்றி மிக உயர்ந்ததான எண்ணம் உடையவர்களாக உள்ளனர். சால் சாம்பவன் என்ற பிராமணப் புரோகிதன் வழியில் வந்தவர்கள் என இவர்கள் தங்களைக் கூறிக் கொள்வர். அவன் சிவன் கோயிலில் மாட்டிறைச்சியினைப் படைத்து வழிபாடு நடத்துகையில் ஒரு நாள் இறைச்சியின் ஒரு பகுதியினைக் கருவுற்றிருக்கும் தன் மனைவிக்காக மறைத்து வைத்த காரணத்திற்காகப் பறையனாகும்படி சபிக்கப்பட்டவனானான். கடவுள் அவனுக்கு பதிலாக அவன் தம்பியைப்

பணி செய்யும்படி அமர்த்தினார். இதன் அடிப்படையில் பிராமணர்களைப் பறையர்கள் தங்கள் பங்காளிகள் எனக் கூறுவர். இதன் காரணமாக இவர்கள் தங்கள் திருமணத்தின்போதும் சாவுச் சடங்கின்போதும் பூணூல் அணிந்து கொள்கின்றனர். கிராம தேவதைகளின் திருவிழாக்களின்போது இவர்கள் தங்கள் சாதியினைப் பின்வருமாறு வானளாவப் புகழ்ந்து கூறிக் கொள்வர்:– பறையர்களே முதன்முதல் உலகில் தோன்றியவர்கள். முதன்முதல் பூணூலணிந்து கொண்டவர்களும் பறையர்களே. சமூகத்தில் மிக உயர்ந்தவர்கள். சாதிகளின் வேறுபாடுகள் உணர்ந்தவர்க்ள். பெரும் புகழினைப் பெற்றவர்கள். வெள்ளை யானையின் மீது அமர்த்தப்பட்டவர்கள் பறையர்கள். வீர சாம்பவன் இவர்கள் வெற்றியினை ஊரறிய முரசடிப்பான். கிராம தேவதைகளுக்குப் படையலிடும்போது ஒரு பறையனுக்குப் பூணூலணிந்து அவனை அந்த நேரத்திற்கு மட்டும் கோயில் பூசாரி ஆக்குவர். கையில் மஞ்சள் நூலினைக் கங்கணமாக அணிந்து கொள்ளும் அவன் ஊர்வலத்தில் முன்னே நடந்து செல்வான். தங்கள் சாதியின் சிறப்பு நோக்கியே தங்களுக்கு இவ்வாறு சிறப்பு அளிக்கப்படுவதாக இவர்கள் கூறுகின்றனர்."

மழை பெய்யாது வறட்சி நிலவும் சமயங்களில் தாழ்ந்த சாதியினர் மழைக்கு உரிய தெய்வமான வருணனை நோக்கி வழிபாடு செய்தவர்களாகக் கொடும்பாவி என்ற தீய தேவதையிடம் அவளுடைய கள்ளக் காதலனான சுக்ரனை வறட்சி நிலவும் பகுதிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் விடுப்பர். சுக்ரன் வருடத்தில் ஆறுமாதங்கள் தன்னுடைய காமக்கிழத்தியின் வீட்டிற்குச் சென்று விடுவதாகவும் அந்தக் காலக்கெடு முடிந்த பின்னும் அவன் திரும்பவில்லையாயின் வறட்சி தோன்றும் என்றும் நம்புகின்றனர். இச் சடங்கின் போது களிமண்ணால் கொடும்பாவியினைப் பெரிய உருவினதாகச் செய்து ஒரு வண்டியில் வைத்துத் தெருக்கள் வழியே பத்து நாள்கள் இழுத்துச் செல்வர். பத்தாம் நாள் கொடும்பாவியின் சாவுச் சடங்கினை நிகழ்த்துவர். அப்போது அந்த உருவின் மறைவான உறுப்புக்களைச் சிதைப்பர். வெட்டியான்கள் மொட்டையடித்துக் கொண்டு அந்த உருவத்திற்கான சாவுச் சடங்குகளை நடத்தி வைப்பர். இவ்வாறு செய்வதால் கொடும்பாவியானவள் வெட்கம் உள்ளவளாகத் தன் காதலனான சுக்ரனைத் திருப்பி அனுப்புவாள். அதன்பின் வறட்சி

அகலும். கொடும்பாவியின் சாவுச் சடங்கில் பறையர்கள் உண்மையாக நிகழ்ந்த சாவில் அழுது அரற்றுவது போல பறை கொட்டியவர்களாக அழுது அரற்றுவர்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மங்கலத்தில் அமைந்திருக்கும் காளி கோயிலில் எருமையினைப் பலிகொடுக்கும் சடங்குகளில் பறையர் குறிப்பிடத்தக்க வகையில் பங்கு கொள்கின்றனர் எனத் தென் ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் தெரிவிக்கும் திரு. பிரான்சிஸ் அதுபற்றிக் கூறுவதாவது:- " சுற்றியுள்ள எட்டு ஊர்களிலிருந்து இச்சாதியினைச் சேர்ந்த எட்டுப் பேர்களைத் தேர்ந்தெடுப்பர். இவர்களுள் ஒருவர் இவர்களின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான். இவ்வாறு தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பறையன் மனைவி அச்சமயம் கருவுற்றவளாக இருத்தல் கூடாது. அவள் தான் எத்தகைய சந்தேகத்திற்கும் இடமில்லாதவகையில் உள்ளவள் என்பதனைத் தன் கையினைக் கொதிக்கும் நல்லெண்ணெயில் விட்டு மெய்ப்பிக்கவும் கடமைப்பட்டவள் ஆவாள். திருவிழா நடைபெறும் பத்து நாள்களிலும் இவ்வாறு தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பறையன் எட்டு ஊர்களில் ஏதாவது சிலவற்றில் சுற்றி வந்தவனாக இருப்பான். அப்பொழுது அந்த ஊரார் அவனுக்கு உணவளிப்பர். எருமையினைப் பலிதரும் நாளன்று அவன் அதனைப் பலியிடும் பூசாரிக்கு முன்னதாக ஊர்வலத்தில் செல்வான். அப்போது பலியிடப்படும் எருமைகளின் உடல்கள் எட்டு ஊர்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பறையருக்கு உரிமையுடையனவாகும். "

ஊர் எல்லைகளைப் பற்றி மற்றவர்களைக் காட்டிலம் பறையர்களே நன்கு தெரிந்து வைத்துள்ளவர்கள் ஆவர். அரசுத் துறையினரால் நடப்பட்டுள்ள எல்லைக் கற்கள் கள்ளிப் புதர்களால் மூடப்பட்டு மறைந்து போனாலும் அல்லது அகற்றப்பட்டுவிட்டாலும் எல்லைகள் எங்கு செல்கின்றன என்பதனைத் தவறின்றிச் சுட்டிக்காட்டக் கூடியவர்கள் இவர்கள். எல்லைகள் எவ்வாறு செல்கின்றன என்பது பற்றிய தகராறு நிலவும்போது பறையன் ஒருவனைத் தலையில் தண்ணீரோடு கூடிய பானையினை வைத்துக் கொண்டு நடக்கும்படி செய்து, எல்லையினை உறுதிப்படுத்துகின்ற வழக்கம் சில வட்டாரங்களில் உள்ளதாகத் திரு. ஸ்டுவர்ட் கூறுகின்றார். மற்ற சாதியார்களைவிடப் பறையர்கள்

நிலத்தோடு கூட நெடுங்காலம் உறவுடையவர்களாக இருந்து வந்துள்ளனர் என்பதே இதற்கான விளக்கமாகக் கொள்வதற்கு உரியது என அவர் தெரிவிக்கின்றார். பறையர்களுடைய குடிசைகள் அமைந்துள்ள சேரி, நத்தம் எனப்படும் நிலப்பகுதிகளின் மீது இவர்களுக்கு உள்ளதான உரிமையும் மேற்கூறிய கருத்தினை உறுதிப்படுத்தும். அந்த நிலப்பகுதி ஊர் வரைபடங்களில் சேரி நத்தம் என்றே குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை இவர்களிடமிருந்து பறித்தல் இயலாது. தமிழ்நாடு முழுவதும் குடியிருப்புக்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நத்தம் எனப்படும் நிலங்கள் ஒவ்வொரு ஊரிலும் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதி வடமொழிப் பெயரால் கிராமம் என அழைக்கப்பட மற்றொரு பகுதி திராவிடமொழிச் சொல்லான சேரி என்ற சொல்லால் வழங்கப்படுகின்றது.

சில சமயங்களில் சேரி அதற்குரிய முழுப் பெயரான பறைச்சேரி (பறச்சேரி பர்ச்சேரி என்பன திரிந்த ஆங்கில வடிவங்கள்) என்ற பெயரால் சுட்டப்படும். கிராமங்களில் பிராமணர்கள் குடியிருப்பர். சிலவிடங்களில் அவர்கள் அக்ரகாரம் என்ற பகுதியில் வாழக் கிராமத்தில் மற்ற இந்துக்கள் குடியிருப்பர். பறைச்சேரியில் பறையர் குடியிருப்பர். பறைச்சேரியும் கிராமமும் தனித்தனவாக விலகியே இருக்கும். இவற்றைக் குறைந்தது ஒரு சாலையோ சந்தோ பிரித்து வைக்கும். சில வயல்கள் இவற்றிடையே பெரும்பாலும் இடம்பெற்றிருக்கக் காணலாம். ஒவ்வொரு ஊரிலும் இதுபோலப் பறையருக்கெனத் தனியே குடியிருப்புகள் இருப்பது மட்டுமல்லாமல் பல இடங்களில் ஒரு கிராமத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட சேரிகள் இணைந்திருக்கவும் காணலாம். ஏதோ ஒரு கால கட்டத்தில் உயர்சாதியார் பறையர்களை இதுபோலத் தனித்தவர்களாக்கிச் சேரிகளில் ஒதுங்கச் செய்துள்ளனர் என்ற கோட்பாட்டினை மறுப்பதற்கான ஆதாரமாகின்றது. சேரிகள் தனித்தனவாகத் தோன்றி நெடுங்காலமாக இருந்து வருவன என்பதனைச் சேரிகள் சிலவற்றின் பெயர்கள் உறுதிப்படுத்தக் காணலாம். செங்கல்பட்டுக்கு அருகே உள்ள தெய்யர் என்ற பெயரோடு கூடிய வருவாய்த்துறை ஊர் சூத்திரர் கிராமம் ஒன்றையும் ஏழு பறைச்சேரிகளையும் கொண்டதாக இருப்பது இக்கருத்தை வலியுறுத்த எடுத்துக்காட்ட உரிய சான்றாகும். அந்த ஏழு பறைச்சேரிகளும் பெரிய பிள்ளேரி, கொமாஞ்சேரி முதலிய தனித்த பெயர்களைப் பெற்றுள்ளன.

செங்கல்பட்டின் வடபகுதியில் உள்ள இடைப்பாளையமும் வண்டலூருக்கு அருகேயுள்ள வரதராசபுரமும் பறைச்சேரிகள் மட்டுமே கொண்ட சிற்றூர்களாக உள்ளனவேயன்றி அவற்றோடு இணைந்த கிராமங்களைப் பெற்றனவாக இல்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கோவிந்தநல்லூர், ஆண்டபேட்டை என்ற இரண்டு ஊர்கள் பறையர்களை மட்டும் கொண்டதாக இருப்பதோடு அந்த ஊர்களின் மணியகாரர் பொறுப்புகளையும் பறையரே மேற்கொண்டவர்களாக உள்ளனர். இக்கருத்தை நிலைநிறத்தும் சான்றாக இது போல வேறு எடுத்துக்காட்டுக்களையும் தர முடியும். பறையரும் பிராமணரும் ஒருவரையொருவர் எவ்வாறு வெறுத்து வருகின்றனர் என்பதனை ஆராயும்போதும் இந்தக் கருத்தைத் தெளியலாம். பறையன் ஒருவன் தன்னைத் தொடுவதாலும் தன் முன் வருவதாலும் அவன் நிழல் தன்னைத் தொடுவதாலும் தன் முன் வருவதாலும் அவன் நிழல் தன் மேல் விழுவதாலும் தான் தீட்டக்கு உள்ளாவதாகக் கருதும் ஒரு பிராமணன் அவனைத் தன் வீட்டிலும்தான் குடியிருப்பது ஓர் அக்ரகாரமாயின் தன் தெருவிலும் நுழைய அனுமதிக்கமாட்டான் என்பது அனைவரும் நன்கு அறிந்த ஒன்றே. பறையரும் பிராமணனைத் தங்கள் சேரியில் நுழைய அனுமதிப்பதில்லை என்பது பலராலும் அறியப்படாத ஓர் உண்மையாகும். பறையர் சேரியினுள் செல்ல ஒரு பிராமணன் முற்படுவானாயின் அவன் தலையில் சாணி கரைத்த நீரைக் கொட்டி அவ்னை அங்கிருந்து துரத்துவர். "மைசூரில் உள்ள பிராமணர்கள் ஹொலையர் சேரிக்குள்ளாகப் புகுந்து தீங்கின்றி வெளியே வந்தால் அது தங்களுக்கு மிகுந்த அதிர்ஷ்டத்துக்கு உள்ளாக வாய்ப்பினை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையினை உடையவர்களாக உள்ளனர். அவ்வாறு ஹொலையர் சேரியில் நுழைய முற்படும் பிராமணனை முன்னாளில் ஹொலையர் அனைவரும் கூடிச் செருப்பால் அடித்து உயிர் துறக்கும்படி கூடச் செய்துள்ளனர்." என காப்டன் எஸ்.எப். மெக்கென்சி கூறியுள்ளார்.* பிராமணர்கள் சிலர், பாழடைந்த பறைச்சேரி, அக்கிரகாரம் அமைப்பதற்கான நல்ல வாய்ப்பான இடம் எனக் கருதுகின்றனர். கி.பி. 1795 முதல் 1825 வரை கருங்குழி ஜாகீருக்குரிய மாவட்ட ஆட்சியரு (குற்றவியல் மாவட்ட நடுவர்) க்குரிய எழுத்தர்கள் தங்கி வாழ்ந்த கிராமம் தனிப்பட் வகையில் அமைந்தது. அந்த எழுத்தர்கள் பிராமணர்கள். அதனால் அந்த உர் அக்ரகாரம் என வழங்கப்பட்டது.

* (இந்தியத் தொல்லியல் *III 187CIndi ant III 187)*

மாவட்ட ஆட்சியரின் தலைமையிடம் கருங்குழியிலிருந்து காஞ்சிவரத்திற்கு மாற்றப்பட்ட பொழுது அந்த ஊரினை அவர்கள் கைவிட்டுச் செல்ல அங்குப் பறையர்கள் குடிபுகுந்துள்ளனர். எனினும் இன்றும் அது அக்ரகாரம் என்றே வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வ அனைத்தையும் ஒரு சேர வைத்துப் பார்க்கும்போது பறையர்களின் பூசாரிகளும் (வள்ளுவன்) பறையர்களும் மிகத் தொன்மையான இனத்தவர் என்பதும் பத்து நூற்றாண்டுகளக்கு முன்புவரை இவர்கள் மதிப்புக்குரிய சமூகத்தவர்களாக இருந்துள்ளனர் என்பதும் இவர்களுள் பலர் நெசவாளர்களாவர் என்பதும் தெளிவாகும். இன்று இவர்கள் அனுபவித்துவரும் தனி உரிமைகள் இவர்களுக்கு நெடுங்காலமாக நிலத்தோடு இருந்துவரும் தொடர்பினை விளக்கும் எஞ்சியுள்ள அடையாளச் சின்னங்களாகும். பறைச்சேரி என்ற தனிப்பட்ட அமைப்பு இவர்கள் முன்னாளில் பெற்றிருந்த உரிமையோடு வட நிலத்தில் பெரும் பகுதிக்கும் இவர்கள் உரிமையுடையவர்களாக இருந்துள்ளனர் என்பதனைத் தெளிவுபடுத்தும். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வேளாளர் தொண்டை மண்டலத்தைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தனர் என்பது வரலாற்று நெறிப்பட்ட உண்மையாக இருக்குமானால் அப்பொழுது தங்கள் நிலத்தைப் பறையர்கள் இழக்க நேரிட்டிருக்கலாம் என்றும் அப்பொழுதிலிருந்து இவர்கள் சமூகப்படி நிலையில் தாழ்ந்தவராக ஆகத் தொடங்கினராதல் வேண்டும் எனவும் கொள்ளலாம்.

பறையர் நெடுங்காலமாகவே ஒரே இடத்தில் தங்கிவாழும் இனத்தவர்களாக இருந்துவருகின்றனர். இவர்களுள் சிலர் இலங்கை மெரிசிஸ், தென் ஆப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் , மலேசியா மேலும் பிஜி வரைக் கூடக் குடிபெயர்ந்து சென்றுள்ளனர். எனினும் இவர்களுள் பெரும்பாலோர் தாங்கள் பிறந்த இடத்திற்கு ஒரிரு மைல் எல்லைக்குள்ளாகவே வாழ்ந்தபடி இருக்கின்றனர். இவர்கள் வாழும் இல்லங்கள் தற்காலிகக் குடியிருப்புகளாகவோ ஆண்டின் குறிப்பிட்ட பருவத்தில் மட்டும் தங்கவதற்குரியனவாகவோ இருப்பதாகக் கூற முடியாது. அவை பெரும்பாலும் மூங்கில்களை நட்டுப் பனையோலையால் வேயப்பட்ட கூரை அமைப்பைக் கொண்டவையான பெரும்போக்கான இல்லங்கள். உயரம் குறைந்த மண் சுவர்களை எழுப்பி வரிசையாக

அறைகளை அமைத்து மேலே கூரை வேயப்பட்டவை இதற்கும் அடுத்த தரத்தனவான இல்லங்கள். பெரும்பாலும் கதவுகள் பெற்றிராத இவற்றைச் சூழ, குடும்பத்தைச் சேர்ந்த ஆடு, எருமை, கோழி ஆகியனவற்றை அடைத்துப் போடுவதற்கான முற்றங்கள் இடம்பெற்றிருக்கும். வீட்டின் உள்ளோ வெளியிலோ வசதியான இடத்தில் இவர்கள் சமையல் செய்துகொள்வர். வழியில் போவார் வருவோர் பார்வைபடுவதால் சமையல் தீட்டுக்கு உள்ளாகும் என இவர்கள் கவலைப்படுவதில்லை. எப்போதாவது வீட்டுச் சுவர்களுக்கு அதுவும் தெருப்பக்கமாக இருக்கும் சுவர்களுக்கு வெள்ளை அடிப்பர் அல்லது அவற்றில் சிவப்புக் காவியாலும் சுண்ணாம்பாலும் பலவகை வரைவுகள் அல்லது உருவங்களைத் தீட்டி வைப்பர். பறையர் பெண்கள் மேல்சாதியார் பெண்களைப் போலவே அரிசிமாவினைக் கொண்டு வீட்டுவாசலில் அல்லது வாசலின் முன்னுள்ள நடையில் ஒத்தியைபும் வடிவங்களைக் கொண்ட கோலங்களைத் தீய ஆவிகள் வீட்டினுள் நுழைவதைத் தடுப்பதற்காகப் போட்டு வைக்கின்றனர். அரிசியின் விலை அதிகமாக இருப்பதால் வாசலில் இடப்படும் கோலங்கள் கற்பொடி அல்லது சாக்குப் பொடியினால் வடிவமைப்புக்களாக வரையப்படுகின்றன எனத் திரு.எஸ்.பி.ரைஸ் எனக்கு எழுதித் தெரிவிப்பதோடு இவை வரையப்படுவதின் நோக்கம் கெட்ட ஆவிகளை விரட்டுவதற்காக அல்லவென்றும் எறும்பு முதலிய சிற்றுயிர்கள் உணவுக்கு உதவும் பொருட்டே இவ்வாறு அரிசிமாவால் கோலம் இடும் பழக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

உயர்ந்த சாதியாரைப் பறையர்கள் சிலபோது தங்கள் சாதியில் சேர்த்துக் கொள்கின்றனர். பழநி மலையில் உள்ள கொடைக்கானலில் பறையர்களோடுங் கூடக் கூலியாக வேலை பார்த்த ஓர் அய்யங்கார் பிராமணனைத் தனக்குத் தெரியும் எனத் திரு.கிளெய்டன் பதிந்துள்ளார். ஒரு பறைச்சியிடம் மோகங்கொண்ட அவன் சாதியிலிருந்து விலக்கம் பெற்றதால் பறையனாக ஆகிவிட்டான்.

ஒவ்வொரு பறைச்சேரியிலும் பணக்காரன் என்ற பெரிய மனிதர்கள் சிலர் உள்ளனர். இவர்கள் சமூகத்திற்குச் செய்யும் பணிக்கு உரிய கொடையாகச் சிறுதொகையினைப் பெறுவதால் அல்லது மற்றவர்களைவிடச் சற்றுக் கூடுதலான வளமான வாழ்க்கையினைப்

பெற்றுள்ளதால் இப்பெயர் பெற்றவர்களாதல் வேண்டும் எனத் திரு. கிளெய்டன் தெரிவிக்கின்றனர். எனினும் இச்சொல் பணி என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்த பணிக்காரர் என்பதன் திரிந்த வடிவம் என்று கொள்வதற்கு உரியதாகவும் உள்ளது. சிறு பூசல்கள், அடிதடி, கற்பழிப்பு, கள்ளத் தொடர்பு, வன்முறையில் கவர்ந்து செல்லுதல் ஆகிய குற்றங்களைப் பற்றிக் கேட்டறியும் குழுவினராக இவர்கள் செயல்படுவர். கணவனால் கைவிடப்பட்ட மனைவியரின் திருமண உறவினைச் செல்லாததாக ஆக்கும் உரிமையினையும் இவர்கள் பெற்றுள்ளனர். இத்தகைய வழக்குகள் தொடர்பாக இவர்கள் மேற்கொள்ளும் முடிவுகள் பறைச் சேரியில் பொதுவாக நிலவும் கருத்தின் அடிப்படையில் அமைந்தததாகவே இரக்கும். இந்துக்களின் கிராமங்களுக்கென முன்சீப்கள் இருப்பதைப் போன்ற அதிகாரம் பெற்ற பறைச்சேரித் தலைவர்கள் எவரும் பதவியில் இல்லை. தற்பொழுது காவல் துறையினரால் பறைச்சேரியும் கிராமத்தைச் சேர்ந்த முன்சீப்பின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பொழுது பறையர்கள் தாங்களாகவே தங்களுடைய வழக்குகளை முன்சீப்பிடமோ நேரடியாகக் காவல் துறையினரிடமோ கொண்டுவரத் தொடங்கியுள்ளனர். திருமண நிச்சயதார்த்தம், கற்பழிப்பு முதலிய குடும்பத்தினரிடையேயான வழக்குகளை இன்றும் பறைச்சேரிப் பஞ்சாயத்தாரே நல்ல முறையில் நடுநிலையோடு தீர்த்து வைக்கின்றனர். பணக்காரன் பதவி பரம்பரை உரிமையுடையது. அதற்கென தனியே ஊதியம் எதுவும் வழங்கப்படுவதில்லை.

மற்ற வலங்கைப் பிரிவுச் சாதியாரைப் போலவே பறையர்களும் தேசாயி செட்டிகளின் ஆளுகைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்து வருகின்றனர். ஆர்க்காடு நவாப்பின் ஆட்சிக்காலம் தொடங்கித் தேசாயி செட்டிகள் வலங்கைப் பிரிவினைச் சேர்ந்த இருபத்தி நான்கு சாதிகள;ன மீது அதிகாரம் செலுத்தி வருகின்றார். நடத்தை தொடர்பான சிறு குற்றங்களை விசாரிக்கும் உரிமையினை மட்டுமே தேசாயி செட்டிகள் பெற்றுள்ளனனர். ஒவ்வொரு ஊரிலும் இவர்களின் பிரதிநிதியாக ஒருவன் இருக்கின்றான். ஊரில் நடக்கும் குற்றங்களை விசாரிக்கும் உரிமையினை மட்டுமே தேசாயி செட்டிக்கு இவனே தெரிவிப்பான். வட ஆர்க்காட்டில் இவர்கள் மிகுந்த அதிகாரம் உடையவர்களாக ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கில் ரூபாயினைத் தண்டத் தொகையாக

வசூலித்து வருகின்றார்கள். எனினும் மற்ற மாவட்டங்களில் இவர்கள் அதிகாரத்திற்க மற்றவர்கள் மிகுதியாக அஞ்சி நடப்பதில்லை. பெரும்பாலும் தண்டனையாக அபராதத் தொகையினையே வசூலிக்கும் இவர்கள் சிலபோது குற்றமிழைத்த பறையனை முட்டிக்கால்களிட்டு ஒரு பறைச்சியின் கால்கஞ்க்கிடையே தரையில் தவழ்ந்து செல்லும்படியாக இழிவுபடுத்துவர். சமூகத்தவர்களிடமிருந்து நீரும் நெருப்பும் பெற உரிமையற்றவர்கள் எனச் சாதி விலக்கம் செய்து வைத்தலும் வழக்கில் உள்ளது. தேசாயி அல்லது பஞ்சாயத்துச் சபையார் விதிக்கும் இத்தகைய சாதிவிலக்க ஆணை சிறிது காலத்திற்கே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேசாயின் அதிகாரம் தொடர்பாகத் திரு.கே. ரங்காச்சாரி மேலும் தெரிவிக்கும் தகவல்கள் வருமாறு:- சிலவிடங்களில் பணக்காரன்களைத் தேசாயியே பணியில் அமர்த்துகின்றான். வரியன் அல்லது சலவாதி எனப்படும் பணக்காரனுக்கான உதவியாளனும் சிலவிடங்களில் அமர்த்தப்படுகின்றான். ஒருவன் கள்ளக்காதல் கொண்டுள்ள ஒருத்தி மணம் ஆகாதவளாக இருப்பாளாயின் அவனுக்கு 7 பகொடா, (14 பணம்) முதல் 11 பகொடா வரை அபராதம் விதிக்கப்படும். அவள் மணமானவளாக இருப்பாளானால் அபராதத் தொகை 12 பகொடா முதல் 16 பகொடா வரையானதாக இருக்கும். இந்தத் தண்டத் தொகையினை அவன் தொடர்பு கொண்ட பெண், அவள் கணவன் பஞ்சாயத்து உறுப்பினர்கள், பணக்காரன் ஆகியோர் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். முன்பெல்லாம் பறையர் சாதிப் பெண்களோடு இவ்வாறு தகாத உறவு மேற்கொள்பவர்களை ஒரு கம்பத்தில் கட்டி வைத்து விசாரித்து அவர்களுக்குக் கசையடி கொடுப்பர். ஒவ்வொரு கசையடிக்கும் இரண்டு பணம் வீதம் தண்டம் செலுத்தி தண்டனை பெற்றவர்கள் கசையடியிலிருந்து தப்பலாம். சில சமயங்களில் இத்தகைய குற்றவாளிகளை ஊர்த் தெருக்களின் வழியே தலைமீது குப்பைக் கூடையினைச் சுமந்தவர்களாகச் செல்லும்படி செய்வர் அல்லது குறிப்பிட்ட ஓர் இடத்தில் குப்பையினைக் குவிக்கும்படி ஏவுவர். அத்தகைய குற்றம் இழைப்பவர்கள் கால் பெருவிரலில் ஒரு கயிற்றினையிட்டு மற்றொரு கால் பெருவிரலில் கொண்டுபோய் இணைத்து அவர்களைக் குனிந்தபடியிருக்கச் செய்து தலைகுனிவிற்கு உள்ளாக்குவர். திருமணம் ஆகாத ஒருத்தி இத்தகைய கூடா ஒழுக்கக் குற்றச் செயலுக்காகத் தண்டிக்கப்படும்போது அவளுக்கு ஒரு புதுச்

சேலையினைத் தந்து அவளைக் கயிறு அல்லது வைக்கோலை அணிந்துகொள்ளச் செய்து அவமானப்படுத்துவர். முன்பெல்லாம் மணமகள் ஒருத்தியின் கற்புடைமையில் ஐயம் எற்படின் அவளைக் கொதிக்கும் எண்ணைக்குள்ளிருந்து வடை முதலியனவற்றைக் கையால் எடுக்கும்படி கூறுவர். தாலிகட்டி முடித்தவுடன் அவள் இதனைச் செய்ய முற்பட வேண்டும். அதற்கு முன் தாயத்து எதையேனும் அவள் மறைத்து வைத்துள்ளாளா என அவளுடைய கூந்தல், நகங்கள், சேலை ஆகியனவற்றைச் சோதித்துப் பார்ப்பர். கொதிக்கும் எண்ணெயிலிருந்து பலகாரங்களை வெளியே எடுத்தபின் அதே கையால் கொஞ்சம் நெல்லினைத் தேய்த்து அரிசியாக்க வேண்டும். இதனை அவள் செய்து முடிப்பாளாயின் அவளுடைய கற்புடைமை உறுதிப்படுத்தப்பட்டதாகும். "தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பெரிய நாட்டான், சின்ன நாட்டான் அல்லது தங்கலான் என்ற பறையருக்கான பரம்பரையாகப் பதவி பெறும் சாதித் தலைவர்கள் உள்ளனர். சாதிப் பஞ்சாயத்தார் தரும் தண்டனைகளை நிறைவேற்றி வைப்பவன் தங்கலானே. கசையடி பெறும்படியாகத் தண்டனை அளிக்கப்படுபவர்களுக்கு கசையடி தருபவன் இவனே. இப் பஞ்சாயத்துச் சபையார் விதிக்கும் தண்டத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு உள்ளூர் மாரியம்மன் கோயிலுக்குச் செலுத்தப்படுகின்றது. எஞ்சிய பகுதியினைப் பஞ்சாயத்தார் மது அருந்தச் செலவிடுவர். அண்மைக் காலம்வரை இத் தண்டத் தொகையில் வட்டாரத்தைச் சேர்ந்த பாளையக்காரருக்கும் உரியதாகச் சிலரால் ஒரு பகுதி செலுத்தப்பட்டு வந்தது." எனத் திரு. பிரான்சிஸ் தென் ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

சாதியிலிருந்து விலக்கப்படும் பறையர்கள் புராணத் தொடர்புடைய விண்ணமங்கலம் என்ற இடத்திற்குப் போவர் எனக் கூறப்படுகிறது. "நமக்கிடையே நாம் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைப்படி நடந்து கொள்ள நான் தவறுவேனாயின் நான் விண்ணமங்கலம் போகக் கடவேன்" என்ற சொற்கள் பறையர்கள் கையொப்பமிடும் ஆவணங்களில் இறுதியில் இணைப்பாகச் சேர்க்கப்படும் எனக் கூறப்படுகிறது. காவல்துறையினர் அல்லது பஞ்சாயத்தார் அல்லது தேசாயி தொட்டி ஒரு பறையனை விசாரிக்கும்போது அவன் தன் கருத்தில் கூறத் தகுந்ததாக எதனைக் கருதுகின்றானோ அதனை மட்டுமே கூறுவான். எரியும் கட்டிக்

கற்பூரத்தை அணைத்தபிறகு அவன் கூறும் சாட்சியம் நம்பக் கூடியதாக இருக்கும் எனக் கூறுகின்றனர்.

பறையர் சேரியில் சிறுமியர் பூப்படைதலை அந்தச் சிறுமியரின் வீட்டைச் சேர்ந்த பெண்கள் அனைவரும் மிகுந்த கவனத்துடன் எதிர்பார்ப்பர். " முதன் முதல் பூப்படையும் பெண்களின் பூப்புநீர் உடலில் படுவதோ அதனைக் கண்ணால் காண்பதோ பெரும் தீங்கினைத் தரும் எனக் கருதுவதாலேயே இவ்வாறு இந்த நிகழ்ச்சி பற்றி அஞ்சுகின்றனர். இதனாலேயே மாதவிலக்குக்கு உள்ளாகும் பெண்கள் அச்சமயத்தில் தனித்து இருக்குமாறு செய்தபின் அவர்களைத் தூய்மைப்படுத்தும் சடங்கிற்கு உள்ளாக்குகின்றனர். சிறுமியர் முதன்முதல் பூப்படைகின்றனரா எனக் கருத்தோடு பெண்கள் கவனித்து வருவதற்கு காரணம் இதுதான். "பூப்படையும் சிறுமி உடனே முதலில் ஒரு துணி மட்டுமே அணிந்தவளாக அதனை மார்பின்மீதும் இடது தோளின் மீதும் இட்டுக் கொள்வாள். அது ஒரு பழங்கந்தலாக இருந்தாலும் பரவாயில்லை எனக் கருதுவர். இச் சமயம் வரை அவள் இடையில் மட்டும் ஒரு துணியினை உடுத்தியவளாக இருப்பது போதுமானது எனக் கருதப்படுகின்றது. தங்கலான் பறையரிடையே ஒரு சிறுமி பூப்படைந்தவுடன் அவளை வீட்டில் தனித்த இடத்தில் அல்லது தனிக் குடிசையில் இருக்கச் செய்வர். எட்டு நாள்கள் அவள் தீட்டுக்குரியவளாகக் கருதப்படுவாள். ஒன்பதாம் நாள் அவளைக் குளிக்கச் செய்து வீட்டுவாசலில் அமர்த்துவர். பிசைந்த மாவால் அமைத்த திருஷ்டி மாவு விளக்கு எனப்படும் ஒன்பது சிறு விளக்குகளை ஒரு அரிதட்டில் வைத்து அவள் முன்அதனை மும்முறை சுற்றுவர். பின்னர் மஞ்சள் நீர் ஆரத்தியும் கற்பூர ஆரத்தியும் காட்டுவர். பின் நெருங்கிய பெண் உறவினர்கள் சிலர் அவளுக்குப் பின்புறமாக நின்றவர்களாக அவள் இடுப்பையும் பக்கங்களையும் துணியில் முடியப்பட்ட பட்டினால் மொத்துவர். அவள் வலிமை பெறுவதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. அதே சமயம் வேறு சில பெண்கள் அவளுக்குப் பின்புறமாகத் தரையினை நெல் குற்றும் உலக்கையால் இடிப்பர். அதன்பின் அச்சிறுமிக்கு அன்பளிப்புகள் வழங்கப்படும். சில இடங்களில் சிறுமியரை அவளுடைய மாமியார்மார்களோ அத்தைமார்களோ வீட்டினுள் அழைத்துச் சென்று அடிப்பர். அவளுடைய அத்தை அச்சிறுமியிடம் அவளுக்குப் பிறக்கும் பெண் அவளுடைய

அத்தை மகனையே மணப்பான் என உறுதி கூறும்படி கேட்பாள்.

பறையர் தங்களிடையே மண உறவு கொள்ளச் சமயத்தினை ஒரு தடையாகக் கருதுவதில்லை. கிறித்தவ சமயம் சேர்ந்த ஒரு பறையன் இந்து சமயம் சேர்ந்த பறைச்சிறுமி ஒருத்தியினை மணந்து கொள்வான். மணச் சடங்கின்போது அவளுக்கு ஞானஸ்நானம் செய்து வைக்கப்படும். கிறித்தவ சமயம் சேர்ந்த சிறுமியர் சிலபோது இந்து சமயம் சேர்ந்த இளைஞர்களை மணப்பதும் உண்டு. நெற்றியில் விட்டுணுவுக்கு உரிய அடையாளமான நாமம் தரித்தவர்களும் சிவனுக்கு உரிய அடையாளமாக விபூதி தரித்தவர்களும் தங்களுக்குள் மணம் புரிந்துகொள்ள இச்சின்னங்கள் தடையாக அமைந்துவிடுவதாகத் திரு. கிளெய்டன் கருதுகின்றார்.

மணமகன் மணமகளைவிட வயதில் பெரியவனாக இருத்தல் வேண்டும். இந்த விதிக்கு உட்பட்டவனாக இருப்பின் ஓர் இளைஞன் தன் அத்தை மகளையோ மாமன் மகளையோ மணந்துகொள்ளலாம். ஒரு சிறுமியும் அவளுடைய மாமன்கள் அவளைவிட வயதில் மூத்தவனாக இருப்பின் அவனை மணந்து கொள்ளலாம். கொங்கு வேளாளரிடையேயும் சில ரெட்டிகளிடையேயும் காணப்படுவதைப் போல அவன் குழந்தையாக இருப்பினும் கூட அவனை மணந்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் இவர்களிடையே இல்லை. சுருங்கச் சொன்னால் பறையர்கள் மணமுறை தமிழர் மணமுறை வழிபட்டதெனலாம். எனினும் அடிக்கடி இவர்கள் அதனைப் புறக்கணிக்கவே செய்கின்றனர்.

மணமக்கள் குழந்தைகளாக இருக்கும் சமயத்திலேயே அவர்களுடைய பெற்றோர் அவர்களுக்கு மணம் செய்விப்பதெனத் தங்களுக்கிடையே பேசி உடன்பாடு காண்பர். பெரும்பாலான மணங்கள் சிறுமியர் பூப்படைந்த பின்னரே நிச்சயிக்கப்படுகின்றன. மணமகன் மணமகளைவிடப் பல ஆண்டுகள் வயதில் மூத்தவனாகக் கூட இருக்கலாம். மேலே கூறிய உறவு முறைகளைச் சிறப்பாகக் கடைபிடித்து மண உறவுகள் நிச்சயம் செய்யப்படும்போது இத்தகைய வயது வேறுபாடுகள் பாராட்டப்படுவதில்லை. மண உறவு தொடர்பாக மணமகள் கருத்தினைக் கேட்டறியும் வழக்கம் இல்லை. மணமகன் ஓரளவு வயது

வந்தவனாகவோ தகுதியான பொறுப்பில் இருப்பவனாகவோ இருப்பின் அவனுடைய விருப்பத்தைப் பற்றிக் கேட்டறிவர். இளையவளுக்கு மணம் முடிக்கும் முன், மூத்தவள் மணம் நடத்தப்பட்டிருக்க வேண்டும். மண உறவுகளின் போது முடிந்த அளவு பேரம் பேசுவர். உடைகள், சிறு அணிகள், அரிசி, காய்கறி, சில ரூபாய்கள் ஆகியனவற்றை மணமக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வர். மணம் பேசியவர்களாக முதலில் செல்லும் குடும்பத்தவர்களே இந்தப் பரிமாற்றத்தில் அதிகம் தரவேண்டியவர்களாக இருப்பர். மணச் சடங்கு எளிமையான ஒன்றே. தாலி கட்டுவதே அச்சடங்கின் இன்றியமையாத நிகழ்ச்சி. அது சில அணாக்கள் முதல் நான்கைந்து ரூபாய் வரை மதிப்புடையதாக மஞ்சள் நூலில் கோர்க்கப்பட்டு மணமகள் கழுத்தில் கட்டப்படும் தகடாகும். இதனை வள்ளுவன் முன்னிலையில் மணமகன் மணமகள் கழுத்தில் அணிவிப்பான். அப்பொழுது வள்ளுவன் மணத்தை வாழ்த்திச் சில மந்திரங்களை முணுமுணுப்பான். இரு குடும்பங்களையும் சேர்ந்த உறவினர்களுக்கு மணத்தை அடுத்த இரண்டு மூன்று நாள்கள் மணக்களின் பெற்றோர் விருந்து தந்தபடி இருப்பர். மணமகள் பருவ வயது அடைந்தவளாயினும் மணமக்கள் அடுத்து உடனே ஒன்றாக வாழத் தொடங்குவதில்லை. அவர்கள் எப்பொழுது ஒன்றாக வாழத் தொடங்கலாம் என்பதனை மணமகளின் தாயாரே முடிவு செய்வாள். சோபன முகூர்த்தம் எனக் கூறப்படும் இந்த நிகழ்ச்சியின் போது மற்றொரு விருந்தும் களியாட்டமும் நிகழ்த்தப்படும். இந்நிகழ்ச்சி பல சமயங்களில் தரங்குறைந்த எல்லையினைத் தொட்டுவிடுவதுண்டு.

தங்கலான் பறையன்களிடையே நிலவும் திருமணச் சடங்குகள் பற்றிய பின்வரும் விரிவான விளக்கங்கள் திரு. கே. ரங்காச்சாரி அவர்களால் தரப்பட்டுள்ளது. மண உறவு கொள்ள உள்ளவர்களின் பெற்றோரும் நெருங்கிய உறவினர்களும் முதலில் சந்தித்து மணஉறவு பற்றிப் பேசுவர். ஓர் உடன்பாடு ஏற்படுமாயின் அனைவரும் அருகே உள்ள சாராயக் கடைக்குச் செல்வர். அங்கு வெற்றிலை மாற்றிக் கொள்வதற்கு உரிய நாளினைப் பற்றி முடிவு செய்வர். அந்நிகழ்ச்சியே மண உறவை உறுதிப்படுத்துவதாகும். பெண் கேட்டுச் செல்லும் பறையன் அவனுடைய வேண்டுகோள் பெண்வீட்டாரால் மறுக்கப்படுமாயின் அங்கு உணவு கொள்ளமாட்டான். ஒரு சிறுமியின் மணத்திற்கு அவளுடைய தாய்மாமன்

அனுமதியினைப் பெறுவது இன்றியமையாதது. பறையர் சகுனத்தில் மிகுந்த நம்பிக்கையுடையவர்கள் . பெண் கேட்கப் புறப்பட்டவன். ஒரு பூனையோ வலியனோ பாதையில் குறுக்கே வருமானால் அவளை மணக்கும் எண்ணத்தைக் கைவிடுவான். பரியம் போடுதல் எனப்படும் நிச்சயதார்த்தச் சடங்கு மணக்கள் உயிரோடு இருக்கும்வரை அவர்களைக் கட்டுப்படுத்துவதாகும்.மணச் சடங்கினைச் செய்து கொள்ளாமலேயே கூட அவர்கள் கணவன் மனைவியராக வாழலாம். அவ்வாறு வாழ்க்கை தொடங்கியவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் முறையாகப் பிறந்த குழந்தைகளாகவே கருதப்படுவர். அந்தக் குழந்தைகள் வளர்ந்து மணம் செய்து கொள்ளும்போது முதலில் இதுபோல வாழ்க்கை தொடங்கிய பெற்றோர் தங்கள் மணச் சடங்குகளை முடித்துக் கொண்டபின் அதே பந்தலில் அன்றே அவர்கள் மகன் அல்லது மகளின் மணம் நிகழ்த்தப்படும். பரிசம் போடுவதற்காக மணமகனின் ஊரைச் சேர்ந்த சாதித் தலைவன் அவன் தந்தை, தாய்மாமன், இரண்டு நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் பெண்ணின் இல்லம் செல்வர். அங்கு அவர்களை வரவேற்று இருக்கை அல்லது பாயில் உட்கார வைப்பர். குடிக்கப் பானங்களும் வாழைப்பழங்களும் அவர்களுக்கு வழங்கப்படும். முதலில் இருவீட்டாருக்கும் உரிய சாதித் தலைவர்கள் தங்களுக்குள் சிறிதுநேரம் பேசிக் கொள்வர். "பெண்ணைப் பார்த்தீர்களா? பெண் வீட்டையும் அவள் உறவினர்களையும் பார்த்தீர்களா? இந்த இரண்டு குடும்பங்களும் சம்பந்தம் செய்து கொள்வதை நீங்கள் விரும்புவதோடு அதற்கு ஏற்பாடுகளும் செய்வீர்களா?" என்பதுபோல அவர்கள் உரையாடல் அமையும். இந்த வினாக்களுக்கு பிள்ளை வீட்டினைச் சேர்ந்த சாதித் தலைவன் தன் உடன்பாட்டினைத் தெரிவிக்கும் வகையில், பதிலிறுப்பானாகில், பெண் வீட்டைச் சேர்ந்த சாதித் தலைவன் "கல்லும் காவேரியும் உள்ள வரையும் ஆகாசவாணியும் பூமாதேவியும் சாட்சியாகவும் கல்யாணப் பந்தலில் வைக்கும் மணப்பானையும் சூரிய சந்திரரும் இந்த அவையில் உள்ளவர்களும் அறிய நான் .... இந்தப் பெண்ணைத் தருகின்றேன்" எனக் கூறுவான். மணமகன் வீட்டைச் சேர்ந்த சாதித் தலைவன், "பெண்ணை எங்கள் வீட்டிற்கு மணம் செய்து அழைத்துக் கொள்கின்றோம். இந்த முப்பபத்தாறு பவுனும் உங்களுடையவை. பெண் எங்களுடையவள்" எனப் பதிலிறுப்பான். இவ்வாறு கூறி அவன் வெற்றிலை பாக்கினைப் பெண் வீட்டைச் சேர்ந்த சாதித் தலைவனிடம் தருவான். அதனை அவன்

திரும்பத் தருவான். இவ்வாறு அவர்கள் மும்முறை வெற்றிலை பாக்கினை மாற்றிக் கொள்வர். சாதித் தலைவர்கள் அருகே ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு, ஒரு ரூபாய், மஞ்சள் துணியில் முடியப்பட்ட ஒரு பணம், ஒரு தேங்காய், மலர், மணமகளுக்குரிய பரிசப் பணமான ஏழு ரூபாய் முதல் இருபது ரூபாய் வரையான தொகை ஆகியன வைக்கப்பட்டிருக்கும். பணம் முடியப்பட்ட துணியும் பரிசத் தொகையும் பெண் வீட்டைச் சேர்ந்த சாதித் தலைவனிடம் வழங்கப்படும். ஒரு ரூபாயினைச் சாதித் தலைவர்கள் இருவரும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். நிச்சயதார்த்தத்தன்று மணப்பெண்ணின் உறவினர்கள் சோறும் நீரும் இன்றி இருக்கும் மூதாதையர்களுக்கு பொங்கல் முதலியன படைத்து வழிபடவில்லையாயின் அவர்கள் குடும்பத்தினரிடம் கோபம் கொண்டவர்களாகத் தீங்கிழைப்பர் எனப் பறையர் நம்புகின்றனர். மூதாதையர் வழிபாட்டுக்கென மூங்கிலால் அல்லது வேறுபொருள்களால் பின்னப்பட்ட பேழைகளில் துணிகளை வைத்திருப்பர். அந்த பேழைகளுக்குப் படையலிடப்படும். மூதாதையர் வழிபாடு முடிந்தவுடன் இரு வீட்டாருக்கும் உரிய சாதித் தலைவர்கள் சாராயக் கடைக்குச் சென்று ஒருவருக்கு மற்றவர் கள் வாங்கி வழங்குவர். இவ்வாறு பரிமாறிக் கொள்வது சூமல் சம்பந்தம் கூறல் எனப்படும். சில நாள்களுக்குப் பின் மணப் பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மணமகன் வீட்டிற்குச் செல்வர். இக்குழுவில் குறைந்தது ஏழு பேராவது இருக்க வேண்டும். மீண்டும் இங்கும் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வர். வந்தவர்களுக்கு விருந்திட்டுச் சிறு தொகையினையும் அன்பளிப்பாகத் தருவர். நிச்சயதார்த்தத்தை அடுத்து, உடனே மணம் நிகழ்வதாக இருந்தால் மணம் செய்து கொள்ள உள்ள சிறுமியினை உறவினர்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்று நலங்குச் சடங்கினை நிகழ்த்துவர். அப்போது அவளுக்கு மஞ்சள் பூசி எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் செய்து வெற்றிலையும் இனிப்புப் பலகாரங்களும் வழங்குவர். மணச் சடங்கிற்கு உரிய நல்ல நாளும் நேரமும் பறையர்களின் புரோகிதனான வள்ளுவனால் குறிக்கப்படும். பெரும்பாலும் மணச்சடங்கு ஒரே நாளில் முடிவுறும். மணநாளன்று காலையில் மணமகன் உறவினர்களான மூன்று ஆண்களும் இரண்டு மணமான பெண்களும் குயவன் வீட்டிற்குச் சென்று முன்பே தயாரிக்கும்படி கூறியிருந்த பானைகளைக் கொண்டு வருவர். இதற்காகக் குயவனுக்கு ஒரு கோழி, பூசணி, நெல், வெற்றிலை, சில

அணாக்கள் ஆகியன கட்டணமாகச் செலுத்தப்படும். மணமகள் சாதித் தலைவனும் பிற உறவினர்களும் உடன்வர மணமகன் ஊருக்குச் செல்வாள். அவள் தன்னுடன் பெட்டி வரிசை எனப்படும் சீரினைக் கொண்டு செல்வாள். ஒரு விளக்கு, கிண்ணம், பித்தளைப் பாத்திரம், வெங்காயம், பணியாரம், வெல்லக்கட்டி ஒன்று, கோரைப்பாய், வெள்ளி மெட்டி, அரிசி, ஒரு கட்டு வெற்றிலை, ஐந்து தேங்காய் ஆகியன பெட்டிச் சீராக ஒரு மூங்கில் பேழையுடன் வைக்கப்பட்டிருக்கும். அடுத்துப் பால்கம்பம் நடும் நிகழ்ச்சி தொடங்கப்பெறும். புளியங்கொம்பாலான உலக்கை. சோம மரக் ***(Soymida Febrifuga)*** கட்டை அல்லது பச்சை மூங்கில் பால்கம்பமாக நடப்படும். அதில் மா, அரசு ஆகிய மரங்களின் இலைக் கொத்துக்களைச் சேர்த்துக் கட்டுவர். சில இடங்களில் ஒதிய (***Odina Wodier***) மரக் கொம்பினைப் பால்கம்பமாக நடுவதோடு மணச் சடங்குகளின் இறுதியில் அதனை வீட்டருகே நட்டு வைத்து அது தளிர்கின்றதா எனப் பார்ப்பர். மணமேடையருகே ஒரு குழி தோண்டப்படும். அதில் நவதானியங்களையிட்டு மேலே பாலினை ஊற்றுவர். பால் கம்பத்தை மஞ்சள் பூசப்பட்ட ஓர் அரவைக் கல்லின் ஆதரவில் நிறுத்தி வைப்பர். அதனைப் பாலும் பசுவின் கோமியமும் கொண்டு வள்ளுவன் முன்னின்று சடங்குகளை நிகழ்த்தி வழிபடுவர். பின் பால்கம்பத்தை மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் சேர்ந்து நடுவர். மஞ்சள் நூல் கயிறு ஒன்றினை அதில் கட்டி அதற்கும் மணமேடைக்கும் பொங்கலினைப் படைப்பர். பின் மணமக்கள் கரங்களில் கங்கணம் அணிவிக்கப்படும். மணமகன் வீட்டைச் சேர்ந்தவர்கள் மணமகள் காத்திருக்கும் வீட்டிற்கோ கோயிலுக்கோ தங்களுடன் பித்தளை விளக்கு, பித்தளைப் பாத்திரம், கிண்ணம், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், சீப்பு, பணியாரங்கள், மஞ்சள், வெற்றிலை ஆகியவற்றை உடன்கொண்டு செல்வர். இவ்வாறு ஊர்வலமாகச் செல்பவர்கள் முன் பறையர் பறையடித்தபடியும் கொம்பு ஊதியபடியும் செல்வர். உரிய இடத்தைச் சென்றடைந்ததும் அனைவரும் பாயில் அமர்வர். தங்களுடன் கொண்டு வந்த பொருட்களை அவர்கள் சாதித் தலைவனிடம் ஒப்படைக்க அவன் அதனை உரியவர்களிடம் சேர்ப்பான். பின்னர் மணமகள் ஊர்வலமாக மணம் நிகழும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவாள். அந்த இல்லத்தில் அவளே முதலில் நுழைய வேண்டும். அவளை வலது கையால் வீட்டினுள் மூன்று பானைகளில் வைக்கப்பட்டுள்ள நெல், உப்பு, அரிசி ஆகியனவற்றைத் தொடும்படி

கூறுவர். அவற்றை அவள் இடது கையால் தொடுவது கெட்ட சகுனமாகக் கருதப்படும். வீட்டில் அதன்பின் நிகழும் அனைத்துத் தீங்குகளுக்கும் புதிய மருமகளே காரணம் எனப் பழிதூற்றுவர். அடுத்து மணமகனுக்கும் மணமகளுக்கும் நலங்கு நடைபெறும். உறவினர்கள் சிலர் அடுத்து மணல் வாரிச் சடங்கினை நிகழ்த்துவர். மணமகனுடைய சித்தப்பா அல்லது பெரியப்பாவின் மகனும் அவன் மனைவியும் சால்கரகம் கூரசொல் எனப்படும் சடங்கை நிகழ்த்த ஆறு, குட்டை, கிணறு ஆகிய ஏதேனும் ஒன்றுக்குச் சில ஆண்களும் பெண்களும் உடன் வரச் செய்வர். அங்கு அந்தப் பானையினைத் தரையில் பொருத்தி அதனருகே ஒரு விளக்கினை ஏற்றி வைத்து இலையில் பணியாரங்கள், வெற்றிலை பாக்கு ஆகியனவற்றைப் படைப்பர். அந்தப் பானைகளுக்குத் தேங்காய் உடைத்து வைத்துக் கற்பூர ஆரத்தி காட்டி வழிபடுவர். அப்பொழுது வெட்டியான். "சூரியன், சந்திரன், பானைகள், பெண்ணுக்கு உரிமையுடையவனும் பந்தலுக்கு வந்துள்ளனர். எனவே விரைந்து பானைகளை நிரப்புங்கள்" எனக் கூறுவான். அந்தப் பெண் சிறிய பானை ஒன்றினை தண்ணீரில் முக்கி அதனுள் கொஞ்சம் மணலையோ சேற்றினையோ இட்டு அதில் நீரினை ஊற்றுவாள். மீண்டும் அப்பானைகளை வழிபடுவர். நலங்கு முடிந்தவுடன் மணமக்களுக்குக் கண்ணேறு பட்டதை நீக்க 'சிகெகழிப்பு' எனப்படும் சடங்கினை நடத்துவர். அரசிலை ஒன்றினை அதன் முனை கீழ்நோக்கி இருக்கும்படியாக அவர்கள் நெற்றியின் முன் பிடிக்க, நெருங்கிய உறவினர்கள் மணமக்கள் முகத்தில் சொட்டும்படியாக அதன்மீது நீர் விடுவர். அல்லது உறவினர்கள் ஏழு பணியாரங்களை அவர்களுடைய தலை, தோள்கள், முழங்கால்கள், பாதங்கள் ஆகியவற்றின் மீது வைப்பர். அந்தப் பனியாரங்களை பின்னர் வண்ணானுக்கு தந்துவிடுவர். மணமக்களின் பெற்றோர் சில உறவினர்களுடன் ஒரு வெட்டவெளிக்குத் தங்களுடன் திருமணத்திற்காக வாங்கப்பட்ட உடைகள், தாலி, நகைகள் முதலியனவற்றை எடுத்துச் சென்று, தரையில் ஒரு துணியினை விரித்து, அதன்மீது ஏழு இலைகளை இட்டு சமைத்த சோறு, காய்கறி ஆகியனவற்றை அவற்றில் படைப்பர். அங்குப் பூசை நிகழ்த்திய பின் மூதாதையருக்காக (தங்கலான்மார்) ஓர் ஆட்டினைப் பலியிடுவர். சிலர் இந்தப் படையலினை மூதாதையருக்குப் பதிலாகப் பிடாரிக்கு இடுவர். இதற்கிடையே மணமகனை ஊரைச் சுற்றிக் குதிரை மீதுஊர்வலமாக அழைத்துச் செல்வர். மணப்பந்தலில் இரு வீட்டையும் சேர்ந்த சாதித்

தலைவர்கள் வெற்றிலை மாற்றிக் கொள்வர். மணமகன் ஊர்வலம் முடிந்து திரும்பிய பின் மணமக்கள் ஒரு பலகையில் அமர்வர். அவர்களுடைய தாய்மாமன்மார் அலரிப் பூமாலையினை மணமக்களுக்கு அணிவிப்பர். மணமகளின் தாய்மாமன் அவளுக்கு ஒரு மோதிரத்தைப் பரிசளிப்பான். சில இடங்களில் மணமகளை அவள் தாய்மாமன் தோளிலோ கைகளிலோ தூக்கி வந்து மணப்பந்தலில் அமர்த்தும் வழக்கம் உள்ளது. மணமக்கள் மணமேடையில் அமர்ந்திருக்கும்போது வள்ளுவப் புரோகிதன் புனித நெருப்பினை (ஹோமம்) மூட்டிக் கொச்சையான சமஸ்கிருதத்தில் சில மந்திரங்களை முணுமுணுத்தபடி நல்லெண்ணெயினைப் புனித நெருப்பில் ஊற்றுவான். அதன்பின் அவன் தாலிக்குப் பூசை செய்வான். கூடியுள்ளவர் தொட்டு வாழ்த்த அது சுற்றி அனுப்பி வைக்கப்படும். மணமகன் பின் அதனை எடுத்து பந்தலில் உள்ள ஒரு துளை வழியாக சூரியனுக்கு அல்லது ஆகாயத்துக்கு அதனைக் காட்டியபின் கூடியுள்ளவர்களின் அனுமதியினைப் பெறு மணமகள் கழுத்தில் அதனைக் கட்டுவான். வெள்ளியாலோ தங்கத்தாலோ ஆன பட்டம் எனப்படும் தகட்டினை மணமக்கள் நெற்றியில் அணிவிப்பர். முதலில் மாமியாரும் பின் மைத்துனியும் அதனை அணிவிப்பர். பிராமணர், பிராமணர் அல்லாதார் ஆகிய இரு பிரிவினரிடையேயும் தாலிகட்டி முடியும் வரை உண்ணாது விரதம் இருத்தல் வழக்கில் உள்ளது. ஆனால் பறையரிடையே நல்ல விருந்து உண்ட பின்னரே தாலி கட்டுவது மேற்கொள்ளப்படுகிறது. மணநாளன்று மாலையில் மணமக்கள் முன் ஒரு தட்டில் பழங்கள், வெற்றிலை, மலர்கள் ஆகியனவற்றை வைத்து கங்கணங்கள் ஏழினையும் அவிழ்த்து அந்தத் தட்டில் இடுவர். கற்பூர ஆரத்தி காட்டியபின் மண.மகன் அத்தட்டினை தன் மனைவியிடம் தருவான். அவர்கள் வண்ணாத்தியிடம் தருவர். கரங்களை இணைத்தபடி மும்முறை மணப்பந்தலைச் சுற்றிவருவதோடு மணச் சடங்குகள் முடிவுறும். மறுநாள் மணமகளின் பெற்றோர் கொஞ்சம் நல்ல தயிரினை விலைக்குப் பெற்று அதில் வாழைப்பழங்கள் , சர்க்கரை, மிளகு ஆகியவற்றை இட்டுக் கலக்குவர். சாதித் தலைவன், மணமக்கள், மற்றும் கூடியுள்ளவர்களுக்கு அதில் சிறிது சிறிது தரப்படும். மணமகளுக்கான பரிசுப் பொருள்கள் அனைத்தையும் பந்தலில் கொண்டு வந்து வைத்தபின் சாதித் தலைவன் அவற்றைச் சரிபார்ப்பான். அவை சரியாக இருப்பின் அவன் மணமக்களின் திருமண உறவு முற்றுப் பெற்றதாக அறிவிப்பான். மீண்டும் மேற்கூறிய கலவை அனைவருக்கும்

வழங்கப்படும். இச்சடங்கு சம்பந்தம் கூறல் அல்லது சம்பந்தம் பிரித்தல் எனப்படும். மணம் முடிந்த இரண்டு மூன்று நாள்கள் சென்றபின் மணமகன் மணமகள் இல்லம் சென்று அங்கு மூன்று நாள்கள் தங்கியிருப்பான். அவன் மைத்துனன், வீட்டு வாசலில் அவன் கால்களை அலம்பி இரண்டாவது கால் விரல்களில் மெட்டி அணிவித்து, அவன் தனக்கு ஒரு மகள் பிறந்தால் அவளைத் தன்னுடைய மகனுக்குத் திருமணம் செய்து தருவதாக உறுதி கூறும் வரை அவனைக் கிள்ளியபடி இருப்பான். மணமகள் காலில் மணச்சடங்கின் போது அவளுடைய கங்கணம் அவிழ்க்கப்பட்ட உடன் அவளுடைய தாய்மாமன் மெட்டி அணிவிப்பான். சிலவிடங்களில் மாமியாரோ மைத்துனியோ ஒரு திரை மறைவில் அதனை அவளுக்கு அணிவிக்கும் வழக்கமும் உள்ளது.

பல மனைவியரை மணம் புரிதல் பறையரிடையே பொதுவாக வழக்கில் இல்லை. எனினும், தாலிகட்டிய இரண்டு மனைவியரை உடைய சில பறையரை தனக்குத் தெரியும் என திரு. கிளெய்டன் குறித்துள்ளார். எனினும், முறையாக மணந்து கொண்ட ஒருத்தியுடன் இன்னொருத்தியினையும் கூட்டிக் கொள்ளுதல் பறையரிடையே பெருவழக்காக உள்ளது. அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டவளுக்கும் குடும்பத்தில் ஒருத்தி என்ற உரிமை தரப்படும். இவள் முதல் மனைவியைப் போல தாலிகட்டப்படாதவளாயினும் இரண்டாம் தாரம் என அழைக்கப்படுவாள். அவளைப் பறைச்சேரிப் பஞ்சாயத்தாரின் அனுமதி பெறாமல் தள்ளி வைத்தல் இயலாது. அவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் குடும்பத்தின் உறுப்பினர்களாகவே கருதப்படுவர். முதல் மனைவிக்கு குழந்தை பிறக்கவில்லையானால் மட்டுமே இதுபோல இரண்டாவதாக ஒருத்தியைச் சேர்த்துக் கொள்ளம் வழக்கம் திரு. க்ளெய்டன் கருதுகின்றார். அல்லது குடும்பத்தின் அன்றாட நடைமுறைக்கு இன்னொருத்தியின் உதவியும் தேவைப்படும்போதும் இவ்வாறு இரண்டாவதாக ஒருத்தியைச் சேர்த்துக் கொள்வர். இருவருள் ஒருத்தி சமையல் வேலையினைப் பார்ப்பதோடு குதிரைக்குக் கொள்ளும் வேக வைப்பாள். மற்றொருத்தி வெளியே சென்று புல் அறுத்து வருவாள். 'இரண்டு பெண்டாட்டிக்காரன்பாடு பெருந்திண்டாட்டம்' என்ற தமிழ்ப் பழமொழியும் இதன் அடிப்படையில் தோன்றியதேயாம். மனைவியர் இருவரும் தங்களுக்குள் ஓயாது சண்டையிட்டுக் கொள்வர். இதனாலேயே அவன் பெருந்தொல்லைக்கு ஆளாக

வேண்டியவனாகின்றான். இறந்துபோன தன் மனைவியின் உடன்பிறந்தவள் மணமாகாதவளாக இருப்பின் அவளை இரண்டாம் தாரமாக மணக்கும் வழக்கம் பறையரிடையே பெருவழக்காக உள்ளது.

பறைச்சியர் மகப்பேறுக்கு ஓரிரு மாதங்கள் முன் தங்கள் பிறந்த வீட்டுக்குச் செல்வது வழக்கமாக உள்ளது. பேறு பார்ப்பதிலும் மருந்துகள் தருவதிலும் அனுபவப்பட்ட ஒரு மருத்துவச்சியின் உதவியினையும் பிரசவம் சிக்கலாயிருப்பின் இவர்கள் சிலபோது நாடுவர். பொதுவாக அத்தகைய மருத்துவச்சியின் முரட்டுத்தனமான மருத்துவம் பிள்ளைப் பெற உள்ளவளுக்கு மேலும் துன்பத்தை உண்டாக்குவதாக இருக்கும். குழந்தை பிறந்தவுடன் பிள்ளையைப் பெற்றவளுக்குச் சுக்கு மிகுதியும் கலந்த கஷாயம் தருவர். 'சுக்கில்லாத கஷாயம் உண்டா?' என்ற தமிழ்ப் பழமொழியும் உண்டு. குழந்தை பிறந்த ஒரு வாரத்திற்குப் பின் தீட்டுப் போக்கும் சடங்காகப் பிள்ளை பெற்றவளை எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் செய்வர்.

சூத்திரர்களிடையே சீமந்தம் என்ற வடமொழிப் பெயருக்கு உரியதான ஒரு சடங்கு நடத்தப்படுகின்றதெனினும் அது பிராமணர்கள் நடத்தும் சீமந்தத்தை ஒத்ததன்று. முதல்முறை ஒருத்தி கருவுறும்போதே இது நடத்தப்படுகின்றது. கருவுற்றவள் ஒரு உரலின் மீது குனிந்தபடி நிற்க, அவள் முதுகின் மீது தண்ணீர் அல்லது தாய்ப் பாலினை அவளுடன் பிறந்த ஒருத்தி ஊற்றுவாள். பிறக்கப் போகும் குழந்தைக்கு நகைகள் வாங்க அவளுக்குப் பணமும் தரப்படும். இச்சடங்கில் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டுமே பங்குபெறுவர். "ஊரான் யாராவது வந்து இவள் முதுகில் நீரூற்றுங்கள்" என்ற பழமொழியும் இதன் காரணமாக ஏற்பட்டதே. குடும்பத்தவர்கள் செய்ய வேண்டிய சடங்கை வெளியார் வந்து செய்ய வேண்டி ஏற்படுவதைக் குறிக்கத் தோன்றியதே இப்பழமொழி. பறையர்கள் சில்போது இச்சடங்கை நிகழ்த்துகின்றனர். பிராமணர்கள் இச் சடங்கு குழந்தை ஆணா பெண்ணா என்பதனைப் பாதிப்பதாகும் என நம்புகின்றனர். கருவுற்ற ஒருத்தியோ பிள்ளை பெற்ற ஒருத்தியோ இறக்க நேரிட்டால் அவளுடைய ஆவி தீங்கு செய்யும் இயல்பினதாக அந்த ஊரை அலைக்கழிக்கும் என்று நம்புகின்றனர்.

கணவன் இறந்த பின் அவளது தாலியினைக் கணவன் இறந்த

சில நாள்களுக்குப் பின் உறவினர்கள் முன்னிலையில் அறுப்பர். "கைம்பெண் ஒருத்தியின் தாலியறுக்கும் சடங்கு தனித்ததொரு இயல்புடையது. கணவன் இறந்த பதினாறாம் நாள் முன்நோக்கிக் குனிந்தபடி நிற்கும் கைம்பெண்ணின் பின்னால் நிற்கும் மற்றொருத்தி, அறுக்கப்படும் அவளுடைய தாலி கீழே வைக்கப்பட்டுள்ள பாலுள்ள பாத்திரத்தில் அது விழும்படியாக அதனை அறுப்பாள். இவர்கள் குழந்தையைத் தத்தெடுக்கும் முறையும் விசித்திரமானது. தத்தெடுப்பவர்கள் தத்தாக வருபவன் கால்களை மஞ்சள் நீரால் கழுவி அதில் கொஞ்சத்தைக் குடிப்பர். இதனால் இது "தத்துப் பிள்ளை மஞ்சள் நீர்ப் பிள்ளை எனவும் தத்தெடுத்தல் மஞ்சள் நீர்க் குடித்தல் எனவும் வழங்கப்படுகிறது" எனத் திரு. பிராசிஸ் தென் ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பில் கூறியுள்ளார். கைம்பெண் என்பதற்கு அடையாளமாகப் பறையர் சாதிப் பெண்கள் தனித்த உடை ஏதும் தரிப்பதில்லை. அவர்கள் நெற்றியில் குங்குமம் இட்டுக் கொள்ள மாட்டார்கள். இதனை மணமான பெண்கள் தீட்டுக்குள்ளாக்கும் நாள்கள் தவிர மற்ற எல்லா நாள்களிலும் தவறாது நெற்றியில் தரிப்பர்.இளமையிலேயே கணவனை இழந்த பறையர் சாதிப்பெண் இன்னொருவனுடன் அவன் மனைவியாகச் சேர்ந்து வாழ்வது வழக்கம்.இவ்வாறு யாரோடு சேர்ந்து கொள்வது என்பதனை முடிவுசெய்யும் உரிமை அவளுடையதேயாகும். இறந்த கணவனுடைய உடன்பிறந்தவர்கள் அல்லது வேறு உறவினர்களோடுதான் அதுபோலச் சேர்ந்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லை. எனினும் சிலர் அதுபோல உறவினர்களோடுதான் சேர்ந்து கொள்கின்றனர். இதுபோல குருதி உறவு உடைய ஒருவனோடு தான் சேர வேண்டும் என்ற கட்டுப்பாடோ சேரக்கூடாது என்ற தடையோ பறையர்களிடையே இல்லை என்பது தமிழ்ச் சாதியார் அனைவரும் அறிந்த ஒன்று. "பனைமரத்திற்கு நிழலுமில்லை, பறையனுக்கு முறையுமில்லை" என்பது தமிழ்ப் பழமொழி

"பிராமணர்களுடைய கோட்பாடுகளும் வழக்கங்களும், பறையர் மீது செல்வாக்கு உடையவனவாக அவர்களை மாற்றவில்லை. ஒரு சில சடங்குகள் பிராமணிய தாக்கத்தின் காரணமாக அமைந்தவை எனக் கூற இடமுள்ளது. பறையர்கள் சைவர்களாயினும் அவர்கள் சிறு தேவதைகளையே வழிபடுகின்றனர் என 1791 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பபட்டுள்ளது. புலையனான நந்தன் தன்னை மாற்றிக் கொள்வதற்கான சடங்கை மேற்கொள்ளும் முன்,

குளித்ததான தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஹோமகுளம் புகழ்மிக்கது எனத் தென் ஆர்க்காடு மாவட்டக் கையேடு கூறுகின்றது. சடங்குகளில் கூடப் பறையர்கள் மீது பிராமணியத்தின் தாக்கம் மிகச் சிறியதே. பறையன் எவனும் சைவ வைணவ கோயில்களுள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. திருவள்ளூரில் உள்ள தனித்த இயல்பினதான ஸ்ரீ வீரராகவ சுவாமி கோயிலில் கூட இவர்கள் தங்கள் காணிக்கையினைச் சூத்திரர்கள் கையில் தர, அவர்களே அதனைக் கோயிலினுள் கொண்டு சேர்ப்பிக்கின்றனர். பறையர்கள் சைவர்கள் என அடிக்கடி கூறப்படுவது உண்மையே. எனினும் வைணவத்திற்குரிய நாமத்தினைத் தங்கள் நெற்றியில் முறையாகத் தீட்டிக் கொள்ளும் பலரும் இவர்களிடையே உள்ளனர். தேவதைகள் என அழைக்கப்படும் பெண்பால் தெய்வங்கள் சிவனுக்குரியதான சக்தியினைத் தங்களிடம் கொண்டிருப்பதாகக் கருதப்படுவதால் அந்தத் தேவதைகளை வழிபடும் பறையரும் சைவ நெறி சார்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். உண்மையினைக் கூறப்போனால் நாமம் இட்டுக்கொள்வதோ விபூதி பூசிக்கொள்வதோ எதுவாயினும் அது எந்த உட்பொருளையும் பறையன் ஒருவனுக்கு உணர்த்துவதில்லை. இந்த வகையில் இவர்கள் சைவர்களும் அல்லர். வைணவர்களும் அல்லர்.

திராவிடர்கள் அனைவரையும் போலவே பறையரும், எங்கும் நிறைந்துள்ளவரான பரம்பொருள் ஒருவர் உள்ளார் என்பதை உடன்படுவதோடு அவரைக் கடவுள் என அழைக்கின்றனர். கடவுளுக்கென தனிக்கோயில்களோ வழிபாடோ இல்லை. பறையரின் சிந்தனையின் ஒரு கோட்பாடாக விளங்குபவர் அவர். அம்மா என அழைக்கப்படும் மூன்று பெண் தெய்வங்களைப் பறையர் வழிபடுகின்றனர். சில சமயங்களில் இப்பெண் தெய்வங்கள் ஏழு கன்னியர் என்ற பெயரால் கன்னியம்மாவாகவும் வழிபடப்படுகின்றனர். இத் தெய்வங்களான அம்மாரை ஒரு சேர வழிபடுவதும் உண்டு. ஒரு குறிப்பிட்ட எல்லையமைப்பில் ஏழு கற்களில் அல்லது செங்கற்களில் ஒரு வேப்பமரத்தடியில் அமைந்த மேடையில் இத் தெய்வங்களை எழுந்தருளச் செய்வர். மரப்பட்டைகளாலான கூரைக் கொட்டகை அல்லது செங்கற்களாலான சிறுகோயில் கூட இவளுக்காக அமைக்கப்படுதல் உண்டு. இக்கோயில்களை எங்கும் அம்மன்கோயில் என அழைப்பர். பறையர் கோயிலில் ஒரே ஒரு அம்மாவை வழிபடுவதே பெருவழக்கு.

அவ்வாறு வழிபடப்படுபவள் கிராம தேவதை அல்லது ஊர்த்தேவதை என அழைக்கப்படுவாள். இத்தகைய கிராம தேவதைகளின் பெயர்கள் எண்ணிலடங்காதனவாயுள்ளன. ஒவ்வொரு ஊராரும் தங்கள் ஊர்த்தேவதை அடுத்த ஊர்த் தேவதையிலும் வேறுபட்டவள் எனக் கூறுவர். எனினும் இத் தேவதைகள் அனைவரும் உடன்பிறந்தோர்களாகவே கருதப்படுவர். ஒவ்வொருத்தியும் அவளுடைய கோயில் அமைந்துள்ள சேரி அல்லது ஊரின் எல்லையினைக் காப்பதாக நம்புகின்றனர். சிலபோது கிராமம் மற்றும் சேரி இரண்டையும் அவள் காப்பதாகவும் நம்புகின்றனர். தான் வாழும் ஊர் எல்லையில் வாழும் மக்களையும் கால்நடைகளையும் நோய்நொடி, பஞ்சம், ஆபத்து ஆகியனவற்றிலிருந்து காப்பதோடு கால்நடைகள், ஆடுகள், குழந்தைகள் ஆகியன எண்ணிக்கையில் பெருகவும் அவளே அருள்வதாக நம்புகின்றனர். சுருங்கச் சொன்னால் அவள், தான் உறையும் இடத்தில் தன்னை வழிபடுபவர்களைக் காத்து வருபவள் எனலாம். கிராமத்தவர்கள் குலதெய்வமாக வழிபடும் இத்தகைய தேவதைக்குரிய சில பெயர்கள் வருமாறு:"

எல்லம்மா – எல்லையைக் காக்கும் தேவதை. தமிழ், தெலுங்குப் பறையர்கள் இவளை வழிபடுகின்றனர்.

மூங்கிலம்மா – மூங்கில் தெய்வம்

படையாத்தாள் – படையாச்சி எனவும் அழைக்கப்படுவாள்

பறபொட்டம் – தெலுங்கருக்குரிய கால்நடைகளின் நோய்களைத் தீர்க்கும் தேவதை

பிடாரியம்மா – இவளை எல்லைப் பிடாரி எனவும் அழைப்பர்.

இத்தேவதைகளைக் கூர்கல்லாகவோ செதுக்கப்பட்ட லிங்கமாகவோ வைத்து வழிபடுகின்றனர். சில இடங்களில் நந்தியின் அமைப்பிலான கல்லும் இரும்பாலான திரிசூலமும் இக்கோயில்களை அடையாளம் கண்டுகொள்ள உதவும். இரவில் அவ்விடத்தில் ஒரு விளக்கினை ஏற்றி வைப்பர்.

தேவதைகள் அனைவருக்குமான சடங்கொடுபட்ட வழிபாட்டுமுறை மிக எளிமையானதே. தான் வழிபடுவது ஒரு

கல்லாயினும் ஏழு கற்களாயினும் ஓர் உருவமாயினும் வழிபடுபவன் அதன் முன் தலையில் விழுந்து வணக்கம் செலுத்துவான். அவற்றுக்கு எண்ணெய், மஞ்சள், குங்குமம் ஆகியன பூசி மலர் மாலைகள் அணிவிப்பான். அலரிப் பூக்க *(Nerium odovum)* ளாலான மாலைகளே பெரும்பாலும் வழிபாட்டுக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன. பின் கற்பூர ஆரத்தி காட்டி அவன் கோயிலை வலமாகச் சுற்றி வருவான். சிறப்பான வழிபாடு நிகழ்ந்தபோது தேங்காய் உடைத்து வைத்துக் கோழி, ஆடு, மறி ஆகியனவற்றைப் பலியாகத் தருவான். ஆட்டினையும் மறியினையும் ஒரே வெட்டில் வெட்ட வேண்டும் என்பது விதி. அவற்றின் குருதியினை ஊற்றுவதோடு சிறு தொகையினையும் காணிக்கையாகத் தந்தபின் தான் வழிபடும் தேவதைக்கான சிறப்பான வழிபாட்டைச் செய்து முடித்ததான திருப்தியோடு தன் வழியோடு செல்வான்.

சில சிறப்பான கோயில்கள் மிகுந்த புகழ்பெற்றனவாக உள்ளன. சென்னையிலிருந்து பதினாறு மைல் தொலைவில் உள்ள பெரியபாளையத்தில் உள்ள பவானியம்மன் கோயில் அத்தகைய கோயில்களுள் ஒன்று. அங்கு நடைபெறும் ஆண்டுத் திருவிழாவிற்கு மக்கள் பெருந்திரளாகக் கூடுவர். பறையர், பள்ளர், சக்கிலியர் ஆகியோரே இக்கோயிலுக்கு வரும் சாதியருள் குறிப்பிடத்தக்கவர்கள். சென்ற சில ஆண்டுகளாக சூத்திரர்களும் பிராமணர்களும் இங்கு வரத் தொடங்கியுள்ளனர். இங்குள்ள தேவிக்குச் செய்யப்படும் வழிபாடு இருவகைப்படும். இவளை வழிபடுபவர்கள் கோயிலுக்கு வெளியே உள்ள ஆற்றங்கரையில் ஆயிரக்கணக்கான ஆடுகளைப் பலியிடுவர். அத்துடன் தங்கள் உடலை வேப்பிலைக் கொத்துக்களால் மறைத்தப்படி கோயிலைச் சுற்றி வருவர். திருவிழா நடைபெறும் ஆடிமாதத்தில் வரும் ஐந்து வெள்ளிக்கிழமைகள் நீங்கலாக மற்ற சமயங்களில் கோயில் வெறிச் சோடிக் கிடக்கும். பிற மாதங்களில் மரக்கறி உணவுக்காரியாக மாறிவிடும் இத்தேவிக்கு உயிர்ப்பலி தரப்படுவதில்லை. எனினும் ஆடி மாதத்து ஞாயிற்றுக் கிழமைகளில் இவள் ஒரு சக்கிலிச்சியினைப் போல இறைச்சியின் மீது வெறிகொண்டவளாக இருப்பாள் எனக் கூறப்படுகிறது.

சுங்கம்மாள், மாரியாத்தாள் என்ற இரண்டு தேவிகளும் குலதெய்வங்களாக வழிபடப்படும் தேவியரினும் வேறுபட்டவர்களாகத்

தனிச் சிறப்புக்கு உரியவர்களாக வழிபடப் படுகின்றனர். கங்கம்மா காலரா நோய்க்கு உரியவள் எனவும் கூறப்பட்டாலும் இரண்டு நோய்களுமே மாரியம்மாவின் கோபத்தாலேயே ஏற்படுவதாகக் கூறப்படுவதும் உண்டு. தெலுங்கர்கள் மாரியம்மாவினைப் பொலேரம்மா, அம்மாவாரு என்ற பெயர்களில் வழிபடுகின்றனர். வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆர்க்காட்டுக்குப்பத்திற்கு அருகே வைகாசி மாதத்தில் கங்கம்மாவிற்காக நடத்தப்படும் திருவிழாவில் சூத்திரர்களும் பங்கு பெறுகின்றனர். இந்தத் திருவிழாவில் புத்தரிசியினைக் கொண்டு பொங்கலிடுவதே முக்கியச் சடங்கு. அப்போது ஆண்களும் பெண்களைப் போல உடை உடுத்தியவர்களாக விசித்திரமான நடனங்களை ஆடுவர். ஆவணி மாதத்தில் உத்தரமல்லூரில் மாரியாத்தாளைச் சிறப்பிக்க எடுக்கப்படும் பத்து நாள் திருவிழாவில் தேவியினை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வண்ணான் அவளைச் சிறப்பிக்க ஒருவகையான ஊமையாட்டம் ஆடுகின்றான். இந்தத் தேவதைகள் (அல்லது குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால் கங்கம்மாள்) ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் சாலைகள் தெருக்கள் வழியாகப் பயணம் செய்வார்களேயன்றி வயல்களில் குறுக்காகப் போவதில்லை எனவும் வேப்பிலையினையும் பிரண்டையினையும் இவர்கள் தாண்ட மாட்டார்கள் எனவும் நம்புகின்றனர். எனவே ஒரு ஊரில் காலரா தலைகாட்டுமானால் இத் தேவதை ஊர் ஊராகப் பலிகேட்டு வருவாள் என்ற காரணத்தால் ஊருக்குள்ளும் சேரிக்குள்ளும் வரும் வழியில் வேப்பமரத்துக் கிளைகளையும் பிரண்டையினையும் வைத்து வழியினை அடைத்துவிடுவர். சில சமயங்களில் வேப்பிலைக் கொத்துக்களை கயிற்றில் கட்டிச் சாலையில் குறுக்கே தொங்க விடுவர். இவை தோரணம் எனப்படும்.

மேலே கூறிய தேவதைகளோடு பேய்கள், பிசாசுகள், பூதங்கள் ஆகியனவற்றையும் பறையர் வழிபடுகின்றனர். முத்தேரி வீரன், வீரபத்ரன் ஆகிய பூதங்களை இவர்கள் இவ்வாறு வழிபடுவனவற்றுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

தமிழ்ப் பறையன்களுள் ஒவ்வொரு ஊரிலும் சில குடும்பத்தினரை மற்ற பறையர்கள் உயர்ந்த புனிதப் பண்பு வாய்க்கப் பெற்றவர்களாகக் கருதுகின்றனர். இவர்கள் வள்ளுவன்கள். வள்ளுவப் பண்டாரங்கள்,

வள்ளுவப் பறையன்கள் எனப்படுவர். இவர்களுடைய அதிகார வரம்பும் தகுதியும் இவர்களுடைய கூர்த்த மதியின் அளவுக் கேற்றதாக அமையும். சில சமயங்களில் பிராமணர்கள் கூட இவர்களைப் பேயோட்டுதலில் திறமை மிக்கவர்கள் என மதித்துப் போற்றுகின்றனர். பொதுவாகச் சாதாரணப் பறையரினும் வள்ளுவப் பறையரை வேறுபடுத்தி அறிதல் முடியாது. பறைச் சேரியில் வள்ளுவப் பறையன்கள் இல்லங்கள் மற்றவர்கள் இல்லங்களிலிருந்து சற்றுத் தள்ளி ஒதுக்கமாக அமைந்திருக்கும். பறையர் திருவிழாக்களில் வள்ளுவப் பறையன்கள் முக்கியப் பங்கு பெறுவர். திருமணங்களில் மணமகள் கழுத்தில் தாலி அணிவிக்கும்போது இவர்கள் வாழ்த்துக் கூறுவர்.

கெட்ட ஆவிகள் அல்லது தேவதைகள் ஒருவன் மீது ஏறுமாயின் இந்தத் தீங்கு நிகழ்வது எதற்கான அறிகுறி என்பதனைக் கண்டுகொள்ள ஒரு வள்ளுவனை நெருங்கி ஆலோசனை கேட்பர். அவனும் தீய ஆவிகளை ஓட்டுவதில் உடன் பங்குபெறுவான். சில சமயங்களில் தீய ஆவிகளிடமிருந்து அவை அதுபோல ஒருவன் மீது ஏறியுள்ளதன் காரணத்தை அறியவும் அவற்றை விரட்டவும் வன்முறைகளும் அடிஉதைகளும் கூடப் பயன்படுத்தப்படும். 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் வள்ளுவன் பிற பிரிவுப் பறையரோடு உண்பதும் மண உறவு கொள்வதும் இல்லை எனப் பதியப்பட்டுள்ளது. திரு. கிளெய்டன் இதனைத் தான் உறுதிப்படுத்த இயலாதென்றும் இது பொதுவான வழக்கு என ஏற்றுக் கொள்வதற்கில்லை எனவும் கூறியுள்ளார்.

இறந்தவர்களின் பிணத்தைப் புதைப்பதே பெருவழக்கு எனினும் சில சமயங்களில் எரிப்பதையும் மேற்கொள்கின்றனர். ஊரைச் சேர்ந்த புறம்போக்கு நிலத்தில் ஒரு பகுதி இதற்காக என ஒதுக்கப்பட்டிருக்கும். அது பறையருக்கு மட்டுமே உரிமை உடையதாகும். பறையரின் சாவுச் சடங்குகள் மிக எளிமையானவை. மூங்கில், பனையோலை ஆகியவற்றைப் பயன்படுத்தி அப்போதைக்கு என அமைக்கப்பட்ட பாடையில் பிணத்தை வைத்துத் தூக்கிச் செல்வர். பிணத்தை ஒரு பருத்தித் துணியினைச் சுற்றிப் போர்த்தியிருப்பர். வசதி படைத்தவர்கள் இதற்காகப் புதுத் துணியினைப் பயன்படுத்துவர். பிணம், புதைக்கவோ எரிக்கவோ படும். சாவு நிகழ்ந்த மூன்றாம் அல்லது ஐந்தாம் நாள் பால்

சடங்கு நடத்துவர். அச்சடங்கின்போது இறந்தவரின் பங்காளிகள் இறந்தவர் ஆவிக்காகப் பாலினைப் படைப்பர். அதன்பின் அவரது ஆவி ஒருவகையான பரு உருப்பெற்று விதிப்படி மீண்டும் அது பிறப்பதற்குரிய நாள் வரை தங்கியிருக்க வேண்டிய இடத்திற்குச் சென்று சேரும் என நம்புகின்றனர். இச் சடங்கின்போது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு விருந்தளிப்பர். சாவு நிகழ்ந்த பதினைந்தாம் நாள் மீண்டும் உறவினர்கள் கூடி இறந்தவரின் ஆவிக்குச் சோறு படைப்பர். இச்சடங்கு கருமாந்திரம் எனப்படும். சாவுக்குப் பின் தொடர்ந்து சில மாதங்கள் வரை அவ்வப்போது புதைகுழியின் மீது மலர்கள் வைப்பதோடு அதன்மீது தேங்காயினையும் உடைத்து வைப்பர். இறந்த நாளினை ஆண்டுதோறும் நினைவு கூறவும் முயற்சி மேற்கொள்வர். இது வழக்கமான சடங்கன்று. இது பிராமணர்களைப் பார்த்து மேற்கொண்ட வழக்கமாதல் வேண்டும். பாமரனான பறையன், சாவிற்குப் பிறகு வாழ்வினைப் பற்றிப் பிரிந்துபோன ஆன்மா எங்கோ ஓர் இடத்தில் தொடர்ந்து வாழ்கின்றது என்பதாக நம்புகின்றான். சாவுக்குப் பின் கர்மப் பயனுக்கு ஏற்ப ஆன்மாவின் வாழ்வு தொடர்ந்து நிகழும் என்ற கோட்பாடு இவர்களிடையே இல்லை. தலைச்சன் குழந்தை இறக்குமானால். அதனை வீட்டருகிலோ, வீட்டினுள்ளாகவோ புதைப்பர். இத்தகைய தலைச்சன் குழந்தைகள் தனித்த சக்தி வாய்க்கப் பெற்றனவாக உள்ளமையால் மந்திரவாதிகளும் பில்லி சூன்யக்காரர்களும் மந்திரச் சடங்குகளில் பயன்படுத்த இவற்றின் பிணத்தைக் கவர்ந்து செல்வர் என்பதால் தான் இவை இவ்வாறு புதைக்கப்படுகின்றன. "தங்கலான் பிரிவினைச் சேர்ந்த பறையர் தாங்கள் ஒரு காலத்தில் மதிப்பு மிகுந்த பிரிவினராக இருந்ததாகக் கூறுவதோடு தங்கள் திருமணம் மற்றும் சாவுச் சடங்குகளின்போது பூணூல் அணிந்து கொள்கின்றனர். மற்றவர்கள் இவ்வாறு தங்களைப் பற்றிக் கூறிக்கொள்வதில்லை" எனத் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் கூறியுள்ளார்.

கோயமுத்தூரைச் சேர்ந்த பறையரின் சாவுச் சடங்குகள் தொடர்பாகத் திரு.வி.கோவிந்தன் தந்த விவரங்களின் அடிப்படையில் அமைந்ததே பின்வரும் குறிப்பு. இறந்தவன் மணமானவனாயின் அவனுடைய பிணத்தை வேப்பங்கொத்துகள், திருகு கள்ளி *(Emphoria Tirucalli)* ஆகியவற்றாலான சிறுகுச்சில் உட்கார்ந்த நிலையில் வைப்பர். அவன் மனைவி தன்னிடம் உள்ள

அணிகளையெல்லாம் அணிந்தவளாகத் தலையில் மலர்சூடித் தன்னை அலங்கரித்துக் கொள்வாள். அவள் பிணத்தின் இடதுபக்கமாக அமர்ந்தபின், பிணத்தின் கையில் சிறிது நெல்லை அல்லது உப்பை வைத்து யாரேனும் அதன் கையினைப் பிடித்து அதனை அவளுடைய கைகளில் போடும்படி செய்வர். அவள் மீண்டும் அதனைப் பிணத்தின் கையில் இடுவாள். இதுபோல மும்முறை மாற்றிக் கொண்டபின் அந்த நெல்லை அவளுடைய சேலைத் தலைப்பில் முடிவர். புதைகாட்டிற்குச் செல்லும் வழியில் இறந்தவருடைய மகன் ஒரு புதுப் பானையினையும் நாவிதன் சமைத்த சோற்றினையும் கத்தரிக்காயினையும் பூசை செய்வதற்கு வேண்டிய பொருள்களையும் உடன் எடுத்துச் செல்வான். சுடுகாட்டிற்குப் பொறுப்பு வகிக்கும் பறையன் தீக்கொள்ளியினை உடன் எடுத்துச் செல்வான். இறந்தவன் பயன்படுத்திய பாய் முதலயவற்றையும் குச்சில் அமைக்கப் பயன்படுத்தியவற்றையும் ஒரு வண்ணான் முன்னால் கொண்டு செல்வான். அவன் அவற்றை இறந்தவன் வீட்டிற்கும் புதைகுழிக்கும் இடையே அமைந்துள்ள இடுகாட்டில் சேர்ப்பான். இடுகாடே அரிச்சந்திரன் குடியிருப்பினைக் குறிக்கும் இடமாகும். அரிச்சந்திரன் பறையன் ஒருவனிடம் அடிமைப்பட்டு இடுகாட்டின் பொறுப்பினை மேற்பார்த்து வந்த அரசனாவான். இடுகாட்டில் பிணத்தைத் தரையில் வைத்து இறந்தவனுடைய மகன் மும்முறை அதனை வலம் வந்து பிணத்தின் தலைமாட்டில் பானையினை உடைப்பான். நாவிதன் பிணம் வைக்கப்பட்டுள்ள இடத்தில் தரையில் நான்கு மூலைகளிலும் அடையாளம் செய்ய, இறந்தவனுடைய மகன் அவற்றில் மூன்றின் மீது காலணாக்களை வைத்தபின் வடகிழக்கு மூலையில் உள்ள அடையாளத்தின் மீது கொஞ்சம் சாணத்தை இடுவான். இறந்தவன் மனைவி பிணத்தின் கால்மாட்டில் நிற்க கைம்பெண்ணான மற்றொருத்தி அவளுடைய தாலியினை அறுத்துப் பிணத்தின் மீது எறிவாள். புதைகுழியினை அடைந்தவுடன் குருக்கள் அதனுள் இறங்கிப் பூசை செய்து அதன் பக்கங்களில் விபூதியினை இடுவார். பின் பிணம் உள்ளே இறக்கப்படும். பிணத்தைச் சுற்றியுள்ள துணியில் அரைக் கெசம் ஒரு பறையனுக்கும் கால் கெசம் ஒரு ஆண்டிக்கும் வழங்கப்படும். புதைகுழியில் பிணத்தை முகத்தை மட்டும் விட்டு மூடியபின் முகத்தின் மீது வில்வ இலைகள் *(Aegle Marmelos)* உப்பு, விபூதி ஆகியனவற்றைக் குருக்கள் இடுவார். புதைகுழி மூடப்பட்டு முள்ளோடு கூடிய மரக்கிளையொன்றும் ஒரு கல்லும் தலைமாட்டில் வைக்கப்படும்.

இறந்தவரின் மகன் நீர் நிறைந்த பானையினைச் சுமந்தபடி புதைகுழியினைச் சுற்றி வரும்போது நாவிதன் அதில் ஒரு துளையினை இடுவான். பின் அப்பானை தலைமாட்டில் வைக்கப்பட்ட கல்லின் மீது போட்டு உடைக்கப்படும். இறந்தவனின் மகனும் பிற உறவினர்களும் குளித்தபின் வீட்டுக்குத் திரும்புவர். வீட்டுவாசல் அருகே உரல்மீது கிண்ணத்தில் பாலும் மற்றொன்றில் தண்ணீரும் வைக்கப்பட்டிருக்கும். அவர்கள் அரச *(Ficurs religiosa)* இலையினை பாலில் நனைத்து அதனை வீட்டின் கூரைமீது வீசியபின் வீட்டினுள் வந்து ஏற்றி வைக்கப்பட்டடுள்ள விளக்கினைக் கும்பிடுவர். மூன்றாம் நாள் சமைத்த சோற்றையும் இறந்தவருக்கு விருப்பமானதாக இருந்த வேறு பலகாரங்களையும் எடுத்துச் சென்று புதைகுழி அருகே ஒரு மேடை அமைத்து அதன்மீது இலையில் படைப்பர். பூசை செய்த பின் அவற்றைக் காகங்கள் தின்னும்படி விடுவர். அவ்வாறு காகங்கள் வரவில்லையானால் குருக்கள் வழிபாடு செய்தபின் அவற்றின்மீது மும்முறை நீரிறைப்பர். பதினேழாம் நாள் இறந்தவர் மகனும் பிற உறவினர்களும் குருக்களுடன் ஒரு புதுச் செங்கல்லையும் பூசைக்கு வேண்டிய பிற பொருட்களையும் எடுத்துக் கொண்டு ஆற்றுக்குச் சென்று அச் செங்கல்லைத் தண்ணீரில் நனைப்பதோடு இறந்தவன் மகன் தானும் குளித்து வருவான். பூசைப் பொருள்களை ஒரு வாழையிலையில் பரப்பி அதன் முன் அவன் அச்செங்கல்லை வைப்பான். பூசை செய்த பின் புதியதொரு துண்டுத் துணியினை அச்செங்கல்லில் சுற்றி மீண்டும் அதனை நீரில் கொண்டுபோய் விடுவான். ஹோம நெருப்பு மூட்டுவதோடு சடங்கு நிறைவுறும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பறையர் சாவுச் சடங்குகள் பற்றித் திரு.கே.ரங்காச்சாரி பின்வருமாறு விவரிக்கின்றார். பிணத்தைக் குளிப்பாட்டிப் புதுத்துணியால் சுற்றிப் பாடையில் வைத்துப் புதைக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வர். பிணத்தைப் பாடையில் வைக்கும் முன் தீட்டுக்கு உள்ளாகும் உறவினர்கள் அனைவரும் பிணத்தை மும்முறை சுற்றி வருவர். அப்பொழுது வைக்கோல் சுற்றப்பட்ட இரும்பாலான படி ஒன்றில் உள்ளே வைக்கப்பட்டுள்ள எரியும் விளக்கினை ஏந்தியவர்களாக இவர்கள் செல்வர். புதைகுழிக்குப் பிணத்தை எடுத்துச் செல்லும் வழியில் அதன் முன்னே இறந்தவர் மகனோ பேரனோ பங்காளிகள் பொரித்துத் தந்த பொரியினை இறைத்தபடி செல்வர். வெட்டியான் நெருப்புள்ள ஒரு

பானையினைத் தூக்கிச் செல்வான். குறிப்பிட்ட இடத்தில் பாடை இறக்கி வைக்கப்படும். சமைக்கப்பட்ட சோறுள்ள பானையினை எடுத்தவனாக இறந்தவரின் மகன் பிணத்தைச் சுற்றி வந்தபின் தலையருகே அந்தப் பானையினைப் போட்டு உடைப்பான். அதில் உள்ள சோற்றை மனிதர் விலங்குகள் யாரும் தொடாதபடி மண்ணிட்டு மூடுவர். பிணத்தைச் சிதையில் வைத்தபின் அல்லது புதைகுழியில் கிடத்திய பின் உறவினர்கள் அதன்மீது அரிசியினை இடுவர். இறந்தவர் மகன் தண்ணீருள்ள பானையினைச் சுமந்தபடி பிணத்தை மும்முறை சுற்றி வந்தவனாகக் கூடியுள்ளவர்களிடம் சடங்கினைத் தான் முடித்துவிடலாமா எனக் கேட்பான். அவர்கள் தங்கள் உடன்பாட்டினைத் தெரிவித்தபின் அவன் மீண்டும் மும்முறை பிணத்தைச் சுற்றி வருவான். அப்பொழுது நீருள்ள அந்தப் பானையில் மூன்று துளைகள் இடப்படும். அதனை அவன் உடைத்தவனாகத் திரும்பிப் பாராது வீட்டை நோக்கிச் செல்வான். இறந்தவன் மணம் ஆகாதவனாக இருப்பின் கன்னி கழித்தல் எனப்படும் போலி மணச் சடங்கு ஒன்றினை நிகழ்த்துவர். எருக்கம் ***(Golothros giantea)*** பூ, இலை ஆகியவற்றால் ஆன மாலை ஒன்றினைப் பிணத்தின் கழுத்தில் அணிவித்து சாக்கடையிலிருந்து எடுத்த சேற்று உருண்டைகளைப் பிணத்தின் தலை, முழங்கால் முதலிய உறுப்புக்களின் மீது வைப்பர். சில இடங்களில் இச் சடங்கிற்காகத் திருமணப் பந்தல் போன்ற பந்தல் ஒன்றினை இட்டு அதனை எருக்கஞ் செடிகளால் வேய்ந்து எருக்கம் பூமாலையினைப் பிணத்தின் கழுத்தில் அணிவிக்கும் பழக்கமும் உள்ளது. சாவு நிகழ்ந்த மூன்றாம் நாள் சமைத்த சோறு, பால், பழம் முதலியனவற்றை இறந்தவரின் ஆவிக்காக வேண்டி புதைகுழியின் தலைமாட்டில் ஒன்றும் கால்மாட்டில் ஒன்றுமாக இடப்பட்ட இரண்டு இலைகளில் படைப்பர். இவற்றுள் தலைமாட்டில் இருப்பதை ஆண்களும் கால்மாட்டில் இருப்பதைப் பெண்களும் எடுத்து உண்பர். பன்னிரண்டு அல்லது பதினாறாம் நாள் கருமாந்திரச் சடங்கினை நடத்துவர். உறவினர்கள் அனைவரும் சோறு, பலகாரம் முதலியனவற்றை எடுத்துக் கொண்டு ஒரு குளக்கரைக்குச் சென்று சேற்று மண்ணால் ஒரு கணேசர் உருவம் பிடித்து வைத்து அதன் அருகே ஐந்து கலசங்களின் முன் படைக்கப்படும். ஆண், பெண் உருவங்கள் மேலே தீட்டப்பட்டுள்ள இரண்டு செங்கற்களை இறந்தவருடைய மகனிடம் தருவர். அவன்

அவைகளைக் குளிப்பாட்டித் தண்ணீரின் அருகே வண்ணான் மண்ணில் அமைத்து வைத்துள்ள மனித உருவத்தின் அருகே வைத்துப் பூசை செய்வான். பின் அவன், "நான் கன்றுகளையும் பணத்தையும் தருகின்றேன். கைலாசத்தில் புகுவாயாக. பரலோகத்திற்குரிய வழியினைக் காண்பாயாக. உனக்கு நான் பாலும் பழமும் தருகின்றேன். நீ இறந்தவர்கள் சென்று சேரும் இடத்தை அடைவாயாக. தாய் வழியில் பதினோரு பேரும் தந்தை வழியில் பத்து பேருமாக மொத்தம் இருபத்தொரு பேராக அனைவரும் சென்று சொர்க்கத்தில் சென்று புகுங்கள் " எனக் கூறுவான். அதன்பின் அவன் அந்தச் செங்கற்களை நீரில் இடுவான். அவர்கள் வீட்டிற்குத் திரும்பிய பின் இறந்தவரின் மகன்களுக்குப் புதிய வேட்டிகள் வழங்கப்படும்.

ஒருவன் இறந்தபின் அவனுக்காக வீட்டில் கற்பூரம் கொளுத்தாமல் முச்சந்தியில் கற்பூரம் கொளுத்துவர் எனத் தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ளது. பறையருள் சிலர் குடும்பத்தில் சாவு நிகழ்ந்தவுடன் தண்ணீர் அல்லது சாணி நிறைந்த ஒரு பானை, ஒரு விளக்குமாறு, ஒரு கொள்ளிக்கட்டை ஆகியனவற்றை முச்சந்தியிலோ வீட்டின் வாசலிலோ இறந்தவரின் ஆவி திரும்பி வராது தடுக்க வைக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. இறந்தவனின் உள்ளங்கையின் பதிவினைச் சாணியில் பதிந்து அதனைச் சுவரில் அப்பி வைப்பர். திருத்துறைப்பூண்டி போன்ற சில பகுதிகளில் பறையர், வலையரும் கரையான்களும் நிகழ்த்துவது போன்ற சடங்கினைச் சாவு நிகழ்ந்த இரண்டாம் நாள் இறந்தவரின் மகன் சுடுகாட்டிலிருந்து திரும்பி வந்தபின் நிகழ்த்துகின்றனர். மூன்று உரல்களையும் ஒரு சொம்பில் தண்ணீரினையும் விட்டு வாசலில் வைத்திருப்பர். இறந்தவரின் மகன் அந்த உரல்களின் மீது அமர்ந்து ஒரு மீனின் துண்டினை மென்று மும்முறை துப்பியபின் வீட்டினுள் சென்று அங்கு எரிந்து கொண்டிருக்கும் விளக்கினை வணங்குவான்.

பெண்கள், சிறுவர், சிறுமியர் ஆகியோர் பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் பறையரிடையே உள்ளது. வளர்ந்த ஆண்கள் பச்சை குத்திக் கொள்வதில்லை. குழந்தைகளுக்கு நெற்றியின் நடுவில்

செங்குத்தாக ஒரு கோடு மட்டும் குத்தப்படும். ரோமன் கத்தோலிக்கராக மதம் மாறிய பறையர் சிலுவையினைப் பச்சைக் குத்திக் கொள்கின்றனர். பெண்கள் மற்ற தமிழ்ச் சாதிப் பெண்களைப் போல கைகளில் விரிவான அமைப்பினைப் பச்சைக் குத்திக் கொள்வர். மார்பகங்களின் இடையேயும் சிறு உருவங்களைப் பச்சைக் குத்திக் கொள்ளும் வழக்கத்தைச் சிலபோது மேற்கொள்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் பறைச்சி ஒருத்தி தன் மார்பில் இரவிக்கையினைப் போலப் பச்சை குத்திக் கொள்ள விரும்பி அதுபோலப் பச்சைக் குத்திக் கொண்டபோது இதயம் இருந்த பகுதியில் பச்சை குத்தும்போது ஊசி முனைகள் இரத்தக் குழாய் ஒன்றில் படாத இடத்தில் பட்டு துளைத்திட அவள் இறக்க நேரிட்டது என ஒரு கதை வழங்குகின்றது. அப்போதிருந்து மார்பகங்களின் மீது பச்சை குத்திக் கொள்வதற்கு எதிரானதொரு மூட நம்பிக்கை இவர்களிடையே பரவியுள்ளது.

பூவரசம் இலையின் உருவத்தை ஒப்ப வெள்ளியாலோ வெண்கலத்தாலோ செய்யப்பட்ட அரைமூடி எனப்படும் அணியினைப் பெண் குழந்தைகளின் இடுப்பில் அணியாகக் கட்டிவிடும் பழக்கம் சில இடங்களில் உள்ளது. செம்புத் தகட்டாலான தகடு என்ற அணியினையும் குழந்தைகள் அணியும் வழக்கம் பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகிறது. இதன் ஒரு பக்கம் பதினாறு சதுரங்கள் வரையப்பட்டு ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டுக்கான தெலுங்கு எண்களை ஒத்த உருவங்கள் அச் சதுரங்களுக்குள் வரையப்பட்டிருக்கும். அதன் மறுபுறத்தில் ஒரு வட்டம் வரைந்து அதனைப் பதினெட்டுக் கூறிட்டு அதில் ஒவ்வொன்றிலும் ஒரு தெலுங்கு எழுத்தினைப் பொறித்திருப்பர். இத்தகைய தாயத்து அதனை அணிந்திருப்பவர்களுக்கு எட்டுத் திக்குகளிலும் வரும் தீங்குகளைத் தடுக்கும் ஆற்றல் வாய்ந்தவை என நம்புகின்றனர். பேயோட்டுபவர்களிடமிருந்து பெறப்பட்ட தாயத்துக்களைப் பெரியவர்களும் குழந்தைகளும் இதே காரணத்திற்காக அணிகின்றனர். கண்ணேறு படுவதைத் தடுப்பதற்காகவும் தாயத்துகளை அணிகின்றனர். தங்கள் வயல்களுக்குத் திருஷ்டி விழுவதைத் தடுக்கப் பறையர் சோளக்காட்டுப் பொம்மைகளை வயல்களில் அமைத்து வைப்பர். உடைந்த சிறிய மண்பானைகளில் சுண்ணாம்பினைப் பூசி அதன் மீது கண், மூக்கு, முதலிய உருவங்களை வரைந்து அருவருப்பூட்டும் முகம் போலக் காட்சி

தரும்படி கம்பங்களை நட்டு அவற்றின் மீது கவிழ்த்து வைப்பர். வழியில் செல்பவர்களின் பார்வை பயிரின்மீது விழாது இவற்றின்மீது விழும்படி ஈர்க்கப்படும். இதற்காக விரிவான அமைப்பில் சோளக்காட்டுப் பொம்மைகளை மனிதர் உருவில் அமைத்து வைப்பதும் உண்டு. கிணறுகள் தோண்டுமுன் ஒரு மந்திரக்காரனை அழைத்து மந்திரம் ஓதச் செய்து நீருள்ள இடத்தை அறிந்து அங்குத் தேங்காய் உடைத்து வைத்துப் பாலினையும் ஊற்றி அந்த இடத்தில் வாழும் தேவதைகளைத் திருப்தியுறச் செய்வர்.

ஐரோப்பியர்களுடைய இல்லங்களில் பறையர்கள் பலர் வீட்டு வேலைக்காரர்களாகச் சேர்ந்துள்ளனர். "பறையரின் பணி சமூகத்தின் பிற இனத்தவர்களின் சுக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. சமய நெறி பேணும் பிராமணர்கள் கூட, பறையரைக் குதிரை வண்டிகள் ஓட்டவும் குதிரை தேய்க்கவும் அமர்த்தியிருக்கக் காணலாம். கிறித்தவர்களாக மதம் மாறிய பறையர் தங்களை 'இந்தியக் கிறித்தவர்' சாதியினர் எனக் கூறிக் கொள்கின்றனர். இதன் வழி அவர்கள் பல்கலைக்கழகத்தில் பட்டங்கள் பெற்றுக் குருமாருக்குரிய வெள்ளாடை புனைந்து ஆசிரியருக்கான கோலேந்தித் தொழில் புரிகின்றனர். பெரும் எண்ணிக்கையிலான பறையர்கள் பயிர்த் தொழிலுக்கு உதவும் கூலிகளாக உள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்வரை இவர்களுள் சிலர் பிணைப்பட்ட அடிமைகளாகப் பண்ணையில் பணியாற்றி வந்துள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு கூடத் தான் செலுத்த வேண்டிய கடனுக்காக மகனைப் பண்ணையாரிடம் பிணையாக விட்டு வைத்த ஒரு பறையனைப் பற்றிய ஆவணக் குறிப்பு உள்ளது. பறையர் குடும்பங்கள் சில பெரும் அளவில் நிலங்களுக்கு உரிமையுடையவனாக உள்ளன.

"பிற இடங்களில் வாழும் பறையரைக் காட்டிலும் இங்கு வாழ்பவர்களுள் பலர் நிலக்கடலை *(Archis hypogala)* பயிரிடுவதால் கிடைக்கும் வருமானம் காரணமாகச் சமூகப் படிநிலையில் உயர்ந்த நிலையினை அடைந்தவர்களாக உள்ளனர். இதனால் இவர்கள் உயர் சாதியாரின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களாக இறந்தவர்களின் பிணத்தை எரிப்பதோடு (எனினும் காலரா, பெரியம்மை ஆகிய தொற்று நோய்களால் இறப்பவர்களை இன்னமும் புதைத்தே வருகின்றனர்) தங்கள் பிள்ளைகளுக்கு குழந்தைகளாக

இருக்கும்போதே மணம் செய்விப்பதோடு விதவையர் மறுமணத்தையும் கைவிட்டவர்களாக உள்ளனர்" எனத் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் தென் ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் குறித்துள்ளார்.

தமிழ்ப் பேச்சு வழக்கில் படியாள், கூலியாள் என இரு பறையர் பிரிவுகள் சுட்டப்பட்டு வரக் காண்கின்றோம். இந்துக்களின் கிராமத்தில் வாழும் பண்ணையார்களின் கீழ்த் தலைமுறை தலைமுறையாகப் பண்ணை வேலையில் அமர்ந்திருப்பவர்கள் படியாள் எனப்படுவோர். இவர்கள் வேறு யாருக்குக் கீழும் சென்று வேலை பார்க்கமாட்டார்கள். வறட்சி, பஞ்சம் முதலிய நிலவும் ஆண்டுகளிலும் இவன் குடும்பத்திற்குத் தேவையானவற்றை இவன் பண்ணையார் கொடுத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டவர். கூலியாள் நாட்கூலிக்குப் பண்ணை வேலை பார்ப்பான். தேவை இருக்கும்போது மட்டுமே இவனைப் பணிக்கு அழைப்பர். பஞ்ச காலத்தில்அவன் யாருடைய உதவியினையும் பெற உரிமையற்றவனாகையால் இவனை பண்ணை அடிமையாக இல்லாத உரிமைபெற்றவனாயினும் படியாளைவிட வறுமையில் உழல்பவனாகவே உள்ளான்.

வெட்டியான், தலையாரி, தோட்டி ஆகிய மூன்று சமூகப் பணியாளர்களும் பறையர் சாதியினைச் சேர்ந்தவர்கள். பிணத்தை எரிக்கவோ புதைக்கவோ உதவுபவன் வெட்டியான். இதனாலேயே 'வெட்டியானும் பிணமும் கட்டிப் புரளட்டும்' என்ற பழமொழியும் வழக்கில் உள்ளது. இந்தப் பழமொழி தொடர்பாக மறைத்திரு.எச்.ஜென்சன் குறித்துள்ளது வருமாறு :-

"சுடுகாட்டில் சிதைக்கு நெருப்பு மூட்டிய பின் சில சமயங்களில் பிணத்தின் தசைகள் சுருங்குவதால் பிணம் சிதையிலிருந்து விலகி விழ ஏதுவாகின்றது. அப்பொழுது வெட்டியான் தன் தடியால் பிணத்தை எரியும் நெருப்புக்குள் உந்தித் தள்ளுவான். அப்பொழுது அது, பிணமும் அவனும் போராட்டத்தில் ஈடுபடுவதைப் போலத் தோன்றும். இதில் வேறு யாரும் குறுக்கிடக் கூடாது. வெட்டியானுக்குதான் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும்."

---

*மலபார் காலாண்டு ரெவியூ 1904 *(A.P.Smith Malabar Quart. Review 1904))*.

கிராமங்களில் தோட்டிகளாக உள்ள வெள்ளாம் பறையர் பிரிவினரிடையே பின்வரும் கதை வழக்குக் கூறப்பட்டு வருகின்றது. அது அவர்கள் ஏன் தோட்டித் தொழிலை மேற்கொள்ள வேண்டி வந்தது என்பதனை விளக்குவதாக அமைந்துள்ளது. உலகத்தைத் தன் தலையில் தாங்கி வருபவனான ஆதிசேடன் களைப்புற்றவனாகச் சிவனிடம் சென்று தன் சுமையினைக் குறைக்க உதவும்படி வேண்டினான். சிவன் ஒரு பறையனிடம் 'பழுத்ததெல்லாம் இனி விழட்டும்' எனப் பறை அறைந்து அறிவிக்கும்படி கூறினான். இதற்குத் தனக்கான கூலி என்ன என்று அந்தப் பறையன் கேட்க மாங்கூலி (பிணத்தை எரிக்கக் கூலி), சாந்துணி (ஒரு முழம் துணி), வாய்க்கரிசி (பிணத்தின் வாயிலிடப்படும் அரிசி), பிண்டச் சோறு (பலிச்சோறு), சூட்டுக் கூலி (பிணம் சுடுவதற்கான விறகுக்கான தொகை) ஆகியன பறையனுடைய உரிமைகளாம் என விதிக்கப்பட்டது. இவை மிகக் குறைந்த கூலியாக இருப்பதாகக் கருதிய பறையன் சாவோர் எண்ணிக்கையினை உயர்த்தி அதனால் தனக்குக் கிடைக்கும் வரும்படியினை அதிகமாக்கிக் கொள்ள, 'பழுத்தவையும் பழுக்காதவையும் விழட்டும்' எனப் பறையறைந்தான். இவன் இவ்வாறு பறையறைந்ததால் குழந்தைகளும் நடுவயதினரும் கூட இறக்க நேரிட்டதால் கடவுள் அவனைக் கண்டித்தார். அவன் தன் வறுமை நிலையினை அவரிடம் எடுத்துரைத்தான். இதன் காரணமாக மேலும் அவனுக்குத் தானியம் அளக்கும் மரக்கால், நிலம் அளக்கும் கோல், புல் அறுக்கும் அரிவாள், ஊரெல்லையில் கரகம் எடுத்துச் செல்லும் உரிமை ஆகியன உரியனவாக வழங்கப்பட்டன. மேற்கண்ட உரிமைகள் அனைத்தும் இன்றுவரை வெட்டியான்களுக்கு உரியனவாக இருந்து வருவதோடு மேலே கூறப்பட்ட வழக்கு வரலாற்றில் அவர்களுக்குரியதாகக் கூறப்பட்டுள்ள பணிகளைச் செய்வதற்கான கட்டணத்தையும் பெற்று வருகின்றனர்" எனத் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் குறித்துள்ளார்.

பறையருள் சிலர் இறந்துபோன விலங்குகளின் இறைச்சியினை உண்கின்றனர். இறந்த பின் புதைக்கப்பட்ட எருமை ஒன்றினைச் சில மணி நேரங்களுக்குப் பின் தோண்டி எடுத்தது தனக்குத் தெரியும் எனத்

---

*தொகுத்து வகைப்படுத்தப்பட்ட தமிழ்ப் பழமொழிகள் 1897.
(Classified collection of Tamil Proverbs 1897).

திரு.கிளெய்டன் தெரிவித்துள்ளார். பறையருள் மிக்த் தாழ்ந்த பிரிவினருங்கூட பசுவின் இறைச்சியினை உண்பதில்லை. அதனை அவர்கள் சக்கிலியருக்கென ஒதுக்கி விடுகின்றனர். "கொங்க பறையரும் வேளாண் பறையரும் தோட்டி வேலையை மேற்கொள்வதோடு இயற்கையாக உயிர்விடும் பசுக்களின் இறைச்சியினை உண்கின்றனர். தங்கலான் பறையர் இறைச்சிக்காகக் கொல்லப்படும் பசுக்களின் இறைச்சியை மட்டுமே உண்கின்றனர்" எனத் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் கூறியுள்ளார். பஞ்ச காலங்களில் பறையர் எறும்புப் புற்றுக்களைத் தோண்டி அவை தேடி வைத்துள்ள புல்லரிசியினைக் கவர்வர்.

பறையர் தொடர்பான பழமொழிகள் பல தமிழில் வழங்கி வருகின்றன. அவற்றுள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பழமொழிகள் வருமாறு :–

1. பறையன் பொங்கலிட்டால், பகவானுக்கு ஏறாதா? பறையனுடைய பக்தி உட்பட எல்லோருடைய பக்திக்கும் இறைவன் கட்டுப்பட்டவன்.
2. பறைச்சி வெற்றிலை போட்டால் பத்து விரலும் சுண்ணாம்பு. பறைச்சிக்கு எதனையும் ஒழுங்காகச் செய்யத் தெரியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.
3. பறைச்சி பிள்ளையைப் பள்ளிக்கு வைத்தாலும் பேச்சிலே அய்யே என்னுமாம். அய்யா என்பதன் இழிவழக்கு அய்யே.
4. பனை மரத்திற்கு நிழலில்லை. பறையனுக்கு முறையுமில்லை. பறையர் ஒழுக்கத்தைப் பற்றியதான இழித்துக் கூறும் பழமொழி.
5. சுரைப்பூவினுக்கும் பறைப்பாட்டுக்கும் வாசனையில்லை. பறையர் தங்கள் பாட்டைப்பற்றி அவர்களே இதுபோலக் கூறிக்கொள்வர்.
6. எழுபது சென்றாலும் பறை ஏவினால்தான் செய்யும். – எதனையும் சொல்லிச் செய்பவன் பறையன்.
7. பத்துவிதத்திலும் பறையனை நம்பலாம். பார்ப்பானை நம்பக்கூடாது.

– பறையரைப் பெருமைப்படுத்துவதான ஒரே ஒரு பழமொழி.

8. ஆயிரம் குதிரையை அறவெட்டின சிப்பாய்தானா இப்போது பறைச்சேரி நாயோடே பங்கமழிகிறான்?

9. பறையன் பேச்சுப் பாதிப் பேச்சு – பறையர் பேச்சின் இழிவழக்கினைக் குறிப்பது.

10. பறையனையும் பிராமணனையும் போல. – மிகுந்த வேறுபாடு இருப்பதைக் குறிப்பதற்கான பழமொழி.

11. பௌர்ணமியன்று பறையனுங்கூட உழமாட்டான்.

12. பறைச்சேரி எரு எல்லா எருவைக்காட்டிலும் நல்ல விளைவைத் தரும்.

13. பறைச்சேரி மேளம் கலியாணத்துக்கும் கொட்டும், கல் எடுப்புக்கும் கொட்டும். – மறைத்திரு.எச்.ஜென்சன் கருத்துப்படி இது நம்பமுடியாத. நல்லது கெட்டது இரண்டையும் செய்யும். சமயத்திற்குத் தகுந்தாற்போல் செயல்படும் பேர்வழிகளைப் பற்றியது.

14. பறையன் அறுப்பது வீடுவந்து சேராது.

இந்தியாவில் நகரங்களிலும் கிராமங்களிலும் தெருவில் திரியும் நாய்களைப் பறைநாய் என பறை என்ற அடைகொடுத்து வழங்குபவர். பறப்பருந்து *(Milvus Govinda)* எனப் பறவை ஒன்றும் பறை என்ற அடை தந்து வழங்கப்படுகின்றது.

'சென்னை மாநிலத்தைச் சேர்ந்த குற்றம்புரியும் வகுப்பார்' என்ற தன்னுடைய நூலிலே திரு.எப்.எஸ்.முல்லலி பறையரையும் அவ்வகுப்பாருள் ஒருவராகச் சேர்ந்துள்ளார். அந்த நூலுள் அவர், மாநிலம் முழுதும் கிராமப்புறங்களில் உள்ளூரில் குற்றம் புரிபவர்கள் பறையர்கள். இவர்களை உண்மையில் குற்ற வகுப்பார் என வகைப்படுத்த இயலாது எனினும் மாநிலத்தின் குற்றவாளிகளுள் பெரும்பாலோர் இச்சாதியினைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வேப்பூர் பறையன்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள் எனக் கூறுகின்றனர். வாசகர்கள் வேப்பூர் பற்றிய விவரங்களையும் அவர்கள் கையாளும் முறைகளையும் தெரிந்துகொள்ள

அவர்களைப் பற்றிய முல்லலியின் விளக்கத்தினை அந்நூலுள் காணுமாறு கூறுகின்றேன். குற்றபுரிகின்றவர்களான பறையரைப் பற்றித் தென் ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பில் திரு.பிரான்சிஸ் எழுதியுள்ளது வரமாறு :- "கடலூருக்கு அருகே உள்ள சட்டுகுளம் என்ற ஊரில் பறையரின் ஒரு பிரிவினர் வாழ்கின்றனர். இவர்களைப் பெரும்பாலும் திருட்டுப் பறையர் என வழங்குவதே வழக்கமாக உள்ளது. வீடு புகுந்து திருடுதல், ஆடு, மாடு முதலிய கால்நடைகளைத் திருடுதல் ஆகியனவே இவர்கள் வழக்கமாக மேற்கொள்ளும் திருட்டுக்கள். இவர்கள் இச்செயல்களைத் திட்டமிட்டு இணைந்து மேற்கொள்வதால் இவர்களைப் பிடிப்பது இயலாததாகின்றது. இவர்களைப் பிடிக்க உதவி வேண்டிய ஊர்த் தலைவர்களுடனேயே தொடர்பு கொண்டுள்ள இவர்களுக்கு இப்பகுதிகளில் வாழும் உடையான்களும் கூட்டாளிகளாக உள்ளனர். இவர்களிடையே உறவு சில சமயங்களில் மிக நெருக்கமானதாக அமைந்துவிடுகின்றது. குற்றம்புரிந்து அகப்பட்டுச் சிறை செல்லும் தங்கள் கூட்டாளிகளான பறையர்களின் மனைவிமார்களை உடையான்களே காப்பாற்றி வருகின்றனர். இந்த வட்டாரத்தைச் சேர்ந்த பறையர்கள் மற்றவர்களைக் காட்டிலும் நல்ல நிறம் வாய்க்கப் பெற்றிருப்பதற்கு இந்த நெருக்கத்தையே காரணமாகக் கூறுவர். "இந்து சமயத்தைச் சேர்ந்த பெண்களின் தாலியினையும் விளக்குகளையும் திருடக்கூடாது எனவும் திருட்டின்போது வன்செயல்களில் ஈடுபடக்கூடாது" என்பதனையும் வேப்பூர் பறையர் தங்கள் தொழில் நடைமுறைக் கோட்பாடாக வைத்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் தப்பி ஓடவும் மட்டுமே இவர்கள் வன்முறையினைப் பயன்படுத்துவர்.

1871 கணக்கெடுப்பு அறிக்கையில் பறையரைப் பற்றிய அவர்கள் பால் அனுதாபத்தோடு கூடிய ஒரு குறிப்பில் சர்ஜன் மேஜர் டபிள்யூ.ஆர்.க்கார்னிஸ் தொகுத்துக் கூறியுள்ளது வருமாறு :- "கடினமாக உழைத்துச் செட்டாக வாழ்க்கை நடத்தும் இன்பவாழ்வில் நாட்டங்கொண்டவர்களான இவர்கள் எந்தத் துறையில் உழைக்க ஈடுபட்டாலும் அதில் முழுவதும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களாக நாட்டின் உயிர்நாடியாக விளங்கி வருகின்றனர். பரம்பரை அடிமைத்தளையினின்றும் சட்டப்படியாகத் தங்களைத் தாங்களே மீட்டுக் கொள்ள இயலாதபடி உழன்று வந்த துன்பத்தினின்றும்

பிரிட்டீசாரின் ஆட்சிமுறை இவர்களை விடுவித்து உள்ளதெனினும் இன்னமும் இவர்கள் சமூகத்தின் மிக இழிந்த பிரிவினராகவே உழன்று வருகின்றனர். கிறித்தவ சமய நிலையங்கள் பறையரைக் கேவலமான குப்பை எனக் கருதி ஒதுக்கி வந்த இழிநிலையினின்றும் மீட்கும் பாராட்டுக்குரிய அருந்தொண்டினை மேற்கொண்டதாகப் பள்ளிகளிலும் தேவாலயங்களிலும் இவர்களுக்குச் சம உரிமை தந்து ஏற்றுக் கொண்டது. கல்வி, அறிவாற்றல், சமூகப்படிநிலை ஆகியவற்றில் இவர்களின் இன்றைய நிலை எப்படிப்பட்டதாயினும் அதற்கு அவர்கள் தங்கள் வாழ்வைத் தங்கள் கர்த்தரின் கருணைக்குரிய ஆன்மாக்களின் உயிரை மீட்பதற்கு அர்ப்பணித்துக் கொண்ட கிறித்துவச் சமயத்தவர்களான ஆண் பெண்களுக்குக் கடன்பட்டவர்களாவர்."

மலபார், கொச்சி, திருவாங்கூரைச் சேர்ந்த பறையர் - Paraiyans of Malabalr, Cochin and Travancore.

கொச்சியினைச் சேர்ந்த பறையர் பற்றிய குறிப்புகளுக்கு நான் திரு.எல்.கே.அனந்தகிருட்டிண அய்யருக்குக் கடப்பாடுடையேன். * கொச்சியில் மிகத் தாழ்ந்த பண்ணை அடிமைகளாகப் புலையருக்கு மேற்பட்ட சாதியாராகப் பறையர் உள்ளனர். உள்ளாடர், நாயாடிகள், புலையர் ஆகிய சாதியாரைத் தவிர மற்ற அனைத்துச் சாதியாரிடமிருந்தும் இவர்கள் உணவு பெற்று உண்பர். எனினும் மரபு நெறியினைப் பேணும் புலையர் தாங்கள் பறையரைத் தொட நேர்ந்தால் ஐந்து முறை குளித்துக் கொஞ்சம் குருதியினை உடலிலிருந்து வெளிப்படுத்தித் தங்கள் தீட்டினைப் போக்கிக் கொள்வர். கிராமப்புறங்களில் பறையரின் குடிசைகள் மலைப்பக்கங்களில் தனித்தனவாக அமைந்திருக்கக் காணலாம். உயர் சாதியினர் தங்கள் குடிசைகளை நெருங்கினால் இவர்கள் காட்டுக்குள் ஓடிவிடுவர். உயர் சாதியார் வீடுகள் அமைந்துள்ள பகுதிகளிலும் பொதுச்சாலைகளிலும் இவர்கள் நடக்க மாட்டார்கள். இவர்கள் சிலபோது நாயர்களின் குழந்தைகளைத் திருடிச் சென்று காட்டில் தங்கள் குழந்தைகள் எனக்கூறி வளர்ப்பர் எனக் கூறப்படுகின்றது. மிகுந்த அழுக்கும் இழிவான பழக்கவழக்கங்களையும் உடைய இவர்கள் குளிப்பதோ

*இன இயல் ஆய்வு தனிக்கட்டுரைகள்
(Monograph Eth. Survey, Cochin)

உடைகளைத் துவைப்பதோ இல்லை. அறுவடை சமயத்தில் விலைக்கு வாங்கும் ஒரு வேட்டியினை அது இற்று விழும் வரை துவைக்காமல் அப்படியே அணிந்திருப்பர். கால்நடைகளின் இறைச்சியினை இவர்கள் உண்பதால் புலையர்களாலும் இவர்கள் வெறுக்கப்படுகின்றனர். இவர்களே இவர்கள் சாதிக்குரிய நாவிதர்களாகவும் வண்ணாராகவும் உள்ளனர்.

சந்திரகுப்தன் என்ற பிராமணனுக்கும் அவன் பிராமண மனைவிக்கும் பிறந்த புகழ்பெற்ற சோதிடனான வரருசி என்பவனைப் பற்றி ஒரு வழக்கு வரலாறு நிலவுகின்றது. சந்திர குப்தனின் சத்திரிய குலத்தைச் சேர்ந்த மனைவிக்குப் பிறந்த மகனான விக்ரமாதித்தன் உரிய வயதுக்கு வரும்வரை அவனுக்குப் பதிலாக அவந்தியிலிருந்து அரசாண்டவன் இவன். அதன்பின் இவன் தன் பதவியினைத் துறந்தான். ஒரு சமயம் இவன் அஸ்வஸ்த (*Ficus religiosa*) மரத்தின் அடியில் அமர்ந்து அதில் உறையும் தெய்வத்தினை வாழ்த்தி வழிபட்டபோது அந்த மரங்களின்மேல் அமர்ந்திருந்த இரண்டு கந்தர்வர்கள் இவன் ஒரு குறிப்பிட்ட பறைச் சிறுமியை மணக்கப் போகின்றான் எனப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டான். அந்த சிறுமியின் நெற்றியில் ஒரு ஆணியினை அறைந்து ஒரு பெட்டியில் அவளை வைத்து ஆற்றில் விட்டுவிடுமாறு அரசனிடம் அவன் வேண்டிக் கொண்டவனாக அந்தக் கந்தர்வர்கள் கூறியது நிகழாதபடி காத்துக் கொண்டான். அந்தப் பெட்டியினை ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த ஒரு பிராமணன் எடுத்து அதில் அழகிய ஒரு பெண் குழந்தை இருக்கக் கண்டு அதனைத் தெய்வ அருளால் தனக்குக் கிடைத்ததாகக் கருதித் தன் மகளாகவே பாவித்து வளர்த்து வந்தான். ஒருநாள் அந்தப் பிராமணன் வரருசி அவ்வழியில் போவதைக் கண்டு அவனைத் தன் இல்லத்தில் உணவு கொள்ள வருமாறு அழைத்தான். பதினெட்டு வகைக் கறிகளைச் சமைத்து நூறு பிராமணர்களுக்கு உணவளித்த பின் எஞ்சியதைத் தனக்குத் தந்தால் தான் உணவு கொள்ள உடன்படுவதாக அவன் அந்தப் பிராமணனிடம் கூறினான். இதனால் அந்தப் பிராமணன் திகைப்படைந்தாலும் அவன் வளர்த்து வந்த அவனுடைய மகள் நீண்டதொரு இலையினையிட்டு அதில் இஞ்சியினைக் கொண்டு தயாரித்த ஒரு கறியினைப் பதினெட்டுக் கறிகளுக்குச் சமமானதெனப் பாவித்து வைத்ததோடு விசுவ தேவதாச் சடங்கில் படைக்கப்பட்ட பொங்கலினைப் பிராமணர்களுக்கான

உணவுக்குச் சமமானதாகப் படைத்தாள். இது அந்தக் கன்னியினுடைய செயலாகும் என்பதனை உணர்ந்த வரருசி அவளை மணந்துகொள்ளத் தான் விரும்புவதாகத் தெரிவித்தான். அதற்கு அந்தப் பிராமணனும் உடன்பட்டான். ஒருநாள் வரருசி தன் மனைவியோடு அவளுடைய சென்ற காலம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது அவள் நெற்றியில் ஆணி அறையப்பட்டிருப்பதை அவன் கண்டான். தான் மன்னரிடம் ஆற்றில் விட்டுவிடும்படி வற்புறுத்திய குழந்தை இவள்தான் என்பதனைக் கண்டுகொண்ட அவன் அவளோடும் புண்ணியநதிகளிலும் கோயில்களிலும் சென்று நீராடி வழிபாடு செய்யப் புறப்பட்டான். இறுதியில் அவர்கள் கேரளாவிற்கு வந்து சேர்ந்தனர். அங்கு அவள் அவன் வழியாகப் பன்னிரெண்டு குழந்தைகளைப் பெற்றாள். அவர்களுள் ஒருவரைத் தவிர மற்ற அனைவரையும் வேறுவேறு சாதியார் வளர்த்தனர். இவர்கள் அனைவரும் அறிவுநலம் வாய்க்கப் பெற்றவர்களாகவும் விட்டுணுவின் அவதாரமாகவும் அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர்களாகவும் கருதப்பட்டனர். புகழ்பெற்ற மலையாளக் கவிஞுனான பக்கனார் அவர்களுள் ஒருவர். ஒருமுறை சில பிராமணர்கள் காசிக்குப் புனிதப் பயணம் மேற்கொள்ள முற்பட்டபோது அது அவர்கள் கர்மாவினையினைப் போக்க உதவாது எனக் கூறி அவர்களைத் தடுக்க அவர் முற்பட்டார். அவர்கள் பயணம் பயனற்றது என்பதனை நிரூபிக்க அவர் அங்கே அருகில் நீர் தேங்கி நின்ற ஒரு குட்டையிலிருந்து ஒரு தாமரை மலரைப் பிடுங்கி அவர்களிடம் தந்து கங்கையிலிருந்து மேலே எழும் கரத்தில் அதனை அது கங்காதேவிக்குப் பக்கனார் தரும் அன்பளிப்பு எனக் கூறித் தரும்படி கொடுத்தனுப்பினார். அவர்கள் அவர் கூறியபடியேசெய்து அந்த அற்புதத்தையும் அவரிடம் தாங்கள் திரும்பி வந்தபின் கூறினர். பக்கனார் அவர்களை முன்பு தான் தாமரை மலரைப் பறித்த நீர் தேங்கியிருந்த குட்டைக்கு அழைத்துச் சென்று, "கங்கைத் தாயே! நான் தந்த தாமரையை அருள்கூர்ந்து திருப்பித் தா" எனக் கேட்டார். அந்த மலர் மீண்டும் அங்கே அவர் கரத்தில் வந்து சேர்ந்தது. பக்கனார் பிரம்பில் தொழில் புரிந்தவராகத் தான் முடைந்தவற்றை விற்று வாழ்க்கை நடத்தி வந்தார். ஒருநாள் அவர் தான் முடைந்த எதனையும் விற்க இயலாதவராகப் பட்டினியோடு இருக்க நேரிட்டது. அண்டை வீட்டுக்காரர் அவருக்குச் சிறிது பால் தர அதனைப் பருகிய பக்கனார் அவருக்கு இடர்வரும்போது தம்மை நினைக்கும்படி கூறினார். அந்த

அண்டை வீட்டுக்காரருடன், மணமுடிக்கப்பட்ட அவருடைய மகள் வாழ்ந்து வந்தாள். சில நாள்களுக்குப் பின் அவள் பாம்பு கடித்து இறக்கும் தருவாயில் இருந்தபோது அவளுடைய தந்தை, பக்கனார் கூறிய சொற்களை நினைவில் கொண்டவராக அவரை நினைத்தவுடன் அவர் அங்குதோன்றி அவளைக் காப்பாற்றினார். பக்கனாரின் உடன்பிறந்தவர்களுள் ஒருவன் நாராயணபரந்தன். இவன் அறிவு திறம்பியவன்போல் நடித்து வந்தான். பெரிய கற்களைக் குன்றின்மீது உருட்டிச் சென்று அவற்றை அங்கிருந்து உருட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதே அவனுக்கு பொழுதுபோக்கு. அவன் பிராமணனுக்குப் பிறந்தவனாயினும் அனைத்துச் சாதியாருடனும் கலந்து பழகியவனாக அவர்களோடு உடன் உண்ணும் பழக்கத்தையும் மேற்கொண்டிருந்தான். நம்பூத்ரி பிராமணன் ஒருவன் நாராயண பரந்தனிடம் தன் பிள்ளையின் உபநயனச் சடங்கை நடத்த நல்ல நாளினைப் பார்த்துக் கூறும்படி கேட்க மிகக் கெட்ட நாளையும் கெட்ட வேளையினையும் பரந்தன் அவனுக்குப் பார்த்துத் தந்தான். கூடியுள்ள நம்பூத்ரியின் உறவினர்கள் அந்த வேளையில் சடங்கை நடத்தலாமா எனக் கேட்டபோது நாராயணன் மேலே ஆகாயத்தைச் சுட்டிக் காண்பித்தான். அப்போது வானம் பேரொளி மிக்கதாக ஆக அங்கே பிராமணன் ஒருவன் தன் பூணூலை மாற்றிக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். இதனை நல்ல சகுனமாகக் கருதிய அவர்கள் அந்த முகூர்த்தத்திலேயே சடங்கை நடத்தி முடித்தனர்.

மலபாரையும் கொச்சியினையும் சேர்ந்த பறையர்கள் பில்லிசூன்யம் வைப்பதில் கைதேர்ந்தவர்கள். திருட்டு, பேயோட்டுதல், பகைவரை அழிக்கப் பில்லி சூன்யம் வைத்தல் ஆகியன பற்றி ஆலோசனை கேட்கப் பலரும் இவர்களை நாடி வருகின்றனர். ஏதாவது திருட்டுப் போகுமானால் பறையனான மந்திரவாதியிடம் சென்று அதுபற்றிக் கேட்டறிவர். திருட்டுப்போன பொருளை மீட்டுத் தருவதாக நம்பிக்கையூட்டியவனாக அவன் தன்னிடம் வந்தவனிடம் கொஞ்சம் நெல்லையும் சில பணங்களையும் பெற்று அவற்றைக் கொண்டு வாழைப்பழம், தேங்காய், கள், கற்பூரம், சாம்பிராணி, அரிசி மாவு ஆகியன வாங்குவான். குளித்தபின் அவன் அவற்றைத் தன் வழிபடு தேய்வமான பறக்குட்டிக்குப் படைப்பான். அது ஒரு கல்லுருவில் அவன் குடிசையின் முன் நடப்பட்டிருக்கும். இரும்பாலான கிலுகிலுப்பையை ஆட்டியபடி தன்

குரல் உடையும்வரை அவன் அத்தெய்வத்தின் அருளைப் பெறப் பாடுவான். இழந்த பொருளானது வந்து சேரவில்லையாயின் அவன் தெய்வத்தை அவன் தீவிர வழிபாட்டில் ஈடுபடுவதோடு தெய்வ ஆவேசம் உற்றவனாக மூக்கிலும் வாயிலும் குருதி வரப் பெற்றவனாவான். ஒருவன் நோயுறப் பெறுவானாயின் முதலில் ஒரு சோதிடனையும் பின்னர் அவன் கூறும் மந்திரவாதியினையும் அணுகி நோயின் காரணத்தை அறிய முற்படுவர். மந்திரவாதி ஒரு பனையோலை அல்லது செம்புத்தகடு அல்லது வெள்ளித் தகட்டில் இயந்திரம் எழுதி, மந்திரம் ஓதி, அதனை மடித்துச் சுருட்டி ஒரு கயிற்றில் கட்டி, நோயுற்றவர் பெண்ணாயின் கழுத்திலும், ஆணாயின் அரைஞாண் கயிற்றிலும் அணிவிப்பான். சிலபோது மந்திரம் செபித்தபடி விபூதியினை நோயுற்றவர் மீது போடவோ நெற்றி அல்லது மார்பில் பூசவோ செய்வர். . இவர்கள் கூறும் மந்திரங்களுக்குப் பின்பவருவனவற்றை உதாரணமாகக் கூறலாம். "ஆயிரம் சடையுடையவளுக்கு என் வந்தனம். ஆயிரம் கரங்களாலும் மூன்று உலகங்களையும் நிறைந்து வெளிப்படச் செய்பவளுக்கு என் வந்தனம். ஓ! தாயே ! தேவி, உன் பேரருள் நிரம்பிய ஆன்மாவிலிருந்து இங்கு எழுந்தருள்வாயாக. ஓ! சுந்தர யக்ஷிசி சுவாஹா" "தெய்வத்திற்கு வந்தனம். தலையில் சிங்கத்தைத் தாங்குபவனே அல்லது உடலின் மேற்பகுதி சிங்க உருவாக இருப்பவனே! உன் மூலதாரத்தில் பறவைகளின் அரசனும் விட்டுணுவின் வாகனமுமான கருடன் வீற்றிருக்கின்றான். இலட்சுமணனை இடப்பக்கத்திலும் கொண்டுள்ளான். அவனைச் சுற்றிலும் மேலும் கீழும் எங்கும் ஸ்ரீ நாராயணனைக் கொண்டுள்ளான். சுவாஹா! நீ எங்களைக் கண்பார்த்துக் காப்பாயாக."

பகைவரைக் கொல்லும் மரணக் கிரியைகளை நடத்துவதில் பெயர்போனவர்கள் பறையர்கள். இதற்காகப் பலவழிமுறைகளை இவர்கள் கையாளுகின்றனர். பின்வருவன அவற்றுக்கான எடுத்துக்காட்டுகளாம் :–

1. பகைவனின் உருவினை மெழுகால் செய்தல். அதனை வலது கையில் ஏந்தியபடி பாசிமணி மாலையினை இடக்கையில் எடுத்துக் கொள்ளுதல். உரிய சடங்கு முறைப்படி பின் அந்த மெழுகு உருவத்தை எரித்தல். இதற்குப் பின் இருவாரங்களுக்குள்ளாகப் பகைவன் இறப்பான்.

2. சுடுகாட்டிலிருந்து மனித எலும்பு ஒன்றினை எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை வைத்துப் பின்வரும் மந்திரத்தினை ஆயிரம் முறை ஒத வேண்டும் :- "ஓ! பன்றி போன்ற முகத்தையுடைய தேவியே! அவனைப் பிடிப்பாயாக. அவனை உனக்கு உரிய பலியாகக் கொள்வாயாக! அவன் குருதியினைக் குடி; அவன் மாமிசத்தைப் புசி. சாவின் உருவான மலையாள பகவதி" இதன்பின் அந்த எலும்பினை எதிராளியின் வீட்டினுள் வீசியெறிந்து விட்டால் அவன் கேடுறுவது உறுதி.

பறையர் மேற்கொள்ளும் மனிதர் உடலை ஒடிக்கும் மாந்திரிகம் ஒடி எனப்பெயர் பெறுகின்றது. இந்த மாந்திரீகத்தில் கைதேர்ந்தவர்கள் தங்களைக் கண்ணுக்குப் புலனாகாதபடி மறைத்துக் கொண்டு, காளை, பூனை, நாய் போன்ற உருவங்களைத் தாங்கித் திரியும் ஆற்றல் பெற்றவர்கள். நள்ளிரவில் கருவுற்றிருக்கும் பெண்களை அவர்களுடைய வீட்டை விட்டு வெளியே வரும்படி செய்து அவர்கள் கருப்பையில் உள்ள கருவினை வெளியே எடுத்தபின் அதில் வேறு பொருட்களைத் திணித்து நோயுற்று இறக்கும்படி செய்வர். இதேபோல மக்களை ஓரிடம் விட்டு மற்றோரிடத்திற்குக் கடத்தும் ஆற்றல் பெற்றவர்கள். இந்த மாந்திரீக முறையினை மேற்கொள்ள விரும்பும் ஒரு பறையன், ஒரு குருவினைத் தேடிப் பிடித்து, அவர் கால்களில் விழுந்து வணங்கித் தனக்கு இக்கலையினைக் கற்றுத் தரும்படி வேண்டுவான். அவர் அவனிடம் இதனை மேற்கொள்ள வேண்டாம் எனக் கூறி முதலில் அவன் மனதை மாற்றப் பார்ப்பார். சீடன் விடாப்பிடியாக இதனைக் கற்கத் தனக்கு உள்ள விருப்பத்தை வெளிப்படுத்தியபடி இருப்பான். பின் அவன் இதற்குத் தகுதி வாய்ந்தவனா என்பதனைக் குரு பல சோதனைகளின் வழி ஆராய்வார். அவன் நள்ளிரவில் காடுகளுக்கும் மக்கள் நடமாட்டமற்ற இடங்களுக்கும் தன் குருவின் பின் செல்வான். அவனுடைய குரு திடீரெனத் தன்னை மறைத்துக் கொண்டவராக சினங்கொண்ட காளையாக, வெறிநாயாக, மதங்கொண்ட யானையாக அவன் முன் தோன்றுவார். புதிதாக இக்கலையினைக் கற்றுக்கொள்ளப் புகுந்த அவன் இந்தக் காட்சிகளால் மனம் நடுக்குறாதவனாக உறுதியாக நிற்றல் வேண்டும். விசித்திரமான அஞ்சத்தக்க ஒலிகள் மிச்சமிருக்கும் என அவர் நம்பும் காட்டில் அவனை அவன் குருவானவர் ஓரிரு இரவுகள் தனித்து இருக்கும்படி ஏவுவார். அந்த ஒலிகளால் மனம் கலங்காதவனாக

அவன் இருத்தல் வேண்டும். இத்தகைய சோதனைகளுக்கு ஈடுகொடுத்தவனாக அவன். தான் விரும்பிய அந்தக் கலையைக் கற்றுக் கொள்ளத்தகுதி வாய்ந்தவன் என்பதனை மெய்ப்பிக்க வேண்டும். அதன்பின் அவனுடைய குரு ஒரு நல்ல நாளில் அவர் வழிபடும் தெய்வமான, அவருக்கு மாந்திரீகத்தில் உதவும் நீலிக்கு- கல்லடிக்கொடெ நீலி எனவும் படுவாள் – வழிபாடு நிகழ்த்தி அவனைத் தன் சீடனாக ஏற்றுக் கொள்வார். அவர்கள் இறைச்சியினைத் தின்பதோடு மதுவினையும் பருகுவர். அதன்பின் அவர் தன்சீடனுக்கு மாந்திரீகம் செய்ய உரிய சக்தியினைத் தருகின்ற பிள்ளைத் தைலம் மற்றும் அங்கொலத் தைலம் ஆகியவற்றைத் தயாரிப்பது எப்படி எனக் கற்றுத் தருவார். பிள்ளைத் தைலம் தயாரிக்க மந்திரவாதியின் சாதியினைச் சேராத ஒருத்தியின் கருப்பையிலிருந்து எடுக்கப்படும் ஆறேழு மாதக் கரு தேவைப்படும். நல்ல சகுனங்கள் தோன்றுவதாக நிச்சயித்தபின் நள்ளிரவில் புறப்பட்டுத் தான் முன்பே கண்டு முடிவுசெய்திருக்கும் கருவுற்றுள்ள பெண்ணின் இல்லத்தை அடைவான். அங்கு. அவன் மஞ்சளும் எலுமிச்சம்பழச்சாறும் உள்ள தேங்காயினை ஆட்டியபடி தேவதையின் அருளை வேண்டி. மந்திரம் செபித்தவனாக அந்த வீட்டைச் சுற்றி நடந்தபடி இருப்பான். தரையில் யந்திரங்களையும் வரைவான். அவன் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டவளாக அந்த வீட்டில் உள்ள பெண் வெளிப்படுவாள். வீட்டின் கதவு பூட்டப்பட்டிருப்பினும் தன் தலையால் கதவை மோதி இடித்து அதனைத் திறந்தவளாக அவள் வெளிப்படுவாள். மந்திரவாதி அவளைத் தனியே ஒரிடத்திற்கு அழைத்துச் சென்று அவளை நிர்வாணமாக்கித் தரையில் படுக்கச் செய்வான். ஒரு சுரைக்குடுக்கையினை அவன் அவள் பெண்குறியருகே பிடிப்பான். அவள் கருப்பை சுருங்கி அதிலுள்ள கரு சுரைக்குடுக்கையில் விழும். சில சமயங்களில் கருப்பையில் குப்பையைத் திணிப்பான் எனவும் அதற்கு உள்ளாகின்ற பெண் உடனே இறப்பாள் எனவும் கூறப்படுகிறது. கருப்பையிலிருந்து வெளியாகும் கருவானது தரையில் படுமானால் அதனைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்தின் ஆற்றல் குறையும் என்பதால் அதனைத் தரையில் படாதபடி பார்த்துக் கொள்வர். அந்தக் கருவை சிறு துண்டங்களாக்கி நெருப்பில் வாட்டுவர். பின் துளையோடு கூடிய ஒரு பாத்திரத்தில் அதனையிட்டு அதன் கீழ் மற்றுமொரு பாத்திரத்தை அமைத்து அந்த இரண்டு பாத்திரங்களையும் தண்ணீருள்ள பெரிய பாத்திரம் ஒன்றில் வைத்து அதனை அடுப்பில்


M.E.P.

ஏற்றிச் சூடேற்றுவர். கருத்துண்டங்களிலிருந்து கசியும் சாறானது கீழே உள்ள பாத்திரத்தில் சொட்டும். மனிதன் மண்டையோடு ஒன்றினைத் தூளாக்கி அதனை அந்தச் சாறின் ஒரு பகுதியோடு கலப்பர். இந்த கலவையால் மந்திரவாதி தன் நெற்றியில் பொட்டிட்டுக் கொள்வான். கொஞ்சத்தை உடலின் பல பகுதிகளிலும் பூசிக் கொள்வான். பின் சிறிது பசுஞ்சாண நீரைக் குடிப்பான். அதன்பின் அவன் தான் விரும்பிய விலங்கின் உருவத்தை எடுத்துத்தான் யாரைக் கொல்ல வேண்டும் அல்லது காயமுறச் செய்ய வேண்டும் எனக் கண்டு கொண்டு அவர்களுக்குத் தீங்கிழைப்பான். மந்திர சக்தி வாய்ந்த அங்கொலத் தைலம் அழிஞ்சில் *(Alangium lemarcii)* மரத்திலிருந்து எடுக்கப்படுவது. இந்த மரத்தில் பழங்கள் மிகுதியாக இருக்கும். இவற்றுள் ஒன்று இடம்விட்டு இடம் பெயரக் கூடியதாகவும் உயிராற்றல் உடையதாகவும் இருக்கும் என நம்பப்படுகிறது. இரவில் அத்தகைய பழம் மரத்திலிருந்து தரைக்கு வந்தபின் மீண்டும் மரத்தில் உரிய இடத்தில் சென்று ஒட்டும் என நம்புகின்றனர். அத்தகைய பழம் எது என்பதைப் பேய்கள் அறிந்திருக்கும். அல்லது திறமைவாய்ந்த ஒருவன் இரவில் மரத்தடியில் கண்காணித்தவனாக இருந்து அதனைக் கண்டுபிடிக்கலாம். அந்தப் பழத்தைக் கண்டு எடுத்தவுடன் அதிலிருந்து பிள்ளைத் தைலம் தயாரிப்பது போலவே தைலம் தயாரிக்க வேண்டும். அதனை ஏழு மணி நேரத்திற்குள்ளாகச் செய்து முடிக்க வேண்டும். அந்தத் தைலத்தை கொண்டு நெற்றியில் பொட்டிட்டுக் கொள்பவர்கள் விரும்பிய வண்ணம் விலங்குகளின் உருவத்தை எடுத்துக் கொள்ளலாம்.

ஒருவனுக்குத் தொலைத்துக் கட்ட வேண்டிய பகைவன் இருப்பானாகில் அவன் பறையர் சாதியினைச் சேர்ந்த மந்திரவாதியினை அணுகி அவனிடம் அந்தப் பகைவனுடைய பெயரைத் தெரிவிப்பான். அவனுடைய வீடுள்ள இடத்தை முதலில் தெரிந்து கொண்டு இரவில் அவ்விடத்தை நோக்கிப் புறப்படும் பறையன் எதிரில் வருபவர்களை ஒரே அடியில் கொன்று வீழ்த்துவான். அந்தப் பகைவன் வீட்டினைப் பறையன் அடையும்போது அவன் திகைத்த ஒரு நிலையில் வீட்டைவிட்டு வெளியேறுவான். தலையில் ஒரு போடுபோட்டு அல்லது இரண்டு குச்சிகளுக்கிடையே கழுத்தை நெரித்து அவனைக் கொல்வான். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒடி மாந்திரீகத்தை கொச்சி மாநிலத்தின் வட பகுதிகளிலும் மலபார் மாவட்டத்தின் பாலக்காடு,

வள்ளுவநாடு வட்டங்களிலும் கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. இன்றும் அதனை முற்றுமாகக் கைவிட்டு விட்டனர் எனக் கூறமுடியாது. கருவினை வெளிப்படுத்துவதும் ஆட்களைக் கொன்று போடுவதும் பற்றியதாகத் தகவல்கள் அரசு அலுவலர்களிடமும் பண்ணையார்களிடத்தும் மற்றவர்கள் மேலும் கொண்டுள்ள அச்சங்காரணமாக வெளியாவதில்லை. நாயர் ஒருவன் இரண்டு நல்ல எருதுகளை உடையவனாக இருந்தான். அவற்றை ஒரு மாப்பிள்ளா விலைக்கு வாங்க விரும்பினான். அந்த நாயர் அவற்றை விற்க விரும்பவில்லை. அந்த மாப்பிள்ளா அவற்றைக் கவர்ந்து வரச் சிலரை ஏற்பாடு செய்தான். அந்த நாயர் வீட்டில் இல்லை என்பதனைத் தெரிந்துகொண்ட அவர்கள் அவன் வீட்டிற்குச் சென்றனர். அங்கே ஒரு பறையனும் அவன் மனைவியும் ஒடி மாந்திரீகம் செய்தவர்களாக ஒரு இளம் பெண்ணை அந்த வீட்டிலிருந்து வெளியே வந்து தரையில் படுக்குமாறு வற்புறுத்தக் கண்டனர். அவர்கள் அந்தப் பறையனைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிப் போட்டனர். அவனுக்கும் அவன் மனைவிக்கும் நல்ல அடியுதை தரப்பட்டது. இதனால் தன் மனைவி காப்பாற்றப்பட்டதற்கு மகிழ்ந்த அந்த நாயர் திருட வந்த அவர்களுக்குத் தன் எருதுகளைப் பரிசாகக் கொடுத்துவிட்டான் என்ற இந்தக் கதை இப்பொழுதும் மக்களிடையே வழங்கி வருகின்றது.

பறையர்களுக்கு எனத் தனியே கோயில்கள் இல்லை. இவர்கள் சிவனையும் காளியினையும் வழிபடுகின்றனர். திரேதாயுகத்தில சம்வரன் பறையனும் புலினி என்ற அவன் மனைவியும் காட்டில் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் அவன் பாழடைந்த ஒரு கோயிலில் ஒரு சிவலிங்கத்தைக் கண்டான். அவர்கள் அதற்கு இறைச்சியினைப் படைப்பதோடு சுடுகாட்டிலிருந்து கொண்டுவரும் சாம்பலையும் பூசி நாளும் வழிபட்டு வந்தனர். ஒருநாள் சிவலிங்கத்திற்குப் பூச அவர்களுக்குப் பிணம் சுட்ட சாம்பல் கிடைக்கவில்லை. அவனுடைய மனைவி தன்னை எரித்துத் தன் சாம்பலைச் சிவலிங்கத்திற்கு வழக்கம் போலப் பூசும்படி கேட்டுக்கொண்டாள். ஒருவாறு இதற்கு உடன்பட்டவனாக அவள் கணவன் அவளை எரித்து, அவளின் சாம்பலை வழக்கம்போல சிவலிங்கத்திற்குப் பூசிப் பூசையினை முடித்தான். பின் அவன் அவள் இறந்துவிட்டாள் என்பதனை மறந்தவனாக வழக்கம்போல அவளுக்குப் பிரசாதம் தரப் பின்னால் திரும்பினான். அவள் அங்குத் தன் முன்

பிரசாதம் பெற்றுக் கொள்ள உயிரோடு வந்து நிற்பதைக் கண்டு அவன் வியப்புற்றான். அவர்களுடைய செயலால் மகிழ்ந்தவனான சிவபெருமான் நேரில் காட்சி தந்து அவர்களுக்கு வீடுபேற்றினை அருளினான்.

நாட்டுப்புறங்களில் உள்ள ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் பறையர் வழிபடுவதற்கெனப் பகவதிக்கான சிறிய கோவில் ஒன்று இருக்கும். அந்தக் கோயில்களின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக உள்ள பறையர் காலரா, பெரியம்மை போன்ற பேரழிவுகள் நிகழும்போது அத் தேவதையின் பாதுகாப்பினை நாடுவர். கொடுங்கோளூர் பகவதியே இவர்கள் குலதெய்வம். அங்கு நடக்கும் யேலத் திருவிழாவில் இவர்கள் பங்கு பெறுவர். அந்தத் திருவிழாவிற்குச் சில நாள்கள் முன்பாக வெளிச்சப்பாடுக்கு ஒரு துணியினை வழங்குவர். அவன் அதனை அணிந்தவனாகக் கழுத்தில் ஒரு சிவப்புத் துண்டினைப் போட்டுக் கொண்டு, இடையில் தனித்த முறையில் உடை தரித்துக் கால்களில் சில சிலம்புகளை அணிந்து கொள்வான். தன்னோடு முழவு, குழல். ஊதியவர்களாகவும் கூடை ஒன்றினைச் சுமந்தவர்களாகவும் சிலர் பின்வர அவன் திருவிழாவிற்கு முன் ஏழு நாள்களுக்கு நாள்தோறும் நாயர்கள் இல்லம் சென்று திருவிழாச் செலவினைச் சரிக்கட்ட நெல்லினைப் பெற்று வருவான். திருவிழாவின்போது வெளிச்சப்பாடும் பூதங்கள் போல உடை அணிந்த மற்றும் சிலரும் கோயிலுக்கு அருகே உள்ள காவு ஒன்றுக்குச் சென்று இன்னிசைக்கு ஏற்ப தேவியினைச் சிறப்பித்துப் பாடியாடுவர்.

மலபாரைச் சேர்ந்த பறையரைப் பற்றித் திரு.டி.சே.கோபால் பணிக்கர் * பின்வருமாறு எழுதுகின்றார் :- "ஒவ்வொரு ஆண்டிலும் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் பறையர் தீங்கிழைக்கும் பெரிய தேவதைகளின் வேடம் தரிக்கின்றனர். தலையில் பெரிய மகுடங்களைத் தரித்துக் கொண்டு முகத்திலும் உடலிலும் வண்ணங்களைப் பூசியவர்களாகத் தென்னோலைகளை இடுப்பிலிருந்து தொங்கவிட்டுக் கொண்டு இந்த முரட்டு அலங்காரத்துடன் தப்பட்டை, கொம்பு ஆகியன முழங்கப் பல தேவதைகளின் வேடம் தாங்கியவர்களாக ஒவ்வொரு நாயரின் இல்லத்தற்கும் சென்று அந்த வட்டாரத்தில்உள்ள தீய ஆவிகளை விரட்டுவர். இதற்கு உரிய கட்டணத்தைப் பெற்றுக்

*மலபாரும் அங்கு வாழ்வோரும். 1900. *(Malabar and its Folks. 1900).*

கொண்டபின் இவர்கள் அங்கிருந்து செல்வர். எல்லா வீடுகளுக்கும் சென்று முடித்தபின் இறுதிநாளன்று தங்கள் கோயிலருகே இவர்கள் அனைவரும் கூடிவேள தமாஷா எனப்படும் நிகழ்ச்சியினை நடத்துவர்.

இறந்தவர்களின் ஆவிகளுக்கு ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளன்று கலசம் எனப்படும் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. அப்போது மீன், சமைத்த இறைச்சி, சோறு, வறுத்த தானியம், வாழைப்பழம், தேங்காய், கள் முதலியனவற்றை ஓர் இலையில் படைத்து அதன்முன் ஒரு விளக்கு ஏற்றி வைப்பர். மிகுந்த சிரமப்பட்டு மூதாதையர்களுக்காகத் தேடிக் கொண்டுவந்து படைக்கப்பட்ட உணவினை அவர்கள் உண்டு தங்களைக் காப்பாற்றிப் பாதுகாத்து வரவேண்டும் என்ற கருத்துப்படி அப்பொழுது ஒரு வாழ்த்தினையும் கூறி வழிபடுவர். அவர்களுள் ஒருவன் தெய்வம் ஏற்பட்டவனாகக் கூடியுள்ளவர்களை நோக்கி வரும் நலம் தீங்குகளைப் பற்றித் தெய்வவாக்கினை உரைப்பான்.

வாய்பீன் தீவிலுள்ள எலங்குன்னப்புழா கோயிலின் தோற்றம் பற்றிப் பின்வரும் கதை கூறப்படுகிறது. பறையர் சிலர் பிரம்பு வெட்டிக் கொண்டிருக்கும்போது அவர்களுள் ஒருவன் சிறப்பான ஒரு சிலையினைக் கண்டெடுத்துத் தன் சுய நினைவினை இழந்தவனாக அந்த நிலையிலேயே கொச்சி அரசரிடம் சென்று, அந்தச் சிலை திருநெல்வேலியில் உள்ள திருச்செந்தூர் கோயிலுக்கு உரியதென்றும் அரசர் அதற்கு ஒருகோயில் கட்ட வேண்டும் என்றும் கூறினான். அதன்படி ஒரு கோயில் அமைக்கப்பட்டது. அந்தச் சிலையினைக் கண்டு பிடித்த பறையனுக்கு நாளும் படியாக அரிசி வழங்கப்பட்டது. கோயிலில் ஆண்டுத் திருவிழா நடைபெறும்போது அவன் பெறும் அரிசியின் அளவு மிகுதியானதாக இருக்கும். இதற்கு ஈடாக அவன் நாள்தோறும் ஊர்வலத்தில் பயன்படுத்த ஓலைக்கூடையினையும் கோயிலில் அரிசி களைவதற்கான மூங்கில் கூடைகளையும் வழங்கி வர வேண்டும். இன்றுள்ள பெரும்பறையன் இவ்வாறு அரிசியினைப் படியாகப் பெறுவதில்லையெனினும் அண்மைக் காலம்வரை இவன் முன்னோர்கள் இதனைப் பெற்று வந்துள்ளனர்.

பறையர் சாதிப் பெண்ணொருத்தி மகப் பேறு சமயத்தில் அவள் குடிசையை விட்டுத் தனித்ததான இடத்தில் தற்காலிகமாக

குடிசையில் இரண்டு வாரக்காலம் இருந்து வரவேண்டும். பத்தாம் நாள் சில பறையர்கள் பண்ணையாரான பிராமணனிடமோ நாயரிடமோ சென்று கொஞ்சம் பால் வாங்கி அதனைப் பிள்ளையைப் பெற்றவள் மீதும் குழந்தை மீதும் தெளிப்பர். அதன்பின் அவள் தன் வீட்டுத் திண்ணைக்கு வந்து விடலாம். அங்கு ஐந்து நாள்கள் தங்கியிருந்த பின் குளித்துத் தீட்டினைப் போக்கிக் கொள்வாள். தற்காலிகக் குடிசை எரிக்கப்பட்டு விடும்.

இறந்தவர்களைப் புதைக்கும் இவர்கள் பிணத்தைப் புதைக்குழியில் கிடத்தியபின் ஒரு பாய்கொண்டு மூடுவர்.

பிரம்புக் கூடைகள், மூங்கில் பாய்கள், பனையோலைக் குடைகள் ஆகியனவற்றைத் தயாரிப்பதில் பறையர்கள் ஈடுபட்டுள்ளனர். பயிர்த்தொழில் தொடர்பான எல்லா வேலைகளிலும் ஈடுபடும் இவர்கள் எருமைகளைத் தூய்மையற்ற விலங்குகளாகக் கருதியவர்களாக அவற்றை உழவுக்குப் பயன்படுத்துவதில்லை. எருமைகளைத் தொட நேர்ந்தால் இவர்கள் தீட்டுப் போக்கும் சடங்கினை மேற்கொள்கின்றனர்.

பறையர்களுள் பலர் கிறித்தவ சமயத்தை மேற்கொண்டவர்களாகச் சமூகப் படிநிலையில் தங்கள் தகுதிகளை உயர்த்திக் கொண்டுள்ளனர். சமூகப் படிநிலையில் தாழ்ந்தவர்களாக இவர்கள் அனுபவித்து வந்த பல தொல்லைகளிலிருந்தும் இதனால் இவர்களுக்கு விமோசனம் கிடைத்துள்ளது.

1829 – இல் மலபாரைச் சேர்ந்த பலர் மீது, அவர்கள் ஒரு பறையனையும் உடன் அழைத்துக்கொண்டு கருவுற்றிருந்த ஒரு பெண்ணின் இல்லத்திற்குச் சென்று அவளை அடித்துத் துன்புறுத்தி அவள் கருவினை வெளிப்படுத்தியபின் அவளுடைய கருப்பையில் கன்றுக்குட்டியின் தோலையும் மண்சட்டியினையும் திணித்ததாக வழக்குத் தொடரப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் காவலர்களிடம் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். எனினும் அவர்கள் அவளுடைய கருப்பையில் திணித்ததாக கூறப்பட்ட சட்டி ஒருத்தி உயிரோடு கூடிய காலத்தில் திணிக்க முடியாத அளவுக்கு அளவில் பெரியதாக இருந்த காரணத்தால் அதன் அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மலபாரைச் சேர்ந்த பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் 1834 – இல் பறையர் கிராமம் ஒன்றினைத் தாக்கினார்கள். பறையர் தங்கள் மாந்திரீகத்தைப் பயன்படுத்தி மக்களுக்கும் கால்நடைகளுக்கும் சாவினை உண்டாக்கியதோடு கூட மகப் பேற்றுக்கான பேறுவலி கண்ட பெண்களின் பிரசவ காலத்தையும் நீட்டிக்கும்படி செய்தனர் என்பதே இத்தாக்குதலுக்குக் காரணமாகும். அந்தப் பறையர்களின் கைகளைப் பின்னால் சேர்த்துக் கட்டிப் போட்டபின் அவர்களை முரட்டுத்தனமாக அடித்து உதைத்ததில் பலர் உயிர் துறந்தனர். அவர்களை ஆற்றுப்பக்கம் துரத்திபோய் நீரில் மூழ்கும்படியாகச் செய்து மூச்சுத் திணறி உயிர் துறக்கச் செய்தனர். அவர்களின் குழந்தைகளை ஏவியே அவர்களுடைய உடல் காயத்தில் மணலைப் பூசித் தேய்க்கும்படி செய்தனர். இறுதியில் அவர்கள் குடியிருப்பு நெருப்புக்கிரையாக்கப்பட்டுத் தரைமட்டம் ஆக்கப்பட்டபின் அவர்கள் ஊரைவிட்டு ஒடும்படி விரட்டப்பட்டனர்.

திருவாங்கூரைச் சேர்ந்த பறையரைப் பற்றிய திரு.என்.சுப்பிரமணிய அய்யர் அவர்கள் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டவை பின்வரும் விவரங்கள். தென் வட்டங்களில் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையில் காணப்படும் கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்த தமிழ் பேசும் பறையர்கள். கடற்கரைப் பகுதியினைச் சாராதவர்களாக மத்திய திருவாங்கூர் பகுதியிலேயே அதிக அளவில் காணப்படும் திருவாங்கூருக்கே உரிய பறையர் எனத் திருவாங்கூரில் காணப்படும் பறையரை இருபெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். இங்குத் தரப்பட்டுள்ள விவரங்கள் மத்திய திருவாங்கூரைச் சேர்ந்த பறையரைப் பற்றியவை. இவர்களுடைய மந்திரவாதத் திறமையின் காரணமாகச் சிலர் வேலன் என்ற பட்டத்தினைப் பெற்றுள்ளனர். பணிக்கன், மூப்பன் முதலிய பட்டங்களும் இவர்களுக்குரியன. வெள்ளம் அல்லது வெல்லம், வேல், நடுவிலே, பணி என்ற நான்கு பெரும்பிரிவினராக இவர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் பணி என்ற பிரிவினைச் சேர்ந்தவர்களே சமூகப் படிநிலையில் தாழ்ந்தவர்கள். அதனால் இவர்களைப் பிற பிரிவினர் தங்கள் இல்லங்களுக்குள் அனுமதிப்பதில்லை. பறையர் முதலில் புலையரோடு இணைந்த ஒரே சாதியினராக இருந்தனர் எனவும் அவர்கள் மாட்டிறைச்சியினைத் தின்னத் தொடங்கிய காரணத்தால் அவர்களிலிருந்து தனிச் சாதியாராகப் பிரிந்தவர்களே பறையர் என்ற

ஒரு கருத்தும் கூறப்படுகிறது. பறையருக்கெனத் தனிக் கிளைமொழி உள்ளது. புலையரால் அதனைப் புரிந்து கொள்ளுதல் இயலாது. பறையரின் இந்தக் கிளைமொழியினை ஆய்வுக்கு உட்படுத்தலாம். கேரளோற்பத்தியில் பதினாறு மலைச் சாதியருள் பறையரும் ஒருவர் எனக் கூறப்பட்டுள்ளது. பறையரின் தோற்றம் பற்றிப் பின்வரும் கதை தற்பொழுது வழக்கில் இருந்து வருகின்றது. இவர்கள் முதலில் பிராமணர்களாக இருந்தவர்கள். பங்காளிகளுக்குள் ஒரு சமயம் பாகப் பிரிவினை நடந்த பொழுது பங்கிடப்பட வேண்டியவற்றுள் ஒன்றானப் பசுவின் பிணத்தை பயனற்றது என்ற காரணத்தால் நெருப்பில் இட்டனர். அவ்வாறு நெருப்பில் இடப்பட்ட பசுவின் கொழுப்பின் ஒரு துளி அவர்களுள் ஒருவன்மீது விழுந்தது. அவன் அதனை தன் நாவினால் நக்கினான். இதன் காரணமாக அவன் சாதி விலக்கப்பட்டவனாக ஆக அவன் சந்ததியினர் பறையர் எனப்பட்டுப் பசுவினைத் தின்னும் சாதியினராயினர். பக்கனார் ஒரு பறையனுக்குப் பிறந்தவரானாலும் பின்னர் வந்த வழக்கு வரலாறுகள் அவரைப் பிராமணருக்குப் பிறந்தவர் எனச் சிறப்பிக்கலாயின.

பறையர் இல்லங்கள் புலையர் இல்லங்களைப் போன்ற தாழ்வான கூரைக் கொட்டகைகளே. அதனைச் சில தென்னந் தடுக்குகளை வைத்துத் தடுத்து அறைகளாக அமைத்திருப்பர். அதில் வாழ்பவர்களுடைய தேவைக்கு ஏற்றபடி குடியிருப்புக்களின் இடத்தினை இடம் பெயர்த்து அமைத்துக் கொள்வர். பெருங்குடியர்களான பறையர் மிகுதியும் பருகுவது கள்ளே. விரதம் இருப்பவர்களுக்கு உரிய பானமாக இவர்கள் கருதுவது கள்ளே. புலையரைப் போலவே பறையரும் நெல்வயல்களிலும் தென்னந்தோப்புகளிலும் பணிபுரிகின்றனர். மலைத் தோட்டங்களில் பணிபுரியவும் இவர்கள் ஈடுபடுகின்றனர். சூரியனே இவர்கள் வழிபடும் முக்கிய தெய்வம். சத்தியம் செய்யும்போது இத் தெய்வத்தின் பேராலேயே இவர்கள் சத்தியம் செய்வர். முதன்முதலாகப் பறையனாக ஆன பிராமணன் பிரமனைச் சபித்தான். அந்தச் சாபத்தால் வரும் தீங்குகளைப் போக்கச் சூரியன் தன் சந்ததியினருக்கு நாற்பத்தெட்டாயிரம் தேவதைகளையும் எட்டுச் சிறப்புத் தெய்வங்களையும் வழிபடத் தந்தான். வீட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியினை இவர்கள் அந்தத் தெய்வங்களுக்கு உரிய இடமாகக் கருதி அங்கு ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளன்று அவலையும் கள்ளையும்

அவர்களுக்குப் படைக்கின்றனர். வசதியிருக்குமானால் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் இவ்வாறு படையல் இடுவர். இந்தத் தெய்வங்களுக்கு உரியனவாகச் சிறு கோயில்களை அமைத்துள்ளனர். அவற்றில் தை மாதத்தின் 28–ஆம் நாளன்று பூசாரிகள் தெய்வம் ஏற்பட்டவர்களாகக் கூடியுள்ள பறையர் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிப்பர். கைகாரன்கள் என அழைக்கப்படும் இப்பூசாரிகள் தாழ்ந்த பிரிவான பணி பிரிவினைச் சேர்ந்தவர்கள்.

கள்ளத் தொடர்பு கொள்வதனைப் பறையர் பெருங்குற்றமாகக் கருதி அதில் ஈடுபடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்றனர் என்பது அவர்களுக்குரிய சிறப்பாகும். அக்குற்றம் புரியும் ஆணுக்குத் தண்டம் விதிப்பர். பெண் ஆழமான குழியில் எரியும் நெருப்பினைத் தாண்டிக் குதிக்க வேண்டும். இத்தகைய கடுந்தண்டனைகள் நம்பூத்ரிப் பிராமணர்களின் ஸ்மார்த்த விசாரத்தை நினைவு கூறச் செய்கின்றன.

முதன்முதலாகப் பூப்படையும் சிறுமி ஏழுநாள்கள் தீட்டுக்கு உரியவளாவாள். அப்பொழுது சாதித் தலைவனும் ஜசமன்மார் எனப்படும் மூத்தோரும் காரணவன்மாரும் அழைக்கப்படுவர். ஊரைச் சேர்ந்த நான்கு பெண்கள், பூப்படைந்த சிறுமியினை வீட்டுக்கு அப்பால் தூரத்தில் தனியே அமைக்கப்பட்டுள்ள குடிசைக்கு அழைத்துச் சென்று இருக்கச் செய்வர். இதனைப் பச்சைக் கொட்டிலில் குடியிருத்துக என்பர். நான்காம் நாள் அச்சிறுமி குளிப்பாள். கைகாரன் அவள் முன் நெல்லையும் மலரையும் ஆரத்தி எடுப்பான். எட்டாம் நாள் காலையில் அக் குடிசையினை எரிப்பர். அந்த இடத்தினைத் தண்ணீரும் பசுஞ்சாணமும் கொண்டு தூய்மைப்படுத்துவர். அதன்பின் அச்சிறுமி குளித்துத் தீட்டு நீங்கியவளாவாள். வீட்டுக்கு விலக்காகியுள்ள ஒருத்தி மற்றவர்களிடமிருந்து அறுபத்து நான்கடி தூரத்தில் விலகி இருக்கவேண்டும்.

தாலிகட்டு, சம்பந்தம் என்ற இரு மணமுறைகளையும் பறையர் மேற்கொள்கின்றனர். தாலிகட்டு ஒருத்தி பூப்படையும் முன் நடத்தப்பட வேண்டிய சடங்கு. தாய் மாமன் மகனோ அத்தை மகனோ தாலிகட்டுச் சடங்கில் தாலி கட்டுவான். கைக்காரன் குறைந்தது நான்கு சாதித் தலைவர்களையாவது இச் சடங்கினை நடத்தி வைக்க அழைப்பான்.

அவர்கள் சொல்வது போலவே சடங்கு நடத்தப்பட வேண்டும். கணியனே தாலிகட்டுக்கான நல்ல நேரத்தைக் குறித்துத் தருபவன். சடங்கிற்கு முன்தினம் தூண் நிறுத்தும்போது ஊரைச் சேர்ந்த பறையர் அனைவரையும் வரும்படி கைக்காரன் அழைப்பான். அப்போது வந்திருப்பவர்களுக்கு வெற்றிலை பாக்குப் புகையிலையோடு கள்ளும் தாராளமாக வழங்கப்படும். சடங்கின் அடுத்த நிகழ்ச்சி அவல். பொங்கல், மலர், கள் முதலியவற்றைக் கம்பம் நிறுத்தி அமைக்கப்பட்ட பந்தலில் கைக்காரன் மேற்பார்வையில் கொண்டு வந்து வைத்தலாகும். இதனை வச்சொருக்கல் என்பர். அப்பொழுது கூடியுள்ள ஆண்களில் சிலர் மாரன்பாட்டு (காமன் பாட்டு) எனப்படும் பாட்டினைப் பாடுவர். அப்பொழுது மணமகள் ஆவேசம் உற்றவளாக மந்திரவாதி வேகமாக ஓதும் மந்திரங்களுக்கு ஏற்ப நடனம் ஆடுவாள். அதற்கு மறுநாள் மணமகன் மணமகள் இல்லத்திற்கு ஊர்வலமாக வருவான். பந்தலின் நடுவே போடப்பட்டிருக்கும் மணைக்கு அவனை அழைத்துச் சென்று அமர்த்துவர். பின் மணமகளை அழைத்து வந்து அவனுக்கு இடப்புறத்தில் அமர்த்துவர். அவள் கழுத்தில் அவன் மின்னு (தாலி) வினைக் கட்டியபின் அவர்கள் மணியறைக்குச் (படுக்கையறை) சென்று சில நிமிட நேரம் ஒன்றாக இருப்பர். சடங்கின் இறுதி நாளன்று மணமகள் குளிப்பாள்.

கைக்காரன் ஒருவன் இறந்தால் அவனோடு சங்கு ஒன்றும் புதைக்கப்படும். ஆண்டுக்கு ஒருமுறை அமாவாசையன்று இறந்த மூதாதையருக்கு இவர்கள் படையல் இடுவர்.

பறையன்களி எனப்படும் பொழுதுபோக்குக்கான நாடகத்தைப் பறையர் நடத்துகின்றனர். இதில் நடிப்பவன் ஓர் உரல்மீது நின்றவனாக இசைக்கு ஏற்ப நடிப்பான்.

பறையர் பிராமணர்களுக்கு அப்பால் 128 அடி தூரத்தில் விலகியிருக்க வேண்டும். இது புலையர் விலகி இருக்க வேண்டிய தூரத்தைக் காட்டிலும் இருமடங்காகும். எனினும் இவர்கள் புலையரிடமிருந்து உணவு பெற்று உண்பதில்லை.

"திருவாங்கூரில் பறையர்" என்று தலைப்பிலான கட்டுரை * ஒன்றில் மறைத்திரு.எஸ்.மட்டீர் பின்வருமாறு எழுதியுள்ளார் :- "இவர்களை முன்பு கால்நடைகளைப் போல விற்றும் வாங்கியும் வந்தனர். சாட்டையால் அடித்து எருமைகளைப் போல நாள் முழுவதும் கொஞ்சம் நெல்லுக்கு உழைக்கும்படி வற்புறுத்தியதோடு தீட்டு உண்டாக்குபவர்கள் எனத் தொலைவிலேயே நிறுத்தி வைத்தனர். மிக இழிந்த நிலையினராக நடத்தப்படும் இவர்கள் நிலை புலையரையும் வேடரையும் காட்டிலும் எவ்வகையிலும் மேம்பட்டதன்று. இந்தச் சாதியாருடைய மிக இழிந்த பழக்கமாக மற்றவர்கள் இவர்களிடம் மிக வெறுப்பது சாலை ஓரங்களில் எறியப்படும் இறந்துபோன எருதுகளின் இறைச்சியினை இவர்கள் தின்பதுதான். அத்தகைய விலங்கின் இறைச்சியினை இவர்கள் வெட்டி எடுத்துச் செல்வர். இவர்கள் மிச்சமாக விட்டுச் செல்வதைக் கழுகுகளும் நாய்களும் தின்னும். கிறித்தவர்களாக மதம் மாறிய பறையர்கள் இத்தகைய இழிந்த வழக்கததை கைவிட்டு வருகின்றனர். நெவெந்திரம் (திருவனந்தபுரம்?) மாவட்டத்தைச் சேர்ந்த பறையர் தனித்த பகுதிகளில் அமைந்துள்ள குடிசைகளில் வாழ்கின்றனர். இறந்த கால்நடைகள், புலிகள் முதலிய விலங்குகளின் அழுகிய இறைச்சியினை இவர்கள் தின்கின்றனர். மிகச் சிறு வயதினராக இருக்கும் போதே இவர்களுடைய சிறுமியரை மாமன் மகன் அல்லது அத்தை மகன் ஆகியோருக்கு கல்யாணம் கட்டி வைக்கின்றனர். எனினும் அவர்கள் வளர்ந்து பருவம் அடைந்தவுடன் மற்றவர்களால் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு சேலையினைத் தந்து வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளப்படுகின்றனர். பலதார மணம், பல கணவரோடு வாழ்தல் ஆகிய இருவகை வழக்கங்களும் இவர்களிடையே உள்ளன. வறட்சியான கோடைகாலத்தில் பெரும் அளவில் வளரும் கொழுஞ்சி (***Ochlandra Rheedi***) விதைகளையும் மூங்கில் நெல்லினையும் இவர்கள் உணவாகக் கொள்கின்றனர். காட்டில் கிடைக்கும் கிழங்குகள், நண்டு, நத்தை, ஆகியனவும் இவர்களுக்கு உணவாகின்றன. அறுவடையாகும் பருவத்தில் இவர்களுள் சிலர் நெல்லை மிகுதியும் பெற்றிருப்பினும் மற்ற பருவங்களில் வறுமை உற்றவர்களாகவே உள்ளனர். மிகுந்த ஆர்வத்துடன் பூதங்களை இவர்கள் வழிபடுகின்றனர். மாடன், இரத்த சமெண்டி மல்லன், மூவரட்ட மல்லன், கருங்காளி, சாவுர் (இறந்தவரின் ஆவிகள்) பூதம். மந்திர மூர்த்தி. பிற மூர்த்திகள் ஆகியனவற்றை மற்றும்

* ராயல் ஆசியக் கழக இதழ் *XVI (Journ.Roy.As.Soc.. XVI)*

பல தீங்கிழைக்கும் பூதங்களோடு இவர்கள் வழிபடுகின்றனர். இப் பூதங்கள் தங்கி உறையும் தோப்புகளும் பலியிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இறந்த மூதாதையரின் ஆவிகள் மருட்டா எனப்படும். தென்னையோலைகளை மரங்களின் அடியே கட்டிவைத்து கம்பங்களை நட்டுச் சிறு பந்தலிட்டு அவற்றை மாலைகளால் அலங்கரிப்பர். அங்குத் தேங்காய், அவல், சாராணம் ஆகியனவற்றைப் படைப்பதோடு சேவல்களையும் பலியிடுவர். பூத ஆட்டங்கள் ஆடும்போது இவர்கள் கழி, பிரம்பு, மணி, கைக்குட்டை, தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட துணிகள் ஆகியனவற்றைப் பயன்படுத்துவர். இவர்களின் பகையினையும் இப் பூதங்களின் கோபத்தையும் எண்ணி மற்றச் சாதியார் மிகவும் அஞ்சுவர். சூத்திரர்களும் சாணார்களும் பறையரான பூத ஆட்டக்காரர்களை அடிக்கடி பேயோட்டவும், தங்கள் பகைவர் புதைத்து வைத்துள்ள மந்திரித்த தாயத்துக்களைத் தேடி எடுக்கவும் அதற்கு மாற்று வினைகளைச் செய்யவும் அமர்த்துகின்றனர். நோயுறும்போது இவர்களை அழைத்து உடுக்கை அடிக்கச் செய்து எந்தத் தேவதைகளின் கோபத்தால் நோய் வந்துள்ளது என்று கண்டு கூறும்படி கூறுவதோடு அந்த நோயினை நீக்க என்ன செய்யவேண்டும் எனவும் கேட்பர். இத்தகைய பணிகளுக்காக இவர்களுக்குச் சில சமயங்களில் ஒரு பசுவினை அன்பளிப்பாக வழங்குவர். இவ்வாறு தங்களைப் பேயோட்டிகளாகக் கூறிக் கொண்டு நடிக்கும் இவர்கள் சில மருந்து மூலிகைகளைப் பற்றி ஓரளவு தெரிந்து வைத்துள்ளனர். பாம்புக் கடி நஞ்சுக்கு முறிவு தெரியும் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் சில இந்துக்கடவுள்களின் வரலாறுகளையும் கதையாகக் கூறுவர். திருடர்களைப் பற்றித் தங்கள் மாந்திரீகத்தால் கண்டு கூறமுடியும் எனவும் இவர்கள் கூறுகின்றனர். சில திருடர்கள் இவர்கள் மாந்திரீகத்தால் நோயுறக்கூடும் என அஞ்சியவர்களாக உண்மையினைக் கூறிவிடுவதோடு திருடிய பொருள்களையும் கொண்டுவந்து தந்துவிடுகின்றனர். எனக்குத் தெரிந்த ஒரு பூசாரி, தன்னிடம் ஒரு பறவைப் பேய் உள்ளதாகவும் அது மற்றப் பேய்களை வெருட்டி ஓட்டக் கூடியது எனவும் என்னிடம் கூறுவது வழக்கம். ஒருமுறை பெரும் எண்ணிக்கையில் கூடியுள்ள சூத்திரர்களுக்கும் மற்றவர்களுக்கும் முன்னால் தன் திறமையினைக் காட்ட முற்பட்ட இவன் தன் நெஞ்சில் தேங்காயால் அடித்துக் கொண்டு காயம் ஏற்படுத்திக் கொண்டதோடு நெருப்பினைத் தாண்டி குதிக்கும் முயற்சியிலும்

பெருந்தோல்வி கண்டான். அதன்பின் இத்தகைய வாழ்க்கை முறையினைக் கைவிட்ட அவன் ஒரு கிறித்தவனாக மதம் மாறினான்.

"மனைவியின் பேறுகாலத்தின்போது கணவன் ஏழு நாள்கள் சமைத்த உணவுகள் எதனையும் உண்ணாமல் கிழங்குகள், பழங்கள், சாராயம் அல்லது கள் ஆகியனவற்றை மட்டும் உண்டவனாக விரதம் இருப்பான். அவள் மகப்பேற்றுக்காகத் தனித்துத் தங்கியிருக்கும் குடிசை பின்னர் எரிக்கப்படும்."

"ஒருவன் நோயுறும்போது முதலில் மந்திரவாதியினைக் கலந்து நோயின் காரணத்தைக் கண்டறிவர். அவன் அந்த நோய்க்குக் காரணமான தேவதையின் பெயரைக் கண்டு கூறியபின் அதற்குப் பொங்கல், பழம், பூ, கோழி ஆகியனவற்றைப் படைப்பர். நாள்தோறும் இத்தகைய பொருள்களைக் குறிபார்ப்பவனிடம் தருவர். வீட்டுவாசலில் ஒரு சிறுபகுதியைப் பசுஞ்சாண நீரால் மெழுகி மேலே குறிப்பிட்ட படையல்களை அவன் மூன்று இலைகளில் வைத்துத் தீய ஆவிகளை வழிபட்டவனாகக் கிழக்குத் திசையினைப் பார்த்தபடி மந்திரங்களைக் கூறி ஆடுவான். அப்போது வறுத்த அரிசியும் மலரும் வைத்துள்ள ஒரு பழைய துணியில் வந்து அகப்படும் தீய ஆவியினை அந்தத் துணியில் உள்ள பொருள்களோடும் பிடித்துப் படையல்களோடுங்கூட காட்டுக்குள்ளே கொண்டு சென்று அங்கே மீண்டும் தரையினைச் சுத்தம் செய்து இரண்டு தீப்பந்தங்களை ஏற்றி வைத்து உணவுகளைப் படைத்து மேலும் மந்திரங்களைக் கூறி ஒரு கோழியினைப் பலியிடுவான். படைக்கப்பட்ட அனைத்தும் அவனுக்கு உரியனவாகும். ஒரு வேளை நல்ல உணவு பெறுவதோடு பன்னிரண்டு சக்கரங்களை (சிறு வெள்ளிக் காசுகள்)யும் தன் பணிக்கு உரிய தட்சணையாகப் பெறுவான்.

"பெரியம்மை வருமானால் அந்த நோய் வந்த ஒருவரை உதவிக்கு அழைப்பர். அவன் அம்மை வந்தவனைத் தனித்துள்ள இடத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடிசை உள்ள பகுதிக்கு அழைத்துச் செல்வான். உதவியாளனுக்கு நல்ல தொகையினைத் தருவதோடு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்வர். அச்சங் காரணமாக நோயுற்றவன் யாரும் அவனை நெருங்கார். அவன் இறக்க நேர்ந்தால் அந்த உதவியாளனே வேண்டிய சடங்குகளைச் செய்து இறந்தவனை

அந்த இடத்திலேயே புதைத்துவிட்டு வீட்டுக்கு வந்து வீட்டில் உள்ளவர்கள் ஒவ்வொருவரின் தலையைச் சுற்றியும் கையினை ஆட்டியபடி மந்திரங்களைக் கூறி அவர்களுடைய பயத்தைப் போக்குவான். கருவுற்ற ஒருத்தி இறக்க நேர்ந்தால் அவளைத் தொலை தூரத்தில் கொண்டு சென்று புதைப்பர். மிக வயதானவர்களின் உடலைச் சிலபோது சிதையில் கிடத்தி எரிப்பதும் உண்டு. இது இறந்தவர்களின் ஆவி நல்லுலகை அடைய வழி செய்வதாகும்.

"இந்தச் சாதியாருள் எண்ணிக்கையில் மிகுந்தவர்களான கோலாம் பறையர்களின் குடியிருப்பு ஒன்றினை நாம் சென்று காணலாம் வாருங்கள். அங்குக் கால்நடைகளின் சாணத்தை எருவாகச் சேகரித்துச் சூத்திரர்களான பயிரிடுவோருக்கத் தருகின்றனர். பறையர் தங்கள் குடியிருப்பினைச் சுற்றிச் சில மரங்களை நட்டு வளர்ப்பர். இவை ஒத்தி வைத்தல் எனப்படும் குறிக்காணம் ஆகும். பின் அந்த மரங்கள் தரும் பயன்களை அனுபவிக்க ஒரு தொகையினைச் சூத்திரனான நில உரிமையாளனுக்குச் செலுத்துவர். இவர்களுக்கு என இவர்கள் பெயரில் பட்டா செய்யப்பட்ட உரிமையான நிலங்கள் இல்லை. சிலர் காடுகளை அழித்து அதில் தென்னை, கமுகு, மா முதலிய மரங்களை நட்டு வளர்த்து அவற்றுக்கு உரிமை பாராட்டி வருகின்றனர். இவர்கள் சிலகால்நடைகளையும் வளர்க்கின்றனர். பால் கறக்கும் பசுக்களை மாதம் ஒரு ரூபாய்க்கு இடையர்களுக்கு வாடகைக்குத் தருவர். புறம்போக்கு நிலங்களைத் திருத்தி சில இடங்களில் காய்கறிகளையும் பயிரிடுகின்றனர். நெல் வயல்களில் விதைப்பு, நடவு, அறுப்பு ஆகியன செய்யக் கூலிக்குச் செல்லும் இவர்கள் நெல்லினைக் கூலியாகப் பெறுகின்றனர். அத்தகைய பணிவாய்ப்பு இல்லாத பருவங்களில் ஆண்கள் மலைகளிலிருந்து பிரம்புகளை *(Ochlandra Rheedii)* கொண்டு வந்து வீட்டில் இடுவர். பெண்கள் அவற்றைப் பாய்களாகப் பின்னுவர். இவர்கள் இந்தக் கைத்தொழிலை மலையினைச் சேர்ந்த காணிக்காரர்களிடமிருந்து கற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

"நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த பறையர் சிலர் ஆறு தலைமுறைகளாக மூதாதையர்களின் உடமைகளைப் பரம்பரை உரிமையாக அனுபவித்து வருகின்றனர். இவர்களுள் சிலர் இன்றும் நிலவுடைமையாளர்களாக உள்ளனர். திருவாங்கூர் அரசருக்குக்

கட்டணம் செலுத்திப் பாண்டிப் பறையன்களுக்கு உரிய சாம்பவன் என்ற பட்டப்பெயரை விலைக்கு வாங்கித் தரிக்கின்றனர். இவ்வாறு பட்டம் பெறும் சாதித் தலைவனுக்கு ஒரு பிரம்பினையும், சடங்குகளின்போது இருமடங்கு வெற்றிலை முதலியன பெறும் உரிமையினையும் அரசர் வழங்குகின்றார். அவனும் தன்னுடைய வீட்டில் நடக்கும் சாவு முதலியவை தொடர்பாக நடைபெறும் சடங்குகளுக்கு வருகை தருபவர்களுக்கு இருமடங்கு வெற்றிலை முதலியன தர வேண்டும். இத்தகைய பட்டம் பெற்ற தலைமைப் பறையனை அவன் சாதியினர் முழவு முதலியன முழக்கி வரவேற்பர். இந்த ஏற்பாட்டின்படி அரசு பறையரைத் தன் ஆளுகையின் கீழ் வைத்துக்கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது. போரில் தோற்று ஓடி வந்த அரசன் ஒருவன் செங்கண்கடையில் உள்ள பறையர் குடிசைகளில் ஒளிந்துகொண்டு உயிர் தப்பியதாகவும் இதற்கு ஈடாக அந்த அரசர் ஆண்டுதோறும் சிறிது வருமானம் ஈட்டித்தரும் நிலப்பகுதியினை அவர்களுக்கு வரியிலியாகத் தந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. கி.பி.927 – இல் (மலையாளம் ஆண்டு 102 இல்) வஞ்சி மன்னன். ராஜா என்பவர் பறையருக்குச் சில தனியுரிமைகளை வழங்கியதாக ஒரு வழக்கு நிலவி வருகின்றது. திப்புவோடு திருவாங்கூர் அரசர் போரிட்ட சமயத்தில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பறையர் அனைவரும் எவரேனும் ஒரு நாயரைத் தங்கள் தலைவனாக ஏற்றுக்கொண்டு அவனுக்குக் கீழ்படிந்து நடந்து வரவேண்டுமென்று அரசு ஆணை பறை அறைந்து அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. தங்களுக்கு என உடமைகள் ஏதும் இல்லாதவர்கள் சர்க்காரின் அடிமைகளாகக் கருதப்பட்டனர். இதனால் ஏற்படும் ஈவு இரக்கமற்ற அடக்குமுறைக்கும் இத்தகையவர்கள் படையில் உள்ள குதிரைகளுக்குப் புல் வெட்டவும் பிற பணிகளைச் செய்யவும் ஏவப்படும் தொல்லைக்கு ஆளாக வேண்டும் என்பதற்கும் பெரிதும் அஞ்சினர். இதனால் பலர் தங்களை ஓரளவு வசதிபடைத்த பெருமக்களுக்கு அடிமைகளாக ஆக்கிக் கொண்டு அரசின் கெடுபிடிகளோடு கூடிய அடிமைத்தளையிலிருந்தும் தப்பினர். மதிப்பு மிக்க பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சுசீந்திரம் கோவிலில் பணிபுரியும் அர்ச்சகர்களை அணுகித் தங்களை அடிமைகளாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டு அதற்கெனத் தலைக்கு ஆண்டொன்றுக்கு ஒரு பணமும் கட்டணமாகச் செலுத்தினர். இந்தத் தொகை இன்றளவும் அவர்களால் செலுத்தப்பட்டு வருகின்றது. இந்த அர்ச்சகர்கள் இவர்களுக்குத் தனிச்சலுகைகளைப் பெற்றுத்

தருகின்றனர். இவர்கள் அடக்குமுறைக்கும் தொல்லைக்கும் உள்ளாகும்போது அரசுக்கு இவர்களுக்கு நீதி வழங்கும்படியும் உரிய முறையில் நடத்தும்படியும் இவர்களிடம் கட்டணம் பெறும் அர்ச்சகர் எழுதுவார். நம்பூத்ரிகளின் புனிதத் தன்மையினையும் உயர்தகுதியினையும் கருத்தில் கொண்டு அவர்களுடைய அடிமைகளையும் அரசு நல்ல முறையில் நடத்துகின்றனர். "போத்திகளின் அடிமைகள்" என அழைக்கப்படும் இந்தப் பறையர் இன்றும் தங்களுக்குள்ளாகவே மணஉறவு செய்து கொள்கின்றனர். இந்தப் பிரிவினைச் சேர்ந்த ஒருவனுடைய மனைவியினை வேறொரு முதலாளிக்கு அடிமையாகவுள்ள பறையன் தன்னுடையவளாக உரிமை கொண்டாட முடியாது.

"இறுதியாக வட திருவாங்கூரைச் சேர்ந்த பறையர் பற்றிய சில தகவல்கள் வருமாறு. இவர்கள் நிலை மற்ற எல்லாச் சாதியாரின் நிலையினும் இழிந்ததாக உள்ளது. மலையாளம் பகுதியில் உள்நாட்டில் செல்லச் செல்ல இவர்கள் அடக்குமுறையிலிருந்து தப்பி உய்ய ஒரு சிறிதும் வாய்ப்பு அற்றவர்களாகக் கொடிய அடக்கு முறைக்கு உள்ளாகியிருக்கக் காணலாம். பிராமணர்களின் ஒரு பிரிவினராக இருந்த இவர்களை இவர்களுடைய பகைவர்கள் மாட்டு இறைச்சியினைத் தின்னும்படியாக வஞ்சனையாகச் சதிசெய்து சாதியில் தாழ்ந்தவர்களாக் ஆகும்படி செய்தனர் என இவர்கள் தங்களைப் பற்றிக் கூறிக் கொள்கின்றனர். இறந்த விலங்குகளின் பிணங்களையும் தாழ்ந்தவற்றையும் இவர்கள் உண்பதோடு எல்லாக் கால்நடைகளின் பிணங்களையும் தங்கள் உரிமையாகக் கூறுவர். இறைச்சிக்காக வேண்டி அவ்வப்போது பசுக்களை நஞ்சூட்டிக் கொல்வர். உயர்ந்த சாதியினைச் சேர்ந்தவர்களுடைய பெண்களையும் இவர்கள் கடத்திச் சென்று கொடுமைக்கு உள்ளாக்குவதாகக் கூறப்படுகிறது. பிப்ரவரி மாதத்தில் கொள்ளையராக மாறுவது இவர்கள் வழக்கம். அந்த மாதத்தில் தான் இவர்கள் தங்களுக்கு தீங்கிழைக்கப்பட்டதாகக் கூறி அதற்கப் பழிவாங்குவதற்காகப் பிராமணர்கள், நாயர்கள் ஆகியோரின் வீடுகளில் புகுந்து அவர்கள் பெண்களையும் குழந்தைகளையும் உடமைகளையும் கைப்பற்றிச் செல்வர். இச் செயல்களில் அவர்கள்

பழிவாங்கும் நோக்கத்தோடேயே ஈடுபடுவதாகக் கூறுவர். இதனை நியாயப்படுத்த இவர்கள் மேற்கூறிய சாதியாரிடம் இவர்கள் அனுபவித்த கொடுஞ்செயல்களை எத்தகைய தண்டனைக்கும் உள்ளாகாதவர்களாக இவர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். இதன் காரணமாக மக்கள் இன்றளவும் இத்தகைய கொடுமைக்கு ஆளாக வேண்டி வருமோ என அஞ்சியபடி இருத்தல் உண்டு எனினும் இத்தகைய வழக்கங்கள் இன்று மிக அருகி விட்டன" என * மறைத்திரு.ஜி.மட்டான் *(Matthan)* கூறியுள்ளார்."

பாரசைவன் – (Pārasaivan) .

கிராம தேவதைகளின் கோயில்களில் பூசாரிகளாக உள்ள சைவர்களான ஓச்சர்களின் பட்டப்பெயர். மலையாள நாட்டில் பாரசவர் என்ற பட்டம் அம்பலவாசிகளின் ஒரு பிரிவினரான வாரியார்களுக்கு உரியது. இச் சொல் பிராமணன் ஒருவனுக்குச் சூத்திரப் பெண்வழிப் பிறந்தவன் என்பதனைக் குறிக்கும்.

பரவ – Parava

நல்கெயரையும் பொம்பாடர்களையும் போலப் பூத ஆட்டக்காரர்களான இவர்கள் தென்கன்னடத்தைச் சேர்ந்த துளுமொழி பேசும் பரவராவர். கூடை முடைதலையும் குடைகள் செய்வதையும் இவர்கள் மேலும் தங்களுக்கு உரிய தொழிலாகக் கொண்டுள்ளனர். சமூகப் படி நிலையில் நல்கெயரைவிட உயர்ந்தவர்களாக மதிக்கப்படும் இவர்கள் பொம்பாடர்களைவிடத் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கொடமணித்தய்ய, பைதெருகலு ஆகிய பூதங்களின் வேடங்களை இவர்கள் தரிப்பர். இந்தப் பூதங்களின வேடங்களை தரிக்க நல்கெயர் உரிமையுடையவரல்லர். வேறு பூதங்களின் வேடங்களை இவர்கள் மேற்கொள்ளவும் செய்யலாம். நல்கெயர் இல்லாத இடங்களில் பரவர் எல்லாப் பூதங்களின் வேடங்களையும் மேற்கொள்கின்றனர். (பார்க்க : நல்கெயர்).

---

* கிறித்தவ சங்கங்களின் ஆவணங்கள், 1850. *(C.M.Record/1850.)*

பரவன் : **Paravan**

தென்கிழக்குக் கடற்கரைச் சார்ந்த பரவரின் தோற்றம் பற்றி வழங்கிவரும் வரலாறுகள் * வருமாறு :– 1735 – இல் தரங்கம்பாடியில் அச்சிடப்பட்ட கிறித்தவத் திருச்சபையின் வரலாற்றின் ஆசிரியர் இவர்களை மறைநூல்களில் கூறப்பட்டுள்ளவர்களான பர்வையம்கள் என வகைப்படுத்தியுள்ளார். சாலமன் காலத்தில் கடற்பயணங்கள் மேற்கொள்வதில் ஈடுபட்டிருந்த வகுப்பாருள் இவர்கள் புகழ்பெற்றவர்கள் எனவும் அவரே குறித்துள்ளார். இத்தகைய கருதுகோளுக்கான அடிப்படை. ஆதாரங்கள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை. பரவர்கள் தங்களை அயோத்தியினைச் சேர்ந்தவர்கள் எனவும் மகாபாரதப் போர் நிகழ்வதற்கு முன்னர் யமுனைக் கரையில் வாழ்ந்து வந்ததாகவும் கூறிக் கொள்வர். இன்று இவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கடற்கரையில் உள்ள துறைமுகப் பட்டணங்களிலும் இலங்கையின் வடமேற்குக் கடற்கரையிலும் காணப்படுகின்றனர். இவர்கள் தோற்றம் பற்றி ஒன்றுக்கொன்று முரண்பட்டதான பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. தந்திர நூல்கள் சில இவர்கள் சூத்திரப் பெண் ஒருத்திக்கு பிராமணன் வாயிலாகப் பிறந்தவனின் சந்ததியினர் எனக் கூறுகின்றனர். தமிழர்களிடையே வழக்கில் உள்ளதான சாதிபேதங்களின் நூல் இவர்கள் செட்டிச்சி குறவன் (கூடை முடைபவன்) ஒருவன் கொண்டிருந்த கள்ளத் தொடர்பின் வாயிலாகப் பிறந்தவனின் சந்ததியினர் எனக் கூறுகின்றது. பரவர்களிடையே அவர்கள் தோற்றம் பற்றிப் புராணக் கதைகளோடு தொடர்புடையனவாகப் பலவழக்கு வரலாறுகள் நிலவி வருகின்றன. இவர்கள் தங்களைக் கடல் தெய்வமான வருணனின் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். சிவன் அசுரர்களை வெல்லப் போர்க் கடவுளான கார்த்திகேயனைப் படைத்தபொழுது சரவணப் பொய்கையிலிருந்து அவனோடு கூடத் தோன்றி கார்த்திகைப் பெண்களால் அவனைப் போலவே வளர்க்கப்பட்டவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். சென்ற யுகத்தின் முடிவில் உலகம் முழுதும் நீரால் மூடப்பட்டு மூழ்கியிருந்தபோது தாங்கள் ஒரு தோணியினைக் கட்டியதாகவும் அதில் ஏறிக்கொண்டு பேரழிவிலிருந்தும் தப்பியதாகவும்

---

*பரவர்களின் தோற்றமும் வரலாறும் –சைமன் சுசியெ செட்டெய் ராயல் ஆசியாடிக் கழக இதழ் .IV, 1837. *(Origin and History of the Paravar - Sinon Casie Chitty: Jour.Roy.As.Soc..iv. 1837.)*

நீர்வற்றி மீண்டும் நிலம் புலப்பட்டபோது தங்கள் தோணி தரைதட்டிய இடத்தில் குடியமர்ந்ததாகவும் அதனால் அவ்விடத்திற்குத் தோணிபுரம் எனப் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர். ஒரு காலத்தில் பரவர் செல்வாக்குடையவர்களாகவும் கடற்பயணம் பற்றியதான தங்கள் அறிவின் காரணமாக மற்றச் சாதியார் மீது அதிகாரம் செலுத்துபவர்களாகவும் இருந்துள்ளனர். இவர்களிடையே ஆதியரசன் எனப் பட்டம் தரித்த அரச மரபினர் இருந்துள்ளதாகவும் இவர்களுள் சிலர் உத்தரகோசமங்கையிலிருந்து ஆண்டதாகவும் தெரிகின்றது. அந்நாளில் அந்நகரம் மங்கை என்ற பெயருடையதாயிருந்தது. இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள புகழ்பெற்ற இந்துக்களின் கோயிலாக இன்று அது விளங்குகின்றது. வலைவீசுபுராணம் என்ற நூலுள் பின்வரும் கதை கூறப்பட்டுள்ளது. சிவனின் மனைவியான பார்வதியும் அவளுடைய மகனான கார்த்திகேயனும் வெளியிடக் கூடாத சில இரகசியங்களை வெளியிட்ட காரணத்தால் தேவர்களின் உலகிலிருந்தும் வெளியேறும்படி பணிக்கப்பட்டனர். பல பிறவிகள் எடுத்த பிறகே அவர்கள் மீண்டும் தேவலோகத்தில் சிவனிடம் வந்து சேரலாம் எனச் சாபம் பெற்றனர். பார்வதியின் வேண்டுகோளுக்கிணங்கச் சிவன் அவர்களை அவர்கள் குற்றத்திற்குத் தண்டனையாக ஒரு பிறவி மட்டும் எடுத்தால் போதுமானது என அவர்களுக்கான தண்டனையைக் குறைத்தான். இச் சமயத்தில் பரவனின் அரசனான திரியம்பகனும் அவன் மனைவியாகு வருண வள்ளியும் மகப்பேறு வேண்டித் தவம் செய்தவர்களாக இருந்தனர். பார்வதி அவர்களுடைய மகளாகத் திரைசேர் மடந்தை என்ற பெயருடன் பிறந்தாள். கார்த்திகேயன் ஒரு மீனாக உருவெடுத்து வட கடலில் சிலகாலம் திரிந்தபடி இருந்தான். அவன் வடகடலை விட்டு எப்படியோ தென் கடலுக்கு வந்து மிகப் பெரிய உருவுடைய மீனாக வளர்ந்து புரவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய கலங்களையெல்லாம் தாக்கி வந்தான். பரவர்கள் தொழில் சீரழிந்து கெடும் என்ற நிலைமை ஏற்பட்டதால் அவர்களின் அரசனான திரைம்பகன், யார் அந்த மீனைப் பிடிக்கின்றார்களோ அவர்களுக்குத் தன் மகளை மணம் முடித்துத் தருவதாகப் பறை அடித்து அறிவிக்கின்றான். இச்சமயத்தில் சிவன் ஒரு பரவனாக வந்து அந்த மீனைப் பிடித்து தன் மனைவியான பார்வதியினை மணந்துகொண்டான். மகாபாரதத்தின் ஆதிபருவத்தில் பரவரின் அரசன் யமுனைக் கரையிலிருந்து அரசாண்டதாகவும் ஒரு மீனின் வயிற்றிலிருந்து அவன்

ஒரு பெண்ணைக் கண்டெடுத்ததாகவும் அவளுக்கு மச்சகந்தி என்ற பெயரைத் தந்து தன்னுடைய மகளாக வளர்த்து வந்ததாகவும் அவள் பருவம் அடைந்தபின் குல வழக்கப்படி பரவப் பெண்களோடு கூட ஆற்றின் குறுக்கே பரிசலோட்டிப் பயணிகளை மறுகரை சேர்க்கும் பணியினை மேற்கொண்டாள். ஒருநாள் பராசர முனிவர் அவளைப் பரிசல் துறையில் கண்டு காதல்கொள்ள அவள் கருவுற்று ஒரு குழந்தையினைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தையே புராணங்கள் பலவற்றை இயற்றியவரான புகழ்பெற்ற வியாசர். பின்னர் அவளுடைய அழகில் மோகம் கொண்ட சந்திர குல மன்னனான சந்தனு அவளை தன் மனைவியாக்கிக் கொள்ள அவள் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் மூதாதையான விசித்திர வீரியனைப் பெற்றெடுத்தாள். அஸ்தினாபுர அரசுக்கு உரிமை கொண்டாடி இவர்கள் நடத்திய பெரும்போரே மகாபாரத இதிகாசத்தின் கதைக் கருவாக உள்ளது. இதனாலேயே பரவர் தங்களைச் சந்திர குலத்தவர்களோடு உறவுடையவர்கள் எனக் கூறிக் கொள்வதோடு தங்கள் திருமண விருந்தின்போது அதற்கான சின்னங்களையும் கொடிகளையும் ஏற்றி வைக்கின்றனர். இலங்கையின் வடமேற்குக் கரையில் உள்ள குதிரை மலையிலிருந்து அரசாண்ட அல்லியரசாணியின் நாடகத்தில் பரவர் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றனர். அந்த அரசி இவர்களை கடற்கரையில் முத்தெடுக்கப் பணியில் அமர்த்தியிருந்தாள். ஒவ்வொரு பருவத்திலும் இவர்கள் பத்துக் கலம் முத்தினை அவளுக்கு அளந்து தரவேண்டும். இல்லையேல் இவர்கள் கொடுந்தண்டனைக்கு உள்ளாவர்.

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது வருமாறு :– "பரவன் என்ற பெயருக்குரியனவாக முறையே தமிழ், மலையாளம், கன்னடம் ஆகியனவற்றைப் பேசும் மூன்று சாதிகள் உள்ளன. இந்த மூன்று பிரிவினருமே தமிழ் பேசும் பரவன் அல்லது பரதவன்களின் வழித் தோன்றல்களாகலாம். இவர்கள் தலைமையிடம் தூத்துக்குடியாகும். இவர்கள் சாதித் தலைவன் குறவன் எனப்படுவான். இவர்களுள் பெரும்பாலோர் இந்தியக் கிறித்தவர்கள். தங்களைப் பாண்டியர் குலத்தைச் சேர்ந்த சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள்

பிராமணர்கள் இல்லங்களில் மட்டிலுமே உணவு உண்பர். மலையாளப் பரவர் கிளிஞ்சல் பொறுக்குவதோடு சுண்ணாம்புக் காளவாயும் போடுவர். இவர்கள் உடற்பயிற்சி விளையாட்டுக்களிலும் வல்லவர்கள். இவர்கள் வீட்டுப் பெண்கள் மகப்பேறு பார்க்கும் மருத்துவச்சிகளாகச் செயல்படுவர். குருப்பு, வாரக்குருப்பு, நூறன் குருப்பு (நூறு-சுண்ணாம்பு) என்பன இவர்களுக்குரிய பட்டப்பெயர்களாம். கன்னடம் பேசும் பரவர் குடைகட்டிகளாகத் தொழில் செய்வதோடு பூத ஆட்டக்காரர்களாகவும் விளங்குகின்றனர். "மேற்குக் கடற்கரையில் வாழும் பரவர்கள் முகமதியரின் கொடுமைகளிலிருந்தும் தப்பத் திருநெல்வேலியிலிருந்து ஓடி வந்தவர்கள் ஆகலாம் எனக் கூறப்படுகிறது.

1871 கணக்கெடுப்பு அறிக்கையில் மதுரை, திருநெல்வேலிக் கடற்கரை சார்ந்த மீனவர்களான பரவைரைப் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளவை வருமாறு :- "போர்த்துக்கீசியர் இந்தியாவிற்கு வந்போது இவர்கள் முகமதியர்களின் அடக்குமுறையில் சிக்கித் தவித்தவர்களாக இருக்கக் கண்டனர். போர்த்துக்கீசியர் இவர்கள் கிறித்தவர்களாக மதம் மாற உடன்பட்டால் இவர்களுக்கு உதவ முன் வருவதாகக் கூறினர். இத்தகைய அரசியல் நோக்கத்தின் அடிப்படையிலான மதமாற்றமே தென்கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்தவர்களுள் பலர் ரோமன் கிறித்தவர்களாக இருக்கக் காரணமானது". திரு.எஸ்.பி.ரைஸ் இந்த மீனவர்களைப் பற்றித் தந்துள்ள குறிப்பு * வருமாறு:- "தென்கோடியில் வாழும் இந்த மீனவர்கள் சமயப் பற்று மிக்க கத்தோலிக்கராவர். தங்கள் தந்தை மதம் மாறிய போது அவர்களுக்கு வைக்கப்பட்ட போர்த்துக்கீசிய பெர்னாண்டஸ் மற்றும் மரிய சாண்டியகோ என்ற பெயர் தாங்கியவர்கள் இடையில் கோவணமும் கழுத்தில் கன்னிமேரியின் படமும் மட்டும் தரித்தவர்களாக பழங்கால முறைப்படி மீன்பிடிக்கும் சாமானியர்கள் என்பது கேட்பவர்களுக்கு ஒப்புக் கொள்ள முடியாத வியப்பூட்டும் செய்தியாகக் கூட இருக்கலாம்."

---

* தென்னிந்திய மக்கள் வாழ்க்கை பற்றி அவ்வப்போது எழுதிய கட்டுரைகள். *1901 . (Occasional Essays on Native South Indian Life, 1901)*

பரவர் பற்றி பால்டெயல் பின்வருமாறு * எழுதுகின்றார் : – "கொல்லத்தினைச் சார்ந்து திருவாங்கூர் அரசின் நாட்டெல்லை அமைந்துள்ளது. அதன் கடற்கரை நெடுகிலும் பரவர் குடியிருக்கின்றனர். இவர்களுள் பெரும்பாலோர் கிறித்தவர்கள். கன்னியாகுமரி வரையிலும் அதற்கப்பால் தூத்துக்குடி வரை கூடக் கடற்கரை நெடுகிலும் சிறுசிறு தேவாலயங்கள் அடுத்தடுத்து இருக்கக் காணலாம். இவற்றுள் சில மரத்தில் கட்டப்பட்டவை. இவர்களை முதன்முதல் கிறித்தவர்களாக மதம் மாறச் செய்தவர் பிரான்சிஸ் சேவியராவார். அவரே இவர்களிடையே முதன்முதல் கிறித்தவ சமயக் கோட்பாடுகளை எடுத்துரைத்தவர். பத்துக் கட்டளைகளின் நெறியின் சீர்மையினைப் புரிந்து கொண்ட இவர்கள் பெரும் எண்ணிக்கையில் கிறித்தவ சமயத்தைச் சார்ந்து ஞானஸ்நானம் செய்து கொண்டனர். இத்தகைய மதமாற்றத்திற்கு ஒரு பரவனுக்கும் ஒரு முகமதியனுக்கும் இடையே எதிர்பாராது ஏற்பட்ட தகராறே பின்னணியில் ஊக்கம் தரும் காரணமாக இருந்தது எனலாம். ....முகமதியர்கள் பரவர்களை மிகக் கொடுமைக்கு உள்ளாக்கி வந்தனர். மலபாரைச் சேர்ந்த ஜான் டி குருஸ் என்ற இந்தியன் போர்ச்சுகல் சென்றபோது பரவர்களைக் கொச்சியிலிருந்து உதவிபெற்று மூர்களின் ஆதிக்கத்திலிருந்து விடும்படியும் ஞானஸ்நானம் பெறும்படியும் அறிவுறுத்தினான். அதன்படி அவர்களின் சாதித் தலைவர்களைக் (அவர்கள் மொழியில் படங்கடயர் எனப்படுவர்) கொச்சிக்குத் தூதனுப்பினர். அங்கு அவர்கள் அன்போடு வரவேற்கப்பட்டனர். தங்களுக்கு இதுபோன்ற அறிவுரையினை வழங்கியவனைச் சிறப்பிக்கும் வகையில் அவ்வாறு தூது சென்றவர்கள் குருஸ் எனப் பெயர் புனைந்தனர். பரவருள் குறிப்பிடத்தக்க தகுதிக்குரியவர்கள் இன்றும் அந்தப் பெயரைத் தரித்தவர்களாக உள்ளனர். சுருங்கச் சொன்னால் மூர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இவர்கள் தங்களுக்கு உரியதாக இருந்த முத்துக் குளித்தலின் உரிமையினைத் திரும்பப் பெற்றதோடு 20000 பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கிறித்தவர்களாகவும் மதம் மாறினர். "

---

* மலபார். கொரமாண்டல் கிழக்கிந்திய கடற்கரை சார்ந்த பகுதிகள் பற்றியான விளக்கக் குறிப்பு.
1703. (A description of the East India Coast of Malabar and Coramandel 1703.)

"திருநெல்வேலியில் ரோமன் கத்தோலிக்கரின் திருச்சபைகள், மீன்பிடிக்கும் பரதவர்களின் சாதித் தலைவர்கள் முகமதியர்களின் அடக்குமுறைக்கு எதிராகப் போர்த்துக்கீசியரின் உதவிபெறக் கொச்சிக்குச் சென்று அங்குக் கோவாவின் மேற்றிராணியாரின் விக்கர் ஜெனரலாக இருந்த மைக்கேல் வாஸ் அவர்களால் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட காலகட்டமான 1532 லேயே தொடங்கி விட்டது எனலாம். அதே திருச்சபையினைச் சேர்ந்தவர்கள் சில பாதிரியார்களோடு முகமதியர்களுக்குப் பாடங்கள் கற்பிக்கச் சென்ற கப்பல்படையுடன் சென்ற படையினர் தங்களுடைய அந்தப் பணியினை முடித்தவுடன் உடன்படிக்கையின்படி ஞானஸ்நானம் செய்வித்தனர். பரவர் அனைவரும் தங்களை உய்வித்த போர்த்துக்கீசியரின் சமயநெறியினைப் பின்பற்றினர். பலர் ஞானஸ்நானம் பெற்றனர். சிலர் பத்தாண்டுகளுக்குப் பின் அங்கு வந்து சேரும்வரை ஞானஸ்நானம் பெறாமலேயே இருந்துள்ளனர். தென்னிந்தியாவிற்கு வந்து சேர்ந்த சேவியர் தமிழ் பேசத் தெரியாதவராக இருந்தார். கிறித்தவ சமய திருமுறைக் கோட்பாடு, இயேசுநாதர் கற்றுக் கொடுத்த வழிபாடு, அன்னை மரியாள் வாழ்த்து, பத்துக் கட்டளைகள் ஆகியவற்றின் தமிழ் மொழி பெயர்ப்பினை மனப்பாடம் செய்வதில் சில மாதங்களை அவர் கழித்தார். அதன்பின் அவர் கடற்கரையில் உள்ள எல்லா ஊர்களுக்கும் தன் கையில் ஒரு மணியினை ஏந்தியவராகச் சென்று ஊராரை எல்லாம் சேர்த்து வைத்து அவர்களுக்குக் கிறித்தவ சமயக் கோட்பாடுகளைப் போதித்தார். இவ்வாறு கிறித்தவர்களாக ஆக்கப்பட்ட பரவர் அன்று குமரியைச் சேர்ந்த கிறித்தவர்கள் எனப்பட்டனர். முப்பது ஊர்களைச் சேர்ந்த கிறித்தவர்கள் எனப்பட்டனர். முப்பது ஊர்களைச் சேர்ந்த இவர்களின் எண்ணிக்கை இருபதாயிரம் என நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. கன்னியாகுமரியிலிருந்து இராமேஸ்வரம் தீவு வரை கடற்கரை நெடுக இடைவெளி விட்டு இவ்வூர்கள் அமைந்திருந்தன எனலாம். இந்த மதமாற்றத்தில் உள் நாட்டைச் சேர்ந்த எந்த ஊரும் பங்குபெறவில்லை எனத் தெரிகின்றது" என மேற்றிராணியர் கால்டுவெல் எழுதியுள்ளார். * "போர்த்துக்கீசியர் பரவர்களை மிகுந்த கருணைகாட்டி நடத்தி வந்ததாகத் தெரிகின்றது. தங்களோடு அவர்கள் மணஉறவு கொள்ள அனுமதித்ததோடு அவர்கள் தங்களுடைய குடும்பப் பெயரைச் சூட்டிக்கொள்ளவும் அனுமதித்தனர். தலிமஸ்,

* திருநெல்வேலியின் வரலாறு. *(History of Tirunelvelly)*

தகுருஸ், த அண்டாடொஸ். த கன்காஸ் முதலிய பெயர்களையுடையவர்களாகப் பரவர் பலர் விளங்கக் காணலாம். அவர்கள் பரவச் சாதித் தலைவனுக்கு மேதகை (*Dom*) என்ற பட்டப் பெயரை வழங்கினர். அவன் தன் உயர்தகைமையினைப் புலப்படுத்தும்படியாகச் சிலுவை ஒன்று கோக்கப்பட்ட தங்கச் சங்கிலியினை அணிந்துகொள்ள அனுமதிக்கப்பட்டான்.. (அண்மையில் பரம்பரைச் சாதித் தலைவனான அல்லது பரவர் தலைவன்மாராக இருந்தவர் பெயர் காபிரியல் தகுருஸ் லாசரஸ் மொதவஸ் என்பதாகும்) டச்சுக்காரர்கள் பரவர் வாழும் தூத்துக்குடியினையும் அதன் அருகேயுள்ள பட்டணங்களையும் கைப்பற்றியவுடன் முனைவர் பால்டெயஸையும் வேறு சில பாதிரியார்களையும், ரோமன் கத்தோலிக்க நெறியினை வளராது வன்முறையில் அடக்கிப் பரவர்களை அதற்குப் பதிலாகத் தங்கள் சமயநெறியினை மேற்கொள்ளத் தூண்டுவதற்காக அமர்த்தினர். இம்முயற்சியில் அவர்கள் பெருந்தோல்வியுற்றனர். இதனால் ஒரு சமயம் பெருங்கலகம் நிகழும்படியான சூழ்நிலை கூடத் தோன்றியது. ரோமானிய கத்தோலிக்க சபையின் செல்வாக்கை டச்சுக்காரர் ஏற்றுக் கொள்ளாது போயினும் தங்கள் முக்கிய நகரமான தூத்துக்குடியில் பொதுவானதொரு நெசவாலை அமைத்துப் பரவர்கள் பெருமளவில் தொழில் செய்து வாழ்க்கை நடத்த முதலீடு செய்ததை அவர்கள் இன்றும் நன்றியுடன் நினைக்கின்றனர்" எனத் திரு.கஸ்செசிட்டே கூறுகின்றார்.

மன்னார் வளைகுடாவின் இந்தியக் கடற்கரை சார்ந்து வாழ்கின்ற பரவர் வரலாறு பற்றியும் அவர்களுக்கு முத்துக் குளித்தலோடு உள்ள தொடர்பு பற்றியும் திரு.ஜெ.ஹார்னெல்* பல தகவல்களைத் தந்துள்ளார். அவருடைய அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்ட விவரங்கள் வருமாறு:- "கன்னியாகுமரியினைச் சுற்றியபடி வந்து சேர்ந்த போர்த்துக்கீசியர் முத்துக் குளிக்கும் தொழில் பரவர் கட்டுப்பாட்டில் இருப்பதைக் கண்டனர். நினைவுக்கு எட்டாத காலந்தொட்டு இது அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்து வருவதாக வழக்கு வரலாறு தெரிவிக்கின்றது. இவர்களுடைய தோற்றம் பற்றிய தெளிவான செய்திகள் ஏதும் நமக்குக்

---

* மன்னார் வளைகுடாவில் இந்தியர்கள் முத்துக் குளித்தல் தொடர்பான அறிக்கை 1905. (*Reort of the Indian Pearl Fisheries in the Gulf of Manner. 1905.*)

கிடைக்கவில்லை. கி.மு. முதல்1500 ஆண்டுகள் தொடர்ந்து மதுரை. திருநெல்வேலி மாவட்டங்கள் என இன்று வழங்கப்படும் பகுதி தமிழருக்குரிய பாண்டிய பேரரசாக இருந்து வந்திருக்கின்றது என்பது தெளிவு. பழைய தமிழ் நூலான கலவேடு என்ற நூலில் பாண்டிய மன்னனுக்கும் முத்துக் குளிக்கும் பரதவருக்கும் இடையேயான உறவு பற்றியதான குறிப்புக் காணப்படுகிறது. அது வருமாறு:-வேத நாராயணன் செட்டியும் முத்துக் குளிக்கும் பரவரும் மதுரையை ஆண்ட பாண்டியன் மகளான அல்லியரசாணிக்குக் கப்பம் செலுத்தி வந்தனர். அவள் கடலில் கப்பலில் பயணம் மேற்கொண்டிருந்தபோது தோன்றிய புயலில் அகப்பட்டு இலங்கையின் கரையில் சென்று ஒதுங்கினாள். அங்கு அவர்கள் கரைநேர்கை, குதிரைமலை ஆகிய இரண்டு இடங்களைக் கண்டனர். வேத நாராயணன் செட்டி தன் கப்பலில் இருந்த செல்வம் முழுவதையும் அங்கே கொண்டு சேர்க்கும்படி பரவரைப் பணித்ததோடு கடலிகிலபம், கல்லக்கிலபம் ஆகிய துறைகளில் முத்துக்குளிக்க ஏற்பாடுகள் செய்ததோடு இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதத்திற்கு உதவும் மரங்களையும் அங்கிருந்து கொண்டு வந்தான். கொற்கையில் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாகப் பரவர் விளங்கினர் என மதுரைக்காஞ்சி தெரிவிக்கின்றது. மீனினை உணவாகக் கொள்ளும் பரவர் வில்லை ஏந்திக் கூட்டமாகத் திரிந்தவர்களாகப் பகைவர்களைத் தங்களுடைய புறங்காட்டாத வீரச் செயல்களால் அச்சுறுத்தி வந்தனர். பரதவர் நாட்டின் முக்கியமான பட்டணம் கொற்கை என மதுரைக் காஞ்சி தெரிவிக்கின்றது. அந்தப் பட்டணத்தில் முத்துக் குளிப்பவர்களும் சங்கு * அறுப்பவர்களுமே பெரும் அளவில் வாழ்கின்றனர் என அது தெரிவிக்கின்றது. பாண்டியர் அரசு வலிமை வாய்ந்ததாக இருந்த காலத்தில் பரவர் அரசரிடமிருந்து பாதுகாப்பினையும் பொது வரி விதிப்பில் இருந்து விலக்கையும் பெற்று வந்தனர். பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பரவர் எத்தகைய வாழ்க்கை வாழ்ந்து வந்தனர் என்பதனை மலபார் கன்னட கடற்கரை சார்ந்த கப்பல் படையின் தலைவனான வான் ரீதெயும் மதுரையினைச் சார்ந்த துறைமுகங்களின் தலைமை வணிகனான வயுரென்ஸ் பையும்

---

* *Shell of the gastro od mulluse. turbinella rapa.*

* பரவர் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பது பொருந்தாது. தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்து குடியேறுவதற்கு முன்பு இப்பகுதியில் வந்து தங்கிய நாகர்களான மீனவர்களாதல் வேண்டும் " என ஹார்னெல் கூறுகின்றார்.

19.12.1669 தேதியிட்டு எழுதிய அறிக்கையில் படம்பிடித்துக் காட்டியது போலத் தரப்பட்டுள்ளது. இந்த அரசர்களின் பாதுகாப்பின் கீழ் மற்ற நாடுகளிலிருந்து இங்கு வந்து குடியேறிய பரவர் என்ற சாதியார் கடல்மேல் சென்று மீன்பிடித்தும் முத்துக் குளித்தும் வாழ்க்கை நடத்தி வந்தனர். இவர்கள் இப்பகுதியினை ஆண்ட சிற்றரசர்களிடமிருந்து கடற்கரையில் சில பகுதிகளை விலைக்கு வாங்கி ஊர்களை அமைத்துக் கொண்டு தங்கள் எண்ணிக்கைப் பெருகப் பெருக அதனைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டவர்களாக வாழ்ந்து வந்தனர். இங்கு அவர்கள் அவர்களுடைய சாதித் தலைவனுக்கே கட்டுப்பட்டவர்களாக இருந்தனர். அரசனுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையினைக் கப்பமாகக் கட்டி வந்தார்களே அன்றி நாட்டைச் சேர்ந்த மற்றவர்களுக்கு உரியதான கடுமையான வரியேதும் செலுத்தவில்லை. அரசரின் நேரடி ஆளுகைக்கு உட்படாதவர்களாகத் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதித் தலைவன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகின்றனர். இந்தச் சாதித் தலைவர்களின் சந்ததியினர் இன்றும் ராசா என்றே இவர்களால் அழைக்கப்படுகின்றனர். இந்தத் தலைவன் சாதியினைச் சேர்ந்த அனைவரிடமிருந்தும் வரி வசூலிக்கிறான். இப்பொழுது கொல்லம் முதல் வங்காளம் வரை கடற்கரைப் பகுதியில் வாழ்ந்து வரும் பரவர் அனைவரும் இவனுக்கு வரி செலுத்துகின்றனர். இவர்கள் பரவலாகச் சிதறி வாழ்ந்தாலும் முத்துக் குளித்தல் நடைபெறும் சமயத்தில் அனைவரும் ஒன்று திரள்கின்ற காரணத்தால் சாதியாருடைய ஒருமைப்பாடு தொடர்ந்து பேணப்படுகிறது. முத்துக் குளித்தலினால் வரும் வருமானத்தை நம்பியே இவர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவர்கள் குடியிருப்புக்கள் கடற்கரையினை ஒட்டி அமைந்திருப்பதால் இவர்களால் முத்துக்களை விற்பனை செய்ய இயலுவதில்லை. இதன் காரணமாக இவர்கள் முத்துக் குளித்தலின் முடிவில் நாடெங்கும் ஒரு நாளினைச் சந்தை நாளாக ஏற்பாடு செய்ய வேண்டும் என நாட்டு அரசரோடு உடன்பாடு செய்து கொண்டனர். அன்று இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வணிகர்கள் தங்கள் பாதுகாவலர்களுடன் வந்து கூடுவர். அதற்காகப் பரவர்களும் அவர்களிடம் கொள்முதல் செய்பவர்களுக்குமாகப் பெரும் எண்ணிக்கையில் கூடுபவர்களுக்காக எல்லா வகை மளிகைச் சரக்குகளும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு கூடுவோர் பரவர் மற்றும் பிற நாட்டு அரசர்களின் கீழ் வாழும் குடிமக்கள் என இருவேறு இனத்தவர்களும் புதியவர்களும் பபணிகளும்

அடங்கியவர்களாக இருக்க நேர்வதால் அவர்களிடையே சந்தையில் சச்சரவுகள் எவையும் மூளாது தடுக்க இரண்டு வகையான காவலர்களும் நீதி சபையாரும் ஏற்பாடு செய்யப்பட்டு ஒவ்வொரு பிரிவினரிடையேயும் ஏற்படும் சச்சரவுகளை அந்தப் பிரிவுக்குரிய நீதிமான்களே கேட்டு நீதி வழங்க வேண்டியதாகின்றது. இந்தச் சந்தையில் விற்பனையாகும் முத்துக்களின் விலையினை முத்துக்குளிப்பின் பரம்பரை உரிமையாளரான பரவர்களின் சாதித் தலைவர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். இவர்கள் தங்களுக்கெனத் தனியே படைக்கலங்களையும் போர் மறவர்களையும் பெற்றிருந்தனர். அவற்றின் உதவியால் அரசர்களும் அவர்கள் குடிகளும் தங்களுக்கு எதிராக இழைக்கும் வன்முறைகளிலிருந்தும் தங்களைக் காத்துக் கொண்டனர். இந்தியா முழுவதும் மூர்கள் (முகமதியர்கள்) பரவினர். மதுரைக் கடற்கரையில் இவர்கள் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் மிகுதியானதாக இருந்தது. இக்கடற்கரை சார்ந்த பகுதியில் முகமதியர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கை அரேபியர். சிரியப் பாலைவன நாடோடிகள், சாமோரின் தனிப்படையினர் ஆகியோரும் உடன் சேர்ந்ததால் மிகுவதாயிற்று. இவர்கள் அனைவருமே முத்துக் குளித்தலைத் தங்கள் தொழிலாகக் கொள்ளத் தலைப்பட்டனர். பரவர்மீது கொண்ட கசப்புணர்வு காரணமாகவும் மேலும் ஈட்டவேண்டும் என்ற பேராசையாலும் இவர்கள் அடிக்கடி பரவரின் உரிமையுடைய எல்லைகளில் புகுந்து செயல்படலாயினர். பரவர் சிலரைத் தங்கள் இஸ்லாமிய சமயத்திலும் தொழில் குழுவிலும் சேர்ப்பதில் இவர்களுள் சிலர் வெற்றியும் கண்டனர். இவ்வகையில் இவர்கள் இவ்வாறு முக்கியத்துவம் பெறத் தொடங்கவே அரசர்களும் இவர்களோடு வணிகம் செய்வதால் கிடைக்கும் மிகுந்த ஊதியத்தையும் இவர்கள் கடலாதிக்கத்தையும் கருத்தில் கொண்டவர்களாக மூர்களின் பக்கம் சார்புடையவர்களாக மாறத் தொடங்கினர். இச் செயல்களெல்லாம் பரவர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குவதாயிற்று. பரவர்களும் அடிக்கடித் தங்கள் எதிரிகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். இந்த எதிர்ப்புகளில் பரவர்களே தோல்வியினைத் தழுவும்படியாயிற்று. இறுதியில் இவர்கள் தூத்துக்குடியில் முத்துக் குளிக்கும்போது வேண்டுமென்றே ஒரு வம்பினை வளர்த்தவர்களாக மூர்களைத் தாக்கி அவர்களுள் சில ஆயிரம் பேர்களைக் கொன்றதோடு அவர்கள் கலங்களையும் நெருப்புக்கு இரையாக்கி அப்பகுதியில் தங்கள்

மேலாண்மையினை நிலைநாட்டினர். எனினும் மூர்கள் கள்ளிக் கோட்டையினைச் சேர்ந்த கடற்கொள்ளையரின் உதவியோடு மீண்டும் தங்களைத் தாக்கிப் பழிவாங்கக் கூடும் என்ற அச்சத்திற்கு ஆட்பட்டவர்களாகவே இவர்கள் இருந்து வந்தனர். இச்சமயத்தில்தான் போர்த்துக்கீசியர் ஒரு கப்பலில் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தனர். பரவர்கள் அவர்களைத் தங்களுக்கு உதவும்படி வேண்ட அவர்கள் பரவர்கள் கிறித்தவர்களாக மதம் மாற உடன்பட்டால் உதவுவதாகக் கூறவே பரவர்களும் பொதுவாக இதற்கு உடன்பட்டனர். இதன் பின் சில போர்த்துக்கீசியரோடு தூதுவர் சிலர் கோவாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்கள் அந்த நாட்டின் மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வரவேற்கப்பட்டனர். பின்னர் அவர்கள் சில பாதிரிகளையும் படைவீரர்களைக் கொண்ட கப்பல்களையும் அழைத்துக் கொண்டு திரும்பி வந்தபோது ஏழு கடற்கரைத் துறைமுகங்களையும் சேர்ந்த பரவர் அனைவரும் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டதோடு அவர்கள் அனைவரும் போர்த்துக்கீசிய மன்னரின் குடிமக்கள் எனவும் பிரகடனப்படுத்தப்பட்டனர். இதனால் அவர்கள் தனியுரிமைகளையும் வரிச் சலுகைகளையும் பெற்றவர்களாகத் தங்கள் சாதித் தலைவனுக்கு அடங்கியவர்கள் என்ற நிலை மாறிப் போர்த்துக்கீசிய பாதிரியார்களுக்கு அடங்கி வாழ வேண்டியவர்களாயினர். அந்தப் போர்த்துக்கீசியப் பாதிரிகள் பரவர்களுக்கு உரிய உரிமைகளும் சலுகைகளும் இவையிவை எனத் தெளிவாக வரையறை செய்து விட்டமையால் ராசாக்கள் பரவர் வழியில் தலையிடவோ அவர்களுடைய தனியுரிமைகளைக் கட்டுப்படுத்தவோ துணியவில்லை. அத்துடன் அவர்கள் பரவர்களுக்குத் தங்கள் குடிமக்களுக்கு உரியனவற்றிலும் வேறுபட்ட தனித்த உரிமைகளும் சலுகைகளும் உள்ளன என்பதனையும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. போர்த்துக்கீசியர் கடல் ஆதிக்கம், முத்துக்குளித்தல் பரவர் மீதும் அவர்கள் குடியிருப்புகள் மீதுமான அதிகாரம் ஆகியவற்றைத் தங்கள் பொறுப்பில் வைத்துக் கொண்டனர். கருநாடகத்தில் உள்ள அரசனுக்குக் கீழ்ப்பட்டனவாக மதுரையில் இருந்து அரசாளும் நாயக்க மன்னன் இச்சமயத்தில் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குத் தன்னைத் தலைவனாக அறிவித்துக் கொண்டு குறுகிய காலத்தில் கன்னியாகுமரி முதல் தஞ்சாவூர் வரையுள்ளதான பகுதிகளையும் தனக்கு உரிமையுடையதாக ஆக்கிக் கொண்டான். இப்பகுதிகளில் இருந்து அரசாண்ட குறுநில

மன்னர்களும் நிலக்கிழார்களும் விரட்டப்பட்டனர். இந்தப் பகுதி முழுவதனையும் இதுபோலத் தனக்கு அடிமைப்படுத்திய பின் அவன் பரவர்களையும் தன்கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வர முற்பட்டான். அவனுடைய இந்த முயற்சியினைப் போர்த்துக்கீசியர் எதிர்த்தனர். எனினும் அவனுடைய படையின் முன் எதிர்த்து நிற்கக்கூடிய முழு வலிமை தங்களுக்கு இல்லை என்பதை உணர்ந்த அவர்கள் பாதிரிகளோடும் பரவரோடும் அந்த நிலப்பகுதியினை விட்டு வெளியேறி மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்த தீவுகளில் சென்று தங்கியவர்களாகத் தங்கள் கடற்போர்க் கலங்களை மதுரைக் கடற்கரைக்கு அனுப்பி அப்பகுதியில் வாழ்பவர்களின் அமைதியினைக் குலைத்துவர அதனால் அரசின் வருவாய் குறைந்ததோடு வணிகர்களும் அப்பகுதியினை முற்றுமாகக் கைவிட்டு வேறு பகுதிகளுக்குச் சென்று விட்டனர். இதனால் நாயக்க மன்னன் போர்த்துக்கீசியரை மீண்டும் அப்பகுதிக்கு வரும்படி அழைக்க வேண்டியதாயிற்று. இந்தியாவின் ஆட்சியுரிமையினை மேற்கொண்டிருந்தவர்கள் முத்துக்குளித்தலால் கிடைக்கும் மிகுதியான நன்மைகளைக் கருத்தில் கொண்டவர்களாகப் போர்ச்சுகல் மன்னரின் பெயரால் அதனை மேற்பார்த்து நடத்திவர படைத் தலைவர்களை அமர்த்தியதோடு தேவாலயங்களையும் அவற்றின் நடைமுறை அலுவல்களின் பொறுப்புக்களையும் மட்டும் பாதிரியார்களிடம் விட்டிருந்தனர். படைத் தலைவர்கள் ஒவ்வொரு முத்துக் குளியலின் போதும் அரசருக்காக என 6000 ரிக்ஸ் டாலர்களைப் பெற்றுக்கொண்டு அதன்வழி கிடைக்கும் எஞ்சிய ஊதியம் முழுவதையும் பரவருக்கே உரியதாக விட்டுவைத்தனர். இதனால் செல்வ வளம் மிக்கவர்களாக ஆன அப்பகுதி மக்கள் ஆடம்பரத்திலும் குடிபோதையிலும் அழுந்தியவர்களாகத் தங்களைப் பாதுகாத்து வரும் பாதிரியார்களின் உதவியோடு படைத் தலைவர்களை அவ்வப்போது தாக்குதலுக்கு உள்ளாக்கிக் குழப்பங்களைத் தோற்றுவித்து வந்தனர். இதன் காரணமாகப் படைத் தலைவர்கள் எல்லாக் கிராமங்களுக்கும் தலைமையிடமாக விளங்கும் தூத்துக்குடியில் ஒரு கோட்டையினை அமைப்பது என முடிவு செய்தனர். அவ்வாறு கோட்டை அமைக்கப்படுமானால் தங்கள் மதிப்பும் வருவாயும் பெரிதும் குறையக்கூடும் என அஞ்சியவர்களாக அவ்வாறு படைத் தலைவர்கள் கோட்டையினை அமைப்பார்களாயின் தங்கள் அனைவருக்கும் அது அழிவுகாலமாக முடியும் எனக் கூறி மக்களை முறையற்ற நடத்தைகளில்

ஈடுபடுமாறு ஏவியதோடு கூடப் பரவர்களிடமும் அது தங்களை எல்லாம் அடிமைகளாக ஆக்க வகுக்கப்பட்ட திட்டத்தின் முதற்கட்டமான நடவடிக்கை ஆகும் எனக் கூறி அச்சுறுத்தினர். எனவே, அவர்கள் கோட்டை அமைக்கும் பணிக்கு அது நிறைவேற இயலாதபடி இடையூறுகளை விளைவித்துவர அப்பணி முடிக்கப்பட முடியாததாக ஆகிவிட்டது.

இதுபற்றித் திரு.ஹார்னெல் மேலும் கூறுவதாவது :- "பரவர்கள் தொடக்கத்திலிருந்து இப்பகுதியில் மீன்பிடிப்பதற்கான பரம்பரை உரிமை உடையவர்களாயினும் போர்த்துக்கீசியரின் வருகைக்குமுன் கடற்கரையில் வந்து தங்கியவர்களான முகமதியர்களின் போட்டியால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். முகமதியர்கள் பாரசீக வளைகுடாப் பகுதியிலேயே முத்துக் குளித்தல் தொடர்பாக நல்ல அனுபவம் கைவரப் பெற்றவர்களாக இருந்தனர். அவ்வாறு வந்து குடியமர்ந்த அரேபியரின் வழித்தோன்றல்களும் அவர்கள் சமயத்தை மேற்கொண்ட பிறரும் போர்த்துக்கீசியரால் மொரொக்கள் அல்லது மூர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்களே இன்று லப்பைகள் எனப்படுவோர். மார்க்கோபோலோவின் காலத்தில் (1290-91) புகழ்பெற்ற பெரிய நகரமாக விளங்கிய தாம்பிரபரணியாற்றின் கழிமுகத்தில் அமைந்த காயல்பட்டணமே இவர்களின் முக்கிய குடியிருப்பாக விளங்கியது. அது பரவர்களின் தூத்துக்குடியோடு கூடச் சுமார் 500 ஆண்டுகள் புகழ்பெற்ற முத்துக்குளித் துறையாக மூர்களுக்கு உரியதான தலைமையிடமாகத் திகழ்ந்து வந்துள்ளது..1662-இல் இது பற்றிக் குறிப்பிடும் மெனெசிஸ், பரவர்கள் மிக்க வறுமையில் மூழ்கியதால் முத்துக் குளித்தல் வழக்கற்றுபோனது எனக் குறிப்பிட்டுள்ளார். தூத்துக்குடி முத்துக்குளிக்கும் துறைகளின் மீதும் பரவர்களின் மீதுமான அதிகாரமும் 1658-ல் டச்சுக்காரர்களின் வசம் சென்று சேர்ந்தது.

முத்துக் குளித்தல் தொடர்பான அறிக்கையில் 1708 - ஆம் ஆண்டுக்கு உரியதாகப் பழைய வழக்கின்படி வரிக்கு உட்படுத்தப்படாது வழங்கப்பட்ட முத்துக்களின் எண்ணிக்கை தொடர்பாகக் காணப்படும் குறிப்புகள் வருமாறு :-

96 1/2 மதுரை நாய்க்கருக்கு – 4 கிறித்தவர்களது;
91 1/2 மூர்களுடையது.

10 காயல்பட்டன தலைமை மூருக்கு– 5 கிறித்தவர்களது
5 மூர்களது.

60 தெயுவர் (*Thenver*) களுக்கு – 60 மூர்களது

185 கடற்கரைப் பட்டங்கட்டியன்களுக்கு– அனைத்தும் கிறித்தவர் களுடைய முத்துக்கள்.

" பட்டங்கட்டியன்களுக்கு வழங்கப்பட்ட 185 முத்துக்களும் பரவர்களின் சாதித் தலைவர்களான இவர்களுக்கு முத்துக்குளி துறையினை மேற்பார்க்கவும் புதிய சிப்பிகள் உள்ள இடத்தைக் கண்டு கூறவும், முத்துக் குளிப்பவர்களைப் பணிக்கு அமர்த்துவதோடு அதனை மேற்பார்க்கவுமான இவர்களுடைய பணிக்காக இவர்களுக்கு வழங்கப்பட்டனவாகும். 1889–இல் சென்னை மாநில அரசு, சாதித் தலைவர்களின் உதவியினைப் பாராட்டும் வகையில் அவர்களுக்குரிய பரம்பரை உரிமையான இரண்டு படகுகளில் உள்ள சிப்பிகளை எடுத்துக் கொள்ளும் உரிமையினை நீட்டிப்பது என முடிவு செய்தது. 1891–இல் அரசு சாதித் தலைவன்களுக்கான இந்தத் தனி உரிமையினை ஆணை மூலம் உறுதி செய்ததோடு அவர்களுக்கு மேலும் திருப்தி அளிக்கும்படியாக அவர்களுக்கு உரிய ஊதிய விகிதம் முத்துக் குளிக்கப் பயன்படுத்தப்படும் அரசின் படகுகளின் விகிதத்திற்கு ஏற்ப உயரவும் வழிவகுத்தது. இதன்படி 30 படகுகளையோ அதற்குக் குறைவான படகுகளையோ பயன்படுத்தும்போது ஒரு படகில் உள்ள சிப்பிகளையும் 31 முதல் 60 படகுகளைப் பயன்படுத்தும்போது இரண்டு படகுகளில் உள்ள சிப்பிகளையும் 61 முதல் 90 படகுகளைப் பயன்படுத்தும்போது மூன்று படகுகளில் உள்ள சிப்பிகளையும் பெறுவர். மேலும் படகுகளின் எண்ணிக்கை அதிகமாகும்போது இதே விகிதத்தில் அவர்கள் உரிமைப் படகுகளின் எண்ணிக்கையும் அதிகமாகும். 1890–இல் ஜாதித் தலைவன்களுக்கு உரிய உரிமையாக வழங்கப்பட்ட இரண்டு உரிமைப் படகுகளில் இருந்ததான பொருள்களின் மதிப்பு ரூ.1424. 1900–இல் இத்தகைய இரண்டு படகுகளில் இருந்த பொருட்களின் மதிப்பு ரூ.172." சாதித் தலைவனை டச்சுக்காரர் ஏழு துறைமுகங்களில் இளவரசர் எனப் புதுப் பெயரிட்டு அழைத்தனர். 1901–ஆம் ஆண்டிற்கான முத்துக் குளித்தலுக்கான அறிக்கையில் "பரவர் தொடர்ந்து தொல்லைகள்

தருபவர்களாக உள்ளனர். கரையிலும் கொட்டகையிலும் இதுபோலத் தொல்லை தருகின்றனர். சிப்பிகளை இவர்கள் மறைத்து வைப்பது வழக்கமாக நிகழ்கின்றது. எனினும் எல்லாச் சமயங்களிலும் அவை தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு விடுகின்றன. அரேபியர்களில் ஒருவன் மட்டுமே இதுபோலச் சிப்பிகளை மறைத்து வைத்தான். அவனைக் கூட அவன் குழுவைச் சேர்ந்தவர்கள் அச்செயல் வழித் தங்களுக்குப் பழி ஏற்படுத்தியதாகத் தூற்றினர்" எனக் கூறப்பட்டுள்ளது.

திரு. கஸ்செ சிட்டெ குறித்துள்ளபடி பரவர்கள் பதின்மூன்று வகுப்பாராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவை வருமாறு :-

சாதித் தலைவர்
துணி விற்போர்
பவளம் குளிப்போர்
கலம் செலுத்துவோர்
முத்துச் சிப்பிகள் குளிப்போர்
சங்குகள் குளிப்போர்
துணிகள் கட்டுக் கட்டுவோர்
ஆமைகளைப் பிடிப்போர்
கடற்பன்றிகளைப் பிடிப்போர்
சுறா மற்றும் பிற மீன்களைப் பிடிப்போர்
பல்லக்குச் சுமப்போர்
தலைமைக் காரர்களின் குற்றேவலர்
நண்டுகள் பிடிப்போர்.

கானன் எ. மார்கோச்சிஸ் பரவர் சாதிப் பெண்கள் தங்கள் காதுமடல்களை மிக நீளமாக நெகிழ்ச்சி உறும்படி செய்து அதில் சவரன்களாலான பொன்னணிகளை மிகுதியாக அணியும் பழக்கம் உடையவர்கள் எனக் கூறியுள்ளார். சாதாரணமாக இந்த அணிகள் ரூ.200 மதிப்புடையனவாகும். மிகக் கனமானவையாக இவை அமையும்போது ரூ.1000க்கும் மேற்பட்ட மதிப்புடையனவாகவும் இருக்கலாம். காதுமடல்கள் எவ்வளவுக்கு எவ்வளவு நீளமாக உள்ளனவோ அவ்வளவுக்கு அவ்வளவு மிகுதியான அணிகளை அணியலாம் என்பதே இவ்வாறு காதுமடல்களை நீளும்படி செய்துகொள்ளக் காரணமாகும்.

அண்மையில் நடைபெற்ற செல்வக் குடியினரான பரவர் திருமணம் பற்றி நான் படித்த * விவரங்கள் வருமாறு :- " மணமகளும் மணமகனும் தேவாலயத்திற்குப் புறப்பட்டுச் சென்றபோது இன்னிசை பாடியவர்களாகவும் கொடிகள் ஏந்தியவர்களாகவும் பலர் அவர்களுடன் சென்றனர். திருக்கோயில் குழுவினரின் வழிபாட்டு இசையுடன் அவர்கள் சாதியினைச் சேர்ந்த பாதிரியார் ஒருவராலேயே பலிப்பூசை நடத்தி வைக்கப்பட்டது. அதன்பின் மணமக்கள் சாதித் தலைவன்மார் இல்லங்களுக்குச் சாதித் தலைவர்களாலேயே ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தோற்றப் பொலிவுடைய மரபின் வழிப்பட்ட உடைகளை அணிந்திருந்த சாதித் தலைவர்கள் பளபளப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த பல்லக்குகளில் பவனி வந்தனர். கொடிகள், தோரணங்கள், யானைகள், பதவிச் சின்னங்கள் ஆகியன ஊர்வத்தில் முன்னே சென்றன. வைர அணிகளால் பேரொளியுடையவளாகத் திகழ்ந்த மணமகள் பொன் சரிகைப் பூ வேலைப்பாடுகள் நிறைந்த பனாரஸ் பட்டுப் புடவையும் பொற்சரிகை இழைகளோடு கூடிய பட்டு இரவிக்கையும் புனைந்தவளாகக் காட்சி தந்தாள்.

திருவாங்கூரைச் சேர்ந்த பரவர் பற்றிய ஒரு குறிப்பில் திரு.என்.சுப்ரமணிய அய்யர் எழுதியுள்ளதாவது :- " இந்த மாநிலத்தின் எல்லா வட்டங்களிலும் இவர்கள் காணப்படுகின்றனர். சிலபோது குருப்பு என்ற பட்டப்பெயரையும் இவர்கள் தரித்துக்கொள்கின்றனர். செங்கண்ணூர், திருவெல்லா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பரவர் சக்க எனத் தங்களை அழைத்துக் கொள்கின்றனர். இச் சொல் சிலாக்கியும் என்பதிலிருந்து வந்ததாக பரவர்கள் கருதுகின்றனர் என்றாலும் கைகளில் தூக்கிச் செல்லும் கூடைகளின் பெயரான சக்கு என்பதிலிருந்து வந்ததெனக் கொள்வதே பொருத்தமானது. பரவர் பல உட்பிரிவனராகப் பிரிவு பட்டுள்ளனர். தெற்கே உள்ள தமிழ் பேசும் பரவர் மக்கள் தாயமுறையினையும் மலையாளம் பேசுவோர் மருமக்கள் தாய முறையினையும் மேற்கொள்கின்றனர்.

"இவ்விரு பிரிவினரும் உடையாலும் அணியாலும் மாறுபட்டவர்களாகவே உள்ளனர். முன்னவர் கிழக்குக் கடற்கரையார் முறையினையும் பின்னவர் மேற்குக் கடற்கரையார் முறையினையும்

* சென்னை மெயில் நாளிதழ். 1907. *(Madras Mail. 1907.)*

பின்பற்றுகின்றனர். திருவாங்கூர் பரவர் தமிழ்பேசும் கிழக்குக் கடற்கரை சேர்ந்த பரவரினும் வேறானவரல்லர். இவர்களுள் பலர் கிறித்தவர்களாக மதம் மாறியுள்ளனர், எனினும் பெரும்பாலோர் புனிதர் சேவியர் கடற்கரை சார்ந்த ஊர்களில் கிறித்தவத்தைப் பரப்பத் தொடங்குவதற்கு முன்பே உள்நாட்டில் குடியேறியவர்களாகவே உள்ளனர். சக்க பிரிவினர் மத்திய திருவாங்கூருக்கு வந்து சேர்ந்தது தொடர்பாக ஒரு விசித்திரமான கதை வழங்குகின்றது. முன்பு சூத்திரர்களாக இருந்த இவர்கள் சில சமூகக் குற்றங்களைச் செய்த காரணத்தால் எடப்பள்ளித் தலைவரால் சாதியிலிருந்து விலக்கப்பட்டவராவர். திருவெல்லா வட்டத்தில் உள்ள திருவரன் மூலையில் உள்ள கண்ணன் கோயில் கிருட்டிணனிடம் இவர்கள் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். இப் பரதவர் தாங்கள் ஒரு உயர்சாதிப் பெண்ணுக்கும் ஈழவனுக்கும் பிறந்தவன் சந்ததியினர் எனக் கூறிக் கொள்கின்றனர். வேற்றவன் எனப் பொருள்படும் பர என்ற வடமொழி வேர்ச் சொல்லிலிருந்து வந்ததே பரவர் என்ற சொல் எனக் கூறுவர். பரவர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் மத்திய திருவாங்கூரில் இவர்கள் மரம் ஏறுதல், மீன் பிடித்தல்.. கிறித்தவர்களுக்கும், முகமதியர்களுக்கும் துணி தஜவத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டவர்களாக உள்ளனர். தென் திருவாங்கூரில் இவர்கள் பிரம்பால் கூடை பின்னுதல், பிரம்பு நாற்காலிகள் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டவர்களாக உள்ளனர். மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் பரவர் சாதிப் பெண்கள் கிளிஞ்சல் சுண்ணாம்புக் காளவாய் போட்டு வருகின்றனர். இவர்கள் சாதிப் பூசாரி பரகுருப்பு எனப்படுவான். இவன் ஒருவனே நான்கு பணிகளை மேற்கொள்வதால் நாலோனுக்காரன் எனப்படுவான். திருமணச் சடங்குகள் முதலிய சடங்குகளின்போது தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தல், சாதியாருக்கு அம்பட்டனாகப் பணிபுரிதல், சாவுச் செய்திகளை இறந்தவரின் உறவினர்களுக்குச் சென்று கூறுதல், சாவுச் சடங்குகளில் பூசாரியாகப் பணியாற்றுதல் ஆகியனவே இவனுக்குரியனவான நான்கு பணிகள். பரவர் தாலிகட்டு, சம்பந்தம் ஆகிய இரு சடங்குகளையும் நடத்துகின்றனர்."

பரேல் மத்தியாளர் – Parēl Maddiyala

பில்லவர் சாதிக்குரிய அம்பட்டர்கள்.

பாரெங்க – Pārenga

கடபர்களின் ஓர் உட்பிரிவு.

பறய – Pariah

பார்க்க : பறையன் *(See : Paraiyan)*

பரிகிமுக்குலு – Parikimuggulu

தெலுங்கு நாட்டில் பச்சை குத்துவதைத் தொழிலாகக் கொண்ட பெண்கள். இப்பெயர் அவர்கள் பச்சை குத்தும்போது மேற்கொள்ளும் உருவ அமைப்புகளின் (பரிசு அல்லது முக்கு) அடிப்படையில் இவர்களுக்கு அமைந்துள்ளது. இந்த உருவ அமைப்புக்களை இவர்கள் பச்சை குத்தவும் விழாக்கள், சடங்குகள் ஆகியவற்றின்போது தரையில் வரையவும் தங்களுடன் கொண்டு செல்வர்.

பரிவார – Parivara

பண்டரின் ஓர் உட்பிரிவு.

பரிவாரம் – Parivāram

1891 கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :– " இந்தச் சாதியினைப் பற்றித் தெளிவுப்படுத்துவது கடினம். பரிவாரம் என்ற சொல் படைவீரர்களையும், மன்னர்களோடு ஆயத்தாராக உடன்வருவோரையும் குறிப்பதாகப் பொருள்படும். இச்சாதியினைச் சேர்ந்தவர்கள் முன்பு படைவீரர்களாக இருந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. பரிவாரம், மறவர் மற்றும் அகமுடையார் சாதியின் உட்பிரிவாகவும் உள்ளது. மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படும் பரிவாரம் மறவர் சாதியின் ஓர் உட்பிரிவாகவோ அதிலிருந்து கிளைத்த ஒரு சாதியாகவோ இருத்தல் வேண்டும். பரிவாரர் எண்ணிக்கையில் மிகுதியான உள்ள மற்றொரு மாவட்டம் கோயமுத்தூராகும். அங்கு இவர்கள் மீனவர் சாதியான தொரெயரின் உட்பிரிவினராக உள்ளதாகத் தெரிகிறது. மைசூர் விவரக் குறிப்பில் திரு.ரைஸ் பரிவாரர் பெஸ்தருக்குரிய மற்றுமொரு பெயராகும் எனக் கூறியுள்ளார். 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றி மேலும் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு. " பரிவாரம் என்ற சொல் உடன்கூட்டம் எனப் பொருள்படும். தொடக்கத்தில் இது தொழில்

தொடர்பான பெயராக இருந்திருத்தல் கூடும். இன்று இச்சொல் வீட்டு வேலைக்காரர்களையும் கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த தொட்டிய சமீன்தாரர்களின் வேலைக்காரர்கள் பெயராகவும் வழங்குகின்றது. பல சாதிகளிலிருந்து முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள் பின்பு தனித்த ஒரு சாதியாராக ஆகிவிட்டனர். தென் கன்னடத்தைச் சேர்ந்த கோத்த ஏரிகளும் இதே போன்ற தொழில் தொடர்பான பிரிவினராக இருந்து தனிச் சாதியாராக உருவானவர்களே. ஒரியர்களிடையே ஒரு சாதியாராக உள்ள பைய்க்களும் தெலுங்கு சமீன்தார்களின் பணியாளர்களான காசர்களும் இதுபோல உருவான தனிச் சாதியாராதல் கூடும். இச் சாதியினைச் சேர்ந்த ஆண் பெண்கள் அனைவரும் அவர்கள் யாரிடம் பணிபுரிகின்றார்களோ அவர்கள் இடும் பணிகளைச் செய்யக் கடமைப்பட்டவர்கள். பறையருக்கும் மேம்பட்ட சாதியினைச் சேர்ந்த ஆண்கள் இச் சாதியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்தச் சாதியினைச் சேர்ந்த ஆண்கள் தாங்கள் பணிபுரியும் சமீன்தாரின் அனுமதிபெற்று விருப்பம்போல் வேறு எந்தச் சாதியினைச் சேர்ந்தவளை வேண்டுமாயினும் மணம்புரிந்து கொள்ளலாம். இவர்கள் தங்கள் சடங்குகளை நடத்தி வைக்கப் பிராமணர்களை அமர்த்திக் கொள்ளும் வழக்கமில்லை. அதற்குப் பதிலாகத் தொட்டியன் சாதித் தலைவனே இவர்கள் சடங்குகளை முன்னின்று நடத்துகின்றார். மணியகாரன், சேர்வைக்காரன் என்பன இவர்களுக்குரிய பட்டப்பெயர்கள். சேர்வைக்காரன் என்பதனை அகமுடையாரும் தங்கள் பட்டப் பெயராகச் சூடிக் கொள்கின்றனர். "

சேர்வைக்காரன் அல்லது செர்வைக்காரன் என்ற பட்டம் சேர்வை (சேவை) செய்யும் சாதியினைச் சேர்ந்தவன் என்பதனைக் குறிப்பதாகும். ஊழியக்காரன் என்ற பட்டம் ஊழியம் புரிபவனை அல்லது கீழான பணிகளைச் செய்பவனைக் குறிப்பதாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த அம்பலக்காரர், அகமுடையார், கள்ளர், மறவர் ஆகியோருக்கும் சேர்வைக்காரன் என்ற பட்டம் உரியது. மதுரை, கோயமுத்தூர் தமிழ் மாவட்டங்களில் வந்து குடியேறியவர்களான கன்னடம் பேசும் தொரெயரும் இப்பட்டத்தைத் தரித்துக் கொள்கின்றனர். கன்னடம் பேசும் கோடேகரருக்கு உரிய மற்றுமொரு பெயராகவும் இது உள்ளது.

மறவர், கள்ளர், அகமுடையார் ஆகிய சாதியார் மேற்கொள்ளும் முறைவழிப் படாத உறவின் வழிப் பிறக்கும் குழந்தைகள் கலப்புச் சாதியான பரிவாரம் சாதியினைச் சேர்ந்தவனாகக் கருதப்படுவதாகக் கூறப்படுகிறது.

மதுரை மாவட்டக் கையேட்டில் பரிவாரம் சாதியினைப் பற்றிப் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:– "இச் சாதி இரு அகமணக் கட்டுப்பாடு உடைய பிரிவுகளாகப் பிரிவுபட்டுள்ளது. சின்ன ஊழியம் என்ற பிரிவினர் பல்லக்குச் சுமப்போர். இவர்கள் தேவன் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்கின்றனர். பெரிய ஊழியம் பிரிவினர் மணியக்காரர் என அழைக்கப்படுகின்றனர். கோம்பையில் உள்ள காப்பிலியன் சாதிச் சமீன்தாரின் ஊழியர்களான கோம்பைப் பரிவாரத்தினரும் பெரியகுளம் வட்டத்தைச் சேர்ந்த தேவாரம் பிரிவினரும் தனிச் சாதியாராவர். இவர்கள் மற்ற பரிவாரம் பிரிவினரோடு மணஉறவு கொள்வதில்லை. ஒரு சிறுமி பூப்படைந்தால் அவளைப் பதினாறு நாள்கள் தனிக் குடிசையில் இருத்துவர். அவள் உறவினர்கள் அக்குடிசைக்கு இரவில் காவலாக இருப்பர். பின்னர் இக்குடிசை எரிக்கப்படும். அவள் பயன்படுத்திய மண்பாண்டங்களும் சிறுசிறு துண்டுகளாக உடைக்கப்படும். அந்தத் துண்டுகளில் மழைத் தண்ணீர் தேங்கி நிற்குமானால் அதனைப் பயன்படுத்திய சிறுமி மலடியாவாள் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. இவர்களுடைய திருமணச் சடங்குகளுள் சில விசித்திரமானவை. திருமணத்தின் முதல் நாளன்று ஒருவன் அளவில் சிறிய வெறும் சட்டி ஒன்று மேலே வைத்து மூடப்பட்ட தண்ணீர் உள்ள பெரிய பானையினைத் தலையில் சுமந்தவனாக மணமகள் வீட்டு வாசலின்முன் உள்ள வெற்றிடத்தில் மூன்று சுற்றுச் சுற்றி வருவான். அவனோடு மணமக்களும் நவதானியத்தை மஞ்சள் துணியில் முடிந்து கட்டப்பட்டுள்ள மூங்கிலைச் சுமந்தவர்களாக நடப்பர். மூன்றாம் சுற்று சுற்றி முடித்தவுடன் அந்த வெற்றிடத்தின் வடகிழக்கு மூலையில் நடுவர். இவர்கள் நட்டதை ஒத்த வேறு மூன்று மூங்கில்களை நிறுத்தி மணப் பந்தல் அமைப்பர். அதன்பின் மணமக்கள் மணிக்கட்டுக்களைச் சேர்த்துக் கட்டிய பின் மணமகனின் உடன்பிறந்தவன் அவர்களைச் சிறிது தூரம் தூக்கிச் செல்வான். அவர்கள் தங்கள் கரங்களை உப்புள்ள ஒரு பெட்டியில் நுழைப்பர். பின் மணமகன் கல்லாலான அப்பளக் குழவி ஒன்றினை எடுத்து ஒரு சிறு

துணியில் சுற்றி, 'அடியே குழந்தையினைப் பிடி! நான் அரண்மனைக்குப் போகிறேன்' எனக் கூறுவான். 'குழந்தையைக் கொடுங்க! பால் தயாராயிச்சு' எனக் கூறி நடத்தி வைத்தாலும் மணமகன் உடன் பிறந்தவளே மணப்பெண்ணின் கழுத்தில் தாலியினைக் கட்டுகின்றாள். ஆணும் பெண்ணும் விருப்பம்போல் மணமுறிவு பெற்றுக் கொள்ளலாம். சாதியாரோடும் சமீன்தாரோடும் மணமான ஒருத்தி மேற்கொள்ளும் புறத்தொழுக்கம் குற்றமாகக் கருதப்படுவதில்லை. சமீன்தாரோடு கொண்ட உறவின் வழித் தங்கள் மனைவியர் பெறும் குழந்தைகளைக் கணவன்மார் தங்கள் குழந்தைகளாகவே பாவிக்கின்றனர். இத்தகைய குழந்தைகள் சின்னக் கம்பளத்தார் என அழைக்கப்படுவதோடு அவர்கள் தொட்டியன் சாதிக்குள் மணஉறவு கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். வேறு சாதியைச் சேர்ந்த ஆடவர்களோடு கள்ளத் தொடர்பு மேற்கொள்பவர்கள் நடத்தை கண்டிக்கப்படுவதோடு அவர்களைச் சாதி விலக்கத்திற்கு உள்ளாகும்படியாக தண்டிக்கவும் செய்கின்றனர். அவ்வாறு புற ஒழுக்கத்தில் ஈடுபடும் பெண்ணின் உருவத்தை மண்ணால் செய்து அதன் கண்களில் இரண்டு முட்களைக் குத்தி அதனை ஊருக்கு வெளியே கொண்டு போய் வீசி எறிவர்."

பரியாரி - **Parayāri (doctor)**

அறுவை மருத்துவத்தை மேற்கொண்டவர்களான தமிழ்நாட்டு அம்பட்டர்களுக்கான பெயர்.

பரியாட - **Pariyāta**

பம்பாயினைச் சேர்ந்த வண்ணான் சாதிக்குரிய ஐவர் தென் கன்னட மாவட்டத்தில் தங்களை 1901 கணக்கெடுப்பின்போது பரியிட அல்லது பரியட் எனப் பதிந்து கொண்டுள்ளனர்.

பர்வத - **Parvatha**

பர்வத, பர்வதால என்பன குன்று அல்லது மலை எனப் பொருள்படும். கமல்லர், காபு, மாலர், மேதரர் ஆகிய சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய குலமாக இது பதியப்பட்டுள்ளது.

பாசி - **Pāsi**

வங்காளத்தைச் சேர்ந்த கள் இறக்கும் சாதியாரான சிலர் 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் தங்களைப் பாசி எனப் பதிந்து

கொண்டுள்ளனர். கயிறு எனப் பொருள்படும் பாச என்ற சொல்லிலிருந்து இப்பெயர் அமைந்ததாகக் கூறுவர். பனை, தென்னை மரங்களில் ஏற இவர்கள் பயன்படுத்தும் கயிற்றை இப்பெயர் குறிப்பதாகலாம்.* பாசி என்பது வண்ணக் கண்ணாடிப் பாசிகளையும் குறிக்கும். இது இடையரின் ஓர் உட்பிரிவு ஆகும். பாசிகட்டி என்ற வலையரின் உட்பிரிவோடும் ஒத்தது இது.

பசு - **Pasu**

போயர், மாலர், மாதிகர் சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலமாகவும் மேற்கு கடற்கரையினைச் சேர்ந்த புலையன்களின் ஓர் உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது. இப்புலையன்கள் மாட்டிறைச்சி உண்பவர்கள்.

பசுபுல - **Pasupula (turmeric)**

பசுல அல்லது பசுபுல என்பது போயர், தேவாங்கர் ஆகியவர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய குலம். பசுபுலலேதி என்பது பலிசரின் ஓர் உட்பிரிவாக உள்ளது. (பார்க்க: அர்ச்சினர்)

படபொங்க - **Patabonka**

பொங்கரின் ஓர் உட்பிரிவு.

பாடாலி - **Pātāli**

பூதஸ்தானங்களின் பூசாரிகளுக்கான தொழில் தொடர்பான பெயர். தென் கன்னடத்தைச் சேர்ந்த ஸ்தானிகர்களுக்கும் இப்பெயர் உரியது.

பாத - **Pātha**

ஈதிகர்களின் உட்பிரிவு. தொகடர்களின் ஓர் குலம்.

பதசிட்டன்னாய - **Pathachitannāya (green pea set)**

பண்டர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

---

* ரிஸ்லெ – வங்காளக் குடிகளும் குலங்களும் *(Risley - Tribes and Castes of Bengal.)*

பத்தி - Pathi (cotton)

குருபர்களின் ஓர் உட்பிரிவு. இவர்கள் திருமணச் சடங்கின்போது பருத்தி நூலாலும் கம்பளி நூலாலும் ஆன கயிற்றைக் கங்கணமாக அணிகின்றனர். இது கூட்டவர். பத்ம சாலேத்தார் ஆகியோருக்கும் உரிய புறமணக்கட்டுப்பாடு உண்டு. குலங்களும் உள்ளது.

பதினெட்டான் - Pathinettan

பதினெட்டான் என்பது மலபாரில் உள்ள தச்சர் சாதி. மற்றவர்கள் இலங்கைக்கு ஓடியபோது அவ்வாறு ஓடாமல் பதினெட்டுக் கோயில்களையும் தேவை ஏற்படும்பொழுது பார்க்க மலபாரிலேயே தங்கிவிட்டவர்களின் வழித் தோன்றல்கள். இவர்கள் தோற்றம் பற்றிய வரலாறு தீயர் வழக்கு வரலாற்றோடு தொடர்புடையது" என மலபார் மாநிலக் கையேடு கூறுகின்றது.

பத்தர் - Pathar

சைவநெறி சார்ந்த லிங்கம் அணிகின்ற செட்டிகளின் ஒரு பிரிவினர். இவர்கள் அச்சரப்பாக்கம் செட்டிகளிலிருந்தும் பிரிந்தவர்கள். இவர்கள் இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில் புதைப்பர். பிணத்தின் குடுமியோடு ஒரு மூங்கில் குச்சியினையும் சேர்த்துக் கட்டுவர். அதன் உதவியால் தலையினைப் புதைக்குழிக்கு மேல் நோக்கி இழுப்பர். மற்ற சாதியார்கள் பொற்கொல்லர்களைப் பத்தர் என அழைப்பர்.

பட்நாயக் - Patnaik

கர்ணம்களுக்கான பட்டப்பெயர்.

பட்டுநூல்காரன் - Patnūlkaran

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பட்டுநூல்காரர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- "தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் காணப்படும் வெளியே இருந்து வந்து குடியேறிய நெசவாளர் சாதியாகும் இது. மதுரை நகர்த்தில் பெரும் எண்ணிக்கையில் உள்ள இவர்கள் குசராத்தியின் கிளைமொழியான கட்ரி மொழியினைப் பேசுகின்றனர். இவர்கள் எல்லாக் காலத்திலும் பட்டுநூல்காரர் என்றே வழங்கப்பட்டு வந்துள்ளனர். குசராத்திற்குத் தெற்கே உள்ளதான மண்டசோரைச் சேர்ந்த குமாரகுப்தன் (கி.பி. 473) கல்வெட்டுகளில்

இவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. அதில் இவர்கள் வடமொழியில் பட்டுநூல்காரர் என்பதற்குச் சமமான பட்டவாய என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளனர். மதுரையை ஆண்ட மங்கம்மாளின் கீழே வரும் சாசனங்களில் இவர்கள் இதே பெயரால் குறிக்கப்பட்டுள்ளனர். எனினும் அண்மைக் காலத்தில் இவர்கள் தங்களைத் தங்கள் தாயகமான சௌராஷ்டிரத்தின் பெயரால் சௌராஷ்டிரர் என அழைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். தங்களைப் பிராமணர்கள் எனக் கூறிக் கொள்ளும் இவர்கள் சௌராஷ்டிரப் பிராமணர்கள் எனக் கணக்கெடுப்பில் அடிக்கடித் தங்களைப் பதிந்து கொண்டுள்ளனர். கடினமாக உழைக்கும் அறிவு நலம் சான்ற இச்சாதியார் தங்கள் சமூகத்தவர்களின் முன்னேற்றத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் எடுத்துவரும் முயற்சி பாராட்டுவதற்கு உரியதெனினும் இவர்கள் தங்களைப் பிராமணர்களாக உயர்த்திக் கொள்ள மேற்கொண்டுள்ள முயற்சி நடைமுறையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. தெற்கத்திய பிராமணர்கள் எவரும் மேற்கொள்ளாததான நெய்யும் தொழிலைத் தாங்கள் மேற்கொண்டிருப்பதாலேயே தங்களின் இந்த உரிமை மறுக்கப்படுவதாக இவர்கள் கூறுகின்றனர். தங்கள் சமயச் சடங்கு வடநாட்டுச் சடங்கு நெறியிலானவை. ஆகையால் தென்னாட்டுப பிராமணர்கள் அதனைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாக உள்ளனர் என்பர். மண்டசோர் கல்வெட்டுக்கள் இவர்களைப் படைவீரர்களாகவும் நெசவாளர்களாகவும் குறிப்பிடுகின்றனவேயன்றிப் பிராமணர்கள் எனச் சுட்டுவதாகத் தெரியவில்லை. கௌட பிராமணர்கள் வழக்கங்கள் தென்னாட்டு பிராமணர் வழக்கங்களிலும் வேறுபட்டனவாயினும் அவர்கள் தங்களைப் பிராமணர்கள் என அழைத்துக் கொள்வதற்குத் தென்னாட்டுப் பிராமணர்கள் மறுப்பேதும் கூறுவதில்லை. மதுரையில் இவர்களைப் பிராமணர்கள் என்பதற்கு எப்பொழுதும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது. கி.பி. 1705 – இல் மதுரையினைச் சேர்ந்த பிராமணர்கள் பட்டுநூல்காரரும் தங்களைப் போலவே ஆண்டுக்கு ஒரு முறை உபாகர்மா (பூணூல் மாற்றுதல்) சடங்கினைச். செய்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உள்ளனர். (இச்சாதியினைச் சேர்ந்த பதினெட்டுப் பேரை இச்சடங்கினைச் செய்து கொண்டமைக்காக மதுரை ஆளுநர் கைது செய்துள்ளார்.) இதனை அரசியான மங்கம்மாளின் கவனத்திற்கு இவர்கள் கொண்டு செல்ல அவள் தன் நாட்டைச் சேர்ந்த கற்றறிந்த பண்டிதர்களைக் கூட்டி இதனைப் பற்றி

ஆராயும்படி ஆணையிட்டாள். அவர்கள் அறிவுரைப்படி அவள் பட்டு நூல்காரர் பூணூல் அணியலாம் எனப் பனையோலைச் சாசனம் ஒன்றை வெளியிட்டாள். இரு பிறப்பாளரான அனைவரும் பிராமணர், சத்திரியர், வைசியர் – பூணூல் அணிந்துகொள்ளும் உரிமை பெற்றவர்களாகையால் இச் சாசனத்தின் வழிப் பட்டுநூல்காரர் பெரிய அளவு உரிமை பெற்றவர்கள் எனக் கூறமுடியாது. பட்டுநூல்காரர் தங்கள் கோத்திரங்கள் சில பிராமணர்கள் கோத்திரங்களை ஒத்தன எனக் கூறுகின்றனர். சத்திரியர்களுடைய கோத்திரங்கள் பலவும் கூடப் பிராமணர்களுடைய கோத்திரங்களை ஒத்தனவாக இருப்பதனையும் இங்குக் கருதுதல் வேண்டும்."

மேற்கு மாளவத்தில் உள்ள மண்டசோர் கல்வெட்டுக்கள் தொடர்பாக மதுரை மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளதாவது:– "குசராத்தின் கடற்கரையில் உள்ள லாடபுரியிலிருந்து மண்டசோருக்குக் குமாரகுப்தன் (அல்லது அவன் படைத் தலைவர்களுள் ஒருவன்) நெசவுத் தொழிலை மேற்கொள்வதற்காக இவர்களை அழைத்து வந்தான். இந்தக் கல்வெட்டில் இச் சாதியார் பலவாறாகப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளனர். அதில் அந்த நகரத்தை ஒரு பெண்ணாக உருவகித்து அதில் வாழும் பட்டு நூல்காரரை அந்தப் பெண் தன் காதலனைச் சந்திக்கச் செல்லும்போது அணிந்துகொள்ளும் பட்டாடையாக உருவகிக்கப்பட்டுள்ளனர். (இந்தக் கல்வெட்டு மேலும் பதிந்துள்ள செய்திகளாவன:– தசபுர என்ற இந்த நகரத்தை ஆண்ட பெருமகனான பந்துவர்மன் இதனைப் பெரும்புகழுக்கு உரியதாக ஆக்கினான். தங்கள் தொழில் திறனால் இச்சாதியினைச் சேர்ந்த கூட்டத்தார் தாங்கள் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு சூரியன் ஒளியிலும் மிக்கதான ஒளியோடு விளங்கும் கோயில் ஒன்றினைக் கட்டுவித்தனர். முசல் மான்கள் மண்டசோரை படையெடுத்துப் பாழ்நகரமாக்கிய பின் இவர்கள் தெற்கேயுள்ள தேவகிரியினை (இன்றைய தௌலதாபாத்) நோக்கி வந்தனர். அந் நகரம் அப்போது யாதவர்களின் தலைநகரமாக விளங்கியது. மீண்டும் முசல்மான்கள் இப்பகுதிக்கு விசயநகரை நோக்கிப் படையெடுத்து வந்தபோது இவர்கள் இறுதியாக மதுரைக்கு வந்து சேர்ந்தனர். இது தொடர்பான சடங்கு ஒன்று தென்னிந்தியாவைச் சேர்ந்த பட்டுநுல்காரர் திருமணங்களின்போது நிகழ்த்தப்படுகின்றது. மணநாளுக்கு முன் மணமகன் வீட்டைச் சேர்ந்தோர் மணமகள் இல்லம் சென்று பெண்

கேட்பர். அவள் உறவினர்கள் அவர்களை நீங்கள் யாரென்ற பொருள்பட சூத்திரம்போல் அமைந்த ஒரு கேள்வியினைக் கேட்பர். அதற்கு அவர்கள் தாங்கள் சோர (சௌராஷ்டிரத்திற்கு அல்லது கத்தியவாருக்கான பழைய பெயர்) திலிருந்து தேவகிரியில் வந்து தங்கி பின் முசல்மான்களின் கொடுமை காரணமாகத் தெற்கே விசயநகரத்திற்கு வந்து அங்கிருந்து மதுரைக்கு வந்து சேர்ந்தவர்கள் எனக் கூறுவர். அதன்பின் அவர்கள் மணமகள் வீட்டாரை அதே கேள்வியினைத் திரும்பக் கேட்பர். அதற்கு அவர்களும் இதே பதிலைத் திரும்பக் கூறுவர். **1822**–இல் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.டி. காக்பர்னின் கட்டளைக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட மராத்திக் கையெழுத்துப் பிரதி ஒன்றும் இவர்களிடையே உள்ள இந்த வழக்கினை எடுத்துக் கூறுகின்றது. திரு. செவலின் 'மறக்கப்பட்ட விசய நகரப் பேரரசு' என்ற நூலில் விசயநகரம் மிகச் சிறப்புற்றிருந்த காலத்தில் பட்டாடைகளும் பட்டுக் கொடிகளும் அங்கு எவ்வாறு பெருவழக்காயிருந்தன என்பதனை விளக்கியுள்ளார். இன்றும் பட்டுநூல்காரருள் பலரும் தெலுங்கினைப் பேசக் கூடியவர்களாக உள்ளனர். அவர்கள் நெடுங்காலம் தெலுங்கு நாட்டில் தங்கியிருந்திருக்க வேண்டும் என்பதனை இதனைக் கொண்டு உய்த்துணரலாம். அவர்களுடைய மொழியான பட்நூலி தெலுங்கு. கன்னடச் சொற்கள் பலவற்றைக் கொண்டிருப்பதும் இதனை வலியுறுத்துவதாகும். பெல்லாரி மாவட்டத்திற்கே சிறப்பாக உரியதான பசவண்ணர் (பொஸ்கண்ணர்) விருந்து என்ற சடங்கினையும் இவர்கள் மேற்கொள்கின்றனர். விசயநகரம் வீழ்ந்துபட்டபின் இச் சாதியினைச் சேர்ந்த சிலர் பெங்களூரில் சென்று குடியமர்ந்திருத்தல் கூடும். அங்குப் பட்டுநூலி மொழியினை ஒத்த மொழி பேசும் சிலர் இன்றும் வாழ்ந்து வருவதைக் கொண்டு இதனைத் துணியலாம்." மைசூர் மாநிலத்தில் குடியமர்ந்துள்ள பட்நூலியரைப் பற்றி **1891** மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது. "பட்டைக் கொண்டு வேறு நெசவாளர்கள் யாராலும் தயாரிக்க இயலாததான கட்ணி என்ற ஒரு உயர்ந்தரகப் பட்டினை நெய்கின்றனர். இதனை முசல்மான்களே பெரும்பாலும் கால்சட்டைக்காகவும் லுங்கிக்காகவும் பயன்படுத்துகின்றனர். சென்னை மாநிலத்தின் மீது படையெடுத்துச் சென்று திரும்பும்போது ஹைதர் அலி தஞ்சாவூரில் வாழ்ந்து வந்தவர்களான இச் சாதியினைச் சேர்ந்த இருபத்தைந்து குடும்பங்களை வலுக்கட்டாயமாகப் பிடித்து வந்து சீரங்கப் பட்டிணத்திற்கு அருகே உள்ள கஞ்சத்தில் குடியமர்த்தினான்

என்றும் பட்டு. வெல்வெட்டு ஆகியவற்றின் நெசவு வளர்ச்சி பெறவேண்டி அவர்களுக்குச் சில வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன எனவும் கூறப்படுகிறது. சீரங்கப்பட்டணம் வீழ்ச்சியுறும்வரை இத் தொழில் அங்குச் செழித்து வளர்ந்தது. அங்குக் குழப்பம் நிலவிய காலத்தில் பலரும் அவ்விடத்தை விட்டுக் குடிபெயர்ந்துவிட மிகச் சிலரே இன்று அங்குத் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். தற்போது இச்சாதியினைச் சேர்ந்த 254 பட்டு நூலிகள் பெங்களூரில் சமுக்காளம் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதாகப் பதிந்து கொண்டுள்ளனர்.

இவர்களைப் பற்றி வடஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு.எச்.எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளவை வருமாறு:- "பட்டுநூல்காரர் தாங்கள் முதலில் பிராமணர்களாக இருந்ததாகவும் தேவகிரி என் அழைக்கப்பட்ட சூரத் என்ற நகரில் தங்கள் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்த பன்னிரண்டு தெருக்களில் வாழ்ந்து வந்ததாகவும் கூறுவர். தங்களுக்கே இன்று விளங்காததான ஏதோ ஒரு காரணத்தால் இந்தப் பன்னிரண்டு தெருக்களில் ஒரு தெருவில் வாழ்ந்தவர்கள் சாதிவிலக்கம் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டனர் எனப் பட்டுநூல்காரர் கூறுகின்றனர். அவ்வாறு சாதி விலக்கத்திற்கு உள்ளானவர்கள் தெற்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டவர்களாகத் திருப்பதி, ஆரணி, வேலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை முதலிய பெரிய நகரங்களில் வந்து குடியேறியவர்களாகப் பட்டுநெசவை மேற்கொண்டனர். மற்றொரு கதை வழக்குப்படி தேகிரியில் உள்ள தேவியான லட்சுமிக்கு ஆண்டுதோறும் தீபாவளித் திருவிழாவின்போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் ப்ட்டுச் சேலைகளை நெய்து படைக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருந்ததாகவும் ஒரு தீபாவளியின்போது இவர்கள் படைத்த சேலை எண்ணிக்கையில் குறைந்ததால் பிராமணர் என்ற நிலையிலிருந்து தாழ்வுறும்படி அவளால் சாபமிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனினும் இவர்கள் தாங்கள் தொடர்ந்து பிராமணர்களாகவே இருந்து வருவதாகக் கூறிக்கொண்டு பிராமணர்கள் பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களாக இருப்பதோடு பிராமணப் புரோகிதர்களையும் அமர்த்திக் கொள்ளும் இவர்கள் மற்றச் சாதியாரைத் தங்களைவிடத் தாழ்ந்தவர்களாகவே நடத்தி வருகின்றனர். சைவர், வைணவர், வியாபாரி என்ற சமயப் பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. ஸ்மார்த்தர்களுள் சிலர்

லிங்காயதர்களாக உள்ளனர். எழுதத் தெரிந்தவர்கள் தங்கள் மொழியினைத் தெலுங்கு எழுத்துக்களைப் பயன்படுத்தியே எழுதி வருகின்றனர்."

தண்டுவர்த்தனர் என அழைக்கப்பட்ட பிராமண முனிவர் ஒருவரின் வழிவந்தவர்கள் பட்டுநூல்காரர் என்ற வழக்கும் உள்ளது. தண்டுவர்த்தனர் என்ற சொல், நூலைச் செம்மைப்படுத்தித் துணியாக நெய்பவர் என்று பொருள்படுவதாகும். அவர் இச்சாதியாரின் தொழில்துறையின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவராக இருந்திருத்தல் கூடும் எனக் கூறப்படுகிறது.

மதுரை மாவட்டக் கையேட்டில் பட்டுநூல்காரர் பற்றிக் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- "சூரத்தைச் சேர்ந்த பட்டு நூல்காரர்களான இவர்களுடைய முன்னோரை மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் இங்கு வந்து குடியேறும்படி தூண்டியதாலோ திருமலை நாயக்கன் விடுத்த அழைப்பை ஏற்றோ இவர்கள் இங்கு வந்து தங்கியவர்களாதல் வேண்டும். இங்கு வாழ்க்கை வளம் கண்ட இவர்கள் பல்கிப் பெருகி இன்று மதுரையில் உள்ள பிற சாதியினரைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகுந்தவர்களாக உள்ளனர். மதி நுட்பமும் முயற்சியும் உடைய இவர்களுள் பலர் இன்று பெருஞ்செல்வர்களாக உள்ளனர். மற்ற சாதியாரிடமிருந்து ஒதுங்கியவர்களாகச் சமூகத்திலிருந்தும் விலகி நின்று தங்கள் தாய்மொழியினைப் பேசியபடி எங்கிருந்து வந்தார்களோ அந்தப் பகுதிக்கு உரியதான பழக்கவழக்கங்களை விடாது பின்பற்றி வருகின்றனர். வெளிறிய மஞ்சள் நிறமும் அழகிய உடற்கூறும் வாய்க்கப்பட்ட இவர்களைத் தமிழர்களிலிருந்து எளிதில் வேறுபடுத்தி அறியலாம். தமிழர்கள் இவர்களைச் செட்டிகள் என அழைப்பர்." மதுரையைச் சேர்ந்த பட்டுநூல்காரர்களைப் பற்றி அண்மையில் வெளியிடப்பட்டுள்ள* கட்டுரை ஒன்றிலிருந்ததானத் தகவல்கள் வருமாறு:- "பளபளப்பான உடைகளை விரும்பி உடுக்கும் பட்டுநூல்காரர் சிறிய வீடுகளில் பலராகச் சேர்ந்து கூட்டுக் குடும்பமாக வாழ்கின்றனர். சமூகப் படிநிலையில் இவர்கள் தகுதி எத்தகைய நிலையில் உள்ளது என உறுதியாக ஏதும் கூறுவதற்கில்லை. இவர்கள் தங்களைச் சௌராஷ்டிரப் பிராமணர் எனப் பெருமையாகக் கூறிக் கொண்டாலும் தமிழர்கள்

* சென்னை மெயில் நாளிதழ். *1907(Madras Mail. 1907)*

இவர்களைத் தாழ்ந்த சாதியாராகவே கருதுகின்றனர். பிராமணர்களைப் போலப் பூணூல் அணிந்துகொள்ளும் இவர்கள் ஐயங்கார், ஐயர், ராவ், பாகவதர், சாஸ்திரிகள் முதலிய பட்டப் பெயர்களைத் தங்கள் பெயரோடு கூட இணைத்துக் கொள்கின்றனர். எனினும் இவர்கள் பழைய மரபினை விடாது கடைப்பிடிப்பவர்கள் . இன்றுச் செட்டி என்ற பட்டப்பெயரை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டுள்ளனர். இந்து சமயத்தவரான இவர்கள் சைவ வைணவ நெறிக்குரிய தெய்வங்களிடையே எத்தகைய வேறுபாடும் பாராட்டாதவர்களாக வழிபட்டு வருகின்றனர். எனினும் இவர்கள் அனைவரும் ஐயங்கார்கள் நெற்றியில் இட்டுக்கொள்ளும் வழக்கமான நாமத்தை விடவும் பெரிய நாமத்தைத் தீட்டிக் கொள்கின்றனர். இவர்கள் அனைவரும் மரக்கறி உணவு மட்டுமே உண்பதாகக் கூறிக் கொள்வர். சென்னை நகரத்திற்கு அடுத்தபடியான இரண்டாவது நகரம் என்ற பெயரினை மதுரைக்கு ஏற்படுத்தி வைத்ததில் மதுரை நகரவாசிகளுள் முன்னணியினராக உள்ள சௌராஷ்டிர வணிகர்களாகவும் தொழில் முனைவர்களாகவும் உள்ள இந்த பட்டுநூல்காரரின் உழைப்பும் முயற்சியும் பெரும்பங்கு பெறுகின்றன. பட்டுநூல்காரர் சாதியினைச் சேர்ந்தவர்கள் நகர மன்றத்திலும் மாவட்ட ஆட்சி மன்றத்திலும் உறுப்பினர்களாகவும் இடம்பெற்றுள்ளனர். இந்த மாவட்டத்தில் புகழ்பெற்ற கோயிலாக உள்ள கோயிலின் அறங்காவலர் குழுவிலும் இவர்கள் சாதியினரின் விடா முயற்சி இவர்களுக்கு இடம் பெற்றுத் தந்துள்ளது. வளமான வாழ்க்கையும் தொழில்துறையில் முன்னேற்றமும் பெற்ற சாதியாராக இவர்கள் இருப்பினும் ஆங்கிலக் கல்வி, உலகம் பற்றிய பொது அறிவு ஆகியவற்றில் இவர்கள் பின்தங்கியவர்களாக உள்ளனர் என்ற உண்மையினை ஒத்துக் கொண்டேயாக வேண்டும். சௌராஷ்டிர சபாவினர் தங்கள் குழந்தைகளின் கல்வியின் பொருட்டு சிறுவர்களுக்காகப் பல உயர்நிலைப் பள்ளிகளையும் சிறுமியருக்காகப் பல தொடக்கப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றனர்." 1906 – இல் மதுரை மாவட்டத்திலுள்ள ஸ்ரீ கள்ளழகர் கோயில் அறங்காவலர் குழு உறுப்பினராகப் பட்டுநூல்காரர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி இயக்குநரகம் 1900–இல் பிறப்பித்த ஆணை ஒன்றில் கூறப்பட்டுள்ளது வருமாறு:– "சௌராஷ்டிரர் 1892 – ல் பட்டு நூல்காரர் என்ற பிரிவின் கீழ் பின் தங்கிய வகுப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பள்ளிகளை நடத்திவரும் மேலாளர்கள் தங்கள் பள்ளிகளில் படிக்கும் சௌராஷ்டிர மாணவர்களைத் தொடர்ந்து பிராமணர்கள் எனப் பதிந்த விவரங்களைத் தந்து வருவார்களாயின் அப் பள்ளிகள் பின்தங்கிய வகுப்பாருக்கான பள்ளிகளுக்கான உதவித் தொகை வழங்கும் விதிகளுக்கு உட்படாதனவாகி அவை பெற்று வருகின்ற உதவித் தொகையினை இழக்க நேரிடும். சௌராஷ்டிர பிராமணர் என்ற ஒரு சாதி பிற்பட்டவர்களுக்கான பட்டியலில் இடம் பெறாத காரணத்தால் மாணவர்கள் தங்களைச் சௌராஷ்டிர பிராமணர் எனப் பதிவார்களாயின் அதனைத் திருத்தித் தரும்படி அவர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்." இந்த ஆணையின் காரணமாகச் சௌராஷ்டிரர் தூதுக்குழு ஒன்று கல்வி இயக்குநரை நேரில் கண்டு தங்கள் நிலையை விளக்கியது. அதன் காரணமாக அடுத்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணை வருமாறு:- "சௌராஷ்டிரர்கள் தொடர்ந்து பின் தங்கிய வகுப்பினர்களாகவே கருதப்படுவர். இச்சாதியினைச் சேர்ந்த மாணவர்கள் இனி சௌராஷ்டிரர் என்றே தங்களைப் பதிந்து கொள்ளலாம். அவர்கள் பிராமணர்கள் என்பதனைச் சாதிப்பெயரோடு இணைத்துக் கொள்ளலாம் அல்லது இணைக்காதும் விட்டுவிடலாம். அதனைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

தென்னிந்தியாவைச் சேர்ந்த சௌராஷ்டிரர்கள் வரலாறு என்ற நூலில்* பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- "சௌராஷ்டிரர்கள் தெற்கே வந்து குடியமர்ந்த பின் அவர்கள் தங்கள் தாய்நாட்டின் அமைப்புக்களைப் பூகுந்த இடத்திலும் அறிமுகப்படுத்தினர். எனினும் தென்னாட்டுத் திராவிடர்கள் அவர்கள் மீது செலுத்திய தாக்கத்தின் காரணமாக அவற்றுள் சில மறைந்துவிட்டன. இடம்பெயர்ந்த வரும்போது இவர்கள் சாதித் தலைவன் காட்டிய வழிப்படி நடந்தனர். பயணம் இவர்களிடையேயான உறவை வலுப்படுத்தியது. இவர்கள் கவுண்டன்கள் (சாதித் தலைவன்கள்), சௌலியர் (மூத்தோர்), வோய்த்தோர் (மருத்துவர்கள்), பௌயுட்டுலர் (சமய நெறிப்பட்டவன்) என நான்கு பெரும்பிரிவினராகப் பிரிந்துள்ளனர். கவுண்டனகளின் பிரிவுக்குரிய புறக்கணிக்கப்பட்ட அமைப்புகள் சிலவற்றின் அடையாளச் சுவடுகளை இனறும் அப் பிரிவினரிடையே காணலாம். தங்கள் பிரிவினைச் சேர்ந்த

---

* ரிஸ்லெ – வங்காளக் குடிகளும் குலங்களும் *(Risley - Tribes and Castes of Bengal.)*

ஆண்களின் நடத்தைகளுக்கும் செயல்களுக்கும் கவுண்டன்களே பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. மனுதர்ம சாஸ்திரத்தில் மென்னுவால் கூறப்பட்டுள்ள விதிப்படி மக்கள் தங்கள் உடமைகளைக் கூட்டுக் குடும்பமாக ஒன்றாகவே அனுபவித்து வருகின்றனர். சொத்துடைமை மற்றம் குற்றவியல் வழக்குகளைக் கேட்டுத் தீர்ப்புக் கூறுபவர்கள் சாதித் தலைவர்களே. இவர்கள் இந்த வழக்குகளைக் கேட்டுத் தீர்ப்புக் கூறுபவர்கள் சாதித் தலைவர்களே. இவர்கள் இநத் வழக்குகளைக் கேட்டுத் தீர்ப்புக் கூறச் செளலியர் என்ற மூத்தோரவை இவர்களுக்கு உதவுகின்றது. சமூகம் தொடர்பான எல்லா வழக்குகளையும் கேட்டறிந்து அவ்வ தொடர்பாகச் சாதித் தலைவர்கள் கூறும் தீர்ப்பினை அமுல்படுத்தும் பொறுப்புக்குரியவர்கள் செளலியராவர். பண்டிதர்களா (மருத்துவர்) போய்த்தோரும் பௌயுட்டுகளும் (ஜோஷிகள், கவிகள் ஆகியோரும் இவ்விரு பிரிவினருக்கும் தகுதியில் சமமானவர்களாகக் கருதப்படுகின்றனர்) எல்லா முக்கியமான நிகழ்ச்சிகளின்போதும் சிறப்பிக்கப்படுவதோடு செளலியருக்குச் சமமமான தகுதியுடையவர்களாகவே இவர்கள் மதிக்கப்படுகின்றனர். கரேஷடுவன்கள் எனப்படுவோரே சாதியினைச் சேர்ந்த குடிமக்களின் கூட்டமாக இருப்பவர். அவ்வப்போது கூடும் குடிமக்கள் கூட்டத்தாரின் ஒருமித்த உடன்பாட்டினைப் பெற்ற பிறகே சாதிவலிக்கம், சாதிநெறியினின்றும் வழுவியர்களை மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்வதற்கான பிராயச்சித்தம் ஆகியனவற்றை மேற்கொள்ளவேண்டும். சமயத் தொடர்பான சில நிகழ்ச்சிகளில் தவிர மற்றவற்றில் கவுண்டன்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதில்லை. தொடக்கத்தில் செளராஷ்டிர பிராமணர்கள் சமயநெறிப்பட்ட புனித வாழ்வினையே மேற்கொண்டவர்களாக இருந்து வந்தனர். தற்சமயம் அவர்கள் தாங்கள் ஏற்றுள்ள வேறுவேறு வகையான பொறுப்புக்களுக்கியையத் தொழில் செய்கின்றனர். பயிரிடுதல் இவர்கள் முக்கியத் தொழில் எனினும் சிலர் வணிகம், நெசவு, சாயம் தோய்த்தல் முதலிய தொழில்களிலும் ஈடுபட்டுவர்களாக உள்ளனர். எனினும் இவர்கள் மேற்கொண்டுள்ள இப்பணிகள் இவர்களுடைய சமய சமூகப் பிரிவுகளுக்கும் பொறுப்புக்களுக்கும் எவ்வகையிலும் இடையூறாக அமைவதில்லை எனக் கூறலாம். பட்டுநூல்காரர் என்ற சொல் பட்டு நெசவு செய்வோர் எனப் பொருள்படும். இதனைச் செளராஷ்டிரர்களுக்கு உரிய பெயராகவும தவறாகப் பயன்படுத்துகின்றனர். இதற்கு மாறாக

இச்சொல் தென்னிந்தியாவைச் சேர்ந்த சேணியர், கைகோளர், தேவாங்கர், காட்டிரியர், பறையர், செங்குந்தர், முதலியார், சாலியர், பத்மசாலேக்கள் ஆகிய நெசவில் ஈடுபட்டிருக்கும் சாதியாருக்கு உரியதாகும் எனக் கொள்ளலாமேயன்றிச் சௌராஷ்டிரர்களுக்கு எவ்வகையிலும் பொருத்தம் உடையதாகாது. சௌராஷ்டிரர் இன்று வணிகத்தில் ஈடுபட்டுள்ள வகுப்பாராகக் கருதப்படுகின்றனர். துணிவுமிக்கவர்களான இவர்கள் பணிவும் தெய்வ பக்தியும், விருந்தோம்பல் பண்பும், திருவிழா வேடிக்கை ஆகியவற்றில் நாட்டமும் கொண்டவர்கள். தொடக்கத்தில் சௌராஷ்டிரர் சூரியனை வழிபடுபவர்களாக இருந்ததாகக் கூறப்படுகிறது. சௌர என்ற சொல் சூரியன் எனப் பொருள்படும் எனினும் சௌராஷ்டிரர் என்பது வளமிக்க நாட்டவர் எனப் பொருள்படும். இந்து சமயத்தைச் சேர்ந்த இவர்கள் தொடக்கத்தில் மாத்வர்களாகவே இருந்துள்ளனர். தென்னிந்தியாவில் வந்து குடியமர்ந்தபின் சங்கராச்சாரியரின் நெறிமுறைகளையும் இராமானுசாச்சாரியர் நெறிமுறைகளையும் கேட்டுச் சைவர்களாகவும் வைணவர்களாகவும் மாறிவிட்டனர். இவர்கள் நௌராஷ்டிரர் அக்சொப்திய மடத்தையும் சங்கராச்சாரியர் மடத்தையும் சேர்ந்தவர்கள். இந்திய தேசத்தைச் சேர்ந்த மற்ற இனத்தவர்களைப் போலவே சௌராஷ்டிரரும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு பிரிவினராகப் பிரிந்துள்ளனர். வைசிய சூத்திரப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை எல்லா நகரங்களிலும் சிற்றூர்களிலும் காணலாம். திருப்பதி, நகரி, நரணவனம், ஆரணி, கொட்டாற, பழநி, பாளையங்கோட்டை, விளாங்குடி, வீரவநல்லூர் ஆகியன இவர்கள் எண்ணிக்கையில் மிக்கவர்களாக உள்ள இடங்களாம்."

மதுரை நகரில் உள்ள பட்டுநூல்காரர்களின் சமூக நலன்களைக் கருத்தில்கொண்டு 1895 – இல் தொடங்கப்பட்ட சொராஷ்டிர சபா அதன் உயர்ந்த குறிக்கோள்களாகக் கீழ்கண்டவற்றைக் கொண்டுள்ளது எனக் கூறலாம்.

1. சௌராஷ்டிர சமூகத்தவர்கள் புதிய கல்வி முறையோடு இயைந்த சிறந்த பரந்துபட்டதான பொது மற்றும் தொழிற்கல்வியினைப் பெற மதுரையில் சௌராஷ்டிரப் பள்ளியினை அமைத்து நிர்வகிப்பதும் வாசக சாலைகள், நூல்நிலையங்கள் முதலியன தொடங்கி நடத்துவதும் ஆகும்.

2. மதுரை ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசுவர சுவாமி கோயிலின் நிர்வாகத்தை மேற்பார்ப்பது. அக்கோயிலோடு சேர்ந்த கட்டிடங்களைப் பழுது பார்ப்பது, புதுப்பிப்பது, புதிதாகக் கட்டிடங்களைக் கட்டுவது. கோயிலுக்குத் தேவைப்படும் நகைகள், வாகனங்கள் முதலியவற்றைச் செய்து வழங்குவதோடு கோயில் திருவிழாக்களையும் நடத்துவிப்பது.

3. அனாதை விடுதிகள், மருத்துவ மனைகள், இல்லோர் இல்லங்கள், சத்திரங்கள் (பயணிகளுக்காக) தண்ணீர்த் தொட்டிகள் போன்ற அறநிலையங்களைச் சௌராஷ்டிர சமூகத்தாரின் நலன் கருதி அமைப்பது.

4. சௌராஷ்டிர சமூகத்தைச் சேர்ந்த வறுமையில் உழல்வோர் கைகாலற்றோர், பார்வையற்றோர் ஆகியவர்கள் வாழ்க்கை நடத்த அடிப்படைத் தேவைகளை வழங்குதல்.

5. சௌராஷ்டிர வகுப்பைச் சேர்ந்த பூணூல் அணிந்துகொள்ள வசதியில்லாத வறியவர்களுக்கு உபநயனச் சடங்கு நடத்த உதவுவது.

6. சௌராஷ்டிர சமூகத்தாரின் பயன்பாட்டுக்காகப் படித்துறைகள், கிணறுகள், நீர் ஊற்றுகள் முதலியனவற்றை அமைத்தல்.

7. மகிமை (வருமான வரியினை ஒத்தது) என்ற சந்தாவினை முறைப்படுத்தி வசூலிப்பது.

1901 – இல் மதுரையில் சௌாராஷ்டிர உபாசனா சபையின் ஆதரவில் நடைபெற்ற சொற்பொழிவுகளுக்கு உரியதாக இருந்து தலைப்புக்கள் திருமதி.அன்னிபெசன்ட், 1900 – ஆம் ஆண்டு பாரிசம் கண்காட்சி, திரு.டாடா, உயர்கல்வி, சௌராஷ்டிர வங்கி, கொலம்பஸ், சௌராஷ்டிர சீர்திருத்த உணவு விடுதி என்பனவாம்.

சில ஆண்டுகளுக்கு முன் சௌராஷ்டிர சமூகத்தவர்கள் சென்னை மாநில ஆளுநரிடம் கொடுத்த விண்ணப்பத்திலிருந்த வேண்டுகோளாவது :– " பின்தங்கிய வகுப்பினரான சௌராஷ்டிரர்களிடம் தங்களிடம் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குப்

பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வி தரத் தேவையான மூலதனமான அரை லட்சம் ரூபாய்கள் இல்லாத காரணத்தால் மதுரையில் உள்ள சௌராஷ்டிர சபா அதன் சார்பில் ஒரு லாட்டரி அலுவலகம் தொடங்க எண்ணியுள்ளது. அந்த அலுவலகத்தில் ஒரு சீட்டு ஒரு ரூபாய் என்ற விலையில் விருப்பம் உடையவர்கள் வாங்கிக் கொள்ள லாட்டரிச் சீட்டு விற்கப்படும். இவ்வகையில் ரூ.6,250 சேர்ந்தவுடன் அதில் ரூ.250 – ஐ அலுவலக நடைமுறைச் செலவுகளுக்காக ஒதுக்கிவிட்டு எஞ்சியதில் மூன்றில் இரண்டு பங்கைக் கல்விக்காக ஒதுக்கியபின் மீதி உள்ள தொகையினை ரூ.125 –லிருந்து ரூ.1000 வரையாக உள்ள ஐந்து பரிசுகளாக வழங்கலாம் " துணிகரமான இந்தத் திட்டத்தின் மீது ஆணை பிறப்பித்த அரசு இத்திட்டத்திற்கு அனுமதி தர இயலாது என மறுத்துவிட்டது. பட்டுநூல்காரரிடம் ஆழ்ந்த சமூக இனப்பற்று உள்ளது என மிகச் சரியாகவே மதிப்பிடப்பட்டுள்ளது. * இந்த உணர்ச்சியின் காரணமாக இவர்களுடைய நெசவுத் தொழில் அறிவியல் நுட்பம் செறிந்த தொழிலாகப் பிற இடங்களில் உள்ளதைக் காட்டிலும் சிறப்புற வளமாக நடைபெறுகின்றது.

மதுரையைச் சேர்ந்த பட்டுநூல்காரரான நெசவாளர்களைப் பற்றிய பின்வரும் குறிப்புக்களுக்கு நான் தொழில்நுட்ப விவர இயக்குநரான திரு.எ.சாட்டெர்டனுக்குக் கடப்பாடுடையேன் :– "பொதுவாகக் கூறினால் இவர்கள் வளமான வாழ்க்கை உடையவர்களாகச் சேலத்தில் உள்ள சௌராஷ்டிர நெசவாளர்களைக் காட்டிலும் நல்ல நிலையிலேயே உள்ளார்கள் எனலாம். மதுரையில் விற்கப்படும் துணிகளில் பெரும்பகுதி உயர் ரகமாக இருப்பதே இதற்குக் காரணம் எனலாம். இதனால் இவர்கள் நெய்யும் துணியில் தேவை இடையீடின்றி எல்லாப் பருவத்திலும் ஒரே சீராக இருப்பதால் நெசவாளர்கள் பாதிப்புக்கு உள்ளாவதில்லை. தாங்கள் முன்னேறிய சமூகத்தவர் என்பதனை மதுரையைச் சேர்ந்த சௌராஷ்டிரர்கள் பலவகையாலும் மெய்ப்பித்துள்ளனர். கல்வியில் இவர்கள் காட்டும் நாட்டத்தையும், தங்கள் பரம்பரைத் தொழிலைப் புதிய உத்திகள் அனைத்தும் மதுரையில் நடைமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவை இந்தியச் சூழல்களுக்கு ஒவ்வாதன எனக் கைவிடப்பட்டன. தலைப்பிலும்

---

* மதுரை மாவட்ட விவரக் குறிப்பு. *(Gazetteer of the Madura district.)*

கரையிலும் அலங்கார வேலைப்பாட்டினைப் பட்டு பருத்திச் சேலைகளில் நெய்ய இந்தியத் தறியில் சில முன்னேற்றங்களைச் செய்ய எ.எ.குப்புசாமி அய்யர் சில வழிமுறைகளைப் புதிதாகக் கண்டுபிடித்தார். இது நல்லதொரு முன்னேற்றப் போக்குடையதாகச் சாதாரணத் தறிகளை மாற்றியமைக்கும் வழிமுறையாக இருந்ததால் நகரில் பலராலும் விரும்பி வரவேற்கப்பட்டது. இந்த முன்னேற்ற ஏற்பாடுகள் 350 தறிகளில் புகுத்தப்பட்டன. இதனைக் கண்டுபிடித்தவர் தறி ஒன்றுக்கு ரூ.1–4–0 வீதம் உரிமைத் தொகையினை வசூலிக்க முயற்சி செய்தவராக உள்ளார். இம்முறையினை மேற்கொள்ளும் நெசவாளர்கள் இணைந்து அவருக்கு அத்தொகையினைத் தர மறுத்து வருகின்றனர். தற்சமயம் (1907 – இல்) அது தொடர்பான வழக்கு மாவட்ட நீதி மன்றத்தின் முன் உள்ளது. மதுரையில் உள்ள நெசவாளர்களுள் முன்னோடியாகத் திகழ்வது மீனாட்சி நெசவுக் கம்பெனியாகும். இராமச்சந்திர அய்யர், முத்துராம் அய்யர், குப்புசாமி அய்யர் ஆகியோர் இதன் பங்குதாரர்கள். இதற்காக அவர்கள் திரட்டியுள்ள மூலதனம் ரூ.1,00,000 ஆகும். இதில் ரூ.40,000 நெசவுக் கொட்டகையும் அலுவலகமும் கட்டப் பயன்படுத்தப்படும். மதுரையில் சாயத் தொழில் சௌராஷ்டிரர் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. சாயம்போடும் தொழிலினை 1895 – இல் திரு.துளசிராம் தொடங்கினார். பன்னிரண்டு ஆண்டுகாலத்தில் அது மிகுந்த வளர்ச்சி கண்டுள்ளது. மதுரையில் தற்பொழுது ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ.24 இலட்சம் சாயம்போடும் சாலைகள் உள்ளன. படிஸ்க் அனிலைன் சோட பேப்ரிக் கம்பெனியாரிடமிருந்து ஆண்டொன்றுக்கு 5000 க்கு மேற்பட்டதான அலிசாரைன் சிவப்புச் சாயப்பொடி வாங்கப்படுகிறது. நெசவுக்குத் தேவையான நூல் உள்ளூரிலேயே மதுரை மில்லிலிருந்து பெறப்படுவதோடு, கோயமுத்தூர், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் உள்ள பஞ்சாலைகளிலிருந்தும் ஓரளவு பெறப்படுகிறது. சாயத்தைக் கெட்டிப்படுத்த பெருமளவில் பொட்டாசியம் உப்புக் கலந்துள்ள இந்தியாவில் கிடைக்கும் மண்ணையே பயன்படுத்துகின்றனர். மழைக் காலத்தில் நூலினை உலர வைப்பது பெருந்தொல்லை தருவதாக உள்ளது. சாயம் போகாதபடி எல்லாப் பகுதிகளிலும் ஒரே சீராகச் சாயம் ஏறப் பத்து முறைக்கு மேல் சாயத்தைக் கெட்டிப்படுத்துவதோடு இரண்டுமுறை சாயம் தோய்க்கவும் செய்கின்றனர். உயர் ரகச் சேலைகள் நெய்ய மும்முறை கூடச் சாயம் தோய்க்கின்றனர். ஒவ்வொரு முறை சாயம் தோய்க்கும் முன்னும் நூல் நன்றாக உலர்ந்திருக்க வேண்டும்.

மதுரையில் சுற்று வட்டாரம் கிட்டத்தட்ட தற்போது நூல் காய வைக்கும் கொட்டகைகளாகவே மாறிவிட்டுள்ளன.

திருவாங்கூரில் குடியமர்ந்துள்ள பட்டுநூல்காரர்கள் பற்றித் திரு.சுப்ரமணிய அய்யர் ஒரு குறிப்பில் தந்துள்ள விவரங்கள் வருமாறு– "பட்டு நூல்காரர்கள் வெளிறிய மஞ்சள் நிறத் தோற்றம் உடையவர்களாக இருப்பதோடு தமிழ்ச் சாதியாரைக் காட்டிலும் அழகிய தோற்றமும் நன்கு அமைந்த உடல்கூறுகளும் வாய்க்கப் பெற்றிருப்பதால் பார்த்த அளவிலேயே அவர்களை எளிதில் வேறுபடுத்தி அறியமுடியும். அழகு நலம் வாய்க்கப் பெற்றவர்களாயினும் உடல் தூய்மையில் இவர்கள் கருத்தற்றவர்களே. மற்ற இடங்களைப் போலவே திருவாங்கூரிலும் பிற சாதியாரிடமிருந்து ஒதுங்கித் தனித்து இருந்தபடி சமூகத்தோடு கலந்து பழகாதவர்களாகத் தங்களுக்குரிய தனித்த மொழியினைப் பேசி வருகின்றனர். இந்த மொழி வழக்கினை மிகுந்த பற்றுடன் பேணிக் காத்து வரும் இவர்கள் அண்மையில் அதற்கான எழுத்து வடிவங்களையும் ஆக்கியுள்ளதோடு தொடக்கப் பள்ளிக்கான பாட நூல்களையும் அந்த எழுத்துக்களைக் கொண்டு எழுதச் செய்துள்ளனர். பழைய மரபுகளைப் பேணும் இவர்கள் சமய நெறியிலும் தீவிரமான பற்றுக் கொண்டவர்களாக இருப்பதோடு நுட்பமான அறிவாற்றலைப் பயன்படுத்திச் சுறுசுறுப்பாக உழைத்து வருகின்றனர். இசையில் மிகுந்த நாட்டம் உடையவர்களான இவர்களுள் பலர் சிறந்த பாடகர்களாகவும் உள்ளனர். ஆண்களும் பெண்களும் மகிழ்வூட்டும் பலவகையான பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதோடு பக்திப் பாடல்களையும் பாடி மகிழ்வர். சகுனங்களில் பெரிதும் நம்பிக்கை உடையவர்களான இவர்கள் நம்பிக்கைகளுள் பின்வருவன குறிப்பிடத்தக்கன :–

நல்ல சகுனங்கள் :– தண்ணீர் நிறைந்த பானை, எரியும் விளக்கு, இரட்டைப் பிராமணர், ஒற்றைச் சூத்திரர், பசு , சுமங்கலி, பொன்.

கெட்ட சகுனங்கள்:– அம்பட்டன், நோயாளி, உடல் ஊனமுற்றவன், நெருப்பு, எண்ணெய், கழுதை, கொந்தளம், விளக்குமாறு, விசிறி.

பட்டுநூல்காரன் வீடு ஒன்றில் நுழைந்தவுடன் அளவில் பெரிய முற்றம் இருக்கக் காணலாம். அதில் நெசவினை மேற்கொள்ள உதவும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கும். பட்டுநூல்காரர்கள் தங்களுக்கென உரிய தனித் தெருக்களில் வாழ்கின்றனர். பட்டுநூல்காரனான ஆண்மகன் ஒருவன் புறத்தோற்றத்தில் தமிழ்நாட்டு வைணவப் பிராமணனை ஒத்தவனாக இருப்பான். இவர்கள் சாதிப் பெண்கள், பழக்கவழக்கத்திலும் உடைகள், அணிமணிகள் ஆகியவற்றிலும் தெலுங்குப் பிராமணர்களையே பின்பற்றுவதால் குசராத்திலிருந்து மதுரை நோக்கி வந்த இச்சாதியார் இடையில் சிறிதுகாலம் தெலுங்கு நாட்டில் தங்கியிருக்கக் கூடும் என்பதனை இது குறிப்பால் உணர்த்துவதாக உள்ளது. பட்டுநூல்காரன் மனைவியோடில்லாமல் தனியே வருவானாயின் அவனை வைணவப் பிராமணன் எனக் கொள்வார்கள் எனவும் கணவன் உடனில்லாமல் தனியே வரும் தாடன் சாதிப் பெண்ணை அய்யங்கார் எனக் கொள்வார்கள் எனவும் பொருள்படுவதான தமிழ்ப் பழமொழி வழக்கு ஒன்று உள்ளது. இவர்கள் சாதிக் குழந்தைகள் கழுத்தில் காரை அணிகின்றன. பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் இவர்களிடையே பெருவழக்காயுள்ளது.

"சமயம் சார்ந்த வகையில் பட்டுநூல்காரர்கள் மூன்று பிரிவினராக உள்ளனர். அப்பிரிவுகள் வருமாறு :- 1. நெற்றியில் நாமம் இட்டவர்களாகத் தங்களை வடகலைப் பிரிவினர் எனக் கூறிக் கொள்ளும் வைணவத்தை மட்டுமே மேற்கொண்டவர்களாக உள்ளவர்கள். 2. பெரும்பாலும் ஸ்மார்த்தர்கள் சமயநெறியினைப் பின்பற்றுபவர்கள். 3. கோபி சந்தனத்தைத் தங்கள் சமயச் சின்னமாகத் தரிக்கும் சங்கர வைணவர்கள், திருவாங்கூரைச் சேர்ந்த பட்டுநூல்காரர் மூன்றாவது பிரிவில் அடங்குவர். அண்மையில் ஸ்மார்த்தர் சிலரும் கொட்டாற்றில் வந்து குடியமர்ந்துள்ளனர். இந்த மூன்று பிரிவினரும் தங்களுக்குள் மணஉறவு கொள்வதோடு ஒன்றாக இருந்தும் உண்பர். சமயப் பிரிவின் வேறுபாட்டால் இவர்கள் தனித்த சாதியாராக ஆகிவிடவில்லை. திருப்பதியில் உள்ள வேங்கடாசலபதியே இவர்களுடைய முக்கிய வழிபாடு தெய்வம். புரட்டாசி மாதத்தில் சனிக் கிழமைகளிலும் திருவோண நட்சத்திரத்தின்போதும் அத் தெய்வத்திற்குச்

சிறப்பான வழிபாடு ஆற்றுகின்றனர். இவர்கள் சாதியினைச் சேர்ந்த ஒருவன் இந்த நாள்களுள் ஒன்றில் தெய்வம் ஏறப்பெற்றவனாகக் கையில் ஒரு தீப்பந்தத்தை ஏந்தியபடி கூடியுள்ள பக்தர்களின் நெற்றியில் அதனால் தொடுவான். அத்தகைய நாள்களில் விரதம் மேற்கொள்ளும் இவர்கள் கருடனின் உருவத்தைத் தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்வர். தீபாவளி, சித்திரை மாதப் பௌர்ணமி, வைகுண்ட ஏகாதசி ஆகியன இவர்களுக்குரிய முக்கியமான சமய நாள்களாம். தசராவினைக் கொண்டாடும் இவர்கள் ஸ்ரீராமநவமி, அஷ்டமி, ரோகிணி, ஆவணி அவிட்டம், வரலட்சமி விரதம் ஆகியவற்றையும் கொண்டாடுகின்றனர். ஒரு குருவிடம் தீக்கை பெற்றவர்கள் முறையாக ஒரு தெய்வ உருவினை வழிபடுவர். சுமங்கலிகளான பெண்கள் பௌர்ணமி, திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாள்களின்போது விரதம் இருப்பர். பாம்பு, ஆலமரம் ஆகியன இவர்களால் சிறப்பாக வழிபடப்படுகின்றன. பெண்கள் லட்சுமியினைப் போற்றிப் பாடுவதோடு அவளுக்குத் தேங்காய், பழம் ஆகியனவற்றையும் படைப்பர். கொட்டாற்றில் பட்டு நூல்காரர்களுக்கென்றே இராமர் கோவில் ஒன்று உள்ளது. பிராமணர்களும் வழிபடச் செல்லும் இக்கோயிலில் அய்யங்கார்களே பூசாரிகளாக உள்ளனர். திருவாங்கூரைச் சேர்ந்த பட்டுநூல்காரர்களின் ஆச்சாரியார் திருநெல்வேலிக்கு அருகே உள்ள அரவன்குளத்தில் வாழும் உபய வேதாந்த கோடி கன்யகாதான தாத்தாச்சாரியார் ஆவார். இவருக்கெனப் பெரும் எண்ணிக்கையில் சீடர்கள் உள்ளனர். ஆண்டுக்கு ஒருமுறை திருவாங்கூரில் வாழும் பட்டுநூல்காரர்களைப் பார்க்க வரும் இவரை அச்சாதியினரும் மகாராசாவும் நன்கு போற்றி உபசரிப்பதோடு மகாராசா ஒரு தொகையினையும் இவருக்கு அன்பளிப்பாக வழங்குகின்றார். சமூகத்திற்குரிய பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கவும் வழக்குகளை விசாரிக்கவும் வயதில் மூத்தவர்கள் ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளனர். திருவாங்கூரில் பட்டுநூல்காரப் புரோகிதர் குடும்பங்கள் மூன்று மட்டுமே உள்ளதாகக் கூறுகின்றனர். முக்கியமான சடங்குகளை நிகழ்த்த இவர்கள் பிராமணப் புரோகிதர்களை அமர்த்துகின்றனர்.

"சிறுமியரின் திருமணம் பூப்படையும் முன்பே நிகழ்த்தப்படுகின்றது. நான்கைந்து வயதுக் குழந்தையாக இருக்கும்போதே கூட அவர்களுக்குச் சில சமயங்களில் மணம்

செய்விக்கப்படுகின்றது. குலம், கோத்திரம் பார்ப்பதில் இவர்கள் மிகுந்த கருத்துச் செலுத்துகின்றனர். திருமண வீட்டில் அனைவருக்கும் கண்ணில் படும்படியாக மணமக்களின் குலங்களை எழுதி வைக்கும் பழக்கம் இவர்களிடையே உள்ளது. திருமணத்திற்குரிய முகூர்த்த நேரத்தைத் தேர்ந்தெடுப்பதில் இரண்டு லக்கினங்கள் ஒன்றை அடுத்து ஒன்று தொடர்ந்து சுபவேளையாக அமையும்படியாக இருக்கும் முகூர்த்தத்தையே இவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். அத்தகைய நாள்கள் மிக அருமையானவை ஆகையால் பல திருமணங்கள் ஒரே சமயத்தில் நிகழக் காணலாம். ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணக்க உரிமை கொண்டாடலாம். பல மனைவியரை மணக்கும் வழக்கமும் இவர்களிடையே உள்ளது. திருமணச் சடங்குகள் பெரிதும் பிராமணர்கள் திருமணச் சடங்குகளை ஒட்டி அமைவன. திருமணத்தின் நான்காம் நாளன்று தெலுங்குப் பிராமணர்கள் நடத்துகின்ற நாகவல்லிச் சடங்கினை இவர்களும் நடத்துகின்றனர். மணமகள் கழுத்தில் அணிவிக்கப்படும் தாலியினைப் பொட்டு என வழங்குவர். மதுரையைச் சேர்ந்த பட்டுநூல்காரர்கள் திருமணச் சடங்குகள் தொடர்பாக எனக்குத் தெரியவரும் ஒரு குறிப்பு வருமாற:- இவர்கள் தெலுங்க கன்னட சாதியாரைப் போலவே நிறையப் பானைகளை அடுக்கி வழிபடுகின்றனர். தெலுங்கர், கன்னடியர் திருமணங்களில் இருப்பதை விட இவர்கள் சிறியனவான குறைந்த எண்ணிக்கையிலான பானைகளையே வழிபட வைக்கின்றனர். திருமணம் நடைபெறும் வீட்டின் சுவரில் செம்மண் அல்லது காவிக்கல்லைக் கொண்டு ஒரு தேரின் உருவத்தை வரைவர். அந்த உருவத்தின்மேல் மணமகனின் கோத்திரப்பெயர் எழுதப்படும். மண நிகழ்ச்சியின் நான்காம் நாள் தேவர்களுக்கான நாகவல்லிப் படையல் இடுகின்றனர். மணமக்கள் பானைகளின் அருகே அமர்வர். அப்போது தரையில் பெரும் எண்ணிக்கையில் விளக்குகளை ஏற்றி வைப்பர். தேவர்களின் உருவகங்களாகக் கருதப்படும் பானைகள் வழிபடப்படுகின்றன.)

குழந்தை பிறந்த பதினொன்றாம் நாள் பெயர் சூட்டு விழாவினை நடத்துகின்றனர். எட்டாவதாகப் பிறக்கும் குழந்தை ஆணாயினும் பெண்ணாயினும் கிருஷ்ணன் என்பது வசு தேவருக்குப் பிறந்த எட்டாவது பிள்ளைக்குரிய பெயராக அமைந்த மரபின்படி கிருஷ்ணன் என்றே பெயர் சூட்டப்படும். குழந்தைகளைத் தூத்து (பால்), பிள்ளை என்பது போன்ற

செல்லப் பெயர்களால் அழைப்பர். முதலாம் ஆண்டு முடிந்தவுடன் குழந்தைக்குச் சோறூட்டும் சடங்கினை நிகழ்த்துவர். வேறு சடங்குகளின்போது இதனையும் உடன் வைத்துக் கொள்வர். நேர்த்திக் கடன் கழிக்கச் சிறுவர்களைத் திருப்பதியில் உள்ள கோயிலுக்கு அழைத்துச் சென்று மொட்டை அடிக்கும் பழக்கமும் இவர்களிடையே உள்ளது. சிறுவரின் எட்டாம் ஆண்டுக்கும் பன்னிரண்டாம் ஆண்டுக்கும் இடையே உபநயனச் சடங்கினை நிகழ்த்தும் இவர்கள் பிரம்மச்சரியத்தையோ சமவர்த்தனத்தையோ மேற்கொள்வதில்லை.

"இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் எலும்புகளைப் பொறுக்கி நீரில் விடுகின்றனர். சாவுத் தீட்டுப் பத்துநாள்களுக்கு மேற்கொள்ளப்படுகிறது. மூதாதையருக்குப் பிண்டம் தரும் சிரார்த்தத்தை இவர்கள் மேற்கொள்கின்றனர். கைம்பெண்களின் கூந்தல் மழிக்கப்படுவதில்லையாயினும் அவர்கள் பொட்டு இட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. பிராமணர் சாதிப் பெண்களைப் போல இவர்கள் வெற்றிலை பாக்குப் போடவும் சாயம் தோய்த்த சேலை அணியவும் உரிமை அற்றவர்களாக இல்லாது மூத்துச் சாகும் காலம்வரை அவற்றை அனுபவிக்கின்றனர்."

பட்டுநூல்காரர்களுக்கெனத் தனியே ஒரு குழூஉக்குறி மொழி உள்ளது. அதுபற்றித் திரு.சி.ஹயவதன ராவ் பின்வருமாறு எழுதுகின்றார்:- அம்மொழியில் இவர்கள் தங்கள் தொழிலோடு தொடர்புடைய சொற்களைப் பயன்படுத்துகின்றனர். எனினும் அச்சொற்கள் இவ்வாறு பயன்படுத்தப்படும்போது வேறு பொருள்கள் தருவன. தகுதியற்ற ஒருவனை ரிக்கட கண்டு – நூலில்லாத கண்டு, – என்று கூறுகின்றனர். புத்தி கூர்மையற்றவன் முகுதா எனப்படுவான். இது ஒரு பக்கம் மட்டும் கூராக உள்ள உருளையில் பொருத்தப்படும் மரக்கட்டையாகும். வாயாடியினை ரெட்டா என அழைப்பர். இது நூற்புக் கதிரில் நூலைச் சுற்றப் பொருத்தப்பட்டுள்ள கடமுட என ஒலியெழுப்பியபடி சுற்றும் உருளையாகும். பாவினை வெட்டுதல் என்ற பொருள்படும் கபினி என்ற சொல்லிருந்து வந்த கப்பினிகேர் என்பது வேண்டாதவர்களோடு உள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்வதைக் குறிப்பதாகும். நடுவயதினைத் தாண்டியவன் பொர்குட் பில்லிய எனப்படுவான். நெசவாளர் மொழியில் இது பாவில் பாதி திருப்பப்பட்டு விட்டதைக் குறிக்கும்."

பத்ரா - **Pathra**

பத்ரா சாதியார் ஒரியர்கள். இவர்கள் இரு பிரிவினராக உள்ளனர். ஒரு பிரிவினர் பட்டு அரைஞாண் நூல் பட்டுக்குஞ்சம் முதலியன தயாரிக்கின்றனர். மற்றொரு பிரிவினர் பட்டு நெசவாளர்கள். இவ்விரு பிரிவினரும் ஒருவர் வீட்டில் மற்றவர் உண்பதில்லை. முன்னைய பிரிவினரிடையே சாகு, பாத்ரொ, பிருஷ்டி முதலிய குலப்பிரிவுகள் உள்ளன. இவை பட்டப் பெயராகவும் பயன்படுத்தப்படுகின்றன. பின்னவர் தெங்க, ஜக்கிலி, தெலக,மகாநாயகொ, பெகரா, நாயகொ முதலிய பட்டப்பெயர்களைத் தரிக்கும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகளைப் பெற்றுள்ளனர். பட்டு நெசவு செய்யும் பிரிவினருக்கான சாதித் தலைவன் மகாநாயகொ என அழைக்கப்படுகின்றான். அவனுக்குத் தளபதி என்ற உதவியாளன் உள்ளான். சிறுமியர் குழந்தைகளாக இருக்கும் போதே மணம் செய்வித்தலே இவர்கள் வழக்கம். பூப்படையும் முன் ஒரு சிறுமி கணவனைப் பெறவில்லையாயின் நெசவு மேற்கொண்டுள்ள பிரிவினைச் சேர்ந்தவள் வயதான ஒருவனுக்கம் மற்றொரு பிரிவினைச் சேர்ந்தவர்கள் அம்பு ஒன்றுக்கும் மணம் செய்விக்கப்படுவாள்.

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தெலுங்கு பேசும் பத்ராக்கள் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளதாவது:- "கடப்பை, கர்நூல் மாவட்டங்களில் மட்டும் அங்கங்கே காணப்படும் இவர்கள் வேட்டையாடுபவர்களாகவும் பயிரிடுவோராகவும் தொழில் செய்கின்றனர். துரையர் (தலைமைக்காரன்கள்), குறிகாரன்கள் (குறிபார்ப்பவர்) என்ற இரு பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. இவர்களுள் முன்னவர் பாளையக்காரர்களின் சந்ததியினர் எனக் கூறப்படுகின்றனர். பின்னவர்கள் அவர்கள் பணியாளர்களும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும் ஆவர். இவ்வாறு கருதப்படுவதற்கு ஆதாரமாக உள்ளது குறிகாரர் திருமணத்தின்போது துரையர் பிரிவினர் முதல் வெற்றிலை பாக்குப் பெறும் உரிமையுடையவர்களாக இருப்பதுதான். மணமுறிவும் அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் திருமணச் சடங்குகளை நடத்தப் பிராமணர்களையும் சாவுச் சடங்குகளை நடத்தச் சாத்தானிகளையுமே வழக்கமாக அமர்த்துகின்றனர். இவர்கள் வைணவர்களாயினும் கங்கம்மா, எல்லம்மா போன்ற கிராம தேவதைகளையும் வழிபடுகின்றனர். இறந்தவர்களைப்

புதைக்கும் இவர்கள் ஆண்டுதோறும் இறந்தவர்களுக்கான சிரார்த்தம் நிகழ்த்துகின்றனர். இவர்கள் கோல்லர் வீட்டில் உண்பர். நாயுடு என்பது இவர்களுக்கான பட்டப் பெயர். "

பாத்ரமேள - Pātramēla

பாத்ரமேள அல்லது பாத்ரதேவ என்பது தென் கன்னடத்தைச் சேர்ந்த நாட்டியமாடும் பெண்களுக்கான பெயர். மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே மலைப் பகுதிகளில் கொங்கணி களாவாண்ட்டுகள் (அரண்மனையில் நாட்டியம் ஆடுபவர்கள்) பாத்ரமேளர் என்ற பெயரால் வழங்கப்படுவதாகத் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் திரு.எச்.எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளார்.

பத்ரொ - Pātro

கஞ்சம் பகுதியில் சில கிராமங்களுக்கான ஊர்த் தலைவனுக்கான பெயர். அளிய, காலிங்க, கோமட்டி, தொல், ஜக்கல சாதியாருக்குரிய பட்டப் பெயராகவும் கணக்கெடுப்பின்போது பதியப்பட்டுள்ளது. சாதி எனப்படும் போர்வையினை ஒரு பாத்ரொவிற்குப் போர்த்துவதானது அவனுக்கு நிலத்தைக் கொடையாக அளிப்பதற்கான குறியீட்டு அடையாளமாகக் கருதப்படுவதாகக் கூறப்படுகிறது. பிற சலுகைகளோடு திருமணங்கள் நிகழும்போது ஒரு தொகையினைக் கட்டணமாகப் பெறும் உரிமையும் இவனுக்கு உண்டு. கஞ்சம் மாலியக்களில் இந்தக் கட்டணத்தைச் செலுத்த வசதியற்ற கோண்ட் தன் காதலியிடம் முன்பே குறிப்பிட்ட இரண்டு மரங்களுக்கு அடியே வந்து நிற்குமாறு கூறி அவளைக் காட்டுக்குள் அழைத்துச் சென்று மூன்று பகலையும் மூன்று இரவையும் அங்கு கழிப்பான்.

பாத்ருடு - Pātrudu

அய்யரகுலு, நகராலு ஆகியோருக்கான பட்டப்பெயர். பரிசிலை பெறத் தகுதியானவர்கள் (பாத்திரம்) என்ற பொருளது.

பாட்டதிகாரி - Pāttadhikāri

குறிப்பிட்ட தலைமையிடங்களில் ஜங்கம் வகுப்பாருக்கான பெயர்.

பட்டன் - Pattan

பிராமணப் பட்டர்களுக்குச் சமமான பெயர். கம்மாளர் சிலர் இவர்களுக்குள்ளும் பொற்கொல்லர் எனத் தங்களைக் கூறிக் கொள்வர்.

பட்டனவட - Pattanavada

மொகேர் மீனவர் சாதிக்கான மற்றொரு பெயர். இவர்கள் குடியிருப்பு பட்டனம் எனப்படும்.

பட்டனவன் - Pattanavan

இவர்கள் கிருட்டிணா மாவட்டம் முதல் தஞ்சாவூர் மாவட்டம் வரை கிழக்குக் கடற்கரையினைச் சார்ந்து வாழும் மீனவர்கள். இவர்கள் கடற்கரை சார்ந்தவர்கள் என்ற பொருளில் கரையான் எனவே பெரிதும் வழங்கப்படுகின்றனர். கணக்கெடுப்பின் போது கரையான்கள் சிலர் தங்களைத் தச்சுக் கரையான்கள் எனப் பதிந்துகொண்டுள்ளனர்.

பட்டனவன் என்பதன் நேர்பொருள் பட்டணத்தில் வாழ்பவன் என்பதாகும். நாகப் பெயரோடு இச்சொல்லினை இணைத்து வழங்குகின்றனர். பெரிய, சின்ன என்ற இரு பெரும் பிரிவுகள் பட்டனவன்களிடையே உள்ளன. நெல்லூர் மாவட்டத்தில் உள்ள நடுக்குப்பத்தைச் சேர்ந்தவரிடையே கங்கனங்க, பேயனங்க, காத்தனங்க (கங்கையின் மக்கள், பேயின் மக்கள், காத்தனார் மக்கள்) என்பது போன்ற புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகள் உள்ளன. குள்ளனங்க என்போர் குள்ளர்களின் குழந்தைகளாவர். தெலுங்கு நாட்டில் பட்டனவன்கள் பட்டபு, துளிவாண்டுலு என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

சில பட்டனவன்கள் தங்களை மிக மேம்பட்டவர்களாக உயர்த்திக் காட்டுகின்ற ஆரியர், ஐயாயிரத் தலைவர், ஆரிய நாட்டுச் செட்டி, அச்சு வேளாளன், கரைத்துரை, வேளாளன், வருணகுல வேளாளன், வருணகுல முதலி, குருகுல வம்சம் என்பது போன்ற பட்டப் பெயர்களைத் தரித்துக் கொள்கின்றனர். வருணன் நீர்த் தெய்வமாவான். குரு என்ற பெயர் கௌரவர்களின் முன்னோருக்குரிய அடையாளமாகும். பட்டனவன்கள் சிலர் பிள்ளை என்ற பட்டத்தையும் தரிக்கின்றனர்.

பட்டவன்கள் செம்படவன்களிலும் தாழ்ந்த்வர்கள் எனக் கூறப்படுகிறது. செய்படவர் பட்டனவன்கள் தரும் உணவைப் பெற்று உண்பதில்லை. பட்டனவன்கள் தொட்ட மண் சட்டியினைக் கூட இவர்கள் தூர எறிந்து விடுவர்.

பட்டனவன்கள் தோற்றம் பற்றி ஒரு கதை வழங்குகின்றது. இவர்கள் சிவனுக்குப் பட்டுநூலைத் தந்து வந்தவர்களாகையால் இப்பெயர் பெற்றனர் என்பர். பட்டிணைவோர் பட்டுநூல் பின்னுவோர் – என்ற சொல் திரிந்து பட்டனவர் என ஆயிற்றென்பர். அப்போது இவர்கள் அனைவரும் மணமாகாதவர்களாக இருந்தனர். இவர்கள் தங்களுக்காக மனைவியரைப் பெறச் சிவன் ஓர் உபாயம் கூறினான். அதன்படி இவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்ல அறிவுறுத்தப்பட்டனர். அவர்கள் பிடித்த மீன்களை அவர்களுள் திருமணம் ஆகாதவர்கள் எத்தனை பேரோ அத்தனை குவியல்களாக இடும்படியும் ஒவ்வொருவரும் ஒரு குவியலுக்கு எதிரே நின்று ஒரு மனைவியினைத் தரும்படி கேட்டால் அதிலிருந்து அவனுக்கான மனைவி வருவாள் எனவும் கூறப்பட்டது. மற்றொரு கதை வழக்கின்படி ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் சந்திர குலத்தவனான தாசராசன் என்ற மன்னன் அஸ்தினாபுரத்திற்கு அருகில் இருந்து ஆண்டு கொண்டிருந்தான். அவன் குழந்தைப்பேறு வேண்டித் தெய்வத்தை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவன் தவத்திற்கு மனம் இரங்கிய தெய்வம், தாமரை மலர்கள் நிறையப் பூத்திருந்த ஒரு குளத்தைக் காட்டி அதனருகே சென்று குழந்தைகளை அழைக்கும்படி கூறியது. அவன் அவ்வாறு அழைத்தவுடன் தாமரை மலர்களிலிருந்து ஐயாயிரம் குழந்தைகள் வந்தனர். அவர்களுள் மூத்தவனுக்கு அரசன் தன் ஆட்சியுரிமையினைத் தந்தபின் மற்றவர்களுக்கு மிகுதியான பொருளைக் கொடுத்தான். அதனைப் பெற்றவர்கள் ஒரு கப்பலில் கடலில் தெற்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டனர். அக் கலம் வழியில் உடையவே அவர்கள் கரை சேர்ந்து அங்கு வாழ்ந்த மீனவர்களோடு நட்புக்கொண்டு அவர்கள் தொழிலையே மேற்கொள்வாராயினர். இன்று பட்டனவன்களில் பெரும்பாலோர் கட்டுமரத்தில் கடலில் சென்று வலைவீசி மீன்பிடிப்பவர்களாகவே உள்ளனர். "மூன்று மரக்கட்டைகளை இருமுனைகளையும் இணைத்துக் கட்டித் தெப்பமாக்கி அதில் கடலில் பயணம் மேற்கொள்வதைக் கற்பனை செய்து பாருங்கள். மீண்டும் கரை சேர்ந்தாலும் அதனைப் பிரித்து வெய்யிலில் காயும்படி போடுகின்றனர். ஒவ்வொரு கட்டுமரத்தையும் கடலில் செலுத்த ஒருவர். இருவர் அல்லது மூவர் மட்டுமே இருப்பர். கட்டுமரத்தின் மேல் குதிகாலினை ஊன்றி மண்டியிட்டு அமர்ந்தவர்களாகத் தங்கள் நீள துடுப்பைக் கொண்டு கட்டு மரத்தைத் திறமையுடன் செலுத்தும் செயல் படகு வலிப்பதிலிருந்தும் வேறுபட்டதாகவே தோன்றும். தொடக்கத்தில் இந்தியாவிற்குப் பயணம்

மேற்கொண்ட ஒரு கடற்பயணியின் பயண நாட்குறிப்பேட்டில் கட்டுமரம் தொடர்பாகப் பின்வரும் பதிவு காணப்படுகின்றது. "இன்று காலை ஆறு மணியளவில் இரண்டு கரும் பிசாசுகள் ஒரு குச்சியினை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கக் கண்டோம். இந்தக் குட்டிப் பிசாசுகளை நாங்கள் சுமார் ஒரு மணி நேரம் அவர்கள் எங்கள் பார்வையிலிருந்து விலகித் தொலைவில் மறையும் வரை கவனித்தோம். இந்த நிகழ்ச்சி ஒரு பெரும்புயல் உருவாகப் போவதற்கான உற்பாதமாகும். கட்டுமரங்களைக் கரையிலிருந்து கடலில் மிதக்க விடுவதைப் பார்ப்பது விசித்திரமான அனுபவமாக இருக்கும். சில சமயங்களில் வேகமாகக் கரையினை மோதும் அலைகளை எதிர்த்து அவற்றின்மீது நாட்டியம் ஆடுவதைப் போல கடலில் சேரும். சில சமயங்களில் நீரில் மூழ்கியனவாக அவை கடலில் சென்று சேரும். சிலபோது கட்டுமரத்தைக் கடலில் தள்ளுபவன் ஒரு பக்கமாகவும் கட்டுமரம் ஒரு பக்கமாகவும் அலைகளால் மோதி எறியப்படுவர். எனினும் மாயவித்தை போல அவன் தன் கட்டு மரத்தின்மீது மீண்டும் இருப்பதைக் காணலாம்.* 1906 – ஆம் ஆண்டில் ஒரு மீனவன் சென்னைத் துறைமுகத்திலிருந்து தன் கட்டுமரத்தில் மீன்பிடிக்கப் புறப்பட்டான். கட்டுமரத்திலிருந்தும் தூக்கி எறியப்பட்ட அவன் ஒரு பாறையில் மோதுண்டு உடனே உயிரிழக்க நேரிட்டது. கர்னல் டபிள்யூ.காம்ப்பெல் கட்டுமரங்களைப் பற்றித் தந்துள்ள விவரங்கள் வருமாறு :– X "மனிதன் தன் மதி நுட்பத்தால் கண்டுள்ள தொழில் திறப் புதுமைகளுள் எல்லாம் மிகச் சிறப்பு வாய்ந்தது சென்னையைச் சேர்ந்த கட்டுமரம் ஆகும். மிக எளிமையானதான அது திறன் வாய்ந்ததொரு கருவியாக உள்ளது. தென்னை நார் கயிற்றால் பிணைத்துக் கட்டப்பட்ட பரும்போக்கான மூன்று மரக்கட்டைகளைக் கொண்டதே கட்டுமரம். இதன்மீது அதன் அளவுக்குத் தக்கபடி ஒருவரோ இருவரோ மூவரோ குதிகால்களினால் மண்டியிட்டு அமர்ந்தபடி காற்றையும் காலநிலையையும் பொருட்படுத்தாதவர்களாகக் கரையை மோதி எழும் கடலின் அலைகளை எதிர்த்து வேறு எந்தக் கலமும் கடலில் செல்லத் துணியாத புயல்வீசும் காலநிலையின்போது

---

* ஒரு பெண்மணி சென்னையிலிருந்து அனுப்பிய கடிதங்கள், 1843
(Letters from Madras by a Lady 1843)

X இந்தியா தொடர்பான எனது குறிப்புகள் 1864.
(My India Journal. 1864.)

துடுப்புப் போட்டபடி கடலின் மேற்செல்வர். சற்றுத் தூரம் சென்றவுடன் துணிவு மிக்கவர்களான இந்த மீனவர்கள் கரையிலிருந்து பார்ப்பவர்கள் கண்ணுக்குப் புலப்படாதவர்களாக மறைந்துவிடுவர். இந்தக் கட்டுமரங்கள் கூட்டமாகக் கரையினை நோக்கித் திரும்ப வருதல் காட்டுமிராண்டிகள் ஒத்த இந்தியர்கள் கடலில் இடுப்பளவு நீரில் தங்களை மறைத்துக் கொண்டவர்களாகக் கப்பலை நோக்கி நீந்தி வருவதுபோலத் தோற்றம் தரும்." கட்டுமரம் இரண்டு கட்டைகளைச் சேர்த்துக் கட்டப்பட்ட சிறிய நீண்ட தெப்பம் ஆகும். இந்தக் கட்டுமரத்தை வலிப்பவன் கோமாளியின் தலைக் குல்லாயை ஒத்த தொப்பியினை அணிந்திருப்பான். அதனுள் அவன் வெற்றிலை பாக்குப் புகையிலை உட்பட கடிதங்களையும் வைத்திருப்பான். பெரிய அலை வந்து மோதும்போது அவன் தன் கட்டுமரத்தை விட்டு விட்டுக் கடலில் குதித்தவனாக அலையுள் புகுந்து சென்று மீண்டும் அலையின் மறுபக்கத்தில் தன் கட்டுமரத்தில் ஏறிக் கொள்வான். ஆழமான மிகப் பெரிய மசூலிப் படகுகள் சில உள்ளன. இவற்றின் பலவகைகள் நெகிழ்வு உடையனவாக ஒன்றாகப் பிணைத்துக் கட்டப்பட்டிருக்கும். இப்பலகைக்கு இடையே உள்ள சந்துகளை வைக்கோலைத் திணித்து அடைத்திருப்பர். இத்தகைய ஒரு படகு பல சிறு படகுகள் இருமருங்கும் துணையாகவர (கட்டுமரங்களோடுகூட) எங்களை வரவேற்க வந்தது. கோமாளியின் குல்லாய் அணிந்த கட்டுமரங்களிலிருந்து இருவர் அவர்கள் ஏறிவந்த கட்டுமரங்களின் அளவினும் பெரியதான கொடிகளை ஏந்தியவர்களாக இருந்தனர் " என டப்பெரின் அம்மையார் குறித்துள்ளார். * இன்று வழக்கிலிருக்கும் மசூல எனப்படும் முஸ்ஸொல படகு கர்நாடகக் கடற்கரைப் பகுதிகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து வழக்கில் இருந்து வந்ததான அதே அமைப்புடையதாக உள்ளது. 1673 – இல் இந்தப் படகு பற்றிப் பதியப்பட்டுள்ள விவரம் x வருமாறு :– நான் ஒரு முஸ்ஸொல படகில் கரைக்குச் சென்று சேர்ந்தேன். இதில் பத்து ஆண்கள் துடுப்பு வலித்தனர். இவர்களுள் பின்னால் இருந்த இருவர் தங்கள் துடுப்பையே சுக்கானாகப் பயன்படுத்தினர். நமது படகுகளைப் போல இப்படகுகள் மூட்டிணைப்பால் இணைக்கப்படாமல் வளைக்கப்பட்ட பலகைகள் தென்னை நார்

* இந்தியாவில் அரசப் பிரதிநிதியோடான எங்கள் வாழ்க்கை, 1899

X ரொவும் பிரையரும், பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவில் மேற்கொண்ட பயணம்
(Roe and Fryer, Travels in India in the Seventeenth Century.)

கயிற்றால் பிணைத்துக் கட்டப்பட்டனவாயிருந்தன. அவை தம்மரினால் நுட்பமாக மரக்கட்டைகளைச் சொருகி இணைக்கப்பட்டிருந்ததால் வேகமாக எழும் ஒவ்வொரு அலைக்கும் அவை நெகிழ்ந்து தாக்குப் பிடித்தன. இல்லையானால் நாங்கள் கரை சேர இயலாதவாறு தரைதட்டிப் படகு நெகிழ்வதற்கியலாதபடி நொறுங்கிப் போக வேண்டியதாகியிருக்கும். சென்னையைப் பற்றிய பழமையான யஆவணங்கள் துறைமுகம் கட்டப்படுவதற்கு முன் கரையிறங்கப் பயன்படுத்திய கடற்கரையில் அலைமோதலால் கப்பல் கவிழ உயிரிழந்த ஐரோப்பியர்களைப் பற்றிய பல குறிப்புக்களைத் தருகின்றது.

துறைமுகப் பகுதியில் ஏற்பட்ட புயலில் அகப்பட்ட பல படகுக்காரர்களைத் தீரத்துடன் காப்பாற்றிய வீரச் செயலுக்காகச் சென்னையினைச் சேர்ந்த இரண்டு மீனவர்களுக்கு அரசு அவர்களுடைய வீரச் செயல் பற்றிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட வெள்ளிக் கடகங்களைப் பரிசளித்துள்ளது.

சென்னையில் மீனவர்கள் பிடித்து வரும் கீழ்க்கண்ட மீன்களை ஐரோப்பியர்கள் உண்கின்றனர்.

சிலாமீன்	–	*Cybium Guttatum*
வஞ்சிரம் மீன்	–	*Cybium Commersonii*
சேர்மீன்	–	*Cybium lanceilatum*
கொளங்கான் மீன்	–	*Sillage sihama*
வெள்ளை வௌவால் மீன்	–	*Stromateus - Immature*
சாம்பல் வௌவால் மீன்	–	*Stromateus - Adult*
கறுப்பு வௌவால் மீன்	–	*Stromateus niger*
மடவை மீன்	–	*Mugal subririidus*
நாக்கு மீன்	–	*Psettodes erumai*
கொடுவா மீன்	–	*Lates calcarifer*
சினேப்பர் மீன்	–	Lutjanus msroseus
கல் மீன்	–	Lutjanus ma rginatus
சீனா காலா மீன்	–	Polynemus tetradectylus
காரை மீன்	–	Chorinemus lysan
வெள்ளையன்	–	'Whitebait'

பட்டவன்கள் சைவர்களாயினும் பல சிறு தெய்வங்களையும் கிராம தேவதைகளையும் வழிபடுகின்றனர். சில இடங்களில் இவர்கள் குட்டியாண்டவனைச் சிறப்புக்குரிய கடல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இந்தத் தெய்வத்திற்கு உயிர்ப்பலி தரப்படுவதில்லை எனினும் இத்தெய்வத்தின் உரியனாக உள்ள மீனோடும் பிள்ளை எனப்படும் செம்பு வீரப்பனுக்கு ஆடுகளைப் பலியிடுகின்றனர். பாவாடைராயன், படைத்தலைத் தெய்வம் ஆகியன தஞ்சாவூர் மாவட்டத்தில் வழிபடப்படுகின்ற தெய்வங்களாம். மீன்பிடிக்கக் கடல்மேல் செல்லும்போது பட்டனவன்கள் கடல்தெய்வம், கடல் வலைகள் ஆகியனவற்றை வழிபடுவர். தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டனவன்கள் எட்டு நாள்களுக்கு ஒருமுறை வலைகளைப் பழுது பார்க்கின்றனர். மீன்பிடிக்கப் புறப்படுமுன் இவர்கள் நிறைய மீன் கிடைக்க வேண்டித் தங்கள் தெய்வத்திடம் வேண்டிக் கொள்வர். மீன் பிடிக்கச் சென்றவர்கள் திரும்பியபின் குறிப்பிட்ட ஒரு நாளில் தெய்வங்களுக்குப் படையலிடுவர். பாவாடைராயன், படைத்தலைத் தெய்வம் ஆகிய தெய்வங்கள் ஈரமணலையும் சேற்றையும் கூம்பு வடிவில் குவித்த உருவங்களாக எழுந்தருளச் செய்து வழிபடப்படுகின்றனர். அய்யனார், எல்லம்மா, குட்டியாண்டவர். முத்தயால் ராவுத்தர், கிளியேந்தி ஆகிய தெய்வங்கள் சிறு மணற் கூம்புகளில் எழுந்தருளிவிக்கப்படுவர். மாசிமகம் திருவிழாவின்போது பட்டனவன்கள் கடற்கரையில் தங்கள் தெய்வங்களை வழிபடுகின்றனர். கிராம தேவதையான ஜாட்ரெயிக்கு விழாக் கொண்டாடும் சமயங்களில் இவர்கள் தங்கள் குழந்தைகளை ஜாட்டான் எனவும் ஜாட்டி எனவும் பெயரிட்டு அழைப்பர்.

தொன்றுதொட்டு வருகின்ற கிராமப் பஞ்சாயத்து சபைகள் அதிகாரம் ஏதும் அற்ற வெற்று அமைப்புகள் அல்ல என்பதற்குப் பட்டனவன்கள் சாதிச் சபைகள் நல்ல உதாரணமாகும். பட்டனவன் குடியிருப்பு ஒவ்வொன்றுக்கும் எசமான் எனப்படும் ஒரு சாதித் தலைவன் உள்ளான். அவனுக்குத் தண்டக்காரன் ஒருவனும் பறையன் சலவாதி ஒருவனும் உதவியாளர்களாக உள்ளனர். இந்தப் பதவிகள் அனைத்தும் பரம்பரை உரிமை உடையவை. வயதில் மூத்தவர்களை இழிவுபடுத்தல், சமூகநடைமுறைகளை மீறல், வைதல், பழிதூற்றல், தாக்குதல், கள்ளக்காதல், தாழ்ந்த சாதியாரோடு உடனிருந்து உண்ணல், குடித்தல் ஆகிய குற்றங்களைக் கிராமப் பஞ்சாயத்து சபையார் விசாரிப்பர். வழக்கு

மன்றங்களுக்குச் சென்று இருவரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்துக் கொண்ட போதிலும் அந்த வழக்குகளை மீண்டும் பஞ்சாயத்தாரிடமும் கொண்டு வந்தேயாக வேண்டும். சமூகத்துக்கு உள்ளே சாதித் தலைவன் வைத்ததே சட்டம். அவன் தீர்ப்பே பெரும்பாலும் இறுதி முடிவாக அமையும். இவன் கூறும் தீர்ப்புத் திருப்தி தருவதாக இல்லையெனில் அந்த வழக்கைப் பல ஊர்களுக்குத் தலைவனாக அதிகாரம் செலுத்தும் பெரிய சாதித் தலைவனிடம் கொண்டு செல்வர். சாதித் தலைவன் அனுமதியின்றி எந்தச் சடங்கையும் ஊரில் நடத்துதல் என்பது முடியாது. விருந்தைத் தவிர சடங்கின் நடைமுறைகள் அனைத்தையும் வகுத்து நடத்துபவன் சாதித் தலைவனும் தண்டல்காரனுமேயாவர். திருமண உறவுக்கு சாதித் தலைவன் தன் உடன்பாட்டினைத் தரவில்லையாயின் அந்த உறவு கைவிடப்படும். சாவுச் சடங்கின்போதும் அவன் வந்திருந்து சடங்குகள் அனைத்தும் உரிய முறையில் நடைபெறுகின்றதா என மேற்பார்வை பார்ப்பான். சாவுச் செய்தியினை உறவினர்களுக்குச் சென்று அறிவிக்க வேண்டியது சலவாதியின் பொறுப்பாகும். கடற்கரையில் மீன்கள் குவித்து வைக்கப்பட்டிருக்கும் சமயத்தில் அவன் அங்கு வருவானாயின் அவனுக்குத் தேவையானதை அவன் விருப்பம்போல எடுத்துக் கொள்ளும் உரிமையுடையவனாவான். தண்டல்காரன் தன் பிற பணிகளோடு சாதிப் பஞ்சாயத்தினைக் கூட்டும் பொறுப்புக்கும் உரியவனாவான். பஞ்சாயத்துச் சபையின் உறுப்பினர்கள் கூடியிருக்கும்போது அதன்முன் விசாரணைக்கு உரியவர்களை அழைத்துக்கொண்டு வந்து நிறுத்தும் பொறுப்பும் அவனுடையதேயாகும். அப்போது அவன் தரையில் விழுந்து சபை உறுப்பினர்களை வணங்குவான். வழக்குக்கு உள்ளனாவர்கள் ஒரு வைக்கோலையோ வேறு ஏதேனும் பொருளையோ எடுத்துச் சாதித் தலைவன் முன் சபையினுடைய முடிவுக்குத் தாங்கள் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதன் அடையாளமாக வைப்பர். இது முச்சு சிலிக்காக வைத்தல் எனப்படும் உடன்பாட்டினைத் தெரிவித்தலாகும்.

மண உறவு மேற்கொள்ள மணமக்களின் தாய்மாமன்மாரின் உடன்பாடு பெறவேண்டியது இன்றியமையாததாம். மணநாள் முடிவு செய்யப்பட்டவுடன் மணமகன் குடும்பத்தவர்கள் சாதித் தலைவனுக்கும்

ஊராருக்கும் கிராமத் தாம்பூலம் எனப்படும் வெற்றிலைபாக்கு வழங்குதலை மேற்கொள்வர். திருமணத்திற்கான பால்கம்பமாக மலைப்பாலை *(Mimusops hexandra)* முள்முருக்கு *(Erythrina indica)* சவுக்கு *(Casuarina equisetifolia)* வேறு பச்சை மரக்கிளைகள் ஏதாவது ஒன்று அல்லது உலக்கையை நட்டு வைப்பர். வட்டாரத்திற்கு வட்டாரம் திருமணச் சடங்குகளின் நடைமுறைகள் வேறுபடுகின்றன. ஒரு வட்டாரத்திற்கான திருமணச் சடங்கில் மணப்பந்தலுக்கு மணமகள் வந்து சேர்ந்தவுடன் மணமகன் பூணூலை அணிந்துகொள்வான். பிராமணப் புரோகிதன் புனித நெருப்பினை மூட்டி அதில் நெய்யினை ஊற்றுவான். பின்னர் மணமகன் மணமகள் கழுத்தில் தங்கத்தாலான தகட்டினைப் பட்டமாக அணிவிப்பான். மணமக்களின் கால்விரல்களில் மெட்டி அணிவிப்பர். அன்று மாலை பூணூல், திருமணப் பானைகளுக்கு கட்டப்பட்ட கங்கணம், பால்கம்பத்தின் கங்கணம், முளைப்பாலிகை ஆகியன கடலில் கொண்டுபோய் விடப்படும். திருமண நிச்சயதார்த்தம் முடிந்தவுடனேயே மணமக்களைக் கணவன் மனைவியாக வாழப் பட்டனவன்களில் சிலர் அனுமதி வழங்குகின்றனர். முடிந்த அளவு விரைவில் மணச் சடங்கு நிகழ்த்தப்பட வேண்டும் என்ற உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இத்தகைய அனுமதி வழங்கப்படுகின்றது. கைம்பெண்களின் மறுமணத்தை இவர்கள் எத்தகைய வரையறையுமின்றி அனுமதிக்கின்றனர். கைம்பெண்களின் மறுமணத்தின் போது மணப்பந்தலிடுவதில்லை. மணமகனோ அவனுடைய நெருங்கிய பெண் உறவினர்களோ வீட்டுக்குள்ளாகவே மணமகளுக்குத் தாலி அணிவிப்பர். இதன் காரணமாக இத்தகைய மணங்கள் நடுவீட்டுத் தாலி கட்டிக் கொள்ளுதல் என்றழைக்கப்படுகின்றன. கள்ளக் காதலில் ஈடுபட்ட ஒருத்தி மறுமணம் செய்து கொள்வாளாயின் தங்கத் தாலிக்குப் பதிலாக மஞ்சள் நூல்கயிறு மட்டுமே அவள் கழுத்தில் பெண்ணொருத்தியினால் அணிவிக்கப்படும்.

பட்டனவன்கள் சிலர் இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில் (சமாதி) புதைக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். பிணத்தை எரிப்பதாயின் அதற்கான் நெருப்பினை அம்பட்டனே சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வான். பிணத்தைச் சிதையில் வைத்தவுடன் அதன் மீது அரிசி தூவப்படும். இறந்தவரின் மகன் ஒரு பானையில் தண்ணீரைச் சுமந்தவனாக அம்பட்டன் அல்லது பணிசவன் உடன்வர சிதையினை

மூன்றுமுறை சுற்றி வருவான். மூன்றாவது சுற்றின்போது பணிசவனோ அம்பட்டனோ அந்தப் பானையில் ஒரு பொத்தலிடுவர். பின் தலையினை மழித்துக் கொள்வர். சாவுச் சடங்கின் மறுநாள் அவர்கள் புதைகுழிக்கோ சுடுகாட்டிற்கோ இளநீர், பால், பணியாரம் முதலியனவற்றை எடுத்துச் சென்று படைப்பதோடு இடுகாட்டினைக் காவல்காக்கும் அரிச்சந்திரனையும் வழிபடுவர். அதன்பின் பாலினைப் புதைகுழியின் மீதோ அல்லது எரிக்கப்பட்ட பிணத்தின் எஞ்சியுள்ள எலும்புகளின் மீதோ தெளிப்பர். பின்னர் அந்த எலும்புகள் கடலில் விடப்படும். பதினைந்தாம் நாள் இரவில் பணிசவன் சங்கினையும் கொம்பினையும் ஊதுவான். இறந்தவரின் மனைவிக்கு அவளுடைய கழுத்தைச் சுற்றி ஒரு வெள்ளைத் துணியினைப் போர்த்திய பின் வயதில் மூத்த ஒருத்தி அவளுடைய தாலிக் கயிற்றினை அறுப்பாள். தாலிக் கயிற்றில் உள்ள தாலி அகற்றப்பட்டு அதனைப் புதியதொரு மண்சட்டியில் வைக்கப்பட்டுள்ள தண்ணீரில் இடுவர். இந்தப் பழக்கம் காரணமாகப் பட்டனவன்கள் சாதிப் பெண்கள் ஒருத்தியை ஒருத்தி வையும்போது உன் தாலியை அறுத்துத் தண்ணீரில் போட என வையும் வழக்கம் உள்ளது. பின்னர் அத்தாலியினை எடுத்துப் பாலுள்ள ஒரு தட்டில் வைத்துக் கொண்டு அந்தப் பானையினைக் கடலில் எறிவர். கணவனை இழந்தவளைக் காண வரும் அனைவரும் முதலில் தட்டில் உள்ள அந்தத் தாலியினைப் பார்த்த பின்னரே அவளைக் காண வரவேண்டும். சென்னையில் கோயில் திருவிழாக்கள் தொடர்பான ஊர்வலங்களில தெய்வ உருவங்களின் சப்பரங்களைச் சுமக்கும் தனி உரிமை பட்டனவன்களுடையதாக உள்ளது. உறுதி வாய்ந்த தங்கள் தோளில் தெய்வத்தைச் சுமக்க வரும் இவர்கள் கள்ளும் சாராயமும் குடித்துப் போதை ஏறி மயங்கியவர்களாகவே வருவர்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு ஒன்றிலிருந்து கிடைக்கும் தகவல் வருமாறு :– பதினெட்டாம் நூற்றாண்டில் சேப்பாக்கத்தைச் சேர்ந்த குருகுல வம்சம் எனப்படும் வருணகுல முதலி சாதியினைச் சேர்ந்த படகு உரிமையாளர் சிலரும் படகு வலிப்போரும் கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்களாக அவர்களாகவே நிதி திரட்டிக் கட்டிய ஒரு தேவாலயத்தில் வழிபாடு நிகழ்த்தி வந்தனர். 1799 – இல் அவர்கள் குடியிருப்புப் பகுதி பொதுப்பணிக்குத் தேவையாக இருந்தமையால் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்குப் பதிலாக ராயபுரத்தில்

அவர்களுக்குரியதாக நிலம் பட்டா செய்து தரப்பட்டது. அந்த நிலத்தில் படகுக்காரர்களுக்கு வரிவிதித்தும் ராயபுரம் கடைவீதிக்கு வருபவர்களிடம் சுங்கமாகத் தொகை வசூலித்தும் கிடைத்த தொகையிலிருந்து ஒரு தேவாலயம் கட்டப்பட்டது. சமயப் பணிகளுக்கு என இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட நிதியினை கடற்கரை மீன் வளத் துறையினர் பொறுப்பில் வைத்திருந்தனர். 1829 – இல் இந்தத் தொகையில் ஒரு பகுதி ராயபுரத்தில் உள்ள அருள்திரு பீட்டர் தேவாலயம் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய அந்தத் தொகை யார் பொறுப்பில் இருக்கவேண்டும் என்பதனை முடிவு செய்யவே நீதிமன்றத்தின் முன் வழக்குக் கொண்டுவரப்பட்டது. *

"மீனவர் அருள்திரு சேவியரைத் தங்களைக் காக்கும் இரட்சகராகப் போற்றி வருகின்றனர். காலப்போக்கில் இவரை அவர்கள் தங்கள் தெய்வமாகவே ஆக்கிக் கொண்டுவிட்டனர். தற்போது இவர்கள் புயலிலும் அலையிலும் அகப்பட்டு ஆபத்துக்கு உள்ளாகும் வேளைகளில் 'சேவியரே! சேவியரே! சேவியரே!' என அவரை நோக்கியே அடைக்கலக் குரல் எழுப்புவர். தங்கள் மீன் பிடி பயணத்தில் மீன் அகப்படாதபோதும் அவருடைய உதவியினை வேண்டுவர் " எனத் திருமதி.எப்.இ.பென்னி குறிப்பிடுகின்றார்.

பழைய ஈயக்காசுகளை உருக்கி வளையலில் பிணைக்கும் ஈயக்குண்டுகளாக்கும் இவர்களுடைய பழக்கம் பழைய நாணயங்கள் சேகரிப்பதில் ஆர்வமுடைய எனக்குக் கட்டோடு பிடிப்பதில்லை.

பட்டபு – Pattapu

தெலுங்கு நாட்டில் சென்று குடியமர்ந்துள்ள தமிழ்ப் பட்டனவன்கள் பட்டபு அல்லது துணிவாண்டு என அழைக்கப்படுகின்றனர். யெருகலர் சாதியின் ஓர் உட்பிரிவாகவும் பட்டபு என்பது உள்ளது.

---

* *See Civil Suit No.102 of 1880*

(சொத்துரிமை வழக்கு எண் 102 ஆண்டு 1880)

பட்டர் – Pattar

மலபாரில் சென்று குடியேறியுள்ள தமிழ்ப் பிராமணர்கள் பட்டர். பட்ட என்ற வடமொழிச் சொல்லிலிருந்து இப்பெயர் வந்ததாகக் கூறுவர். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தஞ்சாவூரைச் சேர்ந்த நோக்கன்கள் சிலர் பட்டர் (குரு என்ற பொருளில்) என்ற பட்டப் பெயரை அண்மைக் காலத்தில் தரித்துக் கொண்டிருப்பதாகப் பதியப்பட்டுள்ளது. (பார்க்க : பிராமணர்)

பட்டரியர் – Pattariar

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பட்டரியர் என்பது பட்டு சாலியன் (பட்டு நெசவாளர்) என்பதன் தமிழ்க் கொச்சை வழக்குச் சொல் எனப் பதியப்பட்டுள்ளது. பட்டரியர் அல்லது பட்டளியர் தமிழ்பேசும் சாலியருக்கான மற்றுமொரு பெயராகும்.

பட்டக்காரன் – Pattegāra (headman)

ஒக்கிலியன்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

பட்டிண்டில – Pattindla (Silk house)

தோட. பலிசருக்கான புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

பட்டொல மேனோன் – Pattola Mēnōn

1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகும் எனப் பதியப்பட்டுள்ளது. இவர்கள் நிலக்கிழார்களின் குடம்பங்களில் கணக்கப் பிள்ளைகளாக இருப்பவர்கள்.

பாட்டுக் குருப்பு – Pāttu Kuruppu

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் உட்பிரிவான வாத்திக்கான மற்றொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

பட்டு சாலே – Pattu Sāle

சாலே சாதியின் உட்பிரிவு. பட்டு நெசவு செய்யும் தொழில் மேற்கொண்டவர்கள்.

பட்டுவீடன் - Pattuvitan

1901 திருவாங்கூர் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

பட்வேகாரர் - Patvēgāra

தென் கன்னடத்தைச் சேர்ந்த பட்வேகாரர் அல்லது பட்டேகாரர் (பட்டு) என்பவர்கள் பற்றித் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் கூறியிருப்பதாவது :- "இவர்கள் பட்டு நெசவாளர்களான கன்னடம் பேசும் சாதியார். இந்துக்களான இவர்கள் சிவனையும் விட்டுணுவையும் வழிபடுகின்றனர். பர்கூரிலுள்ள துர்க்கா பரமேசுவரியே இவர்கள் சிறப்பாக வழிபடும் தெய்வம். பூணூல் அணியும் இவர்கள் பிராமணர்களைத் தங்கள் சடங்குகளை நடத்த அமர்த்துகின்றனர். பத்து ஆண்கள் கொண்ட சாதிச் சபைக்குக் கட்டுப்பட்டவர்களான இவர்கள் ராமச்சந்திர மடத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். பலிகளாகப் (குலம்) பிரிவுபட்டுள்ள இவர்கள் பலிக்குள்ளாகவே மண உறவு மேற்கொள்வதில்லை. மனைவி மலடியாக இருந்தாலோ கொடிய நோய்களுக்கு ஆட்பட்டாலோ மட்டுமே பல மனைவியரை மணக்க முற்படுகின்றனர். மணத்தை உறுதிசெய்யும் சடங்கு தாரெ நீர் வார்த்தலாகும். கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுவதில்லை. மனைவி புறத்தொழுக்கமாக வேறொருவனோடு உறவு கொண்டிருந்தால் மட்டுமே மணமுறிவு அனுமதிக்கப்படுகிறது. இந்துக்களுக்கான பொதுவான சொத்துரிமை முறையினையே இவர்கள் மேற்கொள்கின்றனர். இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் சிரார்த்தச் சடங்கினையும் மூத்தோரை வழிபடுவதற்காக ஆண்டுதோறும் வத்தப் எனப்படும் சடங்கினையும் நிகழ்த்துகின்றனர். அப்போது சுமங்கலிக்கு உணவு இடுவர். மீனை உண்ணும் இவர்கள் இறைச்சியினை உண்பதில்லை. மதுவகைகள் விலக்கப்பட்டனவாகும். "

1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பட்வேகாரர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :- "பட்டு நெசவாளர்களான இவர்கள் குசராத்தியும் இந்தியும் கலந்த கலப்படமான மராத்தி மொழியினைப் பேசுகின்றனர். இந்து தெய்வங்கள் அனைத்தையும் வழிபடும் இவர்கள் சக்தி தேவியிடம் சிறப்பான ஈடுபாடுடையவர்களாகத் தசராவின்போது

ஒரு ஆட்டினைத் தேவிக்குப் பலியிடுகின்றனர். ஒரு முசல்மானே இச் சடங்கில் பலி ஆட்டினை வெட்டுகின்றான். பலிக்குப் பிறகு பட்வேகாரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அதன் இறைச்சியினை உண்ண எடுத்துக் கொள்கின்றனர். இந்தச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் அழகும் நல்ல நிறமும் வாய்க்கப்பட்டவர்களாயினும் குழந்தை மணத்தின் காரணமாகவும் இளமையிலேயே மணவாழ்வில் ஈடுபடுவதாலும் விரைவில் தங்கள் அழகை இழந்து விடுகின்றனர். " கொச்சையான மராத்தி மொழி பேசும் பட்வேகாரர் சிலரை அனந்தப்பூர் மாவட்டத்திலும் காணலாம்.

பவளம்கட்டி – Pavalamkatti (wearer of corals)

கொங்கு வேளாளரின் ஓர் உட்பிரிவு.

பவினி – Pavini

பார்க்க : வயனி See : Vayani

பய்யம்பாடி – Payyampātti

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

பெதகண்டி – Pedakanti

பெதகண்டி என்ற பெயர் காபுகளின் உட்பிரிவு ஒன்றுக்கான பெயர். பெதகல்லு என்ற ஊர்ப் பெயரிலிருந்து வந்தது இப்பெயர் என்று சிலர் கருதுகின்றனர். மற்றவர்கள் இதனை பெத (வேறுபக்கம்), கம்ம (கண்) எனப் பிரித்துத் தங்களோடு பேசுபவர்களை நேரே பார்க்காது வேறுபக்கம் கண்ணைத் திருப்பிக் கொள்பவர்கள் எனப் பொருளுரைப்பர். விறைப்பான கழுத்தை உடையவர் எனப் பொருள் கூறுவாரும் உளர்.

பெத்த – Pedda (big)

போயர், பகடர், கொண்ட தொரையர், பட்டபு, வெலமர் ஆகிய சாதிகளுக்கு உரிய உட்பிரிவின் பெயர்.

பெத்தம்மவாண்டுலு – Peddammavandlu

தெலுங்குப் பிச்சைக்காரர்கள் சிலர் தங்களை இவ்வாறு கூறிக் கொள்வதில் விருப்பம் உடையவர்களாயுள்ளனர்.

பெத்திடி – Pedditi

கொல்லர்களின் ஓர் உட்பிரிவு. இப்பிரிவைச் சேர்ந்த சிலர் மற்றவர்களைப் புகழ்ந்து வாழ்த்தி இரப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

பேகுல – Pēgula (intestines)

போயர்களின் புறமணக்கட்டுப்பாட்டுடைய குலம். குடல் எனப் பொருள்படுவது.

பெக்கன் – Pekkan

தோடரின் ஒரு பிரிவு.

பெண்டுகள் – Pendukal (women)

திருவாங்கூரில் தேவதாசிகளைக் குறிக்கும் சொல்.

பெங்கு – Pengu

பொரசரின் ஓர் உட்பிரிவு.

பெண்ணேகாரர் – Pennēgāra

கொங்கணி பேசும் தென் கன்னடத்தைச் சேர்ந்த நெல்குற்றும் சாதியார்.

பெண்டிய – Pentiya

பெண்டியர் தங்களை ஹொலுவர், ஹலபா, உல்பா எனவும் அழைத்துக் கொள்கின்றனர். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்கள் பண்டியர் எனவும் பெண்டியர் எனவும் ஒரியரான வெற்றிலை விற்போர் எனவும் கூறப்பட்டுள்ளனர். செயப்பூர் முகவர் பகுதியில் இவர்கள் பயிரிடுவோராக உள்ளனர். இவர்கள் பஸ்தரிலிருந்து குடிபெயர்ந்து வந்து பெண்டிகொன்னாவில் குடியமர்ந்த காரணத்தால் பெண்டிகொனய, பெண்டிய எனவும் அழைக்கப்படுவதாக திரு.சி.ஹயவனதனராவ் கூறுகின்றார். பெண்டியர் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. சி. ஹயவதன ராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். ஒரியமொழி பேசுபவர்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய ஹல்ப மொழியினை இவர்கள் பேசுகின்றனர். பொடொ (பெரிய அல்லது உரிய) சென்னொ (சிறிய) என்ற அகமணக் கட்டுப்பாடுடைய பிரிவுகளாக இவர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவினருள் பின்னவர்

முன்னவர்களின் முறையற்ற உறவின் வழிப் பிறந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. கூர்ம் (ஆமை), பாக் (புலி), நாக் (நாகம்), சூரிய (கதிரவன்) போன்ற குலங்களாகவும் பொடொ பிரிவினர் பிரிக்கப்பட்டுள்ளனர். சாதி நடைமுறைகளை மேற்பார்க்கச் சிறப்பான அமைப்பினைக் கொண்டுள்ள இச்சாதியின் உள்ளூர்த் தலைவன் பகத நாயகோ எனப்படுவான். பிரதானி, உம்ரிய நாயகொ, தொலாயி ஆகிய உதவியாளர்கள் இவனுக்கு உள்ளனர். சாதியினைச் சேர்ந்த செய்தி அறிவிப்பவன் சொலாணொ எனப்படுவான். சாதியினைச் சேர்ந்தவர்களைக் கூட்டத்திற்கு அழைக்கும் இவன் வெள்ளியாலான ஒரு தண்டினைத் தன்னொடு எடுத்துச் செல்வான். பஞ்சாயத்துச் சபையாரால் விசாரிக்கப்பட்டு சாதிவிலக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும சாதியில் சேர்த்துக் கொள்ளும்போது விரிவான சடங்கு ஒன்று நிகழ்த்தப்படுகின்றது. அவனை ஒரு ஓடைக் கரைக்கு அழைத்துச் சென்று அங்கு அவன் நாவினை பக்த நாயகோ வெள்ளி அல்லது தங்கக் கம்பியால் சுடுவான். பின்னர் பூரி சகன்னாதர் கோயிலில் இருந்ததான பிரசாதம் கொஞ்சம் அவனுக்கு வழங்கப்படும். பின் அவனை அவன் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். அங்கு அவன் ஒரு விருந்து தருவான். நாயகோ அதில் சிறப்பு விருந்தாளியாகப் பங்கு பெறுவான். அங்குக் கூடியுள்ள சாதியைச் சேர்ந்த பெரிய மனிதர்களுக்கு அவன் புதிய வேட்டியினையும் வழங்கவேண்டும். அப்போது சாதியினைச் சேர்ந்த நான்கு தலைவர்களும் பெறும் வேட்டியின் மதிப்பு மற்றவர்களுடையதனைக் காட்டிலும் மிகுதியாக இருக்கும். விருந்து முடிந்தபின் அவன் கொஞ்சம் சோற்றைக் கையோடு எடுத்துக் கொண்டவனாக அந்த ஓடைக்குச் சென்று அதனை அங்கே விடுவான். பின் அதில் குளிக்கும் அவன் தீட்டு நீங்கியவனாவான்.

சிறுமியர் பூப்படைவதற்கு முன்பு அல்லது பூப்படைந்த பின்பு ஆகிய ஏதேனும் ஒரு வகையில் மணம் செய்விக்கப்படுகின்றனர். மணமகள் வீட்டைச் சேர்ந்தவர்கள் மணமகனோடு புறப்பட்டு மணமகள் ஊரினை அடைந்து வேறு ஒரு வீட்டில் தங்குவர். பின் அவர்கள் மணமகளின் தாயாருக்காக மூன்று துணிகளையும் மணமகள் தந்தைக்கு மூன்று ரூபாய்களையும் மணமகள் உடன்பிறந்தவர்களுக்கு ஆளுக்கு ஒரு வேட்டியும் இரண்டணாவினையும் அரிசி, சாராயம் முதலிய பிற பொருள்களையும் உடன்கொண்டு சென்று மணமகள் வீட்டில்

அன்பளிப்பாகத் தந்து வருவர். மணமகன் தங்கியுள்ள வீட்டின் முன் ஒன்பது சால் (***Shorea robusta***) மரக் கம்பங்களையும் மணமகள் வீட்டின் முன் ஐந்து கம்பங்களையும் நட்டுப் பந்தலிடுவர். அந்தப் பந்தல்களில் அரிசியும் சாதிக்காயும் உள்ள பானைகள் கட்டித் தொங்கவிடப்படும். மணமக்கள் குளித்தபின் மணமகன் மணமகள் வீட்டிற்குச் செல்வான். மணச் சடங்கை நடத்தும் தாசரி பூணூல் அணிந்தவனாக மணப்பந்தலை, நடுவே ஒரு திரையினைக் கட்டி இரண்டு பகுதிகளாகப் பிரிப்பான். மணமக்கள் பந்தலை ஏழுமுறை சுற்றியபின் அந்தத் திரை அகற்றப்படும். பின் மணமக்கள் மணப்பந்தலில் நுழைய தாசரி அவர்கள் சிறுவிரலை இணைத்து வைப்பான். விருந்தோடு அன்றைய சடங்குகள் முடிவுறும். அதற்கும் மறுநாள் மணமகளை மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வர். அங்கு அவர்கள் ஒருவர்மீது ஒருவர் மஞ்சள் நீர் தெளித்துக் கொள்வர். பின் அவர்கள் ஒரு சிற்றோடையிலோ அருவியிலோ குளிப்பர். மீண்டும் ஒரு விருந்து நடத்தப்படும். அதில் மது அருந்துவதும் குதித்து ஆடுதலும் எல்லை மீறியனவாக இடம்பெறும். கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுகின்றது. இறந்துவிட்ட அண்ணன் மனைவியினைத் தம்பி மணந்து கொள்ளலாம். இறந்தவர்கள் எரிக்கப்படுகின்றனர். சாவுத் தீட்டுப் பத்து நாள்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. அச் சமயத்தில் இறந்துபோனவரின் குடும்பத்திற்கு வேறு குலத்தைச் சேர்ந்தவர்கள் உணவளித்து வருவர். பத்தாம் நாள் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு விருந்து அளிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாத அமாவாசையின் போது பெண்டியர் பிராமணர்களுக்கு அரிசியினை வழங்குவதாக 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அம் மாதத்தில் சனிக்கிழமைகளில் பெண்டியர் காமில்லி என்ற தேவதையினையும் வழிபடுகின்றனர். அவ்வாறு வழிபாடு நடத்தப்படும் ஒரு வீட்டிலிருந்து பெண்டியரைத் தவிர வேறு சாதியார் யாரும் எதனையும் எடுத்துச் செல்லமாட்டார்கள். அவ்வாறு எடுத்துச் சென்றால் அத்தேவதை அவர்களைத் தொடர்ந்து வந்து அவர்களையும் அவளுடைய பக்தர்களாக ஆகும்படி வற்புறுத்தும் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

நாயகொ என்பது இச்சாதியாருக்கு உரிய பட்டப் பெயர்.

பெரக - Peraka (title)

தேவாங்கர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

பெரிகெயர் - Perike

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இச்சொல் சாக்குப்பையினைக் குறிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. பெரிகெயர் கோணிப்பை நெசவு செய்யும் தெலுங்குச் சாதியார் எனவும் தமிழ்ச் சாதியாரான சணப்பர்களை இவர்கள் ஒத்தவர்கள் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது. இந்தியர் வணிகத்திற்கு இன்றியமையாததாகச் சணப்பு நாரிலிருந்து தயாரிக்கப்படும். முரட்டு சாக்கானான பையே கோணிப்பை. 1891 கணக்கெடுப்பு அறிக்கையில் பெரிகெயர் பற்றிக் கூறப்பட்டுள்ளவை வருமாறு :- "பெரிகெயர் தங்களைத் தனித்த சாதியினர் எனக் கூறிக் கொண்டாலும் இவர்கள் பலிசரின் தாழ்ந்த உட்பிரிவினரான உப்புப் பலிசரோடு ஒத்த உட்பிரிவினரே எனத் தெரிகின்றது. எருதுகளின் மீதும் கழுதைகளின் மீதும் கோணிப்பையில் (பெரிகே) உப்பினையும் தானியங்களையும் போட்டுக் கொண்டு செலுத்திச் சேர்ப்பதே இவர்களுடைய பரம்பரைத் தொழில். கவரை மற்றும் பலிசர் சாதிகளுக்கு உரிய உட்பிரிவாகவும் பெரிகெ என்ற பிரிவு உள்ளது. இவர்களுள் சிலர் குறிப்பிடத்தக்க அளவு செல்வ வளம் படைத்தவர்களாகத் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக் கொள்கின்றனர். பரசுராமனுக்கு அஞ்சியவர்களாக (பிரிகெயராக) ஓடி ஒளிந்த சத்திரியரின் பரம்பரையில் வந்தவர்கள் என இவர்கள் கூறிக்கொள்கின்றனர். மற்றவர்கள் இவர்கள் மலைப் பகுதிகளில் சென்று அதனைத் (கிரி) தங்கள் வாழ்விடமாகக் (புரி) கொண்டு வாழ்ந்தவர்கள் எனக் கூறுவர். " இந்தப் பெரிகெ 'சத்திரியர்' புரகிரி சத்திரியர் எனவும் கிரிராசு எனவும் அழைக்கப்படுகின்றனர். விசாகப்பட்டினம் மாவட்டக் கையேட்டில் பெரிகெ பலிசருள் பெரும்பாலோர் பயிரிடுகையில் வணிகத்திலும் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இவர்களுள் சிலர் மாநிலத் தலைநகரான சென்னையிலும் விசாகப்பட்டினத்திலும் உயர்ந்த பதவிகளில் உள்ளனர்.

முன்னாளில் பெரிகெயர் சாதிப் பெண்கள் அடிக்கடி தங்கள் கணவரோடு கூட உடன் உயிர் துறந்து (சதி) வந்துள்ளனர் எனத் தெரிகின்றது. அவ்வாறு உயிர் துறந்தவர்களை இன்றும் போற்றுதலுக்கு

உரியராக வழிபட்டு வருகின்றனர். இறந்தவர்களை எரித்த சாம்பலைப் புதைத்த இடத்தில் பெரிய மேடை அமைத்து அதில் துளசிச் செடியினை நட்டுவைக்கும் தனித்ததொரு பழக்கம் இவர்களுடையே உள்ளது. விசாகப்பட்டினத்திற்கு அருகே உள்ள சீரப்பள்ளியில் இத்தகைய மேடைகள் வரிசையாக அமைந்திருக்கக் காணலாம் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அவ்வழியாகச் செல்பவர்கள் ஒரு அரக்கு வளையலையோ மலர்களையோ அம் மேடைகளின் மீது வைத்துத் தங்கள் போற்றுதலைத் தெரிவிப்பதும் உண்டு. அண்ணா, அய்யா என்பனவே பெரிகெயருக்கு உரிய வழக்கமான பட்டப் பெயர்கள். சிலர் ராவ், ராயடு எனத் தங்கள் சத்திரிய குலத் தொடர்பு புலப்படும்படியாகப் பட்டப்பெயர் தரித்துக் கொள்வதும் உண்டு.

கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த பெரிகெயரைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.எப்.ஆர்.ஹெமிங்வே அவர்களுக்குக் கடப்பாடுடையேன் :- "கம்மர் சிலர் கூறிக்கொள்வதைப் போலவே இவர்களும் தங்களைச் சத்திரியர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். பரசுராம் குலத்தவராக இருந்த இவர்கள் கோணிப்பை நெய்பவர்களைப் போல நடித்து அவனுடைய உடன் பிறந்தவளைக் கடத்திச் சென்ற காரணத்தால் அவனால் துரத்தப்பட்டவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். மகாபாரதத்துள் கூறப்பட்டுள்ள நளனுடைய மனைவியான தமயந்தியினை அவன் கைவிட்டுச் சென்ற காலத்தில் போற்றிக் காத்து வந்தமைக்கு நன்றி பாராட்டுவதற்காக நளனே தங்களை இந்த நாட்டிற்கு அழைத்து வந்ததாக இவர்கள் கூறுவர். வரகுபட்டர் என்ற இரவலர் பிரிவினை இவர்கள் பாதுகாத்து வருகின்றனர். நாடு கடத்தப்பட்ட இவர்களை அச்சமயம் காப்பாற்றி வந்த வரகு பட்டர்களுக்கு நன்றி காட்டுவதற்காகவே வரகு பட்டர்களுக்கு இவர்கள் பிச்சையிட்டு வருவதாகவும் தங்களிடம் அவர்கள் இரக்கும் உரிமையுடையவர்கள் என்பதனை ஒரு சன்னத்து (பட்டயம்) அளித்து உறுதி செய்து இருப்பதாகவும் கூறுவர். வரகு பட்டர்கள் ஒவ்வொரு ஆண்டும் பெரிகெயர் இல்லங்களை நாடிச் செல்வர். பீசு பெரிகெயர் இன்றும் கோணிப்பை நெய்வதனையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் பெரிகெயரின் முறையான சாதிக்குரியவர்களல்லர் எனக் கூறப்படுகிறது. இப்பிரிவினர் தங்களை ராச பெரிகெயர் எனக் கூறிக் கொள்வர்.

"கோமட்டிகளிடையே இருப்பதைப் போலவே தங்களிடையேயும் 101 கோத்திரங்கள் இருப்பதாகப் பெரிகெயர் கூறுவர். இவர்கள் திருமணச் சடங்குகள் தனித்த இயல்புடையவை. மணநாளன்று மணமக்கள் விரதமிருப்பர். அவர்களுக்கு உறவினர்களாக உள்ள ஆரியாகடர் எனப்படும் மூவர் அவர்களோடு கூட விரதம் மேற்கொள்வர். திருமணத்தின்போது மணமக்கள் ஒரு கோணிப்பையின் மீது அமர்வர். மற்றொரு கோணிப்பையில் இவர்கள் சாதிக்குரிய தெய்வமான மைலரின் வண்ண உருவத்தைத் தீட்டி மணமக்களிடையே விரித்துப் போடுவர். அதே தெய்வத்தை மேலும் இரண்டு பானைகளில் வரைந்து வைப்பர். அந்த இரண்டு பானைகளிலும் மற்றொரு பானையிலும் அரிசி, பருப்பு ஆகியவைகளை இட்டு இரண்டு பெண்கள் சமைப்பர். அந்தப் பொங்கல் பின்னர் மைலருக்குப் படைக்கப்படும். அதன்பின் விரதம் இருக்கும் மூன்று சூரிபகடர்களும் 101 பருத்தி நூல்களை எடுத்து ஒன்றாகத் திரித்து அதில் ஏழு முடிச்சுகளை இடுவர். மஞ்சளும் சுண்ணாம்பும் இடப்பட்ட நீரில் மணமக்களின் உடைகளை நனைத்து அவர்களுக்கு வழங்குவர். பானைகளில் சமைத்து மைலருக்குப் படைக்கப்பட்ட பொங்கலை சூரிபகடருக்கு உண்ணத் தருவர். அதன்பின் மணமக்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். அவர்கள் திரும்பி வந்தபின் ஏழு முடிச்சுகளிடப்பட்ட கயிறு, தாலிக்குப் பதிலாக மணமகள் கழுத்தில் கட்டப்படும்.

சில பெரிகெயர் தங்களைச் சாத்து வாண்டுலு என அழைத்துக் கொள்கின்றனர். குழுவாகப் பயணம் செய்யும் வணிகர் என்பது இதன் பொருளாகும்.

பெரிகெ முக்குலர் தெலுங்குச் சாதியாரான இரவலர்களும் பேயோட்டிகளுமாவர்.

பெரிய – Peria (big)

பெரிய, பெரியணான் என்பன காராளன், குன்னுவன், ஓச்சன், பட்டனவன் ஆகிய சாதிகளுக்குரிய உட்பிரிவின் பெயராகும். இதற்குச் சமமான பெரு, பெரும் என்பன மலையாளம் கொல்லர், வண்ணார் ஆகிய சாதிக்காரருக்குரிய உட்பிரிவின் பெயராகவும் பதியப்பட்டுள்ளது. பெரிம் என்பது திருவாங்கூரைச் சேர்ந்த காணிக்காரர்களின் புறமணக் கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றின் பெயராகவும் உள்ளது.

பெருகதன்னாய – Perugadannāya (bandicoot rat sept)

பண்டர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். பெருச்சாளி எனப் பொருள்படுவது.

பெருந்தாலி – Perum Tali (big tali)

இடையர், கைகோளர் சாதிகளுக்குரிய உட்பிரிவின் பெயர். இப்பிரிவினர் பெரிய உருவிலான தாலியினை அணிவர்.

பெருமாள் – Perumāl

விட்டுணுவுக்கான மற்றுமொரு பெயர். தீவிர வைணவர்களான பள்ளியருள் சிலர் இப்பெயரைத் தரித்துக் கொள்வர். இரவலர்களான இவர்கள் காளைகளை வைத்து வேடிக்கைக் காட்டியபடி சென்னை மாநிலமெங்கும் திரிவதால் பெருமாள் மாட்டுக்காரன், பெருமாள் எருதுக்காரன் எனவும் அழைக்கப்படுகின்றனர். பெருமலைத்தில்லோம் என்ற பெயர் திருவாங்கூரைச் சேர்ந்த காணிக்காரருக்குரிய இல்லப் பெயராகும். இது பெரிய மலை வீடு எனப் பொருள்படுவதாகலாம்.

பெசல –Pesal (green gram)

ஜோகியரின் மணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

பேட்டை – Pēta (streeet)

பலிசரின் ஓர் உட்பிரிவு.

பெட்டி கெயவாரு – Pettigeyavāru (box)

கங்காதிகார வக்கலிகரின் ஓர் உட்பிரிவு. பெட்டி எனப் பொருள்படுவது.

பிச்சிக – Pichiga (sparrow)

போயர், தேவாங்கர் ஆகிய சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். சிட்டு எனப் பொருள்படும். இதற்கு சமமான பிடல் என்பது மாலர்களின் ஒரு குலம்.

பிச்சிகுண்ட – Pichigunta

பிச்சிகுண்ட என்பதன் நேர்பொருள் பிச்சைகாரர்களின் கூட்டம் என்பதாகும். நெல்லூர், கர்நூல் மாவட்டக் கையேடுகளில் இவர்கள்

தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த இரவலர்கள் எனவும் காய்ச்சல், வயிற்றுவலி முதலிய நோய்களுக்குப் பச்சிலை மருத்துவம் செய்வோர் எனவும் கூறப்பட்டுள்ளது. நாட்டுப்புற முழவினை முழக்கியபடி இவர்கள் பழங்கதைகளையும் வரலாறுகளையும் கூறி வருவதோடு செல்லும் இடந்தோறும் அங்கு வாழ்வோர் சிறப்புக்களை எடுத்துக் கூறுவர். குடும்பங்களின் பரம்பரை வரலாற்றை அறிந்தவர்கள் எனப்போற்றப்படும் இவர்கள் காபுகள், கம்மர், கோல்லர் முதலிய சாதியினருக்குப் பரம்பரைப் பெயர்களையும் கோத்திரப் பெயர்களையும் படைத்துக் கூறுவர் எனவும் கூறப்படுகின்றது.

சேலம் மாவட்டக் கையேட்டில் பிச்சை எனப்படும் பிஞ்சிகுண்டர் பற்றிக் கூறப்பட்டுள்ளது வருமாறு :- " இவர்கள் பயிரிடுவோரான குடியானவர் என்ற பெயருக்கு உரியவர்களான வேளாளருக்கும் பள்ளியருக்கும் பணியாளர்களாக விளங்குபவர்கள். கதை வழக்கு ஒன்றின்படியாக செய்தி வருமாறு :- "ஒரு வேளாளனுக்கு 102 குழந்தைகள் இருந்தனர். அவர்களுள் ஒரு குழந்தை மட்டுமே பெண்ணாக இருந்தது. ஆண்களுள் ஒன்று முடமாக இருந்தது. நூறு சகோதரர்களும் அந்த முடவனுக்கு ஒரு கொலுகம் தானியமும் ஒரு பணமும் தருவதென முடிவு செய்தனர். அவர்கள் அவனுக்கு வேறு சாதியினைச் சேர்ந்த தெலுங்கு பேசும் பெண் ஒருத்தியினை மணம்முடித்து வைத்தனர். அந்தத் திருமணத்திற்கு இன்னிசை வாசித்த இசைவாணர்களுக்கு அந்தச் சகோதரர்கள் கட்டணம் ஏதும் செலுத்தவில்லை. மணமகன் முடவனாகையினாலே இசைவாணர்கள் தருமத்திற்கு ஊதவேண்டும் என அச் சகோதரர்கள் கூறிவிட்டனர். இந்தத் தம்பியருக்குப் பிறந்த குழந்தைகள் அவர்களுக்கெனத் தனியே சாதி ஏதும் இல்லாத காரணத்தால் பிச்சி அல்லது பிஞ்சிக்குண்டர் (பிச்சைக்காரர் அல்லது முடவர்) என அழைக்கப்பட்டனர். வேளாளர்கள் அவர்களைத் தங்களைக் காட்டிலும் சாதியில் தாழ்ந்த குடிப்பின்னைகளாக கருதினர். அந்த நூறு வேளாளரின் பரம்பரையினரிடம் இன்றும் இவர்கள் தங்கள் மிராசைப் (கட்டணம்) பெற்று வருவதோடு தங்களுக்கு அறிமுகமான வேளாளர் வீட்டுத் திருமணங்களிலும் திருவிழாக்களின்போதும் குடும்பங்களின் கால்வழிகளைப் பாட்டாக எடுத்துக்கூறி வருகின்றனர். சிலர் வேளாளர்களின் நிலங்களில் உழைக்கின்றனர். மற்றவர்கள் பிச்சை எடுத்து வருகின்றனர்."

தொட்டியர் சாதிக்குரிய இரவலர்கள் பிச்சிக வாடு என அழைக்கப்படுகின்றனர்.

பிடகல - Pidakala (Cowdung cakes)

தேவாங்கர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய குலம். வறட்டி எனப்பொருள்படும் இதனை இந்தியர்கள் அடுப்பு எரிக்கப் பெரும் அளவில் பயன்படுத்துகின்றனர். வீட்டுச் சுவர்களில் இதனை அப்பியிருக்கக் காணலாம்.

பிடாரன் - Pidāran

அமபலவாசிகளின் ஒரு பிரிவினர். இவர்களைப் பற்றி மலபார் மாவட்டக் கையேட்டில் திரு. லோகன் கூறியுள்ளது வருமாறு :- "மதுபருகும் பழக்கம் உடைய இவர்கள் பேயோட்டுவதோடு சக்தி, பத்ரகாளி ஆகிய தேவதைகளையும் வழிபடுகின்றனர். இப்பெயர் பாம்பு பிடிப்பவர்களுக்கும் உரியதாக உள்ளது. இச் சாதியார் வழிபடுகின்ற தேவதைகளில் குடிகொண்டுள்ள மனிதனுடைய உணர்வுகளின் உருவகமாகப் பாம்பு கொள்ளப்படுவதால் இவர்களுக்கு இப்பெயர் தரப்பட்டதாதல் வேண்டும்.

பிலபள்ளி - Pilapalli

பிலபள்ளியர் திருவாங்கூரைச் சேர்ந்த சிறியதொரு சாதியார் அல்லது வகுப்பார். இவர்களைப் பற்றித் திரு.எஸ்.சுப்ரமணிய அய்யர் பின்வருமாறு எழுதியுள்ளார் * :- "பரசுராமனுடைய நாட்டில் அற்ப நிகழ்ச்சிகளே எப்படிப் புதிய சாதிகள் தோன்றக் காரணமாகின்றன என்பதனைப் பின்வரும் செய்தி விளக்குவதாகும். பிலபள்ளி என்ற சொல் வலிந்து தள்ளப்பட்டவர் எனப் பொருள்படும் பெலால்தள்ளி என்பதன் திரிந்த வடிவமாகும். இந்தப் பெயரின் பொருளே இச்சிறிய சாதி எவ்வாறு தோன்றியது என்ற வரலாற்றினை மிகச் சுருக்கமாக விளக்குவதாகும். செண்பகச்சேரி அரசர்கள் சிறப்புடன் ஆண்டுவரும் நாளில் மலையாள ஆண்டு 858 - வாக்கில் அப்பொழுது அம்பலப்புழாவிலிருந்து ஆண்ட அரசரின் அரசவையில் அரசரின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமான ஒரு நம்பூத்ரி பிராமணன் இருந்தான். இதனால்

---

* மலபார் காலாண்டு ரெவியூ.ஏ.4,1907. *(Malabar Quarterly Review V,4,1907.)*

அரசவையிலிருந்த அனைவரும் அவன்மீது வயிற்றெரிச்சல் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒருநாள் ஒன்றுகூடி அரசவையில் அரசரிடம் அவனுக்குள்ள செல்வாக்கை எப்படித் தொலைத்துக் கட்டுவது எனச் சதித் திட்டம் வகுக்கும் அளவுக்கு அவர்கள் பொறாமையும் வயிற்றெரிச்சலும் வளர்ந்தோங்கியது. மக்கள் முன்னிலையில் அவனுக்குத் தலைக்குனிவை ஏற்படுத்த வேண்டுமென அவர்கள் முடிவு செய்தனர். அவர்கள் இதற்கெனப் புதுமையானதொரு வழி கண்டனர். அன்று மக்களின் மனப்போக்கும் பண்பும் எப்படி இருந்தது என்பதனைப் புலப்படுத்தும் வகையில் அத்திட்டம் அமைந்திருந்தது. அந்த நம்பூத்ரி அரசருக்கு அன்பளிப்பாக வழங்கப்படும் பொருள்கள் அனைத்தையும் வைத்துக் காக்கும் பொறுப்புக்கு உரியவனாயிருந்தான். எனவே அரசர் அன்பளிப்பாகப் பெறும் பொருள்களை உரிய இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பும் அவனுடையதாக இருந்தது. சதிகாரர்கள் அரசரின் முன் வைக்கப்படும் அன்பளிப்புக்களோடு கூடச் செத்த மீன் ஒன்றையும் அழகாக புறத்தே தோன்றும்படியாக மறைத்துக் கட்டி வைத்துவிடுவதென முடிவு செய்து அவ்வாறே வைக்கவும் செய்தனர். இந்தச் சதிக்குப் பலியாகும் நம்பூத்ரி அதனை அறியாதவனாக அந்த மீன் உள்ளிட்ட எல்லா அன்பளிப்புகளையும் தன் கையாலேயே உரிய இடத்தில் சேர்க்க எடுத்துச் சென்றான். அந்த நம்பூத்ரிக்கு குழிபறிக்க தக்க வாய்ப்பினை எதிர்பார்த்திருந்த அவருடைய எதிராளிகள் மீனைச் சுற்றிக்கட்டி வைத்திருந்த கட்டினை அரசரின் முன்னிலையில் பிரித்துப் பார்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அதில் செத்த மீன் ஒன்று இருப்பது தெரிய வந்தது. சாதி வழக்கப்படி நம்பூத்ரி ஒருவன் செத்த மீனைத் தன் கையால் தொடுவானாயின் அவனைச் சாதியிலிருந்து விலக்க அதுவே போதுமான குற்றமாகும். இந்த விதியின் அடிப்படையில் பிராமணனான அவனைச் சாதி விலக்கம் செய்யும்படி அரசரிடம் அந்த நம்பூத்ரியின் எதிராளிகள் கேட்டுக்கொள்ள அவரும் அதற்கு உடன்பட வேண்டியதாயிற்று. அவன் உடனடியாகச் சாதி விலக்கம் செய்யப்பட்டான். இதே வரலாற்றின் சிறிதே மாறுபட்ட மற்றொரு வடிவமும் வழக்கில் உள்ளது. அதன்படி இவ்வாறு சாதி விலக்கத்திற்கு உள்ளான நம்பூத்ரி அரச குடும்பத்தின் பரம்பரைக் குரு என்றும் அரசருக்குத் தரப்படும் அன்பளிப்புகளைப் பேணி பாதுகாப்பது அவனுடைய பொறுப்பாகும். காலப்போக்கில் அவன் என்றும் மிகுந்த

ஆணவம் கொண்டவனாக மாறிவிட அரசரே அவனை எப்படியேனும் வெளியேற்ற விரும்பினார். அரச குடும்பத்தின் புரோகிதர் பதவி பரம்பரை உரிமை உடையதாக இருந்தமையால் அரசரால் அதனைச் செய்ய இயலவில்லை. அரசவையில் தனக்கு வேண்டியவர்களாக இருந்த சிலரோடு கூடித் திட்டமிட்ட பின் அரசர் அவனைப் பதவியிலிருந்து விலக்க மேலே கூறப்பட்ட வழிமுறையினைக் கையாண்டார். வலிந்து வெளித் தள்ளுதல் என்று பொருள்படும் பலால் தள்ளி என்ற சொற்றொடர் காலப்போக்கில் பிலபள்ளி என மாறி................என்ற வேறொரு பொருளையும் தருவதாயிற்று. இவ்வாறு சாதி விலக்கத்திற்கு உள்ளான நம்பூத்ரிக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். இவர்கள் இருவருமே அவனோடு கூடச் சாதியை விட்டு விலகுவது என்ற முடிவினை மேற்கொண்டனர். எனவே அக்குடும்பம் கள்ளர்கோட்டிற்கு அருகே உள்ள பரவூருக்குக் குடிபெயர்ந்தது. அரசர் அக்குடும்பத்தினருக்கு நிலத்தைத் தானமாக வழங்கினார். இக் குடும்பத்தினர் அம்பலப்புழாவை விட்டு வெளியேறினாலும் அங்குள்ள கோயிலில் அவர்கள் தொடர்ந்து அவர்களுக்கு உரியதான மடத்துமுறைமையினை அனுபவித்து வருகின்றனர். மடத்துமுறைமை என்பது ஓர் அறையினை வைத்திருப்பதற்கான உரிமையாகும். அத்துடன் கோயிலிலிருந்து ஒரு படி பால் பாயசம் பெறவும் இவர்கள் உரிமை உடையவர்கள். பால், அரிசி, சர்க்கரை ஆகியன இட்டுச் செய்யப்படும் இப்பாயசம் மலபார் முழுவதும் பேர்போனதாகும். இவ்வாறு வெளியேற்றப்பட்டவரின் சந்ததியினர் தற்போது தொண்ணூறு பேராக உள்ளனர். எட்டு அல்லது ஒன்பது இல்லங்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பிள்ளை – Pillai

குழந்தை எனப் பொருள்படும் சொல். தமிழ்நாட்டில் இது வேளாளருக்குரிய பட்டப்பெயராகும். அண்மைக் காலக் கணக்கெடுப்புகளில் அகமுடையார், அம்பலக்காரர், கோல்லர், இடையர், நாயர், நோக்கன், பணிசவன், பணிக்கன், பறையன், சாயக்காரன், செம்படவன், சேனைக்குடியர் ஆகிய சாதியாருக்குரிய பட்டப்பெயராக இது பதியப்பட்டுள்ளது. தேவதாசிகளின் ஆண் சந்ததியினரும் பிள்ளை என்ற பட்டத்தைத் தரித்துக் கொள்கின்றனர். ஐரோப்பியரிடம் பட்லர்களாகப் பணிபுரியும் பல பறையர்கள் பிள்ளை என்ற பட்டப்பெயரைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்கின்றனர்.

வேளாளர் போல நடிக்கும் குற்றம் புரியும் குறவர்களுங்கூட இப்பட்டத்தைத் தரித்துக் கொள்கின்றனர்.

பிள்ளைக்கூட்டம் – Pillaikūttam

வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் வேசி மக்களான வாணியர் பிரிவினர் எனப் பதியப்பட்டுள்ளது.

பிள்ளையார்ப்பட்டி – Pillaiyarpatti

நாட்டுக்கோட்டை செட்டிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய கோயில் (குலம்) ஒன்றின் பெயர்.

பில்லி – Pilli (cat)

செம்படியர், மாலர், மேதரர் ஆகிய சாதிகளுக்கு உரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலத்தின் பெயர். பூனை எனப் பொருள்படுவது.

பிண்டாரி – Pindāri

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ஐம்பத்தொன்பது பிண்டாரிகள் தங்களைப் பம்பாயினைச் சேர்ந்த குற்றேவலர் பிரிவினர் எனப் பதிந்து கொண்டுள்ளனர். மைசூர் மாநிலத்தில் இவர்கள் எண்ணிக்கையில் மிக்கவராக இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்களாகப் பயிர்த்தொழிலிலும் அரசுப் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். பதினேழாம் நூற்றாண்டில் அவுரங்கசீப்புக்கு எதிராக கலகத்தில் மராட்டியரோடு இணைந்து செயல்பட்ட பேர்போன கடற்கொள்ளைக்காரர்களாக இருந்தவர்கள் இவர்கள். அதன்பின் எல்லாத் திசைகளிலும் பரவிய இவர்கள் தென்னிந்தியாவிலும் தங்கள் கைவரிசையினைக் காட்டியுள்ளனர். "மசூலிப்பட்டணத்திற்கு வடக்கே இருந்த கடற்கரைப் பகுதிகளில் பத்துநாள்கள் கொள்ளையில் ஈடுபட்ட இவர்கள் 339 கிராமங்களைக் கொள்ளையிட்டு நெருப்புக்கு உள்ளாக்கியதோடு 682 பேர்களைக் கொன்றோ காயப்படுத்தியோ உள்ளனர். 3600 பேர்கள் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 250,000 பவுன்கள் மதிப்புக்கு உரிய பொருள்களைப் பாழ்படுத்தவோ கவர்ந்து செல்லவோ செய்துள்ளனர்." * 1817இல் ஹேஸ்டிங்ஸ் வைசராயாய் இருந்தபோது மத்திய இந்தியாவில் இவர்கள் கொட்டம் அடக்கப்பட்டது.

* யூலும் பர்னலும் – ஹாப்சன் – ஜாப்சன். *(Yule and Burnell. Hobson - Jobson.)*

பிண்டி – Pindi (folur)

மாலர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

பிஞ்சாரி – Pinjāri(cotton-cleaner)

தூதேகுலருக்கான மற்றுமொரு பெயர். பிஞ்ஜல (பருத்தி) தேவாங்கரின் புறம்மணக்கட்டுப்பாடுடைய குலம் ஒன்றின் பெயராக உள்ளது.

பிப்பல – Pippala (Pepper : Piar lingum)

கமல்லர், கோமட்டி சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய குலத்தின்பெயர்.

பிசாரடி – Pishārati

பிசாரடி அல்லது பிசாரதி எனப்படுவோர் 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் அம்பலவாசிகளின் உட்பிரிவினராகப் பதியப்பட்டுள்ளனர். இவர்கள் மலர் மாலை கட்டுதல் முதலிய பணிகளைக் கோயில்களில் மேற்கொள்பவர்கள். இவர்கள் தோற்றம் பற்றி பின்வருமாறு ஒரு கதை வழங்கி வருகின்றது. பிராமணத் துறவியான ஒரு சாமியாரிடம் அதே சாதியினைச் சேர்ந்த சீடன் இருந்தான். அவன் துறவியாக விரும்பவே தலையினை மழித்தல் முதலான அடிப்படைச் சடங்குகள் அவனுக்கு நிகழ்த்தப்பட்டன. வாழ்வின் இனிய சுகங்களை இழந்து கடுமையான சோதனைக்கு உள்ளாக வேண்டி வரும் என அஞ்சிய அவன் தன் முடிவினை மாற்றிக் கொண்டான். பிசார என்பது துறவியின் சீடன் எனப் பொருள்படும். பின்னர் அவன் ஒரு பரசவப் பெண்ணை மணந்தான். அவனுக்குப் பிறந்த குழந்தைகள் பிசாரடிகள் எனப்பட்டனர். 'திருவாங்கூரை ஆண்ட முற்கால மன்னர்கள்' என்ற நூலில் திரு. சுந்தரம்பிள்ளை பிசாரடியரைப் பற்றிக் கூறுவது வருமாறு :– மலபாரைச் சேர்ந்த சாதியருள் இவர்கள் புதிர் மிகுந்தவர்களாக உள்ளனர். ஒரே சமயத்தில் துறவிகளாகவும் பாமரராகவும் காட்சி தரும் இவர்களின் தோற்றம் பற்றிய பொருத்தமில்லாததாகவும் கற்பனையொடு பட்டதாகவும் இன்று தரப்படும் பிசாரகர் ஒடி எனப் பிரித்துத் தரப்படும் விளக்கத்தில் பிச்சாரகர் என்ற நிலைமொழி பிசாரடி என்பதனைக் காட்டிலும் புரியாத புதிராக உள்ளது." இவ்வாறு கூறும் அவர் பிசாரடி என்பது பட்டாரகர் திருவடி என்பதன் சிதைந்த வடிவம் ஆகலாம் என்கிறார். சாதிநிர்ணயத்தில்

பட்டாரகர் திரேதாயுகத்தில் பிராமணர் சாதியிலிருந்தும் இழிந்தவர்களாகப் போய்விட்ட ஒரு வகுப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. திருவாங்கூருக்கு உடையதான இடைக்காலக் கல்வெட்டுக்களிலிருந்து ஒவ்வொரு கோயிலுக்கும் பிடார திருவடி என்ற பணியாளன் இருந்தான் எனத் தெரியவருகின்றது. கோயில் பணிகளுக்காக அவன் பெருமளவில் உரிமைகள் பெற்றவனாயிருந்தான். நெல்லியூரைச் சேர்ந்த பட்டகரர் பெரிய அளவில் நெல்வயல்களுக்கு உரிமையுடையவராய் இருந்துள்ளார். "பிசாரடி என்ற சொல்லின் பொருளானது இளந்துறவி ஒருவனைக் குறிக்கும் என வழக்கமாகக் கொள்ளப்படுகின்றது. இவன் துறவு வாழ்க்கையில் எதிர்ப்பட வேண்டிய இடர்பாடுகளை எண்ணிப் பார்த்து அஞ்சியவனாக இறுதியில் குருவைவிட்டு பூணூல் போட்டுக்கொண்ட பின்னும் குளத்தில் மும்முறை மூழ்குவதற்கு முன்னும் ஓடிப்போனவன் ஆவான். அவ்வாறு குளத்தில் மூழ்கிச் சந்நியாசம் மேற்கொள்ள உள்ள ஒருவனின் தலையில் மூன்று மயிர்களை மட்டும் விட்டுவிட்டு எஞ்சியதை மழித்து இருப்பார்கள். ஒவ்வொரு முறை குளத்தில் மூழ்கி எழுந்தவுடனும் தலையில் உள்ள ஒரு மயிர் அகற்றப்படும். எனினும் அடியோடி வல்லோடி போன்ற சாதிப் பெயர்களிலும் ஓடி என்ற விகுதி இடம் பெற்றிருத்தலை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஓடி என்ற சொல்லின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ள துறவியினைப் பற்றியான கதை சுவையுடையதாயினும் அது பிசார் என்பதனைப் பற்றி விளக்கம் தருவதாயில்லை" என மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பிசாரடியாரின் இல்லங்கள் பிசாரம் எனப்படும். வைணவர் கோயில்களில் மலர்மாலை புனைவதனை இவர்கள் முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். எனினும் கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்யும் தளிகழகம் பணியினையும் பெரும்பாலும் மேற்கொண்டவர்களாக இருக்கக் காண்கிறோம். நன்கு கற்ற வடமொழிப் புலவர்களாக உள்ள காரணத்தால் பெருஞ் செல்வர்களின் குடும்பங்களில் வடமொழி, மலையாளம் ஆகியன கற்றுத்தர இவர்கள் அமர்த்தப்படுகின்றனர். இதனால் ஆசான் என்ற பட்டப்பெயரையும் எத்தகைய தடையுமின்றி இவர்கள் தரித்துக் கொள்கின்றனர். தீவிர வைணவர்களான இவர்கள் சிவனுக்குரிய பஞ்சாட்சரத்தை ஓதாதவர்களாக விட்டுணுவுக்குரிய அஷ்டாச்சரத்தையே நாள் வழிபாட்டின் போது ஓதி வருகின்றனர்.

இவர்கள் சாதிக்குரிய புரோகிதர்களாக இவர்களே செயல்படுகின்றனர். தீட்டுப் போக்கும் சடங்குகளை நிகழ்த்தவும் அஷ்டாச்சர உபதேசம் பெறவும் பிராமணர்களின் உதவியினை நாடிச் செல்கின்றனர்.

சிறுமியர் பூப்படையும் முன்பே பிசாரடியார் தாலிகட்டுக் கலியாணத்தை நடத்துகின்றனர். அந்தச் சடங்கில் மணமக்கள் கரங்களை இணைத்து வைப்பதே முக்கியமான சடங்காகக் கருதப்படுகின்றது. மல்லிகைக் கொடி ஒன்றினை நட்டு வைப்பதும் சடங்கின்போது இன்றியமையாது நிகழ்த்தப்படுவதற்குரியது. மல்லிகைக் கொடி நடும் சடங்குக்கும் மணமக்கள் கரங்களை இணைத்து வைக்கும் சடங்குக்கும் இடையே நடைபெறும் நிகழ்ச்சிகள் அம்பலவாசிகளின் தாலிகட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை ஒத்தன. மணமக்கள் குளித்தபின் ஒருவர் மற்றொருவரின் ஆடைகளைத் தொட்டு அனுப்பி வைப்பர். சிறுமியின் அன்னை அவளுக்கு ஒரு மாலையினையும் கண்ணாடியினையும் வழங்குவாள். அவற்றை ஏந்தியபடி முகத்தை ஒரு துணியால் மூடியபடி அவள் அமர்ந்திருப்பாள். மணமகன் செறுதாலியினை மணமகள் கழுத்தில் அணிவிப்பான். இத்தாலியினைக் கட்டும் இவன் இறப்பானாகில் இத்தாலி அகற்றப்படுவதோடு மணமகள் தீட்டினையும் மேற்கொள்வாள். இவளுடைய பிள்ளைகள் சமூகச் சமயச் சடங்கின்போது இறந்துபோன இவளுடைய கணவனுக்குப் பிண்டச் சோற்றினையும் பலியாகத் தரவேண்டும். தாலிகட்டுக்குப் பிறகு இவள் தன் சாதியினைச் சேர்ந்த ஒருவனோடு அல்லது பிராமணனோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளத் தடையேதுமில்லை. தாலிகட்டினைப் பிசாரடி ஒருவனைக் கொண்டு செய்து முடித்தபின் அவள் பிராமணன் ஒருவனோடு சம்பந்தம் வைத்துக் கொண்ட நிகழ்ச்சிகள் உள்ளன. தாலிகட்டுச் சடங்கினைச் செய்பவனே பின்னர் கணவனாகவும் ஆவானாயின் அச்சிறுமி பூப்படைந்தபின் சேலை வழங்கும் சடங்கு மீண்டும் நடத்தப்பட வேண்டியதில்லை.

மருமக்கள் வழித் தாய உரிமையினையே இவர்கள் பேணுகின்றனர். ஒருவனுடைய மனைவியும் மக்களும் அவன் இறக்கும்போது நிகழ்த்தும் சாவுச் சடங்குகளுக்கு ஈடாக அவன் உடமைகளில் பங்குபெற உரிமையுடையவரல்லர்.

குழந்தைக்குப் பெயர் சூட்டும்சடங்கிற்கு ஏற்ற மாதமாக எதுவும் குறிக்கப்படவில்லை. அன்னப் பிரசனம் சடங்கிற்கு முன்பாக இதனை நடத்தி முடித்தல்போதுமானது. தாய்மாமனே குழந்தைக்கு உரிய பெயரினை முதன் முதல் சொல்லி அழைப்பான். அப்போது குழந்தைக்கு நான்கு அல்லது ஆறுமாதம் ஆகியிருக்குமாயின் அதற்குச் சூரியனைக் காட்ட வீட்டைவிட்டு வெளியே எடுத்துச் செல்வர். ஆறுமாதம் முடியும்முன் நடத்தப்படும் அன்னபிரசனம் சடங்கின்போது குழந்தையின் தாய்மாமன் ஒரு தங்க மோதிரத்தில் சோற்றினை வைத்து அதனைக் குழந்தையின் வாயிலிடுவான். கூடியுள்ள விருந்தினர்கள் கண்டுகளிக்க அன்றிரவு பத்ரகாளி ஆட்டம் நிகழ்த்தப்படும். புண்யாகம் தீட்டுப் போக்கும் சடங்கினை நம்பூத்ரிகளைக் கொண்டு இவர்கள் நடத்துகின்றனர். நம்பூத்ரி மந்திரிக்கப்பட்ட நீரினை மகப்பெற்றவள் மீதும் குழந்தையின்மீதும் தெளிக்காமல் அவர்கள் வாழும் வீட்டுக் கூரைமீது தெளிப்பார். வீட்டில் உள்ளவர்கள் அப்போது இறவாரத்திற்கு வெளியே தங்கள் தலையினை நீட்டியவர்களாக அந்த நீர் தங்கள் மீது விழும்படி பெற்றுக் கொள்வர். குழந்தைக்கு மூன்று வயதாகும்போது முடியிறக்குவர். குழந்தையின் தாய்மாமன் முதலில் கத்தியால் குழந்தையின் தலையினைத் தொடுவார். அதன்பின் மாரான் மயிர் மழித்தலைச் செய்து முடிப்பான். ஒருவன் பதினாறு வயதினை எட்டும்போது அவனுக்கு அஷ்டாச்சரம் உபதேசிக்கப்படும். நல்லநாள் ஒன்றில் கோயிலில் மந்திரித்துத் தூய்மையாக்கப்பட்ட நீருள்ள பானையினைப் பிராமணன் ஒருவன் பிசாரத்திற்குக் கொண்டு வருவான். அது உபதேசம் பெறும் சிறுவனின் தலையில் கொட்டப்படும். இச்சடங்கு 'கலசம் உழக்குவ' எனப்படும். அஷ்டாச்சாரம் உபதேசிக்கப்பட்ட பின் அச்சிறுவன் சமயநெறிக்கான உடையினைத் தரித்தவனாகக் காசிக்குப் புறப்படுவதைப் போலப் பாவனை செய்வான். இது பிரமச்சரிய வாழ்வின் முடிவில் பிராமணன் ஒருவன் காசிக்கு மேற்கொள்ளும் பயணத்தை ஒத்தது. இச்சடங்கிற்குப் பின்னரே பிசாரடி ஒருவன் வெற்றிலை போட்டுக்கொள்ள அனுமதிக்கப்படுவதோடு கிரகஸ்தனக்கு உரிய பிற உரிமைகளையும் பெறுகிறான்.

பிசாரடியாரின் சாவுச் சடங்குகள் தனித்த இயல்புடையவை. பிணத்தைத் தரையில்அமரச் செய்து இறந்தவனின் உடன்பிறந்தவன் மகன் அஷ்டாச்சரத்தை ஓதியவனாக அதன் முன் தரையில் விழுந்து

வணங்குவான். பின்னர் பிணத்தைக் குளிப்பாட்டித் துணியினைப் போர்த்துவர். வீட்டுத் தோட்டத்து மூலையில் ஒன்பதடி ஆழத்தில் மூன்றடிச் சதுரக் குழி ஒன்று தோண்டி, அதில் பஞ்சபூதங்களைக் குறிக்கும் வகையில் உப்பு சாம்பல் ஆகியனவற்றைப் பரப்புவர். புதைகுழியில் பிணம் உட்கார்ந்த நிலையில் வைக்கப்படும். இறந்தவன் ஒருவன் சந்நியாசியினை ஒப்பச் சீவன்முக்தனாகவே அவன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து வந்தது போலவே வாழ்வதாகக் கருதுகின்றனர். எனவே பிசாரடியின் உடலுக்கு இறந்தபின் மற்றவர்கள் உடலுக்குச் செய்யப்பட வேண்டிய சடங்கு ஏதும் தேவைப்படுதல் இல்லை. எனினும் இறந்தவர் நினைவாக ஓரிரு சடங்குகளை நிகழ்த்துகின்றனர். பதினொன்றாம் நாள் பிராமணர்களின் ஏகொத்திஷ்டச் சிரார்த்தச் சடங்கினை ஒத்த சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. இறந்தவரின் ஆன்மாவினைக் குறிப்பதான தர்ப்பையில் இடப்பட்ட முடிச்சினை அருகில் உள்ள கோயிலுக்கு எடுத்துச் சென்று, அங்கு மகாவிட்டுணுவின் குறியீடாக ஒரு விளக்கினை ஏற்றி வைத்து வழிபாடு நிகழ்த்துவர். இந்தச் சடங்கு இறந்தவரின் முதலாம் ஆண்டுச் சிரார்த்தத்தின்போதும் மீண்டும் நிகழ்த்தப்படும். *

பிசாரடியர் சிலர் பெரும் பண்ணையார்களாகவும் செல்வ வளம் மிக்கவர்களாகவும் உள்ளனர் என மலபார் மாவட்ட விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

பீசு பெரிகெயர் – Pisu Perike

கோணிப்பை நெய்யும் பெரிகெயர் இவர்கள்.

பீடக்காலு – Pitkālu (dais on which a priest sits)

ஒட்டேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடையகுலம். குரு அமரும் பீடம் எனப் பொருள்படுவது.

பிட்டலவாடு – Pittalavādu

குருவிக்காரன்களுக்கான தெலுங்குப் பெயர்.

---

*இக்குறிப்பு திரு.என்.சுப்ரமணிஅய்யர் தந்த விவரங்களின் அடிப்படையினதாகும்.

பொட போடுல - Podaōtula

கோல்லரிடம் இரக்கும் இரவலர் வகுப்பார்.

பொதர வண்ணான் - Podara Vannān

பொதர, பொதரையன், பொதோரவண்ணார் ஆகிய அனைவரும் சமூகப் படிநிலையில் தாழ்ந்தவர்களான வண்ணார். பள்ளர், பறையர் போன்ற தாழ்ந்த சாதியாருக்குத் துணி துவைப்பவர்கள்.

பொதானொ - Podhāno

கணக்கெடுப்பின்போது பொலாசி, கௌடா, காலிங்கி, குடுமொ, சாமண்டிய ஆகிய சாதிகளுக்குரிய பட்டப்பெயராகப் பதியப்பட்டுள்ளது. சாமண்டிய சாதியினர் அடிக்கடி இதனைத் தங்கள் சாதிப் பெயராகவும் கூறிக் கொள்வர்.

பொதுவாள் - Poduvāl

அம்பலவாசிச் சாதியருள் ஒரு பிரிவினர் எனத் திரு.வியக்ரம் கூறியுள்ளார்.* இந்த சாதியினர் பொதுவாகக் கோயில் காவற்கார்ரர்களாக அமர்த்தப்படுவர். மூசாடுகள் எனப்படும் மூட்டாடுகள் பற்றி எழுதும் திரு.என். சுப்ரமணிய அய்யர் இவர்கள் திருவாங்கூர் கொச்சியில் மூட்டாடுகள் அல்லது மூசாடுகள் எனவும் வட மலபாரில் பொடுவாள் (பொதுவாள்) அல்லது அகப்பொடுவாள் எனவும் அழைக்கப்படுகின்றனர் எனக் கூறியுள்ளார். பொதுவாள் என்பது அனைவருக்கும் பொதுவானவன் எனப்பொருள் தரும். இதனை ஒரு குழுவின் பிரதிநிதி என்பர். முட்டாடுவும் இத்தகைய உரிமைக்கு உரியவன் என்பதனைக் கோயிலுக்கு உரிய நம்பூத்ரிகளான மேலாளர்கள் இல்லாத நிலையில் அவர்களின் பிரதிநிதியாக அவன் இருந்து எல்லாப் பணிகளையும் மேற்கொண்டு செயல்படுவதிலிருந்து தெளியலாம். அகப்பொதுவாளின் காரியங்கள் கோயிலின் உட்சுற்றுக்குள் நிகழ்வனவாக இருக்கும். புறப்பொதுவாளின் செயல்கள் கோயிலுக்குப் புறத்தே நிகழும். பொதுவாள் என்ற பெயருக்கு மட்டும் உரியவர்களும் புறப்பணிகளில் ஈடுபடுபவர்களே. பொதுவான் அல்லது பொடுவான் என்ற பெயர் மாரான்களின். ஓர் உட்பிரிவுக்குத் திருவாங்கூரில்

---

* மலபார் சட்டமும் வழக்கும் *(Malabar law and custom)*

பதியப்பட்டுள்ளது. இவர்கள், பல்வேறு சாதியினராலும் சாவுச் சடங்குகளின்போது பணிக்கு அமர்த்தப்படுவார்கள்.

மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் பொதுவாள் பற்றிப் பதியப்பட்டுள்ளவை வருமாறு :- "செண்டப் பொதுவாள், மாலைப் பொதுவாள் எனப் புறப் பொதுவாள் இரண்டு வகுப்பாராகப் பிரிவுபட்டுள்ளனர். இப்பெயர்கள் கோயிலில் அவர்கள் மேற்கொண்டுள்ள பணியினைக் குறிப்பதாகும். செண்டப் பொதுவாள் முழவடிப்பவர்களான மாரார் அல்லது மாராயார் என்பவர்களோடு நெருங்கிய உறவு உடையவர்களாகத் தெரிகின்றனர். மாலைப் பொதுவாள் மருமக்கள் தாயம் உடமை உரிமை முறையைப் பேணுகின்றனர். அத்துடன் இப்பிரிவினைச் சேர்ந்த பெண்கள் தங்கள் சாதி ஆண்களுடனோ அல்லது பிராமணர்களுடனோ சம்பந்தம் வைத்துக் கொள்கின்றனர். ஆண்கள் தங்கள் சாதிப் பெண்களுடனோ அல்லது கிரியட்டில் பிரிவுக்குக் கீழ்பட்ட பிரிவு நாயர் சாதிப் பெண்களுடனோ சம்பந்தம் வைத்துக் கொள்கின்றனர். இவர்கள் சாதிப்பெண்கள் பொதுவாரச்சியர் அல்லது பொதுவாட்டிமார் எனப்படுவர். " இவர்களைப் பற்றி மேலும் அதே நூலுள் பதியப்பட்டுள்ளவை வருமாறு :- "சில பிரிவினருள் குறிப்பாகக் கூறவேண்டுமானால் தென் மலபாரைச் சேர்ந்த மாலைப் பொதுவாள் மற்றும் மாரார் பிரிவினருள் தாலிகட்டு ஒரு போலிச் சடங்கு நிகழ்ச்சியாகவே நடத்தப்படுகின்றது. தாலிகட்டுக்கு உரிய சிறுமியும் மணவாளனும் ஒரே படுக்கையில் தனித்துச் சில மணித்துளி நேரம் கிடக்கும்படி விடப்படுகின்றனர். மாலைப் பொதுவாள் பிரிவினருள் இது சடங்கின் முதல் நாளன்றும் இறுதி நாளன்றும் இருமுறை நிகழ்த்தப்படுகின்றது. அவர்கள் தொடர்ந்து மூன்று நாள்கள் இரவில் ஒரே படுக்கையில் படுத்திருப்பர். எனினும் அவர்கள் தனித்து விடப்படுவதில்லை. அச்சமயம் இணங்கத்தி ஒருத்தி அவர்களுக்குத் தோழியாக அவர்களோடு உடனிருப்பாள். இந்த இரண்டு சாதிகளுள்ளும் பிற சாதிகளுள் பெரும்பாலனவற்றில் உள்ளது போலவே சிறுமியினையும் அவள் மணவாளனையும் இச் சடங்கு தீட்டுக்குள்ளாக்குவதான ஒருமரபு மேற்கொள்ளப்படுகின்றது. மாரார் பிரிவினர் இம் மணமக்கள் ஒருங்கு உறங்கும் போலிச்சடங்கு முடிந்தபின் ஒரு நம்பூத்ரியைக் கொண்டு இவர்களது தீட்டுப் போக்கச்

செய்கின்றனர். மாலைப் பொதுவாள் பிரிவினருள் தாலிகட்டுச் சடங்கு நடைபெறும் நான்கு நாள்களும் மணமக்கள் குளிக்க அனுமதிக்கப்படாததோடு மற்றவர்களைத் தொடவும் அனுமதிக்கப்படுவதில்லை. நான்காம் நாள் இறுதியில் அவர்களுக்கு வெளுட்டதன் மாத்தினை (வேறு உடை) தருவான். "

பொதள என்பது பொதுவாளுக்குரிய கன்னட வடிவமாகும்.

போகண்டன் – Pōgandan

போந்தனுக்குரிய மற்றொரு பெயர்.

போகநாடி – Pōganāti

போகநாடி அல்லது பொகநாடி காபுகளின் ஓர் உட்பிரிவு.

பொலதவ – Poladava

கட்டிகளுக்கான மற்றுமொரு பெயர்.

***பாளிக்கார்* – Poligar**

பாளையக்காரர் என்பதற்கான மற்றமொரு பெயர். இச்சொல் பற்றி யேலும் பர்னலும் * பின்வருமாறு கூறுகின்றார் :– "இவர்கள் கிட்டத்தட்ட காடுகரையாக உள்ள வனப்பகுதிகளில் அரசுக்குக் கப்பம் கட்டி ஆட்சிபுரியும் வட்டாரத் தலைவர்கள். முன்பு இவர்கள் கொள்ளையிடும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இன்று இவர்கள் கிட்டத்தட்ட ஜமீன்தாரர் என்ற நிலையில் உள்ளனர். தென்னாட்டைச் சார்ந்த பாளிக்காரர் நூறாண்டுகளுக்கு முன் மிகுந்த தொல்லைகளைத் தந்து வந்துள்ளனர். பாளிக்காரரோடான போர்கள் கடுமையானவையாகவே இருந்துள்ளன. திருநெல்வேலியில் உள்ள இவர்களுடைய கோட்டைகளுள் ஒன்றான பாஞ்சாலக்குறிச்சியின் மீதான தாக்குதலில் 1799 முதல் 1801 வரையான காலப்பகுதியில் பதினைந்து பிரிட்டிசுப் படைத்தலைவர்கள் பலியாகியுள்ளனர்." வட்டாரத் தலைவர்களின் கீழ் கொள்ளையர் குழுவினராக உள்ள சிலரும் பாளிகார் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். மன்றோ 1780 முதல் 84வரை தான் நடத்திய படையெடுப்புகளின் விவரங்களில், "துப்பாக்கி ஏந்திய இந்த வீரர்களுடன் பெரும்பாலும் பாளிக்காரர் உடன்வருவர். இவர்கள்

---

* ஹாப்சன் – ஜாப்சன். (***Hobson - Jobson***)

காட்டுமிராண்டித்தனமான ஒரு வகுப்பார். சுமார் 18 முதல் 20 அடி நீளமுள்ள மூங்கிலாலான ஈட்டியினைத் தவிர இவர்கள் வேறு எந்தப் படைக் கருவிகளையும் பயன்படுத்துவதில்லை" எனக் கூறியுள்ளார்.

தென்னிந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வேட்டை நாய் வகை ஒன்றும் பாளிகார் எனப்படுகின்றது.

பொம்படர் - Pombada

கன்னடியர்களான பேயாட்டம் ஆடும் சிறு பிரிவினர். இவர்கள் நல்கெயரை ஒத்தவர்கள் எனினும் சமூகப் படிநிலையில் அவர்களைவிட உயர்ந்தவர்களாக இருப்பதோடு அவர்கள் மேற்கொள்வதைக் காட்டிலும் உயர்ந்த பூதங்களின் வேடங்களையே மேற்கொள்வர் எனத் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் நல்கெயர், பரவர் ஆகிய பிரிவினரிலிருந்து மாறுபட்டவர்களாக அளிய சந்தான உடமை உரிமை முறையினை மேற்கொள்கின்றனர். துளுபேசும் இவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களில் பில்லவர்களை ஒத்தவர்கள். பைலு, பதர்டி என்ற இரு பிரிவுகள் இவர்களிடையே உள்ளது. பைலு பிரிவினர் பயிரிடுவோராகவும் பதர்டி பிரிவினர் பெரும்பாலும் பூதாட்டத்தை மேற்கொண்டவராகவும் உள்ளனர். நல்கெயர், பரவர் ஆகிய சாதியினரைப் போல பொம்படரும் தீட்டு உண்டாக்காத சாதியினராவர். இவர்கள் சமூகப் படிநிலையில் பில்லவர்களைவிடச் சற்றே தாழ்ந்தவர்கள். தாழ்ந்த பூதங்களான நிச்ச, வர்தெ, கம்பெர்லு ஆகியவற்றின் வேடங்களை இவர்கள் தரித்தல் இல்லை. ஜீம்மதி, பஞ்சுருளி, ஜரண்டய, மசிகண்டய, கொடமணித்தய ஆகிய பூதங்களின் வேடங்களையே இவர்கள் தரிக்கின்றனர். உள்ளயன் எனப்படும் தர்மதேவதா உயர்ந்த பூதமாக கருதப்படுகின்றது. பொம்படருக்குரிய சிறப்பான பூதங்களின் வேடங்களை நல்கெயரும் பரவரும் மேற்கொள்ள அனுமதிக்கப்டுவதில்லை. ஜும்மதி கோலத் திருவிழாவின்போது ஜுமதி பூதத்தின் வேடம் தாங்கும் பொம்பாடனை ஒரு வண்டியில் உட்காரச் செய்து தெருக்கள் வழியே இழுத்துச் செல்வர். (பார்க்க : நல்கெயர்)

பொன்செட்டி - Pon Chetti

மலையாளக் கம்மாளரான பொற்கொல்லருக்கான மற்றுமொரு பெயர்.

பொன் இல்லம் – Pon illam

முக்குவர்களின் ஒரு பிரிவு.

போந்தன் – Pōndan

"மலபாரில் இச் சாதியினைச் சேர்ந்தவர்களான இருபத்தியெட்டுப் பேரே உள்ளனர். இவர்கள் அனைவரும் கள்ளிக்கோட்டையில் வாழ்கின்றனர். இவர்கள் சாமோரினின் பல்லக்குச் சுமப்பவர்கள். பழக்க வழக்கம், நடையுடை பாவனையாகிய அனைத்திலும் தமிழர்களை ஒத்துள்ள இவர்கள் தமிழையே பேசுகின்றனர். தமிழன் ஒருவனால் தொடப்படும் சாமோரின் தீட்டுக்குள்ளாவார். எனினும் இவர்கள் நாள்தோறும் சாமோரினைப் பல்லக்கில் கோயிலுக்குச் சுமந்து செல்லும் பணியினை மேற்கொண்டவர்களாக உள்ளனர். தமிழ்நாட்டு இடையர்களிடையே பொகொந்தன் என்ற உட்பிரிவு உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. பொகொந்தன் எனப்படும் இப்பிரிவினர் இடையர் சாதியினைக் சேர்ந்த பல்லக்குத் தூக்கிகள். சாமோரின் குலத்தினைத் தோற்றுவித்தவர் அல்லது அக்குலத்தில் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்தோர் இடைச் சாதியினைச் சேர்ந்த சிலருக்குத் தமிழர் வேறு எவருக்கும் இல்லாத உரிமைகளை வழங்கி அவர்களைத் தன் பல்லக்குத் தூக்கிகளாக்குவித்திருத்தல் கூடும்." எனத் திரு. எச்.எ. ஸ்டுவர்ட் 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறியுள்ளார்.

பொந்தரர் – Pondra

பொந்தரர் அல்லது பொன்னரர் எனப்படுவோர் மாலியரின் ஓர் உட்பிரிவினர்.

பொங்க நாடு – Ponganādu

பொங்கநாடு, பொங்குவான் என்பன கணக்கெடுப்பின்போது காபுகளின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. இது பாகநாடி என்பதன் சிதைந்த வடிவம்.

பொன்னம்பலத்தார் – Ponnambalathar

கைக்கோளர் சாதியாரோடு இணைந்த இரவலர் வகுப்பார்.

பொன்னரர் – Ponnara

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

பொருவனூர்க்காரன் – Poruvannurkaran

மலபாரைச் சேர்ந்த தச்சருள் ஒரு பிரிவினர்.

பெரொசர் – Poroja

பொரொசர் அல்லது பர்ஜார் கஞ்சம், விசாகப்பட்டினம் முகவர் பகுதிகளில் மலைப் பகுதிகளில் பயிரிடுவோராக உள்ளவர்கள். 1871 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :– "பழக்க வழக்கங்கள், மரபுவழிச் சடங்குகள், பேசும் மொழி ஆகியவற்றால் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட ஏழு பர்ஜார் பிரிவுகள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. பர்ஜார் என்ற சொல் திரு.கர்மிகயெல் சுட்டிக் காட்டுவதுபோல குடிமகன் எனப் பொருள்படும் வடசொல்லின் திரிந்த வடிவமாகும். உரிமையுடையவர்களான மலைவாழ் மக்களிலிருந்தும் தங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இவர்களே இச்சொல்லால் தங்களைச் சுட்டிக் கொள்கின்றனர். 'முன்பு ராசாக்களும் பர்ஜாக்களும் உடன்பிறந்த சகோதரர்களாக இருந்தோம். ராசாக்கள் குதிரையில் பயணம் செய்யத் தொடங்கினர். (இப்படிப் பயணம் செய்வதை பரெஞ்ச பர்ஜாக்கள் உட்கார்ந்தபடியே இருப்பது எனக் கூறுவர்) நாங்கள் சுமை தூக்கிகளாக பர்ஜாக்கள் என்ற பெயருக்கு உரியவராகிவிட்டோம்' என்பதாகப் பழைய வழக்கு ஒன்றினை இவர்கள் அனைவரிடையேயும் கூறிவருகின்றனர். பர்ஜா என்ற சொல் பழங்குடியினரைக் குறிப்பதாகாது என்று உறுதிபடக் கூறலாம். இதனைப் பயிரிடுநிலை மேற்கொண்டுள்ள ஒரு வகுப்பாருக்கானதான குடியானவர் என்று அனைவரும் அறிந்த சொல்லொடு ஒத்தது எனக் கூறலாம். நான் இதனை வற்புறுத்தக் காரணம் இந்தியர்களான அலுவலர்களும் இந்த வட்டாரத்தைப் பற்றி எழுதியுள்ளவர்களும் மேற்குறித்த ஒரு குறிப்பினைத் தந்திருப்பது தவிர பர்ஜா என்பதனை ஒரு தனிச் சாதியினர் எனக் குறிப்பிட்டிருப்பதாலேயாம். பர்ஜாக்களுள் பெரும்பாலோர் கஞ்சம் மாலியக்களைச் சேர்ந்த கோண்டகளை ஒத்துள்ள பயிர்த் தொழிலாளர்கள். வடபகுதியினைச் சேர்ந்த தங்கள் இனத்தவர்கள் ஈடுபடும் உட் பூசல்களில் இவர்கள் ஈடுபடுவதில்லை. தாங்கள் பிறந்த மண்ணின் மீது நெஞ்சில் மிகுந்த மதிப்பு வைத்திருப்பவர்கள் இவர்கள். அதனுடைய உயர்ந்த மதிப்பினைத் தற்போது இவர்கள் முழுவதுமாக உணர்ந்தவர்களாக உள்ளனர். பர்ஜா பூமியின் பெரும்பகுதி மேட்டு

நிலப்பகுதியினைச் சார்ந்ததாகவே உள்ளது. பாச்சிபெண்டா, மாடுகொலு ஆகிய பகுதிகளுக்குத் தெற்கே உள்ளவை பர்ஜா பூமியாகாது. வடபகுதியில் கோண்ட்களின் உரிமையாக உள்ள சில பகுதிகளிலும் இதே போன்று பர்ஜா பூமியன்று. இந்தப் பகுதிகளும் இவர்களுக்கு உரியனவாக இருந்துள்ளன என்பதனை ஆரியர் தொடங்கி மேலாட்சி நடத்திய அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். அண்மைக் காலத்தில் இப் பகுதியில் வந்து குடியமர்ந்தவர்களிடையே நில எல்லை தொடர்பான பூசல்கள் மூளுமேல் அவர்கள் பழையதான எல்லை அமைப்பினைக் கண்டு கூறும்படி ஒரு பர்ஜாவினையே உதவிக்கு அழைப்பர்.

பொ, ராச என்ற இரண்டு ஓரியச் சொற்களும் இணைந்து பொரொச என்ற சொல் தோன்றியிருப்பதாகத் தெரிகின்றது. நந்தப்பூரில் செயப்பூரைச் சேர்ந்த அரசர்கள் செல்வாக்குப் பெற்றபோது அப்பகுதியில் பழங்குடியினத்தவர் பலர் வாழ்ந்து வந்ததாகத் தெரிகின்றது. அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதாக அந்த அரசர்கள் உறுதி கூறியதால் அவர்கள் அதுவரை தங்கள் தனி உடமையாயிருந்த நிலத்தின் மீதானஉரிமையினை விட்டுக் கொடுத்து விட்டனர். பொரொசரிடம் நீங்கள் எந்தச் சாதியினைச் சேர்ந்தவர்கள் எனக் கேட்டால் அவர்கள் குடியானவர்கள் பொரெசர் என்ற இரண்டிற்கும் இடையே எத்தகைய வேறுபாடும் பாராட்டதவர்களாகப் பதிலிறுப்பர் என எனக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

"பர்ஜி மொழி இதுவரை பட்ரி மொழியோடு ஒத்ததாகக் கருதப்பட்டு வந்தது. தற்போது பட்ரி ஒரிய மொழியின் ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றது. பர்ஜி தொடர்ந்து கோண்டி மொழியின் கிளைமொழியாகவே இருந்து வருகின்றது." எனத் திரு. ஜி.எ.கியெர்சன் கூறியுள்ளார். *

பொரெசர் தனித்த அமைவுடைய சாதியினராக இல்லை. இதனை அகமணக்கட்டுப்பாடு உடைய பல பிரிவினரும் இடத்திற்கு இடம் வேறுவேறு மொழிகள் பேசுவோரும் கலந்தமைந்ததான் ஒரு கூட்டுச் சாதி

---

*இந்திய மொழிகளின் கணக்கீடு IV.1906.(***Linguistic Survey of India, IV***, 1906)

எனலாம். இப்பிரிவுகள் பின்வருமாறு அமையும் எனத் திரு.சி.ஹயவதன ராவ் கூறுகின்றார். அவருக்கு இவர்கள் பற்றிய செய்திகள் பலவற்றுக்கும் கடப்பாடுடையேன். அவர் தந்துள்ள பிரிவுகள் வருமாறு.

1. பாரங் ஜகொதியர் – ஒரிய மொழி பேசும் இவர்கள் மாட்டிறைச்சியினை உண்பர்.
2. பெங்கு பொரெசர்:– இவர்கள் எருமை இறைச்சியினை உண்பவர்கள், உண்ணாதவர்கள் என இரு பிரிவுகளாக உள்ளனர். கோண்ட்களின் மொழியோடு பெரிதும் ஒப்புமையுடைய ஒரு மொழியினை இவர்கள் பேசுகின்றனர்.
3. ஹோண்டி அல்லது கோண்டிபொரெசர் :– இவர்கள் கோண்ட்களின் ஒரு பிரிவினர். கோடு அல்லாத மொழி பேசும் இவர்கள் மாட்டிறைச்சியினையும் எருமை இறைச்சியினையும் உண்பர்.
4. பரெங்கி பொரெசர் :– கடபர்களின் ஒரு பிரிவினர். இவர்கள் எருமை இறைச்சி உண்போர் உண்ணாதோர் என இரு உட்பிரிவினராக உள்ளனர். கடப மொழியின் கிளைமொழி ஒன்றினை இவர்கள் பேசுகின்றனர்.
5. பொந்த, பூந்த, நங்க பொரொசர் :– இவர்களும் முன்னவர்களைப் போலகடபர்களின் ஒருபிரிவினரே. தாங்கள் பொந்த கடபர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் கடப மொழியின் கிளைமொழிஒன்றினைப் பேசுகின்றனர்.
6. தகர பொரெசர்:– கோயர் அல்லது கோயிகளின் ஓர் பிரிவினர். கோயமொழி பேசும் இவர்கள் சில பகுதிகளில் தெலுங்கினையும் பேசுகின்றனர்.
7. தூர் பொரெசர்:– ஒரிய மொழி பேசும் இவர்கள் தியாயி பொரேசர் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

பாரங் ஜகொதியரிடையே கித்தா (கழுகு), பாக் (புலி) நான் (நாக) ஆகியன குலமரபுச் சின்னங்களாக உள்ளன. பெங்கு, கோந்தி, தூர் பிரிவினரிடையே பாக். நாக் ஆகியன இரண்டும் குலமரபுச் சின்னங்களாக உள்ளன. இவற்றோடு கூடப் பொந்த பொரெசர், மந்தி (பசு) என்ற குலமரபுச் சின்னத்தையும் உடையவர்களாக உள்ளனர்.

பாரங் ஜகொதியர், பெங்கு, ஹோண்டி பிரிவினரிடையே ஒருவன் தன் அத்தை மகளை மணந்துகொள்ளும் வழக்கம் உள்ளது. எனினும் அவன் அவளை மணக்க உரிமை ஏதும் கொண்டாட முடியாது. இவர்களிடையே ஆணும் பெண்ணும் உரிமையுடையவர்களாக விரும்புபவர்களை மணக்கும் வழக்கம் உள்ளது. ஆகையாலேயே இத்தகைய உரிமை பாராட்ட இடமில்லாது போகின்றது. தங்கட, தங்கடி என்ற பச முறைகள் இவர்களிடையே வழக்கில் உள்ளன. இதன்படி மணமாகாத பொரெசர் ஆண்களும் பெண்களும் கிராமத்தில் தனித்தனியே அமைந்துள்ள கொட்டகைகளில் இரவில் படுத்துறங்கும் பழக்கம் உள்ளது.

பாரங் ஜகொதியரிடையே ஒரு குடும்பத்தோடு மண உறவு கொள்ள விரும்பும் இளைஞனின் பெற்றோர் இரண்டு பானைகளில் சாராயம் கொஞ்சம் அரிசி ஆகியவற்றை பெண்கேட்க விரும்பும் வீட்டிற்கு எடுத்துச் செல்வர். அவ்வாறு வருபவர்களுக்குப் பெண் வீட்டார் பெண் கொடுக்க விரும்புவார்களாயின் அவர்கள் கொண்டுவரும் பொருள்களை ஏற்றுக் கொள்வர். அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டால் மணமகன் வீட்டார் ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் ஐந்து குஞ்சம், அரிசி, ஒரு சேலை, ஏழு உத்தர சாராயம், பதினைந்து ரூபாய் முதல் ஐம்பது ரூபாய் வரையான தொகை ஆகியனவற்றைக் கொண்டு சென்றவர்களாக மீண்டும் தங்கள் விருப்பத்தை வெளியிடுவர். அதற்கும் மறுநாள் மாலையில் மணமகள் தன் உறவினர்களோடும் மணமகன் ஊருக்குச் செல்வாள். மணமகன் வீட்டிற்கு முன் இரண்டு கம்பங்கள் நட்டு அவற்றின் மேல் முனையினை ஒரு கயிற்றால் இணைத்து அதிலிருந்து ஒரு பூசணிக்காயினைத் தொங்கவிட்டிருப்பர். மணமக்கள் வீட்டுவாசலை நெருங்கிய அளவில் நெட்டையாக வளர்ந்த ஒருவன் தன் கைக்கோடரியால் அந்தப் பூசணிக் காயினை வெட்டி வீழ்த்துவான். அதன்பின் மணமக்கள் வீட்டினுள் நுழைவர். அங்கு மணமகளுக்கு மணமகன் பெற்றோர் ஒரு புதுச்சேலையினை வழங்குவர். மணமகன் வீட்டின் எதிரில் சதுரமான பரப்பினைச் சுற்றிலும் வேலியமைத்து வைத்திருப்பர். மணமகள் விட்டார் அதனுள்ளிருந்து மணச் சடங்குகளைப் பார்ப்பர். பின் மணமக்களும் அவ்விடத்திற்கு வந்து சேர்வர். அங்கே மணமகன் பெற்றோர் அனைவருக்கும் ராகியில் வடித்த சாராயமும் இலுப்பம் பூவில் வடித்த சாராயமும் வழங்குவர். நள்ளிரவு வரை ஆண்களும் பெண்களுமாக

நடனமாடுவர். அதற்கும் மறுநாள் விருந்து நிகழும். அன்று நண்பகல் சமயத்தில் சாதிப் பெரியவர்களான ஜன்னி மற்றும் முதிலி ஆகியோர் முன்னிலையில் மணமகளை மணமகனிடம் முறைப்படி ஒப்படைப்பர். தன் புகுந்த வீட்டில் ஒரு வாரம் இருந்த பின் அவள் பூப்படைந்தவளாக இருப்பினும் கூட – தன் பிறந்த வீட்டிற்குத் திரும்பி வந்து ஓராண்டு காலம் தங்கியிருந்து பின்னர் தன் கணவனோடு சென்று வாழத் தொடங்குவாள். பாரங் ஜகொதியரிடையே வேறொரு முறைப்படி நடைபெறம் திருமணத்தில் மணமகளை மணமகன் இல்லத்திற்கு அழைத்து வருவர். மணமகன் வீட்டின் முன் ஆற கால்கள் நட்டுப் பந்தலிடப்பட்டிருக்கும். அவற்றுள் நடுவே இருக்கும் கம்பம் ***(Eugenia Jamlolana)***. மரக்கிளையாக இருக்கும். தாசரி குறித்துத் தந்துள்ள முகூர்த்த நேரம் நெருங்கியவுடன் மணமகனின் தாய்மாமன் மணமகனைத் தன் மடியில் உட்கார வைத்துக் கொண்டவனாக மணப்பந்தலில் அமர, மணமகள் அவன் பாதங்களின் மீது அமர்வாள். மணமகனின் தந்தை முதலில் மணமகனுக்கும் பின்னர் மணமகளுக்கும் விளக்கெண்ணெயினைப் பூசுவான். அதனை அடுத்து நடைபெறும் விருந்தில் கோழி இறைச்சியும் சாராயமும் இடம்பெறும். அதற்கு மறுநாள் மணமக்கள் குளிப்பர். அத்துடன் மணச் சடங்குகள் முடிவுறும்.

பொரெசரிடையேயும் விசாகப்பட்டனத்தைச் சேர்ந்த மற்றச் சாதியாரான கடபர், காசிகள், மாரியர் ஆகியோரிடையேயும் தான் கடன்பெறும் சிறுதொகைக்கு 'கொடி' யாக ஒருவன் குறிப்பிட்ட காலத்திற்குக் கடன்கொடுத்தவனுக்கு வேலை பார்க்கும் பழக்கம் உள்ளது எனத் திரு.எச்.டி டானியல் எனக்குத் தெரிவித்துள்ளார். கடன் கொடுத்தவன் தன்னிடம் இவ்வாறு வந்து வேலையாளாக அமர்பவனுக்கு உணவளிப்பதோடு தசரா விழாவின்போது இரண்டு ரூபாய் வேட்டி, செருப்பு ஆகியனவற்றையும் அன்பளிப்பாக வழங்க வேண்டும். வேலைக்குச் சேர்ந்தவன் இடப்படும் அனைத்துப் பணிகளையும் செய்ய வேண்டும். அவன் அந்தக் காலப்பகுதி முழுவதும் கடன் கொடுத்தவனுக்குத் தன்னை அடிமைப்படுத்திக் கொள்கின்றான். ஒருவன் தொகை பெற்றுக் கொண்டு தனக்குப் பதிலாக தன் மகனையும் கொடியாக விடலாம். ஒருவனுடைய மகளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புபவன் தன் வருங்கால மாமனாரிடம் வந்து குறிப்பிட்ட காலம்வரை பணிபுரிகின்ற வழக்கமும் இவர்களிடையே பரவலாகக்

காணப்படுகின்றது. சமவெளியிலிருந்து மலைப் பகுதிக்கு வணிகத்திற்காக வந்த கோமட்டிகள் கண்டி என அழைக்கப்படுகின்றனர். 'கொடி' முறையினை இப்பகுதியில் அறிமுகப்படுத்தி அதன் வழி மலிவாக உழைப்பினைப் பெறுகின்றவர்கள் இவர்களே. ஒரு கொடி தனக்கிட்ட பணியினைச் செய்ய மறுத்ததைத் தான் கேள்விப்பட்டதில்லை என திரு. டானியல் கூறுகின்றார். இந்த உடன்படிக்கைக்கு இரு தரப்பினருமே கட்டுப்பட்டவர்களாக நடந்து கொள்கின்றனர். 'ஒரு 'கொடி' தனது எசமானனிடமிருந்து ஓடிவிட்டவனாக, வேறு ஒருவனிடம் சென்று மீண்டும் கடன்பெற்றுக் 'கொடி' யாகி விட்டது தொடர்பான வழக்கு அண்மையில் உடமை உரிமை வழக்கு மன்ற நடுவர் முன் வந்தது. முதலில் கடன்கொடுத்தவன் தன்னிடம் அவன் கொடியாகப் பணியாற்ற வேண்டிய எஞ்சிய காலத்திற்கும் பணியாற்ற ஆணையிடும்படி வழக்குத் தொடர்ந்திருந்தான்.

பொந்த பொரசர்கள் பேசும் மொழி முன்பே சுட்டியபடி அவர்களை கடபர்களோடு நெருங்கிய உறவுடையவர்கள் என உணர்த்துகின்றது. எனினும் இவர்கள் இத்தகைய உறவு ஏதும் இல்லை என மறுப்பர். பொந்த, நங்க என்ற பெயர்கள் பிறந்த மேனியான எனப்பொருள்படுவன. இது இவர்கள் சாதிப் பெண்கள் சேடுகொடி எனப்படும் அங்கொடி செட்டு அல்லது கரெங்நாரால் ஆன சிறு துணியை மட்டும் உடுப்பவர்கள் என்பதனைக் குறிப்பதாகலாம். செயப்பூரைச் சேர்ந்த பொந்தர் பற்றிய ஒரு குறிப்பில்* திரு. ஜெ.ஏ. மே பெண்கள் உடைபற்றித் தெரிவிப்பதாவது:- " கௌரொங் மரப்பட்டைகளைக் கொண்டு இவர்களே தயாரித்த சிறு துணியை அல்லது நெசவாளர்களிடமிருந்து விலைக்கு வாங்கிய ஒரு சதுர அடி அளவுள்ள துணியினை – ஒரு புட்டத்தை மட்டுமே மறைக்கப் போதுமான அளவுள்ளது – இவர்கள் அணிகின்றனர். அதனை ஒரு நூலில் கோத்து இடையில் கட்டியிருப்பர். தேவைக்கு ஏற்ப உடலின் முன்பக்கத்தினையோ, பின் பக்கத்தினையோ மறைக்கும்படியாக இழுத்து விட்டுக் கொள்வர். எதிர்பாராது நான் இவர்கள் ஊரில் சென்று நுழையும்போதெல்லாம் இந்தப் பெண்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடுவது நகைப்புக்கு இடமான காட்சியாகத் தோன்றும். நான் இவர்களை நெருங்கிய அளவில் இவர்கள் தங்களுடைய குடிசையினை நோக்கி நாலாபக்கங்களிலும் சிதறி

*இந்திய தொல்லியல் *11.1873(Ind. Ant. 11.1873*

ஓடும்போது இவர்கள் இந்தத் துணியினை என் பார்வையில் படும் உடம்பின் பகுதிக்கு இழுத்து விட்டுக் கொண்டவர்களாக ஓடுவர். பொந்தர் பெண்கள் கண்ணாடிப் பாசிமணி மாலைகளாலும் பித்தளை அணிகளாலும் தங்கள் மார்பகங்களை மறைத்துக் கொள்வர். பொந்தர் பெண்கள் இவ்வாறு மிகக் குறைந்த அளவிலான ஆடையுடுத்துவதற்குக் காரணமாக வழங்கி வரும் கதை வருமாறு:– இராமனின் மனைவி சீதை ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும்போது இச்சாதியினைச் சேர்ந்த பெண் ஒருத்தி அவளைப் பார்த்துச் சிரித்துக் கேலி செய்தாள். இதனால் சீதை அப்போது முதல் இந்தச் சாதிப் பெண்கள் தலையை மழித்துக் கொண்டவர்களாக மானத்தை மறைக்கப்போதுமான சிறு துண்டுத் துணியினை மட்டும் அணிய வேண்டும் எனச் சாபமிட்டாள். இத்தோடு கூடப் பொந்தர் பெண்கள் தாங்கள் வழக்கமான ஆடை அணிகளைக் கைவிடுவார்களாயின் இந்த இனம் முழுதும் புலிகளால் அழிக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையும் இவர்கள் தொடர்ந்து இவ்வாறு உடையணியக் காரணமாகின்றது என்ற வழக்கு வரலாறும் கூறப்படுகின்றது. கிராமத்துக் கொல்லனிடம் கத்தியினை இரவலாகப் பெற்று இவர்கள் சாதியினைச் சேர்ந்த ஒருவன் பெண்களின் தலையினை மழிக்கின்றான். தலையினைச் சுற்றி பெண்கள் பின்புறம் கயிறுகளால் இணைக்கப்பட்ட மூங்கில் துண்டு ஒன்றினை அணிகின்றனர்."

பொந்தர் மேற்கொள்ளும் மணமுறைகளில் ஒன்று வருமாறு:– இளைஞன் ஒருவன் தன் நண்பர்களுடன் கன்னியர் உறங்கும் கிராமத்துக் கொட்டிலுக்குச் சென்று ஆளுக்கொரு கன்னியரைத் தேர்ந்தெடுப்பர். பின்னர் ஆண்களும் பெண்களும் பாடும் போட்டிகளில் ஈடுபடுவர். இதில் உடம்பின் அழகு பற்றி ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் கேலியும் கிண்டலுமாகப் பாடுவர். அப்போது ஒருத்தி ஒருவனைத் தன் கணவனாக ஏற்றுக் கொள்ள உடன்படுவாளாகில் அவள் காதலன் இரவு மூட்டப்பட்ட நெருப்பிலிருந்து ஒரு சிறு கொள்ளியினை எடுத்து அவள் மார்பகத்தில் சூடிடுவான். அதன்பின் அவன் அங்கிருந்து சென்று தன் நண்பன் ஒருவன் வழி அவளுக்கு ஒரு பித்தளை வளையலை அனுப்பி வைப்பான். அவள் அவனிடம் அதனை அனுப்பியவர் யார் என்ற விவரங்களைக் கேட்டறிந்தபின் அதனை ஏற்றுக் கொள்வாள். சில மாதங்களுக்கு பின் அந்த இளைஞனின் பெற்றோர் அந்தச் சிறுமியின் வீட்டிற்குச் சென்று அவளைத் தங்கள் மகனுக்கு

மணம் முடித்துத் தரும்படி கேட்பர். அங்கு விருந்து ஒன்று நிகழும். அதன்பின் அவள் தன் வயதொத்த இரண்டு பெண்களுடன் அந்த இளைஞனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோர்க்கு ஐந்து குஞ்சத் அரிசியினை அன்பளிப்பாகத் தருவதோடு உடன் வந்த இரு சிறுமியருக்கும் அதே அளவு அரிசியினை வழங்குவர். பின் அச்சிறுமியர் மூவரும் தங்கள் இல்லம் திரும்புவர். இதன்பின் சில மாதங்கள் சென்றபின் அந்த இளைஞனின் பெற்றோர் சென்று மணமகளை அழைத்து வருவர். அப்போது விருந்தும் நடனமும் நிகழும். அன்றிலிருந்து அவர்கள் கணவன் மனைவியாக வாழத் தொடங்குவர்.

நங்க பொரொசரிடையேயான மற்றொரு திருமண முறை பற்றிய விவரங்கள் வருமாறு :- குளிர்காலத்தில் குழந்தைகளை உடல் வெது வெதுப்புடையனவாகப் பாதுகாக்க இவர்கள் குழிகளைத் தோண்டி இரவில் குழந்தைகளை அவற்றில் இடுவர். இந்தக் குழிகள் ஒன்பதடி குறுக்களவு உடையனவாக இருக்கும். இளவேனில் பருவத்தில் குடியிருப்பைச் சேர்ந்த மணப்பதற்குரிய பருவம் அடைந்த பெண்கள் அனைவரையும் இந்தக் குழியில் நிற்கச் செய்வர். தனக்கு உரிய ஒருத்தியினை முன்பே தன் பெற்றோரின் அனுமதியுடன் தேர்ந்தெடுத்து வைத்துள்ள இளைஞன் அந்தக் குழியில் நிற்கும் பெண்களுடன் நிற்கும் அவளிடம் வந்து தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டுவான். அவள் அதற்கு உடன்பட மறுப்பாளாகில் அவன் அங்குள்ளவர்களுள் ஒவ்வொருத்தியாக இறுதியாக ஒருத்தி தன்னை ஏற்றுக் கொள்ளும் வரை இவ்வாறு தன்னை ஏற்றுக்கொள்ளும்படி கேட்பான். இத்தகைய ஏற்பாடு ஒன்றின்போது சிறுத்தை ஒன்று அந்தக் குழியினுள் பாய்ந்து கன்னியர் சிலரைக் கொன்றது. பொந்தர் திருமணம் தொடர்பான குறிப்பு ஒன்றில் * பின்வருமாறு கூறுகின்றார் :- "திருமண வயதடைந்த இளைஞர் – சிலர் ஒரு குழுவாகத் தங்களுக்கு மனைவியரைப் பெறலாம் எனக் கருதும் ஊரினை நோக்கிச் சென்று அந்த ஊர்ப் பெரியவர்களிடம் தங்கள் விருப்பத்தைத் தெரிவிப்பர். அவர்கள் அந்த இளைஞர்களை உரிய சடங்குகளுடன் வரவேற்பர். அனைவருக்கும் கிளர்ச்சியினை ஊட்டுவதான சகொ பனையின் சாற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட மது இச்சமயத்தில் மிகுந்த அளவில் தேவைப்படும். இத்தகைய கிளர்ச்சி

* மேற்கூறிய நூலுள் (*Loc.Cit.*)

ஊட்டும் பானத்தைப் பருகாமல் இவர்கள் எந்த நிகழ்ச்சிகளையும் நடத்துவதில்லை அதன்பின் இவர்கள், ஒருவர் மட்டும் நுழையக்கூடிய துளையினை உடைய நிலத்தடிக்குகை ஒன்றினைத் தோண்டுவர். பின்னர் இதனுள் அந்த இளைஞர்களோடு கூட அவர்கள் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையுடைய பெண்களும் விடப்படுவர். அங்கு இருளில் அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய ஒருத்தியினைத் தேர்ந்தெடுத்தவர்களாக அவளுடைய சுட்டுவிரலினைப் பிடித்தபடி வெளியே வருவர். மேல்நாட்டவர் அணிவிக்கும் மோதிரத்திற்கு ஒப்பானதான வளையல்களைப் பெரியவர்கள் அவளுடைய கைகளில் அணிவிப்பர். இரண்டு இளைஞர்கள் மணமகனின் துணைவர்களாக நிற்பர். பின்னர் அந்த இருவரையும் அவர்களுடைய பெற்றோரிடம் அழைத்துச் செல்ல அவர்கள் அவர்கள் மணத்திற்கான உடன்பாட்டினைத் தெரிவிப்பர். பெரியவர்களுக்கு மற்றுமொரு முறை தங்கள் பணிவினையும் வணக்கத்தையும் தெரிவித்தபின் மணமகன் மணமகளைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படுவான். அங்கு அவள் ஒரு வாரம் வரை அவனோடு வாழ்ந்து வருவாள். பின்னர் தன் பெற்றோர் வீட்டிற்குத் திரும்பும் அவள் ஓராண்டு காலத்திற்கு அவளுடைய கணவனைப் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. அந்தக் காலக்கெடு முடிந்தபின் அவளை அவள் கணவனிடம் இறுதியாக ஒப்படைப்பர்." பொந்தர் திருமணமுறை பற்றிய பின்வரும் இன்னொரு தகவலும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இளைஞனும் அவன் மணம் செய்து கொள்ள உள்ள கன்னியும் காட்டுக்குச் சென்று அங்கு நெருப்பு மூட்டுவர். அங்கு,அந்தக் கன்னி, எரியும் ஒரு சிறு குச்சியினை எடுத்து அவள் காதலனின் ஆண்குறியில் சூடிடுவாள். அப்பொழுது அவன் 'அம்! அம்! அம்! ' என வலி பொறுக்க முடியாமல் கத்துவானாயின் அவனை அவள் தனக்கு ஏற்றவன் அல்லன் எனக் கருதியவளாகக் கன்னியாகவே காலம் கழிப்பாள். அவனிடம் அந்தக் கன்னி கொண்டிருக்கும் உணர்வுகளின் ஆழத்திற்கு ஏற்பவே அவள் அவனுக்கு வைக்கும் சூடு ஆழமானதாகவோ லேசானதாகவோ அமையும். மற்றொரு கூற்றுப்படி காதலனைத் தேர்ந்தெடுக்கவுள்ள கன்னி பல ஆடவர்களுடன் காட்டுக்குச் செல்வாள் என்றும் அங்கு அவர்கள் அவளிடம் சூட்டினைப் பெற்றுக்கொள்ள நாட்டுப் புறத்து நடன மாந்தர்களைப் போல ஆடியபடி வருவர் எனவும் கூறப்படுகிறது.

பொரசரின் அனைத்துப் பிரிவினரும் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிக்கின்றனர். இறந்துபோன அண்ணன் மனைவியினைத் தம்பி மணந்து கொள்ளும் வழக்கம் உள்ளது.

ஐகொதியர், பெங்கு, கோண்டிப் பிரிவினர் ஜாகர்தேவதா எனப்படும் பூமாதேவியினை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வழிபடுகின்றனர். ஒவ்வொரு ஊராரும் அவளுக்குப் பசு, ஆடு, பன்றி, புறா ஆகியனவற்றைப் பலியாகத் தருவர். ஊருக்கு வெளியே ஒரு மரத்தடியில் ஒரு கல்லில் அவளை எழுந்தருளச் செய்திருப்பர். சாதியினைச் சேர்ந்த ஒருவனே பூசாரியாகச் செயல்படுவான். ஜன்னி, முதலி உள்ளிட்ட ஊரார் அனைவரும் வழிபாட்டின்போது வந்து அங்கு குழுமுவர். வழிபாட்டின் இறுதியில் விருந்துண்டும் மது அருந்தியும் மகிழ்வர். பொந்தர் தாகுராணியினைச் சித்திரை மற்றும் மாசி மாதங்களில் வழிபடுகின்றனர். அப்பொழுது அவர்கள் விலங்குகளையும் பலியிடுவர். "இவர்கள் சமயச் சடங்குகள் பெயரில்லாத ஒரு தெய்வத்தினைக் குறித்ததாகவோ இறந்துபோன மூதாதையரின் நினைவாக இயற்றப்படுவதாகவோ அமைகின்றன. முக்கியமான கிராமங்கள் ஒவ்வொன்றிலும் பொந்தர் தங்கள் ஆடல்பாடல் களியாட்டங்களை நிகழ்த்த ஏற்றதொரு இடத்தில் ஆண்டுக்கு ஒருமுறை கூடுவர். அங்கு ஒரு கோழி, சில முட்டைகள், ஒரு பன்றி அல்லது ஆட்டினை பலிகொடுத்த பின், தங்கள் இல்லங்களுக்குத் திரும்புவர். மறுநாள் மீண்டும் அங்குக் கூடிக் கூந்தல்பனையின் சாராயத்தை மயக்கம் தலைக்கு ஏறும்வரை குடித்துக் களிப்பர். ஒருவரையொருவர் கூந்தல் பனைக் கிளையினைக் கொண்டு குடிமயக்கத்தில் கண்மண் தெரியாது தாக்கிக் கொள்வர். உடலிலும் தலையிலும், முதுகிலும், காயம்பட்டுக் குருதி வழிய, வலி தாங்க முடியாததானதொரு நிலையினை அடையும்போதே மயக்கம் தெளிந்தவர்களாக அந்த அடிதடிச் சண்டையினை நிறுத்துவர். அவர்கள் இறுதியாக இல்லம் திரும்பும்போது ஒருவரையொருவர் பழி தீர்த்துக் கொண்டவர்களாக இருப்பர்.

இறந்தவர்களை எரிப்பதே இவர்கள் வழக்கம். ஜகொதிய பொரொசர் சிலர் சாம்பலைத் திரட்டிச் சில அடி ஆழமுள்ள குழியில் புதைக்கின்றனர். அக் குழியின் மீது அடையாளத்திற்காகக் கற்களைக் குவித்து வைப்பர். அக் கற்களின் நடுவே ஒரு கம்பத்தை நட்டு வைத்து

அதன் மீது பன்னிரண்டு நாள்களுக்குத் தண்ணீரை ஊற்றிவருவர். நான்காம் நாள் பிணத்தை எரித்த இடத்திற்கு செல்லும் வழியில் பொங்கலையும் மீனையும் படைத்து வழிபடுவர். அதன்பின் சாவுச் சடங்கினை நடத்துபவர்கள் மாமரத்தின் பட்டையினை எடுத்து அதில் மாட்டுச் சாணத்தைப் பூசி அதனைத் தங்கள் மீது பூசிக் கொள்வர். குளித்து வந்தபின் விருந்தோடும் குடியோடும் சடங்கு முடிவுறும். பொந்த பொரொசர் இறந்தவருக்குரிய அணிகளில் சிலவற்றைப் பிணத்தோடு கூட வைத்து எரித்தபின் எஞ்சியதை இறந்தவரின் மருமகளுக்கு உரியதாகத் தருவர். மூன்று நாள்கள் தீட்டு மேற்கொள்ளும் இவர்கள் அச்சமயத்தில் தங்கள் வயலில் காலடி எடுத்து வையார். நான்காம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து மஞ்சள் பூசிக் குளிப்பர்.

காலரா நோய் பரவியிருந்த சமயம் பொரொசருக்கு அதற்கான மருந்தினைத் தந்ததாகவும் அதனைஅவர்கள் அனைவரும் விரும்பிப் பெற்றுக் குடித்ததாகவும் திரு.ஜி.எப்.பாடிசன் கூறினார். இந்த நோயினை ஏற்படுத்தும் சூனியக்காரியினை அடுத்த ஊருக்கு அனுப்பி வைக்கச் சடங்குகளை நிகழ்த்துதல் வியாதியினைவிரைவில் குணப்படுத்த உதவாதா என அவர் அங்கிருந்து புறப்படும்போது அவர்கள் அவரிடம் கேட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொந்த பொரொசர் ஆடும்நடனம் சிரிப்பு வரவழைக்கும் வேடிக்கையாகத் தோன்றும் எனக் கூறப்படுகிறது. இளைஞர்கள் கால்களில் சலங்கையினைக் கட்டியவர்களாக நடனத்தில் குதித்து ஆடுவர். பெண்கள் ஒருவரையொருவர் பார்த்தபடி குழுமி கூட்டமாக நின்று கைதட்டியவர்களாக அவ்வப்பொழுது பெருங்கூச்சல் எழுப்புவர். ஆண்கள் அவர்களைச் சுற்றித் தங்கள் கைக்கோடரிகளை வீசிச் சுழற்றியவர்களாகக் குதித்து ஆடுவர். நந்தபுரம் பகுதியில் உள்ள கொரப்பேட்டையினைச் சேர்ந்த ஜகொதிய பொரொசர் பெண்களின் நடனத்தைப் பற்றித் திரு.டபிள்யூ.பிரான்சிஸ் விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில் பின்வருமாறு எழுதுகின்றார் :– "நடனமாடும் இந்தக் கன்னியர் அனைவரும் ஒரேபடித்தாக இளஞ்சிவப்பு வண்ணக் கரையோடு கூடிய வெள்ளைச் சேலையை முழங்காலினைப் பாதி தொடும்வரை அழகுறப் புனைந்திருப்பர். கைவிரல்களில் பெரிய மோதிரங்களையும் கால்விரல்களில் சலங்கையோடு கூடிய

மெட்டிகளையும் அணிந்தவர்களான இவர்கள் மணிக்கட்டிலிருந்து தோள்வரையும் கணைக்காலிலிருந்து முழங்கால்வரையும் கைகால்களில் பச்சைக் குத்திக் கொண்டிருப்பர். இடது முன் கைகளில் நிறைய கனமான பித்தளை வளையல்களை அடுக்கியிருப்பர். அவை கிட்டத்தட்ட பன்னிரண்டு பவுண்டு எடை உள்ளனவாக இருக்கும். இத்தகைய கோலத்தில் ஆடு களத்தில் தோன்றிய பெண்கள் குழு விரைவில் சிறுசிறு குழுக்களாகப் பிரியும். அத்தகைய முக்கியமான நாட்டியக்காரிகள் மயில் தோகையிலான நீண்ட குறுந்தடிகளை அசைத்தவர்களாக அடியிடும் காலகதியினைக் காட்டுவர். திடீரென முழவுகள் இழுமென இசைக்கும். உடனே ஒவ்வொரு குழுவினரும் நீள வரிசையாக மயில்தோகை தாங்கிய மங்கையின் தலைமையில் நிற்பர். அவ்வாறு நிற்கும் பெண்கள் ஒவ்வொருத்தியும் தனது வலது கையினைத் தனக்கு அடுத்து நிற்பவளின் முதுகோடு சேர்த்து அதற்கு நீண்ட சங்கிலி போலப் பின்னிப் பிணைந்தவர்களாக இப்பொழுது வேகமாக அதிர்ந்து ஒலிக்கத் தொடங்கி இருக்கும் முழவின் இசைக்கு ஏற்ப அவர்கள் குழுவின் தலைவி மயில் இறக்கைத் தடியினை ஆட்டிக் காலில் அணிந்துள்ள சிலம்புகள் (வலது, இடது, வலது கிளிங்; இடது, கிளிங்; வலது, இடது, கிளிங்; என மாறி மாறி இசைக்க) ஒரே சீராக மெல்லிய குரலில் பாட்டிசைத்தபடி வரிசையாகச் சென்றும் சுற்றி வந்தும் வளைந்தும் எட்டு வடிவினதாகச் சுற்றிச் சுழன்றும் மீண்டும் வரிசையாக அமைந்தும் அழகிய வண்ணப் பாம்பு போல முன்னும் பின்னுமாக வரிசை நெளியவும். இடையீடின்றி முன்னாகவும் பின்னாகவும் விரைந்து அதிரும் முழவு இசைக்கு ஏற்ப மேலும் விரைந்து தூரத் தூர அடியிட்டு அவர்களுள் ஒருத்தி அனைவரும் சிரிக்கும்படியாகக் கதி பிசகி அந்தச் சங்கிலி அறுந்துபோகும்படியாக பிரிந்து போகும் வரை ஆடியபடி இருப்பர்.

பொந்த பொரசரைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.சி.எ.ஹாண்டர்சனுக்குக் கட்டுப்பாடுடையேன்.

மல்கணகிரி வட்டத்தின் மேற்குப் பகுதியில் மலைகளின் சரிவுகளைச் சார்ந்தும் சில இடங்களில் மலைப்பகுதிக்குள் சென்று தங்கியும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் வயதான பெரியவர்களை மற்றவர்களிலிருந்து வேறுபாடு கண்டறிதல் இயலாது. மணமான இளைஞர்கள் தங்களினப் பெண்களைப் போலவோ கடபர்

இனத்தவர்களைப் போலவோ பனையோலை ஒன்றினைத் தலையைச் சுற்றிக் கட்டியவர்களாக இருப்பர். பெண்கள் தனித்த பாணியில் உடையணிந்திருப்பர். அவர்கள் மாதத்திற்கு ஒருமுறை தங்கள் தலைகளை மழித்துக் கொள்வர். தலையில் பாசிகள் அல்லது முடிச்சிடப்பட்ட புல் ஆகியவற்றாலான சிறிய தலைப்பட்டியினைக் கட்டியிருப்பர். கழுத்திலும் மார்பிலும் நிறைய அணிகள் தொங்கியபடி மார்பகங்களைக் கிட்டத்தட்ட முழுக்க மறைத்தனவாக இருக்கும். இவை பெரும்பாலும் பாசிமணிகளாலான சங்கிலிகளாக இருக்கும். அவற்றுடன் பல்வேறு வடிவமைப்புடைய பித்தளையாலான கனமான சங்கிலிகளையும் அணிந்திருப்பர். சில ஒன்றாகக் கோக்கப்பட்ட மோதிரங்கள்ால் ஆனவையாக இருக்கும். சில கனமான வடிவமைப்புடைய பொருட்களின் முனைகளைச் சேர்த்துக் கட்டியனவாக இருக்கும். ஈயத்தாலான கொப்புக்களையும் இவர்கள் காதுகளில் அணிகின்றனர். இந்த அணிகளைத் தவிர, இடை வரையான அவர்கள் உடலை மறைக்க இவர்கள் வேறு எதனையும் உடுப்பதில்லை. இடையினைச் சுற்றித் சிறியதொரு கெட்டியான துணியினை அணிகின்றனர். இது ரிங்க (ஒரிய சீட்கொடை கொட்சொ) நாரினால் நெய்யப்பட்டது. இத்துணி இரண்டடி நீளமும் எட்டங்குல அகலமும் கொண்டது. சாக்குப் போன்ற கெட்டியான இது பல வண்ணங்களில் அமைந்திருக்கும். இது அளவில் மிகச் சிறியதாக இருப்பதால் இதனை அணிபவர்கள் மற்றவர்களைப் போலச் சம்மணமிடாமல் முழங்கால்களை இணைத்து வைத்துக் குதிகால்களை ஊன்றி மண்டியிட்டு அமர வேண்டியதாகின்றது. இந்தச் சிறிய துணியினை இடையில் ஒரு நூலில் இணைத்துக் கட்டியிருப்பர் அல்லது தகரக் கம்பியாலோ பாசிச் சங்கிலியிலோ கூட இணைத்திருப்பர். அது எப்பொழுதும் ஒரே நிலையில் இராது. இந்தத் துணியின் பின்பக்க மேல் முனை சங்கிலியால் பிணைக்கப்படாததாகப் பிட்டத்தின் மேற்பகுதியினைப் புலப்படுத்தியபடி இருக்கும். துணி கட்டப்பட்டுள்ள நூல் அல்லது சங்கிலி இடுப்பின் பின்பகுதியில் கிடக்கும். திரு.சண்டெ ஒரு குறிப்பில் கூறியுள்ளதாவது :- "இன்று இவர்கள் பயன்படுத்தும் துணி அண்மையில் புகுத்தப்பட்டதாகும். ஓரளவு விலக்கு விதியினை மீறியவர்களாகவே இவர்கள் இதனைப் பயன்படுத்துகின்றனர். முன்பு இவர்கள் பயன்படுத்தி வந்த துணியும் கயிறும் காட்டு நார்களால் தயாரிக்கப்பட்டவை. பருத்தி நூலினைப் பயன்படுத்தத் தொடங்கிய பின்பு புதிய சாயமேற்றும் முறையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதே போன்று பொந்த பொரசர் அணியத் தொடங்கியுள்ள நீலமும் வெள்ளையுமான மலிவான பாசிகள் அண்மையில் புகுத்தப்பட்டனவாதல் வேண்டும். இதே போன்ற சங்கிலி செய்யப் பயன்படுத்தப்படும் தகரத் துண்டுகளும் அண்மையில் பயன்படுத்தப்பட்டனவேயாகும். வீட்டுக்குள் இருக்கும்போது உடையணிந்தவர்களாக நடமாடும் பெண்கள் வெளியே வரும் போது அவற்றை அவிழ்த்து வைத்தபடி வருகின்றனர் எனத் தெரிகின்றது. பொதுவிடத்தில் உடலை முழுதும் மறைத்தவர்களாகத் தோன்றுதல்தான் இவர்கள் சமூகத்தில் விலக்கப்பட்டதாக உள்ளது. முழுவதுமாக உடலை மறைத்தவர்களாக உடையணிந்து கொண்டு வருவதுதான் விலக்கப்பட்டதாகும். நான் பார்த்த பெண்களில் பெரும்பாலோர் திருமணமாகாதவர்கள்தான். அவர்களுள் ஒருத்தி மணமாகி ஓராண்டு ஆனவள். அவள் ஒளிப்படக் கருவியின்முன் படத்திற்காக நிற்காதபோதும் நடனம் ஆடாதபோதும் கழுத்தில் ஒரு சிறு துணியினைத் தோளில் தொங்கும்படியாக அணிந்தபடி இருந்தாள். இவ்வாறு அவள் துணி அணிந்திருப்பது இவள் திருமணமானவள் என்பதனைக்காட்ட அணியப்படுவதன்று. அவள் மற்றவர்களைவிட வெட்கப்படும் இயல்புடையவளாகையாலேயே அவ்வாறு அணிந்து கொள்கின்றாள் என நான் ஊகிக்கின்றேன்.

திருமணம் ஆகாத கன்னியருக்கும் இளைஞருக்கும் என ஊரில் தனித்தனியே இரண்டு கொட்டகைகள் அமைக்கப்பட்டிருக்கும். இவர்கள் தங்கள் மனப்போக்கிற்கு இயையவே திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதில் பெரியவர்கள் குறுக்கீடு ஏதும் நிகழ்வதில்லை. காதலர்கள் வாய்ச்சொற்களின் வழி தங்கள் காதலைத் தெரிவித்து நட்புக் கொள்கின்றார்களே அன்றி உடல் உறவின் வழி காதலர்களாக இணைவதில்லை என விளக்கினார். அதன்பின் அவர்கள் தங்கள் காதல் பற்றிப் பெற்றோருக்குத் தெரிவிப்பர். இளைஞன் தன் காதலியின் பெற்றோரிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க முதலில் செல்வான். அப்பொழுது அவன் கோண்ட்களையும் பிற பழங்குடியினரையும் போல அன்பளிப்புகள் எதனையும் உடன்கொண்டு செல்வதில்லை. அப்பொழுது அச்சிறுமியின் பெற்றோர் அவனிடம் அவளை மணம் செய்து தருவதாகப் பல உறுதிமொழிகளைக் கூறுவர். எனினும் அதற்குச் சாட்சியாக இருப்பவர்களுக்கு இது

பெருங்குழப்பத்தை உண்டுபண்ணும். இறுதியில் ஒருவழியாகப் புரட்டாசி மாதத்தில் நிச்சயதார்த்தச் சடங்கு நிகழும். அதன் பின் மாசி மாதத்தில் திருமணம் நிகழும். திருமணத்தின்போது மணமகளின் பெற்றோருக்கு ஒரு ஜோடி எருதுகளும் வேட்டி சேலையும் ஒரு பானை லண்ட (கூந்தல் பனையிலிருந்து வடித்த கள்) வும் கொடுக்க வேண்டும். அவர்கள் இதற்குப் பதிலாக வேறெதுவும் திரும்ப செலுத்தவில்லை. திருமணமான பெண் ஒருத்தியை நான் கண்டேன். அவளுக்கு அவள் கணவன் ஒரு வளையலை அன்பளிப்பாகத் தந்திருந்தான். எனினும் அது குறிப்பிடத்தக்க வகையில் மதிப்பு வாய்ந்தது அன்று." இவர்கள் திருமணம் தொடர்பாகத் திரு.சண்டெல் மேலும் கூறுவதாவது :- "ஒரு ஊரைச் சேர்ந்த இளைஞன் அதே ஊரைச் சேர்ந்த சிறுமியினைத் திருமணம் செய்து கொள்வதில்லை. அவர்கள் உடன் பிறந்தவர்களாகக் கருதப்படுவதே இதற்குக் காரணம். திருமணக் குழி இன்னமும் வழக்கில் உள்ளது. குளிர்காலம் முழுதும் அது வழக்கில் இருக்கும். சிறு கிராமங்கள் பலவற்றைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து பொதுவில் ஒரு பெரிய திருமணக் குழியினை அமைத்துக் கொள்வர்." திரு.சாண்டெல் நேரில் கண்ட ஒரு நிகழ்ச்சியில் உள்ளூரைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் அக்குழியினுள் அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும் கூறியுள்ளார். பன்னிரண்டு அடி குறுக்களவுள்ள அந்தக் குழியினைத் தட்டியும் மண்ணும் கொண்டு மூடியபின் ஒரு நுழைவாயிலினை மட்டும் விட்டிருப்பர்.

"குழந்தையைப் பெற்றெடுத்த ஒருத்தி சில நாள்களுக்குத் தீட்டுப்பட்டவளாகக் கருதப்படுவாள். இந்த நாள் கணக்கு கொப்பூழ் கொடி அறுக்கப்பட்ட நேரத்திலிருந்து கணக்கிடப்படும். இக்காலம் எட்டிலிருந்து பதினாறு நாள்கள் வரை இருக்கும். இக்காலப் பகுதியில் அவளைச் சமைக்கவும் உணவைத் தொடவும் அனுமதிக்கமாட்டார்கள்.

"தங்களிடையே வழிபாட்டு (பூசை) நிகழ்ச்சிகள் எதுவும் வழக்கில் இல்லையென இம்மக்கள் கூறுகின்றனர். விதைப்பின்போது நடப்பட்டுள்ள ஒரு கொய்யா மரக்கிளையில் உறைவதாகக் கருதப்படும் மட்டேர ஹீண்டியான அறுவடைத் தேவதைக்கு ஊரார் அனைவருக்கும் பொதுவாக ஒரு முட்டையினைப் பலியிடுவர். காட்டில் விளையும் தீங்குகளுக்குக் காப்பாக அவள் உதவி வேண்டப்படுவதாக அவர்கள்

கூறினாலும் நல்ல விளைச்சலை விரும்பும் அடிப்படை நோக்கமே இந்த விழாவிற்கான காரணமாகும். பொந்த பொரொசர் மகாலட்சுமி என அவர்களால் வழங்கப்படும் சீதையினைப் பற்றியான பழைய கதையிலும் அவள் தங்களினப் பெண்களுக்கு இட்ட சாபத்தையும் மீறி ஆர்வத்தோடு கூற முன்வருவர். அரசின் சார்பிலான முகவர் ஒருவர் இளம்பெண் ஒருத்தியிடம் நன்கு உடை உடுத்திக் கொள்ளும்படி கூறியதாகவும் அவள் மூன்று நாள்கள் மட்டுமே அவர் விரும்பிய வண்ணம் உடை தரித்திருந்தாள் எனவும் திரு.மே தெரிவிக்கின்றார். இது பற்றிய தகவல் சரியாகத் தரப்படவில்லை என நான் கருதுகின்றேன். அந்த முகவர் அந்தப் பெண்ணை நன்கு உடைதரிக்கும்படி கட்டாயப்படுத்தினாரில்லை. அவர் அவளுக்கு அவ்வாறு அணிந்துகொள்ள ஒரு துணியினைத் தர அவள் அதனை நன்றியுடன் பெற்றுக் கொண்டாள் என்பதே உண்மை. இந்த நிகழ்ச்சிக்குப் பின் சிறிதுகாலம் சென்றபின் அவள் இறக்க நேரிட்டது. இனத்தவர்களால் விதிக்கப்பட்ட வழக்கினை மீறியதால் சாவு நிகழ்ந்ததன்று. எதிர்பாராது அவள் இறக்க நேரிட்டதற்குப் பெரியம்மையின் தாக்குதலே காரணமாகியிருக்கக் கூடும். நான் நேரில் சந்தித்தவர்கள் இந்த நிகழ்ச்சி பற்றித் தங்களுக்குத் தெரியாது எனக் கூறியதோடு பொது இடத்தில் நன்கு உடுத்தி வரும் பெண்கள் நோய் வாய்ப்படுவார்களேயன்றி அதன் காரணமாக உயிரிழக்க மாட்டார்கள் எனக் கூறினர். மேலும் தங்கள் சாதியினைச் சேர்ந்த பெண்கள் பொதுவிடத்தில் நன்கு உடுத்தியவர்களாக வர வாய்ப்பு ஏதும் இல்லை எனக் கூறினர். பொந்த பொரெசர் ஒருவகைப் பேய்களை நம்புகின்றனர். அவை பிசாசுகளன்று எனவும் இறந்த மூதாதையரின் ஆவிகளே எனவும் கூறுவர். இரவில் கனவில் வரும் இவை ஒருவன் வாழ்க்கையினையும் உடல்நலத்தையும் பாதிக்கும் என்பர். வயலில் உள்ள பயிர்கள் மீதும் அவை ஓரளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றை இவர்கள் ஏதேனும் ஒரு வகையில் வழிபடுகின்றார்களா என்பது எனக்குத் தெரியாது.

இறந்தவர்களின் பிணத்தைக் குளிப்பாட்டி ஒரு தட்டியோடு சேர்த்துக் கட்டி ஊருக்கு வெளியே தூக்கிச் சென்று எரிப்பர். எட்டு நாள்களுக்குப் பின் (இறந்தவன் பணக்காரனாக இருப்பின் நான்கு நாள்களுக்குப் பின்) பிணத்தை தூக்கிச் சென்றவர்களும் இறந்தவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றாகக் கூடியிருந்து விருந்துண்பர்.

இதில் மது வழங்கப்படுவதில்லை. பன்றி, கோழி, ஆடு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினை குடும்பத்தின் வசதிக்கேற்ப இந்த விருந்துக்காகச் சமைப்பர். இந்த விருந்து ஒரு வகையில் இறந்தவரின் ஆவியினைத் திருப்திப்படுத்தவே நிகழ்த்தப்படுகின்றது. எனினும் அது எவ்வாறு என்பது பற்றிய விவரம் எனக்குத் தெரியாது.

பொந்த பொரெசவர் பயிரிடுதல், கால்நடை வளர்த்தல், பன்றி வளர்த்தல் முதலியனவற்றை மேற்கொள்கின்றனர். மாட்டிறைச்சி, வீட்டில் வளர்க்கப்படும் பன்றி இறைச்சி ஆகியனவற்றையும் இவாகள் உண்கின்றனர். தங்களைச் சுற்றிலும் வாழும் இந்துக்களிடையே இருப்பதுபோல ஆண்கள் உண்டபின் எஞ்சியதை பெண்கள் உண்ணும் பழக்கம் இவர்களிடையே இல்லை. ஆண்களும் பெண்களும் ஒன்றாகவே இருந்து உண்கின்றனர். பெண்கள் அவர்கள் வாழும் ஊரைவிட்டு வெளியே செல்வதில்லை. எனினும் பெண்கள் சந்தைகளுக்குச் செல்கின்றனர்.

பொதாரியர் – Pothoria

"பொதொரிய அல்லது பொத்ரிய கல் எனப் பொருள்படும் இவர்கள் கஞ்சம் மாவட்டத்தில் குறைந்த எண்ணிக்கையராக உள்ள கல்கொத்துபவர்களான வகுப்பார். வேட்டைக்கு உதவவென வைத்திருக்கும் பழக்கப்பட்ட ஆண் மான்களைப் பயன்படுத்திக் காட்டில் திரியும் பெண் மான்களைப் பிடிப்பர். பிராமணர்களை இவர்கள் புரோகிதர்களாக அமர்த்துகின்றனர். குழந்தை மணத்தை மேற்கொள்ளம் இவர்கள் விதவைகளின் மறுமணத்தினை அனுமதிக்கின்றனர். பெண்கள் கண்ணாடி வளையல்கள் அணிவர்.

போத்து – Pōthu

போத்து, போத்தலு என்பன ஆண் எனப்பொருள்படும். தேவாங்கர், மேதரர், பத்மசாலே ஆகிய சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய குலத்தின் பெயராக இது வழங்குகின்றது. எருமைக்கடா என்ற பொருளில் போத்தலு என்பது மாதிகர் சாதிக்குரிய குலத்தின் பெயராக உள்ளது.

பொதிய - Potia

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்கள் ஒரியப் பாய் பின்னுவோராகப் பதியப்பட்டுள்ளனர். ஒரிசாவிலுள்ள பொடியவிலிருந்து வந்து குடியேறியவர்களான இவர்கள் தங்களைத் தொழுவர் என அழைத்துக் கொள்கின்றனர். எனினும் தொழுவர் இவர்களைத் தங்கள் சாதியாராக எற்றுக் கொள்ளாததோடு இவர்களுடன் மண உறவு கொள்வதோ உடன் உண்பதோ இல்லை.

பொத்த - Potta (abdomen)

போயரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

போற்றி- Potti (Tamil Worshipful)

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கேரளத்தைச் சேர்ந்த பிராமணர் அனைவருக்கும் பொதுவான பெயராகப் பதியப்பட்டுள்ளது. இவர்கள் நம்பூத்ரிகள் என்ற குறிப்பிட்ட பிரிவின் கீழ் வராதோர்.

பௌசு - Pouzu (Quail)

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். காடை எனப்பொருள்படும்.

பொவ்வாக்கு - Powāku (tobacco)

மாலரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். புகையிலை எனப்பொருள்படும்.

பொலியிலைதான்னாய - Polyilethānnāya (one who removes evil eye)

பண்டரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். கண்ணேறு பட்டதைப் போக்குபவன் எனப் பொருள்படும்.

பிரதானொ - Pradhāno (chief)

அருவர், பெனாயிடொ, ஒடிய, காலிங்கர், கெவுட்டொ, சாமாந்தியர் ஆகியோருக்கான பட்டப்பெயர்.

பிராணோபகாரி – Prānōpakāri (one who helps souls)

திருவாங்கூரைச் சேர்ந்த அம்பட்டருக்கான பெயர். பழைய நில உரிமைக் கணக்கீட்டு ஆவணங்களில் பிராணொ என்பது இதன் வடிவமாகக் காணப்படுகிறது.

பிரதமசாகா – Prathamasākha

கோயில்திருமாளம் எனப்படும் திருஅம்பர்மாகாளம் என்ற ஊர் தொடர்பாகத் தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் பதியப்பட்டுள்ளவை வருமாறு :– "நாட்டுக்கோட்டை செட்டிகள் புதியதொரு கோயிலினைக் கட்டி அதற்குப் பெரும் அளவில் அறக்கட்டளைகளையும் ஏற்படுத்தியுள்ளனர். இந்தக் கோயிலினைப் பற்றிய பழைய கதை வழக்க ஒன்று உள்ளது. அதனை இங்கு நடைபெறும் திருவிழாவின்போதும் பிற புகழ்பெற்ற நாடகங்களிலும் நடித்துக் காட்டுவர். திருவாரூர் (திருவாரூர்) கோயிலைச் சேர்ந்த தெய்வத்தைத் தங்கள் ஊரில் நடைபெறும் வேள்வியின்போது வந்திருந்து சிறப்பிக்கும்படி அக்கோயிலைச் சேர்ந்த பூசாரி கேட்டுக் கொண்டான். இறுதியில் அவன் வேண்டுகோளுக்கு உடன்படுவதாகக் கூறிய தெய்வம் அவனிடம் தான் யாரும் விரும்பி வரவேற்க இயலாததொரு தோற்றத்தில் வர இருப்பதாக எச்சரிக்கையும் விடுத்தது. நான்கு வேதங்களும் நான்கு நாய்களாகத் தன்னைப் பின்தொடர தோளில் மாட்டிறைச்சியினைச் சுமந்தபடி ஒரு பறையனுடைய கோலத்தில் அவர்களுடைய வேள்வியில் கலந்துகொள்ள இறைவன் அங்கு வந்து சேர்ந்தான். அங்குக் கூடியிருந்த பிராமணர்கள் அனைவரும் இவரைக் கண்டவுடன் ஓட்டம் பிடித்தனர். இதனால் சினமுற்ற இறைவன் அவர்கள் அனைவரையும் அப்போதிருந்து நாள்தோறும் நடுப்பகல்நேரம் முதல் ஒரு மணிநேரம் பறையராகும்படி சபித்தார். மத்தியானப் பறையர் என்ற பிராமண வகுப்பார் பல மாவட்டங்களில் காணப்படுகின்றனர். நன்னிலத்திற்கு மேற்கே ஐந்தாவது மைலில் உள்ள சேதானிபுரத்தில் இப்பிரிவினர் வாழ்கின்றனர். தஞ்சாவூர் மாவட்டம் முழுதும் மத்தியானப் பறையர் என்ற பிரிவினர் இறைவனால் சபிக்கப்பட்டவர்களின் வழித்தோன்றல்கள் எனக் கருதப்படுகின்றனர். நாள்தோறும் நடுப்பகல் நேரத்தில் ஒன்றரை மணி நேரம் தங்கள் வீட்டுக்கு வெளியே வந்து தங்கியவர்களாக இருந்து பின் குளித்துத் தங்கள் வீட்டினுள் நுழைவர். இந்த நடைமுறையினைப் பின்பற்றும் இவ்வகுப்பார் மிகவும் மதிக்கப்படுகின்றனர். ஒரு சிலரே

இந்த நடைமுறையினைக் கடைப்பிடிக்கின்றனர். எனினும், சமயநெறியில் தீவிரப் பற்றுடைய பிராமணர்கள் இவர்களோடு உடன் உண்பதில்லை. காரணம் சிலர் தீட்டு விலக்குவதில்லை என அவர்கள் கருதுவதே. இவ்வகுப்பார் தங்களைப் பிரதம சாகையர் என அழைத்துக் கொள்கின்றனர்.

பிருதிவி – Prithvi (earth)

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். மண் எனப் பொருள்படுவது.

புச்சா – Puchcha

புச்சா எனப்படும் புச்சாகாய் (***Citrullus Coloynthis***) போயர், கோமட்டி, வீரமுஷ்டி ஆகிய சாதிக்குரிய கோத்திரம் அல்லது குலம் ஆகியவற்றின் பெயராக உள்ளது. இது கும்மட்டிகாயைக் குறிக்கும். இவர்கள் கோமட்டிகளோடு இணைக்கப்பட்ட இரவலர் வகுப்பார். பிச்சி காயா என்ற தர்பூசணியைக் (***Citrullus vulgaris***) குறிக்கும் இதே பெயர் பண்ட ரெட்டி மற்றும் தேவாங்கர்களின் இல்லப் பெயராகவும் உள்ளது. இந்த இல்லங்களைச் சேர்ந்தவர்கள் தர்பூசணியைத் தின்பதில்லை. தெசிமரட என்ற பெயரை அண்மையில் சேணியர் பிச்சிகாய என்ற பெயருக்குப் பதிலாகப் பயன்படுத்துகின்றனர்.

புதமுறி – Pudamuri (Pudaya - a woman's cloth; muri cuttings)

வடமலபாரைச் சேர்ந்த நாயர்கள், பெண்களுக்கான முண்டினை வழங்கி மணஉறவு கொள்வதால் அந்த மணமுறை இவ்வாறு அழைக்கப்படுவதாகத் திரு.விக்கிரம் கூறுகின்றார்.

புது நாட்டான் – Pudu Nāttān (New Country)

இடையர்களின் ஓர் பிரிவு.

பூ இசுலாம் – Pū Islām

பார்க்க : புதிய இசுலாம் (***See : Putiya Islam***)

பூசாரி – Pūjāri

இது பூசை செய்பவர் என பொருள்படும் தொழில் தொடர்பான பெயர். வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு.எச்.ஸ்டுவர்ட். இச்

சாதியார் பற்றிக் கூறிய விவரங்கள் வருமாறு :- " பெரும்பாலும் பெண் தேவதைகளின் கோயில் பூசாரிகளாக உள்ளவர்களுக்கான பெயர். சிவன், விட்டுணு ஆகிய தெய்வங்களின் கோயில்களில் பணிபுரிபவர்கள் இப் பெயரால் அழைக்கப்படுவதில்லை. புனிதச் சடங்குகளை நடத்தும் நேரங்கள் தவிர பிற சமயங்களில் இவர்கள் பூணூல் அணிந்து கொள்வதில்லை." பில்லவர்கள் மற்றும் ஹளே பைக்குகள் ஆகியோர் பூதத் தானங்களில் பூசாரிகளாகப் பணியாற்றுவதால் இவர்கள் பூசாரி என்ற பட்டப்பெயரைத் தரித்துக் கொள்கின்றனர் எனப் பதியப்பட்டுள்ளது. பூசாலி என்பது சில இருளர்களின் பட்டப்பெயராகவும் உள்ளது. களிமண்ணால் தெய்வ உருவங்களைச் செய்யும் குயவர் சாதியினர் சிலரும் பூசாரி என்ற பட்டத்தைத் தரித்துக் கொள்கின்றனர். பூசா என்பது கோல்லரின் ஓர் உட்பிரிவின் பெயராகவும் உள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபடும் குறவர் சிலர் பூசாரிகள் என்ற போர்வையில் பயணம் செய்வர். இவர்கள் தங்களைக் குறவப் பூசாரிகள் எனக் கூறிக் கொள்வர்.

புல - Pula

செறுமான்களின் ஓர் உட்பிரிவு.

பூல - Pūla (flowers)

போயர், பத்ம சாலே, யெருக்கலர் ஆகிய சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

பூலான் - Pūlān

தமிழ்நாட்டிலிருந்து திருவாங்கூரில் வந்து தங்கியுள்ள அம்பட்டர்களுக்கான பெயர்.

புலவர் - Pulavar

ஒச்சன், பணிசவன் ஆகியோருக்குரிய பட்டப் பெயர்.

புலையன் - Pulayan

பார்க்க : செறுமான் மற்றும் தண்ட புலையன்.

புலி - Puli (tiger)

பலிசர், கொல்லர், கம்மர், மேதவர் ஆகிய சாதிகளுக்கு உரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் அல்லது கோத்திரம்.

புழிய கோடன் – Puliakōdan

எண்ணெய் ஆட்டும் செக்கு அமைப்பதைத் தங்கள் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட மலபாரைச் சேர்ந்த தச்சருக்கான பெயர்.

பூழி ஆசாரி – Pūliāsāri (Puli - earth)

மலபாரைச் சேர்ந்த கம்மாளர் பிரிவினுள் ஒன்று. இப்பிரிவினர் மண்ணில் கட்டுமான வேலை செய்வர். இதே பணியினை மேற்கொண்டுள்ள பரவர் சாதியினைச் சேர்ந்தவர்கள் பழிக்கொல்லர் எனப்படுகின்றனர். பழி புழுதி என்பதன் திரிபாகலாம்.

புலிக்கால் – Pulikkal

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

புலியன் – Puliyan

நாயர்களின் ஓர் உட்பிரிவு.

புலியட்டு – Puliyattu

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் புலிக்கப்பணிக்கன் என்ற நாயர்களின் உட்பிரிவுக்கான மற்றொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

புல்லகூர – Pullakura (Pot-herbs)

ஈதிகரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். தோட்டக் காய்கறி வகை எனப் பொருள்படுவது.

புள்ளுவர் – Pulluvan

மலபாரைச் சேர்ந்த புள்ளுவர் சோதிடர்களாகவும் நாட்டு மருத்துவர்களாகவும் பூசாரிகளாகவும் பாம்புத் தோப்புகளில் பாடுபவர்களாகவும் தொழில் செய்கின்றனர். ஒரு வகைக் கழுகுக்கு உரிய பெயரான புள்ளு என்பதிலிருந்து இப்பெயர் வந்ததாகக் கற்பித்துக் கூறுவர். கருவுற்றுள்ள பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இந்தப் பறவைகளின் தீங்கு தரும் தாக்கத்தின் காரணமாக உண்டாகும் நோயினை இவர்கள் போக்குவதால் இப்பெயர் பெற்றனர் என்பர். புள்ளுவன்களைச் சிலபோது வைத்தியன்கள் எனவும் அழைப்பர்.

இச்சாதியின் தோற்றம் பற்றிப் பின்வரும் வழக்கு வரலாறு கூறப்படுகின்றது *. தீக்கடவுளான அக்னி தொன்மையானதான காண்டவவனத்தை எரித்து ஒழிக்கப் பலமுறை முயன்றும் அதில் தோல்வியே உற்றான். அந்தக் காட்டினைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்த எட்டு நாகங்கள் இந்திரனோடு மிகுந்த நட்புக் கொண்டனவாக இருந்தன. அந்தக் காட்டை அழிக்க அக்னி முற்படும்போதெல்லாம் இந்திரன் மேகங்களை ஏவிப் பெருமழை பெய்யச் செய்து அந்தக் காட்டினை அழியாது காத்துவந்தான். அக்னி தன்னுடைய இந்த முயற்சியில் வெற்றிபெற இறுதியாக ஒரு சூழ்ச்சியினைக் கையாண்டான். அக்னி, அருச்சுனன் முன் ஒரு பிராமணர் உருவில் சென்று அவனிடமிருந்து தான் விரும்பும் ஒரு விருப்பத்தை நிறைவேற்றி வைக்க உடன்படுவதான வாக்குறுதியினைப் பெற்ற பிறகு அந்தக் காட்டினை அழிக்க முற்பட்டான். அர்ச்சுனன் சரக்கூடம் அமைத்து இந்திரன் ஏவலால் அந்தக் காட்டின் மீது பொழியும் மழையில் ஒரு துளி கூட காட்டினுள் விழாது காத்து நின்றான். அந்தக் காட்டில் வாழ்ந்த பறவைகளும் விலங்குகளும் பிற உயிர்களும் அஞ்சி அலறியவனாக அக்காட்டை விட்டு வெளியேறின. எனினும் அவற்றுள் பெரும்பாலானவற்றை அக்னி தன் தீ நாக்குகளை நீட்டி விழுங்கி அழித்தான். பல பாம்புகளும் இவ்வாறு அக்னிக்கு இரையாயின. அப்பாம்புகளுள் ஒன்றினை பிராமணன் 'ஒருவனின் பணிப்பெண் ஒருத்தி ஒரு குடத்தில் புகச் செய்து மல்லிகைப் புதர் ஒன்றிடையே அக்குடத்தைப் பொதிந்து வைத்து அப்பாம்பினைக் காப்பாற்றினாள். இதனை அறிந்த அந்தப் பிராமணன் அந்தப் பாம்பை வெளியேற்றியதோடு அந்தப் பணிப்பெண்ணையும் வேலையிலிருந்து நீக்கி அனுப்பினான். அவளுக்குத் துணையாக உடன் செல்ல உதவியாக இருக்கும்படி ஒரு வேலைக்காரனையும் வெளியேற்றினான். அந்தப் பாம்பைக் காப்பாற்றிய பெண்ணும் அவளுக்குத் துணையாக வந்தவனுமே அந்தப் பாம்பின் அருளால் பல நலங்களும் வாய்க்கப் பெற்ற புள்ளுவர் சாதியின் குல முதல்வர்களாவர். மற்றொரு கதை வழக்கும் புள்ளுவர் தோற்றம் பற்றி வழங்கி வருகின்றது. மாபெரும் காண்டவ வனத்தை தீப்பற்றி அழிக்கும்போது அதில் வாழ்ந்த பாம்புகள் நெருப்புக்கு இரையாயின. பெரிய ஐந்து தலை நாகம் ஒன்று நெருப்பில் கருகிப் புண்பட்டுத்

---

* இந்திய ஆடவரும் மகளிரும், பிப்ரவரி 1906. (***Men and Women of India, 1906***)

துனபத்தால் வருந்தியதாகப் பறந்து வந்து இன்று ஆலப்புழை நகரம் அமைந்திருக்கும் பகுதியான குட்ட நாட்டில் விழுந்தது. அவ்வழியில் இரண்டு பெண்கள் கிணற்றில் தண்ணீர் எடுத்துவரச் சென்று கொண்டிருந்தனர். அந்தப் பாம்பு தன் வருத்தம் நீங்கும்படி தன் மீது ஏழு குடம் தண்ணீரை ஊற்றும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டதோடு அந்தப் பானையினைத் தான் அதனுள் புகுந்துகொள்ள உதவியாக ஒருக்களித்து வைக்கும்படியும் கூறியது. அந்தப் பெண்கள் அதன் வேண்டுகோளை நிறைவேற்றினர். அந்தக் குடத்தில் புகுந்துகொண்ட அது வெளிவரவில்லை. பின் அந்தப் பெண்கள் ஒருத்தியிடம் குடத்தில் இருக்கும் தன்னை வீட்டுக்குக் கொண்டு போய் வீட்டின் மேற்குப் பக்கத்தில் இருக்கும் அறையில் வைக்கும்படி கூறியது. அதனிடம் அச்சம் கொண்ட அவள் அவ்வாறு செய்ய முன்வரவில்லை. அது அவளிடம் அந்தக் குடத்தின் வாயினை ஒரு துணியால் மூடும்படியும் பின் தூக்கிச் சென்று வீட்டில் உள்ள அறையில் வைத்து அந்த அறையினை ஒரு வார காலம் மூடி வைத்திருக்கும்படி கூறியது. அந்த அறையில் என்ன உள்ளது என்பதனை அறிந்துகொள்ளாத அவளுடைய கணவன் அந்த அறையின் கதவினைத் திறக்க அவனுடைய பலம் முழுவதனையும் பயன்படுத்த வேண்டியதாயிற்று. அந்த அறையில் நுழைந்த அவன் அங்கு பெரியதொரு கரையான் புற்று இருக்கக் கண்டு அதனைக் கலைக்கத் தொடங்கினான். அதனுள்ளிருந்த பாம்பு அங்கிருந்து வெளிப்பட்டு அவனைக் கடிக்க அவன் உயிர் துறந்தான். விதவையாகிவிட்ட அவனுடைய மனைவி வாழ வழியற்றவளானாள். அவளைச் சமாதானம் செய்த அந்தப் பாம்பு அவன் பிழைக்க ஒரு வழியினைக் கூறியது. அதன்படி அவள் வீடு வீடாகச் சென்று, "எனக்குப் பிச்சை போடுங்கள், பாம்பின் நஞ்சிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" எனக் கூற வேண்டும். அவள் அவ்வாறு சென்று பிச்சை கேட்க அவளுக்குப் பிச்சையிட்டவர்கள் வீடுகளில் அதுவரை அவர்களுக்குத் தொல்லை தந்த பாம்புகள் அதன்பின் அவர்களுக்கு எத்தகைய் தீங்கும் செய்யவில்லை. இதன் அடிப்படையில் புள்ளுவனும் அவன் மனைவியும் புள்ளுவ குட முழவோடு வீடு விடாகச் செல்லும்போது பாடும்படி கேட்டுக் கொள்ளப்படுவதோடு அவர்களுக்குத் தொகையும் வழங்கி வருகின்றனர்.

"புள்ளுவர் சாதிப் பெண்கள் பெரியதொரு பானையின் வாயினை மெல்லியதான தோலால் கழுத்துப் பக்கமாகக் கயிற்றால் இறுக்கிக் கட்டுவர். மற்றொரு கயிற்றினை விரலால் பற்றி அந்த தோலில் அடிக்கும்போது அது ஒலி எழுப்பும்படியாகத் தொங்கவிட்டிருப்பர். அந்த கரகரப்பான ஓசையானது தெய்வங்களின் காதுகளுக்கு இனிமையுடையதாகக் கேட்கும் எனவும் அதனால் அத் தெய்வங்கள் சினம் தணிந்து உறக்கத்தில் ஆழ்வர் எனவும் கூறப்படுகின்றது" என திரு.டி.கே.கோபால் பணிக்கர் கூறியுள்ளார்.* மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் புள்ளுவர்களின் இந்தக் குடமுழா பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது :- "மண்ணாலான சட்டியின் அடிப்பாகத்தை அகற்றியபின் வாய்ப்பகுதியினை மட்டும் விட்டுவிட்டு எஞ்சிய அனைத்துப் பகுதிகளையும் பொதிந்து கட்டுவர். இதனால் அச் சட்டியின் அடிப்பக்கத்தைப் போர்த்திருக்கும் பகுதி ஒரு வகை முழவுபோல் அமைகின்றது. அதன் நடுவே ஒரு கயிறு இணைக்கப்பட்டிருக்கும். அந்தக் கயிற்றின் மறுமுனையினை ஒரு குச்சியினைப் பிளந்து அதனிடையே திணித்திருப்பர். இந்த முழவை அடிப்பவன் சம்மணம் இட்டு அமர்ந்தபடி சட்டியின் வாயினைத் தன் வலது முழங்கால் மீது படியும்படியாகக் கவிழ்த்து வைத்து வலக்கையால் அதனைப் பற்றிக் கொள்வான். இடக் காலின் மீது கிடக்கும் கயிற்றின் முனையில் பிணைக்கப்பட்டுள்ள குச்சியினை வலக்காலின் விரல்களால் இறுகப் பற்றிக் கொள்வான். இவ்வாறு இழுத்துப் பிடிக்கப்பட்டுள்ள கயிற்றினை ஒரு கொம்பாலான அடிகோலால் அல்லது குச்சியால் தெறிப்பான். அந்தக் கயிற்றின் அதிர்வால் எழும் ஒலி புறத்தே சட்டியின் வாயினை மூடியிருக்கும் தோலில் ஒருவகை முழக்கத்தை உண்டுபண்ணும். கயிற்றினை நெகிழ்வித்தும் இறுக்கியும் இந்த முழக்கத்தினை வேறுபாடுடைய வகையில் அமைக்கலாம். புள்ளுவர் சாதியினைச் சேர்ந்த பெண்கள் பகல் நேரத்தில் இந்த இசைக்கருவியினை வீடுவீடாக எடுத்துச் செல்வர். இதனைத் தரையில் பொருத்தமுற வைத்து, அதற்கு ஏற்றபடி அமர்ந்தவர்களாக அவர்கள் அதில் பிணைக்கப்பட்டுள்ள கயிற்றை அடித்து அதிரச் செய்யும்போது அது ஒரே சீரான இன்னிசை அதிர்வை உண்டாக்கும். அந்த இசைக்கு ஏற்ப அமர்ந்தவர்களாக அவர்கள் அதில் பிணைக்கப்பட்டுள்ள கயிற்றை அடித்து அதிரச் செய்யும்போது அதுஒரே சீரான இன்னிசை அதிர்வை உண்டாக்கும்.

* மலபாரும் அங்கு வாழ்வோரும், 1900 (*Malabar and its folk, 1900*)

அந்த இசைக்கு ஏற்ப இவர்கள் இசைபாடல்களைப் பாடுவர். இவ்வாறு சிறிது நேரம் பாடியபின் அந்த வீட்டாரிடமிருந்து தங்களுக்கு உரியதைப் பெற்றுக் கொண்டவர்களாகத் தங்கள் வழியே செல்வர். இந்த இசையும் அதற்கேற்ப இவர்கள் பாடும் பாட்டும் நாக தேவதைகளுக்கு மன நிறைவைத் தருவன. எனவே அத் தேவதைகள் அவை யாருக்காக இசைக்கப்படுகின்றதோ அவர்களுக்கு நலம் சிறக்க வாழ்த்தும்." புள்ளுவர் பாம்பின் உருவம் தீட்டப்பட்ட ஊர்வனவற்றின் தோலால் போர்க்கப்பட்ட குழலினையும் இசைக்கின்றனர். சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள இத்தகைய தோலின் மாதிரி பெரிய மரப்பல்லி (***Varanus hengalensis***) யின் தோலாலானதாகத் தெரிகின்றது. இந்தக் குழலிசையோடு மணிகள் கட்டப்பட்ட வில்லும் இசைக்கப்படும்.

புள்ளுவர் குடியிருப்புக்கள் ஈழவர், செறுமான்கள் ஆகியோர் குடியிருப்புக்களை ஒத்தவை. அவை பெரும்பாலும் மண்ணால் வைக்கப்பட்ட சுவர்கள் மீது ஓலைக் கூரை வேயப்பட்டனவாக முன்னே திண்ணையினை உடையனவாய் இருக்கும்.

சிறுமி ஒருத்தி பூப்படையின் அவளைத் தனியே ஓர் அறையில் இருக்கச் செய்வர். ஏழாம் நாள், ஏழு மங்கையர் அவளுடைய தலையில் எண்ணெய் வைப்பதோடு அவளைப் பேய்கள் முதலியன பிடித்திருப்பின் அவற்றை ஓட்டுவதற்கான பலியும் இடுவர். வாழைத் தண்டினை முக்கோண வடிவில் அமைத்து அதன்மீது இளநீரின் வழுக்கைத் துண்டுகளையும் எரியும் திரிகளையும் பொருத்தி அதனை அந்தச் சிறுமியின் தலையை மும்முறை சுற்றியபின் தண்ணீரில் கொண்டுபோய் விடுவதே இப்பலிச் சடங்காகும். தாலிகட்டு, சம்பந்தம் ஆகிய இரு திருமணமுறைகளையும் புள்ளுவர் மேற்கொள்கின்றனர். பாலக்காட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் இச் சாதியினர் உள்ளூரைச் சேர்ந்தவர்களோடேயே மணஉறவு கொள்கின்றனர். வெளியூராரோடு மணஉறவு வைத்துக் கொள்வதை இவர்கள் விரும்புவதில்லை. இதன்படி பாலக்காட்டைச் சேர்ந்த புள்ளுவன்கள் நான்காவது மைலில் உள்ள மூண்டூர், பத்தாவது மைலில் உள்ள கங்கட்டு ஆகிய ஊராரோடு மண உறவினை மேற்கொள்வர். முன்னாளில் உடன்பிறந்தவர்கள் தங்களுக்குள் மணஉறவு கொள்ள அனுமதிக்கப்பட்டு வந்ததாகக்

கூறப்படுகிறது. இதுபற்றி விசாரித்த போது புள்ளுவன்கள் இதனை அடியோடு மறுத்தனர். இத்தகையதொரு வழக்கம் இவர்களிடையே ஒரு காலத்தில் இருந்திருக்கக்கூடும் என்பதனை வேறு சாதியருள் ஒருவன் முறைகேடான உடல் உறவில் ஈடுபடும்போது அவனைப் புள்ளுவனைப் போல நடந்து கொள்கின்றான் எனப் பழி கூறுவதிலிருந்து ஊகித்து உணரலாம். திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர், அவள் தன் கணவனை மணமுறிவு செய்துகொள்ள உடன்படுவார்களாயின், அவர்கள் அவள் கணவனுக்கு முறிகொடுக்கு எனப்படும் சிறுதுணியினைத் தந்து அவளுக்கு மணமுறிவினைப் பெற்றுத் தருவர். இது மணத்தின்போது அவள் கணவன் அவளுக்குக் கொடுத்த சேலையினைத் திரும்பக் கொடுத்தலின் அடையாளமாகும்.

புள்ளுவர், மக்கள்தாய உடைமை உரிமை முறையினையே பேணுகின்றனர். இவர்களிடம் விட்டுச் செல்லும்படியாக உடமைகள் ஏதும் இல்லை. தங்கி வாழும் குடிசையும் ஒரிரு மண்பாண்டங்களுமே இவர்களுடைய உடமைகள்.

மந்திரம், மாந்திரீகம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ள இவர்கள் நோய் நொடிகள் அனைத்தும் பிசாசுகளின் தாக்குதலாலேயே வருகின்றன என நம்புகின்றனர். கருச்சிதைவு, பிறந்த குழந்தை இறத்தல், நீண்ட நேரப் பேற்றுவலி, அல்லது பேற்றின்போது தாய் இறத்தல், காய்ச்சல், முலைப்பால் இல்லாமை முதலான அனைத்துத் தீங்குகளும் பேய்பிசாசுகளின் தாக்குதலால் நிகழ்வதாகவே இவர்கள் நம்புகின்றனர். கருவுற்ற பெண்கள், குழந்தைகள் ஆகியோர் நடுப்பகல் நேரத்தில் தனியே வெளியே செல்வார்களானால் அவர்கள் இவ்வாறு பேய்களின் தாக்குதலுக்கு உள்ளாவதாக நம்புகின்றனர். வழக்கமான நடைமுறைகளிலிருந்து ஒரு சிறிது தவறி நடந்தால் அல்லது பலிகளும் படையல்களும் இடுவதில் கவனக் குறைவாக இருந்தால் குடும்பத்தில் இதுபோன்ற தீங்குகள் நிகழும் எனவும் ஆடுகள், கோழிகள் ஆகியனவற்றைப் பலியிட்டே இத்தகைய தீங்குகளிலிருந்தும் விடுதலை பெறமுடியும் எனவும் நம்புகின்றனர். தீய ஆவிகள் தங்களுடைய காரியம் கைகூட உதவினாலோ, பகைவர்களை அழிக்கத் துணை நின்றாலோ மேலும் பல பலிகளைத் தருவதாக வேண்டிக் கொள்வர். சில சமயங்களில் உள்ளூர்ச் சோதிடனைக் கலந்து பேசுவர். அவன் நடப்பினைக்

கணிதத்றிந்து நோய்க்கான காரணத்தைக் கூறுவதோடு அது குலதெய்வத்தின் கோபத்தால் விளைந்ததா அல்லது வேறு தீய ஆவிகளின் தூண்டுதலால் விளைந்ததா எனக் கூறுவதோடு யாருக்குப் பலியிட வேண்டும் என்பதனையும் தெரிவிப்பான். இதுபோன்ற சமயங்களில் வெளிச்சப்பாடிடம் சென்று நல்வாக்குக் கேட்பதும் உண்டு. குளித்துத் துவைத்த ஆடையினை அணிந்தவனாகக் கால்களில் சலங்கை கட்டிக் கொண்டு கையில் வாளேந்தி வரும் வெளிச்சப்பாடு தான் வழிபடும் தெய்வத்தின் முன் பணிவாக கண்மூடித் தியானத்தில் நின்றபின் கண்களை உருட்டியவாறு மெல்ல அடியெடுத்து வைத்தபடி தன் நெற்றியில் வாளால் சிறு காயங்களை ஏற்படுத்தியபடி நடந்து வரும்போதே அவன் உடல் நடுங்கத் தொடங்கியதாக இருக்கும். இவ்வாறு தன் மீது தெய்வ ஆவேசம் ஏறும்படி செய்து கொண்ட அவன் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சில வாக்கியங்களைக் கூறுவான். இவை தெய்வ வாக்காகக் கருதப்படும். தெய்வ வாக்கினை வேண்டி வந்தவர்கள் அவன் கூறிய சொற்களின் வழி நடத்தலே தங்களுக்கு நேர்ந்துள்ள தீங்கினின்றும் தப்ப உரிய வழியாகும் என நம்பியவர்களாக வெளிச்சப்பாட்டினைப் பணிவோடு வணங்கியவர்களாக அவன் கட்டளைகளை ஏற்றுக் கொள்வர். இவர்கள், தாங்கள் ஈடுபடப்போகும் செயலில் விளையப்போவது வெற்றியா தோல்வியா என்பதனை முன்கூட்டியே கண்டறியப் பின்வரும் வழியினைக் கையாளுகின்றனர். சிவப்பும் வெள்ளையுமான இரண்டு நிற மலர்க் கொத்துக்களைத் தெய்வத்தின் முன் இட்டு ஒரு குழந்தையினைக் கண்ணை மூடியபடி அவற்றுள் ஒன்றினை எடுத்துத் தரும்படி வேண்டுவர். அக்குழந்தை வெள்ளை மலரை எடுத்துத்தரின் அது மேற்கொண்டுள்ள செயல் வெற்றியினைத் தரும் என முடிவு செய்வர். தீய ஆவிகளைத் தன் கட்டுப்பாட்டின் ஏவலில் வைத்துக்கொள்ள விரும்புபவன் நாற்பத்தொரு நாள்கள் அதிகாலையில் குளிப்பதோடு கூடத் தன் கைப்படத் தன் உணவினைச் சமைத்துக் கொள்ள வேண்டும். மனைவியோடு உடல் உறவு கொள்வதனைத் தவிர்ப்பதோடு தீட்டு எதற்கும் உள்ளாகாதவனாகவும் அந்தக் காலத்தில் இருந்து வரவேண்டும். ஒவ்வொரு இரவிலும் பத்து மணிக்குமேல் ஒரு குளத்திலோ ஆற்றிலோ இடுப்பளவு நீரில் பிறந்த மேனியாக நின்றவனாகத் தன்வழிபடு தெய்வத்தை நோக்கி "நான் உன்னை வாழ்த்தி வணங்குகின்றேன். நீ என் விருப்பத்தை ஈடேற்றுவாயாக" என மனதில் அத் தெய்வத்தை

மட்டுமே நினைத்தவனாக 101 அல்லது 1001 அல்லது 100001 தடவை கூறவேண்டும். தீய ஆவிகள் இச்சமயத்தில் அவனுக்குத் தரும் தொல்லைகளையும் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாதவனாக அவன் இச்செயலினைச் செய்து முடிப்பானாகில் தெய்வம் அவனுடைய வேண்டுகோளினை நிறைவேற்றி வைக்கும். இத்தகைய செயல்களில் ஈடுபடும் ஒருவன் தக்க குருவின் உதவியினைப் பெற்ற, அவர் வழிகாட்ட அதன்படி நடத்தலே ஏற்ற நெறியாகும் எனக் கூறப்படுகின்றது. இல்லையாயின் அவன் முயற்சி வீண்போவதோடு அவன் பைத்தியம் பிடித்தவனாகவும் ஆக வேண்டி வரலாம்.

நாத்தான் காவு எனப்படும் பாம்புக் கோயிலில் ஒரு புள்ளுவனும் அவன் மனைவியும் பூசாரிகளாக இருந்து பாம்பன் துள்ளல் எனப்படும் சடங்கினை நிகழ்த்துவர். இதற்காக நான்கு கால்களை நட்டு அவற்றின் மீது பருத்தி அல்லது பட்டுத் துணியினை மேற்கட்டியாக இடுவர். ஐந்துவித வண்ணப் பொடிகளைக் கொண்டு தரையில் அஞ்சத்தக்க தோற்றம் தருவதாகப் பாம்பின் உருவினை வரைவர். பாம்பின் உருவினை வரைய ஐந்து வண்ணங்களில் பொடிகளைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். பாம்பின் கழுத்தில் ஐந்து வண்ணங்களைப் பார்க்கலாம் என்பதே இவ்வாறு வற்புறுத்துவதற்கான காரணமாகும். தரையில் அங்கு அரிசியினைத் தூவுவர். முதலில் கணேசருக்குத் தேங்காய் உடைத்துப் பொங்கல் படைத்து வழிபாடு நிகழ்த்துவர். சாம்பிராணி தூபம் காட்டுவதோடு ஒரு தட்டில் விளக்கும் ஏற்றி வைக்கப்படும். வழிபாடு நடத்தும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பந்தலை வலமாகச் சுற்றிவருவர். எந்த பெண்ணின் மீது ஏறி இருக்கும் பேயினை ஓட்ட வழிபாடு நிகழ்த்தப்படுகின்றதோ அவள் குளித்து வந்து அந்தப் பந்தலின் மேற்குப் பக்கத்தில் கையில் தென்னம் பாளையினைத் தாங்கியவளாக அமர்ந்திருப்பாள். புள்ளுவனும் அவன் மனைவியும் தங்கள் முழவினை முழக்கியவர்களாகப் பாடத் தொடங்குவர். புள்ளுவச்சி முழவின் முழக்கத்திற்கிசைய ஒரு வெண்கலப் பானையினைத் தட்டி இசை எழுப்புவாள். அவர்கள் இவ்வாறு பாம்புத் தெய்வத்தை நோக்கிப் புள்ளுவன் பாட்டுக்கேற்ப தலையினை இப்படியும் அப்படியுமாக ஆட்டுவர். அவர்கள் கூந்தல் அவிழ்ந்து தொங்கியபடி இருக்கும். ஆவேசம் ஏறப்பெற்ற அவர்கள் தரையில் தென்னம் பாளையால் மோதியவர்களாக அங்கு வரையப்பட்டுள்ள பாம்பின்

உருவினை அத் தென்னம்பாளையால் அழிக்கத் தொடங்குவர். இதன்பின் அவர்கள் பாம்புப் புற்றினை நோக்கிச் சென்று அங்கே நடப்பட்டுள்ள நாகதேவதைக் கற்களின்முன் விழுந்து வணங்கியவர்களாகத் தங்கள் நினைவு வரப்பெறுவர். பால், இளநீர், பழம் ஆகியவற்றை அவர்கள் உட்கொண்ட பின், புள்ளுவன் பாடுவதை நிறுத்துவான். அத்துடன் சடங்கு முடிவுறும் "சில சமயங்களில் சடங்கு நடத்தும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அனைவருமே தெய்வ ஆவேசம் ஏறப்பெறுவர். சில சமயங்களில் எவருக்கும் இத்தகைய தெய்வ ஆவேசம் வராது போய்விடுவதும் உண்டு. இவ்வாறு தெய்வம் அவர்கள்மீது ஆவேசிக்கவில்லையாயின் அதனை அவர்கள் தூய்மையின்மையினைக் குறிப்பதன் அடையாளமாகக் கொள்வர். இதனால் அவர்கள் மேலும் மனக் கவலைக்கு உள்ளாவர்" எனத் திரு கோபால் பணிக்கர் கூறுகின்றார். அவர் மேலும் தெரிவிப்பதாவது :- "இவ்வாறு தெய்வம் அவர்கள் மீது ஏறப்பெறாது போவது அந்தக் குடும்பத்தின் மீது தெய்வம் கொண்டுள்ள கோபத்தையும் குறிப்பதாகலாம். எப்படியாயினும் அது தனிப்பட்டவர்கள் மீது அல்லது அனைவரின் மீதும் தெய்வம் ஏறப் பெறாமை தெய்வக் குற்றம் உள்ளது என்பதனைக் குறிப்பதாகும். சடங்கில் வந்து அமர்ந்துள்ள யாரேனும் ஒருவர் தெய்வ ஆவேசத்திற்கு ஆட்படாதவர்களாக இருந்தால் அவர்கள் மீதும் தெய்வம் வந்து ஏறும்வரை சடங்கினை நீட்டிப்பதோடு வழிபாட்டு நிகழ்ச்சியில் ஏதேனும் குறையிருப்பின் அதனையும் களைய முனைவர். சடங்கிற்காக என ஏற்பாடு செய்யப்பட்ட நாள்கள் முடிவுறும்வரை சடங்கை நடத்தி அதனை முடித்துக் கொள்ள நாக தேவதைகளின் உடன்பாட்டினைப் பெற்றுச் சடங்கினை முடித்துக் கொள்வர். சில சமயங்களில் வரையப்பட்ட பாம்பின் உருவத்தை 101 முறை அழிக்க வேண்டியதாக இருக்கும். அப்பொழுது இச்சடங்கு பல வாரங்கள் தொடர்ந்து நிகழும். ஒவ்வொரு முறை பாம்பின் உருவம் அழிக்கப்பட்ட பின்னும் ஓரிரு ஆடவர் கையில் தீப்பந்தங்களை ஏந்தியவர்களாகப் புள்ளுவன் இசைக்கேற்ப நடனம் ஆடுவர். குடும்பத்தினர் நாகதேவதைக்காகத் தோட்டத்து மூலையில் ஒரு சிறு கோயில் அமைப்பதோடு ஆண்டுதோறும் அங்கு விழாவும் நடத்துவர். குட முழாவினை வீட்டுக்கு விலக்கான பெண்கள் தொடுவதால் ஏற்படும் தீட்டுப் போன்ற குற்றம் மற்றும் விழாத் தொடர்பான நடைமுறையில் வேறு ஏதேனும் தூய்மையின்மை நிகழ்ந்திருக்குமானால் பாம்புத் தெய்வம்

சடங்கு நடத்தும் குடும்பத்தார் மீது ஆவேசிக்காது எனக் கூறப்படுகிறது. சென்னை அருங்காட்சியகத்திற்காக ஒரு குடமுழவினை ஒரு புள்ளுவனிடமிருந்து பெற்றபோது அவன் வீட்டுக்கு விலக்கான பெண்கள் அதனைத் தொட நேரலாம் எனக் கூறி முதலில் அதனைக் கொடுக்க மறுத்தான்.

பிராமணர்களுக்குரிய தெய்வங்களின் கோயில்களில் தூரத்திலிருந்தே வணங்கும் புள்ளுவர் எல்லா வகையான ஆவிகளிலும் நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். வெலயுத்தன், அய்யப்பா, ராகு, மூனி, சாத்தான், மூக்கன், கரிங்குட்டி, பறக்குட்டி முதலிய தேவுதைகளை வணங்குகின்றனர். மூனி நலஞ்சேர்க்கும் தேவதை, அதற்கு ஆண்டுக்கு ஒரு முறை பொங்கல், தேங்காய் பழம் ஆகியன படைப்பர். மூக்கன், கரிங்குட்டி முதலிய தேவதைகளுக்கு மறியும் கோழியும் பலியிடுவர். தரையில் ஒரு தாமரைப் பூவின் உருவத்தை ஒன்பது இதழ்கள் உடையதாக அரிசிமாவால் வரைந்து அதன் ஒவ்வொரு இதழிலும் தென்னங்குருத்து ஓலை ஒன்றையும் தேங்காய் எண்ணெயில் தோய்க்கப்பட்ட திரி ஒன்றையும் ஏற்றி வைப்பர். அரிசிப் பொரி, சுண்டல், வெல்லம், பணியாரம், வாழைப்பழம், கள் ஆகியவற்றைப் படைத்துச் சாம்பிராணி தூபம் காட்டிக் கற்பூர ஆரத்தி ஏற்றுவர். மறியினைப் பலியிடுவதாயின் பொங்கலும் வைக்கவேண்டும். மறியினை வெட்டுமுன் அதன் தலைமீது நீர் தெளிப்பர். அப்பொழுது அது உடலைச் சிலிர்க்குமானால் அதனை நல்ல சகுனமாகக் கருதுவர். ஒவ்வொரு அமாவாசையின் போதும் மூதாதையர்களின் ஆவிக்காக வாழை இலையில் இறைச்சி, கோழிக் கறி, சோற்றுருண்டைகள் ஆகியனவற்றைப் படைப்பர். படையல் இடுபவர் அதற்கு முந்தைய நாளிலிருந்து குளித்து தனது உணவினைத் தானே சமைத்து உண்டபடி தூய்மை காத்து வருவார். அவன் அப்போது, "இறந்துபோன மூதாதையர்களே! எங்களால் இயன்றதை நாங்கள் படைக்கின்றோம். இவற்றை ஏற்று எங்களைக் காத்தருள வேண்டும்" என வேண்டிக் கொள்வர்.

புள்ளுவர் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். ஓர் ஆற்றை அடுத்து அல்லது இறந்தவர் குடியிருந்த இடத்தருகே பிணத்தைப் புதைப்பர். பிணத்தை ஒரு துணியால் மூடுவதோடு அதனுடன் ஒரு தேங்காயினையும் வைப்பர். பதினைந்து நாள்கள் தொடர்ந்து

இறந்தவரின் மகன் சோற்றுருண்டைகளை இறந்தவன் ஆவிக்காகப் படைப்பான். பதினைந்தாம் நாள் தீட்டினைப் போக்கிக் கொள்வதோடு விருந்தும் நடத்துவர்.

இன்று புள்ளுவர் சிலர் பல்வேறு பணிகளில் ஈடுபட்டவர்களாக உள்ளனர். பயிர்த் தொழில் தொடர்பான உழுதல், விதைத்தல், அறுத்தல் வேலிகட்டுதல் முதலிய பல பணிகளில் ஈடுபடும் இவர்கள் தானியமாகவோ பணமாகவோ கூலி பெறுகின்றனர். பண்ணையார்களின் தரிசு நிலத்தில் நிலத்திற்கான வாடகையைத் தந்து குடிசைபோட்டுக் கொண்டு வாழும் நாள் கூலிக்காரர்களாகவே இவர்கள் உள்ளனர். பிராமணர்கள், நாயர்கள், கம்மாளர், ஈழவர் ஆகியோர் இவர்கள் சமைக்கும் உணவினை உண்பதில்லை. புள்ளுவன் ஒருவன் தங்களைத் தொடுவானாயின் தச்சர்களும் ஈழவர்களும் தீட்டுக்கு உள்ளாகிவிட்டதாகக் கருதிக் குளிப்பர். செறுமான்கள், புலையர், பறையர், உள்ளாடர் முதலியோர் தொட்டால் தாங்கள் தீட்டுக்குள்ளானதாகக் கருதிப் புள்ளுவர் குளிப்பர். இவர்கள் சாதிப் பெண்கள் ஈழவர் சாதிப் பெண்களைப் போல இரண்டாக மடிக்கப்பட்ட துணியினை இடையில் கச்சையாக அணிவர். மார்பை மறைக்க இவர்கள் பெரும்பாலும் எதுவும் அணிவதில்லை.*

பூலுவன் – Puluvan

"கோயம்புத்தூர் மாவட்டத்தில் காணப்படும் எண்ணிக்கையில் குறைந்த பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள பழங்குடியினத்தவர் பூலுவர். கோயமுத்தூரைச் சேர்ந்த வேளாளருள் கற்றறிந்தவர்களாகக் கருதப்படும் இவர்கள் கம்பன் படைப்புகளைப் பேணிக்காத்து வருபவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் பரம்பரையாகப் போர் வீரர்களாகத் தொழில் புரிந்து வந்தவர்கள் என அறிஞர் ஒருவர் தெரிவிக்கின்றார். பூ(மண்), வலவன் (ஆள்பவன்) என்ற இரண்டு சொற்களும் இணைந்து பூலுவன் என்ற சொல் பிறந்தது என்று அவர் கருதுகின்றார். நிலத்தின் தொடக்க காலம் முதல் வாழ்பவர் எனப் பொருள்படும் பூருவன் என்ற சொல்லிலிருந்து வந்தது பூலுவன் என்பார் இன்னொரு அறிஞர். பெண்கள் பூப்படைந்த பின்பே இவர்கள் மணம்

---

* புள்ளுவர் பற்றிய விவரங்கள் பெரிதும் திரு.எஸ்.கே.அனந்த கிருட்டிண அய்யர் தந்த தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.

செய்விக்கின்றனர். இறந்தவர்களைப் புதைத்தல், எரித்தல் ஆகிய இரு வழக்குகளும் உள்ளன. எனினும் அண்மையில் புதைக்கும் வழக்கமே செல்வாக்குப் பெற்று வருகின்றது. இறைச்சி உண்பவர்களான இவர்கள் பழக்க வழக்கங்கள் பெரிதும் கொங்கு வேளாளர் பழக்க வழக்கங்களை ஒத்தன" என 1891 சென்னைமாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது.

பூலுவர் தங்களைப் பூலுவ வேளாளர் எனக் கூறிக் கொள்கின்றனர்.

பூந்தமல்லி – Pūnamalli

சென்னைக்கு அருகே உள்ள படைத் தலைமை இடமான பூந்தமல்லி என்ற ஊரின் பெயரால் பெயர்பெற்ற வேளாளர் பிரிவினர்.

பூணி – Pūni

கோல்லர்களின் ஓர் உட்பிரிவு.

புஞ்சல – Punjala(cock or male)

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

பூப்பள்ளி – Pūpalli

பார்க்க உண்ணி. (See : Unni)

புரகிரி சத்திரியர் – Puragiri Kshatriya

பெரிகெயர் சிலர் தங்களை இவ்வாறு கூறிக்கொள்வர்.

புறமலை, புறமலைநாடு, பிரமலைநாடு – Puramalai/ Puramalainādu / or Piramalainādu

கள்ளரின் வட்டார அடிப்படையிலான ஒரு பிரிவு.

புறனாடி – Puranadi

திருவாங்கூரைச் சேர்ந்த அம்பட்டர்களும் பூசாரிகளுமான வேளான்கள். இவர்கள் வேலக்கருப்பு எனவும் அழைக்கப்படுவர்.

புறத்துச் சர்ண – Puratti Charna

நாயர்களின் ஓர் உட்பிரிவு.

புருஷ - Purusha

பார்க்க : ஜோகி புருஷர்.

பூச - Pūsa(Hedas)

பலிசரின் ஓர் உட்பிரிவு. பாசிமணி எனப் பொருள்படும். யெருக்கலருள் ஓர் உட்பிரிவினர். கண்ணாடிப் பாசிமணி விற்போர் என்ற பொருளில் பூசலவாடு எனப்படுகின்றனர்.

பூசாளி - Pūsāli

ஓச்சன்களான கிராம தேவதைகளின் பூசாரிகளுக்கான பட்டப்பெயர்.

பூசபாடி - Pūspātti

விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த மகாராசாக்களின் குடும்பப் பெயர். ராசபுதனத்தினைச் சேர்ந்த சத்திரியர்களுள் நான்கு கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வட சர்க்கார் பகுதியில் வந்து குடியேறினர் எனவும் பூசபாடி குடும்பத்தவர்களை இவர்கள் தங்கள் தலைவர்களாகக் கொண்டனர் எனவும் விசாகப்பட்டின மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. விசாகப்பட்டினத்து ஆட்சியிலுள்ள மகாராசாவின் பெயர் மிர்சா ராசா ஸ்ரீ பூசபாடி விஜயராம கசபதிராஜ் மான்ய சுல்தான் பகதூர்காரு என்பதாகும்.

புட்பகன் - Pūshpakan

திருவாங்கூர், மலபார் பகுதிகளுக்குரிய அம்பல வாசிகளின் ஒரு வகுப்பார். இவர்கள் பெயர் தெரிவிப்பதற்கேற்ப இவர்கள் கோயில்களுக்கு மாலையும் பூவும் கொண்டு கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் என மலபார் மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. (பார்க்க : உண்ணி - See : Unni).

புதுக்க நாட்டார் - Pudukka Nāttār (people of New Country)

இடையர்களின் ஓர் உட்பிரிவு.

புதிய இசுலாம் - Pūtiya Islām

முகமதிய சமயத்திற்கு மதம் மாறியவர்களான முக்குவன்கள் தங்களைப் இசலாம் மற்றும் புதிய இசுலாம் எனப் பதிந்து கொண்டுள்ளனர்.

புற்று - Puttu (ant-hill)

கம்மர், குருபர், மாலர், மேதரர், பத்ம சாலேக்கள் ஆகிய சாதியாருக்கான புறமணக்கட்டுப்பாடு உடைய குலமாகப் பதியப்பட்டுள்ளது. கரையான் (Termites) புற்றுக்களைப் பாம்புகளின் உறைவிடமாகக் கருதிப் பலரும் வழிபடுகின்றனர்.

புட்டிய - Puttia

ரோணர்களின் ஓர் உட்பிரிவு.

புத்தூர் - Puttūr

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

பூழித் தச்சன் - Puzhi tacchan (sand carpenter)

மலபார் கம்மாளரைச் சேர்ந்த சிறு வகுப்பார்.

ராசா - Rācha (raja)

ராசா, ராசு என்பன தெலுங்கு வகுப்பார் பலருக்குப் பட்டப்பெயராக உள்ளது. பல்சர், கோல்லர், காபுகள், கொண்ட தொரையர், கோயர், மஜ்ஜரூலு, வெலமர் ஆகிய சாதியார் இந்த பட்டப்பெயரைத் தரிக்கின்றனர். தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் பெரிகெயர் சிலர் தங்களை ராசபெரிகெயர் எனக் கூறிக்கொள்கின்றனர். ராசா என்பது முத்துராசா என்பதன் சுருங்கிய வடிவமாகவும் வழங்கப்படுகிறது.

ராச்செவர் - Rāchevar

1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது வருமாறு:- "பரம்பரைத் தொழில் அடிப்படையில் இவர்கள் மூன்று பிரிவினராக உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மொழி அடிப்படையில் கன்னடியர், தெலுங்கர் என இரு தனித்த பிரிவுகள் உள்ளன.

ரணகரை எனத் தங்களைக் கூறிக்கொள்ளும் வகுப்பார் படைவீரர்களாவர். இவர்களுள் பெரும்பாலோர் மைசூர் அரசரின் ராச்செவர் மற்றும் பால படைப் பிரிவுகளில் பணிபுரிபவர்களாவர். சித்திரக்காரர் அல்லது வண்ணக்காரர் எனப்படும் மற்றொரு பிரிவினர்

வண்ணப்படங்கள், அலங்கார அமைப்புக்கள், பித்தளை மெருகுப் பூச்சு, பொம்மைகள் செய்தல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். சரிகை, தங்க ரேக்கு ஆகியவைகளையும் இவர்கள் தயாரிக்கின்றனர். இவர்கள் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொண்டாலும் மற்றச் சாதியார் இதனை ஏற்றுக் கொள்வதில்லை. பிரமாண்ட புராணத்தில் ஒரு பிராமணனுக்கு இழைத்த தீங்கின் காரணமாகச் சத்திரியர்களான தாங்கள் கைத்தொழில் செய்து பிழைக்கும்படியாகச் சபிக்கப்பட்டதாகப் பிரமாண்ட புராணத்தின் ஒரு பகுதியினை மேற்கோள்காட்டி இவர்கள் தங்கள் குலத்தின் தோற்றம்பற்றி விளக்க முற்படுவர். " மல்யுத்தம், களரிவிளையாட்டு, பளுதூக்கும் பயிற்சி, அணிவகுப்பு ஆகியனவும் ராச்செவர்களால் நடத்தப்படுகின்றன என நான் படிக்க நேர்ந்தது.

" தெலுங்கு தேசத்திலிருந்து வந்து குடியேறியவர்களின் வழித் தோன்றல்கள் ராச்செவர். இவர்கள் பதினாறாம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசர்களின் அரசப் பிரதிநிதிகளோடு வந்தவர்களாதல் வேண்டும். தங்கள் சாதியின் தூய்மையினைப் பேணுவதில் இவர்கள் ஆர்வமுடையவர்களாக உள்ளனர். தெலுங்கு பேசும் இவர்கள் பூணூல் அணிகின்றனர்." என் தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சென்னையிலும் தமிழ்நாட்டின் பிறபகுதிகளிலும் இவர்கள் ராசுக்கள், முச்சிகள் என அழைக்கப்படுகின்றனர். எனினும் மைசூரையும் ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களையும் சேர்ந்த மராத்தி பேசுகின்ற செருப்புத் தைக்கும் தொழிலில் ராச்செவர் சைவர், வைணவர் என இரு பிரிவினராக உள்ளனர். கிருட்டிணா மாவட்டத்தைச் சேர்ந்த சைவ ராச்செவர் தங்களை ஆரிய சத்திரியவாளு எனச் சிறப்பித்துக் கூறிக் கொள்வர். எனினும் இவர்கள் சித்திரக்காரர்களுக்கு உரிய இந்துஸ்தானிச் சொல்லான நகாசுவாண்டுலு என்றே மற்றவர்களால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் வைணவர்களோடு மண உறவு கொள்வதில்லை.

ராபிஜி – Rafiji

கைவிட்டவன் என்ற பொருள்படும் சொல் இது. கன்னி, ஷியர ஆகிய முகமதியப் பிரிவினரைக் குறிக்க வழங்கும் பெயர். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இப்பெயர் ராப்ஜி எனப் பதியப்பட்டுள்ளது.

ராகல – Rāgala (ragi)

செம்படி, குறவர், மாதிகர் ஆகிய சாதிகளுக்கு உரிய புறமணக்கட்டுப்பாடு உடைய பெயர். இதற்குச் சமமான ராகித், தன்னய பண்டர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பெயராக உள்ளது. ராகி, அரிசி உண்ண வசதியற்றவர்களுக்கும் சிறைக் கைதிகளுக்கும் அடிப்படை உணவு தானியமாக உள்ளது. சிறைக் கைதிகளுக்கு இதனை மாவாக்கிக் களிசெய்து தருவர். ராகி என்ற பெயர் இத் தானியத்தின் சிவப்பு நிறத்தின் காரணமாக ராக என்ற சிவப்பு நிறத்தைக் குறிக்கும் சொல்லின் அடிப்படையில் அமைந்தது.

ராக்கிண்டல – Rāghindala (pipal)

கோல்லர்களின் ஒரு கோத்திரம். இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மரத்தின் (அரசு) இலைகளை உண்ண இலை தைக்கப் அனுமதிக்கப்படுவதில்லை.

ராசகன் – Rajakan

வண்ணானுக்கான வடமொழிப் பெயர்.

ராசமகேந்திரம் – Rājamāhendram

கோதாவரி மாவட்டத்தில் உள்ள ராசமகேந்திரம் நகரத்தின் பெயரான இது பலிசரின் ஓர் உட்பிரிவுக்கான பெயராகும்.

ராசாமகன் – Rājāmakan

தெலுங்கு ராசுக்களுக்கான தமிழ்ப் பெயர்.

ராசவாசல் – Rājavāsal

அரசர்களின் பணியாளர்களைக் குறிக்கும் பெயர். இவர்கள் அகமுடையார் சாதியின் உட்பிரிவினர். பின்னர் இவர்கள் தங்களை ராசவம்சம் எனக் கூறிக் கொள்ளத் தொடங்கினர். இதற்குச் சமமான ராசவம்சம் என்பது 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மறவர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த குறும்பர் ஆகிய சாதிகளின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. ராச்குலம, ராசபாசை, ராசபோகம் என்பன அகமுடையார் சாதியின் உட்பிரிவுகளாக உள்ளன.

ராசபிண்டெ – Rājpinde

பார்க்க: அரசு. (See: Arasu)

ராசபுரி – Rājpuri

ராசவ்ரியர், ராசாபுரியர் என்பன தென்கன்னடத்தைச் சேர்ந்த கொங்கணி பேசும் வணிகருக்கும் பயிர்த் தொழிலாளருக்குமான பெயர். இவர்களைப் பற்றித் தென்கன்னட மாவட்டக் கையேட்டில் திரு.எச்.ஏ.ஸ்டுவர்ட் பின்வருமாறு எழுதுகின்றார்:- "ராசாபுரியர் பாலோலிகர் எனவும் அழைக்கப்படுகின்றனர். தொடக்கத்தில் வைணவர்களாக இருந்த இவர்கள் தங்களை வைசியர் எனக் கூறிக்கொள்ளச் சில காரணங்களைக் காட்டுவர். சமூகப் படிநிலையில் இவர்கள் தங்களைப் பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களாகக் கூறிக் கொள்வதோடு பூணூலும் அணிகின்றனர். சைவ நெறியினைப் பின்பற்றும் இவர்கள் தங்கள் சடங்குகளை நடத்தக் கராடி பிராமணர்களை அமர்த்துகின்றனர். சிறுமியரைப் பூப்படையும் முன்பே மணம் செய்து தரும் இவர்கள் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிப்பதில்லை. இவர்கள் திருமணச் சடங்கில் மணமக்கள் கைகளை இணைத்து வைப்பதே முக்கியச் சடங்காகக் கருதப்படுகிறது. அப்போது மணமகளின் தந்தை அக்கரங்களைப் பற்றி இருக்க அவள் தாயார் அக் கைகளின் மீது நீர் வார்ப்பாள். இவ்வாறு வார்க்கப்படும் தண்ணீர் முதலில் மணமகள் கைகளின் மீது விழுந்து, பின் மணமகன் கைகள் வழியே வழிந்து செல்ல வேண்டும். திருமணச் சடங்குகள் மணமகள் இல்லத்தில் நிகழும் நான்கு நாள்களும் மணமக்களுக்குரிய படுக்கை படுக்கப்படாமல் இருத்தல் கூடாது என்பதாகும். மணமகனோ மணமகளோ அதில் படுத்திருக்க வேண்டும். (இச் சடங்கு பானயைமணத்தல் என்ற பொருளில் பஜ மத்னம் எனப்படும்) நான்காம் நாள் மணமக்கள் மணமகன் இல்லம் செல்வர். அங்கும் அதேபோல மணமகளுக்கான படுக்கையில் அமரும் சடங்கு நிகழ்த்தப்படும். இவர்களுள் பெரும்பாலோர் ஊன் உண்பதில்லை. எனினும் ஆடு, கோழி ஆகியனவற்றை இறைச்சிக்காக விற்பதற்காக வளர்க்கின்றனர். இவர்களுள் பலர் இப்பொழுது பயிரிடுவோராக உள்ளனர்."

சிவாள்ளி பிராமணர்களிடையே மணச்சடங்குக்கு உரிய பாயினை ஒரு குளத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லும் பழக்கம் உள்ளது

என்பதனை இங்குக் குறிப்பிட வேண்டும். அங்கு மணமக்கள் மீன் பிடிப்பது போலப் பாசாங்கு செய்வர். பின் தங்கள் கரங்களை இணைத்துக் கொண்டவர்களாக நெற்றியினைத் தொட்டுக் கொள்வர்.

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ராசாபுரி கொங்கணஸ்தர் என்பது ராசபுரியருக்கான மற்றுமொர பெயராகப் பதியப்பட்டுள்ளது. கொங்கணத்தில் உள்ள அறுபத்துநான்க கிராமங்களில் வாழும் அறுபத்து நான்கு வகுப்பாரான கொங்கணஸ்தர்கள் இவர்கள். கூடுலுகாரர், பிராமணர்கள் நெறிமுறையினைக் கடைபிடிக்கும் கொங்கணிபேசும் தின்பண்டங்கள் தயாரிப்போர்.

ராசபுத்திரர் – Rajput

ராச புத்திர என்ற இரண்டு வடமொழிச் சொற்களும் இணைத்து அமைந்தது ராசபுத்திரர். "வட இந்தியாவினைச் சேர்ந்த போர் மறவரும் நிலக்கிழார்களுமான இவர்கள் எசமான் என்ற பொருளில் தாகூர் எனவும் சத்திரியர்களைக் குறிப்பதான இன்றைய வழக்கமான சகாட்ரி எனவும் வழங்கப்படுகின்றனர்."* 1891 மற்றும் 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் முறையே 13,754 பேரும் 15,273 பேரும் தங்களை ராசபுத்திரர் எனப் பதிந்துள்ளனர். 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் இவர்களைப் பற்றி கூறியுள்ளவை வருமாறு:– "ராசபுத்திரர் என்ற உட்பிரிவுக்கு உரியவர்களாகப் பதிந்துள்ள இவர்களைப் பற்றி மேலோட்டமாக ஆராய்ந்தால் கூட இவர்களுள் பலர் ராசபுத்திரர் என்ற பட்டப் பெயருக்கு உரியவரல்லர் என்பது தெளிவாகும். மாநிலத்தில் உள்ள உண்மையிலேயே ராசபுத்திரர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக இருக்க வேண்டும். நான் இச்சாதியினைக் குறிப்பிடுவதற்குக் காரணம் ராசபுத்திரராகத் தங்களைப் பதிந்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை உண்மையில் ராசபுத்திரர்களாக உள்ளவர்களைவிடப் பலமடங்கு மிகுதியாக இருப்பதால்தான்." வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ராசபுத்திரர்களைப் பற்றி அவரே வடஆர்க்காடு மாவட்டக்

---

* டபிள்யூ குரூக் வடமேற்கு இந்திய மாநிலங்களையும் அயோத்தியினையும் சேர்ந்த குடிகளும் குலங்களும். *(W. Crook, Tribes and Castes of North-Western Provinces and Oudh.)*

ஸ்கையேட்டில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:- "இந்த மாவட்டத்தில் இச் சாதியார் ஒரு சிலராகவே உள்ளனர். இவர்களுள் பெரும்பாலோர் வேலூரில் தங்கி வாழ்கின்றனர். சித்தூரிலும் திருப்பதியிலும் சில குடும்பங்கள் உள்ளன. முகமதியர்களுடைய படையொடு கூடத் தெற்கே வந்தவர்கள் எனவும் ராசபுதனத்தைச் சேர்ந்த சத்திரியர் எனவும் இவர்கள் கூறிக்கொள்வது படையில் சேர்ந்து பணிபுரிய இவர்கள் காட்டும் ஆர்வத்திலிருந்து உண்மை எனப் புலனாகிறது. இவர்களுள் கிட்டத்திட்ட அனைவருமே சிப்பாய்களாகவோ அல்லது படையினருக்கான ஓய்வூதியம் பெறுபவர்களாகவோ உள்ளனர். இவர்களுடைய பெயர்கள் 'சிங்' என்ற பெயரிணைப்போடு முடிவன. இந்துஸ்தானி பேசுபவர்களாகவும் தங்கள் மனைவியரைக் கோஷாகவும் வைத்திருக்கும் இவர்கள் பெரும்பாலான பழக்கவழக்கங்களில் முகமதியரையே பின்பற்றுகின்றனர். இவர்கள் மக்களால் அடிக்கடி பொந்திலியர் எனத் தவறாக அழைக்கப்படுகின்றனர். பொந்திலியர் என்ற வழக்கு வட இந்தியாவிலிருந்தும் தெற்கே வந்து குடியேறியுள்ள வைசியருக்கும் சூத்திரர்களுக்கும் உரியதாகும். இந்தத் தாழ்ந்த வகுப்பார், தங்கள் பெயரோடு சிங் என்ற பட்டப் பெயரை இணைத்துக் கொண்டவர்களாகத் தங்களை ராசபுத்திரர் எனக் கூறிக் கொள்கின்றனர். இராசபுத்திரர் இந்தப் புதியவர்களிடம் எச்சரிக்கையோடு நடந்துகொள்கின்றனர். 'சௌகா' என அழைக்கப்படும் இவர்களுடைய சமையல் கூடத்தை இவர்கள் சமயநெறிப்படி மற்றவர்கள் நுழையாதபடி பேணிக்காப்பர். அந்த அறையில் சமையல் செய்யும் இடத்தைச் சுற்றி வட்டமாக ஒரு கோடிட்டு இருப்பர். குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்கள் அதனுள் நுழைதல் கூடாது. இதே காரணத்திற்காகத் திருமணங்களின் போதும் விருந்துகளின் போதும் விருந்தினர்களுக்குச் சமைத்த உணவைப் படைக்காமல், தானியங்களாகவே வழங்குவர். அதனை விருந்தினர்கள் தனித்தனியே சமைத்துக் கொள்வர்."

விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பத்மநாபத்தில் 1794 – இல் நடைபெற்ற போர் பற்றிய ஒரு குறிப்பாக விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில் தரப்பட்டுள்ள செய்தி வருமாறு:- "இந்தப் போரில் இறந்தோர் யார் எவர் என்ற சரியான பட்டியல் இடப்படவில்லை. முந்நூற்று ஒன்பது பேருக்கு மேற்பட்டவர்கள். இந்தப் போரில்

கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுள இருநூற்றெட்டுப் பேர் ராசபுத்திரர் நாட்டினைச் சேர்ந்த முன்னணி வீரர்களான் நாற்பது ராசபுத்திர உடலங்கள் விசயராமராகுவின் பிணத்தைச் சுற்றிக் கிடந்தன. பத்மனாபம் விஜயநகரத்தைச் சேர்ந்த ராசபுத்திரர்களின் ப்ளொடென் (**Flodden**) என நெடுங்காலித்திற்கு நினைவில் கொள்ளப்படும்."

ராட்சசா – Rākshassa (a mythological giant)

தொரையரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். புராணங்களில் கூறப்பட்டுள்ள அசுரன் இவன்.

ரால்ல – Rālla (precious stones)

அரிய மணிகளை அறுத்துப் பட்டை தீட்டி விற்பனை செய்யும் பலிசரின் உட்பிரிவுக்கான பெயர். முத்தாளர், கெம்புலு என இரு மணிகளின் பெயரால் அமைந்த உட்பிரிவுகளும் இவர்களிடையே உள்ளன.

ராமதோச – Rāmadōsa *(sweet melon: Cucumis Melo)*

வீரமுஷ்டிகளின் ஓர் குலம். ராமதோச என்பது தர்பூசணிப் பழத்திற்கான பெயராகும்.

ராமசத்திரி – Rāma Kshatri

சேர்வேகர்ரர்களுக்கான மற்றுமொரு பெயர்.

ராமானுச – Rāmānuja

சாத்தானிகள் தங்களை இராமானுசர் மதத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்வர். தமிழ்நாட்டைச் சேர்ந்த பிராமணரான இராமானுசரால் தோற்றுவிக்கப்பட்டுத் தென்னிந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராமானுச மதம்.

ராணரதோட் – Rānaratōd

குருவிக்காரர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். இவர்கள் தங்களை ராதோடியர் என அழைத்துக் கொள்வர்.

ரணவீரன் – Ranaviran

வீரத்தில் விஞ்சியவன் எனப் பொருள்படும். இத்தனைச் சக்கிலியர் சிலர் தங்கள் சாதிப் பெயராகப் பதிந்துள்ளனர்.

ரண்டாம் பரிச்சா – Rāndām Parihsa (Second party)

இளையாடுகளின் ஒரு பிரிவு.

ரங்காரி – Rangāri

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ரங்காரிகள் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளவை வருமாறு:– "இவர்கள் தெலுங்கு மாவட்டங்கள் அனைத்திலும் காணப்படும் சாயம் போடுபவர்களும் தையல்காரரும் ஆவர். இவர்களின் மூதாதையர்கள் மராட்டியர்கள். இன்றும் மராட்டிய மொழி பேசுபவர்களான இவர்கள் அம்பா, பவானி தேவியினை வழிபடுகின்றனர். இறந்தவர்கள் எரிக்கலோ புதைக்கவோபடுவர். ராவ் என்பது இவர்களுக்கான பட்டப்பெயர்."

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ரங்காரிகளைப் பற்றி திரு.எச்.எ. ஸ்டுவர்ட் எழுதுவதாவது:– "வாலாசாபேட்டைப் பகுதியிலே சிறப்பாகக் காணப்படும் இவர்கள் சாயம் போடுபவர்களாவர். தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் இராமனோடுகூட இலங்கையினை வெற்றிகொள்ள உடன் வந்ததாகக் கூறுவர். (லங்கா என்ற இலங்கைத் தீவின் பெயரிலிருந்து வந்தது இவர்கள் பெயர்) ஏதோ ஒரு காரணத்தால் இவர்கள் மீது சினங்கொண்ட இராமன் இவர்களைத் தண்டிக்கத் தொடங்கினான். இவர்களுள் பெரும்பாலானவர்கள் அவனால் கொல்லப்பட்டனர். சத்திரிய குலத்தினைச் சேர்ந்த மதிப்புக்கு உரிய ஒருத்தி தன் இரண்டு பிள்ளைகளின் பூணூலை அறுத்தெரிந்ததோடு அவர்களுள் ஒருவனைத் தையல்காரனைப் போலவும் மற்றவனைச் சாயம் போடுபவனைப் போலவும் நடிக்கும்படி அறிவுறுத்தினாள். அவள் தன் வாயிலிருந்த தாம்பூலத்தினையே சாயம் போலப் பயன்படுத்த அவசரமாக வெற்றிலை பாக்கினை மென்று துப்பி உதவினாள். இந்த இரு சிறுவர்களுமே இச்சாதியின் குல முதல்வர்கள். இவர்களுள் ஒருவன் வழிவந்தவர்கள் தையல்காரர்களாகவும் எண்ணிக்கையில் மிகுதியானவர்காளவும் உள்ளனர். மற்றொருவன் சந்ததியினர் சாயம் போடுபவர்களாக உள்ளனர். துளஜ பவானியினைச் சிறப்பிக்கத் தசராபண்டிகையினையும் சிவன் நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதனைச் சிறப்பிக்கக் காமன்பண்டிகையினையும் கொண்டாடுகின்றனர். காமன் பண்டிகையின்போது நெருப்பில் எரியும் பொருள்களைக் குவித்து வைத்துத் தீயிட்டு மன்மதனை வழிபடுபவர்கள்

அதனைச் சற்றி வந்தவர்களாக வாயில் அடித்துக் கொண்டு லப! லப! எனக் கூக்குரலிட்டு மன்மதன் சாவுக்காக அழுது புலம்புவர். இந்தக் காமன் பண்டிகையில் ராசபுத்திரர், மராட்டியர், பொந்தலியர், குசராத்திகள் ஆகிய அனைவரும் கலந்துகொள்வர். மராத்தி பேசும் ரங்காரிகள் அம்மொழியினை வடநாட்டு எழுத்து முறையில் எழுதுகின்றனர். பூனாவும் சோலாப்பூருமே தங்கள் மூதாதையர் முன்பு வாழ்ந்த ஊர்கள் என இவர்கள் கூறுகின்றனர். சத்திரியர்கள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் தோற்றத்தில் பிற சாதியாரான ராசுகள் ராசபுத்திரர் ஆகியவர்களைச் சிறிதும் ஒத்தவர்களாகக் காணப்படவில்லை. இவர்கள் நல்ல உடல்வாகோ அழகான தோற்றமோ பெற்றவர்களாகவும் இல்லை. குழந்தை பெறாத கைம்பெண்களின் மறுமணத்தை மட்டும் அனுமதிக்கும் இவர்கள் அவ்வாறு மறுமணம் செய்துகொண்ட விதவைகளைச் சமயச் சடங்குகளில் பங்குகொள்ள அனுமதிப்பதில்லை. மறுமணத்திற்காக வழங்கப்படும் அனுமதி முழுவிருப்பத்தோடு வழங்கப்படுவது அன்று என்பதனை இது தெளிவுபடுத்துகின்றது. இவர்கள் பழக்க வழக்கங்கள் பெரிதும் ராசுக்களின் பழக்க வழக்கங்களை ஒத்தனவாக உள்ளன. ஊன் உண்பதனையும் மது பருகுவதனையும் மேற்கொண்டுள்ள இவர்கள் தங்கள் வீட்டுப் பெண்களைக் கோஷாவாக வைக்கும் வழக்கம் இல்லை.

பெல்லாரி மாவட்டத்தில் உள்ள ஆதோனியில் நான் நேரில் பேட்டி கண்ட ரங்காரியர் அனைவரும் தையல்காரர்களே. பிற மராட்டிய வகுப்பாரைப் போலவே இவர்களும் மிக உயர்ந்த மண்டையோட்டின் நீள அகல விகிதத் தகவு அளவு எண்ணினைப் (சராசரி 79; மேலளவு 92) பெற்றுள்ளனர். முப்பது பேர்களுள் ஒன்பது பேர்களின் மண்டையின் அகலம் 15 செ.மீ. ரை விடவும் அதிகமானதாக இருந்ததும் கணக்கிடப்பட்டுள்ளது.

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் பகுசாகரர், மல்ல அல்லது முல்ல, நாம்தேவ் ஆகியன ரங்காரிக்குரிய வேறு பெயர்களாகப் பதியப்பட்டுள்ளது. சிம்பிகர் (தையல்காரர்) உணுபுலவாடு (சாயம் போடுவர்) என்பன ரங்காரி சாதியின் உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளன.

ராணியவ – Raniyava

ராணியுவ கன்னடம் பேசும் ஹொலையாகள். தென் கன்னடத்தில் கார்ப், கார்கல், முடிபித்ரி, முல்கி ஆகிய இடங்களில் இவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களைத் துளு பேசும் ஹொலையர்களான மாரி, முண்டல ஹொலையர் ஆகியவர்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர்.

ராணியவர் வீரபத்ரசாமியினைத் தங்கள் குலதெய்வமாகக் கருதுவதோடு மாரியினையும் வழிபடுகின்றனர். மாரிக்கு அவ்வப்போது ஓர் எருமையினைப் பலியாகத் தருவர். வர்தே பூதமே இவர்களுள் பெரும்பாலோர் வழிபடும் பூதத் தெய்வமாகும். லிங்காயதர் சமயகுருவான குருபூரின் சீடர்களாகையால் இவர்கள் தங்களைச் சைவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர்.

பெண்கள் குழந்தைகளாக இருக்கும்போதே மணம் செய்விக்கப்படுவதே வழக்கமாயினும் பூப்படைந்த பின்னர் அவர்களுக்கு மணம் செய்விக்கத் தடையேதும் இல்லை. பன்னிரண்டு கம்பங்கள் நடப்பட்டு போடப்பட்ட பந்தலின் கீழே இவர்கள் மணத்தை நடத்துகின்றனர். துளு சாதியாரிடையே உள்ளதைப் போலவே மணமக்களின் இணைக்கப்பட்ட கரங்களின் மீது நீர்வார்த்தலே மணச் சடங்குகளுள் முக்கியமானதாகும். மைசூரைச் சேர்ந்த கன்னடம் பேசும் ஹொலையர்களைப் போல மணமக்களுக்கு இடையே திரையிட்டு மணச் சடங்கை நடத்தும் பழக்கம் இவர்களிடம் இல்லை.

திருமணத்திற்கு முன் கள்ளக்காதலில் ஈடுபடும் பெண்களும் திருமணத்திற்குப்பின் புறத்தொழுக்கத்தில் ஈடுபடும் பெண்களும் வளையல், மூக்குத்தி, கறுப்புப் பாசிமணி ஆகியனவற்றை அணிய அனுமதிக்கப்படுவதில்லை. இத்தகைய கூடா ஒழுக்கங்களில் ஈடுபடுபவர்கள் கைம்பெண்களைப் போல நடத்தப்படுகின்றனர். மனைவியினைத் தவிர வேறு பெண்களோடு உறவுகொள்ளும் ஆண்கள் ஊர்ச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை.

முதல்முதல் பூப்படையும் சிறுமி பன்னிரண்டு நாள்களுக்குத் தீட்டு உள்ளானவளாகக் கருதப்படுகிறாள். பதினொரு சிறுமியர் நாளும் அவள்

தலையில் தண்ணீர் கொட்டுவர். பதிமூன்றாம் நாள் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு விருந்திடுவர். அச்சிறுமி மணமானவளாயின் கணவனோடு உடல் உறவு கொள்வாள்.

திருமணமான ஆண்களும் பெண்களும் இறந்தால் எரிக்கப்படுகின்றனர். திருமணம் ஆகாதவர்கள் இறந்தால் புதைக்கின்றனர். சாவு நிகழ்ந்த மூன்றாம், ஏழாம், பதின்மூன்றாம் நாள்களில் இறந்தவர்களுக்கு இறைச்சியும் பொங்கலும் படைக்க வேண்டும். ஏழாம் நாள் அனைவருக்கும் தாராளமாகக் கள் வாங்கித் தருவர்.

ராவ் – Rao

இது தேசஸ்த பிராமணர்கள், மராட்டிய வகுப்பார், சமண சமயத்தவர், சேர்வைக்காரர் ஆகியவர்களுக்கான பட்டப்பெயர். தங்களைச் சத்திரியர் எனக் கூறிக் கொள்ளும் சில பெரிகெரும் ராவ் (ராயர்) என்ற பட்டத்தை வழக்கமான பணிவைப் புலப்படுத்தும் அண்ணா அல்லது அய்யா என்ற பட்டத்திற்குப் பதிலாகத் தரிக்கின்றனர்.

ரரக்கார் – Rarakkar

ரரக்கர் அல்லது விச்சாக்கார் திருவாங்கூரைச் சேர்ந்த குறவர்களுக்குப் பேயோட்டுபவர்கள்.

ராடி – Rāti (stone)

ஒட்டே சாதியரின் உட்பிரிவினர்.

ரத்னம் – Rathna (precious stones)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். இதற்குச் சமமமான ரல்ல பலிசர் ரத்னக் கற்களில் வியாபாரம் புரிபவர்கள்.

ரட்டு – Rattu

கைக்கோளரின் ஓர் உட்பிரிவு.

ராவாரி – Rāvāri

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் வணிகம் புரியும் பிரிவினராகப் பதியப்பட்டுள்ளது. வணிகரைக் குறிக்கும் வியாபாரி என்ற சொல்லின் சிதைந்த

வடிவமாகும். லட்சத் தீவுகளில் வாழும் வகுப்பாரைக் குறிக்கும் ராவேரி என்ற சொல் இதற்குச் சமமானதாகும்.

ராவிசெட்டு – Rāvi chettu *(Pipal tree)*

காலிங்கி சாதியாரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். அரச மரம் என்பது இதன் பொருள். தென் இந்தியக் கிராமங்களில் எங்கும் இதனைக் காணலாம். இதனைச் சுற்றி மேடை அமைத்து இருப்பர். இந்துக்கள் இதன் முன் தங்கள் கால் செருப்புக்களை அகற்றியவர்களாக வணங்குவர். இந்த மேடையில் ஊர்ச்சபைக் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம். இந்த மரம் குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு ஆண் குழந்தையினைத் தருவதாக நம்பப்படுகிறது. இதன்பொருட்டு அத்தகையவர்கள் அரச மரத்திற்கும் வேப்ப மரத்திற்கும் மணம் செய்து வைப்பர்.

ராவுலொ – Rāvulo

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளாதவது :– "மூனியர், மாலியர், ராவுலொர் என்ற மூன்று கோயில் பணியாளர் வகுப்பார் ஒரியர்களிடையே உள்ளனர். ராவுலொ பிரிவினர் சிவன் கோவில்களிலும் பிராமணர் திருமணங்களிலும் சங்கு முழக்குவதோடு பூ வியாபாரமும் செய்கின்றனர். இவர்கள், தங்களை மற்ற இரு பிரிவினரை விடவும் உயர்ந்தவர்களாகவே கருதுகின்றனர். மாலியர் சிவன் கோவில்களிலும் விட்டுணு கோவில்களிலும் பணி செய்வதோடு பூ வியாபாரமும் செய்கின்றனர். மூனியர் கிராம தேவதைகளின் கோயில்களில் மட்டுமே பணிபுரிய அனுமதிக்கப்படுகின்றனர். ராவுலொ பிரிவினரிடையே குழந்தை மணம் கட்டாயமானது. எனினும் கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்வதையும் சில சமயங்களில் மணமுறிவினையும் இவர்கள் அனுமதிக்கின்றனர். தன் மனைவியினைக் கொடுமைப்படுவத்துவதோடு அவளைக் கைவிடுபவர்களுக்கும் இச் சாதியார் விசித்திரமான தண்டனை வழங்குகின்றனர். அவனை மீன் பிடிக்கப் பயன்படுத்தும் மூங்கில் கூடையினுள் உட்காரச் செய்து அவன் மனைவியினை அந்தக் கூடையின் மீது உட்காரச் செய்வர். அந்தக் கணவன் மனைவியரின் மீது அவர்கள் ஐந்து பானை தண்ணீரை ஊற்றச் செய்வர். இறந்தவர்களின் பிணத்தை தூக்கும் முன் அதன்மீது ஐந்து பானை தண்ணீரை ஊற்றும்

வழக்கின் அடிப்படையில் இதனைப் பிணத்தை குளிப்பாட்டும் வீட்டின் முன்பகுதியில் நடத்துவர். அதன்பின் அவன் மனைவி உலக்கையைத் தூக்கி எறிந்தவளாக ஒரு சமைக்கும் சட்டியினை உடைப்பாள்: இதனை அவள் கணவன் இறந்தபோது எவ்வாறு சடங்கு இயற்றுவாளோ அதனைப் போலவே இப்போதும் செய்வாள். மேலும் அவள் தன் கை வளையல்களை உடைத்தும் கழுத்துச் சங்கிலியினைப் பிய்த்து எறிந்தும் தன்னை விதவைக் கோலம் பூண்டவள் போல ஆக்கிக் கொள்வாள். தன்னைப் பொருத்தவரை தன் கணவன் இறந்தவனாகிவிட்டான் என்பதனை இப்படிக் குறிப்பால் உணர்த்திய பின் அவள் மறுமணம் செய்துகொள்ளும் உரிமை பெற்றவள் ஆவாள். சமயம் மற்றும் குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்த இவர்கள் பிராமணர்களையே அமர்த்துகின்றனர். மீனும் ஆட்டிறைச்சியும் உண்ணும் இவர்கள் மாட்டிறைச்சியினை உண்பதோ, மது பருகுவதோ இல்லை. இன்று இவர்களுள் பலர் மண்சுவர் வைப்போராகவும், கரை கட்டுவோராகவும் வண்டியோட்டுவராகவும், கொத்தன், தச்சன், நாட்கூலி ஆகிய பணிகளை மேற்கொண்டோராகவும் உள்ளனர். கணக்கெடுப்பு அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :- "மாலியர் காய்கறி பயிரிட்டு விற்கும் ஒரிய சாதியார். இதே பெயரில் வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகளில் ஒரு சாதியார் காணப்படுகின்றனர். இவர்கள் கோயில் பணியாளர்களாகவும் மாலை கட்டுவோராகவும் பணிபுரிகின்றனர். கணக்கெடுப்பு விவரங்கள் இவ்விரு சாதியாரையும் குழப்பிக் கொண்டுள்ளது." ராவுலொ பற்றி எனக்குத் தரப்பட்ட விவரங்களின்படி ராவுலொ, மூனிய, மாலிய ஆகிய மூன்றும் மூன்று சாதிகளல்ல ஒரே சாதிதான் எனத் தெரியவருகின்றது. மூனியர் பிற தெய்வங்களோடுகூட ரிஷிகள், சக்தி, சிவன், கணேசர் ஆகியோரையும் வழிபடுவதாகக் கூறப்படுகிறது. சாரளதாஸ் என்ற மூனியன் ஒரிய மொழியில் மகாபாரதத்தைச் செய்த புகழ்பெற்ற கவிஞராவார். இவரைச் சூத்திர முனி என வழங்குவர்.

கஞ்சம் மாவட்டத்தில் சிவன்கோயில்களில் பூசாரிகளாகப் பணிபுரியும் குருமோக்களும் ராவுலொ என்ற பட்டப் பெயரைத் தரிக்கின்றனர். மூனி சிபிதி கோயில் பணியாளர்களுக்குரிய பட்டப் பெயராகும்.

ராவுத்தன் – Rāvuttan

ராவுத்தன் அல்லது ரொத்தன் என்பது லப்பை, மரக்காயர், சோனகம் முகமதியன் ஆகியவர்கள் தரிக்கும் பட்டப் பெயர். இதற்குச் சமமான ராவுத் அல்லது ரவும் என்பது பலிசரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. அதுவே கன்னடியன் பட்டப் பெயராகவும் உள்ளது.

ராய ராயுதுரு – Rāya Rāuturu

மைசூரைச் சேர்ந்த சுண்ணாம்புக் காளவாய் போடுவோருக்கான பெயர்.

ராயன் – Rāyan

பள்ளியரான வன்னியர் சிலர் தரித்துக் கொள்ளும் பட்டப்பெயர். இவர்கள் பூணூல் அணிவதோடு தங்களைச் சத்திரியர் எனவும் கூறிக்கொள்வர்.

ராயி – Rayi (stone)

மாலரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

ராசு – Rāzu

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ராஜுக்கள் எனப்படும் ராசுக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாகவது :– "இவர்கள் காபுகள், கம்மர், வெலமர் ஆகிய சாதிகளின் போர் மறவர் பிரிவின் வழித்தோன்றல்கள் ஆதல் கூடும். இவர்கள் தங்கள் திருமணத்தின்போது ஒரு வாளினை வழிபடும் சடங்கினை மேற்கொள்வதால் இவர்களை போர்மறவர் குலத்தவர் எனலாம். தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் பருத்தி நூலும் கம்பளி நூலும் இணைந்ததான நூலினால் மணமக்கள் மணிக்கட்டில் கங்கணம் அணிவிக்கின்றனர். உண்மைச் சத்திரியர் உண்ணாததான கோழி இறைச்சியினை இவர்கள் உண்கின்றனர். மற்ற இந்துக்கள் ஒரு முகமாக இவர்கள் சத்திரியர் என்பதனை உடன்படாது மறுக்கின்றனர். முரிகிநாடி, நந்திமண்டலம், சூர்யவம்சம் என்ற மூன்று புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. இவற்றுள் முன்னவை இரண்டும் வட்டார அடிப்டையில் அமைந்தவை. சூரிய, சந்திர, நந்தி மண்டலம் என்பனவே இவர்களுடைய உட்பிரிவுகள் எனக் கூறுவோரும் உளர். கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த ராசுகள்

பற்றிய ஒரு குறிப்பில் மறைத்திரு ஜெ.கெயின் இவர்கள் சூரியவம்சபு, சந்திரவம்சபு, வெலிவேயபடின் எனும் சாதி விலக்கம் பெற்ற ஆர்யவம்சபு வினரான ராசுலு என்ற மூன்று உட்பிரிவினராக உள்ளனர் எனக் கூறியுள்ளார். கொண்ட தொரையர் தங்களைச் சூரிய வம்சத்தைச் சேர்ந்த ராச(ராசு) காபுகள் அல்லது ராச ரெட்டிகள் என அழைத்துக் கொள்வதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். திரு கெயின் மேலும் இது பற்றிக் கூறுவதாவது :– "கோதாவரி கழிமுகப் பகுதியில் பசவு ராசுலு சாதியினைச் சேர்ந்த குடும்பங்கள் பல உள்ளன. இவர்களுடைய முன்னோர் அறியாதவர்களாக ஒரு பசவனைக் (காளையைக்) கொல்ல நேர்ந்ததே இவர்கள் இவ்வாறு பெயர் பெறக் காரணம் எனக் கூறப்படுகிறது. இந்தக் குற்றத்திற்கு தண்டனையாக இக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் திருமணத்திற்குமுன் ஒரு காளையையும் பசுவையும் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு மணம் செய்து வைத்தபின் தங்கள் மணச் சடங்குகளைத் தொடங்கலாம் என விதிக்கப்பட்டுள்ளது.

ராசுக்கள் பற்றித் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் பின்வருமாறு எழுதுகின்றார் :– * "தெலுங்குச் சாதியாரான இவர்கள் தமிழ் மாவட்டங்களிலும் ஆங்காங்கே சிறு குழுவினராகக் காணப்படுகின்றனர். கடப்பை, வட ஆர்க்காடு மாவட்டங்களிலே இவர்கள் எண்ணிக்கையில் மிகுந்தவர்களாக உள்ளனர். விசயநகரத்துப் படையுடன் கூட இவர்கள் அம் மாவட்டங்களில் வந்து தங்கியவராதல் வேண்டும். வேறு பல சாதிகளைச் சேர்ந்த தனிப்பட்டவர்கள் தங்களை ராசுக்கள் எனப் பதிந்துள்ளதோடு சத்திரியர் எனவும் உரிமை கொண்டாடுகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ராசு சாதியினைச் சேர்ந்தவர்களும் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக் கொள்கின்றனர். சத்திரியன் என்பது ஆரிய இனத்தோடு தொடர்பற்றதாகப் போர் மறவர் வகுப்பாருக்கு உரிய பெயரும் ஆதல் கூடும் என்பதனை ஒப்புக்கொண்டால் இவர்களுடைய இந்த உரிமை முறையானதென ஏற்றுக் கொள்ளலாம். பெரும்பாலும் வைணவர்களாக உள்ள இவர்கள் பிராமணர்களையே தங்கள் புரோகிதர்களாக அமர்த்திக் கொள்கின்றனர். பூணூல் அணியும் இவர்கள் திருமணம் முதலிய புறச் சடங்குகளில் பிராமணர்கள் சடங்கு

---

* 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை (Madras Census Report, 1891.)

முறைகளைப் பின்பற்றியவர்களாகச் செய்கின்றனர். " ராசுக்கள் பற்றித் திரு.ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் மேலும் கூறியுள்ளதாவது :- "வட ஆர்க்காடு மாவட்டத்தில் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் வகுப்பாருள் எண்ணிக்கையில் மிகுதியானவர்கள் இவர்களே. கர்வேட்நகர் சமீனுக்குரிய பகுதியில் இச் சாதியினரே மிகப் பெரும்பான்மையினராக இருப்பதோடு அச் சமீன்தாரும் இச் சாதியினரின் தலைவராக உள்ளார். மற்ற இந்துக்களிலிருந்தும் பார்த்த அளவில் வேறுபடுத்தி அறியக்கூடிய நன்கு வளர்ச்சிபெற்ற உடல்வாகும் அழகிய தோற்றமும் வாய்க்கப் பெற்றவர்கள் இவர்கள். தங்கள் முன்னோர்கள் மேற்கொண்டிருந்த தொழிலான போர்ப்படையில் பணிபுரியும் ஆர்வத்தை இன்று இவர்கள் அடியோடு இழந்துவிட்டதாகத் தெரிகின்றது. இன்று இவர்கள் அனைவரும் உழவுத் தொழிலையே மேற்கொண்டுள்ளனர். வடசர்க்கார் மாவட்டங்களிலிருந்து வந்து குடியேறியுள்ள இவர்கள் தெலுங்கையே பேசுகின்றனர். சென்ற இரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளாக இவர்கள் கர்வேட்நகர் சமீன்தாரோடு கூட வடக்கே இருந்து வந்தவர்களாதல் வேண்டும். பெரும்பாலும் வைணவர்களாக உள்ள இச் சாதியில் சிலர் சைவ நெறியினையும் மேற்கொண்டவர்களாக உள்ளனர். நிமிஷகாம்பாள் என்ற தேவதையினைக் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர். இத் தெய்வம் பார்வதியின் அம்சமாதல் கூடும். இத் தேவதை இவ்வாறு பெயர் பெறக் காரணம் சில முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு நிமிஷத்தில் வெளிப்பட்டவளாக அந்த முனிவர்களைக் கொடுமைக்கு உள்ளாக்கி வந்த இராக்கதர்களை அழித்தமையே ஆகும் என்பர். சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் அதற்கேற்பப் பூணூல் அணிகின்றனர். இறைச்சி உண்பவர்களாக இருப்பினும் கூட இவர்கள் தங்கள் நடத்தையில் பெருமைபாராட்டிக் கொள்வதோடு அதற்கேற்ப நல்லொழுக்கம் உடையவர்களாகவும் உள்ளனர். வசதியான குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வெளியே நடமாடாதவர்களாக அந்தப்புர வாழ்க்கையினை மேற்கொண்டவர்களாக உள்ளனர்."

விசாகப்பட்டினம் மாவட்டத்தில் ராசுகள் கொண்ட (மலை) ராசு, பூ (சமவெளி) ராசு என இரு பிரிவினராக உள்ளதாகத் தெரிகின்றது. பல சமீன்தார்களை உள்ளடக்கியதான கொண்ட ராசுப் பிரிவு கொண்ட, கோடு, கைய்ட், மூக, யேனாதி என்ற பல உட்பிரிவுகளைக்

கொண்டுள்ளது. கொண்ட ராசுக்கள் மலைப் பக்கங்களைச் சார்ந்த வட்டாரத் தலைவர்கள். மிக அண்மைக் காலத்திலேயே இவர்கள் ராசு என்ற பட்டம் தரிக்கத் தொடங்கியவர்களாதல் வேண்டும்.

கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த ராசுக்கள் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. எப்.ஆர். ஹெமிங்வேக்குக் கடப்பாடுடையேன் :- "தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் பூணூல் அணிகின்றனர். பிராமணர்களைப் போலக் கோத்திரப் பிரிவுகளைப் பெற்றுள்ள இவர்கள் பிராமணர் அல்லாதாரோடு உண்ண மறுப்பர். சூரியன், சந்திரன், மச்சம் என்ற மூன்று பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. இவற்றுள் முதலாவது பிரிவினைச் சேர்ந்தவர்கள் தங்களை அயோத்தியினை ஆண்ட அதே இராமன் பரம்பரையினர் எனக் கூறிக் கொள்வர். இரண்டாவது பிரிவினர் அஸ்தினாபுரத்தை ஆண்ட பாண்டவர்கள் வழித் தோன்றல்கள் எனக் கூறிக்கொள்வர். மூன்றாம் பிரிவினர் அனுமனுக்கும் கடல் நங்கை ஒருத்திக்கும் பிறந்தவனின் வழிவந்ததாகக் கூறுவர். இச் சாதிப் பெண்கள் கோஷா முறையினைக் கண்டிப்புடன் மேற்கொள்கின்றனர். ஒரே குடும்பமாக உள்ள ஒருவனுடைய தம்பியின் மனைவியினைக் கூட ஒருவன் பார்த்தல் கூடாது என்ற அளவிற்கு இதனை இவர்கள் கண்டிப்புடன் பின்பற்றுகின்றனர். திருமண நிச்சயதார்த்தச் சடங்கினை இவர்கள் நிர்ணய போஜனம் என்பர். சுபரேக எனப்படும் மணஉறுதிப் பத்திரங்களை எழுதி மாற்றிக் கொள்வர். திருமணம் மணமகள் இல்லத்திலேயே நிகழும். பிரதான சடங்கின் போது மணமகள் கழுத்தில் மஞ்சள் நூல் அணிவிக்கும் பழக்கம் இவர்களிடையே இல்லை. மணச் சடங்குகள் அனைத்தும் முடிவுறும்வரை மணமகன் ஒரு வாளினைத் தன்னோடு வைத்துக் கொண்டவனாக இருத்தல் வேண்டும். அச் சடங்கு தொடங்குமுன் அவன் வாள் தரித்தவனாக ஊரைச் சுற்றி ஊர்வலமாக வருவான். கோஷா முறையிருப்பதால் இச் சாதிப் பெண்கள் மணநிகழ்ச்சியில் வந்து பங்கு பெறுவதில்லை. மணமகளும் முகத்திரை அணிந்தவளாகவே இருப்பாள். மற்றச் சாதியாரைப் போலன்றி இவர்கள் வறுத்த அரிசி முதலியவற்றையே மணச் சடங்கின் போது பயன்படுத்துகின்றனர். மற்றச் சாதியாரைப் போல மஞ்சளில் தோய்த்த பருத்தி நூலாலான கங்கணத்தை அணியாது பருத்தி நூலும் கம்பளி நூலும் கலந்து பின்னிய நூலினையே இவர்கள் கங்கணமாகத் தரிக்கின்றனர். ராசுக்கள் பயிர்த்

தொழிலிலேயே பெரிதும் அமர்த்தப்பட்டவர்களாக உள்ளனர். இவர்களுள் சிலர் தெலுங்கிலும் வடமொழியிலும் நல்ல புலமை பெற்றவர்கள். இச் சாதியினைச் சேர்ந்த சமீன்தார்கள் காளியினைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர். அமலாபுரத்தைச் சேர்ந்த ராசுக்கள் லட்சுமி தேவியினைச் சிறப்பாக வழிபடுகின்றனர். இவர்கள் தோற்றத்தில் மற்றவர்களிலும் தனித்த சில கூறுகளைப் பெற்றிருக்கக் காணலாம். இவர்கள் தலைப்பாகையின் குஞ்சத்தின் ஒருமுனை இடது காதின் மீதும் மறுமுனை பின்னாலும் தொங்கும். தலையின் எந்தப் பகுதியினையும் மழித்துக் கொள்ளாதவர்களாகக் காதுகளை ஒட்டி மயிர்க் கற்றைகள் தொங்க இவர்கள் காட்சி தருவர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ராசபாளையத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ராசுக்கள் சிலர் குடியமர்ந்துள்ளனர். இவர்கள் இங்கு வந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. பாசுபார்தி என்ற புறமணக்கட்டுப்பாடுடைய குலத்தவர்கள் இவர்கள். இக் குலத்தவர்களுக்கும் கொட்டிமுக்குல குலத்தவர்களுக்கும் திருவிழாக்கள், சடங்குகள் ஆகியவற்றின்போது தனி மரியாதை காட்டப்படுகின்றது. இவ்வாறு முதலில் வந்து குடியேறிவர்களின் சந்ததியினர் தென்னகத்துக் குறுநில மன்னர்களின் கீழ் சிறப்பாகத் திருமலை நாயக்கனின் கீழ் பணிபுரிந்துள்ளனர். விசயநகர அரசர்களின் மரபில் பிறந்தவரான சின்னராசு என்பவர் தன் சாதியினைச் சேர்ந்தவர்களோடு இங்கு வந்து குடியேறியிருந்தார். ஒரு சமயம் வேட்டை நாய்களுடன் வேட்டைக்குப் புறப்பட்ட இவர்கள் சஞ்சீவி பர்வதச் சாரலை அடைந்தபோது நீர் வேட்கை உற்றவர்களாயினர். அந்த வட்டாரத்தில் எங்கும் தண்ணீரில்லை. இவர்கள் கண்ணபிரானை நோக்கிப் பிரார்த்தித்தனர். அவரும் மலையின் உச்சியில் ஒரு அருவியினைத் தோற்றுவித்தார். தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொண்ட அவர்கள் அந்தப் பள்ளத்தாக்கில் மேற்கு நோக்கிச் சென்றனர். தெய்வம் அவர்களிடம் அங்கும் தண்ணீர் இருப்பதாகவும் அவர்கள் தாகம் தீர்த்துக் கொள்ளலாம் எனவும் அறிவித்தது. அத்துடன் அங்கு அவர்களோடு நாய்களை முயல்கள் எதிர்த்துத்தாக்கும் எனவும் அறிவித்தது. புனிதமான அந்த இடத்திலே அவர்கள் தங்கள் குடியிருப்பினை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது தெய்வத்தின் கட்டளை. ராசபாளையத்திற்கு மேற்கே இன்றுள்ள குளமும் அங்குள்ள சாவடியும்

பாசபாடியருக்கு உரியனவாகையால் அந்தப் பகுதியே இவர்கள் முதலில் வந்து தங்கிய பகுதியாதல் வேண்டும். தனஞ்சய, காசயப, கௌண்டின்ய, வசிஸ்ட என நான்கு முனிவர்களின் பெயர்களில் அமைந்த நான்கு கோத்திரங்கள் ராசுக்களிடையே உள்ளன.

இந்த நான்கு கோத்திரங்களுள்ளும் ஊர்கள் முதலியவற்றின் பெயரில் அமைந்த பல புறமணக்கட்டுப்பாடுடைய குலங்கள் உள்ளன. இவர்கள் அனைவரும் வடகலை அல்லது தென்கலை வைணவ சமயநெறியினைப் பின்பற்றுபவர்கள். அய்யனாரையும் இவர்கள் வழிபடுகின்றனர். தங்கள் நேர்ச்சிக் கடனைச் செலுத்தப் பழனிக்கும் காவடிகளை அனுப்பி வைப்பர். பிராமணர்களே இவர்சள் குடும்பங்களுக்கான புரோகிதர்களாக உள்ளனர்.

ராசபாளையத்தைச் சேர்ந்த ராசுக்களின் திருமண நிச்சயதார்த்தம் பெண் வீட்டிலேயே நிகழும். பந்தலிடப்பட்டு அதனுள் அமைக்கப்பட்ட மேடையில் ஏழு தட்டுகளில் வாழைப்பழம், வெற்றிலை, மஞ்சள், தேங்காய், பூ ஆகியன வைக்கப்பட்டிருக்கும். பிராமணத்தி ஒருத்தி ஒரு தட்டில் வைக்கப்பட்டுள்ள இருப்பத்தைந்து ரூபாய்களையும் ரவிக்கைத் துணி ஒன்றினையும் கொண்டுபோய் மணக்க உள்ள சிறுமியின் முன் வைப்பாள். அந்தப் பொருள்கள் அனைத்தும் அவள் முடியில் இடப்படும். இதனால் இச் சடங்கு மடி அல்லது ஒடி நிஞ்சடம் எனப்படுகிறது.

மணமகளின் கூந்தலில் மலர்களிட்டு முடிந்து அவளுக்கு மஞ்சளையும் சந்தனத்தையும் பூசுவர். கொஞ்சம் நெல்லும் பருப்பும் இச் சடங்கில் பங்கு பெறும் பிராமணத்திக்குத் தருவர். அதில் ஒரு பகுதியினைப் புனிதமானதாகக் கருதிப் பாதுகாப்பர். அந்த நெல்லில் கொஞ்சத்தைத் தானியக் களஞ்சில் கொண்டு இடுவர். அந்த நெல்லில் எஞ்சியதைப் பந்தலில் ஒரு பக்கமாகக் குற்றி அரிசியாக்குவர். பருப்பினைத் திரிகையிலிட்டு அரைப்பர். திருமண நாளன்று மணமகள் குடும்பத்தினர் இன்னிசைக் குழுவினரோடு கூட மணமகன் இல்லத்திற்கு தேங்காய், பழம், வெற்றிலை, தலைப்பாகை ஆகியனவற்றைக் கூடைகளில் எடுத்துச் செல்வர். மணமகன் ஒரு புரோகிதரோடும் தன் சாதியினைச் சேர்ந்த ஆண் பெண்களுடனும் ஒரு கிணற்றடிக்குச்

செல்வான். கொஞ்சம் பாலையும் அவனுக்கு நெருங்கிய ஒருத்தியின் மூக்குத்தினையும் அதன் அருகில் வைத்திருப்பர். பெண்கள் அனைவரும் அவன் தலையில் பால் தெளிப்பர். சிலர் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பர். மணமகன் குளித்தபின் தன்னை அலங்கரித்துக் கொள்வான். கிணற்றடியிலிருந்து அவர்கள் திரும்பும் முன் ஊற வைத்த அரிசி, கூடியுள்ள அனைவருக்கும் வழங்கப்படும். மணமகன் இல்லத்தில் வழக்கம்போல் வெக்காலி (***Anogeissus latifolia***) மரத்திலிருந்து வெட்டப்பட்ட கிளை ஒன்று மணமேடையினைத் தாங்கி நிற்கும் கம்பம் ஒன்றுடன் இணைத்துப் பால்கம்பமாகக் கட்டப்படும். பால் கம்பத்தின் உச்சியில் ஒரு குறுக்குச் சட்டத்தைப் பொருத்தி அதன் ஒரு முனையில் தேங்காய், வெற்றிலை, மஞ்சள் ஆகியனவற்றை துணியில் முடிந்து தொங்கவிடுவர். பால்கம்பத்தைச் சுற்றி மாவிலைகள் கட்டப்பட்டிருக்கும். பால் கம்பத்தை நடுவதற்குச் சற்றுமுன் அதற்கு தேங்காய் உடைப்பர். பால்கம்பத்தின் அடிப்பாகத்தில் உண்டாக்கிய ஒரு குடைவினுள் முத்து ஒன்றையும் பவளக் கட்டி ஒன்றையும் இடுவர். மேலே தொங்கவிடப்பட்டுள்ள தேங்காய் முதலியன பால்கம்பத்தைக் கொண்டு வந்த தச்சனுக்கு உரியன. பிராமணர்கள், ராசுக்கள், அம்பட்டர்களான இசை வாணர்கள் மட்டுமே மணமேடையின்மீது அமர அனுமதிக்கப்படுவர். அனைவருக்கும் வெற்றிலை பாக்கு வழங்கியபின் மணமகனும் அவனைச் சேர்ந்தவர்களும் மணமகள் இல்லத்திற்குப் புறப்படுவர். அங்கும் இதே போலப் பால் கம்பம் நடப்பட்டிருக்கும். அதன்பின் அவர்கள் மணமகன் வீட்டிற்கே திரும்பி வருவர். மணமகன் முகமும் தலையும் மழிக்கப்படுவதோடு அதே அம்பட்டனால் அவன் நகங்களும் கத்தரிக்கப்படும். இதற்குக் கூலியாக அந்த அம்பட்டன் இரண்டணாவும் மணமகன் அப்போது அணிந்திருக்கும் உடைகளையும் பெறுவான். குளித்தபின் மணமகன் சாவடிக்கு அழைத்துச் செல்லப்படுவான். அங்கு அவனுக்கு தலையில் வண்ணத் தலைபாகை வைத்து அணிகள் பூட்டி மாலை அணிவிப்பர். காலையில் நடைபெறும் சடங்குகளின்போது புரோகிதர் மணமகனின் வலது கையில் சிறு விரலைப் பிடித்தவராக அவனை அரிசி, மஞ்சளில் தோய்த்த அரிசி, நெல் உமி, வெல்லம், கோதுமைத் தவிடு, பருத்திக் கொட்டை ஆகியன அருகே வைக்கப்பட்டுள்ள மணமேடைக்கு அழைத்துச் செல்வார். அங்குப் பிராமணீய நெறிப்பட்ட புண்யாக வாசனம், ஜாதகர்மம், நாமகர்ணம், சவுளம், உபநயனம் ஆகிய சடங்குகள் நிகழ்த்தப்படும். இச்

சடங்குகளின்போது புரோகிதர், வழக்கமான வேத மந்திரங்களுக்குப் பதிலாகப் பிராமணர் அல்லாதாருக்கென்றே தனியே அமைக்கப்பட்ட சுலோகங்களையே சொல்வார். இச் சடங்குகளின் முடிவில் மணமகன் வீட்டினுள் சென்று சிறிது இனிப்புப் பணியாரங்களையும் பிற பலகாரங்களையும் உண்பான். அதில் மிஞ்சியிருப்பதைச் சிறுவர், சிறுமியர் தின்று தீர்ப்பர். இச் சடங்கு பூபந்தி எனப்படும். சனாதக விரதம் எனப்படும் சத்திரியன் காசிக்குச் செல்லுவதான பாவனைச் சடங்கும் அடுத்து நிகழ்த்தப்படும். அன்று மாலை மணமகன் ஒரு பல்லக்கில் அமர்ந்து மணமகள் இல்லம் செல்வான். அவன் தன்னோடு விலையியர்ந்த கூறைச் சேலை, தங்கக் கொடியில் கோர்க்கப்பட்ட தாலி, ஒரு இணை வளையல்கள் ஆகியனவற்றையும் உடன் எடுத்துச் செல்வான். அவர்கள் மணமகள் இல்லத்தை அடைந்தவுடன்அவனோடு செல்லும் பெண்கள் மணமகள் வீட்டுவாசலில் கூடியுள்ளவர்கள் தலையில் நெல்லினைத் தூவுவர். மணமகன் மணமேடையில் அமர்ந்தபின் மணமகளை அவனோடு உடன்பிறந்தவர்கள் மணமேடைக்கு அழைத்துச் செல்வர். அவள் தோளில் சல்லடைக் கண் துளையுடைய துணி ஒன்றினைப் போர்த்துவதோடு அவள் கரங்களை அவள் கண்கள் மீது வைத்து அவள் பார்க்க முடியாதபடி அவளோடு கூடப் பிறந்தவர்களுள் ஒருவன் அழுத்தியபடி இருப்பான். பெரும்பாலும் அவள் அருகே இரு சகோதரர்கள் அமர்ந்திருப்பர். ஒருவன் களைப்படையும்போது மற்றவன் அவள் கண்களை மூடும் பணியினை மேற்கொள்வான். மணச் சடங்கு தொடங்குவதற்கு உரிய அடையாளமாகப் புரோகிதன் மணமகனுக்கு இரண்டாவதாக மற்றுமொரு பூணூலை அணிவிப்பான். நனைத்த அரிசியினை நாலாப் பக்கங்களிலிருந்தும் மணமக்கள் மீது தூவுவர். தாலியினைப் பிராமணர்கள் வாழ்த்தித் தந்தபின் மணமகனும் மணமகள் உடன்பிறந்தவர்களும் அதனை அவள் கழுத்தில் அணிவிப்பர். தாலி அணிவிக்கும் சமயத்தில் மணமகள் கண்களை மூடியிருக்கும் அவள் கைகளை அகற்ற அனுமதிப்பர். அப்பொழுதே அவள் தன் கணவனை முதன்முதலாக காண்பாள். அதன்பின் மணமக்கள் மணமேடையினை வலம் வருவர். மணமகள் மும்முறை தன் வலது பாதத்தை அம்மிக் கல்லின்மீது வைப்பாள். அவர்கள் சிறுவிரல்கள் இணைக்கப்படுவதோடு ஆடைகளின் முனைகளும் இணைக்கப்பட்டு முடிச்சிடப்படும். அவ்வாறு இணைக்கப்பட்டவர்களாக அவர்களை ஓர் அறையினுள் அழைத்துச் செல்வர். அங்கு வண்ணங்களால் பல்வேறு உருவங்கள் மேலே

வரையப்பட்டுள்ள ஐம்பது பானைகள் அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருக்கும். அவற்றின் முன் இரண்டு பானைகளில் தண்ணீர் நிறைத்து வைத்திருப்பர். தண்ணீரோடு இருக்கும் அந்த பானைகளின் அருகே ஏழு விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். அந்தப் பானைகளின் கழுத்தில் மஞ்சள் துண்டுகளைக் கட்டியிருப்பர். அவை அவரெடி குண்டலு அல்லது அவரெணி குண்டலு என அழைக்கப்படுகின்ற சிறு தேவதைகளைக் குறிப்பனவாகும். அந்தப் பானைகளை மணமக்கள் வணங்கியபின் கூடியுள்ள பிராமணர்களுக்கும் ராசுக்களுக்கும் தாம்பூலம் வழங்குவர். ராசுக்களுள்ளும் பாசுபாடி மற்றும் கொட்டி முக்கல குலத்தவர்கள் முதலில் தாம்பூலம் பெற்றுக் கொள்ள உரிமையுடையவர்கள். அதற்கு மறுநாள் புரோகிதர் சந்தியாவந்தனம் செய்வது எப்படி எனக் கற்றுத் தருவார். அம்முறை பிராமணர்கள் சந்தியாவந்தனம் செய்யும் முறையிலும் வேறுபட்டது. மூன்றாம் நாள் காலை அல்லது நாகவல்லி சடங்கு நாளன்று மணமகள் வீட்டார் கொஞ்சம் ஆமணக்கு விதைகளை மணமகன் வீட்டாருக்கு அனுப்பி வைத்துத் திரும்புவர். மணமகள் மூடிய பல்லக்கிலும், மணமகன் திறந்த பல்லக்கிலுமாக மணமகள் இல்லம் செல்வர். மீண்டும் அவர்கள் மணமேடையில் அமர்வர். மணமகள் முன்புபோலக் கண்களைக் கைகளால் புதைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் முன் உள்ள தண்ணீர் நிறைந்த ஐந்து பானைக்ளுள் நான்கினை நாற்சதுரமாக அமையும்படி வைத்து நடுவில் ஒன்றை வைப்பர். நான்கு மூலைகளிலும் உள்ள பானைகளின் அருகே ஏற்றப்பட்ட விளக்குகள் வைக்கப்படும். அந்தப் பானைகளின் மூடிகள் ஒவ்வொன்றின் மீதும் தேங்காய், பழம், மஞ்சள், வெற்றிலை ஆகியன வைக்கப்பட்டிருக்கும். நான்கு மூலைகளிலும் அமைந்துள்ள பானைகளைச் சுற்றி மஞ்சளில் தோய்த்த நூலினை ஏழு சுற்றுக்கள் சுற்றுவர். பின்னர் அந்தப் பானைகளுக்கு வழிபாடு நிகழ்த்தப்படும். பின் மணமகன் கருப்புப் பாசிமணி மாலை ஒன்றினை மணமகள் கழுத்தில் அணிவிப்பான். பிராமணத்தி ஒருத்தி அதற்கு முடிச்சிடுவாள். மணமகன் முன் கொஞ்சம் உப்பையும் மணமகள் முன் கொஞ்சம் நெல்லையும் குவித்து வைக்கப்பட்டிருப்பவற்றின் மதிப்புக் குறித்து வாய்ச்சண்டை மூளும். இறுதியில் அவை இரண்டும் சம மதிப்புடையன என சமாதானம் அடைவர். அதன்பின் மணமக்கள் அவிரெணிப் பானைகள் வைக்கப்பட்டுள்ள அறைக்குள் செல்வர். அவர்கள் தங்கள் மோதிரத்தை நீர் நிறைந்துள்ள ஒரு பானையில் இடுவர்.

மணமகன் அதற்குள் கைவிட்டுத் துழாவி மூன்று முறை தன் மோதிரத்தினை எடுக்க வேண்டும். மணமகன் மைத்துனன் மணமகளுடைய மோதிரத்தினைஎடுக்க வேண்டும். புரோகிதர் தலைமீது நீர் தெளித்தபின் அவர்கள் கையிலுள்ள கங்கணங்கள் அவிழ்க்கப்படும். அதன்பின் அவர்கள் பந்தலிலிருந்து தொங்கும் ஊஞ்சலில் சிறிது நேரம் அமர்ந்திருப்பர். வழக்கமான மஞ்சள் நீர் ஆரத்தி சுற்றியபின் தாம்பூலம் வழங்குவதோடு மணச் சடங்குகள் முடிவுறும். மணச் சடங்கின்போது ராசு சாதிப் பெண்கள் மணப் பந்தலில் அமர அனுமதிக்கப்படுவதில்லை. செல்வ வளம் படைத்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கோஷாவாக வீட்டினுள் இருப்பதே வழக்கம். ஒருத்தி பகலில் தன் கணவனைக் கூடப் பார்க்கக் கூடாது என்பது வழக்கம் என்றும் கூறுவர். எனினும் இச் சாதியினைச் சேர்ந்த பெண்களில் பலர் பகலில் நகரத் தெருக்களில் எத்தகைய தடையுமின்றி நடமாடுவதோடு கிணற்றடிக்கும் நீரெடுக்கச் செல்கின்றனர்.

ராசபாளையத்தைச் சேர்ந்த ராசுக்கள், ராசு என்பதனைத் தங்கள் சாதியினைக் குறிக்கும் பெயராகவும் மற்றத் தெலுங்குச் சாதியரைப் போலவே கோத்திரப் பெயரைக் குடும்பப் பெயராகவும் யரகுண்டல முத்துசாமி ராசு என்பது போலவும் கோடிமுக்கல கிருட்டிண ராசு என்பது போலவும் வைத்துக் கொள்வர். பெண்கள் தெலுங்கருக்கு உரிய பழைய மாதிரியிலான அணிகளையே விரும்பி அணிகின்றனர். சில கிராமங்களைச் சேர்ந்த ராசுக்கள் தங்கள் வீட்டின் முகப்பில் திண்ணைகள் கட்டுவதை விரும்புவதில்லை. திண்ணைகள் வீட்டின் முன் பகலில் ஓய்வுகொள்ளவும் வீட்டுக்கு வருபவர்களை உட்கார்த்தி வைக்கவும் அமைந்த உயர்ந்த மேடைகளாம். தங்களைச் சத்திரியர் எனக் கூறிக் கொள்ளும் ராசுக்கள் தங்கள் முன்னிலையில் மற்ற சாதியார் உட்காருவதை விரும்புவதில்லை. ஆதலால் வீட்டின் முன் திண்ணை கட்டுவதில்லை.

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ராசாமகன் என்பது ராசுவிற்கான தமிழ்ப் பெயராகப் பதியப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த பகட மீனவர்கள் ராசு என்பதனைத் தங்கள் பட்டப் பெயராகப் பதிந்துள்ளனர். பட்ராசுகளுக்குரிய பொதுப் பெயராகவும் ராசு என்பது உள்ளது.

ரெட்டி – Reddi

பார்க்க – காபு. (See : Kapu)

ரெட்டி பூமி – Reddi Bhūmi

மாலர், மங்கலர், தசாகலர் ஆகிய சாதிகளுக்குரிய உட்பிரிவின் பெயர்.

ரேல – Rēla (Ficus sept)

மேதரரின் ஒரு கோத்திரம்.

ரெல்லி – Relli

பார்க்க : ஹட்டி (See : Haddi)

ரெண்டெத்து – Rendeddu

காண்கர் அல்லது காண்டலரின் ஓர் உட்பிரிவு. இவர்கள் செக்கில் இரண்டு எருதுகளைப் பூட்டுபவர்கள்.

ரொக்கம்– Rokkam (Ready money)

கோமட்டிகளின் புறம்ணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

ரோலன் – Rōlan

ரோலன் அல்லது ரோலி செறுமான் எனப்படும் இது செறுமான்களின் ஓர் உட்பிரிவு.

ரோணர் – Rona

ரோணர் மலைப்பகுதிகளில் பயிரிடுவோரான ஒரிய மொழி பேசுபவர்கள். இவர்களைப் பற்றி 1871 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது :– "பொரசர்களை விடச் சமூகப் படிநிலையில் உயர்ந்தவர்களான இவர்கள், அவர்களிடம் இருந்து வற்புறுத்தியும் ஏமாற்று வார்த்தைகளைக் கூறியும் அவர்களுக்கு உரிய நிலங்களைத் தங்கள் உடமையாக்கிக் கொண்டனர். செயப்பூர் பகுதியில் இவர்கள் அண்மையிலேயே வந்து சேர்ந்தவர்களாதல் வேண்டும். பொரசர் ஊர்களைச் சேர்ந்த ஊர்த் தவைர்கள் இன்றும் ரோணர் குடியிருப்புக்காகத் தங்களிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்பட்ட நிலப் பகுதிகளை அடையாளம் காட்டக் கூடியவர்களாக உள்ளனர். பொரசர் கிராமத் தலைவன் ஒருவனுக்குத் தன் பக்கத்துக் கிராமத்துப் பொரொசர்

தலைவனோடு இரண்டு கிராமங்களுக்கும் உரிய நில எல்லை தொடர்பான தகராறு மூளுமானால் அவன் ரோணருக்கு உரியதாக உள்ள நிலம் சட்டப்படி தன் கிராமத்து விளைநிலத்தினைச் சேர்ந்தது என உரிமை கொண்டாடுவான்." 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- "ரோணர் ஒரியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற போர் வீரரான ரஞ்சித்தின் சந்ததியினர் எனக் கூறப்படுகின்றது. சமூகப் படிநிலையில் இவர்கள் சத்திரியர் எனப்படுவோரினும் சிறிதே தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களுள் சிலர் வட்டாரத் தலைவர்களின் கூலிப் படைகளாகவும் படை வீரர்களாகவும் இருந்து வருகின்றனர். மற்றும் சிலர் வணிகத்திலும் பயிர்த்தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர்.

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.சி.ஹயவதனராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். ரோண என்ற சொல் போரினைக் குறிக்கும். ரோணர்களிடையே தற்போது வழங்கிவரும் வழக்கு வரலாற்றின்படி இவர்களுடைய முன்னோரான ஏழு சகோதரர்கள் பல தலைமுறைகளுக்கு முன் முன்பு செய்ப்பூரை ஆண்டு வந்த அரசர்களின் தலைநகராயிருந்த நுந்தாபூருக்கு வந்து சேர்ந்து முதலில் பொர்ராவில் குடியேறியவர்கள் ஆவர்.

இச் சாதி பின்வருமாறு நான்கு புறமணக்கட்டுப்பாடுஉடைய குலங்களாகப் பிரிவுபட்டுள்ளது.

1. ரோண பைகொ.

2. ஒடிய பைகொ - இவர்கள் ரோண பைகொக்களைவிடச் சமூகப்படி நிலையில் சற்று உயர்ந்தவர்கள்.

3. கொட்டிய பைகொ - இவர்கள் ரோண பைகொக்களுக்கு மலைப் பகுதியினைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள் வழிப் பிறந்தவர்கள்.

4. பட்டிய பைக்-கொட்டிய பைகொக்களுக்கு மலைப்பகுதியினைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள் வழிப் பிறந்தவர்கள்.

கோர(சூரியன்), பாக்(புலி), நாக்(நாகம்), கிண்புடி(கரடி), மட்சய (மீன்) என்பன ரோணர்களிடையே வழங்கும் குலப்பிரிவுகளுக்கு உரிய பெயர்களுள் சிலவாம்.

ஒரு சிறுமி பூப்படைந்தவுடன் அவளை வீட்டின் ஒரு பகுதியில் தனியே குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் கூடப் பார்க்க இயலாதபடி வைப்பர். அவள் தங்கியுள்ள பகுதியினைச் சுற்றி ஏழு அம்புகளை நட்டு அவற்றை ஒரு நூலால் பிணைப்பர். ஏழாம் நாள் அவள் குளித்த பின் அவளுக்குப் புதிய உடைகள் வழங்கப்படும். ஒருவன் தன் தந்தையின் உடன்பிறந்தவன் மகளை மணந்து கொள்ளுதல்இவர்களிடையே வழக்கமாக உள்ளது. மணச் சடங்கின்போது மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு மறி, ஆடு, அரிசி ஆகிவற்றோடு மேலே ஒரு ரூபாயும் மடிப்புகளிடையே நான்கு காலணாக் காசுகளும் வைக்கப்பட்ட சேலையையும் எடுத்துக் கொண்டு செல்வர். சேலையும் அதன்மீது உள்ள தொகையும் மணமகளின் அன்னைக்கு உரியன. ஆடு, மறி ஆகியனவற்றை விருந்துக்காகக் கொல்வர். மறுநாள் மணமகள் மணமகன் இல்லத்திற்கு செல்வாள். மணமகன் வீட்டின் முன் ஒன்பது நாவல் ***(Engenia Jabolana)*** மரக் கம்பங்களை நட்டுப் பந்தல் அமைத்திருப்பர். பிராமணனுக்குப் பதிலாகப் புரோகிதனாக மணச் சடங்கை நடத்தி வைக்கும் தாசரி குறித்து வைத்துள்ள சுப வேளையில் மணமகனும் மணமகளும் மணப்பந்தலில் வந்து அமர்வர். அவர்களிடையே ஒரு திரை தொங்கவிடப்படும். தாசரி மணமக்கள் கரங்களை இணைத்து வைப்பான். அவர்கள் உடைகளின் முனைகளைச் சேர்த்துக் காலணா வெற்றிலை பாக்கு, கொஞ்சம் அரிசி ஆகியன முடியப்பட்டுள்ள புதிய துணி ஒன்றால் தாசரி முடிச்சிடுவான். அதன்பின் அவர்களுக்கு இடையே உள்ள திரை விலக்கப்படும் பின்னர் மணமக்கள் வீட்டினுள் செல்வர். முடிச்சிடப்பட்ட புதிய துணியினை அவிழ்த்து இரண்டு நாள்கள் வீட்டில் வைத்தவர்களாக ஒவ்வொரு நாள் காலையிலும் அதிலுள்ள முடிச்சினை அவிழ்த்து மீண்டும் அதேபோல முடிச்சிட்டு வைப்பர். மூன்றாம் நாள் மணமக்கள் மீண்டும் மணப்பந்தலில் வந்து அமர்வர். மீண்டும் ஒரு புதிய துணி அவர்கள் உடையோடு சேர்த்து முடியப்படும். பின்னர் அவர்கள் இருவரும் ஒன்றாக மஞ்சள் நீரில் குளிப்பர். பின்னர் இறுதியாக முடிச்சிடப்பட்ட துணி அவிழ்க்கப்படும். அதில் வைத்து முடியப்பட்டுள்ள அரிசியினை எடுத்து நல்ல நிலையில் உள்ளதா என ஆராய்ந்து பார்ப்பர். அது நல்ல நிலையில் கெடாமல் இருக்குமானால் அதனை மணமக்களின் இல்லற வாழ்க்கைக்கான மறுமணத்தை அனுமதிக்கின்றனர். இறந்துபோன அண்ணன் மனைவியினைத் தம்பி மணந்துகொள்வது வழக்கமாக உள்ளது.

ரோணர்கள் அனைவருக்குமான சாதித் தலைவன் நுந்தாப்பூரில் உள்ள பாதோ நாயகொ என்பவனாவான். சாதியில் தாழ்ந்தவர்கள் வீட்டில் உண்ணுதல் போன்ற குற்றங்களை விசாரித்துத் தண்டிப்பதோடு செருப்பால் அடிபடுபவர்களுக்கான சடங்கினையும் நடத்தி அவர்கள் தீட்டினைப் போக்குவான். மணமுறிவு, உடமை உரிமை தொடர்பான வழக்குகளைச் சாதிச் சபையார் தீர்த்து வைப்பர்.

ரோணர் தாகுராணி தேவதைகளை வழிபடுகின்றனர். பூணூல் அணியும் இவர்கள் அதற்கான உரிமையினை முன்பு செயப்பூரை ஆண்ட மன்னர் ஒருவருக்கு தொகை செலுத்திப் பெற்றுள்ளனர். துளசி (***Ocimum Sanctum***) மணிகளாலான மாலைகளையும் இவர்கள் அணிகின்றனர். இத்தகைய துளசிக் கட்டைகளாலான மணிமாலைகளை ஒரிசாவிலிருந்து வரும் பிராமணனுக்கோ ஸ்ரீகூர்மத்திலிருந்து வரும் வைணவப் பிராமணனுக்கோ அணிவித்துப் பின்னர் தங்கள் கழுத்தில் அணிவர். இவ்விரு சாராரும் ரோணர் சமூகத்தவர்களிடம் தொகையும் உணவும் பெற அடிக்கடி அவர்கள் குடியிருப்புக்கு வருகை தருபவர்கள். ரோண பைகொ பிரிவினர் பிராமணர்களிடம் மட்டுமே உணவு பெற்று உண்பர். பட்டிய பைகோ பிரிவினர் கொரொணொ, மாலியர், கும்மாரர், கௌடா ஆகிய சாதியார்களின் இல்லங்களில் உண்பர். இவர்கள் அனைவருமே மாட்டிறைச்சி பன்றி இறைச்சி நீங்கலாக அனைத்து விலங்குகளின் இறைச்சியினையும் உண்பர்.

ரோணர் சிலர் இன்றும் செயப்பூர் அரசர்களின் கூலிப்படைகளாக இருந்து வருகின்றனர். இவர்களின் முன்னோர்கள் துப்பாக்கி சுடுவதில் நன்கு பயிற்சி பெற்றவர்கள். ரோணர் சிலர் இன்றும் வில்லம்புகளைப் பயன்படுத்துகின்றனர். நாயகொ என்பது இச்சாதிக்கு உரிய பட்டப்பெயர்.

ரொங்குணி – Ronguni

இவர்கள் ஒரியர்களான சாயம் போடுவோரும் நெசவு செய்வோருமாவர். சாயம் எனப் பொருள்படும் ரங்கு என்ற சொல்லிலிருந்து இச் சாதிப் பெயர் வந்துள்ளது. இவர்கள் எந்த வகை ஊனையும் உண்ணாத எளிய தூய மரக்கறி உணவு மட்டுமே உண்டு வருபவர்கள் என்பது இவர்களைப் பற்றிய குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பேகர, தாசொ, புருஷ்டி, சாகு முதலிய பல பட்டப்பெயர்களை இவர்கள் தரிக்கின்றனர். இப்பட்டப் பெயர்களுள் சில புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயர்களாகவும் அமைகின்றன.

ரொட்டலர் – Rottala (bread)

போயர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். ரொட்டி எனப் பொருள்படுவது.

ரொவுத்தன் – Rowthan

பார்க்க : ராவுத்தன். (See : Ravuthan)

ருத்ரா – Rūdra

சிவனுக்குரிய பல பெயர்களுள் ஒன்று. பள்ளியரின் ஓர் உட்பிரிவுக்கான பெயர்.

ருத்ராக்சலர் – Rūdrākshala *(the drupe of Eloecarpus Ganitrus)*

கர்ண சாலேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். சைவப் பிராமணர்கள், பண்டாரங்கள், நாட்டுக்கோட்டைச் செட்டிகள், முதலியோர், இதன் காயினைப் பளபளப்பாக்கி கழுத்தில் மாலையாக அணிந்து கொள்கின்றனர். சிவன் (ருத்ரன்) ஒருமுறை மகிழ்ச்சியில் தன்னை மறந்து சிந்திய கண்ணீரே இவ்வாறு உத்ராக்சமாக ஆகியது எனக் கூறுவர். இதன் வெளிப்புறத்தில் ஆழ்ந்த குழிவுகளால் அமைந்தஒன்று முதல் ஆறுவரையான முகங்கள் உள்ளன. ஐந்து முகங்களோடு கூடியனவே பெரும்பாலும் எங்கும் காணப்படுபவை. ஒரு முகத்தோடும் ஆறு முகத்தோடும் கூடியவை கிடைப்பதற்கு அரியவை. இத்தகைய ருத்ராக்சங்கள் ஆயிரம் ரூபாய் வரைகூட விலை போகின்றன. இவற்றுள் ஒருவகை கௌரி சங்க எனப்படுவது. இவற்றைத் தங்கத் தகட்டில் பொதிந்து சிதம்பரம் தீட்சிதர் பிராமணர்களும் மடங்களின் மேலாளர்களும் அணிந்து கொள்கின்றனர்.

ருன்சு – Runzu

ருன்சு, ருன்ச, ருஞ்ச என்பன தெலுங்கு பேசும் இரவலர்களுக்கான பெயர். இவர்கள் ருன்சல என்ற முழவை அடித்தபடி கம்சாலரிடமிருந்து மட்டும் இரப்பர்.

சச்சாரி – Sachchari

ரெல்லிகளுக்கான மற்றுமொரு பெயர்.

சாதரு – Sādaru

பெல்லாரி, அனந்தப்பூர் மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையினராக உள்ள லிங்காயதரின் உட்பிரிவு. இவர்களில் பெரும்பாலோர் அம்மாவட்டங்களில் பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்களாக உள்ளனர். லிங்காயதர்களான இவர்களிடையே வாழும் பேடர், போயர் ஆகியோரும் தங்களைச் சாதரு என அழைத்துக் கொள்கின்றனர். மைசூர் கணக்கெடுப்பு அறிக்கையில் சாதருகள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :– "இவர்கள் பயிர்த் தொழிலாளராகவும் தானிய வியாபாரிகளாகவும் உள்ளனர். சாதருகளான இவர்களுள் சிலர் லிங்காயத நெறியினைத் தழுவி விட்டனர். எஞ்சியவர்கள் இன்னமும் லிங்காயத நெறியைத் தழுவாதவராகவே உள்ளனர்.

சத்திகூடு – Saddikūdu (cold rice of food)

கொல்லர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

சாதன சூராளு – Sādhana Sūrulu

சாதனசூரர் என்ற பெயர் 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சமய வழிபாடு என்பதற்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது. ஊர் ஊராகப் பயணம் மேற்கொள்ளும் இரவலர்களான இவர்களைப் பற்றித் திரு. சி. ஹயவதனராவி கூறியுள்ளதாவது :– "சமயமுவாருகளைப் போல அன்றி இவர்கள் பத்மசாலேக்களிடம் மட்டும் இரந்து வருகின்றனர். ரேணுகா சக்தினி சாதிஞ் சினவாரு என்ற பெயர் (ரேணுகா சக்தியினை வென்றவர்கள்) சுருங்கி சாதனாசூராளு என ஆனதாகக் கூறுவர். வழக்கு வரலாற்றின்படி ரேணுகா விட்டுணுவின் அவதாரங்களுள் ஒன்றான பரசுராமனின் அன்னையாவாள். இவளே பத்ம சாலேக்கள் வழிபடும் தேவதையான எல்லம்மா ஆவாள். சாதன சூராளு அவளுடைய புகழ்பாடிகள். யுகயுகங்களுக்கு முன்பு இவர்கள் பத்ம சாலேக்களுக்காக அவளிடம் முறையிட்டு அவளுடைய அருளைப் பத்ம சாலேக்களுக்குப் பெற்றுத் தந்துள்ளனர். அப்போதிருந்து பத்ம சாலேக்கள் இவர்களைப் போற்றி மதித்து வருவதோடு ஆண்டுதோறும் இவர்களுக்கு நான்கணாச் செலுத்தி வருவதுடன் இவர்கள் திருமணம் முதலான சடங்குகளுக்கான செலவுகளையும் தந்து வருகின்றனர்.

சாது – Sādhu (meek or quiet)

காணீகர், பத்ம சாலேக்கள் சாதிக்குரிய உட்பிரிவு அல்லது புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். இதற்கு நேரானதான சாதுமடம் என்பது கணக்கெடுப்பின்போது சணப்பன்களின் சாதிக்குரியதாகப் பதியப்பட்டுள்ளது. பைராகிகளான சந்நியாசிகளுக்குரிய பெயராகவும் சாது என்பது வழங்கி வருகின்றது.

சகர குலம் – Sāgarakula

மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ள அரசனான சாகர சக்ரவர்த்தியின் சந்ததியினர் எனக் கூறிக் கொள்ளும் உப்பாரருக்கான பெயர்.

சகவாசி – Sahavāsi

1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சகவாசியர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :– "சித்பாவணரைப் போன்று வந்தேறிகளான இவர்கள் பெயர்கள் உடன் உறைவோர் எனப் பொருள்படுவதாகும். இந்த வகுப்பார் இப்பெயர் பெற்ற விதம் வருமாறு:– நெடுங்காலத்திற்கு முன் பிராமணன் ஒருவன் புதையல் ஒன்றினைக் காண நேர்ந்தது. அவன் கண்களுக்கு அப் புதையலில் உள்ள அனைத்தும் உயிரோடு உள்ள தேள்களாகத் தோன்றின. என்ன நடக்கின்றது எனப் பார்க்கலாம் என்று நினைத்தவனாக அவன் அவைகளுள் ஒன்றினைத் தன் வீட்டுக்கு வெளியே தொங்க விட்டான். சற்றைக்கெல்லாம் அந்த வழியாகச் சென்ற தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த ஒருத்தியின் கண்களில் அது தங்கமாகப்பட்டது. அவள் அதுபற்றி அந்தப் பிரா்மணனிடம் கேட்டாள். அவன் அவளை மணந்துகொண்டவனாக அந்தப் புதையலைப் பொன்னாக மாற்றி அனுபவித்தான். தான் செல்வம் பெற்றதைக் கொண்டாட அவன் ஒரு விருந்து தந்தான். தாழ்ந்த சாதியினைச் சேர்ந்தவளோடு தகாத உறவு கொண்ட காரணத்திற்காக அவன் தன் சாதியினைவிட்டு விலக்கப்பட்டபோது அவன் தந்த விருந்தில் கலந்து கொண்டவர்களும் சாதி விலக்கத்திற்கு உள்ளானவர்களாக இந்தக் கேலிப் பெயருக்கு உரியவராயினர்.

சாகு – Sāhu

பொலாசியர், கோடியர் முதலிய பிற ஒரிய சாதியாருக்கான பட்டப்பெயர்.

சாயிண்டல – Saindle (belonging to the death-house)

மாலர்களின் ஓர் உட்பிரிவு. சாவு வீட்டிற்கு உரியவர் எனப் பொருள்படுவது.

சத்சனம் – Sajjana (goodmen)

லிங்காயத காணிகருக்கான மற்றுமொரு பெயர்.

சஜ்ஜெ – Sajje (millet : Setaria italica)

தேவாங்கர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

சாகலர் – Sākala

பார்க்க : தசாகலர். (See : Tsakala)

சக்கெரய – Sakkereya

உப்பாரர் சிலர் தங்களை மேல் (மேற்கு) சக்கெரெயவாரு எனச் சிறப்பித்துக் கூறிக் கொள்கின்றனர். இவர்கள் பணிபுரிவதால் கிடைக்கும் உப்பு சர்க்கரையைவிட இன்றியமையாதது. ஆகையால் இவர்கள் தங்களை உயர்ந்த சர்க்கரைக்காரர் எனக் கூறிக்கொள்வதாக தங்களுடைய பெயர்க் காரணத்தை விளக்குவர்.

சகுனபட்சி – Sakuna Pakshi

விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த சகுனப் பட்சி எனப் பெயர் பெற்ற இரவலர் வகுப்பார் பற்றிய பின்வரும் குறிப்புக்களுக்கு நான் திரு.சி.ஹயவதனராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இந்தச் சாதியினைச் சேர்ந்தவர்கள் தங்கள் தலையில் பாலகும்ம எனப்படும் பறவையின் (இது பனங்காடை என வழங்கும் பறவையாதல் கூடும் – **Indian Roller or Blue Jay - *Coracius india***) இறகுகளைத் தொகுத்துக் கட்டித் தலையில் அணிந்து கொள்வதால் இப்பெயர் பெற்றனர். இவை வர இருக்கும் நலந் தீங்குகளைத் தங்களுடைய போக்குகளால் முன்கூட்டியே தெரிவிக்கும் திறன் வாய்ந்தவை. ஆகையால் சகுனப் பட்சி என அழைக்கின்றனர். ரோலர் எனப்படும் பனங்காடை பற்றி ஜெர்டன்* பின்வருமாறு எழுதுகின்றார். "இது சிவனுக்கு உகந்த பறவை. சிவன் இப்பறவையின் உருவத்தை எடுத்துள்ளார். நாக்பூரில் நடைபெறும் அணிவகுப்பில் துப்பாக்கி

---

* இந்தியப் பறவைகள். **(Birds of India)**

ஒலிகளுக்கிடையே இப்பறவைகளுள் ஒன்றிரண்டினை உரிமையோடு பறந்து செல்லும்படி விடுவர் கல்கத்தாவில் நடைபெறும் துர்க்கையின் பூசை முடிந்தபின் துர்க்கையின் உருவினை ஆற்றில் விடும்போது இந்துக்கள் இப்பறவைகளில் ஒன்றை வாங்கி வைத்திருந்து உரிமையோடு செல்லும்படி பறக்க விடுவர் எனப் பூச்சனன் ஹாமில்டன் எழுதியுள்ளார். தசராவின்போது இதனைப் பார்ப்பது புண்ணியம் தருவதாகும் எனக் கருதப்படுகிறது. அப்போது விலை கொடுத்து இதனை வாங்கிப் பறக்க விட இயலாதவர்கள் தங்கள் துப்பாக்கியினை வெடித்து இதனைப் பறக்கச் செய்து தரிசிப்பர்."

சகுன பட்சி சாதியார் கோதாவரி மாவட்டத்தில் உள்ள பொத்தா புரத்திலிருந்து விசாகப்பட்டினத்தில் வந்து குடியேறிய தெலுங்குச் சாதியார் என்பதனை இச் சாதியினைச் சேர்ந்தவர்களே கூறிக் கொள்கின்றனர்.

இச் சாதியினைச் சேர்ந்த ஒருவன் பிச்சை எடுக்கப் புறப்படும முன் அதிகாலையில் எழுந்து பழையதை உண்பான். பின் தென்கலைக்கு உரிய வைணவ சமயச் சின்னமான நாமத்தை நெற்றியில் இட்டுக் கொள்வான். பிச்சையாகக் கிடைக்கும் தானியங்களையும் அரிசியினையும் பெற்றுக்கொள்ள மான் தோலாலான பை ஒன்றினைத் தோளில் தொங்கவிட்டுக் கொள்வான். தவளையின் தோலாலான தமருகம் எனப்படும் சிறு உடுக்கையினைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்படும் அவன் முதலில் ஓரிரு மாலர்கள் வீட்டில் பிச்சை ஏற்ற பின்னர் மற்றச் சாதியார் வீடுகளுக்குச் செல்வான்.

பூத ஆட்டம், பேயோட்டுதல், நாட்டு வைத்தியம் போன்றவற்றையும் பிச்சை எடுத்தலோடு கூட உபதொழில்களாக இவர்கள் மேற்கொள்கின்றனர். தேள் கடிக்கு இவர்கள் செய்யும் வைத்தியம் அனைவரும் அறிந்ததே. தெள்ள விசாரி (தேள் விஷத்தை முறிப்பது) என்ற செடியின் வேரினை இவர்கள் எப்பொழுதும் உடன் எடுத்துச் செல்வர். ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் அமாவாசையின்போது இந்த வேரைத் தோண்டி எடுக்க வேண்டும். அன்று சகுனப் பட்சியார் குளித்தபின் தங்கள் அரைஞாணினைக் கூட அவிழ்த்தவராகக் குறிப்பிட்ட இடத்திற்குப் பிறந்த மேனியாகச் சென்று இந்த வேர்களைத்

தோண்டி எடுப்பர். வேர் தேவைப்படும்போது அமாவாசையும் ஞாயிற்றுக்கிழமையும் அமைந்த நாள் கிடைக்கவில்லையாயின் ஒரு ஞாயிற்றுக்கிழமை அல்லது புதன்கிழமையில் சென்று வேரினைத் தோண்டி எடுப்பர்.

சலங்குக்காரன் – Salangukkāran

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சலங்கைக்காரன் என்பது கரையான்களான செம்படவருக்கான மற்றுமொரு பெயராகத் தரப்பட்டுள்ளது. சலங்கு, சல்ங்கு என்பன முத்துக் குளித்தலைக் குறிக்கும் சொற்கள். சலங்குகாரன என்பது முத்துக் குளிப்பவர்களைக் குறிப்பதற்கான சொல் என்று நான் நினைக்கின்றேன்.

சாலாபு – Sālāpu

விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த எண்ணிக்கையில் குறைந்த நெசவாளர்கள் சாலாபுகள். இவர்கலைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.சி.ஹயவதனராவிற்குக் கடப்பாடுடையேன். சாலாபு என்ற பெயர் முன்பு கோணிப்பைகளும் முரட்டுத் துணியும் தயாரித்து வந்த சாதியாரான சலுப்பனஎன்ற சாதியாரின் பெயரின் திரிந்த வடிவம் ஆகலாம். சாலாபுகள் இன்றும்'காமஞ்சாலு' எனப்படும் அத்தகைய முரட்டுத் துணியினையே நெய்கின்றனர். பிற நெசவாளர் சாதியாரைப் போலவே இவர்களும் தங்களை தீர்க்காயுளும், தவ நலமும் வாய்க்கப் பெற்ற மார்கண்டேய ரிஷியின் சந்ததியினர் எனக் கூறிக் கொள்கின்றனர். சாலாபுகள் சாலே சாதியாரோடு உடன் உண்பதோ மண உறவு கொள்வதோ இல்லை. சேனாபதி என்ற சாதித் தலைவன் கட்டுப்பாட்டின் கீழ் இச் சாதியார் இருந்து வருகின்றனர். சாதிச் சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும் இவன் திருமணங்களில் முதல் தாம்பூலமும் சந்தனமும் பெறும் உரிமை பெற்றிருப்பதோடு கூடியுள்ளவர்களிடையே வாழ்த்த அனுப்பப்படும் சத்தமானத்தை (தாலி) முதலில் தொட்டு வாழ்த்தும் உரிமையும் பெற்றுள்ளான். திருமணங்களின்போது முதலிலிருந்து உண்ணும் உரிமையினையும் இவன் பெற்றுள்ளான்.

பிற தெலுங்குச் சாதியாரிடையே இருப்பதைப் போலவே இவர்களிடையேயும் இல்லப் பெயர்கள் எனப்படும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகள் உள்ளன. சிறுமியரைப் பூப்படையும் முன் மணம் செய்து கொடுத்தலே இவர்கள் வழக்கம். ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணக்கும் உரிமையினை வற்புறுத்தும் மேநரிகம் இவர்களிடையே வழக்கில் உள்ளது. மஞ்சள் சடங்கு மண நிகழ்ச்சிக்கு சில மாதங்களுக்கு முன் நிகழும். மணமகன் உறவினர்களான ஆண்களும் பெண்களும் கலந்த குழுவினர் பெண்ணுக்குரிய பரிசப் (வோலி) பணத்தை உடன் எடுத்துக்கொண்டு மணமகள் இல்லத்திற்குச் செல்வர். மணமகளைக் குளிக்கச் செய்து மஞ்சள் கலவையைப் பூசுவர். அவளுடைய வலது மணிக்கட்டில் கெட்டி வெள்ளியாலான வளையல் அணிவிக்கப்படும். கைம்பெண்கள் மறுமணத்தையும் மணமுறிவினையும் இவர்கள் அனுமதிக்கின்றனர்.

சாலாபுகள் லிங்கவண்டர், வைணவர் என இரு பிரிவினராக உள்ளனர். எனினும் இப்பிரிவினர் தங்களுக்குள் மணஉறவு கொள்வர். லிங்கவண்டர் இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில் புதைக்கின்றனர். வைணவர்கள் எரிக்கின்றனர். லிங்கவண்டருக்கு ஜங்கமங்களும் வைணவர்களுக்கு சாதானிகளும் சடங்குகளை நடத்தி வைக்கின்றனர். இரு பிரிவினரும் சின்ன ரோசு, பெத்த ரோசு சாவுச் சடங்குகளை நடத்துகின்றனர்.

அய்யா என்பது இச் சாதியாருக்கு உரிய பட்டப்பெயர்.

சாலாபு – Sālāpu

ஷராப் என்பதன் திரிந்த வடிவம். பொன் நாணயங்கள், அணிகள், பவளம் முதலியவற்றின் வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான தொழில் தொடர்பான பெயர்.

சாலே – Sālē

தெலுங்கு பேசும் பெரும் எண்ணிக்கையிலான நெசவாளர் வகுப்பார் சாலேயர். இவர்களைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.ச.ஹயவதனராவிற்குக் கடப்பாடுடையேன்.

நெசவாளன் எனப் பொருள்படும் சாலிக என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது இந்தப் பெயர். சாலேயர் தங்களைச் சேனாபதி என அழைத்துக் கொள்வர். இதுவே இச் சாதித் தலைவனுக்கு உரிய பட்டப்பெயரும் ஆகும். பத்மா (தாமரை), பட்டு என்ற இரு பிரிவினராக இவர்கள் உள்ளனர். மூன்று முக்கிய வேறுபாடுகள் இப்பிரிவுகளிடையே உள்ளன.

1. பட்டு சாலேயர் பூணூல் அணிகின்றனர். பத்ம சாலேயர் அதனை அணிவதில்லை.

2. பட்டு சாலேயர் பிராமணர்கள் கைகளிலிருந்து அல்லாமல் வேறெந்தச் சாதியாரிடமிருந்தும் உணவுபெற்று உண்பதில்லை. பத்ம சாலேயர் காபுக்கள், கொல்லர், தெலகா, கவரர் முதலியவர்களின் இல்லங்களில் உண்பர்.

3. பட்டு சாலேயர் உயர்ரகத் துணிகளை நெய்கின்றனர். சில இடங்களில் இவர்கள் பட்டுத் துணிகளையும் நெய்கின்றனர். பத்ம சாலேயர் முரட்டு ரகத் துணிகளையே நெய்கின்றனர்.

இவ்விரு பிரிவினரும் பல புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகளைக் (இல்லப் பெயர்களைக்) கொண்டுள்ளனர். இவ்விரு பிரிவினரும் தெலுங்கையே பேசுகின்றனர். சைவம், வைணவம் ஆகிய சமய நெறிகளைச் சேர்ந்தவர்கள் இவ்விரு பிரிவினுள்ளும் உள்ளனர். எனினும் இச் சமயநெறி வேறுபாடு மணஉறவு கொள்ளவோ, ஒருங்கிருந்து உண்ணவோ தடையாவதில்லை.

விசாகப்பட்டினம் மாவட்டக் கையேட்டில் (1907) இவர்களைப் பற்றிப் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :- "சமவெளிகளில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் சாலேயர், பத்ம சாலேயர், பட்டு சாலேயர், தேவாங்கர், சாலாபு ஆகிய நெசவாளர் சாதியார் பருத்தித் துணிகளை நெய்கின்றனர். குடியானவர்கள் தங்கள் நிலத்தில் விளையும் பருத்தியினை அவர்களே நூலாக நூற்கின்றனர். பின் அதனை நெசவாளர்களிடம் துணியாக நெய்ய ஒப்படைக்கின்றனர். இத்தோடு நூற்பாலைகளில் நூற்கப்பட்ட நூலினையும் பெரும் அளவில் நெசவாளர்கள் பயன்படுத்துகின்றனர். தெற்கில் சரவசித்தி வட்டத்தில் உள்ள நக்கக பள்ளியும், பாயகரப் பேட்டையும் முக்கிய நெசவு மையங்கள்.

பாயகரப் பேட்டையைச் சேர்ந்த பட்டு சாலேயர் உயர் ரக நூல்களிலிருந்து தங்க, வெள்ளிச் சரிகையோடு கூடிய வேட்டியினை நெய் கின்றனர். இந்தத் துணி கோதாவரி, கஞ்சம் மாவட்டங்களில் நன்கு விற்பனையாகின்றது. ராசாம் பகுதியில் பெண்களுக்கான சாயம் போட்டப்பட்ட சேலைகளை நெய்கின்றனர். இந் [illegible] வளர்ச்சியுள்ள பகுதிகளில் மக்கள் பெரும்பாலும் அணிந்து வந்த வெள்ளைத் [illegible] துணிக்குப் பதிலாக வண்ணத் துணிகளை வே [illegible] தொடங்கியுள்ளனர். இங்கு நெய்யப் [illegible] உள்ளூரில் விற்கப்படுவதோடு கூடப் பெர்காம்பூர், கட்டாக், கல்கத்தா முதலிய நகரங்களுக்கும் பெருமளவில் அனுப்பப்படுகின்றது. இங்கு நெசவு தேவாங்கர் கைவசமே உள்ளது. எனினும் இறக்குமதி செய்யப்பட்ட அனிலின், அலிசாரின் சாயங்களைத் தோய்க்கும் தொழிலினைச் சீப்பருள்ளி வட்டத்திலுள்ள சிகடத்தை சேர்ந்த பலரும் பொப்பிலியைச் சேர்ந்த பலிசப் பேட்டையில் உள்ள பலிசரும் செய்து வருகின்றனர். சீபுரத்திலும் பொந்தூரிலும் பட்டு சாலேயர் பட்டு சாலேநூலு எனப்படும் மிகச் சன்ன நூலினைக் கொண்டு மிக மெல்லிய துணியினை நெய்கின்றனர். இந்த நூலினை இவர்களுக்காக இவர்கள் சாதிப் பெண்களே நூற்கின்றனர். இந்த நூல் இறக்குமதி செய்யப்பட்ட 1508 ரகத்திற்கு ஈடானது. வசதியுள்ள உள்ளூரார் இதன் மென்மையினையும் உறுதியினையும் கருதி இதனை மதித்து வாங்குகின்றனர். ராசாமினைத் தவிர மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் நெசவுத் தொழில் குன்றி வருகின்றது. நெசவாளர்கள் வேறு தொழில்களை நாடிச் சென்றபடி உள்ளனர். சீபருபள்ளியினைச் சுற்றியுள்ள பகுதிகளில் பட்டுசாலேயர் கையிலையினைப் பாடம் செய்வதில் கை தேர்ந்தவர்களாக மாறிவிட்டுள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இன்று அத்தொழில் முழுதும் இவர்கள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதோடு அதனால் நல்ல லாபம் ஈட்டியவர்களாக அந்த வட்டாரத்தில் வட்டிக் கடையும் நடத்தி வருகின்றனர்."

ஆந்கி[illegible]தமு என்ற நூலில், சாலே சாதியின் தோற்றம் பற்றி கம்சாலன் ஒருவனுக்கும் குயத்தி ஒருத்திக்கும் பிறந்தவனின் வழிவந்தவர்கள் இவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது வழக்கில் உள்ள கதைப்படி தேவர்கள் தங்களுக்குத் தேவையான துணியினைப் பெறவேண்டி மார்க்கண்டேய ரிஷியிடம் அதனைத் தரும்படி வேண்டினர். அவர் விட்டுணுவிடம் சென்று பிரார்த்தித்தார். விட்டுணு

அவரிடம் தேவர்களின் அரசனான இந்திரனுக்கு ஒரு வேள்விச் சடங்கினை நிகழ்த்தும்படி அறிவுறுத்தினார். அதன்படி மார்க்கண்டேய ரிஷி பெரிய வேள்வி ஒன்றினை நிகழ்த்தினார். அந்த வேள்வித் தீயிலிருந்து பாவன ரிஷி என்பவர் கையில் நூல் கண்டுடன் தோன்றினார். அதனை அவர் விட்டுணுவின் அறிவுரைப்படி அவர் நாபிக் கமலத்திலிருந்தான தாமரைத் தண்டிலிருந்து வந்த நூலினையும் கொண்டு துணியாகத் தயாரித்தார். அந்த நூலினைக் கொண்டு அவர் தேவர்களுக்கான உடையினை நெய்யத் தொடங்கினார். அதன்பின் அவர் சூரியனுடைய மகளான பத்ராவதியினை மணந்து கொண்டு நூற்றொரு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இவர்களுள் நூறுபேர் பத்ம சாலேயராக ஆயினர். எஞ்சிய ஒருவன் பட்டு சாலேயனாக ஆனான்.

இச் சாதியார் பாவன ரிஷியினை வழிபடுகின்றனர். ஆண்டு முடிவில் சங்கர மணத்திற்கு பத்து நாள்கள் முன்னதாக இவர்கள் தங்கள் தொழிலை நிறுத்திவிடுகின்றனர். மீண்டும் இவர்கள் பணியினைத் தொடங்கு முன் பட்டு சாலேயர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடி நூல்கண்டு ஒன்றின் முன் கற்பூர ஆரத்தி காட்டுவர். நூல்கண்டே பாவன ரிஷியாகப் பாவிக்கப்படுகிறது. பத்ம சாலேயர் இதனினும் விரிவான சடங்குகளை நிகழ்த்துகின்றனர். இவர்கள் தெய்வமான [illegible] அந்த மூதாதையினை வழிபட என ஒரு குறிப்பிட்ட நாளினை ஒதுக்கி அன்று சாதியார் அனைவரும் கூடி விருந்துண்பர். ஒரு பந்தலிட்டு அதில் நூல்கண்டு ஒன்றினை வைப்பர். சாதியினைச் சேர்ந்த ஒருவன் பூசாரியாகப் பணிபுரிவான். பழங்கள், பூ, கற்பூர ஆரத்தி ஆகியன அந்த நூல்கண்டுக்கு அவனால் படைக்கப்படும்.

தெலுங்கு பத்ம சாலேயரும் மராத்தி பேசும் சுகூன் மற்றும் சுக சாலேயரும் குள்ள உருவமும் உயர்ந்ததான தலையின் நீள அகல விகித எண்ணும் கொண்டவர்களாக உள்ளனர் என்பதனைப் பின்வரும் அட்டவணை தெளிவுறுத்தும் :–

	உயரம் செ.மீ.	தலையின் நீள அகல விகித எண்
பத்ம சாலே	159.9	78.7
சுக சாலே	161.1	81.8
சுகூன் சாலே	160.3	82.2

பத்ம சாலேயர், கர்ண சாலேயர் பற்றியான தனிக்கட்டுரைகள் உள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் சானெரட் நெசவாளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது நெசவாளன் தன் தறியினை வீட்டு வாசலில் ஒரு மரத்தடியில் பூட்டி நெய்தவனாக இரவில் அதனை வீட்டிற்குள் கொண்டு போய்விடுவான் எனக் குறித்துள்ளார். அவர் அன்று கண்டு கூறியது இன்றும் நடைமுறையில் உள்ள வழக்கமாக உள்ளது. தென்னிந்தியாவில் உள்ள நெசவு மையங்கள் பலவற்றிலும் நெசவாளர்கள் இன்று எவ்வாறு நெசவினை நடத்துகின்றனர் என்பதனைத் திரு.எச்.ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் பின்வருமாறு விளக்குகின்றார் :– * "சிக்கலற்ற எளியதொரு செயல்பாடாகவே நெசவு நடத்தப்படுகின்றது. நூலினை முதலில் ஒரு கையால் சுழற்றப்படும் கதிரில் சுற்றிக் கொள்கின்றனர். அதன்பின் பாவு நூலினை அமைத்துக் கொள்கின்றனர். ஒரு தோப்பில் 120 மூங்கில் குச்சிகளை முழத்துக்கு ஒன்றாக செங்குத்தாக நட்டு வைப்பர். பத்துப் பெண்கள் அல்லது சிறுவர் நூல் சுற்றியுள்ள ராட்டினத்தைக் கையில் தூக்கியவர்களாக மேலும் கீழுமாக நடப்பர். இவ்வாறு விரும்பிய வடிவமைப்பு உண்டாகும்படியாகப் பல வண்ணங்களில் அமைந்த 1920 நூல்களைச் சுற்றி அமைப்பர். இந்த பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் இதற்காக அரையணாக் கூலியாகப் பெறுகின்றனர். அவர்கள் நான்கு மைல் தொலைவு தூரம் நூல் சுற்றியபடி நடப்பதற்காகப் பெறும் சிறு ஊதியம் இது. பெண்களுக்கான எட்டுச் சேலைகளுக்கான பாவினை அமைக்க நாற்பது மைல் தூரம் நடக்க வேண்டியதாகின்றது. பட்டுத் துணி மற்றும் நயமான பருத்தி நூலாலான துணி சுற்றி முடிந்தவுடன் நடப்பட்டுள்ள மூங்கில் குச்சிகளை பிடுங்கிய பின் மூங்கிலினையும் சேர்த்து பாவினைச் சுற்றுவர். அதன்பின் தோப்பில் சாய்கால்களை நிறுத்துவர். அவற்றின்மீது மூங்கில் குச்சிகளோடு கூடிய பாவு படுகிடையாக அமைக்கப்படும். ராசி கஞ்சி தெளிக்கப்பட்ட நீண்ட வாருகோலால் இருவர் பாவினில் கஞ்சி ஏற்றுவர். கஞ்சி காய்ந்தபின் பாவு சுற்றப்பட்டு நெசவாளியின் வீட்டிலுள்ள தறியில் கொண்டு சேர்க்கப்படும். நெசவு செய்யுமிடம் குறுகலான நீண்ட இருண்ட கூடமாக இருக்கும். நெய்பவன் அமர்ந்திருக்கும் இடத்தின் அருகே ஒரு சிறு சன்னல் மட்டும் இருக்கும். தறி எளிய நுட்பங்களோடு கூடிய அமைப்புடையது. சில நிமிடங்களில் அதனைப் பிரித்து ஒருவன் தூக்கிச் செல்லக்கூடிய சுமையாகக் கட்டிவிடலாம். பாவில் அடுத்தடுத்து நூல்

ஊடிழையாகச் செல்ல மேலொன்றும் கீழொன்றுமாக இருக்கும்படியாக அமையப் பின்வரும் முறை கையாளப்படுகின்றது. இரண்டு ஜோடி மூங்கில்கள் மெல்லிய நூலால் சுருக்கிட்டுப் பிணைக்கப்பட்டிருக்கும். மேலே கூரையிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள அவற்றைத் தரை அருகே உள்ள இரண்டு மிதி கட்டைகளோடும் இணைத்திருப்பர். ஒரு ஜோடி மூங்கில்களில் உள்ள சுருக்கு பாதி நூல்களிடையே கோர்க்கப்பட்டிருக்கும். எஞ்சிய பாதி நூல்களின் வழி மற்றொரு சுருக்கு நூல் செல்லும். இவ்வாறான அமைப்பில் ஒரு மிதி கட்டையினைக் காலினால் அமுக்கும்போது மற்றொரு கட்டை எழ ஒரு பகுதி மேலேழுந்து ஊடுநூல் நுழைந்து செல்ல வழிவகுக்கும். ஊடுநூல் கூரையிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள ஒரு கட்டையினை இழுப்பதால் ஓர் புறம் சென்று மறு காலால் கட்டையினை அமுக்குவ்தால் மீண்டும் பாவின் மாறிப் பின்னப்பட்ட இழைகள் வழியே குறுக்கே பாய்ந்து வரும். இவ்வாறாக ஒரு நாள் முழுதும் நெய்பவன் மூன்று கெசம் துணி நெய்யலாம்." இது பற்றித் திரு.ஜெ.டி.ரீஸ் மேலும் கூறியுள்ளதாவது :– *

"நெசவாளர்கள் தோப்பு ஒன்றினுள் நாம் நுழைந்தால் அங்குப் பணியில் ஈடுபட்டிருப்போர் ஏதோ விளையாட்டில் ஈடுபட்டிருப்பதாக முதலில் நினைப்போம். நிழலில் மரவரிசைகளின் இடையே வரிசை வரிசையாக பெண்கள் இடதுகையில் ராட்டினத்தை உயரத் தூக்கிப் பிடித்தவர்களாக வலது கையில் கொக்கியோடு ஒரு மூங்கில் கழியினை வைத்திருப்பர். அந்த மூங்கில் முனையில் உள்ள கொக்கி வழியே நூல் நுழைந்து செல்லும். நடந்து செல்லும்போதே இவர்கள் ராட்டினத்தில் உள்ள நூலைக் கொக்கியின் உதவியால் இடுப்பளவு உயரம் உடையனவாக நடப்பட்டுள்ள மூங்கில் குச்சிகளில் குறுக்கும் மறுக்குமாகச் சுற்றிச் செல்வர். இவ்வாறு பிரித்துச் சுற்றப்பட்ட நூலினைப் பின்னர் தரையில் ஊன்றப்பட்டுள்ள குச்சிகளோடு பிடுங்கி படுகிடையாக மரங்களிடையே கட்டிக் கஞ்சிபோட்டுக் காய வைப்பர். நூல் இப்பொழுது துணியாக நெய்யத் தயாராகிவிட்டது. இதனை வீட்டினுள் அமைந்துள்ள தொடக்க கால அமைப்புடைய தறிக்கு எடுத்துப்போய் துணியாக நெய்வர்."

தென்னிந்தியாவில் உள்ள பெரும்பாலான பிற வகுப்பாரைப் போலவே நெசவாளர்களும் பழமையில் பற்றுடையவர்களாக உள்ளனர்.

---

* பெருமகன் கன்னிமாராவின் பன்னிரண்டாவது பயணம், 1890.
(Twelfth Tour of Lord Connemara, 1890)

நெய்யும்போது பாவு தொய்ந்து போகாமல் இருக்கப் புதிதாக ஏற்பாடு செய்யப்பட்ட புதிய கண்டுபிடிப்பினைச் சிறிது காலத்திற்கு முன்பு அறிமுகப்படுத்தியபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனால் சென்னை கலைப் பயிற்சிப் பள்ளியில் கைத்தறி நெசவாளர்கள் தற்காலிக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நெசவுத் தொழில் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.எ.சாட்டெர்டனுக்குக் கடப்பாடுடையேன்: – "கைத்தறி நெசவாளர்களை இருபெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். 1) பாவின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை ஊடிழையினைக் கொண்டு செலுத்தும் ஒரே ஓடக் கட்டையினைப் பயன்படுத்திச் சாதாரணத் துணி நெய்பவர்கள். 2) கரையோடு கூடிய துணி நெய்பவர்கள். இதில் துணியின் கரைகளாக அமையும் ஊடிழை துணியின் உட்பகுதியின் ஊடிழையில் வேறுபட்டதாக இருக்கும். இத்தகைய பணியினை நெய்ய மூன்று ஓடக் கட்டைகளைப் பயன்படுத்துகின்றனர். எனினும் இம்முறையினை விசைத்தறிகளில் பயன்படுத்த இதுவரை முயற்சி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இயந்திரத் தறியில் நெய்யப்படும் துணியின் நேரடிப் போட்டியால் கரைகளோடு கூடிய துணிநெய்யும் நெசவாளர்கள் பாதிக்கப்படவில்லை. இவர்கள் தொழிலில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் மக்கள் ரசனையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களேயாகும். * மூலப்பொருளிலிருந்து துணி தயாரிக்கும்போது மூன்று கட்டங்களில் அத்தொழில் நடைபெற வேண்டியுள்ளது. நூற்றல், பாவு ஒட்டுதல், நெய்தல் என்பனவே அக் கட்டங்கள். புதிய இயந்திரங்கள் கையால் நூல் நூற்றலை முழுதும் அடியோடு ஒழித்துவிட்டன. பழைய முறையிலான பாவு ஒட்டுதலுக்குப் பதிலாகக் கையால் இயக்கும் இயந்திரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. விசைத் தறிகள் கைத் தறிகளின் இடத்தை ஓரளவு பிடித்துக் கொண்டுள்ளன. எனினும் கைத்தறி நெசவுத் தொழிலில் முன்னேற்றம் பெற வேண்டிய துறைகள் பல இன்னமும் உள்ளன என்றே கூறவேண்டும். கைத்தறித் தொழிலினை உறுதி

---

* பார்க்க : தர்ஸ்டன், சென்னை மாநிலத்தில் பருத்தித் தொழில் தொடர்பான தனிக் கட்டுரை, 1897.

(See : Thurston / Monograph on the cotton Industry of the Madras Presidency, 1897.)

வாய்ந்ததாக அதன் சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்ய இந்நாட்டு நெவாளர்களின் பாவு ஓட்டும் முறையினையும் நெய்யும் முறையினையும் பழைய முறையிலிருந்தும் மேம்பட்டதாக ஆக்க முயற்சி செய்து வருகின்றோம். நெசவைப் பொருத்தவரை இதில் நாம் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம். தானே தெறித்தோடும் ஓடக் கட்டையினைப் பயன்படுத்தியபின் பழைய தறியில் நெய்வதைக் காட்டிலும் இருமடங்கு நெய்ய முடியும் என்பதனை நிரூபித்துள்ளோம். இதனால் தென்னிந்தியாவில் நெசவு மையங்களில் இது இப்பொழுது மெல்லச் செல்வாக்குப் பெற்று வருகின்றது. பாவு தயாரிக்கும் ஓர் ஆலையின் திறன் குறைந்தது நூறு தறிகளுக்காவது வேலை தரக்கூடியதாக அமைக்கப்பட வேண்டும் என்பதில்தான் இப்பொழுது சிக்கல் தோன்றியுள்ளது. இன்று கைத்தறி நெசவுத் தொழிலில் பெரும் அளவில் கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் இந்த அளவு பெரும் எண்ணிக்கையிலான தறிகளுக்கு வேலை தரக்கூடிய அமைப்பு எதுவும் உருவாவதாகத் தெரியவில்லை. மதுரை, கோயமுத்தூர், சென்னை, சேலம் ஆகிய நகரங்களில் கைத்தறி நெசவு ஆலைகளைக் கூட்டு முயற்சியில் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருங்காலத்தில் கைத்தறித் துறை எத்தகைய வகையில் முன்னேற்றம் பெறவேண்டும் என்பதற்கு இந்த முன் முயற்சியினை ஒரு உதாரணமாகக் கூறலாம். இன்று இந்த ஆலைகள் அனைத்தும் தெறித்தோடும் ஓடக்கட்டைகளால் இயங்குவதோடு பழைய முறையிலான பாவுகட்டும் இயந்திரங்களிலும் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. பாவு கட்டுதல், கஞ்சி போடுதல் ஆகியன தொடர்பான ஆய்வுகள் அரசின் செலவில் சேலத்தில் உள்ள அரசின் நெசவாலையிலும் சென்னையில் தண்டையார்பேட்டையில் தனியாருடையதாக உள்ள ஆலையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியச்சூழல்களுக்கேற்ற பாவு நூல் கட்டுவதற்கான இயந்திரம் ஒன்று இங்கிலாந்தில் நமக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. பாவு நூல் வாருதலில் உள்ள சிக்கல்களை அது தீர்த்து வைக்கும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. இது திருப்தி தரக் கூடியதாக அமையுமா அமையாதா என்பது சிட்டைகளுக்குக் கஞ்சிப் போடும் திறனைப் பொருத்தது. இந்தியத் துணிகள் கைத்தறியால் தயாரிக்கப்படுகின்ற காரணத்தாலேயே தரமானவையாக உள்ளன எனக் கூறப்படுகின்றது. எனினும் உண்மையில் இந்திய நெசவாளர்கள் கஞ்சிபோடுவதில் கையாளும் முறையே இதற்குக் காரணம் எனலாம்.

மிக நீளமான பாவுகளை இடையீடின்றி இயந்திரத்தால் அமைக்கும்போது நாம் இத்தகைய தரத்தினை எதிர்பார்க்க முடியுமா என்பது ஐயத்திற்கு இடமானதே. இந்தியர்களுடைய சாதாரண முறையிலான பாவு நீளங் குறைந்தது. தெருவில் அதனை முழுவதுமாக நன்கு இழுத்துக் கட்டிக் கஞ்சி போடுகின்றனர். கஞ்சி அதில் முழுவதுமாகப் படியும்படியாக நன்கு வாரிவிடப்படுகின்றது. நமது இயந்திரங்களில் அமைக்கப்படும் பாவுகள் ஆயிரக்கணக்கான கெச நீளம் கொண்டவை. இவற்றை வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியுமானால் புதிய பாவினைத் தறியில் பொருத்துவதற்காக ஆகின்ற காலவிரயம் மிகுதியும் மிச்சமாகும். இவை ஒருவகையில் வெற்றிகரமாக இயங்கும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. எனினும் இவற்றைப் பயன்படுத்தி நாம் கைத்தறி ஆலைகளில் தயாரிக்கும் துணியின் தரம் இதுவரை கைத்தறிகளில் தயாரிக்கப்பட்டு வந்த துணியின் தரத்தினை ஒத்ததாக இருக்குமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தென்னிந்தியாவில் குறைந்த கூலிக்குத் தொழில் செய்ய ஆட்கள் முன்வருவதால் கைத்தறி ஆலைகளுக்கு இங்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்றே கூறலாம். நெசவாளர்களுக்கு நல்ல பயிற்சி தருவதில் நாம் பெறும் வெற்றியினைப் பொருத்தே அதன் வளர்ச்சி அமையும். நெவாளர்கள் கண்டிப்புடன் கூடிய தொழிற்சாலை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு உடன்பட விருப்பம் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர் என்பதனை அனுபவம் காட்டுகின்றது."

சென்னை மாநிலத்தின் ஆளுநரான சர் ஆர்தர் லாலி 1906-ல் சேலத்தில் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றில் கூறியுள்ளவை வருமாறு :- "சென்ற காலத்தில் நெசவுத் தொழில் மேன்மையுற்றிருந்தது என்பது பற்றி நான் ஓரளவு அறிந்துள்ளேன். இன்று அது முன்பு முன்னேற்றம் உற்றிருந்த அத்தகைய உயர்ந்தோங்கிய நிலையில் இல்லை என்பதனை அறிய வருந்துகின்றேன். இப்பொழுது சுதேசி என்ற பேச்சு மிகுதியும் அடிபடுவதோடு இந்தியக் கைத்தொழில் வளர்ச்சிக்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என அடிக்கடி வற்புறுத்தப்படுவதையும் கேட்டு வருகின்றோம். நெசவுப் பயிற்சிப் பள்ளி ஒன்றினை இங்கு ஏற்படுத்துவதன் வழி இத்துறையில் ஒரு தொடக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த நெவாளர்களுக்குத் துணி உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தேவையான பயிற்சியினைத் தர

முடியும் என நம்புகின்றோம். இதனால் இவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும். நம்முடைய இந்த முயற்சிக்கு மக்கள் எதிர்ப்புக் காட்ட வில்லையாயினும் இதனைச் சந்தேகக் கண்களுடன் பார்க்கின்றனர் என்பது எனக்கு வியப்பைத் தருவதாக உள்ளது. நமது நோக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றே எண்ண வேண்டியுள்ளது. இந்தியர்களிடையே கைத்தொழில் முயற்சிகளோடு போட்டிக்கு வரவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு ஒருபோதும் இல்லை என்பதனை நான் உங்களுக்கு உறுதிபடுத்தி விரும்புகின்றேன். முடங்கிப் போயுள்ள இந்தத் தொழிலுக்கு கொஞ்சம் புத்துயிர் ஊட்டவேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

நெசவுத் தொழில் பற்றிய ஒரு குறிப்பில் * ஈ.பி. ஹாவெல் பின்வருமாறு எழுதுகின்றார் :– "பால் பொருள்கள் தயாரிக்கும் பல சிறு பண்ணை உரிமையாளர்கள் தங்கள் பொருள்களை ஒரு மத்திய தொழில் கூடத்திற்கு அனுப்பி வைக்கும் டச்சுக்காரர்கள் கூட்டுறவு அமைப்பில் அவர்கள் ஒவ்வொருவரும் தொழிற் கூடத்தின் உரிமையில் தாங்கள் அனுப்பும் பொருளின் அளவிற்கு ஏற்பப் பங்குக்கு உரியவர்களாக இருப்பர். தொழிற் கூடத்தின் நிர்வாகத்தில் அவர்கள் எவ்வளவு பங்குக்கு உரிமையுடையவர்கள் என்பதனைப் பொருட்படுத்தாது அனைவரும் சம உரிமை பெறுகின்றனர். இதே முறையினை இந்தியக் கைத்தறித் தொழிலிலும் கடைபிடிக்கலாம். கைத்தறியாளர் சமூகம் ஒவ்வொன்றும் தன் நிர்வாகத்தில் ஒரு மைய அமைப்பினை நடத்தி வரலாம். அந்த அமைப்பு மொத்த விலையில் பொருள்களைக் கொள்முதல் செய்தல், நெசவாளர் தறிக்குத் தேவையான பாவினைத் தயாரித்தல், தயாரிக்கப்பட்ட பொருள்களை விற்றல் ஆகியனவற்றை மேற்கொள்ளும் பொறுப்பினை ஏற்க வேண்டும். நெசவினை இன்று நடைமுறையில் இருப்பதுபோலவே நெசவாளர்களும் அவர்களிடம் பயிற்சி பெறுவோரும் தங்கள் இல்லங்களிலிலேயே நடத்தி வரலாம். தொழிற்சாலை அமைப்பினால் ஏற்படும் பொருளாதார அனுகூலங்களை இத்தகைய கூட்டுறவு முயற்சியால் பெறலாம். அதே சமயத்தில் தனியார் தொழிற்சாலை அமைப்பினால் நிகழக்கூடிய தீங்குகளிலிருந்து காத்துக் கொள்ளலாம். நெசவாளர்களின் உரிமையாக உள்ள நெசவாளர்களாலேயே நடத்தப்படும் ஒரு தொழிற்சாலை அவர்கள்

---

* கிழக்கும், மேற்கும். VI, 70. 1907. *(East and West, VI, 70, 1907.)*

நன்மையினையே கருத்தில் கொண்டதாக இருக்கும். தங்கள் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டும் முதலாளிகளின் நிர்வாகத்தில் இயங்கும் நெசவாலைத் தொழிற்சாலைகளிலும் இவை வேறுபட்டனவாக இருக்கும் என உறுதிபடக் கூறலாம்."

நெசவாளர்கள் சமூகத்தின் நிலைமையினை அறிந்து கொள்வதற்கு உதவியாக **1896–97** ஆம் ஆண்டில் மாநிலத்தில் நிலவிய பஞ்சம் தொடர்பான அறிக்கையிலிருந்து சில பகுதிகளைத் தரலாம் என நம்புகின்றேன். "பஞ்சத்தின் பாதிப்புக்கு முதலில் ஆளானவர்கள் நெசவாளர்களே. செட்டாக வாழ்க்கை நடத்தும் பழக்கம் இல்லாத நெவாளர் சாதியினரும் முசல்மான் நெசவாளர்களும் பொதுவாக ஏழைகளாகவே உள்ளனர். சாதகமான சூழல் நிலவும்போது நெசவாளர்கள் நல்ல வருமானம் பெறுகின்றனர். அவ்வாறு ஈட்டும் பொருள் அனைத்தையும் வருங்காலத்தைப் பற்றிச் சிந்தனையற்றவர்களாகச் செலவழித்துவிடுகின்றனர். இதனால் இச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிலரே வசதிபடைத்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு முன்பணம் தரும் அவர்கள் அதற்கீடாக இவர்கள் நெய்யும் துணியினைப் பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறு சௌகார்களுக்குக் கடன்பட்டவர்களாக அவர்களுக்காக நெய்யக் கடமைப்பட்டவர்களாக உள்ளனர். பருவநிலை சாதகமாக இருக்கும்வரை சௌகார்கள் தங்களிடம் கொள்முதல் செய்யும் வணிகர்களிடமிருந்து சரக்குத் தேவைக்கான கட்டளைகளைப் பெறுகின்றனர். அவ்வாறு கொள்முதல் ஆணைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்வரை இந்தச் சௌகார்கள் நெசவாளர்களுக்கு முன்பணம் தந்தபடி இருப்பர். ஏதேனும் காரணங்களால் தேவை குறைய நேரின் சௌகார்கள் தாங்கள் கொடுக்கும் முன்பணத்தையும் அதற்கேற்பக் குறைத்துக் கொள்வர். இதனால் நெவாளர்கள் தொல்லைக்குள்ளாக வேண்டியதாகின்றது. நெசவாளர்கள் நெய்யும் துணியின் தரத்திற்கு ஏற்ப மெல்லிய தரமான துணி நெய்வோர், பட்டு நெய்வோர், முரட்டுத் துணி நெய்வோர் என இவர்களைப் பாகுபடுத்தலாம். பஞ்சம் காரணமாகத் தொல்லைகள் தலைகாட்டத் தொடங்கியவுடன் பாதிப்புக்கு உள்ளாவோர் முரட்டுத் துணி நெய்வோரே. இவர்கள் நெய்யும் துணியினை வாங்குவோர் ஏழை வகுப்பாராவார். பஞ்சம் தலைதூக்கி விலைவாசிகள் ஏறத் தொடங்கிய அளவில் முரட்டுவகைத் துணிகளுக்குத் தேவையில்லாது போகின்றது.

அண்மையில் பஞ்சம் நிலவியபோது நிலைமை இத்தகையதாகவே இருந்தது. நெசவாளர்கள் கடினமான உடல் உழைப்புக்களில் ஈடுபடவோ வெட்ட வெளியில் வெயிலில் உழைக்கவோ பழக்கப்பட்டவர்கள் அல்லர். மண் வெட்டிப்போடும் வேலைகளில் இவர்களை ஈடுபடுத்தினால் இவர்கள் குறிப்பிட்ட அளவு பணியினை நிறைவேற்ற இயலாதவர்களாகக் குறைந்த கூலியே பெற நேர்கின்றது. குற்றம் இவர்கள் மேல் இல்லாதிருந்தும் இவர்கள் இத் தண்டனையை அனுபவிக்க வேண்டியதாகின்றது. நெசவாளர்கள் மண்வெட்டும் வேலைகளில் பழக்கப்படும்வரை நிலைமை இத்தகையதாகவே இருந்துவரும். தங்கள் தொழிலில் இடைவிடாது ஈடுபட்டிருந்த பழக்கத்தின் காரணமாக இவர்கள் அதில் ஒருவகை கைநுட்பம் வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர். இவர்களைப் பஞ்சகாலத்தில் தற்காலிகமாக வேறுதொழிலில் ஈடுபடுத்தினால் இவர்களுடைய கைநுட்பத்திறனும் நெசவுத் தொடர்பான தொழில்நுட்பமும் ஓரளவுக்குப் பாதிக்கப்படவே செய்யும். பின்னர் நிலைமை சீரடைந்து இவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ளத் திரும்பும்போது இவர்களுடைய தொழில் திறனை இந்த இடையீடு பாதிக்கவே செய்யும். நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பஞ்சகால உதவி அவர்கள் மேற்கொண்டுள்ள தொழில் துறையினைச் சார்ந்ததாகவே இருக்குமானால் அது அவர்களுக்கு மிகுந்த பயன்பாடுடைய உதவியாக அமையும். இம் முறையில் இவர்களுக்கு உதவ அரசு நெய்வதற்குத் தேவையான நூல் முதலியவற்றை இவர்களுக்குக் கொடுத்து உதவலாம். இதற்குப் பெருமளவிலான அடிப்படைச் செலவினை நூல் முதலியவற்றுக்கான விலை, நெசவாளர்களுக்கான கூலி என்ற வகையில் அரசு ஏற்க வேண்டியிருக்கும். என்றாலும் வழங்கப்பட்ட நூல் முழுவதையும் துணியாக நெய்து நெசவாளர்கள் திரும்பத் தரும்போது அரசிடம் பெருமளவில் துணி இருப்பு இருக்கும். இதனைப் பஞ்ச காலம் முடிந்து வளம் மீளத் தொடங்கிய பின் அரசு விற்று இதற்காகச் செய்த செலவினை திரும்பப் பெறலாம். இவ்வகையில் அரசு பஞ்ச காலத்தில் பெருமளவிலான ஏழை மக்களுக்குத் தக்க உதவியினைச் செய்ததாக ஆவதோடு, எத்தகைய செலவுமின்றி அல்லது மிகக் குறைந்த செலவில் இச் சமூகத்தவரின் கைத்தொழில் நுட்பத் திறன் நசிந்துவிடாமல் காப்பாற்றப்படுகிறது."

---

* சென்னை மெயில் நாளிதழ், 1904. ***(Madras Mail, 1904.)***

நெசவாளர்களைப் பற்றிப் பழமொழிகள் பல வழங்கி வருகின்றன. "ஆற்றின் அகலத்தைக் குறைக்க வேண்டுமானால் நாணலை நடு: ஊரின் சுற்றுப் புறத்தைக் கெடுக்க வேண்டுமானால் நெசவாளாகளைக் கொண்டுவந்து குடி வை" என்பது அவற்றுள் ஒன்று. சாயம் கலக்கும்போதும் சாயம் தோய்த்த நூல்களைக் கழுவும்போதும் நெசவாளர்கள் ஆற்றில் ஓடும் நீரை நாடிச் செல்வர். இச் செயல்களால் ஆற்று நீர் மாசுபடும். நூலை முறுக்கவும் முறுக்கு நீக்கவும் சிக்கு எடுக்கவும் முதலான நெசவு தொடர்பான பணிகளுக்குப் பலருடைய கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. நெசவாளர் குடியிருப்பு உள்ள இடங்களில் இவர்கள் ஒரு சேரப் பல குடும்பங்களாக அங்கே இருக்கக் காணலாம். இதன் அடிப்படையில் அமைந்த பழமொழி "செட்டி கூட்டால் கெட்டான். சேணியன் கூடாமல் கெட்டான்" என்பதாகும். நெய்யும்போது பாவு நூலினை மாற்ற நெசவாளர்கள் தங்கள் பாதத்தால் கட்டை ஒன்றை மிதிப்பர். நெசவாளர்களுக்குப் பாதத்தில் புண் ஏற்படுமானால் அது அவனைத் தொழிலில் ஈடுபட இயலாமல் செய்து இழப்பை உண்டு பண்ணும். இதனை விளக்க அமைந்த பழமொழி. "நாய் தலையில் பட்ட புண்ணிலிருந்தும் நெய்பவன் காலில் பட்ட புண்ணிலிருந்தும் மீளமுடியாது" என்பதாகும். *

சலிகெ – Salige (wire)

குர்ணிகளின் ஒரு கோத்திரம். கம்பி எனப் பொருள்படும்.

சாலியர் – Sāliyan

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொர நாட்டிலும் அம்மா பேட்டையிலும் நெசவினை மேற்கொண்டுள்ள தமிழ் பேசும் சாலியர்களான இவர்கள் தெலுங்கு சாலேயர்களிலும் வேறுபட்டவர்கள். ஒரே தொழிலை மேற்கொண்டுள்ள சில குடும்பங்கள் எவ்வாறு தனித்தனிச் சாதியாகப் பிரிந்து உருப்பெறுகின்றன என்பதற்கு இவர்கள் சிறந்த உதாரணமாகத் திகழ்வர். இவர்கள் தங்கள் சாதியின் தோற்றம் தொடர்பான ஒரு புராணம் இருப்பதாகக் கூறுவர். நல்லாடை கோயில் தல புராணத்தில் அது இடம்பெற்றுள்ளது என்பர். நல்லாடைக்கு அருகே தவத்தில் ஈடுபட்டிருந்தவரான விசாகர் என்ற முனிவருக்குத் தொண்டு செய்து வந்த தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த சாலிய மகரிஷியின் சந்ததியினர் என இவர்கள் தங்களைக் கூறிக் கொள்வர். விசாகரின் அருளால் சாலியன் ஒரு ரிஷியாகும் பேறு பெற்றதோடு இரண்டு மனைவியரையும் மணந்து

கொண்டான். இவருடைய முதல் மனைவியின் வழிப் பிறந்தவர் சாலியர். மொட்டைச் சாலியர் இவருடைய இரண்டாம் மனைவியின் வழிப் பிறந்தவர்கள்.

சாலியர் பூணூல் அணிந்து கொள்ளத் தொடங்கி இருப்பதோடு பிராமணப் புரோகிதர்களைத் தங்கள் குருமாராகவும் சடங்குகளை நடத்தி வைப்பவர்களாகவும் அமர்த்திக் கொள்கின்றனர். மாயவரத்திற்கு அருகே உள்ள சேடங்குடியினைச் சேர்ந்த ஒரு பிராமணன் இவர்களுக்கு மேற்கூறிய பணிகளைச் செய்ய முன்வரும் வரை இவர்கள் சாதியினைச் சேர்ந்தவனே இவர்களுக்குப் புரோகிதம் பார்த்து வந்தான். முன்னாளில், மாமரத்துமேடு என்ற இடத்தில் தவிர வேறிடங்களில் தங்கள் துணியினை வைத்து விற்கச் சாலியர் அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. அங்கு இவர்கள் தங்கள் துணிகளை மூங்கில் மேல் விற்பனைக்காக விரித்துப் போட்டிருப்பர். உயர் சாதியினைச் சேர்ந்தவர்கள் ஒரு குச்சியாலேயே இத்துணிகளைத் தொடுவர். இன்று சாலியர் சமூகப் படிநிலையில் மேம்பட்டவர்களாக இருப்பதோடு பிராமணர்களைக் கூட சமையல்காரர்களாக அமர்த்திக் கொண்டுள்ளனர். எனினும் மற்றச் சாதியார் இவர்கள் இல்லங்களில் உணவு கொள்வதில்லை.

பிற தமிழ்ச் சாதியாரிடையே இருக்கும் வழக்கத்திற்கு மாறாகச் சாலியரிடையே வீடு என்ற புறமணக்கட்டுப்பாடு உடைய பிரிவுகள் இருப்பது தனித்த ஒரு கூறாகும். அத்தகைய வீடுகளுக்கான பெயர்கள் சில வருமாறு :-

மந்தி	வெள்ளைப் பரங்கி
கொட்டாங்கச்சி	எட்டடியான்
துணியன்	கழுதை
கச்சந்தி	தடியன்
மூங்கில் நாழி	தவளை
ஓடக் கழிஞ்சான்	சப்பைக்காலன்
முருகன்	மலையான்
தம்பிரான்	காத்தான்
சிறந்தான்	உழக்கன்
கள்ளி	தொந்தி
ஓட்டு வீடு	கம்பன்
கொல்லை.	

ரிஷிகளின் பெயர்களால் அமைந்த கோத்திரப் பிரிவுகளும் இவர்களிடையே உள்ளன. அவற்றைப் பற்றிக் கேட்டபோது தங்கள் பிராமணப் புரோகிதர்களிடம் கேட்கும்படி கூறினர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மாயவரத்தில் தங்கி மணப் பெண்களுக்கான கொரநாட்டுப் பட்டுக் கூறைச் சேலை நெய்யும் சேணியன், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சேணியன்கள் தங்களைப் போலவே தமிழ் பேசுபவர்களாக இருந்தாலும் கூட அவர்களோடு உடன் உண்பதோ மணஉறவு கொள்வதோ இல்லை. திருநெல்வேலிப் பகுதியினைச் சேர்ந்த சாலியன்கள் தங்கள் சடங்குகள் பலவற்றையும் கைக்கோளர்களைப் போலவே நிகழ்த்துவதோடு சாதி அமைப்பிலும் அவர்களைப் பின்பற்றியவர்களாக அவர்களோடு உடன் உண்ணவும் செய்வர். சாலியர் சாதிப் பெண்கள் மேற்கையில் மூன்று தோள் வளைகளை அணிகின்றனர். கைக்கோளர் சாதிப்பெண்கள் ஒரே ஒரு தோள்வளை மட்டும் அணிவர். முதல் மனைவி உயிரோடு இருக்கும்போது அவள் மலடியாயிருப்பினும் இரண்டாவதாக ஒருத்தியை மணக்கும் வழக்கம் சாலியரிடம் இல்லை. குழந்தைகளை இவர்கள் தத்து எடுத்துக் கொள்கின்றனர். திருநெல்வேலியினைச் சேர்ந்த சேணியர் சிலர் வணிகத்திலும் பயிர்த்தொழிலிலும் ஈடுபட்டவர்களாகப் பிறதொழில்களிலும் ஈடுபடுகின்றனர்.

1901 கணக்கெடுப்பு அறிக்கையில், "அடவியார் சாலியர்களுக்கான மற்றுமொரு பெயரோ அல்லது பட்டப்பெயரோ ஆதல் வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது. பட்டாரியர் என்பது பட்டுச் சாலியன் என்பதன் சிதைந்த வடிவமாகும் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அடவியார் எனப்படும் பட்டாரிய செட்டிகள் தமிழர்கள். இவர்கள் கைகோளர் சாதியிலிருந்து பிரிந்து சென்றவராதல் வேண்டும். இவர்களும் பத்ம சாலேக்களைப் போல எங்குச் சென்று தங்கினாலும் தங்கள் தாய்மொழியான தெலுங்கைப் பேசுகின்றனர். தெலுங்குப்பட்டு சாலேயர்களோடு இவர்களுக்கு எந்த உறவும் இல்லை. செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சாலியர் தொடர்பாக–இவர்களுள் பலர் கைக்கோளர் – செங்கல்பட்டு மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளதாவது:– "இச் சாலியர் சாலிய நாயக் ஒருவனை (இவன் ஒரு பிராமணன் என்பர்) தண்டனைக்கு உள்ளாக்கினர். இதன்

காரணமாக இவர்களுள் பலர் காஞ்சிவரத்திலிருந்து பெருங்கூட்டமாக மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கு ஓடும்படியாயிற்று. அந்த ஊர்களில் இன்றும் அவர்களுடைய பிரிவினர் வாழ்ந்துவரக் காணலாம்.

அடவியார், புராண மரபு வழிபட்ட தமிழ் மரபு மணமுறையினையே மேற்கொண்டவர்களாக உள்ளனர். சிறுதாலியினையே இவர்கள் திருமணத்தின்போது பயன்படுத்துகின்றனர். முக்தாட்சியம்மனையே சாதிக்குரிய தெய்வமாக வழிபடுகின்றனர். இறந்தவர்களை எரிப்பதே இவர்கள் வழக்கம்.

சலுப்பன் – Saluppan

தெலுங்குச் சணப்பன்களுக்குச் சமமான தமிழ்ச் சாதியார். இது சணப்பு (***Crotolaria juncea***) செடியின் பெயரிலிருந்து வந்த பெயராகும்.

சமகாரர் – Samagāra

தென் கன்னட மாவட்டக் கையேட்டில் சமகாரர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :– "தென் கன்னட மாவட்டத்தில் தோலில் தொழில் செய்யும் முக்கிய வகுப்பார் சமகாரர், கன்னட சமகாரர், ஆரிய சமகாரர் என இரண்டு அகமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவினராக இவர்கள் பிரிவுப்பட்டுள்ளனர். ஆரிய சமகாரர் மராத்தி பேசுபவர்கள். சமகாரர் ஹொலையரைப் போலவே சமூகப் படிநிலையில் மிகத் தாழ்ந்தவராகக் கருதப்பட்டாலும் பொதுவில் இவர்கள் நல்ல நிறம் வாய்க்க பெற்றவர்களாக இருப்பதோடு இச் சாதிப் பெண்களுள் பலர் நல்ல அழகிகளாகவும் உள்ளனர். இம் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிலைப் பெரிதும் இவர்களே மேற்கொண்டவர்களாக உள்ளனர். இவர்கள் அத்தொழிலைச் செய்யக் கையாளும் முறை வருமாறு – தோலினை ஒரு மாதகால அளவிற்குப் பெரிய மண் தொட்டிகளில் தண்ணீரில் ஊற வைக்கின்றனர். அத் தொட்டியில் ஒரு தோலுக்கு இரண்டு சேர் என்ற அளவில் சுண்ணாம்பை இட்டு [illegible] மேற்கூறப்பட்ட காலக்கெடு முடிந்ததும் மூன்று நா[illegible] தண்ணீரில் அத் தோல்களை ஊற வைப்பர். பின்னர் அத் தோல்களை எடுத்துத் தண்ணீரும் நெல்லி ***Phyllanthus Embalica*** இலை[illegible] உள்ள மண் தொட்டிகளில் பன்னிரெண்டு நாள்கள் வரை இட்டு [illegible]

அதன்பின் இவற்றை வெளியே எடுத்துப் பிழிந்து மீண்டும் அதே தொட்டிகளில் ஒரு மாதம் வரை கிடக்கும்படியாகப் போட்டு வைப்பர். பின்னர் அவற்றை எடுத்துக் கழுவிப் பிழிவர். பின் அவற்றைத் தைத்து உள்ளே முந்திரி, தத்தல், நெராளி மரங்களின் பட்டைகளைத் திணித்து வைப்பர். பின் அவற்றைக் கழுவி ஒரு நாள் வெயிலில் உலர்த்தியபின் அவை செருப்புத் தைக்க ஏற்றனவாக ஆகும். இந்த முறையில் பதனிடும்போது தோல்களில் சில இற்றுப்போய் சிறிதும் பயன்படாதனவாக ஆகிவிடுவதும் உண்டு.

ஆரே சமகாரருக்கும் உரியனவாகக் காஞ்சிவரத்தில் உள்ள சின்னம், மொச்சிகளுக்கு உரியதான பட்டம் ஆகும் எனக் கூறப்படுகிறது. (இது சிறுவர்கள் பறக்கவிடுவது) *

சாமந்தன் – Sāmanthan

1891 கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் எழுதுவதாது:– "சாமந்தனை மலையாளம் ராசாக்கள் என்றோ குறுநிலத் தலைவர்கள் என்றோ கூறலாமே அன்றி தனிச் சாதியாகக் கூறுதல் ஒருபோதும் இயலாது. வட்டாரத் தலைவர்களாக ஒரொரு கால் விளங்கிய நாயர்கள் இன்று தங்களைச் சாமந்தர் என அழைத்துக் கொள்கின்றனர். சாமந்தன் என்பதன் நேர்பொருள் மாவட்டத் தலைவன் என்பதாகும் என முனைவர் குண்டர்ட் X கூறியுள்ளார். "1881 கணக்கெடுப்பில் தங்களைச் சாமந்தன் எனப் பதிந்துள்ளோர் எண்ணிக்கை 1611 ஆகும். (சாமந்தன் பிராமணர் சிலரும் இதனுள் அடங்குவர்.) 1901 கணக்கெடுப்பில் இவ்வாறு பதிந்துள்ளோர் 4351 ஆகும்.

சில ஆண்டுகளுக்கு முன் மலபார் மாவட்ட ஆட்சியரின் (திருலோகன்) முன்னிலையில் இளைய திருமல்பாட் என்கின்ற நீலம்பூரைச் சேர்ந்த தச்சர கோவில் மானவிக்ரமன் என்பவரால் கொண்டு வரப்பட்ட வழக்கொன்றில் வாதி தன்னை, "மாட்டிறைச்சி தவிரப் பிற இறைச்சிகளும் மீனும் தின்கின்ற சாதி (நாயர் என) எனக் கூறுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார். வழக்கு மன்றத்தில்அவன்,

* இந்தியத் தொல்லியல், IV 1875. (*Ind.Ant., IV, 1875.*)

X மலையாளம் ஆங்கில அகராதி (*Malayalam and English Dictionary.*)

தான் ஒரு சாமந்தன் எனவும், "சாமந்தன் சாதியினைச் சேர்ந்தவன் பிராமணனோ சத்திரியனோ வைசியனோ சூத்திரனோ அன்று" எனவும் கூறினான். அவன் கருத்துப்படி சாமந்தன் என்பது சாமந்திரான் என்பதன் திரிந்த வடிவமாகும். இது மந்திரம் ஏதும் கூறாமல் சடங்குகளைச் செய்பவன் எனப் பொருள்படும். அவன் தன் சாதியார் பிராமணர் இயற்றும் சடங்குகள் அனைத்தையும் மந்திரங்கள் சொல்லாமல் இயற்றுகின்றார்கள் எனக் கூறியதோடு தன் சாதி, நாயர்கள் சாதியிலிருந்து எவ்வெவ்வகையில் வேறுபடுகின்றது என்பதனைப் பின்வருமாறு விளக்கினான். பிராமணர்கள் தன் சாதியினைச் சேர்ந்தவர்கள் இல்லங்களில் உண்பர். ஆனால் நாயர்கள் இல்லங்களில் உண்பதில்லை. தன் சாதியினர் சிரார்த்தம் செய்யும் போது பிராமணர்களுக்கு உணவளிக்கின்றனர். நாயர்கள் அவ்வாறு அளிப்பதில்லை. தீட்டு நீங்குவதற்காகப் பிராமணர்கள் தன் வீட்டில் தண்ணீர் தயாரிப்பர். ஆனால் ஒரு நாயர் வீட்டில் அவ்வாறு தயாரிப்பதில்லை. ஒரு நாயர் சாமந்தனைத் தொட நேர்ந்தால் நாயரால் தொடப்பட்ட பிராமணன் எப்படித் தீட்டுப் போகக் குளிக்கின்றானோ அது போலவே சாமந்தனும் குளிக்கின்றான். தன் சாதியில் திருமணம் முதலான சடங்குகளை நடத்தி வைக்க மலபார் பிராமணர்கள் இன்றியமையாதவர்கள். திருணத்தில் ஒரு சத்திரியனே தாலிகட்டுகின்றான். சாமந்தன் பதினான்கு நாள்கள் சாவு தீட்டு மேற்கொள்கின்றான். நாயர் பதினைந்து நாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்கின்றனர். ஒரு பிராமணன் உண்பதை மட்டுமே சாமந்தன் உண்பான். இவ்வாறெல்லாம் கூறிக்கொண்ட அவன் தான் கள்ளிக்கோட்டை சாமோரின் சாதியினைச் சேர்ந்தவன் எனவும் கூறிக் கொண்டான். அவனுக்குச் சார்பாக கேரளவக்சக கிரமத்தின் ஆசிரியர் உட்படப் பலர் சாட்சியம் அளித்தனர். மாவட்ட நடுவர் ஆவண மூலங்களாக சாட்சியங்கள் எதுவும் காட்டப்படவில்லை என்றும் பழைய பொதுப் பதிவுகளிலோ நம்பத்தகுந்த நூல்களிலோ நாயர்களிலும் வேறான சாமந்தன் என்ற சாதி சத்திரியர்களுக்குக் கீழும் வைசியர்களுக்கு மேலும் உள்ளதாகக் கூறப்படவில்லை எனவும் கூறியுள்ளார். கேரளவக்சக கிரமத்தின் ஆசிரியர் சாமந்தர் சாதியின் தோற்றம் பற்றித் தரும் விவரம் வருமாறு :– பரசுராமனுக்கு அஞ்சியவர்களாகப் பிற நாடுகளில் சுற்றித் திரிந்தபடி சாதிக்குரிய விதிமுறைகளைக் கடைபிடியாதிருந்த சத்திரியர் சிலர் மலபாருக்கு வந்து

சேரமான் பெருமாளை அணுகி அவரிடமிருந்து பாதுகாப்பை வேண்டினர். இந்த வேண்டுகோளைக் கேட்ட சேரமான் பெருமாள் பிராமணர்கள் அனுமதியுடனும் தனக்கு முன் ஆண்ட அரசர்கள் கைக்கொண்ட நடைமுறையைப் பின்பற்றியும் இவர்களைச் சாமந்தர் என்ற சாதியராக ஆக்கினார். "மிகச் சிக்கலான தெளிவற்றதான வரலாற்றுப் பிரச்சனைகள் தொடர்பாக முடிவெடுப்பதில் இந்த நூலைச் சான்றாக ஏற்றுக் கொள்வதற்கில்லை. இதில் கூறப்பட்டுள்ள கதை தொன்மம் ஆகுமேயன்றி அதனை நம்ப எந்த அடிப்படையும் இல்லை" என நடுவர் இந்த நூல்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மந்திரம் கூறாது சடங்குகள் செய்பவனான சாமந்திரன் என்பதிலிருந்து வந்ததுதான் சாமந்தன் என்ற சொல் என்பதற்கான மொழியியல் அடிப்படையிலான சான்றுகள் எவையும் காட்டப்படவில்லை.

மேலே கூறப்பட்ட வழக்கிற்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட எழுத்து மூலச் சாட்சியங்களில் ஒன்று மலபாரின் இருப்பும் நிலையும் பற்றி ஆராய்ந்து அறிவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியாகும். 1793 அக்டோபர் 11 எனத் தேதியிடப்பட்ட அந்த அறிக்கையில் மலபாரின் தெற்குப் பகுதியில்உள்ள நீலம்பூரினைச் சேர்ந்த தலைவரான நாயர் 'திசேர திருபார்' என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள திசேர திருபார் நீலம்பூர் திருமல்பாட் ஆவர் என்பதற்கானசாட்சியங்கள் காட்டப்பட்டன. மலபாருக்கான கண்காணிப்பாளர் 1793 நவம்பர் 15ஆம் நாள் எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது. மைசூர், கன்னடம், மலபார் பகுதிகளில் தான் மேற்கொண்ட பயணம் பற்றிப் புச்சனன் எழுதியுள்ள நூலிலிருந்தும் இரு பகுதிகள் சாட்சியங்களாக எடுத்துக் காட்டப்பட்டன. அவற்றுள் ஒன்றில் புச்சனன் 'மலையாளத்'தின் வரலாறாகப் பிராமணர்கள் தனக்குக் கூறியது என்னவென்று எழுதியுள்ளார். பிற செய்திகளுடன் சேரமான் பெருமாள் மெக்காவிற்குச் செல்வதாக முடிவு செய்தவராகக் கள்ளிக்கோட்டைக்கு வந்தார் எனவும் கூறப்பட்டுள்ளது. "அங்கு அவரை பரமிக்க தலைவரான நாயர் ஒருவர் சந்தித்தார். சேரமான் பெருமாள் தன் நாட்டைப் பங்கிட்டு அளித்த சமயத்தில் அவர் அங்கு வந்திருக்கவில்லையாதலால் சேரமான் பெருமாள் நாட்டில் அவருக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை. எனவே சேரமான் பெருமாள் அவரிடம் தன் வாளினைக் கொடுத்து அதனைக் கொண்டு அவர் வெற்றி

கொள்ளும் பகுதி அனைத்தும் அவருக்கு உரியதாகும் எனக் கூறினார். அந்த நாயரின் சகோதரிகளின் சந்ததியினராகத் தோன்றியவர்களே தமுரி அரசர் எனப்படும் சாமோரின்கள்." இரண்டாவது குறிப்பில் புச்சனன் சாமோரினைப் பற்றியும் அவருடையக் குடும்பத்தைப் பற்றியும் தான் கேட்டறிந்தவற்றின் முடிவுகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். இந்தக் குடும்பத்தின் தலைவன் தமுரி ராசா ஆவான். இவரை ஐரோப்பியர்கள் சாமோரின் என அழைத்தனர் எனக் கூறியுள்ளதோடு, "தமுரி தான் பிராமணர்களைவிடச் சாதியில் உயர்ந்தவன் எனப் பாவனை செய்ததோடு கண்ணுக்குப் புலனாகாத கடவுளுக்கு அடுத்தபடியானவன் எனக் கூறிக் கொள்கின்றான். அதனை அவன் குடிமக்களும்ஒப்புக்கொள்கின்றனர். எனினும் பிராமணர்கள் இதனை நம்ப முடியாத அபத்தம் எனக் கூறுவதோடு தமுரியினை ஒரு சூத்திரனாகவே கருதினர்" எனவும் கூறியுள்ளார்.

முக்கியமான சாட்சி ஒருவன் தனக்கு வாதியைத் தெரியும் எனவும் அவன் சூத்திரன்தான் எனவும் கூறினான். தான் சாமோரினின் கோவிலகத்தில் இரண்டாண்டுகள் வாழ்ந்ததாகவும் அக் குடும்பத்தினர் பழக்க வழக்கங்கள் தனக்குத் தெரியும் என்றும் அவன் கூறினான். தன்னுடைய சாதி வழக்கங்கள் தனக்குத் தெரியும் என்றும் அவன் கூறினான். தன்னுடைய சாதி வழக்கங்களுக்கும் சாமோரின் சாதி வழக்கங்களுக்கும் வேறுபாடு எவையும் இல்லை எனவும் கூறினான். சாமந்தன் என்பது சிறு வட்டாரத் தலைவன் எனக் கூறிய அவன் அதற்கு ஆதாரமாக முனைவர் ஒப்பெர்ட் பதிப்பித்த சுக்ர நீதியினை எடுத்துக் காட்டினான். அதில் "சாமந்தன் என்பவன் ஆண்டுதோறும் தன் குடி மக்களிடமிருந்து ஒன்றுமுதல் மூன்று இலட்சம் கர்சொம்களை அவர்களைத் துன்புறுத்தாமல் பெறுபவனாவான்" எனக் கூறப்பட்டுள்ளது. நாயர்களிடையே தங்களைச் சாமந்தர் எனக் கூறிக்கொள்ளும் ஒருசிலர் இருப்பதாகக் கூறிய அவன் 1887 இல் மலபார் மாவட்ட ஆட்சியர் மாவட்டத்தில் உள்ள ஸ்தானம் * உரிமையாளர்கள் பட்டியல் ஒன்றினை கேட்டிருந்ததாகவும் தான் அப்பட்டியலை ஆராய்ந்து பார்த்ததில் அதில் நாயர்கள் சிலர் தங்களைச் சாமந்தர் எனக் கூறிக் கொண்டிருப்பதைக் கண்டதாகவும் கூறினான்.

---

* ஸ்தானம் – தலைமையிடம், பதவி, பெருமை:– மூர்: மலபார் சட்டமும் வழக்கும். *(Sthanam - A station, rank and dignity. Moore : Malabar Law and Custom.)*

"சாட்சியங்கள் அனைததையும் கருத்தில்கொண்டு பார்க்கும்போது வாதி நாயர் சாதியினைச் சேர்ந்தவன் என்பது முடிந்த முடிவாக எனக்குத் தெரிகின்றது. சாட்சியங்களிலிருந்து நாம் சந்தேகத்திற்கு இடமின்றி ஊகிக்க கூடியது வாதியின் குடும்பத்தினரும் நாயர் சாதியினைச் சேர்ந்த சில வட்டாரத் தலைவர்களின் சந்ததியினரும் தங்களைச் சில காலமாகச் சாமந்தர் எனக் கூறிக் கொண்டதோடு மற்றவர்களாலும் அவ்வாறேஅழைக்கப்பட்டு வந்துள்ளனர் என்பதாம். அந்தப் பெயரில் தனித்ததொரு சாதியில்லை. வாதி பிரதிவாதி விளக்கியபடி நாயர் சாதியினைச் சேர்ந்தவரே யாம் * என நடுவர் தன் தீர்ப்பில் கூறியுள்ளார். மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் சாமந்தர் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டிருப்பதின் சுருக்கம் வருமாறு :– "சாமந்தர் என்பது மலபாரின் மேல்வகுப்பார் பலரையும் சுட்டும் இனப்பெயராகும். அப்பிரிவில் நம்பியார், உண்ணிதிரி, அடியோடி ஆகிய வட மலபாரைச் சேர்ந்தவர்களும் நெடுங்காடி, வள்ளோடி, ஏராடி, திருமல்பாட் ஆகிய தென் மலபாரைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். நம்பியார், அடியோடி என்ற பட்டப் பெயரோடு கூடிய நாயர்களும் உள்ளனர். நெடுங்காடி, வள்ளோடி, ஏராடி என்பன எர்நாடு, வள்ளுவநாடு, நெடுங்கா நாடு ஆகிய வட்டாரங்களுக்குரியவர்களுக்கு உரிய வட்டாரப் பெயர்கள். இந்த வட்டாரங்கள் இவற்றின்மீது முன்பு ஆட்சி செலுத்திய வகுப்பாரின் பெயரைப் பெற்றுள்ளன எனக் கூறுதலும் பொருத்தமாகலாம். கள்ளிக்கோட்டை சாமோரின் ஏராடி சாதியினைச் சேர்ந்தவர். கிரியட்டில் நாயர் பிரிவினருக்கும் இந்தப் பெயர் உரியது. வள்ளுவ நாட்டின் அரசரே வள்ளோடி. சாமந்தர் பிரிவு ஒன்றுக்குரிய பட்டப்பெயர் திருமால்பாடு. பலவட்டாரத் தலைவர்கள் இப்பிரிவினைச் சேர்ந்தவர்களே. மஞ்சேரியைச் சேர்ந்த கர்ணமுல்பர்ட், நீலம்பூரைச் சேர்ந்த திருமல்பாடு ஆகியோர் இப்பிரிவினைச் சேர்ந்தவர்கள். இந்த வகுப்பைச் சேர்ந்த பெண்கள் கோல்பர்ட் அல்லது கோயில்மாக்கள் எனப்படுவர். வட மலபாரைச் சேர்ந்த நம்பியார்கள் பலர் தங்களைச் சாமந்தன்சாதியினைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். இவர்கள் நாயர்களே என்பதற்கான காரணங்கள் உள்ளன. இவர்கள்

---

* முதல் வழக்கு எண்.31, 1887. கள்ளிக்கோட்டை வழக்கு மன்றத்தில் மேல்முறையீடு எண்.202, 1888, சென்னை உயர்நீதி மன்றத்தில்.
(Original suit No.31, 1888. Court of Calicut. Appeal No.202, 1888. High Court of Madras.)

அண்மைக் காலமாகத் தான் தங்களை இவ்வாறு உயர்ந்த சாதியாராகக் கூறிக் கொள்ளத் தொடங்கியுள்ளர். இவ்வாறு தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வோர் எண்ணிக்கை உயர்ந்தபடி உள்ளது என்பதனைச் சாமந்தர் எனப் பதிந்து கொண்டுள்ளோர் எண்ணிக்கை தெளிவாக்குகின்றது. **1891 – இல் 1225** ஆக இருந்த அது **1901இல் 4351** ஆக உயர்ந்துள்ளது. இது மக்கள் தொகையின் வளர்ச்சி வீதத்திலும் மிக அதிகமான எண்ணிக்கையாகும். சத்திரியர் பூணூல் அணிகின்றனர். சாமந்தர் அவ்வாறு பூணூல் அணிவதில்லை. சத்திரியர்களில் பெரும்பாலோர் பிராமணரோடு உண்பதோடு பதினொரு இரவுகள் தீட்டினை மேற்கொள்கின்றனர். இதன்வழி பத்துநாள்கள் தீட்டு மேற்கொள்ளும் பிராமணர்களும் பன்னிரண்டு நாள்கள் தீட்டு மேற்கொள்ளும் அம்பலவாசிகளுக்கும் இடைப்பட்டது தங்கள் நிலை என்பதனை நிலைநிறுத்துகின்றனர். சாமந்தர் பொதுவாகப் பதினைந்து நாள் தீட்டு மேற்கொள்கின்றனர். அத்துடன் பிராமணர்களோடு உடன் உண்ணும் வழக்கமும் இவர்களுக்கு இல்லை. சத்திரியர் சாமந்தர் ஆகிய இருவகுப்பாரும் மருமக்கள்தாய சொத்துரிமை முறையினையே பேணுகின்றனர். இவர்கள் சாதிப் பெண்கள் பிராமணர்கள் அல்லது சத்திரியரோடு மட்டுமே சம்பந்தம் வைத்துக் கொள்கின்றனர். பழைய அரச குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய பெயருடன் ராஜா அல்லது தம்புரான் என்ற பட்டப்பெயரை இணைத்துக் கொள்கின்றனர். இவர்கள் வீட்டுப் பெண்கள் தம்புராட்டிகள் எனப்படுவதோடு இவர்கள் இல்லங்கள் கோவிலகங்கள் எனப்படுகின்றன. சாமந்தர் சிலர் கர்த்தா, கைமாள் என்பனவற்றைத்தங்கள் சாதிக்குரிய பட்டப்பெயர்களாகப் புனைகின்றனர். சாமந்தர் பிரிவினைச் சேர்ந்த பல வகுப்பாரிடையேயும் உண்மையில் எத்தகைய வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்களுடைய செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் ஏற்பவே இவர்கள் சமூகப் படிநிலையிலான உயர்வு தாழ்வுகள் அமைகின்றன."

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் எழுதுவதாவது :– "பரசுராமன் கோபத்திற்குப் பலியாவதிலிருந்து தப்பர் பூணூலை நீக்கியவர்களாக தப்பிப் பிழைத்த சத்திரியர் தாங்கள் எனச் சாமந்தர் தங்கள் குலத்தின் தோற்றம் பற்றிக் கூறுவர். அதன்பின் அவர்கள் சந்தியாவந்தனம் முதலியனவற்றை மறந்துபோகும் அளவிற்கு மனித நடமாட்டம்அற்ற காடுகளில் சென்று மறைந்து திரிந்தவர்களாகச்

சில வழக்கங்களில் சூத்திரர்கள் அளவுக்கு தாழ்ந்துவிட்டதாகக் கூறுவர். இதனால் இவர்கள் மந்திரம் இல்லாதவர்கள் என்ற பொருள்பட அமந்தரகர், சாமந்தரகர், சாமந்தர் என்பன போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டதாகக் கூறுவர். இதுபற்றி 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கருத்துத் தெரிவித்துள்ள திரு.ஸ்டுவர்ட், 'மொழியியல் மற்றும் வேறு எந்தச் சான்றுகளும் இந்தக் கட்டுக் கதைக்கு ஆதாரமாக இல்லை' எனக் கூறியுள்ளார். சாமந்திர என்ற சொல்லிலிருந்து சாமந்தர் என்ற சொல் வந்ததாகக் கொள்ள இடமுள்ளது. எனினும் இவர்கள் மந்திரம் அற்றவர்களாயின் அமந்திரர் எனப் பெயர் பெற்றிருக்கலாமேயன்றிச் சாமந்தர் எனப் பெயர் பெற்றிருக்கமுடியாது. பெருமாள் தன் நாட்டின் பகுதிகளை ஆட்சிபுரியச் சாமந்தரை அமர்த்தியுள்ளதாகக் கேரள மகாத்மியம் தெரிவிக்கின்றது. சாமந்தன் என்ற வடமொழிச் சொல்லுக்கு சிறு வட்டாரத் தலைவர் எனப் பொருள் கொள்ளலாம். மலபாருக்கு வந்து சேர்ந்த பெருமாள்கள் உயர்வகுப்பு நாயர் பெண்களுடன் திருமண உறவு கொண்டனர். இத்தகைய உறவின் வழிப் பிறந்தவர்களுக்குப் பல வட்டாரங்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு நல்கப்பட்டது. சத்திரியர்களுக்கு உரிய பழக்க வழக்கங்களைக் கிட்டத்தட்ட அப்படியே பின்பற்றியவர்களாக அதன்பின் இவர்கள் மேற்கொண்டாலும், பூணூல் அணிதலையும் காயத்ரி மந்திரம் சொல்வதையும் இவர்கள் மேற்கொள்ளவில்லை. சத்திரியர் சாதிப் பெண்கள் அணியும் அணிகள், நம்பூத்ரிக் கணவர்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளுதல் போன்றவற்றிலும் முக்கியத்துவத்தில் குறைந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏர நாட்டில் வாழ்ந்தவர்கள் தங்களுக்குள் மட்டுமே உறவும் மணத் தொடர்பும் செய்து கொண்டவர்களாகத் தங்களை ஏராடிகள் எனக் கூறிக் கொண்டனர். வள்ளுவ நாட்டில் வாழ்ந்தவர்கள் வள்ளோடிகள் எனப்பட்டனர். இவர்களுக்கு இடையேயான ஒட்டுறவு மேலும் முழுமைபெறக் கூடிய அளவில் இவர்கள் கலந்து பழகாததாலும் நாயர்களான இவர்களுடைய சில குடும்பங்கள் சில சமயங்களில் செல்வாக்குப் பெற்றனவாக மேலாண்மை செலுத்திய காரணத்தாலும் இவர்கள் ஒரு சாதியாராக முழுதும் இணைய வாய்ப்பு இல்லாது போயிற்று எனலாம்."

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் அடியோடி, உண்யாத்ரி, பண்டாலர், ஏராடி, வள்ளோடி, நெடுங்காடி

ஆகியனவே சாமந்தர்களின் முக்கிய உட்பிரிவுகளாகத் தரப்பட்டுள்ளன. "உண்யாத்ரிகள் சாமந்தரரின் மற்ற பிரிவினரைவிடத் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர். இவர்கள் பிரிவுச் சிறுமிகளுக்குத் தாலிகட்டில் ஆரியபட்டர் (பிராமணர்) ஒருவர் தாலிகட்டும் வழக்கம் இருப்பதால் இவர்கள் இதுபோலத் தங்களை உயர்வாகக் கருதுகின்றனர். மற்ற பிரிவினருக்குச் சத்திரியரான திருமல்பாடுகளே அதனைச் செய்கின்றனர். அடியோடி என்ற சொல் அடியான், அடிமை என்ற சொற்களின் அடியாகப் பிறந்தது எனச் சில சமயங்களில் கூறுவர். கட்டநாட்டு ராசாவைக் கள்ளிக்கோட்டை சாமோரின் ஒருமுறை நாட்டைவிட்டு விரட்டிவிட அவர் சிரக்கல் ராசாவின் உதவியினை வேண்டினார். அவர் இழந்த நாட்டை கட்டநாட்டு ராசாவிற்கு மீட்டுத்தர அவர் தன் கீழ் சிற்றரசராக இருக்க உடன்பட வேண்டும் எனக் கூறினார் என அடியோடி என்பது பற்றிய ஒரு வழக்கு வரலாறு கூறுகின்றது. திருவாங்கூரில் உண்ணிட்டிரிகள் காணப்படவில்லை. இவர்கள் பழக்கவழக்கங்களிலிருந்து மிகுதியும் வேறுபடாதவர்களான உண்யாத்ரிகளே அங்குக் காணப்படுகின்றனர். உண்ணிட்டிரி என்பது போற்றுதற்குரிய சிறுவன் எனப் பொருள் தருவது. இது சிறப்பைக் குறிக்கும் ஒரு பட்டப் பெயரே. பண்டால என்பது அரசுக் கருவூலத்திற்கு உரிய எனப் பொருள்படுகின்ற பண்டாரத்தில் என்பதிலிருந்து வந்ததாகும். இவர்கள் ஒரு காலத்தில் சிறு வட்டாரங்களுக்கு தலைவர்களாக இருந்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. இவர்கள் வீட்டுப் பெண்கள்கோயிலம்மாமார் எனப்படுவர். எரநாடு, வள்ளோடி, நெடுங்காடி ஆகியன பிரிட்டீசார் ஆட்சியிலிருக்கும் மலபார் பகுதிக்கு உரிய பிரிவுகள். இவர்கள் வாழ்விடமான எரநாடு, வள்ளுவநாடு, நெடுங்காநாடு ஆகிய நிலப்பகுதிகளுக்குரிய பெயர்களை இவர்கள் தங்கள் பிரிவுக்கு உரிய பெயராகப் பெற்றுள்ளனர். கள்ளிக்கோட்டை சாமோரின் எராடி சாதியினைச் சேர்ந்தவரே. (1792 – இல் இணை ஆணையர்கள் கர்டிநாடும் சாமோரியும் ஆட்சிப் பகுதிமேல் உரிமை கொண்டாடும் குடும்பங்கள் – சாமந்த எனப்படும் எரா சாதியைச் சேர்ந்தவை என எழுதியுள்ளன.)* இந்த எராடிகளுள் சிலர் திருமல்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றனர். நீலம்பூர் ராசாவை இதற்குச் சான்றாகக் காட்டலாம். திருமல்பாட்களான இந்த

---

* பார்க்க : மலபார் காலாண்டு ரெவியூ. **II, 4, 1903.**
See : Malabar Quart Review. II, 4,1903.

ராசாக்களிடம் இருக்கும் தனித்த பண்பு என்னவென்றால் இவர்கள் சாதியினைச் சேர்ந்த சிறுமியருக்குத் தாலிகட்டில் இவர்களே தாலியினை கட்டலாம். மற்ற சாமந்தர்களைப் போல இவர்கள் உண்மையிலேயே திருமல்பாட் வகுப்பைச் சேர்ந்தவர்களை அதற்காக அழைக்க வேண்டியதில்லை. சாமந்தருள் பெரும்பாலோர் கர்த்தா என்ற பட்டப்பெயரைத் தரிக்கின்றனர். இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கோயில்பாடுகள் எனப்படுவர். அரண்மனையில் வாழ்வோர் என்பது இதன் நேர்பொருளாகும். மலபாரில் உள்ள மஞ்சேரி, அமரம்பலம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சாமந்தர்களும் திருமல்பாடுகளே. சுண்டம்பட்டி செறுப்புளாச்சேரி ஆகிய இடங்களைச் சேர்ந்த சாமந்தர் கர்தாவுகள் என அழைக்கப்படுகின்றனர். கர்த்தாக்கள், திருமல்பாடுகள் ஆகியோரைச் சூத்திர சாதியார், தம்புரான் என அழைக்கின்றனர். சாமந்தரின் சாதி விவகாரங்களை நம்பூத்ரி வைதிகர்கள் தீர்த்து வைக்கின்றனர். இவர்களுக்குப் புரோகிதம் செய்கின்றவர்கள் நம்பூத்ரிகள். மருமக்கள் தாயம் உடமை உரிமை முறையினைப் பேணும் இவர்கள் தாலிகட்டு, சம்பந்தம் ஆகிய இருவகை மணமுறைகளையும் மேற்கொள்கின்றனர். மிட்டில் எனப்படும் சிறுதாலி, எந்திரம், குழல் ஆகிய சத்திரியருக்குரிய மூன்று அணிகளை இவர்கள் சாதிப் பெண்களும் அணிகின்றனர். இவற்றுள் திருமண அணியான மிட்டிலே குறிப்பிடத்தக்க சிறப்புக்கு உரியது. இது பரசுராமனின் கோடரி வடிவத்தில் அமைந்தது. அண்மைக்காலம் வரை வட்டார ஆட்சித் தலைவர்களாக இருந்து வந்த மற்றும் இருந்து கொண்டிருக்கும் சாமந்தர்களின் இல்லங்கள் கொட்டாரங்கள் அல்லது அரண்மனைகள் என வழங்கப்படுகின்றன. சாதாரண மக்களின் இல்லங்கள் மதங்கள் எனப்படும். மலபாருக்கு உரியவரல்லாதவர்களான அங்கு வந்து குடியேறி வாழும் பிராமணர்களின் இல்லங்கள் மதங்கள் எனவே அழைக்கப்படுகின்றன. சாமந்தர்களுள் பலர் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆண் பெண்களுக்கு அடுத்திருப்போராக பணிபுரிகின்றர். மற்றவர்கள் பண்ணையார்களாக இருந்து வருகின்றனர். சிலர் தொழில் வல்லுநர்களாகப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்." 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சாமந்தர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :- "சாமந்தர்களும் அம்பலவாசிகளும் ஒருவர் வீட்டில் ஒருவர் உண்பதில்லை. பொது விருந்துகளில் இவர்கள் அருகருகே இருந்து உண்பர். பிராமணர்கள், சத்திரியர்கள், நம்பிடிகள், அம்பலவாசியருள்

பெரும்பாலோர் இவர்களிடம் இருந்து தண்ணீர் பெற்றுக் குடிப்பதில்லை. பிறப்பு, சாவு ஆகியவற்றுக்கான தீட்டுக்களைப் பதினொரு நாள்களுக்கு மேற்கொள்கின்றனர்."

சென்னை மாநிலத்திற்கான போர்ப்படைத் துறை சாராத பட்டங்களும் பட்டங்களுக்கு உரியவர்களும் இடம் பெற்றிருக்கும் பட்டியலில் கள்ளிக்கோட்டை சாமோரின், சிரக்கல், கதட்ட நாடு, பாலக்காடு, வள்ளுவநாடு ஆகியவற்றுக்கான வலிய ராசாக்கள் ஆகியோர் தங்களைச் சாமந்தர் எனப் பதிந்து கொண்டுள்ளனர்.

சாமந்தி – Sāmanthi *(Chrysanthemum indicum)*

குருபர், தோகடர் ஆகிய சாதியாருக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். சாமந்தி, கோயில் வழிபாட்டுக்கான மாலைகள் முதலியவற்றில் மிகுதியாக இடம்பெறுகின்றது.

சாமண்திய – Sāmantiya

சாமண்திய பயிர்த் தொழில் கூலிகளும் விறகு வெட்டி விற்போருமான ஒரியச் சாதியார். இச் சாதியார் பெயர் சிந்திக் கிடப்பனவற்றைத் திரட்ட அலைவோர் எனப் பொருள்படும் சாமண்திய என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். தொட்டால் தீட்டுண்டாக்கும் சாதிகளுள் சாமண்தியர் சாதியும் ஒன்றாகையாலே இவர்கள் தனிக் குடியிருப்புகளில் வாழ்கின்றனர்.

சாமண்தியர் அனைவரும் நாகச (நாகம்) கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இவர்கள் சாதித் தலைவன் பேகரா எனப்படுவான். பொரிச்ச என்ற உதவி அலுவலனும் இவனுக்கு உள்ளான். தொகர என்ற சாதிப் பணியாளன் ஒருவனும் உள்ளான். பொதானொ என்பது சாதியாருக்கு உரிய பட்டப்பெயர். இதனையே அடிக்கடி சாதிக்குரிய பெயராகவும் கூறிக் கொள்வர்.

சாமண்தியர் சாதிப் பெண்கள் பிராமணர்களும் பிற சாதியாரும் தயாரித்த உணவை உண்ணமாட்டார்கள். பயணம் மேற்கொள்ளும் சமயங்களில் வெட்டவெளிகளில் அடுப்பு மூட்டிச் சமைக்க விரும்பாத இச்

சாதிப் பெண்கள் இப்பணியினை ஆண்கள் தலையில் சுமத்திவிடுகின்றனர். ஒரியப் பிராமணப் புரோகிதனே இவர்கள் திருமணச் சடங்கினை நடத்தி வைக்கிறான். ஒரிய மணமுறையினை ஒட்டி அமைந்த இதில் சிற்சில மாற்றங்களே இடம் பெறுகின்றன. திருமணப் பந்தலைத் தென்னோலை, நாவல் இலைக் கொத்துக்கள், இலந்தை இலைக் கொத்துக்கள் ஆகியன கொண்டு இடுவர். திருமணச் சடங்கு முடியும்வரை மணமேடையில் நான்கு விளக்குகளையும் ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும் வைத்திருப்பர். மணமக்கள் ஆடைகளைச் சேர்த்து முடியும் முடிச்சு மணநாளன்று மாலையிலேயே அவிழ்க்கப்படும். பல ஒரிய சாதிகளில் இதனை ஏழாம் நாளன்றே அவிழ்ப்பர்.

சாமண்டொ – Sāmanto

சாடபு மற்றும் உரியச் சாதியாருக்கான ஒரு பட்டப்பெயர்.

சமய – Samaya

'மைசூரில் உள்ள சிரவண பௌகுளாக் கல்வெட்டுக்கள்' என்ற கட்டுரையில் திரு.லூயிஸ் ரைஸ் சமய என்ற சாதி பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார் :- "இவர்கள் தாசரிகளான வைணவ இரவலர்கள். ஒழுக்கம் தவறுபவர்களைத் தண்டிக்கும் உரிமை பெற்றுள்ள இவர்களுக்கு உரிய கட்டணம் செலுத்தி அனுமதி பெற்ற பிறகே சமய விழாக்கள், திருமணச் சடங்குகள் முதலியனவற்றை நடத்தலாம். முந்தைய அரசர்களின் ஆட்சியின் கீழ் எல்லாப் பெரிய நகரங்களிலும் இத்தகைய சமயியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு, இவர்கள் வசூலிக்கும் கட்டணம் சமய ஆசாரம் எனப் பொதுக் கணக்கில் பதியப்பட்டு வந்துள்ளது. தவறான நடத்தையில் ஈடுபட்ட பெண்களை விற்பதன் மூலம் அல்லது அவர்களுக்குத் தண்டத்தொகை விதிப்பதன் மூலம் இந்தக் கணக்கில் நல்ல தொகைகள் சேர்ந்துள்ளன. இத்தகைய அப்பாவிப் பெண்கள் சர்க்கார் மனைவியர் என அழைக்கப்பட்டனர்." இந்த ஒறுப்புமுறை பற்றி வில்க்ஸ் எழுதுவது* பின்வருமாறு :- "இதற்கான விதிமுறைகள் சாதிக்குச் சாதி வேறுபடுகின்றன. பிராமணர்களும் கோமட்டிகளும் நடத்தை தவறும் தங்கள் சாதிப் பெண்களை விற்பதில்லை. மாறாக அவர்களைச் சாதி விலக்கம் செய்து,

* தென்னிந்தியா பற்றியான வரலாற்றுக் குறிப்புகள் – மைசூர்.
(Historical Sketches of the South of India - Mysore.)

அவர்கள் கைகளில் பரத்தையர் ஆகிவிட்டனர் என்பதற்கான அடையாள முத்திரை இடுவர். அதன்பின் அவர்கள் இஜார்தாருக் (ஒப்பந்தக்காரர்) இறக்கும்வரை ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தி வரவேண்டும். அவர்கள் இறந்தபின் அவர்களுடைய உடமைகள் அனைத்தும் அவரையே சேரும். பிற இந்து சாதிகளைச் சேர்ந்த பெண்களை இஜார்தார் எத்தகைய கழிவிரக்கமும் காட்டாதவனாக விற்றுவிடுவான். அவனுடைய விருப்பப்படி அவளுக்காகக் குறிப்பிட்ட தொகையினை அவள் உறவினர்கள் யாரேனும் தர முன்வந்தால் அவ்வாறு விற்கப்படுவதினின்றும் அவளைக் காக்கலாம். இத்தகைய விற்பனையே எத்தகைய ஒளிவு மறைவுமின்றி வெளிப்படையாகவே நிகழ்த்தி வந்தனர். பெங்களூர் போன்ற பெரிய நகரத்தில் அங்கு ஐரோப்பியர்கள் குடியிருக்கும் பகுதியிலேயே இத்தகைய அவலத்துக்கு உள்ளாகும் பெண்களைத் தங்க வைப்பதற்கென ஒரு பெரிய கட்டிடத்தை ஏற்பாடு செய்திருந்தனர். அண்மையில் **1833**–இல் தான் நகர ஆணையர் இதற்காகவென்றே தனித்ததொரு ஆணையினைப் பிறப்பித்து இத்தகைய வெறுக்கத்தக்க விற்பனையை ஒடுக்க வேண்டியதாயிற்று."

சமயமுவாரு – Samayamuvāru

சாலே சாதியாரோடு இணைக்கப்பட்ட ஊர்ஊராகச் சென்று இரக்கும் சாதியார். திரு.சி.ஹயவதனராவ் குறிப்பு ஒன்றின்படி இச்சாதியார் தங்களுடைய பெயர் இரண சமயமுவாரு (போர் நிகழ்ந்த காலத்து வாழ்ந்தவர்) என்பதன் சுருங்கிய வடிவம்எனக் கூறிக்கொள்வதாக அறிகின்றேன். சாலே சாதியினைக் காப்பாற்றிய முனிவரான பாவன ரிஷி காலவாசின என்ற அரக்கனை எதிர்த்துப் போரிட்ட சமயத்தில் படைக்கப்பட்டவர்கள் இவர்கள் எனவும் இவர்களுடைய உதவியால் அவர் அந்தஅரக்கனை வென்றார் எனவும் ஒரு கதை வழங்குகின்றது. இந்த உதவிக்கு நன்றி பாராட்டும் வகையில் பாவனரிஷி சாலேகளிடம் இவர்களைக் காப்பாற்றி வருமாறு பணித்தார். தனித்தனி குடும்பங்களாக இவர்கள் ஊர்விட்டு ஊர் செல்வர். ஒரு ஊரை அடைந்தவுடன் உரிய ஆடைகள் புனைந்து ஊர்த் தலைவனான பெத்த சேனாபதியிடம் சென்று சேர்வர். அவர் அன்றைக்கு அவர்களுக்கு உணவளிப்பதோடு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்ற குறிப்பினைக் கொண்ட ஒரு சீட்டையும் தருவார். சாலே இல்லங்களுக்குச் செல்லும் இவர்கள் பாவன ரிஷியினைப் புகழ்ந்து

பாடுவர். சாலேயர் முன்னிலையில் அவர்களுடைய உதவி பெற்று மணம் செய்துகொள்வர்.

சாம்பன் – Sāmban

சிவன் எனப் பொருள்படும் சாம்பன், சாம்ப என்பன இடையர், பறையர் சாதிக்கு உரிய உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. கணக்கெடுப்பின்போது சாம்புணிகாபு என்பதனைத் தங்கள் சாதிப் பெயராக நெல்லூரைச் சேர்ந்த பள்ளெ மீனவர்கள் சிலர் பதிந்துள்ளனர்.

சம்பந்தம் – Sambandam

தொடர்பு என்பதே சம்பந்தம் என்பதன் நேர்பொருளாகும். "இச்சொல் தென் மலபாரைச் சேர்ந்த நாயர்களும் பிற சாதியினருமான ஆண் பெண்கள் தங்களுக்குள் திருமணம் போன்றதொரு உறவினை ஏற்படுத்திக் கொண்டவர்களாக தொடர்பு கொண்டு வருதலைக் குறிக்கும்"* 1896 – ஆம் ஆண்டு சென்னைச் சட்டப்படி சம்பந்தம் "ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்களுக்குள் ஓர் உடன்படிக்கையினை மேற்கொண்டவர்களாக தாங்கள் சேர்ந்துள்ள சமூகத்தின் வழக்கத்திற்குக் கட்டுப்பட்டுக் கணவன் மனைவியராக ஒருவரோடு ஒருவர் உடல் உறவு கொண்டு வாழ்ந்து வருதல்" ஆகும்.

சாமை – Sāmē *(Panicum miliare)*

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

சாமிபுலி – Sāmipuli *(holy tiger)*

கள்ளர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

சம்மட்டி மக்கள் – Sammathi makkal *(hammer men)*

கள்ளர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு பிரிவு.

சம்மேராய – Sammērāya

லிங்காயத மடங்களின் தலைவர்களின் பணியாளராகவும் செய்தி சொல்வோராகவும் அமர்த்தப்பட்டுள்ள தெலுங்கு ஏவலர்களுக்கான பெயர். கட்டுப்பட்டிருத்தல் எனப் பொருள்தரும் சம்மே என்ற சொல்லிலிருந்து வந்தது இப்பெயர். லிங்காயதர் விதித்துள்ள விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களைக் குறிப்பது இது.

---

* மூர் – மலபார் சட்டமும் வழக்கமும். 1905. *(Moore-Malabar law and custom - 1905.)*

சாமொலொ – Sāmolo

தொழுவருக்கான ஒரு பட்டப் பெயர்.

சம்பிகெ – Sampigē

குர்னி, ஒட்டே சாதிகளுக்கு உரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலமாகச் சம்பங்கி (***Michelia champaca***) பதியப்பட்டுள்ளது. சண்பக மலர்கள் கோயில்களுக்கான மாலை கட்டப் பயன்படுத்தப்படுகிறது.

சமுத்திர – Samudra

கடல் எனப் பொருள்படும் சமுத்திர, சமுத்திரம், சமுத்திராளர் என்பன தெலுங்கு பிராமணர், குறவர், குருபர், பலிசர், மாலர் சாதிகளுக்கு உரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயராகப பதியப்பட்டுள்ளது. இதற்குச் சமமான சமுத்ரி என்ற பட்டப்பெயர் கள்ளிக்கோட்டை சாமோரினுக்கு உரியது. கடலை ஆள்பவன் என்ற பொருளில் இது வழங்குகின்றது.

சானி – Sāni

சானிவாளு தெலுங்கு நாட்டியக்காரிகள். விசாகபட்டினம் கையேட்டில் திருமணம் உறவு ஏதும் ஏற்படுத்திக் கொள்ளாதவர்களாகப் பரத்தையராகத் தொழில் புரிந்தும் விருந்துகளில் நாட்டியம் ஆடியும் பொருளீட்டுவோர் எனக் கூறப்பட்டுள்ளது. பூரியில் இருந்து அரசாண்ட அரசருக்கு அவருடைய காமக் கிழத்திகள் வழிப் பிறந்த கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரிய தொழுவருக்கு உரிய பட்டப்பெயராகவும் இது உள்ளது. கஞ்சத்தில் சானிகள் வாழும் தெருக்கள் சானி வீதி எனப்படும். இந்தப் பெயருக்கு ஏற்பட்டுள்ள இழிவு காரணமாகக் கிறித்தவ சமயத் தொண்டர்கள் தங்கள் வீட்டுப் பெண்களை வழக்கமான துரைசானி என்று அழைக்காமல் அம்மாவாரு என அழைக்க வேண்டும் என்று வற்புறுத்தியதாக நான் கேள்விப்பட்டுள்ளேன்.

கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த சானிகளைப் பற்றி ஒரு குறிப்பில் திரு.எப்.ஆர்.ஹெமிங்வே பின்வருமாறு எழுதியுள்ளார் :– "இம் மாவட்டத்தில் நாட்டிய மகளிரும் பரத்தையரும் நன்கு வேறுபாடு புலப்படும்படியான ஆறு சாதியினராக உள்ளனர். அவற்றிடையே குழப்பம் நிகழ்வதற்கான ஆபத்தும் உள்ளது. சானி, போகம், தொம்மரசானி,

துருக்கசானி, மங்களபோகம், மாதிக போகம் என்பனவே அந்த ஆறு சாதிப் பிரிவுகள். இவர்களுள் போகங்களே தங்களை உயர்ந்தவர்களாகக் கூறிக்கொள்கின்றனர். மற்ற பிரிவினர் முன்னிலையுறும் மற்ற பிரிவினர் நாட்டிய நிகழ்ச்சி நடத்திய பின்னும் இவர்கள் தங்கள் நிகழ்ச்சியினை நடத்த ஒப்புவதில்லை. இதனைச் சானிகள் ஏற்றுக் கொள்வதில்லையாயினும் போகங்களில் நாட்டிய நிகழ்ச்சிக்குப் பிறகு தங்கள் நிகழ்ச்சியினை நடத்த இவர்கள் தடையேதும் கூறுவதில்லை. மற்ற அனைத்துப் பிரிவினரும் சானி, போகம் பிரிவினருக்குத் தாழ்ந்தவர்களே. சானிகள் பிற பிரிவு நாட்டிய சாதியாருடன் உண்ண உடன்படுவதில்லை. சானிப் பிரிவுப் பெண்கள் அனைவரும் தங்கள் பரம்பரைத் தொழிலில் ஈடுபடுவதில்லை. சிலர் தங்கள் சாதியினைச் சேர்ந்த ஆண்களை மணந்து கொண்டு குடும்ப பெண்களாக வாழ்ந்து வருகின்றனர். தென் பகுதிகளில் நாட்டிய மகளிரின் சாதியினைச் சேர்ந்த ஆண்கள் ஆடல்பாடல்களில் பெண்களுக்குத் துணையாக உதவுவதைப் போல சானி சாதியினைச் சேர்ந்த ஆண்கள் உதவுவதில்லை. மாறாக இவர்கள் பயிரிடுதல், சிறு வாணிபம் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். தென் பகுதி நாட்டிய மகளிரைப் போலவே சானி சாதியினரும் வேறு சாதிகளிலிருந்து பெண்களைத் தத்து எடுத்துக் கொண்டவர்களாகத் தங்கள் எண்ணிக்கை குறையாமல் பார்த்துக் கொள்கின்றனர். கோயில்களில் இவர்கள் பணி செய்து வந்தாலும் தமிழ் நாட்டில் வழக்கில் இருப்பதைப்போல இவர்களைக் கோயிலுக்கு நேர்ந்து விடுதலோ தெய்வத்திற்குத் திருமணம் செய்து வைத்தலோ வழக்கில் இல்லை. பரத்தையராகத் தொழில் மேற்கொள்ள உள்ளவர்கள் முதலில் ஒரு வாளுக்கு மணம் செய்விக்கப்படுகின்றனர்."

மாட்டுச் சாணம் எனப் பொருள்படும் சாணி என்பது தமிழ் அகமுடையார் சாதியின் ஓர் உட்பிரிவாக உள்ளது.

சஞ்ஜோகி – Sanjōgi

சமயத் துறை சார்ந்த ஒரிய இரவலர் வகுப்பார். பூணூல் அணிந்து கொள்ளும் இவர்கள் பாணொக்கள் முதலிய தாழ்ந்த சாதியாருக்குப் புரோகிதம் செய்கின்றனர். இப்பெயர் தொடர்பு (சங்கிலி) எனப் பொருள்படுவதாகும். இது உலக இன்பங்களைத் துறந்த

சந்நியாசிகளுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே சங்கிலியாக இருப்பவர்கள் என்பதைக் குறிக்கும். சஞ்ஜோகிகளுள் இல்லறம், துறவறம் ஆகிய இருநெறிகளையும் பின்பற்றுபவர்கள் உள்ளனர். திரு.ஜி.ராமமூர்த்தி பந்துலு சந்நியாசிகள் துறவற நெறியினைக் கைவிட்டவர்களாகப் பெண்களோடு சேர்ந்து வாழ்ந்து வந்த காலத்தில் பிறந்தவர்கள் இவர்கள் என எனக்குத் தெரிவித்து உள்ளார். இவர்கள் துளசிப் (***Ocimum Sanctum***) பாசிமணி மாலைகளைத் தயாரித்து விற்று வருகின்றனர். அதனை ஒரியச் சாதியார் பலரும் வாங்கி அணிகின்றனர். இவர்களுள் சிலர் பயிரிடுவோராக இருக்க மற்றவர்கள் பிச்சை எடுத்தே பிழைப்பு நடத்துகின்றனர். சஞ்ஜோகி இரவலன் தொடையில் ஒரு மணியினைக் கட்டியவனாக வண்ணம் பூசப்பட்ட பானையினை இடத் தோளில் சுமந்தபடி வீடுவீடாகப் பிச்சை கேட்டுச் செல்வான். இவர்களுள் சிலர் ஒரியருக்கான சமய நிலையங்களில் பணியில் அமர்ந்துள்ளனர். பைராகிகளையும் துறவிகளையும் அங்கு நடக்கும் விருந்துக்கு அழைப்பதும் அவர்கள் உண்டபின் எஞ்சியதை உண்டவர்களாக எச்சில் இலைகளை எடுப்பதும் இவர்கள் பணியாகும்.

சங்காதி – Sankāti *(ragi or millet pudding)*

போயர்கள் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். அரிசி உணவு உண்ண வசதியற்ற ஏழைகளின் அன்றாட உணவு ராகி ஆகும்.

சங்கு – Sanku

சங்கு (*Turbinella rapa*) தாசரிகள், கொப்பல வெலமர் சாவுச் சடங்கில் சங்கு ஊதும் பறையர் ஆகிய சாதிகளின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலமாகவும் இது உள்ளது. சங்கு கட்டி என்பது – சங்கு அணிபவர்கள் – இடையர்களின் ஓர் உட்பிரிவும் ஆகும். தூத்துக்குடியில் சங்கு எடுப்பவர்கள் கடலில் மூழ்கி எடுக்கும் சங்குகளை இந்துக்கள் மிகுந்த மதிப்பு வாய்ந்ததாகப் போற்றுகின்றனர். இச்சங்குகள் அபிடேகம் செய்யவும், கோயிலில் நடைபெறும் பூசைகள், திருமணம் முதலான சடங்குகளில் ஊதவும் பயன்படுத்தப்படுகின்றன. வைணவர்களும், மாத்வர்களும் சங்கு முத்திரை பொறித்துக் கொள்கின்றனர். அருமையாகக் கிடைப்பதான வலம்புரிச் சங்கு மிகுந்த மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுவதோடு பெருந்தொகை கொடுத்தும் விலைக்கு

வாங்கப்படுகின்றது. பால்டெய்ஸ் அவர்கள் பதிந்துள்ள ஒரு பழங்கதை வருமாறு :- "கருடன் பிரமனிடம் விரைந்து சென்று வலம்புரிச் சங்கினைக் கிருட்டிண பகவானிடம் கொண்டுவந்து சேர்த்தது. அத்தகைய சங்கு திருவாங்கூர் அரசர் வெளியிடும் நாணயங்களில் இடம்பெற்றிருப்பதோடு கொச்சி அரசரின் மேலங்கியில் மரபுரிமைச் சின்னமாகவும் பொறிக்கப்பட்டுள்ளது.

சன்னொ - Sanno (little)

பொட்டாடர், ஓமன்டைட்டொ, பெண்டிர், சொண்டி ஆகிய சாதியாரின் உட்பிரிவுகளின் பெயர். சிறிய என்னும் பொருள்படுவது.

சன்றோர் - Sanror

சாணருக்கான மற்றுமொரு பெயர். இவர்கள் சாணான் என்ற பெயர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த சான்றோர் என்ற சொல்லிலிருந்து வந்தது எனக் கூறிக் கொள்வர்.

சண்டாரசி - Santārasi

தண்டாசியரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். இக் குலத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பெயருடைய கோரையாலான பாயினைப் பயன்படுத்த மாட்டார்கள்.

சந்தை - Santha (a fair)

தேவாங்கர், ஒட்டேகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

சாண்டொ - Sānto

ஒரியப் பிராமணர்கள், பாயிபுவொ சாதியாரின் உட்பிரிவு ஒன்றுக்கான பெயர்.

சந்நியாசி - Sanyāsi

"அனைத்தையும் துறந்தவன் என்பதே இதன் நேர்பொருள். உலகப்பற்றுக்களை விட்டொழித்து மணவாழ்க்கையினை மேற்கொள்ளாது சமயநெறியில் ஈடுபாடு கொண்டவனாக சமய சாஸ்திரங்களைக் கற்றபடி இருப்பவனே சந்நியாசியாவான். பக்தி நெறியில் மேம்பட்டவனாக உயர்ந்துவிடும் இவன் சாதி, சமயக் கட்டுப்பாடுகளையும் சடங்கு நெறிகளையும் கடந்தவன். உயர்ந்த ஆச்சிரமங்கள் மூன்றின் வழி நிற்பவர்கள் அடைய வேண்டிய நான்காவது

ஆச்சிரமத்தினை மேற்கொண்டவன் (காட்டினை அடைந்து மூன்றாம் ஆச்சிரமத்திற்கு உரிய சமயச் சடங்குகளை நிகழ்த்தித் தன் புலன்களில் அவாவினை முற்றும் அறுத்தவானக ஒருவன் சந்நியாச ஆச்சிரமமான நான்காவது ஆச்சிரமத்தை மேற்கொள்ளட்டும்.*) பிராமணர்களுள் சந்நியாசிகள் ஒரு சிலரே. இவர்களும் பெரும்பாலும் பிராமணர்களின் பல உட்பிரிவுகளுக்கும் குலங்களுக்கும் குல குருவாக இருப்பவர்களே. இவ;ர்கள் பொதுவாகக் கற்றறிந்தவர்களாகவும் சமய மடங்களின் தலைவர்களாகவும் இருக்கின்றனர். அங்கு இவர்களுக்குக் கீழே பல சீடர்கள் சமயநெறி சார்ந்த நூல்களைக் கற்றவர்களாகவும் சமயத்துறை சார்ந்த விவாதங்களில் ஈடுபட்டவராகவும் இருப்பர். அறக்கட்டளைகள் மற்றும் சமய நிலையத்தைச் சீடர்களின் கொடைகள் ஆகியவற்றின் வழிபெறும் பொருள்களைக் கொண்டே இந்த நிலையங்கள் இயங்கி வருகின்றன. தங்களைப் பின்பற்றுபவர்கள் தரும் காணிக்கையினைப் பெற இச் சந்நியாசிகள் அவ்வப்போது சுற்றுப் பயணங்கள் மேற்கொள்வர். சந்நியாசிகள் எல்லாப் பாவங்களிலிருந்து விடுபட்டவர்களாகவும் வீடுபேற்றுக்கான தகுதியைப் பெற்றவர்களாகவும் உள்ள காரணத்தால் இவர்கள் சந்நியாசம் மேற்கொள்ளுமுன் பெற்றுக்கொண்ட பிள்ளைகள் இவர்களுக்கானச் சிரார்த்த சடங்குகளைச் செய்ய வேண்டியதில்லை. (சந்நியாசி வீடுபேறு உற்றான் என்பதனை உறுதிபடுத்தும் வகையில் அவனுடைய மண்டையோடு அவன் இறந்தபின் பிளக்கப்படுகிறது. பார்க்க : கோசாயி) சந்நியாசியின் உடல் புதைக்கப்படும் அல்லது எறியப்படும். அதனை ஒருபோதும் எரித்தல் இல்லை.

"சந்நியாசிகள் எனக் கூறிக்கொள்வோருள் பெரும்பாலானவர்கள் சூத்திரர்களான பக்தர்களே. இவர்கள் தெய்வத்தன்மை வாய்க்கப் பெற்றவர்களாக நடந்தபடி இரந்து திரிவர். செங்காவியில் தோய்த்த ஆடைகளைப் புனையும் இவர்கள் முடியினை வளரவிடுவர். தங்குவதற்கென பெரும்பாலும் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுள்ள இவர்கள் ஊர்களைச் சுற்றித் திரியவும் செய்கின்றனர். இவர்களுள் பலர் மணம் செய்து கொண்டவர்களாகக் குழந்தைகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். இவர்களின் பிள்ளைகள் பின்னர் இவர்கள் மேற்கொண்ட இந்தத் தொழிலையே பின்பற்றத் தொடங்குவர். "X

* மனு. ***(Manu)***

X மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை, 1891, 1901..
(Mysore Census Report. 1891, 1901.)

சபிரி – Sapiri

ரெல்லிகளுக்கான மற்றுமொரு பெயர்.

சப்பிலிகர் – Sappliga

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்கள், "தென் கன்னடத்தைச் சேர்ந்த சில மாவட்டங்களில் காணிகர்களாகவோ அல்லது காணிகர்களின் ஓர் உட்பிரிவினராகவோ கூறப்பட்டுள்ளனர்." காணிகர் கன்னடம் பேசும் எண்ணெய் செக்கு ஆட்டுவோர். தென் கன்னட மாவட்டக் கையேட்டில் சப்பிலிகர் தேவாடிகளி(கோயில்களைச் சேர்ந்த இசைவாணர்)லிருந்தும் வேறானவர்களாகத் தெரியவில்லை. சப்பல் (சப்தம்) என்ற பெயர் சுட்டுவதை வைத்துப் பார்க்கும்போது இவர்கள் கோயில்களில் இசைவாணர்களாக இருப்பவர்கள் என்றே தெரிகின்றது. எனினும் இவர்களுள் பலர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்களாக உள்ளனர்." சப்பலிக தொழில் தொடர்பானதொரு பெயர். துளு மோகெர்களான மீனவர்களிடையே சப்பிலிகர் என்ற இசைவாணர் பிரிவினர் உள்ளனர். இவர்களிடையேயும் எண்ணெய் ஆட்டும் தொழிலை மேற்கொண்டுள்ள மோகெர்கள் காணிகர் என்றே அழைக்கப்படுகின்றனர். இவை இரண்டும் தொழில் தொடர்பான பெயர்கள்.

சர – Sara (thread)

குர்னிகளின் ஒரு கோத்திரம். சரடு எனப் பொருள்படும்.

சருகு – Sarugu (dried or withered leaves)

வலையன்களின் ஓர் உட்பிரிவு.

சரங்குலு – Sarangulu

நெல்லூர் மாவட்டத்தில் இச் சாதியார் மாலுமிகள் எனப் பதியப்பட்டுள்ளனர். இப்பெயர் செரங் என்பதற்குச் சமமானது என்பதில் ஐயமில்லை. "செரங் என்ற சொல் உள்ளூர்க் கல நாயகனைக் குறிக்கும் அல்லது கலத்தில் பணிபுரிவோருக்குத் தலைவனையும் கலங்களின் தலைவனையும் குறிப்பதாகலாம்" எனக் கூறப்பட்டுள்ளது.*

---

* யேலும்–பர்னலும்–ஹாப்சன்–ஜாப்சன். *(Yule and Burnell Hobson and Jobson.)*

சரட்டு – Sarattu (sacred thread)

கணக்கன் சாதியாரின் உட்பிரிவு. இவர்கள் பூணூல் அணிகின்றனர்.

சாராயி – Sārāyi (alcholic liquor)

பலிசரின் ஓர் உட்பிரிவு. சாராயம் எனப் பொருள்படும்.

சரிகை – Sārigē (lace)

மைசூரைச் சேர்ந்த சரிகை இழை தயாரிப்போருக்கான பெயர். குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயருமாகும்.

சாஸ்திரி – Sāstri

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் "சாஸ்திரி என்பவன் யார் (சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவன்) என்பதனை உறுதிப்பட விளக்க இயலவில்லை. சென்னை மாநிலத்தில் ஸ்மார்த்த பிராமணர்கள் இதனைத் தங்கள் பட்டப்பெயராகத் தரிக்கின்றனர். பம்பாயிலிருந்து வந்து குடியயேறியவர்கள் சிலர் இப்பட்டத்தைத் தரித்தவர்களாக உள்ளனர். ஆனால் அவர்கள் பிராமணர்கள் அல்லர்." எனது குறிப்புகளில் சாஸ்திரி என்பது தேவாங்கரின் பட்டப் பெயர்களுள் ஒன்றாகவும் பதியப்பட்டுள்ளது.

சாத்தானி – Sātāni

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சாத்தானியர் பற்றிப் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. "இவர்கள் வங்காளத்தைச் சேர்ந்த மாலிகளை ஒத்த கோயில் பணியாளர் வகுப்பார். சாத்தானி என்பது சாத்தாதவன் என்பதன் சிதைந்த வடிவமாகும். இதன் நேர்பொருள் பூணூல் அணிந்து குடுமி வைத்துக் கொள்ளாதவன் என்பதாகும். கோயில் பணியாளர்களை இராமானுசர் சாத்தியவன், சாத்தாதவன் என இரு பிரிவினராக ஏற்பாடு செய்துள்ளார். முன்னவர்கள் பெரும்பாலும் பிராமணர்களாகவே இருப்பர். பின்னவர் சூத்திரர்கள். சாத்தானி என்பது தொழில் முறையில் வைணவ சமயத்தினைச் சேர்ந்தவர்களுக்கு உரியதான பெயரென இதிலிருந்து புலனாகின்றது. சென்னை மாநிலத்தைச் சேர்ந்த சாத்தானியர் 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வங்காளத்தைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதியான சைதன்யரைப் பின்பற்றுபவர்கள் எனச் சிலர்

கூறுகின்றனர். இவ்வாறு கருதுபவர்கள் சாத்தானி, சைதன்யர் என்ற இரு பெயர்களுக்குமிடையே உள்ள ஒற்றுமையை மட்டும் வைத்து இவ்வாறு கூறுகின்றார்களேயன்றி அவ்வாறு கொள்ள வேறு ஆதாரங்கள் எவையுமில்லை என நான் உறுதிபடக் கூறமுடியும். திராவிட நாட்டில் சைதன்யர் தன் கொள்கைகளைப் பரப்பினார் எனக் கூற எத்தகைய ஆதாரமும் இல்லை. சைதன்யரைப் பின்பற்றுபவர்கள் கிருஷ்ண பக்தர்கள். சாத்தானியர் நாராயணனைப் போற்றி வழிபடுபவர்கள். சைதன்யரைப் பின்பற்றுபவர்கள் அவரிடம் கொண்டிருந்த அதே அளவு பக்தியினை இராமானுசரைப் பின்பற்றுபவர்கள் இராமானுசரிடமும் கொண்டுள்ளனர். சைதன்யரின் சீடர்கள் அவரைக் கிருஷ்ணன் மறு அவதாரம் எனக் கூறுவர். சமய நெறியைப் பொறுத்வரை சாத்தானியர் தென்கலை வைணவர்கள். தங்கள் தலையை முழுக்க மழித்துக் கொள்ளும் இவர்கள் திருமணம் ஆகாத பிராமணர்களைப் போல இடுப்பில் வேட்டி அணிவர். சடங்குகளைப் பொறுத்தவரை பிராமணர்கள் நெறியினைப் பின்பற்றும் இவர்கள் பூணூல் மட்டும் அணிந்து கொள்வதில்லை. போதை தரும் மதுவகைகளும் ஊன் உணவும் இவர்களுக்கு விலக்கப்பட்டிருந்தாலும் விருந்து, சிரார்த்தம் முதலானவற்றின்போது அவற்றை தாராளமாகவே இவர்கள் பயன்படுத்துகின்றனர். அப்பொழுது எல்லை மீறியவர்களாகப் போதைக்கு ஆட்படுவர். சாத்தானியரிடையே இறந்தவரைப் புதைப்பதும் எரிப்பதுமான இருவகை வழக்குகளும் உள்ளன. மாலைகள் புனைவதும் தெய்வங்களின் ஊர்வலத்தில் தீவட்டி தூக்கிச் செல்வதும் – கோயிலைக் கூட்டித் துப்புரவுச் செய்வதுமே சாத்தானியர் மேற்கொள்ளும் முக்கிய பணிகள், குடைகள், பூக்குடலைகள், பனையோலை பெட்டிகள், நாமக்கட்டி செய்யப் பயன்படுத்தும் வெள்ளைக் களிமண் உருண்டைகள், குங்குமம் ஆகியனவற்றை இவர்கள் தயாரிக்கின்றனர்.

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சாத்தானியர் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளதாவது :– "கோயில் பணியாளர்களான தெலுங்குச் சாதியாரான இவர்கள் வைணவ சமய சீர்திருத்தவாதியான இராமானுசர் காலத்தில் கி.பி.1100 அளவில் தோன்றிய சாதியாராதல் வேண்டும். இச்சாதியில் நான்கு அகமணக்கட்டுப்பாடு உடைய பிரிவுகள் உள்ளன. அவை (1) ஏகாட்சரி, (2) சதுராட்சரி, (3) அஷ்டாட்சரி, (4) குலசேகர என்பனவாம்.

சக்திவாய்ந்தது எனக் கருதப்படும் ஓம் என்ற ஒரே அட்சரத்தை உச்சரித்தே வீடுபேறும் பேரின்பமும் அடைய முடியும் என ஏகாட்சரியர் நம்புகின்றனர். சதுராட்சியர் இரா–மா–னு–சா என்ற நான்கு அட்சரங்களே தங்களுக்குச் சமயத்துறை சார்ந்த அனைத்துப் பேறுகளையும் தரக்கூடியது என நம்புகின்றனர். அஷ்டாட்சாரிகள் ஓம்–ந–மொ–நா–ரா–ய–ணா–ய (நாராயணனுக்கு எங்கள் வணக்கம்) என்ற அஷ்டாட்சரத்தை ஓதுவதின் மூலமே பேரின்ப வீடு பெறலாம் என நம்புபவர்கள். பூணூல் அணியும் குலசேகரர் பிரிவினைச் சேர்ந்தவர்கள் முன்பு கேரளத்தின் அரசராயிருந்த வைணவ ஆழ்வாரின் சந்ததியினர் எனக் கூறிக் கொள்பவர்கள். முதல் இரு பிரிவினரும் குடைகள், மாலைகள் முதலியன தயாரித்தும், பலிசர் முதலிய வைணவ சமயம் சார்ந்த சூத்திர சாதியாருக்குப் புரோகிதம் பார்த்தும் வாழ்க்கை நடத்துகின்றனர். எஞ்சிய இரு பிரிவினரும் கோயில்களில் பணியாளர்களாக வைணவப் பிரிவினரையே பின்பற்றுகின்றனர். பூப்படைந்த பின் சிறுமியருக்கு மணம் செய்வித்தலும் கைம்பெண்கள் மறுமணமும் அடியோடு விலக்கப்பட்டனவாகும். சடங்குகளை நடத்தப் பிராமணப் புரோகிதர்களையே பெரும்பாலும் அமர்த்தி வரும் இவர்கள் தற்போது தங்கள் சாதிக்குள்ளாகவே பிராமணர்களை ஏற்பாடு செய்து கொள்கின்றனர். வடமொழி வேதங்களுக்கும் சடங்கு நெறிகளுக்கும் இவர்கள் முக்கியத்துவம் தராதவர்களாகப் பன்னிரு வைணவ ஆழ்வார்களின் பாசுரங்களின் தொகுப்பான தமிழ் வேதமான நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தினையே தங்கள் புனித நூலாகப் போற்றி மதிக்கின்றனர். திருமணங்களின்போதும் பிற சடங்குகளின்போதும் இவர்களுக்குப் புரோகிதம் செய்வோர் இந்தப் புனித நூலிலிருந்தே பாசுரங்களை ஓதுகின்றனர்." 1901 கணக்கெடுப்பின்போது இராமானுச என்பது சாத்தானி சாதியின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு.எச்.எ.ஸ்டுவர்ட் சாத்தானியர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :– "அவ்வப்போது வேறு சாதிகளிலிருந்து தெரிந்தெடுத்துச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களைக் கொண்ட ஒரு கலப்பு சாதி இது. பறையர், தோலில் பணி புரிவோர், முகமதியர்கள் ஆகியோரை இச் சாதியினர் அதுபோலச் சேர்த்துக் கொள்வதில்லை. வைணவர்களான சாத்தானியர் பாஷ்யக் காரரை (இராமானுசரையே) யே சிறப்பாகப் போற்றி வழிபடுகின்றனர். இவர்கள் அவரை விட்டுணுவின் அவதாரம் எனக் கருதுகின்றனர். சாத்தானியர் பெரிய நகரங்களில்

மட்டுமே காணப்படுகின்றனர். வைணவக் கோயில்களில்தொண்டு புரிதல், மாலைகள் கட்டி விற்றல், விசிறிகள் செய்தல், சந்தனப் பொடி தயாரித்தல், வாசனைப் பொருள்கள் விற்றல் ஆகியனவற்றை மேற்கொண்டவர்களாக இவர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். சைவப் பண்டாரங்களை ஒப்ப இவர்களும் சூத்திர சாதியார் சிலருக்குப் புரோகிதம் செய்கின்றனர்."

1871 கணக்கெடுப்பு அறிக்கையில் சாத்தானியர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :- "பெரும்பாலும் சமயநெறி சார்ந்த இரவலர்களாக உள்ள இவர்கள் சிறு தெய்வங்களின் கோயில்களில் பூசாரிகளாகவும், பிரபந்தம் ஓதுவோராகவும், தெய்வங்களுக்குரிய மலர் மாலைகள் விற்போராகவும் வாழ்க்கை நடத்துகின்றனர். பிற உயர்ந்த சாதிகளிலிருந்து சாதிவிலக்கம் பெற்றவர்களை இவர்கள் தங்கள் சாதியில் சேர்த்துக் கொள்கின்றனர். இந்துக்களிடையே மதிப்பு வாய்ந்த சாதியாகக் கருதப்படும் இச்சாதியில் பரத்தையர் பலரும் சேர்ந்து கொண்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கட்டணமாகச் செலுத்திச் சமயத்தைச் சேர்ந்தவர்களோடு ஒன்றாக இருந்து உண்பவர்கள் இப்பிரிவினைத் தழுவியவர்களாகக் கருதப்படுவர். இதனால் இவர்கள் இறந்தபின், ஆன்மா அமைதியடையும் வகையில் முறையாக உடல் அடக்கம் செய்யப்படும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்."

1891 கணக்கெடுப்பு அறிக்கையில் சாத்தானியர் தங்களைக் காத்ரி வைணவர், சாத்தாதவாள், சாடாளி, குலசேகர, சமராய எனக் கூறிக் கொள்வதாகப் பதியப்பட்டுள்ளது. இந்தப் பெயர்கள் இப்பொழுது மதிப்பு இழந்தனவாக ஆகிவிடுவதோடு இவர்கள் இவற்றை துறந்தவர்களாகத் தங்களைப் பிரபன்ன வைணர், நம்பி, வெங்கபு, வைணவர் முதலிய புதிய பெயர்களுக்கு உரியவர்களாகப் பதிந்துகொள்ள முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் தங்களைச் சூத்திரர் என்ற பிரிவில் கணக்கெடுப்பின்போது பதிவதனை மிக இழிந்ததாகக் கருதுகின்றனர். சில இடங்களில் இவர்களை அவ்வாறு பழைய வழக்கப்படி பதிந்த கணக்கெடுப்பு அலுவலர்கள் மீது மானநஷ்ட வழக்கும் தொடர்ந்துள்ளனர். வழக்கு மன்றம் அந்த வழக்குகளைத் தள்ளிவிட்டது. 1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் இவர்களைப் பற்றி மேலும் தெரிவித்துள்ள விவரங்கள்

வருமாறு :- "காத்ரி வைணவர், நடசரமூர்த்தி, பிரதம வைணவர், சமெயர அல்லது சமொகி, சங்கர, சூரி, சாத்தாதவர், தெலுங்கு, சரத்தானி, வெங்கடபுரத்தார் என்பன சாத்தானியருக்கான உட்பிரிவுகளாம். இவர்களுள் சிலர் பயிர்த் தொழில் செய்து வந்தாலும் பெரும்பாலானவர் வைணவக் கோயில்களில் பணியாளர்களாக மாலை கட்டிக் கொடுத்தும் தீவட்டி பிடித்தும் பிரபந்தம் ஓதியும் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

சாத்தானியர் தாச நம்பிகள் எனவும் அழைக்கப்படுவர். ஊன் உண்ணும் பழக்கம் உடைய இவர்கள் தற்போது உண்ணாதவர்களாக மாறி வருகின்றனர். திருநெல்வேலியில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த பலர், ஊன் உண்டலைத் துறந்துவிட்டதை இதற்குச் சான்றாகக் கூறலாம். இவர்கள் ஆண்டாள் கோயிலோடு தொடர்புடையவர்களாகப் பூசைக்கு வேண்டி பூவும் துளசியும் தந்து வருவதோடு ஆண்டாளின் ஊர்வலத்தின்போது தீவட்டி ஏந்தியும் செல்கின்றனர். இரவு நேரங்களில் கோயிலுக்குக் காவலும் புரிகின்றனர். கோயிலிலிருந்து இப்பணிகளுக்காகப் பெறும் சிறு ஊதியத்தோடு பனையோலைக் கூடைகள், தாழங்குடைகள், முதலியன தயாரித்து விற்றும் மேற்கொண்டு வருவாய் தேடிக் கொள்கின்றனர். இச்சாதியார் மதுவகைகளுக்கு அடிமையாக உள்ளனர். முக்கியமான எல்லாச் சடங்குகளிலும் சாராயம் தாராளமாக வழங்கப்படும். இவர்களுக்கு உள்ள இந்தச் சபலத்தை வெளிப்படுத்துகின்ற வகையில் மாநிலத்தின் வடபகுதிகளில் இராமாச மதம் என்பது சைவம் என்பது எப்படி மரக்கறி உணவாளர் என்பதைக் குறிக்குமோ அதுபோல சாவுச் சடங்கு, சிரார்த்த சடங்கு ஆகியவற்றில் குடிப்பதோடு ஊனும் உண்ணும் பிரிவினர் என்பதனைக் குறிக்கும் வழக்கினை ஒத்ததொரு வழக்கு ஆகும் எனக் கருதப்படுகிறது. சத்தானியரான இரவலர்களை அவர்கள் தங்களை கையோடு கொண்டு வரும் தட்டையான கரை வடிவிலான செம்புப் பாத்திரம், பனையோலை விசிறி ஆகியனவற்றைக் கொண்டு அடையாளம் கண்டுகொள்ளலாம். விராட்புருடன் வியர்வையிலிருந்து தோன்றியவர்கள் என இவர்கள் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். குடுமியினை மழிப்பதற்கும், வேட்டியினைப் பஞ்சகச்சம் வைக்காது சாதாரணமாக உடுப்பதற்கும் காரணமாக இவர்கள் கூறும் வழக்கு வருமாறு :- இராமானுசர் சாத்தானியர் சில தனி உரிமைகளைக் காரத்தில் கோயில்களில்

அனுபவித்து வந்தனர். இதனால் திருப்தியுறாத இவர்கள் பிராமணர்களுக்கு அடுத்த நிலைக்குத் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பினர். அந்த உரிமையும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. கோயிலில் வழிபாட்டுக்குப் பயன்படுத்திய மலர்களையும் பிற பொருள்களையும் பக்தர்களுக்கு வழங்கும்போது அவை சாத்தானியரிடம் கொடுக்கப்பட்டது. எனினும் இவர்கள் தங்களுள் யார் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்வது என்பதில் கருத்து வேறுபாடு கொண்டவர்களாக ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சாதியில் தாழ்ந்தவா எனத் தூற்றுவாராயினர். இதனைக் கண்ட இராமானுசர் இவர்கள் தங்கள் தலையினை மழித்துக் கொண்டவர்களாக வேட்டியினை முன் கொசுவம் வைத்துக் கட்டி வர வேண்டும் எனப் பணித்தார்.

மேலே கூறப்பட்ட பணிகளோடு சாத்தானியர், மஞ்சள், வண்ணப் பொடிகள், நாமக்கட்டிகள் ஆகியனவற்றை விற்பதையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். சிலர், கோமட்டிகளுக்கும் பலிசருக்கும் புரோகிதம் பார்க்கின்றனர். கோமட்டிகளின் சாவுச் சடங்கினை நடத்தச் சாத்தானியரின் பணி இன்றியமையாது வேண்டப்படுகின்றது. ஒருவன் உயிர் பிரிந்தவுடன் சாத்தானிக்குத் தகவல் அனுப்புவர். அவன் வந்து பிணத்தின் மீது சமய அடையாளங்களைச் சாத்துவான். புதைகுழி அருகே பொங்கலிட்டு அதனைச் சாத்தானியும் இறந்துபோனவன் குடும்பத்தினரும் உண்பர். கருமாந்திரம் செய்யும் நாளன்று மாலையில் சாத்தானி இறந்து போனவன் வீட்டிற்குச் சில சிலைகளைக் கொண்டு வருவான். அவற்றிற்கு பொங்கல், இறைச்சி, சாடிகளில் சாராயம் ஆகியன படைத்து வழிபடுவர். பொங்கல் கூடியுள்ளவர்களுக்கு வழங்கப்படும். சாராயத்தைப் பரிக்கம் எனப்படும் கரண்டியினாலோ ஒரு விளக்குமாற்றில் தோய்த்தோ கூடியுள்ளவர்கள் வாயில் சொட்டும்படி விடுவர்.

சாத்தானியர் சாதிப் பெண்கள் வைணவப் பிராமணப் பெண்களைப் போல உடையுடுத்துவதால் வைணவப் பிராமணர்களிலிருந்தும் இவர்களை வேறுபடுத்தி அறிதல் கடினமானது. முன்னாளில் சாத்தானியர் ரவிக்கை உற்சவம் என்றதொரு விழாவினை நடத்தி வந்தனர். இப்பொழுது அது கந்தபொடி உற்சவம் என்ற பெயரால் நடந்து வருகின்றது. முன்பு நடந்து வந்த விழா மிக ஆபாசமான ஒன்றாகும். சந்தனப்பொடி முதலியனவற்றைத் தூவித் தெய்வத்தை

வழிபட்ட பின் சாத்தானியர் வீடு திரும்பித் தங்கள் விருப்பம் போல மதுப் பருகுவர். பெண்கள் ரவிக்கைகளைக் கழற்றி ஒரு குடத்திலிட்ட பின் ஆண்கள் அவற்றிலிருந்து ஆளுக்கொன்றாக எடுப்பர். எந்தப் பெண்ணினுடைய ரவிக்கை ஒருவனுக்குக் கி டைக்கின்றதோ அவள் அன்றைக்கு அவனோடு கூடத் துணைவியாக இருப்பாள்.

விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தானியர் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு.சி.ஹயவதனராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். சாத்தானி என்பது சாத்தாதவன் என்பதன் சுருங்கிய வடிவமாகும். இவர்கள் தங்கள் உடம்பின் மூன்று பகுதிகளை மறைத்தல் கூடாது என விலக்கப்பட்டுள்ளது. அதன்படி தலையினை மயிர் வளர்த்து மறைத்தலும் மார்பில் பூணூல் தரித்து மறைத்தலும் இடையில் பஞ்சகச்சம் கட்டிமறைத்தலும் விலக்கப்பட்டனவாம். சமயநெறிப்பட்ட சாத்தானியர் அனைவரும் தங்கள் தலையை முழுக்க மழித்துக் கொள்வர். ("சாத்தானி குடுமிக்கும் சந்நியாசி பூணூலுக்கும் முடிபோடுவது" என்ற பழமொழி ஒன்று வழங்குகின்றது. சாத்தானி தன்னுடைய தலையினை முழுக்க மழித்துக் கொள்வான். சந்நியாசிக்குப் பூணூல் கிடையாது. எனவே இவை இரண்டும் முடியாத காரியங்கள்.)* இச்சாதி புறமணக்கட்டுப்பாடு உடைய பல இல்லப் பெயர்களையுடையதாகப் பிரிவுபட்டுள்ளது. ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணக்க உரிமை கொண்டாடும் மேநரிகம் என்ற வழக்கமும் இவர்களிடையே வழக்கில் உள்ளது. விதவையர் மறுமணமும் மணமுறிவும் அனுமதிக்கப்படுவதில்லை. சென்னை மாநிலத்தின் வேறு சில பகுதிகளில் இச் சாதியார் தங்களைச் சைதன்யரோடு தொடர்புபடுத்திக் கொள்ள முயற்சி செய்துள்ளனர். விசாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரை இத்தகைய தொடர்பு ஏதுமில்லை என மறுக்கப்பட்டது. இவர்கள் இராமானுசர் நெறியினைப் பின்பற்றும் தென்கலை வைணவர்கள். இவர்கள் குரு, பரவஸ்வாரு எனப்படுவர். இது பரவலாக தேவ என்பதன் சிதைந்த வடிவமாகும். இவருடைய உருவம் திருவரங்கம் கோயில் விமானத்தில் வைக்கப்பட்டுள்ளது. திருவரங்கம் கோயிலுக்குச் செல்பவர்கள் முதலில் இவரை வழிபட்ட பின்னரே கோயிலினுள் சென்று வழிபாடு நிகழ்த்துவர். இவர்கள் கஞ்சம் மாவட்டத்திலுள்ள கும்சூரில் வாழ்கின்றனர். சடாச்சாருலு எனப்படும் எப்போதும் இவர்களிடம் பக்தி செலுத்துகின்ற சீடர்கள் இவர்களுக்கு

* மறைத்திரு எச்.ஜென்சன் – தொகுத்து வகுக்கப்பட்ட தமிழ்ப் பழமொழிகள்.
(Rev.H.Jenson - classified Collection of Tamil Proverbs, 1897.)

உள்ளனர். அவர்களே விசாகப்பட்டினத்தில் இவர்களுடைய முகவர்களாக உள்ளனர். அம் முகவர்கள் சாத்தானியர் தோள்களில் வைணவச் சின்னமான சங்கு, சக்கர முத்திரையிட்டுக் காதில் இராமானுச என்ற திவ்ய மந்திரத்தை ஓதி உபதேசம் செய்து வைப்பர். திருவரங்கத்தில் உள்ள பெருமாள் மீது பாடப்பட்டுள்ள பாசுரங்கள் பலவற்றையும் மனப்பாடம் செய்து வைத்துள்ள சாத்தானியர் அவற்றைப் பாடியவர்களாகச் சென்று வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தேடிக் கொள்வர். அதிகாலையில் எழுந்திருக்கும் இவர்கள் குளித்து, நெற்றியிலும் உடம்பிலும் நாமம் தரித்தவர்களாகத் திருப்பவுத்திரம் எனப்படும் துளசி (***Ocimum sanctum***) மணிமாலையினைத் தலையில் அணிந்து, கழுத்தில் துளசி மாலை தரித்துக் கஜகர்ணம் எனப்படும் விசிறியினை வலக்கையிலும், சுரை வடிவிலான செப்புப் பாத்திரத்தை இடக் கையிலும் தாங்கியபடி பெரும்பாலும்இருவர் ஒன்றாகச் சேர்ந்து மேலே கூறியுள்ள பாடல்களைப் பாடியவர்களாக இரந்து செல்வர். செப்புப் பாத்திரத்தில் இவர்கள் ஊரைச் சுற்றிப் பிச்சையாகப் பெற்றுவரும்அரிசியை வீட்டிற்குத் திரும்பி மனைவியிடம் தருவர். அவள் அதனைக் களைந்து அதன்முன் வணங்கி அதனைச் சோறு சமைப்பாள். பிச்சை எடுத்து வரும் அரிசியில் ஒரு பகுதியினை விற்கக் கூடாது என்ற விதியுள்ளது. மாவட்டத்தைச் சேர்ந்த வைணவர்களின் சமூக வாழ்க்கையில் சாத்தானியர் பங்கு ஆற்றுகின்றனர். இவர்கள் பயிரிடுதலையும் வேறு தொழில்களையும் மேற்கொண்டுள்ள வகுப்பாரின் குருக்களாக இருக்கின்றனர். பிராமணர் அல்லாத வைணவர்களின் சாவுச் சடங்குகளை நடத்தி வைப்பவர்கள் இவர்களே. இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் சின்னரோசு, பெத்தரோசு சாவுச் சடங்குகளையும் நடத்துகின்றனர்.

சாத்து – **Sāthu**

பெரிகெயர், சனப்பர் சாதிகளைச் சேர்ந்த குழுவாகச் செல்லும் வணிகர்களுக்கான மற்றுமொரு பெயர்.

சௌராஷ்டிரர் – **Saurāshtra**

சௌராஷ்டிரத்திலிருந்து தெற்கே வந்து குடியேறியவர்களான பட்டுநூல்காரருக்கான மற்றுமொரு பெயர். இவர்கள் தங்களைச் சௌராஷ்டிரப் பிராமணர் எனவும் உயர்த்திக் கூறிக் கொள்வர்.

சவளைக்காரர் – Savalaikkāran

கடலில் மீன்பிடிக்கும் செம்படவருக்கான பெயர். சவள்தடி என்பது முனையில் தட்டையாக இருக்கும் தோணியோட்டும் கோல். சவளக்காரர் செம்படவர்களைக் காட்டிலும் பள்ளியரான வன்னியரோடு மிகுந்த ஒற்றுமையுடையவர்களாகத் தோன்றுகின்றனர். இவர்களுள் பெரும்பாலோர் பயிரிடுவோராக உள்ளனர். சிலர் நாகசுரம் ஊதுகின்றனர். மேளக்காரன்கள் மிகுதியும் காணப்படாத திருநெல்வேலி மாவட்டத்தில் கோயில்களில் நாதசுரம் ஊதும் பணியினைச் சவளக்காரர் அல்லது பணிசவன்கள் மேற்கொண்டுள்ளனர். பயிரிடுதலை மேற்கொண்டுள்ள சவளக்காரன்கள் படையாச்சி என்ற பட்டம் தரிக்கின்றனர். நாதசுரம் ஊதுவோர் அண்ணாவி எனப்படுகின்றனர். இவர்கள் திருமணம் மூன்று நாள்கள் நடைபெறுகின்றது. தேக்க மரக்கிளையினைப் பால்கம்பமாக நடும் இவர்கள் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிப்பதில்லை. இறந்தவர்களை இவர்கள் எரிக்கின்றனர். சமூகப் படிநிலையில் மற்றவர்களை ஒத்தவர்களான சவளக்காரரும் மறவரும் ஒருவர் வீட்டில் மற்றவர் உண்பர்.

சாவளி – Sāvali

குடுகுடுப்பைக்காரனுக்கான மற்றுமொரு பெயர்.

சாவந்திய – Sāvantiya

சாமந்தியருக்கான மற்றுமொரு பெயர்.

சவரர் – Savara

சவரர், சவ்வேரர், ௨வொரர் என்பன கஞ்சம், விசாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த மலைவாழ் பழங்குடிகளுக்கான பெயர்களாம். இவர்கள் தங்கள் கைகளில் தாங்கிச் செல்லும் ஸ்த்தியன் சகர் என்ற கோடரியின் பெயரிலிருந்து இவர்களுக்கு இப்பெயர் வந்ததாக ஜெனரல் கன்னிங்காம் கூறுகின்றார். வடமொழியில் சபர மற்றும் சவர என்பது மலையில் வாழ்பவன், காட்டுமிராண்டி, புளிஞர் எனப் பொருள்படும் சொல்லாகும். பிளைனி குறித்த௺ள்ள சௌரி (***Suari***) எனும் பழங்குடியினரும் சவரராதல் வேண்டும் எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். "கங்கையினைச் சார்ந்துள்ள பகுதிகளில் சபரையர் வாழ்கின்றனர். இவர்களுடைய நாட்டில் வைரக்கற்கள் மிகப்பெரும் அளவில் கிடைக்கின்றன " எனத் தாலமி எழுதியுள்ளார். இவ்வாறு

வைரக்கற்கள் கிடைப்பதாகக் கூறப்பட்டுள்ள நாடு மத்திய மாநிலங்களில் உள்ள சம்பல்பூர் அருகே உள்ள பகுதியாதல் வேண்டும் என கன்னிங்காம் கருதுகின்றார். பல்லவ அரசனான நந்திவர்ம பல்லவ மன்னன் தன் பட்டயம் ஒன்றில், தன்னோடு பகைகொண்டிருந்த உதயண என்ற பெயர் கொண்ட சாபரர்களின் மன்னனை அவனுடைய மயிலிறகுகளாலான கண்ணாடிக் கொடியினைக் கையகப்படுத்திய பின் விடுதலை தான் செய்ததாகக் கூறிக்கொண்டுள்ளான். இந்தச் செப்புப் பட்டயத்தில் சுட்டப்பட்டுள்ள சாபரர் கிழக்கு மலைத் தொடர் சார்ந்த பகுதிகளில் வாழும் சவரர் ஆவர் என மறைத்திரு.டி.பவுல்க்ஸ் கூறுகின்றார்.* எனினும் இந்தச் செப்புப் பட்டயங்களை மீண்டும் ஒப்பு நோக்கி வெளியிட்ட முனைவர் ஈ.கியுல்ட்ச் # சாபரரைக் கிழக்கு மலைத் தொடர் சார்ந்த பகுதிகளில் வாழும் சவரர் எனக் கொள்வதற்கில்லை எனக் கூறுகின்றார். ருக் வேதிகளான ஆத்ரேய பிராமணர்கள், விசுவாமித்திரரின் பிள்ளைகளின் சந்ததியினர் சவரர் எனக் கருதுகின்றனர். இவர்கள் தங்கள் தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடவாத காரணத்தால் காட்டுவாசிகளாகும்படி சபிக்கப்பட்டவர்கள் என்பர். இராமாணத்தில் விசுவாமித்திர முனிவரை எதிர்த்துப் போரிட்ட வசிட்ட முனிவரின் பசுமாட்டின் உடம்பிலிருந்து தோன்றியவர்கள் சவரர் எனக் கூறப்பட்டுள்ளது.

திரு.ஜி.எ.சிரியெர்சன்@ சவரர் பேசும் மொழியினை முண்டா மொழிக் குடும்பத்தில் சேர்த்துள்ளார். "சவரர் மொழி பெரிதும் தெலுங்கின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளமையால் அது இப்பொழுது தனது தனித்த பேச்சு வழக்கினை இழந்துவிட்டுள்ளது. காரியா, ஜூயாங் மொழிகளோடு அது நெருங்கிய உறவு உடையதாக உள்ளது. எனினும் சில பண்புகளில் அவற்றிலிருந்து வேறுபட்டதாக இந்தக் கணக்கீட்டில் கெர்வாரி என்ற மொழிப் பெயருக்கு உரியனவாகக் கருதப்படும் பல கிளைமொழிகளோடு உறவு உடையதாய் உள்ளது" என அவர் சவரர் மொழி பற்றிக் குறிப்பிடுகின்றார்.

---

* இந்தியத் தொல்லியல், *VIII, 1879. (Ind.Ant., 1879.)*

\# தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், II பகுதி III, 1895. *(South Indian Inscriptions, II, Part III, 1906.)*

@ இந்திய மொழிகளின் கணக்கீடு, 1, 1906. *(Linguistic Survey of India, I, 1906.)*

சவரர் கோண்ட்களைவிடச் சுறுசுறுப்பானவர்கள் எனக் கூறும் திரு.எப்.பாவ்செட் அவர்களைப் பற்றிப் பின்வருமாறு* கூறுகின்றார். "இவர்கள் நெல்பயிரிடும் பகுதிகளில் நெல் பயிரிடுவதற்கான நிலம் தரிசாக எங்கேனும் இருக்கின்றதா எனப் பல முறை தேடி அலைந்த என்னால் அந்த அந்த முயற்சியில் வெற்றி பெற இயலவில்லை. மலையில் உள்ள எல்லா அருவிகளையும் பயன்படுத்திக் கொண்டு பயிரிடக் கிடைக்கும் ஒவ்வொரு சதுரஅடிப் பரப்பிலும் நெல் பயிரிடப்பட்டு வருகின்றது. குன்றுகளின் மிக உயர்ந்த சிகரங்கள் தொடங்கி எங்கெங்கு ஓடைகள் உள்ளனவோ அங்கெல்லாம் நெல் வயல்கள் உள்ளன. சில சதுர கெசப் பரப்பளவுள்ள மலை முகடுங்களுங்கூட நெல் வயல் வெளிகளாக உள்ளன. ஒரு வயல் அளவு பரப்புடைய அணையில் பெருங் கற்களாலான செங்குத்துச் சுவர்கள் தொடங்கிப் பள்ளத்தாக்குகளின் அடிவாரங்கள் வரை ஒன்றின்கீழ் ஒன்றாக அடுக்கடுக்காக வயல்கள் அமைக்கப்பட்டிருக்கக் காணலாம். தங்கள் வயல்களை மலைப் பாங்கான பகுதிகளில் ஒழுங்கு செய்து கொள்வதில் சவரர்களுடைய பொறியியல் நுட்பம் வாய்ந்த கூர்த்த அறிவுத் திறனை நான் பாராட்டியே ஆக வேண்டும். கடுமையான உழைப்பால் நாம் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலாத இடங்களில் எல்லாம் இவர்கள் வயல்களை அமைத்துள்ளனர். சவரர் இவ்வாறு திறமையாக உழைக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருப்பினும் உடல்வாகில் இவர்கள் கோண்ட்களைவிட மெலிந்தவர்களாகவே உள்ளனர். இவ்வாறு மிகக் கடினமாக உழைத்து இவர்கள் பயிரிடும் நிலத்தில் கிடைக்கும் பயனில் சரி பாதியினை இவர்களின்மீது புல்லுருவிகளாக ஒட்டியபடி இவர்களைத் தங்கள் பிடியில் நசுக்கியபடி இருக்கும் பிஸ்ஸோயிகள் பிடுங்கித் தின்றுவிடுகின்றனர். சவரர் வாழும் மலைப் பகுதிகள், புஞ்சை தானியங்கள் பயிரிடுவதற்காகத் தொடர்ந்து மரங்கள் வெட்டப்பட்டு வருகின்ற காரணத்தினால் கோடைக் காலத்தில் பல இடங்களில் பெரும்பாலானவாக உள்ள சால் (***Shoerea robusta***) மரங்கள் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்டப்பட்டு விடுகின்றன. சில ஆண்டுகள் காடாக வளர விடப்பட்டுள்ள ஒரு பகுதியை அழித்து விளைநிலமாக ஆக்க விரும்பும் சவரர்கள் முதலில் மரங்களை வெட்டிப்போட்டு அவை காய்ந்த பின் நெருப்பிடுவர். பின்னர் பெண்கள் தரையினைக் கொத்துக்களால் கிளறிவிடுவர். கல்லும் கரடுமாக இருக்கும்

---

* பம்பாய் இன இயல் கழக இதழ். 1, 1901. (*Journ.Anthrop.Soc., Bombay, 1, 1901.*)

மலைப்பாங்கான பகுதிகளில் தரையில் அடி மரக்கட்டைகள் ஆங்காங்கே துருத்திக் கொண்டிருக்கும் ஆகையால் கலப்பையினை கொண்டு உழுதல் என்பது நடவாத ஒன்று. உழக்கூடிய அமைப்பினை உடைய நெல்வயல்களில் கூட இவர்கள் சமவெளிகளில் பயன்படுத்தப்படுவதை விடச் சிறிய எளிய கலப்பையில் கால் நடைகளைக் கட்டி ஏரோட்டுகின்றனர்." சவரர்கள் பற்றிய ஒரு கட்டுரையில் திரு.ஜி.வி.ராமமூர்த்தி பந்துலு குறிப்பிடுவதாவது :- "சில இடங்களில் சமீன்தாரர்களின் கீழ் வயல்களில் வாரத்திற்குப் பயிர் வைப்பவர்களின் தலைமைக்காரராக முதலில் இருந்து வந்த பிஸ்ஸோயிகளும் எஞ்சிய பகுதிகளில் நேரிடையாகச் சமீன்தாரர்களுமே சவரர்களிடமிருந்து குத்தகையினை விளையும் தானியமாகவோ பணமாகவோ பெறுவர். இரண்டும் கலந்ததாகக் குத்தகை பெறப்படுவதும் உண்டு. குத்தகையினைப் பிஸ்ஸோயிகளுக்குச் செலுத்த உடன்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சவரர் தாங்கள் பயிரிடும் நிலத்தினை விற்கவும் ஒத்திவைக்கவும் உரிமையுடையவர்கள். மலைப் பகுதிகளுக்குக் கீழே சமவெளியில் உள்ள சவரர் நிலத்தின் மீதான இந்த உரிமையினை இழந்துவிட்டனர். முஸ்டாசார்கள் எனப்படும் நிலத்திற்கான குத்தகையினைச் சவரரிடமிருந்து பெறும் உரிமை உடையவர்கள் சவரர் விளைவிக்கும் தானியங்களில் சரிபாதியினை எடுத்துக் கொள்கின்றனர்." திரு. ராமமூர்த்தி மேலும் இவர்கள் நில உரிமைத் தொடர்பாகக் கூறுவதாவது :- இப் பகுதிக்குப் புதிதாகப் பயிரிட வருபவர்கள் காட்டை அழித்து விளைநிலம் ஆக்குமுன்முதலில் கோமெங்கோ எனப்படும் ஊர்த் தலைவனிடமும் போயனிடமும் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு காட்டை அழித்து விளைநிலமாக்கிய வயலை விற்கவோ ஒத்தி வைக்கவோ முற்படும் ஒருவன் அச் சமயம் ஊர்ப் பெயரிவர்களின் முன்னிலையில் ஒரு பன்றியினைப் பலியிடுவதோடு அதனை அனைவருக்கும் உண்ணப் படைக்கவும் வேண்டும். சில இடங்களில் சவரர் சமவெளியிலிருந்து வந்து குடியமர்ந்துள்ள பைதிகளின் பிடியில் அகப்பட்டவர்களாக உள்ளனர். இப் பைதிகள் சவரர் வயல்களில் விளையும் அனைத்தையும் மிக அதிக வட்டிக்குத் தரப்பட்ட கடனுக்கு எனப் பிடுங்கிக் கொண்டு போய்விடுகின்றனர். சென்ற சில ஆண்டுகளாகச் சவரர் சிலர் தேயிலைத் தோட்டங்களில் வேலைபார்க்க அசாமிற்குக் குடிபெயர்ந்துள்ளனர். இவ்வாறு அசாமில் வந்து குடியேறுதல் அரசு ஆணைப்படி தடுக்கப்பட்டுவிட்டது.

எனக்குத் தெரிந்தவரை சவரர்களிடையேயான உட்பிரிவுகளாகப் பின்வருவன ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அ. மலைவாழ் சவரர்

1. சவரர் :- சாதிச் சவரர் அல்லது மலைச் சவரர் எனப்படுவோர் இவர்களே. இவர்கள் தங்களை மற்ற பிரிவினரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் எனக் கருதுகின்றனர். எருமையின் இறைச்சியினை உண்ணும் இவர்கள் பசுவின் இறைச்சியினை உண்பதில்லை.

2. அர்சி, அரிசி அல்லது லொம்பொ லஞ்சிய :- அரிசி குரங்கு எனப் பொருள்படும். லொம்பொ லஞ்சிய நீண்ட வால் என்பதனைக் குறிக்கும். இப்பிரிவைச் சேர்ந்த ஆண்கள் வேட்டியின் கொசுவத்தை வால்போலத் தொங்கவிடுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். பயிரிடுவதோடு சவரர் பயன்படுத்தும் முரட்டுத் துணியினை நெய்யும் தொழிலையும் இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

3. லுவாரர் அல்லது மூளியர் :- அம்பு முனைகளையும் பிற பொருள்களையும் தயாரிக்கும் கொல்லுத் தொழில் புரிவோர்.

4. கிண்டல் :- தானியங்கள் வைப்பதற்கான முரட்டுக் கூடைகள் தயாரிப்போர்.

5. ஜாடு :- கொல்ல கொட்ட, புட்டாசிங்கி ஆகிய பகுதிகளுக்கு அப்பால் உள்ள சவரரிடையே வழங்கி வரும் பெயர்.

6. சூம்பி :- மண்பாண்டங்கள் செய்யும் குயவர்கள். சவரர் வாழ் மலைகளில் இத்தகைய மண்பாண்டங்கள் ஒரு சில இடங்களிலேயே தயாரிக்கப்படுகின்றன. மண் சட்டிகளைச் சமைக்கப் பயன்படுத்துவதோடு வீடுகளில் மூதாதையர்களை ஆவிகளாகவும் தெய்வங்களாகவும் பாவித்துத் தொங்கவிட்டுக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றன எனத் திரு.பாவ்செட் கூறுகின்றார்.

ஆ. தாழ்வான பகுதிகளில் வாழும் சவரர்

7. காபு அல்லது பல்லபு எனப்படும் பயிரிடுவோர்.

8. சுத்தொ எனப்படும் நல்லோர் (கலப்படமில்லாதார்)

கலப்படமில்லாத, சவரர் பழங்குடி இனத்தவர் மலைகளிலும் காடுகள் மண்டியுள்ள பள்ளத்தாக்குகளிலுமே தங்கி வாழ்கின்றனர். சமவெளிப் பகுதிகளை நெருங்கும்போது கலப்பினத்தவர்களாக இவர்கள்

மாறியுள்ளது புலனாகின்றது. இவர்கள் தோற்றத்தாலும் பழக்க வழக்கங்களாலும் சமவெளிகளில் வாழ்வோரிலிருந்து மிகுதியும் மாறுபட்டவர்களாக இல்லை. காபு சவரர்கள் சவரர்களுக்குரியதான வழக்கங்கள் பலவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டவர்களாக உள்ளனர். சுத்தோ சவரர் ஒரிய சாதியாருக்கு உரிய பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களாக உள்ளனர். காபு பிரிவினரைச் சில சமயங்களில் குடுங்க அல்லது பசெங் எனவும் அழைப்பர். பசங் என்ற பெயர் உப்புக்கு உரிய சவர மொழிச் சொல்லான பசி என்பதிலிருந்து வந்தது என திரு.ராமமூர்த்தி கூறுகின்றார். இப் பெயர் சமவெளியில் கீழே உள்ள பகுதிக்கு உரியது. அங்குக் கூடும் சந்தைகளிலேயே மலைவாழ் சவரர் தங்களுக்குத் தேவைப்படும் உப்பினைப் பெறுகின்றனர். எனவே இவர்கள் அப்பெயரால் அங்கு வாழ்வோரைக் குறித்து வருகின்றனர். கம்பு என்ற ஒரு வகுப்பார் உள்ளதாகவும் திரு.ராமமூர்த்தி குறிப்பிடுகின்றார். "கம்பு என்ற இப் பெயர் இந்துக்களான கம்புவர் (ஒரிய காபுகள்) பழக்க வழக்கங்களை மேற்கொண்டு விட்ட சவரரைக் குறிப்பது. குடும்ப என்ற பெயராலும் கம்பு பிரிவு சவரர் அழைக்கப்படுகின்றனர். இது கம்பு பிரிவினரின் ஓர் உட்பிரிவு ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது " எனத் திரு. ராமமூர்த்தி கூறுகின்றார். பொப்பிலி, பீம என்ற உட்பிரிவுகளும் சவரரிடையே உள்ளன என அவரே தெரிவிக்கின்றார். பொப்பிலி விசாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஒரு நகரம். பீமன் பாண்டவர்கள் ஐவருள்ளும் இரண்டாமவன்.

மறைத்திரு. டபிள்யூ. டெய்லர் 1862 இல் வெளியிட்டுள்ள '***Catalogu Raisonne of Orientel Manuscripts***'* இல் மாலிய சவரலு பற்றிப் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :- "மலைப் பகுதிகளில் முதலில் பள்ளத்தாக்குகளின் குறுக்கே மரங்களை வெட்டிபோட்டபின் அவற்றின் மீது இவர்கள் வீடுகளைக் கட்டிக் கொள்கின்றனர். இவர்களுடைய இந்த வீடுகளைக் காடுகளின் உள்ளே ஐம்பது மைல்கள் கடந்து சென்ற பிறகே அடையலாம். இத்தகைய பள்ளத்தாக்குகளில் இதுபோன்ற இடங்களில் இவர்கள் வீடுகளை அமைத்துக் கொள்வதற்குக் காரணம் தங்களோடு முரண்பட்டவர்களாக ஆட்சியாளரோ அண்டை அயலாரோ தாக்கும்போது வீட்டின் அடிப்பகுதி வழியாகப் நீண்ட ஒடுக்கமான பள்ளத்தாக்கில் இறங்கித் தப்பிச்

* The Rev.W.Taylor, Vol III, 1862.

செல்வதற்கு உதவியாக இருப்பதற்காகவே ஆகும். நிலத்தின் மீது உரிமையுடையவர்களாகப் பயிர்த் தொழில் செய்துவரும் இவர்கள் எவருக்கும் வரியோ கப்பமோ செலுத்துவதில்லை. பக்கத்து ஊரைச் சேர்ந்த சமீன்தார் இவர்களை வரி செலுத்தும்படி கெடுபிடி செய்வாராயின் இவர்கள் இரவில் கூட்டமாக அவர் வீட்டிற்குச் சென்று அதற்கு நெருப்பிடுவதோடு அங்குக் கொள்ளையிலும் கொலையிலும் ஈடுபடுவர். அதன்பின் குடும்பத்தோடு கூட அனைவரும் காடுகளுள் கண்காணாதவர்களாகச் சென்று மறைவர். சமீன்தாரின் கீழ் பணிபுரியும் அதிகாரிகள் இவர்களிடம் வரிகேட்டுத் தொல்லை செய்தால் அவர்களையும் இவர்கள் இதுபோலவே தொல்லைக்கு உள்ளாக்குவர். இவர்களோடு நல்லபடியாகப் பேசி உடன்பாடு செய்து கொண்டால் இவர்கள் இத்தகைய தொல்லைகள் விளைவிப்பதில்லை. இவர்கள் தரும் தொல்லையினைத் தாங்கமாட்டாதவராகச் சமீன்தார் படை திரட்டிக்கொண்டு சென்று இவர்கள் வீடுகளைத் தாக்கினால் இவர்கள் மேலே கூறியபடி தங்கள் வீட்டின் கீழாகப் பள்ளத்தாக்கில் இறங்கித் தப்புவர். படையினர் இவர்கள் இல்லங்களுக்குத் தீயிட்டுத் திரும்பத்தான் முடியும். சமீன்தார் தனக்கு வரி வேண்டாம் எனக் கூறி இவர்களோடு உடன்பாடு செய்துகொள்வாராகில் மீண்டும் திரும்ப வந்து அதே இடத்தில் அதே போன்று வீடுகள் கட்டிக்கொண்டு சமீன்தாருக்கு அனைத்து உதவிகளையும் செய்வர்."

சவரர்களின் இன்றைய குடியிருப்புகள் எதிரெதிர் பார்த்தனவாக இரண்டு வரிசையாக அமைந்த குடிசைகளாக உள்ளன எனக் கூறும் திரு.எப்.பாவ்செட் அவற்றைப் பற்றிக் கூறுவன வருமாறு :– "தரையில் ஒன்றுக்கொன்று ஆறு முதல் எட்டு அங்குல இடைவெளியுடையனவாக மரக்கட்டைகளை நட்டு மண்ணையும் கல்லையும் அவற்றின் அடுத்தடுத்த இடைவெளிகளில் இட்டு நிரப்பிய பின் அனைத்தையும் சேர்த்துச் செம்மண் சேற்றினைப் பூசி இவர்கள் குடிசைகளை அமைத்துக் கொள்கின்றனர். இத்தகைய குடிசைகள் தரையிலிருந்து சில அடி உயரம் உடையனவாக இருக்கும். தரை சமதளமாக இல்லாதிருப்பின் குடிசையின் முன்பகுதி ஐந்தடி உயரம் உடையதாகக் கூட இருக்கும். புல்லினால் கூரைகளை வேய்ந்திருப்பர். சுவரின் ஒரு ஓரமாக ஒரே ஒரு கதவு அமைந்திருக்கும். சன்னல்களோ காற்று வருவதற்கான வழிகளோ இடம் பெற்றிராதபடி துளைகள் அனைத்தும்அடைக்கப்பட்டுவிடும்.

வாயிற் கதவின் முன் ஆறேழு பேர் நிற்கக் கூடிய அளவு இடம் இருக்கும். குறுக்கே விட்டங்களை இட்டுப் பரண்களை அமைத்திருப்பர். அவற்றின்மீது கூடைகளில் தான்யங்களைச் சேமித்து வைத்திருப்பர். பரணின் கீழே நிமிர முடியாத இடத்திலே கூனிக் குறுகியபடியே சமையல் செய்து கொள்கின்றனர். வெயிலில் உலர வைத்த எருமையின் இறைச்சித் துண்டங்களும் எலும்புகளும் புலால் நாற்றம் வீசியனவாகக் கூரையிலிருந்து தொங்கியபடி இருக்கும். பரணுக்கும் கூரைக்கும் இடையே ஆங்காங்கே கத்தி, கோடரி, வாள், வில், அம்பு முதலியன சொருகப்பட்டிருக்கக் காணலாம். உழவுக்குப் பயன்படும் சிறிய கருவிகளும் அவற்றிடையே இடம் பெற்றிருக்கும். பெரியனவாக உள்ள கருவிகளைச் சுவரில் சார்த்தி வைத்திருப்பர். அயர்லாந்தில் உள்ள வழக்கத்தைப் போல இங்கும் பன்றிகள் வீட்டினுள்ளே தனி அறையில் வைத்துப் பேணக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளன. பன்றிகள் கிடக்கும் அறைக்கும் வீட்டின் எஞ்சிய பகுதிக்கும் இடையே தாழ்வான சுவர் வைக்கப்பட்டு வீட்டினுள் வராமலேயே பன்றிகள் வெளியே போய்வரத் தனி வாயிலும் அமைக்கப்பட்டிருக்கும். சவரர் வீடுகளில் தெளிவற்ற வரைபடங்கள் சுவரில் இடம் பெற்றிருக்கக் காணலாம். பெரும்பாலும் அவை அந்த வீட்டார் மூடநம்பிக்கை வைத்துப் பாவித்து வழிபட்டுவரும் உருவங்களின் சித்திரங்களாக இருக்கும்."

குடியிருக்க ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கும் மலையகங்களைச் சார்ந்த சவரர் தங்கள் குடும்பத்தில் திருமணமானவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்களோ அத்தனை இணை அரிசிமணிகளை அந்த இடத்தில் வைத்து அவற்றை ஒரு தேங்காய் சிரட்டையால் மூடுவர். மறுநாள் அங்கு வைக்கப்பட்ட அரிசிமணிகள் அத்தனையும் உள்ளனவா என ஆராய்ந்து பார்ப்பர். அவ்வாறு அவை அங்கு அப்படியே இருக்குமானால் வீடுகட்டத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த இடம் நன்மை விளைவிப்பது என முடிவு செய்வர். காபு சவரர்கள் இந்தச் சடங்கில், அரிசி மணிகளை வில்வ (***Aegle Marmelos***) இலையில் மடித்துப் பிளந்த மூங்கிலின் இடையே வைப்பர்.

சவரர்கள் பன்னிரண்டின் மடங்காக எண்ணும் முறையினை மேற்கொள்வது பற்றித் திரு.பாவ்செட் பதிந்துள்ளவை வருமாறு :- "பாணொக்களுக்குப் பொருள்களை விற்கும் போது எவ்வாறு அவற்றைக்

கணக்கிடுகின்றாய் என நாள் கோமெங்கொ ஒருவனைக் கேட்டேன். உடனே அவன் தன் விரல்களை மடக்கி எண்ணத் தொடங்கிவிட்டான். 20 என்ற எண்ணிக்கையிலான எண்ணுவதற்காகத் தரையில் குந்தி உட்கார்ந்திருக்கும் அவன் முதலில் தன் இடதுகால் விரல்களில் 5 வரை எண்ணியபின் இடது கையில் 5 விரல்களையும் அதனோடு கூட்டி எண்ணியபின் வலது கையில் உள்ள முதல் இரண்டு விரல்களைக் கூட்டி 12 என எண்ணி முடித்தான். பின்னர் வலது கைப்பெருவிரலையும் மற்ற இரண்டு விரல்களையும் வலது கால் விரல்களையும் கூட்டி மேலும் எட்டு விரல்களை எண்ணி அதனுடன் இதுபோலவே எண்ணுவதாகக் கூறினான். பன்னிரண்டு வரையான எண்களுக்குரிய பெயர்களே இவர்களிடையே உள்ளன. எனவே, இருபதுவரை எண்ண முதலில் பன்னிரண்டு வரை எண்ணி மறுபடியும் எட்டினை மேலே கூறியதுபோல எண்ணி முடிப்பர். முதலில் கால்விரல்களிலோ கைவிரல்களிலோ எண்ணத் தொடங்குவதைத் தவிர இதில் வேறு மாதிரியான வழக்கங்கள் இல்லை. 50 அல்லது 60 போன்ற எண்களை எண்ண முதலில் இருபது வரை எண்ணி அதற்கு அடையாளமாக ஒருகல்லைஅல்லது அடையாளத்தை அதனைக் குறிக்கத் தனியே இடுவர். இதுபோல ஒவ்வொரு இருபது எண்ணி முடிந்ததும் தனி அடையாளம் இட்டுக் கொள்வர். தங்களிடையே பன்னிரண்டு வரையான எண்களுக்கு மட்டுமே பெயர்கள் உள்ளமைக்குக் காரணமாகச் சவரர் ஒரு கதையினைக் கூறுகின்றனர். நெடுங்காலத்திற்கு முன் ஒரு நாள் வயலில் சவரர் தானியத்தினை அளந்து கொண்டிருந்தபோது பன்னிரண்டு படி அளந்து முடிந்தவுடன் ஒரு புலி அவர்கள் மீது பாய்ந்து அவர்களைக் கொன்று தின்றுவிட்டது. அப்போதிருந்து புலி அதுபோலத் தின்னவரும் என்ற அச்சத்தால் தாங்கள் அந்த எண்ணிற்குமேல் எண்ணத் துணிவு கொள்வதில்லை எனக் கூறுகின்றனர். சவரர்கள் உடற்கூறு பற்றித் திரு.பாவ்செட் பின்வருமாறு கூறுகின்றார் :- "நடுத்தரமான உயரத்திற்குச் சற்றே தாழ்வான உயரமும் தட்டையான முகமும் தடித்த உதடுகளும் அகன்ற தட்டையான மூக்கும் மேல் எழுந்த கன்ன எலும்புகளும் சற்றே சாய்மானமான கண்களையும் கொண்டவர்கள் சவரர். உரியரைப் போலவே அழகிய தோற்றம் கொண்ட இவர்கள் சமவெளியில் வாழும் தெலுங்கர்களைவிட அழகானவர்களாகவே உள்ளனர். மற்ற மலைவாழ் பழங்குடியினரை விடவும் சவரர் குட்டையாகவும் அழகாகவும் தோற்றம் தருவதோடு

இவர்கள் முகச்சாயலில் மங்கோலியக் கூறும் தெளிவாகப் புலப்படக் காணலாம். சிலருடைய கண்களும் கடைக்கண்களும் மிகச் சாய்ந்திருக்கும். மலைகளில் மேலும் கீழும் சுமைகளைச் சுமந்தபடியும் சுமையேதும் அற்றவர்களாகவும் இவர்கள் பார்ப்போர் வியக்கும்படி எளிதாக ஏறி இறங்குகின்றனர். 10 ஸ்டோன் எடையுள்ள ஒருவனை நாற்காலியில் வைத்து நான்கு சவரர்கள் மலையில் 3800 அடி உயரத்திற்கு இடையே வழியில் ஓய்வு ஏதும் கொள்ளாமலும் மாற்று ஆள்களின் உதவியின்றியும் தூக்கிச் சென்றுள்ளனர். சவரரின் சாதிவழக்கப்படி உடையணிந்து கொள்ளும்போது தலையில் ஒரு பெரிய கொத்து இறகுகளைச் சொருகித் தலையில் வண்ணத்துணி ஒன்றைத் தலைப்பாகையாக அதன் பெரும்பகுதி தலையில் பின்பக்கத்தில் இடம்பெறும் படியாகக் கட்டித் தலைக்கு நல்ல பாதுகாப்பாக இருக்கும்படி அதனை மடித்துவிட்டுக் கொள்வர். தலையில் இறகுகள் அணியாதபோது தலைமுடியினை உச்சந் தலையில் முடிச்சிட்டுக் கொள்வர். பித்தளைப் பட்டை ஒன்றையும் இவர்கள் தலையணியாக அணிகின்றனர். தலை உச்சியில் முடியப்பட்டுள்ள கொண்டையில் இதனை 40 டிகிரி சாய்மானம் கொண்டதாகச் சொருகிக் கொண்டிருப்பர். ஒருவன் இந்தத் தலையணியோடு நடக்கும்போது மேலும் கீழுமாக இது விசித்திரமானமுறையில் அசைந்தாடும். சுமார் எட்டு அல்லது ஒன்பது அங்குல நீளமும் முக்கால் அங்குல அகலமும் முனையில் இரண்டங்குலக் குறுக்களவும் உடைய தட்டையான பித்தான் போன்ற அமைப்பை உடைய குச்சி ஒன்றையும் இவர்கள் தலையில் அணிகின்றனர். மயிலிறகு ஒன்று அல்லது காட்டு சேவல் வாலிறகு ஒன்றிரண்டையும் இவர்கள் தங்கள் தலை உச்சியில் போட்டுள்ள கொண்டையில் சொருகிக் கொண்டிருக்கக் காணலாம். ஓரிரண்டு சுருட்டுகள், மற்றும் பாதி புகைத்து மீண்டும் பிடிக்க அணைக்கப்பட்ட சுருட்டுகளையும் ஆண்களும் பெண்களும் தங்கள் கொண்டையில் சொருகியபடி இருப்பர். புகைக் குழாயினையும் இவர்கள் பயன்படுத்துகின்றனர். வயதான பெண்கள் இதனைப் புகைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். சவரர் தங்கள் கழுத்தில் பித்தளை மற்றும் பாசிமணிச் சங்கிலிகளை அணிகின்றனர். ஒருவன் முப்பது சங்கிலிவரை கழுத்தில் அணிந்திருக்கக் காணலாம். அல்லது நீண்ட சங்கிலிகள் சிலவற்றைப் பலமுறை கழுத்தைச் சுற்றி முப்பது சுற்றுக்களாக அமையும்படி அணிந்து கொண்டிருப்பர். இடைவேட்டியின்

வண்ணக் கொசுவங்கள் முன்னும் பின்னும் தொங்கும்படியாக இவர்கள் வேட்டியணிவர். உடலில் மேலே இட்டுக் கொள்ளும் துண்டினை மார்பில் குறுக்காக இருக்கும்படி போட்டுக் கொள்வர். பெண்களும் ஆண்களைப் போலவே கழுத்தில் சங்கிலிகளை அணிகின்றனர். தங்கள் தலைமுடியினைப் பின்னால் கொண்டையிட்டுக் கொள்ளும் பெண்கள் அதில் ஒரு நாடாவினைக் கட்டிக் கொண்டிருப்பர். ஒரே ஒரு துணியினை மட்டுமே பெண்கள் இடையில் அணிகின்றனர். விருந்துகளின் போதும் நாட்டியம் ஆடும்போதும் பெண்கள் தோள் வழியாகவும் ஒரு துணியினைப் போட்டுக் கொள்வர். ஆண்கள் இடது மூக்கில் ஒரு சிறிய மூக்கு வளையத்தினைஅணிகின்றனர். இது பெரும்பாலும் வெள்ளியாலானதாக இருக்கும். இதே போன்ற வளையத்தைப் பெண்கள் மூக்கின் இரண்டு பக்கங்களிலும் அணிவதோடு மூக்குத் தண்டிலும் அணிகின்றனர். இந்த வளையங்கள் ஒரு குழந்தை பிறந்த எட்டாம் அல்லது பத்தாம் நாளின்போதே அதற்கு அணிவிக்கப்பட்டு விடுகின்றது. ஆண், பெண் இருபாலரும் வளையல்கள் அணிகின்றனர். பெண்களில் சிலர் காலில் தண்டையும் அணிகின்றனர். சவரருள் தாழ்ந்த பிரிவினரான கங்சியர் பித்தளைச் சங்கிலிகளையும் பிற அணிகளையும் தயாரிக்கின்றனர். வில், வாள், குத்துவாள், தங்கி எனப்படும் கைக்கோடரி ஆகிய படைக்கலன்களைச் சவரர் பயன்படுத்துகின்றனர். இவர்கள் வில்லில் ஓரிரு மயிலிறகுகளைச் சேர்த்துக் கட்டி அதனை அலங்கரித்திருப்பர். மற்ற மலைவாழ் பழங்குடியினர் பயன்படுத்தும் வில்களைக் காட்டிலும் சவரர் பயன்படுத்தும் வில்கள் அளவில் சிறியன. இவை பொதுவாக **3 1/2** அடி நீளம் கொண்டவை. அம்புகள் **18** முதல் **21** அங்குல நீளம் உடையனவாக இருக்கும். நாணல் குச்சியாலான அம்புகளில் இரும்பு முனையினைச் செருகி இருப்பர். அவற்றில் இரு பக்கங்களில் மட்டும் சிறகு அமைப்பு இருக்கும். பறவைகளை வேட்டையாட மழுங்கிய முனையுடைய அம்புகளையே பயன்படுத்துகின்றனர். சிறுவர்களாக இருக்கும் போதிருந்தே வில்வித்தை பயிலும் இவர்கள் **25** முதல் **30** கெசங்கள் தூரம் வரை அம்பெய்வர்."

சவரர்களுடைய திருமணச் சடங்குகள் தொடர்பான வழக்கங்கள் பற்றித் திரு.பாவ்செட் பின்வருமாறு எழுதுகின்றார் :– "சவரன் ஒருவன் தன் ஊரைச் சேர்ந்த அல்லது வேறு ஊரைச் சேர்ந்த ஒருத்தியை மணந்து

கொள்வான். சவரர் மூன்று மனைவியரை மணந்து கொள்ளலாம். பெரிய ஊரைச் சேர்ந்த கோமங்கொ போன்றவர்கள் நான்கு மனைவியர்வரை மணந்து கொள்ளலாம். ஒருவன் மனைவியரின் எண்ணிக்கை பற்றியான சட்டதிட்டங்கள் ஏதும் இல்லை. எனினும் மூன்று, அதிகமாகப் போனால் நான்கு பெண்டாட்டிக்கு மேல் வைத்துக் கொண்டு ஒருவனால் தாக்குப் பிடிக்க முடியாது எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஒருவன் தான் விரும்பும் ஒருத்தியினையே தன் முதல் மனைவியாகக் கொள்கின்றான். அவனுடைய மற்ற மனைவியர் அவனுடைய முதல் மனைவியின் தங்கைகளாகவே இருப்பர். ஒருத்தி தன் கணவனைத் தன் விருப்பம்போல் எப்பொழுது வேண்டுமானாலும் விட்டுப் பிரிந்து போகும் உரிமையுடையவள். அவ்வாறு செல்பவளை அவள் கணவனால் தடுக்க முடியாது. ஒருத்தி தன் கணவனைவிட்டுப் பிரிந்து தான் விரும்பும் மற்றொருவனோடு சேர்ந்து கொள்ளச் செல்லும்போது அவளுடைய புதிய காதலன் முன்னைய கணவனுக்கு ஒரு எருமையோ பன்றியினையோ கொடுக்கக் கடமைப்பட்டவன். முன்னாளில் எல்லாம் அவன் அவ்வாறு ஒரு பன்றியையோ எருமையையோ தரவில்லையானால் அவன் அவளுடைய முந்தைய கணவனால் கொல்லப்படுவது கூட உண்டு. இப்பொழுதெல்லாம் இதுபோன்ற குற்றங்களை மூன்றாவது பேர்களை நடுவராக வைத்து பேசித் தீர்த்துக் கொள்கின்றனர். ஒருவன் தன் முதல் மனைவி ஒரு குழந்தையினைப் பெற்றெடுத்த பின்பே இரண்டாவதாக ஒருத்தியினை மணப்பது வழக்கம். அவ்வாறு அவளுக்குக் குழந்தை பிறக்கும் முன் அவன் இரண்டாவது மனைவியினை மணப்பானாயின் முதல் மனைவி அவனை ஆண்மையற்றவன் எனப் பழிப்பாள். முதல் மனைவியை அடைய ஒருவன் மிகுந்த முயற்சியும் பெரும் பொருள் செலவும் செய்ய வேண்டியிருப்பதால் அவள் மிகவும் மதிக்கப்படுகிறாள். சில இடங்களில் ஒருவனுடைய மனைவியர் அனைவரும் ஒரே குடும்பமாக ஒற்றுமையுடன் வாழ்வதாகக் கூறப்படுகிறது. கொளகோட்டை கிராமங்களில் இந்த வழக்கம் இல்லை. மனைவியர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்தால் தங்களுக்குள் சண்டையிட்டவர்களாகக் குடும்ப அமைதியினைக் கெடுப்பர் என்பதால் ஒவ்வொருத்தியும் தனிக் குடித்தனம் நடத்தும்படி வைக்கப்படுகிறாள். ஒருவனுடைய மனைவியர் பகல் நேரத்தில் ஒருத்தி மற்றொருத்தியின் வீட்டுக்குச் செல்வர். எனினும் ஒருத்தி மற்றொருத்தியின் வீட்டில் இரவில் தங்கியிருக்கும் வழக்கம் இல்லை. இதற்கு விதிவிலக்காக ஒருவனுடைய முதல் மனைவி மற்ற

மனைவியரைத் தன் கணவனோடு கூட இரவில் தன் வீட்டில் வந்து தங்கிச் செல்லும்படி அழைப்பதுண்டு. ஒவ்வொருத்திக்கும் தனித்தனியே வீடு இருப்பதைப் போல மலைப் பகுதிகளில் பயிரிடத் தனித்தனியே துண்டு நிலங்களும் தரப்பட்டிருக்கும். ஒருத்தி மற்றொருத்தி நிலத்தில் சென்று பயிரிடுவதில் உதவுகின்ற வழக்கம் இல்லை. எனினும் இவர்கள் அனைவரும் கணவருடைய நெல்வயலில் ஒன்றாக இணைந்து அவனுக்கு உதவுவர். தன்னுடைய துண்டு நிலத்தில் தான் பயிரிட்டு விளைவித்தவைகளை ஒவ்வொருத்தியும் தன் வீட்டில் கொண்டு சேர்த்துக் கொள்வாள். ஒருவன் நெல்வயலில் விளைந்தவை அனைத்தையும் அவன் மனைவியர் தங்களுக்குள் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்வர். ஒருத்தி தன் கணவனுடைய நெல் வயலில் சரியாக வேலைபார்க்காவிட்டாலோ கணவன் உடமைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுத்தாலோ அவள் மணமுறிவு செய்யப்படுவாள். மணமுறிவு செய்யப்பட்ட ஒருத்தியை யார் வேண்டுமாயினும் மணந்து கொள்ளலாம். என்றாலும் அவளுடைய புதிய கணவன் முந்தைய கணவனுக்கு ஒரு எருமையினையோ பன்றியினையோ வழங்கக் கடமைப்பட்டவன். தன் மனைவி வேறொருவனோடு தகாத நடத்தையில் ஈடுபட்டிருப்பதை ஒருவன் கையுங்களவுமாகப் பிடிப்பானாயின் அவன் அவ்விருவரையும் கொலை செய்யக் கூட உரிமைப் பெற்றவனாவான். இன்று இத்தகைய குற்றங்களைப் பஞ்சாயத்தாரை வைத்துப் பேசியபின் ஒருத்தியின் காதலனிடமிருந்து அவன் கணவனுக்குத் தொகை பெற்றுத் தந்து விடப்படுகிறது. இவ்வாறு கூடா ஒழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் போது அகப்பட்டுக் கொண்டவள் தொடர்ந்து அவளுடைய கணவனுக்கு மனைவியாக இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. மூன்று மனைவியரை மணந்துகொள்ளும் வழக்கம் இவர்களிடையே இருக்கும் காரணத்தால் முறையற்ற வழியிலான உடலுறவுகள் இவர்களிடையே பரவலாக உள்ளன. பெரிய விருந்துகளின்போது புலன் உணர்வுகளுக்கு அடிமைப்பட்டவர்களாகக் கள்ளக் காதல் தொடர்புகளில் இவர்கள் பெரும் அளவில் ஈடுபட்டு வருகின்றனர். விதவையாகிவிட்ட ஒருத்தி அவளுடைய கணவனின் தம்பியினையோ தம்பியில்லையாயின் கணவன் உடன்பிறந்த ஒருவனின் மகனையோ மணந்துகொள்ளக் கடமைப்பட்டவள். சவரர் பலர் ஒருமுறை தங்களிடையேயான வழக்கினைத் தீர்த்துக்கொள்ள என்னிடம் வந்தனர். அவர்கள் அப்பொழுது குல முறைமைப்படி உடையணிந்தவர்களாகப்

படைக்கலன்களையும் ஏந்தி வந்திருந்தனர். அவர்களிடையேயான வழக்கு இதுதான். வயதில் இளையவளான ஒருத்தியின் கணவன் இறந்துவிட்டான். அவனுடைய தம்பி அவளை மணந்துகொள்ள உரிய வயனை அடைந்தவனாக இருந்தான். அவளோ வேறொரு ஊரினைச் சேர்ந்த ஒருவனிடம் தன் மனதைப் பறிகொடுத்திருந்தாள். அவனைத் தவிர வேறொருவனுக்கு மனைவியாவதில்லை என்பதில் உறுதியாயிருந்தாள். அவள் ஊரைச் சேர்ந்தவர்கள் அவள் வேறொரு ஊரினைச் சேர்ந்தவனை மணப்பாதாயின் அதற்கான நஷ்ட ஈடாக ஒரு எருமையினைத் தருவதோடு அவளுடைய அணிமணிகளையும் தங்களுக்கே கொடுத்துச் செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அவள் காதலன் ஊரைச் சேர்ந்தவர்கள் எருமை கொடுப்பதற்கில்லை என அடித்துக் கூறினர். சரி, ஒரு பன்றியையாவது கொடுக்கட்டும் என இவர்கள் கேட்க, அவர்கள் அதற்கும் உடன்படவில்லை. வேறெதேனும் அவர்கள் தரட்டும் என இவர்கள் கேட்க அவர்கள் ஒரு ரூபாய் மட்டும் தர முன்வந்தனர். அது போதாதென்றும் மூன்று ரூபாயாவது தரவேண்டும் என இவர்கள் கேட்டனர். அவளைத் தூக்கிச் சென்று அவளுடைய மைத்துனனுக்கு மணம் முடித்து வைக்க அவளுடைய ஊரார் முயற்சி செய்வதாகத் தெரிந்து ஒரு ரூபாயை ஏற்றுக்கொண்டு இரண்டு ஊர்களையும் சேர்ந்த பிஸ்ஸோயிகள் தங்களுக்குள் பேசி அவர்கள் வழக்கை அமைதியான முறையில் தீர்த்து வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். அந்த இளம்பெண் தன் விருப்பத்திற்கு உரியவனை மணந்து கொள்வதில் பிடிவாதமாக இருந்ததோடு தன் நகைகளைத் தரவும் மறுத்து வந்தாள். இறுதியில் அவள் ஊரார் வழக்கப்படியான இழப்பு ஈட்டினைத் தந்தால் அவள் விருப்பத்திற்கு உடன்படுவதாகக் கூறினர்.

"சவரர் வாழும் ஒதுக்குப் புறமாக உள்ள ஒரு கிராமத்தில் திருமணச் சடங்குகள் நடைபெற்ற முறை வருமாறு :– மணமகன் வீட்டார் மணமகளுடைய தந்தைக்கு அடுத்தடுத்து இரண்டு அல்லது மூன்று முறை சாராயம் கொண்டுபோய்த் தருவர். பின் மணமகன் வீட்டில் ஏற்பாடு செய்யப்படும் விருந்துக்குத் தன் தந்தையோடு வரும் மணமகள், விருந்துக்குப்பின் விருந்தளித்த மணமகன் இல்லத்தில்அவன் மனைவியாக இருந்து விடுவாள். இவர்கள் மணமகளைக் கைப்பற்றி வருதல் பற்றி ஏதும் அறியார். இந்த ஊருக்குக் கீழேயுள்ள

கொளகோட்டைப் பள்ளத்தாக்கில் வேறுவகையான மணச் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொளகோட்டையில் உள்ள ஊர்களில் சவரர் மணம் நடைபெறம் முறை பற்றி அவ்வூர்களில் ஒன்றின் கோமங்கொ கூறிய பின்வரும் விவரங்களையே சவரர் மணச் சடங்கின் கலப்படமில்லாத நெறிமுறையாகக் கொள்ளலாம். 'நான் ஒருத்தியை மணந்துகொள்ள விரும்பினால் என் அண்ணனுடனும் அவன் மகனுடனும் நான் அவளுடைய வீட்டுக்கு ஒரு பானையில் சாராயத்தையும் ஒரு அம்பையும் பெண்ணின் தாயாருக்காக ஒரு பித்தளை வளையலையும் எடுத்துச் செல்வேன். அவள் வீட்டை அடைந்தவுடன் சாராயப் பானையினையும் அம்பினையும் தரையில் வைப்பேன். நானும் என்னுடன் வந்த இருவரும் மட்டும் அந்தப் பானையில் உள்ள சாராயத்தைக் குடித்துத் தீர்ப்போம். அந்தப் பெண்ணின் தந்தை, 'எதற்காக நீ சாராயம் கொண்டு வந்திருக்கிறாய்' எனக் கேட்பான். நான் 'எனக்கு உன்னுடைய மகள் வேண்டும்' எனக் கூறுவேன். 'ஒரு பெரிய பானையில் சாராயம் கொண்டுவா பின் நாம் திருமணம் பற்றிப் பேசலாம்' என அவன் என்னிடம் கூறுவான். நான் என்னோடு கொண்டு வந்த அம்பை எடுத்து அவ்வீட்டுக் கூரையில் சொருகிவிட்டு காலியாகிவிட்ட சாராயப் பானையினை எடுத்துக் கொண்டு என்னோடு வந்தவர்களோடு என் வீட்டிற்குத் திரும்புவேன். நான்கு நாள்களுக்குப் பின் முதலில் என்னோடு வந்த இருவரோடு கூட மேலும் ஊரைச் சேர்ந்த மூவரை அழைத்துக் கொண்டு நான் அந்தச் சிறுமியின் தந்தையின் வீட்டிற்கு ஒரு பெரிய பானையில் சாராயத்தை எடுத்துக் கொண்டு செல்வேன். அப்பொழுது அங்கே அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் பதினைந்து முதல் இருபது பேர் வரை இருப்பர். எனக்குத் தன்னுடைய மகளைத் தரமுடியாது எனக் கூறும் அந்தப் பெண்ணின் தந்தை, நான் கொண்டு சென்ற சாராயப் பானையினை உடைப்பதோடு கூட ஊராரோடுங்கூடி எங்களை அடித்துத் துரத்த நாங்கள் எங்கள் ஊருக்கு ஓடி வருவோம். அடி வாங்கியதில் நான் மகிழ்ச்சியே அடைவேன். என்னுடைய முயற்சி வெற்றி பெறப் போகின்றது என்பதற்கு அது அடையாளமாகும். அதன்பின் பத்து முதல் இருபது நாள்கள் சென்ற பின் எங்கள் ஊரைச் சேர்ந்த பத்திருபது பேருடன் ஐந்து பானைகளில் சாராயத்தை எடுத்துக் கொண்டு போய் அந்தப் பெண்ணின் தந்தையின் வீட்டில் வைப்போம். நான் என்னோடு கையில் எடுத்துச் செல்லும் அம்பினை அந்த வீட்டில், நான் முதலில் சொருகி வைத்த அம்போடு கூடச் சொருகி வைப்பேன்.

அவள் தந்தையும் அவளுக்கு நெருங்கிய உறவினன் ஒருவனும் ஆளுக்கு ஒன்றாக நான் கூரையில் செருகிய அம்பினை எடுத்து தங்கள் இடது கையில் வைத்துக் கொண்டவர்களாக நான் கொண்டு சென்ற சாராயத்தில் கொஞ்சம் குடிப்பர். இப்பொழுது வெற்றி உறுதி என்ற நம்பிக்கை பிறக்கும். அதன்பின் நான் மேலும் இரண்டு அம்புகளை என் இரு கைகளிலும் பிடித்தபடி அவனை மீண்டும் சாராயம் குடிக்கும்படி வேண்டுவேன். அதேபோல அந்தப் பெண்ணின் ஆண் உறவினர்கள் ஒவ்வொருவர் கையிலும் இரண்டு அம்புகள் தரப்படும். அப்போது நான் அவர்களைச் சாராயம் குடிக்கம்படி வேண்டுவேன். அந்தச் சிறுமியின் பெண் உறவினர்கள் ஒவ்வொருத்தியின் இடது கையிலும் ஒரு பித்தளை வளையலை அணிவித்தவனாக நான் அவர்களையும் சாராயம் குடிக்கும்படி வேண்டுவேன். நான் கொண்டு சென்ற ஐந்து பானை சாராயத்தையும் அவளுடைய ஊரைச் சேர்ந்த ஆண் பெண் உறவினர் குடித்துத் தீர்ப்பர். அது முழுவதும் தீர்ந்தபின் பெண்ணின் தந்தை ஒரு மாதத்திற்குள்ளாக மீண்டும் நிறையச் சாராயம் கொண்டு வா எனக் கூறுவான். அதன்படி ஒரு மாதத்திற்குள்ளாக என் ஊரைச் சேர்ந்த ஆண், பெண், குழந்தைகள் உள்ளிட்ட அனைவரையும் அழைத்துக் கொண்டு இன்னிசைக் கருவிகள் முழங்கப் பாடி ஆடியபடி முப்பது பானைகளில் சாராயம், கொஞ்சம் அரிசி, பெண்ணின் தாயாருக்காக ஒரு சேலை, கொஞ்சம் பருப்பு ஆகியனவற்றை எடுத்துக் கொண்டு சென்று அந்த சிறுமியின் தந்தையின் வீட்டில் வைப்பேன். பின் சாராயத்தை ஊரின் நடுவே கொண்டு வந்து வைத்தவர்களாக நானும் என்னோடு வந்தவர்களும் அந்த ஊராரும் அதனைக் குடித்தபடி ஆடுவோம். அந்தச் சிறுமி இந்த நடனத்தில் கலந்து கொள்ளாதவளாக தன் வீட்டிலேயே இருப்பாள். சாராயம் தீர்ந்தவுடன் என் ஊரார் தங்கள் ஊருக்குத் திரும்புவர். நான் மட்டும் அந்தச் சிறுமியின் தந்தையின் வீட்டில் தங்கியிருப்பேன். மூன்று நாள்கள் வரை அங்குத் தங்கியவனாக நான் அவனுக்கு வயல் வேலைகளில் உதவுவேன். நான் அந்த சிறுமியோடு ஒன்றாக படுத்து உறங்க மாட்டேன். நானும் அவள் தந்தையும் வீட்டின் ஒரு பகுதியில் படுத்து உறங்க, அவளும் அவள் தாயாரும் மற்றொரு பகுதியில் படுத்து உறங்குவர். மூன்று நாள்கள் முடிந்தபின் நான் என் இல்லம் திரும்புவேன். அதன்பின் பத்து நாள்கள் சென்றபின் என் ஊரைச் சேர்ந்த பத்துப் பேருடன் அந்தச் சிறுமி அருவிக்குச் செல்லும் வழியில் சென்று காத்திருந்து அவள் வந்தவுடன் அவளைப் பிடித்துத்

தூக்கியபடி ஓடுவோம். அவள் கூக்குரலிடுவாள். அவளுடைய ஊரைச் சேர்ந்தவர்கள் எங்களைத் துரத்தி வந்து எங்களோடு போரிடுவர். எனினும் நாங்கள் அவளோடு எங்கள் ஊரை அடைய அவள் என் மனைவியாக என்னோடு வாழத் தொடங்குவாள். அதன்பின் அவள் தாயார், அவளுக்கு ஒரு சேலையினையும் ஒரு வளையலையும் கொடுப்பாள் எனக் கூறி முடித்தான். அவனே, என்னிடம் ஒருத்தியை விரும்பும் ஒருவன், அவளுடைய உறவினர்களுக்கு சாராயம் வழங்க வசதிற்றவனாயின் அவன் அவளை வலுக்கட்டாயமாகத் தூக்கிச் செல்வான். அவள் அவனை விரும்பினால் அவள் அவனோடு தங்கி வாழ்வாள். அவனை அவளுக்குப் பிடிக்கவில்லையாயின் அவள் தன் வீட்டிற்கு ஓடி வந்து விடுவாள். அவன் அவளை இதுபோல மூன்று முறை மட்டுமே தூக்கிச் செல்வான். மூன்றாவது முறையும் அவள் தன் வீட்டிற்கு ஓடிவிடுவாளாயின் அவள்மீது கொண்ட விருப்பத்தை விட்டொழிப்பான். "முன்பெல்லாம் ஒவ்வொருவனும் இதுபோன்று வலுக்கட்டாயமாகப் பெண்களை தூக்கி வந்து மனைவியாக ஆக்கிக் கொள்வதே வழக்கம்" என சவரர்களே கூறினர். சில ஆண்டுகளுக்கு முன்பு மணமகள் வீட்டாருக்குத் தரும் வழக்கமான விருந்தைத் தராத காரணத்தால் வழக்கு ஒன்று மூண்டது. இதனால் மணமகளின் தாயார் அந்த மணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தாள். எனினும் மணமகனைச் சேர்ந்தவர்கள் மணமகளைச் தூக்கிச் செல்வதில் வெற்றி பெற்றனர். அவளுடைய தாயார் கூக்குரல் எழுப்பவே ஊரைச் சேர்ந்தவர்கள் மணமகன் குழுவினரைத் தடுக்க முற்பட்டனர். அந்தக் குழப்பத்தில் எண்ணிக்கையில் குறைந்தவர்களான மணமகன் குழுவினரில் ஒருவன் அடிபட்டு வீழ்ந்து மண்ணீரல் நசுங்கி உயிரிழக்க வேண்டியதாயிற்று.

சவரர் திருமணம் பற்றி மேலும் சில விவரங்களைத் தரும் திரு.ராமமூர்த்தி பந்துலு பின்வருமாறு எழுதுகின்றார் :– "இளைஞன் ஒருவனின் பெற்றோர் அவனுக்கு மனைவியாக ஒருத்தியைக் தேட வேண்டிய வயது வந்துவிட்டது என்று கருதுவார்களாயின் உறவினர்களோடும் நண்பர்களோடும் தகுந்த ஒருத்தி எங்குக் கிடைப்பாள் என்பது பற்றிக் கலந்துப் பேசுவர். பின்னர் அவர்கள் தங்கள் முடிவினை அந்தப் பெண்ணின் பெற்றோருக்குத் தெரிவிப்பர். குறிப்பிட்ட ஒரு நாளில் அந்த இளைஞனின் ஆண் உறவினர்கள் பெண்கேட்டுச் செல்வர். இதுபற்றி முன்பே தெரிவிக்கப்பட்டுள்ள அவள் பெற்றோர் அந்த

உறவில் தங்களுக்கு விருப்பம் இருக்குமாயின் வரப்போகின்றவர்களுக்கான வீட்டு வாயிற் கதவைத் திறந்து வைத்திருப்பர். விருப்பம் இல்லையாயின் கதவினை அடைத்து வைப்பர். வருபவர்கள் அந்த வீட்டின் கதவைத் தள்ளிப் பார்த்து அது தாளிடப் படாமல் இருக்குமாயின் கதவைத் திறந்து கொண்டு வேறு சடங்குகள் ஏதும் இன்றி உள்ளே செல்வர். சில சமயங்களில் வருபவர்கள் கதவை இடித்துத் தள்ளி வலுக்கட்டாயமாகக் கூட உள்ளே நுழைவர். பெண்ணின் பெற்றோருக்கு அந்த உறவில் விருப்பமில்லையாயின் அவர்கள் மௌனமாக இருப்பதோடு மணமகன் உறவினர்கள் கொண்டு வந்த சாராயத்தையும் தொடமாட்டார்கள். எனவே அவர்கள் வந்த வழியைப் பார்த்தபடி திரும்புவர். இதற்கு மாறாகஅந்த உறவில் அவர்கள் ஆர்வம் உடையவர்களாயின் வந்தவர்களை ஏசியபடி தாக்கி அடித்து உதைப்பர். இதனால் அவர்கள் காயம்பட்டவர்களாகக் குருதி கொட்டும்படிக் கூட நேர்வதுண்டு. இந்த அவமதிப்பை அவர்கள் மகிழ்ச்சியோடு எதிர்ப்பு ஏதும் காட்டாது ஏற்றுக்கொள்வர். இது அந்தப் பெண்ணை அந்த இளைஞனுக்கு மணம் செய்து தருவதற்கான ஓர் அடையாளமாகவே அவர்கள் கருதுவர். எனவே கொண்டு வந்த சாராயத்தை இறக்கி வைத்து மேலும் ஒருவரை ஒருவர் ஏசிப் பேசியபடி சாராயம் பருகுவர். இந்தச் சடங்கிற்குப் பின் பெண்ணின் பெற்றோர் தங்கள் மகளை மணம் முடித்துத் தர உடன்பட மறுப்பார்களாயின் அவர்கள் ஏமாற்றம் அடையும் மணமகன் பெற்றோருக்கு ஒரு தொகையினைத் தண்டத் தொகையாகத் தரவேண்டும். இரண்டு மூன்றுநாள்கள் சென்ற பின் அந்த இளைஞனின் உறவினர்கள் பெண்ணின் வீட்டிற்குத் தங்களுடன் மூன்று பானைகளில் சாராயத்தையும அந்தப் பெண்ணின் குடும்பத்தில் எத்தனை ஆண்கள் உள்ளனரோ அத்தனை அம்புகள் அடங்கிய கட்டினையும் உடன் எடுத்துக்கொண்டு செல்வர். சாராயத்தைக் குடித்தபின் அம்புகளை அக்குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு ஆளுக்கு ஒன்றாக வழங்குவர். சில நாள்கள் இடைவெளிக்குப் பின் மூன்றாம் முறையாக மஞ்சள் கலவை பூசப்பட்ட மூன்று பானைகளில் சாராயம், கொஞ்சம் மஞ்சள் ஆகியனவற்றை அந்த வீட்டுக்கு எடுத்துக்கொண்டு செல்வர். சாராயத்தைக் குடித்தபின் மஞ்சள் கலவையினை அந்தச் சிறுமியின் உறவினர்களின் முதுகிலும் இடுப்பிலும் பூசுவர். இதன்பின் சிறிதுகாலம் கழித்துத் தி நமணம் நிகழும். மணமகன் வீட்டைச் சேர்ந்தவர்கள் சாவுச்

சடங்குக்கு உரிய முழவு தவிர பிற இன்னிசைக் கருவிகள் முழங்கப் பாடி ஆடியவர்களாக மணமகள் இல்லம் நோக்கிச் செல்வர். அவர்கள் தங்களுடன் இருபது பெரிய பானைகளில் சாராயம், மணமகளின் தாயாருக்காக ஓர் இணை வளையல், ஒரு சேலை, மணமகளின் தந்தை உடன்பிறந்தவர்கள் முதலிய ஆண்உறவினர்களுக்காகத் தலைக்குக் கட்டும் துணி ஆகியனவற்றைக் கொண்டு செல்வர். அனைத்து ஏற்பாடுகளும் முடிந்தவுடன் பூசாரியினை அழைத்து வருவர். இருபது சாராயப் பானைகளுள் ஒன்றினைஅலங்கரித்து அதன் அருகே ஒரு அம்பினை நடுவர். அதன்பின் பூசாரி கண்ணுக்குப் புலனாகாதவர்களான ஆவிகளுக்கும் மூதாதையர்களுக்கும் வாழ்த்தைக் கூறி அவர்களுக்கும் அந்த ஊரைச் சேர்ந்த தலைவர்களுக்கும் தனித்தனியே அமைத்து வைக்கப்பட்டுள்ள தொன்னைகளில் கொஞ்சம் சாராயத்தை ஊற்றுவான். (ஆண் தேவதைகள் ஜொஜொன்ஜி எனவும் பெண் தேவதைகள் யொயொன்ஜி எனவும் அழைக்கப்படுவர்.) இவ்வாறு ஊற்றப்படும் சாராயம் மிகப் புனித்மானதாகக் கருதப்படுகிறது. இதனை ஒரு இலையில் தொட்டுக் கூடியுள்ள பெரியவர்களின் பாதங்கள் மீதும் தோள்களின் மீதும் தெளிப்பர். மணமகளின் தந்தை, பூசாரியினை நோக்கி, 'போய! மணமகன் தந்தை கொண்டுவந்த சாராயத்தை நான் குடித்துவிட்டேன். இதன்வழி என் மகளுக்கும் அவன் மகனுக்கும் இடையேயான மணஉறவுக்கு என் உடன்பாட்டினைத் தெரிவித்து விட்டேன். என் மகள் இதன் பின் அவளுடைய கணவன் வீட்டிற்குச் செல்ல உடன்படுவாளா மாட்டாளா என்பது எனக்குத் தெரியாது. அவளுடைய விருப்பம் என்ன என்பதனை அவளையே மனந்திறந்து கூறும்படி நீயே கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது எனக் கூறுவான். இந்த மணத்திற்குத் தடையாக ஏதேனும் கூற விரும்புகின்றாயா எனப் பூசாரி அந்தச் சிறுமியைப் பார்த்துக் கேட்பான். அவள், 'என் பெற்றோரும் மற்ற உறவினர்களும் மணமகன் கொண்டு வந்த சாராயத்தைக் குடித்துவிட்டனர். நான் சவரர் குலப்பெண். அவனும் சவரர் குலத்தவன். எனவே நான்அவனை மணக்கத் தடை என்ன இருக்கப் போகின்றது?' எனக் கேட்பாள். அதன்பின் கூடியுள்ள அனைவரும் அவனும் அவளும் கணவன் மனைவியராகிவிட்டதாகக் கூறி வாழ்த்துவர். இதன்பின் தனியே அலங்கரித்து வைக்கப்பட்ட சாராயப் பானை மணமகள் வீட்டினுள் எடுத்துச் செல்லப்படும். இந்தப் பானையில் உள்ள சாராயமும் மணமகள் தந்தை விலைக்கு வாங்கிய மற்றொரு

பானைசாராயமும் மணமகன் உறவினர்கள் திரும்பும்போது அவர்களுக்கு வழங்கப்படும். அந்த ஊரைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பமும் மணமகனையும் அவனுடன் வந்தவர்களையும் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சாராயம், சோறு, கறி ஆகியன கொடுத்து உபசரிப்பர். அவற்றை அவர்கள் மறுப்பார்களாயின் அது அவர்களை அவமானப்படுத்தியதாகக் கருதப்படும்.

திரு.ராமமூர்த்தி மேலும் தொடர்ந்து கூறுவதாவது :- "கைம்பெண் ஒருத்தியை மணந்து கொள்பவன் அவளுடைய கணவனின் தம்பியாயினும் அல்லது அவள் விரும்பும் வேறு எவனாயினும் அவன் ஒரு சமயச் சடங்கினை நிகழ்த்தி அதில் ஒரு பன்றியினைப் பலி கொடுக்கக் கடமைப்பட்டவன். அப்போது இறந்துபோன கணவனுடைய ஆவியானது அவனுடைய மனைவியினையும் அவள் இரண்டாவது கணவனையும் தொல்லைப்படுத்தாதிருக்கப் போயாக்களான பூசாரிகள் இறந்தவன் பெயரைக் கூறியவர்களாக அதனை நோக்கி, 'ஓ! அப்பனே, இதோ உனக்காக ஒரு உயிரைப் பலியாகத் தந்துள்ளோம். இத்தோடு உன் மனைவிக்கும் எனக்,குமான பந்தங்கள் அறுந்துவிட்டன. அவள் தன்னுடன் உனக்கோ உன் குழந்தைகளுக்கோ உரிமையான சொத்துக்கள் எவற்றையும் உடன் எடுத்துச் செல்லவில்லை. எனவே அவளைக் காட்டிலும் மலையிலும், வீட்டிலும், வெளியிலும், அவள் தூங்கும்போதும், விழித்துக் கொண்டிருக்கும்போதும், எங்கும் எப்பொழுதும் தொல்லைப் படுத்தக்கூடாது. அவள் குழந்தைகளுக்கு நோயினைத் தராதே. அவளுடைய இரண்டாவது கணவன் உனக்கு எந்தத் தீங்கும் செய்தானில்லை. அவள் அவனைத் தன் கணவனாக வரித்தாள். அதற்கு அவனும் உடன்பட்டான். ஓ! அப்பனே, ஆத்திரம் தணிவாயாக. மூதாதையர்களான கண்ணுக்குப் புலப்படாதவர்களே! நீங்கள் இதற்குச் சாட்சிகளாக இருங்கள்' எனக் கூறுவர். இச் சமயத்தில் பலியிடப்படும் விலங்கு லாங் தண்டம் (இந்த உலகில் உலவும் இறந்தவன் ஆவிக்குச் செலுத்தப்படும் அபராதம் எனப் பொருள்படுவது.) எனப்படும். ஒருவன் மணமுறிவு செய்துகொண்ட ஒருத்தியை மணந்துகொண்ட அளவில் அவளுடைய முந்தைய கணவன் அவன் மீது பாய்ந்து தாக்கியவனாக ஓர் அம்பால் அவன் எருமை அல்லது பன்றியினைக் கொன்று அதனைத் தன் ஊருக்கு எடுத்துச் சென்று அனைவருக்கும் விருந்திடுவான். போயா பூசாரி ஆவிகளை நோக்கி, 'மணமுறிவு

செய்துகொண்டவனை மணந்து கொண்டவன் சவரரிடையே தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கப்படி உரிய தண்டத்தைச் செலுத்தி விட்டானாகையால் அவன் மீது கோபம் கொள்ள வேண்டாம்' எனக் கேட்டுக் கொள்வான்."

திருமணம் தொடர்பாக மேலும் சில மாறுபட்ட வழக்கங்கள் உள்ளது பற்றிய விவரங்கள் தெரிய வந்துள்ளன. திருமணங்களின்போது எடுத்துச் செல்லப்படும் சாராயம் கூந்தல் பனையின் ஊறலிலிருந்து வடித்து எடுக்கப்படுவது எனத் தெரிகின்றது. முதன்முதல் மணமகள் வீட்டிற்கு வரும் மணமகன் வீட்டார் கைரெதொல் (***Uncaria Gambier***) அல்லது பலா (***Artocarpus instegrifoli***) இலைகளாலான மூன்று தொன்னைகளில் சாராயத்தை ஊற்றித் தரையில் வைப்பர். அவ்வாறு சாராயத்தை ஊற்றும்போது சில பெயர்களை – இவை மூதாதையர் பெயராதல் கூடும் – உரக்கக் கூறுவர். இந்தச் சாராயத்தைக் குடித்த பின் அம்பினை (ஆம்) வீட்டுக் கூரையில் செருகியவர்களாக ஒரு பித்தளை வளையலை (கத்து) யும் அங்கே விட்டபடி திரும்புவர். அவ்வாறு வந்து சென்றவர்களின் வளையலையும் திரும்ப அனுப்பி வைத்து விடுவர். இரண்டாவது முறை மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு வருவது பங் சால் அல்லது சங்–சங்–தல்–சொல் எனப்படும். இந்த இரண்டாவது வருகையின்போது சாராயப் பானைகளுக்கு மஞ்சள் பூசப்பட்டிருப்பதே அது இப்பெயர் பெறக் காரணமாகும். சில சமயங்களில் இந்த வருகை நயங்க தல் சொல் எனப்படுகிறது. மணமகனாக இருப்பவன் சிறு சட்டியில் உள்ள சாராயத்தைச் சிறு கழியில் கட்டித் தோளில் சுமந்து வருவதே இவ்வாறு பெயர் பெறக் காரணமாகும். இரண்டாவது வருகையினைப் பொஜங் எனவும் அழைப்பர். இச் சமயத்தில் கூரையில் முன்பு செருகப்பட்ட அம்பினை எடுத்துத் தரையில் வைக்கப்பட்டுள்ள சாராயப் பானையின் அருகில் நட்டு வைப்பதே இதற்கு இப்பெயர் வரக் காரணமாகும். சில இடங்களில் முதல் வருகைக்குப் பின் பல வருகைகள் நிகழும். அவற்றில் ஒன்றின்போது ரொடைசால் எனப்படும் சண்டை நிகழும்.

சமவெளியில் குடியமர்ந்துள்ள சவரர்களிடையே திருமணச் சடங்கில் பல வேறுபாடுகள் தோன்றியுள்ளதாகத் திரு.ராமமூர்த்தி பந்துலு குறித்துள்ளார். "சூத்திரர்களான இந்து சாதியாரின் பழக்க

வழக்கங்கள் இவர்களிடையே புகுத்தப்பட்டதே இதற்கான காரணமாகும். இந்துக்களின் பழக்க வழக்கங்களின் தாக்கத்திற்கு மிகுதியும் ஆளாகியுள்ள சில சவரர்கள் மணத்திற்கான நல்ல நாளினைத் தங்கள் வைத்தியரைக் கலந்து முடிவு செய்வதோடு கூடப் பந்தலிட்டு மணம் நடத்துகின்றனர். மணச் சடங்கில் சாராயத்திற்குப் பதிலாக, வெல்லப் பானகத்தை இரண்டு மூன்று முறை மேற்கொள்ளும் மண உறவு விழாவிற்குக் கொண்டு செல்கின்றனர். எனினும் மிகுதியும் இந்துக்களின் நெறியின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள சவரர் கூட இன்னமும் பிராமணப் புரோகிதர்களின் பிடியில் அகப்படவில்லை." காபு சவரர் சிலர் மணச் சடங்குகளின் போது சுப வேளையில் மணமக்கள் ஒருவர் அருகே மற்றவர் அமர்ந்தவர்களாகப் பசிய இலைகளாலான தொன்னைகளிலிருந்து சோற்றினை உண்பதோடு இடையிடையே தொன்னைகளை மாற்றிக் கொள்ளவும் செய்வர். மணமகனும் அவன் உறவினர்களும் மணமகளை அழைத்துக் கொண்டு தங்கள் ஊருக்குச் செல்லும் முன் அவர்கள் மணமகள் ஊரைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஜன்ஜூல் நக்லிபு (பெண்ணை அழைத்துச் செல்வதற்காக தரப்படுவது.) எனப்படும் தொகையான ஒரு ரூபாயினை வழங்குவர். காபு சவரர்களின் மற்றொரு வகையிலான திருமணத்தில் மணமகனாக உள்ளவனும் அவனைச் சேர்ந்தவர்களும் ஒரு நல்ல நாளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிறுமியின் வீட்டுக்குச் சென்று வெற்றிலை, புகையிலை ஆகியனவற்றை வழங்குவர். அதனை அவள் பெற்றோர் ஏற்றுக் கொள்ளின் அது அந்த உறவுக்கு அவர்கள் உடன்பாட்டினைத் தெரிவித்தலாகும். மற்றொரு முறை அங்குச் செல்லும் மணமகன் வீட்டார் மணமகளுக்கு உரிய விலையாகச் சிறிய தொகையினைச் செலுத்துவர். மணநாளன்று மணமகளை மணமகன் வீட்டுக்கு அழைத்துச் செல்வர். அங்கு மணமக்களை இருவர் தூக்கி வைத்தபடி நடனம் ஆடுவர். மணமகள் மணமகன் வீட்டிற்குள் நுழைய முற்படுவாளாகில் அவளைப் பிடித்து வைத்தபடி அவளிடமிருந்து ஒரு சிறு தொகையினைப் பெற்ற பின்பே அவளை உள்ளே செல்ல அனுமதிப்பர். மணமகன் வீட்டினுள் மணச் சடங்கினை நடத்தி வைக்கும் தாசரி, மூதாதையர்களையும் கண்ணுக்குப் புலனாகாத ஆவிகளையும் நோக்கி வாழ்த்திய பின் மணமக்களின் ஆடைகளின் முனைகளைச் சேர்த்து முடிச்சிடுவான்.

காபு சவரர் திருமணம் தொடர்பான வழக்கங்கள் பற்றி விசாகப்பட்டினம் மாவட்டக் கையேட்டில் பின்வரும் விவரங்கள் தரப்பட்டுள்ளன :- "காபு சவரர் மேநாகரிகம் (தாய்மாமன் மகளை மணக்கும் பழக்கம்.) மணமுறையினைத் தற்போது மேற்கொண்டவர்களாக உள்ளனர். மலைவாழ் சவரர் வழக்கப்படி ஒருவன் வெளியூரில் உள்ள ஒருத்தியினை மணக்க வேண்டும். இவர்களுடைய மணச் சடங்குகள் மலைச் சவரர் மணச் சடங்குகளையே பெரிதும் ஒத்துள்ளன. காபு சவரர்களிடையேயும் அம்பும் சாராயமும் கொண்டுபோய்க் கொடுக்கும் வழக்கம் உள்ளது. இவர்களிடையே மணமகன் மிகுந்த எண்ணிக்கையிலான தன் உறவினர்களுடன் நல்ல நாள் ஒன்றில் மணமகள் இல்லம் நோக்கிச் செல்வான். அங்கு அவன் மணமகளோடு ஒன்றாக ஒரே இலையில் உண்பது மணம் நிறைவுறுவதைக் குறிக்கும். அதன்பின் விருந்துண்டு குடித்து ஆடி மகிழ்வர்."

குழந்தைகளுக்கு அவர்கள் எந்த நாளில் பிறக்கின்றார்களோ அந்த நாளின் பெயரே இடப்படுகின்றது. ஒருவன் பிறக்கும்போது இடப்படும் பெயருக்குப் பதிலாகப் பெரும்பாலும் செல்லப் பெயரிட்டே அவனை அழைக்கின்றனர். ஒருவன் கய்லொ என அழைக்கப்படுவதாகவும் இதற்குக் காரணம் அவன் குழந்தையாக இருந்தபோது கய்லொ எனப்படும் கொட்டைகளை உடைத்து அதிலிருந்து வழியும் கறுப்புநிறச் சாற்றினைத் தன் மேல் பூசிக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவனாக இருந்ததுதான் என்றும் திரு.பாவ்செட் குறித்துள்ளார். மற்றொருவன் செல்லப் பெயர் டல்லோ. இதற்குக் காரணம் சிறுவனாக இருந்தபோது இவன் டல்லி (கூடை) யைத் தலையில் கவிழ்த்து வைத்துக் கொண்டு விளையாடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்ததேயாகும்.

சவரர் சாவுச் சடங்குகள் பற்றித் திரு.பாவ்செட் பின்வருமாறு எழுதுகின்றார் :- "ஓர் ஆணோ பெண்ணோ குழந்தையோ இறக்க நேர்ந்தால் ஒரு துப்பாக்கியில் கருமருந்தை மட்டும் கெட்டித்து அதனை சாவு நிகழ்ந்த வீட்டு வாசலில் வெடிப்பர். கருமருந்து தாராளமாகக் கிடைக்குமானால் பலமுறை வெடி வெடிக்கவும் செய்வர். இது இறந்தவரின் ஆவியான குல்பாவை விரட்டவே வெடிக்கப்படுகிறது.

இவர்கள் தெலுங்கர் அல்லது உரியருக்கு உரிய, மருந்து கெட்டித்து வெடிக்கும் துப்பாக்கியினையே இதற்குப் பயன்படுத்துகின்றனர். பிணம் வீட்டில் கிடக்கும்போதே அதன் மீது தண்ணீர் கொட்டுவர். பின் அதனைக் குடும்பத்திற்கு உரிய சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்வர். அது குடும்பத்தவர்கள் குடியிருப்பிலிருந்து 30 முதல் 80 கெச தூரத்திற்கு அப்பால் இருக்கும். பிணம் அங்கு எரிக்கப்படும். திரு.எஸ்.பி.ரைஸ், *, "இறந்தவனுடைய கால்களும் கைகளும் சேர்த்துக் கட்டப்படும். அவற்றிடையே ஒரு மூங்கிலைச் சொருகி மூங்கிலில் பிணத்தைத் தொங்கவிட்டவர்களாக இருவர் சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்வர். சுடுகாட்டை அடைந்ததும் அங்கு இரண்டு கம்பங்கள் நடப்படும். பிணத்தோடு கூடிய மூங்கில் அந்தக் கம்பங்களின் குறுக்கே வைக்கப்பட்டு அதன்கீழ் நெருப்பு மூட்டுவர். இறந்த சவரர் ஒருவன் அவன் பயிரிட்டு வந்த நிலத்திலேயே – அதனை வயல் என்று கூறமுடியாது – எரிக்கப்படுகிறான்" என கூறுகின்றார். சிதை நெருப்புக்காக மாமரம், புங்கமரம் ஆகிய இரண்டின் வெட்டப்பட்ட பச்சையாக உள்ள கிளைகளே பயன்படுத்தப்படுகின்றன. காய்ந்த மரக்கட்டைகள் பயன்படுத்தப்படுவதில்லை. முதலில் நெருப்பு உண்டாக்க ஒரு சில உலர்ந்தஇலைக் கொத்துக்களைப் பயன்படுத்துவர். சுடுகாட்டிற்குப் பிணத்தைத் தூக்கிச் செல்பவர்களிடம் இறந்தவனுடைய பெயரையோ அவனைப் பற்றிய விவரங்களையோ கேட்டால் அவர்கள் மிகச் சினம் கொள்வர். பிணத்தைத் தூக்கிச் செல்லும்போது வெடிகள் வெடிக்கப்படும். ஒருவன் தன் வாழ்நாளின்போது பயன்படுத்திய வில்லம்புகள், தாங்கி, குத்துவாள், கழுத்துச் சங்கிலிகள், அரிவாள், கோடரி, கொஞ்சம் நெல், அரிசி ஆகியன அனைத்தும் அவன் உடலோடு கூட வைத்து எரிக்கப்படும். 'அவற்றை நாம் அவன் உடலோடு வைத்து எரிக்கவில்லையாயின் குல்பா (இறந்தவன் ஆவி) அவற்றைக் கேட்டு வந்து நமக்குத் தொல்லை தரும்' என கொளகோட்டையினைச் சேர்ந்த ஒரு கோமங்கொ என்னிடம் கூறினான். ஒருவன் இறந்த அன்றே அவன் உடல் எரிக்கப்படும். அதற்கும் மறுநாள் அவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சுடுகாட்டிற்குத் தண்ணீர் எடுத்துச் சென்று அனல் துண்டங்களை அணைப்பர். பின்னர் எலும்புகளைப் பொறுக்கி இரண்டடி ஆழத்தில் குழி தோண்டிப் புதைத்து அக் குழியின் மீது ஒரு சின்னஞ்சிறு

---

* தென்னிந்திய மக்கள் வாழ்க்கை பற்றி அவ்வப்போது எழுதிய கட்டுரைகள், 1901.
(Occasional Essays on Native South Indian life, 1901.)

குடிசை இடுவர். சில சமயங்களில் அக் குழியின் மீது சில கழிகளோடு சிறிய அளவில் புல்லினை மட்டும் வைப்பர். இது, குல்பாவிற்காகச் சுடுகாட்டில் அமைக்கப்பட்ட சிறு குடிசையாகும். கோழி முட்டை ஒடு ஒன்றினைக் காலின் கீழிட்டு நசுக்கி அதனையும் எலும்போடு கூடப் புதைப்பர். தொலைவில் வாழும் இறந்தவனுடைய உறவினர்கள் சாவு சடங்குகளை நிகழ்த்த உதவும் பொருட்டு எலும்புத் துண்டுகளை அவர்களுக்கு அனுப்பி வைக்கும் பழக்கமும் உள்ளது. இறந்தவனுக்காகக் கருமாந்திர விருந்தை – இது லிம்மா எனப்படும் – பிணத்தை எரித்த மூன்றாம் அல்லது நான்காம் நாள் நிகழ்த்துவர். சில இடங்களில் பல நாள்கள் சென்ற பின் இது நிகழ்த்தப்படுவதாகக் கூறப்படுகிறது. லிம்மா சடங்கிற்காகப் பிணத்தை எரித்த இடத்தில் ஒரு கோழியினை அறுத்துப் பலியிட்டு அதன் இறைச்சியினையிட்டுப் பொங்கல் வைத்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உண்பர். அப்போது வழக்கம்போல் சாராயமும் குடிப்பர். அன்று அங்கு வந்திருக்கும் குடங் (இறந்தவர்களின் ஆவிகளோடு தொடர்பு கொண்டு இருப்பவர்களுக்கு அவை கூறும் செய்தியினைத் தெரிவிப்பவன்) குல்பாவோடு தொடர்பு கொண்டு பேசுவான். இறந்து போனவன் கடனை விட்டுச் சென்றிருப்பானாயின் அதனை எப்படி அடைக்க வேண்டும் என அவன் குடங் வாயிலாகத் தெரிவிப்பான். அப்போது குல்பா புகையிலையும் சாராயமும் வேண்டும் எனக் கேட்கும். அவற்றை குடங்கிடம் தருவர். குடங் புகையிலையினைத் தன் வசம் வைத்துக் கொண்டு சாராயத்தை அங்கேயே குடித்துத் தீர்ப்பான். லிம்மா சடங்கிற்குப் பின் குல்பாவிற்காகப் பிணத்தை எரித்த இடத்தில் ஒரு சிறு குடிசை இடுவர். குல்பாவிற்கென்றே தனியாக ஒரு குடிசை அமைக்கும் கொளகோட்டை போன்ற இடங்களில் இதுபோன்ற சிறு குடிசைகள் அமைக்கப்படுவதில்லை. சவரர் வாழும் பகுதிகளில் சில இடங்களில் எலும்புகளைப் புதைத்த இடத்தில் சில மரக்கட்டைகளை வைத்து அதன்மீது கொஞ்சம் புல்லைப் பரப்பி அவை பறந்து போகாமல் இருக்க அதன்மீது மேலும் சில கழிகளை இடுவர். எலும்பு புதைக்கப்பட்ட இடத்தில் மழைநீர் விழாமல் காக்கவும், நாய், நரி முதலியன குழியில் புதைக்கப்பட்ட எலும்புகளைத் தோண்டாமல் இருக்கவுமே இது போன்ற அமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. லிம்மா சடங்கு நடத்தும் நாளுக்கு முந்தைய நாள் மாலையில் வேப்பம் பழங்கள் அல்லது இலைகள் இட்டுச் சமைத்த கசப்புச் சோற்றினை உண்பர். இந்த உணவு இவர்களுக்குட்

பிடிக்காதாகையால் இதனை வேறு சமயங்களில் இவர்கள் உண்பதில்லை. (சமவெளியில் வாழும் ஒரியர்களும் பித்தபோன எனப்படும் கசக்கும் சோற்றினை உண்ணும் இதுபோன்ற சடங்கினை நடத்துகின்றனர்.) லிம்மா சடங்கிற்குப் பின் குல்பா இறந்தவன் வீட்டிற்குத் திரும்பவும் வரும் என்றாலும் அது தொடர்ந்து அங்கேயே தங்கியிருப்பதில்லை. இறந்தவனுக்காக நடத்தப்படும் இரண்டாவது பலிச் சடங்கு கூவர் எனப்படும். லிம்மாவைவிட இது விரிவாக நடத்தப்படுவது. உறவினர் அனைவருடனும் ஊராரும் கூட இதில் கலந்து கொள்வர். கூவர் சடங்குக்கு முந்திய நாள் இரவு குடும்பத்தைச் சேர்ந்த இறந்துபோன மூதாதையர்கள் அனைவரையும் மறுநாள் கூவருக்கு வரும்படி அழைப்பதற்கான ஒரு சிறு விருந்து நடத்தப்படும். கூவர் விருந்தில் குறிப்பிடத்தக்கது இறந்தவன் நினைவாகக் கல்நாட்டுவதாகும். ஒரு குடும்பத்தினர் தங்கி வாழும் இடத்திலிருந்து 50 முதல் 100 கெச தூரத்தில் ஒரு மரத்தடியில் (சிலபோது சற்றுத் தொலைவாகக்கூட) தரையில் செங்குத்தாக நிற்கும் கற்கள் ஒவ்வொன்றும் இதுபோன்ற கூவர் விருந்துகளின்போது நிறுத்தப்பட்டவையாகும். இச் சடங்கின்போது எல்லை மீறியவர்களாகக் குடித்து ஆடுவர். ஆண்கள் கொண்டையில் இறகுகளோடும் கைகளில் தங்கள் படைக் கலன்களோடும் வண்ண உடைகள் தரித்துப் பெண்களும் உடன்வர வீட்டைவிட்டு நடனம் ஆடியவர்களாகப் புறப்பட்டுக் கற்கள் நிறுத்தப்பட்டுள்ள இடத்திற்கு சென்று சேர்வர். நடனத்தின்போது எப்பொழுதும் போல இசைக்கருவிகளும் இசைக்கப்படும். கொளகோட்டையில் நினைவுக் கற்கள் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் குல்பாவிற்காக மற்றுமொரு கூரைக் குடிசை அமைக்கப்பட்டிருக்கும். இறந்தவன் நினைவாக முற்பகல் 11 மணியளவில் கல் நிறுத்துவர். பிற்பகல் இரண்டு மணியளவில் அதன் அருகே ஒரு எருமையினைப் பலியிடுவர். கோடலியால் எருமையின் தலையினை வெட்டிக் குருதியினை அக் கல்லின்மீது ஊற்றுவர். கற்கள் ஒன்றரை முதல் நான்கடி உயரம் உள்ளனவாக அங்கு நிற்கக் காணலாம். இறந்து போனவனுடைய சமூகத் தகுதிக்கும் அவனுக்காக நடப்பட்டுள்ள கல்லின் அளவிற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. கற்கள் நிறுத்தப்பட்டுள்ள இடத்திலேயே விருந்திற்குத் தேவையான அளவு பலியிடப்பட்ட எருமையின் இறைச்சியினைச் சமைத்து அங்கேயே உண்பர். சமைக்கப்பட்டது மிஞ்சுமானால் அதனை உறவினர்கள் கொண்டு

செல்வர். அன்று மாலையில் காலையில் சென்றதுபோலவே ஆடியபடியே ஊருக்குத் திரும்புவர். கொளகோட்டையினைச் சேர்ந்தவர்கள் மரங்களுக்கு அடியே இந்தக் கற்களை நடுவதற்கு காரணம் விருந்தின்போது அனைவரும் நிழலிருந்து உண்பதற்காக எனக் கூறினர். கூவர் விருந்துக்கு உறவினர்கள் ஒருவருக்கொருவர் எருமையினை அன்பளிப்பாகத் தந்து உதவிக் கொள்வர். கூவர் சடங்கு குல்பாவிற்கு திருப்தியினைத் தரும் எனக் கருதுகின்றனர். இது குல்பாவ..னை முழுதும் திருப்தியுறச் செய்யாது என்பதால் இறந்தவர்களுக்காக இரண்டாண்டுக்கு ஒருமுறை விருந்து நடத்துகின்றனர். ஓராண்டு விட்டு ஓராண்டு (நான் தொடர்ந்து கொளகோட்டை பற்றியே கூறி வருகின்றேன்) அறுவடைக்குப் பின் பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் கர்ஜ எனப்படும் இந்த விருந்து நடத்தப்படுகிறது. கொளகோட்டையினைச் சேர்ந்த சவரர் அனைவரும் இந்த விருந்தில் பங்கு பெற்றவர்களாகப் பன்னிரண்டு நாள்களுக்குத் தொடர்ந்து குடித்துவிட்டு நடனமாடிப் பொழுதைக் கழிப்பர். இந்த விருந்தின்போது குடங்கர்கள் பொழுதுவிழுந்த பிறகே உண்பர். இடையிடையே துப்பாக்கியில் வெடியினை எழுப்பியவர்களாக சிற்றின்பங்களில் திளைத்தவர்களாக கிடப்பர். இறுதி நாளன்று பெரும் எண்ணிக்கையில் எருமைகள் பலியிடப்படும். முந்தைய இரண்டு ஆண்டுகளில் சாவு நேர்ந்துள்ள வீடுகளின் முன்னால் குறைந்தது ஒரு எருமையாவது பலியிடப்படும். சிலபோது இரண்டு மூன்று எருமைகளைக் கூடப் பலியிடுவர். சென்ற ஆண்டு (1886-இல்) கர்ஜ விருந்தின்போது கொளகோட்டையில் குறைந்தது ஆயிரம் எருமைகளாவது கொல்லப்பட்டிருக்கும் எனக் கூறினர். பிற்பகல் நேரத்திலேயே எருமைகள் கொல்லப்படும். ஒவ்வொரு வீட்டிலும் கொஞ்சம் சோறு சமைத்து அதனைக் கொஞ்சம் சாராயத்தோடு குடங்கர்களுக்குத் தருவர். அவன் அவற்றைக் குல்பாக்களுக்குப் படைக்கும் சடங்கை நிகழ்த்துவான். இறந்துபோன ஒவ்வொருவனுடைய குல்பாவிற்கும் படைப்பதற்காக குடங்கரிடம் இறந்தவர் ஆணாயின் வேட்டியும் பெண்ணாயின் சேலையும் கொடுப்பர். குடங் அதனைப் படைத்த பின் வைத்துக் கொள்வான். குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சிலபோது 'நாங்கள் உங்களுக்காக எவ்வளவோ செய்துவிட்டோம். எருமைகள், சாராயம், சோறு, உடைகள் ஆகியன கொடுத்துள்ளோம். இனி நீங்கள் போக வேண்டும்' எனக் கூறுவர். அன்று இரவு 8 மணியளவில்

வீட்டிற்குத் தீயிட்டு வீட்டினை எரிப்பர். சென்ற இரண்டு ஆண்டுகளில் சாவு நிகழ்ந்துள்ள ஒவ்வொரு வீடும் இதுபோல நெருப்பிட்டு எரிக்கப்படும். இதன்பின் குல்பா எந்தத் தொல்லையும் தராது போய்விடுவதோடு அதன்பின் குடும்பத்தவர்கள் அவ்விடத்தில் புதிதாகக் கட்டிக்கொண்டு குடிபுகும் வீட்டிலும் நுழையாது. குல்பா பெரியவர்களுக்குத் தீங்கிழைப்பதில்லை. சில சமயங்களில் குழந்தைகளுக்கு வரும் சில நோய்களை உண்டாக்குகிறது. அச் சமயங்களில் சிறு பலிகள் தந்து அதனை ஓட்டி விடலாம். சவரர் வாழும் பிற பகுதிகளில் கொளகோட்டையில் நடத்தப்படுவதைக் காட்டிலும் சிறிது வேறுபட்டனவாகச் சாவுச் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பிணத்தை எரிப்பதும் எலும்புத் துண்டங்களை எரிப்பதும் எல்லாப் பகுதிகளிலும் ஒன்று போலவே நிகழ்த்தப்படுகின்றது. சவரர் ஊர் ஒன்றில், இறந்த ஒருவன் எலும்புகள் ஊரில் மற்றொருசாவு நிகழும்வரையே புதைக்கப்பட்டிருக்கும் எனக் கூறினர். மற்றொருவன் இறந்ததும் முதலில் இறந்தவனுடைய எலும்புகளைக் குழியிலிருந்து தோண்டி எடுத்து அப்பால் எறிந்துவிட்டு அதில் கடைசியாக இறந்தவனுடைய எலும்புகளைப் புதைக்கும் வழக்கம் உள்ளது என்றனர். அவர்களால் தாங்கள் சொல்ல நினைத்ததைச் சரியாகச் சொல்ல முடியவில்லை என நினைக்கின்றேன். சுடுகாட்டிற்கு அருகே நன்கு அலங்கரிக்கப்பட்ட ஒரு குடிசையினை நான் ஒருமுறை கண்டேன். பறவைகளின் பரும்படியான உருவங்களும் சிவப்பு நிறக் கந்தல்களும் அந்தக் குடிசையின் நான்கு மூலைகளிலும் குடிசைக்கு மேல் எட்டடி உயரம் உடையனவாக நின்ற கம்பங்களிலும் நடுவில் நின்ற ஒரு கம்பத்திலும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. அந்த மூங்கில்களை அழகிய வேலைப்பாடுடையனவாகவும் செதுக்கிவிட்டிருந்தனர். அக்குடிசை நாலரை அடிச் சதுரம் உடையதாக மூன்றடி உயரம் உடைய ஒரு மேடையின்மேல் அமைக்கப்பட்டிருந்தது. அதனைச் சுற்றிலும் சுவரேதும் இல்லை. நான்கு மூலைகளில் நான்கு கம்பங்களும் உள்ளே சவரர் வீடுகளில் காணப்படுவது பேன்ற பரண் ஒன்றும் காணப்பட்டது. கேட்கும் கேள்விகளுக்கு பதில் தரும் நல்ல இயல்பினனான சவரன் ஒருவன் இறந்துபோன தன் அண்ணனின் நினைவாக லிம்மா சடங்கிற்கு பின் அந்தக் குடிசையினை அமைத்திருப்பதாகவும் அதன் கீழ் உள்ள மேடையின் கீழ் இறந்தவன் எலும்புகள் புதைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினான். என்னோடு மறுப்பு ஏதும் கூறாது அவன் அக்குடிசையில்

உள்ளே வந்து பரணில் தன் அண்ணனின் குல்பாவிற்காக வைக்கப்பட்டுள்ளனவற்றைக் காட்டினான். கூடைகளில் தானியம், ஒரு பாட்டிலில் உடம்பில் தேய்த்துக் கொள்ள எண்ணெய், குடிசையினைக் கூட்டிப் பெருக்க விளக்குமாறு என அங்கு ஒருவனுக்குத் தேவையான அனைத்தும் வைக்கப்பட்டிருந்தன. பொதுவாகக் குல்பாவிற்காக அமைக்கப்படும் குடிசைகளில் உணவு, புகையிலை, சாராயம் ஆகியன வைப்பர். குல்பா ஆவியாக இருப்பினும் சவரருள் ஒருவனாகக் கருதப்படுகின்றான். அலங்காரக் குடிசை அமைக்கப்பட்டிருந்த ஊரிலிருந்து இரண்டு மைல்கள் தள்ளி இருந்த மற்றொரு ஊரில், குல்பாவிற்காக எலும்புகள் புதைக்கப்பட்ட இடத்தில் குடிசைகளை நான் காணவில்லை. எலும்புகளைப் புல் மட்டுமே இட்டு மூடியிருந்தனர். கொளகோட்டையில் உள்ள ஊர்களைத் தவிர வேறு இடங்களில் ஒருவன் பிணத்தை எரிக்கும்போது அதனோடு அவனுடைய படைக் கலன்களையும் அணிமணி முதலியவற்றையும் இட்டு எரிக்கும் வழக்கம் இல்லை. சில இடங்களில் லிம்மா, கூவர் விருந்துகள் இரண்டையும் ஒரே சமயத்தில் நடத்திவிடுகின்றனர். பிற இடங்களில் கூவர், கர்ஜ விருந்துகள் ஆகிய இரண்டையும் இணைத்து நடத்துகின்றனர். இவ்வாறு நடத்துவதே பெருவழக்காக உள்ளது. எனினும் அப்பகுதிகளில் வீடுகளை நெருப்பிட்டு எரிக்கும் பழக்கம் இல்லை. சில இடங்களில் விளைச்சல் நன்றாக இருக்குமானால் கலப்பைகளின் துண்டங்களையும் பெண் குல்பாவாக இருப்பின் தானியம் சுமக்கும் கூடைகளும் வைக்கப்பட்டிருக்கக் காணலாம். கூவர் கர்ஜ விருந்துகளை நூற்றுக்கணக்கான சவரர் நடத்திக் கொண்டிருப்பதை நான் ஒருமுறை கண்டேன். வேடிக்கையான உடையணிந்துள்ள இவர்கள் இன்னிசைக்கு ஏற்ப ஆடியபடி தங்கள் படைக்கலன்களை ஆட்டியபடி விருந்துக்கு வந்த அவர்கள், நினைவுக் கல் நிறுத்திய பிறகு, தாங்கள் பலியிடப்போகும் எருமைகளைக் கோடலியால் வெட்டிக் கொல்லத் திரும்பிக் கொண்டிருந்தனர். அது பார்ப்பதற்கு அருவருப்பான காட்சியாகும். அன்று இருட்டிய பிறகு விருந்தில் கலந்துகொண்ட சிலர் நான் தங்கியிருந்த இடத்தின் வழியாக தங்கள் வீட்டிற்குப் பலியிடப்பட்ட எருமைகளின் கால்கள், இறைச்சித் துண்டங்கள் ஆகியனவற்றை எடுத்துக் கொண்டு செல்வதை கண்டேன். சிலர் குடிவெறியில் தள்ளாடியவர்களாகப் படைக்கலன்களை ஆட்டியபடி நடனம் ஆடியவர்களாகச் சென்று கொண்டிருந்தனர். சென்ற முறை நான்

கொளகோட்டைக்குச் சென்றிருந்தபோது லிம்மா, கூவர் ஆகிய இரு சடங்குகளையும் ஒன்றாகவே நடத்தப்படுவதைக் கண்டேன். இந்தப் பகுதிக்குப் புதுமையான வழக்கமான இதற்குத் தனிப்பட்டதான ஒரு நிகழ்ச்சியே காரணமாகும். இறந்துபோன சவரன் ஒருவனுக்கு குடும்பம் இல்லை. அவனுடைய உறவினர் இந்த விருந்துகள் நடத்தப்படாமல் விட்டுப் போய்விடுமோ என்ற அச்சம் காரணமாக இடையீடின்றி இவ்விரு சடங்குகளையும் ஒருங்கே நடத்த முடிவு செய்தனர். அவன் இறந்து ஒரு மாதமாகியிருந்தது. ஒரு நாள் லிம்மாவை நடத்தி முடித்தபின் அன்று மாலையே இறந்த உறவினர்களை அழைப்பதற்கான விருந்தை நடத்த மறுநாள் கூவர் சடங்கை நடத்தி முடித்தனர். லிம்மா சடங்கின் ஒருபகுதி ஒரு வீட்டில் நடத்தப்பட்டது. மூன்று ஆண்களும் பெண் குடங்கி ஒருத்தியும் ஒரே வரிசையாக அமர்ந்தனர். அவர்கள் முன் ஒரு பானை கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. அதனைச் சுற்றிச் சிறிய தொன்னைகளில் வெவ்வேறு உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் ஒரே குரலில் கூட்டப்பாட்டுக்களை ஓதினர். தொன்னையில் உள்ள உணவினை முதலில் பானையருகே காட்டியபின் பாடிக் கொண்டிருக்கும்போதே அத் தொன்னையினைக் கைமாற்றிச் சுற்றி அனுப்பினர். அத் தொன்னையில் உள்ள உணவின் மீது கொஞ்சம் சாராயம் ஊற்றப்பட்டுக் குல்பாவிற்காக ஒருபுறம் வைக்கப்பட்டது. பானையினைச் சுற்றிக் கைமாற்றி அனுப்பப்பட்ட தொன்னைகளில் சாராயம் ஊற்றி ஆண்கள் குடித்தனர். சிறிது நேர மௌனத்திற்குப் பின் மீண்டும் நெடிது நேரம் எல்லா மூதாதையர்களின் ஆவிகளையும் அழைத்து இறந்துபோனவனுடைய ஆவியினை அவர்களோடு சேர்த்துக் கொள்ளும்படியாகக் கூட்டப்பாடல் ஓதி வேண்டினர். அந்த மூதாதையரின் ஆவிகளுக்காகவும் சோறும் சாராயமும் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டன. மீண்டும் நீண்ட நேரம் பாடல் ஓதி எல்லா மூதாதையரின் குல்பாக்களையும் இறந்தவனைத் தங்களோடு சேர்த்துக் கொள்ளும்படியும் அவன் மீது கோபம் கொள்ளவேண்டாம் எனவும் வேண்டிக்கொண்டனர்."

குணுப்பூருக்குக் கிழக்குப் பகுதியில் சவரர்கள் கால்நடைத் திருட்டுக்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. இறந்துபோன மூதாதையர்களுக்கு அவ்வப்போது பெரும் அளவில் கால்நடைகளைப் பலிகொடுக்க வேண்டியிருப்பதே இவர்கள் இவ்வாறு கால்நடைத்

திருட்டில் ஈடுபடக் காரணம் எனக் கூறப்படுகின்றது. கூவர் சடங்கு தொடர்பாகத் திரு.ராமமூர்த்தி பந்துலு, வசதி படைத்தவர்கள் இறந்துபோன ஒவ்வொரு மூதாதையருக்கும் ஒன்றிரண்டு கால்நடைகளைப் பயிலிடுவதாகவும் ஏழைகளான சவரர், நான்கைந்து பேர் சேர்ந்து ஆளுக்குக் கொஞ்சம் தொகை போட்டு ஒரு எருமையும் ஆடும் வாங்கிப் பலியிடுவர் எனக் கூறுகிறார். அவர் மேலும் தொடர்ந்து கூறுவதாவது :- "இவ்வாறு பலியிடப்படும் விலங்குகளின் குறிப்பிட்ட சிறப்பான உறுப்புக்கள் பிணத்தைத் தூக்கி சென்றவர்களுக்கு உரியது என்ற வழக்கம் இவர்களிடையே உள்ளது. போய மற்றும் கோமங்கொ ஆகியவர்களும் இதுபோன்றே பலி விலங்கின் சிறப்பான உறுப்புக்களைப் பெறுவதற்குரியவர்கள். ஒருவன் தூக்கிலிடப்பட்டு உயிரிழந்திருப்பானாயின் கூவர் சடங்கின்போது இறந்தவனுடைய ஆவி இறங்கி வருவதற்காக வீட்டில் மேலேயிருந்து ஒரு கயிற்றினைத் தொங்கவிடுவர். ஒருவன் கத்தி அல்லது வேறு இரும்புப் படைக்கலங்களால் உயிர் துறந்திருப்பானாயின் இறந்தவனைக் குறிக்க ஒரு இரும்புத் துண்டோ அம்போ சோற்றுப் பானையில் செருகி வைக்கப்படும். ஒரு சவரன் நீண்ட நாள்கள் நோய்வாய்ப்பட்டிருந்து பின் இறப்பானாகில் வீட்டுக் கூரையிலிருந்து பானை ஒன்றினைக் கயிற்றால் கட்டித் தொங்கவிடுவர் என எனக்குத் தெரிவித்தனர். தரையில் மூன்று கற்களின் மீது பித்தளைப் பெட்டி, மிளகாய், அரிசி, வெங்காயம், உப்பு ஆகியனவற்றை இட்டு வைத்திருப்பர். மிகப் புனிதமானவையாகக் கருதப்படும் இப்பானைகளைத் தேடி சிலபோது மூதாதையர் வருவர் என நம்புகின்றனர்."

சவரர் சமயம் தொடர்பாகத் திரு.பாவ்செட் குறிப்பிடும்போது இவர்களது தெய்வத்தின் பெயர் சொன்னும் அல்லது சுன்னம் எனக் குறிப்பிடுவதோடு மேலும் இதுபற்றி விளக்குவதாவது :-

1. ஜலியா :- இத்தெய்வம் ஆண் எனச் சில பகுதிகளிலும் பெண் எனச் சிலப் பகுதிகளிலும் நம்பப்படுகிறது. ஊர் ஊராக மக்களுக்கு நோயினையும் சாவினையும் ஏற்படுத்தும்படி சுற்றித் திரியும் தீங்கு இழைக்கும் தெய்வமாகப் பரவலாக அனைவராலும் அறியப்பட்ட தெய்வம் இது. சில இடங்களில் இது மக்களைத் தின்னும் எனவும் கூறுகின்றனர். மூன்று நான்கு நாள்களுக்கு உள்ளாகச் சாவினை கொண்டுவரும்

நோய்கள் அனைத்தும் ஜலியா இயற்றும் தீங்கினால் நிகழ்வது என்று நம்புகின்றனர். மா மரங்களில் கனிகள் பழுக்கும் சமயத்தில் அவற்றை உண்ணும் முன் (மாங்காய்களையும் தின்னலாம் எனினும்) வழக்கம்போலக் குடித்துக் களித்து ஆடியவர்களாக இத் தெய்வத்திற்கு ஆடுகளைப் பலியிட்ட பின்பே மாம்பழங்களைத் தின்னத் தொடங்குவர். இந்த ஆண்டு (1887–இல்) சில ஊர்களில் சுவரில்லாத கூரைக் கொட்டகைகள் கோயில்களாகக் கட்டப்பட்டன. இவ்வாறு கோயில் அமைப்பதற்கு அந்த ஊரார் கூறிய காரணம் ஜலியா தங்கள் ஊரினுள் வந்துள்ளது என்பதுதான். வழக்கமாக ஊருக்குப் புறத்தே இதுபோலக் கொட்டகைகளிட்டுப் பலி முதலியவற்றைத் தருவர். ஜலியாவை ஊருக்கு வெளியேயே நிறுத்தித் திருப்திபடுத்தி அனுப்பிவிட வேண்டும் என்பதாலேயே இவ்வாறு செய்கின்றனர். சில சமயங்களில் அத் தெய்வம் ஊருக்குள்ளும் வந்துவிடும். அவ்வாறு வந்து விட்டால் அதற்குச் செய்யவேண்டிய வசதிகளையெல்லாம் செய்து தந்து விடுவதுதான் நல்லது. இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட ஒரு கோயில், நான்கடிச் சதுர அமைப்பு உடையதாகச் சுவர் ஏதும் இன்றி மேலே கூரை வேயப்பட்டதாக இறந்தவர்களின் ஆவிக்கு என இடப்படும் கொட்டகைகளை ஒத்திருந்தது. சவரன் ஒருவன் அதனுள் ஜலியா பயன்படுத்தி மகிழ வைக்கப்பட்டிருக்கும் பொருள்களையெல்லாம் எனக்குக் காட்டினான். ஒரு மூங்கில் பெட்டியில் இரண்டு புதிய வட்டிகள் இருந்தன. நடனம் ஆடும்போதும கையில் ஏந்திக் கொள்ளும் றை கட்டுகள் இரண்டு உடம்பில் பூசிக் கொள்ள எண்ணெய், சிறிய முக ர்க்கும் கண்ணாடி, ஒரு மணி, ஒரு விளக்கு ஆகியனவும் அங்கே வைக்கப்பட்டிருந்தன. நடப்பட்டிருந்த கம்பங்களில் சிவப்புக் கறைகள் காணப்பட்டன. அதன் அருகே ஆடுகளைப் பலியிட்டு அவற்றின் குருதியை மேடையில் ஊற்றியிருந்தனர். அந்த வட்டாரத்தில் உள்ள வறு சில ஊர்களில் ஜலியாவிற்காகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஊர்களைச் சேர்ந்தவர்கள் ஜலியா ங்களுக்குத் தொல்லை ஏதும் தருவதில்லையென்றும் அஜ்ஜலியா தய்வத்தைத் தங்களுக்குத்தெரியாதென்றும் அதன் தொல்லை பாறுக்கமாட்டாமல் அதற்குப் பல ஆடுகளையும் கோழிகளையும் பியிட்டு அதன் கோயிலை நெருப்பிட்டுக் கொளுத்தி அதனை ரைவிட்டுத் துரத்திவிட்டதாகவும் கூறினர். ஜலியாவிற்கு கபிடித்தல் மீது விருப்பம் அதிகம். ஓர் ஊரில் ஜலியாவின் கோயில்

முன்னால் பாதையோரத்தில் ஒரு கல் நடப்பட்டிருந்தது. அந்த வழியே செல்பவர்கள் தங்கள் சுருட்டில் ஒரு முனையினை கிள்ளி அதனை ஜலியாவிற்காக அங்கு இட்டுக் சென்றிருந்தனர்.

2. கிடுங்கு :– சில பகுதிகளில் ஒரிசாவில் உள்ள சவரர் அனைவரையும் இத் தெய்வமே படைத்ததாக நம்புவதோடு பிற கால்நடைகளோடும் அவர்களைச் சவரர் வாழும் காட்டுக்கு அழைத்து வந்ததாகவும் நம்புகின்றனர். சில ஊர்களில் ஊருக்குப் புறத்தே இத் தெய்வத்தைக் குறிக்கும் கல் அமைக்கப்பட்டு அதன் முன் இத் தெய்வத்தைத் திருப்திபடுத்தக் குறிப்பிட்ட சில சமயங்களில் பலிகளும் தந்து வருகின்றனர். எனினும் அந்த கல்லினை வழிபடுவதில்லை. இத் தெய்வத்திற்கு உரியதாகச் சில தோப்புகளை இதுபோலப் புனிதமானவையாகக் கருதுவதோடு அதில் கோடாரியினைப் பயன்படுத்துவதில்லை.

3. ராது :– கழுத்தில் வலி தரும் தெய்வம்.

4. தர்ம பொஜலங்கான் (ஆகாயம்), ஆயுங்கங் (சூரியன்) :– இவற்றுள் முதலாவது பெயர் உரிய மொழியிலிருந்து வந்ததாக வேண்டும். இறுதியில் உள்ளது சவரர் பெயர். கொளகோட்டையில் இந்த தெய்வமே எல்லோரையும் பிறப்பிப்பதாக நம்புகின்றனர். இது நன்மையினை மட்டும்

5. கன்னி :– மிக்க தீங்கிழைப்பது. இது பெரிய மரங்களில் தங்கி உறைவதாக நம்பும் இவர்கள் இத் தெய்வம் வாழும் தோப்புக்களில் உள்ள மரங்களை வெட்டுவதில்லை. அடிக்கடி இத் தெய்வம் ஏறப்படும் இருபது வயதுடைய ஒரு சவர இளைஞனை எனக்குத் தெரியும். அடிக்கடி வலிப்புக்கு உள்ளாகும் அவன் ஓர் அறிவிலி. அந்த இளைஞனைவிட்டு இத் தெய்வத்தைப் போகச் செய்வதற்காகப் பல எருமைகள் பலியாகத் தரப்பட்டுள்ளன. எனினும் அதனால் பயன் ஏதும் விளையவில்லை.

"சில பகுதிகளில் பல மலைவாழ் தேவதைகள் இருப்பதாக சவரர் நம்புகின்றனர். டியொடங்கர் மலையில் தேரேமா என்ற தேவதை வாழ்வதாகவும் அதனை அடுத்த பகுதிகளில் கிஸ்டு, கிஞ்சின்யுங் இல்ட, லொபொ, கொந்தொ, பாலு, பரதொங் முதலிய தெய்வங்கள் உறைவதாகவும் நம்புகின்றனர். இத் தேவதைகள் கிட்டத்தட்ட இறந்துபோன சவரர் ஆவிகளை ஒத்தவை. (திரு.ராமமூர்த்தி பந்துலு இரண்டு மலைகளைப் பற்றிக் கூறியுள்ளார். கயபாவில் உள்ள மலை ஜூம்–தங்பரு எனப்படும். பசுவைத் தின்னும் மலை என்பது இதன் பொருள். பர்லகிமெதிக்கு எட்டாவது மைலில் உள்ளது மெதிய :பரு எனப்படும் ஜூம்–தங் மலைக்கும் பசு அல்லது காளையினைப் பலியிடுவர். கிட்டுங் ஒன்று ஒருமுறை ஒரு பசுவின் இறைச்சியைத் தின்றதே அவ்வாறு பலிதரப்படக் காரணமாகும். மெதிய மரு மலையில் உறையும் ஆவிகள் பால் அல்லது சாராயத்தை மட்டுமே விரும்புகின்றன. சவரர் பாலினை அருவருப்புக்கு உரியதாகக் கருதுவதால் இங்குப் பாலினைப் படைப்பது புதுமையனதே.)"

"சவரர் தங்கள் இல்லங்களில் ஏதேனும் ஒரு பொருளைத் தெய்வத் தன்மை உடையதாகப் பாவனை செய்து வருவர். இது போலப் பலபொருள்களைப் பாவிப்பதும் உண்டு. சில ஊர்களில் கதிரவனையே சிறப்புத் தெய்வமாகக் கருதுவதோடு பல தொல்லைகளுக்கும் அவனே காரணம் எனக் கொள்கின்றனர். அங்கெல்லாம் சில பொருள்கள் கதிரவனாகப் பாவிக்கப்படுகின்றன. இன்னொரு ஊரில் சில பொருள்கள் ஜலியா, கிடுங்கு முதலிய தேவதைகளாகப் பாவிக்கப்படுகின்றன. நான் ஒரு முறை ஒரு வீட்டில் ஜலியாவாகப் பாவிக்கப்படும் ஆறு பொருள்களையும் மற்றும் மூன்று பாவனைக்குரிய

பொருள்களையும் கண்டேன். கொளகோட்டைப் பகுதியில் குல்பாவாகப் பாவிக்கப்படும் பொருள்களை வைத்துள்ளனர். இவ்வாறு பாவிக்கப்படுபவை பெரும்பாலும் ஒன்பது அங்குலக் குறுக்களவுள்ள மண்சட்டிகளே. இவை கூரையிலிருந்து உறியில் தொங்கியபடி இருக்கும். குடுங்கு அதில் மேலே தொங்கியபடி இருக்கும். சில சமயங்களில் இவ்வாறு பாவனைக்கு உரியனவாகத் தொங்கும் பொருள்களின் அடியில் தரையில் அவற்றுக்குப் பலியிடுவர். கிறுக்கலான படங்களை வைத்தும் இதுபோலப் பாவித்து வருகின்றனர். கதிரவனாகப் பாவிக்கப்படும் பொருள்கள் புறத்தே வெள்ளை நிறம் தீட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டனவாக இருக்கும். விசாகப்பட்டினம் முகவர் பகுதியில் உள்ள பெர்ரி என்ற ஊரில் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்குக் காலிலோ கையிலோ வலி ஏற்படுமாயின் கதிரவனாகப் பாவனை செய்யப்படும் பொருளுக்குப் பலியிடுவர். அச்சமயங்களில் பாவனை செய்யப்படும் தெய்வம் தரையில் இறங்கி வருவதாக நம்புகின்றனர். பலியினை வீட்டினுள்ளே உறியின் அடியில் தருவர். வீட்டின் வாயிற்படியிலும் பலியிட்டுக் குருதியினைப் பாவனை செய்யப்படும் பொருள் உள்ள உறியின் அடியில் பூசுவதும் உண்டு."

திரு.ராமமூர்த்தி பந்துலு குறித்துள்ள விவரங்கள் வருமாறு :- "கிடுங்குகள் பத்து உள்ளன. அவை உடன்பிறந்தவை. பீம, ராம, ஜொதெபுலு, பேத, ருங்ருங், தும்மண்ண, கர்சத், ஜகண்ட், மட்டு, தெடு என்பன அவற்றுக்கான பெயர்கள். சிலபோது இத்தெய்வங்களைக் குறிக்கும்படியாக வீட்டுச் சுவரில் பத்து ஆண்களின் உருவங்களை வரைந்து அவற்றின் கீழ் குதிரைகள், யானைகள், கதிரவன், திங்கள், விண்மீன்கள் ஆகியவற்றின் உருவங்களை வரைவர். போய உருவமும் வரையப்படும். ஒருத்தி குழந்தை பேறு அற்றவளாக இருந்தாலோ அவளுக்குப் பிறந்த குழந்தைகள் அடுத்தடுத்து இறந்தாலோ அவள் தனக்குக் குழந்தை பிறந்து தரிக்குமானால் கிடுங்கு புர்பா சடங்கை நடத்துவதாக நேர்ந்துக் கொள்வாள். பின் அப்படி நிகழுமானால் ஒரு பன்றிக் குட்டியினை வாங்கி அதனைப் பலிக்கு என நேர்ந்து விடுவாள். அக் குழந்தைக்குப் பன்னிரண்டு வயதாகும் வரை அதனைக் கொழுக்கச் செய்து பின் அதனைச் சடங்கில் பலியிடுவர்."

சென்னை அருங்காட்சியகத்தில் மரத்தாலான நேர்ச்சிப் பொருள்கள் சில உள்ளன. புறாக் கூடு போன்ற அமைப்பில் அவை அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாக எனக்குத் தெரிவித்தனர். பல்லி, கிளி, குரங்கு, மயில், மனித உருவங்கள், குத்துவாள், துப்பாக்கி, வாள், கொந்தாளம், இசைக் குழல் ஆகியவற்றின் உருவங்கள் இவற்றுள் அடங்கியுள்ளன. சவரர்கள் இதனை மாவட்ட அலுவலர்களுக்கு விற்க முன் வரவில்லை. அரசால் அவற்றுக்கு வழிபாடு நிகழ்த்தப்படும் என உறுதி கூறிய பின்னரே அவர்கள் அவற்றை விட்டுப் பிரிய முன்வந்தனர்.

நிலத்தை விற்கும்போதும் அடகாகக் கொடுக்கும்போதும் போயன் ஆவிகளை எழுந்தருளும்படி அழைப்பான். சாராயம் வழங்கிய பின் விற்பவன் அல்லது அடகு வைப்பவன் எரியும் திரியொன்று வைக்கப்பட்ட அரசிலையினைக் கையில் தாங்கியவனாக இருக்க, நிலத்தை வாங்குபவன் அல்லது ஒத்தியாக எடுத்துக் கொள்பவன் தன் கையிலுள்ள மற்றொரு அரசிலையால் முன்னவன் உள்ளங்கையில் உள்ள திரியினை மூடியபின் விற்பனை ஒப்பந்தம் பற்றிய விவரங்கள் கூறப்படும்.

சவரர் பலி தருதல் பற்றித் திரு.பாவ்செட் பின்வருமாறு எழுதுகின்றார் :- "சவரர்கள் தாங்கள் ஒருபோதும் மனிதரைப் பலிகொடுக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்ததில்லையெனக் கூறுகின்றனர். சவரர் தரும் பெரும்பாலான பலிகள் விருந்தோடு நிகழ்வன. அவை தொல்லை தரும் தேவதைகளையும் குல்பாக்களையும் திருப்திபடுத்தத் தரப்படுகின்றன. இந்த வகைக்குட்படாத சில பலிகளைப் பற்றி முதலில் கூறுகின்றேன்.

அ) மாம்பழம் பழுக்கும்போது ஜலியாவிற்குத் தரப்படும் பலி என முன்பே சுட்டப்பட்டது அவற்றுள் ஒன்று. ஜலியாவிற்குப் பதிலாகச் சூரியனைச் சிறப்புக்குரிய தெய்வமாக வழிபடும் கிராமத்தில் ஜலியாவிற்குப் பதிலாகச் சூரியனுக்கு இப்பலியினைத் தருவர். ஜலியாவினை குடங் அவ்வப்போது ஊருக்கு வெளியே சந்தித்துப் பலி தந்து அதனை அனுப்பி வைத்து விடுவதால் ஜலியா இந்த ஊராருக்குத் தொல்லை தருவதில்லை. (மகுவ, மலை நெல், கொள்ளு ஆகியவற்றின் திருவிழாவின்போதும் பன்றி அல்லது கோழிகள் பலியிடப்படுகின்றன.)

ஆ) ஒரு குழந்தை பிறக்குமுன் கொஞ்சம் சோறு அல்லது சிறியதொரு உயிரைப் பலியிடும் பழக்கம் சில இடங்களில் உள்ளது. கொளகோட்டையினைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு குழந்தை பிறக்கும் சமயத்தில் ஒரு கோழி அல்லது ஒரு பவுண்ட் அளவுள்ள அரிசி, கால் காலன் சாராயம் ஆகியவற்றைக் குழந்தை பிறக்க உள்ள வீட்டார் குடங்கிடம் தருவர். அவன் அதனைக் காட்டுக்கு எடுத்துச் சென்று கோழியினைக் கன்னிக்குப் பலியிடுவான். குருதி, சாராயம், சோறு ஆகியவற்றில் கொஞ்சத்தை இலைத் தொன்னைகளில் கன்னிக்குப் படைத்தபின் எஞ்சியதை உண்பான். கொளகோட்டையில் ஒவ்வொரு நெல் வயலிலும் பயிர் தூர் கட்டும்போது சட்டீராவிற்கு நல்ல விளைவுக்காக வேண்டிப் பலியிடுவர். உரிய மொழியில் கெந்து எனப்படும் மரத்தில் ஐந்தாறு அடி நீளமுள்ள கழியினை வெட்டி அதனைத் தரையில் ஊன்றி வைப்பர். அதன் மேல் முனையினைக் கூராகச் சீவி அதில் ஒரு பன்றி அல்லது கோழியினை உயிரோடு செருகி வைத்து அதன் மீது வெள்ளையாக வர்ண வளையங்களிடப்பட்ட மண் சட்டியினைக் கவிழ்த்து வைப்பர். இந்தப் பலிச் சடங்கினை நிகழ்த்தவில்லையாயின் நல்ல விளைவினை எதிர்பார்க்க முடியாது. (பன்றியினை இதுபோல உயிரோடு சொருகி வைக்கும் வழக்கம் தெலுங்கு தேசத்திலும் உள்ளது என்பதனை இங்குக் குறிப்பிட வேண்டும்.)* கதிர் முற்றிய பின் அறுவடைசெய்து தானியத்தை உண்ணும் மன் லொபொ (பூமா தேவிக்கு) விற்குப் பலி தரப்படும். லொபொ சொண்ணும் எனப்படுவது பூமித் தெய்வம். இந்தச் சடங்கை நிகழ்த்தாமல் அவர்கள் அந்தத் தானியத்தை உண்பார்களாயின் அது அவர்களுக்குச் செரிக்காது போய்விடுவதோடு மறுமுறை விதைக்கும் போது முளைக்கவும் செய்யாது என நம்புகின்றனர். விளைச்சல் நன்றாக இருக்கும்போது ஒரு ஆட்டினைப் பலியிடுவர். இல்லையாயின் ஒரு பன்றி அல்லது கோழி மட்டுமே பலியிடப்படும். கொளகோட்டையினைச் சேர்ந்த சவரர் ஒருவன் தெய்வத்தைத் திருப்திபடுத்துவதான மற்றொரு பலியினைப் பற்றியும் என்னிடம் கூறினான். ஒரு புலியோ சிறுத்தையோ ஒருவனைக் கொல்லுமானால் குடங்கினை அழைப்பர். அவன் அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையின் போது அது போன்ற இன்னொரு தாக்குதல் நிகழாதிருக்க ஒரு சடங்கை நிகழ்த்துவான். ஊருக்கு வெளியே இரண்டு

---

* பார்க்க : மேற்றிராணியார் வைட்ஹெட் – சென்னை அருங்காட்சியக மடல் தொகுதி 3, 136. 1907. (See : Bishop Whitehead - Madras Museum Bull., Vol.3, 136, 1907.)

பன்றிகள் கொல்லப்படும். அப் பன்றிகளின் குருதி சிந்திக் கிடக்கும் தரையின் மீது நடக்கும்படியாக ஊரைச் சேர்ந்த ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் அழைக்கப்பட்டுவர். குடங்கு அவர்கள் அனைவருக்கும் புலியினிடமிருந்து பாதுகாக்கும் மந்திரித்த மருந்தினைத் தருவான். குடங்கு புலியால் கொல்லப்பட்டவன் குல்பாவோடு தொடர்புகொண்டு அவன் எவ்வாறு புலியால் கொல்லப்பட நேர்ந்தது என்ற விவரத்தைக் கேட்டறிவான். சவரர் வாழும் மற்றொரு பகுதியில் இத்தகையதொரு சடங்கு வழக்கில் இல்லை. அங்கு ஒருவன் புலியாலோ சிறுத்தையாலோ கொல்லப்பட்டால் இறந்துபோனவனுடைய குல்பாவிற்காகச் சில மாதங்களுக்குப் பின் ஒரு எருமையினைப் பலியிடுகின்றனர். இதற்கான விருந்து இருட்டும்முன் தொடங்கும். மறுநாள் காலையில் எருமையினைப் பலியிடுவர். மருந்து ஏதும் பயன்படுத்தப்படுவதில்லை. தெய்வத்தால் ஏற்பட்ட தீங்கினைப் போக்க நிகழ்த்தும் பலிக்காக வேண்டி முதலில் மழையினை எதிர் பார்த்துக் காத்திருப்பர். இந்தச் சடங்கின்போது குடங்கு, கோமங்கொ மற்றும் ஊரைச் சேர்ந்த முக்கியமான ஒருவன் ஆகியோர் நிகழ்ச்சிகளை நடத்துவர். கிடுங்குவிற்காக ஊருக்கு வெளியே ஒரு பன்றியும் ஆடும் பலியிடுவர். சவரர் நாட்டில் மற்றப் பகுதிகளில் காணப்படுவதைவிட கொளகோட்டைப் பகுதியில் குல்பாக்கள் இயற்றும் தீங்குகள் பற்றிய நம்பிக்கை ஆழ்ந்ததாக உள்ளது. மற்ற பகுதிகளில தேவதைகளே எல்லாத் தீங்குகளையும் இயற்றுவதாக நம்புகின்றனர். சாவினையும் நோயினையும் நிகழ்த்துபவர்கள் தேவதைகள் அல்லது குல்பாக்கள். குடங்கே எந்த ஆவி நோயாளியின் மீது ஏறியுள்ளது என்பதனையும் அதனை வெளியேற்ற என்ன செய்ய வேண்டும் என்பதனையும் அறிந்து கூறுபவன். அவன் அதனை அறிந்து கூறப் பின்வரும் வழியினைப் பின்பற்றுகின்றான். ஒரு அகலில் எண்ணெயும் திரியும் இட்டு அதனை ஏற்றி நோயாளியின் கையில் தந்தபின் தன் இடக் கையால் நோயாளியின் மணிக்கட்டைப் பற்றியபடி வலக்கையிலுள்ள கோப்பையிலிருந்து அரிசி மணிகளை ஒவ்வொன்றாக எரியும் தீபச் சுடர் மீது விழும்படி போடுவான். ஒவ்வொரு அரிசி மணி விழும்போதும் அவன் ஒரு தேவதை அல்லது குல்பாவின் பெயரைக் கூறுவான். எந்தத் தேவதையின் பெயரைச் சொல்லும்போது அரிசி மணியில் தீப்பிடிக்கின்றதோ அந்தத் தேவதையே நோயினைத் தந்தது என முடிவு செய்வான். குடங்கு உடனே அந்தத் தேவதை அல்லது குல்பாவோடு தொடர்பு கொண்டு அத் தேவதைக்கு

அல்லது குல்பாவிற்கு எதனைப் பலியாகத் தந்தால் அது அவனைவிட்டு வெளியேறும் என்பதனைத் தெரிந்துகொள்வான். சவரர் நாட்டில் வேறு சில பகுதிகளில் ஒருவனுடைய நோய்க்கான காரணத்தைத் தெரிந்துகொள்ள குடங்கு கையாளும் வேறொரு முறையும் உள்ளது. அவன் நோயுற்றவன் கையினைக் கால்மணி நேரம் பிடித்திருந்தவனாகத் தன்னை மறந்த நிலையில் இருப்பான். அப்போது நோயினைத் தந்த தேவதை அல்லது குல்பா அவனோடு தொடர்பு கொண்டு அதன் சினம் தணிவிக்க என்ன செய்ய வேண்டும் எனக் கூறும். இதுபோலக் குறிகூறும் செயலில் ஈடுபடும் குடங்கு உண்ணாது விரதம் மேற்கொண்டவனாக இருப்பான். நோயுற்ற ஒருவனை விட்டுத் தேவதை அல்லது குல்பா போக மறுக்குமானால் அதனைவிடச் சக்தி வாய்ந்த தேவதையினை ஏவி அதனை வெளியேற்றுவர்."

பெரிய அளவில் பலிச் சடங்கு நிகழ்த்துவது தொடர்பாகத் திரு.பாவ்செட் தந்துள்ள நீண்ட கட்டுரையின் சுருக்கம் வருமாறு :- குடங்கு நரைத்த தாடியோடு கூடியவன். சுமார் 40 அல்லது 50 வயதுடைய மெலிந்த தோற்றம் உடையனவாகக் காட்சித் தந்தான். அவன் தலையில் பெரியதொரு இறகுக் கொத்தினைச் செருகியனவாக இடை வேட்டியினை சவரர் அணியும் வழக்கப்படி முன்னும் பின்னும் கொசுவம்விட்டுக் கட்டிக் கொண்டிருந்தான். பலிக் குழுவினருடன் தப்பட்டை அடிப்பவர்களும் இருந்தனர். ஒரு சிறுவனுக்குக் காய்ச்சலினைத் தந்துள்ள தேவதையினை ஒட்டுவதற்காகப் பலி தர அச் சிறுவன் வீட்டின் முன் ஒரு எருமை கட்டிப் போடப்பட்டிருந்தது. அந்தச் சிறுவனின் தாயார் சிறிது தானியத்தையும் பிற உணவுக்கான பொருள்களையும் தன் கையில் ஒரு கூடையில் எடுத்தவளாக வந்தாள். அந்தச் சிறுவனை அவனுடைய தந்தை தூக்கி வர ஒருவன் எருமையினை இழுத்துச் செல்ல குடங்கு அதனைப் பின்னால் இருந்து விரட்டியவனாகச் சென்றான். அவர்கள் புறப்படும்போது குடங்கு புரியாதபடியாக ஏதோ சிலவற்றை முணுமுணுத்தான். அது பலி பெறவுள்ள தேவதையினை நோக்கிக் கூறப்பட்டதாதல் வேண்டும். அக் குழுவினர் ஒரு மரத்தின் அடியே நிழலில் சென்று நின்றனர். சாலையில் குடியிருக்கும் தெய்வத்திற்கே பலி தரப் போவதாக அவர்கள் கூறினர். பலிக்குப் பின் அது அந்த சாலை வழியே போய்விடும் எனக் கூறினர். அங்கு வந்து சேர்ந்தவுடன் அந்தச் சிறுவன் தாயார், அவள் எடுத்து வந்த

கூடையினை கீழே வைத்தான். நெருப்பு மூட்டினர். சுமார் 20 கெச தூரத்திற்கு அப்பால் கட்டப்பட்டிருந்த எருமை மேய்ந்து கொண்டிருந்தது. கால் மணி நேரம் சென்றபின் சிறுவனின் தந்தை அச் சிறுவனைத் தன் மடியில் உட்கார வைத்தவனாக அந்தச் சாளையில் அமர்ந்தான். குடங்கின் உதவியாளன் தன் தப்பட்டையுடன் அவனுக்கு இடப்புறம் அமர்ந்தான். தன் கையில் சிறியதொரு புதிய மண் சட்டியினைப் பிடித்தவனாகக் குடங்கு அந்தச் சிறுவனின் தந்தையின் முன் நின்றான். அவன் உதவியாளன் நிமிடத்திற்கு 150 கொட்டு என்ற கணக்கில் தப்பட்டையை முழக்கினான். குடங்கு அந்த மண் சட்டியினைத் தன் வாயருகே வைத்தபடி கதிரவனை ஏறிட்டுப் பார்த்தவனாக (அப்பொழுது மணி காலை 9 மணி) அச் சட்டியினுள் எதனையோ முணுமுணுத்தான். பின் தன்னைத்தானே சுற்றி ஆடியவனாக இருந்தான். அப்பொழுது அவன் அந்தச் சட்டியினைச் சற்று உயர வீசி இருகைகளாலும் பிடித்தவனாக இருந்தான். அந்தச் செயல் தப்பட்டை ஒலியின் லயத்தோடு இணைந்து இயைந்ததாக இருந்தது. இவ்வாறு கால் மணிநேரம் முணுமுணுத்தபடி ஆடியபடி அவன் செயல்பட்டான். இடையிடையே அவன் அந்தச் சட்டியினைச் சூரியனை நோக்கி உயர வணக்கம் செலுத்துவது போலக் காட்டி வந்ததோடு அந்தச் சிறுவனுடைய தலையினையும் அவன் தந்தையினுடைய தலையினையும் அதைக் கொண்டு சுற்றினான். இவ்வாறு சுற்றும் செயலும் தப்பட்டையின் லயத்தோடு இயைந்ததாகவே இருந்தது. இவ்வாறு மந்திரத்தை ஓதி முடித்தபின் அந்தச் சட்டியினைக் கீழே வைத்துவிட்டு ஒரு பொம்மையினை ஒத்த வில் அம்பினைக் கையில் எடுத்துக்கொண்டான். அந்த வில் சுமார் இரண்டடி நீளம் உடையதாக இருந்தது. அதில் அகன்ற முனையோடு கூடிய ஓர் அம்பினைப் பொருத்தினான். அது ஓரளவே பின்னோக்கி இழுக்கக் கூடியதாக மிக அகன்ற முனையினை உடையதாக இருந்தது. அதனை வில்லிலிருந்து பிரிக்க இயலாதபடி அது வில்லோடு ஒரு கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்தது. அதன்பின் அவன் அந்த அம்பின் முனையில் ஒரு மெழுகு உருண்டையினைச் செருகினான். அதன்பின் முன்புபோலவே ஆடியபடி தப்பட்டையின் லயத்திற்கு இயைய மந்திரத்தை முணுமுணுக்க தொடங்கினான். மேலே கதிரவனைப் பார்த்து வில்லில் உள்ள அம்பினைக் குறி வைத்து அந்த மெழுகு உருண்டையினைச் செலுத்தினான். மேலும் சில மெழுகு உருண்டைகளை அச்சிறுவனின் தலை, வயிறு, கால்கள்

ஆகியவற்றின்மீது செலுத்தினான். அங்கிருந்த உரியர் அவை ஒருவகை மருந்து எனக் கூறினர். ஒவ்வொரு உருண்டை செலுத்தப்பட்டபோதும் அச்சிறுவன் அழுதான். பின் மந்திரங்களை முணுமுணுத்தபடியே குடங்கு எருமை கட்டப்பட்ட இடத்திற்குச் சென்று அதன் தலைமீது ஓர் உருண்டையை எய்தான். மீண்டும் அச்சிறுவனின் தந்தை அமர்ந்திருந்த இடத்திற்குத் திரும்பி வந்த அவன், சுமார் ஓரடி நீளமும் ஒரு அங்குல அகலமும் உள்ள இரண்டு மெலிந்த மரக்கட்டைகளை எடுத்தான். அவற்றின் இரு முனைகளும் கறுப்பு வண்ணம் உடையனவாயிருந்தன. அவன் வில்லினைக் கீழே வைத்துவிட்டு அந்தக் கட்டைகளைக் கையில் மாற்றிக் கொள்ளும் சமயத்தில் அவன் மந்திர முணுமுணுப்பு சற்றே ஓய்ந்திருந்தது. அவற்றைக் கையில் எடுத்துக் கொண்டவுடன் அவன் மீண்டும் மந்திரத்தை முணுமுணுத்தபடி அந்த இரு கட்டைகளையும் லயம் தவறாமல் ஒன்றோடு ஒன்றைத் தட்டியவானக நடனமாடியபடி சுற்றி வரலானான். இவ்வாறு ஐந்து நிமிடங்கள் ஆடிய அவன் அந்த ஆட்டத்தின் நடுவே தன் தலையில் குடைபோல் ஒன்றினைப் போட்டுக் கொண்டான். நடனம் முடிந்ததும் எருமையினை அடைந்து அதன் உடலெங்கும் அந்த இரு கட்டைகளாலும் அதனைத் தலையில் தொடங்கிப் பிட்டம்வரை தட்டிக் கொடுக்கலானான். பின்னர் அவன் மந்திரம் முணுமுணுத்தல் ஓய்ந்தது. அதன்பின் அவன் அந்தச் சிறுவன் முன் அமர்ந்து மண் சட்டியில் ஒரு கைப்பிடி மூலிகை இலைகளைப் போட்டு அதனுள் சிறிது தண்ணீரும் ஊற்றினான். மந்திரம் சொல்லியபடி அந்தத் தண்ணீரையும் பச்சிலைகளையும் அந்தச் சிறுவன் தலையில் முதலில் தெளித்துப் பின் அவன் தந்தையின் தலையிலும் தெளித்தான். மீண்டும் அந்தத் தண்ணீரை அச்சிறுவன் தலையில் தெளித்தபின் எருமையின் தலைமீதும் பூசினான். பின் அச்சிறுவனின் காதுகளில் மாறிமாறி ஊதியபின் முணுமுணுப்பதை நிறுத்தியவனாகப் பாதையில் அமர்ந்துவிட்டான். அந்தச் சிறுவனின் தந்தையும் சிறுவனைத் தூக்கியவனாக எழுந்து அந்தச் சிறுவனையும் சாளையில் உட்கார வைத்தான். அதன்பின் அந்தச் சிறுவன் தொட்டுத் தந்த ஒரு கோடரியோடு அந்த எருமை நிற்கும் இடம் சென்று ஒரே போடாக எருமையின் கழுத்தில் கோடரி பதியும்படியாக வெட்டினான். பின் கோடரியைத் திருகி எடுத்து மேலும் அதே இடத்தில் இரண்டு மூன்று வெட்டுக்கள் வெட்டியபின் எருமை பக்கவாட்டில் கீழே சாய்ந்தது. அது விழுந்தவுடன் அச் சிறுவனின் தந்தை அங்கிருந்து அகன்றான்.

எருமையின் மீது முதலாவது வெட்டு விழுந்தபோது திடீரெனப் பீதியுற்றவனைப் போலக் குடங்கு தன் இரு கைகளையும் சற்றே மேலே குவித்தபடி அங்கிருந்து எழுந்து அப்படியும் இப்படியும் தள்ளாடி நடக்கலானான். அவன் உதவியாளன் ஓடிவந்து அவனைக் கட்டிப் பிடிக்கக் குடங்கு திமிறியவனாகக் குருதி கொட்டியபடி இருக்கும் எருமையினை நோக்கி ஓட முயற்சித்தவனாக இருந்தான். சிறுவனின் தந்தை மூன்றாவது வெட்டு வெட்டும்வரை அதுபோலத் திமிறியபடி இருந்து அவனிடம் அச் சிறுவனின் தந்தை ஒரு தொன்னையில் எருமையின் குருதியினைக் கொஞ்சம் கொண்டுவந்து தந்தவுடன் அதனை வெறிகொண்டவனாகப் பருகிய அவன் உடனே அமைதியடைந்தவனானான். அவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் தந்தவுடன் அவன் தன் பழைய நிலையை அடைந்தான். ஓரிரு மணித் துளிகள் சென்றபின் அந்தச் சாளையில் தப்பட்டையோடு அதனை அடித்து முழக்கியபடி முன்பு போல மந்திரங்களை முணுமுணுத்தவனாக அவன் அமர்ந்துவிட்டான். அந்தச் சிறுவனின் தந்தை மீண்டும் எருமையிடம் சென்று மேலும் சில வெட்டுக்களில்,. துடித்தபடி கிடக்கும் அதனை ஒருவழியாக உயிரிழக்கச் செய்தான். அவனுடன் மேலும் இரண்டு மூன்று பேர் சேர்ந்துகொண்டு கோடரிகளாலும் வாள்களாலும் அந்த எருமையினை வெட்டித் துண்டங்களாக்கினர். குடங்கு தவிரக் கூடியிருந்து அனைவருக்கும் நல்ல விருந்து தரப்பட்டது. அவர்கள் உண்ணும்போது தப்பட்டை முழக்கம் ஓய்ந்திருந்தது. அதன்பின் குடங்கு மீண்டும் நிமிடத்துக்கு 156 கொட்டுக்கள் வீதம் 25 நிமிடங்கள் தொடர்ந்து அதனை முழக்கினான்.

மேலே விவரிக்கப்பட்ட சடங்கினை குனுப்பூர் மலைப் பகுதிகளில் எப்படி மாறுபட்ட விதத்தில் நடத்துகின்றார்கள் எனத் திரு.ஜி.பாடீசன் எனக்குத் தெரிவித்துள்ளார். அப் பகுதியில் நோயுற்றவள் வீட்டு வாசலிலேயே எருமையினைக் கட்டிப் போடுவர். சிறு தட்டுக்களில் அரிசி, பச்சிலைகள், பித்தளைப் பாத்திரத்தில் கள், சோற்றுருண்டைகள், மலர், மருந்து, வில்லும் அம்பும் ஆகியன அங்குக் கொண்டு வந்து சேர்க்கப்படும். அம்பு முனைப் பகுதியினைவிட கையால் பற்றும் பின்பகுதி தடித்ததாக இருக்கும். அதனைச் செலுத்தும்போது வில்லில் உள்ள சிறிய துளை வழியே மெலிந்ததான முன் பகுதி மட்டுமே பாய்ந்து செல்லும். பேஜு (அகவன் மகளை ஒத்தவள்) எனப்படும் பெண் கள்ளினைப்

பச்சிலைகள் மீதும் அரிசி மீதும் ஊற்றி அவற்றை எடுத்து நோயுற்றவள் நெற்றி, மார்பு, வயிறு, முதுகு ஆகிய பகுதிகளில் தேய்ப்பாள். தேவதையின் தேவதையின் கருத்தைக் கவர இடையிடையே "தளு" என உரக்கக் குரல் கொடுத்தவளாக அவள் நீண்டதொரு வாழ்த்தினைக் கூறுவாள். பின் மண்டியிட்டவராக உள்ள நோயாளியின் பின்புறம் வந்து நின்று, மருந்து உருண்டைகளை அம்பு முனையில் செருகி அதனை நோயுற்றவன் மீது எய்வாள். அந்த அம்புகள்அவற்றின் முனையில் செருகப்பட்ட உருண்டைகளை மட்டும் செலுத்தக் கூடிய அமைப்புடையனவாக இருக்கும். இவ்வாறு நோயாளியின் உடல் முழுதும் படும்படி அம்புகள் எய்யப்படும். அதன்பின் பேஜு எருமையின் மீதும் ஓரிரண்டு உருண்டைகளை எய்வாள். பின் அதனை ஊரெல்லையில் உள்ள முச்சந்திக்கு ஓட்டிச் சென்று கோடரியால் வெட்டிக் கொன்று அதன் குருதியினைக் கொண்டு வந்து அரிசி, கள் ஆகியவற்றோடு இட்டுக் கலந்து நோயாளியின் உடல் முழுக்கப் பூசுவர். விருந்துக்குப் பின் சடங்கு முடிவுறும்.

அப்பகுதியில் பெயர்போன குடங்கின் **தங்கைக்கு** நோயினைத் தந்த ரது தேவதைக்குக் கொடுக்கப்பட்ட பலி பற்றித் திரு.பாவ்செட் தந்துள்ள விவரங்கள் வருமாறு :– தன் கைவிரல்களைக் காதுகளின் உள் திணித்தவனாகக் குடங்கு மேற்குத் திசையினைப் பார்த்தவனாகக் குந்தியிருந்தான். தலையினை இருபக்கமும் ஆட்டியபடி மந்திரங்களை முணுமுணுத்தபடி இருந்த அவனுக்கு முன்னால் இரண்டடி தூரத்தில் மூங்கில் பிளாச்சுகளால் செய்யப்பட்ட ஒரு பொருள் வைக்கப்பட்டிருந்தது. அதன்மீது தொன்னை ஒன்றின் உதவியோடு குருதியினைப் பிடித்துக் கொட்டும்படி வசதியாக பன்றிக் குட்டி ஒன்றினைக் கொன்றனர். அக் குருதி அந்த மூங்கிலால் செய்யப்பட்ட பொருள்மீது தெளிக்கப்பட்டது. குடங்கு மந்திரத்தைத் தொடர்ந்து முணுமுணுத்தவனாக இருந்தான். இது ஒன்றரை மணிநேரம் நிகழ்ந்தது. அச் சமயம் எட்டு சவரர்கள் பலியிட்ட பன்றியினைத் தானியத்தோடு கூட இட்டுச் சமைத்து நல்ல விருந்து உண்டனர். மூங்கிலால் செய்து வைக்கப்பட்ட பொருளுக்கும் குடங்கிற்கும் நடுவே மூன்று தொன்னைகளில் அவர்கள் தாங்கள் சமைத்ததனை ரது தேவதைக்காக வைத்திருந்தனர். மந்திரம் ஓதி முடித்தவுடன் அவன் எழுந்து தன் பங்கினை உண்டான். மற்றொரு சடங்கின்போது ஒரு மாதத்திற்கு முன் பலியிடப்பட்ட எருமையின்

உலர்ந்த இறைச்சித் துண்டங்களை கொண்டு வந்து பலியின்போது உடன் படைத்ததை நான் கண்டேன். மூன்று ஆண்களும் ஒரு சிறுவனும் ஒரு குழந்தையும் அப்போது காட்டில் அமர்ந்திருந்தனர். உணவு தயாரித்தவர்களாக இருந்த ஆண்கள் தாங்கள் ஒருவனுக்கு நோயினைத் தந்துள்ள கதிரவனை வழிபட இருப்பதாகக் கூறினர். சூரிய தேவனுக்காக அவர்கள் சமைத்த உணவில் ஒரு பகுதி இலையில் படைக்கப்பட்டது."

குழந்தைகள் கடுமையான நோயால் தாக்கப்பட்டவர்களாக இளைத்துத் துரும்பாக ஆகும்போது குரங்குகளுக்கும் ஓணான்களுக்கும் படையலிடும் பழக்கம் சவரரிடையே இருப்பதாகத் திரு.ராமமூர்த்தி பந்துலு பதிந்துள்ளார். இவ்வாறு அவற்றுக்குப் படையலிடக் காரணம் குரங்கும் ஓணானும் நோயினைத் தந்தவை என்பதால் அன்று. நோயால் மெலிந்து இளைத்த குழந்தைகள் குரங்கையும் ஓணானையும் ஒத்தனவாகத் தோற்றம் தருவதே அவற்றிற்கு இவ்வாறு பலியிடக் காரணமாகும். இச் சடங்கில் ஒரு ஓணானைப் பிடித்துச் சிறு அம்புகளை அதன் உடலில் கட்டி அதன் தலையில் சிறு துணியினைச் சுற்றி வாயில் கொஞ்சம் சாராயத்தை ஊற்றி அதனை மீண்டும் உரிமையோடு செல்ல விட்டு விடுவர். குரங்குக்காகக் காட்டில் மரக்கிளைகளில் தனுர்ஜல் எனப்படும் மூங்கில் பெட்டிகளில் சோறு முதலியவற்றை வைத்துத் தொங்கவிடுவர். சவரர் மலையடிவாரத்தில் சமவெளிகளில் கூடும் சந்தைகளுக்கு உப்பும் பிற மளிகைப் பண்டங்களும் வாங்கச் செல்வர். சந்தையிலோ அங்கிருந்து திரும்பும்போதோ சவரன் ஒருவன் நோயுற்றவனாயின் அவன் சந்தையினைச் சேர்ந்த ஆவியான பிரடிசொணும் எனும் ஆவியின் தாக்குதலாலேயே தனக்கு அந்த நோய் வந்ததாகக் கருதுவான். உப்பினைச் சந்தைக்குச் சுமந்து வரும் இந்துக்களான வணிகர்களின் காளையின் மீதேறி இந்த ஆவியும் வருவதாக நம்பப்படுகிறது. இதனைத் திருப்திப்படுத்த வைக்கோலால் ஒரு காளையின் உருவம் செய்து அதனை ஊருக்கு வெளியே முச்சந்தியில் கொண்டு வைத்து ஒரு பன்றியினைப் பலியிடுவர்.

"பேராள் எனப் பொருள்படும் கோமொங், போய எனப்படும் அவன் உதவியாளன் ஆகிய இரு தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே சவரர்களின் குழு ஒவ்வொன்றும் இருந்து வருகின்றது. போய,

கோமொங்குடன் இணைந்து செயல்பட்டவனவாக குற்றம் இழைப்பவர்களுக்குத் தண்டனை வழங்குவதோடு தலைமைப் பூசாரிக்கு உரிய பணிகளையும் செய்து வருகின்றான். இந்த இரு அலுவலர்களும் பரம்பரைப் பதவி உரிமையுடையவர்கள். குடும்பத்தில் மூத்தவனின் சந்ததியினரே இப்பதவிகளுக்கு உரியர். அவர்கள் திறமையற்றவர்களாயின் மற்றவர்கள் அப்பதவிகளை அடையலாம். திருமணம், சாவு, அறுவடை விழா ஆகியவற்றின்போது இவர்கள் இருவரும் வந்திருத்தல் இன்றியமையாதது. நிலத்தை விற்றல், அடகு வைத்தல், கள்ளுக்கு மரங்களை விடுதல், பாகப் பிரிவினை, சொத்துக்கள் தொடர்பான வழக்குகள், மணமுறிவு முதலிய அனைத்தும் கோமெங்கொவும் போயனும் தலைமை தாங்கி நடத்தும் ஊர்ப் பெரியவர்கள் அடங்கிய சபையினால் தீர்த்து வைக்கப்படும். குற்றவியல், மற்றும் உடமை உரிமை தொடர்பான எல்லா வழக்குகளையும் இவர்களே கேட்டுத் தீர்ப்பு வழங்குவர். எல்லாக் குற்றங்களுக்கும் தண்டம் விதிக்கப்படும். தண்டத்தைச் சாராயமாகவோ கால்நடையாகவோ செலுத்த வேண்டும். செலுத்தப்பட வேண்டிய சாராயத்தின் அளவும் கால்நடைகளின் எண்ணிக்கையும் குற்றத்திற்குத் தக்க அளவுடையனவாகஇருக்கும். ஆண்களைக் கொலை செய்தலைக் காட்டிலும் பெண்களைக் கொலை செய்தல் பெருங்குற்றமாகக் கருதப்படுகின்றது. பெண்களை இனத்தின் வளர்ச்சிக்கு உதவக் கூடியவர்களாகக் கருதப்படுவதே இதற்குக் காரணம். திருட்டில் ஈடுபட்டுள்ள ஒருவனை அக் குற்றச் செயலின்போது சுட்டுக் கொல்லலாம். கள்ளக்காதல் விவகாரங்களில் ஆண்கள் மட்டுமே தண்டிக்கப்படுகின்றனர். வழக்கின்போது சத்தியம் செய்ய சொல்லப்படுவதோடு வழக்கில் தொடர்புடையவர்கள் கடுஞ்சோதனைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை சவரர் குற்றவியல் நடுவர்கள், கொலைக் குற்றங்களைக் கூட விசாரிக்கும் உரிமை பெற்றிருந்தனர். அவனே கிராமத்தவர்களிடையேயான எல்லா வழக்குகளிலும் இறுதித் தீர்ப்பினை வழங்கும் உரிமையுடையவன். தன் ஊராருக்கும் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே ஏதேனும் வழக்கு மூளுமானால் அதனைத் தீர்க்க இரு ஊராரும் தங்களுக்கிடையே சண்டை நிகழ்த்துவர். இப் போரில் கோமொங்கொவே தன் ஊரவர்களைத் தலைமை தாங்கி நடத்திச் சென்று முழுமூச்சுடன் எதிரிகளைத் தாக்குவான். இத்தகைய

பல பொறுப்பான கடமைகளை நிறைவேற்ற வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகின்றவர்களாக உள்ள இவர்கள் இதன் காரணமாகச் சமூகத்தில் வேறு தனிச் சலுகைகள் எதற்கும் உரியவர்களாகக் கருதப்படுவதில்லை. வழக்காடிகளிடமிருந்து இவர்கள் கட்டணம் ஏதும் பெற்றுக்கொள்ளவும் கூடாது. இவர்கள் தலைமை தாங்கி நடத்தும் ஊர்ப்பொது விழாக்களின்போது மட்டும் இவர்கள் ஊர்ப் பெரியவர்களுக்குச் சமமான தகுதியுடையவர்களாகக் கருதப்படுகின்றனர். சவரன் ஒவ்வொருவனும் தன் நிலத்தில் தானே பயிரிடுவதோடு தன் வீட்டையும் தானே கட்டிக் கொள்கின்றான். அவன் மனைவி சமைப்பதற்கான விறகையும் தண்ணீரையும் தேடி வருவதோடு குடும்பத்திற்கு வேண்டிய உணவையும் சமைப்பாள். அவன் மகன் கால்நடைகளை மேய்த்து வருவதோடு பயிர்களையும் காவல் காப்பான். ஆங்கிலேய அலுவலர்களும் பிஸ்ஸோயிகளும் சவரர்களின் சமூக அலுவலர்களுக்குச் சில தனிச் சிறப்புக்களைத் தருகின்றனர். ஆளுநரின் முகவர் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் சுற்றுப்பயணத்தின்போது சவரர் இனத்தைச் சேர்ந்த பெரியவர்களுக்குப் பேட்டி தருவார். அவர்கள் கோழி, ஆடு, முட்டை, அரிசி ஆகியனவற்றை அவருக்கு அன்பளிப்பாக வழங்கி அவரிடமிருந்து துணிமணிகள், கழுத்துச் சங்கிலிகள் முதலியனவற்றைப் பெற்றுக் கொள்வர். பிற சவரர்களைக் குற்றேவல் பணிக்கு ஏவுவதைப் போலப் பிஸ்ஸொயிகள் இவர்களை அத்தகைய பணிக்கு ஏவுவதில்லை" எனத் திரு.ராமமூர்த்தி எழுதியுள்ளார். சங்கராந்தியின்போது சவரர் விறகுக் கட்டுகள், காட்டு வள்ளி, பூசணி முதலியவற்றைப் பிஸ்ஸொயிகளுக்குக் கொண்டு தந்து அவர்களிடமிருந்து அன்பளிப்புகளைப் பெற்றுச் செல்வர்.

பயிரிடுதலை மேற்கொண்டிருப்பதோடு கூட மந்தாரை இலைகளைச் சேகரித்து, உண்ணும் இலைகளைத் தயாரிப்பவர்களுக்கு விற்கின்றனர். ஜெல் அத்தா எனப்படும் மந்தாரை (***Bauhinia purpurea***) இவர்களால் மிகுந்த மதிப்புடையதாகப் போற்றப்படுவதோடு சவரர்களின் மூதாதையர்களின் ஆவிகள் அவற்றிடம் கனித்த மதிப்பு உடையன. ஆதலால் ஆவிகளுக்கானபடையல்களை அந்த இலையிலேயே வைத்துப் படைக்கின்றனர். சவரர் தேன், மெழுகு முதலிய பல காடுபடு பொருள்களையும் சேகரிக்கின்றனர். இலுப்பைப் (***Bassia latifolia***) பூவிலிருந்து சாராயம் வடிக்கும் முறை இவர்களுக்குத் தெரியும். அதனை விசாகப்பட்டின மாவட்ட விவரக் குறிப்புப் பின்வருமாறு

விளக்குகின்றது:- "இப்பூக்களை மூன்று நான்கு நாள்கள் வரை தண்ணீரில் ஊற வைத்தபின் மண் பானையிலிட்டு வேக வைப்பர். இந்தப் பானையின் மீது மற்றொரு பானை குப்புறக் கவிழ்த்து வைக்கப்படும். இவற்றிடையேயான பொருத்துவாயினைத் துணியினைச் சுற்றி அதன்மீது களிமண்ணைப் பூசி அடைப்பர். மேலே கவிழ்க்கப்பட்டுள்ள சட்டியில் ஒரு துளையிட்டுத் துளையுடைய ஒரு மூங்கிலை அதில் சொருகி அதற்காகவென்றே தயாரிக்கப்பட் மூன்றாவதான பானையோடு இணைப்பர். கோளவடிவிலான இப் பானையில் மூங்கில் செருகப்படுவதற்குரிய துளையின்றி வேறு திறப்பு ஏதும் இருக்காது. இதன்மீது ஓயாது குளிர்ந்த தண்ணீரை ஊற்றியவர்களாக அதனுள் மூங்கில் குழாய் வழியாக வடியும் ஆவியினைச் சாராயமாகத் திரளும் செய்வர்."

1863 – ஆம் ஆண்டில் சவரர் நாட்டுப் பகுதியில் பயணம் மேற்கொண்ட சென்னை மாநில ஆளுநர் தந்துள்ள அறிக்கையில் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :- "குணுப்பூரில் சவரர் பழங்குடியினர் குணுப்பூரையும் பெத்த கிமெதியினையும் பிரிக்கும் மலைப் பகுதியில் வாழும் சவரரான பழங்குடிகள் திருட்டுக்களில் ஈடுபடுவதாகப் பலர் என்னிடம் முறையிட்டுக் கொண்டனர். இவர்கள் கொள்ளையர் அல்லர். வீடுகளில் புகுந்து திறமையாகத் திருடுவர். இரவில் மண் சுவரில் கன்னமிட்டு வீட்டினுள் புகும் இவர்களைக் கண்டுபிடித்தால் அப்போது அம்புகளைச் செலுத்தவும் பின் வாங்கார். அதில் குறி தவறாதவர்களாக அடிபடுபவர்களைப் பெரும் ஆபத்துக்களுக்கு உள்ளாக்குவர். இப்பகுதிகள் நமது ஆளுகையின் கீழ் வந்தபின் இவர்கள் மூன்று அல்லது நான்கு கொலைகள் செய்துள்ளனர். நான் காவல்துறைக் கண்காணிப்பாளரிடம் ஆயுதப் படைக்காவலர் பிரிவு ஒன்றினைச் சவரர் பகுதிக்குச் செல்லும் பள்ளத்தாக்கில் நிறுத்தும்படி கூறியுள்ளேன். ஓரிரு குற்றவாளிகள் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்களானால் இத்தகைய குற்றச் செயல்கள் கட்டுக்கடங்கி விடும்."

சவரர்களோடு ஏற்பட்ட மோதல் தொடர்பாக விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில் பதியப்பட்டுள்ளதாவது :- "1864 – இல் சவரர் தொல்லை தரத் தொடங்கினர். அவர்கள் சாதித் தலைவன் ஒருவனை முறைமைக்கு மாறாகக் காவல் துறையினர் கைது செய்தமையால்

அவர்கள் காவல் துறை மேலாளர் ஒருவரையும் காவலர் நால்வரையும் கொன்றதோடு காவல் நிலையத்திற்குத் தீயிட்டுத் தங்கள் சாதித் தலைவனை மீட்டுச் சென்றனர். இக் குற்றம் இழைத்தவர்களைக் கைது செய்யச் செயப்பூர் அரசரிடம் அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இறுதியில் இக் குற்றம் இழைத்தமைக்காக இருபத்தினான்கு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் ஒன்பது பேர் நாடு கடத்தப்பட்டனர். ஐவர் மரண தண்டனை விதிக்கப்பட்டு பொட்டசிங்கி மலையடிவாரத்தில் உள்ள ஜல்தேருவில் தூக்கிலிடப்பட்டனர். இவர்களைப் பிடிக்க உதவியமைக்காக அரசு செயப்பூர் அரசருக்கு ஒரு துப்பாக்கியினையும் பிற பரிசில்களையும் தந்து சிறப்பித்தது. எனினும் நாட்டில் உடனடியாக அமைதியேற்படவில்லை. 1865–இல் கலவரப் பகுதியில் காவல் நிலையம் அமைக்க அனுப்பப்பட்ட காவலர்கள் தாக்கப்பட்டதால் அவர்கள் சமவெளிக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. பின்னர் மீண்டும் பெரிய எண்ணிக்கையில் காவலர்கள் அனுப்பப்பட்டுச் சிறு இடையூறுகளைச் சமாளித்தபின் 1866 சனவரியில் காவல் நிலையம் அங்கு நிலைப்படுத்தப்பட்டது. இந்த முறை கலவரத்திற்குக் காரணமான முக்கியமான மூவர் நாடு கடத்தப்பட்டனர். தொடர்ந்து சில ஆண்டுகள் சவரர் மருண்டவர்களாகச் சந்தேகங் கொண்டு ஒதுங்கியே இருந்து வந்தனர். 1874–இல் தரப்பட்ட ஒரு அறிக்கையில் சவரர்கள் மீண்டும் வழக்கம் போலச் சமவெளிகளில் உள்ள சந்தைகளுக்கு வரத் தொடங்கியது குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகக் கூறப்பட்டுள்ளதோடு சமவெளியில் வாழ்பவர்களும் பள்ளத்தாக்கிற்கு மேலே வாழ்பவர்களைக் கண்டு அச்சம் கொள்ளாதவர்களாக நம்பிக்கையோடு பழகுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

1905–ல் கஞ்சம், விசாகப்பட்டினம் முகவர் பகுதிகளைச் சேர்ந்த சவரர் மற்றும் பிற பழங்குடியினரின் கல்வி வளர்ச்சிக்காக கல்வித்துறை அரசுப் பள்ளிகளைப் பொருத்தவரை பின்வரும் கருத்துக்களை நடைமுறைப்படுத்த ஒப்புதல் தந்து ஆணை வழங்கியுள்ளது.

1. மலைவாழ் பழங்குடியினருக்கு அவர்களுடைய தாய்மொழியிலேயே கல்வி தரவேண்டும். ஒரு சவரன் உரியமொழி மற்றும் தெலுங்கு ஆகிய இரண்டும் அறிந்தவனாக இருப்பானாகில் அவனுக்கு உரிய மொழியில் கல்வி தருவதே நலம் பயக்கும்.

2. வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் மாலைநேரம் பள்ளிகளைத் தொடங்க வேண்டும். அத்தகைய மாலை நேரப் பள்ளிகள் நடக்கும் கட்டிடங்களில் இரவில் முதியோருக்கு வாய்மொழியாகவே கற்றுத் தரலாம். இத்தகைய வகுப்புகளில் அவர்களை ஆர்வம் கொள்ளும்படிச் செய்ய ஒளிவிளக்கப் படங்களைப் பயன்படுத்தலாம்.

3. சவரர், கோண்ட் முதலியவர்களுக்கு மலைப் பகுதிகளில் தரப்படும் கல்வி உதவித் தொகை விதிகளின் கீழான சலுகைகள் சமவெளியில் உள்ள பள்ளிகளுக்கு வரும் இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தரப்படுதல் வேண்டும்.

4. முகவர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நேரில் பார்வையிடும் ஒரு அதிகார அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். மலைவாழ் பழங்குடிகளுக்காக அமைக்கப்படும் பள்ளிகளில் கல்வி கற்ற அந்த இனத்தைச் சேர்ந்தவர்களையே தேர்ந்தெடுத்து ஆசிரியர்களாக அமர்த்த வேண்டும்.

5. வாய்ப்புள்ள இடங்களில் இவர்களுக்கேற்ற கைத்தொழில் கல்வியும் அறிமுகப்படுத்துவதோடு கூட அதற்கான கருவிகளையும் வாங்கி அளிப்பதோடு புதியதான திட்டங்களை அறிமுகப்படுத்துபவர்களுக்கு உதவித் தொகையினைக் கூட்டியும் வழங்கலாம்.

சவர - Savara

மலைவாழ் பழங்குடிகள் என்பதனைக் குறிப்பதான சொல். மலை குடியர் இதனைத் தங்களுக்குரிய பெயராகக் கூறிக் கொள்வர்.

சாவு - Sāvu (death)

மாலரின் ஓர் உட்பிரிவு.

சாயக்காரன் - Sāyakkāran

தமிழ் நாட்டில் சாயம் போடுபவர்கள் கணக்கெடுப்பின்போது தங்களைப் பதிந்து கொண்டுள்ள தொழில் தொடர்பான பெயர்.

சாயும் படை தாங்கி – Sāyumpadai Tāngi

தோல்வியினைத் தழுவ உள்ள படைக்கு உதவுபவன் எனப் பொருள்படும். இப் பெயர் கள்ளரின் ஒரு பிரிவுக்குரிய பெயராக உள்ளது.

சேடன் – Sēdan

தேவாங்கருக்கான மற்றுமொரு பெயர். கணக்கெடுப்பின்போது சேடதாசி என்பது தேவாங்க மக்களுக்கு உரிய பெயராக மதுரை மாவட்டத்தில் பதியப்பட்டுள்ளது. கோயமுத்தூரைச் சேர்ந்த நெசவாளிகளின் சாதிக்குரிய தேவதையான சவடம்மா பற்றிய பின்வரும் வழக்கு வரலாற்றினை மேற்றிராணியார் வைட்ஹெட் * கூறியுள்ளார் :– "முன்னொரு காலத்தில் மானுடருக்கும் அரக்கருக்கும் இடையே கடும்போர் நிகழ்ந்த சமயத்தில் தோல்வியினைத் தழுவியவர்களாக இருந்த மானுடர் சிவனிடம் தங்களுக்கு உதவும்படி வேண்டினர். சிவன் தன் மனைவியான பார்வதியினை ஓர் அவதாரம் எடுத்துச் சென்று மானுடருக்கு உதவும்படி வேண்டினான். இவ்வாறு அவதாரம் எடுத்து வந்த தேவியின் உதவியால் மானுடர் அரக்கரை வென்றனர். நெசவாளர் சாதியினரே மானுடர் படையில் முன்னணி வீரர்களாக இருந்தமையால் இப்போரில் உதவ வந்த தேவி சவடம்மன் என்ற பெயரில் நெசவாளர்களின் தெய்வமானாள். நெசவாளருக்கு உரிய பட்டப் பெயரான சேடன் என்பதனோடு அம்மன் என்பது இணைந்ததான சேடர் அம்மன் என்ற பெயர் சவடம்மன் எனத் திரிந்து வழங்குகின்றது. இவள் இமயமலைக்கு அருகே நிலையாகக் கோயில் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது."

செகிடியர் – Segidi

கஞ்சம், விசாகப்பட்டினம் மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையினராக உள்ள கள் விற்போரும் சாராயம் காய்ச்சுவோருமான தெலுங்குச் சாதியார் செகிடியர்.

சென்னை அப்காரி சட்ட விதியின்படி கள் என்பது தென்னை, பனை, ஈச்சம் முதலிய மரங்களிலிருந்து எடுக்கப்படும் புளிப்பு ஏறிய அல்லது புளிப்பு ஏறாத பதநீராகும். சென்னை மாநிலத் தீர்வை விதிப்புத் தொடர்பான கையேட்டில், "நொதிப்பு ஏறாத கள் வரிவிதிப்புக்கு

* சென்னை அருங்காட்சியக மடல், V, 3, 1907. (Madras Museum Bulletin, V, 3, 1907.)

உள்ளாகாது. அவ்வாறு வரிவிலக்குப் பெற அவை உள்ளே புதிதாகச் சுண்ணாம்பு பூசப்பட்ட மண்கலயங்களில் சேகரிக்கப்பட வேண்டும். பானையிலிருந்து வெளிவரும் பதநீர் சேகரிக்கப்படுகின்ற கலத்தில் புளிப்பேறாமல் இருக்க அதில் பூசப்பட வேண்டிய பொருளான சுண்ணாம்பு பூசி மீண்டும் பாளையின்மீது கவிழ்க்க வேண்டும்." இதுபற்றி மேற்றிராணியார் கால்டுவெல்* கூறியிருப்பதாவது :- "பனைமுதலிய தென்னை வகைகளின் புளிக்காத பதநீரே உணவாகப் பயன்படுகின்றது. அதனைப் புளிக்கவிட்டால் நடுப்பகலுக்கு முன் புளித்துவிடும். அவ்வாறு புளித்துவிட்டால் அது கள் எனப்படும் போதை தரும் இனிய பானமாக மாறும்." பெய்ட்ரோ டெல்ல வல்லெ # தன் பயணக் குறிப்பில் தான், "இரவு வரும்வரை கலத்திலேயே மற்றவர்களை வரவேற்று உரையாடியபடித் தரி எனப்படும் தென்னை மரங்களிலிருந்து இறக்கப்படும் வெள்ளை நிறமுடைய சிறிது கலங்கலான இனிப்புக் கலந்த தெளிவற்ற சுவையுடைய நம்முடைய 'வினி பிக்கன்டி' (***Vini piccanti***) என்ற பானத்தை ஒத்ததான பானத்தைக் குடித்தபடி தங்கியிருந்தேன். பழரச மதுவை ஒப்ப இதனையும் மிகுதியாகப் பருகினால் போதையூட்டக் கூடியதாகும். "தென்னையிலிருந்து இறக்கப்படும் கள்ளினைக் குடித்தவர்களாக இரவு முழுதும் பாடியபடியும் கூக்குரலிட்டுக் களித்தபடியும் இந்தியர்கள் பொழுதைப் போக்குவர்" என 1673-இல் பிரையர் @ எழுதியுள்ளார்.

பனை வகை மரங்கள் பலவற்றினுடைய புளித்த பதநீரை நொதிக்கச் செய்து வடிக்கப்படுவதே சாராயம். 'சென்னை மாநிலத்தின் சில பகுதிகளில் சாராயம் விற்பவர்கள் தங்கள் அளவு கலங்களைக் குப்புறக் கவிழ்த்து வைப்பது அபசகுனமானது எனக் கருதுகின்றனர். கலால் வரித் துறையினர் சாராயக் கடைகளில் சாராயம் அளப்பதற்காக அலுமினியத்தால் சில அளவு கலங்களைச் செய்து கொடுத்தனர். சாராயத்தின் அரிப்பினால் அவை ஒழுகத் தொடங்கிவிட்டன. சாராயக் கடைக்காரர் அவற்றைக் குப்புறக் கவிழ்த்து வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். அவ்வாறு வைத்தால் அவற்றுள் சாராயம் அடியில்

* திருநெல்வேலித் திருச்சபை பற்றிய சொற்பொழிவுகள், 1857.
(Lectures on Tirunelvelly Missions, 1857.)

\# *Viaggi*, 1614 - 26.

@ கிழக்கிந்தியா, பெர்சியா பற்றிய புதிய விவரங்கள், 1698.
(A New Account of East India and Persia, 1698.)

தங்கியிராது வடிந்துவிடும். அவ்வாறு வைத்தால் அது தங்கள் கடைகளுக்கு துரதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் எனக் கூறி அவ்வாறு செய்ய மறுத்தனர். நேரே நிறுத்தி வைத்தால் நிற்காது கவிழும்படியாக அடியில் குழிவுடைய அளவு கலங்கள் செய்து வழங்கப்பட்டன. கடைக்காரர்கள் சோடா பாட்டில்களில் உள்ள ரப்பர் வளையங்களைப் பயன்படுத்தி அவற்றின் மேல் அந்த அளவு கலங்களை நிற்க வைத்தனர். அதன்பின் சாராயக் கடைக்காரர்கள் முளைகளில் அவற்றைத் திருப்பிய நிலையில் உள்ளே இருக்கும் சாராயம் வடியும்படியாகத் தொங்கவிடும்படி அறிவுறுத்தப்பட்டனர்.' என்பதனை கலால் வரி ஆணையர் என்னிடம் சிறிது காலத்திற்கு முன் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சி மூட நம்பிக்கைகளை ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் கருத்தில் கொள்வது எப்படி இன்றியமையாததாகின்றது என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது.

செகிடியர் பனை. வகை மரங்களில் ஏறிக் கள் இறக்குவதில்லை. கள் இறக்கும் யாதர் மற்றும் கமல்லர் சாதியினரிடமிருந்து கள்ளினை விலைக்கு வாங்கியே விற்கின்றனர்.

குலம்பெத்த என்ற இவர்களின் சாதித் தலைவன் பஞ்சாய்த்துச் சபையாரின் உதவியுடன் இவர்களிடையேயான வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றான். பிற தெலுங்குச் சாதியார்களிடையே இருப்பதைப் போலவே கண்டிப்புடன் பின்பற்றக் கூடிய புறமணக் கட்டுப்பாடு உடைய இல்லப் பெயர்கள் இவர்களிடையே உள்ளன. சிறுமியர் பூப்படைவதற்கு முன்போ பின்போ மணம் செய்விக்கப்படுவர். ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணக்க உரிமை கொண்டாடும் மேநாகரிகம் இவர்களிடையே வழக்கில் உள்ளது. விதவையர் மணச் சடங்குகளைத் தவிர மற்றவர் மணச் சடங்குகளை ஒரு பிராமணனே நடத்தி வைக்கின்றான். கைம்பெண் ஒருத்தியின் மறுமணத்தில் சாதியினைச் சேர்ந்தவர்கள் கூடியபின் குலம்பெத்த (குலப்பெரியவன்) சத்தமானத்தை (தாலி) மணப் பெண்ணின் கழுத்தில் கட்டுவான்.

இறந்தவர்கள் எரிக்கப்படுவதே பொதுவான வழக்கம். கொள்ளி போடுபவனுக்குச் சிதையில் நெருப்பு மூட்ட வண்ணான் உதவி செய்வான். சாத்தானி ஒருவன் சாவுச் சடங்குகளை நடத்தி வைப்பான்.

செகிடியர் கிராம தேவதைகள் பலவற்றையும் வழிபடுகின்றனர். கணவன் உயிரோடிருக்கும்போதே சுமங்கலியாக உயிர்துறக்க விரும்பித் தங்களை மாய்த்துக் கொண்டவர்களும் கணவனோடு உடன் உயிர் துறந்தவர்களுமான பேராண்டாளு எனப்படுவோரும் வழிபாட்டுக்கு உரியவர்களாக உள்ளனர்.

இச் சாதியினைச் சேர்ந்த வசதி படைத்தவர்கள் அண்ணா என்ற பட்டம் தரிக்கின்றனர்.

செக்கான் – Sekkān (oil-man)

வாணியனுக்கான மற்றுமொரு பெயர்.

செம்படவன் – Sembadavan

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீன்பிடிப்போர் செம்படவர். ஏரி, குளம், குட்டை, ஆறு முதுலிய நன்னீர் நிலைகளில் மீன்பிடித்தலை மேற்கொள்ளும் இவர்கள் கடலில் மீன் பிடிக்க ஒருபோதும் செல்வதில்லை. இவர்களுள் சிலர் படகு வலிப்போராகவும் உள்ளனர். செம்படவன் என்ற பெயர் செம்(நல்ல) படவன்(படகு வலிப்போன்) என்ற சொற்கள் இணைந்து வருவதாகக் கூறுவர். செம்படவர் மறி, பன்றி, கோழி, பொங்கல் முதலியன படைத்துத் தங்கள் சாதித் தெய்வமான அங்காளம்மனை வழிபடுகின்றனர். அவள் மீது சிவன் காதல் கொண்டதால் சிவன் படகு வலிப்போன் என்ற சொற்கள் மருவி செம்படவன் என்றாயிற்று என்றும் ஒரு கதை கூறுகின்றனர். தெலுங்கு நாட்டில் வாழும் இச் சாதியினைச் சேர்ந்த சிலர் தங்களைச் செம்புணி ரெட்டி என்றோ காபு என்றோ 1901 கணக்கெடுப்பின் போது பதிந்து கொண்டுள்ளனர். மற்றொரு வழக்கு வரலாற்றின்படி செம்புப் படகோர் (செம்பாலான படகினையுடையோர்) என்பதே செம்படவர் என ஆயிற்று எனக் கூறுவர். பர்வத ராசா ஒரு படகு வலிப்பவனைப் போல வேடந்தாங்கி ஒரு செம்புப் படகில் வந்து மீன்பிடிக்க நான்கு வேதங்களும் வலைகளாக ஆக்கப்பட்டிருந்தன. அந்த வலைகளுள் ஒரு முனிவரும் அகப்பட்டுக் கொண்டார். இதனால் சினங்கொண்ட அந்த முனிவர் படகுக்காரனிடம் அவன் சந்ததியினர் மீன்பிடித்தே பிழைக்க வேண்டும் எனச் சபித்தார். அப்போதிருந்து செம்படவர்கள் தங்களைப் பர்வதராச வம்சத்தவர் எனக் கூறிக் கொள்கின்றனர். மற்றொரு கதை வழக்குப்படி

இந்தச் சாதியினைத் தோற்றுவித்தவன் தெய்வத்தை வழிபட்டுக் கொண்டிருக்கும்போது அவனைச் சோதிப்பதற்காகத் தெய்வம் ஒரு பெரிய மீனை அவன் வழிபாடு செய்யும் இடத்தருகே நீரில் தோன்றும்படி செய்தது. தன் வழிபாட்டை பற்றி மறந்தவனாக அவன் அந்த மீனைப் பிடிக்க முற்பட்டபோது மீன்பிடித்துப் பிழைப்பு நடத்தும்படி அவன் சபிக்கப்பட்டான். செம்படவர் தோற்றம் பற்றிய மற்றொரு கதை வழக்கு கடற்கரை அருகில் தொல்லைக்கு உள்ளானவர்களாக இடையூறுகளுக்கிடையே ஒரு சில மீன்களையே பிடித்து வாழ்க்கை நடத்தி வந்த இவர்களின் முன்னோர் தன்னிடம் கொண்ட பக்தியில் மகிழ்ந்த சிவபெருமான் அதற்குப் பரிசாக ஒரு வலையினைத் தந்ததோடு இவர்கள் வசதியோடு வாழ உதவும் பொருட்டுப் பல சாதியினரையும் மீன் உண்பவர்களாக ஆக்கினார் எனக் கூறுகின்றது.

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செம்படவர் பற்றித் திரு.எச்.ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் பின்வருமாறு எழுதியுள்ளார் :- "இவர்கள் படகு வலிப்போராகவும் மீனவர்களாகவும் தொழில் நடத்தினாலும் படகு வலிப்பதற்கு ஆறுகளில் பெருவெள்ளம் வரும் சில சமயங்களிலேயே இவர்களுக்கு வாய்ப்பு கிட்டுகின்றது. அச்சமயங்களில் தோலால் பொதியப்பட்ட வட்ட வடிவமான பரிசல்களில் இவர்கள் மக்களை ஒரு கரையிலிருந்து மறுகரைக்குக் கொண்டு சேர்க்கின்றனர். பரிசல்களை நீரில் இறக்கியபின் இவர்கள் நடந்து அல்லது நீந்தியபடி பிடித்துத் தள்ளிச் செல்வர். நீரில் இறங்க அஞ்சுபவர்களைக் கையினைப் பிடித்துத் தள்ளிச் செல்வர். நீரில் இறங்க அஞ்சுபவர்களைக் கையினைப் பற்றி நடத்தி அக்கரை சேர்க்கவும் செய்கின்றனர். இவ்வாறு வெள்ளப் பெருக்கான காலங்களில் குறிப்பிடத்தக்க அளவு பொருள் சேர்க்கும் இவர்கள் ஆண்டின் மற்ற பருவங்களில் ஏரிகளில் மீன்பிடித்துப் பிழைப்பு நடத்துகின்றனர்."

தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செம்படவர் பற்றித் திரு.பிரான்சிஸ் எழுதியுள்ளதாவது :- "நன்னீரில் மீன்பிடித்தலையும் படகு வலித்தலையும் தொழிலாகக் கொண்டவர்கள் செம்படவர்கள். இந்த இரு தொழில்களுமே ஆண்டு முழுவதும் வருமாம் தரும் வாய்ப்பு இல்லாதன என்ற காரணத்தால் இவர்கள் சில பகுதிகளில் பயிரிடுதலையும் நெசவையும் மேற்கொண்டவர்களாக உள்ளனர்.

அத்தோடு உலர்த்திய மீனையும் தெருக்களில் கூவி விற்பர். இவர்களுள் பெரும்பாலனவர்கள் ஏழைகளாகவே உள்ளனர். தங்கள் வலைகளைத் தாங்களாகவே தயாரித்துக் கொள்ளும் இவர்கள் ஏதேனும் ஒரு காரியமாகத் தொலைதூரம் நடக்க வேண்டியிருந்தால் நூல் நூற்றபடியே நடப்பர். பஞ்சாங்கப் பிராமணர்களே இவர்களுடைய குடும்பப் புரோகிதர்களாக உள்ளனர். இப்புரோகிதர்கள் மணச் சடங்கில் மணமகளுக்குத் தாலி அணிவிப்பதோடு பதினாறாம் நாள் சாவுச் சடங்கில் தீட்டு நீக்கியும் வைக்கின்றனர்.

செம்படவர், கடலில் மீன்பிடிக்கும் பட்டனவன்களை விடத் தங்களைச் சாதியில் உயர்ந்தவர்களாகவே கருதுகின்றனர். நாட்டன், கவண்டன், மணியக்காரன், பகுத்தார், பிள்ளை முதலிய பட்டப் பெயர்களுள் ஒன்றினை இவர்கள் தரிக்கின்றனர். சிலர் குக வேளாளர் என்ற பட்டப் பெயரையும் தரிக்கின்றனர். இவ்வாறு தங்களைக் குக வேளாளர் எனக் கூறிக் கொள்வோர் இராமன் இலங்கைக்குச் சென்று சேரப் படகு வலித்த குகனுடைய மரபினர் எனக் கூறிக்கொள்வர். 1901 கணக்கெடுப்பில் சவலைக்காரன் (பார்க்க : தனித்தலைப்பு) என்பது மீனவரின் ஓர் உட்சாதியாகப் பதியப்பட்டுள்ளது. சவலை அல்லது சவல்தடி என்பது தட்டையான படகு வலிக்கும் துடுப்பாகும். இவர்களுள் பலர் தங்களைப் பூசாரி என அழைத்துக் கொண்டு பூணூலும் தரிக்கின்றனர். பூசாரிப் பிரிவினரே கிராம தேவதைகளின் கோயில்களில் பணியாளர்களாக உள்ளனர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மலயனூரில் செம்படவர் அனைவருமே தங்களைப் பூசாரி எனக் கூறி கொள்கின்றனர். இவர்கள் அனைவரும் முக்காலி குலத்தைச் சேர்ந்தவர்களாகத் தெரிகின்றது.

செம்படவருள் பெரும்பாலோர் தங்களைச் சைவர் எனக் கூறிக் கொள்கின்றனர். எனினும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள குப்பம் என்ற ஊரைச் சேர்ந்த சிலர் தங்களை வைணவர்கள் எனக் கூறிக் கொள்வதோடு தங்களை விட்டுணு கோத்திரத்தவர் எனவும் கூறிக்கொள்கின்றனர். தங்களை வைணவர்கள் எனக் கூறிக் கொள்பவர்களுள் சிலருங்கூட சைவர்கள் தரிக்கும் சந்தனப் பொட்டினை நெற்றியில் தரிக்கின்றனர். இவர்களிடம் இதுபற்றிக் கேட்டபோது இவர்கள் வயலிலிருந்து திரும்புவதாகவும் உணவுகொள்ளும் முன்

நெற்றியில் ஏதேனும் இட்டுக் கொள்ள வேண்டும் என்ற விதிப்படி அங்கு சந்தனக் கீற்றைத் தீட்டிக் கொண்டதாகவும் வயலில் வைணவ சமயச் சின்னமான நாமம் தரிக்கக் கண்ணாடி, குங்குமம் முதலியன கிடைக்காது எனவும் கூறினர். சைவ சமயத்தைச் சேர்ந்த குடும்பத்திலிருந்து பெண் எடுக்க நேர்ந்தால் தங்கக் கம்பியால் அவள் நாக்கைச் சுட்டுப் புண்யாகவாசனம் செய்து புனிதப்படுத்திய பின்பே அவளை மணம் புரிவதாகவும் இவர்கள் கூறினர்.

சிதம்பரத்தைச் சேர்ந்த செம்படவர் அனை 'நும் சைவர்கள். இவர்கள் கோயிலோடு தங்களுக்கு உரிய தொடர்பு பற்றிப் பெருமையோடு கூறிக்கொள்வர். ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் கோயிலில் உள்ள தெய்வச் சிலையினைத் தெருக்களில் ஊர்வலமாகத் தூக்கிச் செல்ல அமர்த்தப்படும் இவர்களுக்கு நல்ல ஊதியம் தருவதோடு ஒவ்வொருவருக்கும் ஒரு சோற்றுப் பட்டையும் தரப்படுவதாகத் தெரிகின்றது. கோயிலைச் சேர்ந்தவர்கள் இவர்களிடம் ஓரளவு மரியாதை காட்டியவர்களாக ஊர்வலத்தின்போது அம்மனை இவர்கள் குடியிருப்பில் சிறிது நேரம் தங்கச் செய்கின்றனர். அப்போது இவர்கள் அம்மனுக்குப் பாவாடை சாத்தி வழிபடுவர்.

வீரர் முதலியவர்களின் பெயரினில் அமைந்த பல புறமணக் கட்டுப்பாடுடைய குலப்பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. நாட்டான் எனப்படும் நாட்டாண்மைக்காரன் பதவி குறிப்பிட்ட ஒரு குலத்தவருக்கே உரிய பரம்பரை உரிமையாக இருந்து வருகின்றது. சில இடங்களில் நாட்டாண்மைக்காரனுக்குச் சங்கதிக்காரன் அல்லது சங்கதிப் பிள்ளை எனப்படும் உதவியாளன் உள்ளான். சாதிச் சபைக் கூட்டங்களில் இந்த உதவியாளன் வாயிலாகவே நாட்டாண்மைக்காரனிடம் பேச வேண்டும். இவர்கள் சபைக் கூட்டங்களில் பல பகுதிகளையும் சேர்ந்த செம்படவர்களின் பிரதிநிதிகள் இடம்பெறுவர். மலையனூரில் இந்தப் பகுதிகளுக்குப் பதிலாகத் தேவர், செப்பிலியன், ஏதி நாயகன், சங்கிலி, மாயகுண்டலி, பட்டம், பணிக்கன் என்ற ஏழு குலங்களின் பிரதிநிதிகள் சாதிக் கூட்டத்தில் இடம்பெறுவர். சபைக் கூட்டத்தில ஒருவன் தான் குற்றம் அற்றவன் என வாதிடுவானாயின் அவனே சபை உறுப்பினர்களுக்கான செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும். சிலபோது குற்றம் புரிந்தவனுக்குத் தண்டனையாகப் புளியம் மிளாறும் கத்தியும்

வைக்கப்பட்ட குப்பையோடு கூடிய குப்பைக் கூடையினைச் சுமக்கும்படி தண்டனை வழங்கப்படுகிறது. புளியம் மிளாறு முதுகில் அடிபட்டதற்கும் கத்தி நாக்கு வெட்டுப் பட்டதற்கும் ஆன அடையாளச் சின்னங்கள். பெண்கள் விளக்குமாற்றோடு கூடிய குப்பைக் கூடையினை ஊரைச் சுற்றித் தூக்கிச் செல்லும்படி தண்டிக்கப்படுவர்.

படகு வலிக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளவர்களான செம்படவர் நீர்த் தெய்வமான கங்கையம்மனைப் பொங்கலிட்டு ஆடுவெட்டிச் சிறப்பாக வழிபடுகின்றனர். தங்கள் பரிசல்கள் கவிழ்ந்து தாங்கள் நீரில் மூழ்கும் விபத்துக்குள்ளாகாமல் காத்து வருபவள் கங்கையம்மனே என இவர்கள் நம்புகின்றனர்.

சிறுமி ஒருத்திப் பூப்படையும் போது பல தமிழ்ச் சாதியரைப் போலவே இவர்களும் சடங்கினை நிகழ்த்துகின்றனர். அச் சமயத்தில் அவளைப் பேய்கள் நெருங்காது காக்க (***Vitex Negundo***) வேம்பு (***Melia Azedirachta***) நாவல் (***Euqenia Jambolana***) ஆகியவற்றின் இலைக் கொத்துக்களை வீட்டுக் கூரையில் செருகி வைப்பர். திருமணச் சடங்கின் போது முள்முருங்கை (***Erythrina indica***) ஒன்றின் கொம்பினை வெட்டி அதனோடு அரசிலைக் (***Ficus religiors***) கொத்துக்களையும் பச்சை மூங்கில் கணு ஒன்றினையும் இணைத்து மணப் பந்தலுக்காக நிறுத்தப்பட்டுள்ள பன்னிரண்டு கம்பங்களில் ஒன்றோடு சேர்த்துக்கட்டி வைப்பர். சுமங்கலிகள் பலர் புதுமணல் கொண்டு வந்து மணமேடை அருகே தரையில் பரப்புவர். அவ்வாறு பரப்பப்பட்ட மணல் மீது இரண்டு பானைகளில் தண்ணீர் வைப்பர். மணமக்களுக்கு சிகெ கழிப்பு என்ற கண்ணேறு பட்டதனைப் போக்குவதற்கான சடங்கினை சிறிது பாலினை ஓர் அத்தி அல்லது வெற்றிலையில் தொட்டு அவர்கள் நெற்றியில் விட்டு நடத்துவர். அவர்கள் நெற்றியில் பட்டம் எனப்படும் வெள்ளி அல்லது தங்கத்தாலான தகட்டினை அணிவிப்பர். இவற்றுள் தாய்மாமன்மார் அணிவிப்பது அளவில் மிகப் பெரியதாக இருக்கும். மணமகனுக்கான தலைப்பட்டம் V வடிவில் நாமத்தை ஒத்ததாக இருக்கும். மணமகளுக்கான தகடு அரசிலை வடிவினதாக இருக்கும். மணமக்கள் குடும்பம் நடத்துவது போலப் பாவனை செய்வதோடு பானையில் உள்ள நீரில் இடப்பட்ட பொருள்களையும் தேடுவர். ஒரு பானையில் ஏழு மோதிரங்கள்

இடப்படும். அவற்றை மணமகள் எடுப்பாளாகில் அவளுக்கு தலைச்சன் ஆணாகப் பிறக்கும். மணமகன் ஐந்து மோதிரங்களை எடுத்தாலும் அவர்களுக்குத் தலைச்சன் ஆணாகவே பிறக்கும். சுமங்கலிகள் சிலர் ஒரு புற்றுக்கு ஊர்வலமாகச் சென்று ஒரு கூடையில் புற்று மண்ணை மணப் பந்தலுக்குக் கொண்டு வந்து பந்தல் கால்களினைச் சுற்றிக் குவிப்பர். அதன்பின் சோற்றுருண்டைகள், காய்கறி முதலியன அங்கே படைக்கப்படும். கைக் கங்கணத்தை அவிழ்த்த பின் மணமக்கள் ஒரு குளத்திற்குச் சென்று உழுவதான சடங்கினைப் போலியாக நடத்துவர். சில இடங்களில் புரோகிதன் மணமகன் அணிந்துகொள்ள ஒரு பூணூலைத் தருவான். மணச் சடங்குகளினிறுதியில் அதனைக் கிணற்றிலோ குளத்திலோ எறிவர்.

செம்படவர் சிலர், ஒருத்தி கருவுற்ற ஏழாம் மாதம் முதுகு நீர் ஊற்றுதல் என்ற சடங்கினை நிகழ்த்துகின்றனர். கருவுற்றவளை மணப் பலகையின் மீது நிற்கச் செய்து அவளுக்குச் சுண்ணாம்பும் மஞ்சளும் இட்ட நீர், விளக்குகள் ஆகியனவற்றை ஆரத்தியாக எடுப்பர். அவள் குனிந்து தன் இரண்டு கைகளையும் இரண்டு பானைகள் மீது வைத்துக் கொள்ள அவள் உறவினர்கள் அனைவரும் ஒரு வெற்றிலையில் பாலைத் தொட்டு அவள் முதுகில் விடுவர்.

வைணவ நெறிப்பட்ட செம்படவர்கள் இறந்தவர்களை எரிக்கின்றனர். சைவர்கள் உட்கார்ந்த நிலையில் வைத்துப் புதைப்பர். நாவிதனே சுடுகாட்டுக்கு நெருப்புச் சட்டியினைத் தூக்கிச் செல்வான். புதைக்கப்படும் பிணத்தின் முகத்தின் நெற்றியும் உச்சந்தலையும் மட்டும் வெளியில் தெரியும்படியாக ஒரு துணியால் மூடுவர். பிணத்தின் தலைமீது சாம்பலைக் கொண்டு கணேசர் உருவம் ஒன்றினைச் செய்து வைப்பர். கூடியுள்ளவர்கள் புதைகுழியில் விபூதியினையும் ஒரு செப்புக் காசையும் இட்டபின் புதைகுழி மூடப்படும். அவ்வாறு புதைகுழியினை மூடும்போது ஒரு மூங்கில் கழியினைப் பிணத்தின் உச்சந்தலைக்கு நேரே நிறுத்தி வைத்துப் பின் மண்ணிடுவர். மூடப்பட்ட புதைகுழியினைச் சுற்றி வெளியே துருத்திக் கொண்டிருக்கும் மூங்கில் நடுவே இருக்கும்படியாக நீள் வட்டமாகத் தரையினை நன்கு தூய்மைப்படுத்திய பின் மூங்கிலினை வெளியே இழுத்து எடுத்துவிட்டு அத்துளை வழியே நீரூற்றியபின் ஒரு லிங்கத்தைச் செய்து அத்துளை மீது வைத்து அடைப்பர்.

மலயனூரில் மயானம் அல்லது மசானக் கொள்ளை எனப்படும் சடங்கு நடத்தப்படுகின்றது. மலையனூர் அங்குள்ள அங்காளம்மன் கோயில் காரணமாகப் புகழ்பெற்றதாக உள்ளது. அங்குள்ள கோயிலில் சிவராத்திரியினை அடுத்து நடக்கும் திருவிழாவிற்கு ஆயிரக் கணக்கில் மக்கள் வந்து கூடுவர். அக்கோயில் மயானத்திற்கு அருகே அமைந்துள்ளது. அக்கோயிலில் கருவறையில் உள்ள தெய்வத்தின் முன் பெரிய கரையான புற்று உள்ளது. அந்தப் புற்றின் மீது இரண்டு செப்புச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அதன் அடியில் நேர்ந்து கொண்டவர்கள் தங்கள் நேர்த்திக் கடனைச் செலுத்துவதற்காகக் கொறக் கூடை எனப்படும் பித்தளைப் பாததிரம் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். திருவிழா அன்று அதிகாலையில் செம்படவப் பூசாரி குளத்திற்குச் சென்று பூக்கரகம் எனப்படும் அலங்கரிக்கப்பட்ட பானை ஒன்றினைக் கொண்டு வருவான். புதுப் பானை ஒன்றுக்குக் கடா வெட்டி பலியிட்டுப் பூசை போட்ட பின் அதில் நீரினை நிரப்பி பூசாரி அதனைக் கரகமாகத் தலையில் வைத்துக்கொண்டு தெய்வம் ஏறப்பட்ட குணங்குறிகளைத் தோற்றுவித்தவனாகத் தலையில் உள்ள அந்தப் பானையினைக் கையில் தொடாது குதித்து ஆடியபடி ஊர்த் தெருக்கள் வழியே ஊர்வலமாகக் கோயிலுக்கு வந்து சேர்வான். தேவியின் அருளாலேயே அந்தக் கரகம் அவன் தலையில் விழாது நிற்கின்றது என நம்புகின்றனர். கோயிலை அடைந்தவுடன் மற்றொரு பூசாரி, அரிசி மாவால் செய்து வெள்ளை, கறுப்பு, சிவப்பு ஆகிய நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சட்டத்தால் ஆன கட்டமைப்பைக் கொண்டு வருவான். மாவாலான அந்த உருவத்தில் கண்களாகக் கோழி முட்டைகள் பதிக்கப்பட்டிருக்கும். கரகப் பானையினை அந்தத் தலைக்குக் கீழே மரச்சட்டத்தில் வைப்பர். அந்த மரச் சட்ட அமைப்பை இன்னிசை உடன்வர பூசாரி சுடுகாட்டிற்கு எடுத்துக் கொண்டு செல்வான். பிரமனுடைய அந்தத் தலைக்கு கறி, சாராயம், வெற்றிலை, பழம் முதலியன படைத்த பின் அதனைத் தூர எறிவர். பிணங்களை எரிக்கும் இடத்திற்கு அருகே பூசாரி தரையில் சாம்பலால் ஐந்து கணேசர் உருவங்களை பிடித்து வைப்பான். நேர்ந்துகொண்ட பலரும் இந்த உருவங்களுக்குத் தங்களோடு கொண்டு வந்துள்ள படையல்களைப் படைப்பர். சுண்டல், வளையல், வெற்றிலை, மாவினால் செய்யப்பட்ட பல திறத்த மனிதர் உடல் உறுப்புகள் முதலியன இப்படையல்களுள் அடங்கும். இந்தப் படையல்கள் பத்து முதல் இருபதடி உயரம் உடையனவாகக் குவியும் எனக் கூறுவர். இறுதியில் கூடியுள்ள

மக்கள் அந்தக் குவியலின் மீது பாய்ந்து தங்கள் கைக்குக் கிடைப்பதை எடுத்துச் செல்வர். இவ்வாறு வந்து கூடுபவர்களுள் நூற்றுக்கணக்கானவர் பேய் பிடிக்கப்பட்டவர்களாக அங்குள்ள பிணத்தை எரித்த சாம்பலைத் தின்று கைக்குக் கிடைக்கும் மனித எலும்புகளை எடுத்துக் கடிப்பர். அந்தச் சுடுகாட்டுச் சாம்பலும் மண்ணும் மிகச் சக்தி வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. தீய ஆவிகளை விரட்டவும் மலடிகளுக்கு மகப் பேற்றினைத் தரவும் வல்லவை அவை. சிலர் தாங்கள் சிவன் போல வேடம் இட்டுக் கொள்வதாக நேர்ந்துக் கொண்டிருப்பர். இவ்வாறு நேர்ந்து கொண்டவர்கள் தங்கள் முகத்தில் இச் சாம்பலைப் பூசிக்கொண்டு, காக்கை, மயில், கொக்கு முதலிய பறவைகளின் இறகுகள் செருகப்பட்ட தொப்பியினைத் தலையில் அணிந்து, ஒரு கையில் பிரம கபாலம் எனப்படும் செப்புக் குவளையினைத் தாங்கியவர்களாகக் காட்சி தருவர். அவர்கள் தங்கள் இடையில் பல கயிறுகளைக் கட்டி அதில் கந்தல், இறகு முதலியவற்றைச் செருகியிருப்பர். பறையர், வள்ளுவர் ஆகியோர் தலையில் தொப்பிக்குப் பதிலாக் கிரீடம் தரிப்பர். செப்புக் குவளை, தொப்பி, இடையில் கட்டுவதற்கான கயிறுகள் ஆகியனவற்றைப் பூசாரி சேகரித்து வைத்திருப்பான். ஓரிரு ரூபாய் செலுத்தி அவற்றை அவனிடமிருந்து வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். இந்த விழாத் தொடர்பாக வழங்கிவரும் கதை வருமாறு :- "சிவனுக்கும் பிரமனுக்கும் ஒரே எண்ணிக்கையிலான முகங்கள் இருந்தன. தன் சுயம்வரத்தின்போது பார்வதி பிரமனுக்கும் சிவனுக்கும் இடையே வேறுபாடுஅறிய இயலாதவளாகத் திகைத்த காரணத்தால் சிவன் பிரமனுடைய தலைகளுள் ஒன்றினைக் கிள்ளிவிட்டான். அவ்வாறு கிள்ளப்பட்ட தலை சிவனுடைய கையிலேயே ஒட்டிக் கொண்டது. அதனை விழச் செய்யவும் பிரமனின் ஒரு தலையைக் கொய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் தேடவும் நாடெங்கும் அலைந்து திரிந்த சிவன் மலையனூர் சுடுகாட்டினை வந்தடைந்தபோது அங்குப் பல வகைப் பூதங்களும் பிணங்களைத் தின்றனவாக இருந்தன. அங்கு வந்த சேர்ந்த பார்வதியினால் சிவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. இதனைக் கண்ட சிவனுடைய கையில் ஒட்டிக்கொண்டுள்ள கபாலம் சிரிக்கவே அது சிவனுடைய கையிலிருந்தும் விழுந்துவிட்டது. அங்குள்ள பூதங்கள் மிக மகிழ்ந்தனவாகப் பலவகை மூலிகை கொண்டு வந்து பெரிய பாத்திரத்திலிட்டு இனிக்கும் மதுவினைத் தயாரித்தன. அதனைக்

குடித்த சிவன் தன் பாவம் நீங்கப் பெற்றான். இதன் காரணமாகவே இங்கு நடைபெறும் திருவிழாவில் சிவனுக்குச் சாராயம் படைக்கப்படுகின்றது. இதே போன்ற சடங்கு வாலாசாப்பேட்டையிலும் நடத்தப்படுகின்றது. அங்குப் பிணங்களை எரித்த சாம்பலில் தண்ணீரைவிட்டுப் பிசைந்து பெரியதொரு தேவியின் உருவை அமைத்துக் கண்களுக்கான இடத்தில் நடுவே கறுப்பு வண்ணம் பூசப்பட்ட கோழி முட்டைகளை வைக்கின்றனர். அந்த உருவத்தை மஞ்சள் துணியால் மூடி அதன்மீது மணக்கும் வாசனைப் பொடியினைத் தூவுகின்றனர். மணமான ஒருத்திக்கு இன்றியமையாதனவான சீப்பு, வண்ணப் பொடிச் செப்பு, கண்ணாடி வளையல்கள், காதில் அணியும் ஓலை, கறுப்புப் பாசிமணி மாலை ஆகியன அந்த உருவத்தின் மேல் வைக்கப்படும். பக்தர்கள் எலுமிச்சம்பழம், வாழைப்பழம், சாராயம், கள், கரும்பு, பலவகைத் தானியங்களைச் சமைத்த சோறு முதலிய உண்பதற்குரியனவற்றை அங்கு படைப்பர். கோயிலில் உள்ள தேவியினை ஊர்வலமாக எடுத்துச் சென்று சுடுகாட்டில் அமைத்து வைக்கப்பட்டுள்ள இந்த உருவத்தின் முன் வைப்பர். இந்த விழாவிற்காகவே தனித்த விதத்தில் உடை அணிந்திருக்கும் பூசாரி கோயில் சிலைக்கு முன்பாக சிவன் கையில் ஒட்டியிருந்த கபாலத்தின் அடையாளமாக ஒரு செம்புக் குவளையினை ஏந்தியவனாகவும் மற்றொரு கையில் ஒரு மனித மண்டையோட்டை வைத்துக் கடித்தவனாகவும் ஊர்வலத்தோடு நடப்பான். சுடுகாட்டை அடைந்தவுடன் ஒரு தேங்காயினை உடைத்து அவன் பூசை நடத்தியபின் கற்பூரம் கொளுத்தி கையில் ஏந்தியபடி அந்த உருவத்தினை அவன் வலம் வருவான். ஆடுகளும் கோழிகளும் அங்குப் பலியிடப்படும். தெய்வம் ஏறப்பட்ட ஒருத்தி அந்த உருவத்தின் காலடியில் அமர்ந்தவளாக ஆவேசம் உற்று ஆர்ப்பாட்டம் செய்வாள். பூசை முடிந்தவுடன் கூடியுள்ளவர்கள் அந்த உருவத்தின் மீது பாய்ந்து அதன்மேல் உள்ளவற்றில் தங்கள் கைக்குக் கிடைப்பதைக் கைப்பற்றிச் செல்வர். அப்பொருள்கள் நோய் தீர்த்து நலம் செய்வதோடு வேறு பல நன்மைகளையும் செய்யும் என நம்புகின்றனர். அங்கு உள்ள சாம்பலையும் அவர்கள் தங்கள் உடம்பில் பூசிக் கொள்வர். பூசாரியும் வேறு சில பக்தர்களும் பின்னர் தெய்வம் ஏறப் பெற்றவர்களாகச் சுடுகாட்டில் அங்கும் இங்கும் ஓடியவர்களாகத் தங்கள் கையில் அகப்படும் வெந்ததும் வேகாததுமாக உள்ள எலும்புகளை கடித்துக் குதப்புவர். முன்பெல்லாம் இவர்கள் இறந்தவர்களின்

பிணத்தை எதிர்ப்பட நேரின் அதனைக் கூட தின்று வந்ததாக வழக்கு வரலாறு கூறுகின்றது. இதனால் அச்சம் உற்ற மக்கள் சாவு நேர்ந்தாலும் கூடத் திருவிழா முடியும்வரை பிணத்தைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வதில்லை என்றும் கூறப்படுகிறது. "சிலபோது இறந்தவர்களின் பிணத்தின் உடற்பகுதிகளை உயிரோடு இருப்பவர்கள் தின்னும் பழக்கம் உள்ளது. இவ்வாறு தின்பவர்கள் இறந்தவருடைய நல்ல பண்புகளையெல்லாம் தாங்களும் அதன்வழிப் பெறலாம் என்றே தின்கின்றனர். இச் செயலால் இறந்தவர்கள் சிறப்பிக்கப்படுகின்றார்கள் என்பதனைநாம் தெளிதல்வேண்டும்" என ஹெர்பெர்ட் ஸ்பென்சர்* கூறுகின்றார்.

செம்புநாடு – Sembunādu

பாண்டிய நாடு எனப் பொருள்படும் இது மறவர் சாதியின் ஓர் உட்பிரிவாகும்.

செம்மடி – Semmadi

செம்படவன் என்பதன் தெலுங்கு வடிவம்.

செம்மான் – Semmān

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் செம்மான்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளவை வருமாறு :– "எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களான தோலில் பணிபுரியும் இச் சாதியார் மதுரை, திருநெல்வேலி (புதுக்கோட்டை மாநிலத்தும்) மாவட்டங்களில் மட்டுமே காணப்படுகின்றனர். தைய்ல்காரர், சுண்ணாம்புக் காளவாய் போடுவோர் என இவர்கள் தங்கள் தொழிலைப் பற்றிப் பதிந்து கொண்டிருந்தாலும் இவர்கள் முதலில் தோலில் தொழில் செய்து வந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. தமிழ் அகராதியில் செம்மான் எனபதற்குத் தோலில் பணிபுரிவோர் என விளக்கம் தரப்பட்டுள்ளது. நாட்டுப் புறங்களின் உட்பகுதிகளில் உள்ள கிராமங்களில் சிலர் செருப்புத் தைப்பதைத் தங்கள் தொழில் எனப் பதிந்து கொண்டுள்ளனர். செம்மான்கள் பறையரின் ஓர் உட்பிரிவினரே. இவர்களே தமிழ் இனத்தவர்களுக்குத் தொடக்கத்தில் தோலில் பணிபுரிவோராக இருந்திருத்தல் வேண்டும். வந்தேறிகளான சக்கிலியர் இப்பொழுது

* சமூகவியல் கோட்பாடுகள். *(Principles of Sociology.)*

அத்தொழிலைத் தங்களுடையதாக்கிக் கொண்டுள்ளனர்." மதுரை மாவட்டக் கையேட்டில் செம்மான்கள் சுண்ணாம்புக் காளவாய் போட்டுக் கட்டிடங்களுக்குச் சுண்ணாம்பு விற்போர் எனப் பதியப்பட்டுள்ளது. "தொண்டைமான், தோல்மேஸ்திரி என்ற இரண்டு பட்டங்களோடு உயர்வானவர்களாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் உட்பிரிவினர் இச்சாதியில் உள்ளனர். தொண்டமான்கள், தோல் மேஸ்திரிப் பிரிவினரிடமிருந்து பெண் கொள்வர். எனினும் அவர்களுக்குப் பெண் கொடுப்பதில்லை." என 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெண்கள் பூப்படைந்த பின் திருமணம் செய்விக்கும் இவர்கள் மணமுறிவு, மறுமணம் ஆகியனவற்றைத் தடையேதுமின்றி அனுமதிக்கின்றனர். இவர்கள் தீட்டு உண்டாக்கும் சாதியாராகையால் ஊர்க் கிணறுகளில் நீரெடுக்கவும் இந்துக்களின் கோயில்களுக்குள் நுழையவும் அனுமதிக்கப்படுவதில்லை.

செம்புலி - SemPuli (Red tiger)

கள்ளரின் ஓர் உட்பிரிவு.

சேனைக் குடையான் - Sēnaikkudaiyān

சேனைக் குடையர் வெற்றிலைக் கொடிக்கால் போட்டு வெற்றிலை விற்போர். திருநெல்வேலி மாவட்டத்தில் எண்ணிக்கையில் மிகுதியானவர்களாக உள்ள இவர்கள் தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் ஒரு சிலராகவே உள்ளனர். இச் சாதி முதலில் இலை வாணியன் சாதி என வழங்கி வந்ததாகவும் பின்னர் மதிப்புக்கு உரியதாகத் தோன்றும் படியான பெயரான சேனைக் குடையான் (படை உரிமையாளன்) அல்லது சேனைத் தலைவன் என்ற பெயரை அதற்குப் பதிலாக மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது. இவர்கள் தங்களைக் கொடிக்கால் பிள்ளைமார் எனவும் கூறிக் கொண்டு பிள்ளை என்ற பட்டப் பெயரையும் சூடிக் கொள்வர். இச் சாதியினரால் மூப்பன், செட்டி என்ற பட்டப் பெயர்களும் தரித்துக் கொள்ளப்படுகின்றன.

"வேளாளரே சேனைக் குடையான் சாதிப் புரோகிதர்கள். சில சமயங்களில் பிராமணர்களையும் புரோகிதர்களாக அமர்த்துகின்றனர்.

இவர்கள் பூணூல் அணிவதில்லை. இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் ஆண்டுச் சிரார்த்தமும் செய்கின்றனர். 1891–இல் தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் தரப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில் இவர்கள் தவறுதலாக வாணியர் (எண்ணெய் வணிகர்) எனப் பதியப்பட்டுவிட்டனர். இவர்கள் வாணியரைவிடச் சமூகப் படிநிலையில் உயர்ந்தவர்கள். நாட்டுக் கோட்டை செட்டியாரை விடவும் இவர்கள் உயர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. எனினும் தஞ்சாவூர் மாவட்டத்தில், பறையர் இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்த இவர்கள் வீட்டினுள் நுழைய மறுப்பர். வண்ணாரும் நாவிதரும் இவர்கள் சமைத்த உணவினை ஏற்றுக் கொள்வதில்லை. இதே போன்ற முரண்பாடான ஒரு நிலையில் கம்மாளர் சாதியினரும் உள்ளனர். இவ்விரண்டு சாதியினரும் முன்னர் இடங்கைப் பிரிவினராக இருந்தும் பறையர், வண்ணார் நாவிதர் ஆகியோர் எதிரணியாக வலங்கைப் பிரிவில் இருந்ததுமே இம்முரண்பாட்டுக்குக் காரணமாதல் வேண்டும். இதே போன்று பறையர் இடங்கைப் பிரிவினரான பேரி செட்டிகள் இல்லத்தில் உண்பதில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்" என 1901 சென்னை மாநில கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சேனாபதி – Sēnapati

படைத்தலைவன் எனப் பொருள்படும் பட்டப் பெயர், கோதுரர் சாதியாருக்கு இப்பட்டம் விற்கப்பட்டதாகத் தெரிகிறது. குருமொ, ரொங்குணி ஆகிய ஒரியச் சாதியாரின் பட்டப்பெயராகவும் இது உள்ளது. ரொங்குணியரிடையே இப் பட்டப்பெயர் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தினைக் குறிப்பதாகும். சேனாபதி தெலுங்கு நெசவாளரான சாலே சாதியாருக்கு உரிய ஒரு பெயராகும். இச் சாதியாரின் சாதித் தலைவன் பெரிய சேனாபதி எனப்படுகின்றான். சாலேயரோடு மண உறவு செய்துகொள்ளும் பழக்கம் இல்லாதவர்களான சாலாபு நெசவாளர்களும் தங்களைச் சேனாபதி எனச் சிறப்பித்துக் கூறிக் கொள்கின்றனர். சண்டூர் அரசருக்கான பட்டப் பெயராகவும் இது உள்ளது.

செந்தலை – Sendalai (red-headed man)

கணக்கெடுப்பின் போது கொங்கு வேளாளரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

செங்குந்தம் – Sengundam (red dagger)

கைக்கோளர் சாதி வரலாற்றோடு தொடர்புடையதான கைக்கோளருக்கான மற்றுமொரு பெயர்.

சேணிக – Seniga (bengal gram)

மேதரர், பெத்தகண்டி காபு சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர்.

சேணியன் – Sēniyan

சேணியன் என்ற பெயர் பொதுவாக கர்ண சாலேக்களான நெசவாளரைக் குறிக்கும் எனினும் காஞ்சிவரத்தில் இது கன்னடம் பேசும் தேவாங்கரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. பிற இடங்களில் கன்னடம் பேசும் தேவாங்கர் இடங்கைப் பிரிவினராக இருக்கக் காஞ்சிவரத்தில் இவர்கள் வலங்கைப் பிரிவினராக உள்ளனர். பிற தேவாங்கர்களைப் போலவே காஞ்சிவரம் சேணியருள்ளும் புறமணக்கட்டுப்பாடு உடைய இல்லப் பெயர்களும் கோத்திரப் பெயர்களும் உள்ளன. அண்மையில் பழையதான கோத்திரப் பெயர்களுக்குப் பதிலாகச் சந்திரசேகர ரிஷி, நீலகண்ட ரிஷி, மார்க்கண்டேய ரிஷி போன்ற புதிய பெயர்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேவாங்கர் மார்க்கண்டேயரைத் தங்கள் மூதாதை எனக் கூறுவர். பிச்சிகாய (தர்பூசணி) என்ற பழைய இல்லப் பெயரினைத் தேசிமாட என மாற்றிக் கொண்டுள்ளதோடு பூசணி உண்பதும் விலக்கப்பட்டுள்ளது. இச் சாதியாரின் இல்லப் பெயர்கள், கோத்திரப் பெயர்கள் ஆகியவற்றின் பட்டியல்களை இச் சாதித் தலைவன் தன்னிடம் தேவையானவர்களுக்கு விவரம் தெரிவிக்க வைத்துள்ளான். காஞ்சிவரத்தைச் சேர்ந்த சேணியர் லிங்காயதர்களாயினும் கன்னட நாட்டைச் சேர்ந்த லிங்காயதரைப் போலச் சமய நெறியில் தீவிரப் பிடிப்பு உடையவர்கள் அல்லர். ஜங்கம்களை இவர்கள் போற்றி மதித்தாலும் அவர்களைத் தாங்கள் கட்டியுள்ள லிங்கத்திற்கு அடுத்தபடியாகவே மதிக்கின்றனர். லிங்காயத நெறியில் தீவிரப் பற்றுடையவர்கள் சாவுச் சடங்கினை மேற்கொள்ளும்போது பிணத்திற்குப் படைக்கப்பட்ட உணவினைக் குளிக்காதவர்களாக உண்ண வேண்டும். சேணியர் இந்த வழக்கத்தைப் பின்பற்றுவதிலலை. அண்மைக் காலம்வரை ஒருவன் சாதித் தலைவனுடைய அனுமதியையும் தன் உறவினர்களுடைய

அனுமதியினையும் பெற்று ஒரு சிறுமியின் கழுத்தில் தாலிகட்டிவிடுவானாயின் அவளை அதன்பின் வேறொருவனுக்கு மணம் செய்து வைக்க முடியாது என்ற வழக்கம் பின்பற்றப்பட்டு வந்தது. இந்த வழக்கம் பெருவழக்காக உள்ளது. ஒருவன் தன் மாமன் மகளுக்கோ அத்தை மகளுக்கோ இதுபோலத் தாலிகட்டி விடுவானாயின் பின் அவள் அவனுக்கு உரியவளாகி விட்டதாகவே கொள்ள வேண்டும். காஞ்சிவரத்தில் இத்தகைய ரகசியத் தாலிகட்டும் வழக்கம் மாமன் மகள், அத்தை மகள் ஆகியோரோடு கூட, உறவினரல்லாத பிற சிறுமியரையும் பிணைக்கக் கூடியதாகக் கடைபிடிக்கப்பட்டு வந்தது. அங்குச் சாதிச் சபை கூடி இதுபோல ரகசியத் தாலிகட்டும் வழக்கத்தைத் தடை செய்வதென அனைவரும் ஒப்புக் கொண்டு அதற்கான உடன்பாட்டினையும் எழுதியுள்ளனர். இத்தகைய ரகசிய தாலிகள் அவ்வாறு தாலி கட்டப்பட்ட சிறுமியினைக் கட்டுப்படுத்தாது எனவும் முடிவு செய்துள்ளனர். காஞ்சிவரத்தைச் சேர்ந்த சேணியர்களின் குலகுருவாக இருப்பவர் காஞ்சிவரத்தில் உள்ள திருஞானசம்பந்த மூர்த்தி மடத்தின் தலைவரான வேளாளப் பண்டாரம் ஆவார்.

சேர்வை – Sērvi

சேர்வை, தொண்டு எனப் பொருள்படும். இது அகமுடையார், வலையர் சாதிகளுக்கு உரிய பட்டப்பெயராகப் பதியப்பட்டுள்ளது. சேர்வைக்காரன் அல்லது சேவைக்காரன் (படைத்தலைவன்) என்பது அகமுடையார், அம்பலக்காரர், கள்ளர், மறவர், பரிவாரம் ஆகிய சாதிகளுக்கு உரிய பட்டப் பெயராகும். வல்லம்பர் சாதித் தலைவனுக்கு உரிய பெயராகவும் உள்ள இதனைக் குற்றச் செயல்களில் ஈடுபடும் குறவர் சிலர் தங்கள் சாதிப் பெயராகப் பொய்யாக மேற்கொண்டு கூறிக் கொள்வர்.

செர்வேகாரர் – Servēgāra

செர்வேகாரர் தென் கன்னடத்திலும் பெல்லாரியின் ஒரு சில பகுதிகளிலும் காணப்படும் சாதியாராவர். "இவர்கள் கோவாவைச் சேர்ந்த கொங்கண மராத்தியரின் ஒரு பிரிவினர். நகராவைச் சேர்ந்த லிங்காயத அரசர்களால் இவர்கள் படையில் பணிபுரியவும் கோட்டையைக் காக்கவும் அழைத்து வரப்பட்டவர்கள். கோட்டையைக் காவல் செய்தவர்கள் கோட்டையவ்வா அல்லது கோட்டேகார என்ற மாற்றுப்

பெயரும் பெற்றனர். இராமாட்சரி என்பதும் இவர்களுக்கு உரிய மற்றுமொரு பெயராகும். தென் கன்னடத்தைச் சேர்ந்த செர்வேகாரரின் தாய்மொழிக் கன்னடம், வட பகுதிகளில் வாழும் இதே சாதியார் கொங்கணியைப் பேசுகின்றனர். இப்பொழுது பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள இச் சாதியாருள் சிலர் காவல், மற்றும் வருவாய்த் துறைகளில் காவலர்களாகவும் ஏவலர்களாகவும் பணியில் சேர்ந்துள்ளனர். சிலர் கடை வைத்து வணிகம் செய்கின்றனர். செர்வேகாரன் என்ற பெயர் படை எனப் பொருள்படும். செர்வே என்ற கன்னடச் சொல்லிலிருந்து வந்ததாகும். இந்துக்களான இவர்கள் மேற்குக் கடற்கரையில் வாழும் பிற சாதியாரைப் போலவே சைவம், வைணவம் ஆகிய இரு நெறிகளையும் பின்பற்றுகின்றனர். பூணூல் அணியும் இவர்களுக்குக் கராடி பிராமணர்கள் புரோகிதர்களாக உள்ளனர். சிருங்கேரி மடத்தின் தலைமையினை ஏற்பவர்கள் இவர்கள். சிறுமியர் பூப்படையும் முன்பே மணம் செய்விக்கும் இவர்கள் விதவையர் மறுமணத்தை அனுமதிப்பதோ ஆதரிப்பதோ இல்லை. மனைவி கற்பு இழந்தாள் என நிரூபிக்கப்படும்போதே மணமுறிவு அனுமதிக்கப்படுகிறது. மூன்று வயதுக்கும் சிறிய குழந்தைகள் இறந்தால் புதைக்கும் இவர்கள் மற்றவர்களின் பிணத்தை எரிக்கின்றனர். ஊன் உண்ணும் பழக்கம் உடையவர்களாயினும் மது பருகுவதில்லை. நாயக், அய்யா, ராவி, சேரெகார் என்பன இவர்களுக்கு உரிய பட்டப் பெயர்கள் எனத் தென் கன்னட மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் பொம்மன் வாலேகாரன் என்பது இச் சாதிக்குரிய மற்றொரு பெயராகவும் வீலயகார என்பது செர்வேகாரச் சாதியின் உட்சாதியாகவும் பதியப்பட்டுள்ளது.

செட்டி – Setti

பார்க்க : செட்டி. (See : Chetti)

செட்டுக்காரன் – Settukkāran

சிக்கனமானவன் எனப் பொருள்படும். இது ஒரு சாதிக்கு உரிய பட்டப் பெயராகும். சில சமயங்களில் தேவாங்கர், செட்டி என்பதற்குப் பதிலாக இதனைப் பயன்படுத்துகின்றனர்.

சேவக விருத்தி – Sevagha Vritti

கைக்கோளரின் ஓர் உட்பிரிவு.

சேவால – Sēvala (service)

கோல்லரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

சாணான் – Shānnān

தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரிய எண்ணிக்கையிலான கள் இறக்கும் சாதியார். சில ஆண்டுகளுக்கு முன் 1899–இல் திருநெல்வேலியில் நடந்த கலவரம் தொடர்பாக இச் சாதியினைப் பற்றிச் சிறப்பாக அனைவரும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இந்தக் கலவரங்கள் பற்றிக் காவல்துறை மேலாளர் முதல்வர் கூறியுள்ளதாவது:– * "மற்ற சாதியார் இச் சாதியாருக்குத் தர உடன்படுவதற்கு மேலானதான சமூக, சமயப் படிநிலையில் தங்களை உயர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உரிமை விருப்பமே இக்கலவரங்களுக்குக் காரணமாகும். மற்ற உரிமைகளோடு இவர்கள் இந்துக்களின் கோயில்களில் நுழையும் உரிமையும் தங்களுக்கு உண்டு எனக் கூறினர். சிவகாசியில் உள்ள விசுவநாதேசுவரர் கோயில் மேலாளர் அதனை மூடிவிட முடிவு செய்தார். ஒருவகையில் சாணார் இதனால் வெற்றி பெற்றவராயினர். அதனால் மற்றச் சாதியார் எரிச்சலுற்றனர். அவர்களுள் மறவரே முன்னணியில் நின்றனர். சாணார் வாழும் கிராமங்களின் மீது திட்டமிட்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அக் கிராமங்களில் குடியிருப்போர் தாக்கப்பட்டதோடு வீடுகளும் எரிக்கப்பட்டன; உடமைகள் சூறையாடப்பட்டன. சிவகாசியினைச் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மறவர்கள் சேர்ந்து சென்று தாக்கியதே இவ்வாறு நடைபெற்ற தாக்குதல்களுள் பெரும் சீரழிவினை உண்டாக்கியதாகும். இருபத்து மூன்று கொலைகளும் 102 கொள்ளைகளும் பல வன்செயல்களும் சிவகாசி, சின்னியாபுரம் முதலிய இடங்களில் நிகழ்ந்ததாக வழக்குகள் பதியப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட 1958 பேர்களுள் 552 பேர் தண்டிக்கப்பட்டனர். எழுவர் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலை முன்னின்று நடத்தியவர்களுள் ஒருவர் புகைவண்டியில் தூரத்தில் உள்ள சென்னைக்கு சென்று அருங்காட்சியகத்தின் பார்வையாளர் கையேட்டில்

---

* ஆட்சிமுறை அறிக்கை, 1899. *(Administration Report, 1899.)*

கையொப்பமிட்டுத் தான் வேறு ஊரில் இருந்ததாகக் காட்ட முற்பட்டுள்ளார். இக் கலவரத்தின்போது சாணார் சிலர் முகமதிய சமயத்தினைத் தழுவியுள்ளனர். ஆண்கள் தலையினை மழித்துக் கொண்டு தாடி வளர்த்தனர். பெண்கள் தங்கள் உடைகளில் சிற்சில மாற்றங்கள் செய்து கொண்டனர். சிறுவர்களுக்குச் சுன்னத்துச் செய்யப்பட்டது."

திருநெல்வேலி கலவரங்களின் உடனடிக் காரணம் பற்றி 1901 கணக்கெடுப்பு மேற்பார்வையாளர் கூறுவதாவது :- "ஆகம சாத்திரங்களுள் கள் இறக்குவோரைக் கோயில்களுள் நுழைய அனுமதிக்கக்கூடாது என விதித்துள்ள விதிகளுக்கு மாறாகச் சாணார் இந்துக் கோயில்களுள் நுழையத் தங்களுக்கு உரிமையுண்டு எனக் கூறி நுழைய முற்பட்டதே இக் கலவரங்களுக்கு அடிப்படைக் காரணமாகும். இந்த வகுப்பாரின் இத்தகைய உரிமை பேணும் நாட்டம் 1858-இல் திருவாங்கூர் கலவரங்களின் போதே வெளிப்பட்டுள்ளது. கிறித்தவ சமயத்தைத் தழுவிய இச் சாதியினைச் சேர்ந்த பெண்கள் மார்பை மறைக்கும் மேலாடை இன்றிச் செல்லும் வழக்கத்தைக் கைவிட்டவர்களாக மேலாடை தரிக்கத் தொடங்கியதே அக் கலவரங்களின் அடிப்படைக் காரணமாகும்." இக் கலவரம் பற்றித் திரு.ஜி.டி. மெக்கென்சி தெரிவிப்பதாவது :- "பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் தென்கோடிப் பகுதியினைச் சேர்ந்த கிறித்தவர்களாக மதம் மாறியவர்கள் கீழ்ச் சாதியாருக்கான பழைய விதிகளுக்கு முரணாக இடைக்கு மேல் ஆடை புனையத் தொடங்கினர். இந்த புதிய மாற்றம் அச்சுறுத்தல்களுக்கும் வன்முறைகளுக்கும் தொடர்ச்சியான பல கலவரங்களுக்கும் காரணமாயிற்று. இதே காரணத்திற்கான கலவரங்கள் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் 1859-இல் மீண்டும் நிகழ்ந்தன. சென்னை மாநில ஆளுநரான சர் சார்லஸ் டிரிவெல்யன் இதில் தலையிட்டுக் கீழ்ச் சாதியினைச் சேர்ந்த பெண்களும் மார்பு, தோள் ஆகியனவற்றை மறைக்கும்படியாக உடையணியலாம் என அனுமதி வழங்கினார். திருவாங்கூர் அரசர் பின்வரும் அறிவிப்பைச் செய்தார் :- "சாணான் சாதியினைச் சேர்ந்த பெண்கள் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்த சாணார் பெண்களைப் போல ரவிக்கை அணியத் தடையேதுமில்லை. எல்லாச் சாணார் வகுப்பைச் சேர்ந்த பெண்களும் மீனவப் பெண்களான முக்கவத்திகளைப் போல

முரட்டுத் துணியால் மார்பகங்களைக் கட்டிக் கொள்ள அல்லது வேறு எவ்வகையிலேனும் மறைத்துக் கொள்ள தடையேதுமில்லை. எனினும் இவர்கள் உயர் சாதிப் பெண்களைப் போல மேலாடை தரித்தல் கூடாது என இதனால் அறிவிக்கப்படுகின்றது." "1858–க்குப் பின் இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் தங்களைச் சத்திரியர் என உரிமை கொண்டாடித் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். 1874–இல் இவர்கள் மதுரையில் உள்ள மீனாட்சி கோயிலினுள் புகுவதற்குத் தங்களுக்கு உரிமையுண்டு எனக் கூறி அக் கோயிலினுள் புக மேற்கொண்ட முயற்சியில் தோல்வி கண்டனர். அப்போதிருந்து இவர்கள் தங்களுக்குப் பூணூல் அணிய உரிமை வேண்டுமென்றும் கேட்டதோடு திருமணங்களின் போது பல்லக்கில் ஊர்வலமாகச் செல்லவும் முற்பட்டனர். தங்களைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் மரபில் வந்தவர்கள் எனக் கூறிக் கொண்ட இவர்கள் ஆவணப் பதிவுகளில் சத்திரியர் எனச் சிறப்பித்துக் கூறிக் கொண்டதோடு இவர் நடத்தும் பள்ளிகளுக்கு சத்திரியர் நிலையங்கள் எனவும் பெயரிட முற்பட்டனர். பிராமணர்களுள் தாழ்ந்த பிரிவினரைத் தங்களுக்குப் புரோகிதம் செய்ய அமர்த்திக் கொண்டதோடு தங்களை அரச குலத்தவர் எனச் சிறப்பிக்கும் செய்யுள்களையும் செய்வித்து வெளிப்படுத்திய இவர்கள் ஏனோதானோ வென்று பூணூல் அணிந்து கொள்ளும் சடங்குகளை நிகழ்த்தியவர்களாகப் கோத்திரங்களைப் பற்றியும் அறியாமை நிரம்பிய வகையில் அதிகம் பேசினர். இவர்களிடம் பணம் தேவை என வருபவர்களைத் திருவிழாச் சமயங்களில் பல்லக்கில் வைத்துத் தூக்கிச் செல்ல உடன்படுவதாக எழுதி ஒப்பமும் இடச் செய்தனர். (சாணாருடைய உடல் அளவுகளைப் பதிவதற்காக நான் திருநெல்வேலியில் உள்ள நாசேரத்தில் சென்று தங்கியிருந்தபோது குட்டம் என்ற ஊரைச் சேர்ந்த இச் சாதிப் பெரியவர்கள் சிலர் என்னைக் காணப் பல்லக்கில் பழங்காலப் படைக்கலங்களையும் உடன் வைத்து எடுத்துக் கொண்டு வந்தனர்.) இவர்கள் துணிச்சலாக வெளியிட்ட செய்திகளுள் ஒன்று மக்களிடையே சாணார்காசு என்ற பெயரில் புழக்கத்திலிருந்த காசினை ஆட்சியிலிருந்த இவர்கள் முன்னோர்களே வெளியிட்டவர்களாவர் எனக் கூறி வந்ததாகும். 'பிஷப் கால்டுவெல்லும் திருநெல்வேலி சாணாரும்' என்ற துண்டுப் பிரசுரத்தை வெளியிட்ட ஒருவர், தங்கள் கண்களால் சாணார்காசினைப் பார்த்த பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களையும் தான் நேரில் சந்தித்ததாகக் கூறியிருந்தார். பெங்களூரைச் சேர்ந்த

யூரேசியன் ஒருவன் சாணார்காசினைத் தான் பார்த்துள்ளதாகச் சத்தியம் செய்துள்ளான் என அதில் கூறப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள காசு வெனீசிலிருந்து வெளியான செகியுன் எனப்படும் தங்கக் காசாகும். அது இன்னமும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தெற்கே காணப்படுகிறது. அதில் பால் ரெய்ணியெர், அலொய், மொசென், லுயடொவ்மணின் முதலிய தோகெர் பெயர்களும் சிலுவையும் இடம்பெற்றுள்ளன. இந்தியர்கள் அதிலுள்ள சிலுவையினைப் பனைமரம் எனத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். மலபாரைச் சேர்ந்த மலையாளி ஒருவனிடம் செகியுன் காசில் உள்ள உருவங்கள் யாருடையவை எனக் கோட்டால் அவன் இராமனும் சீதையும் அதில் உள்ளனர். அவர்களுக்கு நடுவே ஒரு தென்னை மரம் உள்ளது எனப் பதில் கூறுவான். ஒவ்வொரு மலையாளிக்கும் ஆமாட என்றால் என்னவென்று தெரியும். அது வெனீசில் வெளியிடப்பட்ட அல்லது அதைப் பார்த்துப் போலியாகத் தயாரிக்கப்பட்ட காசாகும். மலபாரில் ஆமாட என வழங்கும் சொல்லுக்கு உரிய பொருள் என்ன என்பதனை என்னால் இதுவரை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆமாட பகவதியின் கணவன், அத் தெய்வம் ஒருநாள் எதிர்பாராது ஒரு சாணான் முன் தோன்றி உணவு கேட்டது. சாணான் தான் ஏழையென்றும் தன்னிடம் கள்ளைத் தவிர வேறு எதுவும் இல்லையென்றும் கூறி அதனிடம் ஒரு பனையோலையில் கொஞ்சம் கள்ளினைத் தந்தான். ஆமாட அக் கள்ளினைக் குடித்தபின் அந்தப் பனையோலை மீது ஒரு மந்திரத்தை உச்சரித்து அதனைத் தங்கக் காசுகளாக்கி அச்சாணான் செய்த உதவிக்காக வழங்கிச் சென்றது. அக் காசில் ஆமாட, அச்சாணான், பனைமரம் ஆகியன இடம் பெற்றிருந்தன" எனத் திரு.பாவ்செட்* எழுதியுள்ளார்.

நாசேரத்தைச் சேர்ந்த பலர் கையொப்பமிட்டுத் 'தென்னிந்தியாவைச் சேர்ந்த நசுக்கப்பட்ட அரச மரபினரானதமிழ்ச் சான்றோரைப் பற்றிய விவரம்' என்ற தலைப்பிலான விண்ணப்பம் ஒன்றினை என்னிடம் தந்தனர். அதில் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளனர் :– "நாங்கள் பாண்டியர் அல்லது திராவிடச் சான்றோர் இனத்தைச் சேர்ந்தவர்கள். நோவா காலத்திலான பெரும் கடல்

---

* சென்னை அருங்காட்சியக மடல், III, 3, 1901. *(Madras Museum Bully, III, 3, 1901.)*

கொந்தளிப்பிற்குச் சிறிது காலம் சென்ற பின் அகத்திய முனிவர் தலைமையில் இத் தென்னாட்டில் வந்து குடியேறியவர்கள், கி.மு.3100-இல் (முனைவர்.ஹாலேயின் கணக்குப்படி) உலகம் முழுதும் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டது. நோவா என அழைக்கப்படுகின்ற வைவஸ்வத மனுவாகிய சத்யவ்ரதா அவனுடைய குடும்பத்தினைச் சேர்ந்த ஏழு பேருடனும் பெரிய தோணியில் தப்பிப் பிழைக்க அக் கலம் ஆர்யவர்த்தத்தில் உள்ள பெரிய மலைச் சிகரத்தில் வந்து தங்கியது. அதன்பின் இந்த உலகம் முழுவதும் அவனுடைய சந்ததியினர் பரவினர். அவனுடைய ஒன்பது பேரப் பிள்ளைகளுள் (முன்னோரான பிரஜாபதிகள்) ஒருவன் அத்ரி, அவனுடைய மகன் சந்திரனே சான்றோரான, பிராமணர்களுக்கு மேலானவர்களான வெள்ளத்திற்குப் பிறகான முதல் அரச பரம்பரையின் மூதாதையாவான்."

கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் இவர்களைப் பற்றித் தொடர்ந்து மேலும் கூறியுள்ளவை வருமாறு :- "தங்கள் நிலையினைப் பற்றிச் சாணார் வெளியிட்டுள்ள அறிக்கைகளை வைத்துப் பார்க்கும்போது இவர்கள் தங்களுடைய உரிமைகளைச் சாதிப் பெயரான சாணான் என்பதன் அடிப்படையிலும் இவர்களுக்குரிய வழக்கமான பட்டப்பெயர்களின் அடிப்படையிலும் நிறுவப் பார்க்கின்றார்கள் என்பது தெற்றெனப் புலனாகின்றது. சாதிப் பெயர்களும் பட்டப் பெயர்களும் அண்மையில் தோன்றினவே. அவற்றின் பொருள் எதுவாயினும் அவற்றை ஆதாரமாகக் கொண்டு நாம் கண்டறியக் கூடிய உண்மைகள் பெருமளவில் நமக்குத் துணை செய்வனவாகா. பிராமணர்கள் பிள்ளை, முதலி என்ற பட்டப் பெயர்களைத் தரித்து வந்ததாகத் தெரிகின்றது. இன்று சூத்திரர்களே இப்பட்டங்களைத் தரிக்கின்றனர். இதற்கு மாறாக நாயக்க மன்னர்கள் தங்களை அய்யர் என அழைத்துக் கொண்டுள்ளனர். இது இன்று சைவ பிராமணர்களுக்கு மட்டுமே உரிய பட்டப் பெயராக உள்ளது. இன்றுங் கூடப் பயிர்த் தொழில் செய்யும் வேளாளர், நெசவாளர்களான கைக்கோளர், ஓரளவு நாகரிகமே பெற்றுள்ளவர்களான மலைவாழ் பழங்குடிகளான சாடபு ஆகியோர் தங்களுக்கு உரியதாக முதலி என்ற பட்டத்தைத் தரிக்கின்றனர். பலிசர்களும் தெலகர்களும் தங்களை ராவ் என அழைத்துக் கொள்கின்றனர். எனினும் இது மராட்டிய பிராமணர்களுக்கு உரிய பட்டப்பெயராகும். சாணான், நாடான், கிராமணி ஆகிய பெயர்களின்

ஆக்கம் பற்றிப் புதிய கற்பனை நலம் சான்ற விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களில் சாணான் என்ற சொல் இடம்பெறவில்லை. இராசராச சோழன் (கி.பி.984 – 1013) கல்வெட்டுக்களில் கள் இறக்குவோர் ஈழவர் எனக் கூறப்பட்டுள்ளனர். 10 அல்லது 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நிகண்டான பிங்கலந்தையில் கள் இறக்குவோருக்கான பெயராகப் பளையர், துவசர், படுவர் என்பன கூறப்பட்டுள்ளன. 16–ஆம் நூற்றாண்டினதான சூடாமணி நிகண்டு மேற்கூறிய பெயர்களுடன் சவுண்டிகர் என்ற பெயரையும் கூறியுள்ளது. வடமொழிப் பெயரான இதனைப் பிராமணர்கள் 11–ஆம் நூற்றாண்டுக்கும் 16–ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் புகுத்தியிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இது ஈழவன் என்பதன் வடமொழி வடிவமாகும். சொற்கள் திரிந்து வழங்கும் போக்கைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது சவுண்டிகர் சாணான் எனத் திரிபு பெறுதல் மிக எளிதாக நிகழக் கூடியதே. சாணர், சாணான் என்ற சொல் சிறந்தோன் எனப் பொருள்படும் சான்றார் அல்லது சான்றோர் என்ற சொல்லிலிருந்து வந்ததாகக் கூறுகின்றனர். தமிழ் நூல்களுள் சாணார் எங்கும் சான்றார் என்றோ சான்றோர் என்றோ சுட்டப்பட்டதாகத் தெரியவில்லை. நாடான், கிராமணி ஆகிய இரு சொற்களும் நாட்டுத் தலைவன் என்ற ஒரே பொருள் உடையன. முன்னது தமிழும் பின்னது வடமொழிச் சொல்லும் ஆகும். நாடான் என்ற சொல் மேலும் நாட்டுப் புறத்தான் என்ற பொருளும் தருவதாகும். இது ஊர்ப்புறத்தவன் என்பதற்கு எதிர்ச் சொல்லாகும். இச் சாதிக்குரிய பட்டப் பெயரான நாடான் என்பது இச் சாதியாரின் முன்னோரான ஈழவர்கள் ஊருக்குப் புறத்தே வாழ்ந்தவர்கள் என்பதனைக் குறிப்பதாகும். (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி இரண்டு, பகுதி ஒன்று.) நாடான், கிராமணி என்ற சொற்கள் ஊரை ஆள்கின்றவர் என்ற பொருளுடையன என்று கொண்டாலும் கூட அது இப்பட்டப்பெயர் தரித்தவர்களைச் சத்திரியர் எனக் கொள்ள எத்தகைய உரிமையும் தருவதாகாது. அவ்வாறு உரிமைகொண்டாட இடம் இருக்குமானால் தென்னிந்தியாவைச் சேர்ந்த பாளையக்காரர்கள் மற்றும் வட்டாரக் குட்டித் தலைவர்களின் சந்ததியினர் அனைவரையுமே சத்திரியர் எனக் கொள்ள வேண்டியதாகும்.

1891 கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் இது தொடர்பாகக் கூறியுள்ளவை வருமாறு :- "சமூகப் படிநிலையில் சாணார், பள்ளர், பறையர் ஆகிய சாதியாருக்குச் சற்றே உயர்ந்தவர்களாக வைக்கப்பட்டிருப்பதோடு இவர்கள் தீட்டுப்படுத்தும் சாதியாராகவும் கருதப்படுகின்றனர். அண்மைக் காலத்தில் இவர்களுள் பலர் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக் கொள்ள முற்பட்டிருப்பதோடு குறைந்தது 24000 பேர்களாவது தங்களைக் கணக்கெடுப்புப் பதிவுகளில் சத்திரியர் எனப் பதிந்து கொண்டுள்ளனர். திராவிட சத்திரியர் என்ற ஒன்று இல்லையாகையால் இது பொருளற்ற வெற்றுச் செயலின் பாற்படும். ஒரு காலத்தில் சாணார் போராளி இனத்தவர்களாக இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தை நாம் அடியோடு ஒதுக்கிவிட முடியாது. தென்னகத்தைச் சேர்ந்த கள் இறக்கும் சாதியாரான பில்லவர் (வில்லாளர்), ஹலேபைக் (காலாள் படை வீரர்), குமாரபைக் (இளம் காலாள்) ஆகியோர் போர்த் தொழிலோடு தொடர்புடையவராக இருந்துள்ளனர். மைசூரை ஆண்ட கடம்பர் குலத்தவர்கள்கூடக் கள் இறக்கும் சாதியார் எனக் கூறப்படுகின்றது. 'கடம்ப மரம் பனைவகை மரங்களுள் ஒன்றாகும். அதிலிருந்து கள் இறக்கப்பட்டது. தென்மேற்கு இந்தியாவைச் சேர்ந்தவர்களான பழங்குடியினர் பலர் கள் இறக்குவோராக இருந்துள்ளனர். இவர்கள் பலரும் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பெயர்களை உடையவர்களாக இருந்துள்ளனர். முன்னாள் அரசர்களால் இவர்கள் காலாட் படைவீரர்களாகவும் மெய்க்காவலர்களாகவும் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுடைய நன்றி மறவாக் கடப்பாடே இவர்களை மன்னர்கள் அப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கக் காரணமாகும்.' * சாணான் என்ற சொல், கள் எனப் பொருள்படும் சாறு என்ற சொல்லிலிருந்து வந்ததாகக் கொள்ளலாம். கற்றறிந்தவரான கிறித்தவ சமயத் தொண்டர் ஒருவர், சாண், நார் என்ற சொற்களிலிருந்து இச் சொல் வந்ததாகக் கூறுவார். இது இவர்கள் மரம் ஏறப்பயன்படுத்தும் ஒரு சாண் நீளமுள்ள கால் கயிற்றின் அடிப்படையில் வந்ததாகும் என அவர் அதற்கு விளக்கமும் தருவார்." வேளாளரும் சாணார் என்ற பெயர் இவ்வாறு வந்ததென்றே கூறுவர்.

* ரைஸ் – மைசூர் கல்வெட்டுக்கள். பக்.33 (*Rice-Mysore Inscriptions, p.33.*

மலபாரைச் சேர்ந்த கள் இறக்குவோரான தீயர், ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்ள சேணீர் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். அவர்களைப் பிற தாழ்ந்த சாதியாரும் சேணீர் என்றே விளிக்கின்றனர். இது சாணார் என்பதன் மற்றொரு வடிவமாதல் கூடும். *

சென்னை உயர்நீதி மன்றத்தில் 1898-இல் மேல் முறையீடு செய்து கொள்ளப்பட்ட கமுதி கோயில் வழக்குத் தொடர்பாக வழங்கப்பட்ட நீதி மன்றத் தீர்ப்பில் சாணார் கொண்டாடும் உரிமைகள் பற்றிய அனைத்தும் அலசி ஆராயப்பட்டுள்ளன. அந்தத் தீர்ப்பின் பகுதிகளை இங்கே எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன். சாணாரை இந்து சத்திரிய குலத்தவர்கள் என்றோ சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வழித் தோன்றல்கள் என்றோ கொள்ள எத்தகைய ஆதாரமும் இல்லை. நாடார்களுக்கும் சாணார்களுக்கும் இடையே எத்தகைய வேறுபாடும் இருப்பதாகவும் கூறுவதற்கில்லை. வேளாளர், மறவர் என்ற சாதிப் பெயர்களைப் போலவே சாணார் என்பதும் ஒரு சாதிக்கு உரிய பெயராகும். பிராமணர்கள் தங்களை அய்யர், அய்யங்கார், ராவ் என்ற பட்டப்பெயருக்கு உரியவராகக் கூறிக்கொள்வதைப் போலச் சாணார் சாதியினைச் சேர்ந்த சில குடும்பத்தவர்களும் தங்களை நாடார் என்ற பட்டப்பெயருக்கு உரியவராகக் கூறிக்கொள்கின்றனர். நாடார்கள் அனைவரும் சாணார் சாதியாரே. அவர்களுள் பலர் தங்கள் சாதியினை விட்டவர்களாகக் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களாகிவிட்டதைப் போலக் கிறித்தவர்களாகும் போது வேண்டுமானால் சாணாரல்லாதவர்கள் ஆகலாம். நெடுங்காலந்தொட்டுச் சாணார் பனைவகை மரங்களை வளர்த்து அவற்றிலிருந்து பதநீர் எடுத்து அதனை மதுவாக ஆக்கி விற்றுவரும் தொழிலைச் செய்து வருகின்றனர். இவர்களை ஆரிய இனத்தவர்கள் எனக் கொள்ள எத்தகைய ஆதாரமும் இல்லை. கிராம தேவதைகளையே வழிபட்டு வரும் இவர்கள் சமூகப் படிநிலையில் பள்ளர், பறையர், சக்கிலியர் ஆகியோருக்குச் சற்றே மேம்பட்டவர்களாக வைக்கப்பட்டுள்ளதோடு இந்துக் கோயில்களில் நுழையவும் அனுமதிக்கப்படுவதில்லை. இந்துக் கோயில்களில் நுழைந்து வழிபட உரிமையுள்ள வேளாளர், மறவர் சாதியாருக்கும் கீழ்ப்பட்ட

சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை. 1901. *(Madras Census Report. 1901.)*

படிநிலையினராக இவர்கள் உள்ளனர். காலப் போக்கில் சாணார் பலர் பயிரிடுதல், வணிகம், வட்டிக் கடை ஆகியனவற்றை மேற்கொண்டவர்களாகத் தங்களுடைய பரம்பரைத் தொழிலோடு எத்தகைய தொடர்பும் அற்றவர்களாக வளமான வாழ்க்கையினை மேற்கொண்டவர்களாக உள்ளனர். பல கிராமங்களில் பெரும் அளவிலான நில உடமையாளர்களாக உள்ள இவர்கள் அங்கு வணிகம் முதலியவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். செல்வவளம் மிகுந்தவுடன் இவர்கள் சமூகப் படிநிலையில் உயர்ந்த தகுதி பெறவும் சமயம் தொடர்பானவற்றில் மற்றவர்களோடு கூடச் சமமாக மதிக்கப்படவும் ஆர்வம் உடையவர்களாதல் இயல்பானதே. துணை நீதிமன்ற நடுவர் தனது தீர்ப்பில், மதுரை மாவட்டத்தில் உள்ள சிவன் கோவில்களில் வழிபாடு செய்கின்றவர்கள் அங்குத் தங்களுக்கு ஆதாரமானதெனக் கருதுகின்ற ஆகம சாத்திரங்களில் கூறியுள்ளபடி வழிபாடு நிகழ்த்தப்படுவதால் , அச் சாத்திரம் மதுக் காய்ச்சுபவர்களும், பனை, தென்னை மரங்கள் ஏறுபவர்களும் கோயில்களுள் நுழையக் கூடாது என விதித்துள்ளதாகக் கூறுவதால் இவர்கள் கோயிலில் நுழைய உரிமை கொண்டாட முடியாது எனக் கூறியுள்ளார். அவருடைய இந்தத் தீர்ப்பு தவறானது என்பதனை நிலைநாட்ட எங்கள் முன் வேறெந்தக் காரணமும் புலனாகவில்லை.... சாணாருள் பலர் தங்கள் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டவர்களாகக் கல்வி கற்றவர்களாகத் தொழில். வணிகம், வழக்குரைஞர், எழுத்தர் போன்ற தொழிலை மேற்கொண்டுள்ளனர் என்பது உண்மையே. இதனால் சமூகப் படிநிலையில் உயர்ந்தவர்களாக உயர்வானதான சமய வழிபாட்டு நெறியினை மேற்கொள்ள விரும்பும் அவர்கள் விருப்பம் பரிவுடன் அணுகப்பட வேண்டியதே. எனினும் அத்தகைய பரிவுணர்ச்சி ஆதாரமற்ற கற்பனை வாதங்களை முன் வைத்து வாதாடிப் பிற சாதியாருக்கு உரிய உரிமைகளில் குறுக்கிட அவர்களுக்கு உரிமை வழங்குவதாக ஆகிவிடுதல் கூடாது. இவர்களுக்கு என உரிய கோயில்கள் உள்ளன. அவை பலவாகவும் உள்ளன. பிறருடைய உரிமைகளில் தலையிடாமல் தங்களுடைய கோயில்களை உயர்த்திக் கொள்ளப்போதுமான அளவு கல்வியும் செல்வமும் படைத்தவர்களாக உள்ள இவர்கள் அவ்வகையில் மேன்மையுடைய நடுநிலையாளர்களான அனைவரின் ஆதரவையும் தேவை ஏற்படுமாயின் வழக்கு மன்றங்களின் பாதுகாப்பையும் பெறுவதற்கு உரியர்.

சாணார் பற்றிய ஒரு குறிப்பில்* மறைத்திரு.ஜெ.சார்ராக் எழுதியுள்ளவை வருமாறு :- "கல்வியில் உள்ள ஆர்வங்காரணமாகவும் பெரும்பான்மையோர் கிறித்தவ சமயத்தைத் தழுவியுள்ளமையாலும், சிக்கன வாழ்க்கை முறையினாலும் சாணார் இன்று சமூகப் படிநிலையில் பெரும் அளவு உயர்வு பெற்றுள்ளனர். தங்கள் விடாமுயற்சியின் காரணமாகப் பலர் இன்று மறவரைக் காட்டிலும் முன்னேறியவர்களாக உள்ளனர். ஒரு நாட்டின் முன்னேற்றம் அல்லது ஒரு சாதியின் முன்னேற்றம் பட்டப் பெயர் ஒன்றினைத் தரித்துக் கொள்வதில் இல்லை என்பதனையும் இவர்கள் இன்னமும் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். அறிவிலிகளாக இதுபோல பெயரளவில் ஒருவன் தன்னைத்தானே உயர்த்திக்கொள்ள முற்படுவதால் நிகழும் வன் செயல்கள் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்குத் தடைக்கற்கள் ஆகின்றனவேயன்றி அதன் வளர்ச்சிக்கு உதவுவதாயில்லை. அறிவொடுபட்டதும் சமூக நலத்தைக் கருத்தில் கொண்டதுமான முன்னேற்றப் போக்குகளால் எந்த ஒரு சமூகமும் தன் சொந்த முயற்சியால் தன்னை உரிமையும் முன்னேற்றமும் பெறுவதற்கான வழிகளில் செலுத்திக் கொள்ள முடியும்."

1875-இல் மேற்றிராணியார் கால்டுவெல் ஒரு குறிப்பில் கூறியுள்ளவை வருமாறு :- "இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாகவே உள்ள சாணார் தலைமுடியினை நீளத் தொங்கவிட்டுக் கொண்டுள்ளனர். இவர்கள் கோயில்களுள் நுழையத் தடையாக இருப்பது இவர்களுடைய சாதியே அன்றி இவர்கள் நீளத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் தலைமுடியன்று. இந்தச் சாதியினைச் சேர்ந்த சிலர் - செல்வ வளம் படைத்தவர்கள் - குடுமி வைத்துக் கொள்பவர்களாக மாறியிருந்தும் கூட நீள முடியினைத் தொங்க விட்டுக் கொண்டிருப்பவர்களைப் போலவே கோயில்களுள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. கிறித்தவ சமயத்தைத் தழுவிய சாணார்கள் பலரும் இன்று குடுமி வைக்கும் வழக்கத்தையும் தழுவியவர்களாகவே உள்ளனர்."

1816-ஆம் ஆண்டின் விதிமுறைகள் வரையறைகளில் ஊர்த் தலைவர்கள், கெட்ட வார்த்தைகளைப் பேசுவதோடு அடிதடிகளில்

* சென்னை மெயில் இதழ். 1901. *(Malabar and its Folks. 1900)*

ஈடுபடுவோர், தெருச்சண்டை புரிவோர் ஆகிய தங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்களைக் கிராமத்துச் சாவடியில் பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேற்படாதபடி அடைத்து வைக்கலாம். இவ்வாறு குற்றம்புரிவோர் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்தவர்களாயின் அவர்கள் ஆறுமணி நேரத்திற்கு மேற்படாத காலம்வரை குற்றியில் மாட்டி வைக்கலாம். உயர்நீதி மன்றத்தின் முன் வந்த ஒரு வழக்கில் 'தாழ்ந்த சாதி' என்பது ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன் இழிசாதியினராகக் கருதப்பட்டவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. 1903 ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதி மன்றத்தின் முன் வந்த வழக்கு ஒன்றில் சாணார் தாழ்ந்த சாதியார் என்றும் இவர்களைக் குற்றியில் மாட்டலாம் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாசரேத்திலும் திருநெல்வேலியிலும் நான் சாணாரின் உடல்வாகினை ஆராய்ந்ததோடு அவர்கள் வீர விளையாட்டுக்களையும் நேரில் கண்டேன். அவை என்னை வெகுவாகக் கவர்ந்தன. என்னைச் சிறப்பிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் இடம் பெற்ற விளையாட்டுக்கள் வருமாறு :-

1. வாள் வித்தை, நாங்குமா ***(Mesua ferrea)*** மரக் கழிகளையேந்திப் பயிற்சி செய்தல்.
2. இரு முனைகளிலும் தீப்பந்தம் எரியும் கழிகளோடு கூடிய ஆட்டம்.
3. உடலை வளைத்து ஆடும் பலவகை வித்தைகள்.
4. கல் உரல், அரவைக் கல் போன்ற பளுக்களைத் தூக்குதல்.
5. நீளத் தாண்டல்.
6. கத்தியால் அல்லது கைமுட்டியால் தேங்காய் உடைத்தல்.
7. விஸ்கி பாட்டில் கண்ணாடியினைப் பல்லால் மெல்லுதல்.
8. ஓடிவரும் ஒருவர் மார்போடு மார்பும் முதுகொடு முதுகும் தோளொடு தோளும் இடித்துத் தள்ளுதல்.
9. வெள்ளியாலான நீண்ட சங்கிலியினை விழுங்குதல்.
10. ஒருவன் கழுத்தின் மேல் வெள்ளரிக் காயை வைத்து அதனை வாளால் இரண்டாக வெட்டுதல்.
11. வல்லூறு கொண்டு வேட்டையாடுதல்.

* இந்தியத் தொல்லியல். IV. 1875. *(Ind.Ant.IV. 1875.)*

சென்னை மாநிலத்தின் முன்னாள் ஆளுநரான சர் தாமஸ் மன்றோவின் சிறந்த தன்மைகளுள் ஒன்று இராமன், ராப்ராய் போன்ற வீரர்களின் கரங்களைப் போல அவருடைய கரமும் முழங்காலைத் தொடும் அளவிற்கு நீண்டிருந்ததாகும். இதனை வேறொரு வகையாகக் கூறினால் அவர் ஒரு ஆஜானபாகு. இது அரச குலத்தவர்களுக்கு இயல்பாக வாய்க்கும் பரம்பரைப் பண்பாகும். இத்தகைய உடல்வாகினை நான் நேரில் ஒரே ஒரு முறை ஒரு சாணானிடம் காணும் வாய்ப்பினைப் பெற்றேன். அவன் உயரம் 173 செ.மீ. அவன் தன் கைகளை இரண்டு பக்கமும் நீட்டும்போது அது 194 செ.மீ. அளவுடையதாக இருந்தது. (உயரத்தை விட 21 செ.மீ. கூடுதலாகும்.) ராப்ராய் குனியாமலேயே முழங் காலுக்குக் கீழே உள்ள தன் காலுறையின் கச்சையினைக் கட்டிக் கொள்ளக் கூடிய அளவு கரங்கள் நீண்டவனாக இருந்தான் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

சாணாரின் சிறு தெய்வ வழிபாடு பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள விரும்புவோர் மறைத்திரு.ஆர்.கால்டுவெல் (பின்னர் இவர் மேற்றிராணியாராக உயர்த்தப்பட்டார்) லின் 1849–இல் வெளியான இன்று கிடைத்தற்கு அரிதான 'திருநெல்வேலி சாணார்' என்ற நூலினைப் பார்க்கும்படி அறிவுறுத்துகின்றேன். இளைஞராக கிறித்தவத் தொண்டராகப் பணியாற்றிய காலத்தில் இந்த நூலினை எழுதியதற்காக அந்தத் திருத்தொண்டர் பின்னாளில் வருந்தினார் எனத் தெரிகின்றது.

பனங் ***(Borassus flabellifer)*** காடுகளில் பனை மரத்தில் ஏறிப் பதநீர் இறக்கும் அற்புத சாதனையின் கைத்திறம் வியத்தற்கு உரியது. நீ மரம் ஏற வேண்டுமானால் சாணானாய்ப் பிறக்க வேண்டும் என்ற பழமொழியும் உள்ளது. பனை ஏறுபவன் ஒரு நாளைக்கு மூன்று முறை நாற்பது முதல் ஐம்பதடி உயரமுள்ள நாற்பது ஐம்பது பனைமரங்களில் ஏறி இறங்குவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு பனை மரத்தின் மடல் மேல் உயர உட்கார்ந்திருந்தவன் அது விழுந்த காரணத்தால் அதனோடு கூடவே அது பாராசூட் போல உதவ அதன்மேல் அமர்ந்து எத்தகைய ஆபத்தும் இன்றித் தரைக்கு வந்து சேர்ந்தான் என மேற்றிராணியார் கால்டுவெல் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறியுள்ளார். மரங்கொத்திகள் பறவை பிடிப்போரால் சாணாரக் குருவிகள் என அழைக்கப்படுகின்றன. அவை மரத்தில சாணாரைப் போல் தொற்றுவதால் இப்பெயர் பெற்றன.

பனைவெல்லம் காய்ச்சும் பருவம் தொடங்கும்போது கால்டுவெல் அவர்களும் அந்த மரபைப் பின்பற்ற விரும்பியவராகத் தேவாலயத்தில் அந்த நாளக்கு உரியதாக ஒரு நாளினை ஏற்பாடு செய்து சிறப்பு வழிபாடு நிகழ்த்தும் வழக்கத்தைப் புகுத்தியுள்ளார். அப்பொழுது பனை ஏறுபவர்கள் அதற்குப் பயன்படுத்தும் அனைத்துக் கருவிகளுள் ஒவ்வொன்றைத் தேவாலயத்திற்குக் கொண்டு வந்து பலிபீடத்தின் முன் வைப்பர். இந்துக்கள் சிறப்பாகக் கொண்டாடும் நாளினும் வெறொரு நாளில் கிறித்தவர்கள் இதனை நடத்துகின்றன. பனை ஏறுபவனுக்கு வரும் ஆபத்துக்கள் பல. நாற்பது ஐம்பதடி உயரத்திலிருந்து விழுந்து இவர்கள் விபத்துக்கு உள்ளாகின்றனர். எனவே இத்தகைய சமயத் தொடர்புடைய வழிபாடு பொருத்தமானதே என ஏற்றுக் கொள்வதற்குரியதொன்றாக அமைகிறது" என மறைதிரு (பின்னாளில் சமயகுரு) எ. மார்கோசிஸ் கூறியுள்ளார்.

இந்து சமயச் சடங்கு ஒன்றினைக் கிறித்தவ சமயச் சடங்காக மாற்றி நேர்ச்சிக் கடனாக அமைக்கும்போது அது சில புதுமைகளைக் கொண்டதாகவே இருக்கும். தீருவாங்கூரைச் சேர்ந்த பறையர் பற்றிய ஒரு குறிப்பில்* மறைத்திரு. மட்டீர் கூறிய வழக்கு வரலாற்றில் சாணார் கருவூரைச் சேர்ந்த பறைச்சி ஒருத்தியின் மகளான ஆதியின் சந்ததியினர் என்றும் அந்த ஆதியே சாணாருக்குப் பனை ஏறக் கற்றுத் தந்ததாகவும் சாணார் உயரமான மரத்திலிருந்து விழுந்தால் அடிபடாது காக்க அவள் ஒரு மருந்தைத் தயாரித்ததாகவும் அணில்களும் அதில் கொஞ்சத்தைத் தின்றதால் மரத்திலிருந்து விழும் அவற்றிற்கும் ஊறு ஏதும் ஏற்படுவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் சாணார் பற்றிப் பதியப்பட்டுள்ளவை வருமாறு :- "பள்ளர், பறையர் ஆகிய தாழ்ந்த சாதியாரை இவர்கள் கள்ளினைத் தூக்கிச் செல்ல உதவும் பணிக்கு அமர்த்திக் கொள்கின்றனர். முசல்மான்களும் பிராமணர்களும் பல இடங்களில் தங்கள் சமய ஆசாரங்களை ஒருபுறமாக எத்தகைய மனச்சாட்சி உறுத்தலும் இல்லாதபடி ஒதுக்கி வைத்துவிட்டு மதுக்கடைகளை நடத்தி மது விற்பனை செய்து வருகின்றனர். முசல்மான்கள் நடத்தும் இக்கடைகள் சிலவற்றுள் முசல்மான்களே

---

* ராயல் ஆசியக் கழக இதழ், XVI. *(Journ.Roy.As.Soc., XVI)*

வாடிக்கையாளர்களுக்குத் தங்கள் கையாலேயே மது ஊற்றித் தரவும் செய்கின்றனர்."

அண்மையில் வெளியானதான குறிப்புகளுள் ஒன்று +. "எல்.எம்.எஸ்.சாணாரான கிறித்தவர்களுள் பலர் வெல்லங் காய்ச்சவும் கள்ளுக்காகவும் பனைமரம் ஏறிப் பதநீர் இறக்குவதைத் தங்கள் தகுதிக்குத் தாழ்ந்தது எனக் கைவிட்டு விட்டனர். இவர்களுடைய இந்த முன் உதாரணத்தை மற்றவர்களும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தீர்க்க இயலாததான பொருளாதார தேக்கநிலை ஒன்று உருவாகியுள்ளது. பனை ஏறுவதற்காகத் திருவாங்கூரிலிருந்து திருநெல்வேலிக்கு ஓர் ஊரார் பனை ஏறுவோரை அழைத்து வந்து பணிக்கு அமர்த்தியுள்ள விவரம் நான் நேரிடையாகக் கண்டறிந்த ஒன்றாகும். இவ்வாறு பனை ஏறுபவர்கள் இல்லாது போகின்ற காரணத்தால் பனை மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. இது தொடர்ந்து நீடிக்குமானால் நாட்டின் நலம் பெரிதும் பாதிக்கப்படும்" எனக் கூறுகின்றது.

திருநெல்வேலியில் உள்ள அத்தித் தொண்டினைச் சேர்ந்த பனங் காட்டில் சோளக் கொல்லையினை இராக் காவல் காக்க மாலை நேரத்தில் புறப்பட்டுக் கூட்டமாகச் சென்ற சாணாரையும் சாணாரச் சிறுவர்களையும் நான் காண நேர்ந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் பனை நாராலான கயிற்றினைக் கழுத்துவாரோடு பிணைக்கப்பட்ட பயிற்சி பெற்ற நாய் ஒன்றினையும் தங்களுடன் அழைத்துச் சென்றனர். காட்டுப் பன்றி அல்லது பிற விலங்குகளுள் ஒன்று வருவதை மோப்பம் பிடித்து நாய் குலைக்கத் தொடங்கியவுடன் அவர்கள் நாயினைக் கட்டிப் பிடித்துள்ள கயிற்றினை விட்டுவிடுவர். அந்த நாய்களுள் பல, காட்டுப் பன்றிகளோடு போராடிய காயங்களின் வடுக்களோடு காட்சி தந்தன. அவர்களுள் ஒருவன் பக்கத்துக் காட்டில் கிடந்த காட்டெருமைக் கொம்பால் செய்யப்பட்ட இசைக் குழல் ஒன்றினையும் தன்னோடு உடன் கொண்டு சென்றான்.

மற்றவர்களால் சாணார் என்றோ மரமேறி என்றோ அழைக்கப்படுவதைச் சாணார் விரும்புவதில்லை. நாடான் கருக்கு

+ சென்னை மெயில் நாளிதழ், **1907.** *(Madras Mail. 1907)*

என்றழைக்கப்படுதலையே இவர்கள் விரும்புகின்றனர். நான் நேரில் கண்டு ஆய்ந்த திருநெல்வேலிச் சாணாரிடையே பின்வரும் ஐந்து உட்பிரிவுகள் உள்ளதாகப் பதியப்பட்டுள்ளது.

1. கருக்குப் பட்டையர் :– (கருக்கரிவாளினை உடையவர்கள்) மற்ற பிரிவினரைக் காட்டிலும் இவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். 1891–ஆம் ஆண்டு கணக்கெடுப்பு அறிக்கையில் மட்டை (பனை ஓலையின் ரம்பம் போன்ற கூரிய விளிம்பை உடைய மட்டை) என்ற பிரிவும் பதியப்பட்டுள்ளது.
2. கள்ள :– இவர்கள் கருக்குப் பட்டையரின் இல்லங்களில் பணியாளர்களாகக் குற்றவேல் புரிந்து வந்ததோடு பல்லக்கும் சுமந்து வந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.
3 நட்டாடி :– சவேரியர்புரத்திற்கு அருகில் உள்ள நட்டாடியில் வாழ்பவர்கள்.
4. கொடிக்கால் :– கொடி என்ற சொல்லிலிருந்து வந்த பெயர். படைவீரர்களுக்கு உரிய பிரிவினை அடையாளம் காட்டும் கொடிகளைத் தாங்கிச் செல்வோர். இச் சொல் வெற்றிலைக் கொடிக்கால் போடுவோரையும் குறிக்கும் எனவும் கூறுவர்.
5. மேல் நாட்டார் :– (மேல்–மேற்கு) திருநெல்வேலிக்கு மேற்கே திருவாங்கூரில் வாழ்பவர்கள்.

1891 கணக்கெடுப்பின் போது கொங்க, மதுரை என்ற இரண்டு உட்பிரிவுகள் சாணாருக்கு உரியனவாகப் பதியப்பட்டுள்ளன. மதுரை என்பது மதுரை நகரத்தோடு தொடர்புடைய பெயரன்று. இனிக்கும் பதநீருக்குரிய மதுரம் என்பதனைக் குறிக்கும் சொல்லோடுதொடர்புடையது. 1901 கணக்கெடுப்பின்போது தொளைக்காதன் (காதில் பெரிய தொளையுடையவன்) என்பது சாணாரின் ஓர் உட்சாதியாகப் பதியப்பட்டுள்ளது. இவர்கள் சென்னையில் நெல் குற்றிய அரிசியினை விற்று வருவதோடு நாடான் என்ற பட்டப்பெயரையும் தரிக்கின்றனர். மதுரையிலும் திருநெல்வேலியிலும் பெரிய தொளையோடு கூடிய காதுடையவர்களை மிகுதியும் காணலாம். இந்த இரு மாவட்டங்களிலும் தங்களைப் பாண்டியன் எனப் பதிந்து கொண்டுள்ளவர்கள் நாடான் என்பது தங்களுக்கு உரிய பட்டப்பெயர் எனப் பதிந்துள்ளமையால் சாணார் என

வகைப்படுத்தப்பட்டுள்ளனர். கோயமுத்தூரிலும் மூப்பன் என்ற பட்டத்தைப் பயன்படுத்துகின்றனர். சாதித் தலைவன், மூத்தவன் எனப் பொருள்படும் இப்பட்டம் அம்பலக்காரன், வலையன், சுதர்மான், சேனைக்குடையான் ஆகிய சாதிகளுக்கும் உரியதாக உள்ளது. தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில், சாணார் தென்னம், பனம், ஈச்சம் என்று அவர்கள் தொழில் செய்ய ஏறும் மரத்தின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டுள்ளனர். சாணாருக்கு உரிய ஏனாதி என்ற பெயர் சைவ அடியாரான ஏனாதி நாயனாரின் பெயரிலிருந்து வந்ததாகும். ஏனாதி என்ற சொல் அம்பட்டனையும் குறிக்கும்.

இச் சாதியாருள் நிலக்கிழார்கள், சமயம், சட்டம், மருத்துவம், கலை ஆகிய துறைகளில் பட்டம் பெற்றவர்கள் ஆகியோர் உள்ளனர். திருநெல்வேலியில் உள்ள இந்தியக் கிறித்தவ சமயத் தொண்டருள் பத்துப் பேருள் ஒன்பது பேர் கிறித்தவர்களாக மதம் மாறிய சாணார்களே. திருநெல்வேலியினைச் சேர்ந்த இந்தியர்களான கிறித்தவ சமயத் தொண்டர்கள் மடகாஸ்கர், நேபார், மொரீசியஸ், மலேயா முதலிய வெளிநாடுகளுக்குப் பணியாற்றச் சென்றுள்ளனர். நாசரேத்தில் நான் நேரில் கண்ட சாணாருள் வணிகர், பயிரிடுவோர், பள்ளி ஆசிரியர், கிராம முனிசீப்கள், இசைவாணர், வண்டி ஓட்டுவோர், கூலிகள் ஆகிய பல தொழிலும் செய்வோர் இருந்தனர்.

திருநெல்வேலியில் உள்ள விருதுப்பட்டியில் சாணார் 'சத்திரிய வித்தியாலயம்' என்ற பெயரில் ஒரு பள்ளியினைத் தொடங்கியுள்ளனர். மாணவர்களிடமிருந்து கட்டணம் ஏதும் வாங்காது சாணார் சாதியினைச் சேர்ந்த சிறுவர்களுக்குக் கற்றுத் தரும் இப்பள்ளியில் மற்றச் சாதியினைச் சேர்ந்த சிறுவர்களையும் சேர்த்துக் கொள்கின்றனர். இப் பள்ளியினை நடத்துவதற்கான செலவினைச் சாணார் தங்களுக்கிடையே விதிக்கும் மகிமைத் தொகையிலிருந்தும் கொடுத்து வருகின்றனர். பிராமணர், சாணார் முதலிய சாதிகளைச் சேர்ந்தவர்கள் இப் பள்ளியில் ஆசிரியர்களாக உள்ளனர். மகிமை என்ற சொல் பெருமை, புகழ், மரியாதை என்ற பொருள்களுக்கு உரியது.

சான்போகம் – Shānbog

மாகென சான்போகம் தென் கன்னடத்தில் கிராம கணக்கர்களுக்கு உரிய பெயராகும். பெரிய கோயில்களிலும் இதுபோல

உரிமம் பெறும் கணக்கர்கள் உள்ளனர். சாதிச் சபைகளில் வழக்குகள் விசாரணைக்கு வரும்போது சாதியார் வழக்கில் நடைமுறைகளைப் பதிவதற்காகச் சான்போகங்களை அமர்த்துவர். சாதியினைச் சேர்ந்த முக்தேசர்கள் (சாதித் தலைவர்) அப் பதிவுகளின் அடிப்படையில் வழக்குப் பற்றிய தங்கள் முடிவுகளைக் கூறுவர். தென் கன்னடத்தில் சில இடங்களில் சான்போகம் என்பது சாரஸ்வத்த பிராமணர்களுக்கரன மற்றுமொரு பெயராக வழங்குகின்றது. மைசூரில் உள்ள சான்போகம் பற்றி மைசூர் மற்றும் குடகு விவரக் குறிப்பில் திரு. எல்.ரைஸ் கூறியிருப்பதாவது :– "பிராமணர் சாதிக்கே உரியதாக உள்ள கிராமக் கணக்கர் பிரிவு இது. பரம்பரை உரிமையுடைய இந்தப் பணியினை மேற்கொண்டுள்ளவர்கள் சில இடங்களில் வரியிலியாக நிலத்தை அனுபவிக்கின்றனர். பிற இடங்களில் மிகக் குறைந்த தீர்வையே விதிக்கப்படுகிறது. சில இடங்களில் குறிப்பிட்ட அளவு தொகையினை ஊதியமாகப் பெறுகின்றனர். எத்தகையவர்களாயினும் இவர்கள் பயிரிடும் குடியானவர்களிடமிருந்து பொருளாகவோ பணமாகவோ ஒரு குறிப்பிட்ட கட்டணத்தைப் பெற்று வருகின்றனர்."

1869–இல் வெளியிடப்பட்டுள்ள இலக்கத் தீவுகள் பற்றிய அறிக்கையில் திரு.டபிள்யூ.ராபின்சன் குறிப்பிட்டிருந்தாவது :– "மொனெகர் இத்தீவினைச் சேர்ந்த கரணெய் என்பவரின் உதவியினை வழக்குகளில் வாக்குமூலங்களைப் பதிய அமர்த்திக் கொள்கின்றனர். இப் பதிவுகள் அரபி வரி வடிவிலேயே பதியப்பட்டுள்ளன. இப் பணியோடு கூடக் கரணெய் சான்போகத்தின் பணிகளையும் பார்த்து வரவேண்டும். மரங்களைப் பற்றிய கணக்கு விவரங்களையும் தீவுகளில் உள்ள கயிறுகளின் கணக்குகளையும் வைத்திருப்பதோடு கரைக்குக் கொண்டு வரப்படும் கயிறுகள் பற்றிய கணக்குகளையும் வைத்திருந்து அவர் கேட்கும்போது விவரம் தருவார்."

சிகாரி – Shikāri

வேட்டைக்காரன் அல்லது விளையாட்டு வீரன் எனப் பொருள்படும் இச்சொல் இருளருக்கு உரிய மற்றொரு பெயராகவும் குறவரின் உட்பிரிவு ஒன்றுக்கு உரிய பெயராகவும் உள்ளது. "வேட்டைக்கு செல்லும் ஐரோப்பிய வேட்டைக்காரர்களுக்கு வழிகாட்டிகளாகவும் உதவியாளர்களாகவும் செல்வோருக்கும் ஐரோப்பிய

வேட்டைக்காரருக்குமான பெயராகச் சிகாரி என்ற பெயரை இந்தியர்கள் பயன்படுத்துகின்றனர்.*

சோலகர் – Shōlaga

சோழகர் எனப்படும் சோலகர் பற்றிச் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் புச்சனன் + தந்துள்ள விவரங்கள் வருமாறு :– "கொச்சையான அல்லது பழைய கருநாடகக் கிளைமொழியினைப் பேசும் சோலகர் கிட்டத்தட்ட பிறந்த மேனியராகவே திரிகின்றனர். இரவில் நெருப்பு மூட்டி அதனைச் சுற்றி வாழையிலைகளின் மீது ஒருவரை ஒருவர் அணைத்தபடி படுத்துத் தூங்குவர். பெரும்பாலும் மலைச் சிகரங்களை ஒட்டிய, புலிகளின் நடமாட்டம் அற்ற பகுதிகளில் வாழும் இவர்கள் தங்கள் வெற்றுடம்பைக் கடுங்குளிருக்கு உள்ளாக்கிக் கொள்கின்றனர். மூங்கிலின் இருமுனைகளையும் வில்போல் வளைத்துத் தரையில் சொருகி அமைக்கப்பட்ட வாழையிலைகளால் வேயப்பட்ட எளிய குடிசைகளில் வாழ்கின்றனர்." மைசூர் எல்லையில் கோயமுத்தூர் மாவட்டத்துக் காடுகளில் திம்பத்திற்கும் கொள்ளேகாலத்திற்கும் இடையே வாழும் சோலகர்கள் இன்று பருத்தித் துணியாலான கோவணம் தரித்து ஆங்கிலேயர் பாணியிலான படைவீரர் உடைக்குரிய பித்தான்களோடு கூடிய மேற்சட்டையினை அணிகின்றனர். அரசுப் பணியாளரான இன இயல் ஆய்வாளரைக் காணவரும் சமயங்களில் இவர்கள் லிங்காயதரைப் போல விபூதியும் பூசிக் கொள்கின்றனர். இவர்கள் தோற்றம் பற்றிய பின்வரும் வழக்கு வரலாறு, இவர்களிடையே தற்போது நிலவுகின்றது என்பது என்னோடு தொடர்பு கொள்வோர் வழி தெரிய வந்துள்ளது. காரயன், பில்லையார் அல்லது மாதேசுவரன் என்ற இரண்டு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். ஊராளிகளும் சோலகர்களும் காரயன் சந்ததியினராகத் தோன்றினர். சிவாச்சாரியர் (லிங்காயதர்) மாதேசுவரர் சந்ததியினராகத் தோன்றினர். இந்த இரு சகோதரர்களும் சவண்ன் என்ற கொடிய அரக்கனிடம் அகப்பட்டுக் கொண்டனர். அவன் காரயனை இடையனாக்கியதோடு தனக்குத் தகுந்த மரியாதை காட்டாத மாதேசுவரனைச் சிறையில் தள்ளி அவனை எல்லாக் குற்றவேல் பணிகளையும் செய்யும்படி ஏவி வந்தான். கடைசியாக அவன்

---

* யூலும் பர்னலும்–ஹாப்சன்–ஜாப்சன். *(Yule and Burnell. Hobson-Jobson)*

\+ மைசூர், கன்னடம், மலபார் வழியான பயணம், 1807. *(Journey through Mysore, Canara and Malabar, 1807.)*

மாதேசுவரனிடம் ஒரு இணை செருப்புகள் செய்யும்படி ஆணையிட்டான். அதனை நல்ல முறையில் செய்து முடிக்கத் தனக்கு சில நாள்களுக்கு விடுதலை வழங்கும்படி அவன் அந்த அரக்கனிடம் வேண்டினான். அவ்வாறே அவனுக்கு விடுதலை வழங்கப்பட்டது. உடனே மாதேசுவரன் கிருட்டிணமூர்த்தி தெய்வத்திடம் சென்று, தனக்கு நேர்ந்துள்ள தொல்லையிலிருந்தும் தன்னை மீட்கும்படி வேண்டினான். அவனுக்கு அவன் விருப்பப்படி உதவ மகிழ்ச்சியோடு உடன்பட்ட அத்தெய்வம் அவனிடம் அவன் செய்ய உள்ள செருப்புக்களை மெழுகால் தயாரிக்கும்படி பணித்தது. கிருட்டிணமூர்த்தியின் உதவியுடன் அவன் அழகிய ஒரு இணை செருப்புக்களைச் செய்து முடித்தான். அதன்பின் கிருட்டிண மூர்த்தி அவனிடம் கெத்தேசாலத்திற்கு கிழக்குப் பக்கமாக இருக்கும் மொட்டைப் பாறையின் மீது அது தணலாக மாறும்படி சொக்கப் பானையினைக் கொளுத்தி எரித்த பின், தங்கள் சதித் திட்டம் வெளியே தெரியாதிருக்கும்படி அந்த நெருப்பின் சாம்பலையெல்லாம் அப்புறப்படுத்தும்படி கூறியது. அதன்பின் மாதேசுவரன் அச் செருப்புக்களைச் சரவணனிடம் கொண்டு கொடுத்து அதனைப்போட்டுக் கொண்டு அந்த மொட்டை பாறை மீது நடக்கும்படி கூற அவனும் அவ்வாறே நடந்து சென்றான். அவன் அந்தப் பாறையின் மீது கால் வைத்தவுடன், அவன் அப்பாறை மீது மோதுண்டவனாக விழுந்தான். அவ்வாறு விழும்போதே அவன் தன்கைகளால் மாதேசுவரனைப் பற்றி அவன் கழுத்தை நெரிக்கலானான். இந்தச் சதித்திட்டம் நடைபெறுவதைக் காண கிருட்டிணமூர்த்தி அவ்விடத்தில் எல்லாத் தெய்வங்களையும் வந்து கூடும்படி செய்திருந்தது. அத் தெய்வங்கள் ஒவ்வொன்றும் ஒரு கல்லை சவணன் தலைமீது போட்டு அழுத்தும்படிஅது முன்பே கூறியிருந்தது. அவர்கள் அவ்வாறு செய்கையில் கிருட்டிணமூர்த்தி மாதேசுவரனை அந்த அரக்கனிடமிருந்து விடுவித்தது. பின் எல்லாத் தெய்வங்களும் அந்த அரக்கன் மீது ஏறிக் குதித்து அவன் புதையுண்டு போகும்படி செய்தன. இவ்வாறு அவனை அழிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்த சமயத்தில் சவணனது, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த காரயன் இதனை அறிய வந்தவுடன் சவணனை அழிக்கும் முன் அதுபற்றித் தன்னோடு கலந்து பேசாமைக்காக மாதேசுவரனிடம் கோபம் கொண்டவனாக அவன்மீது பாய்ந்தான். கையில் கத்தியினை ஏந்தியவனாக இருந்த காரயனிடமிருந்து தப்பியோடிய மாதேசுவரன்

கிருட்டிணமூர்த்தியினுடைய உதவியினை வேண்டிப் பெற்று அவன் அருளால் கொடிரிபொலி மலையிலிருந்து பத்துமைல் தொலைவிற்கு அப்பாலிருக்கும் உருகமலைக்குத் தாவிக் குதித்தான். அவன் அவ்வாறு குதித்த வேகத்தின் காரணமாக அந்த மலை வளைந்தது. அதனாலேயே அது வளைந்தமலை எனப் பெயரும் பெற்றது. அந்த மலை வளைந்து சாய்வதையும் காரயன் கையில் கத்தி ஏந்தியவனாகத் தன்னை விடாது துரத்தி வருவதையும் கண்ட மாதேசுவரன் மீண்டும் கிருட்டிணமூர்த்தியிடம் தனக்கு உதவும்படி வேண்டினான். அவரும் அவன் அங்கிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள எக்கரை மலை மீது தாவிக் குதிக்க உதவினார். அந்த மலையும் உடனே கீழே புதையத் தொடங்கியது. இதனால் அதற்குப்புதையுண்ணுமலை என்ற பெயர் உண்டாயிற்று. அதன்பின் அவன் முனிகனலுக்கு ஓடி ஒரு பாறையின் அடியில் ஒளிந்து கொண்டான். காரயன் அவனைத் துரத்திச் சென்றவனாகத் தன் கத்தியால் அப்பாறையினைத் தாக்கினான். அவ்வாறு அவன் அந்த 'பாறையினை வெட்டியமைக்கான அடையாளத்தை இன்றும் அதன் மீது காணலாம். முனிகனலிலிருந்து அவன் மாதேசுவரன்மலை என இன்று வழங்குகின்ற மலைக்கு ஓடிச் சென்று எலி வங்கு ஒன்றிலே புகுந்து ஒளிந்து கொண்டான். காரயனா ் அந்த வங்கினைத் தோண்டி வெளிப்படுத்த முடியவில்லை. உடனே அவன் நிறைய இடையர்களை அங்கு வரவழைத்து அவர்களுடைய ஆடுகளையும் கால்நடைகளையும் அந்த வங்கின் மீது கிடை போடும்படி பணித்தான். கால்நடைகளின் மல மூத்திரங்களின் கெட்ட வாடையினைத் தாங்க இயலாதவனாக மாதேசுவரன் அந்த வங்கிலிருந்து வெளிப்பட்டத் தன் சகோதரனிடம் சரணடைய வேண்டியதாயிற்று. தெய்வங்களாக அவர்கள் வழிபாட்டுக்கு உரியவர்களாக ஆகும்போது மாதேசுவரனுக்கு முன்னதாகத் தனக்கே படையலிடப்பட வேண்டும் என வாக்குறுதி பெற்றுக் கொண்ட பின் காரயன் மாதேசுவரனை மன்னித்தான். இந்த வழக்கு வரலாற்றின் அடிப்படையில் இன்றும் கொடிரிபொலிக் குன்றின் உச்சிக்குச் செல்பவர்கள் அங்குள்ள பாறையின் மீது ஒரு கல்லினை வைக்க வேண்டும் என்ற நடைமுறை கடைபிடிக்கப்படுகிறது. இதன் காரணமாக அங்குப் பல கற்குவியல்களைக் காணலாம். ஐரோப்பியர் கூட அங்குச் செல்லும் போது இவ்வாறு கல்லினை வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

சோலகர் தங்களை ஐங்குலத்தவர் எனக் கூறிக் கொள்கின்றனர். சலகிரி, தேனெறு, பெல்லாரி, சூர்யா, அலெரு என்பன புறமணக்கட்டுப்பாடு உடைய அக்குலங்களுக்குரிய பெயர்களாம். பன்னிரண்டு குலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாவற்றோடும் பன்னிரண்டைச் சம்பந்தப்படுத்திக் கொள்வர். ஒரு குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாள் பன்னிரண்டு பெரியவர்களை வீட்டுக்கு அழைத்துக் குழந்தையை வாழ்த்தும்படி வேண்டுவதை இந்த வழக்கத்திற்கு உதாரணமாகக் கூறலாம். மணநாளன்று மணமகன் இல்லத்தைச் சேர்ந்த பன்னிருவர் பந்தல் கால்கள் நடுவதும் மணமகன் பெற்றோர் மணமகளுக்கு பரிசத் தொகையாகப் பன்னிரண்டு ரூபாய் தருதலும் பன்னிரண்டணா மதிப்புடைய தாலி மணமகளுக்கு அணிவிக்கப்படுதலும் இந்த வழக்கத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகின்றனவாகும். சாவின்போது பன்னிரண்டு மூங்கில்களைப் பயன்படுத்திப் பாடைகட்டுவதோடு சாவுத் தீட்டினையும் பன்னிரண்டு நாள்களுக்கு இவர்கள் மேற்கொள்கின்றனர்

சாதியாரிடையேயான சிறு பூசல்கள், கள்ள உறவு தொடர்பான வழக்குகள் ஆகியனவற்றைப் பட்டக்காரன் உதவியோடும் சில பெரியவர்களின் வழிகாட்டு நெறிமுறையோடும் எசமானன் எனப்படும் சாதித் தலைவன் தீர்த்து வைக்கின்றான். எசமானுக்கும் பட்டக்காரனுக்கும் ஏவல் புரிபவன் சலவாதி. எசமானன், பட்டக்காரன், சலவாதி ஆகிய மூவரும் முறையே சலகிரி, தேனெறு, சூர்யா ஆகிய குலங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

ஒருத்தி பூப்படையும்போது தனித்ததோர் குடிசையில் ஐந்து நாள் தங்கியிருந்த பின் குளித்துத் தன் குடிசைக்குத் திரும்புவாள். அவள் தாய்மாமன் அப்போது அவளுக்குப் புதிய சேலை, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் ஆகியனவற்றை அன்பளிப்பாகத் தர வேண்டும். முறையான திருமணச் சடங்கில் மணப்பந்தலில் மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டுவான். அப்போது மணமகளுடைய தாய்மாமன் வசதி படைத்தவனாயின் அவளுக்கு ஒரு சேலையினை அன்பளிப்பாக வழங்குவான். அதன்பின் விருந்து நடைபெறும். சில சமயங்களில் இத்தகைய எளிய சடங்குகள் கூட இன்றித் திருமணங்கள் நிகழ்கின்றன. எந்தச் சடங்கும் இன்றியே ஒரு ஆணும் பெண்ணும்

கணவன் மனைவியராகக் குடும்பம் நடத்தத் தொடங்குவர். இவர்கள் பின்னர் வாய்ப்பும் வசதியும் ஏற்படும்போது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு விருந்தளிக்கக் கடமைப்பட்டவர்கள். பர்கூர் குன்றுகளைச் சேர்ந்த சோலகர் மகப்பேற்றின் போது பெண்களை விசித்திரமான நடைமுறைக்கு உட்படுத்துவதாக நான் கேள்விப்பட்டேன். மகப்பேறுக்கு சில நாள்கள் முன்னதாக மகவைப்பெற உள்ளவளை அவளுடைய கணவன் நடுக்காட்டினுள் அழைத்துச் சென்று அங்கு அவளை மூன்று நாள்களுக்குத் தேவைப்படும் உணவோடு கூட விட்டு வருவான். அவள் அங்கேயே தங்கியவளாகத் தன்னுடைய காரியங்களைத் தானே கவனித்துக் கொள்ள வேண்டும். மூன்று நாள்கள் சென்றபின் அவள் திரும்பவில்லையாயின் அவள் கணவன் மேலும் கொஞ்சம் உணவினைக் கொண்டுசென்று அவளுக்குத் தந்து வருவான். அவள் பிள்ளையைப் பெற்ற பின்னரே ஊருக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவாள். இத்தகைய கொடுமைக்கு ஆட்படுபவர்களுள் ஓரிருவர் சுகமாகப் பிரசவித்துத் திரும்புவார்களாயின் அவர்களைச் சிறப்பிக்க தப்பட்டை முதலியன முழக்கி வாழ்த்தெடுப்பர்.

இறந்தவர்களைத் தலை தெற்கு நோக்கி இருக்கும்படியாக இடப் புறமாக ஒருக்களித்தபடி படுக்கவைத்துப் புதைப்பர். சாவுச் சடங்கினை முடித்து இல்லம் திரும்புபவர்கள் அங்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ள விளக்கினை வணங்குவர். இறந்தவன் உயிர்விட்ட இடத்தில் ராகிக் களியும் தண்ணீரும் படைப்பர். நான்காம் நாள் இறந்தவன் ஆவிக்காக ஓர் ஆடு அவ்விடத்தில் பலியிடப்படும். அதன்பின் இறந்தவன் மகன், ஒவ்வொரு குலத்தினையும் சேர்ந்த ஒருவன் தன் பின்னே வர, ஒரு கல்லைச் சுமந்தவனாகப் புதைகுழி உள்ள இடம் நோக்கிச் செல்வான். பின் அவர்கள் ஒவ்வொருவராக எழுந்து சென்று அந்தக் கல்லைத் தூக்குவர். கடைசியாக அதனைத் தூக்குபவன் தன்னிலை மறந்தவனாகச் சிறிது நேரம் இருப்பான். அவனுக்கு நினைவு மீண்டும் திரும்பியபின் அங்குள்ளவர்களின் குலத்தின் எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு வாழை அல்லது தேக்கிலையினை அக்கல்லைச் சுற்றி இட்டு அதில் பலவகை உணவுப் பொருள்களையும் படைப்பர். பின் அவர்கள் தங்கள் தங்கள் குலத்துக்கென இடப்பட்ட இலைகளில் படைக்கப்பட்டவற்றை உண்டபின் இறந்தவனுடைய மகன் தன் கைகளில் அக் கல்லினை எடுத்துத் தாங்கிக் கொள்ள அவனோடு வந்தவர்கள்

அதன் மீது ராகியினையிட்டுத் தண்ணீர் தெளிப்பர். பின் அக்கல் இறந்தவன் குலத்திற்குரிய புதைகுழிப் பகுதியில் புதைகாட்டில் கொண்டு வைக்கப்படும்.

மலை வேளாளர் ஊர் ஒன்றில் ஒரு சாவு விழுமானால் கால்களில் சலங்கை கட்டியவர்களாகக் குழலும் முழவும் முழக்கியபடி சோலகர் கூட்டமாகச் சென்று சாவு வீட்டின் முன் ஆடுவர். பிணத்தோடு கூட இசைக் கருவிகளை முழக்கியபடி புதைகாட்டுக்கும் செல்வர்.

ராகிக் களியும் வள்ளிக் கிழங்குமே சோலகர் வழக்கமாக உண்ணும் உணவாகும். ஊராளிகளைப் போல் இவர்களும் அவ்வப்போது வேட்டையாடும் பறவைகளையும் விலங்குகளையும் உணவாகப் பயன்படுத்துகின்றனர். கிளிகளை இவர்கள் தங்கள் குழந்தைகளாகப் பாவிப்பதால் அவற்றை இவர்கள் உண்பதில்லை.

வெம்படம் (***Ventilago madraspatna***) பட்டை, ஆவாரம் (***Cassia auriculata***) பட்டை, சாதிக்காய், புளி, பிசின், சீயக்காய், தேன், மான்கொம்பு முதலிய காடுபடு பொருள்களைச் சேகரிப்பதே இவர்கள் முக்கியத் தொழில். காடுகள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு சோலகரும் ஊராளிகளும் தாங்கள் சேகரிக்கும் பொருள்களைக் கொண்டு வருவர். அங்குக் கொள்முதல் செய்யும் மேற்பார்வை அலுவலர்கள் கொண்டு வரப்பட்டபொருள்களைத் தரம் பிரித்து உரிய விலையினை வழங்குவர்.

கோயமுத்தூர் மாவட்டத்தில் பாறை இடுக்குகளிலிருந்து சோலகர் தேனெடுப்பதாகக் கூறப்படுகிறது. இத் தேன்கூடுகள் மரங்களில் காணப்படும் தேன்கூடுகளைவிட இருமடங்கு அளவில் பெரியன. இவற்றில் தேனைவிட மெழுகின் பங்கே மிகுதியாக இருக்கும். நீலகிரி மலையில் தேன் குறும்பரும் சோலகரும் தேன் சேகரிக்கின்றனர். தேனின் அளவும் தரமும் பருவத்திற்குப் பருவம் வேறுபடும். குறிஞ்சி (***Strobilanthes***) இனச் செடிகள் பூக்கும் பருவத்தில் கிடைக்கும் தேன் சுவையுடையதாகவும் அளவில் மிகுதியாகவும் இருக்கும்.

ஒரு சோலகனின் உடலின் கெட்ட நாற்றத்தைக் காட்டு விலங்குகள் கூட முகர்ந்து உணர்ந்தவையாக ஓடிவிடும் எனக் கூறுவர்.

நானும் முனைவர்.ரிவர்ஸ் அவர்களும் சோலகரிடையே ஆய்வினை மேற்கொண்ட போது இவர்கள், எங்கள் ஆய்வின் நோக்கம் இவர்களைக் கொண்டு சென்று இலண்டனில் ஓரிடத்தில் குடிவைப்பதுதான் என்று முடிவு செய்தவர்களாக இருந்தனர். இவர்கள் பார்வைப் புலனை ஆராய வண்ண நூல்களைத் தேர்ந்தெடுக்கும்படி நாங்கள் கூறியபோது இவர்கள் தங்களைப் பிடித்துக் கட்டிச் செல்லவே நாங்கள் அத்தகைய நூல்களைக் கொண்டு வந்திருப்பதாகக் கருதினர். சிலர் தங்கள் உடம்பின் பல உறுப்புக்களையும் அளவெடுப்பது எதற்கெனப் புரியவில்லையெனக் குறைபட்டுக் கொண்டனர். லண்டனில் இவர்களுக்குத் தரப்பட உள்ள வேலைக்கு ஏற்ப உடலைக் கூட்டவும் குறைக்கவுமே இவ்வாறு அளவு எடுக்கப்படுவதாகக் கற்பனையும் செய்தனர். மனிதன் உடல் உறுப்புகள் அவன் செய்யும் சிறப்புப் பணிகளுக்கு ஏற்ப அளவுகளில் மாறுபட்டனவாக ஆக்கப்படும் என்ற இவர்களுடைய இத்தகையதொரு கற்பனையையொப்ப 'நிலவில் வாழும் முதல் மக்கள்' என்ற தன்னுடைய நூலில் திரு.வெல்ஸ் அவர்களும் கற்பனை செய்து படைத்துள்ளார் என்ற ஒப்புமை எனக்குச் சுட்டிக் காட்டப்பட்டது. ஐரோப்பியன் ஒருவனோடு சோலகன் ஒருவன் வேட்டைக்குச் செல்லும்போது ஏற்படும் அனுபவங்களைக் குறித்து அண்மையில் வெளியாகியுள்ள* பின்வரும் விவரங்களைத் தரலாம் என நினைக்கின்றேன் :- "என் கணவர் ஒரு கரடியைத் துரத்தியவராக அதனுடைய குகைக்கே சென்று சேர்ந்தார். தீப்பந்தங்களைக் கொளுத்தச்செய்து அவற்றை அந்தக் குகையுள் நுழைத்துப் புகையூட்டி அக்கரடியினை வெளிப்படுத்தப் பார்த்தார். இத் திட்டம் கரடியினை வெளிப்படுத்துவதில் வெற்றி தரவில்லையாகையால் ஒரு தீப்பந்தத்தை ஏந்தி வரும் சோலகனோடு அவரே அக்குகையுள் நுழைந்தார். அந்தத் தீப்பந்தத்தின் மங்கலான வெளிச்சத்தில் குகையினுள் பார்வைக்குப் பொருள்கள் புலனாகத் தொடங்கியவுடன் அவர்கள் அதனுள் ஒரு சிறு புழை மேலும் ஒரு குகைக்கு வழியாக அமைந்திருப்பதைக் கண்டனர். அவர் அந்த சோலகனிடம் தீப்பந்தத்தை அப்புழையினுள் நுழைக்குமாறு

---

* *Madras Mail, 1907.*

கூறினார். இவ்வாறு செய்த அளவில் ஒரு பெரிய கரடி அதன் வழியாகப் பாய்ந்து வெளிப்பட்டது. அது வந்த வேகத்தில் அச் சோலகன் மீது மோதி அவனிடமிருந்த தீப்பந்தத்தை அணைத்துவிட்டது. குகையின் வாசல் வழியே மீண்டும் காட்டினுள் விரைந்தோடும் கரடியைச் சுட, தக்க தருணத்தில் என் கணவரால் துப்பாக்கியினை ஏந்த இயலவில்லை. தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து அந்தச் சோலகன் மீண்டபோது மற்றொரு கரடி அப்புழை வழியே உள்ளிருந்து விரைந்து வந்தது. இதற்குள்ளாகத் தன் துப்பாக்கியினை ஏந்திவிட்டிருந்த என் கணவர் அதனைச் சுட்டார். சுடப்பட்ட அக்கரடி என் கணவரும் உடன் சென்ற சோலகனும் குகையில் மாட்டிக் கொள்ளும்படியாக குகையில் வெளி வாசலில் அடிபட்டு வீழ்ந்துவிட்டது. இந்த இக்கட்டுக்கு உள்ளான அச் சோலகன் தான் குழந்தை குட்டிக்காரனென்றும் தன் குழந்தைகள் அனாதைகளாக்கிவிடுவதை தான் விரும்பவில்லையென்றும் புலம்பத் தொடங்கிவிட்டான். நல்ல காலமாக அடிபட்ட அந்தக் கரடி மீண்டும் எழுந்து தள்ளாடியபடி காட்டினுள் செல்லக் குகையில் அகப்பட்ட இருவரும் தப்பினோம் பிழைத்தோம் என அங்கிருந்து வெளிவந்தனர்.

மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சோலகர் பற்றி 1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது :- "பிளிகிரிரங்கன் மலைகளின் சாரலிலும் அடிவாரத்திலும் உள்ள காடுகளின் நடுவே வாழும் இவர்கள் காட்டின் சிறு பகுதிகளை அழித்துக் கொத்து முறையில் பயிரிட்டு வருகின்றனர். பிளிகிரிரங்க சுவாமியினை முக்கிய தெய்வமாக வழிபடும் இவர்கள் காரப்பன் எனப்படும் குலதெய்வத்தையும் வழிபடுகின்றனர். ராகியே இவர்கள் முக்கிய உணவு. இவர்கள் பயிரிடும் இந்த ராகியோடு காட்டில் கிடைக்கும் பிற உணவுப் பொருள்களையும் பயன்படுத்திக் கொள்கின்றனர். புள்ளிமான், கலைமான், பன்றி, மறி, வெள்ளாடு ஆகியவற்றின் இறைச்சியில் இவர்கள் விருப்பம் மிகுதியும் உடையவர்கள். இவர்களுள் சிலர் அண்மையில் தங்களுக்கெனச் சொந்தமாக நிலங்களைப் பெற்றுள்ளனர். தேன் குறும்பரைப் போலவே இவர்களும் காட்டு விலங்குகள் சென்ற வழித்தடம் கண்டு அறிவதில் திறமை பெற்றவர்கள். இவர்களிடையே மூன்று வகையான மணமுறைகள் வழக்கில் உள்ளன. முதல் முறை வசதி படைத்தவர்களுக்கானது. பன்னிரண்டு கால்கள் நட்டுப் பந்தலிட்டு

இன்னிசை முதலியன இசைக்க மூன்று நாள்கள் மண நிகழ்ச்சிகளை இவர்கள் ஆடம்பரமாக நடத்துவர். பெரு வழக்கினதான இரண்டாவது மணமுறை ஒருவன் ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து வைப்பாக வைத்து கொள்வதிலிருந்து சிறிது மாறுபட்டதான மணமுறையாகும். இவர்களுள் ஏழைகளாக உள்ளவர்கள் ஆணும் பெண்ணுமாக தூர உள்ள காட்டுக்கு மற்றவர்கள் அறியாதபடி ஓடிச் சென்று மணமகள் குழந்தை பெற்ற பிறகு திரும்பி வருவர். இது மூன்றாவதான மணமுறைகாகும். பழங் கன்னடத்தின் சேரி மொழியினை ஒத்ததொரு மொழியினை இவர்கள் பேசுகின்றனர்.

சோலை நாயக்கர் – Shōla Naiker

வயநாட்டினைச் சேர்ந்த தேன் குறும்பருக்கான மற்றுமொரு பெயர்.

***சிப்பி தொம்பிடி* – Sibbi Dhompti (Vessel offering)**

மாதிகரின் ஓர் உட்பிரிவு. திருமணச் சடங்கின்போது இப்பிரிவினர் தெய்வத்திற்குப் பித்தளைப் பாத்திரத்தில் படையலிடுவர்.

***சித்தர்* – Siddaru**

ஜோகி இரவலருக்கான மற்றுமொரு பெயர்.

***சிகை* – Sika (Kudumi or hair-knot)**

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

***சிகிலி* – Sikli (broom)**

துடைப்பம் எனப் பொருள்படும் இது மாதிகரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

***சிக்கிலிகர்* – Sikligar**

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ஒன்பது பேர் தங்களை இந்தியாவின் வடக்கு எல்லையினைச் சேர்ந்த சாணை பிடிக்கும் சாதியாரான சிக்லிகர் எனப் பதிந்து கொண்டுள்ளனர். மதுரை மாவட்டக் கையேட்டில் ஊர்ஊராக வேலை தேடி அலையும் கத்தி சாணை பிடிப்போர் சிக்லிகர் எனப் பதியப்பட்டுள்ளது.

சிலா – Sila (Stone)

ஓமனைடொ சாதியின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

சீலம் – Silam (good conduct)

மாலர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

சிலவந்தர் – Silavant

ஒழுக்கம் உடையவர் எனப் பொருள்படும் இது 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் லிங்காயதரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் லிங்காயத நயிண்டருக்கான பெயராகத் தரப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த சீலவண்டலு அல்லது சீலேவாண்டலுகள் பற்றியான பின்வரும் குறிப்புக்கு நான் திரு.சி.ஹயவதனராவிற்குக் கடப்பாடுடையேன்.

இவர்கள் லிங்காயத சமயநெறிக்கு சமய மாற்றம் பெற்று வந்த பட்டு சாலேக்களின் ஓர் உட்பிரிவினரின் வழிவந்தவர்கள். இந்த உண்மையினை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. நயமான வேட்டி, சேலைகளை நெய்வதில் ஈடுபட்டுள்ளவர்களான இவர்கள் மேற்கொண்டுள்ள தனித்ததான சமய வழிபாட்டு நெறி காரணமாகவே அதன் அடிப்படையில் இவர்கள் இப்பெயர் பெற்றுள்ளனர். ஒருத்தி கருவுற்ற ஏழாம் மாதம், குழந்தை, தாயின் கருவில் உயிர்த் துடிப்புடையதாக உதைத்துக் கொள்ளத் தொடங்கியவுடன், ஒரு சிறு லிங்கத்தினைக் கறுப்பு அரக்கில் பொதிந்து பட்டுத் துணியில் சுற்றிக் கட்டி அதனைக் கருவுற்றவள் கழுத்தில் அணிந்திருக்கும் லிங்கத்தின் கயிற்றோடு சேர்த்துக் கட்டிவிடுவர். இவ்வாறு கருவிலிருக்கும் போதே ஒரு குழந்தை லிங்கம் கட்டியாக ஆக்கப்படுகின்றது. அக் குழந்தை பிறந்து அதற்கு ஓராண்டு ஆகிப் பல் முளைக்கத் தொங்கியவுடன் அதுவரை அதன் தாயின் கழுத்தில் இருந்த லிங்கத்தை அவிழ்த்து ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து அந்தக் குழந்தையின் கழுத்தில் அணிவிப்பர். அக் குழந்தை ஆணாயின் பன்னிரண்டாம் வயதிலும் பெண்ணாயின் திருமணத்தின்போதும் இந்த லிங்கத்தை அவிழ்த்துவிட்டுக் குருவைக் கொண்டு புதியதொரு லிங்கத்தைக் கழுத்தில் அணிவிப்பர்.

சீலவாண்டுலுகள் புறமணக்கட்டுப்பாடு உடைய பல இல்லங்களாகப் பிரிவுபட்டுள்ளனர். ஒருவன் தன் மாமன் மகளை

மணக்க உரிமை கொண்டாடும் மேநரிகம் இவர்களிடையே வழக்கில் உள்ளது. தாய்மாமனுக்கு மகளில்லையாயின் மருமகனுக்கு ஏற்ற ஒருத்தியைத் தேடி மணம் செய்விப்பது அவன் கடமையாகும். பெண்கள் பூப்படையும் முன்னரே மணம் செய்விக்கப்படுகின்றனர். மகேசுவரர் எனப்படும் ஜங்கமே மணச் சடங்குகளை நடத்தி வைப்பார்.

இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில் முகம் வடக்குப் பார்த்து இருக்கும்படியாகப் புதைப்பர். பிணத்தோடு அதன் கழுத்தில் உள்ள லிங்கமும் உடன் புதைக்கப்படும். ஓம்–ந–ம–சி–வா–யா என்ற மந்திரத்தின் ஆறு எழுத்துக்களையும் ஆறு சிறு செப்புத் தகடுகளில் எழுதிப் பிணத்தின் தொடைகள், தோள்கள், தலை, கொப்பூள் ஆகிய இடங்களில் குங்கிலியப் பசைகெண்டு ஒட்டி வைப்பர். அதன்பின் பிணம் ஒரு கோணிப்பையில் வைத்துக் கட்டப்படும். உறவினர்கள் அதற்கு மலர்களிட்டுக் கற்பூரம் கொளுத்தி வழிபாடு நிகழ்த்துவர். பல அடி ஆழமுள்ளதாகப் புதைகுழியினைத் தோண்டி அதன் தென்பக்கத்தில் குடைவினைச் செய்து அதனை மூங்கில் படலால் பொத்திப் பின் பிணத்தை அக் குடைவினுள் வைப்பர். புதைகுழியினை மூடுமுன் அதனுள் உப்பிடுவர். சாவுச் சடங்குகளை ஒரு ஜங்கமே நடத்தி வைப்பர்.மாதந்தோறும் ஆண்டுதோறும் நடத்தப்படவேண்டிய இறந்தவருக்கான சாவுச் சடங்குகளை இவர்கள் நிகழ்த்துகின்றனர். புதைகுழியின் மீது சமாதி மேடை ஒன்று அமைப்பர். அதன் அமைப்பு பிருந்தாவனம்போலச் சதுரமாக விளக்கு மாடத்தோடு கூடியதாக நடுவில் துளசிச் செடி நட்டு வைப்பதற்கான குழியோடு இருக்கும். சிறு குடில் வடிவினதாகவும் அது அமைக்கப்படலாம். உறவினர்கள் அவ்வப்போது அங்குச் சென்று மலரிட்டு வழிபாடு நிகழ்த்துவதோடு விளக்கு மாடத்தில் விளக்கினையும் ஏற்றி வைப்பர்.

ஊன் உண்ணலை அறவே ஒதுக்கியவர்களான சீலவாண்டுலு மதுவினையும் அருந்துவதில்லை. அய்யா, லிங்கம் என்பன இவர்களுக்கு உரிய பட்டப்பெயர்.

சிற்பி – Silpa (artisan)

கம்மாளர், பாஞ்சாலர், கம்சாலர் ஆகிய சாதியாரின் உட்பிரிவு. கல்கொத்துவதைப் பரம்பரைத் தொழிலாக மேற்கொண்டவர்கள். சிற்ப

சாத்திரத்தில் சிலை வடிப்பதற்கான அளவுகளும் சிற்பியின் கடமைகள் முதலியனவும் கூறப்பட்டுள்ளது. சிலை வடிப்பவன் தான் செய்ய உள்ளது ஆண், பெண் தேவதைகளுள் எதுவோ அதற்கேற்றபடி ஆண், பெண் கல்லினைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென எனக்குத் தகவல் தந்தனர். உடைக்கும் பொழுது அதில் புலனாகும் வளையங்களைக் கொண்டு ஒரு கல் ஆணா பெண்ணா என அறிதல் கூடும்.

சிந்து – Sindhu

தப்பட்டை அடிக்கும் சிந்துவாண்டுலு மாதிகர் சாதியினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இராமாயணம், மகாபாரதம், அங்கம்மா கதை ஆகியவற்றைப் பாடி ஆடியவர்களாக ஊர்ஊராகச் செல்வர். சிந்து என்பது குர்ணிகளின் ஒரு கோத்திரப் பெயருமாகும். சிந்து எனப்படும் தப்பட்டை முழக்கம் சில சமயங்களில் பெருந்தொல்லை விளைவிப்பதாகவும் அமைந்துவிடுகின்றது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. கிறித்தவ சமயத் தொண்டர் ஒருவர் இத் தொல்லையினை நிறுத்த அரசின் ஆணைகள் ஏதும் இல்லையா எனக் கேட்டுப் பத்திரிகைக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர், "இவர்களின் இச் செயலால் காவலர்களுக்கும் குற்றவியல் நடுவர்களுக்கும் வேலைப்பளு மிகுதியாக ஆவதாகவும் கிராம அதிகாரிகளுக்கு இவர்களைக் கட்டுப்படுத்த அதிகாரம் ஏதும் இல்லை என்றும் சிலர் இது தடை செய்யப்பட்டுள்ளதாகக் கூறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

சிங்கமு வாரு – Singamu-vāru

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சிங்கம் சாலேகளிடமிருந்து மட்டும் இரக்கும் இரவலர் வகுப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. திரு. சி.ஹயவதனராவ் இவர்கள் ஊர்ஊராகச் சென்று தேவாங்கரிடமிருந்துஇரக்கும், தேவாங்கரோடு இணைக்கப்பட்ட இரவலர் வகுப்பார் எனக் கூறியுள்ளார். "சிங்கத்தைப் போல வீரம் வாய்க்கப்பட்டவர் எனப் பொருள்படும் சிம்மவாரு என்பதன் திரிந்த வடிவம் இது. இவர்கள் செய்யும் பணிக்காக இவர்கள் ஆண்டு தோறும் தேவாங்கர் ஊர்கள் ஒவ்வொன்றிலிருந்தும் குறிப்பிட்ட ஒரு தொகையினைப் பெற்று வருகின்றனர். பிணத்தோடு கூடச் சுடுகாட்டுக்கு நெருப்பை எடுத்துச் செல்வது, சாதியாருக்குத் தகவல்கள் தெரிவிப்பது, நெசவுத் தறி முதலியனவற்றைக் கழுவித் தூய்மை செய்வது

போன்ற பணிகளை இவர்கள் தேவாங்கர்களுக்குச் செய்கின்றனர்" என அவர் குறித்துள்ளார்.

சின்னட - Sinnata (gold)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். தங்கம் எனப் பொருள்படுவது.

சீயொலொ - Siolo

ஒரியச் சாதியினரான இவர்கள் கள் இறக்குவோர், எண்ணிக்கையில் குறைந்தவர்களான இவர்கள் தொட்டால் தீட்டினை உண்டாக்குபவர்கள். கள் விற்பவரான உரியச் சாதியாரான சொண்டிகள் சீயொலொ சாதியாரிடமிருந்தே கள்ளினைப் பெற்று விற்கின்றனர்.

சிபிடி - Sipiti

"ராவுலொ சாதியின் ஓர் உட்பிரிவினரான சிபிடியர் ஒரியக் கோயில் பூசாரிகளும் தப்பட்டை அடிப்போரும் ஆவர்" என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சிபிடியர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. எனக்குத் தெரிவிக்கப்பட்ட ஒரு விவரப்படி இவர்கள் ஸ்மார்த்தாக்களெனவும், கிராம தேவதைகளின் கோயில்களில் பூசாரிகளாகப் பணியாற்றும் இவர்கள் பூணூல் அணிந்தாலும் புரோகிதர்களாகப் பிராமணர்களை அமர்த்துவதில்லை எனவும் ராவுலொக்களை விடச் சமூகப்படி நிலையில் சற்றே தாழ்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சாதியினைச் சேர்ந்த பெண்களுள் சிலர் பரத்தையராக முறையற்ற வகையில் தொழில் மேற்கெண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் இப்பழக்கம் மறைந்து வருகின்றது என்பர். மூணி என்பது இச் சாதிக்குரிய பட்டப்பெயர். (பார்க்க : ராவுலொ)

சீர் - Sir

கணக்கன்களின் ஓர் உட்பிரிவு.

சீர்பாதம் - Sirpādam

கைக்கோளர்களின் ஓர் உட்பிரிவு.

சிறுகுடி - Sirukudi

கள்ளரின் நாடு (வட்டாரப் பெயர்) ஒன்றின் பெயர்.

சிறுதாலி - Siru Tāli

திருமணத்தில் சிறிய தாலி அணிபவர் எனப் பொருள்படும். இது அத்தகைய தாலி அணியும் கைக்கோளர், மறவர் சாதிகளின் உட்பிரிவுகளுக்கான பெயர்.

சீடிகன் - Sītigan

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மாரான்களின் தொழில் தொடர்பான ஓர் உட்பிரிவு எனப் பதியப்பட்டுள்ளது.

சிட்ர - Sitra

பார்க்க : பாணொ (See : Pano)

சிவ பிராமணன் - Siva Brāhmana

ஸ்தானிகருக்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

சிவாச்சாரியார் - Sivachāra

1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது வருமாறு :- "லிங்காயதர்கள் தங்களை வீர சைவர், சிவபக்தர், சிவாச்சாரியார் எனக் கூறிக் கொள்வர். வீர சைவ சமயத்தில் பல சாதிப் பிரிவுகள் உள்ளன. இந்து சமூகத்தைச் சேர்ந்த எல்லாச் சாதிப் பிரிவினருள்ளும் இச் சமயநெறி சார்ந்தவர்கள் உள்ளனர். உயர்ந்த சாதியாரிலிருந்து மிகத் தாழ்ந்த சாதியார் வரை பல சாதியினரும் இந்த நெறியினைப் பின்பற்றுகின்றனர். சிவாச்சாரியப் பிராமணர், சிவாச்சாரிய சத்திரியர், சிவாச்சாரிய வைசியர், சிவாச்சாரியத் தச்சர், சிவாச்சாரிய நெசவாளர், சிவாச்சாரியப் பொற்கொல்லர், சிவாச்சாரியக் குயவர், சிவாச்சாரிய வண்ணார், சிவாச்சாரிய அம்பட்டர் என இந்நெறியினைப் பின்பற்றும் தாழ்ந்த சாதியாரும் உயர்ந்த சாதியாரோடு ஒப்ப சிவாச்சாரியார் எனவே அழைக்கப்படுகின்றனர்."

சிவத்விஜர் - Sivadviji

மூசாடுகளான சைவப் பிராமணர்கள் தங்களை இவ்வாறு

அழைத்துக் கொள்வதையே விரும்புகின்றனர். இது ஸ்தானிகர்களுக்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

சிவராத்திரி – Sivarātri

ஒட்டேகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர். சிவனைச் சிறப்பிக்கும் சிவராத்திரித் திருநாளின் பெயரால் இச் சாதிப் பெயர் அமைந்துள்ளது. இந்த நாளில் ஸ்மார்த்தர்கள் தயாரிக்கும் புனித விபூதி மிகுந்த தூய்மை உடையதாகக் கருதப்படுகிறது.

சிவார்ச்சகர் – Sivarchaka

இச்சொல் சிவனுக்குப் பூசை செய்பவர் எனப் பொருள்படும். கிராம தேவதைகளின் கோயில்களில் பூசை செய்பவர்கள் பூசாரி, பூசாலி, ஓச்சன் முதலிய பெயர்களால் அழைக்கப்படுவர். இவர்களும் இன்று தங்களை உமார்ச்சகர் அல்லது சிவார்ச்சகர் என்று அழைத்துக்கொள்வதையே விரும்புகின்றனர். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சிவாலர் என்ற பெயரும் இடம் பெற்றுள்ளது.

சிவியர் – Siviyar

சிவியர் என்பதன் நேர்பொருள் பல்லக்குச் சுமப்போர் என்பதாகும். இது அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவரைக் குறிக்கப் பயன்படும் தொழில் தொடர்பான பெயராகும். இதன் காரணமாக இடையர்களின் ஓர் உட்பிரிவினருங்கூட சிவியர் என அழைக்கப்படுகின்றனர். கோயமுத்தூரைச் சேர்ந்த சிவியர்கள் தங்களுக்கு இடையர்கள் அல்லது தொரெயர் சாதியோடு எத்தகைய தொடர்பும் இல்லையெனக் கூறுவதோடு தாங்கள் முகமதியர் படையெடுப்பு நிகழ்ந்த குழப்பமான காலப்பகுதியில் மைசூரிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் எனவும் கூறுகின்றனர். சிவியர் என்ற பெயரைத் தங்களுக்குத் தந்தவர்கள் தமிழர் எனக் கூறும் இவர்கள், தாங்கள் ரயில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அதிகாரிகளுக்குப் பல்லக்குச் சுமப்போராக இருந்ததாகக் கூறுகின்றனர். பர்வதராஜன் பரம்பரையில் தோன்றியவர்கள் எனக் கூறிக் கொள்வர். இன்று இவர்கள் ஏரிகளிலும் ஆறுகளிலும் மீன்பிடித்தலையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். கன்னடம் பேசும் இவர்கள் நாயக்கன் என்ற பட்டப் பெயரைத் தரிக்கின்றனர். இவர்கள் பதினெட்டு

புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகளைக் கொண்டுள்ளனர். அக்கோத்திரங்கள் அவற்றைத் தோற்றுவித்த மூதாதையரின் பெயரையே பெயராகப் பெற்றுள்ளன. திருமணத்தில் தாம்பூலம் வழங்கும்போது பல கோத்திரங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அதனைவரிசை அறிந்து வழங்குவதற்காக வரிசைமுறை ஏற்பாடு செய்து வைக்கப்பட்டுள்ளது. முறையற்ற கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுவோர் கம்பத்தில் கட்டப்பட்டுப் புளியம் மிளாறினால் வெளுக்கப்படுவர். வயதுவந்த ஒருவன் திருமணம் ஆகாதவனாக இறக்க நேர்ந்தால் அவன் பிணத்திற்குப் போலியானதொரு மணச் சடங்கினைத் தென்னோலையால் பின்னப்பட்ட உருவத்தோடு செய்து வைப்பர்.

சோடபிசியர் – Sōdabisaiya

தோம்புகளின் ஓர் உட்பிரிவு.

சோய் – Soi

தொழுவர்களின் பட்டப்பெயர். சுய் அல்லது சுவாயி என்பதன் மற்றுமொரு வடிவம் இது.

சோலகன் – Sōlaga

பார்க்க : சோலகர். (See : Sholaga)

சோழியன் – Sōlian

இது சோழ நாட்டைச் சேர்ந்தவன் எனப் பொருள்படும். ஒரு வட்டாரத்திற்கு –சோழ நாட்டில் வாழ்வோருக்கு – உரிய பெயர். கர்ணம், இடையர், பள்ளர், வேளாளர் ஆகிய சாதிகளின் உட்பிரிவாக இது பதியப்பட்டுள்ளது. இதற்குச் சமமான சோழங்கர் என பெயர் வல்லம்பாரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலத்தின் பெயராகப் பதியப்பட்டுள்ளது. சோழிய இல்லம் என்பது தமிழ்நாட்டில் வாழும் பணிக்கன்களின் புறமணக்கட்டுப்பாட்டுடைய் குலம். பள்ளியர் சிலர் தங்களைச் சோழகர் என்றோ சோழகுலச் சத்திரியர் என்றோ சிறப்பித்துக் கொள்கின்றனர். (பார்க்க : சோழியர்).

சோமக்சத்ரி – Sōmakshatri

தென் கன்னடத்தைச் சேர்ந்த கன்னடம் பேசும் காணீகர்கள் சில சமயங்களில் தங்களை இதுபோலக் கூறிக் கொள்வர்.

சோமரர் – Sōmara

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் விசாகப்பட்டினம் சார்ந்த மலைப் பகுதிகளில் வாழும் குயவர்கள் எனப் பதியப்பட்டுள்ளது.

சோமாரி – Sōmari (idler)

ஏனாதியரின் ஒரு பிரிவினர். துப்புரவுத் தொழில் செய்யும் இவர்கள் எச்சில் இலைகளில் மக்கள் மிச்சமாகப் போடும் உணவுப் பொருள்களைத் தேடித் தின்பர்.

சோம வாரத்தர் – Sōma Vārada (sunday)

திங்கட் கிழமை அன்று தங்கள் தெய்வத்தை வழிபடும் குருபர்களுக்கான பெயர்.

சோனகன் – Sōnagan

பார்க்க : சோனகன் (See : Jonagan)

சோணர் – Sōnar

தென் கன்னடத்தைச் சேர்ந்த சொணர் அல்லது சொணக்காரர்கள் எனப்படும் பொற்கொல்லர் பற்றித் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் திரு. எச்.ஸ்டுவர்ட் கூறியிருப்பதாவது :– "மராத்தி மொழியின் கிளைமொழியான கொங்கணி பேசும் இவர்கள் கோவாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் எனக் கருதப்படுகிறது. இச் சாதியார் வாழும் குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் முக்தீசர் எனப்படும் சாதித் தலைவர்கள் ஓரிருவர் உள்ளனர். சாதியினர் தொடர்பான எல்லா வழக்குகளையும் கேட்டுத் தீர்த்து வைப்பவர்கள் இவர்களே. மிகப் பெரிய குற்றங்களைச் சொடெயில் என்ற ஊரில் உள்ள சுவாமியிடம் கொண்டு செல்ல வேண்டும். ஒருவனைச் சாதி விலக்கம் செய்யும் அதிகாரம் பெற்றவர் இவரே. சில சமயங்களில் பெருந் தொகையினையும் தண்டமாக இவர் விதிப்பார். பூணூல் அணியும் இச் சாதியார் தங்கள் கோத்திரங்களுக்குள்ளாகவே மண உறவு கொள்ளுதல் அனுமதிக்கப்படுவதில்லை. பெரும்பாலோர் வைணவ நெறியினைச் சார்ந்துள்ளனர். ஒரு சிலர் சைவத்தையும் கடைப்பிடிக்கின்றனர். இறந்தவர்களை எரித்துச் சாம்பலை ஆற்றில் விடுவர். மீன் உண்ணும் இவர்கள் இறைச்சி உண்ணுவதில்லை. செட்டி என்பது இவர்களுக்கான

பட்டப் பெயர். "தங்கம், வெள்ளி தவிரப் பிற உலோகங்களில் தொழில் செய்வது தங்கள் தகுதிக்குக் குறைவானது என இவர்கள் கருதுகின்றனர்.

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சுன்னாரி (அல்லது சொன்னாரி) ஒரியப் பொற்கொல்லர் எனக் கூறப்பட்டுள்ளனர். (பார்க்க : ரிஸ்லெ, வங்காளக் குலங்களும் குடிகளும், சொணர்.) சென்னை மாநிலத்தின் ஒரியப் பகுதிகளில் வாழும் பொற்கொல்லர் தெலுங்கு தேசத்திலிருந்து சென்று குடியேறிய கம்சாலர் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. ஒரியர்களைப் போலன்றி இவர்கள் தெலுங்கர்களை ஒப்ப இல்லப் பெயர்களைக் கொண்டிருப்பதோடு தெலுங்கையே தாய் மொழியாகவும் பேசுகின்றனர். சைவர்களான இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். விசுவகர்மாவின் பரம்பரையினர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் விசுவபிராமணர் எனவும் தங்களை அழைத்துக் கொள்வர். பிராமணர்கள் சமைக்கும் உணவை உண்ணாததோடு அவர்களிடமிருந்து தண்ணீரும் பெற்றுக் குடிக்கமாட்டார்கள்.

முன்பு பொற்கொல்லர் நோட்டக்காரர் எனப்படும் பொறுப்பில் கிராமங்களில் நாணயமாற்றுப் பார்க்கும் அலுவலர்களாக இருந்துள்ளனர். நிலவரி வசூலிக்கும்போது செலுத்தப்படும் ரூபாய்கள் கள்ள நாணயங்களா எனச் சோதித்துப் பார்ப்பதே இவர்கள் பணி. பொற்கொல்லரை இழிவுபடுத்துவதான ஒரு பழமொழி வழக்கிலுள்ளது. தட்டான் தன் மனைவிக்கு நகை செய்யும்போது கூட அதில் கொஞ்சம் தங்கம் திருடுவான் என்பதே அதன் பொருள்.

"மிகுந்த ஏழ்மையில் உள்ள சென்னை மாநிலத்தில் 408 பேருக்கு ஒரு பொற்கொல்லர் உள்ளனர். செல்வ வளம் படைத்த இங்கிலாந்தில் 1200 பேருக்கு ஒரு பொற்கொல்லர் உள்ளனர். ஐரோப்பாவில் பொன்னாலான அணிகளை அலங்காரத்திற்கான ஆடம்பரப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர். இந்தியாவில் அது முதலீடாக முதன்மை பெறுகின்றது. அதனோடு கூட அணியாகவும் உள்ளது" என 1881 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொற்கொல்லனைப் பற்றிய பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது :-* "மண்ணாலான தரையோடு கூடிய அறையின் நடுவே தோண்டப்பட்ட குழியே ஊதுலையாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனையொட்டி அரை வட்ட வடிவில் நடுவில் துளையோடு கூடிய திட்டு அமைக்கப்பட்டு அதில் துருத்தி பொருத்தப்பட்டிருக்கும். களிமண், வறட்டி, இடுக்கி, சுத்தி, சட்டியில் கரி, டின்னில் அழுக்குத் தண்ணீர், ஒரு பொட்டலம் சல் அமோனியம், மரப்பிசின் ஆகியன அந்த அறையில் ஆங்காங்கே ரசிக்கத் தக்க வகையில் தாறுமாறாகக் கிடக்கக் காணலாம். கூனிக் குறுகி அமர்ந்தவர்களாகச் சில பாஞ்சாலர் அங்குப் பணியாற்றியபடி இருப்பர். அவர்களுள் ஒருவன் ஊதுகுழாயில் வாய் வைத்துக் கரிச் சட்டியை ஊதி எரித்தபடி கரியினை இடுக்கியால் கிளறியபடி இருப்பான். மற்றொருவன் ஒரு வெள்ளிக் கம்பியினைத் தன் முன் உள்ள சிறு பட்டைக்கல் மீது வைத்துக் கொட்டியபடி இருப்பான். மிக எளிய கருவிகளைக் கொண்டு இந்துக்களான பொற்கொல்லர் நகைத்தொழில் துறையில் மிக அரிய படைப்புக்களைச் செய்து முடிப்பது அவர்கள் திறமைக்கு நற்சான்றாகும் என்றே கூறவேண்டும்."

சொண்டி – Sondi

சொண்டி அல்லது சுண்டி எனப்படுவோரைப் பற்றி 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது வருமாறு :- "கள் விற்கும் ஒரியச் சாதியாரான இவர்கள் தாங்களே கள் இறக்குவதில்லை. அதனைச் சீயொலொக்களிடமிருந்து வாங்கி விற்கின்றனர். இவர்கள் சாராயமும் வடிக்கின்றனர்." போகிற போக்கில் சாராயம் பற்றியும் ஒரு வார்த்தை கூறலாம் என நினைக்கிறேன். அது "தென்னை வகைப் பாளைகளிலிருந்து எடுக்கப்படும் பதநீரினை வடித்து எடுக்கப்படுவதும் ஆகும்."# ஏரக் என்ற இந்தச் சொல்லின் சிதைந்த வடிவம் ரக். இது ரக் பஞ்ச் என்பது போல பிற சொற்களோடு இணைந்து வரும்.

---

* இந்தியர் ஒருவர் எழுதிய தென்னிந்தியர் வாழ்க்கை முறை பற்றிய சொற்சித்திரங்கள், **1880.** *(A Native-Pen and ink Sketches of Native Life in Southern India, 1880.)*

யூலும், பர்னலும், ஹாப்சன்–ஜாப்சன். *(Yule and Burnell, Hobson-Jobson.)*

பராசரபதாதி என்ற வடமொழி நூலின்படி சௌண்டிகர் (கள் இறக்குவோரும் சாராயம் காய்ச்சுவோரும்) கைவரச் சாதியினைச் சேர்ந்த ஆணுக்கும் கௌதிகெ சாதிப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள். இந்த இரு சாதிகளுமே பிரதிலோம சாதிகளாம். மச்ச புராணத்தில் சோண் ஆற்றங்கரையில் ஏழு அப்சர மகளிருக்குச் சிவன் வழியாகப் பிறந்தவர்கள் சௌண்டிகர் எனக் கூறப்பட்டுள்ளது. மனு, சௌண்டிகர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஸ்தானகன் ஒருவன் வேட்டை நாய்களைக் கொண்டு வேட்டையாடுவோன், சௌண்டிகர், வண்ணான், சாயம் போடுபவன், கருணையற்றவன், எந்த வீட்டில் ஒருவன் மனைவியும் அவன் கள்ளக் காதலுனும் உடன் வாழ்கின்றானோ அந்த வீட்டிற்குரியவன் ஆகியோரிடமிருந்து உணவைப் பெற்று உண்ணமாட்டான் எனக் கூறியுள்ளார்.

இவர்களோடு தொடர்புடையவர்களான கண்ரிகள் அல்லது கண்டிகள் பற்றித் திரு.ரிஸ்லெ வங்காளக் குலங்களும் குடிகளும் என்ற நூலில் கூறியிருப்பது வருமாறு :- "இந்துக்களின் கோட்பாட்டின்படி சாராயம் காய்ச்சி விற்பவர்களே எல்லாச் சாதியாரினும் மிகவும் இழிந்தவர்கள். வைவர்த புராணத்தில் கூறப்பட்டுள்ள ஒரு கதைஇவர்கள் இழிந்த சாதியாரானதற்கான காரணத்தை நினைவுபடுத்துகின்றது. இந்துக்களின் கடவுளான சனிபகவான் சிவனால் வெட்டப்பட்ட கணேசனுடைய உடலில் ஒரு யானையின் தலையினைப் பொருத்த இயலாதவனாகிவிட்டபோது தேவர்களின் தச்சனாகிய விசுவகர்மா வரவழைக்கப்பட்டான். தக்கபடி அந்த உறுப்புகளைச் சீரமைத்து அவன் கேதாரசேனன் என்ற ஒருவனை உருவாக்கினான். மிகக் களைத்துத் தாகத்தற்கு உள்ளான பகவதி கேதாரசேனனிடம் குடிக்கத் தண்ணீர் கொண்டுவரும்படி கேட்டாள். ஆற்றங்கரையில் ஒரு சிரட்டையில் நிறைந்திருந்த தண்ணீரை அவன் பகவதியிடம் கொண்டு வந்து தந்தான். அதில் ஒரு கிளி சில அரிசி மணிகளைப் போட்டிருந்ததால் அது புளித்துப் போதை தரும் பானமாக மாறியிருந்ததை அவன் கவனிக்கவில்லை. அதைக் குடித்த பகவதி அதனை உணர்ந்தவளாகச் சினங்கொண்டு அதனைக் கொண்டு வந்து தந்தவனை மனிதர்களுக்குச் சாராயம் வடித்து விற்கும் தாழ்ந்த சாதியானாக ஆகும்படி சாபமிட்டாள். மற்றொரு கதை வழக்குப்படி பாஸ்கர் அல்லது பாஸ்கர முனி என்பவர் கண்ணனோடு

உடன்பிறந்தவரான பலராமனால் அவருக்கு மிக்க போதை தரும் பானங்களின் மீதுள்ள விருப்பத்தைத் தணித்துக் கொள்ளப் படைக்கப்பட்டவன் எனக் கூறுகின்றது. இதே கதை வழக்கின் மற்றொரு வடிவம், நிறைந்திருந்த நாட்டுச் சாராயப் பானையோடு ஆற்றில் மிதந்து வந்த நிரஞ்சன் என்ற சிறுவனைப் பாஸ்கரர் காப்பாற்றியபின் அவனை வளர்த்துச் சாராயம் வடிக்கும் தொழிலில் ஈடுபடும்படி செய்தார் எனக் கூறுகிறது."

விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த சொண்டிகள் பற்றிய பின்வரும் குறிப்புக்கு நான் திரு.சி.ஹயவதனராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இப்பொழுது வழக்கில் உள்ள வழக்கு வரலாற்றுக் கதைப்படி முன்னாளில் மாய வித்தைகள் புரிவதில் புகழ் பெற்றிருந்த ஒரு பிராமணன் இருந்தான். அவனை ஆதரித்து வந்த அரசன் அவனால் ஒரு குட்டையில் உள்ள தண்ணீரை நெருப்பு பற்றி எரியச் செய்ய முடியுமா எனக் கேட்டான். அதற்கு அவன் தன்னால் அதனைச் செய்ய முடியும் எனக் கூறினான். எனினும் அதனை எவ்வாறு நிகழ்த்துவது என்பதனை அறியாதவனான அவன் கவலையுற்றவனாக இருந்தான். எதிர்பாராத வகையில் அவன் சாராயம்வடிக்கும் ஒருவனைச் சந்திக்க நேர்ந்தது. அவன் அந்தப் பிராமணனை அவனுடைய கவலைக்குக் காரணம் என்ன என்று கேட்டான். அவனுக்கு நேர்ந்துள்ள தொல்லையினைக் கேள்விப்பட்ட சாராயம் வடிப்பவன், அந்தப் பிராமணன் அவனுடைய மகளைத் தனக்கு மணம் செய்து தர முன் வருவதாயிருந்தால் அவனுக்கு உதவுவதாகக் கூறினான். இந்த உடன்பாட்டுக்கு அந்த பிராமணன் உடன்பட்டான். சாராயம் வடிப்பவன் அவனிடம் ஒரு குறிப்பிட்ட அளவு சாராயத்தைத் தந்து அதனை அந்தக் குளத்தில் கொட்டியபின் அரசன் முன்னிலையில் நெருப்பிடுமாறு கூறினான். பிராமணன் தான் முன்பு உடன்பட்டபடி அவனுக்குத் தன் மகளை மணம் செய்து தர வேண்டியதாயிற்று. அவனுக்கு அந்தப் பிராமணனுடைய மகள் வழியாகப் பிறந்தவர்களின் சந்ததியினரே சொண்டிகள். இந்தச் சாதி பல புறமணக் கட்டுப்பாடு உடைய குலங்களைப் பெற்றுள்ளது. பொடொ ஒடிய, மடிய, கூகுல, சன்னொகுல என்பன அவற்றுள் சிலவற்றுக்கான பெயர்களாம். இவற்றுள் சன்னொகுல முதல் இரண்டு குலத்தவர்களின் முறையற்ற உறவின் வழிப் பிறந்தவர்களின் சந்ததியினர்.

சொண்டிகள் இலுப்பைப் பூ, அரிசி, வெல்லம் ஆகியவற்றிலிருந்து சாராயம் வடிக்கின்றனர். பிரமன் இந்த உலகத்தைப் படைத்தபோது தன் புருவங்களுக்கு இடையே பட்ட ஒரு துளி சேற்றினை வழித்தெடுத்து அதனை ஒரு உருவாக்கி உயிரூட்டினான் எனவும் அதுவே சுக முனி எனவும், அவரிடம் அதுவரை பறவைகள் தின்று வந்த இலுப்பைப் பூவிலிருந்து சாராயம் வடிக்கும்படி பணித்தான் எனவும் ஒரு வ்ழக்கு வரலாறு வழங்கி வருகின்றது.

ஒரு சிறுமி பூப்படையும்போது அவளைத் தனியே ஒரு அறையில் நான்கு அம்புகளை நான்கு மூலைகளில் நட்டு நூலால் இணைக்கப்பட்ட சதுரமான இடத்தில் இருக்கும்படி விடுவர். நாள்தோறும் அவளுக்கு எண்ணெயும் மஞ்சளும் பூசுவர். ஏழாம் நாள் அவள் உள்ளூர் கோயிலுக்குச் சென்று வருவாள்.

சிறுமியர் பூப்படையும் முன்பே மணம் செய்விக்கப்படுகின்றனர். திருமணத்திற்குச் சில நாள்கள் முன்னதாக மணமகன் இல்லத்தின் முன் சாலம் (***Shorea robusta***) அல்லது நாவல் (***Eugenia Jambolana***) மரக்கிளை ஒன்றினை நட்டு அதனைச் சுற்றிலும் பந்தலிடுவர். குறிப்பிட்ட நாளில் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு விருந்தளித்தபின் ஆண்கள் ஊர்வலமாக மணமகள் இல்லத்திற்கு மோதிரங்கள், வெள்ளி மற்றும் கண்ணாடி வளையல்கள், ஐம்பது ரூபாய் பரிசத் தொகை (ஜொால் டொங்கி) ஆகியனவற்றை எடுத்துச் செல்வர். அதற்கும் மறுநாள் மண மகள் மணமகன் இல்லம் வருவாள். மணநாளன்று மணமக்கள் பந்தலின் நடுவே நடப்பட்டுள்ள கம்பத்தை ஏழுமுறை வலமாகச் சுற்றி வருவர். ஒரியப் பிராமணன் அவர்கள் கரங்களை இணைத்து வைப்பான். அவர்கள் அருகருகே அமர்ந்தபின் புனித நெருப்பு மூட்டப்படும். மணமகன் வீட்டைச் சேர்ந்த பெண்கள் அவர்கள் மீது மஞ்சளும் அரிசியும் தூவுவர். அடுத்த நாள் ஒரு பொந்தாரி (நாவிதன்) பந்தல் அமைந்துள்ள இடத்தைத் துப்புரவு செய்து அதில் அரிசி மாவால் கோலங்கள் இடுவான். அங்குப் பாய் ஒன்றினை விரித்து மணமக்கள் சோழி விளையாடுவர். ஐந்து சோழிகளை மணமகன் தன் வலக்கையில் வைத்து கையை இறுக்கமாக மூடிக் கொள்வான். மணமகள் அவன் கையிலிருந்து அவற்றைப் பிடுங்கப் பார்ப்பாள். அதில் அவள் வெற்றி பெறுவாளாயின் அவளுடைய சகோதரர்கள் மணமகனை அடித்துக் கேலி

செய்வர். அதன்பின் மணமகள் அந்தச் சோழிகளைத் தன் வலக்கையில் வைத்து மூடிக் கொள்வாள். மணமகன் அவற்றைப் பிடுங்க முயற்சிப்பான். அதில் அவன் வெற்றி பெறின் மணமகனோடு உடன் பிறந்த பெண்கள் மணமகளை அடித்துக் கேலி செய்வர். பின் ஒரு கூடையில் அரிசி கொண்டு வந்து வைக்கப்படும். அதில் கொஞ்சத்தை ஒரு பாத்திரத்தில் இடுவர். அதிலிருந்து சிறிது அரிசியை மணமகன் தன் கையிலெடுத்து வைத்துக் கொள்வான். மணமகள் அவனிடம் அதனைப் பாத்திரத்தில் போடுமாறு வேண்டுவாள். அவள் சற்று நேரம் மல்லாடியபின் அவன் அதனைப் போட்டுவிட உடன்படுவான். இச் சடங்குகள் அடுத்துவரும் ஐந்து நாள்களிலும் மீண்டும் நிகழ்த்தப்படும். ஏழாம் நாள் பன்னிரண்டு இலைகளில் சிறிது சோறு படைப்பர். பன்னிரண்டு பிராமணர்கள் தட்சணை பெற்றுக்கொண்டு அந்த இலைகளில் உள்ள சோற்றை உண்பர். கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுகின்றது. இறந்துபோன அண்ணன் மனைவியினைத் தம்பி மணந்து கொள்ளும் வழக்கம் உள்ளது.

இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் பத்து நாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்கின்றனர். அச் சமயம் நாள்தோறும் சுடுகாட்டுக்குச் செல்லும் வழி நெடுகச் சோற்றினை இரைத்துச் செல்வர். பதினொன்றாம் நாள் தீட்டுக்குரியவர்கள் குளித்தபின் ஒரு பிராமணன் புனித நெருப்பினை வளர்ப்பான். திருமண நாளில் போலவே பன்னிரண்டு பிராமணர்கள் தட்சணை பெற்றபின் சோறு உண்பர். அன்று நள்ளிரவு நெருங்கும்போது ஒரு புதிய பானையினை வாங்கி வந்து அதில் துளைகள் இட்டு அதனுள் ஒரு விளக்கினையும் சோற்றினையும் வைத்து அதனைச் சுடுகாட்டில் கொண்டுவைத்து இறந்தவன் பெயரை மும்முறை கூவி அழைப்பர். அவனிடம் சோறு தயாராக உள்ளதாகவும் வந்து உண்ணும்படியும் கூறுவர்.

சொண்டி சாதி ஆண்கள் மட்டுமே இறைச்சியினை உண்கின்றனர். அவ்வாறு அவர்கள் இறைச்சி உண்ணும் நாள்களில் கணவன் மீதம் வைத்த சோற்றினை மனைவி உண்ணும் பழக்கம் இல்லை. வழக்கு வரலாற்றின்படி சொண்டியரின் குலமுதல்வரான தாய் தந்தையருள் தாய் பிராமணத்தி என்பதாலேயே இவர்களால் இவ்வாறான வழக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த சொண்டி சாதிச் சிறுமி ஒருத்தி பூப்படையும் முன் ஒருவனுக்கு திருமணம் செய்விக்கப்படாது போவாளாயின் சாதியினைச் சேர்ந்த முதியவன் ஒருவனுக்கோ அவளுடைய அக்காவின் கணவனுக்கோ அவளை மணம் செய்விப்பதற்குரிய சடங்குகளுக்கு உட்படுத்துவர். இவ்வாறு அவளைப் பெயரளவிற்கு மணந்தவன் இறக்கும் வரை அவள் வேறொருவனை மணந்து கொள்ள முடியாது. மணநாளன்று மணமகன் முகம் மழிக்கப்படுவதோடு அவனுக்குப் பழைய பூணூலுக்குப் பதிலாகப் புதிய பூணூலும் அணிவிக்கப்படும். விநாயகர் வழிபாட்டுடன் மணச் சடங்குகள் தொடங்கும். இவை பெரிதும் ஒரியர் மணச் சடங்குகளை ஒத்தனவே. கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிக்கும் இவர்கள் கைம் பெண்ணான ஒருத்தி குடும்பத்தில் மூத்தவனுடைய மனைவியாக இருப்பாளாகில் அவன் இறந்தபின் அவனுடைய தம்பியருள் ஒருவனை அவள் மணக்க அனுமதிப்பதில்லை. குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையினை மணந்து கொண்டவள் கைம்பெண்ணாக ஆக நேர்ந்தால் அவள் அவ்வாறு தன் கணவனின் தம்பியருள் ஒருவனை மணக்க அனுமதிக்கப்படுகிறாள்.

திரு. சி.பி.மேக்கார்டை 1881 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறியிருப்பதாவது :- "கோண்ட்கள் தங்களுக்கு உரியதான நிலத்தில் பெரும்பகுதியினை மற்றச் சாதியினருக்கு விற்று விட்டனர். கோண்ட்கள் வாழும் பகுதியில் உள்ள நிலத்தின் பெரும்பகுதி இவ்வாறாகச் சாராயம் வடிக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள சொண்டிகள் உடமையாக மாறிவிட்டுள்ளது. இது பற்றிய தகவல் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் இதனைத் தடுக்க அரசு விரைந்து செயல்பட்டது. அச்செயல்பாட்டின் வெற்றி காரணமாக அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இப்பகுதியில் சொண்டியர் எண்ணிக்கை குறைந்துவிட்டுள்ளது. இவ்வாறு இவர்களுடைய பழிபாவத்திற்கு அஞ்சாத வஞ்சகச் செயல் ஒடுக்கப்பட்டதால் இவர்களுள் பெரும்பாலானவர்கள் போடு (Boad) விற்கும் பிற பகுதிகளுக்கும் குடிபெயர்ந்து விட்டனர். எனக்குத் தெரிந்தவரை இது ஒன்றே குறிப்பிட்ட தொழிலின் நசிவாகும். இதன் காரணமாகக் கோண்ட்களின் மக்கள்தொகை முழுவதுமாக அழிந்துபோகாமல் காக்கப்பட்டதான நல்ல விளைவுகள் ஏற்பட்டுள்ளது என்று கூறலாம். இல்லையாயின்

கோண்ட்கள் விரைவில் நிலத்தோடு பிணைக்கப்பட்ட அடிமைகளாகிவிட அவர்களுடைய நிலங்களுக்குச் சொண்டிகள் உரிமையாளர்களாகிவிட்டிருப்பர்."

விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :- "மலைப் பகுதிகளில் வாழ்வோர் இலுப்பைப் பூவினைக் கொண்டு சாராயம் வடிப்பதோடு கூட அரிசி, சாமை, ராகி ஆகியவற்றிலிருந்தும் சாராயம் வடிக்கின்றனர். இந்தத் தானியங்களை இவர்கள் நன்கு ஊறும்படி நனைத்து அதனோடு கொஞ்சம் தண்ணீர் சேர்த்துச் சிறிது புளித்த காடியினை உடன் கலந்து நான்கைந்து நாள்வரை புளிக்கச் செய்து பின் அதிலிருந்து ஊறலை வடித்தெடுப்பர். இவ்வாறு பெறப்பட்ட ஊறல் லொண்ட், பண்டியம், மத்திகள்ளு என்ற பல்வேறு பெயர்களில் போதையூட்டும் பானமாக விற்கப்படுகின்றது. இவ்வாறு புளிக்க வைக்கப்பட்ட ஊறல் சாராய மருந்து அல்லது சொண்டி மந்து என்ற பெயரால் வாரச் சந்தைகளில் விற்கப்படுகிறது. இதனைப் பல்வேறு முறைகளில் தயாரிக்கின்றனர். காட்டு மரஞ்செடி கொடிகளின் வேர்களும் பட்டைகளும் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.* இவ்வாறு ஊறல் தயாரிப்பதற்கான பொருள்கள் அரிசியோடு கூடக் கலக்கப்பட்டு சிறு உருண்டைகளாக விற்கப்படுகின்றன. இத்தகைய உருண்டைகளைச் சிறப்பாகப் பர்வதிப்பூர், பால்கொண்ட முகவர் பகுதிகளில் கடைகள் வைத்திருக்கும் சொண்டிகளே விற்று வருகின்றனர். சூதுவாது செய்து ஏமாற்றும் இச் சொண்டிகள், போதை ஊட்டும் மதுவிற்கு அடிமையாகி உள்ள மலை இன மக்களை ஏமாற்றி அவர்களுடைய உடமைகளைத் தங்களுக்கு உரியதாக்கிக் கொள்கின்றனர்.

சொண்டிகள் இவ்வாறு மலைப்பகுதிகளில் உள்ள வளமான நிலங்களைத் தங்கள் உடமையாக்கிக் கொண்டதோடு மலைப் பகுதிகளைச் சேர்ந்த கள்ளங்கபடமற்ற குடியானவர்களையும் தங்கள் அடிமைகளாக்கிக் கொண்டனர். 1892-லேயே டெய்லர் இதுபற்றிக் கூறியுள்ள தகவல்கள் வருமாறு :- "சொண்டிகள் நூற்றுக்கு நூறு சதவிகித வட்டி வாங்குகின்றனர். ஓராண்டிற்குள்ளாக கடன்தொகை

---

* 1869-இல் வெளியான விசாகப்பட்டின மாவட்டக் கையேட்டில் 264ஆம் பக்கத்தில் இதனைத் தயாரிக்கும் முறை பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

திரும்பச் செலுத்தப்படாது போகுமானால் எஞ்சியுள்ள நிலுவையின் மீது கூட்டு வட்டி வாங்கப்படுகின்றது. இதனால் பயிரிடும் குடியானவர்கள் தங்கள் கடனைத் திரும்ப அடைக்க இயலாதவர்களாகச் சௌகார்களின் கொத்தடிமைகளாகக் கோடியராக ஆகி அவர்களுக்காகச் சோற்றுக்கு உழைக்க வேண்டியதாகி விடுகின்றது. இதற்கிடையே சௌகார் இந்த அடிமைகள் என்றும் கடனை அடைக்க இயலாதபடியாகக் கணக்கு வழக்கில் தில்லுமுல்லுச் செய்து விடுகின்றான். சில நாள்களுக்கு முன்பு இது தொடர்பான குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சி என் கவனத்திதற்குக் கொண்டு வரப்பட்டது. ஒரு குடியானவன் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ரூ.20 கடன் வாங்கியிருந்தான். அவன் ரூ.50–ஐ அவ்வப்போது திரும்பச் செலுத்தியிருந்தான். பாக்கித் தொகைக்காக வாழ்நாள் முழுவதும் அடிமையாக உழைத்தபின் அவன் கடன் காரனாகவே இறக்க நேர்ந்தது. அதே கடன்தொகைக்காகச் சௌகார் அவனுடைய மகனையும் கொத்தடிமையாக்கிக் கொண்டான். அவனும் 13 மற்றும் 9 வயதில் இரண்டு பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்துபோனான். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கடன் வாங்கிய ரூ.20/– செலுத்தப்பட வேண்டிய பாக்கி ரூ.30–க்காக இந்தச் சிறுவர்கள் இருவரும் அவனுக்குக் கொத்தடிமைகளாக வரவேண்டுமென சௌகார் உரிமை கொண்டாடினான். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாங்கிய ரூ.20–க்காக ரூ.50 செலுத்தியதோடு ஐம்பது ஆண்டுகள் ஒருவன் கொத்தடிமையாக உழைத்தும் அக்கடன் தீர்ந்தபாடில்லை 'கோடி' என்ற கொத்தடிமை முறை இப்பகுதிகளில் வேரூன்றிவிட்ட வழக்கமாகி விட்டது. அண்மையில் ஒருவன் தான் பட்ட கடனுக்காகத் தன் தம்பியையும் அவனுடைய மனைவியினையும் 'கோடி' யாக பிணையாளாக்கியுள்ளான். மரியாதைக்கு உரியவர்களிடமிருந்து கடனை வசூலிக்கச் சொண்டிகள் எரிச்சலூட்டும் வழிமுறைகளைக் கையாளுகின்றனர். இதனால் குறைந்தது ஒரு கொலையும் நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இவர்கள் தீண்டத்தகாத தீட்டு உண்டாக்கும் தாழ்ந்த சாதியினரான காசிகளைக் கொண்டு தங்கள் கடனைத் திரும்பித் தராதவர் வீட்டினுள் புகுந்து தீட்டு உண்டாக்கி அவர்களையும் அவர்கள் குடும்பத்தவர்களையும் வீட்டை விட்டு சொண்டியின் முன் இழுத்துக் கொண்டுபோய் நிறுத்துவதாக அச்சுறுத்தவும் செய்வர்." என் நண்பர் ஒருவர் செயப்பூர் மலைகளில் சென்று வேட்டைகளில் ஈடுபட்டவராகப் புலி ஒன்றினைச் சுட்டு வீழ்த்தினார். அவர் அவருடைய சிகாரியிடம் அவன்

செய்த உதவிக்கு என்ன பரிசு வேண்டும் எனக் கேட்க அதற்கு அவன் தன் தம்பியினைப் பிணையிலிருந்து மீட்கத் தனக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால் போதுமானது எனக் கூறினான். அவன் சொல்வது என்னவென்று விளங்காத வேட்டைக்காரர் அவனிடம் அதுபற்றி விவரம் கேட்டார். அதற்கு அவன் தன் சாதியினைவிடச் சற்று உயர்ந்த சாதியினைச் சேர்ந்த ஒருத்தியினை நூறு ரூபாய் கொடுத்துதான் மனைவியாக வாங்கியவதாகவும் அதற்கான தொகைக்காகத் தன் தம்பியினைப் பிணையாளாக ஒரு சௌகாரிடம் வைத்திருப்பதாகவும் அந்தச் சௌகாருக்குச் செலுத்த வேண்டிய தொகையில் 25 ரூபாய் போகப் பாக்கி அனைத்தையும் செலுத்திவிட்டதாகவும் இப்பொழுது அவன் தம்பி அச் சௌகாரிடம் கொத்தடிமையாகச் சோற்றுக்கு அவன் நிலத்தில் பயிரிட்டு உழைத்து வருவதாகவும் அவன் விளக்கம் கூறினான்.

விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில் கொள்ளையரான தோம்புகளைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதாவது :- "இவர்கள் செல்வர்களான சிலருடைய வீடுகளில் **புகுந்து (**இவ்வாறு இவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவோர் சாராயம் விற்பவர்களான சொண்டிகளும் சௌகார்களுமே ஆவர். முகவர் பகுதிக் கிராமங்களில் கொள்ளையிடக் கூடிய அளவு பொருள்படைத்த இரக்கமற்ற பணமுதலைகளாக உள்ளோர் இவர்கள். இவர்களுடைய அண்டை அயலார் இவ்வாறு இவர்கள் கொள்ளைக்கு ஆளாகும்போது தங்களைச் சுரண்டிய இவர்கள்மீது ஒரு சிறிதும் இரக்கம் காட்ட மாட்டார்கள்.) அவர்களைக் கட்டிப்போட்டு அவர்கள் வீட்டுப் பெண்களோடு வன்முறையில் உறவு கொண்டபின் அங்குக் கிடைக்கும் அனைத்தையும் கவர்ந்து செல்வர்.

கஞ்சத்தைச் சேர்ந்த சொண்டிகள் சௌத்ரி, பொதானொ, சாகு என்ற பட்டப் பெயர்களைத் தரிக்கின்றனர். விசாகப்பட்டினம் முகவர் பகுதியில் பிஸ்ஸோயி என்ற பட்டப்பெயரைத் தரிக்கின்றனர்.

சொங்கரி – Sonkari

சொங்கரியர் கஞ்சம், விசாகப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த ஒரியரான அரக்கு (சொங்க) வளையல்கள் செய்யும் சிறு சாதியார். இவர்களைத் தெலுங்குச் சுங்கரிகளோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. இச் சாதியினைச் சேர்ந்த ஆண்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்களாக

இருக்கப் பெண்கள் வளையல், சங்கிலி, சாமரம், கோலாட்டக் குச்சிகள், நெல்லாலான அலங்கார விசிறிகள் ஆகியனவற்றைச் செய்கின்றனர். அரிய காட்சிப் பொருளான இந்த விசிறிகளை ஐரோப்பியர் விலைக்கு வாங்குகின்றனர்.

இச் சாதிப் பெண்கள் பூப்படையும் முன் மணம் செய்விக்கப்படுகின்றனர். ஒருவன் தன் அத்தையின் மகளை மணக்கக் கடமைப்பட்டவன். தற்போது இப் பழக்கம் அடிக்கடி மீறப்படுவதைக் காணலாம். பிராமணர்கள் இவர்கள் மணச் சடங்கை நிகழ்த்தி வைக்கின்றனர். இறந்தவர்கள் எரிக்கப்படுகின்றனர். பாட்ரொ என்பது சாதிக்கு உரிய பட்டப்பெயர்.

சொங்குவர் – Sonkuva

மாலியரின் ஓர் உட்பிரிவு.

சொண்டி – Sonti (dried ginger)

அசிலி சாதியினரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

சொப்பு – Soppu (Leaf)

இலையாலான உடைகளை அணியும் கொரகருக்கான ஒரு பெயர்.

சோழியர் – Sōzhiya

முன்பு சோழ நாட்டைச் சேர்ந்தவர்களான பல தமிழ் வகுப்பாருக்கான வட்டார அடிப்படையிலான பெயர். பிராமணர், செட்டி, கைகோளர், கம்மாளர், பள்ளர், வேளாளர் ஆகியோர் இந்த வட்டாரப் பெயரைப் பெற்றுள்ளனர்.

சிரிஷ்டி கர்ணம் – Srishti karnam

கர்ணங்களின் ஓர் உட்பிரிவு. இப்பெயர் சிரிஷ்டி, சிஸ்டி என பலவாறாக எழுதப்படுகின்றது. வாழ்க்கையில் முன்னேறி வளமுடையவர்களாகியுள்ள ஒட்டிலு சாதியார் சிஷ்டி கர்ணம் என்று தங்களைக் கூறிக் கொள்கின்றனர். ஸ்தல (a place) லிங்காயதர்கள் தங்களைச் சிலபோது ஸ்தலரு எனக் கூறிக் கொள்வர். இது அண்மையில் வந்து குடியேறியவர்களிலிருந்தும் ஓர் இடத்திற்கு உரியவர்களாக நெடுங்காலமாக வாழ்பவர்களை வேறுபடுத்தப் பயன்படுத்தப்படும் சொல்.

ஸ்தானிகர் – Stānika

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ஸ்தானிகரைப் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டிருப்பதாவது :– "கன்னடம் பேசும் இவர்கள் கோயிலில் பணி செய்யும் ஏவலர்கள். இவர்கள் தங்களைப் பிராமணர்கள் எனக் கூறிக் கொண்டாலும் மற்ற பிராமணர்கள் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. 1891–இல் 4650–ஆக இருந்த இச் சாதியார் எண்ணிக்கை தற்போது 1469–ஆக குறைந்து விட்டது. இவர்களுள் பலர் தங்களைப் பிராமணர்கள் எனப் பதிந்து கொண்டதே இதற்குக் காரணமாதல் வேண்டும்." தென் கன்னட மாவட்டக் கையேட்டில் இவர்களைப் பற்றிக் கூறியிருப்பது வருமாறு :– "பிராமணர்களுக்குப் பிராமண சாதி விதவைகள் வாயிலாகவும் சாதி விலக்கம் பெற்ற பிராமணத்தியின் வாயிலாகவும் பிறந்தவர்களின் சந்ததியினரான மனு கூறியுள்ள கோலகருக்கு ஒப்பானவர்கள் இவர்கள். எனினும் இவர்கள் இன்று தங்களைச் சைவப் பிராமணர்கள் எனக் கூறிக்கொள்வதோடு மாத்வர்கள் தங்கள் உரிமைகளை வன்முறையில் பறித்துக் கொண்டதாகக் கூறுவர். ஸ்தானிகர் என்பது தனித்த சாதி ஒன்றுக்கான பெயரன்று எனவும் தேவ ஸ்தானிக என்ற தங்களுக்குரிய பட்டப்பெயரே தாங்கள் கோயில் அதிகாரிகளாக இருந்தார்கள் என்பதனைக் காட்டக் கூடியதெனவும் கூறுவர். இவர்களுடைய இந்தக் கூற்றினை மற்றவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. நடைமுறையில் மலரெடுத்தல், கோயிலைத் துப்புரவு செய்தல், விளக்கேற்றல், கோயிலுக்குரிய பாத்திரப் பண்டங்களைத் தேய்த்தல், மணி அடித்தல் போன்ற குற்றேவலர்களுக்குரிய பணிகளையே இவர்கள் செய்து வருகின்றனர் என்பது இவர்கள் தங்கள் கோயில் அதிகாரிகள் எனக் கூறிக்கொள்ளுவதற்கு அரண் செய்வதாக இல்லை. இவர்களுள் பலர் நிலக்கிழார்களாகவும் பயிரிடுவோராகவும் உள்ளனர். பெரும்பாலானவர்கள் சைவ நெறி சார்ந்தவர்கள். இவர்கள் பூணூல் அணிகின்றனர். வெங்கடரமணரும் கணபதியுமே இவர்கள் சிறப்பாக வழிபடும் தெய்வங்கள். அண்மைக் காலமாக இவர்களுள் கல்வி கற்ற சிலர் சாதிக்குரிய புரோகிதத் தொழிலை மட்டுமே மேற்கொண்டு வருகின்றனர். சுப்ரமணிய, கும்பல என்ற இரு உட்பிரிவுகள் இச் சாதியில் உள்ளன. பெண்கள் பூப்படையும் முன்பே மணம் செய்விக்கப்படுகின்றனர். விதவையர் மணத்தை இவர்கள் அனுமதிப்பதில்லை. இவர்களுடைய பிற பழக்க வழக்கங்கள் கோட

பிராமணர் பழக்க வழக்கங்களை ஒத்தன. இவர்கள் இறைச்சி உண்பதோ மது பருகுவதோ இல்லை." தென் கன்னட மாவட்டக் கையேட்டில் ஸ்தானிகர் சான்போகம் எனவும் முக்தேசர் எனவும் கூறப்பட்டுள்ளது. ஒரு கிராமத்தில் விசாரணை அல்லது ஆள்களைத் தேடல் நடத்தப்படும்போது ஊர்த் தலைவனான முக்தேசன் அழைக்கப்பட்டு அவனிடம் விசாரணை அல்லது ஆள்களைத் தேடியதற்கான அறிக்கையில் கையொப்பம் பெறுவர். ஒரு சாதிக்கு உரிய முக்தேசர் அனைவரும் ஒருங்கு கூடும்படி வேண்டப்படலாம். ஒரு கோயிலைச் சேர்ந்த முக்தேசர் சிலர் ஸ்தானிகர்களாக இருக்கலாம். சாதிச் சச்சரவுகள் பற்றிய விசாரணையின்போது சாதியாரால் அமர்த்தப்படும் கணக்கனான சான்போகமே விசாரணையின்போது சாட்சிகள் கூறுவதைப் பதிவான். அந்த சாட்சியங்களை வைத்து முடிவு எடுப்பவன் முக்தேசன்.

சுப்ரமணிய, கும்பள என்ற இரண்டு பிரிவினருள்ளும் சுப்பிரமணிய பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்களை உயர் பிரிவினர் எனக் கூறிக் கொள்கின்றனர். இவ்விரு பிரிவினிடையேயும் மண உறவுகள் நிகழ்வதில்லை. சுப்பிரமணிய பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்களை ருக் வேதிகள் எனவும் விஸ்வாமித்திரா, ஆங்கிரச, பாரத்வாச போன்ற கோத்திரங்களுக்கு உரியவர் எனவும் கூறிக் கொள்வர். இவர்களிடையே பன்னிரண்டு புறமணக் கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் சிலவற்றுக்கான பெயர்கள் வருமாறு :-

அரசு	கொண்டை
அத்தி	அதிகாரி
வண்டி	பண்டிய
கீத்தகி	ஹெக்காட

புகழ்பெற்ற சுப்ரமணியர் கோவிலைச் சிவாலி பிராமணர் கைப்பற்றும் வரை அது சுப்பிரமணிய ஸ்தானிகர் பொறுப்பில் இருந்ததாகத் தெரிகிறது. முன்னாளில் அக்கோவிலில் குவித்து வைக்கப்பட்டுள்ள சோற்றில் ஸ்கந்த சஷ்டியன்று தங்கத்தாலான அகப்பையினைச் சொருகும் உரிமை இவர்களிடம் இருந்ததாகக் கூறுவர். ஸ்தானிகர்களுள் பலரும் இன்றும் கோயில்களைச் சேர்ந்தவர்களாக அரிசி களைதல், பாத்திரங்கள் துலக்கல், பலிபீடத்தில் சோறு படைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டவர்களாக உள்ளனர். பலி பீடத்தில்

வைக்கப்படும் சோற்றினைச் ஸ்தானிகர்கள் உண்பார்களேயன்றிப் பிராமணர்கள் உண்பதில்லை. மைசூர் மாநிலத்தில் இந்தச் சோற்றை உண்ணும் பிராமணத்தி சாதியினை இழந்தவளாகப் பரத்தையாக ஆவாள்.

கணக்கெடுப்பின்போது சிவத்வஜ, சிவ பிராமணன் என்பன ஸ்தானிகருக்கு உரிய வேறு பெயர்களாகப் பதியப்பட்டுள்ளன.

ஸ்தாவரம் – Sthāvara

கணக்கெடுப்பின்போது ஜங்கமங்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. லிங்காயதர்கள் தங்கள் உடம்பில் ஏதாவது உறுப்பில் கட்டியிருக்கும் லிங்கம் ஜங்கம் லிங்கம் எனப்படும். கோயிலில் ஸ்தாவரமாக – இடம் பெயராது – இருக்கும் லிங்கத்திலிருந்து இதனை வேறுபடுத்த இது இவ்வாறு வழங்கப்படுகிறது.

சுபுத்தி – Subuddhi

ஒரியச் சாதியார் பலருக்குமான பட்டப்பெயர். நல் புத்தியுடையவன் என்பது பொருள்.

சுதர்மான் – Sudarmān

பார்க்க : உடையான். (See : Udaiyan)

சுத்தொ – Suddho

இதே பெயரில் இரண்டு தனித்த சாதிகள் உள்ளன. சமவெளியில் குடியேறியுள்ள சவரரும் கஞ்சத்தில் பயிர்த்தொழிலாளரும் சிறிய அளவிலான பைக்குகளும் இப் பெயருக்கு உரியவராக உள்ளனர். மலைப் பகுதிகளில் வாழும் சுத்தொ சாதியார் கோழி இறைச்சி உண்பதோடு சாராயம் முதலிய மது வகைகளையும் பருகுவர். சுத்தொ என்ற சாதிப் பெயர் கலப்படமற்ற என்ற பொருள் தருவதாகும். சுத்தொ பைக்குகள் கும்சூர் அரசர்களுக்குத் தலைப்பாகை கட்டிவிடும் பணியினை மேற்கொண்டவர்களாக இருந்ததால் இப்பெயர் பெற்றனர் எனக் கூறப்படுகிறது. பிற ஒரியச் சாதியாரைப் போலவே இவர்கள் பொதானொ, பிஸ்ஸொயி, பேகர முதலான பட்டப் பெயர்களைத் தரிக்கின்றனர். இச் சாதி அண்மையில் தோன்றிய சாதி எனத் தெரிகின்றது.

சூத்திரர் – Sūdra

மனு வகுத்தா நால்வகை வருணத்தாருள் நான்காவது வருணத்தார். சூத்திரரான நாயர்கள் வீட்டுப் பெண்களே நம்பூத்ரிகள் இல்லங்களில் பணிப் பெண்களாக அமர்கின்றனர்.

சூத்திரக் காவுதியன் – Sūdra Kāvutiyān

நாயர்களுக்கு மழித்தல் தொழில் புரியும் அம்பட்டர்கள் தங்களைப் பிற அம்பட்டர்களிலிருந்தும் வேறுபடுத்திக் கொள்ளத் தரிக்கும் பெயர்.

சுடுகாட்டுச் சித்தர் – Sudugādusiddha

சுடுகாடு என்ற சொல்லிலிருந்து வந்தது இந்தப் பெயர். 1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது வருமாறு:- "ஜோகிகளைப் போல இவர்களும் ஊர்ஊராகச் சென்று இரத்தலை மேற்கொள்வார்கள். ஒரு காலத்தில் சுடுகாட்டின் உரிமையாளராக இருந்தவர்கள் இவர்கள். இறந்தவனுக்குப் போர்த்தப்பட்டிருக்கும் துணியில் ஒரு பகுதியினை எடுத்துக் கொள்ளும் குலவாதி (பார்க்க : ஹொலையர்.) எரிக்கப்படும் ஒவ்வொரு பிணத்திற்கும் குறிப்பிட்ட தொகையினை இவர்களுடைய உரிமையினை ஒப்புக் கொள்ளும் வகையில் செலுத்துகின்றான்." ஜெ.எஸ்.எப். மெக்கன்சி* இவர்களைப் பற்றிச் சுடுகாட்டுச் சித்தர் என்ற பெயருக்கு உரியவர்கள் எனக் குறிப்பிடுவதோடு கங்காதிகார வக்கலிக சாதியினைச் சேர்ந்த முக ர்களாக இருந்த இவர்கள் பின்னர் தனித்த சாதியினராக ஆகிவிட்டனர் எனக் கூறியுள்ளார். பின்னர் இவர்கள் தங்கள் குருவான சுத்குடு சித்தரு என்பவரின் பெயரைத் தங்கள் சாதிப் பெயராகக் கொண்டவர்களாயினர். தங்கள் பிரிவுக்குள்ளாகவே மண உறவு கொள்ளும் இவர்களுடைய சாதித் தலைவன் பதவி, பரம்பரை உரிமை உடையது. இவர்கள் ஒவ்வொருவரும் நாட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு உரிமையுடையவர்களாக உள்ளனர். அப்பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இவர்கள் தங்களுக்குரிய உரிமைத் தொகையைப் பெறுவர். இவர்கள் தங்களோடு வழக்கமாக எடுத்துச் செல்லும் வெண்கல மணியோடு மரத்தாலான மணியினையும் எப்பொழுதும் உடன் எடுத்துச் செல்வதை வைத்து இவர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். இந்த மணியில்லாது வருபவர்களை யாரும் சாதித் தலைவனுடைய முகவர் என உடன்படுவதில்லை.

* இந்தியத் தொல்லியல், *II, 1873. (Ind.Ant.II, 1873.)*

சுகாலி – Sugāli

சுகாலி, லம்பாடியருக்கான மற்றுமொரு பெயர்.

சுகமஞ்சி பலிச – Sugamanchi Balija

பலிசருள் சிறந்தவர் என்பதனைக் குறிப்பதான பெயர். காசுல பலிசர் என்பதற்கான மற்றுமொருபெயர்.

சுக்க – Sukka (star)

யெருக்கலரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். இதற்குச் சமமாக சுக்ர என்பது ஒரிய காலிஞ்சிகளுக்குரிய ஒரு கோத்திரப் பெயராக உள்ளது.

சூளே – Sūlē

பரத்தமையைத் தொழிலாகக் கொண்டுள்ள கன்னடத்தைச் சேர்ந்த பெண்களுக்கான பெயர். கோயிலில் நடனமாடும் பெண்கள் இது இழிவு தரும் பெயராகையால் இப் பெயரால் அவர்களை அழைப்பதை விரும்புவதில்லை. அம் மகளிர் தங்களை வேசியர், அல்லது பேசியர், நய்சானி, அல்லது நய்கிணி என அழைத்துக் கொள்வர்.

சுல்லொகொண்டிய – Sullokondia

கௌடொக்களின் உட்பிரிவுகளில் மிக உயர்ந்ததான உட்பிரிவு. இவர்களிடமிருந்து பிராமணர்கள் தண்ணீர் பெற்றுக் குடிப்பர்.

சுனர் – Sunar

பார்க்க : சொணர். (See : Sondi)

சுந்தரத்தான் – Sudarattān

நாட்டுக்கோட்டைச் செட்டிகளின் ஓர் உட்பிரிவு.

சுண்டி – Sundi

பார்க்க : சொண்டி. (See : Sondi)

சுங்கரி – Sunkari

சுங்கரி அல்லது சுங்கர வாண்டுலு எனப்படுவோர் கோதாவரி மாவட்டத்தில் பயிரிடுவோர், மீனவர், படகு வலிப்போர் எனப் பல பணிகளும் புரிபவர்கள். மறைத்திரு. ஜெ.கெயின் அவர்கள் கருத்துப்படி இவர்கள் மத்திய மாநிலத்தின் ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து வந்தவர்களாதல் வேண்டும். மத்திய மாநில விவரக் குறிப்பின்படி இவர்கள் சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்களாவர்.

சன்ன அக்கி – Sunna Akki (thin rice)

தொங்க தாசிரிகளின் குடும்பப் பெயர்களுள் ஒன்று.

சுண்ணாம்புக்காரன் – Sunnambukkāran (lime man)

பரவர், பறையர் முதலிய சுண்ணாம்புக் காளவாய் போடும் வகுப்பாருக்குரிய பெயர். சுண்ணாம்பு பலிசர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றின் பெயருமாகும்.

சுண்ணடர் – Sunnata

குறும்பர்களின் ஓர் உட்பிரிவு. இவர்கள் வெள்ளைக் கம்பளி மட்டுமே தயாரிப்பர்.

சூரக்குடி – Sūrukkudi

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோவில் பிரிவுகளுள் ஒன்று.

சூர்தி – Sūrti

பம்பாயில் வாழும் ஐரோப்பியர்களின் வீட்டு வேலைக்காரன்களுக்கான பெயர். இவர்கள் சூரத்திலிருந்து வந்தவர்கள்.

சூர்யா – Sūrya

தோம்பர், குருபர், பெண்டியர் ஆகிய சாதிகளின் குலமாகப் பதியப்பட்டுள்ளது. அம்பலக்காரன்களின் ஓர் உட்பிரிவும் ஆகும். இதற்குச் சமமான சூரிய வம்சம் என்பது ராசுக்களின் ஓர் உட்பிரிவாக உள்ளது. இவர்களுள் சிலர் தங்களை ராச காபுகள் அல்லது ரெட்டிகள் எனச் சிறப்பித்துக் கூறிக் கொள்வர்.

சூத குலம் – Sūtakulam

பெஸ்தர் தங்களை இப்பெயரால் அழைத்துக் கொள்வர். இவர்கள் தங்களைச் சூதமகா முனியின் பரம்பரையில் வந்தவர்கள் எனக் கூறிக் கொள்வர். இவர்கள் சமையல் கலையில் தேர்ந்தவர்களாகையினால் இப்பெயர் பெற்றவராதல் வேண்டுமென வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ளது. சூதன் என்பதற்குச் சமையல்காரன் என்ற பொருளும் உண்டு.

சூத்ராளு - Sūtarlu

மறைத்திரு. ஜெ.கெயின்* அவர்களால் கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கல் கட்டிடம் கட்டும் கொத்தனார்களுக்குரிய பெயராகப் பதியப்பட்டுள்ளது.

சூதல - Sūthala (needle)

கம்மர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

ஸ்வாரூபம் - Svārūpma

ஸ்வாரூபம் பற்றிப் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது :- # "இது ஒரு அரச குலம். கோல, நாயரிப்பு, பெரிம்பதப்பு, திரிப்ப ஸ்வரூபம் ஆகிய நான்கு அரச மரபுகள் இதில் இடம்பெற்றுள்ளன. இவை முறையே கோளத்ரி அல்லது சிரக்கல் அரசர். சாமோரின் கொச்சி அரசர், திருவாங்கூர் அரசர் ஆகியவர்களுக்கு உரிய குலங்கள்" ஸ்வாரூபக்கார் அல்லது ஸ்வரூபத்தில் என்பது ஸ்வாரூபத்தின் (அரசர்களது) இல்லத்தில் பணிபுரியும் நாயர்களுக்கான தொழில் தொடர்பான பெயர்.

சுவாயி - Swāyi

அளிய, அருவ, காலிஞ்சி முதலிய ஒரிய வகுப்பாருக்கான பட்டப்பெயர்.

சுவேதாம்பரர் - Swetāmbara (clad in white)

சமணர்களுடைய இரண்டு பெரும் பிரிவுகளுள் ஒன்று. வெள்ளை ஆடை புனைந்தவர் என்பது பொருள்.

சிரியன் கிறித்தவர் - Syriyan Christian

இந்த வகுப்பாரைப் பற்றிய வரலாற்றை விரிவாகக் கூறும் பல வரலாற்று மூலங்களிருந்தாலும் பின்வரும் குறிப்பு 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தரும் வரலாற்றின் சுருக்கத்துடன் பிற குறிப்புகள் சிலவற்றையும் கொண்டமைந்ததாகும்.

"சிரியன் கிறித்தவர் சிலபோது செர்ர (மலை எனப் பொருள்படும் போர்த்துகீசிய சொல்) கிறித்தவர் எனப்படுகின்றனர். இதற்குக் காரணம் மலையடிவாரத்தில் இவர்கள் வாழ்ந்து வந்ததாகும்."+

---

* இந்தியத் தொல்லியல். *VIII, 1979.*

விக்ரம் – மலபார் சட்டங்களும் வழக்கங்களும் *(Vigram-Malabar Law and Customs)*

\+ மறைத்திரு.டபிள்யூ.ஜெ.ரிச்சர்டு. புனிதர் தாமஸ் பிரிவு இந்தியக் கிறித்தவர்.
(Rev. W.J.Richards. The Indian Christian of Saint Thomas.)

கிறித்துவின் சமயநெறியினை இந்தியாவில் முதன்முதல் அறிமுகப்படுத்தியவராகக் கருதப்படுபவர் திருத்தூதரான புனிதர் தாமஸ் ஆவார். மேற்குக் கடற்கரை சார்ந்த கிறித்தவர்கள் நெடுங்காலமாக நம்பிப் போற்றி வரும் வழக்கு வரலாறு கி.பி.52–இல் அத் திருத்தூதர் கொடுங்கோளூருக்கு அருகேயுள்ள மலங்கர எனப்படும் மலையன் கரையில் வந்து கரை சேர்ந்தார் என்பதாகும். இதுவே கிரேக்கர் குறிப்புகளில் கூறப்பட்டுள்ள முசௌரியும் யூதர் செப்புப் பட்டயங்களுள் கூறப்பட்டுள்ள முயரிக்கோடும் ஆகும். ஆல்வாய் ஆற்றின் கழிமுகக் கிளைகளுள் ஒன்றின் வாயிலில் அமைந்திருக்கும் துறைமுகமே முசிறி. முசிறி, தொடக்க காலக் கடற்பயணிகளான பினீசியர்களும் ஐரோப்பிய வணிகர்களும் இக்கடற்கரையில் கிடைக்கும் மிளகு முதலிய பொருள்களுக்காகவும் நன்னீருக்காகவும் அடிக்கடி வந்திறங்கும் துறையாகும். இந்தக் கதை வரலாற்றின்படி புனிதர் தாமஸ் கொச்சி, திருவாங்கூர் பகுதிகளில் ஏழிடங்களில் தேவாலயங்களை அமைத்ததோடு பிராமணர்கள் உள்ளிட்ட பலரையும் கிறித்தவர்களாக மதம் மாற்றினார் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு மதம் மாற்றப்பட்ட பிராமணர்களுள் கள்ளி, கள்ளியங்கரை, சங்கரபுரி, பகலொமட்டம் ஆகிய நம்பூத்ரி குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் பகலோட்டம் நம்பூத்ரிகள் திருத்தூதர் அவர்களாலேயே சமயக் குருமார்களாக ஆக்கி வைக்கப்பட்டவர்கள். அதன்பின் திருத்தூதர் கிழக்குக் கடற்கரையினை அடைந்து பலரையும் மதம் மாற்றினார். பின் சில பிராமணர்களால் ஈட்டியால் குத்தப்பட்டு உயிர் நீத்த அவர் சென்னையின் ஒரு பகுதியாக உள்ள சாந்தோமில் உள்ள தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டார். மலபாரில் யானைக்கால் நோயுற்றவர்கள் பெரும் அளவினராக இருப்பதைப் பற்றி எழுதும் காப்டன் ஹாமில்டன்* "பழங்கால ரோமானியர் வழக்கு வரலாறு, தன்னைக் கொலை செய்தவர்களும் அவர்கள் சந்ததியினரும் இத்தகைய நோய்க்கு ஆளாக வேண்டும் எனப் புனிதர் தாமஸ் இட்ட சாபமே காரணமாகும் எனக் கூறுகின்றது. இந்த நோயின் அடையாளத்தை வைத்தே அவர்களை இனங்கண்டு கொள்ளலாம் என அவ்வழக்கு வரலாறு கூறும்" எனக் குறித்துள்ளார். "நெடுங்காலமாக வழக்கில் இருந்து வரும் வழக்கு வரலாறு தாமஸைப் பார்தியாவுடனும் பிலிப்பைப் பைரிகியாவுடனும் ஆண்ட்ரூசைச் சிரியாவுடனும் பார்தொலொமாவை

* கிழக்கிந்தியர் பற்றிய புதிய விவரம், 1744. *A New Account of the East Indies, 1744.)*

இந்தியாவுடனும் தொடர்புடையவர்களாகக் கூறும்." * இதனை நாம் அப்படியே ஏற்றுக் கொண்டாலும் புனிதர் தாமஸ் பார்தியாவில் தான் மேற்கொண்ட சமயப் பணியினை இந்தியாவிலும் தொடர்ந்தார் எனக் கொள்வதில் தவறேதுமில்லை. புனிதர் தாமஸ் இந்தியாவிற்கு வந்தார் என்பதனை ஏற்றுக் கொண்டாலும் அது வடமேற்கு இந்தியாவாக அல்லது பேரரசர் அலெக்சாந்தர் படையெடுத்து வந்து தாக்கிய இந்தியாவாகக் கொள்வதற்குரியதாகலாமேயன்றி தெற்கே உள்ள தீபகற்பப் பகுதியாக இருக்க முடியாது எனச் சிலர் கூறுவர். அன்று இந்தப் பகுதிக்கான கடல்வழி அறியப்பட்டிருக்கவில்லை என்பதும் அதில் பயணம் மேற்கொள்வதில் உள்ள ஆபத்துக்களும் தொல்லைகளும் இப்பகுதியில் முதன்முதல் கிறித்தவ சமயம் புகுத்தப்பட்டது எனக் கொள்ளச் சிறிதும் இடந்தரவில்லை என இவர்கள் வாதிடுவர். அலெக்சாண்டிரியா பாலஸ்தினத்தை அடுத்திருந்தாலும் கிழக்கும் மேற்கும் சந்திக்கும் சந்தையாக அது விளங்கியதாலும் இந்தியாவிற்குச் செல்லப் போதுமான வசதிகளைத் தரக் கூடியதாக அது அன்று இருந்திருக்க வேண்டும். அலெக்சாண்டிரியா செங்கடல் ஆகியவற்றின் வழியேயான ரோமானியர் வந்து சென்ற கடல் நீண்டதும் தொல்லைகள் மிகுந்ததுமாகும் என்றால அதனோடு ஒப்பிடும்போது பாரசீக வளைகுடா வழியான வழி எளிமையானதே.

இரண்டாம் நூற்றாண்டில் அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த மெமெட்ரியர் இந்தியர்கள் சிலரிடமிருந்து தங்களுக்குக் கிறித்தவ சமயத்தைப் போதிக்கக் குரு ஒருவரை அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் ஒன்றைப் பெற்றதாக வரலாற்றில் படிக்கின்றோம். அலெக்சாண்டிரியாவில் உள்ள கிறித்தவ சமயக் கல்லூரியின் முதல்வரும் ஏதன்ஸின் நடுநிலை வாத நெறிப்பட்ட சமய போதகரும் பழைய மறையியல் ஞானியும் வேதங்களின் மெய்ப்பொருள் தேர்ந்தவருமான பண்டெய்னல் கி.பி.180–க்கும் 190–க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரைனிஸிலிருந்து மலபாருக்குக் கடற்பயணம் மேற்கொண்டார். "அங்கு அவர் வந்து சேர்ந்தபோது மாத்யூவின் புனித வேதங்களைத் திருத்தூதர்களுள் ஒருவரான பார்த்லொமவினால் போதிக்கப்பட்டுக் கற்றிருந்ததோடு அவரால் கொடுக்கப்பட்ட ஹீப்ரு மொழியிலான புனித

* பிரிட்டானிய கலைக் களஞ்சியம், 9ஆம் பதிப்பு. *(Encyclopaedia Brittanica 9th Ed.)*

வேதத்தையும் பெற்றிருக்கக் கண்டார். அந்தப் புனித நூல் இன்று வரை போற்றிக் காப்பாற்றப்பட்டு வரப்பட்டுள்ளது. பின்னர் அலெக்சாண்டிரியா திரும்பிய இவர் வினாவிடையாகச் சமய போதனை தரும் கல்லூரியின் தலைமையினை ஏற்று நடத்தினார்." மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்டஸின் மேற்றிராணியாரான புனிதர் ஹிப்பொலெய்டஸ் திருத்தூதர் பார்தொலொமாவே இந்தியாவில் சமய மாற்றத்தை நிகழ்த்தியவர் எனக் கூறியுள்ளதோடு புனிதர் தாமஸ் பெர்சியாவிலும் மத்திய ஆசியாவிலும் அப்பணியினை மேற்கொண்டதாகக் கூறியிருப்பதோடு இந்தியாவிலுள்ள ஒரு நகரமாக களமினாவில் அவர் உயிர் நீத்தார் எனவும் குறித்துள்ளார். மறைத்திரு. ஜெ.ஹோயுக்* "இந்தியாவில் புனிதர் பார்தொலொமா சமயப் பணி மேற்கொண்டிருந்தார் என்பதே ஐயத்திற்கு இடமானது" எனக் குறித்துள்ளார். இவருடைய பெயரோடு தொடர்புடையதான வழக்கு வரலாறுகள் எவையும் இந்தியாவில் வழக்கில் இல்லை. பார்தொலொமா மேற்குக் கடற்கரையில் சமயப் பணியில் ஈடுபட்டு உழைத்திருப்பாராயின் முதன் முதல் கிறித்தவ சமயத்தைத் தழுவிய மலபார் மக்கள் அவர் பெயரை விட்டுவிட்டுத் தாமஸின் பெயரை நினைவு கூர்ந்தவர்களாக இருக்க நியாயம் ஏதும் இல்லை. திரு.ஹ்யுக்கும் சர்.டபிள்யூ. ஹண்டரும் # முதல் நூற்றாண்டில் புனிதர் தாமஸ் பயணம் மேற்கொண்டதனை ஒப்புக் கொள்வதில்லையாயினும் அவர்கள் பண்டெய்னஸ் பயணம் வந்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்கின்றனர். "டெமெட்ரியஸிடம் சமய போதகரை அனுப்பும்படி வேண்டுகோள் அனுப்பிய இந்தியர்கள் முதலிலேயே கிறித்தவர்களாக மதம் மாற்றப்பட்டவர்களின் குழந்தைகளாக வேண்டும்" எனத் திரு.ஹோயுக் கூறியுள்ளார். இரண்டாம் நூற்றாண்டில் முன்பே மதம் மாறியவர்களின் குழந்தைகள் இந்தியாவில் இருப்பார்களாயின் முதல் நூற்றாண்டிலேயே கிறித்தவ சமயம் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதனையும் அதனைப் புனிதர் தாமஸ் மேற்கொண்டார் என்பதனையும் ஐயுற்றவர்களாக அதனைப் பழங்கதை என்பது ஏன் எனப் புரியவில்லை. அந்தப் புனிதரின் பெயரோடு தொடர்புடைய பல துணைச் சான்றுகள் இருப்பதனையும் இவ்வாறு ஐயுறவு கொள்பவர்கள் கருதிப் பார்ப்பதில்லை.

* பார்க்க : ஹோயுக்–கிறித்தவ சகாப்தம் தொடங்கி இந்தியாவில் கிறித்தவத்தின் வரலாறு. *(See : Hough-The History of Christianity in India from the Commencement of Christian Era.)*

* இந்தியப் பேரரசு, மூன்றாம் பதிப்பு. *(Indian Empire, 3 rd Ed.)*

ஆசிய ஆய்விதழ் (**Asiatic Researches, Vol.VII**) தொகுதி ஏழில் திரு.வெர்டெ கூறியுள்ள இரண்டாம் தியொடொஸியசின் காலத்திலோ அதற்குச் சற்றுப் பின்போ நெஸ்டொரியஸ் பிரிவினரின் ஒறுப்புக் கொடுமையின் போதே கிறித்தவர்கள் மலபாரில் வந்து குடியேறினர் என்ற கருத்துக்களை ஆசிய இதழ் (**Asiatic Journal, Vol. VI**) தொகுதி ஆறில் திரு.விஸ் மறுத்து இந்தியாவில் உள்ள யூதர்களின் குடியிருப்புகளின் காலத்தைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது திரு.வெர்டெ கூறியுள்ள காலத்துக்கு நெடுங் காலத்துக்கு முன்பே கிறித்தவர்கள் இந்தியாவில் குடியேறிவர்களாதல் வேண்டும் என்பார். திருத்தூதர்களின் தொண்டும் பயணங்களும் பற்றிக் குறிப்பிடும் டையரைச் (**Tyre**) சேர்ந்த மேற்றிராணியாரான டொரொதெயஸ் (கி.பி.254-313) கூறுவதாவது :- "திருத்தூதுவரான தாமஸ் பார்த்தியான்கள் மெடெயர், பெர்சியர், செர்மானியர், பெக்டிரியன்கள், மாகியர் (பாரசீகக் குருமார்) ஆகியவர்களுக்கு வேதாகமத்தைப் போதனை புரிந்தபின் இந்தியாவில் உள்ள ஒரு நகரமான களமினா நகரத்தில் தன் உயிரைப் பலிதந்து புனிதத் தியாகியானார்." கி.பி. 325-இல் நைசீயா நகரத்தில் நடைபெற்ற அனைத்துக் கிறித்தவக் திருச்சபையில் பெர்சியா மற்றும் இந்திய பெருங்கண்டத்தின் மேற்றிராணியரான ஜொகன்னெஸ் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டார். அவ்வாறு கலந்துகொண்ட அவரை அந்நியர் எனப் பழித்தபோது நாஜியென் ஜென்னைச் சேர்ந்த புனிதர், கிரகரீ, "திருத்தூதர்கள் பிறநாடுகளுக்கு அந்நியராகத்தானே சென்றனர்? யூதர் நாடு பீட்டருக்கு உரியதெனலாம் என்றாலும் யூதரல்லாதவரோடு பீட்டருக்கு என்ன உறவு இருந்தது? ஜாயுக்குக்கு அச்சாயவுடனும் ஆண்ட்ரூவுக்கு எப்ரஸூடனும் ஜானுக்கு எப்கெசஸூடனும் என்ன உறவு இருந்தது?" எனக் கேட்டார். கி.பி.390-இல் புனிதர் ஜெராமி புனிதர் தாமஸ் இந்தியாவிற்குச் சமயப் பணி ஆற்றச் சென்றார் என்ற நம்பிக்கையினைத் தான் கொண்டிருப்பதாகச் சாட்சியம் தந்துள்ளார். அவரும் களமினா நகரத்திலேயே அத்திருத்தூதர் உயிர் துறந்ததாகக் கூறியுள்ளார். கிறித்தவ சமய இயக்கத்தின் வரலாற்றை எழுதியவரானதியொடொரெட் (கி.பி.**430-450**) திருத்தூதர் பற்றி எழுதும்போது இந்தியாவோடு புனிதர் தாமஸின் பெயரைத் தொடர்புபடுத்தியே எழுதியிருப்பதாக பரொனியஸ் கருதுகின்றார். "தாமஸின் உடலை எடெஸ்ஸாவிற்கு எடுத்து வரும் முன் அது

இந்தியாவில் வைக்கப்படிருந்த இடத்தில் பெரிய மடமும் திருக்கோயிலும் இருந்தன" என டொரஸைச் சேர்ந்த புனிதர் கிரகரீ கூறியுள்ளார். "புனிதத் துறவியர் எழுதியுள்ள நூல்கள் புனிதர் தாமஸ் இந்தியாவில் வேதாகமத்தைப் போதித்தார் என்பதனை ஒத்ததான உறுதிப்படக் கூறத்தகும் வேறெதனையும் நான் காணவில்லை எனப் பிளோரெண்டியஸ் முடிந்த முடிபாகக் கூறுகிறார். கிரியாவில் இருபத்தைந்து ஆண்டுகள் தங்கி வாழ்ந்தவரான ரூபினஸ் புனிதர் தாமஸின் சடலம் இந்தியாவிலிருந்து எடெஸ்ஸாவிற்குக் கொண்டு வரப்பட்டது எனக் கூறுகின்றார். ரெனயுடொட் குறிப்பிடும் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அராபியப் பயணியர் இருவர் புனிதர் தாமஸ் மைலாப்பூரில் உயிர் துறந்தார் என்பதில் ஐயுறவு கொள்ளக் காரணம் ஏதும் இல்லையெனக் கூறுகின்றனர்.

இன்று திரு.மில்னெ ராய், சர்.டபிள்யூ.ஹண்டரி போன்ற பல அறிஞர்கள் இந்தியக் கிறித்தவ சமயச் சபை திருத்தூதர்களால் தொடங்கப்பட்டது என வலியுறுத்துவோர் கூற்றுக்கள் போலியான கட்டுக் கதைகள் என்பர். 'இந்தியப் பேரரசு' என்ற நூலினை எழுதிய வரலாற்று ஆசிரியரான திரு.மில்னெ ரெயின் அசைக்க முடியாதவை எனத்தகும் வாதங்கள் சிலவற்றை மறுத்தாலும் திருத்தூதர்கள் பற்றிய அவருடைய முடிபுகளை ஏற்றுக் கொள்ளவே செய்கின்றனர். ரோமானியத் திருச்சபையினைச் சேர்ந்த போர்த்துக்கீசியர்கள் தங்கள் ஆர்வம் காரணமாக இந்தப் போலியான கட்டுக் கதைகளை மிகுந்த கற்பனை நயம் மிக்கதாகப் படைத்துவிட்டனர். இன்றைய சீர்திருத்தக் கிறித்தவ சமயத்சை் சேர்ந்த எழுத்தாளர்கள் போர்த்துக்கீசியர் கதை வரைவை மறுப்பதோடு கூட இந்தியாவில் கிறித்தவ சமயத்தைப் பரப்பிய அரிய பெரியோரின் தொண்டினையும் ஒருங்கே மறுப்பர். மலபாரைச் சேர்ந்த கிறித்தவர்கள் இரண்டாம் தியொடொசியஸின் காலத்திலோ அதற்குச் சிறிது பின்னரோ கடும் ஒறுப்புக்கு உட்படுத்தப்பட்ட காலப் பகுதியில் வந்து குடியேறியவர்களாதல் வேண்டும். முனைவர். பர்னெல் மணிச்செயன் தாமஸ் பற்றிய குறிப்புகளின் தொடக்க காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு ஆதல் வேண்டும் என்பார். திரு. மிலான் ரெய் இந்த நிகழ்ச்சிகள் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் நிகழ்ந்தனவாதல் வேண்டும் என்பார். சர் வில்லியம் ஹண்டர் மலபார் கிறித்தவ சபையின் தோற்றத்தோடு எந்த ஒரு பெயரையும் தொடர்புபடுத்த விரும்பாதவராக

மணிச்செயன் தாமஸின் கதை படைக்கப்படுவதற்கு முன்பே கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அது தோன்றியிருக்க வேண்டுமென்பர். எனினும் இவர் புனிதர் தாமஸ் அவர்களால் கிறித்தவராக்கப்பட்டவர்கள் கிறித்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது எட்டாம் நூற்றாண்டில் என்பார். "மணிச்செயன் தாமஸின் மூன்றாம் நூற்றாண்டதான பழைய வரலாறும் எட்டாம் நூற்றாண்டில் மலபார் கிறித்தவ சபையினருக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவரான ஆர்மினியன் தாமஸும் தாமஸ் என்ற அந்தப் பெயரைத் தென்னிந்தியாவினைச் சேர்ந்த கிறித்தவர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பெயராக்கிவிட்டனர்." என்று ஹண்டர் கூறுகின்றார். (அண்மையில் வழக்கு வரலாற்றின் அடிப்படையில் திருத் தூதரான புனிதர் தாமஸ் அவர்களே கிறித்தவ சமயப் பணியினை மேற்கொண்டவர் என்று கூறப்பட்டுள்ளது) "இந்த வழக்கு வரலாற்றினை உடன்படச் சான்றுகள் இல்லாததனைப் போலவே மறுக்கவும் சான்றுகள் இல்லை. கிறித்தவ சமயம் முதன்முதல் இந்தியாவினுள் பெரிசியாவையும் மெசோபொடாமியாவையும் சேர்ந்த நெஸ்டாரியர் அல்லது கால்டானியர்களான சமயப் பணியாளர்களாலேயே புகுத்தப்பட்டது. ஆறாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையான காலகட்டத்தில் இவர்கள் திபேத், டர்ட்ரி உள்ளிட்ட ஆசியக் கண்டம் முழுதும் ஆர்வத்தோடு சமயப் பணியில் ஈடுபட்டனர். நெஸ்டாரியாரின் பிரிவினரின் பாபிலோனுக்கான சமயப்பணி மடத்தின் தலைமையிடம் பாக்தாத் நகரத்தில் இருந்தது. இதனைப் புனிதர் தாமஸின் வழிப்பட்ட கிறித்தவர்கள் என அழைத்துக் கொள்ளும் வழக்கம் நிலவியது. இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ள கல்லாலான சிலுவைகள் மூன்று உள்ளன. அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள செய்திகளாலும் அவற்றின் வரைவு அமைப்பினாலும் நெஸ்டாரியன் சமயப் பணியாளர் சென்சியில் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே சென்று சேர்ந்தனர் என்பதனை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளன. இவை சீனாவில் உள்ள சிங்கன்பு அருகே கண்டெடுக்கப்பட்டுள்ள சிலுவையோடு ஒப்புமையுடையனவாயிருத்தல் ஒன்றுக்கொன்று தொடர்பேதும் அற்ற நிகழ்வே.

வேதாகமத்தை இந்தியாவில் புகுத்தியவர் கி.பி.277-இல் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தவரான மானெஸ் என்பாரின் சீடரான ஒரு தாமஸே என்பவர்க்ள் இதன் அடிப்படையிலேயே கொல்லத்திற்கு அருகே

உள்ளதான காயன்குளத்தில வாழ்ந்தவரான மணி கிராமக்காரனின் தோற்றத்தை மானே ஊராரோடு தொடர்புடையது எனக் கூறுவர். பதினான்காம் நூற்றாண்டளவில் ஆர்மினியன் அல்லது சிரியன் வணிகனான அல்லது தெய்வத்தன்மை பெற்றவனான தாமஸ் கண என்பவனைப் பற்றிய விவரங்களைப் படிக்கின்றோம். தன்னுடைய பயணத்தின்போது மலபார் கடற்கரையினைச் சேர்ந்த கிறித்தவ சமயத்தவர்கள் புறக்கணிப்புக்கு உள்ளாகியிருக்கும் நிலையினைக் கண்டு தன் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் பாக்தாத்தினைச் சேர்ந்த கத்தோலிக்கர்களின் உதவியினைப் பெற்றுச் சமயக் குருமார் குழு ஒன்றினையும் பெரும் எண்ணிக்கையிலான சிரியர்களையும் அழைத்துக் கொண்டு மீண்டும் மலபாருக்கு வந்து மலபார் கிறித்தவர்களுடைய ஆன்ம ஈடேற்றத்திற்காகத் தீவிரமாக உழைத்தார் என்பர். இவர் இரண்டு இந்தியப் பெண்களை மணந்து கொண்டார். அந்த இருவருக்கும் பிறந்த பிள்ளைகளிடையே உரிமை பற்றிய சச்சரவு மூண்டது. சில எழுத்தாளர்களின் கருத்துப்படி இச் சச்சரவின் காரணமாக வடக்கும்பகர், தெற்கும்பகர் என்ற இரு பிரிவுகள் இவர்களிடையே தோன்றியதோடு இன்றுவரை அவை தங்கள் தனித்தன்மையினைப் பேணிக் காத்துவருகின்றன. அறிஞர்களுள் இந்தத் தாமஸ் கண என்பவன் கி.பி.345–இல் வந்தவனாதல் வேண்டும் என ஒரு சாராரும் கி.பி.745–இல் வந்தவனாதல் வேண்டும் என மற்றொரு சாராரும் கூறுகின்றனர். இந்த வழக்கு வரலாறு சிரியாவிலிருந்து இரண்டு காலகட்டங்களில் தனித்தனியே வந்து குடியேறியவர்களின் வருகையின் அடிப்படையில் அமைந்ததாகலாம். தாமஸ் கண இவர்களுள் முதலில் வந்தவர்களுக்குத் தலைமை தாங்கி நடத்தி வந்தவர் ஆதல் கூடும். இந்தப் பெயர்களினுடைய தோற்றத்தைச் சிரியர் வழக்கு வேறு விதமாகக் கூறுகின்றது. சிரியாவிலிருந்து வந்த வெளிநாட்டவர் கொடுங்கோளூரின் தெற்குத் தெருவில் தங்கி வாழ்ந்தனர். கிறித்தவ சமயத்தைத் தழுவிய இந்தியர்கள் வடக்குத் தெருவில் வசித்தனர் என அது கூறும். கொடுங்கோளூரிலிருந்து வெளியேறிப் பிற இடங்களில் தங்கிய பிறகு தெற்குத் தெருவினர் தங்கள் உயர்வையும் தகுதியையும் பற்றிப் பெருமை பாராட்டி வந்ததோடு வடக்குத் தெருவோடு மண உறவுகள் கொள்ளவும் மறுத்து வந்தனர். இதன் காரணமாக வடக்குத் தெருவோருக்குரிய வடக்கும்பகர் என்ற பெயரே கிறித்தவ சமயத்தைத் தழுவிய இந்தியர் அனைவரையும் சுட்டுவதற்குரிய

பெயராயிற்று. தெற்குத் தெருவார் தங்கள் திருமண விருந்துகளில் கொடுங்கோளூரில் தாங்கள் வந்து குடியேறியது பற்றியும் அங் து வெளியேறி பிற பகுதிகளில் சென்று தங்கியது பற்றியுமான பாடல்கை பாடுவர். அவர்கள் இன்றும் தங்களின் மூதாதையருக்கு உரியதாயிருந்த வெளிநாட்டுப் பட்டப் பெயர்கள் சிலவற்றைத் தரித்தவர்களாக உள்ளனர். பாஜி, கொஜா, குஜலிக், மஜமுத் என்பன இந்தப் பட்டப் பெயர்களுள் சிலவாம். இவர்களுடைய தலைவரான தாமஸ் கண பெருமாள்களுள் இறுதியாக ஆண்டவரான பெருமாளினைச் சென்று கண்டு அவரிடமிருந்து கிறித்தவர்கள் நலனுக்காகப் பல உரிமைகளையும் பெற்றார் எனக் கூறப்படுகிறது. அவர் மகா தேவர் பட்டணத்தில் ஒரு தேவாலயத்தையும் நிறுவினார். இந்த ஊரினுடைய சரியான பெயர் மகோதயபுரம் என்பதேயாகும். கொச்சி மாநிலத்தில் பெருமாள்களுடைய தலைநகரமாக விளங்கிய கொடுங்கோளூருக்கு அருகே அமைந்திருப்பது இந்த ஊர். சிரியன் கிறித்தவர்கள் அவ்வப்போது தங்கள் ஆவணங்களில் தங்களை மகாதேவர் பட்டணத்தைச் சேர்ந்த குடிமக்கள் எனக் கூறிக் கொள்வர்.

கோட்டயத்திலுள்ள சிரியன் கிறித்தவ சமயக் கூடத்தில் வீரராகவ சக்கரவர்த்தியால் வழங்கப்பட்டதும் தாணுரவி குப்தாவால் வழங்கப்பட்டதுமான இரண்டு செப்புப்பட்டயங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவை முறையே கி.பி.774, கி.பி.824–ஆம் ஆண்டுகளுக்குரியனவாகக் கருதப்படுகின்றன. இந்தச் செப்புப் பட்டயங்களின் சரியான காலத்தைக் கணித்தறிய முயன்றவர்கள் கருத்து வேறுபாடு கொண்டவர்களாக உள்ளனர் என்பதனை இது பற்றிய இந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதியினுள்* திரு.வி.வெங்கய்யா அவர்கள் கூறியுள்ள ஆய்வு நோக்கிலான கருத்துக்களிலிருந்து தெளியலாம்.

வீரராகவர் தந்த பட்டயம் தொடர்பாகத் திரு.வெங்கய்யா பின்வருமாறு கூறுகின்றார் :– "இத்தோடு இணைக்கப்பட்ட செப்புப் பட்டயம் ஒரே தகட்டாலானதாக அதன் இரு பக்கங்களிலும் செய்தி பொறிக்கப்பட்டதாகும். இது கோட்டயத்திலுள்ள சிரியன்

---

* IV. 290-97, 1896 - 7.

கிறித்தவர்களின் பொறுப்பில் இருக்கின்றது. இப்பட்டயத்தில் முத்திரை ஏதும் இல்லை. அதற்குப் பதிலாக இதன் பின்பக்கத்தில் இடது கைப் பக்க ஓரமாகச் சங்கு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. முனைவர். குண்டர்ட் அவர்களால் இது முன்பே * மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (இவருடைய இந்த மொழிப் பெயர்ப்புத் திரு.லோகனின் மலபார் மாவட்ட விவரக் குறிப்பின் தொகுதி இரண்டின் பன்னிரண்டாம் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.) இதன் மொழிபெயர்ப்பில் நான் குண்டர்ட் அவர்கள் கருத்துக்கு இயையவே இதனை மொழிபெயர்த்துள்ளேன்.

மொழிபெயர்ப்பு

ஹரி! வாழ்க. கணபதிக்கு வணக்கம். ரோகிணி நட்சத்திரமும் சனிக்கிழமையும் கூடிய குரு மகரத்தில் சஞ்சரிக்கின்ற ஆண்டில் மீன மாதத்தில் இருபத்தொன்றாம் நாள் சென்ற பின் பல நூறாயிரம் ஆண்டுகளாகச் செங்கோல் செலுத்தி வருகின்ற அரசருக்கு அரசர்கள் ஆண்ட வீர கேரள சக்ரவர்த்திகளின் குடியில் தோன்றியவரான புகழ்பெற்ற வீர ராகவ சக்ரவர்த்தியின் ஆட்சி சிறப்புற நடக்கும் நாளில்:-

பெரியதான எமது அரண்மனையில் தங்கி மகிழ்ந்தவராக யாம் மணிக்கிராமம் என்ற பட்டத்தினை மகோதயபட்டினத்தைச் சேரமான்லோகப் பெருஞ்சட்டி எனப்படும் இரவிக் கொற்றனுக்கு வழங்குகின்றோம்.

யாம் அவருக்கு உயரிய வகையில் உடைகள் புனைய, வீட்டின் முன் பந்தல் கால்கள் நட்டுக் கொள்ள, கிடைக்கும் வருவாயினைப் பெற, பண்டங்கள் ஏற்றுமதி செய்ய, வணிகத்தில் தனி உரிமம் உடையவராய் இருக்க, பறை அறைந்து செய்தி அறிவிக்க, வருகையினை அறிவிக்கும் கட்டியம் கூறுவோர் முன்னே செல்ல, ஐந்து வகை இன்னிசைக் கருவிகள் முழக்க, சங்கு, பகலில் விளக்கு, நடை மாற்று, பல்லக்கு, வெண் கொற்றக்குடை, தெலுங்கு முரசு(?) வாயில் அலங்கார முகப்பு ஆகியன வைத்துக் கொள்ள, நாலாத் திசைகளிலும் வணிக உரிமை ஆகிய அனைத்து உரிமைகளையும் வழங்குகின்றோம். யாம் அவருக்கு மேலும்

* சென்னை இலக்கிய அறிவியல் இதழ், பகுதி 118.
(Madras Journ.Lit.and Science, III, Part, 118.)

எண்ணெய் விற்போரையும் ஐந்தொழில் புரிவோரையும் அடிமைகளாக வழங்குகின்றோம். நகரத்தின் தலைவனான பறையரால் அளக்கும்பொருள்களின் மீதான தரகு, தராசில் நிறுப்பவை அல்லது பட்டிகையால் நீட்டி அளப்பவை, எண்ணி விற்பவை அல்லது நிறுத்து விற்பவை ஆகியவற்றின் அடைபட்டனவான எல்லாப் பொருள்களின் – உப்பு, சர்க்கரை, கத்தூரி, விளக்கெண்ணெய் – மீதும் கொடுங்கோளூர் ஆற்றுக் கழிமுகம் முதல் கோபுர வாசல்வரை – நான்கு கோயிலுக்கு அடுத்துள்ள ஊரின் எல்லைவரை விற்கப்படும் பொருள்களின் மீதான தரகு உரிமையினை யாம் நகரத்தின் தலைவனான இரவிக் கொற்றனுக்கு நீர் வார்த்துச் செப்புப் பட்டயம் செய்து தருகின்றோம்.

இரவிக் கொற்றன் எனப்படும் சேரமான் லோகப் பெருஞ்செட்டிக்கும் அவன் பிள்ளைகளுக்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் யாம் இவற்றை வழங்குகின்றோம்.

இதற்கான சாட்சிகளாவார் வருமாறு:– யாம் இவற்றைப் பன்னியூர் ஊரார், கோகிராமம் ஊரார் அறியத் தருகின்றோம். வேணாடும் ஓடுநாடும் ஆள்வோர் அறியத் தருகின்றோம். எரநாடும் வள்ளுவநாடும் ஆள்வோர் அறியத் தருகின்றோம். சந்திர சூரியர் உள்ளவும் உரிமையாகத் தருகின்றோம்.

இது சேரமான் லோகப் பெருந் தத்தம் நம் சடையன் கையெழுத்து. மேற்கண்ட சாட்சிகள் அறிய அவன் எழுதின எழுத்து இது.

வெங்கையா இது தொடர்பாக மேலும் கூறுவதாவது :– "முனைவர்.பர்னெல்* வீர ராகவனுடைய பட்டயம் மணிகிராமம் என்ற தன் ஆளுகைக்குரிய பகுதியினையும் கொச்சிப் பட்டயங்கள் அஞ்சவண்ணத்து** ஆளுகைக்குரிய பகுதியினையும் தோற்றுவித்ததாகக் கருதுகிறார். கொச்சிப் பட்டயங்கள் அஞ்சு வண்ணத்தினை ஆக்கித் தரவில்லை. அஞ்சு வண்ணத்திற்கு உரியதான சிறப்புக்களையும் தனி உரிமைகளையும் ரப்பான் என்ற யூதனுக்கு வழங்குகின்றன. அதே போன்று மணிகிராமம் என்ற மற்றொரு

---

* இந்தியத் தொல்லியல், *III, 1874. (Ind.Ant., III, 1874.)*

** பார்க்க : கொச்சியினைச் சேர்ந்த யூதர்கள் தலைப்பிலான கட்டுரை.

தனியாட்சிப் பகுதியோடு தொடர்புடையனவான உரிமைகள் பின்னொரு காலத்தில் ரவிக் கொற்றனுக்கு வழங்கப்பட்டுள்ளன. ரவிக் கொற்றன்கிறித்தவனாக இருந்திருக்கலாம். எனினும் அவனது பெயரும் பட்டமும் அத்தகைய முடிவினை மேற்கொள்ள எத்தகைய குறிப்பினையும் வழங்குவதாயில்லை. பட்டயத்தை அதன் இன்றைய உரிமையாளர்களான கிறித்தவர்கள் வைத்துள்ளார்கள் என்பதனைத் தவிர அதில் கிறித்தவர்கள் தொடர்பான செய்தி எதுவும் இல்லை. இந்தப் பெயரைப் பற்றி முனைவர்.குண்டர்ட் முதலில் கூறியதாவது :-*** இரவிக் கொற்றன் என்பது நஸ்ரணிப் பெயராதல் வேண்டும் எனினும் நான் நேரில் விசாரித்த சிரியன் பாதிரிமார் எவராலும் அதற்கான சரியான விளக்கம் தர இயலவில்லை. இதுபற்றி அதன்பின் அவர் கூறியுள்ளதாவது :- 'இரவிக் கொற்றன். என்ற பெயர் என்னை உண்மையில் திகைப்புக்கும் வியப்புக்கும் உள்ளாக்கியது. இது சிரியன் கிறித்தவன் ஒருவனுக்கான சிறப்புடையப் பெயராகத் தோன்றவில்லை என்றாலும் நான் மணி கிராமத்தைக் கிறித்தவருக்குரிய தனி ஆளுகைப் பகுதி என்று கொள்வதில் நியாயம் இருப்பதாகவே கருதுகின்றேன். அது எந்தப் பிரிவு கிறித்தவர்களுக்கு உரியதாயினும்மாகுக. மெனெஜெயிசில் காலந்தொட்டு இந்தப் பட்டயங்கள் சிரியன் கிறித்தவர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்பட்டு வருவதே இத்தகைய முடிவுக்கு நான் வருவதற்கான அடிப்படைக் காரணமாகும்.' திரு.கோகெல் கெலோ நாயர் இரவிக் கொற்றன் என்பது வெறும் பட்டப்பெயரே. இதில் சிரியருக்கான சாயல் ஏதுமில்லை எனக் கருதுகின்றார்.

செர்மானிக்காவினைச் சேர்ந்தவனான நெஸ்டாரியஸ் சிரியாவில் உள்ள நகரமான அண்டியாக்கில் கல்விகற்று இளமையிலேயே துறவில் பற்று; ஒழுக்கமேம்பாடு, சொல்வன்மை ஆகியவற்றில் சிறப்புற்றவராகத் திகழ்ந்தார். கான்ஸ்டாண்டினோபிளின் திருச்சபை வட்டாரத் தலைவரான சின்னியஸ் இறந்தபோது அண்டியாக்கைச் சேர்ந்த சமய போதகராக நெஸ்டாரியஸைப் பேரரசர் இரண்டாம் தெயொடொசியஸ் மாவட்டச் சமயத் தலைவராக முதலில் அமர்த்திப் பின் கி.பி.428-இல் திருச்சபை வட்டாரத் தலைவர் பதவிக்கு உரியராக நேர்ந்துவிடப்பட்டார். இவருக்கு முந்தைய சமய போதகர்கள் கிறித்துவினிடத்துத் தெய்வ, மனித பண்புகளின் அமைதிக் கோட்பாடுகள் பற்றி எதுவும்

*** முந்து நூல். *(Loc.Cit.)*

கூறினார்களில்லை. அவர்கள் கிறித்துவைப் பற்றிப் "பிறந்தும் பிறவாதவன், மனித உடம்பெடுத்த தெய்வம். இறப்பில் வாழ்பவன், மரியாவிடத்துப் பிறந்தவன், கடவுளின் அருளால் பிறந்தவன்" என்பதுபோல மட்டுமே பேசி வந்தது நெஸ்டாரியஸ் காலத்துக்கு மிக முன்பே திருச்சபை ஞானியர்களின் தலையினை உருட்டுவதான கருத்து வேறுபாடுகளுக்கு இடம் அளிப்பதான கிறித்துவின் மனித, தெய்வக் கூறுகள் பற்றிய முரண்பாடுடைய கோட்பாடுகளுக்கு இடந் தருவதாயிருந்தது. ஏரியஸ், அப்போலினரிஸ் ஆகிய இருவரும் நெஸ்டாரியஸ் காலத்துக்கு முன்பே திருச்சபையில் முரண்கோட்பாட்டாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். ஏரியஸ், கிறித்துவின் மனிதம், தெய்வீகம் ஆகிய இரு பண்புகளையும் உடன்பட்டாலும், "அவரைப் பரமபிதாவிற்குக் கீழ்பட்டவராகக் கருதியதோடு பரமபிதாவின் முழுமையான தெய்வீகத் தன்மையினை அவர் பெற்றிருக்கவில்லை" எனக் கூறினார். அப்பொலினரிஸ் மேற்கோள்காட்டி ஈடுசெய்யும் கிறித்துவின் கோட்பாட்டினைச் சிறந்ததெனக் கருதாதவராக, "இயேசுவிடம் சொல்லே ஆன்மாவின் இடத்தை நிறைத்தாகக்" காண்கின்றோம் என்றார். கி.பி.325–லேயே நைசீய நகரத்தில் நடைபெற்ற முதல் கிறித்தவ அனைத்துலகப் பொதுத் திருச்சபையில் ஏரியஸின் கோட்பாடுகளுக்கு எதிரான கருத்துத் தெரிவிக்கப்பட்டதோடு, "தேவனின் மகன் தேவனுடையது போன்ற பண்புகளைப் பெற்றிருப்பதோடு கூட அவை தேவனுடைய பண்புகளாகவும் இருக்கப்பெற்றான். அவனிடத்து அமைந்திருந்ததான மனிதப்பண்புகளை ஒத்த கூறுகளை அப்போலியரியன்கள் தவறாக விளக்கம் செய்துள்ளனர்" எனக் கூறியதோடு கி.பி. 381–ல் கான்ஸ்டாண்டினோபிலில் நடைபெற்ற சபைச் கூட்டத்தில் அவருடைய மனிதப்பண்புகளும் அவருக்கு உரியன என மீண்டும் உறுதிசெய்யப்பட்டது. ஏரியஸ், அப்போலினரிஸ் ஆகியோரின் கோட்பாட்டாளர்கள் பெருங்கண்டனத்திற்கு உள்ளானபோதிலும் அவர்கள் பெரும் எண்ணிக்கையினராகத் தொடர்ந்து இரந்ததால் நெஸ்டாரியஸ் கான்ஸ்டாண்டினோபிலில் திருச்சபை வட்டாரத் தலைவர் என்ற முறையில் ஆற்றிய முதல் உரையில், இந்த முரண்பாட்டுக் கோட்பாட்டாளர்களை ஒடுக்கத் தான் முழுமூச்சுடன் பாடுபடப் போவதாகவும் இந்தக் கடினமான பணிக்குப் பேரரசர் தன் ஆதரவினைத் தர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். முரண்பாட்டுக்

கோட்பாட்டாளர்களை ஒடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அதே சமயத்தில் இவர் சமயத்தின் உண்மையான மரபு நெறிப்பட்வராகக் கடவுளின் தாய் என்ற பொருள்படுவதான தியோடொகஸ் என்ற சொல்லினைக் கன்னிமரியாளைக் குறிக்கப் பயன்படுத்துதை எதிர்த்த காரணத்தால் கண்டனத்துக்கும் உள்ளானார். ரோமிலும் கான்ஸ்டாண்டினோபிலிலும் சமயகுருமாரிடையே கன்னி மரியாள் என்ற வழக்குப் பலராலும் அப்பொழுது மேற்கொள்ளப்பட்டதாகப் பரவலான வழக்குடையதாக இருந்தது. சிறித்துவின் அ;னனையான வாழ்த்துக்குரியவரான அன்னை மரியாளைத் தான் போற்றுவதாகவும் ஆனால் அவளைக் குறித்துத் "திருத்தூதர்களாலும் திருச்சபையாராலும் கூறப்படாததான வழக்கான தேவனின் அன்னை" என்ற வழக்கினையே தான் எதிர்ப்பதாகவும் தேவன் பிறந்து உழல்பவன் என்ற கோட்பாடு அபத்தமானது எனவும் கூறிவந்தார். மேலும் ஏரியஸ், அப்போலியன் ஆகியோரின் கோட்பாட்ாளரோடு மிகவும் மாறுபட்ட போக்கினைத் தவிர்ப்பதற்காகக் கிறித்துவினிடமுள்ள இரு வேறுபட்ட இயல்புகளைப் பற்றிப் பேசும்போது அந்த இயல்புகளும் ஒன்றுக்கொன்று எவ்வகையிலும் தம்முள் சார்புடையவை என்பதனை நெஸ்டாரிய மறுக்கலானார். இதுபற்றிய இவருடைய இந்தக் கோட்பாட்டினை மற்றவர்கள் கிறித்துவினை இவர் இரு கூறாக்கி இரண்டு ஆளாகப் பிரிக்கின்றார் எனக் குறை கூறினார். "நான் அவருடைய இயல்பினை இப்படிப் பிரித்தாலும் அவற்றை ஒன்று போலவே நான் கருதி வழிபட்டுப் போற்றுகின்றேன்." என இவர் அவர்களுக்கு விளக்கம் தந்தார். இந்த விளக்கம் மரபு வழிப்பட்டவர்களைத் திருப்திப்படுத்தவில்லை. அவர்கள், இவர், "தெய்வீகத் தன்மையில் குறைந்தவரான ஒரு கிறித்துவினைப் பற்றியே போதனை புரிகின்றார்" எனக் குறை கூறினர். இவ்வாறாக நெஸ்டோரியஸ் கான்ஸ்டாண்டினோபிலைச் சேர்ந்த சமயக் குருமாரிடையேயும் பொதுமக்களிடையேயும் காலப்போக்கில் செல்வாக்குக் குறைந்தவராக முரண்பாட்டுக் கோட்பாட்டாளர் எனப் பெயர் பெற்றதோடு அலெக்சாண்டிரியாவில் உள்ள போட்டி மாவட்டத் திருச்சபையின் மேற்றிராணியாரான சிரிலிடம் தங்கள் சார்பில் தலையிடுமாறு வேண்டுகோளும் விடுத்தனர். போப்பாண்டவரின் அதிகாரத்தோடு கூடிய ஆதரவுடன் சிரில் அங்கு நேரில் வந்து விரைந்தும் தனிப்பட்ட முறையிலும் எபெசஸ் சபையினைக் கூட்டி நெஸ்டாரியஸினை முரண்பாட்டுக் கோட்பாட்டாளர் எனக் கூறிச் சமய

விளக்கம் செய்தார். ஜஸ்டியனின் காலத்தில் ரோமப் பேரரசிலிருந்து நெஸ்டாரானியக் கோட்பாட்டை வேரோடு கல்லி வீழ்த்திய பிறகு அக்கோட்பாடு கீழை நாடுகளில், அவற்றுள்ளும் பாரசீகத்திலும் அதனை அடுத்துள்ள நாடுகளிலும், ஆதரவு பெற்று வளர்வதாயிற்று. இந்த நாடுகள் சமயச் சபைகள் தோன்றிய காலந்தொட்டு சிரியருக்கான சடங்கு, கட்டுப்பாடு, கோட்பாடு ஆகியனவற்றைப் பின்பற்றுவனவாக இருந்து வருபவை. இவர்கள் வலிமை வாய்ந்த அணியினராய் இருந்தனர். இவர்களுக்கான திருச்சபை வட்டாரத் தலைவர்களுள் செலூக்சிய அல்லது பாபிலோனைச் சேர்ந்த திருச்சபை வட்டாரத் தலைவரும் அவருடைய துணையாதரவாளரான பெர்சியாவின் தலைநகர சமயக் குருவும் தங்கள் கோட்பாடுகளைப் பின்பற்றும் பெரும் எண்ணிக்கையிலான மக்களொடு நெஸ்டாரியஸைப் போற்றியதோடு அவரைச் சமயத்துக்காகத் தியாகம் செய்தவர் என்று கூறிக் கி.பி.448–இல் செலூக்சியாவில் நடைபெற்றச் சமயக் குருமார் குழுக் கூட்டத்தில் அவருடைய போதனைகளை ஏற்றுக் கொண்டனர். இவருடைய கோட்பாடுகள் கிழக்கே சீனாவரை பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கி.பி.551–இல் சீனாவில் நெடுங்காலம் தங்கியிருந்த நெஸ்டாரியஸின் கோட்பாட்டைப் பின்பற்றும் பாதிரிகளே அங்கிருந்து கான்ஸ்டாண்டினோபில் நகரத்திற்குப் பட்டுப்புழுவின் முட்டையினைக் கொண்டு வந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இந்தியாவிற்குப் பயணியாக வந்த இண்டிகொபெலியுஸ்டெஸ் என்ற குடும்பப் பெயர் தாங்கிய காஸ்மாஸ் கி.பி.522–இல் மாலிக்குச் சென்றுள்ளார். "மிளகு விளையும் நாட்டைப் பற்றி" அவர் குறிப்பிட்டிருப்பதோடு மலபாரில் கிறித்தவச் சபை அமைப்புடைய தேவாலயங்கள் இருந்தது பற்றியும் கூறியுள்ளார். அவர் அங்கு சென்றபோது அங்கிருந்த கிறித்தவச் சபை அமைப்புகள் நெஸ்டாரியன் கோட்பாட்டினைப் பின்பற்றுவதாகவும் உறுதிபடக் கூறியுள்ளார். அச் சபை அமைப்புகள் அந்நாளில் நெஸ்டாரியன் கோட்பாட்டினை மேற்கொண்டவை எனத் துணிந்து கூறத்தக்கனவாகப் பாரசீக முதன்மைச் சபையினைச் சார்ந்தனவாக இருந்தன.

அடுத்துக் குறிப்பிடத்தக்க சமய முரண்பாட்டாளர் யுஸ்டைசெஸ் ஆவார். இவர் நெஸ்டாரியஸ் அணிக்கு எதிரணியினராக கி.பி.431–ல் யெபெசுஸில் நடைபெற்ற சமயச் சபையில் சிரிலுக்குத் துணை நின்றவர்.

யுஸ்டைசெஸ் நெஸ்டாரினை எதிர்ப்பதில் சிரிலினையும் மற்றவர்களையும் விட ஒருபடி மேற்சென்றவராக மனித, தெய்வீக அம்சங்களின் இணைவுக்குப் பின் கிறித்துவின் மனித அம்சம் தெய்வீக அம்சத்தில் ஒன்றாகக் கலந்துவிட அவர் தெய்வீக அம்சம் ஒன்றை மட்டுமே பெற்றவராகத் திகழ்ந்தார் எனக் கூறினார். பல ஆண்டுகள் கருத்து வேறுபாடுகள் தொடர்ந்து நீடித்தபின், கி.பி.451–இல் கால்செடொனில் நடைபெற்ற சமயப் பேரவையில், இந்தக் கருத்து வேறுபாட்டுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. யுஸ்டைசெஸ்ஸின் கோட்பாட்டுக்கு மாறுபட்ட வகையில், மனிதம், தெய்வீகம் ஆகிய இரு பண்புகளும் கிறித்துவிடம் இணைந்து உள்ளன "எனினும் அவை ஒன்றை ஒன்று மாற்றவோ ஒன்றில் ஒன்று கலக்கவோ ஒன்றை ஒன்று குழப்பவோ செய்வதில்லை" என முடிவு செய்யப்பட்டது. இதனை வேறுவகையாகச் சொன்னால் கிறித்துவிடம் மனிதம், தெய்வீகம் ஆகிய இரு பண்புகளும் உள்ளன. அவை இரண்டும் தம்மில் முழுமையுற்றனவாக உள்ளன என்றாலும் அவற்றைக் கொண்டு விளங்குபவர் ஒருவரே தான். யுனசஸ்டெஸ் சமய விலக்கம் செய்யப்பட்டு வெளி நாட்டில் தங்கி உயிர் துறந்தார். கால்செடொனில் வெளியிடப்பட்ட திருச்சபை முடிவினை ஏற்க மறுத்தவர்கள் சமய முரண்பாட்டாளர்கள் என ஒதுக்கப்பட்டவர்களாகப் பிரிந்து சென்று சிரியா, மெசபடொமியா, ஆசியா மைனர், சைப்ரஸ், பாலஸ்தீனம், ஆர்மீனியா, எகிப்து, அபிசீனியா ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்தனர். ஆர்மீனியன்களின் யுஸ்டைசியன் கோட்பாடான கிறித்துவிடம் மனிதத்தைத் தன் உள்ளார்ந்ததாக அடக்கிக் கொண்ட தெய்வீகம் ஒன்றே துலங்குகின்றது என்ற கோட்பாட்டினை மேற்கொண்டனர். எகிப்தியர்களும் அபிசீனியர்களும் ஒரு உடலில் தெய்வீகம், மனிதம் ஆகிய இரண்டும் கலந்துள்ளன என்ற கோட்பாட்டை மேற்கொண்டனர். இந்திய நாட்டுச் சிரியன் கிறித்தவர்கள் தங்கள் மூதாதையர் எனக் கூறிக் கொள்கின்ற மேற்குச் சிரியாவைச் சேர்ந்த சி ா நாட்டுக்கே உரிய தொல்குடியினர் நெஸ்டாரியஸின் கோட்பாட்டைக் கைவிட்டு யுஸ்டைசியன் கோட்பாட்டை மேற்கொண்டனர். அண்டியாக்கின் திருச்சபை வட்டாரத் தலைவரான சிவிரசின் செல்வாக்கினால் இவர்கள் படிப்படியாக கிறித்துவின் திருமேனியில் ஒரியல்புதான் உண்டென்ற கோட்பாட்டின் வழிப்பட் வராயினர். ஒரியல்புவாதிகள் சிறிதுகாலம் பேரரசர்களால் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தனர் எனினும், ஆறாம நூற்றாண்டில்

ஜாகோபைட்டுக் கோட்பாளர்கள் மீண்டும் ஜாகோபஸ் ஜான்ஜாலஸ் எனப்படும் ஜேம்ஸ் பார்டெயஸின் தலைமையில் தலைதூக்கினர். பல்வேறு பிரிவினராயிருந்த தலைவர்களைத் திருச்சபையின் கீழ் கொண்டு வந்தவர் இவரே. இந்தத் திருச்சபை அமைப்பின் தலைவர் அண்டியாக் வட்டாரத் திருச்சபை முதல்வர் என்ற பட்டத்திற்குரியவராகின்றார். இந்தப் பட்டத்தை மூன்று திருச்சபைகளைச் சேர்ந்த தலைவர்கள் தங்களுக்கு உரியதெனக் கூறுகின்றனர். நுட்பமாகத் துருவி ஆராயும் சமயவாதிகளுக்கு இந்தக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வினை விட்டுவிட்டு நாம் மலபாரில் ஜாகோபைட்டுகள் மேற்குறித்த முரண்பாடுகள் தொடர்பாக எந்த நிலையினை மேற்கொண்டனர் எனப் பார்ப்போம். கிறித்துவின் திருமேனியின் இரண்டு இயல்புகளும் ஒன்றாக இணைந்து கலந்துவிட்டன என்று கால்செடொன் திருச்சபை மேற்கொண்ட முடிவினை இவர்கள் உடன்பட்டாலும் இவர்கள் அது தொடர்பாக இரண்டு என்ற சொல்லினைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இவர்கள் யுஸ்டைசியன் கோட்பாட்டினைக் கண்டித்து வந்தாலும் ஓரளவு ஆர்மினியன்கள் மேற்கொண்ட நெறியின் வழிபட்டவர்களாகவே உள்ளனர். ஜாகோபைட் திருச்சபையினைச் சேர்ந்த ஒருவர் சிரியாவில் திருச்சபையின் உயர்பதவிகளுக்குப் போட்டியிடும்போது யுஸ்டைசெஸினையும் அவருடைய குருமார்களையும் கண்டித்து உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும். கீழை நாட்டுத் திருச்சபைகளோடு தொடக்க காலத்திலும் இடைக்காலத்திலும் இன்றும் மலபார் திருச்சபை எத்தகைய உறவினைக் கொண்டிருந்தது என்பதனைத் தெளிவுபடுத்துவதற்காகவே தலைப்பை விட்டு புறத்தே சிறிது செல்ல வேண்டியதாயிற்று. நம்முடைய வரலாற்றின் போக்கினை மீண்டும் தொடருவோம். நான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் போத்துக்கீசியரின் வருகை வரையான காலப்பகுதியில் மலபாரைச்சேர்ந்த கிறித்தவர்கள் தங்களுக்கு ஆன்மீகத் துறையில் மயக்கம் நேரும் போதெல்லாம் கீழை நாட்டுத் திருச்சபைகளைச் சேர்ந்த நெஸ்டாரியன் அல்லது ஜாகோபைட் மேற்றிராணியார்களில் ஒருவரிடம் வழிகாட்டித் தெளிவுறுத்துமாறு வேண்டி வந்தனர். "5ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டு வரை கிட்டத்தட்ட ஓராயிரம் ஆண்டுகள் ஜாகோபைட் பிரிவினர் மத்திய ஆசியாவில் நெஸ்டாரியஸ்களின் இடையிலேயே வாழ்ந்து வந்தனர்." என டபிள்யூ.டபிள்யூ. ஹண்டர்

கூறுகின்றார். இந்தச் சூழ்நிலையில் மலபாரிலிருந்து கிறித்தவர்களின் அபயக் குரல் கேட்ட போதெல்லாம் நெஸ்டாரியஸ் மற்றும் ஜாகோபைட் மேற்றிராணியார்கள் அவ்வப்போது மலபாருக்கு வருகை தந்துள்ளனர். மலபார் கிறித்தவர்கள் இந்த இரண்டு கோட்பாட்டாளர்களின் நெறிகளிடையே எத்தகைய வேறுபாடும் பாராட்டாதவர்களாக இருசாராரின் போதனைகளையும் பின்பற்றி வந்தனர். மலபாரைச் சேர்ந்த பாமரரான தொடக்க காலக் கிறித்தவ நெறியினை மேற்கொண்ட மக்கள் தாங்கள் சார்ந்துள்ள கிறித்தவ சமயத்தைச் சேர்ந்த ஐரோப்பியர்களும் மத்திய ஆசியப் பகுதியினரும் நுட்பமான கோட்பாடுகளின் அடிப்படையில் பல பிரிவினராகத் தங்களிடையே வேறுபாடு கொண்டவர்களாகப் பூசல் நிகழ்த்தி வந்ததைப் பற்றிக் கவலைப்பட்டார்களில்லை. எனவே இவர்களால் நெஸ்டாரியனிஸத்திற்கும் வேறு நெறிப்பட்ட கிறித்தவப் பிரிவுகளுக்குமிடையே வேறுபாடு ஏதும் காணமுடியவில்லை. ஒரு கால கட்டத்தில் பாரசீகமும் தொலை தூரத்தவர்களான மலபார் கிறித்தவர்களைப் புறக்கணிக்கலாயிற்று. மலபாரைச் சேர்ந்தவர்களான கிறித்தவர்கள் இதனால் பாபிலோன் வட்டாரத் தலைமைக் குருவிடமே தங்கள் முறையீட்டினைச் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இக் காலகட்டத்தில் இரு பீடத்து உயர் தலைமைக் குருமார்களும் நெஸ்டாரியன் நெறியினையே பின்பற்றி வந்ததால் இவர்களிடையே நம்பிக்கைகள், கோட்பாடுகள், சடங்குகள் ஆகியவற்றில் மிகுந்த வேறுபாடிருக்கவில்லை. முனைவர்.டே * ஜாகோபைட் மேற்றிராணியார் கி.பி.696–இல் இந்தியாவிற்கு வருகை புரிந்தது பற்றிக் குறித்துள்ளார். கி.பி.823 வாக்கில் மார் சபொர், மார் அபொர்ட் என்ற இரண்டு நெஸ்டாரியன் பிரிவுத் தலைமைக் குருவின் ஆணைக்கு இணங்க மலபாருக்கு வந்துள்ளதாகத் தெரிகின்றது. இவர்கள் மலபாரில் ஆட்சிபுரிந்த அரசர்களை நேரில் கண்டும், நாடெங்கும் பயணம் மேற்கொண்டும் தேவாலயங்களைக் கட்டியும் சிரியர்களின் சமயத் துறை சார்ந்த தேவைகளை நிறைவுறுத்தினர்.

இந்தியாவில் போர்ச்சுக்கீசியர் வந்து சேர்வதற்கு முந்தைய ஆறு நூற்றாண்டுகளில் மலபாரில் கிறித்தவத் திருச்சபைகள் எந்த

* பெருமாள்களின் நாடு. கொச்சி, அன்றும் இன்றும், 1863.
(Land of Perumals; Cochin past and present, 1863.)

நிலைமையிலிருந்தன என்பது பற்றியான வரலாற்றினை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. கி.பி.883–இல் இந்தியாவில் உள்ள புனிதர் தாமஸின் தேவாலயத்திற்குச் சொர்பொர்னெயின் மேற்றிராணியார் பேரரசன் ஆல்பிரட்டின் காலத்தில் வருகை புரிந்துள்ளார் எனத் தெரிகின்றது. வெனிஸ் நகரப் பயணியான மார்க்கோபோலோ மலபாரைச் சேர்ந்த புனிதர் தாமஸ் கிறித்தவர்களிடையே நெஸ்டாரியன் நெறியினைப் பின்பற்றுவோர் இருந்ததாகக் குறித்துள்ளார்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையான கால கட்டத்தில் கிறித்தவ சமூகத்தார் மிகுந்த வளமும் சிறந்த புகழும் பெற்று வாழ்ந்தார்கள் எனத் தெரிகின்றது. வழக்கு வரலாற்றின்படி உதயம் பேரூருக்கு (தியெம்பர்) அருகே உள்ள வில்லியர் வட்டத்தை தலைநகராகக் கொண்டு தங்களுக்கென ஒரு அரசரையும் தனியே ஆட்சியில் அமர்த்திக் கொள்ள இவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மற்றொரு வழக்கு வரலாறு வில்லியார் வட்டம் அரசர் கிறித்தவத்திற்கு மதம் மாறியவர் எனக் கூறுகின்றது. இந்த அரச மரபு பதினான்காம் நூற்றாண்டில் ஒரு முடிவுக்கு வந்தது. இந்த மரபினைச் சேர்ந்தஇறுதிக் கிறித்தவ அரசர் போர்த்துக்கீசியர் வருகையின்போது வாஸ்கோடகாமாவிடம் கி.பி.1502–இல் தன் முடியினையும் செங்கோலையும் ஒப்படைத்து விட்டதாகக் கூறுவர். தொடக்க கால அரசர்களின் ஆட்சியின் கீழ் கிறித்தவர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தனர் என்பதனை முன்பே கூறியுள்ளோம். இவருக்கு வழங்கப்பட்ட தனிச் சலுகைகளுக்கு ஈடாக இவர்கள் மலபாரை ஆண்ட அரசர்களுக்குப் போர்ப்படையில் பணியாற்றி உதவி வந்ததாகத் தெரிகின்றது. இந்தக் கிறித்தவச் சிற்றரசர்களைப் பிற உரிமைகளோடு தங்களைச் சார்ந்து வாழும் கிறித்தவ சமூகத்தவர்களின் குற்றங்களைப் பற்றிக் கேட்டறிந்து தண்டிக்கும் உரிமையும் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. இந்த வழக்கு வரலாற்றை நாம் பொருத்தமுற அன்றைய சூழலின் பின்னணியில் விளக்கம் செய்யலாம். உதயம் பேரூரைச் சார்ந்த, கிறித்தவனாக ஒரு வட்டாரத் தலைவன், தன் பகுதியில் வாழ்கின்ற சமூகத்தவர்கள் மீது ஓரளவு அதிகாரம் செலுத்தும் உரிமை பெற்றவனாயிருத்தல் கூடும். பிற்காலத்தவர், இதனை அவன் அரசாளும் உரிமையே பெற்றிந்ததாக

மிகைப்படுத்திக் கூறத் தொடங்கியிருப்பர். யூதர்களுடைய செப்புப் பட்டயங்களிலிருந்தும்அவர்கள் இத்தகைய சிலஉரிமைகளைப் பெற்றிருந்தனர் என்பது நமக்குத் தெரிய வருகின்றது.

கொல்லத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டு ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைகள் பதினான்காம் நூற்றாண்டில் இயங்கியதாகக் கூறப்பட்டிருப்பினும் அவற்றின் முயற்சி செல்வாக்குப் பெறாததால் அவை நீண்ட காலம் செயல்படவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினாறாம் நூற்றாண்டு முழுக்கவும் மெசபடோமியாவைச் சேர்ந்த நெஸ்டாரியஸ் பிரிவு வட்டாரத் திருச்சபைத் தலைவர் மலபார் கிறித்தவர்கள் மீது செல்வாக்கு உடையவராக இருந்துள்ளார் எனத் தெரிகின்றது. நெஸ்டாரியன் பிரிவைச் சேர்ந்த மேற்றிராணியர்கள் தேவாலயங்களில் தலைமை தாங்க வந்துள்ளது கொண்டு இதனைப் பற்றித் துணிய ஏதுவாகின்றது.

போர்த்துக்கீசியர் வரும் வரை மலபார் திருச்சபை அதனுடைய சடங்குகள், சமய வழிபாட்டுக் கூட்டங்கள் தொடர்பான வழக்கங்கள் ஆகியவற்றில் கீழ்த்திசைத் திருச்சபைகளுக்குரியதான சிரிய கால்செடொன் நெறியினையே எத்தகைய குறுக்கீடும் இன்றி நடத்தி வந்தபடி இருந்தது. கடற்பயணங்களை மேற்கொண்டு வெற்றி கொள்ளும் போர்த்துக்கீசியர்களுக்கு அவர்கள் வெற்றிகொண்ட நாடுகளில் தொழில் வாணிபம் ஆகியவற்றில் மேலாண்மை பெறுவதைப் போலவே வென்ற நாட்டவர்களைத் தங்கள் சமயநெறிக்கு மாற்றுவதனையும் ஆர்வத்தோடு மேற்கொண்டவர்களாயிருந்தனர். தங்கள் சமயத் துறை சார்ந்த ஆன்மீக வாழ்வில் பின்தங்கியவர்களாயிருந்த சிரியக் கிறித்தவர்கள் முதலில் த்ங்கள் சமயத்தோடு உறவுடையதான ரோமானியக் கத்தோலிக்க நெறியாளர்களின் வருகையால் மனம் மகிழ்ந்தார்கள். எனினும் ஐந்தாம் நூற்றாண்டினதான சமய நெறியினைப் பின்பற்றியவர்களாக இவர்கள் இருப்பதனைக் கண்டு, செல்லும் இடம் எங்கும் தங்கள் சமயநெறியினைச் சிறந்ததென வாதிட்டு நிறுவ முற்படும் ரோமானியக் கத்தோலிக்க நெறி சார்ந்த போர்த்துக்கீசியர் ஏமாற்றமே உற்றனர். இதன் காரணமாகப் போர்த்துக்கீசியர் கீழ்த்திசைத் திருச்சபை வட்டாரத் தலைவர்களோடு மேற்றிராணியார்கள் பலரையும் சிறையிலிட்ட காரணத்தால் அவர்கள்

மடங்களில் அடைபட்டுச் சிறைப்பட்டவர்களாகவே உயிர்துறக்க நேரிட்டது." பிரான்சிஸின் திருமடத்தைச் சேர்ந்தவர்களும் டாமினிக் குழுவினைச் சேர்ந்த பாதிரிகளும் இயேசுநாதர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் மலபார் கிறித்தவர்களை ரோமன் கத்தோலிக்க நெறிக்கு மாற்றப் பெரு முயற்சி மேற்கொண்டனர். 16–ஆம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியின் தொடக்க காலத்தில் இயேசு சபையினைச் சேர்ந்தவர்கள் கொடுங்கோளூருக்கு அருகே உள்ள வைப்பக்கோட்டையில் கிறித்தவ இளைஞர்களுக்காக ஒரு கல்லூரியினைத் தொடங்கினர். 1584–இல் சிரியர்களுக்குச் சமயத் துறை சார்ந்த கல்வி பயிற்றுவிக்க ஒரு சமயப்பள்ளி தொடங்கப்பட்டது. அங்கு அவர்களுக்கு லத்தீன், போர்த்துக்கீசு, சிரியாக் மொழிகளும் கற்றுத் தரப்பட்டன. இந்தச் சமயப் பள்ளியில் பயின்ற மாணவர்களுக்குத் திருச்சபையின் தலைவர்களாயிருந்தவர்கள் உரிய பட்டம் தர மறுத்து விட்டனர். இயேசு சபையாருக்கும் உள்ளூர் குருமார்களுக்கும் இடையேயான இதுவும் இதுபோன்ற பிற முரண்பாடுகளும் இறுதியில் அனைவரும் அறியும்படியாக வெளிப்படலாயிற்று. அங்கமாலியில் கூடிய சமயக் குருமார்களின் குழுக் கூட்டத்தில் மேற்றிராணியார் ஜார்ஜ் இதனைப் பற்றி எடுத்துரைத்தார். கோவாவின் அதிமேற்றிராணியாரான அலெக்ஸ் தெ மெனெசஸ் இதனைக் கேட்டபின் தாமே நேரில் சிரியன் தேவாலயங்களைப் பார்வையிடலானார். தீரமும் துணிவும் மிக்க மெனெசஸ் எல்லா இடர்களையும் கடந்து வெற்றி பெற்றார். இதில் வியப்பதற்கு எதுவுமில்லை. போப்பாண்டவரின் சமய அதிகார ஆணை பெற்றவரான அவர் கொடுமையான தீர்ப்புகளைக் கூட வழங்கும் அதிகாரம் பெற்றிருந்தார். அவருடைய இந்த முயற்சிக்குப் போர்த்துக்கீசியர்களின் அரசரும் கடற்கரைப் பகுதிகளுக்கான ஆளுநர்களும் முழு ஆதரவு நல்கி ஊக்குவித்தனர். இப்பகுதிகளில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த மன்னர்கள் தங்கள் குடிமக்கள் மீது கட்டாயத்தின் பேரில் சமயநெறிமுறைகள் திணிக்கப்படுவதை விரும்பவில்லை எனினும் கூட விரைவில் அதிமேற்றிராணியார் அவர்களைத் தன்னுடைய சூழ்ச்சித் திட்டங்களால் தன் வழிக்கு வரும்படி செய்தார். இவ்வாறு அவர்களுடைய ஒத்துழைப்பினைப் பெற்றுச் சமயச் சபைகளினை நேரில் சென்று கண்காணித்தவராக கி.பி.1599–இல் கொச்சி நகருக்குத் தென்கிழக்கில் பத்தாவது மைலில் உள்ள தியம்பெரி (உதயம்பேரூர்)ல் நடைபெற்ற சமயக் குருமார் குழுக்கூட்டத்தில் பிறப்பித்த ஆணைவழி சிரியர் பிரிவினரைத் தன் வழிக்கு வருமாறு

செய்தார். இத் திருச்சபைக் குழுக்கூட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை மேற்றிராணியார் ஜார்ஜ் மற்றும் கத்தனார் என அழைக்கப்படும் உள்ளூர்ப் பாதிரியார்கள் பலரும் முழு உடன்பாடற்றவர்களாகவே ஏற்றுக்கொண்டனர். இதனால் மலபார் சமயத் திருச்சபை ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் ஒரு கிளை என்ற நிலையினை அடைந்தது. சமய இலக்கியங்கள் மெனெசிஸின் தீவிர நடவடிக்கை காரணமாகப் பேரழிவுக்கு உள்ளாயின மிக்க ஆர்வத்தோடு கண்மூடித்தனமாகச் செயல்பட்டவரான இந்த கண்காணிப்பாளர் இரண்டாம் ஓமரைப் போலச் சிரிய மொழி அல்லது கால்செடெயன் மொழியில் எழுதப்பட்டிருந்த அனைத்து நூல்களையும் தியம்பெரில் நடைபெற்ற சமயக் குருமார்கள் குழுக் கூட்டத்தின்போதும் அடுத்துத் தான் கண்காணிப்பை மேற்கொண்டு சென்ற இடங்களிலும் அழித்துவிட்டார். சிரியருக்கான ஒரு தேவாலயத்தில் சென்று புகுந்தவுடன் அங்கு அவர்களுக்கு உரியதாக உள்ள எல்லா நூல்களையும் ஆவணங்களையும் தன் முன் கொண்டு வரும்படி இவர் ஆணையிடுவார். அவற்றுள் முக்கியமில்லாத சிலவற்றைத் தவிர மற்றவை அனைத்தும் நெருப்புக்கு இரையாக்கப்பட்டு விட்டன. இதனால் இன்று புனிதர் தாமஸ் பிரிவுத் தேவாலயங்கள் தங்களுக்கான நூல்கள், சுவடிகள் ஆகிய அனைத்தும் அற்றவனவாகிவிட்டன."*

தியெம்பெரில் சமயக் குருமார் குழுக் கூட்டம் நடந்து முடிந்தவுடன் பிறப்பால் ஸ்பானியரான பிரான்சிஸ்கஸ் ரோஜ் என்னும் இயசே சபையினைச்சேர்ந்த பாதிரியார் போப்பாண்டவர் எட்டாம் கிளெமெண்டினால் அங்கமாலியின் மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டார். இவர் ஏற்றுக் கொண்ட பதவி பின்னர் கொடுங்கோளூர் அதிமேற்றிராணியார் பதவி என மாற்றப்பட்டது. இக் கால கட்டத்தில் இயேசு சபையாரின் தலைமையின் கெடுபிடிகளைத் தாங்க இயலாதவர்களான சிரியர்கள் கீழ்த்திசை சார்ந்த ஒரு மேற்றிராணியாரினைத் தங்களுக்கென அமர்த்தும்படி அண்டியாக், அலெக்சாண்டிரியா, பாபிலோனியா ஆகிய சமயத் தலைமைக் குருமார்களுக்கு, அவர்களும் தங்கள் சமயப் பிரிவினை மேற்கொண்டவர்களாகவே இருப்பர் எனக் கருதியவர்களாக விண்ணப்பித்துக் கொண்டனர். மலபார் கிறித்தவர்களின், ஒரு

---

* எப்.வரெதெ–ஆசிய ஆய்வடங்கல், ஏஐஐ, 181. புனிதர் தாமஸ் பிரிவுக் கிறித்தவர் பற்றிய விவரங்கள். *(F.Warede-Asiatic Researches, VII. 181, Account of the St. Thome*

மேற்றிராணியார் வேண்டும் என்ற வேண்டுகோளினை ஏற்றுக் கொண்ட அண்டியாக்கின் சமயத் தலைமைத் திருச்சபையினர் மார் இக்னேசியஸ் எனப்படும் அகட்டலவினை உடனடியாக மேற்றிராணியாராக அமர்த்தி அனுப்பி வைத்தனர். இவர் உண்மையில் அண்டியாக் சமயச் சபையினைச் சேர்ந்தவரா என்பதில் சில ஆய்வாளர்கள் இன்னும் ஐயுறவு கொண்டவர்களாக உள்ளனர். சிலர் இவரை நெஸ்டாரியஸ் பிரிவைச் சேர்ந்த எகிப்திய வட்டாரத் திருச்சபை முதல்வரின் இனத்தவர் எனக் கூறுவர். அகட்டலா எந்தப் பிரிவினைச் சேர்ந்தவராயினும் சிரியர் அவர் அண்டியாக்கைச் சேர்ந்த ஜாகோபைட்டுப் பிரிவு வட்டாரத் திருச்சபையிலிருந்து அனுப்பப்பட்டவர் என்றே நம்பி வந்தனர். போர்த்துக்கீசியர் இவரை வழியில் மடக்கிச் சிறையிலிட்டனர். கொச்சி துறைமுகத்தில் இவரை மூழ்கடித்துக் கொல்லும்படியாகவோ நெருப்பிலிட்டு உயிரைப் போக்கும்படியாகவோ 1653–இல் கோவாவிலிருந்து தீர்ப்பு வழங்கப்பட்டதாக வழக்கு வரலாறு கூறுகின்றது. இந்தக் கொடுஞ்செயல் சிரியர்களை மிகவும் ஆத்திரமூட்டியது. கொச்சியில் உள்ள மட்டாஞ்சேரிக் கூனென் நாற்சந்தியில் இவர்கள் பல்லாயிரவராகக் கூடி அனைவரும் ஒருமித்தக் குரலில் ரோமன் கத்தோலிக்கச் சபையிடத்து தாங்கள் கொண்டிருந்த உறவைத் துண்டித்துக் கொண்டதாகக் குரலெழுப்பினர். இது மலபார் திருச்சபை வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். கூனென் நாற்சந்தியில் ரோமன் கத்தோலிக்கச் சபையிலிருந்து வெளியேறிய இவர்கள் ரோமன் கத்தோலிக்கச் சிரியர் ஜாகோபைட்டுச் சிரியர் என இரு பிரிவினராகப் பிரிந்துவிட்டனர். பின்னவர் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையோடான தங்கள் உறவை அறுத்துக்கொண்டு அண்டியாக் திருச்சபையின் வட்டாரத் தலைவரைத் தங்கள் ஆன்மீக நெறிக்கான தலைவாராகக் கொள்ளலாயினர். பின்வரும் பகுதி அப்போது இவ்விரு பிரிவுகளும் இரண்டாகப் பிரிந்த விதத்தினையும் இவர்களுக்கான பெயர்கள் தோன்றியது எப்படி என்பதனையும் விளக்குவதாகும். "பழைய கூட்டத்தாரின் திருச்சபையின் தோற்றத்திற்குக் காரணகர்த்தரானவர் அதிமேற்றி ராணியாரான மெனெசெஸ் ஆவார். 1599–இல் தியம்பூரில் நடைபெற்ற சமயக் குருமாரின் குழுக் கூட்டமும் அவரோடு இதற்கு உதவியது. கிளர்ச்சிக்குப் பின் ரோமன் கத்தோலிக்கச் சபையாரொடு உடன்பாடு செய்து கொண்ட இவர்கள் இரந்துண்டு வாழும் திருச்சபைக் கூட்டத்தாரின் மேற்றிராணியாரான புனிதமேரி ஜோப்பினை 1656–

இல்தங்கள் தலைமைக்குரியவராக ஏற்றுக் கொண்டனர். அதன்பின் இவர்கள் தேவாலய வழிபாடு, சிரியமொழியில் சிரியச் சடங்குகளை ஓரளவு கொண்டதாக நடந்து வந்தது. எனினும் போப்பாண்டவர் நியமிக்கும் தங்கள் திருச்சபைக்குரிய திருத்தூதரான முகவர்களின் தலைமையினை ஏற்றுக் கொண்டனர். இத் திருச்சபையின் உறுப்பினர்கள் சிரியன் சடங்கு முறையில் வழிபாடு நடத்தும் கத்தோலிக்கர் எனத் தங்களைக் கூறிக் கொண்டு, புறச் சமயங்களிலிருந்து ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையால் மதம் மாற்றம் செய்யப்பட்டவர்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக் கொள்கின்றனர். மற்றொரு பிரிவினரான மலபார் சிரியன் கிறித்தவர்கள் தங்களைப் புத்தன் கிறித்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். இவர்கள் 1665-இல் முதல் ஜாகோபைட்டு மேற்றிராணியாரான மார் கிரகரீயினால் அறிமுகப்படுத்தப்பட்ட சமய நெறிமுறைகளைப் பின்பற்றி வருபவர்கள்."* இக்காலத்திலிருந்து அல்லது இதற்குப் பின்னர் போர்த்துக்கீசியர் வருகையின் காரணமாகத் தோன்றிய மூன்றாவது ஒரு பிரிவினரையும் உடன் கருத வேண்டியவர்களாகின்றோம். இவர்கள் ரோமன் கத்தோலிக்கச் சடங்கு முறையில் வழிபாட்டினை மேற்கொண்டவர்களாக உள்ளவர்கள். இவர்களுள் பெரும்பாலோர் போர்த்துக்கீசியரால் இந்து சமயத்தின் பல பிரிவினரிடையேயிருந்தும் மதம் மாற்றப்பட்டவர்கள். இவர்களைப் பற்றியான விவரங்களில் குழப்பம் ஏற்படாது தவிர்க்கும் பொருட்டு இப்பிரிவுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியே பார்ப்போம்.

போர்த்துக்கீசியர் முதன்முதல் இந்தியாவிற்கு வந்தபோது இந்திய வணிகம் முழுதும் மூர்களின் கைப்பிடிக்குள்ளாகவே இருந்து வந்தது. முகமதியர்களான மூர்கள் இந்துக்கள், கிறித்தவர்கள் ஆகிய இரு சமயத்தவர்களையும் கசப்புணர்ச்சியுடன் பாவித்து வந்ததால் போத்துக்கீசியரின் வருகையால் இந்துக்கள் கிறித்தவர்கள் ஆகிய இரு சமயத்தவர்களும் அதனை வரவேற்றவர்களாக அவர்களுடைய உதவியினை நாடினர். போர்த்துக்கீசியரும் இவர்கள் நட்பினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டதோடு இந்துக்களோடு செய்து கொண்ட உடன்பாட்டின் காரணமாக அவர்களுக்கு அவர்களுடைய சமயத்தைப் பரப்ப நல்வாய்ப்பு ஏற்பட்டது. பின்னவர்களான கிறித்தவர்களோடான

* ஹண்டர் இந்தியப் பேரரசு ,(*Hunter Indian Empire*).

நட்பினால் அவர்கள் தங்கள் சமய வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பெற்றதோடு வணிக வளத்தையும் மேம்படுத்திக் கொள்ள முடிந்தது. ஈழுவர், முக்குவர், புலையர் முதலிய தாழ்ந்த சாதியார்களை மத மாற்றம் செய்வதில் இவர்கள் வெற்றி கண்டனர். கோவாவின் சமயக் குருமார்களின் ஆணையராக உயர்வு பெற்ற மைக்கல் வாஜ், பாதிரியார் வின்செண்ட் ஆகியோர் இத் துறையில் ஆற்றிய பணியினைப் புனிதர் சேவியர் பின்னர் வெற்றிகரமாகவும் பாராட்டக்கூடிய வகையிலும் தொடர்ந்தார்.

இயேசு சபையினைச் சேர்ந்த அதிமேற்றிராணியர்கள் எத்தகைய கண்டிப்பையும் கட்டுப்பாட்டையும் விதித்தனர் எனப் பார்த்தோம். தற்பெருமை பாராட்டியவர்களாக ஒதுங்கியிருந்த இவர்கள் அகட்டலாவினைக் கைப்பற்றிக் கொலை செய்ததே கூனான் சந்திப்பிலான கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. இயேசு சபையினைச் சேர்ந்த பாதிரியார்கள் தோல்வியுற்றதைக் கண்ட போப்பாண்டவரான ஏழாம் அலெக்சாண்டர் இரந்துண்ணும் பிரிவினரான கார்மெலைட் பாதிரியார்களின் உதவியினை நாடியதோடு அவர்களிடம் உட்பூசல்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவும் உடன்பாடு காணவும் அவர்களால் இயன்றதைச் செய்யும்படி கட்டளையிட்டார். இதற்கிடையே இந்தியத் திருச்சபைகள் அனைத்தையும் போர்த்துக்கீசியர் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்துவிட்டதாலும் போப்பாண்டவர் போர்ச்சுகலின் அரசருடைய அனுமதி பெறாமலேயே கார்மெலைட் (இரந்துண்ணும் பிரிவுத் திருச்சபையார்) பாதிரியார்களை அனுப்பி வைத்தமையாலும் அவர்களுடைய முதற்குழு பணியிடத்திற்கு வந்துசேர இயலாது போய்விட்டது. இரண்டாவதாகப் புறப்பட்ட கார்மெலைட் பாதிரிகளின் குழு வேறொரு மார்க்கமாக 1656–இல் மலபாரை வந்து அடைந்தது. அவர்கள் அதிமேற்றிராணியார் ஜார்ஜினை அடுத்து அப்பொறுப்பினை ஏற்றிருந்த தாமஸை நேரில் வந்து கண்டனர். தாங்கள் ரோம் திருச்சபைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கச் சிரியர்கள் உடன்பாடு தெரிவித்தாலும் அதிமேற்றிராணியார் ரோஜ் எஸ்.ஜெயினை அடுத்து அப்பதவியினை ஏற்ற கார்சிய திருச்சபையினைச் சேராத ஒரு மேற்றிராணியார் வேண்டும் என சிரியர்கள் விருப்பம் தெரிவித்தனர். இதன்படி ஜோசப் பாதிரியார் 1659–இல் மலபார் திருச்சபைகளுக்கான திருத்தூதுவர்களின் முகவராக அமர்த்தப்பட்டார். இதுபற்றிய தகவல்

போர்ச்சுகல் அரசருக்குத் தெரிவிக்கப்படவில்லை. 1661–இல் இந்தியாவிற்கு வந்த ஜோசப் பாதிரியார் சிரியன் கிறித்தவர்களுக்கும் ரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்களுக்கும் இடையே உடன்பாடு காண இரண்டாண்டுகள் தீவிரமாக பாடுபட்டார். 1663–இல் கொச்சி துறைமுகத்தைப் போத்துக்கீசியரிடமிருந்து கைப்பற்றிய டச்சுக்காரர்கள் அவர் அப்பணியினை இடையூறின்றித் தொடர்ந்து மேற்கொள்ள அனுமதிக்கவில்லை. மேற்றிராணியார் ஜோசப் மலபார் கடற்கரையினை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என அவர்கள் ஆணை பிறப்பித்தனர். அவர் கொச்சியிலிருந்து வெளியேறும்போது அலெக்சாண்டர் தெ கம்பொ என்று அழைக்கப்படும் கண்டி பரம்பில்லினை மேற்றிராணியாகப் பதவியில் அமர்த்திச் சென்றார்.

தங்கள் கல்வித் தகுதியாலும் சூழலுக்கு ஏற்ப இயைந்து இயங்கும் அறிவாற்றலாலும் கார்மெலைட் பாதிரியார்கள் டச்சுக்காரர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றவர்களாகக் கொச்சிக்குத் திரும்ப வந்து அலெக்சாண்டர் தெ கம்பொவிற்கு அவருடைய பணியில் உதவினர். இவர்கள் குழுவினைச் சேர்ந்த மாத்யூ பாதிரியார் எர்ணாகுளத்திற்கு அருகேயுள்ள சாத்தியத்தில் ஒரு தேவாலயதை கட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டார். கொச்சி அரசர் இனாமாகத் தந்த நிலத்தில் வரப்புழாவில் மற்றொரு தேவாலயத்தையும் கட்டிக் கொண்டார். அப்போதிருந்து தற்சமயம் திருவாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்ததாகிவிட்ட வரப்புழாவே திருத்தூதுவர் சபையின் முகவர் குடியிருப்பு இடமாக இருந்து வருகின்றது.

இதனையடுத்துக் கால் நூற்றாண்டுகாலம் கார்மெலைட் பாதிரியார்களுக்கும் உள்ளூர் பாதிரியார்களுக்குமான சிறு பூசல்கள் தவிர எத்தகைய குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியும் இன்றிக் கழிந்தது. 1700–இல் போப்பாண்டவர் திருத்தூதுவர் குழுவின் முகவராய் அமர்த்திய கார்மெலைட் பாதிரியார் ஒருவரைக் கோவாவின் அதிமேற்றிராணியார் பதவிப் பொறுப்பு ஏற்புச் செய்துவைக்க உடன்படவில்லை. அப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதிரியான ஏன்ஜென்ஸ் பாதிரியார் ரோமாபுரித் திருச்சபையாரோடு உறவு கொண்டுள்ளவர் எனக் கூறப்படும் மார் சைமனைக் கொண்டு தன்னை அப்பொறுப்பில் பதவிக்கு உரியவராக நியமித்துக் கொண்டார். டச்சு அரசு போர்ச்சுகல் அரசர்

நியமித்த அதிமேற்றிராணியாரான ரெபெரியோ எஸ்.ஜெ.யினை நாட்டுக்குள் அனுமதிக்க மறுத்துவிட்ட காரணத்தால் ஏன்ஜெல்ஸ், கொச்சி, கொடுங்கோளூர் ஆகிய வட்டாரங்களுக்குரிய மேற்றிராணியாராகப் பதவியில் அமர்த்தப்பட்டார். இதன்பிறகு இயேசு சபையினைச் சேர்ந்த பாதிரிகள் திருவாங்கூருக்கும் சாமோரினின் நாட்டுப்பகுதிக்கும் சென்று சேரலாயினர். கொடுங்கோளூரை டச்சுக்காரர் கைப்பற்றியதானது கீழை நாடுகளில் போர்த்துக்கீசியர் மேலும் தலையெடுக்க இயலாதபடி செய்துவிட்டது. இயேசு சபையாருக்கு உரிய இறுதி அடையாளமாக இருந்த அவர்கள் தோற்றுவித்த தேவாலயம், சமயப்பள்ளி, கல்லூரி ஆகியன மறைந்தொழிந்தன. குருட்டுப் பிடிவாதமும் உடன்பாடு காணமுடியாத பிரிவினைப் போக்கும் கொண்டவர்கள் இயேசு சபையார் எனக் கூறி டச்சுக்காரர்கள் அவர்களை வெறுத்த காரணத்தால் கொடுங்கோளூருக்கு உரிய அதிமேற்றிராணியார்களாகப் பதவியில் அமர்த்தப்பட்ட இயேசு சபைப் பாதிரியார்கள் பலர் தங்களுடைய சமய மாவட்ட எல்லையில் காலடியே எடுத்து வைக்கவில்லை. தங்கள் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட ஒரு சிலருங்கூட திருவாங்கூர் அரசருக்குரிய நாட்டெல்லைப் பகுதியில் மட்டுமே தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர். பிரிட்டிசாரின் ஆட்சி இப்பகுதியில் நிலைத்த பின்பே தங்கள் தொடக்கத்தில் சமயத்தைப் பரப்பிய பகுதியில் இயேசு சபையினைச் சேர்ந்த பாதிரியார்கள் நுழைய முடிந்தது. 1875வரை கார்மெலைட் பாதிரியார்களே திருதூதர் முகவர் பொறுப்புகளில் தொடர்ந்து போப்பாண்டவரால் அமர்த்தப்பட்டு வந்தனர். அவ்வப்பொழுது கோவாவைச் சேர்ந்த அதிமேற்றிராணியார்களும் கொச்சினைச் சேர்ந்த மேற்றிராணியார்களும் இவர்களுள் சிலரைப் பதவியில் அமர்த்த மறுத்தவர்களாகத் தங்கள் நன்றியுடையவராக அவரிழந்த பகுதிகளை மீட்டுத்தர முயற்சி மேற்கொண்டும் வந்துள்ளனர். கொடுங்கோளூரின் அதிமேற்றிராணியாரான சால்வாடோர் எஸ்.ஜே. 1777-இல் உயிர் துறந்தார். இதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு போர்ச்சுகல் நாட்டு அரசர், ரோமில் உள்ள 'பிரோபகண்டா' கல்லூரியில் கல்வி கற்க ஜோசப் காரியடிஸ், தாமஸ் பரமகல் என்ற இரண்டு இந்தியக் கிறித்தவர்களைக் கொடுங்கோளூரின் திருச்சபை மாவட்டத்திற்கான அதிமேற்றிராணியாராகவும் திருச்சபை சமய முகவர்களின் தலைவராகவும் பொறுப்பில் அமர்த்தினர்.

அச்சமயத்தில் இந்தியர்களான கிறித்தவ சமயப் பணியாளர்களுள் பெரும்பாலோர் அறியாமையுடையவர்களாக ஒழுக்கமுடைமையில் உறுதியற்றவர்களாகவும் இருந்து வந்தனர். இக்குறைகளைக் களைந்து சீர்திருத்தத்தைப் புகுத்த 'புரொபகண்டா' முற்பட்டபோது ரோமன் கத்தோலிக்கர்களுக்கும் இந்தியச் சமயப் பணியாளர்களுக்குமிடையே இணக்கமின்மை தோன்றலாயிற்று. இயேசு சபைப் பாதிரியார்களைப் போலவே கார்மெலைட் பாதிரியார்களும் பொறுமை இழந்தவர்களாகவும் எரிச்சலுற்றவர்களாவும் ஆயினர். இவர்கள் வாயிலாக மாற்றங்காண போப்பாண்டவர் மேற்கொண்ட முன்முயற்சி சமயப் பணியாளரிடையே கசப்புணர்வைத் தோற்றுவித்தது. சிரியர்கள் கார்மெலைட்டுகள் பற்றிக் கடுமையான குற்றச் சாட்டுக்களைப் போப்பாண்டவரிடமும் திருவாங்கூர் அரசரிடமும் கொண்டு சென்றனர். இவர்கள் தாமஸை மேற்றிராணியாராகப் பொறுப்பில் அமர்த்த வேண்டுமென வற்புறுத்தினர். இச் சமயத்தில் இந்திய நாட்டு அரசர்களின் அரசவையில் டச்சுக்காரர் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தனர். டச்சுக்காரர்களுக்கு மிக நல்ல பிள்ளைகளாக நடந்து கொண்டு அவர்கள் நல்லெண்ணத்தைக் தேடிக் கொண்டவர்களான கார்மெலைட் சமயப் பணியாளர் சிரியன்களுடைய குற்றச்சாட்டிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள செய்த முயற்சிகளைச் சிரியர்கள் தோல்வியுறும்படி செய்தனர். தாமஸ் மேற்றிராணியாராகப் பொறுப்பினை ஏற்க அனுமதி வழங்கப்பட்டதோடு சிரியர்களுக்கும் சில தனி உரிமைகள் வழங்கப்பட்டன. இக் காலகட்டத்திலும் இதற்கு முன்பும் கூட இந்திய மற்றும் வெளிநாட்டுச் சமயப் பணியாளர்களிடையேயான பூசல்களையும் கிறித்தவ சமயத்தின் பல்வேறு உட்பிரிவினரிடையேயான பூசல்களையும் இந்து அரசர்களே கேட்டு நியாயம் வழங்கியுள்ளனர். இவர்களுடைய இந்த முடிவினைக் கிறித்தவர்கள் ஏற்றுக் கொண்டு தங்களைக் கட்டுப்படுத்துவதாக அத் தீர்ப்புகளுக்கு இணங்க நடந்து கொண்டுள்ளனர்.

போப்பாண்டவரான பதினாறாம் கிரகரீ 1838–இல் ஒரு கட்டளை வெளியிட்டார். அதன்படி கொடுங்கோளூர், கொச்சி வட்டார சமய மாவட்டங்கள் கலைக்கப்பட்டு அவை வரப்புழாவின் திருத்தூதுவர்களின் முகவரின் பொறுப்பின் கீழ் வரும்படி மாற்றப்பட்டது. போர்ச்சுகல் அரசர் இத்தகைய கட்டளை பிறப்பிக்கப் போப்பாண்டவருக்கு அதிகாரம் இல்லையென மறுக்க அதன் காரணமாகச் சிக்கல் மிகுந்த பூசல்கள்

விளைந்தன. வரப்புழாவின் அதிமேற்றிராணியாரான பெர்னார்டின் சிரிய சமயப் போதனைப் பள்ளிகளை மூடிவிட்டதும் இந்தப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களை மல்பான்களாக அல்லது ஆசிரியப் பாதிரியார்களாகத் திருச்சபைப் பணிக்குரியவர்களாகப் பணியில் அமர்த்த உடன்பட்டாரில்லை. இதனால் சிரியன் கிறித்தவர்கள் மிகவும் அதிருப்தியுற்றனர். 1856-இல் சிரியருள் பெரும்பாலோர் பாபிலோனைச் சேர்ந்த கத்தோலிக்கக் கால்செடொன் திருச்சபை வட்டாரத் தலைவரிடம் கால்செடொன் மேற்றிராணியார் ஒருவரை அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். இதனை அந்தத் திருச்சபை வட்டாரத் தலைவர் உடனே ஏற்றுக் கொண்டனர். தான் போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்பட்டவர் என்றாலும் மலபார் கிறித்தவர்களைப் பொறுத்தவரை தனக்குத் தனித்ததொரு உரிமை உண்டு என இவர் கருதியதே இதற்கான காரணம் ஆகும். மேற்றிராணியார் ரொக்கோஸ் 1861-இல் மலபாருக்கு அனுப்பி வைக்கப்பட்டார், புதியவராக வந்துள்ள அவரிடம் கொண்ட ஆர்வத்தினால் பெரும்பான்மையோர் அவரோடு சேர்ந்து கொண்டனர் எனினும் சிறுபான்மையினரான சிலர் எந்த உரிமையின் அடிப்படையில் அவர் இப்பொறுப்பினை ஏற்றுள்ளார் எனக் கேட்டவர்களாக அது பற்றிப் போப்பாண்டவருக்குத் தகவல் அனுப்பினர். மேற்றிராணியார் ரொக்கோஸ் திரும்ப அழைக்கப்பட்டதோடு திருச்சபை வட்டாரத் தலைவரை இனி இதுபோன்ற குறுக்கீடுகளில் ஈடுபடக்கூடாது எனவும் போப்பாண்டவர் எச்சரித்தார்.

இதனை அடுத்தும், மலபாரைச் சேர்ந்த கால்செடொன் சிரியத் திருச்சபை மீது தனக்குச் சுதந்திரமான தனி ஆட்சியுரிமை உண்டு என்ற எண்ணத்தினைத் திருச்சபை வட்டாரத் தலைவர் உடையவராய் மேற்றிராணியார் மெல்லுஸினைக் கொச்சிக்கு அனுப்பி வைத்தார். 1874-இல் மெல்லுஸ் வந்து சேர்ந்ததானது திருச்சூரைச் சேர்ந்த சிரியன் கிறித்தவர்களிடையே பிளவினை ஏற்படுத்தியது. ஒரு பிரிவினர் போப்பாண்டவரே தங்கள் மீது அதிகார ஆணை செலுத்தக் கடமைப்பட்டவர் எனக் கூற, மற்றொரு பிரிவினர் மேற்றிராணியார் மெல்லுஸின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்களாக நடந்தனர். இந்த வெளிப்படையான பிளவின் காரணமாக இரு பிரிவினரும் பெரும்பொருள் செலவு செய்தவர்களாக வழக்காடினர். மேற்றிராணியார் மெல்லுஸினை ஆதரிக்கும் கட்சியார் 1810 அல்லது 1812-இல் தங்கள்

திருச்சபை தோற்றுவிக்கப்பட்ட கால முதல் பாபிலோனில் உள்ள கால்செடொன் திருச்சபையோடு உறவுகொண்டதாக இருந்து வருகிறதேயன்றி ரோமன் கத்தோலிக்கரோடு எத்தகைய உறவும் கொண்டிருக்கவில்லை என வாதிட்டனர். இப்பொழுது இந்த விவகாரம் வழக்கு மன்றத்தில் உள்ளது. இவர்கள் தங்களை இப்பொழுது கால்செடொன் சிரியர் என அழைத்துக் கொள்கின்றனர். இதற்கிடையே போப்பாண்டவர் மேற்றிராணியார் மெல்லுஸினைச் சமயவிலக்கம் செய்து ஆணை பிறப்பித்தாரேனும் அவர் ரோமிற்குக் கட்டுப்படாதவராகத் தன்னைப் பின்பற்றுபவர்களுக்குத் தொடர்ந்து ஆன்மீக வழிகாட்டியாகவே இருந்து வருகின்றனர். 1887–இல் திருச்சபை வட்டாரத் தலைவர் போப்பாண்டவரோடு ஓர் உடன்பாட்டுக்கு வந்துவிட்டதால் மேற்றிராணியார் மெல்லுஸ் இந்தியாவை விட்டுப் புறப்பட்டு 1889–இல் ரோம் நகருக்குச் சென்று சேர்ந்தார். மெல்லுஸ் புறப்பட்டுச் சென்றபின் கால்செடொன் சிரியன்கள் மார் அப்டெசொ எனப்படும் அந்தோனி கத்தனாரைத் தங்கள் அதிமேற்றிராணியாராகத் தேர்ந்தெடுத்தனர். இவர் வரபுழா அதிமேற்றிராணியாரின் கீழ் ரோமன் சிரிய மதகுருவாக இருந்தவர் எனக் கூறுவர். இவர் சிரியாவிற்கும் பாலஸ்தீனத்திற்கும் சென்று பாபிலோனைச் சேர்ந்த வட்டாரத் திருச்சபைத் தலைவருக்கு எதிரணியினரிடமிருந்து பொறுப்பில் அமர்வதற்கான ஆணை பெற்று வந்தவர் எனக் கூறப்படுகின்றது. 1900–இல் இவர் இறக்குமுன் மார் அகஸ்டினெயினைப் பொறுப்பில் அமர்த்தினார். இவர் சொரெபிஸ் கொபஸ் என்ற பட்டத்துடன் கால்செடொன் திருச்சபை நடைமுறைகளை நடத்த அந்தோனி கத்தனாருக்கு உதவியாளராக இருந்து வந்தவர். இவரே இப்பொழுது கால்செடொன் சிரியன் திருச்சபைகளின் தலைவராக இருந்து வருகின்றார்.

1868–இல் மேற்றிராணியார் மர்செல்லுனுஸ் வரபுழா திருச்சபையின் திருத்தூதர் முகவருக்கு உதவியாளராக அமர்த்தப்பட்டார். ரோமானியப் பிரிவுச் சிரியன்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1892–இல் இவர் உயிர் நீத்த பின் ரோமானியச் சிரியர்கள் திருச்சபை முகவர்களான இரண்டு ஐரோப்பியரின் மேற்பார்வையின் கீழிருந்து வந்தனர். இயேசு சபையார் எப்படித் தங்களை இந்தியக்

கிறித்தவர்களின் வெறுப்புக்கு உள்ளாக்கிக் கொண்டனர் எனப் பார்த்தோம். இயேசு சபையாருக்கு அடுத்து வந்தவர்களான கார்மெலைட்டுகள் உலக அனுபவமும் விட்டுக் கொடுக்கும் மனப்போக்கும் உடையவர்களாயிருந்தும் எவ்வாறு அவ்வப்போது இந்தியச் சமயப் பணியாளரோடும் இந்தியக் கிறித்தவர்களோடும் மனத்தாங்கல் கொண்டவர்களாக இருந்து வந்தனர் என்பதனையும் பார்த்தோம். கூனென் சந்தியில் நிகழ்ந்த கிளர்ச்சிக்குப் பின்னும் அதனை அடுத்துக் கிறித்தவர்கள் தங்கள் நாட்டவர்களையே மேற்றிராணியர்களாக நியமிக்க வேண்டும் எனக் கேட்டதோடு, அடுத்தடுத்தும் இந்த வேண்டுகோளினை வெளியிட்டு வந்தனர். சில காரணங்களால், இவர்களுடைய இந்த வேண்டுகோள் ஆண்டுக் கணக்கில் கவனிக்கப்படாமல் இருந்து வந்தது. வெளி நாட்டைச் சேர்ந்த மேற்றிராணியார்களின் நேரடி ஆட்சிமக்களின் ஒருமித்த ஒத்துழைப்பையும் உளமார்ந்த ஆதரவையும் பெறத் தவறி வந்திருக்கின்றது என்பதனை நடைமுறை நிகழ்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன. இந்திய சமயக் குருமாரும் இந்தியக் கிறித்தவர்களும் ஆன்மீக வழிகாட்டும் தலைமைத் தகுதி ரோமிற்கே உரியது என்பதில் நம்பிக்கை வைத்துள்ளனர் என போப்பாண்டவர் தெரிவித்துள்ளார். இந்தச் சூழ்நிலையில் இந்தியர்களான சமயப் பணியாளர்களைப் பொறுப்பில் அமர்த்தி அதன் விளைவுகளை மதிப்பிட்டு அறிவது அறிவொடுபட்டதாக ஆகும் எனக் கருதப்பட்டது. திருச்சூரிலும் கோட்டயத்திலும் திருத்தூதர் முகவர்களாயிருந்த மேற்றிராணியார்கள் டெலைகாட்டும் லாவிக்னெ எஸ்.ஜெ.யும் திரும்ப அழைக்கப்பட்டபின் 1896–இல் இந்தியச் சிரியப் பாதிரியார்களான ஜான் மேனச்சேரி, அலோசியஸ் பரெபரம்பில், மாத்யூ மமக்கில் ஆகிய மூவரும் முறையே திருச்சூர், எர்ணாகுளம், செங்கணாச்சேரி ஆகிய இடங்களில் போப்பாண்டவரின் பிரதிநிதிகளாகத் திருத்தூதர் முகவர் என்ற பொறுப்பில் அமர்த்தப்பட்டனர்.

இந்தியர்களிடையே சமயப்பணி ஆற்றுவதற்குத் தங்களுக்கே தனி உரிமை உண்டு எனப் போர்த்துக்கீசியர் உரிமை பாராட்டியதும் அதனால் மலபார் திருச்சபையினிடையே அடிக்கடி நிகழ்ந்து வந்ததான சச்சரவுகளும் குழப்பங்களும் போப்பாண்டவரான பதின்மூன்றாம் லியோவுக்கும் போர்ச்சுகல் அரசருக்கும் இடையே 1886–இல் ஏற்பட்ட

உடன்பாடு காரணமாக ஒரு முடிவுக்கு வந்தது. இந்த உடனபாட்டின்படி கோவாவின் அதிமேற்றிராணியார் கிழக்கிந்தியாவுக்கான சமயத் திருச்சபை வட்டாரத்தின் தலைவராகவும் கொச்சியின் மேற்றிராணியார் அவரது உதவியாளராகவும் கொச்சிமாநிலத்திலுள்ள அவருடைய சமய மாவட்டம் கடற்கரை சார்ந்த கொச்சி வட்டத்தை மட்டும் கொண்டதாக அமைந்திருக்கும் எனவும் முடிவு செய்யப்பட்டது. ரோமானியக் கத்தோலிக்கர்கள் வாழும் கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த கோயமுத்தூர், மேற்றிராணியாரின் ஆளுகைக்குட்பட்ட சிறு பகுதியான சித்தூர் வட்டம் தவிர—எஞ்சிய அனைத்துப் பகுதிகளும் வரபுழா அதிமேற்றிராணியாரின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

1653—இல் கூனென் சந்தியில் சிரியன்கள் கிளர்ச்சி நிகழ்த்திய காலம் முதல், ஜாகோபைட்டு சிரியர்கள் அண்டியாக் திருச்சபை வட்டாரத் தலைவரால் அனுப்பப்பட்ட மேற்றிராணியர்களால் பதவியில் அமர்த்தப்பட்ட மேற்றிராணியர்களின் ஆளுகைக்கு உட்டபட்டவர்களாக இருந்து வருகின்றனர். அல்லது அவர்கள் அவ்வாறு அனுப்பப்பட்டோராகக் கருதப்படுகின்றனர். எதிர்பாராத சூழ்நிலைகளில் இந்திய மேற்றிராணியார்களே தாங்கள் இறக்கும்முன் தங்களுக்குப்பின் தங்கள் பதவியினை வகிக்க உரிமை நல்கியுள்ளனர். இந்தக் கிளர்ச்சியினை அடுத்து ஏற்பட்ட தலைமை மீறுகைக்குப் பின் இவர்கள் மேற்றிராணியார் தாமஸைத் தங்கள் ஆன்மீக வழிகாட்டியாகக் கொண்டனர். அண்டியாக் நகரத்திலிருந்து வந்து தன்னுரிமை உடையவராகப் பன்னிரண்டு ஆண்டுகாலம் தலைமைப் பொறுப்பு வகித்த மார் கிரகரீக்குப் பின் முறையாகத் தலைமைப் பொறுப்பில் அமர்த்தப்பட்ட இந்தியரான மேற்றிராணியார் இவரேயாவார். மலபாரில் ஜாகோபின் பிரிவினை மீண்டும் புத்துயிர் பெறச் செய்தவர் என இவரையே கூறுவர். ஒன்றாம் மார் தாமஸ் என்ற பட்டத்தை மெட்ரன் தரித்துக் கொண்டார். இவருடைய மூதாதையர் பகலொமட்டொம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மிக மதிப்பு வாய்ந்ததும் போற்றுதலுக்கு உரியதாகவும் இருந்து இக் குடும்பத்தைக் சேர்ந்த உறுப்பினர்களைத் திருத்தூதர் தானே நேரில் சமய மாற்றம் செய்து குருமார்களாகப் பொறுப்பில் அமர்த்தினார் எனக் கூறுவர். இதே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து 1815 வரை மேட்ரன் பொறுப்பில் இருந்து வந்தபின் இக் குடும்பம் கால்வழியற்றுப் போனது. இவ்வாறு பரம்பரை உரிமை கொண்டாடி ஒரே குடும்பத்தைச்

சேர்ந்தவர்கள் பொறுப்பில் தொடர்ந்து இருந்து வருவது நெஸ்டாரியன் வழக்கத்தின்பாற்பட்டது. இதனை வேறுவகையாகவும் விளக்கலாம். தொடக்கத்தில் மதம் மாறியவர்கள் உயர்சாதி இந்துக்களே. இவர்களுள் அனந்தரவன் (உடன் பிறந்தவன் அல்லது பெரியப்பா, சிற்றப்பாவின் பிள்ளை) ஒருவனே மலபாரில் உள்ள கூட்டுக் குடும்ப அமைப்பில் குடும்பத்தின் சொத்துக்களுக்கு உடமை உரிமையுடையவனாக வருவான். இந்த அடிப்படையில் உடன்பிறந்தவனோ தந்தையின் உடன் பிறந்தவர்கள் பிள்ளைகளில் ஒருவனோ மேற்கூறியவாறு கிறித்தவனாக மாறிய பின்னும் பரம்பரை உரிமை பேணியவனாகச் சமயப் பொறுப்பினை ஏற்பது இந்துக்களாக இருந்த போது மேற்கொண்டிருந்த வழக்கங்களின் எச்சங்களின் கூறுகளாம். மேட்ரன்களுக்கு உடைமைகள் இருந்தன. எனவே குடும்பத்து உடமைகள் வேறொருவனுக்குச் சென்று சேராமல் இருக்க வேண்டி அவர்கள் அனந்தரவன்களே தங்களை அடுத்துப் பதவிக்கு வரவேண்டும் என விரும்பினர். ஒன்றாம் மார் தாமஸினை அடுத்து அவருடைய உடன்பிறந்தவரான இரண்டாம் மார் தாமஸ் பொறுப்பேற்றார். அவர் இறந்தபின் அவருடைய தந்தையின் உடன்பிறந்தவர் மகன் மூன்றாம் மார் தாமஸ் என்ற பெயருடன் பத்து நாள்கள் மட்டுமே பதவியிலிருந்தார். இவரை அடுத்துப் பட்டத்திற்கு வந்த நான்காம் மார் தாமஸ் 1728 வரை திருச்சபையின் தலைமையினை நடத்தினார். மூன்றாம் நான்காம் மார் தாமஸ்கள் 1685–இல் அண்டியாக்கிலிருந்து மேற்றிராணியார் பாசிலுடன் வந்துசேர்ந்த கற்றறிந்தவரும் மிக்க புகழ் வாய்ந்தவருமான மேற்றிராணியார் ஜானினால் பொறுப்பில் அமர்த்தப்பட்டவர்கள். நான்காம் மார் தாமஸ் பொறுப்பில் இருந்தபோதும் 1708–இல் நெஸ்டாரியஸ் மேற்றிராணியார் ஒருவர் வந்தாதகத் தெரிகிறது. இவர் ஜாகோபைட் பிரிவினரா அல்லது ரோமன் கத்தோலிக்கரா எனத் தெரியவில்லை. எனினும் அக்காலத்திற்கு எப்படிப்பட்டவர் தேவையாக இருந்திருப்பாரோ அதற்குரிய பிரிவைச் சேர்ந்தவராக இவர் இருந்திருக்கலாம். சிரியர்களிடையே இவருக்கெனத் தனியே சில நண்பர்களும் ஆர்வலர்களும் இருந்துள்ளனர். அவர்களுடைய ஆதரவோடு 1731 வரை சில தேவாலயங்களின் மேல் இவர் தாமஸைப் பொறுப்பில் அமர்த்தியது முறையற்ற வகையிலான செயலாகக் கருதப்பட்டதால் அதனை முறைப்படுத்த டச்சுக்காரர்களின் உதவி வேண்டப்பட்டது. அதனைப் பெறஇயலாது ஏமாற்றமுற்ற நிலையில் கிறித்தவர்கள் எஸெய்கியெல்

என்ற யூத வணிகரின் உதவியினை நாட அவர் இவர்களுடைய மனக்குறை பற்றிய தகவலை அண்டியாக் திருச்சபை வட்டாரத் தலைவருக்குத் தெரிவித்து உதவினார். மார் இவானியஸ் என்ற முன்கோபக்காரன் ஒருவனைப் பஸ்ஸொராவிலிருந்து அந்த யூத வணிகர் அழைத்து வந்தார். அவ்வாறு வந்து சேர்ந்தவன் தேவாலயங்களில் உள்ள உருவங்கள் தொடர்பாக தலையிட்டுக் குழப்பம் விளைவிக்க அதனால் ஏற்பட்ட சச்சரவில் அவன் நாட்டைவிட்டே வெளியேற வேண்டியதாயிற்று. கொச்சியிலிருந்து டச்சு அதிகாரிகள் வாயிலாக அண்டியாக் திருச்சபை வட்டாரத் தலைவருக்கு மீண்டும் புதியதொரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவர், பாசில், ஜான், கிரகரீ என்ற மூன்று மேற்றிராணியார்களை அனுப்பி வைத்தார். அவ்வாறு வந்து சேர்ந்த அவர்கள் தங்கள் பயணச் செலவுக்கெனப் பெருந்தொகையினைக் கேட்ட காரணத்தால் மீண்டும் புதிதாகச் சிக்கல் உண்டானது. 1761–இல் ஐந்தாம் மார் தாமஸ் தன் தந்தையின் உடன் பிறந்தவரின் மகனை ஆறாம் மார் தாமஸாக பொறுப்பில் அமர்த்திவிட்டு இறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இச் சமயத்தில் கிரகரீ ஆறாம் மார் தாமஸின் தலைமையினை ஏற்க மறுத்துவந்த பிரிவினரிடையேயிருந்து குரிலோஸ் என்பவரைப் பதவியில் அமர்த்தியதாகத் தெரிகின்றது. இதனை அடுத்து இதன் காரணமாகத் தொடர்ந்து நிகழ்ந்த சண்டை சச்சரவுகளினால் குரிலோஸ் பொறுப்பை விட்டு ஓடிப்போய் கொச்சிக்கு வடக்கே அஞ்சூர் மாவட்டத்தில் தலைமையகம் ஒன்றினை ஏற்படுத்தியதோடு தொலியூரின் முதல் மேற்றிராணியாராகவும் ஆனார். இந்தச் சச்சரவினைத் திருவாங்கூர் அரசர் பெரிய மனதோடு தலையிட்டுத் தீர்த்து வைக்க முன் வந்ததால் ஆறாம் தாமஸ் அண்டியாக்கிலிருந்து வந்த மேற்றிராணியார்களால் முறைப்படி பொறுப்பில் அமர்த்தப்பட்டு ஒன்றாம் டியொன்யசியஸ் என்ற பட்டத்தைத் தரித்துக் கொண்டார். இவரே பின்னர் பெருமைக்குரிய டியொன்யசியஸ் என்று போற்றப்பட்டார். 1775–இல் கார்மெலைட் பிரிவைச் சேர்ந்த பெரியவரான பவொலி மார் டியொன்யசியஸைச் சந்தித்து அவரை ரோமின் சமயத் தலைமையினை ஒப்புக் கொள்ளும்படி வற்புறுத்தினார். மலபாரில் உள்ள எல்லா நகர வட்டாரத் திருச்சபைகளுக்கும் உரிய ஆளுகையின் தலைமையினைத் தனக்கு தருவதாக இருந்தால் இதற்கு உடன்படுவதாக அவர் கூறியதாகத் தெரிய வருகிறது. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின்

டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே நடைபெற்ற தலைமை பற்றிய போராட்டத்தில் வெற்றிபெற்ற ஆங்கிலேயர்கள் சிரியன் கிறித்தவர்கள் நலத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்களாயினர். 1805–இல் சென்னை மாநில அரசால் மலபாரில் திருச்சபைகளின் நிலையினைக் கணித்தறிய முனைவர் கெர் அனுப்பி வைக்கப்பட்டார். 1809–இல் முனைவர். புச்சனன் மார் டியொன்யசியஸினை நேரில் சந்தித்துச் சிரியர்கள் திருச்சபையினை ஆங்கிலேயர் திருச்சபையோடு இணைத்துவிடுவதான திட்டத்தைத் தந்தார். இதனைச் சிரியன் கிறித்தவ மக்களும் மக்கள் திருச்சபையினரும் ஏற்றுக் கொள்ளவில்லை. 1808–இல் மார் டியொன்யசியஸ் உயிர் துறந்தார். அவர் இறக்கும் முன் தாமஸ் கத்தனாரை எட்டாம் தாமஸ் எனப் பொறுப்பில் அமர்த்திவிட்டிருந்தார். 1816–இல் அவரும் இறக்க நேர்ந்தது. அவரை அடுத்துப் பொறுப்பினை ஏற்ற ஒன்பதாம் தாமஸ் உடல் நலமற்ற முதியவராக இருக்கவே புலிகோட்டியொன்யசியஸ் அல்லது இரண்டாம் டியொன்யசியஸ் என்றழைக்கப்பட்ட இட்டோப் ரம்பன் அப்பொறுப்பில் அமர்த்தப்பட்டார். இவர் பிரிட்டிசாரின் முகவராகப் பொறுப்பு ஏற்றிருந்த கர்னல் மன்றோவின் நல்லெண்ணத்தைப் பெற்றிருந்த காரணத்தால் அவருடைய நல்லெண்ணத்தோடு கூடிய முயற்சி காரணமாகக் கோட்டயத்தில் 1813–இல் சிரியன் இளைஞரின் கல்விக்காக ஒரு சமயப்பள்ளி நிறுவப்பட்டது. 1818–இல் அவர் இறக்கவே தொலியூரின் மேற்றிராணியாராகக் குரிலொஸை அடுத்துப் பொறுப்பு ஏற்றிருந்த பிலிக்ஸ்ஸொனஸ் மூன்றாம் அல்லது புன்னதர டியொன்யசியஸாகப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார்.

ஜாகோபைட்டு சிரியர்கள் பற்றியான வரலாற்றில் நாம் ஒரு முக்கியமான நிகழ்ச்சியினை குறிப்பிட வேண்டியவர்களாக உள்ளோம். பிரிட்டிசாரின் முகவரின் செல்வாக்கினைப் பயன்படுத்திக் கொண்டும் முனைவர் புச்சனன் முன்பு தங்கள் முன் வைத்த திட்டத்தினை நடைமுறைப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் சிரியர் சமயப் பணியினர் சங்கம் 1816–இல் அதற்கான முயற்சியினை மேற்கொண்டது. ஆங்கிலேயர் திருச்சபையாரும் சாதகமான சூழ்நிலையிலேயே தங்கள் பணியினைத் தொடங்கினர். சில ஆண்டுகாலம் சிரியன் திருச்சபையினரும் ஆங்கிலேயர் திருச்சபையினரும் தங்களுக்கிடையே நல்லுறவு

கொண்டவர்களாயிருந்தனர். ஆங்கிலேயர் திருச்சபையினர் சிரியர்களின் தேவாலயங்களுக்கு அடிக்கடி சென்று சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வந்தனர். 1825–இல் மூன்றாம் டியொன்யசியஸ் இறந்தபின் அல்லது சிலர் கூறுவது போல 1827–இல் செப்பட்டியொன்யசியஸ் மார்பிலிக்ஸ்ஸொனெஸினை மீண்டும் பொறுப்பில் அமர்த்தினார். அவர் நான்காம் டியான்யசியஸ் என்ற பட்டத்துடன் தலைமை மேற்றிராணியாராகப் பொறுப்பேற்றார். இவருடைய ஆட்சிக் காலத்தில் சிரியர்களிடையே ஒரு பிரிவினர் பிற திருச்சபையினர் தங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்திச் சிரியன் கிறித்தவர்களைச் சீர்திருத்தத் திருச்சபையாரின் கீழ்க் கொண்டுவர ரகசியமாக முயற்சிப்பதாக ஐயுற்றனர். பழைய மரபினைப் பேணுவதில் ஆர்வம் உடைய பிரிவினர் இம் முயற்சியினைத் தீவிரமாக எதிர்த்தனர். இவர்கள் இதுபற்றி அண்டியாக் திருச்சபை வட்டாரத் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொள்ள அவர் அதனாசியஸ் என்ற பெயருடைய மேற்றிராணியாரை அனுப்பி வைத்தார். 1825–இல் அவர் வந்து சேர்ந்த உடன் சிரியர் பெருங்கூட்டமாகச் சென்று முறையிட்டனர். அவர் மார்டியொன்யசியஸைச் சமயம் விலக்கம் செய்வதாக அச்சுறுத்தும் அளவுக்குச் சென்று விட்டார். சீர்திருத்தத் திருச்சபையினரும் பிரிட்டீசாரின் முகவரும் இச்சமயத்தில் தலைமை மேற்றிராணியாரின் சார்பாக திருவாங்கூர் அரசரிடம் முறையிட்டுக் கொள்ள அவர் அதனாசியஸை நாடு கடத்தினார். அதனாசியஸ் நாடு கடத்தப்பட்டது பிற திருச்சபையாரின் கையோங்க உதவியது. பிரிட்டீசாரின் முகவரும் அவருடைய செல்வாக்கால் நாட்டினை ஆளும் அரசரும் திருச்சபையினருக்கு எத்தகைய கட்டுப்பாடுமற்ற உதவிகளைச் செய்து வந்தனர். சமயத் துறைக் கல்விக் கூடத்தில் சிரியன் கிறித்தவ மாணவர்களின் கல்வியினை மேற்பார்த்து வந்த திருச்சபையார் ஜாகோபைட்டுத் திருச்சபையின் கோட்பாடுகளுக்கு முரணான கோட்பாடுகளைப் போதிப்பதாகக் குறைபட்டுக் கொள்ளவே திருச்சபையாருக்கும் தலைமை மேற்றிராணியாருக்குமிடையேயான நல்லுறவு படிப்படியே சீர்கெட்டு அவர்களிடையே நம்பிக்கையின்மையும் ஐயுறவும் வளரலாயிற்று. பழைய மரபினைப் பேணிக் காப்பதில் ஆர்வம் காட்டி வந்த ஒரு பிரிவினர் இந்தக் கசப்புணர்வை மேலும் வளர்க்கத் தூபமிடலாயினர். இதனால் திருச்சபையாருக்கும் தலைமை மேற்றிராணியாருக்குமான நல்லுறவு துண்டிக்கப்பட்டது. இந்தச்

சீர்கேட்டினைச் சரிசெய்து மீண்டும் ஒற்றுமையினை நிலைநாட்ட முடியுமா என ஆராயக் கல்கத்தாவிலிருந்து வந்த மேற்றிராணியார் வில்சன் திருவாங்கூர் சிரியர்களிடம் அவர்களுடைய ஆன்மீக உலகியல் நடைமுறைகளில் சில மாற்றங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். இறந்தவர்களுக்காகப் பிரார்த்தனை, வழிபாட்டு நடைமுறைகளில் மாற்றம், தேவாலய நிதியின் பொறுப்பினை மேற்பார்த்தல் முதலியவற்றில் வழக்கத்தைவிட்டு மாற்றம் மேற்கொள்ள சிரியர்கள் உடன்படாததால் 1838–இல் சிரியர்களுக்கும் திருச்சபையாருக்குமிடையேயான உறவு அறுந்தது. இதனையடுத்து சமயப் பள்ளியின் நிதியும் அறக் கொடையும் தொடர்பான சச்சரவு மூண்டது. 1840–இல் இது தொடர்பாக நடுவர் ஒருவரின் முடிவை இரு சாராரும் ஏற்றுக் கொண்டவர்களாக உடைமைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். திருச்சபையாருக்கு ஜாகோபைட்டுகளிடையே நண்பர்களிருந்தனர். அவர்கள் இங்கிலாந்துத் திருச்சபையின் உறுப்பினர்களாக மாறிவிட்டனர்.

சிரியர்கள் தங்கள் தலைமை மேற்றிராணியாரை மார் பிலிக்ஸொனெஸில் பொறுப்பில் அமர்த்தி வைத்ததற்கான ஆணை போதாததாகும் எனக் கருதிக் கவலையுற்றவர்களாக அண்டியாக் திருச்சபை மாவட்டத் தலைவருக்கு அதுபற்றி முறையீடு செய்து கொண்டனர். தலைமை மேற்றிராணியாருக்கு எதிரானதொரு அணியும் இச்சமயத்தில் உருவானபடியிருந்தது. மாத்யூ என்ற சிரியன் கிறித்தவரை இந்த அணியினர் அண்டியாக்கிற்கு அனுப்பி வைத்தனர். அவர் தக்க சமயத்தில் அண்டியாக் சென்று சேர்ந்தார். அண்டியாக் திருச்சபை வட்டாரத் தலைவர் பொறுப்பில் அமர்த்தத் தக்க ஒருவரைத் தேடியபடியிருந்தார். இதனால் அங்கு மாத்யூ பரிவோடு வரவேற்கப்பட்டு நன்கு உபசரிக்கப்பட்டார். 1842–இல் திருச்சபை வட்டாரத் தலைவரே மாத்யூவினைத் தலைமை மேற்றிராணியாராக பொறுப்பில் அமாத்துகையினை நிகழ்த்தி அதற்கான சான்றிதழ்களோடு அவரை அனுப்பி வைத்தார். 1843–இல் அவர் மாத்யூ அனஸ்டடியஸ் என்ற பட்டத்துடன் மலன்கரையில் வந்திறங்கித் திருச்சபையின் தலைமைக்கான தன் உரிமையினை வற்புறுத்தினார். மார் டியொன்யசியஸ் தன் பதவி உரிமையினை விட்டுத்தர முன்வராதவராக அண்டியாக் மாவட்டத் திருச்சபைத் தலைவருக்கு முறையீடு செய்து

கொண்டார். அதில் அவர் மாத்யூ சீர்திருத்த திருச்சபையாளர்களின் சார்புடையவர் எனக் குற்றம் சாட்டியிருந்தார். இதனால் அண்டியாக் மாவட்ட திருச்சபைத் தலைவர், சிரில் என்பவரை அவரை வெளியேற்றும்படி கூறி அனுப்பி வைத்தார். மார்டியொன்யசியஸோடு சேர்ந்து சதி செய்தவராகச் சிரில் மலபார் தலைமை மேற்றிராணியாரின் பொறுப்பினைத் தானே ஏற்றுக்கொண்டார். இதனால் ஏற்பட்ட பூசல்களுக்குத் தீர்வுகண்டு அதனாசியஸ், சிரில் ஆகிய இருவருள் யார் அப்பதவி உரிமைக்குரியவர் என முடிவு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டது. சிரில் கொண்டு வந்த சான்றிதழ்கள் போலிக் கையொப்பமிடப்பட்டவை என்ற உண்மை வெளிப்படுத்தப்படவே 1862-இல் அதனாசியஸ் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். சிரில் நாட்டை விட்டு ஓடலானார். சிரில் தன் முயற்சியில் தோல்வி காணவே மாவட்டத் திருச்சபைத் தலைவர் ஸ்டிபனொஸ் என்ற பெயருடைய மற்றொரு மேற்றிராணியாரை அனுப்பி வைக்க, அவர் சிரியன்களுள் இருபிரிவினரிடையேயும் மேலும் பிளவு விரிவுபடத் தன்னாலியன்றது அனைத்தையும் செய்யலாயினர். இவரை பிரிட்டிசாரின் முகவர் நாட்டை விட்டு வெளியேறும்படி ஆணையிட இவர் கிழக்கிந்தியக் கம்பெனி முகவர்கள் அவைக்கு வேண்டுகோள் விடுக்க அவர்கள் தலையிடாக் கொள்கையினை மேற்கொள்ளுமாறு தங்கள் முகவருக்கு அறிவுறுத்தினர். இதனால் மீண்டும் தன் வாய்ப்பினை நிலை நாட்டிக்கொள்ள இடம் ஏற்பட்டிருப்பதாகக் கருதிய மார்சிரில் மீண்டும் அங்குத் தலைகாட்டி சிரியர் பிரிவினரிடையே வெறுப்புணர்ச்சியினை வளர்ப்பாராயினர். வெளியேறுமாறு பணிக்கப்பட்ட மார் அதனாசியஸும் அவர் நண்பர்களும் அந்த ஆணைக்குப் பணியாதவர்களாக ஜோசப் என்பவரை அண்டியாக்கிற்கு அனுப்பி வைக்க அவர் 1866-இல் புதிய சான்றிதழ்களை அங்கிருந்து பெற்று வந்து ஐந்தாம் டயொனியசியஸ் என்ற பட்டத்துடன் தலைமை மேற்றிராணியார் பொறுப்புக்கு உரிமை கொண்டாடியதோடு திருவாங்கூர் அரசிடம் அதற்காகத் தனக்கு உதவும்படி கேட்டு வேண்டுகோள் விடுத்தார். தலையிடாக் கொள்கையினை மேற்கொண்டிருந்ததான திருவாங்கூர் அரசவை மார் அதனாசியஸுடன் அவரால் சமாதானமாகப் போக இயலாவிடின் வழக்கு மன்றத்தை நாடித் தீர்வு காணும்படி அறிவுறுத்தியது. 1874-இல் அண்டியாக் மாநிலங்களுக்கு வருகை தந்தவராகக் கொச்சி மாநிலத்திலுள்ள முள்ளுந்துருத்தாவில் சமயக் குருமார் குழுவின்

பேரவையினைக் கூட்டினார். அவை உறுப்பினர்கள் அண்டியாக் தலைமைப் பொறுப்பு நடத்தும் உரிமையினை உடையதென வலியுறுத்தியதோடு மார்டியொன்யசியஸை மலபாருக்கான தலைமை மேற்றிராணியாராக உறுதி செய்தும் மாத்யூ அதனாசியஸை சதிகாரர் எனக் கண்டித்தும் முடிவுகளை மேற்கொண்டனர். அண்டியாக் திருச்சபை வட்டாரத் தலைவர் 1876–இல் மார்டினுக்கு மீண்டும் திரும்பினார். இவர் வந்து போனதால் நிலைமை எவ்வகையிலும் சீர் பெறவில்லை. 1879–இல் தொடங்கி இரு பிரிவினரும் வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர அது 1889–இல் மார் டியொன்யசியஸின் பிரிவுக்குச் சார்பாக முடிவு கூறியது. தன்னிச்சையாகத் தலைமை உரிமையினை மேற்கொண்ட மார் அதனாசியஸ் 1875–இல் இறக்கவே அவர் சகோதரரின் மகன்–அவரால் முன்பே அவருக்குப் பின் பொறுப்புக்கு உரியவராக அமர்த்தப்பட்டிருந்தவர்–மார் தாமஸ் அனஸ்டடியஸ் என்ற பட்டத்துடன் தலைமை மேற்றிராணியார் பொறுப்பினை ஏற்றார். அவர் 1893–இல் உயிர் துறந்தார். டைடஸ் மார்தாமஸ் என்பவரை அவர் தான் இறக்கும் முன் தனக்குப் பின் பட்டத்திற்கு உரியவராகப் பொறுப்பில் அமர்த்தியிருந்தார். சீர்திருத்தப் பிரிவைச் சேர்ந்தவர்களான ஜாகோபைட்டு பிரிவினர்களின் தலைமை ஏற்ற அவர் தன்னைப் புனிதர் தாமஸின் சிரியர் என அழைத்துக் கொள்வதையே விரும்பினர். இதுவரை 1653–இல் தொடங்கி ஜாகோபைட்டு சிரியர்களின் வரலாறு கூறப்பட்டதோடு அவர்கள் இன்று உள்ளதுபோல மார்டியொன்யசியஸின் தலைமையில் அண்டியாக் திருச்சபை மாவட்டத் தலைவரின் தலைமையினை உடன்படும் ஜாகோபைட் சிரியர் எனவும் புனிதர் தாமஸ் சிரியன்கள் அல்லது பிரிவினர் எனவும் எவ்வாறு இரு பிரிவினராயினர் என்பதும் விளக்கப்பட்டது. இவ்வாறாக ஜாகோபைட்டு சிரியன்கள் அண்டியாக் திருச்சபை மாவட்டத் தலைவரின் தலைமையினை ஏற்றுக் கொண்டவர்களாக ஆகிவிட, புனிதர் தாமஸின் சிரியர் ஜாகோபைட்டுப் பிரிவு மலபாரில் பதினேழாம் நூற்றாண்டில் திருச்சபையினைச் சேர்ந்த ஒரு பிரிவினர் ரோமானியத் தலைமையினை ஏற்றுக் கொள்ள உடன்படாதவர்களாகத் திருச்சபையின் ஆன்மீக உலகியல் நடைமுறைகளின் தலைமயானது, மலபாரின் தலைமை மேற்றிராணியாரின் பொறுப்பாகும் எனக் கூறிப் பிரிந்து சென்றபின் தோன்றியது என்பர். புனிதர் தாமஸின் பிரிவுச் சிரியர்கள் மேற்றிராணியாரைப் பாபிலோன், அலெக்சாண்டிரியா, அண்டியாக்

ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு திருச்சபையின் வட்டாரத் தலைவரின் உடன்பாடு பெற்றுப் பொறுப்பில் அமர்த்துவதானது அதற்கு மலபாரைச் சிறந்ததான புனிதத்தினை எவ்வகையிலும் தருவதில்லை எனக் கூறுவர். மலபார் திருச்சபையானது திருத்தூதரான புனிதர் தாமஸினால் தோற்றுவிக்கப்பட்டது என்ற காரணத்தால் இச்சபை அத்தகைய உரிமைக்கு உடையதாகின்றது எனக் கூறுவர். ஜாகோபைட்டுகளே மேற்றிராணியார் பொறுப்பேற்றலைத் திருச்சபை மாவட்டத் தலைவர் தன் ஆணையின் வழி முறைப்படுத்தவில்லையாயின் அது செல்லத்தக்கதாகாது என்பர். புனிதர் தாமஸின் பிரிவுச் சிரியர் இத்தகைய முறைப்படுத்தலை ஏதேனும் திருச்சபையின் மாவட்டத் தலைவர் செய்து வைத்தால் அதுவே போதுமென்றும் எனினும் அவ்வாறு அவர் முறைப்படுத்தி வைப்பதொன்றைக் கொண்டே தங்கள் திருச்சபை அவருடைய வட்டாரத் திருச்சபையின் தலைமைக்கு உரியதாகி விடாது எனவும் கூறுவர்.

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினைச் சேர்ந்தவர்களும் ரோமன் சிரியர் பிரிவினரும் ரோமானியத் திருச்சபையின் வழிபாட்டு முறைகளையே பின்பற்றுகின்றனர். எனினும் பின்னவர் வழிபாட்டுக்குச் சிரிய மொழியினைப் பயன்படுத்துகின்றனர். சிலர் புனித தாமஸின் பிரிவுக் கிறித்தவர்கள் முன்பு புனிதர் அதேடுயஸ், கிழக்கு சிரியர், எதெஸ்ஸர் ஆகியோருடைய வழிபாட்டு நெறிகளைப் பின்பற்றி வந்தாகக் கூறுவர். அம் முறைகள் ரோமானிய வழிபாட்டு முறையோடு கூடப் போர்த்துக்கீசிய இயேசு சபையினரால் தியம்பெரில் 1599–இல் நடைபெற்ற சமயக் குருமார் குழுக் கூட்டத்தில் வைத்து இணைக்கப்பட்டு விட்டன. கால்செடொன் சிரியன்கள் ரோமன் வழிபாட்டு முறைகளையே பின்பற்றுகின்றனர். இந்த வழிபாட்டு முறையில் நடைமுறையில் பின்பற்றும் வேறுபாடுகளாக எனக்குத் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

1. ரோமானியக் கத்தோலிக்க சிரியரைப் போல வார நாள்களில் மணத்தை நடத்தாது காலசொடான் சிரியர் ஞாயிற்றுக் கிழமைகளிலேயே மணத்தை நடத்துகின்றனர்.

2. வேதாகமத்தைப் படிக்கும் இவர்கள் பிரிவுப் பாதிரியார்கள் தேவாலயத்தில் கூடியுள்ளவர்களைப் பார்த்தவராக இருப்பார்.

ரோமானியக் கத்தோலிக்கர் பாதிரியார்கள் பலிபீடத்தை நோக்கியவராக இருப்பார்.

3. பலிப்படைப்பின் இடையில் இவர்கள் பிரிவுப் பாதிரியார்கள் தேவாலயத்தில் கூடியுள்ளவர்களை வாழ்த்துவார். இப்பழக்கம் ரோமானிய கத்தோலிக்கப் பிரிவினரிடையே இல்லை.

4. ஞானஸ்நானத்திற்கு இவர்களில் புனிதப்படுத்தப்பட்டதான இருவகை எண்ணெய்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் பின்னர் ஞானஸ்நானம் உறுதிபடுத்தப்பட வேண்டிய தேவையற்றதாகின்றது. ரோமானியக் கத்தோலிக்கர் ஒருவகை எண்ணெயினையே பயன்படுத்துவதால் மேற்றிராணியார் ஒருவர் பின்னர் ஞானஸ்நானத்தை உறுதிப்படுத்தும்படியாகின்றது.

ஜேகோபைட் சிரியர்களுக்கும் புனிதர் தாமஸ் சிரியர்களுக்கும் தேவாலய வழிபாடுகளின் போதான நெறிமுறைகள் ஒன்று போன்றனவே. புனிதர் தாமஸ் சிரியன்கள் வழியாட்டில் சில பகுதிகளை நீக்கியவர்களாக சில சிறிய மாற்றங்கள் செய்துள்ளனர். (இது தொடர்பாக அண்மையில் ஒருவர் எழுதியுள்ளது வருமாறு :- "கோட்டயத்திலுள்ள மிகப் பழமையான சிறிய தேவாலயம் ஒன்றின் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டேன். இந்தியாவில் உள்ள கல்லாலான மூன்று பழமையான சிலுவைகளுள் ஒன்றினைப் பெற்றுள்ளதான பெருமைக்கு உரியது இந்தத் தேவாலயம். அண்டியோக் நகரத்தில் பல ஆண்டுகளுக்கு முன் நான் கலந்து கொண்ட வழிபாட்டு நிகழ்ச்சியினையே இது பெரிதும் ஒத்திருந்தது. இங்குப் பிரார்த்தனையின் போது புனித நூலுக்கு உரியன அல்லாதனவான சில பகுதிகள் அரபி மொழிக்குப் பதிலாக மலையாள மொழியில் படிக்கப்பட்டதொன்றே ஆண்டியாக் வழிபாட்டுக்கு இங்கு நிகழ்ந்த வழிபாட்டுக்கும் இடையேயான வேறுபாடு. இரு இடங்களிலும் மிகப் புனிதமானவையாகக் கருதப்படும் சொற்கள் சிரிய மொழியாலேயேக் கூறப்பட்டன.) இவர்களிடையே உள்ள வழக்கங்களும் கோட்பாடுகளும் பற்றிப் பின்வரும் சில வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டலாம் என நினைக்கின்றேன்.

1. ஜாகோபைட்டு சிரியன்கள் கோட்பாடுகள் சடங்குகள், வழக்குகள் ஆசியனவற்றைப் பொறுத்தவரை புதிய வேதாகமத்தையே

முக்கிய ஆதாரமாகக் கருதுகின்றனர். வேதாகமத்திற்கான விளக்கங்களைச்சமயச் சபைகளின் வழக்குவழி, தொடக்க காலப் பாதிரியார்களின் விரிவுரை, பிளவுபடாத கிறித்தவர் காலத்திய உலகளாவிய புனிதப் பேரவையின் தீர்ப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே விளக்குவர். புனிதர் தாமஸ் சிரியன்கள் வேதாகமம் இத்தகைய விளக்கங்களுக்கு அப்பாற்பட்டதானதனித்துவம் வாய்ந்த சிறப்புக்குரியது எனக் கொள்கின்றனர்.

2. இறந்தவர்களின் ஆன்மா உய்வதற்காகப் பிரார்த்தனை, அறச் செயல்கள் முதலியனவற்றால் விளையும் நன்மைகளில் ஜாகோபைட்டுகள் நம்பிக்கை வைக்கின்றனர். கன்னி மரியாளுக்கு இதற்காக வழிபாடாற்றுவதோடு உரிய புனிதர்களை வழிபடுவதுடன் புனிதப் பயணங்களையும் மேற்கொள்வர். செய்த பாவங்களுக்காகப் பாதியார்களை அணுகி அவற்றைமனம்விட்டுக் கூறி பாவ விமோசனமும் பெறலாம் என இவர்கள் நம்புகின்றனர். புனிதர் தாமஸ் பிரிவினைச் சேர்ந்த சிரியன்கள் இவையும் இவை போன்ற பிறவும் புனித நூல்கள் விதித்தனவற்றுக்கு முரணானவை எனக் கொள்வர். இச் செயல்கள் கிறித்தவ சமயம் உணர்த்துவதற்குரிய மெய்யுணர்வினின்றும் இதனை மேற்கொள்பவர்களை வழிதவறச் செய்யும் என இவர்கள் நம்புகின்றனர்.

3. தேவனின் மாலை உணவினைப் பொது மக்களுக்கும் நிகழ்ச்சியில் பங்கு பெறாத சமயத் துறையினருக்கும் புனிதப் படுத்தப்பட்ட ரொட்டியினைப் புனிதப்படுத்தப்பட்ட திராட்சை சாற்றில் நனைத்துத் தருவர். கிறித்துவின் புத்துயிர்ப்புக்குப் பிறகு அவை தனித்தனியே பிரிந்திருந்தன எனக் கொண்டு தனித்தனியே வழங்குவதைப் பாவம் எனக் கருதுவர். புனிதர் தாமஸ் பிரிவினரான சிரியன்கள் அவற்றைச் சேர்த்து வைத்த பின் பொது மக்களுக்கு வழங்குவர்.

4. ஜாகோபைட்டு சிரியர் திருமணச் சடங்குகளை ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தி வைப்பர். இது ஒரு புனிதமான ஒப்பந்தம் ஆகையால் இதனை ஞாயிற்றுக் கிழமைகளிலேயே நடத்த வேண்டும் எனக் கூறும் இவர்கள் வழிபாட்டுக்குரிய நாளான ஞாயிற்றுக் கிழமை ஒன்றில் கிறித்துவே ஒரு மணச் சடங்கில் கலந்து கொண்டார் என்பதனை எடுத்துக் காட்டுவர். ஓய்வுக்கும் சமய வழிபாட்டுக்கும்

உரியதாக வகுக்கப்பட்டுள்ள ஞாயிற்றுக் கிழமைகளில் இத்தகைய சடங்குகளை மேற்கொள்வது புனித நூல்களுள் விதித்துள்ள விதிகளுக்கு முரணான செயல் என்பர் புனிதர் தாமஸ் பிரிவுச் சிரியர்.

5. தேவாலயத்தில் நடத்தப்படும்திருப்பலிப்படைப்பு நிகழ்ச்சிஉயிர்களைக் காக்கும் பொருட்டுச் சிலுவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கிறித்துவின் தியாகத்திற் கொப்பான உயிரோடு இருப்பவர்களினுடையதும் தேவனை நம்புகின்ற இறந்தவர்களுடையதுமான பாவத்துக்குப் பரிகாரம் தேடுவதற்காகத் தரப்படும் இரத்தம் சிந்தாத பலி என்பர். புனிதர் தாமஸ் பிரிவுச் சிரியர் சிலுவையில் உயிர்த் தியாகம் செய்த கிறித்துவின் நினைவாக நடத்தப்படும் சடங்காகவே இதனைக் கொள்வர்.

6. ஜாகோபைட்டுகள் சிலுவையினையும் புனிதர்களோடு தொடர்புடைய பழைய சின்னங்களையும் போற்றுதலுக்கு உரியதாகக் கொள்வர். புனிதர் தாமஸ் பிரிவுச் சிரியர் இதனை உருவ வழிபாட்டோடு ஒத்தாகக் கருதுவர்.

7. ஜாகோபைட்டுகள் இறந்தவர்களுக்கான திருப்பலிப்படைப்பு மேற்கொள்வர். புனித தாமஸ் பிரிவுச் சிரியர் இதனைப் புனித நூல் விதிகளுக்கு முரண்பட்டதாகக் கொள்வர்.

8. மறுமணம், விதவையரை மணத்தல், பாதிரியருக்கான முழுமையான தகுதியினைப் பெற்ற பின் மணம் புரிதல் ஆகியன ஒரு பாதிரியாரின் தகுதியினைச் சாதாரணக் குடிமகன் என்ற நிலைக்கு தாழ்த்தும் என ஜாகோபைட்டுகள் கூறுவதோடு அத்தகைய மண உறவுகளை மேற்கொள்பவர்களைப் பாதிரியாருக்கான பணிகளைச் செய்யவும் அனுமதிப்பதில்லை. புனிதர் தாமஸின் பிரிவைச் சேர்ந்தவர்கள் பாதிரியாருடைய உரிமைகளை இழக்காதவர்களாக ஒருவர் அத்தகைய மண உறவுகளை மேற்கொள்ள அனுமதிக்கின்றனர்.

9. ஜாகோபைட்டுகள் குழந்தையாக இருக்கும்போதே ஞானஸ்நானம் செய்வித்தல் நலம் பயக்கக் கூடியது என நம்புவதோடு ஞானஸ்நானத்தின் வழி ஒரு ஆன்மா புத்துயிர்க்கப்படுகிறது என்றும் நம்புகின்றனர். புனிதர் தாமஸ் பிரிவு சிரியன்கள் குழந்தையாக இருக்கும்போதே ஞானஸ்நானம் செய்வித்தாலும் அது ஒருவனைக் கிறித்தவ சமயச் சபையினுள் ஏற்றுக் கொள்ளும் சடங்கேயன்றி புத்துயிர்ப்பு ஊட்டும் சடங்காகாது என்பர்.

10. சிறப்பான விரத நாள்களை மேற்கொள்ளும் ஜாகோபைட்டுகள் அந்த நாள்களில் சில குறிப்பிட்ட உணவு வகைகளை உண்பதனைத் தவிர்ப்பர். புனிதர் தாமஸ் பிரிவுச் சிரியர் இந்த வழக்கத்தை மூட நம்பிக்கை எனக் கொள்வர்.

ஜாகோபைட்டுப் பிரிவுச் சிரியப் பாதிரியார்களுக்குக் குறிப்பிட்ட தொகை எதுவும் ஊதியமாக வழங்கப்படவில்லை. ஞானஸ்நானம், திருமணம், சாவுச் சடங்கு முதலானவற்றை நடத்தி வைக்கும்போது அவரவர்கள் வழங்கும் தொகையினைக் கொண்டே இவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். ரோமன் சிரியர்களும் லத்தீன் பாதிரியார்களும் மேற்கண்ட பணிகளுக்காக என உரிய தொகைகளைப் பெறுவதோடு குறிப்பிட்ட தொகையினையும் ஊதியமாகப் பெறுகின்றனர். சிரியப் பாதிரியார்கள் கத்தனார்கள் என அழைக்கப்படுகின்றனர். லத்தீன் பாதிரியாராகப் பொறுப்பு ஏற்பதற்கான சடங்கு ஆகியவற்றுக்கான மொரொரென எனப்படும் புனித எண்ணெயினை ஜாகோபைட்டுப் பிரிவுச் சிரியர் அண்டியாக் நகரத்திலிருந்து பெறுகின்றனர். ரோமானியத் திருச்சபையினைச் சேர்ந்தவர்கள் இதனை ரோம் நகரிலிருந்து பெறுகின்றனர். கத்தோலிக்கச் சமயப் பணியாளர்கள் இல்லற வாழ்வை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. நகரத் திருச்சபைத் தலைவர்களும் ரம்பான்களும் தவிர பிற சமயப் பணியாளர்களை ஜாகோபைட்டுப் பிரிவினர் இல்லற வாழ்வில் ஈடுபட அனுமதிக்கின்றனர்.

இன்று சிரியன் கிறித்தவர்களாக உள்ளவர்களுள் பெரும்பாலோர் இந்து சமூகத்தின் உயர்வகுப்பாரான மூதாதையரின் வழித்தோன்றல்கள் எனத் தங்களைக் கூறிக் கொள்வர். உயர்சாதி இந்துக்கள் மேற்கொள்வதான பழக்க வழக்கங்கள் சிலவற்றை இன்றும் இவர்கள் மேற்கொண்டவர்களாக இருத்தல் இவர்களுடைய இந்த கூற்றுக்குரிய சாட்சியங்களாகத் துணை செய்கின்றன. பல நூற்றாண்டுகள் தொடர்ந்து கிறித்தவர்களாக இருந்து வந்தபோதிலும் இன்றும் இவர்கள் இந்துக்களான தங்கள் மூதாதையரின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களாக இருப்பது வியப்புக்குரியதே. இவர்களுடைய சமூகத்தைச் சேர்ந்த இந்து சகோதரர்களிடையேயான சாதி தொடர்பான வழக்குகள் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் இவர்களுள் சில பிரிவினரிடையே நிலவி வருவது புதுமையாயினும் உண்மைக்குப் புறம்பானதன்று. கிறித்துவின் போதனைகளில் போதிய தெளிவும்

ஆங்கிலக் கல்விப் பயிற்சியும் ஐரோப்பியர்களோடு தொடர்பும் ஏற்பட்டு வருவதால் சாதியாரிடையேயான வேறுபாட்டுணர்ச்சியினைப் பாராட்டும் பழக்கம் மறைந்து வருகின்றதெனலாம். இவர்களிடையே பழைய மூதாதையர்களுடையதான வழக்கங்களாக இருந்து வருவனவாகப் பின்வருவனவற்றை எடுத்துக் காட்டலாம்.

1. சில கிறித்தவர்கள் தேவாலயத்தில் எவ்வளவு பக்தி உணர்வோடு வழிபாடு நிகழ்த்துகின்றார்களோ அதே போன்ற பக்தி உணர்வுடன் இந்துக் கோயில்களிலும் வழிபாடு நிகழ்த்துகின்றனர்.

இதே போன்று பிராமணரல்லாத இந்துக்கள் சிலரும் தேவாலயங்களில் வந்து வழிபாடு நிகழ்த்துகின்றனர்.

2. சிரியன் கிறித்தவர்களுள் சில பிரிவினர் சாதகம் கணித்தலில் நம்பிக்கையுடையவர்களாக இந்துக்களைப் போலவே குழந்தை பிறந்தவுடன் அதற்குச் சாதகம் கணித்து எழுதுகின்றனர்.

3. மணநாளன்று மணமகன் மணமகள் கழுத்தில் பொன்னாலான தாலியினை அணிவிக்கின்றான். இந்த வழக்கம் இந்தியக் கிறித்தவர்களிடையே பொதுவாகக் காணப்படுகிறது. தங்கள் கணவன்மார் இறக்கும்போது சிலர் தங்கள் தாலியினைக் களைந்து பிராமணர்களிடையே இருப்பதைப் போல கைம்பெண்கள் என்பதனை உணர்த்துகின்றனர்.

4. ஒருவன் அல்லது ஒருத்தி இறந்தால் இறந்தவருடைய குழந்தைகளும் நெருங்கிய உறவினர்களும் பத்து நாள்கள் முதல் பதினைந்து நாள்கள் வரை புலா எனப்படும் சாவுத் தீட்டினை மேற்கொள்கின்றனர். இச் சமயத்தில் இறைச்சி உணவு விலக்கப்பட வேண்டும். தேவாலயத்தில் ஒரு சடங்கு நிகழ்ச்சியோடு தீட்டுக் காலம் முடிவுக்கு வரும். அன்று ஏழைகளுக்கு வசதிக்கு ஏற்ப உணவு அளிப்பதோடு வீட்டில் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் விருந்தளிப்பர். சிரார்த்த நாளில் இறந்தவரின் ஆன்மாவிற்காகத் தேவாலயத்தில் வழிபாடு நடத்துவதோடு வீட்டில் விருந்தும் நடத்துவர்.

5. கிராமப்புறத்தில் கிறித்தவர்கள் இந்துக்களான மலையாளிக்குரிய ஓணத் திருவிழாவினை, விருந்து, குழந்தைகளுக்கும் உறவினர்களுக்கும் புத்தாடைகள், வீட்டின் அக்த்தும் புறத்தும் விளையாட்டுக்கள் ஆகிய ஆர்ப்பாட்டங்களுடன் சிறப்பாகக் கொண்டாடுவர்.

6. விஷு எனப்படும் புத்தாண்டு நாளினையும் குழந்தைகள், உறவினர்கள், ஏழைகள் ஆகியோருக்குச் சிறுதொகைகள் அன்பளிப்பாக வழங்கி ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடுவர்.

7. இந்துக்களான குழந்தைகளுக்குச் சோறூட்டும் சடங்கினைக் குழந்தை பிறந்த ஆறாம் மாதத்தில் நிகழ்த்துவர். இந்துக்களான பெற்றோர் நேர்ந்து கொள்வதைப் போலவே இவர்களும் குறிப்பிட்ட தேவாலயத்திற்குக் குழந்தைகளை எடுத்து வந்து சோறூட்டும் சடங்கை நிகழ்த்துவதாக வேண்டிக் கொள்கின்றனர்.

8. புலையர், பறையர் முதலிய தாழ்ந்த சாதியினரைச் சேர்ந்தவர்கள் கிறித்தவர்களாக மதம் மாறியிருப்பினும் கூட சிரியன் கிறித்தவர்கள் தாங்கள் இல்லங்களுக்குள் அவர்களை அனுமதிப்பதில்லை. தீட்டுக்கான தூரம் பற்றிய விலகி நிற்கும் விதிகளைக் கூட இவர்கள் பின்பற்றுகின்றனரெனினும் இந்துக்களான மலையாளிகளைப் போல அதில் இவர்கள் மிகுந்த கண்டிப்புக் காட்டுவதில்லை. ஈழவன்களை இவர்கள் தங்கள் இல்லங்களுள் வர அனுமதித்தாலும் அவர்களை உணவு சமைக்க அனுமதிப்பதில்லை. சில பகுதிகளில் ஈழவர்களைச் சிரியர்கள் வீடுகளுக்குள்ளும் அனுமதிப்பதில்லை. ரோமானியக் கத்தோலிக்கர்களின் பல பிரிவினருக்கும் சிரியர் கிறித்தவர்களுக்கும் இடையே மணஉறவு நிகழ்வதில்லை. இத்தகைய உறவுகள் ஒரு சில விதிவிலக்குகளாக நடைபெறும்போது அந்த மணச்சடங்குகள் கத்தோலிக்க முறையினை ஒட்டியும் சிரியர்களுக்கான சடங்குகளின் முறையினை ஒட்டியும் இருமுறை நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறு மணம் புரிந்துகொள்வோரின் சந்ததியினர் பல தொல்லைகளுக்கும் சிக்கல்களுக்கும் உள்ளாகின்றனர். ரோமானியக் கத்தோலிக்கர்களிடையே கூட எழுநூற்றுவர், ஐந்நூற்றுவர், முந்நூற்றுவர் ஆகிய பிரிவினர் தங்களுக்குள் மணஉறவு கொள்வதில்லை. இத்தகைய சமய நெறிக் கோட்பாடுகளுக் கிடையேயான வேறுபாடுகள் ரோமன் கத்தோலிக்கச் சிரியர்களுக்கும் ஜாகோபைட்டுச் சிரியர்களுக்கும் இடையே கூட மணஉறவுகள் நிகழாதபடி தடுத்து வருகின்றன. ஜாகோபைட்டுச் சிரியர் எனப் பொருத்தமுற அழைக்கப்படுகின்றவர்களான புனித தாமஸ் பிரிவுச் சிரியரும் சிரியர் பிராட்டெஸ்டண்ட் சிரியரும் தங்களுக்குள் மணஉறவு கொள்கின்றனர். இவர்களிடையே கூட தெற்கத்தியாரும் வடக்கத்தியாரும் தங்களுக்குள் மண உறவு கொள்வதில்லை.

இவர்களிடையே கூட அத்தகைய மண உறவு ஒன்று நிகழுமானால் தெற்கத்தியார் ஏதேனும் ஒருவகையில் சாதி விலக்கத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு இவர்கள் தங்களைத் தாங்களே தனித்தவர்களாக்கிக் கொண்டு ஒதுங்கியிருப்பதற்குக் காரணம் இவர்கள் தங்களைச் சிரியாவிலிருந்து வந்து தொடக்கத்தில் இங்கு குடியேறியவர்களின் வழி வந்தவர்கள் எனக் கருதும் உயர்வு மனப்பான்மையே ஆகும். சிரியர்கள்–அவர்களுள்ளும் ஜாகோபைட்டுகளான சிரியர்கள்–இந்தியக் கிறித்தவர்களைக் காட்டிலும் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதில் மிகுந்த கண்டிப்பு உடையவர்களாக உள்ளனர்.

இந்து அரசர்கள் தொடக்கத்தில் சிரியர்களுக்கு வழங்கிய தனி உரிமைகள் பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளோம். சமூகப் படிநிலையில் இவர்கள் மிக உயர்வானதொரு இடத்தைப் பெற்றிருந்ததோடுகூடப் பல்வேறு காலகட்டங்களில் அரசரின் மெய்க் காவலர் குழுவின் பிரிவு ஒன்றாகவும் படைப் பிரிவாகவும் இருக்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தனர். கல்விப் பயிற்சியின் காரணமாக அண்மைக் காலத்தில் இவர்கள் மிகுந்த முன்னேற்றம் பெற்றுள்ளனர். அரசுப் பணித்துறை வாய்ப்புகள் இவர்களுக்கு உரியதாக ஆக்கப்பட்டிருப்பதால் உயர்கல்வி கற்ற பலர் இன்று அரசுத் துறையில் பெரிய பதவிகள் வகிக்கின்றனர். தனித்தவர்களாகவும் நிறுவன அமைப்பாளர்களாகவும் இவர்கள் இந்துக்களையும் முசல்மான்களையும் விட மிக முன்னேறியவர்களாக வணிகம், தொழில் துறை, பயிரிடுகை முதலியவற்றில் முன்னேற்றம் கண்டவர்களாக உள்ளனர். சொல்லப் போனால் தங்கள் விடாமுயற்சி உழைப்பு ஆகியவற்றால் எல்லாத் துறைகளிலும் இவர்கள் தங்கள் தனி முத்திரையைப் பதித்துள்ளனர் எனலாம்.*

* இந்தக் கட்டுரையில் மேலே தரப்பட்டுள்ள செய்திகளைத் தொகுக்க உதவிய நூற்பட்டியல் வருமாறு :–

Hunter W. W. Sir	***Indian Empire and History of British India***
Hough.J.	***History of Christianity in India***
Whitehouse .T	***Lingerings of Light in a Dark Land***
Makenzie .G.T.	***Christianity in Travancore***
Day .F.	***Manual of Malabar***
	Christian College Magazine, Madras, Vol.VI
	Judgements of the Civil Courts of Travancore and Cochin Church History of Travancore.
Agur	***Church History of Travancore***
Rae Milane G.Rev	***The Syrian Church in India***
Richards N.J. Rev	***The Indian Christians of Saint Thomas***
	The Malabar Quarterly Review, VI, 1 and 2.

மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் இவர்களைப் பற்றி மேலும் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :- "கழுத்தில் அணிந்துள்ள சிறிய சிலுவையினை கொண்டு சிரியன் கிறித்தவ ஆண்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். இருபத்தொரு பாசிமணிகளைக் கொண்டு சிலுவை அமைப்புடையதாகக் கோக்கப்பட்டிருக்கும் தாலியினைக் கொண்டு பெண்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். இவர்கள் தேவாலயங்கள் நீள் சதுர அமைப்புடையனவாக மரத்தாலான தட்டையான அல்லது வளைந்திடப்பட்ட மேற்கூரைகளோடு கூடிய துப்புரவு அற்ற கட்டிடங்களாம். இத் தேவாலயங்கள் கோபுர அமைப்பு அற்றனவாக கீழண்டைப் பக்கத்தில் உயர்ந்த மேடை எழுப்பப் பட்டவையாக இருக்கும். நடையினையும் நடுக்கூடத்தையும்விட உயர்ந்தோங்கிய தோற்றம் தரும். கீழண்டையில் எழுப்பப்பட்டுள்ள மேடைக்கும் கூடத்திற்கும் இடையே ஒரு திரைச்சீலை தொங்க விடப்பட்டிருக்கும். பாதிரியார் பலிப்படைப்பின் பலியினைப் படுத்துகையில் இந்தத் திரைச்சீலை இழுத்து விடப்படும். கீழண்டை மேடையின் இருபக்கமும் இரண்டு அறைகள் இருக்கும் - இவற்றுள் ஒன்று புனிதப் பலிச் சடங்கு நடத்த உதவும் தட்டுமுட்டுப் பொருள்களும் மற்றொன்று சடங்கினை நிகழ்த்துபவர் அணியும் உடைகள் முதலியவற்றையும் வைத்துக் கொள்ள உதவுவனவாம். கூடத்தின் மேல்கோடியில் மேன்மாடங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றுள் சிலபோது திருமணம் ஆகாத பாதிரிகள் தங்கி வாழ்வர். பெரும்பாலான தேவாலயங்களில் மூன்று பலிபீடங்கள் இடம் பெற்றிருக்கும். அவற்றுள் ஒன்று கீழண்டை மேடையிலும் மற்ற இரண்டும் மேற்குக் கோடியில் பக்கத்திற்கு ஒன்றாகவும் அமைந்திருக்கும். ஜாகோபைட்டுகளின் தேவாலயங்களில் உருவங்கள் எவையும் இடம்பெற்றிரா. சில தேவாலயங்களில் படங்கள் மாட்டப்பட்டிருக்கக் காணலாம். சிலுவையில் அறையப்பட்டகிறித்துவின் உருவம் பலிபீடத்திலும் தேவாலயத்தின் பிற இடங்களிலும் இடம்பெற்றிருக்கக் காணலாம். சமயக் குருமார்களும் செல்வாக்குடையவர்களும் மேடைக்கு வெளியே கூடத்தினுள் புதைக்கப்படுவர். சிரியர்களுக்கான மேற்றிராணியார்கள் மேத்ரான்கள் என அழைக்கப்படுகின்றனர். துறவறம் மேற்கொண்டுள்ள இவர்கள் தங்கள் தேவாலயத்தினைச் சேர்ந்தவர்கள் தரும் தொகையில் வாழ்க்கை நடத்துவர். ஊதா நிற அங்கி அணியும் இவர்கள் கறுப்புப் பட்டாலான பொன்னிழைகளால் சிலுவை உருப்பின்னப்பட்ட தலைக்குல்லாயினையும்

அணிகின்றனர். கழுத்தில் பொன்னாலான பெரிய அளவிலான சிலுவையும் வலக்கரத்தின் நான்காம் விரலில் மோதிரமும் இவர்களுக்கான அணிகள். மேற்றிராணியார்களின் பொறுப்புக்கு உரியவர்களை அப்பதவி வகிப்பவரே அவர் ஒய்வு பெறுமுன் ரம்பான்களிடையேயிருந்து தேர்ந்தெடுத்துப் பதவியில் அமர்த்துவர். ம்பான்கள் மேற்றிராணியார்களின் பதவிகளில் அமர்த்தவெனப் பாதிரியார்களாலும் பெரியோர்களாலும் முன்பே தேர்ந்தெடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள். மேத்ரான்களை அவர்களுக்குரிய உடையோடு கூடிய உட்கார்ந்த நிலையில் வைத்துப் புதைப்பர். இவர்களுடைய பாதிரியார்கள் கத்தனார்கள் எனப்படுவர். இவர்கள் பாதிரியார்களாக உயர்வு பெறும் முன் வாயில் காப்போன், உரக்கப் படிப்பவர், பேயோட்டி, வலர் துணை உதவிக்குரு, ஆகிய பொறுப்புகளையும் வகித்து அனுபவம் பெறுதல் வேண்டும். முதல் மூன்று பொறுப்புகள் இப்பொழுது பழக்கில் இல்லை. பாதிரியார் பொறுப்பு பெரும்பாலும் பரம்பரை உரிமையுடையதாக மருமக்கள் 'தாய உடமை உரிமைப்படி அடுத்து உரிமையுடையவருக்குச் செல்லக் கூடியது. ஜாகோபைட்டுகளும் புனித தாமஸ் பிரிவுச் சிரியப் பாதிரியார்களும் அவர்களுடைய தேவாலயங்களைச் சேர்ந்தவர்கள் தரும் தொகையாலும் திருமணம் முதலியவற்றை நடத்தி வைக்கும்போது கிடைக்கும் கட்டணங்களைக் கொண்டும் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். வெள்ளை முழுக்கால் சட்டையும் நீண்ட வெள்ளை அரைக்கை மேற்சட்டையும் பின்னால் சிலுவை வடிவில் தொங்கும் இறக்கைகளுமே இவர்களுக்கான உடையாகும். இதன்மீது ஜாகோபைட்டுகள் கறுப்பு நிறத்தில் மேல்கோட்டு அணிந்து கொள்வர். கத்தோலிக்கச் சிரியர் பிரிவுப் பாதிரியார்களைத் தவிர மற்றவர்கள் மணம் புரிந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். ஜாகோபைட்டுகளிடையே ஒரு பாதிரியார் பொறுப்பில் அமர்த்தப்பட்டதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட பின் மணந்து கொள்ளுதல் இயலாது. மனைவியினை இழந்தவர்கள் மறுமணம் செய்து கொள்ளவோ விதவையரை மணம் செய்துகொள்ளவோ இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சமயக் கல்லூரிகளில் பாதிரியார்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மல்பான்கள் எனப்படுகின்றனர். ஜாகொபைட்டுகள் இப்பொழுது முகம் மழித்துக் கொள்கின்றனர். மற்றச் சிரியன் பிரிவுப் பாதிரிமார் தாடி வளர்க்கின்றனர். ஒவ்வொரு தேவாலயத்திற்கும் உரியவர்களாக நான்கு கைக்காரர்கள்

(மேற்பார்வையாளர்கள்) இருப்பர். இவர்கள் தேவாலயத்தைச் சேர்ந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேவாலயத்தின் உடமைகளைக் காக்கும் அறங்காவலர்களாகவும் இவர்கள் விளங்குகின்றனர். தேவாலயத்தைச் சேர்ந்த பாதிரியாரோடுங்கூட தேவாலயத்தைச் சேர்ந்த கிறித்தவர்களின் சமூக, சமய நடவடிக்கைகளில் குறைகாணின் அதனைக் கண்டித்துத் தண்டிக்கும் உரிமையும் பெற்றுள்ளனர். ரோமன் கத்தோலிக்கச் சிரியன்கள் ரோமன் கத்தோலிக்கருக்கான கோட்பாடுகளையும் சடங்குகளையும் பின்பற்றுகின்றனர். கத்தோலிக்கத் திருச்சபைக்கு உரிய வழிபாட்டு முறைகளைச் சிரிய மொழியிலேயே* நடத்திக் கொள்கின்றனர். ஜாகோபைட்டுகளும் புனிதர் தாமஸ் பிரிவுக் கிறித்தவர்களும் புனிதர் ஜேம்ஸின் வழிபாட்டு நெறிமுறைகளையே கடைப்பிடித்து வருகின்றனர். பாதிரியார்களுள் கூட ஒருசிலரே சிரிய மொழியினை அறிந்தவர்கள். சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட சிரியன் தேவாலயங்களுள் சிரிய முறைப்படி வழிபாட்டை நடத்துவதற்கான நடைமுறைகளைப் படிப்படியாக தற்போது மலையாள மொழியில் மொழிபெயர்த்துப் பின்பற்றி வருகின்றனர். ஜாகோபைட்டுகள் இறந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பலிப்படையல் நிகழ்த்துகின்றனர். கன்னி மரியாளின் அருளை வேண்டி வழிபடுவதோடு சிலுவையினையும் புனிதர்களோடு தொடர்பானவற்றையும் போற்றுதலுக்கு உரியனவாகக் கருதுகின்றனர். ஞானஸ்நானம், திருமணம் (இது எப்பொழுதும் ஞாயிற்றுக் கிழமைகளிலேயே நிகழ்த்தப்படுகின்றது.) கூட்ட வழிபாடு ஆகிய மூன்றினையும் புனிதச் சடங்குகளாகக் கருதுகின்றனர். இறுதிப் பலிப்படைப்பிற்கு முன் காதருகில் சென்று பாவமன்னிப்புக் கேட்டலும் இன்றியமையாதது என்பர். இறுதிப் பலிபடைப்பு வழிபாட்டில் திராட்சைச் சாற்றில் தோய்த்த ரொட்டியினைப் புடைப்பர். நைசீயாப் பிரிவினருக்கு உரியதான கிழக்கிந்திய வேதாகமங்களை ஒப்பிப்பர். பாமரர் புனித வேதாகமத்தை படித்தலை இவர்கள் ஊக்குவிப்பதில்லை. சீர்திருத்தத்தை மேற்கொண்டுவிட்ட சிரியர்கள் மேற்கொண்ட நடைமுறைகள் பலவற்றில் வேறுபட்டவர்களாக உள்ளனர். ஜாகோபைட்டுகள் தேவாலயத்திற்கும் உரிய சாதாரண திருவிழாக்களையும் கடைப் பிடிக்கின்றனர். ஒவ்வொரு

---

* இந்தச் சிரியன் இன்று பேச்சு வழக்கில் உள்ள சிரிய மொழியன்று. இது பண்டைய அரமையக் மொழியினை ஒத்தது.

தேவாலயத்துக்கும் என ஏற்படுத்தப்பட்ட புனிதர்களுக்குரிய திருநாளை மிகுந்த ஆடம்பரத்துடன் கொண்டாடுவர். அன்று தேவாலயத்தைச்சேர்ந்தவர்கள் செலுத்தும் காணிக்கையினையே அத் தேவாலய பாதிரியார்கள் தங்கள் வருமானத்திற்காக நம்பி இருப்பர். இவர்கள் இயேசு பெருமான் பாலையிற் கழித்த நாள்களின் நினைவாக 'லெண்ட்' நோன்பினை ஐம்பது நாள் அளவினதாக நீற்றுப் புதன்கிழமைக்கு முந்தைய ஞாயிறு தொடங்கி கண்டிப்பான விரத நெறிகளுடன் கடைப்பிடிப்பர். அப்போது இறைச்சி, மீன்கள், நெய் முதலிய உணவு வகைகளை விலக்குவர். ஈஸ்டருக்கு முந்தைய வியாழக் கிழமையன்று சிலுவை பொறிக்கப்பட்ட இனிப்புச் சேர்க்கப்படாத குடும்பத்தைச் சேர்ந்த காரணவனால் நடுவே ஓர் ஆணி செலுத்தப்பட்ட 'கேக்' கினை உண்டு தேங்காய்ப்பாலும் அரிசிக் கஞ்சியும் கலந்த பானைத்தைப் பருகுவர். (இந்த உணவு இயேசுநாதரின் இறுதி இரவு உணவைக் குறிப்பதான குறியீடாகும். இதில் அறையும் ஆணி ஜுடாஸ் இன்கரியட்டின் கண்ணில் செலுத்தப்படும் ஆணியாகப் பாவிக்கப்படுகிறது.) "மாப்பிள்ளாக்களிடையே காணப்படுவதைப் போலவே சிரியன் கிறித்தவர்களிடையேயும் இவர்கள் இந்துக்களாயிருந்தபோது மேற்கொண்டிருந்த வழக்கங்கள், மூட நம்பிக்கைகள், சாதி வழக்குகள் ஆகியனவற்றுள் பலவும் தொடர்ந்து இருந்து வரக் காணலாம். தெற்கத்தியாரும் வடக்கத்தியாரும் தங்களுக்குள் மணஉறவு கொள்வதில்லை. பிராமணர் மற்றும் நாயர் மூதாதையரின் வழித் தோன்றல்கள் தங்கள் இல்லங்களுள் பெரும்பாலும் தாழ்ந்த சாதியாரை அனுமதியாததோடுகூட சமைக்கவும் தங்களைத் தொடவும் கூட அவர்களை அனுமதிப்பதில்லை. சிரியருள் பெரும்பாலோர் ஓணம், விசு திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். அடிக்கடி சோதிடர்களை நாடிச் சென்று சோதிடம் கேட்பதோடு வரவிருக்கும் நலந் தீங்குகள் பற்றிய சொல்வாக்கையும் கேட்பர். நோயுற்றவர்கள் நோய் நீங்கப் பெறவேண்டி பாதிரியார்களால் வாழ்த்தித் தரப்பட்ட வெள்ளியாலோ தகரத்தாலோ செய்யப்பட்ட் நோயுற்ற உடலின் பாகங்களையும் விலைக்கு வ்ாங்குகின்றனர். இவர்களுடைய சமூகப் பழக்க வழக்கங்களிலும் இத்தகைய பழைய எச்சங்களின் கூறுகளைக் காணலாம். அண்மைக் காலம்வரை இந்துக்களைப் போலவே புளிகுடி சடங்குகளை நடத்திவந்த இவர்கள் இப்பொழுது இதனைக் கைவிட்டு விட்டனர். ஒரு குழந்தை பிறந்தவுடன் தேனில் தங்கத்தை உறைத்து

அதில் மூன்று சொட்டுக்களைக் குழந்தையின் வாயில் அதன் தந்தை விடுவார். மகப் பெற்றவள் பத்து நாள்களுக்குத் தீட்டுக்கு உரியவளாகக் கருதப்படுவாள். தெற்கத்திய ஜாகோபைட்டுகள் பதினான்காம் நாள் ஞானஸ்நானம் சடங்கினை நடத்துகின்றனர். மற்ற பிரிவினர் இதனை ஐம்பத்தாறாம் நாளன்று நிகழ்த்துகின்றனர். இந்துக்களின் சோறூட்டல் சடங்கினை ஒத்ததொரு சடங்கினை குழந்தை பிறந்த ஐந்து அல்லது ஆறாம் மாதம் நடத்துகின்றனர். அக் குழந்தை ஆணாயிருப்பின் அவனுக்கு அப்போது அவன் அன்னையால் பொன்னாலான ஒரு சிலுவை அணிவிக்கப்படும். அது பெண்ணாயிருப்பின் ஒரு பொற்காசு அல்லது தளுவத்தினைக் கழுத்தில் கட்டுவர்.

ஜாகோபைட்டுகள் பருவம் அடையும் முன் மணம் செய்வித்தலையே அண்மைக் காலம் வரை வழக்கமாக மேற்கொண்டிருந்தனர். சிறுவர்களுக்கும் பத்துப் பன்னிரண்டு வயதளவிலும் சிறுமியருக்கு ஆறேழு வயதிலும் மணம் செய்வித்து வந்தனர். இப்பொழுது சிறுவர்களுக்குப் பதினாறு வயதாகும் போதும் சிறுமியருக்குப் பன்னிரண்டு வயதாகும் போதும் மணம் செய்விக்கின்றனர். மணச் சடங்கு ஞாயிற்றுக் கிழமையில் நிகழும். வடக்கத்தியார் மணச் சடங்குகளை மணமகள் அல்லது மணமகள் சேர்ந்துள்ள தேவாலயத்தில் வைத்து நடத்துவர். மணம் நடைபெறும் ஞாயிற்றுக் கிழமைக்கு முந்தைய இரு ஞாயிற்றுக் கிழமையின் போதும் நடைபெறவுள்ள திருமணம் பற்றிய அறிவிப்பை மணமக்கள் வீட்டைச் சேர்ந்த இரண்டு தேவாலயங்களிலும் செய்தபின் தேவாலயங்களுக்குரிய பாதிரியார்களின் முன்னிலையில் ஒட்டுக் கலியாணம் எனப்படும் மண உறுதிச் சடங்கு நிகழ்த்தப்படும். சிரியர் திருமணத்தில் இன்றியமையாத கூறாக விளக்கும் வரதட்சணைமணத்திற்கு முந்தைய ஞாயிறன்று வழங்கப்படும். அதனை ஒற்றைப்படை எண்ணிக்கையுடையதாக ஒரு துணியில் முடிந்து வழங்குவர். மணத்திற்கு முந்திய வியாழக்கிழமையன்று வீட்டினை அரிசி மாவுக்கொண்டு கோலமிட்டு அலங்கரிப்பர். சனிக் கிழமையன்று மண விழாவிற்கான பந்தலிடுவர். சனிக்கிழமை இரவு மணமக்கள் குளிப்பதே மணச் சடங்குகளின் தொடக்க நிகழ்ச்சியாகும். மணமகனுக்கு முகம் மழிப்பர். மறுநாள் காலை மணமக்கள் வழக்கம்போல் நடைபெறும் கூட்டு வழிபாட்டில் கலந்துகொள்வர். அன்று மணமகன் மணமகளுக்கு முன்னதாகத்

தேவாலயத்திற்குச் சென்று சேர்வதில் கருத்துடையனவாக இருப்பான். தற்போது மணமக்கள் மணநாளன்று ஐரோப்பியரைப் போல உடையணிவதே பெருவழக்கினதாக உள்ளது. மணநாளன்று மணமகள் முடிந்த அளவு மிகுதியான அணிகளை அணிவாள். வசதியில்லாததோர் இரவலாகப் பெற்று அணிவர். வீட்டைவிட்டுப் புறப்படுமுன் மணமகனை அவனது குரு வாழ்த்துவார். மணமகன் அவருக்குத் தட்சணையாக ஒரு தொகையும் உடையும் வழங்குவான். அவனோடு ஒரு மாப்பிள்ளைத் தோழன் உடன் செல்வான். அவனோடு உடன்பிறந்தவளின் கணவனே இப்பொறுப்பினை ஏற்பது வழக்கம். அப்போது மாப்பிள்ளைத் தோழன் தாலியினையும் உடன் எடுத்துச் செல்வான். கூட்டு வழிபாட்டுக்குப் பின் மணமகளிடமிருந்துவரதட்சணையாகப் பெற்ற தொகையில் பத்தில் ஒரு பங்கு தேவாலயத்திற்குத் திருமணக் கட்டணமாகச் செலுத்தப்படும். பாதிரியாருக்குக் கைக்கஸ்தூரி என ஒரு தொகையும் மேற்றிராணியாருக்கு கைமுட்டுப் பணம் என ஒரு தொகையும் வழங்கப்படும். திருமணத்திற்கான உடன்படிக்கை விவரங்கள் அப்போது படிக்கப்படும். அதன்பின் மணமகன் மணமகள் கழுத்தில் தாலி அணிவிப்பான். அதற்கான நூலினை – தாலியினைப் பாதிரியார் மணமகள் முன் ஏந்தியபடி இருக்க–மணமகன் மணமகளுடைய முகத்திரைத் துணியிலிருந்து எடுத்து அதனைக் கொண்டு தாலியில் முடிச்சிடுவான். மணமகனும் பாதிரியாரும் அதன்பின் மணமகள் தலைமீது ஒரு மெல்லிய துணியினை இடுவர். மணமான ஒருத்தியின் தாலி அகற்றப்படுவதில்லை. அவள் இறந்தபின்னும் அது அவளுடனேயே புதைக்கப்படும். அவள் தலையில் அப்போது இடப்படும் முகத்திரைத் துணி அவளுடைய ஈமச் சடங்குக்காக எனப் பாதுகாக்கப்படும். தனித்த அலங்காரத்தோடு கூடிய குடையின் கீழ் ஊர்வலமாக மணமக்கள் இல்லம் திரும்புவர். வீட்டு வாசலில் மணமகளின் உடன்பிறந்தவள் ஒரு விளக்கினை ஏந்தியவளாக அவர்களை வரவேற்று மணமகன் பாதங்களை அலம்புவாள். மணமக்கள் அதன்பின் பந்தலுக்குச் சென்று இனிப்புகள், வாழைப்பழம் ஆகியனவற்றைப் பாதிரியார்களிடமிருந்தும் இரு குடும்பங்களையும் சேர்ந்த பெரியவர்களிடமிருந்தும் பெற்று உண்ணும் சடங்கில் பங்கு கொள்வர். அப்பொழுது பெண்கள் குலவை இடுவர். விருந்தினர்கள் தங்கள் தகுதிக்கேற்ப வரிசையில் அமர்வர். வழக்கமான அரச மரியாதைக்குரியதான கறுப்பு, வெண் பட்டுக்களால் போர்த்தப்பட்ட இருக்கைகளில் சிறப்பு விருந்தினர்கள் அமர்ந்திருப்பர்.

அதன்பின் மணமக்களை மாப்பிள்ளைத் தோழனும் மணமகளின் மாமனும் வீட்டினுள் அழைத்துச் செல்வர். மணமகள் வலது காலை எடுத்து வைத்து வீட்டினுள் நுழைவாள். விருந்தினர்களுக்குத் தகுதி வரிசைப்படி அடுத்து விருந்து அளிக்கப்படும். இரண்டு தட்டுக்களை வைத்து அரச குலத்தவர்கள் உணவு கொள்ளும் தனி உரிமையினை இந்த விருந்தில் தாங்களும் மேற்கொண்டவர்களாக இச் சமயத்தில் சிரியன் கிறித்தவர்கள் இரட்டை இலையில் விருந்துண்பர். அடுத்து வரும் புதன்கிழமை வரை மாப்பிள்ளை தோழன் மணமகனோடு மணமக்களுக்கான அறையில் படுத்து உறங்குவான். மணமகள் தனியே வேறொரு அறையில் உறங்குவாள். புதன் கிழமை அன்று மாலை நாலாம் குளி என்ற சடங்கு நிகழும். மணமகனும் மாப்பிள்ளைத் தோழனும் மணமக்களுக்கானஅறைக்குள் தாழ்ப்பாள் இட்டவர்களாக இருப்பர். மணமகளின் தாயார் கதவைப்பூட்டி அவர்களை வெளியே வரும்படி வேண்டுவாள். மணமகளின் அழகினையும் நற்பண்புகளையும் புகழ்ந்து வாயில்திறப்புப் பாட்டு என்ற பாட்டினை அவள் பாடியபிறகே அவர்கள் வெளியே வருவர். அதன்பின் மணமக்கள் குளித்துப் புத்தாடை புனைந்து மணப்பந்தலை அடைந்து ஏற்றி வைக்கப்பட்டுள்ள விளக்கினை வலம் வருவர். மணமகன் மணமகளுடைய மாமா, அன்னை, பாட்டன், பாட்டி ஆகியோருக்குப் புத்தாடைகளை வழங்குவான். அதன்பின் மணமக்களை அவர்கள் ஒன்றாக உறங்குவதற்கான அறைக்கு அழைத்துச் செல்வர். இதற்கிடையே அந்த அறையினைத் துப்புரவாக்கி அலங்கரித்து வைத்திருப்பர். மறுநாள் காலையில் இச் சடங்குகள் மணமகன் வீட்டில் நிகழ்ந்திருப்பின் மணமகள் வீட்டிற்கும் மணமகள் வீட்டில் நிகழ்ந்திருப்பின் மணமகன் வீட்டிற்கும் செல்வர். அங்கு மணநாளன்று நிகழ்த்தப்பட்ட சடங்குகள் மீண்டும் நிகழ்த்தப்படும். இத்துடன் மணச் சடங்குகள் நிறைவுறும். அடுத்து வரும் ஞாயிறன்று மணமக்களுள் யாருடைய தேவாலயத்தில் அவர்கள் திருமணம் நடைபெற்றதோ அதனைவிட்டு மற்றவருடைய தேவாலயத்திற்குச் சென்று பலிப் படையலில் கலந்து கொள்வர். தெற்கத்திய ஜாகோபைட்டுகளிடையே சடங்குகள் மேற்கூறியது போலவே நிகழ்த்தப்படும் என்றாலும் வரதட்சணையை மட்டும் திருமண நாளன்று அல்லது மணமகள் முதன் முதல் பிள்ளைப்பேறு வாய்க்கப் பெறும்போது செலுத்தும் பழக்கம் உள்ளது. வரதட்சணைப் பணத்தில் பத்தில் ஒரு பங்கில் பாதியினைக் கைக்கஸ்தூரிக்குப் பதிலாகப் பாதிரியாருக்குச்

செலுத்துவர். மணச் சடங்கின்போது மணமகன் மணமகளுக்கு மோதிரம் அணிவிப்பான். தேவாலயத்தில் மணச் சடங்கு முடிந்தவுடன் மணமக்கள் மணமகள் இல்லம் செல்வர். அங்கு மணமகளின் அன்னை அவர்களுக்குச் சோறிடும் சடங்கு நிகழும். இதனைஅடுத்து நிகழும் விருந்துக்கான செலவு முழுவதையும் மணமகன் வீட்டாரே ஏற்றுக்கொள்ள வேண்டும். திங்கட்கிழமை அன்று காலையில் மணமகளின் அன்னை மணமக்கள் உறங்குவதற்கான அறையில் மணமகனுக்கு சோறிடும் , மணவாளன் சோறிடல் சடங்கு நிகழும். அன்று மாலை மணவாளன் தழுவல் என்ற சடங்கு நிகழும். அதில் மணமகனையும் மணமகளையும் தனித்தனியே அவர்கள் பெற்றோரும் உறவினர்களும் தழுவிக் கொள்வர். அதன் பின் இறைவனை வாழ்த்திப் பாடி விருந்துண்பர். மணமக்கள் வியாழன் அன்று மணமகள் வீட்டுக் புறப்படும் முன் குடிவிருந்து எனப்படும் பெரிய விருந்து நிகழும். இதனை மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குத் தருவர். இதனை அடுத்து விளக்குத் தொடுகை என்ற சடங்கு நிகழும். இதில் ஆண்களும் பெண்களும் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கினை சுற்றி இடையிடையே அதனைத் தொட்டபடி நடும் ஆடுவர். ரோமன் கத்தோலிக்கரான சிரியரும் சீர்திருத்தம் மேற்கொண்ட பிரிவினரும் நடத்தும் மணச் சடங்கில் இந்துக்களுக்கான சடங்குகளின் கூறுகள் ஒரு சிலவே இடம்பெறும். இப்பிரிவினர் திருமணத்தை ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்துவதில்லை. நாலாம் குளிச் சடங்கினையும் இவர்கள் நடத்துவதில்லை. தாலி அணிவிப்பதோடு மணமகன் மணமகளுக்கு ஒரு மோதிரமும் அணிவிப்பது இப் பிரிவினரிடையேயான வழக்கம்.

"சாவுச் சடங்கின்போது (சீர்திருத்தம் செய்யப் பெற்ற பிரிவினர் தவிர மற்றவர்கள்) இறந்தவனுடைய உறவினர்கள் ஒவ்வொருவரும் துணி ஒன்றினைக் கொண்டு வந்து பிணத்தைப் போர்த்துவர். பிணத்தைக் குழியில் இறக்கும் முன் அதன் கண்கள், மூக்கு, காதுகள் ஆகியவற்றில் புனித எண்ணெயினை விடுவர். துக்கம் கொண்டாடுபவர்கள் தீட்டுக்கு உட்பட்டவர்களாகப் புலக்குளிச் சடங்கினைப் பதினொன்றாம் நாள் நடத்துவது வழக்கம் எனினும் அதனைப் 15, 17, 21ஆம் நாள்களுக்குத் தள்ளி வைப்பதும் உண்டு. சில சமயங்களில் 41–ஆம் நாளன்று கூட இச்சடங்கு நடத்தப்படும். வழிபாட்டுப் பாடல் இசைக்கும் போது துக்கம் கொண்டாடுபவர்கள் மீது புனித நீர் தெளிப்பர். ஒவ்வொருவரும்

பாதிரியாருக்கு ஒரு தொகையினைக் காணிக்கையாகச் செலுத்துவர். அதற்கு ஈடாகப் பாதிரியார் அவர்களுக்கு ஒரு சிட்டிகை வெந்தயம் தருவார். பின் அண்டை அயலாருக்கும் ஏழைகளுக்கும் விருந்திடுவர். 40-ஆம் நாள் மீண்டும் விருந்து உண்பர். தொடர்ந்து பன்னிரண்டு மாதங்கள் சாவு நிகழ்ந்த நாளன்று பலிப் படையல் நிகழும். ஓராண்டு நிறைவுற்ற பின் ஒரு விருந்தோடு துக்கம் மேற்கொள்ளுதல் முடிவுறும்.

சிரியன் கிறித்தவர்கள் பற்றிய மேற்கண்ட விவரங்களோடு ஒரு சில தனிப்பட்ட குறிப்புக்களையும் தரலாம் என நினைக்கின்றேன்.

சென்னை மாநில முன்னாள் ஆளுநராக இருந்த சர்.எம்.ஈ.கிராண்ட் ட்ப் பதிந்துள்ள விவரம் வருமாறு :-* "சிரியன் கிறித்தவர்கள் அல்லது புனிதர் தாமஸின் கிறித்தவர்கள் எனப்படுவோர் ஒன்றோடு ஒன்று முரண்பட்ட பல பிரிவினராக உள்ளனர். எனக்கு அவர்கள் அளித்த வரவேற்பு உரையில் நெடுங்காலமாகத் தொடர்ந்து பிரிந்து இருந்தவர்களான தங்களுக்கிடையே இருந்து வந்ததான சமய வேறுபாடுகளை ஒதுக்கியவர்களாக ஒரு நண்பரைச் சிறப்பிக்க முதன் முதலாக ஒன்று கூடியுள்ளதாகக் குறித்துள்ளனர்.

கள்ளிக்கோட்டை மாவட்ட நீதிமன்ற நடுவரின் மனைவி சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பள்ளியின் மாணவர்களைப் பார்த்து நீங்கள் எத்தனை காலமாகக் கிறித்தவர்களாக இருந்து வருகின்றீர்கள் எனக் கேட்டபோது அதற்கு அவர்கள் முகத்தில் அடித்தாற்போல, "ஆங்கிலேயர்களான நீங்கள் டிரய்டுகளான மந்திரவாதிகளை வழிபட்டவர்களாக நீலச் சாயம் பூசித் திரிந்த அந்த நாளிலேயே நாங்கள் கிறித்தவர்களாக இருந்தவர்கள்" எனப் பதிலிறுத்தனர். அண்மையில் சென்னையில் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் வகுப்பில் இந்தியக் கிறித்தவர்களையெல்லாம் எழுந்து நிற்குமாறு கூறினார். ஒருவன் எழுந்திராமல் உட்கார்ந்திருப்பதைக் கண்ட அவர் அவனிடம் அதற்கான காரணத்தைக் கேட்டார். அதற்கு அந்த மாணவன் தான் இந்தியக் கிறித்தவன் அல்ல என்றும் சிரியன் கிறித்தவன் எனவும் பதிலுரைத்தான்.

---

* ஒரு நாட்குறிப்பிருந்தான குறிப்புகள், 1881 – 86.
(Notes from a Diary, 1881 - 86.)

"நமது இங்கிலாந்து நாட்டு அரசனான ஜான், யூதர்கள், தங்கள் செல்வங்களை அரசருக்கு ஒப்படைக்க வேண்டி அவர்களுக்குப் பெருந்தொல்லை தந்து வந்த அந்தக் காலத்திலேயே இந்து மன்னர்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன் தங்கள் மூதாதையர்களால் பட்டம் தந்து சிறப்பிக்கப் பெற்றவர்களின் வழித் தோன்றல்களான யூதர்களும் கிறித்தவர்களுமான தன் குடிமக்களுக்குப் பாதுகாப்புத் தந்தவர்களாக இருந்துள்ளனர்" என மறைத்திரு.டபிள்யூ.ஜெ.ரிச்சர்ட்ஸ் குறித்துள்ளார்.

தெற்கத்தியர் தங்களுடைய செம்பட்டைத் தலைமயிரே தங்களை வடக்கத்தியாரிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் எனக் கூறுவர். கறுத்த தோலும் பளபளக்கும் செம்பட்டை மயிரும் கொண்ட குழந்தையோடு செம்பட்டை மீசையோடு கூடிய ஒருவனை இதற்கு ஆதாரமாக என் முன் அவர்கள் கொண்டு வந்து நிறுத்தினர். அவனுடைய தந்தையும் செம்பட்டைக்கன்னக் கதுப்பு மயிரினை உடையவனாய் இருந்தான்.

புதிய, பழைய ஏற்பாட்டில்'உள்ள பெயர்கள் எப்படி இவர்களிடையே திரிந்து வழங்குகின்றன என்பதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் கொண்டு தெளியலாம்.

ஆப்ரஹாம்	–	ஆப்ரிகாம்
ஜோஷ்வா	–	கோசி
ஜோசப்	–	யூசப்
ஜாகோப்	–	யாகூப், சாகோ
சாமுயுவேல்	–	சாமுவேல்
சரா	–	சாராள்
சுஸ்ஸானா	–	சூசா
ஜான்	–	யோகான்
		சொன்னன்
		சோனா
தாமஸ்	–	தோமா
		தொம்மி
		தொம்மன்
ரேப்சல்	–	ராச்சி
		ராக்கேயல்,
		சாச்ச

பால்	–	பவுலஸ்
டைடஸ்	–	தெடோஸ்
மாத்யூ	–	மத்தாய், மாத்தென்
மேரி	–	மரியா, மரியம்
பீட்டர்	–	புத்ரோஸ்
		இட்டியரா
		இட்டெ
பிலிப்	–	பிலிப்போஸ்
		பாபி
		எப்பெ
		ஈப்பன்
ரொபக்கா	–	ராப்கா
எலிசபெத்	–	எல்ஸ்பெத்
		எலியா
		எலச்சா

சிரியன் கிறித்தவர் தங்கள் தந்தையின் பெயர், தங்கள் பெயர், தாங்கள் இருக்கும் இடத்தின் பெயர் ஆகிய மூன்றையும் சேர்த்துப் பெயராக வைத்துக் கொள்வர். இடயொழிக்கல் மத்தொ பிலிப்போல், குன்னம்புரம் தோமன் சாண்டி, சண்டக்டயல் ஜோசப் சொம்மி என்பன இவ்வாறு அமைந்த இவர்களுடைய பெயர்களுக்கான மாதிரிகளாம்.

தோளிலும் முன் கையிலும் தங்கள் பெயரின் தலையெழுத்துக்களோடு கூடச் சிலுவையினையும் பச்சைக் குத்திக் கொண்டுள்ள சில சிரியன் கிறித்தவர்களை நான் நேரில் பார்த்துள்ளேன்.

இறுதியாக ஒப்பாய்வுக்கு உதவும் பொருட்டு சிரியர்களான வடக்கத்தியார், தெற்கத்தியார் மற்றும் நாயர்கள் ஆகியோருடைய முக்கியமான உடல் அளவுகளைத் தருகின்றேன்.

	30 சிரியன் கிறித்தவர்		40 நாயர்கள்
	வடக்கத்தியார்	தெற்கத்தியார்	
உயரம்	165.3	164.8	165.2
தலையின் நீளம்	18.7	18.9	18.7
தலையின் அகலம்	14.3	14.1	13.9
நீள அகல விகிதம்	76.3	74.8	74.4
மூக்கின் உயரம்	4.9	4.9	4.9
மூக்கின் அகலம்	3.5	3.5	3.5
நீள அகல விகிதம்	72.3	71.6	71.1

"புனிதர் தாமஸ் கிறித்தவர்கள் தங்கள் கால்வழி பற்றிய விவரங்களை ஒழுங்காகத் தொகுத்துக் காத்து வருகின்றனர். தாழ்ந்த சாதிக் கிறித்தவர்களோடு மண உறவு கொள்ளாமலும் சேர்ந்து வாழாமலும் மிகக் கருத்தோடு தங்கள் தனித்தன்மையினைப் பேணி வருகின்றனர். இவர்களுள் பலர் சாதியில் நாயர்களாக இருப்பதால் அந்தச் சாதியின் பெருமையினைப் பேணுபவர்களாக பொதுவாகக் கையில் வாளேந்தியவர்களாகச் செல்லக் காணலாம்." என கண்டர் விஸ்ச்செர் "மலபாரிலிருந்தான கடிதங்களி"ல் குறித்துள்ளார்.

"ஆசியா மைனரின் பெரும்பகுதியில் ஒரே இனத்தவர்கள் தங்கி வாழ்ந்திருக்கலாம். ஆர்மினியன்கள் என்ற சிறு இனத்தவர்களாக இன்றும் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஹிஸ் மற்றும் ருய்ஹடிமெயர் வரையறைப் படுத்தியுள்ள டிஸ்சென்டிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த இனத்தவர்கள் தலை மிகக் குறுகியதாக முன் நெற்றி மிக உயர்ந்து காணப்படும். நடுத்தர உயரமும் கறுத்த தோலும் கண்களும், முடியும் கொண்ட இவர்கள் தலைமுடி பட்டு போன்றதாக இருக்கும். இத்தகைய உடற்கூறுகள் வாய்க்கப் பெற்றவர்கள் ஆசியா மைனரின் தென்பாதியிலும் காகஸசுக்கு வடகிழக்கிலும் யூப்ரடெஸின் தலைப்பகுதிக்குக் கிழக்கிலும் காணலாம். தாச்டஸ்ஸிப் இன மக்கள் பிற இனத்தவர்களோடு அதிகம் இனக் கலப்புப் பெறாதவர்களாக

மலைப்பகுதிகளில் வாழ்பவர்கள்" என ஈ.பேட்டர்சனும் எப்.வி.லுஸ்சானும்* கூறியுள்ளனர். (ஆர்மினியன்களுடைய தலையின் நீள அகல விகித அளவுகள் ஈ.சாண்ரெயினால் 85-86 எனத் தரப்பட்டுள்ளது.**)

பின்வரும் அட்டவணையில் சிரியன் கிறித்தவர்கள் தாச்டஸ்ஸின் இனமக்கள் ஆகியோரின் முக்கியமான உடலளவுகள் தரப்பட்டுள்ளன.

	உயரம் செ.மீ.	தலையின் நீளம் செ.மீ.	தலையின் அகலம் செ.மீ.	தலையின் நீள அகல விகித எண்.
சிரியன் கிறித்தவர் – வடக்கத்தியார்	165.3	18.7	14.3	76.3
சிரியன் கிறித்தவர் – தெற்கத்தியார்	164.8	18.9	14.1	74.8
தாச்டஸ்ஸிய்யிகள்	168.0	17.9	15.3	85.7

* *Recherches Arthropoligiques dans le caucase, IV, 1887.*

** *Reisen in Lykien, Melyas, and Kibyratis, II, 1889.*

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005
அண்மைவெளியீடுகள் (2003)

அறிவியல் களஞ்சியம் தொகுதி 13	700.00
பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்	30.00
பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி 5	150.00
உயிர் வேதியியல்	270.00
குழந்தை நல மருத்துவம் தொகுதி - 1	210.00
குழந்தை நல மருத்துவம் தொகுதி - 2	170.00
சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் தொகுதி - 2 (மறுபதிப்பு)	400.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதி - 5 (மறுபதிப்பு)	700.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதி - 6 (மறுபதிப்பு)	700.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதி - 7 (மறுபதிப்பு) (அச்சில்)	700.00
அருங்கலைச் சொல் அகர முதலி (மீள்பதிப்பு)	600.00
திருமுறைத் திருநெறி தொகுதி - 1	105.00
தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி-2	85.00
வைத்திய சிந்தாமணி	80.00
அயல் நாட்டவருக்குத் தமிழ் கருத்துப் பரிமாற்ற இலக்கணம்	70.00
சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகதி - 6	150.00

தொடர்பு முகவரி : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)
தஞ்சாவூர் - 613. 001. தொ. பே. 04362 - 274581